
தமிழரசு




பூவையர் மகிழும் வண்ணம்
புதுமைகள் படைத்திடும் கதர்பட்டுப் புடவைகள்
அணியும் அழகே ஓர் ஆனந்தம்

அனைத்து
காதிகிராப்ட்
அங்காடிகளில் கிடைக்கும்

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
குறளகம், சென்னை - 600 108


# இந்த இதழில்...


வீரத்துறவி விவேகானந்தர்
—மாண்புமிகு முதல்வர் உரை ... 2

புரட்சித்தலைவர் இன்றும் வாழ்கிறார்... என்றும் வாழ்வார்!
—மாண்புமிகு முதல்வர் உரை ... 5

புவியாண்ட புரட்சித் தலைவருக்குப் புகழ் மண்டபம் ... 6

நேரு விளையாட்டு அரங்கை மாண்புமிகு முதல்வர் அவர்கள் பார்வையிட்டார் ... 8

தமிழ் இசைச் சங்க இசை விழா ... 10

புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். வாழ்க்கைக் குறிப்பு ... 11

மூளைக் காய்ச்சலைத் தடுப்பது எப்படி? ... 15

தொட்டில் குழந்தைகளை வளர்க்க ஐந்து பெண்கள் முன்வந்தனர் ... 17

விவசாயிகளுக்கு இலவசமாக இடுபொருட்கள் வழங்கப்படுகின்றன ... 18

வலிப்பு நோய் - சில செய்திகள் ... 19

கலை உலகின் வழிகாட்டி
—பேரறிஞர் அண்ணா ... 24

நீங்க நல்லா இருக்கணும் ... 27

ஆராய்ச்சிப் பேரறிஞர் மயிலை சீனி வேங்கடசாமி ... 29

எம்.ஜி.ஆர். கலந்துகொண்ட கடைசிப் பொது நிகழ்ச்சி ... 31

நலிந்தோர் நலம்பெற நல்வாழ்வுத் திட்டங்கள் ... 33

ஆசிய பசிபிக் நாடுகள் மாநாடு சிறுநீரகச் சிகிச்சையில் தமிழகத்திற்கு முதலிடம்! ... 37

சிவகங்கை கிராஃபைட் ... 39

பெரியார் மாவட்டத்தில் அரசு ஆற்றிவரும் நலத்திட்டப் பணிகள் ... 43

உழவர் உயர்வுக்கு வேளாண்மை பொறியியல் துறை ... 46


## வளர்ச்சிப் பாதையில் வெற்றிநடை போடுவோம்!



### முதல்வர் அவர்களின் புத்தாண்டுச் செய்தி

மலர்கின்ற புத்தாண்டில் மன நிறைவையும் மகிழ்ச்சிப்பெருக்கையும் அடைய அனைவருக்கும் எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தின் நிலையான பெருமையினைக் காப்பதோடு, ஐந்தரைக் கோடி தமிழ் மக்களின் நலன்களைப் பேணிக் காப்பதையும் தனது உயரிய இலட்சியங்களாகக் கொண்டு இயங்கி வரும் தமிழக அரசு, இப்புத்தாண்டில் மேலும் பல புதிய திட்டங்களை வழங்கி, தமிழகத்தின் அனைத்துத் துறைகளின் சீரிய வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து சாதனைச் சரித்திரம் படைக்கும்.

நம் அனைவரிடையேயும் ஒற்றுமையுணர்வை வளர்த்து, நல்லிணக்கத்தினை உறுதிப்படுத்துகின்ற நல்லாண்டாகவும், நாம் வளர்ச்சிப் பாதையில் தொடர்ந்து வெற்றிநடை போட வழிவகுக்கின்ற புத்தாண்டாகவும் 1993-ஆம் ஆண்டு அமைய வேண்டும் என்பதே எனது விருப்பமாகும்.

என் அன்பிற்குரிய தமிழக மக்களுக்கு, எனது இதயங்கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்களை மீண்டும் தெரிவித்துக் கொள்வதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.


தமிழரசு
திருவள்ளுவர் ஆண்டு 2023
மார்கழித் திங்கள் - 17
மலர்: 23 இதழ்: 13
1-1-1993

166662
V211m N93
N93.1-6

# வீரத்துறவி விவேகானந்தர்



## தேசிய விழிப்புணர்வு ஆண்டு 1992-இன் தொடக்க விழாவில் மாண்புமிகு முதல்வர் உரை

சுவாமி விவேகானந்தர் என்னும் ஞான சூரியன் இந்தியாவின் கிழக்குத் திசையிலிருந்து, தெற்கு நோக்கி பாதயாத்திரை வந்து, இருட்டில் சிக்கித் தவித்த பாரதத்திற்கு, ஞான வழிகாட்டிய புனித நிகழ்ச்சியின் நினைவாகக் கொண்டாடப்படும் தேசிய விழிப்புணர்வு ஆண்டுத் தொடக்க விழாவில் கலந்து கொள்ள, வாய்ப்பளித்த விழாக் குழுவிருக்கு என் இதயங்கனிந்த நன்றியை உரித்தாக்குகிறேன்!



வேதாந்தியாக, வீரத்துறவியாக, சமரச மெய்ஞானியாக, தேசப்பற்றாளராக, போராட்ட வீரராக, ஏழை பங்காளராக - இப்படி எத்தனை எத்தனையோ பரிமாணங்களைக் கொண்ட அபூர்வப் பிறவி சுவாமி விவேகானந்தர்.

அன்று கல்கத்தாவில் அவர் தொடங்கிய பாதயாத்திரை, இந்தக் கன்னியாகுமரியில் தான் முடிவடைந்தது. அந்தப் பாதயாத்திரையின் நூற்றாண்டு விழா, இன்று இங்கே, சீரோடும் சிறப்போடும் கொண்டாடப்படுகிறது.

இந்தியா கன்னியாகுமரியில்



மாண்புமிகு பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்களை, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் வரவேற்கிறார்.

## தேசிய விழிப்புணர்வு ஆண்டுத் தொடக்க விழா

சுவாமி விவேகானந்தர் 1892-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 25-ஆம் நாள் கல்கத்தாவிலிருந்து பாத யாத்திரையாக குமரிமுனை வந்தார். கடல் நடுவே தற்போது விவேகானந்தர் மண்டபம் அமைக்கப்பட்டிருக்கும் பாறைக்கு, அவர் நீந்திச் சென்று தனியாக 3 நாள்கள் (டிசம்பர் 25,26,27) தவம் செய்தார்.

இவ்வாறு அவர் தவம் செய்து 100 ஆண்டுகள் நிறைவு பெறுவதையொட்டி, குமரிமுனையில் உள்ள விவேகானந்தர் கேந்திரம் விவேகானந்தரின் 'பாத யாத்திரை நூற்றாண்டு விழா' மற்றும் தேசிய விழிப் புணர்வு ஆண்டுத் தொடக்க விழா கன்னியாகுமரியில் 28.12.92 அன்று கொண்டாடப்பட்டது.

மாண்புமிகு பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்களும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களும், மாண்புமிகு கேரள முதல்வர் திரு. கே. கருணாகரன், முன்னாள் மத்திய அமைச்சர் டாக்டர் கரன்சிங், இராமகிருஷ்ண மடாலயத்தின் சுவாமி யோகேஸ்வரானந்தர் ஆகியோர் கலந்து கொண்டனர். விழாவுக்கு மாண்புமிகு மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. அர்ஜுன் சிங் அவர்கள் தலைமை வகித்தார்.

விழாவில் மாண்புமிகு பிரதமர் அவர்கள் பேசுகையில்:-

'இந்து மதத்தவர் என்றால் மூட நம்பிக்கை உள்ளவர்கள் என்று வெளிநாட்டவர்கள் ஒரு காலத்தில் நினைத்துக் கொண்டு இருந்தார்கள். அதை உடைத்து எறிந்தவர் விவேகானந்தர். இந்து மதத்தில் மறுமலர்ச்சி ஏற்படுத்திய பெருமை அவருக்கு உண்டு.

'விவேகானந்தர் சிறந்த செயல் வீரராகச் செயல் பட்டார். எனவேதான், அவரை இராமகிருஷ்ண பரம ஹம்சர் தனது சீடராக ஏற்றுக் கொண்டார். மதத் தலைவர்கள் நல்ல சிந்தனைகளை - நல்லுணர்வை மக்களிடம் பரப்ப வேண்டும்.

'விவேகானந்தர் தனி மனிதராக இருந்து புதிய மறுமலர்ச்சியை எழுச்சியை உருவாக்கினார். மகாத்மா காந்தி, வினோபா போன்றவர்கள் பணபலம் இல்லாமல் பதவி எதுவும் இல்லாமல் மக்களின் உள்ளங்களைக் கவர்ந்தவர்கள். அதற்குக் காரணம் அவர்களது நல்ல கருத்துக்களை மக்கள் ஏற்றுக் கொண்டார்கள். எனவே, நாட்டில் மத வேற்றுமைகள் இல்லாது, அனைத்து மதத்தினரும் சகோதரப் பாசத்தோடு இந்தியர்கள் என்ற உணர்வோடு வாழ வேண்டும்'' என்றார்.

விழாவில் சுவாமி யோகேஸ்வர நந்தா, ஹபீப் முகமது, டாக்டர் கரன்சிங், ஆர்ச் பிஷப் பெனடிக்ட்மார், கிரிகோரியஸ் ஆகியோரும் பேசினார்கள்.

முடிவடைகிறது என்பது, பூகோள ரீதியான உண்மை. ஆனால், விவேகானந்தரின் புதிய இந்தியா - நவ இந்தியா - ஒரு பொற்கால இந்தியா, இங்கேதான் தொடங்கியது என்பது, சரித்திரம் நமக்கு வழங்கிய கொடை.

இங்கு மூன்று கடல்கள் மட்டும் சந்திக்கவில்லை. உலக நாடுகளிலே வாழ்ந்துவரும், பல்வேறு இன, மதம் தழுவிய மக்கள், தோளோடு தோள் சேர்ந்து நிற்கும் காட்சியையும், இங்கே நாம் காணலாம். இது உலக ஒருமைப்பாட்டை அனைவருக்கும் உணர்த்தும் ஒப்பற்ற மண்.

அண்மைக் காலமாக, நாட்டில் நாம் காணும் ரணங்கள், மேகமூட்டங்களைப் போல இந்த உண்மையை மறைக்கலாம். ஆனால், இருளைக் கிழித்து வரும் முழு மதியைப் போல, சமயச் சார்பற்ற இந்தியா வெளிப்படும் என்பதை, உலகிற்குச் சொல்லுகிற நல்ல நிகழ்ச்சியாக, இந்த நிகழ்ச்சி நமக்கு அமைந்துள்ளது.

'இந்திய தேசம் பெரியது. இது ஞானத்தின் களஞ்சியம். ஆன்மீகத்தின் விளை நிலம்', என்பதுதான் சுவாமி விவேகானந்தரின் அசைக்க முடியாத நம்பிக்கை. இந்த உண்மை தெரியாதவர்களுக்குள்ளே தான் குழப்பம். இந்த நம்பிக்கையில் எழுந்தது தான் அவரது நாட்டுப்பற்று. உன்னத இமயம் போல், ஓங்கி நிற்கும் அவரது நாட்டுப்பற்று தான், கோடானு கோடி பாரத வீரர்களை உருவாக்கியது என்பதை எண்ணிப் பார்த்து, நான் பெருமைப்படுகிறேன்.

இந்த மண்ணில், எந்தப் பகுதியில் நின்றாலும், இந்தப் பூமியில், எந்தப் பகுதியில் நின்றாலும், அவர் தன்னை அசைக்க முடியாத நாட்டுப் பற்றுள்ள இந்தியன் என்றே கருதினார்.

அன்று சிகாகோ-விலே சிங்கமென அவர் கர்ஜித்த போது, இந்தியாவின் ஆத்மாவின் முழக்கமாக, அது எட்டுத் திசைகளிலும் கேட்டது. அவருடைய நாட்டுப்பற்று, குறுகிய மனப்பான்மைகளுக்கும், வகுப்பு வாதங்களுக்கும், அப்பாற்பட்டு விளங்கியது என்பது, நடுநிலையாளர்களுக்கு நன்றாகவே தெரியும். தனி ஒரு மனிதனோ அல்லது ஒரு நாடோ, மற்ற சமூகத்தினரிடம் இருந்து, விலகி நின்று வாழ முடியாது என்று, மனித சமூகம் முழுவதற்கும், அவர் உரத்த குரலில் எடுத்துக் கூறியவர்.

இந்தியாவில் பிறந்த ஒவ்வொரு ஆணுக்கும், பெண்ணுக்கும், 'உன் கடமை ஏழ்மையையும் அறியாமையையும் ஒழிப்பதே', என்று எடுத்துக் கூறியவர் அவர்.

அந்த மகத்தான இந்தியரின், மனிதாபிமானியின், மாமனிதரின் இதயத்தைக் கவர்ந்த மாநிலம், தமிழகம். அவர் அமெரிக்கா செல்வதற்கான ஊக்கம் வழங்கப்பட்ட இடம், தமிழகம். அதற்கு உதவிய பெருமகனார், இராமநாதபுரம் ராஜா என்பதையும், சிகாகோ-வில் வெற்றிக்கொடி நாட்டி அவர் திரும்பியபோது, அவரை வரவேற்றுச் சிறப்பித்தவரும் அவர்தான் என்பதையும், இன்று எண்ணிப் பார்க்கும்போது, நான் பூரித்துப் போகிறேன். விவேகானந்தரின் சிறப்பை, முதலில் முழுவதும் உணர்ந்தது, தமிழகம்தான் என்பதையும் எண்ணிப் பார்த்து, நான் பெருமைப்படுகிறேன்; பெருமிதம் கொள்கிறேன்!

எந்தச் சீர்திருத்தக் கருத்துக்கும், எந்த ஒப்பரவு மனப்பான்மைக்கும், உற்ற இடம் தமிழகம் தான். மத மாச்சரியங்களும், ஜாதிப் பிணக்குகளும், வகுப்புக் கலவரங்களும், இல்லாத சமரசப் பூமி, தமிழகம்! இது அமைதிப் பூஞ்சோலை!

விவேகானந்தரின் பாதயாத்திரை முடிந்த இந்த இடத்தில், நமது இலட்சிய யாத்திரை - இந்திய தேசத்தின் யாத்திரை - நவ பாரதத்தின் யாத்திரை - இன்று தொடங்க வேண்டும்.

3 நாட்கள் விவேகானந்தர் தவமிருந்த, தமிழகத்திலுள்ள இந்தப் பாறை, ஒரு நினைவுச் சின்னம் மட்டுமல்ல; இன்றும் நமக்கு வழி காட்டிக் கொண்டிருக்கும், ஒரு ஆன்மீகக் கலங்கரை விளக்கம்!

சமயச்சார்பற்ற பாரதம் என்னும் தத்துவத்தை நிலைநாட்ட, ஒன்றுபட்ட ஒரே இந்தியா என்பதை உறுதிப்படுத்த, தமிழக மண் தான் ஏற்றது என்பது, வரலாறு உணர்த்துகின்ற போதனை!

அமைதி நிறைந்த, ஆன்மீகச் சிறப்புமிக்க, சகல சயமங்களும் ஒன்றை ஒன்று சார்ந்து வாழ்கிற, ஒப்பற்ற பாரதத்தை உருவாக்க வேண்டும் என்று தான், சுவாமி விவேகானந்தர் இங்கே தவமிருந்தார். இங்கே இருக்கிற அன்னை கன்னியாகுமரி, நித்தம் தவம் செய்வதும் அதற்காகத்தான்.

உங்கள் அன்புச் சகோதரியாகிய என் நெஞ்சத் தவமும், தங்கத் தமிழ் மக்களது அன்புத் தவமும், அது தான். விவேகானந்தரின் பாத யாத்திரை முடிவடைந்த இந்த இடத்தில், இந்தியாவின் ஒற்றுமை யாத்திரையை, நவ பாரதத்தின் இலட்சிய யாத்திரையைத் தொடங்கி, நாம் வெற்றி வாகை சூட வேண்டும், என்ற என் விருப்பத்தைத் தெரிவித்து விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.



# புரட்சித்தலைவர் இன்றும் வாழ்கிறார் என்றும் வாழ்வர்



**ம**னிதன், பிறந்தான் - வாழ்ந்தான் - மறைந்தான் என்பதுதான் வாழ்க்கை நியதியாக இயற்கை நமக்கு அளித்துள்ளது. ஆனால், நம் இதய தெய்வம் புரட்சித் தலைவரோ பிறந்தார் - வாழ்ந்தார், இன்றும் நம் இதயத்தில் வாழ்கிறார். இனி என்றென்றும் வாழப் போகிறார் என்கிற தனி நியதியை உருவாக்கிச் சென்றுள்ளார்.

அவர் வளர்ந்து வந்த பாதை, அனைவருக்கும் பாடமாக அமையத் தக்கதாகும். இளமை முதல் அவர் வாழ்க்கையில் எதிர் கொண்ட இடர்ப்பாடுகள் ஏராளமாகும். அனைத்தையும் அவரது மனோபலத்தினாலும் - ஒப்பற்ற மனிதாபிமான அணுகுமுறையாலும் எளிதில் வென்று எதிர்ப்புகளையும், இடர்ப்பாடுகளையும், சாதனைகளாக்கிச் சரித்திரம் படைத்தவர் புரட்சித் தலைவர்.

* * *

## மாண்புமிகு முதல்வர் உரை

* * *

கலைத்துறையிலும் - பொது வாழ்க்கையிலும், தன் சொந்த வாழ்க்கையிலும் சரித்திரச் சாதனைகள் பலவற்றை நிகழ்த்தி - இழப்புகளையும், இடர்ப்பாடுகளையும், சோதனைகளையும், சாதனையாக்கிக் காட்டிய, ஈகைக் குணம் கொண்ட ஏந்தல், எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள், இச்சட்டமன்றப் பேரவையிலும், தமிழக ஆட்சியிலும், சாதனைகள் பலவற்றை நிகழ்த்திக் காட்டியுள்ளார்.

11 ஆண்டுகள் முதலமைச்சராய் இப்பேரவையில் அங்கம் வகித்து, தமிழகத்தை ஆட்சி செய்தார் என்பது மட்டுமல்லாமல், தொடர்ந்து எவ்வித இடைவெளியும் இல்லாது, மும்முறைதேர்தல்களில் மக்களால் முதலமைச்சராக ஆக்கப்பட்டு, அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரே தலைவர், அவர்தான் என்ற சிறப்பையும் - கீர்த்தியையும் பெற்றவர் புரட்சித் தலைவர் ஆவார்.

இச்சட்டமன்றப் பேரவையில் மற்ற எல்லா முதலமைச்சர்களையும்விட, மிக அதிகமான ஆண்டுகள், 1967 முதல் தொடர்ந்து 20 ஆண்டுகள் உறுப்பினராகவும் அங்கம் வகித்து, ஒரு பிரச்சினையில் மிக அதிக நேரம் பேசியவர் என்ற சாதனையினையும் நிகழ்த்தியவர். 1979 பிப்ரவரி 26-ஆம் தேதி தேதி, அவரது அமைச்சரவையின் மீது கொண்டு வரப்பட்ட, நம்பிக்கை இல்லாத் தீர்மானத்திற்குப் பதில் அளித்துப் பேசிய மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள், அன்று ஒரே நாளில் தொடர்ந்து 7 மணி நேரம் பேசினார்.

இச்சட்டப்பேரவை வரலாற்றில், நிலைத்திருக்கும் சாதனைகள் பல நிகழ்த்திய மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள், தமிழக முதல்வராய் நிர்வாகத்திலும் வியக்கத்தகு சாதனைகளை நிகழ்த்தியுள்ளார்.

தனது அரசியல் ஆசான் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் சுட்டிக் காட்டிய, 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்ற நெறியினைத், தன் ஒரே நோக்கமாகக் கொண்டு, ஆட்சி நடத்தினார். தனது ஆட்சியின் மூலம், அதிகபட்ச நன்மைகள், தமிழகத்தில் ஏழை எளிய மக்களுக்குச் சென்று சேர வேண்டும் என்பதிலேயே, கண்ணும் கருத்துமாக இருந்தார்.

அவர்தம் வாழ்நாள் முழுவதும் ஏழைகளின் பாதுகாவலராக வாழ்ந்ததால் தான், தமிழக மக்களின் இல்லங்களிலும், உள்ளங்களிலும், குடிகொண்டுள்ள ஈடுஇணையற்ற தலைவராக இன்றும் வாழ்கிறார், என்றும் வாழ்வார்.

***(31.1.1992 அன்று சட்டப்பேரவையில் டாக்டர் புரட்சித்தலைவர் அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து)***

# புவியாண்ட புரட்சித் தலைவனுக்குப் புகழ் மண்டபம்



இருபதாம் நூற்றாண்டின் தலைசிறந்த மனிதாபிமானியாக, இருபது ஆண்டுக் காலம் தமிழ்த் திரையுலகின் முடிசூடா மன்னனாக, மக்கள் திலகமாக, முதிர்ந்த அரசியல் வித்தகராக, மூன்று முறை தமிழக முதல்வராக, தன் தனி முத்திரையைப் பதித்து, வாழும்போதே வரலாற்று நாயகனாக திகழ்ந்து, நினைத்ததையெல்லாம் முடித்த வெற்றி வீரர், புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களுக்குப் புவியாண்ட அந்த புரட்சித் தலைவனுக்குப்புகழ்மண்டபம், பார் புகழ எழுப்பபப்பட்டுள்ளது.

சத்துணவு தந்த வரலாற்று நாயகனின் நினைவிடம் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் ஆணைப்படி ரூ.1½ கோடி செலவில் அழகுறப் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

இப்புகழ் மண்டபம் 24.12.1992 வியாழக கிழமையன்று - புரட்சித தலைவரின் ஐந்தாவது நினைவு நாளன்று பொதுமக்கள் பார்வைக்கெனத் திறந்து வைக்கப்பட்டது.

தலைசிறந்த சிற்பிகள மற்றும் நிபுணர்களின் கைவண்ணத்தில் பொன்மனத் தலைவரின் தூய நல் இதயத்தை எடுத்துக் காட்டும் வகையில், அகன்ற இதழ்கள் நடுவே புரட்சித் தலைவர் அவர்களின் நினைவிடம் அமைக்கப்பட்டுள்ளது.

வருவோரை வரவேற்கும் வகையில் கை கூப்பி வணங்கும் வடிவத்தில் 44 அடி உயர நுழைவாயில் அமைக்கப்பட்டுள்ளது.

தாமரை இதழ்களின் நடுவே அமைக்கப்பட்டிருக்கும் எம்.ஜி.ஆர். சமாதியை ஒட்டி, நினைவுத் தூண் ஒன்று அமைக்கப்பட்டு உள்ளது. அந் நினைவுத் தூண் உச்சியில், சக்தி வாய்ந்த 'மெர்குரி' விளக்கு ஒன்று பொருத்தப்பட்டுள்ளது. எம்.ஜி.ஆர். சமாதிப் பகுதியிலிருந்து நுழைவு வாயில் வரையில் 3 இடங்களில் வண்ண மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட நீரூற்றுகள் அமைக்கப்பட்டுள்ளன.

நினைவிடத்தின் பின் அமைப்பில் உயர்ந்த தொரு கல்தூண் அமைக்கப்பட்டுள்ளது. அதன் உச்சியில் புரட்சித் தலைவர் அவர்கள் மக்களை நேசித்த பாங்கினை விளக்கும் வகையில், இணைந்து நிற்கும் நாற்கரங்களின் வடிவம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்நினைவக வடிவமைப்பு குறித்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறிப்பிடுகையில்,





''எம்.ஜி.ஆர். சமாதியின் நுழைவுவாயிலிலே அமைக்கப்பட்டிருக்கும் 'குவிந்த கரங்கள்' போன்ற அமைப்பு மக்களை வரவேற்கும் விதத்தையும், எம்.ஜி.ஆர். அவர்கள் மக்களின் ஒட்டு மொத்தமான அஞ்சலியைப் பெறும் நோக்கையும் பிரதிபலிக்கிறது. எம்.ஜி.ஆர். சமாதியைச் சூழ்ந் திருக்கும் தாமரை இதழ்கள், அவரின் தூய இதயத்தைப் பிரதிபலிப்பதாகவும் அமைகிறது. மண்டபங்களும் புல் தரைகளும், அமைதியையும் ஆலயத்தின் அழகையும் மனதில் படியச் செய்வதாகவும் அமைகிறது. கிரானைட் கற்களால் வடிவமைக்கப்பட்ட கை, மக்கள் மீது எம்.ஜி.ஆர். அவர்கள் கொண்ட அன்பை வெளிப்படுத்துவது போலவும் அமைந்திருக்கிறது'' என்றார்.

டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் 5-வது நினைவு நாள் 24.12.92 அன்று அனுசரிக்கப் பட்டது. மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் உத்தரவின் பேரில், சென்னை மெரீனா கடற்கரையில் உள்ள எம்.ஜி.ஆர். அவர்களின் நினைவிடம் ரூ.1½ கோடியில் மிகப் பிரமாண்டமான முறையில் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நினைவு நாளினையொட்டி, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமையில் 24.12.92 அன்று பேரறிஞர் அண்ணா சிலையிலிருந்து மௌன ஊர்வலம் நடந்தது. இந்த ஊர்வலத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் திறந்த ஜீப்பில் நின்றவாறு வந்தார். அவருடன் மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும் வந்தார். 'ஜீப்' காரைத் தொடர்ந்து அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்ட மன்ற உறுப்பினர்கள் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி இந்திரகுமாரி அவர்கள் தலைமையில், பெண் எம்.எல்.ஏ.-க்கள் அணி வகுத்துச் சென்றனர்.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் எம்.ஜி.ஆர். சமாதியில் மலர் வளையம் வைத்து வணங்கி அஞ்சலி செலுத்தினார். அவர்களைத் தொடர்ந்து அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.

மலர் அஞ்சலி செலுத்திய பிறகு, மாண்புமிகு முதல்வர் அவர்களும், அமைச்சர் பெருமக்களும் நினைவிட வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த மேடைக்கு வந்தனர். எம்.ஜி.ஆர். நினைவு அஞ்சலி உறுதிமொழிகளை, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் படிக்க, மேடையிலிருந்தவர்களும், நினைவிட வளாகத்துக்கு வெளியே குழுமி இருந்தவர்களும் அவற்றை திரும்பக் கூறி உறுதி ஏற்றனர்.

# அதிநவீன முறையில் ரூ.40 கோடி செலவில் உருவாக்கப்பட்டுள்ள நேரு விளையாட்டரங்கம்: மாண்புமிகு முதல்வர் அவர்கள் பார்வையிட்டார்!

அனைத்து நாட்டுத் தரத்திற்கு ஏற்ப, ஆசியாவிலேயே சிறந்த விளையாட்டு அரங்குகளில் ஒன்றாக, ரூ. 40 கோடி செலவில் சென்னையில் உருவாக்கப்பட்டுள்ள நேரு விளையாட்டு அரங்கை மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 30.12.'92 அன்று ஒரு மணி நேரம் பார்வையிட்டு, மேலும் அழகுபடுத்துவதற்கான ஆலோசனைகளை வழங்கினார்.

புதிதாக உருவாக்கப்பட்டுள்ள இந்த அரங்கில் அடுத்த மாதம் (ஜனவரி) 18-ஆம் தேதி ஜவஹர்லால் நேரு தங்கக் கோப்பைக்கான 10-வது சர்வதேசக் கால்பந்தாட்டப் போட்டிகள் தொடங்குகின்றன. 18-ஆம் தேதி புதிய விளையாட்டு அரங்கை மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தலைமையில், மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்கள் திறந்து வைக்கிறார்.

புதிய விளையாட்டு அரங்கத்தின் தரைப்பகுதி, முதல்தளம், இரண்டாவது தளம் மற்றும் பிரமுகர்கள் அமரும் இடம் ஆகியவற்றை மாண்புமிகு முதல்வர் அவர்கள் பார்வையிட்டார். செய்யப்பட்டுள்ள நவீன வசதிகளையும், முதல்வர் அவர்கள் கேட்டறிந்தார். மேலும் அழகுபடுத்துமாறு ஆலோசனைகளையும் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வழங்கினார்.

மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் மாண்புமிகு அமைச்சர்கள் அழகு திருநாவுக்கரசு, எஸ். கண்ணப்பன், இ. மதுசூதனன், டி.எம். செல்வகணபதி, தலைமைச் செயலாளர் டி.வி. வெங்கட்ராமன், ஒலிம்பிக் சங்கத் தலைவர் சிவந்தி ஆதித்தன், தமிழ்நாடு கால்பந்தாட்டக் குழுத் தலைவர் விஸ்வநாதன் மற்றும் பல்வேறு துறை அதிகாரிகள் உடன் சென்றனர்.









# தமிழ் இசைச் சங்க - இசை விழா

தமிழ் இசைச் சங்கம் ஆண்டு தோறும் டிசம்பர்த்திங்களில், இசை விழாவை நடத்தி வருவது நாம் அறிந்ததே. இந்த ஆண்டுக்கான இசை விழா 21.12.92 அன்று தொடங்கியது. இந்த ஆண்டு தமிழ் இசைச் சங்கத்தின் பொன் விழா என்பதும் குறிப்பிடத்தக்கது.

விழாவுக்கு, பிரபல பாடகர் திரு. கே.ஜே. ஜேசுதாசு தலைமை வகித்தார், விழாவை மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தொடங்கி வைத்தார்.

இசை விழாவையொட்டி, சிறந்த இசைக் கலைஞர் ஒருவரைத் தேர்ந்தெடுத்து, அவருக்கு 'இசைப் பேரறிஞர்' என்ற சிறப்புப் பட்டத்தைத் தமிழ் இசைச் சங்கம் வழங்கி வருகிறது. அதன்படி, திரு. கே.ஜே. ஜேசுதாசுக்கு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், 'இசைப் பேரறிஞர்' எனும் பட்டத்தை வழங்கினார்.

விழாவில் மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேசும் போது கூறியதாவது:-

'தமிழ் இசைச் சங்கத்தின் வெள்ளி விழாவிலும், அதைத் தொடர்ந்து 38-வது ஆண்டு விழாவிலும், அதைத் தொடர்ந்து இன்று 50-வது ஆண்டு விழாவிலும் கலந்து கொள்வதில் பெருமைப்படுகிறேன்.

பொன்-விழா ஆண்டில், இசை உலகில் பேரொளி வீசும் கே.ஜே. ஜேசுதாசுக்கு 'இசைப் பேரறிஞர்' பட்டம் வழங்கி இருப்பதும் விழாவுக்கு அவர் தலைமை ஏற்பதும் பெருமையாகும்.

தமிழ் இசைக் கலையைக் கட்டிக் காப்பாற்றும் பொறுப்பு நமக்கு உள்ளது. இந்த இசையைப் பல்வேறு இடையூறுகளுக்கு இடையே தமிழ் இசைச் சங்கத்தார் வளர்த்து வருகிறார்கள்.

தமிழ் இசைச் சங்கத்தின் பொன் விழா ஆண்டில், இசையை வளர்க்க பல்கலைக் கழகங்களைப் பயன்படுத்தி மாவட்டங்களில் இசை விழாக்களை நடத்தலாம்.

'தலைமுறை தலைமுறையாகத் தமிழிசை வளர்க்கப்பட்டு வருகிறது. தொல்காப்பியனார் காலம் மற்றும் சங்க காலத்திலிருந்தே தமிழிசை வளர்ந்து கொண்டு வருகிறது. முறையோடு செம்மையாகத் தமிழிசை வளர்ந்து வந்தாலும் இடையே இருண்ட காலமும் இருந்ததுண்டு.

ராஜா அண்ணாமலைச் செட்டியார், சண்முகம் செட்டியார், மூதறிஞர் ராஜாஜி, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா போன்றவர்களின் ஆதரவோடு இது சிறப்புற்று வளர்ந்து வருகிறது. மனிதனுக்கு மகிழ்ச்சி அளிப்பது அழகு. அந்த அழகை வெளிப்படுத்துவது கலை. இசை, நாட்டியம், சிற்பம் போன்ற பல கலைகள் இருந்தாலும் இசைக் கலைதான் ஓங்கி நிற்கிறது.

'தமிழ்நாடு இசையைக் கட்டிக் காத்துவரும் தமிழ் இசைச் சங்கத்தைப் பாராட்டுகிறேன். இச்சங்கம் சென்னை, மதுரையில் இருப்பது போல இடங்களிலும் ஏற்படுத்தப்பட வேண்டும்''.

பொன்விழா மலரை, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் வெளியிட்டார். முதல் இதழை திருமதி எம்.எஸ். சுப்புலட்சுமி பெற்றுக் கொண்டார்.

விழாவினையொட்டி, தமிழ் இசைச் சங்கம் சார்பில் பல்வேறு இசைப் போட்டிகள் நடத்தப்பட்டன இதில் வெற்றி பெற்ற மாணவ-மாணவிகளுக்கு திரு. கே.ஜே. ஜேசுதாசு சான்றிதழ் வழங்கிப் பாராட்டினார்.



வாழும்போதே வரலாறு:

# புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர்

## வாழ்க்கைக் குறிப்பு



தமிழகத்தின் முன்னாள் முதல்வர் டாக்டர் எம்.ஜி. ராமச்சந்திரன் அவர்கள் மிகவும் அன்போடு நேசிக்கப்படும் இந்திய மனிதருள் ஒருவராவார்.

எம்.ஜி.ஆர். என மக்களால் அன்போடு அழைக்கப்படும் டாக்டர் எம்.ஜி. ராமச்சந்திரன் அவர்கள், இலங்கையிலுள்ள கண்டியில் 17.1.1917 அன்று பிறந்தார். இவரது தந்தை அப்போது அங்கு நீதிபதியாகப் பணியாற்றிக் கொண்டிருந்தார்.

எம்.ஜி.ஆர். குடும்பம் இலங்கையிலிருந்து வெளியேறித் தமிழ்நாட்டுக்கு வந்து கும்பகோணத்தில் குடியேறியது. தந்தையின் மறைவுக்குப் பின் எம்.ஜி.ஆரால் தொடக்கப் பள்ளிக்குமேல், படிப்பைத் தொடர முடியவில்லை. தமது குடும்பத்தைக் காப்பாற்றும் பொருட்டு இவர் ஒரு நாடகக் குழுவில் சேர்ந்து பணியாற்றத் தொடங்கினார்.

எம்.ஜி.ஆரின் நடத்தையில் தமது தாயார் மிகுந்த கவனம் செலுத்தியதன் விளைவாக, சிறு வயதிலேயே மக்கள் மீது கருணையையும் மனித குலத்தை இழிவுபடுத்தும் போக்கினை எதிர்க்கும் பண்பையும் வளர்க்கலானார். அன்போடு ஏழைகளுக்குப் பணி செய்வதே கடவுளின் சாம்ராஜ்ஜியத்தை அடைவதற்கான வழி என்பதில் தீவிர நம்பிக்கை கொண்டிருந்தார்.

நாடகத் துறையில் கணிசமான அனுபவம் பெற்ற பிறகு திரைப்படத்துறையில் நுழைய எம்.ஜி.ஆர். கடுமையாகப் போராடினார். திரைப்படத் துறையில் நுழைவது அப்போது அவ்வளவு சுலபமல்ல. இருப்பினும், தமது விடாமுயற்சி மற்றும் சகிப்புத் தன்மையால் திரைப்படத் துறையில் நுழைந்து நடிக்கத் தொடங்கினார். 1947-ஆம் ஆண்டு முதல் முக்கிய கதாபாத்திரங்களில் கதாநாயகனாக நடித்தார். இவரது திரைப்படங்கள் ஒன்றன்பின் ஒன்றாக வசூலில் சாதனை படைத்தது.

திரைப்படங்கள் மூலமாக மக்களிடையே சிறந்த கொள்கைகளைப் பரப்ப முடியும் என்பதில் எம்.ஜி.ஆர். உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தார். 1954-இல் வெளிவந்த இவருடைய 'மலைக் கள்ளன்' என்ற படம் தேசியப் பாராட்டைப் பெற்றது. இவரே தயாரித்து இயக்கி 1958-இல் வெளிவந்த 'நாடோடி மன்னன்' என்ற படம் இதற்கு முன் அடைந்த சாதனைகளை முறியடிக்கும் விதத்தில் சிறந்த படமாகக் கருதப்பட்டது.

தமிழகத்தின் முதல்வராகப் பொறுப்பேற்கும் வரை எம்.ஜி.ஆர். 132 திரைப்படங்களில் நடித்திருந்தார். திரைப்படத் துறையில் ஒரு சிறந்த நடிகராகவும், பெரிய இயக்குநராகவும், தயாரிப்பாளராகவும் திகழ்ந்தார். திரைப்படத் தயாரிப்பில் ஒவ்வொரு நுணுக்கங்களையும் நன்கு அறிந்திருந்தார்.

நல்ல ஒழுக்கமுடைய ஒரு மனிதனாகத் திகழ, கடைப்பிடிக்க வேண்டிய நற்குணங்களைத் திரைப்படங்கள் மூலம் மக்களிடையே பரப்பினார். இதன் பயனாக இவருக்கு 1972-இல் மத்திய அரசின் 'பாரத்' பட்டம் வழங்கப்பட்டது.

## 1300 ஆண்டுப் பழமை வாய்ந்த அரிய துர்க்கைச் சிற்பம்!

தென்னார்க்காடு மாவட்டம், செஞ்சி வட்டத்தைச் சேர்ந்த சிங்கபுரம் என்னும் ஊரில் ஏழாம் நூற்றாண்டைச் சார்ந்த துர்க்கையின் அரிய கற்சிலையொன்று இருப்பது, தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையால் கண்டறியப்பட்டுள்ளது.

உருவ அமைதியினைக் கொண்டு பல்லவர் காலத்ததாகக் கருதத்தகும் இச்சிலையினைத் தொல்பொருள் ஆய்வுத் துறையின் இயக்குநர், திரு. நடன. காசிநாதன் அவர்களின் அறிவுரையின் பேரில், துணை இயக்குநர், திரு. கு. தாமோதரன் அவர்களும், கல்வெட்டாய்வாளர், திரு. வி. இராமமூர்த்தி அவர்களும் சென்று கண்டறிந்தனர். இச்சிலை இவ்வூரில் இருக்கும் தகவலைச் சென்னையைச் சேர்ந்த ஆசிரியர் திரு. முத்து எதிராசன் அவர்கள் இயக்குநரிடம் தெரிவித்திருந்தார்.



இடக்காலை எருமைத் தலையில் மீதூன்றி, திரிபங்க நிலையில் நிற்கும் துர்க்கை, சக்கரம், நீண்டவாள், குறுவாள், அம்பு ஆகியவற்றை வலக்கரங்களிலும், சங்கு, கேடயம், கத்தி, வில் ஆகியவற்றை இடக்கரங்களிலும் ஏந்திய நிலையில் தோற்றம் அளிக்கிறாள்.

சிற்பம், பல்லவர் காலச் சிற்பங்களின் அனைத்துக் கலையம்சங்களையும் பெற்றுத் திகழ்கிறது. சிற்பத்தின் தலைக்கு வலப்புறமும், இடப்புறமும் முறையே மானும், சிம்மமும் காட்டப்பட்டுள்ளன. காலுக்கருகில் இருபுறமும் இரு அடியார்கள் வணங்கியமர்ந்த நிலையில் காணப்படுகின்றனர். சுமார் 4 அடி உயரமுள்ள செவ்வக வடிவிலான பலகைக் கல்லில் இவையனைத்தும் வடிவமைக்கப்பட்டுள்ளன.

தன் வாகனங்களாகிய சிம்மத்தையும், மானையும் ஒருங்கே கொண்டு விளங்கும் இச்சிலை அற்புதமான படைப்பாகும். தமிழ் இலக்கியங்களில் துர்க்கை 'சிங்கவாகினி' என்றும், 'பாய்கலைப் பாவை' என்றும் வருணிக்கப்படுகிறாள். இவ்விலக்கிய வருணனைகளுக்கு உருவகமாகத் திகழும், இத்தகைய சிலை இதுவரை தென்னார்க்காடு மாவட்டத்தில் கண்டுபிடிக்கப்படவில்லை. இதுபோன்றதொரு சிலை இருப்பதை, சென்னைப் பல்கலைக்கழகம், செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் சில ஆண்டுகளுக்கு முன்னர் கண்டறிந்துள்ளது.

மருத்துவம்

# மூளைக்காய்ச்சலைத் தடுப்பது எப்படி?

டாக்டர்
எம்.ஏ. அலீம், எம்.டி.,

**மூளைக் காய்ச்சல் நோய் எப்படி ஏற்படுகிறது? நோயின் அறிகுறிகள் என்னென்ன? அதை வரும் முன் எப்படித் தடுத்துக் கொள்ளலாம்? என்பன போன்ற வினாக்களுக்கெல்லாம் விடையாக இந்தக் கட்டுரை அமைந்திருக்கிறது. அத்துடன், இதைத் தடுக்கும் முறையும் இதில் கூறப்பட்டுள்ளது.**

திருச்சி மாவட்டம், அரியலூர், ஜெயம்கொண்டம், மனப்பாறைப் பகுதிகளில் ஆண்டுதோறும் மழைக் கால மாதங்களான அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களில் மூளை அழற்சி எனப்படும் 'மூளைக் காய்ச்சல்' நோயால் அதிகமான குழந்தைகள் இறந்து வருகின்றன.

இந்நோய் கழிவுநீர் தேங்கி உள்ள பகுதிகள், நீர் நிறைந்த நெல் வயல்கள் சுற்றி உள்ள இடங்கள் ஆகிய பகுதிகளில் வாழும் குழந்தைகளையே அதிகம் பாதிக்கின்றது. இவ்வாண்டு இவ்வகை மூளைக் காய்ச்சல் நோய் இளைஞர்களையும், பெரியவர்களையும் கூட விட்டு வைக்கவில்லை.

### மூளைக் காய்ச்சலுக்குக் காரணம் என்ன?

தமிழகத்தில் இந்த ஜப்பானிய மூளைக் காய்ச்சல் நோய் கொசுக்களால் ஆர்.என்.ஏ. வகையைச் சார்ந்த 'பி' பிரிவு ஆர்போ வைரஸ் மூலம் பரப்பப்படுகின்றது. மூளைக் காய்ச்சலை ஏற்படுத்தக்கூடிய இவ்வகை வைரஸ் பன்றிகள், ஆடு, மாடு போன்ற கால்நடைகள், கோழி, வாத்து போன்ற வீட்டுப் பிராணிகளின் உடலிலும் இரத்தத்திலும் நோயை ஏற்படுத்தாவண்ணம் நிறைந்து இருக்கின்றன.

### பரவும் விதம்

இவ்வகைப் • பிராணிகளைக் கொசுக்கள் கடிக்கும் போது மூளைக் காய்ச்சல் வைரஸ் அடங்கிய பிராணிகளின் இரத்தம் கொசுவால் உறிஞ்சப்பட்டு அவற்றின் நடுக்குடல் பகுதிக்கு வைரஸ்கள் சென்று வளர்ச்சி அடைந்து, இரண்டு வாரத்திற்குள் கொசுவின் மூளை, உமிழ்நீர்ச் சுரப்பிகளை அடைந்து, மனிதர்களையோ மற்ற பிராணிகளையோ தாக்க ஆயத்தமாகின்றன. இதுபோன்ற வைரஸ் அடங்கிய கொசு கடிக்கும் மனிதன் எதார்த்தமாகத்தான் ஆளாகின்றான்.

மனிதர்களை வைரஸ் அடங்கிய கொசு கடிக்கும்போது, வைரஸ்கள் மனிதர்களின் மேல் தோலின் இரத்தத் தந்துகிகளில் செலுத்தப்படுகின்றன. பின்பு மனித உடலில் செலுத்தப்பட்ட வைரஸ் கிருமிகள் உடலின் நிணநீர்ச் சுரப்பிகள், மண்ணீரல், இரத்தக் குழாய்ச் சுவர் செல்கள் ஆகியவற்றில் 4 முதல் 21 நாட்களுக்குள் முழு வளர்ச்சி அடைந்து, மூளையின் இரத்தக் குழாய்களைத் துளைத்துக் கொண்டு, மூளைத் திசுக்களைத் தாக்கி, மூளைக் காய்ச்சல் நோயை ஏற்படுத்துகின்றன.

### மூளைக் காய்ச்சல் யாருக்கு ஏற்படும்?

தமிழகத்தில் ஏற்படும் மூளைக் காய்ச்சல் நோய் பெரும்பாலும் 3 வயது முதல் உள்ள குழந்தைகளையே அதிகம் தாக்குகின்றது. நகர்ப்புறங்களில் இருப்பவர்களை விட, கிராமப்புறங்களில் வாழ்கின்றவர்கள் அதிகமாக இந்நோய்த் தாக்குதலுக்கு ஆளாகின்றனர்.

மூளைக் காய்ச்சல் வைரஸ் கொண்ட கொசுக் கடிக்கு ஆளாகும் அனைவருக்கும் இந்நோய் ஏற்படுவது கிடையாது. கொசுக் கடிக்கப்படுபவர்களில் 500-இல் ஒருவர் அல்லது 1000-த்தில் ஒருவர்தான் இந்நோய்க்கு ஆளாகின்றனர். தமிழக மக்களிடத்தில் 50 சதவிகிதத்திற்கும் அதிகமானவர்களிடம் இந்த மூளைக் காய்ச்சல் வைரஸ் அடங்கிய கொசுவால் கடிக்கப்படும் போது, உடல் எதிர்ப்புச் சக்தி மிகவும் குறைவாக உள்ள 500-இல் ஒருவர் அல்லது 1000-த்தில் ஒருவர் மட்டுமே நோய்வாய்ப்படுகின்றனர்.

### நோய்க்கான அறிகுறிகள்

மூளைக் காய்ச்சல் பரவி வரும் பகுதிகளில், ஒருவருக்கு மூளைக் காய்ச்சல் ஏற்படக்கூடும் என்பதை, ஒரு வாரத்திற்கு முன்னதாகவே அறிய முடியும். முழுமையாக இந்நோய் ஏற்பட ஒன்று முதல் ஏழு நாட்களுக்கு முன், கடுமையான குளிர், தலைவலி, திடீர்க் காய்ச்சல், உடல் அசதி, உணவில் சரிவர நாட்டமின்மை, அடிக்கடி வாந்தி போன்ற தொந்தரவுகள் ஏற்படும். பின்பு காய்ச்சலின் அளவு அதிகரித்து 100 முதல் 102 டிகிரி வரை மருந்து கொடுத்தாலும் குறையாது காய்ச்சல் தொடரும். அத்துடன் குழப்பம், முன்னுக்குப் பின் முரணான பேச்சு, செயல், ஆகியவற்று



# பசியைப் போக்கி படிப்பை வளர்ப்போம்!

**—அமரர் எம்.ஜி.ஆர்**

தமது இளம் வயது முதலே பொதுவாழ்வில் நடைபெறும் நிகழ்ச்சிகளைக் கூர்ந்து கவனிக்கலானார் எம்.ஜி.ஆர். இவர் ஒரு தீவிர தேசியவாதி. 'அண்ணா' என்று அனைவராலும் அன்போடு அழைக்கப்படும் திரு. அண்ணாதுரையுடன் எம்.ஜி.ஆருக்குத் தொடர்பு ஏற்பட்டது. அதன் பயனாக 1953-இல் தி.மு.க.வில் எம்.ஜி.ஆர். சேர்ந்தார். தி.மு.க.வின் கூட்டங்களுக்கு மக்களைக் கவருவதிலும், தேர்தல்களின்போது அதிக வாக்குகள் பெற்றுத் தருவதிலும் எம்.ஜி.ஆர். முக்கியப் பங்காற்றினார்.

பேரறிஞர் அண்ணா தமது இதயத்தில் எம்.ஜி.ஆருக்கென்றே ஒரு தனி இடத்தை வைத்திருந்தார். 1959-இல் சென்னை மாநகராட்சியைத் தி.மு.க. கைப்பற்றுவதற்கு எம்.ஜி.ஆரின் செல்வாக்கே ஒரு முக்கியக் காரணமாக இருந்தது. அன்றுமுதல் தொடர்ந்து தி.மு.க. வெற்றிமேல் வெற்றி பெற எம்.ஜி.ஆர். அரும்பாடுபட்டார். 1962-இல் சட்டமன்ற மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டதன் மூலம், எம்.ஜி.ஆர். தமிழகச் சட்டப் பேரவை உறுப்பினரானார்.

1967 தேர்தல் பிரச்சாரத்தில் எம்.ஜி.ஆர். ஈடுபட்டிருந்தபொழுது நடிகர் எம்.ஆர். ராதா-வால் சுடப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். மருத்துவமனையிலிருந்து கொண்டே தேர்தலில் போட்டியிட்டு அதிக வாக்குகள் வித்தியாசத்தில் எம்.ஜி.ஆர். வெற்றி பெற்றார்.

1962-இல் சீனா இந்தியா மீது போர் தொடுத்தபோது யுத்த நிதிக்கு ரூ.75 ஆயிரம் நன்கொடை வழங்கி முதல் நன்கொடையாளராகத் திகழ்ந்தார். அதைப்போலவே வங்கதேச யுத்தத்தின்போது வங்க தேசப் பாதுகாப்புக்காகத் தீவிரப் பிரச்சாரமும் செய்தார்.

1969-இல் அண்ணாவின் மறைவுக்குப் பிறகு திரு. மு. கருணாநிதி அவர்களுக்கு ஆதரவு தெரிவித்து கருணாநிதி முதல்வராக எம்.ஜி.ஆர். அரும்பாடுபட்டார். 1971-இல் தி.மு.க. பெற்ற பெரும் வெற்றிக்குப் பிறகு, கட்சித் தலைமையின் போக்கைக் கட்சித் தொண்டர்களும் மக்களும் எதிர்க்கத் தொடங்கினர். அப்போதைய முதல்வர் திரு. மு. கருணாநிதி அவர்களுக்கும் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களுக்குமிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது. கட்சியை நல்வழியில் கொண்டு செல்ல டாக்டர் எம்.ஜி.ஆர். எடுத்த முயற்சிகள் தோல்வி அடைந்ததைத் தொடர்ந்து, அப்போது கட்சியின் பொருளாளராக இருந்த எம்.ஜி.ஆரை திரு. கருணாநிதி அவர்கள் கட்சியிலிருந்து நீக்கினார்.

இதைத் தொடர்ந்து மக்களின் பெரும் ஆதரவுடன் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்ற புதிய கட்சியை 17.10.1972 அன்று எம்.ஜி.ஆர். தோற்றுவித்தார். 1972 முதல் 1976 முடிய இந்த இடைப்பட்ட காலத்தில் நடைபெற்ற எல்லா இடைத் தேர்தல்களிலும் இந்தக் கட்சி அமோக வெற்றிபெற்றது. 1976-இல் தி.மு.க. அமைச்சரவை கலைக்கப்பட்டது.

1977 மற்றும் 1980 பொதுத்தேர்தல்களில் அ.இ.அ.தி.மு.க. அமோக வெற்றிபெற்று ஆட்சியைக் கைப்பற்றியது. முதல்வராகப் பொறுப்பேற்ற எம்.ஜி.ஆர்., ஏழைகளின் வாழ்வு உயரும் வகையில் தமது தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றத் திட்டம் தீட்டினார். கல்வி நிலையங்களிலும், அரசுப் பணிகளிலும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 50 சதவிகித இடம் ஒதுக்கீடு செய்து ஆணையிட்டார். குழந்தை நலத்திட்டம், கிராம மக்களுக்கான தன்னிறைவுத் திட்டம், நலிந்த பிரிவு மக்களுக்கு உதவும் வகையில் 'ஒரு குடும்பத்தில் ஒருவருக்கு வேலை' போன்ற பல்வேறு சமூக நலத் திட்டங்களைத் தொடங்கினார்.

முதலமைச்சரின் மதிய சத்துணவுத் திட்டம், மனிதவள மேம்பாட்டில் ஒரு விவேகமான முதலீடு எனப் பாராட்டப்படுகிறது. தேசிய மேம்பாட்டுக்கு இந்தத் திட்டம் மிகவும் இன்றியமையாதது. இந்தத் திட்டம், நாட்டின் எதிர்காலக் குடிமக்களாகிய குழந்தைகளின் கல்வி, சுகாதாரம் மற்றும் ஒட்டுமொத்த நலனுக்கு ஒரு சுமூகமான சூழலை உருவாக்கியிருக்கிறது. மனித முக்கியத்துவத்துக்கு இது ஒரு காணிக்கையாகும்.

குழந்தைகளுக்கும், பணிபுரியும் ஏழைத் தாய்மார்களுக்கும் காலணிகள் வழங்கும் திட்டத்தையும் பள்ளிக் குழந்தைகளுக்கு இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்கும் திட்டத்தையும் கொண்டு வந்தார். 1984-இல் 'வாழ்க்கை முறைக் கல்வி'த் திட்டத்தை அறிமுகப்படுத்தினார். பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினருக்கு 30 இலட்சம் வீடுகள் கட்டித்தரத் திட்டங்கள் தீட்டினார்.

இந்தியாவிலேயே முதன் முதலாகப் பெண்களுக்காகவும், தமிழ்மொழி வளர்ச்சிக்காகவும் தனித்தனியே பல்கலைக் கழகங்கள் நிறுவி, தமிழகத்தில் உயர்கல்வியின் வளர்ச்சிக்கு ஊக்கமளித்தார். இதுதவிர தொழில் பயிற்சிக் கல்லூரிகள், மருத்துவக் கல்லூரிகள், பொறியியற் கல்லூரிகள் என ஏராளமான கல்லூரிகளை நிறுவினார்.

மூன்றாம் தமிழ்ச் சங்கம் ஆட்சி செலுத்திய மதுரையில் ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு நடத்தினார். இலங்கை, ஹாங்காங், பர்மா, சிங்கப்பூர், ஜப்பான், பிரான்சு, மெக்சிகோ, அமெரிக்கா ஆகிய இடங்களுக்குப் பயணம் செய்து திரும்பினார். மத்திய அரசுடன் நல்லுறவு கொண்டிருந்தார்.

தேசிய ஒருமைப்பாட்டிற்கும், மதச்சார்பின்மைக்கும் தன்னைத்தானே அர்ப்பணித்துக் கொண்ட இத்தலைவர், இன ஒற்றுமையைப் பேணிக் காப்பதில் மற்றவர்களுக்கு முன்மாதிரியாகத் திகழ்ந்தார்.

தனித்து விளங்கும் தன்மைக்காகவும், அவரது சாதனைகளுக்காகவும், சமூகக் கொடுமைகளை எதிர்த்து இடைவிடாது போராடியமைக்காகவும், கலைச் செறிவிற்காகவும், ஆக்கச் சக்திக்காகவும், அவரது புத்துணர்ச்சிமிக்க பணிக்காகவும் மக்களிடையே தமது கருத்துக்களை கவர்ச்சிகரமாக எடுத்துக்கூறியமைக்காகவும், மனித நேயத்தில் அவர் கொண்டிருந்த ஈடுபாட்டிற்காகவும், சென்னைப் பல்கலைக் கழகம் இவருக்குக் கௌரவ டாக்டர் பட்டத்தை (Doctor of Laws - Honoris Causa) வழங்கிச் சிறப்பித்தது.

1984-இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் அ.இ.அ.தி.மு.க. மகத்தான வெற்றியைப் பெற்றது. அமெரிக்காவிலுள்ள புரூக்ளின் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக் கொண்டே தமிழ்நாட்டில் தேர்தலில் போட்டியிட்டு சட்டமன்ற உறுப்பினரானார். அமெரிக்காவிலிருந்து திரும்பிய பின் 10.2.85 அன்று தமிழகத்தின் முதல்வராக மூன்றாம் முறையாகப் பதவியேற்றார். தொடர்ந்து மூன்று முறை அவர் முதல்வராகப் பொறுப்பேற்றதிலிருந்தே, மக்கள் அவர் மீது கொண்டிருந்த அளவுகடந்த அன்பினைப் புரிந்து கொள்ளலாம்.

வாழும்போதே வரலாறான இம்மாபெரும் மக்கள் தலைவர் முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் 1987 டிசம்பர் திங்கள், 24-ஆம் நாள் காலை 3 மணிக்கு சென்னைக்கு அருகே ராமாபுரத்திலுள்ள அவரது தோட்டத்தில் இயற்கை எய்தினார்.



## அவரே ஒரு கவிதை!

நமது எம்.ஜி.ஆர். அவர்கள் பேசும்பொழுது, அழகும், உள்ள உணர்ச்சியும் உள்ளதுதான் 'கவிதை' என்று சொன்னார். இதைச் சொல்லும் போது நீங்கள் எல்லாம் கைதட்டி மகிழ்ந்தீர்கள். எதற்காகக் கைதட்டுகிறீர்கள் என்று எண்ணிப் பார்த்தேன். அப்போது தான் அவர் தன்னைப் பற்றிப் பேசினார் என்று புரிந்தது. அது அவருக்குத் தான் பொருந்தும்.

- பேரறிஞர் அண்ணா.
(இரண்டாம் உலகத் தமிழ் மாநாடு, சென்னை, 1968)

## கலைவாணர் வழியில்...!

கலைஞன் என்பவன் மிகவும் நுணுக்கமானவன்! மனிதர்களிலிருந்து மிகவும் வேறுபட்டவன்; மாறுபட்டவன்! உண்மையை உணர மறுப்பவர்களுக்கு உணரவைப்பவன் கலைஞன். அப்படி உணரவைத்த கலைஞர்களில் கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் தலை சிறந்தவர்!'

கலைவாணர் வழியில் கருத்தாலும் கடமை ஆற்றும் திறத்தாலும் சிறந்த ஒரே கலைஞர் தம்பி எம்.ஜி. இராமச்சந்திரன் ஒருவர்தான்!

- பேரறிஞர் அண்ணா.

## தமிழ்நாட்டில் வெள்ள நிவாரணப் பணி:

# விவசாயிகளுக்கு ரூ.861.55 இலட்சம் செலவில் இலவசமாக இடுபொருள்கள் வழங்கப்படுகின்றன.

கடந்த நவம்பர் 1992-இல் எதிர்பாராத அளவிற்கு 13,14,15 ஆகிய தேதிகளில் பெய்த பெருமழை மற்றும் புயல், அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட வெள்ளத்தினால் கன்னியாகுமரி, சிதம்பரனார், திருநெல்வேலி, இராமநாதபுரம், காமராசர், திண்டுக்கல்-அண்ணா, திருச்சி, மதுரை, தஞ்சாவூர், நாகப்பட்டினம்-காயிதே மில்லத், தென்னார்க்காடு ஆகிய 11 மாவட்டங்களில் நெல், கரும்பு, தென்னை, பருத்தி, எண்ணெய்வித்துப் பயிர்கள், பயறு வகைகள், சிறு தானியங்கள் சாகுபடி செய்யப்பட்ட பகுதிகளில் சுமார் ரூ.63 கோடி வரையிலான விளைபொருட்களுக்குச் சேதம் ஏற்பட்டது.

இதனை அடுத்து, உடனடியாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பாதிப்பு அளவினைக் கணக்கெடுத்து அரசுக்கு அறிக்கை அனுப்பப்பட்டது. தமிழக அரசு, பாதிக்கப்பட்ட சிறு/குறு விவசாயிகள் மற்றும் இதர விவசாயிகளுக்குத் தக்க இழப்பீடு செய்யும்பொருட்டு, ரூ.861.55 இலட்சம் செலவில் நிவாரண உதவி வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

சிறு/குறு விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு கீழ்க்கண்ட விகிதங்களில் உதவி வழங்க இந்த ஆணை வகை செய்கிறது.

| பயிர் | வெள்ள நிவாரண உதவித் தொகை (எக்டேருக்கு ரூபாயில்) சிறு/குறு விவசாயிகள் | இதர விவசாயிகள் |
|---|---|---|
| நெல்: முழு பாதிப்பு | 900 | 550 |
| பகுதி பாதிப்பு | 300 | 250 |
| தென்னை ரூ.15 ஒரு பாதிக்கப்பட்ட மரத்துக்கு ஒரு கன்று வீதம் | | |
| கரும்பு | 2000 | 1000 |
| பருத்தி | 1200 | 600 |
| எண்ணெய்வித்து | 2200 | 1100 |
| பயறு வகைகள் | 350 | - |
| சிறுதானியங்கள் | 350 | 200 |

மேற்கண்ட நிவாரணம் முழுவதும் இடுபொருட்களாக மட்டுமே வழங்கப்படும். இதற்குத் தேவையான இடுபொருட்களான விதை, பூச்சி மருந்துகள், சிங்க் சல்பேட், இரசாயன உரங்கள், யூரியா, டிஏபி மற்றும் பொட்டாஷ் அனைத்தும் அந்தந்தப் பகுதி வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலமாக விநியோகிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தேவையான இரசாயன உரங்கள் 'தாய்' நிறுவனம் மூலம் அந்தந்தக் கிராமங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டு விநியோகிக்கும் பணி போர்க்கால அடிப்படையில் நடைபெற்று வருகின்றது.

இந்த நிவாரணப் பொருட்கள் விநியோகத்தை, மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. கு.ப. கிருஷ்ணன் அவர்கள் அண்மையில் தூத்துக்குடியில் தொடங்கி வைத்து இடுபொருட்களை விநியோகம் செய்தார். இதுவரையில் 470 மெ.டன் நெல் விதைகள், 2035 தென்னங் கன்றுகள், 6700 லிட்டர் பயிர்ப்பாதுகாப்பு மருந்துகள், களைக்கொல்லிகள், 3765 மெ.டன் இரசாயன உரங்களான டிஏபி, யூரியா, பொட்டாஷ் மற்றும் சிங்க் சல்பேட் ஆகியவை ரூ.165 இலட்சம் அளவிற்கு விநியோகிக்கப்பட்டுள்ளன. இதனால் 54,666 சிறு/குறு விவசாயிகளும் 9,647 இதர விவசாயிகளும் பயனடைந்துள்ளனர்.



# வலிப்பு நோய்-சில செய்திகள்

டாக்டர் சி.எம். வேல்முருகேந்திரன்

**'வலிப்பு நோய் விழிப்புணர்ச்சி வாரம்', தமிழகமெங்கும் கொண்டாடப்பட்டது. அந்நோய் பற்றி, அத்துறையில் புகழ் மிக்க மருத்துவரான டாக்டர் சி.எம். வேல்முருகேந்திரன் அவர்களைச் சந்தித்து விவரம்கேட்டு விரிவாக்கப்பட்ட கட்டுரை இது:**

வலிப்பு நோய் என்று கூறப்படுவது ஒரு வியாதி அல்ல; இது காய்ச்சல், இருமல் போன்ற ஒரு நோயின் அறிகுறியே ஆகும்.

மனிதனின் மூளையில் 2 பில்லியன் நரம்பு செல்கள் உள்ளன. இவை வேதியல் மாற்றங்களினால் தான் வேலை செய்கின்றன. இந்த மாற்றங்களினால், மின்சக்தி தோன்றி ஒரு செல்லுடன், இன்னொரு செல் தொடர்பு கொண்டு செயல்படுகின்றன. இந்த மின் உற்பத்தியானது மிகைப்பட்டு மின் அலையாகி, அதுவே முற்றி மின்புயல் ஆகும்போதுதான் ஒருவருக்கு வலிப்பு நோய் காணப்படுகிறது.

**நோயின் முக்கிய காரணம்**

இம்மாற்றங்களுக்குக் காரணங்கள் யாவை என்பதைப் பற்றி விளக்குவது அத்துறையில் உள்ள எனது கடமையாகும்.

1. குழந்தை கருவில் இருக்கும் போது, தாயாருக்குத் தோன்றும் வைரஸ் இன்பெக்ஷன், இரத்தப் போக்கு ஆகியவை குழந்தை மூளை வளர்ச்சியைப் பெரிதும் பாதிக்கும். பிரசவத்தின்போது, அதற்காக அதிக நேரம் நீடித்தல், குழந்தையானது தலை கீழாக மாறி, முதலில் கால் வெளிப்படும்படியாகப் பிறத்தல், நச்சுமாலையானது சிசுவின் கழுத்தில் சுற்றிக் கொள்ளல் போன்ற சில வேண்டா விளைவுகளினால் மூளைக்குக் கிடைக்கும் பிராணவாயு தடைப்பட்டு மூளையானது பாதிக்கப்படும்.

2. தலையில் அடிபடுதல்

3. மூளையில் கட்டி ஏற்படுதல்.

4. உடலில் தோன்றும் வேதியல் மாற்றங்கள். அதாவது இரத்தத்தில் சர்க்கரை குறைதல், கழிவுப் பொருட்கள் அதிகரித்தல் போன்ற மாற்றங்கள் ஏற்படுதல்.

5. இரத்தக் குழாய் தொடர்பான நோய்கள்; குறிப்பாக இரத்தக் குழாய் வெடித்து, மூளையில் இரத்தம் கசிதல், மூளைக்குப் பாயும் இரத்தம் குறைதல்.

6. மூளைக் காய்ச்சலுக்கு ஆட்படுதல்.

7. உடலுருக்கி நோய்களில் முதன்மையான T.B.

இந்நோய்களே மேற்கூறிய மாற்றங்களை மனித உடலில் தோற்றுவிக்கும். சிலவேளைகளில், வியாதி என்னவென்று புலப்படாமலேயே, வலிப்பு நோய் (Idiopathic Epilipsy) ஏற்படுவதும் உண்டு.

**நோயின் அறிகுறிகள்**

வலிப்பு நோய் என்பது • பல வகைப்படும்.

1. பொதுவான வலிப்பு நோய் (Generalised Seizure) என்று ஒன்று உண்டு. அ) அடுத்தது பெருவலிப்பு (Grandmal) என்பது. இந்நோய் உள்ள நோயாளி திடீரென்று கத்திக் கொண்டு (Epileptic Cry) நினைவிழந்து கீழே விழுவார். மூச்சு விடுவதே சில நொடிகளுக்கு நின்றுவிடும். கை கால்கள் வெட்டி வெட்டி இழுக்கும். வாயில் நுரை நுரையாக வரும். நாக்கே துண்டாகிவிடுவது போலக் கடித்துக் கொள்வார். வாயிலிருந்து இரத்தம் கலந்த எச்சில் வெளிவரும்.

பிறகு சிறிது நேரத்தில் நோயாளியின் கை, கால் ஆட்டங்கள் நின்றுவிடும்; பிறகு, நினைவிழந்து விடுவார். இப்படிப்பட்டவர்கள் மலமும் சிறுநீரும் கழித்துவிடுவதும் உண்டு. கொஞ்சம், கொஞ்சமாகத்தான் அவர்களுக்கு நினைவு திரும்பும். சிலர் அப்படியே தூங்கியும் விடுவார்கள்.

ஆ) சிறுவலிப்பு (Petitamal) இது 12 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு மட்டுமே உண்டாகும் ஒருவகையான வலிப்பு நோயாகும். சில நொடிகள் நினைவிழந்து விடுவார். ஆனால் கீழே விழுந்துவிடமாட்டார்.

இ) மயோக்ளோனிக் ஜெர்க் (Myoclonic Jerk). இந்த வகை வலிப்பு நோய் கண்ட இவர்களுக்குத் திடீரென்று, கை, கால்கள் வெட்டி இழுக்கும். கையில் உள்ள பொருள் எதுவானாலும் கீழே தவறி விழலாம்.

**ஒரு பக்க வலிப்பு(Partial Seizure)**

அ) இந்த வகை நோய் உள்ளவர்களுக்கு, முகம் ஒரு பக்கம் கோணிக்கொண்டு போக நேரிட

டன் அதிகரித்த தலைவலி, கழுத்துத் தசைகளில் விறைப்பு போன்ற தொந்தரவுகள் சிலமணி நேரத்தில் ஏற்படும். இத்துடன் உதடுகள், நாக்கு ஆகியவற்றில் துடிப்பும், கைகளில் நடுக்கமும் உண்டாகும். பின்பு கால்களைவிட, கைவிரல்கள் இறுக்கமாக மூடியபடி கைகள் விறைத்து முறுக்கிக் காணப்படும். இந்த நிலை நீடிக்கும்போது, உடலில் வலிப்பு ஏற்பட்டு சுயநினைவு நிலையில் மாற்றம் உண்டாகி, கொஞ்சம் கொஞ்சமாக மயக்கநிலை ஏற்பட்டு இறக்க நேரிடுகிறது.

★ வயிற்றுப் பசியைத் தீர்த்துக் கொண்டால் மட்டும் போதாது; விலங்கினங்கள் கூடத்தான் வயிற்றுப் பசியைத் தீர்த்துக் கொள்கின்றன. அவற்றினின்றும் மேம்பட்ட நிலையை மனிதன் அடைவதற்குத் தன்னுடைய ஒவ்வொரு செயலிலும் ஓர் ஒழுங்கினை வரையறுத்துக் கொள்ள வேண்டும்.



இந்நோயில் அதிக வேர்வை, அதிகரித்த சுவாசம், நுரையீரலில் நீர் சேர்தல், காய்ச்சல் எந்தச் சிகிச்சைக்கும் குறையாத நிலை ஆகியவை நோயின் முற்றிய நிலையை உணர்த்தக் கூடிய அறிகுறிகளாக இருக்கின்றன.

இம்மூளைக்காய்ச்சல் நோய்க்கு முழுமையாக ஆளாகின்றவர்களில் 50 முதல் 60 சதவிகிதத்தினர் இறந்துவிட நேரிடுகிறது. உயிர் பிழைப்பவர்களில் பெரும்பாலானவர்களுக்கு, மூளைத்திசு பாதிப்பு காரணமாக அறிவு வளர்ச்சி குறைபாடு, பேச முடியாமை, வாதம் போன்ற தொந்தரவுகள் ஏற்படுகின்றன.

### சிகிச்சை

இந்த மூளைக்காய்ச்சல் நோய்க்கு, ஏற்படும் தொந்தரவுக்குத் தக்கவாறு சிகிச்சைகள் அளிக்கப்படுகின்றன. குறிப்பாக மூளைத்தண்டுவட நீரின் அழுத்தத்தைக் குறைக்கவும், வலிப்பு ஏற்படுவதற்கும் சிகிச்சைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவற்றைத் தவிர, புதிதாக இம்மூளைக்காய்ச்சல் வைரஸ் கிருமிகளை அழிப்பதற்காக வைரஸ் எதிர் மருந்துகளும் ஆராயப்பட்டு வருகின்றது.

### தடுப்பு முறை

மூளைக்காய்ச்சல் நோய் ஏற்படாமல் தடுக்க, அது கொள்ளை நோயாக உருவெடுக்கும், மழைக்கால மாதங்களுக்கு முன்பாகவே இந்நோய்க்கான தடுப்பூசி போட்டுக் கொள்வதன் மூலம் இந்நோயைத் தடுக்க முடியும்.

### தடுப்பூசி

இந்த மூளைக்காய்ச்சல் நோய்க்கான தடுப்பூசி இந்த நோய் உண்டாக்குகின்ற வைரஸ் கிருமி செலுத்தப்பட்ட சுண்டெலி மூளைத் திசுவில் இருந்து இந்தியாவிலேயே ஜப்பானியக் கூட்டு முயற்சியுடன் தயாரிக்கப்படுகின்றது. இந்தத் தடுப்பூசி கங்சுலி, மைய ஆராய்ச்சி நிலையத்தில் ஆண்டொன்றுக்கு இரண்டு மில்லியன் தடுப்பூசிகள் என்ற எண்ணிக்கையில் தயாரிக்கப்படுகின்றன.

இந்தத் தடுப்பூசியை 7 முதல் 14 நாட்கள் இடைவெளியில் இரண்டு ஊசிகள் போடப்பட வேண்டும். ஊசி போடப்பட்ட நாட்களில் இருந்து ஓராண்டுக்கு ஒருமுறை ஊக்கு ஊசியாகவும் போடப்பட வேண்டும். மூன்று வயதுக்குட்பட்ட குழந்தைக்கு ½ சி.சி. வீதமும் அதற்கு மேற்பட்ட குழந்தைக்கு 1 சி.சி. வீதம் இந்த ஊசி போடப்படுகின்றது. தடுப்பூசி போடப்பட்டதில் இருந்து ஒரு மாதக் காலத்திற்கு பின்பே, மூளைக்காய்ச்சல் நோய்க்கான எதிர்ப்புச் சக்தி உடலில் ஏற்படுவதால், இந்நோய் ஏற்படுவதான மழைக்கால மாதங்களுக்கு ஒரு மாதம் முன்னதாகவே இந்நோய் ஏற்பட வாய்ப்புள்ள பகுதிகளில் இந்தத் தடுப்பூசி போடப்பட வேண்டும்.

இந்நோய்க்கான தடுப்பூசி போடப்பட்டவர்களுக்கு மூன்றாண்டுகளுக்குப் பின் மீண்டும் இந்தத் தடுப்பூசி போட்டுக்கொள்வதன் மூலம் அறவே இந்த மூளைக்காய்ச்சல் நோய் ஏற்படுவதைத் தடுக்க முடியும்.

### கொசு ஒழிப்பு

இதைத் தவிர, கொசுவால் இந்நோய் அதிகம் பரவுவதால், கொசு வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதன் மூலமாகவும் இந்நோய் பரவலைத் தடுக்க முடியும். கொசு வளர்ச்சிக்கு ஏதுவான கழிவு நீர்த் தேக்கங்கள், ஓடைகள் மூடிய கழிவு நீர்ப் பாதைகளாக மாற்றப்பட வேண்டும்.

நெல் வயல்களில் கொசு வளர்ச்சிக்கு உதவும் தேங்கி இருக்கும் நீர் வடித்துவிடப்பட வேண்டும்.

வீடுகளில் கொசு வளர்ச்சியைப் போக்க, துணிகளைத் தொங்க விடாமல், அடைசலாக இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

வீட்டிலும் சுற்றுப்புறத்தில் கொசுக்களை அழிக்க கொசுக் கொல்லி மருந்துகள் தெளிக்கப்பட வேண்டும். கொசுக் கடிக்காமல் இருக்க கொசு வலைகள் அல்லது மின்சாரம் மூலம் எரிக்கப்படும் கொசு விரட்டிகள் அல்லது உடலில் தடவிக் கொள்ளும் இரசாயனி கொசு விரட்டிகளை உபயோகிக்கலாம்.

வீட்டு வளர்ப்புப் பிராணிகள் சுத்தமான முறையில் பாதுகாக்கப்பட்டு, அவை வளர்கின்ற இடங்களில் கொசு வளர்ச்சிக்கான சூழ்நிலைகள் அழிக்கப்படவேண்டும்.

### சத்துணவு

குழந்தைகளின் உடலில் எதிர்ப்புத் திறனை வளர்க்க, குறித்த காலத்தில் மற்ற நோய்க்கான தடுப்பூசிகள் போட்டுக் கொள்வதுடன், சத்து நிறைந்த சத்துணவுகளை உட்கொள்ளவும் செய்ய வேண்டும்.

இந்த முறையில் செயல்படின், இனிவரும் ஆண்டுகளில் மூளைக்காய்ச்சல் ஏற்பட்டு குழந்தைகள் உயிரிழக்கும் நிலையைத் தடுக்க முடியும்.





# தொட்டில் குழந்தைகளை வளர்க்க ஐந்து பெண்கள் முன்வந்தனர்

தங்களுக்குப் பிடிக்காத பெண் குழந்தைகளை, பிறந்ததும் கொன்றுவிடும் கொடுமையைத் தடுக்க, அரசு அமைத்துள்ள தொட்டில்களில் அந்தக் குழந்தைகளைப் போட்டு விடலாம் எனத் தமிழக அரசு அறிவித்திருந்தது.

இத்தொட்டில்களில் இதுவரை போடப்பட்ட பெண் குழந்தைகளில் 5 குழந்தைகள் சென்னைக்குக் கொண்டுவரப்பட்டு, மாண்புமிகு முதல்வர் அவர்களால் பெயர் சூட்டப்பெற்றன.

தாம்பரத்திலுள்ள எஸ்.ஓ.எஸ். என்ற குழந்தைகள் காப்பகத்தில் அந்தக் குழந்தைகள் ஒப்படைக்கப்பட்டிருந்தன.

இந்த ஐந்து குழந்தைகளையும், தனது குழந்தைகள் போல் வளர்த்துக் கொள்ள ஐந்து பெண்கள் முன் வந்தனர். தாம்பரம் எஸ்.ஓ.எஸ். காப்பகத்தில் நடைபெற்ற விழா ஒன்றில், மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் புலவர் இந்திரகுமாரி அவர்கள், குழந்தைகளை அந்தப் பெண்களிடம் ஒப்படைத்தார்.

ஜெயலட்சுமி என்ற குழந்தையை அமுதா என்ற பெண்ணும், ராஜலட்சுமி என்ற குழந்தையை முத்துலட்சுமி என்ற பெண்ணும், தனலட்சுமி என்ற குழந்தையை வத்சலா என்ற பெண்ணும், மகாலட்சுமி என்ற குழந்தையை பானுமதி என்ற பெண்ணும், கல்யாணி என்ற குழந்தையை லட்சுமி என்ற பெண்ணும் பெற்றுக் கொண்டனர்.

## பார்த்தோம்

நவம்பர் 1,16 ஏடுகள் ஒரு சேரப் பெற்றுப் பார்த்துப் படித்ததில் மிக்க மகிழ்ச்சியடைந்தேன். போற்றிப் பாதுகாக்க வேண்டிய நேரு, பசும்பொன் தேவர் திருமகன், அதேபோல் கலைவாணர் என்.எஸ். கே., அன்னை இந்திரா ஆகிய திருவுருவப் படங்கள் மிக அருமை. மிகக் குறைந்த விலையில் அதே சமயம், இதுவரை எந்த இதழிலும் வராத சேதிகளாக, என்.எஸ்.கே., தேவர் பற்றியவை இருந்தன. பாராட்டுக்கள்.

- பொன்.சேது விசயகுமார்,
சாலிக்கிராமம்,
சென்னை.

இந்திராகாந்தியின் வாழ்க்கை வரலாற்றைப் படித்தேன், மிக அருமை.

- சு. பெரியசாமி,
வெங்கமேடு,
திருச்சி மாவட்டம்.

16.11.1992 இதழில் 'கலை உலகின் முழுநிலவு' எனும் கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் பற்றி புலவர் தமிழ்ப்பித்தன் அவர்கள் எழுதிய கட்டுரை பயனுள்ளதாக இருந்தது.

- க. இளங்கோ
தாடையாம்பட்டி,
மதுரை.

'கலை உலகின் முழுநிலவு' கலைவாணர் பற்றிய புலவர் தமிழ்ப்பித்தன் அவர்கள் கட்டுரை, வாழ்வியலை உள்ளடக்கிக் கருத்தை வெளியிட்டு வாழ்ந்த என்.எஸ். கிருஷ்ணன் அவர்களுக்குச் சூட்டும் புகழாரமாகும்.

- இன்பவல்லி வாசுதேவன்,
கீரைசாத்து

கவிஞர் பூங்கோவன் அவர்களின் 'மது மனிதர்க்குப் பகை' கவிதை மதுவினால் ஏற்படும் தீமைகளைத் தெள்ளத் தெளிவாக விளக்குவதாக அமைந்திருந்தது.

- கெ. குமாரப் பிள்ளை
கன்னியாகுமரி.

## படித்தோம்

'மது மனிதர்க்குப் பகை' கவிதை, குடிப்பழக்கத்தை மறக்க உதவும் ஓர் மருந்தாக அமைந்தது.

- என். குப்புசாமி
புங்கோடை
திருச்சி மாவட்டம்.

கலைமாமணி குன்னக்குடி வைத்தியநாதன் வழங்கிய 'சலங்கை விழா' பற்றிய கட்டுரை இன்னும் எங்கள் காதுகளில் 'ஜல் ஜல்' என ஒலித்துக் கொண்டிருக்கின்றது.

- ப. முருகேச பாண்டியன்
கரப்பாடி
கோவை மாவட்டம்.

அறிவொளி இயக்கம் பற்றிய கட்டுரை என் மனதை மிகவும் கவர்ந்தது.

- வி. சென்றாயன்,
கருப்பூர்
சேலம் மாவட்டம்.

---

லாம். கை அல்லது கால்களானது வெட்டி இழுக்கக்கூடும். ஒரு பாகத்திலிருந்து ஆரம்பித்து, மற்ற பாகங்களுக்கும் பரவும்; இவ்வகை நோயாளிகள் நினைவிழக்கவும் வாய்ப்புண்டு.

ஆ) மின்சாரம் பாய்ச்சியது போன்ற உணர்வு இந்த நோயின் வேகத்தால் ஏற்படலாம்.

இ) டெம்பரல் லோப் எபிலப்சி (Temporal lobe epilepsy) Psychomotor Seizure என்ற வகை நோய் உள்ளவர்களுக்கு கண்ணில் மாயத் தோற்றங்கள் ஏற்படலாம்; எதிரில் ஏதாவது காட்சிகளையோ பொருட்களையோ தெளிவின்றிக் காண்பார்கள், இவர்கள். அசையாப் பொருட்கள் அசைவது போலத் தோன்றும், பெரிய பொருட்கள் சிறியதாகவும், சிறிய பொருட்கள் பெரியதாகவும், இவர்கள் பார்வைக்குத் தோன்றும். வெளி உலகத்தில் சஞ்சரிப்பது போலவும் தோன்றலாம். இவர்களுடைய காதில் விநோத ஒலிகள் கேட்கக்கூடும். நாக்கில் ஒரு வகை ருசியும், மூக்கில் ஒரு விதத் துர்நாற்றமும் தோன்றும். சிலருக்கு நெஞ்சு படபடப்பு, வயிற்றில் பந்து போல் கிளம்புதல், வியர்த்துக் கொட்டுதல், முகம் வெளிருதல், மயிர்க் கூச்செரிதல் முதலான மாற்றங்கள் காணப்படும். சிலர் நாவை சப்புக் கொட்டிக் கொள்வர். தன்நிலை தவறி நடப்பர். இவர்கள் நினைவுடன் இருப்பது போலத் தோன்றினாலும், இவர்கள் நினைவின்றியே இக் காரியங்களைச் செய்வதால், இவர்களுக்குத் தான் செய்யும் காரியங்கள் பற்றிய விவரம் தெரியாது.

### குழந்தைகளும் வலிப்பு நோயும்

இவ்வகை நோய்க்கு வயதுக் கணக்கெல்லாம் இல்லை. 6 மாதம் முதல் 6 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு ஜுரம் கடுமையாக அடிக்கும்போது வலிப்பு நோய் (Febrile fits) ஏற்படுவது உண்டு.

இவ்வலிப்பு நோயால் அவதிப்படுபவர்களுக்கு, நினைவு தவறி விடும்; அதனால், அவர்களால் இதன் விபரத்தை எடுத்துச் சொல்ல முடியாது. இந்நோயால் அவதிப்படுபவர்களை நேரில் கண்டவர்கள் மூலம் தான் அதுபற்றிய விபரங்களை நாம் கேட்டறிய வேண்டும்; இவ்விவரங்கள் மிகவும் முக்கியமானவைகளாகும்.

நரம்பு மண்டலத்தை முறைப்படி சேர்த்துப் பார்த்தால், மூளை நரம்பு மண்டலத்தில் உள்ள குறைகளை ஒரு மருத்துவர் கண்டறியலாம். மூளையில் கட்டி இருந்தால், கண் நரம்பு வீங்கும். அதனை Opthalmoscope எனும் கருவியின்மூலம் நேரிலேயே நாம் கண்டறிய முடியும்.

### பரிசோதனை (Test) வகைகள்

வலிப்பு நோய் கண்டவர்களை மிகக் கவனமாகப் பரிசோதிக்க வேண்டும்; இதற்காகச் சிலவகைச் சோதனை முறைகள் உண்டு. முதலில் தலை பரிசோதிக்கப்பட வேண்டும்.

தலை X-ray, CT Scan, Magnetic Resonance Imaging முதலியன மூலம் சோதிக்கப்பட்டால் மூளையில் இருக்கும் கோளாறுகளைப் பற்றித் துல்லியமாக அறிந்து கொள்ளலாம்.



இரத்தப் பரிசோதனை (சர்க்கரை, யூரியா) முதலியனவும் இதற்குப் பயனுள்ளவைகளாகும்.

Electro-Encephalograph (மூளையின் மின் அலை வரைவு) என்பதும் மிக முக்கியமான சோதனையாகும். இதன்மூலம் ஒருவரது மூளையில் உள்ள மின் அலை பற்றியும் மின் புயல் பற்றியும் பெரிதும் அறிந்திட வாய்ப்புண்டு.

இது மன நோயல்ல. மன நோயாளிகள் வலிப்பு நோயாளிகளைப் போலக் கை, கால்களைக் கோணல் மானலாக வலிப்பது உண்டு. (Hysterical fits) என்றாலும்கூட, இவர்கள் நினைவு இழக்க மாட்டார்கள். உடல் அடிபடாத அளவில் கீழே விழுவார்கள். ஆனால் நாக்கைக் கடித்துக் கொள்ள மாட்டார்கள். கட்டுப்பாட்டை மீறி மலஜலம் கழிக்கமாட்டார்கள்.

### இது ஒரு புதுநோயா?

வலிப்பு நோயானது மனித இனத்தில் சிலவகை நோய் போலப் புதிதாகத் தோன்றியது அல்ல.

மனிதகுலம் தோன்றியதிலிருந்து இந்நோய் இருந்திருக்க வேண்டும். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் வாழ்ந்த பதினெண் சித்தர்கள் எழுதிய நூலிலேயே இந்நோயைப் பற்றிய முழு விவரமும் காணப்படுகின்றது. இவர்கள் வலிப்பில் 21 வகை இருந்ததாக எழுதியுள்ளனர். ஒவ்வொரு வகைக்கும் ஒரு பறவை அல்லது மிருகத்தின் பெயரை இட்டிருக்கின்றனர். பெரு வலிப்பைக் 'காக்காய் வலிப்பு' என்றும் கூறியுள்ளனர். வெந்நீரில் குளித்தபின் பிதற்றிக் கொண்டு வலிப்பு நோய் வந்தால் அதனை 'முயல் வலிப்பு' என்றனர்.

ஆயுர்வேதத்திலும், சரகா என்பார் எழுதிய வடமொழி நூலிலும் வலிப்பு பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. பாபிலோனியர்கள், கல்லாலான கூரிய கருவிகள் மூலம் மண்டை எலும்பை உடைத்து, கெட்ட ஆவிகளை வெளிப்படுத்திக் குணப்படுத்த முயன்றுள்ளனர்.

ரோமானியர்கள் கெட்ட ஆவி மனிதனைப் பிடிக்கும்போது மன நோய் தோன்றுமென்றும், நல்ல ஆவியினால் வலிப்பு நோய் உண்டாகுமென்றும் நம்பிக்கொண்டிருந்தார்கள்.

இன்னும் நம்நாட்டில் அதே போன்ற மூடநம்பிக்கைகள் சில இருக்கின்றன. வலிப்பு நோயுற்றோரைக் கட்டைகளாலும், இலைகளாலும் அடித்தல், அவர்களுக்குச் சூடு போடுதல் முதலியவற்றை இன்னும் காணலாம். வலிப்பு நோய் கண்டவர்களுக்குக் கையில் இரும்புச் சாவியைக் கொடுத்தல், மூக்கில் புகை ஏற்றுதல் முதலிய பழக்க வழக்கங்கள் இருப்பதையும் பார்க்கலாம்.

### இந்நோய்க்கு மருந்து உண்டா?

இந்நோயைக் குணப்படுத்த சிறந்த மருந்துகள் இல்லை எனச் சொல்லப்படுவது தவறு; இந்நோய் நீக்கும் மருந்துகள் சில உள்ளன. அம் மருந்துகளை 3 முதல் 5 ஆண்டுக் காலம் வரை நோயாளி தவறாது உட்கொண்டுவந்தால் இந்நோய் நீங்கும்.

வலிப்பு நோய் நீக்கும் முக்கிய மருந்துகள் சிலவற்றின் பெயர் விவரம் வருமாறு:

1. பினோபார்பிடோன் (Phenobarbitone)
2. பினைட்டாயின் (Phenytoin)
3. கார்போமசீபின் (Carbomazephine)
4. சோடியம் வால்பரேட் 'Sodium Valproate)
5. பிரிமிடோன் (Primidone)
6. ஜெரான்டின் (Zarontine)

- இவை மட்டுமன்றி, மேலும் பத்துக்கும் மேற்பட்ட மருந்துகள் அண்மைக் கால ஆராய்ச்சியில் பயனுள்ளவை எனக் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளன.

ஒருவர் தனக்கு வலிப்பு வரும் என்று முன்கூட்டியே உணர்ந்தால், அருகில் உள்ள பத்திரமான இடத்தில் படுத்துக்கொள்ள வேண்டும். பக்கத்தில் இருப்பவர்கள் அவர்களைத் தாங்கிப் பிடித்து அடிபடாமல் பக்குவமாகப் படுக்கவைக்க வேண்டும். தலையை ஒரு பக்கமாகத் திருப்பி வைத்தால், வாயிலிருந்து வரும் உமிழ்நீர் நுரையீரலுக்குப் போகாமல் வெளியில் வழிந்து விடும்.

நாக்குக் கடிபடாவண்ணம், பற்களுக்கு இடையில் ஒரு கைக் குட்டையையோ, பென்சிலையோ அல்லது ஒரு துணியையோ பாதுகாப்பாகச் சுற்றி வைக்கலாம்.

வலிப்பு வந்து நின்ற பிறகு, டாக்டரிடம் அழைத்துச் சென்று காட்டவேண்டும். வலிப்பு நோயாளியின் வாயில் தண்ணீர், சோடா முதலியவற்றை ஊற்றக் கூடாது.

★ திறமையாகப் பணிபுரிவதற்கு மது ஒருபோதும் உதவியாக இருந்தது இல்லை; ஊறு பயக்கின்ற ஒரு தடையாகவே இருந்து வந்துள்ளது. ஒவ்வொரு துளி மதுவும் விஷமே.

- டாக்டர் எச்.சே. டேல்.

★ மது ஒருபோதும் மருந்தாகாது. மருத்துவத்தில் அதற்கு இடமே இல்லை.

- டாக்டர் ஹார்டுவார்டு ஷெல்லி.

★ மது அருந்துவதால் மயக்கம், புலம்பல், பைத்தியம், தூக்கமின்மை, நரம்புத் தளர்ச்சி, வலிப்பு, பக்கவாதம், தொண்டைக் கொதிப்பு, இரைப்பைப் புண், கல்லீரல் வீக்கம், மூத்திர நோய், இருதய நோய், இரத்தக் குழாய் தடித்தல், சுவாசகாசம் பாதிப்பு, என்புருக்கி நோய், குடல் புண், கண்களில் உஷ்ணக் கொதிப்பு, விஷசுரம், பரங்கிநோய் முதலியவை வரும்.

- மருத்துவ நிபுணர் சர். விக்டர் ஹார்ஸ்லி.



தமிழரசு
16.1.1993
பொங்கல் இதழ்

தருமபுரி மாவட்டச்
சிறப்பிதழாக
மலர்கிறது!

★மாவட்ட வரலாற்றுச் சிறப்புகள்!...

★அரசு ஆற்றிவரும் அரும்பணிகள்!...

★நல்வாழ்வு பெற்ற நலிவுற்றோர் சந்திப்புக் கட்டுரைகள்!...

★அழகிய புகைப்படங்கள்!...

★அத்தனையும் தாங்கி பத்திரப்படுத்தத் தக்கதாக அற்புதமாய் வெளிவருகிறது!...

படிக்க - பயன்பெற - பாதுகாக்க


அதனாலோ, கையில் சாவியைக் கொடுப்பதாலோ எந்தப் பயனும் ஏற்படாது.

குழந்தைகளுக்குக் காய்ச்சல் இருந்தால் மின்விசிறியின் கீழே காற்றோட்டமாக வைக்கவேண்டும். உடம்பைக் குளிர்ந்த நீரினால் துடைக்க வேண்டும். அவ்வாறான குழந்தைகளின் பெற்றோர்களே ஆசனத்தின் மூலம் டைசிபாம் என்ற மருந்தைச் செலுத்தக் கற்றுக்கொள்ள வேண்டும். இம்மருந்து வலிப்பை உடனே நிறுத்தும்.

தோராயமாக நம் நாட்டின் மொத்த மக்கள் தொகையில் ஒரு சதவிகிதத்தினர் இந்நோயால் அவதிப்படுகிறார்கள். மாறாக நூறில் ஒருவருக்கு இந்நோய் வருவதற்கான வாய்ப்பு உண்டு. தமிழ்நாட்டில் 5 முதல் 6 இலட்சம் பேருக்கு இந்த வியாதி இருக்கலாம். மொத்த இந்தியாவைக் கணக்கிட்டால் 60 இலட்சம் பேர் இதனால் அவதிப்படுகின்றனர்.

**விழிப்புணர்ச்சி வாரம்**

(Assiciation of Behavioural and Cognitive Neurology) என்ற அமைப்பு, (61, O.V.M. தெரு, சேப்பாக்கம், சென்னை-5.) மக்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்படப் பாடுபடுகின்றது. 1990-ஆம் ஆண்டு நவம்பர் 17 அன்று இந்த அமைப்பானது விழிப்புணர்ச்சி நாளை நடத்தியது. இது மக்களிடையே பெரும் ஆர்வத்தை ஊக்குவித்தது. 500-க்கு மேற்பட்டவர்கள் கலந்துகொண்டு, இந்திய நாட்டில் பல்வேறு பகுதியிலிருந்து வந்த நரம்பியல் நிபுணர்களிடம் தங்கள் ஐயங்களைக் கேட்டுத் தீர்த்துக்கொண்டனர்.

'இந்திய வலிப்பு நோய்க் கழகம்' நவம்பர் மாதம் 17-ஆம் நாளை நம் நாட்டிலல்லாமல், பல்வேறு நாடுகளிலும் ஆண்டுதோறும் 'வலிப்பு நோய் நாள்' அல்லது விழிப்புணர்ச்சி வாரம் நடத்தப்படுகிறது. இவ்வாறு நடத்தப்படுவதன் நோக்கம் பின்வருமாறு:

**மூடநம்பிக்கையை ஒழித்தல்**

நாட்டில் பல பாகங்களில், வலிப்பு நோய் உற்றோரை பேய், பிசாசு பிடித்தவர்கள் என்றும், பைத்தியம் பிடித்தவர்கள் என்றும் கருதுகின்றனர். அவர்களை அடித்தும், சூடு வைத்தும் கொடுமைப் படுத்துகிறார்கள். இந்தக் கொடுமைகளை நீக்குவது.

**பெண்கள்**

இவ்வியாதியால் பாதிக்கப்பட்ட பெண்களின் நிலை மிகவும் பரிதாபத்திற்குரியது ஆகும். அறிவிற் சிறந்த, குடும்பத்தைச் சிறப்பாக நடத்தக் கூடிய குணவதியான இளம் பெண்கள் பலரும் வலிப்பு நோய் காரணமாகவே வாழா வெட்டியாக இருக்கிறார்கள்; இந் நிலை மாற்றுவது.

மருத்துவப் பிரிவுச் சட்டத்தில் வலிப்பு நோயையும், மன நோயையும் (பைத்தியம் பிடித்தவர்கள்) ஒன்றாகச் சேர்த்திருப்பதால் விவாகரத்து கோருவோருக்கு அது எளிதாகக் கிடைக்கிறது. இதைப் போக்குவது.

**குழந்தைகள்**

அறிவிற்சிறந்த குழந்தைகளும் கூட இந்நோய் காரணமாகவே பள்ளியிலிருந்து விரட்டப்படுகிறார்கள். இவ்வியாதியுள்ள குழந்தைகள் அவதியுறும்போது மற்ற குழந்தைகள் அதைக்கண்டு பயப்படுகின்றனர் என்ற காரணம் காட்டப்படுகின்றது. இவ்வியாதி தொற்றிக் கொள்ளும் என்ற பயமும் ஒரு புறம் சிலருக்கு ஏற்படும். ஆகவே இனி இவ்வாறு நடவாதிருக்க வகை செய்வது. அக்குழந்தைகளுக்குப் போதுமான கல்வி அறிவு கிடைப்பதில்லை.

**வேலைவாய்ப்பு**

மிகச் சிறந்த வேலை நுணுக்கங்கள் தெரிந்த திறமையாளர்கள் கூட வேலை செய்யுமிடத்தில் வலிப்புடன் காணப்பட்டால் அவர்கள் வேலையை இழக்கிறார்கள். இவ்வகைப் பாதிப்புகளை மாற்றுவது.

மலர்ந்து, மணம் வீசவேண்டிய மலர்கள் வாழ்க்கையில் அறியாமையினால் கருக்கப்படுகிறார்கள். ஒரு சாதாரண நோய் காரணமாக வாழ்க்கை முழுவதும் வாடித் துடிக்கும் அவலத்திற்கு ஆளாகிறார்கள். என்ன கொடுமை இது!

வலிப்பு நோய் வந்தவர்கள் எல்லோரையும் போன்ற சாதாரண மனிதர்களே. உடல் வன்மையிலும், அறிவாற்றலிலும் மற்றவர்களைப் போல் தகுதி பெற்றவர்களே. ஜூலியஸ் சீசர் போன்ற மாவீரர்கள் பிகாஸோ போன்ற சிறந்த கலைஞர்கள் எல்லாம் இவ்வாறான வலிப்பு நோயாளிகளாகவே வாழ்ந்திருக்கின்றனர்!

**வலிப்பு நோய் உடையவர்கள் மணந்து கொள்ளலாமா?**

வலிப்பு நோய் உடையவர்கள் திருமணம் செய்து கொள்ளலாம்; தவறில்லை; உடலுறவுக்குத் தடை இல்லை. குழந்தைகள் பெற்றுக் கொள்ளலாம். அதனாலும் பாதிப்பில்லை!

இந் நோயுடைய தாய்மார்கள் கருவுறுதலுக்குத் தடை ஏதும் இல்லை. மருந்துகளைத் தவறாமல் உட்கொள்ள வேண்டும். சில மருந்துகளினால் குழந்தைகளுக்கு ஊறு நேர வாய்ப்புண்டு. அம் மருந்துகளை மட்டும் மருத்துவர்கள் ஆலோசனை கேட்டறிந்து தவிர்க்க வேண்டும். அவர்கள் மருத்துவர் கண்காணிப்பில் இருப்பது அவசியம். கர்ப்ப காலத்தில் வலிப்புற்றால் குழந்தைகளுக்கு ஊறு ஏற்பட வாய்ப்புண்டு. ஆகையால் மிகவும் கவனமாக இருப்பது நல்லது.

**வாகனங்களை ஓட்டலாமா?**

நோய் நின்றபின், முதலிரண்டு ஆண்டுகளுக்கு இந் நோயாளியாக இருந்தவர்கள் விரைவு வாகனங்களை ஓட்டக்கூடாது; பிறகு ஓட்டலாம்.

மருத்துவர்கள் கொடுத்த மருந்தை 3 முதல் 5 ஆண்டுகளுக்குத் தறவாமல் உட்கொள்ள வேண்டும்.

மருந்தைத் தாமாகவே நிறுத்துதல் கூடாது.

தூக்கமின்மையைத் தவிர்க்க வேண்டும். ஆபத்தான சூழ்நிலையில் வேலை செய்தல் ஆகாது.

தண்ணீரில் நீந்துதல், வேகமான வாகனங்களை ஓட்டுதல், நெருப்பு அல்லது ஓடுகின்ற இயந்திரங்களை இயக்குதல் கூடாவே கூடாது. பசியோடிருப்பதும் ஆகாது.

**இந்நோய் தொற்றுமா?**

வலிப்பு என்பது நோயின் அறிகுறியே தவிர, ஆபத்தான வியாதியல்ல.

இந்த நோய் தொற்று நோயல்ல என்பதையும் அனைவரும் அறிய வேண்டும். ஆகவே, அவர்களைத் தீண்டத் தகாதவர்களைப் போல நடத்தும் நிலை மாற, நாமெல்லாம் பாடுபடவேண்டும்.


தமிழரசு
தமிழ்நாடு அரசு ஏடு

சந்தா விவரம்

'தமிழரசு' தமிழ் (மாதம் இருமுறை)
ஆண்டுச் சந்தா ரூ. 24
அரையாண்டுச் சந்தா ரூ. 12

'தமிழரசு' ஆங்கிலம் (மாதம் ஒருமுறை)
ஆண்டுச் சந்தா ரூ. 12

சந்தாத் தொகையை — மணியார்டர் அல்லது பாங்க் டிராப்ட் மூலம் அனுப்ப வேண்டிய முகவரி:

—உதவி இயக்குநர்
'தமிழரசு'
அரசினர் தோட்டம்,
சென்னை-600 002.



# கலை உலகின் வழிகாட்டி

-பேரறிஞர் அண்ணா

கலைஞர்கள் எல்லோருமே கலையுலகை நான்கு பக்கங்களும் இரும்புத் திரைகள் இட்ட ஒரு வீடாகக் கருதி, அதற்குள் வசித்து வந்தனர். அவர்கள் அரசியல் உலகை மட்டுமல்ல, வெளியுலகைக் கூட எட்டிப் பார்த்தும் அறியார்! இது தமிழகத்தின் தொன்றுதொட்ட வழக்கமாகும்.

இந்த வழக்கத்தை இந்த இருபதாம் நூற்றாண்டில் இன்றைய பிற்பகுதியில்தான் ஒரு சில கலைஞர்கள் மீறினார்கள். இரும்புத் திரைகள் இட்டுக் கொண்டு வசித்து, அந்தக் 'கலைவீட்டில்' 'உள்ள பல கணி வழியாக வெளியுலகைச் சிறிது எட்டிப்பார்க்கத் தொடங்கினார்கள்.

சிலர் உள்ளே நின்றவாறே பார்த்தனர். சிலர் தலையை மட்டும் வெளியே நீட்டிப் பார்த்தனர். அப்படிப் பார்த்தவர்களில் சிலர், தவறாகப் புரிந்துகொண்டு, தலையை உள்ளே இழுத்துக் கொண்டனர்; சிலர் சந்தேக அச்சங் கொண்டு நின்றனர்.

ஆனால் அந்தக் கலைஞர்களுக்கெல்லாம் ஒரு 'வழிகாட்டி'யாக இருந்து விட்டவர் புரட்சி நடிகர்.

புரட்சி நடிகர் அந்தக் கலை வீட்டிலிருந்த பலகணி வழியாக எட்டிப் பார்த்ததுடன் நில்லாது - அரசியல் உலகுக்கும் தாவிப் புகுந்தார். அந்த எண்ணம், வருங்காலம் அற்ற கலைஞர்களுக்கும் மறுமலர்ச்சி தருவதாகும். அவருடைய அந்தச் செயல் புரட்சிகரமானது.

மற்ற கலைஞர்களும் அரசியலில் - நாட்டு மக்களின் இதயங்களில் - பங்கு கொள்வதாகக் கூறுகிறார்கள். அவர்கள் எட்டிப் பார்த்ததில் அடிப்படைக் கோளாறு இருக்கிறது!

''புரட்சி நடிகர் வேண்டும் ஆதலால், அவர் புகுந்த அரசியலும் நமக்கு வேண்டும்'' என்று புகுந்தவர்கள் சிலர்.

''புரட்சி நடிகரே சேர்ந்து விட்டாரே! நாமும் புகுந்தால் என்ன?'' என்று சேர்ந்தவர்கள் சிலர்.

''புரட்சி நடிகர் நல்லவர்; அதனால் அவர் புகுந்துள்ள கட்சியும் நல்லதாகத்தான் இருக்கும்'' என்று பங்கு கொண்டவர்கள் சிலர்.

''புரட்சி நடிகரின் தயவு நமக்கு வேண்டும். ஆகவே அவரது கட்சியின் கொள்கையும் நமக்கு வேண்டும்'' என்று ஒப்புக் கொண்டவர் சிலர். புரட்சி நடிகரைப் பிடிக்காத காரணத்தால் 'எம்.ஜி.ஆர். சேர்ந்த கட்சி நமக்கு வேண்டாம்' என்று ஓடிவிட்டவர்களும் இருக்கிறார்கள்!

### அகத்திலும் புறத்திலும் சிறந்தவர்

பொதுவாக, அகம், புறம் என்று கூறப்படுவனவற்றுக்குப் பல வகையான கருத்துக்களைக் கூறுகின்றனர். அவற்றில் எது சிறந்தது என்று வாதிடுகின்றனர்.

அவற்றுக்கு இரத்தினச் சுருக்கமாக ஒன்றைக் கூற வேண்டுமானால் 'எண்ணம் என்பது அகம்' என்றும், 'செயல் என்பது புறம்' என்றும் கூறலாம்.

### இவற்றில் சிறந்தது அகமா? புறமா?

தமிழ் மக்கள் அகத்தையும் புறத்தையும் சமமாகவே பாவித்து வந்துள்ளனர்.



அகத்துக்கு ஐந்நூறோ புறத்துக்கு முந்நூறோ – அல்லது அகத்துக்கு முந்நூறோ புறத்துக்கு ஐந்நூறோ பாடவில்லை தமிழன். 'அகநானூறு' 'புறநானூறு' என்றுதான் பாடினான். அகமும் புறமும் தமிழனுக்கு ஒரே எடை.

இவற்றில் ஏதாவது ஒன்றை மட்டும் குறிக்கோளாகக் கொண்டு சிறந்து விளங்கும் நாடு, என்றைக்கும் சிறப்பாக வாழ முடியாது.

உதாரணமாக, அக வாழ்க்கையில் சிறந்த நாடு கிரேக்கம்; புற வாழ்க்கையில் சிறந்தது எகிப்து. இவ்விரு நாடுகளின் நீடு புகழை அறியாதவர் சிலரே! ஆனால் அந்த 'நீடு புகழ்' இன்று எங்கே?

நமது நாடு அக வாழ்க்கையிலும் புற வாழ்க்கையிலும் ஒருங்கே சிறந்து விளங்குவது. அந்தச் சிறப்பு, தமிழனுக்கு இல்லை என்றால், தன் வீட்டில் பால் பொங்கியது போதாது என்று பிறரையும் ''பால் பொங்கிற்றா?'' என்று கேட்டிருக்க முடியுமா? அதனால்தான் இத்துணைச் சிறப்புகளைக் கொண்டிருக்கிறது இந்நாடு. ஆகவே, தமிழனை 'ஈதல் இசைபட வாழ்ந்தான்' என்கின்றனர்.

இதனை நம் நடிகர்கள் மேற்கொள்ள வேண்டும். அகம் புறம் இரண்டிலும் சிறந்து விளங்க வேண்டும்.

நடிகன் நடிகனாகவே இருந்து விடக் கூடாது. அதுபோல, கலை - கலைகளுக்காகவே இருந்துவிடக் கூடாது.

'நடிகரும் மக்கள் இனமே! அதுபோல் வாழ்வின் வளத்துக்கே கலை உதவ வேண்டும்' என்ற சீரிய நோக்கம் கொண்டார் புரட்சி நடிகர்.

'இந்த நோக்கம் தனக்கு மட்டும் இருந்தால் பயனில்லை; ஏனைய கலைஞர்களுக்குள்ளும் புக வேண்டும்; தான் பெற்ற இன்பத்தை அவர்கள் அடைய வேண்டும்; அதற்குத் தானே முன்னோடியாக இருக்க வேண்டும்' என்று கருதி, தம்மைத் தடுத்தவர்- பகைத்தவர்- வெறுத்தவர் மத்தியில் அரசியலில் தாவிப் புகுந்தார்.

மக்களுக்கு உதவுகிறார் - உதவ வேண்டும் என்று துடிக்கிறார் - உதவி செய்து கொண்டே இருக்கிறார்.

ஆக, அகத்திலும் (நடிப்பிலும்) புறத்திலும் (அரசியலிலும்) ஒருங்கே சிறப்பை எட்டிப் பிடிக்கிறார் எம்.ஜி.ஆர்.

எம்.ஜி.ஆரிடம் நான் கண்ட ஒரு சிறந்த பண்பு – எந்தப் பிரச்சினையையும் சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ளவர்களுடைய நலனை நினைவில் வைத்து, அவர் அணுகுவது ஆகும்.

- சிலம்புச் செல்வர் ம.பொ.சி.

TNSC BANK

**The Tamil Nadu State Apex Co-Operative Bank Ltd.,**

**233, N.S.C. Bose Road, Madras-600 001.**

**Rate of Interest on Deposits (Effective from 9.10.1992)**

| Sl.No. | Type of Deposit | Rate of Interest per annum |
|---|---|---|
| 1. | Savings Bank Accounts | 6.25% w.e.f. 24.4.92 |
| 2. | Fixed Deposits : | |
| | For 46 DAYS and above but upto 270 days | 12.25% |
| | For 271 DAYS and above but upto 364 days | 12.00% |
| | For 1 YEAR and above | 12.25% |

**Interest on Fixed Deposit for 1 year and above will be paid Quarterly**

- NRO & NRE Accounts Facilities are available in 6 designated Branches.
- Interest rates are subject to RBI directives from time to time.

THE BANK AT YOUR SERVICE




# தமிழ் வளர்த்த பெரியார்



ஆராய்ச்சிப் பேரறிஞர்

# மயிலை சீனி வேங்கடசாமி

பேராசிரியர் ம.இரா. தங்கமணி

தமிழகம் ஈன்றெடுத்த தவப்புதல்வர்களுள் ஒருவர் ஆராய்ச்சிப் பேரறிஞர் மயிலை சீனி வேங்கடசாமி. இவர் தனது ஆய்வுத் திறத்தாலும் அயரா உழைப்பாலும் தமிழகத்தின் தலைமைசான்ற ஆராய்ச்சியாளர்களுள் முன்னணியில் திகழ்கிறார்.

இலக்கியம், இலக்கணம், கல்வெட்டு, செப்பேடு, சமயம், கலை, ஆய்வுக் கலை, சொல்லாய்வு, மொழியாய்வு - போன்ற பலதுறைகளில் ஆய்வுகள் செய்து, தனது நுண்மாண் நுழை புலத்தால் இவர் புத்தொளி பாய்ச்சியுள்ளார். தமிழ் இலக்கியம், தமிழ்நாட்டு வரலாறு - ஆகிய இரண்டையும் இவர் தனதிரு கண்களாகப் போற்றினார். எனவே தனது தள்ளாத வயதிலும் தொடர்ந்து ஆராய்ச்சியில் ஈடுபட்டார்.

பள்ளி ஆசிரியர், பத்திரிகை ஆசிரியர், நூலாசிரியர், ஆய்வாளர், கல்வெட்டறிஞர், கலையியல் வரலாற்றறிஞர் (Art Historian), ஓவியர், கவிஞர், இலக்கிய விமர்சகர், தன்மான இயக்கத் தொண்டர், பேச்சாளர் - போன்ற பல நிலைகளில் புகழுடன் விளங்கிய இவர், பல பட்டங்களையும் பாராட்டுதல்களையும் பெற்றுள்ளார். 'பேரவைச் செம்மல்' என்பது இவர் பெற்ற பட்டங்களுள் குறிப்பிடத்தக்கது.

ஆய்விலேயே அமரர் மயிலை சீனி வேங்கடசாமி அவர்களைப் பற்றி இளைய தலைமுறையினர் அறிந்துகொள்ள வேண்டுவது அவசியம். அரை நூற்றாண்டுக்கு மேல் ஆய்வுகள் புரிந்து இவரது வாழ்வும் பணியும், நமக்கெல்லாம் நல்வழி காட்டும் ஒரு ஒளிவிளக்கு.

## இளமை வாழ்க்கையும் கல்வியும்

வரலாற்றுப் புகழ்மிக்க சென்னை மாநகரின் நடுநாயகமாக விளங்குவது மயிலாப்பூர். மயிலை என்பது இதன் சுருக்கப் பெயர். வாழ்க்கைச் சட்டம் வகுத்த வள்ளுவர், இங்குதான் பிறந்தார் என்பர். பண்டு மயிலை ஒரு சிறந்த தமிழ்ப் பண்ணையாகவே விளங்கிற்று. மகாவித்வான் மயிலை சண்முகம் பிள்ளை, மயிலை சீனி. கோவிந்தராசன் - முதலான தமிழறிஞர்கள் மயிலைக்குப் பெருமை சேர்த்தனர். வேங்கடசாமி அவர்களும் மயிலையில்தான் 16.12.1900 -ஆம் நாள் பிறந்தார். தமிழறிஞர் சீனி வேங்கடசாமி அவர்கள் இவரது தமையனார் ஆவார். இளவலான வேங்கடசாமி தனது அண்ணனிடம் தமிழ் பயின்றார். பின்னர் சென்னைக் கிறித்துவக் கல்லூரியில் விரிவுரையாளராக இருந்த சற்குணரிடம் தமிழ், ஆங்கில மொழிகளைக் கற்றார். வடமொழி (சமஸ்கிருதம்), பாலி மொழிகளையும் கற்றுத் தேர்ந்த இவர், சில காலம் சென்னை தொழிற்கூடத்திலும் (Madras Trade School) தொழிற் கல்வி பயின்றார். மகாவித்வான் மயிலை சண்முகம் பிள்ளையிடமும் இவர் தமிழ் பயின்றார்.

திருமணம் செய்துகொள்ளாமல் தன் வாழ்நாள் முழுவதும் 'ஆராய்ச்சி' எனும் பெண்ணையே மனைவியாகப் பெற்றார். இளமைக் காலத்திலேயே இலக்கிய வித்தகராத் திகழ்ந்த வேங்கடசாமி, சென்னை நகராட்சிப் பள்ளியில் ஆசிரியராக அமர்த்தப்பட்டார். ஆசிரியப் பணியில் மன நிறைவு கொண்ட இவர், பல அரிய நூற்களைக் கற்பதிலும் ஆய்வு செய்வதிலும் முழு மூச்சுடன் ஈடுபட்டார்.

தன்மான இயக்கத்தில் ஆர்வம் கொண்ட வேங்கடசாமி, பெரியாரின் சுயமரியாதைக் கருத்துகளால் ஈர்க்கப்பட்டு நீதிக்கட்சியில் சேர்ந்தார்; நீதிக்கட்சி தொடங்கிய 'திராவிடன்' என்னும் பத்திரிகையின் துணை ஆசிரியராகவும் பணிபுரிந்தார். இதன் விளைவாக இவர் எழுத்தாற்றலும் சிந்தனைத் தெளிவும் பெற்றார்.

## இலக்கிய, வரலாற்றுப் பணி

ஆராய்ச்சியில் மயிலை சீனி வேங்கடசாமி அவர்கள் முப்பது ஆய்வு நூல்களையும், முன்னூற்று ஐம்பதிற்கும் மேற்ப ஆய்வுக் கட்டுரைகளைம், சில கதைகளையும் கவிதைகளையும் படைத்துத் தமிழுக்குப் பெருமை சேர்த்துள்ளார். மற்ற எழுத்தாளர்களைக் காட்டிலும் இவர், பல செய்திகளைப் படம் போட்டு விளக்கிக் காட்டும் ஆற்றல் பெற்றிருந்தார். இளமையில் இவர் கற்ற ஓவியக் கல்வி இவருக்கு உறுதுணையாக விளங்கியது. ஆராய்ச்சி வித்தகர் வேங்கடசாமி அவர்களது படைப்புகளின் சிறப்பு பற்றியும் முக்கியத்துவம் பற்றியும் இவண் காண்போம்.

பேராசிரியர் சற்குணரிடம் கல்வி பயின்ற வேங்கடசாமி, அயல்நாட்டு கிறித்துவப் பாதிரிமார்கள் தமிழுக்குத் தொண்டு புரிந்துள்ளதனைக் கண்டு வியப்புற்றார். எனவே அவற்றை ஆய்ந்து 'கிறித்துவமும் தமிழும்' எனும் நூலை உருவாக்கினார். இந்நூலின் மூலம் இவர், கருத்தூற்று மலையூற்றாய்ப் பெருக்கெடுக்கும் ஆய்வாளராகத் தமிழுலகிற்கு அறிமுகம் ஆனார். 1930, 1940-களில் இவரது ஆய்வுக் கட்டுரைகள், பல பத்திரிகைகளை அணி செய்தன. அடுத்து மயிலை சீனி அவர்கள் பௌத்த சமயத்தினர் தமிழுக்குச் செய்த தொண்டு பற்றி சீரிய ஆய்வினை மேற்கொண்டார். இதன் விளைவாகத் தமிழுலகம் 'பௌத்தமும் தமிழும்' எனும் அரிய செல்வத்தைப் பெற்றது. அடுத்து 'இறையனார் களவியல் ஆராய்ச்சி' முகிழ்த்தது.

## சமணமும் தமிழும்

சமணர்களின் தமிழ்த் தொண்டும், கலைத் தொண்டும் பௌத்தர்களை விஞ்சி நின்றது. இதனை நன்குணர்ந்த மயிலை சீனி அவர்கள், பலவிதமான சான்றுகளைத் தொகுத்து, பல்லாண்டுகள் நுண்ணிதின் ஆய்ந்து, 'சமணமும் தமிழும்' எனும் அருமையான நூலினைப் படைத்தார் (1954). இவரது அயரா உழைப்பிற்கும், தெளிந்த சிந்தனைக்கும்,

# நூல் நயம்

### தமிழ்க் கவிதைகளில் சந்த அமைப்பு

**ஆசிரியர்: டாக்டர் ஆலந்தூர் கோ. மோகனரங்கன்**

**வெளியீடு:**

வசந்தா பதிப்பகம்,
21, தருமராசா கோயில் தெரு,
சென்னை-600 016.

பக்கம்:416 விலை:ரூ.90/-

**ப**த்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த தனிப் பெருங்கவிஞர், வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள். இவரைத் திருப்புகழ் சுவாமிகள் என்றும் வழங்கினர். வண்ணம் பல சிறப்புறப் பாடிய தால், வண்ணச்சரபம் என்றும் போற்றிப் புகழப்பட்டார். வண்ணம் பாடுவது இவருக்குக் கைவந்த கலையாதலால், வண்ணத்தியல்பு எனும் இலக்கணமும் வகுத்தவர். ஆயிரக்கணக்கான சந்தப் பாடல்கள் பாடியவர்.

'தமிழ்க் கவிதைகளில் சந்த அமைப்பு-வண்ணச் சரபம் தண்டபாணி அடிகளார் சிறப்பாய்வு' என்பது நூலின் தலைப்பு. சென்னைப் பல்கலைக் கழக டாக்டர் பட்டத்திற்காக அளித்த ஆய்வேடே இந் நூல்.

நூலாசிரியர் ஆலந்தூர் கோ.மோகன ரங்கன், சிறந்த கவிஞர். இவரது படைப் புகள் பன்மொழிகளில் வெளிவந்துள் ளன. அந்த அனுபவம் ஆழ்ந்த புலமை இந்நூலில் விரிவியிருப்பதைப் பார்க்க முடிகின்றது.

சந்தம் பாடுவதில் தனித்தன்மை மிக்க அடிகளாரைப் பற்றி நன்கு ஆராய்ந்து எழுதியுள்ளார் ஆசிரியர். சம்பந்தர், மாணிக்கவாசகர், ஆழ்வார்கள், அருண கிரியார் ஆகியோர் பாடிய சந்தங் களோடு அடிகளாரின் பாடல்களையும் ஒப்பிட்டு காட்டும் பாங்கு பாராட்டுதற் குரியது.

'அடிகளாரின் காலமும் சூழலும்' எனும் தலைப்பில் அடிகளாரின் வாழ்க்கை வரலாறும் இவ்வாய்வு ஏட்டில் இணைந்திருக்கிறது. ஏழு இயல்களில், எடுத்துக் கொண்ட பொருளைத் திறம் படவும், கச்சிதமாகவும், கருத்துக் கோவை யுடனும் முடித்துத் தந்துள்ளார், ஆசிரியர்.

ஆராய்ச்சி மாணவர்களுக்குக் கையே டாக மட்டுமல்ல, அடிகளாரைப் பற்றி அறிந்து கொள்வார்க்கு இன்பம் பயக்கும் சிறந்த இலக்கியப் படைப்பாகவும் விளங்கு கிறது.

### நூல்நயம்

### கயல்விழி

**ஆசிரியர்: தி.நா. அறிவுஒளி**

**வெளியீடு:**

தமிழ் ஆய்வரங்கம்
2/25 எட்டாவது தெரு, இணைவு-2
மறைமலைநகர்-603 209.

பக்கம்:166 விலை:ரூ.15/-

**மை**சூர் மன்னன் கந்திருவன், மதுரை மன்னர் திருமலை நாயக்கர் இருவருக்குமிடையே நடைபெற்ற மூக்கறுப்புப் போர் என்னும் வரலாற்று நிகழ்ச்சியை அடித்தளமாக வைத்துக் கட்டப்பட்ட புதினம் இது. ஒரு சிறு செய்தியை வைத்து ஒரு நவீனத்தைப் படைத்திருப்பது பாராட்டுக்குரியது.

கயல்விழி என்னும் கதைத் தலைவி படிப்போரைக் கவர்கிறாள். நாடு காக்கும் திருப்பணியில் தன்னையே தியாகம் செய்து உயர்ந்து விடுகிறாள். அவளது அவல நிலை, படிப்போரின் நெஞ்சத்தைக் கசக்கிப் பிழிந்து விடுகிறது.

இரு பாத்திரங்களின் வாயிலாக, திருமலை மன்னரின் வரலாற்றைக் குறிப்பிடும் ஆசிரியர், அவர் வாழும் காலத்திலேயே அவரது மறைவுச் செய்தியையும் அவரது சந்ததியினரின் ஆட்சி பற்றியும் குறிப்பிடுவது பொருத்த மில்லை (பக்கம்-62)

விறுவிறுப்பான கதைப்போக்கு, இனிய கவிதை நடை, கதை நிகழ் காலத்திற்குரிய சொல்லாட்சி ஆகியவை இந்நூலுக்குச் சிறப்புச் சேர்க்கின்றன.

—தமிழ்ப்பித்தன்

### நிலவளம் காக்கும் உயிரிகள்

**ஆசிரியர்: எம்.எஸ்.பி. முருகேசன்**

**வெளியீடு:**

கார்த்திக் பதிப்பகம்,
36-ஏ-7, கோவிந்தன் சாலை,
சென்னை-600 033.

பக்கம்:112 விலை:ரூ.18/-

**ம**ழை வளம் மண் வளத்துக்கு அடிப்படையாகிறது. மண் வளம் பயிர் வளத்துக்கு அடித்தளமாகிறது. அந்த வகையில் மண் வளத்துக்குச்சில உயிரிகள் பெருந்தொண்டு புரிகின்றன. கீழ் மண்ணை மேலே கொண்டு வருவதற்கும், மேல் மண்ணைக் கீழே வருவதற்கும் அவை உதவுகின்றன.

பாக்டீரியா, காளான்கள், ஆல்காக்கள் முதலான நுண்ணுயிரிகளும், அராக்நிடா, பொய்த் தேள்கள் முதலான மண்வாழ் சிறுவகை விலங்குகள் குறித்தும் படங்களுடன் விளக்கப்பட்டுள்ளன.

நிலவளம் காக்கும் உயிரிகளைக் காக்க மனிதன் முயற்சிக்க வேண்டும். கிராமப்புறங்களிலும், வயல் காடுகள் நிறைந்த பகுதிகளிலும் கனரக வாகனங்கள், தேவையற்ற நடமாட்டம் இவற்றை மனிதன் தவிர்த்தாக வேண்டும் என்பது இந்நூலாசிரியருடன் வேண்டுகோள். ஏன், நம் வேண்டுகோளும் அதுவே!

—மறைமலை

### 'கனல் புனலானது ஓர் புரட்சிக் கதை

**ஆசிரியர்: கவிஞர் மதுரம் நம்பி**

**வெளியீடு:**

கீதாஞ்சலி நிலையம்
மெயின்ரோடு, விருகாவூர்-606 203.
தெ.ஆ. மாவட்டம் •

பக்கம்:87 விலை:ரூ.9/-

**ப**ண்ணையார் ஆத்மநாதன், அவர் மனைவி தர்மாம்பாள், மகன் சத்யசீலன், தர்மாம்பாள் தம்பி அடைக்கலம், பண் ணையார் கதிர்வேலு அவர் மகள் பூங்குழலி இவர்களைச் சுற்றிச் செல்கிறது கதை.

அடைக்கலத்தின் கொடுமை தாளா மல் அவன் மனைவி தற்கொலை செய்து கொள்ளுகிறாள். இதனால் தண்டிக்கப் பட்டு பின் வெளியில் வந்த அடைக்கலம், பூங்குழலியைக் கெடுத்துவிட்டு ஓடிவிடு கிறான். ஊரைவிட்டு வெளியேறிய பூங் குழலி குடும்பம் பூங்குழலியை விரும்பும் சத்ய சீலனால் ஆதரிக்கப்பட்டு, எவ்வாறு பூங்குழலி புதுவாழ்வு பெறுகிறாள் என்பதுதான் கதை.

கதையின் இடையில் சம்பவங்களுக்கு ஏற்றாற்போல் கவிதைகள் புகுத்தி இருப்பது சிறப்பு.

—என். குமாரசாமி

**அறிவுக்கு வையகம் எப்போதும் தன் வணக்கத்தைச் செலுத்தும். திறமைக்கு ஆதரவு தரும். தூய உள்ளத்தை வரவேற்கும்.**

**- இங்கர்சால்**





நுண்மாண் நுழை புலத்திற்கும் இலக்கியமாகத் திகழ்ந்த இந்நூல், சமண சமயத்தின் கலைக் களஞ்சியமாகத் திகழ்கிறது. சமணரது கலைப்படைப்பு களைப் படம் பிடித்துக் காட்டும் இந்நூல், தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் முதற் பரிசினையும் பெற்றது.

'மகாபலிபுரத்து சைன சிற்பங்கள்' என்னும் கலைப்படைப்பு, இவரது சிற்ப ஆய்வின் சிறப்பிற்கும் வரலாற்றுப் புலமைக்கும் சிறந்ததோர் எடுத்துக் காட்டாகும். மகாபலிபுரம் என்று தவறாக வழங்கப்பட்ட பெயரை 'மாமல்லை' என்று அறிமுகப்படுத்திய பெருமை இவரையே சாரும். பல்லவரின் வரலாற்றையும், சமுதாய நிலையையும், வெளிப்படுத்தும் வகையில் 'மகேந்திரவர்மன்', 'நரசிம்மவர்மன்', 'மூன்றாம் 'நந்திவர்மன்' - ஆகிய அரிய நூல்கள் இம் மாமேதையால் வெளியிடப்பட்டன.

பண்டைத் தமிழர் நுண் கலைகளில் நல்ல தேர்ச்சி பெற்றிருந்தனர். நுண் கலை, நற்கலை, கவின்கலை என்றெல்லாம் போற்றப் பெறும் அழகுக் கலைகள் ஐந்து வகைப்படும். அவை கட்டடக் கலை, சிற்பக் கலை, ஓவியக் கலை, இசைக்கலை, காவியக்கலை என்பனவாகும். தமிழர் வளர்த்த இக்கலைகளை யாவரும் போற்றும் வண்ணம், மயிலையார், இனிய தமிழில் 'தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்' என்னும் அழகிய நூலை 1967- இல் படைத்து அளித்தார். இது ஓர் கலைப் பெட்டகம். இதன் பெருமையை அறிந்த தமிழக அரசு இதற்கு முதற் பரிசளித்துப் பெருமைப் படுத்தியது.

தமிழகத்தின் சொத்தாக விளங்கிய தமிழ் நூல்கள் பல கால வெள்ளத்தால், கடல் கோளால் அழிந்தன. அழிக்கப் பட்டன. மண்ணுக்குள் மணியென மறைந்து கிடந்த அவைகளின் பெயர்களைத் தொகுத்து 'மறைந்து போன தமிழ் நூல்கள்' (1967) எனும் பெய ரில் தனி நூலாக வழங்கினார் வேங்கடசாமி. இவரது 'பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம்' எனும் நூல் சென்ற நூற்றாண்டில் படைக்கப்பட்ட இலக்கியங்களையும் பட்டியல் போட்டுக்காட்டி, அவற்றின் சிறப்பையும் உணர்த்துகின்றது.

கல்வெட்டுக்களில் புதைந்து கிடந்த வரலாற்றுப் புகழ்மிக்க இனிய பாடல்களைத் தொகுத்து, ஆய்வுக் குறிப்புகளுடன் 'சாசனக் கவிதை மஞ்சரி' எனும் நூலாக வெளியிட்ட பெருமையும் வேங்கடசாமியைச் சாரும். இவை வரலாற்று ஆய்விற்குப் பெரிதும் பயன்படுகின்றன. இவரது 'சங்க காலத் தமிழக வரலாற்றில் சில செய்திகள்' (1970) எனும் நூல், தாமரை மலரின் வடிவில் அமைந்த மதுரை மாநகரின் அமைப்பையும் சிறப்பையும் படம் போட்டு விளக்குவதுடன் பல புதிய வரலாற்றுச் செய்திகளையும் பதிவு செய்துள்ளது. பண்டைத் தமிழரின் உள்நாட்டு, வெளிநாட்டு வாணிகச் சிறப்பு, தமிழ்நாட்டுத் துறை முகங்கள், ஏற்றுமதி, இறக்குமதி முதலான பல அரிய செய்திகளை, அயல் நாட்டார் குறிப்புகளின் அடிப்படையில் படம் பிடித்துக் காட்டுவது இவரது 'பழங் காலத் தமிழர் வாணிகம் (சங்க காலம்) (1974) எனும் ஆய்வு நூல்.



★ கடமைகளை இன்முகத்துடன் ஆற்றி உரிமைகளைப் பெற்றிடுவோம்! அமைதியும், ஒற்றுமையும் காத்து வளர்ச்சிக்கு வழி வகுப்போம்! புதிய சமத்துவ சமதர்ம அமைப்புக்காகத் தொடர்ந்து பாடுபடுவோம்!

இவர் பல தலைப்புகளில், பல காலங்களில் எழுதிய ஆய்வுக் கட்டுரைகள் 'அஞ்சிறைத் தும்பி' எனும் பெயரில் வெளியிடப்பட்டது. சங்க காலத்தை அடுத்து வந்த, இருண்ட காலமாகக் கருதப்பட்ட களப்பிரர் காலம் பற்றியும் இவர் சீரிய ஆய்வுகள் மேற்கொண்டார். இவ்வாய்வுகள் 'களப்பிரர் ஆட்சியில் தமிழகம்' எனும் நூலாக மலர்ந்தது. களப்பிரர் வரலாற்றிற்கு இது ஓர் அதிகாரபூர்வமான நூலாகத் திகழ்கிறது.

1977-இல் இவரால் படைக்கப்பட்ட 'இசைவாணர் கதைகள்' எனும் நூல் 13 புராணக் கதைகளையும் 5 வரலாற்றுக் கதைகளையும் கொண்டுள்ளது. எங்கெங்கோ மறைந்து கிடந்த இக்கதைகளை இவர் புதுவடிவத்துடன் படைத்துள்ளார். இது ஓர் புதுமையான நூல்.

'கொங்கு நாட்டு வரலாறு' எனும் இவரது அரிய ஆய்வுநூல், கொங்கு நாட்டு வரலாற்றில் புத்தொளி பாய்ச்சி நிற்கிறது. இதில் பழைய கருத்துகள் பல மறுக்கப்பட்டுள்ளன. கரூர் வட்டத்தில் உள்ள புகழூர் (ஆறுநாட்டார் மலை) சமணக் கல்வெட்டுகள் புதிய கோணத்தில் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. சங்கச் சேரரின் தலைநகர் தமிழ்நாட்டின் கரூரா? என்பது குறித்து, காய்தல் உவத்தல் இன்றி அணுகி பல புதிய செய்திகளை வழங்கியுள்ளார். கொங்கு நாட்டின் அரச வம்சங்கள் பற்றி இவர் தெள்ளிதின் ஆய்ந்துள்ளார். 1970-இல் தமிழ்நாட்டு வரலாற்றுக் குழுவின் உறுப்பினராக அமர்த்தப்பட்ட வேங்கடசாமி, தமிழக வரலாற்றிற்குப் பல அருமையான ஆய்வுக் கட்டுரைகளை வழங்கியுள்ளார். வரலாற்றுக் குழுவிற்கு கட்டுரை வழங்கியவருள் நானும் ஒருவனாக இருந்ததால் அவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. அப்போது அவருடைய ஆராய்ச்சித் திறனை அறிந்து வியந்தேன்.

பராட்டுகள்

ஆராய்ச்சிப் பேரறிஞர் சீனி அவர்கள் தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவராகவும், தமிழகப் புலவர் குழு உறுப்பினராகவும் அரும்பணி ஆற்றியுள்ளார். தமிழ் எழுத்தாளர் சங்கம், மதுரை காமராசர் பல்கலைக் கழகம், சென்னை சைன சங்கம், தமிழக அரசு - ஆகியன இவரது ஆராய்ச்சித் திறனைப் போற்றிப் பட்டங்களும் கேடயங்களும் வழங்கியுள்ளன. புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார் இவரது உயர் பண்புகளையும், ஆய்வுத் திறனையும்,

அஞ்சுதல் அறியாநெஞ்சன்
அகல்வர லாறனைத்தும்
மிஞ்சுதல் இன்றிக் கற்றோன்''

''தாங்கெட நேர்ந்த போதும்
தமிழ்க்கெட லாற்றா அண்ணல்
வேங்கடசாமி என்பேன்
விரிபெரு தமிழர் மேன்மை
ஓங்கிடச் செய்வ தொன்றே
உயிர்ப் பணியாய்க் கொண்டோன்''

- என்று பாராட்டியதுடன் இவரது தமிழ்ப்பற்றைச் சுட்டிக்காட்ட மறக்கவில்லை.

தன்னலங் கருதாது, தமிழக வரலாற்றிற்கும் தமிழ் இலக்கியத்திற்கும் அருந்தொண்டு புரிந்த இம்மாமேதை 8.5.1980-இல் தமது எண்பதாவது வயதில் காலமானார்.

இவரது பூத உடல் மறைந்தாலும் புகழுடல் மறையவில்லை. எளிய, இனிய பண்பும், காய்தல் உவத்தல் அற்ற ஆய்வுத் திறனும், அயர்ச்சியுற்ற முயற்சியும், நேர்மையும், எவருக்கும் அஞ்சாது தனது கருத்தை எடுத்துரைக்கும் மனத்திண்மையும் கொண்ட ஆராய்ச்சிப் பேரறிஞர் மயிலை சீனி வேங்கடசாமி பல்கலைக் கழகத்தில் கல்வி பயிலாவிட்டாலும், பல்கலைக் கழகங்கள் போற்றும் வண்ணம் உயரிய ஆய்வுகளை மேற்கொண்டவர். பல்கலைக் கழகங்களே செய்ய முடியாத ஆய்வுகளைத் தன்னந்தனியாக, பிறர் நிதி உதவியின்றி, சொந்தப் பணத்தில், சொந்த உழைப்பில் மேற்கொண்டவர். இவரது ஆய்வும் உழைப்பும் வாழ்வும் வழியும் நமது முன்னேற்றத்திற்கான உயிரூட்டி ஒளியூட்டியாக விளங்குகின்றன.



# எம்.ஜி.ஆர். கலந்துகொண்ட கடைசிப் பொது நிகழ்ச்சி



அமரர் எம்.ஜி.ஆர். கலந்துகொண்ட கடைசிப் பொது நிகழ்ச்சி சென்னை - கத்திபாரா சந்திப்பில் பண்டித நேருவின் சிலை திறப்பு விழா நிகழ்ச்சி ஆகும்.

சென்னையில் அமைக்கப்பட்டுள்ள நேரு சிலையைப் பிரதமர் ராஜீவ்காந்தி அவர்கள் திறந்து வைத்தார்.

இந்த விழாவில் தலைமை தாங்கிய முதலமைச்சர் எம்.ஜி.ஆர். பேசியதாவது:-

என்னை வாழவைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே! என்னை வழிநடத்திச் செல்லும் பெரியோர்களே! என் ரத்தத்தின் ரத்தமான உடன் பிறப்புகளே! மாண்புமிகு பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களே! திருமதி சோனியாகாந்தி அவர்களே! மாண்புமிகு மத்திய-மாநில அமைச்சர் பெருமக்களே!

இன்று சரித்திரம் காணாத மாபெரும் விழாவில் கலந்துகொண்டு உங்கள் எல்லோரையும் காண்பதில் பிரதமரும் நானும் மிக்க மகிழ்ச்சி அடைகிறோம்.

நமது முதல் பிரதமரும் ஆசிய ஜோதியுமான அமரர் நேரு அவர்களின் திருஉருவச் சிலை இங்கு திறந்து வைக்கப்பட இருக்கிறது. இந்தச் சிலையைத் திறந்து வைக்க வந்து இருக்கும் நமது பிரதமரும் நேரு அவர்களின் பேரனுமாகிய திரு. ராஜீவ் காந்தி அவர்களை நான் வாழ்த்தி வரவேற்கிறேன்.

சென்னையில் நேரு அவர்களின் முழு உருவச் சிலை வைக்கவேண்டும் என்று தமிழ்நாட்டு மக்கள் விரும்பினார்கள். அந்த நீண்ட நாளைய விருப்பம் இன்று நிறைவேறி உள்ளது.

நேரு அவர்களின் குடும்பம் வழிவழியாக நமது நாட்டின் விடுதலைக்கும் முன்னேற்றத்திற்கும் முக்கியப் பங்கு ஆற்றி வருகிறது.

நாட்டின் விடுதலைக்காகவும், வளர்ச்சிக்காகவும், இந்தத் தியாகப் பரம்பரை ஆற்றியுள்ள தொண்டு உலகமே நன்கு அறிந்த ஒன்று.

சுதந்திர இந்தியாவைப் படைத்த கைதேர்ந்த சிற்பி நமது நேரு அவர்கள், 20-ஆம் நூற்றாண்டின் ஈடு இணையற்ற தலைவராக விளங்கியவர்.

இந்தியாவின் நல்ல எதிர்காலமே தமது மூச்சாகக் கொண்டு பாடுபட்டவர். அணிசேராக் கொள்கையை உலக நாடுகளுக்கு அளித்த உன்னதத் தலைவர் அமரர் நேரு அவர்கள். நமது நாட்டின் இன்றைய அறிவியல், விஞ்ஞான மருத்துவத் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு அடி கோலியவர் நேரு.

அவருக்குப் பின் அவரது புதல்வியார் திருமதி இந்திரா காந்தி அம்மையாரும், அவர் வழியில் நின்று அவரது கனவுகளைத் தொடர்ந்து நிறை வேற்றி வந்தார்.

நமது நாட்டின் வளர்ச்சியைக் கண்டு, வளர்ந்த வல்லரசு நாடுகளே ஆச்சரியப்பட்டு மதிக்கும் வகையில் நாட்டின் முன்னேற்றத்தில் மிகுந்த அக்கறை காட்டியவர் இந்திரா காந்தி அம்மையார்.

அவர்கள் இருவரின் பாதையைப் பின்பற்றி நமது பெருமைக்குரிய பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் சரித்திரம் படைத்துக்கொண்டு இருக் கிறார். வளரும் நாடுகள் - அணி சேரா நாடுகள் - தெற்கு ஆசிய நாடுகளின் கூட்டமைப்புத் தலைவராக இருந்து உலகுக்குப் பல அரிய தொண்டுகள் ஆற்றி வருகிறார். நாட்டின் வளர்ச்சியில் தன்னுடைய முழுக் கவனத்தையும் அக்கறையையும் செலுத்தி அல்லும் பகலும் அயராது பாடுபட்டு வருகிறார்.

அமைதி, ஒற்றுமை, ஒருமைப்பாடு, ஜாதி, மத, பேத மற்ற சமுதாயம் இவற்றை உருவாக்க அரிய தொண்டு ஆற்றி வருகிறார் நமது பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள்.

அமரர் நேரு அவர்களின் திருஉருவச்சிலை யைத் திறந்து வைக்க நமது பிரதமர் ராஜீவ் காந்திதான் மிகவும் பொருத்தமானவர். நேரு, இந்திராகாந்தி, ராஜீவ் காந்தி இவர்களின் தியாகத்தையும், சேவையையும் இந்த உலகம் உள்ளவரை நாட்டு மக்களும் போற்றுவார்கள்.

திரு. ராஜீவ் காந்தி அவர்களது குடும்பம் தழைத்து ஓங்கி நலத்துடன் வாழ வேண்டும். தொடர்ந்து நாட்டுப் பணியில் ஈடுபட்டு நமது நாட்டை உலகின் தலைசிறந்த நாடாகத் திகழச் செய்ய வேண்டும் என்று வாழ்த்தி விடைபெறு கிறேன்.

இந்த உயிரோட்டம் உள்ள அற்புதச் சிலையை உருவாக்கிய மணிநாகப்பா அவர்களுக்கு என் பாராட்டுதல்களையும், வாழ்த்துக்களையும் உளமாரத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வாழ்க நேருவின் புகழ்! அண்ணா நாமம் வாழ்க! நன்றி, வணக்கம்.

- மேற்கண்டவாறு டாக்டர் எம்.ஜி.ஆர். பேசினார்.



## என் இதயக்கனி

'எம்.ஜி.ஆருக்கும், எனக்கும் இருக்கிற தொடர்பை நாடு அறியும். எம்.ஜி.ஆரைப் பாராட்டுவது என்னை நானே பாராட்டிக் கொள்வதாகக் கருதப்படும். உண்மை தானே! எம்.ஜி.ஆர். என்றால் அவர் தாங்கியுள்ள கொள்கை எது என்பதை நாடு அறியும். முல்லைக்கு மணம் உண்டு என்பதைக் கூறவா வேண்டும்? இந்தக் கனி தங்கள் மடியில் விழாதா என்று பலர் எதிர் பார்த்தனர். அது என் மடியில் வந்து விழுந்தது. என் இதயத்தில் எடுத்து வைத்துக் கொண்டேன்.''

- பேரறிஞர் அண்ணா
('நாடோடி மன்னன்' வெற்றி விழாவில் பேசியது, 1958.)

## குணத்தில் தங்கம் - கொதித்தால் சிங்கம்!

எனது அருமைத் தம்பி எம்.ஜி.ஆரின் உருவம் சிறியது. ஆனால் உள்ளம் பெரியது. அவர் கழகத்தின் கண்மணி - கலை உலகத்தின் நன்மணி - குணத்தில் தங்கம் - கொதித்தால் சிங்கம்.

- பேரறிஞர் அண்ணா
('சமநீதி' மலர், 1968)

## வள்ளலுக்கெல்லாம் வள்ளல்!

புயல் மழையால் சேதம் வரும் இடங்களில் எல்லாம் எங்கள் புரட்சி நடிகர் உதவியினைக் காணலாம்.

தன்னைத் தேடி வருகிறவரின் கண்ணீரைத் துடைக்கிறவன் வள்ளல். தன்னைத் தேடி வருகிறவரின் துன்பத்தைப் போக்குகிறவன் வள்ளல். ஆனால் புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். அப்படியல்ல; சமுதாயத்தில் துன்பப்படுகிறவன் எங்கேயிருக்கிறான் என்று தேடிப் போய் அவன் கண்ணீரைத் துடைத்து கைகொடுக்கிற எம்.ஜி.ஆர். வள்ளலுக்கெல்லாம் வள்ளல்.

- பேரறிஞர் அண்ணா.
(1961 ரிக்ஷா தொழிலாளருக்கு மழைக்கோட்டு வழங்கும் விழாவில்)

திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம்

# நலிந்தோர் வளம்பெற நல்வாழ்வுத் திட்டங்கள்



வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, அவர்களை வறுமைக்கோட்டைத் தாண்டி வாழ வழிவகை செய்யும் திட்டமே ஒருங்கிணைந்த ஊரக வளர்ச் சித் திட்டமாகும். இத்திட்டத்தில், நலிவுற்றோருக் குத் தொழில் தொடங்க, கறவை மாடுகள், ஆடுகள், கோழிப்பண்ணை ஆகிய தொழில் களைச் செய்து வாழ்வில் வளம் பெறக் கடன் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தில், ஆதிதிராவிட வகுப்பினர், உடல் ஊனமுற்றோர், மகளிர் மேம்பாட்டுத் திட்டக் குழு உறுப்பினர்கள் ஆகியோருக்கு வழங்கப்படும் கடனில் 50 சதவிகித மானியம் ரூ.5,000-க்கு மிகாமல் வழங்கப்படுகிறது. மற்ற வர்களுக்கு, அளிக்கப்படும் கடனில் மானியம் ⅓ பங்கு அளிக்கப்படுகிறது.

1991-92-ஆம் ஆண்டு மொத்தம் 6,690 பயனாளிகளுக்குக் கடன் வழங்கத் திட்டமிடப் பட்டு, 7,109 பேர்களுக்குக் கடன் வழங்கப்பட்டு, வழங்கிய தொகையில் ரூ.168.796 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

நடப்பு ஆண்டாகிய 1992-93-இல் 5,573 பேருக்குக் கடனுதவி வழங்கி, அதன்பேரில் மானியமாக ரூ.160.761 இலட்சம் அளிக்கத் திட்டம் இடப்பட்டு, இதுவரை 2,900 பேருக்குக் கடன் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாண்டில் சிறப்பு அம்சமாகப் பட்டு வளர்ப்பு, பட்டு நூல் எடுத்தல்



இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

11 பள்ளிக் கட்டடங்கள் ரூ.35.58 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

43 சிறுபாசன ஏரிகள் ரூ.18.20 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளன.

44 கசிவு நீர்க் குட்டைகள் ரூ.55.00 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளன.

39 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் ரூ.5.41 இலட்சம் செலவில் ஊராட்சிகளுக்கு அளிக்கப்பட்டுள்ளன.

ரூ.91.20 இலட்சம் செலவில் 30.40 கி.மீ. நீளத்திற்கு 11 சாலைப் பணிகள் மேம்படுத்தும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

ரூ.297.377 இலட்சம் செலவில் 208 குடிநீர் வழங்கும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

ரூ.127.480 இலட்சம் செலவில் 8,934 தெரு விளக்குகள் (குழல்) பொருத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, முடியும் தறுவாயில் உள்ளன.

**சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் 1992-93**

35 கசிவு நீர்க் குட்டைகள் ரூ.49 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளன.

ரூ.13.24 இலட்சம் செலவில் 28 சிறுபாசன ஏரிகள் தரப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, நடைபெற்று வருகின்றன.

மேலும், ரூ.213.10 இலட்சம் மதிப்பீட்டில் 71.7 கி.மீ. நீள கிராமச் சாலைகள், ரூ.71.40 இலட்சம் மதிப்பீட்டில் 23.80 கி.மீ. நீள பேருந்துச் சாலைகள், மற்றும் சிறப்பு உறுப்புத் திட்டத்தின்கீழ் ரூ.58.20 இலட்சம் மதிப்பீட்டில் 19.40 கி.மீ. நீளச் சாலைகள் ஆகிய பணிகள் மேற்கொள்ள நிர்வாக அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

**சமூகக் காடுகள் திட்டம் 1992-93**

நடப்பு ஆண்டில் 21.123 இலட்சம் நாற்றங்கால் உற்பத்தி செய்து 1980.50 ஏக்கரில் வட்டார நடவுக்கும், இடைவெளி நடவுக்கும் இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு, அதில் 1880.50 ஏக்கர் வட்டார நடவுகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள நாற்றங்கால்களும் நடவுக்களம் இத்திங்களில் முடிக்கப்படும். இந்த ஆண்டு இதற்கான நிதி ஒதுக்கீடாக ரூ.33.185 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதில் இதுவரை 19.087 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

புதிய முயற்சியாக ஒவ்வொரு வட்டாரத்திலும் ஒரு சாலையோரப் பூங்காவும், பழத்தோட்டமும் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

ஒவ்வொரு ஜீவன்தாரா கிணறு பயனாளிக்கும் குறைந்தது 100 தேக்குமரக் கன்றுகள் அளித்திடவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**கிராமப்புற மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம் (டோக்ரா)**

இத்திட்டம் செங்கம், ஜவ்வாது, வந்தவாசி,

> ★ வன்முறைதான் போராட்ட முறை என்றால், தோல்விதான் அதற்குப் பரிசாகக் கிடைக்கும் என்பது நிச்சயம்.
>
> டாக்டர் எம்.ஜி.ஆர்.

மற்றும் தெள்ளார் ஊராட்சி ஒன்றியங்களில் 38 குழுக்கள் அமைக்கப்பட்டு, கடந்த இரண்டு ஆண்டுகளாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கூடை முடைதல், தென்னங்கீற்று தயாரித்தல், பாசிமணி தயாரித்தல், புளி பதப்படுத்துதல், சாக்பீஸ் தயாரித்தல், காகித உறைகள் தயாரித்தல் மற்றும் சோப்பு தயாரித்தல், மிளகாய்ப்பொடி தயாரித்தல் ஆகிய பணிகளில் 633 மகளிருக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

**கிராமப்புற இளைஞர்கள் சுய வேலைவாய்ப்புத் திட்டம்**

கிராமப்புற படித்த ஆண், பெண் இளைஞர்களுக்குச் சுய வேலைவாய்ப்பு வழங்கும் வகையில் பயிற்சி வழங்கும் திட்டம் அமல்படுத்தப்படுகிறது.

1991-92-ஆம் ஆண்டில் 573 நபர்களுக்குப் பயிற்சி வழங்கப்பட்டு உள்ளது. 237 நபர்களுக்கு 14.11.92 அன்று பயிற்சி முடிவடைகிறது. பயிற்சி முடித்த 573 நபர்களில் 380 நபர்கள் எஸ்.சி. பிரிவினர் 48 நபர்கள் எஸ்.டி. பிரிவையும், 51 நபர்கள் பெண்கள் பிரிவையும் சேர்ந்தவர்கள். பயிற்சி பெற்றுவரும் 237 நபர்கள் 64 நபர்கள் எஸ்.சி. பிரிவையும் 95 நபர்கள் பெண்கள் பிரிவையும் சேர்ந்தவர்கள். இதுவரை 234 நபர்கள் சுய தொழில் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளனர். ஊதிய அடிப்படையில் 199 நபர்கள் பயனடைந்து வருகின்றனர்.

1992-93-ஆம் ஆண்டில் 1,292 நபர்களுக்குப் பயிற்சி வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. பயிற்சி வழங்க 15 தொழில் பிரிவுகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. தொழில்களுக்கு ஏற்றவாறு 2 மாதம் முதல் 12 மாதம் வரை பயிற்சிகள் அளிக்கப்படுகிறது.

இதில் செயற்கை வைரம் பட்டைத் தீட்டுதல் மற்றும் முயல் வளர்ப்புப் பயிற்சி இந்த ஆண்டு முதல் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளது. பயிற்சி மொத்தம் இரண்டு மாதம் முதல் ஓராண்டுக் காலம் வரை உடையது. பயிற்சி வழங்க 3 அரசுத் துறை நிறுவனங்கள், 9 தனியார் துறை, 12 ஊராட்சி ஒன்றியங்கள், பட்டுவளர்ப்புத் துறை, இரண்டு சேவை நிறுவனங்கள் மற்றும் கதர் கிராமத் தொழில் வாரியம் மூலமும் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. 1,292 நபர்களுக்குப் பயிற்சியினை நடத்த ரூ.19.40 இலட்சம் நிதியாகக் கோரப்பட்டது. அதில் 1992-93-ஆம் ஆண்டிற்கு 867 இலட்சம் ரூபாய் பெறப்பட்டுள்ளது. இதுவரை 763 நபர்கள் பயிற்சியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பா. நாராயணமூர்த்தி
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம்



# ஆசிய பசிபிக் நாடுகள் மாநாடு: சிறுநீரகச் சிகிச்சையில் தமிழகத்திற்கு முதலிடம்

தில்லியில், 1992 டிசம்பர் திங்கள் 9 முதல் 13 வரை ஆசிய பசிபிக் நாடுகளின் சிறுநீரக இயல் காங்கிரசின் ஐந்தாவது மாநாடு நடைபெற்றது. இதில் 500-க்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் வழங்கப்பட்டன. சென்னை அரசு பொது மருத்துவமனை சிறுநீரக இயல்துறையின் மூலம் கீழ்க்காணும் ஏழு ஆய்வுக் கட்டுரைகள் இம் மாநாட்டில் வழங்கப்பட்டன. அவை:

1. திடீர் சிறுநீரகச் செயலிழப்பு- 284 நோயாளிகள் பற்றிய ஆய்வு.

டாக்டர் எம்.ஏ. முத்துசேதுபதி
தலைவர் மற்றும் பேராசிரியர்
சிறுநீரக இயல்துறை
சென்னைப் பொது மருத்துவமனை

2. சென்னை நகரில் லெப்டோஸ்பைரோஸில் - சர்வதேச ஒத்துழைப்பு ஆய்வு.

3. சிறுநீரக அளவை வெவ்வேறு முறைகளில் ஆய்வு.

4. இரத்த ஓட்டக் குறைவினால் ஏற்படும் சிறுநீரகச் செயலிழப்பு.

5. பாலிசிஸ்டிக் சிறுநீரக நோய்- நான்கு ஆண்டு ஆய்வு.

6. எல்கேட் - குறைவினால் வரும் சிறுநீரகச் செயலிழப்பு - இந்தியாவிலிருந்து முதல் நோயாளி பற்றிய அறிவிப்பு.

7. அரசு முழு உதவி வழங்கும் - சிறுநீரக மாற்றுச் சிகிச்சை முறை - சிறுநீரகத் தானம் வழங்குவோர் பற்றிய ஆய்வு.

மாநாட்டில் வழங்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகளில் மிகச் சிறந்தவை என 6 கட்டுரைகள் தேர்ந்தெடுக்கப்பட்டன. ஜப்பான், நியூசிலாந்து, தென் ஆப்பிரிக்கா, தைவான் ஆகிய நாடுகள் தலா ஒரு பரிசைத் தட்டிச் சென்றன. இந்தியாவுக்கு 2 பரிசுகளும் வழங்கப்பட்டன.

இந்தியாவுக்குக் கிடைத்த 2 விருதுகளும் சென்னை அரசினர் பொது மருத்துவமனை சிறுநீரக இயல்துறை சார்ந்த மருத்துவர்களுக்குக் கிடைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இது தமிழகத்தின் தன்னிகரற்ற சாதனை என்றே கூறலாம். இந்திய அரசு நல்வாழ்வுத் துறைச் செயலர் திரு. மிஸ்ரா இவ் விருதுகளை வழங்கினார்.

பரிசு பெற்ற முதலாவது கட்டுரையான, அரசு முழு உதவி வழங்கும் சிறுநீரக மாற்றுச் சிகிச்சையில் -

ஆசிய பசிபிக் நாடுகளின் சிறுநீரக இயல் ஐந்தாவது மாநாட்டில், இந்திய நல்வாழ்வுத்துறைச் செயலர் திரு எல்.என். மிஸ்ரா அவர்கள், சென்னை அரசினர் பொது மருத்துவமனை சிறுநீரக இயல்துறை டாக்டர் பத்மநாபன், டாக்டர் எம். ஜெயகுமார் ஆகியோருக்கு விருதுகள் வழங்குகிறார். உடன் இருப்பவர் சிறுநீரக இயல் நிபுணர் டாக்டர் கே.எஸ். சுஹா.



> கலைத்துறையில் அவருக்கிருந்த ஆழ்ந்த பற்று காரணமாகக் கடும் உழைப்பினால் - நல்ல பண்புகளினால் படிப்படியாக முன்னேறி முதன்மையான ஸ்தானத்தைப் பெற்றவர் எம்.ஜி.ஆர்.
>
> - முன்னாள் முதல்வர் எம். பக்தவத்சலம்.

முயல் வளர்ப்பு ஆகிய திட்டங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுச் செயல்படுத்தப் பட்டு வருகிறது.

பட்டு வளர்ப்பில் சுமார் ½ ஏக்கரில் முசுக் கொட்டைச் செடி வளர்த்து, அதில் பட்டுப் பூச்சிகளை வளர்த்தால், அவர்களுக்குக் கடனாக ரூ.6,950 வழங்கப்படுகிறது. இத்திட்டத்தை நன்முறையில் செயல்படுத்த பயனாளிகள் அனைவருக்கும் சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் 2 மாதம் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சிக் காலத்தின்போது மதிப்பூதியமாக நபர் ஒன்றுக்கு மாதம் ரூ.300 வழங்கப்படுகிறது. நடப்பு ஆண்டில் மொத்தம் 600 பேருக்குப் பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டு, தற்போது சுமார் 400 பேருக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இப்பயிற்சி நவம்பர் மாத இறுதிக்குள் முடிவுற்று, பயிற்சி பெற்ற அனைவருக்கும் கடன் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது. இதனால் பட்டு நெசவு உற்பத்தி செய்யும் ஆரணி நகருக்குத் தேவைப்படும் பட்டு நூலினை நமது மாவட்டத்திலேயே தயாரிக்க முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது இம்மாவட்டத்தில் பட்டுக் கூடுகள் உற்பத்தி செய்யப்பட்டு கர்நாடக மாநிலத்திற்குக் கொண்டு சென்று விற்பனை செய்யப்படுகிறது. பட்டுக் கூடுகளிலிருந்து நூல் தயார் செய்யப்பட்டு, மீண்டும் ஆரணிக்குக் கொண்டுவரப்பட்டு, நெசவு செய்யப்படுகிறது. இந்த நிலையைப் போக்கிட, பட்டு நூல் உற்பத்தி செய்ய, இந்த ஆண்டு சிறப்புத் திட்டம் மேற்கொள்ளப்பட்டு, சுமார் 100 பேருக்குப் பட்டு நூல் தயாரித்தலில் சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் பயிற்சி அளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு, முன்னோடியாக, திருவண்ணாமலையை அடுத்துள்ள ஆணாய்ப் பிறந்தான் கிராமத்தில் அன்னை பட்டு நூல் உற்பத்தி நிலையத்தில் தற்போது 10 பெண்களுக்குப் பயிற்சியளித்து, பயிற்சி முடிவுற்றபின் மாவட்டத்திற்குத் தேவையான பட்டு நூல் நம் மாவட்டத்திலேயே தயாராகும் நிலை ஏற்பட வாய்ப்புள்ளது.

இம்மாவட்டத்தில் நிலவி வரும் பருவ நிலையைக் கருத்தில் கொண்டு, முயல் வளர்ப்புத் திட்டம் முதல்முதலாக, துரிஞ்சாபுரம் ஒன்றியம், காரியந்தல் கிராமத்தில் தொடங்கப்பட்டுள்ளது. முயல் வளர்க்கும் மனப்பாங்குள்ளவர்களுக்கு, சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் 2 மாதம் பயிற்சி அளித்து, பயிற்சி முடிந்தவுடன் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தில் கடன் மற்றும் மானியம் வழங்கி, அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்திட ஏற்பாடுகள் செய்யப்பட்டு, தற்போது 20 நபர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. திட்டத்திலும் சுமார் 100 பேருக்குப் பயிற்சி அளித்து, முயல் வளர்ப்புத் தொழிலை முன்னேற்றம் அடையச் செய்ய வழிவகை செய்யப்படும். இங்கு வளர்க்கப்படும் முயல்கள் சென்னை மற்றும் திருவண்ணாமலையில் விற்பனை செய்யப்படுகின்றன. தற்போது, சென்னையிலிருந்து வரும் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாத நிலையிருப்பினும், நாளடைவில் இத்தேவையினைப் பூர்த்தி செய்ய இயலும் என எதிர்பார்க்கலாம்.

**சாண எரிவாயுத் திட்டம்**

விறகுக்காகக் காடுகளை அழிக்கும் நிலையை மாற்ற, மாற்று எரிசக்தியாகச் சாண எரிவாயுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

சாண எரிவாயுத் திட்டத்தின்கீழ் இம்மாவட்டத்தில் 1991-92-ஆம் ஆண்டில் 255 கலன்கள் கட்டி, பயன்படுத்தப்பட்டு வருகின்றன. 1992-93-ஆம் ஆண்டிலும், மேற்படி நிறுவனங்களின் மூலம் 350 கலன்கள் கட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, பணிகள் முனைப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்த மாவட்டத்தில் சாண எரிவாயு தொழில் நுட்பப் பிரிவு இல்லாத பொழுதும், டான்கி முகவர்களின் துணை கொண்டு பழுதடைந்துள்ள 595 சாண எரிவாயுக் கலன்களைப் பழுது நீக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு உள்ளது.

இம்மாவட்டத்தில் சாண எரிவாயுத் திட்டத்தினைத் திறம்படச் செயல்படுத்தும் விதமாக அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும், தொகுப்புக் கிராம அடிப்படையில் கிராம மக்கள் தேர்வு செய்யப்பட்டு அதில் வங்கி அலுவலர்கள் துணையுடன் கூட்டங்கள் நடத்தி தகுதியான, விருப்பம் உள்ள பயனாளர்களை அந்த இடத்திலேயே தேர்வுசெய்து வங்கி அலுவலர்கள் ஒப்புதலையும் பெற்று சாண எரிவாயுக் கலன்கள் அமைக்கக் கடன் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

இதுவரை 758 சாண எரிவாயுக் கலன்கள் அமைக்கக் கோரும் கடன் மனுக்கள் வங்கிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதில் 218 மனுக்களுக்குக் கடன் வழங்க அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதுவரை 196 கலன்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இது தவிர சொந்த முதலீட்டில் கலன் கட்டும் பணி தொடங்கப்பட்டுள்ளது. அதன்படி வெம்பாக்கம் ஊராட்சி ஒன்றியத்தில் 50 கலன்கள் சொந்த முதலீட்டில் கட்டப்பட்டு வருகின்றன. இது போன்ற மற்ற ஊராட்சி ஒன்றியங்களிலும் சொந்த முதலீட்டில் கலன்கள் கட்ட நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

மற்றும் 40 ஒருநாள் பயனாளர்கள் பயிற்சி முகாம் நடத்த முடிவு செய்யப்பட்டு இதுவரை 26 பயனாளர்கள் பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. இந்தப் பயிற்சி முகாம்களில் 1,300 பயனாளர்கள் பங்குகொண்டு உள்ளனர். இதற்கு ரூ.19,500 செலவிடப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் சாண எரிவாயு மானியமாக 255 கலன்களுக்குரூ.6.2 இலட்சம் வழங்கப் பட்டுள்ளது. 1992-93-ஆம் ஆண்டு இலக்கினை இவ்வாண்டு இறுதிக்குள் முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. சாண எரிவாயுக் கலன்கள் அமைக்கும் பயனாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு அரசு மானியத் தொகை வழங்குகிறது.

**சூளா அடுப்புகள்**

கிராமங்களில் கிடைக்கும் எரிபொருளைச் சரியான விதத்தில் பயன்படுத்தும் வகையில் 1991-92-ஆம் ஆண்டில் சூளா திட்டத்தின் கீழ் நிலையான மற்றும் போர்ட்டபுள் சூளாக்கள் மொத்தம் 5,000 அமைக்கப்பட்டன. 1992-93-ஆம் ஆண்டில் 4,000 சூளா அடுப்புகள் அமைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் 1,200 அடுப்புகள் போர்ட்டபுள் வகையினையும், 2,800 அடுப்புகள் நிலையான வகையினைச் சேர்ந்ததுமாகும். சூளா அடுப்புகளுக்குக் கீழ்க்கண்ட வகையில் பயனாளிகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது.

நிலையானது .. ரூ.50
போர்ட்டபுள் (எஸ்சி/எஸ்டி.
பயனாளிகளுக்கு .. ரூ.75
மற்றவர்களுக்கு ரூ.50

இத்திட்டத்தின் கீழ் சுயதொழில் பணியாளர்கள் களப்பணியாளர்கள் மற்றும் பயனாளர்களுக்கு, கோயம்புத்தூர் வேளாண் பல்கலைக் கழகத்தினைச் சேர்ந்த உயர்சக்தித் துறையினர் மூலம் பயிற்சி நடத்தப்பட உள்ளது. சூளா அடுப்புகளைத் தொகுப்பு வீடுகளில் கட்ட முதன்மைக் கவனம் செலுத்தப்படுகிறது.



> ★ நம்பிக்கை எதன்மீது ஏற்பட்டாலும் சரிதான்; அது உண்மையில் நம்பிக்கைக்கு உரியதாக இருக்கவேண்டும்; அப்போதுதான் வெற்றி கிட்டும்.
>
> டாக்டர் எம்.ஜி.ஆர்.

**ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம் மற்றும் சிறப்புத் தன்னிறைவுத் திட்டம்**

கிராமப்புறங்களில் உள்ளவர்களுக்கு வேலை வாய்ப்பினை ஆண்டு முழுவதும் அளித்து, அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்பாடு செய்யவும், கிராமப்புறங்களில் தேவையான நிரந்தரச் சொத்துக்களை ஏற்படுத்தவும் இத்திட்டங்கள் வழிகோலுகின்றன.

**ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம் 1991-92**

ரூ.1146.25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டு, ரூ.1139.67 இலட்சம் செலவிடப்பட்டது. தொகுப்பு வீடுகள் 3,000 புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுக் கூடங்கள் 74, ஊராட்சி அலுவலகக் கட்டடங்கள் 91 மற்றும் ஊராட்சிப் பள்ளிக் கட்டடங்கள் 38 ஆகியவை கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 106.7 கி.மீ. நீள 83 கப்பிச் சாலைகளும், 77.83 கி.மீ. நீள 79 தார்ச் சாலைகளும் முழுமையாக முடிக்கப்பட்டுள்ளன. 1,278 ஊராட்சிகளுக்குத் தேவைப்படும் வேலைகளும் முடிக்கப்பட்டுள்ளன.

ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக 800 ஜீவன்தாரா கிணறுகளும், 'தாட்கோ' மூலமாக 200 கிணறுகளும் ஏற்படுத்தி முடிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, அதற்கான நிதி ஒதுக்கீடாக ரூ.419.09 இலட்சம் பெறப்பட்டுள்ளது. இதுவரை மொத்தம் 352 கிணறுகள் கட்டி முடிக்கப் பட்டு, ரூ.252.94 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

**ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம் 1992-93**

நடப்பு ஆண்டில், 34 பள்ளிக் கட்டடங்கள் ரூ.40.80 இலட்சம் மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் அனைத்தும் முன்னேற்றத்தில் உள்ளன.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு மையக் கட்டடங்கள் 72 ரூ.48.24 இலட்சம் மதிப்பீட்டில் கட்ட ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் அனைத்தும் நடைபெற்று வருகின்றன.

76.54 கி.மீ. நீளச் சாலைப் பணி ஒதுக்கீடு செய்யப்பட்டதில், 76.54 கி.மீ. நீளக் கப்பிச் சாலைகள் போடப்பட்டு, பணி முடிக்கப்பட்டு, தார் அமைக்கத் தயார் நிலையில் உள்ளன.

சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் 1991-92, 1992-93-ஆம் ஆண்டுகளில் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் பல துறைகள் மூலமாக ரூபாய் ஒரு கோடி அளவிற்குப் பல திட்டங்கள் நிறைவேற்றப் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

**சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் 1991-92**

47 சத்துணவுக் கூடங்கள் ரூ.29.100

# மலரும் புத்தாண்டு



புத்தாண்டே வருவாய்! புதுவாழ்வு தருவாய்!
புவிதனிலே என்றும் அமைதிதனை அருள்வாய்!
எத்திசையும் சமத்துவ வித்தொன்றே விதைப்பாய்!
எல்லோரின் மனதிலும் அன்பொன்றே வளர்ப்பாய்!
சத்தியங்கள் மட்டும் வெல்லவழி புரிவாய்!
சாதியெனும் பேய்தனை சாம்பலெனச் செய்வாய்!
முத்தமிழின் ஓசை இசைபாடப் பூப்பாய்!
முக்கனியின் சுவைபோல் வாழ்வுதனை அளிப்பாய்!

தீயவைகள் அழிய தீயெனவே பிறப்பாய்!
தீதுநிறை மனத்தின் சுயமைகளை அறுப்பாய்!
தூயநெறி பிறக்கவே துள்ளியோடி வருவாய்?
துன்பங்கள் அகலவே இன்கதிராய் உதிப்பாய்!
நேயமுடன் நீதான் நாடியிங்கு வருவாய்!
நாமிருக்கும் பாரதம் நீடுயர துதிப்பாய்!
மாயங்கள் மடியவே மகாத்மாவின் பாதையில்,
மலர்ந்தேநீ வருவாய்! வசந்தங்கள் தருவாய்!

மல்லை. கவிக்கதிர்

சிறுநீரகத் தானம் வழங்குவோர் பற்றிய ஆய்வு என்ற கட்டுரையில், இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் மட்டும்தான் சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை முற்றிலும் இலவசமாக நடந்து வருவதை எடுத்துக் காட்டுவதாகும். அடுத்த கட்டுரை கொழுப்புச் சத்து சார்புடையதாகும்.

இந்தியாவில் முதன் முறையாக இந்நோயாளிகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

சென்னை அரசினர் பொது மருத்துவமனையில் 1987 ஜூலையில் இருந்து இதுவரை 221 பேருக்கு சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளன. இவர்களில் 88 சதவிகிதம் பேர் நலமாக உள்ளனர்.

சிகிச்சைக்கு வருவோர் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டே வருவதால், 4-இல் இருந்து தற்போது 6 அறுவைச் சிகிச்சைகள் ஒவ்வொரு மாதமும் செய்யப்படுகின்றன. சிகிச்சைக்கு வருபவர்களுக்குச் செயற்கை முறையில் ரத்தத்தைச் சுத்தம் செய்யும் 'டயாலிசிஸ் சிகிச்சை, சிறுநீரகம் தானம் அளிப்பவர்களுக்காக மருத்துவப் பரிசோதனை மாற்று சிறுநீரக அறுவைச் சிகிச்சை, சிகிச்சைக்குப் பிறகு மாதந்தோறும் தேவையான மருந்துகள் அளிப்பது ஆகிய அனைத்துமே இங்கு இலவசமாகச் செய்யப்படுகின்றன.

இத்தகைய ஒட்டு மொத்த இலவசச் சிகிச்சை இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் மட்டுமின்றி, அகில உலகத்தில் வேறெங்கும் கிடையாது.

சென்னை அரசினர் பொது மருத்துவமனை, சிறுநீரகப் பிரிவில் ஆண்டுதோறும் சராசரியாகப் புற நோயாளியாக 9000 பேரும், உள் நோயாளியாக 2000 பேரும் சிகிச்சை பெறுகிறார்கள்.

இத்துறை 1987-இல் இருந்து இதுவரை நடைபெற்ற அனைத்து அகில இந்திய, தென்னிந்திய சிறுநீரக வல்லுநர்களின் மாநாடுகளில் 50-க்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் வழங்கியுள்ளது. அவற்றில் 1989 - 1990 ஆம் ஆண்டு தென்னிந்திய சிறுநீரக வல்லுநர்கள் மாநாட்டில் இப்பிரிவு தங்கப்பதக்கங்களையும் பெற்று தமிழ்நாட்டிற்குப் பெருமை சேர்த்துள்ளது, மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.



# சிவகங்கை கிராபைட்

ஏ.என். தியானேஸ்வரன், இ.ஆ.ப.,
தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்
கனிம நிறுவனம்

கிராபைட் என்ற கனிமம் படிக வடிவம் கொண்ட கரியாகும். இது மிருதுவானது, அதிக வெப்பத்தைத் தாங்கக் கூடியது, சிறந்த மின் கடத்தி. எந்த வெப்பத்திலும், அழுத்தத்திலும் வேதியல் மாற்றம் அடையாது. கரியைச் சார்ந்த மற்றொரு படிக வடிகம் வைரம் ஆகும். இவ்விரண்டும் வெவ்வேறு வெப்ப அழுத்த நிலையில் உண்டாகின்றன.

உலகத்தில் கிராபைட் கனிமம் ஆசியாவிலும் மற்றும் ஆப்பிரிக்காவிலும் அதிக அளவில் படிவமாக அமைந்திருக்கிறது. தொழில் துறையில் முன்னேறியுள்ள நாடுகளில் மிகக் குறைந்த அளவிலே (7 சதவிகிதம்) அமைந்திருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் உலகத்தில் 6.6 இலட்சம் டன் கிராபைட் உற்பத்தி செய்யப்படுகிறது. இதில் செறிவூட்டப்படாத கிராபைட் படிவங்களும் அடங்கும். இந்தப் படிவங்களில் கிராபைட் 10 முதல் 30 சதவிகிதம் வரையிருக்கும். இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் 30,000 டன் கிராபைட் உற்பத்தி செய்யப்படுகிறது. இவற்றில் 75 சதவிகிதத்திற்கு மேல் செறிவூட்டப்படாதவையே.

இயற்கையில் கிடைக்கும் கிராபைட்டை மூன்று வகையாகப் பிரிக்கலாம்; முறையே படிக உருவம் உடையவை, படிக உருவம் அற்றவை மற்றும் நரம்புக் கொடி போன்று அமைப்புடையவை. இந்தியாவில் கிராபைட் கேரளம், தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம், ஒரிஸா, பீகாரில் படிவங்களாக அமைந்திருக்கிறது. தமிழ்நாட்டில் கிடைக்கும் கிராபைட் பழம்பாறைகளில் செதில் செதிலாக அமைந்திருக்கிறது.

தமிழ்நாட்டில் மிகப்பெரிய கிராபைட் படிவம் சிவகங்கை வட்டத்தில் 1970-ஆம் ஆண்டு வாக்கில் கண்டுபிடிக்கப்பட்டது. இப்படிவம் சிவகங்கையிலிருந்து மேலூர் செல்லும் சாலையின் 7-வது கி.மீட்டரிலிருந்து மேற்கு நோக்கி 23 கி.மீட்டர் தொலைவு வரை 200 மீட்டர் அகலம் கொண்டவை. மேலும் இது பூமியின் மேற்பரப்பிலிருந்து 100 மீட்டர் ஆழத்திலும் தொடர்ந்திருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இத்தகைய கிராபைட் படிவங்களில் பொதுவாக 14 சதவிகிதம் நிலையான கரிச்சத்து இருக்கும். பல, நில ஆய்வுகளின் படி முதல் 5 கி. மீட்டரில் 15 மீட்டர் ஆழம் வரை உள்ள படிவங்களில் நிலையான கரிச்சத்துள்ள கிராபைட் கனிம இருப்பு சுமார் 2.5 இலட்சம் டன் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது.





தமிழ்நாடு கனிம நிறுவனத்தில், தமிழக அரசின் இலாபப் பங்குத் தொகை ரூ.1,31,15,000-க்கான காசோலையை, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களிடம், கனிம நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் திரு ஏ.என். தியானேஸ்வரன், இ.ஆ.ப. அவர்கள் வழங்கினார் (7.12.'92).

டாமின் முதல் 5 கி.மீட்டர் வரை அமைந்துள்ள படிவங்களைத் தோண்டியெடுக்கக் குத்தகை உரிமம் பெற்றுள்ளது. இந்தக் குத்தகை உரிமை, புதுப்பட்டி, செந்திஉடைய நாதபுரம், குமாரப்பட்டிக் கிராம எல்லைக்குட்பட்டது. இதற்காக டாமின் 900 ஏக்கர் நிலப்பகுதியைக் கையகப்படுத்தியுள்ளது. சுரங்கப் பணி தொடங்குவதற்கு முன்னோடியாக 250 மீட்டர் நீளம், 150 மீட்டர் அகலப் பகுதியில் உள்ள கிராபைட் படிவங்களின் தன்மை அறியப்பட்டது. மேலும், விரைவில் இது கிழக்கு மேற்காக விரிவுப்படுத்தப்பட்டு ஒரு நாளைக்கு 200 டன் கிராபைட் படிவங்கள் உற்பத்தி செய்வதற்கான நடைமுறைகளைச் செயல்படுத்தும்.

கிராபைட் கனிமம் பல இயற்பியல் பண்புகள் கொண்டது. இதனுடைய மிருதுவான தன்மை உராய்வுத் தடுப்பானாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. கிராபைட் வேதியியல் முறையில் எந்த ஒரு நிலையிலும் மற்றவற்றோடு சேர்ந்து கூட்டுப் பொருளோ அல்லது கலவைப் பொருளோ உண்டாகாது. தன் தனித்தன்மையை எப்போதும் நிலை நிறுத்தி இருக்கும். ஆதலால் கிராபைட் இரும்பு அல்லாத உலோகங்களை உருக்குவதற்காக மூசைகள் தயாரிக்கப் பயன்படுகிறது. இதன் இயற்பியல் பண்புகளினால் கிராபைட்டை இரும்பு மற்றும் எஃகு உருக்கும் ஆலைகளில் பயன்படுத்தப்படும் உலைக்கற்கள் தயாரிக்கப் பயன்படுகிறது. கிராபைட் ஒரு சிறந்த மின்கடத்தி, ஆதலால் இது எலக்ரோடுகள் (Electrodes) மற்றும் மின்கலங்கள் (Electric batteries) தயாரிக்கப் பயன்படுகிறது. மேலும் வாகனங்களை நிறுத்தப் பயன்படும் வேகத்தடுப்புகளிலும் (Brake lining) பென்சில் மற்றும் வண்ணப்பூச்சு (Paint) தயாரிக்கவும் பயன்படுகிறது.

கிராபைட் சார்ந்த பொருள்கள் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் கிராபைட்டில் நிலையான கரிச்சத்து மிக அதிகமாக இருக்க வேண்டும். இப்படி நிலையான கரிச்சத்தை உயர்த்துவதற்குக் கிராபைட் படிவங்களில் இருக்கும் கிராபைட் அல்லாத கனிமங்கள் நீக்கப்பட வேண்டும். ஆய்வுக்கூடங்களில் செய்யப்பட்ட சோதனைகள் மூலமாக கிராபைட் படிவங்களில் உள்ள நிலையான கரிச்சத்தை உயர்த்த முடியும் என்று கண்டறியப்பட்டுள்ளது.

கிராபைட் படிவங்களில் உள்ள நிலையான கிராபைட்டை உயர்த்துவதற்கு அந்த 3 படிவங்கள் தூளாக்கப்பட்டு நீரில் கடைய வேண்டும். அந்த நீரில் சில துளிகள் பைன் எண்ணெய் சேர்த்து நீரைக் கடைந்தால் அதிக நுரை உண்டாகும். இத்தகைய நுரைகளில் கிராபைட் செதில்கள் நீரின் மேல் பரப்பிற்கு எடுத்துச் செல்லப்படும். கிராபைட்டுடன் படிவங்களில் சேர்ந்திருக்கும் குவார்ட்ஸ், பெல்ட்ஸ்பர் மற்றும் பல கனிமங்கள் நீரின் அடிப்பகுதியில் தங்கிவிடும். மேலே மிதக்கும் கிராபைட் செதில்களை அடிக்கடி மேல்புறமாக நீக்கி சிலதடவை அது சுத்தப்படுத்தப்பட வேண்டும். இதனால் சுத்தமான கிராபைட் மற்ற கனிமங்களிலிருந்து பிரித்தெடுக்கப்படுகிறது. இத்தகைய செறிவூட்டப்பட்ட கிராபைட்டின் கரிச்சத்து 96 சதவிகிதத்துக்கு மேல் இருக்கும். இத்தகைய உயர்ரக கிராபைட் தான் பல தொழில் நுட்பமிக்க பொருட்கள் தயாரிக்கப் பயன்படுகிறது.

டாமின் தற்பொழுது சுமார் 22 கோடி முதலீட்டில் கிராபைட் மேம்பாட்டுத் தொழிற்சாலை ஒன்றை சிவகங்கையில் நிறுவி வருகிறது. இத்தொழிற்சாலையில் நாளொன்றுக்கு 200 டன் சுரங்கத்திலிருந்து வெட்டப்பட்டு வரும் 14 சதவிகித கரிச்சத்து கொண்ட கிராபைட் படிவத்தை மேம்படுத்தி 96 சதவிகித கரிச்சத்துள்ள செறிவூட்டப்பட்ட கிராபைட் உற்பத்தி செய்ய முடியும். இத்தகைய மேம்படுத்தப்பட்ட கிராபைட்டிற்கு உலக அளவில் பெரும் தேவை உள்ளது.

உலகச் சந்தையில் இதுபோன்ற கிராபைட்டை மடகாஸ்கர், ஜெர்மனி, பிரேஸில் போன்ற நாடுகள் விற்பனை செய்து வருகின்றன. செதில் வடிவமான கிராபைட் ஒரு ஆண்டிற்குச் சுமார் 60,000 டன் உற்பத்தி செய்யப்படுகிறது. தற்பொழுது உலகத்திலுள்ள கிராபைட் சார்புடைய தொழிற்சாலைகள் தங்களது உற்பத்தித் திறனை அதிகரித்துக் கொண்டு வருவதாலும், புதுப்புது கிராபைட் சார்ந்த பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டு வருவதாலும் செதில் வகையான கிராபைட்டிற்கு உலகச் சந்தையில் பெரும் தேவை உள்ளது. தற்பொழுது டாமின் உத்தேசித்துள்ள கிராபைட் மேம்பாட்டுத் தொழிற்சாலை ஆண்டிற்கு 9,000 டன் செறிவூட்டப்பட்ட கிராபைட் உற்பத்தி செய்யும். இந்த உற்பத்தியானது உலகத்தில் தொழில்துறையில் முன்னேறியுள்ள நாடுகளின் தேவைகளையும் மற்றும் நம்நாட்டுக் கிராபைட் தேவையையும் ஓரளவு பூர்த்தி செய்யும்.

தற்பொழுது சிவகங்கை கிராபைட்டைப் பயன்படுத்தி கிராபைட் சார்ந்த தொழில்களைத் தொடங்குவதற்குச் சரியான தருணமாகும். இத்தகைய தொழில்களில் ரூபாய் 200 கோடியிலிருந்து ரூபாய் 800 கோடி வரை முதலீட்டில் தொடங்க வழிவகை உள்ளது. டாமின் தொழில் நுட்பமிக்க ஏழு தொழில்களை இனம் கண்டுள்ளது. அவை முறையே:

சிலிகான் கார்பைடு மூசைகள் - இவை இரும்பு அல்லாத உலோகங்களை உருக்குவதற்குப் பயன்படும்.

மேக் கார்பன் செவ்வகக் கற்கள்- இவை இரும்பு அல்லாத எஃகுத் தொழிற்சாலை உலைக்கற்கள் செய்யப் பயன்படும்.

கார்பன் தூரிகை - இவை மின்சக்தி உற்பத்தி செய்யும் டர்போ ஆல்டர்நேட்டர்ஸில் பயன்படுத்தப்படுகிறது.

விரிவாக்கப்பட்ட கிராபைட் - இது ஆராய்ச்சிக்கான வானில் செலுத்தப்படும் ராக்கெட்டுகளில் பயன்படுத்தப்படுகிறது.

கிராபைட் உராய்வுத் தடுப்பான்- இது எஃகுத் தொழிற்சாலைகளில் உள்ள இயந்திரங்களிலும், பளு தூக்கிகளிலும் மற்றும் வானில் செலுத்தப்படும் ராக்கெட்டுகளிலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

மின்கலன்கள் - இவை வீடுகளிலும் தொழிற்சாலைகளிலும் அதிக அளவில் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

வாகனங்களில் உள்ள வேகத் தடைச் சாதனங்கள் வேகமாகச் செல்லும் ரயில் வண்டிகளிலும், பந்தயக் கார்களிலும், ஆகாய விமானங்களிலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

உலகப் புகழ் பெற்ற நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ள கனிமப் பதப்படுத்தும் தொழிற்சாலைக்குத் தேவையான கனிமப் பொருட்களை வெட்டியெடுக்கும் பணி 21.10.92 அன்று மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. கிராஃபைட்டை அடிப்படையாகக் கொண்ட தொழிற்சாலைகள் வந்துவிட்ட காரணத்தால், 21-ம் நூற்றாண்டு உதயமாவதற்கு முன்பே சிவகங்கை இந்தியாவின் தொழில் வளம்மிக்க தலமாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.



## எழுத்தாளர்களின் கடமை

"எழுத்தாளர்கள் என்றால் எழுத்தை ஆள்பவர்கள் என்று கருதுவதால் அந்த எழுத்துக்கு அவர்கள் உரிமையுள்ளவர்கள்.

எழுத்துக்கள் என்பதில் பல்வேறு வகை இருக்கின்றன.

பிறரைச் சிந்திக்க வைக்கிற மாதிரி எழுதுவது ஒரு வகை.

பிறரைப் புண்படுத்தாமல் எழுதுவது ஒரு வகை.

பிறரைச் சிரிக்க வைத்துச் சிந்திக்க வைப்பது ஒருவகை.

அப்படிச் சிந்திக்க மறுப்பவர்களைச் சந்திக்கு இழுப்பது என்பது ஒரு வகை.

எழுத்தாளர்களின் திறமை என்பது காலப் போக்கில் மாறுவது என்றாலும் அந்த எழுத்தாளர்களின் எழுத்துக்கள் எதிர்காலச் சந்ததிகளின் தலையெழுத்தை நிர்ணயிக்கின்றவைகள்.

சாதி, பணம் பற்றிக் கவலைப்படாதீர்கள். உங்கள் எழுத்துதான் இந்த நாட்டை உருவாக்கிடும்.

உங்களுக்கென்று குடும்பம் இருந்தாலும், அந்தப் பிரச்சினைதான் இங்கும் எதிரொலிக்கிறது என்பதை நினைவில் வைத்து உங்கள் கடமைகளைச் செய்யுங்கள்.

இந்த நாட்டின் பண்பாட்டை யாரும் தகர்க்க முடியாத அளவுக்கு உங்கள் எழுத்துக்கள் பயன்பட வேண்டும்.

பல்லாண்டு எழுத்துச் சேவையாற்றிடப் பெற்றெடுத்த என் அன்னையை இறைஞ்சுகின்றேன்.

- டாக்டர் எம்.ஜி.ஆர்.

# தரணி போற்ற வாழ்ந்திடலாம்!

—கவிஞர் சமதர்மன்—

கொஞ்சி மகிழும் குழந்தைகளே
கூடி ஆடிப் பழகிநின்றால்
பஞ்ச பூதம் நம்மிடமே
பணிந்தே வாழ்வில் இருந்திடுமே!

நிலத்தைப் போல வளமையென
நிதமும் உடலை வளர்த்திடலாம்!
நலத்தைக் கூட்டும் நீரெனவாய்
நாமும் பிறர்க்கே உதவிடலாம்!

உருவ மில்லாக் காற்றினைப்போல்
ஊரில் நாமும் உழைத்திடலாம்!
நெருப்பைப் போல ஒளியேந்தி
நேர்த்தி யாக இருந்திடலாம்!

வானம் போல அகன்றிருக்கும்
மனத்தை வளர்த்துக் கொண்டிடலாம்!
தான மிக்க இச்செயலால்
தரணி போற்ற வாழ்ந்திடலாம்!



## தொலைக்காட்சி



முதன் முதலாக தொலைக்காட்சிக் கொள்கை 1884-ஆம் ஆண்டில்தான் வெளியிடப்பட்டது. வெளியிட்டவர் பெயர் நீப்கோல்.

தொலைபேசியைக் கண்டுபிடித்தவர் மார்கோனி. இவர் தொலைபேசியில் பேசுகிறவரையும், நிகழ்ச்சிகளையும் காட்ட முடியும் என்று 1915-இல் கூறினார்.

1923-இல் சோலிகன் என்பவரால் ஒளிபரப்பும் குழாய் கண்டுபிடிக்கப்பட்டது.

1925-இல் சின்கின்க என்ற அமெரிக்கர் முதன் முதலாக ஒளிபரப்பிக் காட்டினார்.

1926-சனவரி 27-இல் பேடு என்ற ஆங்கில அறிவியலார் ஓரறையிலிருந்து இன்னொரு அறைக்கு ஒளிப்பரப்பினார்.

1927-இல் அமெரிக்காவிலுள்ள நியூயார்க்-வாசிங்டன் இடையில் ஒளிபரப்பு நடந்தது.

1928-இல் முதன் முதலாக தொலைக் காட்சிப் பெட்டி விற்பனைக்கு வந்தது. இதுவும் அமெரிக்காவில்தான்.

பொது மக்களைப் பொறுத்த வரையில் ஒழுங்கான ஒளிபரப்பு 1936 நவம்பர் 2-இல் தான் ஆரம்பமானது. இது இங்கிலாந்திலுள்ள இலண்டனில் இடம் பெற்றது. இந்தியாவில் டெல்லி ஒளிபரப்பு 1954 செப்டம்பர் 15-இல் தான் ஆரம்பிக்கப் பட்டது.

சென்னையில் 1974-இல் தான் ஒலி பரப்பு தொடங்கியது. ஆனால் முதன் முதலில் தமிழ் மொழியில் ஒளிபரப்பானது சிங்கப்பூரில்தான். இது 1963-ஆம் ஆண்டில் நடைபெற்றது.



## தஞ்சையில்
## ஒரு அற்புதக் கருவூலம்!



தஞ்சை நகரில் அமைந்துள்ள சரபோஜி மகாராஜா சரஸ்வதி மகால் நூல் நிலையம் ஒரு அற்புதக் கருவூலமாகும்.

நாயக்கர்-மராட்டிய வம்சத்தவரால் போற்றி வளர்க்கப்பட்ட இந்த நூல் நிலையத்தில், கலை-கலாச்சாரம்-இலக்கியம் குறித்த அரிய சுவடிகள், கையெழுத்துப் பிரதிகள் 44,777 உள்ளன. சமஸ்கிருதம், மராத்தி, தெலுங்கு, தமிழ் ஆகிய மொழிகளிலும், பாரசீக மொழியில் சிலவும் உள்ளன. இதில் சமஸ்கிருதத்தில் உள்ளவையே அதிகம் - 37,499. நாகரி, கிரந்தம், தேவநாகரி, நந்தநாகரி போன்ற பல்வேறு லிபிகளில் கையெழுத்துப் பிரதிகள் எழுதப் பட்டுள்ளன.

பல்வேறு ஐரோப்பிய மொழிகளில் 1832-ஆம் ஆண்டிற்கு முன்னர் (மகாராஜா சரபோஜி காலத்தில்) பிரிட்டனில் அச்சாகிய 4,500 நூல்களும் இங்கு உள்ளன.

1986 ஜூலையிலிருந்து பதிவு பெற்ற சொசைட்டியாக இது செயல் பட்டு வருகிறது. மத்திய அரசின் கலாச்சாரத் துறைப் பிரதிநிதிகளும், தமிழக அரசின் பிரதிநிதிகளும், வல்லுநர்களும் இதில் உறுப்பினராக உள்ளனர்.

நூல் நிலையப் பராமரிப்பிற்கும் செயல்பாட்டிற்கும் தமிழக அரசு பொறுப்பேற்றுள்ளது. நூல் நிலையத்தின் வளர்ச்சிப் பணிகளுக்கு மத்திய அரசு நிதியுதவி புரிகிறது.

# பெரியார் மாவட்டத்தில் அரசு ஆற்றிவரும் நலத்திட்டப் பணிகள்

ரா. கண்ணன், இ.ஆ.ப.,
பெரியார் மாவட்ட ஆட்சித் தலைவர்



பெரியார் மாவட்டத்திற்குட்பட்ட 20 ஊராட்சி ஒன்றியங்களிலும் 1992-93-ஆம் ஆண்டிற்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தில் 10,830 நபர்களுக்கு ரூ.270.50 இலட்சம் மானியமாக வழங்கத் திட்டமிடப் பட்டுள்ளது. இதில் 18.11.92 தேதி வரை 5,734 நபர்களுக்கு ரூ.128.39 இலட்சம் மானியம் அனுமதிக்கப்பட்டு உள்ளது.

### ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம்

ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ், தொகுப்பு வீடுகள், சத்துணவு மையம், பள்ளிக் கட்டடங்கள், மெட்டல் சாலைகள், சிறுபாசனக் குளங்கள், சமூகக் காடுகள், ஊராட்சிப் பணிகள், ஜீவன்தாரா கிணறுகள் மற்றும் கசிவுநீர்க் குட்டைகள் போன்ற பணிகள் செயல் படுத்த ஊரக வளர்ச்சி இயக்குநர் அளித்த வரன்முறைக்குட்பட்டு, 1992-93-ஆம் ஆண்டு உத்தேசத் திட்டம் ரூ.670.803 இலட்சத்திற்குத் தயாரிக்கப்பட்டுள்ளது.

சென்ற ஆண்டு எடுத்துக் கொள்ளப் பட்டு, 1.4.92-இல் நிலுவையிலிருந்த பணிகளுக்கும் நடப்பாண்டில் வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் மேற் கொள்ளப்பட்ட பணிகளுக்குமாகச் சேர்த்து மொத்தம் ரூ.249.64 இலட்சம் அக்டோபர் 1992 திங்கள் வரை செல விடப்பட்டுள்ளது. 7.500 இலட்ச மனித சக்தி நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன. ஊராட்சிப் பணிகள் தலைப்பில் 27 பேரூராட்சிகளில் 34 கழிப்பிடங்கள் கட்டுவதற்கு ரூ.13.14 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டது. ரூ.11.990 இலட்சம் நிதி விடுவிக்கப் பட்டுள்ளது.

### சமூகக் காடுகள் திட்டம்

353.50 எக்டேரில் 4.918 இலட்சம் செடிகள் நடப்பட்டுள்ளன. தற்பொழுது சாதகமான பருவ நிலையை முன்னிட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன. இத்தலைப்பில் நாளது வரை ரூ.13.74 இலட்சம் செலவு மேற் கொள்ளப்பட்டுள்ளது.

### சாண எரிவாயுத் திட்டம்

1992-93-ஆம் ஆண்டிற்குக் குறியீடு, 1,100 நிர்ணயம் செய்யப்பட்டது. நாளது வரையில் 181 கலன்கள் நிறுவப்பட்டுள்ளன.

### டிரைசம் பயிற்சி

1992-93-ஆம் ஆண்டில் முதல் கட்டமாக 266 நபர்களுக்கு ரூ.20.11 இலட்சம் செலவில் 10.8.92 முதல் பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது. 2-வது கட்டமாக 536 நபர்களுக்கு 2.11.92 முதல் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. மீதமுள்ள 85 பேருக்கு 3-வது கட்டத்தில் 1.12.92 முதல் பயிற்சிகள் தொடங்கப் படவுள்ளன.

### குடும்ப அட்டை

குடும்ப அட்டைகள் இல்லாத 1,466 குடும்பங்களுக்குப் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. மாவட்டத்தில் அக்டோபர் 1992 திங்களில் 1,478 போலிக் குடும்ப அட்டைகள் கண்டு பிடிக்கப்பட்டு ரத்து செய்யப்பட்டுள்ளது.

### ஆதிதிராவிடர் நலத்துறை

ஆதிதிராவிடர்களுக்கு மாடுகள் வாங்க ஒதுக்கப்பட்ட ரூ.24,000 16 நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர்களுக்கெனக் குடிநீர்க் கிணறுகள் வெட்ட ரூ.90,000 ஒதுக்கீடு செய்யப்பட்டதில், ரூ.53,751 செலவில் 6 கிணறுகள் வெட்டப்பட்டுள்ளன. மதம் மாறிய ஆதிதிராவிடர்களுக்கு ஒதுக்கப் பட்ட ரூ.7,500-இல் ஒரு கிணறு வெட் டப்பட்டுள்ளது. மலைவாழ் பழங்குடியினருக்கு ரூ.25,000 செலவில் 4 கிணறுகள் வெட்டப்பட்டுள்ளன.

ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க 4,250 பட்டாவுக்கு ரூ.25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப் பட்டதில், ரூ.16 இலட்சம் செலவில் 1,486 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங் கப்பட்டுள்ளன.

பாதை மற்றும் மயான வசதிக்கென ரூபாய் ஒரு இலட்சம் ஒதுக்கீடு செய்யப் பட்டதில் 25 இனங்களுக்கென ரூ.95 ஆயிரம் செலவு செய்யப்பட்டு, முடிக்கப் பட்டுள்ளது. பழங்குடியினருக்குப் பாதை வசதி செய்ய ரூ.40,000 அரசு ஒதுக்கீடு செய்யப்பட்டதில் ரூ.17,700 செலவில், 44 இனங்கள் முடிக்கப்பட்டுள்ளன. ஊராட்சி ஒன்றியப் பங்குத் தொகைக் கென ரூ.10 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப் பட்டதில், ரூ.7,500 செலவிடப்பட்டு உள்ளது.



★ ஞானமும், பக்தியும் அனைவருக்கும் உரித்தான பெருஞ் செல்வம்.

★ கோபம் கூடாது. அது முகத்தின் அழகைக் கெடுத்து விடுகிறது. சாந்தமே முகத்திற்கு அழகு தருகிறது.

★ ஒழுக்கத்துடனும், நாணயத்துடனும் ஒவ்வொருவரும் நடந்து கொண்டால், எல்லோருக்கும் நன்மை விளையும்.

★ நம்முடைய சமூகம் சுதந்திர வாழ்க்கை அடைந்து விட்டது. சுதந்திரத்துடன் சுகமும் பெற வேண்டுமானால், மக்கள் அற வழியில் நிற்கவேண்டும்.

**கல்வி உதவித் தொகை**

ப்ரிமெட்ரிக் கல்வி உதவித்தொகைக்கென ஒதுக்கப்பட்ட ரூ.3,50,000-இல், 7,242 மாணவர்களுக்கு ரூ.1,50,681 அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மாநில அரசு போஸ்ட் மெட்ரிக் உதவித் தொகைக்காக ஒதுக்கப்பட்ட ரூ.85,000-இல் 170 மாணவர்களுக்கு ரூ.95,000 வழங்கப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர்களுக்கான மத்திய அரசு போஸ்ட் மெட்ரிக் உதவித்தொகையாக ரூ.25,00,000 ஒதுக்கீடு செய்யப்பட்டதில் 1,907 மாணவர்களுக்கு ரூ.15,73,775 செலவிடப்பட்டுள்ளது. அட்ஹாக் மெட்ரிக் கல்வி உதவித்தொகையான ரூ.48,000 ஒதுக்கீட்டில், 160 மாணவர்களுக்கு ரூ.48,000 செலவு செய்யப்பட்டது.

சிறப்பு ப்ரிமெட்ரிக் உதவித்தொகையாகச் சுகாதாரக் குறைவான தொழில் புரிவோர் குழந்தைகளுக்கு ஒதுக்கப்பட்ட ரூ.2,50,000-இல் 55 பேர்களுக்கு ரூ.1,12,550 செலவிடப்பட்டது. பட்டப் படிப்பு வரை இலவசக் கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டத்திற்கு ரூபாய் ஒரு இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டதில், 99 மாணவர்களுக்கு ரூ.35,972 வழங்கப்பட்டது.

ஆதிதிராவிடர் நலப் பள்ளி மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்கள் வழங்க ரூ.80,000 ஒதுக்கப்பட்டதில், 1,544 மாணவர்களுக்கு ரூ.63,369 செலவு செய்யப்பட்டுவிட்டது. ரூ.4,31,170 செலவில் 4,681 ஆதி திராவிட மாணவர்களுக்கு (9 மற்றும் 10-ஆம் வகுப்பு) இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்கப்பட்டன.

ஆதிதிராவிடர் நலப் பள்ளி மாணவர்களுக்கு இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்கப்பட்டன. ஆதிதிராவிடர் நல பள்ளி மாணவர்களுக்கு நோட்டுப் புத்தகங்கள் வழங்க ரூ.46,000 ஒதுக்கீடு செய்யப்பட்டதில், ரூ.12,736 செலவில் 425 ஆதிதிராவிடர் மாணவர்களுக்கு நோட்டுப் புத்தகங்கள் வழங்கப்பட்டன.

சீருடைகள் வழங்க ரூ.3,10,000 ஒதுக்கீடு செய்யப்பட்டதில், 2,364 மாணவ மாணவியர்களுக்குச் சீருடைகள் வழங்கப்பட்டுள்ளன.

**கூட்டுறவுத் துறை**

பிரதமக் கூட்டுறவுச் சங்கங்கள் 483-ம் மாவட்ட அளவிலான சங்கங்கள் 4-ம் உட்பட மொத்தம் பெரியார்

மாவட்டத்தில் 487 கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன.

1992-93-ஆம் ஆண்டில் குறுகிய காலக் கடன்களுக்கான குறியீட்டில் 19,249 நபர்கள் ரூ.1481.80 கடன் பெற்று பயன்பெற்றுள்ளனர். மத்திய காலக் கடன்களுக்கு ரூ.350 இலட்சம் குறியீட்டில், அக்டோபர் 1992 திங்கள் வரை ரூ.59.48 இலட்சம் 1,034 நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. நலிவடைந்த பிரிவினர்களுக்கான குறுகிய காலக் கடனாக உள்ள ரூ.1,190 இலட்சம் குறியீட்டில் அக்டோபர் 1992 திங்கள் முடிய 14,295 நபர்கள் ரூ.1021.01 இலட்சம் கடன் பெற்று பயன்பெற்றுள்ளனர். மத்திய காலக் கடனாக ரூ.245 இலட்சம் குறியீட்டளவில், 942 நபர்கள் ரூ.52.47 இலட்சம் கடன் பெற்று பயனடைந்துள்ளனர். நீண்ட காலக் கடனாக அக்டோபர் 1992 திங்கள் வரை ரூ.95.73 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

தொடக்கக் கூட்டுறவு வங்கி மூலம் நகையீட்டுக் கடனாக ரூ.2,230.90 இலட்சம் 28,654 நபர்களுக்கும், மத்திய வங்கி மூலம் ரூ.596.34 இலட்சம் 7,770 நபர்களுக்கும், நகரக் கூட்டுறவு வங்கிகள் மூலம் ரூ.901.78 இலட்சம் 15,780 நபர்களுக்கும் 1992 அக்டோபர் வரை வழங்கப்பட்டு உள்ளது.

மத்திய வங்கி மூலம் சிறுதொழில் கடனாக ரூ.15.55 இலட்சமும், நகர வங்கிகள் மூலம் ரூ.64.06 இலட்சமும் அக்டோபர் 1992 திங்கள் வரை வழங்கப்பட்டுள்ளது.

மலைவாழ் மக்களுக்கென ஒரு பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் செயல் பட்டு வருகின்றது. 1992-93-ஆம் ஆண்டிற்குக் கடன் வழங்கும் திட்டத்தில் ரூ.4.70 இலட்சம் குறியீட்டில், 1992 அக்டோபர் வரை ரூ.1.82 இலட்சம் கடன் வழங்கப்பட்டது. விவசாயப் பொருட்கள் விற்பனையின் ரூ.2 இலட்சம் குறியீட்டில் 0.45 இலட்சம் ரூபாய் 1992 அக்டோபர் வரை விற்பனை செய்யப்பட்டுள்ளது. சிறுவனப் பொருட்கள் சேகரத்திற்கு ரூ.24 நிர்ணயித்ததில், ரூ.10.27 வரை சேகரிக்கப்பட்டுள்ளது. அத்தியாவசியப் பொருட்களுக்கு ரூ.8.50 நிர்ணயிக்கப்பட்டதில், ரூ.4.23 வரை வழங்கப்பட்டுள்ளது.

**மாவட்டத் தொழில் மையம்**

படித்து வேலையற்ற இளைஞர்களுக்கு இந்தியப் பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 1992-93-ஆம் ஆண்டிற்குக் குறியீடு 400 நபர்களுக்குக் கடன் உதவி வழங்கக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அக்டோபர் 1992 வரை 468 நபர்களுக்கு 99.60 இலட்சம் கடன் வழங்க வங்கிக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் எஸ்.எஸ்.எல்.சி. பாஸ் செய்து 18 வயது முதல் 35 வயதுக்குட்பட்டுள்ள ஆண்/பெண்களுக்குக் குடும்ப வருமானம் ஆண்டு ரூ.10,000-க்கு மிகாமல் இருந்தால் சொந்தமாகத் தொழில் அமைத்து வாழ்க்கையில் முன்னேற வாய்ப்பு உள்ளது. ஆகவே, தகுதி வாய்ந்த ஆண்கள் மற்றும் பெண்கள் முழு விவரங்களுடன் பொது மேலாளர், மாவட்டத் தொழில் மையம், ஈரோடு-2 என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கலாம். இதில் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினரைச் சார்ந்தவர்களுக்கு மொத்த ஆண்டு குறியீட்டில் 30 சதவிகிதம் கடன் வழங்கப்படும்.





**தந்தை பெரியாரின் புரட்சி மொழிகள்**

★ நல்ல குடும்பம் என்பது வரவுக்கு மிஞ்சிய செலவு செய்யாமல் இருப்பதாகும். தமது வாழ்க்கைச் செலவை வரவுக்கு உட்பட்டே அமைத்துக் கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட குடும்பம் தான் கண்ணியமான குடும்பம்.

★ யார் எந்தக் கருத்தைச் சொன்னாலும், அதனை அப்படியே ஏற்றுக் கொள்வது என்றால், மனிதன் வளர்ச்சி அடைய மாட்டான்.

★ சேவை என்பது மற்றவர்கள் நன்மை அடைவதைப் பார்த்து மகிழ்ச்சியும், திருப்தியும் அடைவதற்காகவே செய்யப்படும் காரியம்.

★ மனிதனுக்கு மனிதன் சமம்; ஒருவரை ஒருவர் சுரண்டக் கூடாது. ஒருவருக்கொருவர் உதவி செய்ய வேண்டும்; ஒருவரை ஒருவர் வருத்தக் கூடாது.

**குடும்ப நலத்துறை**

அக்டோபர் 1992 1,267 தகுதி வாய்ந்த தம்பதியர்கள் குடும்ப நல அறுவைச் சிகிச்சை செய்து கொண்டு பயன் அடைந்துள்ளனர். இது இம் மாவட்டத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ள குறியீடான 13,000-இல் 9.7 சதவிகிதச் சாதனையாகும். 814 தாய்மார்களுக்குக் கருத்தடை வளையம் பொருத்தப்பட்டு உள்ளது.

**குடிநீர் வடிகால் வாரியம்**

கிராமக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் 276 குழாய்ப் திறைப்பான் திட்டங்கள் மற்றும் 53 ஸ்ரீமன் இணைப்பான் திட்டங்கள் முடிக்கப்பட்டு பயனுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ், ரூ.13.45 இலட்சம் செலவில் 63 ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது.

குடிநீர் ஆதாரமில்லாத குடியிருப்புகளுக்கான திட்டத்தின் கீழ், ரூ.46.94 இலட்சம் செலவில் 128 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதி செய்து தரப் பட்டுள்ளது.

மாற்று ஆழ்துளைக் குழாய்க் கிணறுத் திட்டத்தின் கீழ், ரூ.20.49 இலட்சம் செலவில் 75 குடியிருப்புகளுக்கு மாற்று ஆழ்துளைக் குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு, குடிநீர் வசதி செய்து தரப் பட்டுள்ளது.

**ரூ.54.6 இலட்சம் உர மானியம்**

பெரியார் மாவட்டத்தில் உள்ள பல்வேறு கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் இதுவரை ரூ.47.2 இலட்சமும், 'தாய்' எனப்படும் தமிழ்நாடு அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் நிறுவனம் மூலம் ரூ.6 இலட்சமும், என்கோபெட் எனப்படும் தமிழ்நாடு வேளாண் பொறியியல் கூட்டுறவுப் பணி மையம் மூலம் ரூ.1.5 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.54.6 இலட்சம் உர மானியமாக விவசாயிகளுக்கு வழங்கப் பட்டுள்ளது.

நிலக்கடலை மற்றும் பயறுவகைப் பயிர்களுக்கு நீர் தூவும் கருவி அமைக்க இதுவரை 80 விவசாயிகளுக்கு மானிய விலையில் கருவிகள் வழங்கப்பட்டு உள்ளது. இதற்கென ரூ.9.1 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இன்னும் 11 விவசாயிகளுக்கு வழங்கப் படவுள்ளது.

நெல் சாகுபடியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் நடப்பாண்டில் 550 விவசாயிகளுக்குப் பயிர்ப் பாதுகாப்புக் கருவிகளும், 45 விவசாயிகளுக்கு வேளாண் கருவிகளும் ஒருங்கிணைந்த அரிசி உற்பத்தித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளன.

**டாக்டர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டம்**

இத்திட்டத்தின் கீழ் ரூ.2,000 நிதி உதவி வழங்கப்படும். இந்நிதியைப் பெறப் பெற்றோர்களின் வயது, அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளும் நேரத்தில் 35-க்குள் இருக்க வேண்டும். தம்பதியருக்கு ஒன்று அல்லது இரண்டு பெண் குழந்தைகள் இருத்தல் வேண்டும். ஆண் குழந்தைகள் இருக்கக் கூடாது. இரண்டு பெண் குழந்தைகள் இருப்பின் இரண்டாவது குழந்தைக்கு மட்டுமே வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் பயனடையும் பெண் குழந்தை 3 வயதிற்குட்பட்டு இருத்தல் வேண்டும். ஆண்டு வருமானம் ரூ.6,400-க்குள் இருத்தல் வேண்டும்.

முதல் பிறந்த நாளன்று ரூ.250 [illegible], பள்ளியில் சேர்க்கும் சமயம் ரூ.250 நிதியுதவியும், 6-ஆம் வகுப்பில் சேரும் சமயம் ரூ.500-ம், 9-ஆம் வகுப்பு முதல் ப்ளஸ்.2 வரை 4 ஆண்டுகளுக்கு ரூ.50 வீதம் 10 மாதங்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படும். பெண்ணிற்கு 20 வயது முடிந்தவுடன் திருமணத்திற்காகவோ அல்லது மேல் படிப்பிற்காகவோ ரூ.10 ஆயிரம் தொகையாக வழங்கப் படும். 1.10.92-க்குப் பின்பு குடும்ப நலத் திட்டத்தில் பங்கேற்ற தம்பதியர்கள் இத்திட்டத்தின் கீழ் பயன்பெறத் தகுதியானவர்.

**தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்**

1992 அக்டோபர் திங்களில் 4 நபர்களுக்குச் சிறுதொழில் தொடங்க ரூ.172.65 இலட்சங்கள் கடன் அனுமதி அளித்துள்ளது. இதுவரை 12 நபர்களுக்குச் சிறுதொழில் மற்றும் வாகனக் கடன் திட்டத்தின் கீழ் ரூ.309.77 இலட்சங்கள் கடன் அனுமதி அளித்து உள்ளது.

1992 அக்டோபர் திங்களில் 9 நபர்களுக்குப் பல்வேறு திட்டங்களின் கீழ் ரூ.53.20 இலட்சங்கள் கடன் பட்டுவாடா செய்துள்ளது. இத்திங்கள் முடிய 98 நபர்களுக்கு ரூ.481.88 இலட்சங்கள் கடன் பட்டுவாடா செய்துள்ளது.

இக்கழகம் 1992 அக்டோபர் திங்களில் ரூ.43.48 இலட்சங்கள் கடன் வசூல் செய்துள்ளது. இத்திங்கள் முடிய ரூ.253.65 இலட்சங்கள் கடன் வசூல் பெரியார் மாவட்டத்தில் செய்துள்ளது.



# உழவர் உயர்வுக்கு வேளாண்மைப் பொறியியல் துறை

என். இராமலிங்கம்
உதவி செயற்பொறியாளர்
(வே.பொ.)
(உழுவை வாடகைத் திட்டம்)
தஞ்சாவூர்.

‘உழுவார் உலகத்துக்காணி’ என்பது குறள், உணவளிக்கும் உழவர் தொழிலின் சிறப்பை உணர்த்தவே இவ்வாறு கூறினார் வள்ளுவர். பயிர்த் தொழில் சிறந்து நாட்டில் விளைச்சல் பெருகிடப் பாடுவடுவதே வேளாண்மைப் பொறியியல் துறையின் தலையாய கடமையாகும்.

**நிலமும், நீரும்,**

நிலமும் நீரும் வேளாண்மைக்கு இரு கண்கள். இவற்றில் நிலத்தைப் பண்படுத்தி உழவியல் முறைகளின் மூலம் பயிர் செய்யத்தக்கதாய் மாற்றுவதும், நிலத்தடி நீர்முதல் நிலமட்ட நீர் வரை கிடைக்கக்கூடிய நீரை வேளாண்மைக்குச் சிக்கனமாய்ப் பயன்படுத்திட சீரிய வழிகளைக் கண்டுபிடித்து அமோக விளைச்சலுக்கு வழிகோலுவதும் வேளாண்மைப் பொறியியல் துறையின் பணிகளாகும்.

**முக்கியப் பணிகள்**

வறட்சியாலும், வெள்ளத்தாலும் நாடு பாதிக்கப்படும்போது உழவர் துயர் துடைக்க வேளாண்மைப் பொறியியல் துறை தொண்டாற்றுகிறது. வெள்ளத்தால் மண் மேடிட்ட நிலங்களில் மூடிய மண்ணை வெளியேற்றவும், கரை உடைபட்ட கால்வாய்களை, ஏரிகளைச் சீரமைத்தும், நாட்டின் வறட்சி போக்கி விளைச்சல் பெருகிட நிலத்தடி நீரை வெளிக்கொணர்ந்து பருவமழை, பொய்த்துப்போன காலங்களிலும் நிலையான பாசன வசதியினை ஏற்படுத்தித் தரவும் திட்டமிட்டுப் பணியாற்றி நாட்டின் பசுமைப் புரட்சிக்கு வழி கோலுகிறது வேளாண்மைப் பொறியியல் துறை.

பருவ மழை பொய்த்து காவிரியில் நீர்வரத்துக் குறைந்ததனால் பயிரிட்ட தாளடி பிழைக்குமா? எனும் சந்தேகம் நாளுக்கு நாள் வலுத்து, சோர்ந்து போயிருந்த தஞ்சை உழவர் பெருமக்களின் வீட்டுக் கதவுகளைத் தட்டி துவளாதீர்! தாளடியினைக் காப்பாற்றியே தீருவோம்! கவலை வேண்டாம்! எனச் சொல்லி தமிழக அரசின் 5,000 வடிமுனைக் குழாய்க் கிணற்றுத் திட்ட விண்ணப்பத்தில் கையொப்பம் பெறுவது முதல் வடிமுனைக் குழாய்க் கிணறு இறக்கி பம்புசெட் நிறுவி வாடும் தாளடிப் பயிரினைக் காத்திட, போர்க்கால அடிப்படையில் மிகக் குறுகிய காலத்தில் பணியாற்றியதனால் தாளடியில் அமோக விளைச்சல் கண்டிடவும், உணவுப் பற்றாக்குறையினைக் குறைத்திடவும் பாடுபட்டுச் சாதனை படைத்தது வேளாண்மைப் பொறியியல் துறை.

ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்புறுதித் திட்டத்தின் மூலம் 1,789 கசிவு நீர்க் குட்டைகள் அமைத்து, நிலத்தடி நீர்வளம் காத்திட வழிவகுத்து குழாய்க் கிணறுகள், தேணிகள் ஆகியவற்றில் பாசன வசதியினைப் பெருக்கிடத் திட்டமிட்டுச் செயலாற்றியது. காற்றரிப்பினால் விளைநிலங்கள் வீண் நிலங்களாக மாறுவதைத் தடுத்திட மதுரை, நெல்லை மாவட்டங்களில் காற்றுக்கு வேலியமைத்து விளைநிலங்கள் காத்திடத் திட்டமிட்டுச் செயலாற்றி வருகிறது.

மானாவாரி விவசாயப் பெருங்குடி மக்களுக்கு மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தின் மூலம் சம உயர வரப்புகள், தடுப்பணைகள், அகலப் பாத்தி முறை போன்றவற்றால் மண், நீர்வளம் காத்து மகசூல் பெருக்கிடச் செயலாற்றுகிறது.



பாசன நீரின் முக்கியத்துவத்தினை எடுத்துக் கூறி சிக்கனமாய் நீர் பாய்ச்சி, சிறந்த நல்விளைச்சல் பெற பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டங்கள், நதிப்பள்ளத்தாக்குத் திட்டங்கள் என வகுத்துப் பாசன நீரைப் பாங்காய்ப் பயன்படுத்தி அதிக மகசூல் பெற்றிட வழி வகுக்கப்பட்டுள்ளது.

பருவ மழைக் கோளாறினால் பாசனப் பகுதிகள் குறையாது காத்திடத் தெளிப்பு நீர்ப் பாசனம், சொட்டு நீர்ப் பாசனம் போன்றவற்றினைச் செயற்படுத்தி சற்றேறக் குறைய 1.5 கோடி ரூபாய் மானியமாக விவசாயிகளுக்கு வழங்கி பாசன நீர்ப் பற்றாக்குறையினைச் சமாளித்து பயிர்வளம் காத்திடத் திட்டமிட்டுச் செயலாற்றியது. கடந்த ஆண்டுகளைப் போலவே இந்த ஆண்டும் உழவர் உயர்வுக்கான திட்டங்கள் பலதீட்டிச் செயற்பட்டு வருகிறது வேளாண்மைப் பொறியியல் துறை.

**நிலம் ஏன் சமப்படுத்தப்படல் வேண்டும்?**

நிலம் சமமாய் இருந்தால்தான் பாய்ச்சுகின்ற நீரோ, இடுகின்ற உரமோ எல்லா இடங்களையும் சென்றடைந்து அதிக விளைச்சல் பெற வகை செய்யும். ஆகவே, பண்ணை வேலைகள் எளிதாய் அமைந்திட நிலம் சமமாய் இருத்தல் அவசியம். தவிர பருவத்தே பயிர் செய் என்பது பழமொழி. பயிர் செய்திட நிலத்தினை உழுது பயிர் நட ஏதுவாக்குதல் மிகவும் அவசியம். ஒரே நேரத்தில் பல இலட்சம் ஏக்கர்கள் பயிர் நடப் போதுமான உழவுக் கருவிகள் தேவை. ஆகவே, உழவர்களின் இவ்விரு தேவைகளையும் பூர்த்திசெய்திட நிலச்சமன் செய்திட புல்டோசர்களும், உழவு செய்திட உழுவைகளும் வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் நியாயமான வாடகையில் வழங்கப் படுகின்றன,

**நிலத்தடிநீர் எடுத்து நிலத்தைப் பாசனம் செய்தல்**

நிலையான பாசன வசதிகளை ஏற்படுத்தித்தந்து உறுதியான விளைச்சலைப் பெற்றிட உழவர் பெருங்குடி மக்களுக்கு உதவிடும் வகையில் நிலத்தடிநீரை வெளிக் கொணர்ந்திட கைத்துளைக் கருவிகளும், இயந்திரத் துறைக் கருவிகளும், பாறைப் பகுதிகளில் விரைவாய் குழாய்க் கிணறு இறக்கிட ஹாமர் துளைக் கருவிகளும் இத்துறையின் மூலம் வாடகைக்கு வழங்கப்படுகிறது.

இதுமட்டுமல்லாது நிலத்தடிநீர் நிலைகளை அறிவியல் முறை மூலம் அறிந்து குழாய்க் கிணறு நிறுவிடத் தகுதியான, ஊற்றுள்ள இடத்தினைத் தேர்வு செய்து தருவதன் மூலம் உழவர் பெருமக்களுக்கு ஏற்படக்கூடிய வீணான செலவினங்களைக் குறைத்திட இத்துறை உதவுகிறது. பாறைக் கிணறுகளை ஆழப்படுத்திடவும், அகழ் கிணற்றிற்குள் குழாய்க் கிணறு அமைத்திடவும், பக்க ஊற்றுக்களைக் கிணற்றுக்குள் சேர்த்திடப் பக்கவாட்டுக் குழாய்கள் அமைத்திடவும் வேளாண்மைப் பொறியியல் துறை உதவுகிறது.

**பாசன நீர்ப் பற்றாக்குறையைச் சமாளித்திட**

இருக்கின்ற பாசன நீர்ப் பற்றாக்குறையில் புதிய முறைகளைப் பின்பற்றி பயிரின் தேவைக்கேற்ப நீரைச் சிக்கனமாகவும், அதே நேரம் அதிகப் பரப்புப் பாசனம் பெறும் வகையிலும் பயன்படுத்த வேண்டியது உழவர்களின் கடமையாகிறது. இதனைக் கருத்திற்கொண்டு தெளிப்பு நீர்ப்பாசனம், சொட்டு நீர்ப் பாசனம் போன்ற முறைகளைச் செயற்படுத்திட உழவர் பெருமக்களை ஊக்கப்படுத்தி தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் மூலம் கடன் பெற இத்துறை உதவுகிறது. இப்பாசன முறை நிறுவிட ஏற்படும் செலவில் பாதியினை மானியமாக உழவர்களுக்கு வழங்கிடும் அரசுத் திட்டமானது வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் செயற்படுத்தப்படுகிறது.

**பாசன ஆறு மற்றும் வாய்க்கால்கள் சீரமைக்கும் பணி**

பாசன ஆறுகள் மண்மேடிட்டும், பாசன வாய்க்கால்களின் நெய்வேலி காட்டாமணிகள் வளர்ந்து பாசன நீரைத் தடுத்து உடைப்புகள் ஏற்படுத்தி பயிர் விளைச்சல் பாதிப்பினைத் தவிர்த்திட ஒவ்வொரு ஆண்டும் பொதுப் பணித்துறையுடன் இணைந்து இது செயல்படுகிறது. தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் புல்டோசர்கள் தருவிக்கப்பட்டு, பாசன ஆறுகளைச் செப்பனிடுவதும், பாசன வாய்க்கால்களில் தூர் அகற்றிடவும் பாசன நீரைப் பாங்காகப் பயன்படுத்தி பயிர் விளைச்சலுக்குப் பாடுபடுகிறது வேளாண்மைப் பொறியியல் துறை.

1992-93-ஆம் ஆண்டில் ஏறத்தாழ 1.25 கோடி ரூபாய் செலவில் 60 புல்டோசர்களைக் கொண்டு பாசன ஆறுகளும், பாசன வாய்க்கால்களும் தூர் அகற்றப்பட்டுப் பாசன நீர் முழு அளவில் சென்று விவசாயிகள் பயனடையப் பாடுபட்டுள்ளது.

இப்பணிகள் சிறப்பைக் குறிப்பிட்டு சொல்லவேண்டுமெனில்,





## பறவை மனிதர்

எட்டு வயதுச் சிறுவன் ஒருவனுடைய கவணிலிருந்து புறப்பட்ட கல்லுக்கு இலக்காகி வினோத பறவை ஒன்று வீழ்ந்தது. அது என்ன பறவை என்பதைத் தெரிந்து கொள்ள அவன் பம்பாய் இயற்கை வரலாற்றுக் கழகம் சென்றான். அங்கு வித விதமான பறவைகளின் பதப்படுத்திய உருவங்களைக் கண்ட அவன், தானும் அதேபோல சேகரிக்க ஆர்வம் கொண்டான். அவன்தான் பின்னாட்களில் 'பறவை மனிதர்' என்ற சிறப்பைப் பெற்ற உலகப் புகழ் பெற்ற பறவை ஆராய்ச்சியாளர் டாக்டர் சலீம் அலி.

1896 நவம்பர் 12-ஆம் தேதி பம்பாய் நகரில் பிறந்தார் சலீம் மொய்ஸுதின் அப்துல் அலி. பத்ம பூஷன் (1958), பத்ம விபூஷன் (1976) உள்பட பல தேசிய, சர்வதேச விருதுகள் இவரை அலங்கரித்துள்ளன. சுமார் பத்து நூல்களும், எண்ணற்ற கட்டுரைகளும் எழுதியுள்ளார். அருணாச்சலப் பிரதேசத்திலிருந்து அந்தமான் தீவுகள் வரை, இந்திய துணைக் கண்டத்தில் இவரது காலடி படாத இடமே இல்லை எனலாம்! பூடான், திபெத், ஆப்கானிஸ்தான், பர்மா ஆகிய அண்டை நாடுகளுக்கும் சென்று பறவை ஆராய்ச்சி செய்துள்ளார். இந்தியப் பறவை இனத்தைக் காப்பாற்றுவதற்கு இவர் அரிய சேவை புரிந்துள்ளார்.

சில ஆண்டுகளுக்கு முன் இயற்கை எய்திய இவர், 'ஆராய்ச்சிக்கெனப் பறவைகளைக் கொல்வது கூட எனக்கு மிகவும் மன வேதனையைத் தருகிறது' என்று கூறியுள்ளார்.

---

கல்லணைத் தலைப்பில் கல்லணைக் கால்வாய் 3 அடி முதல் 4 அடி வரை மண்மேடிட்டு, கொள்ளளவு குறைந்ததனை அகற்றிட இத்துறையின் ஏழு புல்டோசர்கள் மண் மேட்டைக் கரையேற்றி மலைபோல் குவிந்ததனை மக்கள் வியப்போடு கண்டுகளித்தனர். காவிரிச் சீரமைப்புக் கோட்டத்தில் திருமலைராசன் ஆற்றினைச் செம்மைப்படுத்தி திருப்பமில்லாது அமைக்கும் பணி இன்றும் பலரால் போற்றப்பட்டுள்ளது. இதுபோன்று விவசாயிகளின் இன்னல்களை இத்துறை ஆற்றும் பணி மெச்சத் தக்கதாகும்.

### மானாவாரி நிலம் மேம்பட!

மானாவாரி நிலங்களின் மண் வளம் காத்து, மழை நீரைச் சேமித்து வேளாண்மை செய்திட சம உயர வரப்புகள், தடுப்பணைகள் நிறுவி மகசூல் பெருக்கிடவும், வேளாண்மைக்குப் பயனற்ற நிலங்களில் மரம் வளர்த்தல், கசிவுநீர்க் குட்டைகள், ஓடை அரிப்பினைத் தடுத்திடும் முறைகள் ஆகியவற்றினை மேற்கொண்டு நிலத்தடி நீர்வளம், மண் வளம் காப்பதோடு ஓடை அரிப்பிலிருந்து நில மீட்பும் இத்துறை மூலம் செயற்படுத்தப்படுகிறது.

### காற்றுக்கு ஏன் வேலி?

நெல்லை, சிதம்பரனார், மதுரை மாவட்டங்களில் காற்றரிப்பினால் விளை நிலங்கள் மண் அரிக்கப்படும் மண்மேடிட்டும் வீணாவதைத் தடுத்திட காற்றுக்கே வேலி அமைத்துத் தடுத்திட, வேளாண்மை செய்திட, வகை செய்யும் காற்றரிப்புத் தடுப்புத் திட்டம் என்ற ஒரு திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டம் எனும் பெயரில் மலைவாழ் பழங்குடி மக்கள் மேம்பாடடைய வேளாண்மை செய்திட உதவிடும் பொருட்டு நிலச் சமன்படுத்துதல், கசிவுநீர்க் குட்டைகள் அமைத்தல், தடுப்பணைகள் அமைத்தல் எனப் பல்வேறு பணிகளைச் செய்து மலைவாழ் மக்கள் சமுதாய நிலையினை உயர்த்திட இத்துறை பாடுபட்டு வருகிறது.

### நதிப் பள்ளத்தாக்கு வளம் பெற

மழைப் பிடிப்புப் பகுதிகளில் மண் அரிமானத்தைத் தடுத்திடவும், நீர்வடி பகுதிகளில் வண்டல் படிவதைத் தடுத்திடவும், குந்தா-கீழ்ப் பவானி நதிப் பள்ளத்தாக்குத் திட்டம் தீட்டப்பட்டு வேளாண்மைப் பெருக்கத்திற்கு வகை செய்கிறது இத்துறை. இதேபோல் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் அரிபள்ளத்தைத் தடுக்கவும், சிறு பாசன வசதிகளை அதிகப்படுத்தவும் திட்டமிடப்பட்டுச் செயற்படுத்தி வருகிறது.

### பாசன நீர்ப் பங்கீடு பயனளிக்கும்

பாசன நீரைப் பங்கீடு முறையில் அளித்து கடைமடை உழவரும் பயன் பெற்று பாங்கான விளைச்சல் பெற்றிட வாரபந்தி எனும் முறைப் பாசனத் திட்டம் தஞ்சை, மதுரை மாவட்டங்களில் செயற்படுத்தப்பட்டு சீரிய விளைவிற்கு வழி வகுக்கிறது. விளைபொருள் வீணாவதைத் தடுத்திட, பண்ணைக் களங்கள் கட்டி உழவர் மனம் மகிழ உவப்பாகச் செயல்படுகிறது வேளாண்மைப் பொறியியல் துறை. வேளாண்மைப் பணியில்லாக் காலங்களில் விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை கொடுத்திடவும், சமுதாய மேம்பாட்டிற்கும் திட்டமிடப்பட்ட ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்புறுதித் திட்டத்தின் மூலம் கசிவு நீர்க் குட்டைகள் அமைத்து நிலத்தடி நீர்வளம் காத்திடவும், மழையினால் மண் அடித்துச் சென்று ஏரி, குளம் தூர் சேருவதைத் தடுத்திடவும் இத்துறை பாடுபடுகிறது.

### உழவர் உயர்வே குறிக்கோள்

இத்திட்டங்கள் அனைத்தும் உழவர் பெருமக்கள் உயர்வடைய ஏற்படுத்தப்பட்ட திட்டங்களே ஆகும். நிலமும் நீரும் உழவரின் இரு கண்கள். இவ்விரு கண்களைப் பாதுகாப்பதன் மூலம், நாட்டின் வளம் காத்து உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்றிட உழவர் உயர்ந்திட வழி வகுக்கிறது வேளாண்மைப் பொறியியல் துறை.

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927

எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள், வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தை அணுகவும்.




தராசு
16-1-1993 ரூ.1

பூவையர் மகிழும்
புதுமைகள் படைத்திடும்
அணியும் அழகே ஓர் அழகு

கதர் கிராப்ட்

கிடைக்கும்



DIPR/2687

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
குறளகம், சென்னை - 600 108


# இந்த இதழில்...


| | |
|---|---|
| பெருகூர் ஆகிறது பருகூர் | ... 2 |
| தமிழர் திருநாள் —பேரறிஞர் அண்ணா | ... 7 |
| பொங்கல் விழா —டாக்டர் எம்.ஜி.ஆர். | ... 9 |
| திருக்குறள் உயர்நெறி காட்டவந்த ஒரு பொது அறநூல் —மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் | ... 11 |
| தைத்திங்களே தாய்த் திங்கள்! —டாக்டர் ஔவை நடராசன் | ... 12 |
| தருமபுரி மாவட்டம் - மகளிர் மேம்பாடு | ... 13 |
| காலம் வரும் - காத்திருப்போம்! —கவியரசு. நா. காமராசன் | ... 16 |
| தகடூர் | ... 17 |
| மாணவர்கள் தென்னை வளர்ப்பு | ... 23 |
| தமிழ் நலங்காத்த தகடூர் —ச. தியாகசீலன் | ... 25 |
| தருமபுரி மாவட்ட காவல்துறை | ... 27 |
| பருகூர் பயனாளிகள் | ... 29 |
| தொட்டில் (சிறுகதை) —தகடூரான் | ... 32 |
| தளி ஒன்றியத்தில் ஒரு முன்னோடித் திட்டம் | ... 37 |
| தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம் | ... 43 |
| கிராமப்புறத் தொழில்களுக்குக் கைகொடுக்கும் வங்கி! | ... 45 |
| தொகுதி மக்களுக்கு முதல்வர் உதவிகள் | ... 49 |
| பையூரில் பசுமைப் புரட்சிக்கு ஓர் ஆராய்ச்சி நிலையம் | ... 51 |
| காலத்தை வென்ற காவிய நாயகன் —கவிஞர் இளந்தேவன் | ... 57 |
| பொங்கல் பொங்குக! (கவிதை) —பி.வி. கிரி | ... 64 |





# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2024

தைத் திங்கள் - 3

மலர்:23 இதழ்:14

16-1-1993

**தருமபுரி மாவட்டச் சிறப்பிதழ்**





அனைவருக்கும்
'தமிழரசு' இனிய
பொங்கல் வாழ்த்துக்களைத்
தெரிவித்து
மகிழ்கிறது!
வாசகர்களுக்கு...
முகவர்களுக்கு...
விளம்பரதாரர்களுக்கு...
எழுத்தோவியங்களை
அளித்திடும்
அறிஞர் பெருமக்களுக்கு...
எங்களுக்கு என்றும்
துணையிருக்கும்
நண்பர்களுக்கு...
மீண்டும்
வாழ்த்துக்களையும்
வணக்கங்களையும்
தெரிவித்துக் கொள்கிறோம்.

—ஆசிரியர்

பணியாளர் மையங்களும், 5 கால் நடை மருந்தகங்களும், 4 கால்நடைத் துணை நிலையங்களும் இத்தொகுதி யில் அமைந்திருப்பதால் 'நோயற்ற வாழ்வே தொகுதி மக்களின் குறை வற்ற செல்வமாக இருக்கிறது.

நீரின்றி உலகு அமையா தல்லவா, இப்பகுதியில் மட்டும் 118 மேனிலை நீர்த் தேக்கத் தொட் டிகளும், 731 கைப்பம்புகளும், 5 தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி களும் 365 இறைவைக் கிணறுகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

மண் சாலைகள், கப்பிச் சாலைகள், தார்ச் சாலைகள் என - இந்த ஒன்றியத்தில் மொத்தம் 188 கி.மீ. நீளத்திற்கு ஊராட்சி ஒன்றியச் சாலைகள் நீண்டு நெளிந்து நெடும் பயணம் செல்கின்றன.

**படிப்பும் எழுத்தும்**

'கல்வியில்லாத பெண்கள் களர்நிலம் என்பதை உணர்ந்து கொண்ட பெண்கள் அதிகமிருப்ப தால் - இந்த ஒன்றியத்திலே மட்டும் 30 மகளிர் மன்றங்கள் அமைக்கப் பட்டிருக்கின்றன. நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், மேனிலைப் பள்ளிகள் என 150 பள்ளிகளும் - சமூகக் கல்வி நிலை யங்கள் 36-ம் இருந்தபோதிலும் இத் தொகுதி மக்களில் 40 சதவிகித மக்களே எழுதப்படிக்கத் தெரிந்தவர் களாக இருக்கின்றனர்.

பருகூர் ஊராட்சிஊராட்சி ஒன்றி யத்தைப் பொருத்தவரை அளவில் சிறியதே எனினும் - அத்தொகுதிச் சட்டமன்ற உறுப்பினரான புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் மாண்புமிகு தமிழக முதல்வர் ஆகிவிட்ட காரணத்தால் அதுபெற்ற கீர்த்தி பெரியதாகி விட்டது.

பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள், அஞ்சல் நிலையங்கள், தொலைபேசி நிலையங்கள், வங் கிகள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், காவல் நிலையங்கள், நூலகங்கள், அரிசி ஆலைகள், திரைப்பட அரங்குகள், மதிய உணவு மையங்கள், சத்துணவு மையங்கள், ஆதிதிராவிடர் குடி யிருப்புகள் என எல்லாம் உள்ள தன்னிறைவுத் தொகுதியாக இத் தொகுதி விளங்குகிறது.

இங்கு மட்டும் 43 நியாய விலைக் கடைகள் இருக்கின்றன; குடும்ப அட்டைதாரர்களோ 26,721 பேர்.

மாங்கனி, திராட்சை உற்பத்தி இங்கே அதிகம். விவசாய விதை மையம், விவசாய எண்ணெய் வித்துக்கள் மையம், வேளாண்மைச் செய்தி நிலையம், வேளாண்மைக் கிடங்குகள் ஆகிய எல்லாம் இங்குண்டு. இங்கே, வேர்க்கடலை விளைச்சலும் அதிகம்.

இத் தொகுதியிலே இருக்கின்ற 230 மொத்த மதிய உணவு மையங் களின் மூலம் - 5,675 சிறுவர் சிறுமியர் பயனடைந்து வருகிறார்கள்.

**அலுவலகம்**

தம்முடைய தொகுதியே ஆயி னும், வேலைமிகுதி காரணமாக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அடிக்கடி சென்றுவருவ தென்பது இயலாதல்லவா? இதனா லேயே ஆங்கோர் அலு வலகம் கூட்டியிருக்கிறார். அந்த அலுவலகப் பொறுப்பாளராக உள்ள திரு. ஏ. கோவிந்தராசன் மூலம் பருகூர் தொகுதியின் அவ்வப் போதைய நிலைமையை - மக்களின் குறைபாடுகளை அவ்வப்போது அறிந்துகொள்கிறார் மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

அரசின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் மட்டுமன்றித் தன் சொந்தப் பணத் திலிருந்தும் தொகுதி மக்களுக்கான நலத்திட்டங்களை மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிறைவேற்ற இந்த அலுவலகமே பெரிதும் உறுதுணை புரிந்து வருகிறது.






**மேலும் பல திட்டங்கள்**

"மேலும் பல திட்டங்கள் பருகூர் தொகுதியிலே நிறைவேற்றப்பட விருக்கின்றன" என்று கூறிய பருகூர் ஊராட்சி ஒன்றியத்தின் திட்ட வளர்ச்சி அலுவலர் "எல்லா வகை யிலும் இந்த ஒன்றியம் தன்னிறைவு பெற்ற ஒன்றாகவே ஆகிக்கொண்டு வருகிறது" எனப் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

"இன்னும் நிறைவேற்றப்பட வேண்டிய திட்டங்கள் என்றால் 1992- 93-லா ? அவற்றையும்தான் சொல்லுங்களேன்?" என்று நாம் கேட்டோம். போட்டி போட்டுக் கொண்டு பதில் சொல்ல ஆரம்பித் தார்கள் அவர்கள்.

அந்தப் பதில்களின் தொகுப்பு இதுதான்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரி யத்தின் மூலம், பருகூர் சிறப்புக் கோட்டத்தில் 500 இலட்சம் ரூபாய் செலவில் கூட்டுக் குடிநீர்த் திட்ட மொன்று நிறைவேற்றப்படவிருக் கிறது.

மின்வாரியத்தின் சார்பில் இங்கே உதவி செயற் பொறியாளர் அலுவலகக் கட்டடம் ஒன்று - 3.31 இலட்சம் ரூபாய் செலவில் உரு வாகப்போகிறது.

600 இலட்சம் ரூபாய் மதிப் பீட்டில், அன்னை சத்தியா சாலைப் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் பல்தொழில் பயிலகம் ஒன்று துளிர்க்கிறது.

தமிழ்நாடு பாடநூல் நிறுவனத் தால் 40 இலட்சம் ரூபாய் செலவில் பாடநூல் கிடங்குகள் இரண்டும், 15 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு ஊழியர் குடியிருப்பும் உருவாக விருக்கிறது.



துவளாத தொழில்வளர்ச்சி காணும் திட்டத்தின் கீழ் 900 இலட்சம் ரூபாய் திட்ட மதிப்பீட்டில் பர்கூர் தொகுதியில் உள்ள செலப் பட்டி, பாரண்டபள்ளி ஆகிய கிராமங்களில் தொழில் வளாகம் ஒன்று தலைதூக்கி வருகிறது. தொழிற்பேட்டை ஒன்றும் ஏற்பட விருக்கிறது.

75 இலட்சம் ரூபாயில் அரசினர் மகளிர் தொழிற்கல்வி நிலைய மொன்று கூட்டுறவுத் துறை மூலம் உருவாகிக் கொண்டிருக்கிறது.

அரசு பொறியியல் கல்லூரி, ரூபாய் 900 இலட்சம் செலவில் ஏற்படுத்தப்படுகிறது.

22 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மகளிர் மேம்பாடு கருதி தையல், உடை தயாரிப்பு போன்றவையும் உள்ளடக்கியதாக அன்னை சந்தியா கூட்டுறவு நூற்பாலை ஒன்று அமைக் கப்பட முயற்சிகள் மேற்கொள்ளப்



• ஒரு மனிதனுடைய சொந்தத்துக்காக என்று ஒன்று இருக்குமானால், அது, அவன் இறந்தபின் அவனை மற்றவர்கள் மறக்காமல் புகழ்ந்து பேசுவதுதான்.

—தந்தை பெரியார்

## நலத்திட்டங்கள் பல

# பெருகூர் ஆகிறது பருகூர்

மாவட்டச் சிறப்பிதழ் என்கிற போது, அம் மாவட்டத்தில் பரவலாக அரசு மூலம் நிறைவேற்றப்பட்டுள்ள - நிறைவேற்றப் படவிருக்கிற ஆக்கப் பணிகள் பற்றி விவரிப்பதுதான் முறை. ஆனால், அப்படிச் செய்ய இந்த ஒரி தழ்ப் பக்கங்கள் மட்டும் போதாது என்பதால், குறிப்பிட்ட மாவட்டத்தின் ஏதாவதொரு முக்கிய சட்டமன்றத் தொகுதியை மட்டும் எடுத்துக்கொண்டு, அந்த வகையில் விவரிக்கலாம் என்று தீர்மானிக்கப்பட்டது. அம் முறையில் - பருகூர் சட்டமன்றத் தொகுதியில் அரசு ஆற்றியுள்ள, ஆற்றவிருக்கிற, முக்கியப் பணிகள் இந்தப் பக்கத்தில் சுருக்கித் தரப்படுகின்றன.

பருகூருக்குச் சென்ற நம்மை ஊராட்சி ஒன்றியத்தின் வட்டார வளர்ச்சி அலுவலர்களான திரு. கே. ரங்கசாமி, திரு. எம். நஞ்சுண்டன் ஆகியோரும், எரிசக்தி உதவித் திட்ட அலுவலர் திரு. எம். வேணுகோபால் முதலானவர்களும் மகிழ்ந்து வரவேற்றார்கள். நமது வருகையின் நோக்கத்தைப் புரிந்து கொண்ட அவர்கள் அலுவலக நேரத்திற்கு மேலாகிவிட்ட போதிலும், மற்றவர்களையும் அழைத்து வரச் செய்து அத்தொகுதி பற்றி நமக்குத் தேவையான விவரங்களை மகிழ்வுடன் மாறிமாறித் தெரிவித்தார்கள்.

"பருகூர் தொகுதி என்பது பெயராகிவிட்டது; இதில், பருகூர் ஊராட்சி ஒன்றியம் மட்டுமல்ல; மத்தூர் ஊராட்சி ஒன்றியமும் அடங்கியிருக்கிறது சார்..." என்ற பீடிகையோடு அவர்களில் ஒருவர் பேசத் தொடங்கினார்.

தொடர்ந்து அவர்கள் அளித்த முக்கிய விவரங்கள் வருமாறு:

தர்மபுரி மாவட்டத்தில் உள்ள கிருஷ்ணகிரி வட்டத்ில்தான் பருகூர் ஊராட்சி ஒன்றியம் அமைந்துள்ளது. இவ்வொன்றியம் மூன்று வருவாய் ஃபிர்காக்களையும், 36 ஊராட்சிகளையும் ஒரு பேரூராட்சியை யும் உள்ளடங்கியது ஆகும்.

பருகூர் ஒன்றியத்தின் மொத்தப் பரப்பளவு 435.12 ச.கி.மீட்டர். 1981-ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி இவ்வொன்றியத்தின் மக்கள் தொகை 1,31,725 ஆகும். இதில் 16,562 ஆதிதிராவிடர் மக்களும் 2,036 பழங்குடியினரும் அடங்குவார்கள்.








**நீரில்லா நிலையிருந்தும்...**

இவ்வொன்றியம் மலைப்பாங்கான பகுதி; இவ்வட்டாரத்தில் பாசன வசதியுடன் கூடிய நிலப் பரப்பு மிகவும் குறைவு; இங்கு மா, தென்னை போன்ற தோட்டப் பயிர்கள் மிகுதியாக விளைகின்றன. பெரும்பாலான மக்கள் மானாவாரிச் சாகுபடியை நம்பியே வாழ்கின்றனர். இந்த ஒன்றியத்தில், பருகூர் ஆறு என்ற காட்டாறு ஓடுகின்றது. இந்த ஆற்றின் மூலம் நிரந்தரப் பாசன வசதி ஏதும் இல்லை. இருப்பினும் இதுவரை இங்கே குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டதில்லை.

இவ்வொன்றியத்தில் அமைந்துள்ள போச்சம்பள்ளி வாரச்சந்தை தர்மபுரி மாவட்டத்திலேயே குறிப்பிடத்தக்க அளவிற்கு மிகப்பெரிய சந்தையாகும். இச்சந்தை ஓர் ஊராட்சி ஒன்றியச் சந்தையாகும். இவ்வொன்றியத்திலுள்ள சந்தூர் கிராமம் மாங்காய் ஒட்டுச் செடிகளுக்குப் பெயர் பெற்றது.

இவ்வொன்றியத்தில் உள்ள போச்சம்பள்ளியில்தான் முதன் முதலாகத் தமிழ்நாடு அரசு நிறுவனமான 'சனோலா' சூரிய காந்தி எண்ணெய் ஆலை அமைக்கப் பட்டது. மேலும், தற்போது 20 கோடி முதலீட்டில் தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் மூலம் கல்மெருகிடும் தொழிற்சாலையும், ரூ.28 கோடி மூலதனத்தில் கூட்டுறவு நூற்பாலை ஒன்றும் உருவாகி வருகின்றன.

**சிறுசிறு தொழிற்சாலைகள்**

தேங்காய்ப்பட்டையிலிருந்து நார் எடுக்கும் தொழில் இவ்வொன்றிய மக்களின் முக்கியத் தொழிலாக நடந்து வருகின்றது. மொத்தம் 7 நார் தொழிற்சாலைகள் இங்கே உள்ளன. 'சேம்பர் பிரிக்ஸ்' தயார் செய்யும் தொழிற்சாலைகள் மூன்று உள்ளன. கந்திருப்பம் கிராமத்தில், 'கோக்காக்' என்னும் நிறுவனம் 40 இலட்சம் முதலீட்டில் காலணிகள் தயாரிக்கும் தொழிற்சாலை நடத்தி வருகிறது.

போச்சம்பள்ளியில் 'பாக்கியம் ரேக்ஸ்' என்ற தீக்குச்சி தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று ரூ.10 இலட்சம் முதலீட்டில் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. தூலாமலை கிராமத்தில ரூ.20 இலட்சம் முதலீட்டில் கம்பளி ஆடை தயாரிக்கும் தொழிற்சாலை நடைபெற்று வருகின்றது.

இவ்வொன்றியத்திலுள்ள ஒரே பேரூராட்சி பருகூர் தான். பருகூர் ஜவுளி விற்பனைக்குத் தர்மபுரி மாவட்டத்திலேயே மிகவும் புகழ் பெற்ற மையமாகும். பருகூர் டெக்ஸ்டைல்ஸ் மூலம் தமிழகத்தின் எல்லாப் பகுதிகளுக்கும் மட்டுமல்ல; வெளி மாநிலங்களுக்கும் - வெளி நாடுகளுக்கும்கூட, துணிகளும் உடைகளும் அனுப்பப்படுகின்றன.

இவ்வொன்றியத்திலுள்ள அஞ்சூர், ஐகொந்தம்கொத்தப்பள்ளி, மஜித்கொல்லஹள்ளி, குள்ளம்பட்டி ஆகிய ஊராட்சிகளில் தமிழ்நாடு கனிம நிறுவனம் மற்றும் தனியார் நிறுவனங்கள் மூலம் கிரானைட் கற்கள் வெட்டி எடுக்கப்படுகின்றன; இதில் சிவப்புக் கிரானைட் கற்கள் நல்ல கிராக்கியோடு விலை போகின்றன.

பருகூர் ஒன்றியத்திலுள்ள சிறு காடுகள் சீதா மகசூலுக்கு மிகவும் புகழ் பெற்றதாக இருக்கிறது; இங்கிருந்து சீதாப்பழங்கள் பம்பாய் முதலான வடமாநில நகரங்களுக்குக் கூட மிகுதியாக அனுப்பப்படுவதுண்டு!

இரண்டாம் நிலை ஊராட்சி ஒன்றியமான பருகூர் 37 வருவாய்க் கிராமங்களும், 274 குக் கிராமங்களும் இருக்கின்றன. 185 கிராமங்களில் நகரப் பேருந்து போக்குவரத்து உள்ளது.

3 ஊரக மருத்துவமனைகளும், ஆரம்பச் சுகாதார நிலையங்களும், 30 பல நோக்குச் சுகாதாரப்

## நன்றிக் காணிக்கை!

"தமிழகத்தில் உள்ள அனைத்துத் தொகுதிகளிலும்-மிகப்பெரிய இமாலய வெற்றியை வாக்காளப் பெருமக்கள் எங்கள்மீது நம்பிக்கை வைத்து, எங்கள் அரசுக்கு வழங்கியுள்ள நிலையில், அனைத்துத் தொகுதிகளையுமே எனது சொந்தத் தொகுதிகளாகக் கருதி நான் பணியாற்றுவதுதான், இன்றைய காலகட்டத்தில் என்மீது அளவு கடந்த நம்பிக்கை வைத்துள்ள தமிழகத்தின் அனைத்துத் தரப்பு மக்களுக்கும், அனைத்துத் தொகுதி மக்களுக்கும் நான் செலுத்தும் நன்றிக் காணிக்கையாகும்"

—மாண்புமிகு முதல்வர்
(பருகூர் 21.8.1991-இல் ஆற்றிய உரையிலிருந்து)



பட்டுள்ளன. இதற்காக 13 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டிருக்கிறது. 22 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

நகர வளர்ச்சித் துறையினரால் மாதிரி கிராமம் ஒன்றும் - திறமை மிக்க கிராமப்புற மாணவ மாணவிகளுக்காக, கல்வித்துறையால் உறைவிட மாதிரிப் பள்ளியொன்றும் சுவின்பெறவிருக்கிறது. கிருஷ்ண கிரியில், மகளிர் கல்லூரி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் மூலம் கல் மெருகூட்டும் தொழிற்சாலையொன்று 20 இலட்சம் ரூபாய் திட்ட மதிப்பீட்டில் பருகூர் தொகுதியில் செயல்படவிருக்கிறது; இதற்கான கட்டுமானப் பணிகள் இம்மாத இறுதிக்குள் முடிவடையும் தருவாயில் இருக்கின்றன. கவர்ச்சி மிக்க கறுப்பு, கிரே கிரனைட் கற்கள் இங்கே கண்ணாடி போல் ஆக்கப்படும்; இத் தொழிற்சாலை மூலம் ஆயிரக்கணக்கானோர் இப்பகுதியில் வேலைவாய்ப்புப் பெறுவார்கள்.

39 எக்டேர் நிலத்தில், சமூக நலக் காடுகள் திட்டம் செயலாக்கப்பட்டு வருகிறது; இதற்காகக் கருவேல், புங்கை, முருங்கை, தேக்கு, சுத்திவேல், சூபாபுல் கன்றுகள் ஏராளமாக வழங்கப்பட்டிருக்கின்றன.

உலோக அடுப்புகள் 400 பேருக்கும், சூரிய அடுப்புகள் 10 பேருக்கும் வழங்கப்படவிருக்கின்றன. 1992-93-இல், சாண எரி வாயு அடுப்புகள் ஆயிரம் பேருக்குத் தருவது குறியீடு எனினும், இதற்குள்ளாகவே 300 பேருக்கு மேல் அளிக்கப்பட்டுவிட்டது.

ஜகதேவி காலனி என்ற கிராமத்தில் காற்றாலை அமைக்க ரூ.52,500 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

**எளியோர்க்கு நிதியுதவிகள்**

முதியோர் உதவித் தொகை, கடந்த ஆண்டில், 844 பேருக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திட்டத்தின் மூலம் திருமணக் கடனுதவி 9 பேருக்கு 45 ஆயிரம் ரூபாயும் - முத்துலட்சுமிரெட்டி மகப்பேறு திட்டத்தின் மூலம் 400 பேருக்கு 1.2 இலட்சம் ரூபாயும் சென்ற ஆண்டில் மட்டும் வழங்கப்பட்டிருக்கிறது.



இவ்வாறெல்லாம் - திட்டங்கள் பல பெருகி, மெருகேறும் தொகுதி ஆகி வருகிறது பருகூர் சட்டமன்றத் தொகுதி. குறையேதுமின்றி, மன நிறைவோடு வாழ்ந்து வருகிறார்கள் இப்பகுதி மக்கள்.

[பருகூர் தொகுதியின் மற்றொரு ஊராட்சி ஒன்றியமான மத்தூர் பற்றிய வளர்ச்சிப் பணிகளின் தொகுப்புக் கட்டுரை, அடுத்த இதழில்.]

- ராஜு.

## உங்கள் பிரதிநிதி!

"இந்தியத் துணைக்கண்டத்தில் - திறமைக்கும், நேர்மைக்கும், வளர்ச்சிக்கும், உயர்வுக்கும், லஞ்ச ஊழலற்ற தன்மைக்கும் எடுத்துக்காட்டான அரசு தமிழக அரசு ஒன்றே எனும் பெயரெடுக்கும் வகையில் எங்கள் பணி அமையும். தமிழகம் தலைநிமிர்ந்து, தன் தனித்தன்மையோடும், தனிச் சிறப்போடும் திகழ உங்கள் பிரதிநிதியாக என்னை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறேன்".

-மாண்புமிகு முதல்வர்
(பர்கூரில் 21.8.1991-இல் ஆற்றிய உரையிலிருந்து)



# தமிழர் திருநாள்!

## பேரறிஞர் அண்ணா

இஃது பொங்கற் புதுநாள்! தமிழர் திருநாள்; அறுவடை விழா! உழைப்பின் பெருமையை உணர்ந்து நடத்தப்படும் நன்றி அறிவிப்பு விழா! என்ற இந்த எண்ணமே மேலோங்கி நிற்கிறது; பெருமிதம் தருகிறது; மகிழ்ச்சி வழிகிறது; அகமும் முகமும் மலருகிறது; வாழ்வின் பொலிவு துலங்கித் தெரிகிறது.

இந்த உலகத்தின் எழில் யாவும் பொய்யல்ல, மெய்! மெய்! எனும் உணர்வும், அந்த எழிலினை





யும் பயன்தனையும் நுகர்ந்திடவும், வளர்த்திடவும் முனைதல் மாந்தர் கடன் என்ற மெய்யறிவும், அந்தக் கடமையினைச் செம்மையாய்ச் செய்து முடிக்க ஆற்றல் மிகவேண்டும்-அவ்வாற்றல், கூட்டு முயற்சியினால் மிகுந்த சிறப்பெய்தும் என்றதோர் நல்லறிவும் இருள் நீங்கி ஒளி காண்போர் இதயம் மலராகி இன்புற்றிருப்பதுபோல், நல்வாழ்வு தனைக் குலைக்கும் நச்சரவு போன்ற நினைப்புகளும், நிலைமைகளும், நிகண்டுகளும், அமைப்புகளும், நீடித்திருக்கவிடல் நன்றல்ல, நலம் மாய்க்கும் என்பதறிந்து, அறிவுக் கதிரினையே எங்கெங்கும் பரவச் செய்து எல்லோரும் இன்புற்று வாழ்ந்திடவே இயற்கை நீதி எனக்கொண்டு பணிபுரியும் ஆர்வமும் பெற்றிடப் பயன்படும் இந்தப் பொங்கற் புதுநாள்.

இயற்கைச் செல்வங்கள் என்னென்ன இங்குண்டு; அவை தம்மைப் புத்துலக நுண்ணறிவால் மேலும் பலன் அளிக்கும் விதமாக, திருத்தி அமைத்திட என்னென்ன முறை உண்டு என்பதெல்லாம் எண்ணி எண்ணி மகிழ்ந்திடலாம். இந்நாள் நமக்களிக்கும் நற்கருத்தைப் புரிந்து கொண்டால், புனலாடிப் பொன்னார் இழை அணிந்து பொட்டிட்டுப் பூமுடித்து, பாற்பொங்கல் சமைத்து அதில் பாகுகலந்து, பாளைச் சிரிப்புடனே பரிவுமிக்காள் தந்திட, சுவைத்திட இதழிருக்க வேறு தரும் விந்தைதான் எதுக்கோ என்று கேட்டிட இயலாமல், குறும்புப் பார்வையினால் அவன் கூற, பெற்றோர் அதுகண்டு பேருவகை தான் கொள்ள, இல்லமுள்ளார் எல்லோரும் இன்புற்று இருந்திடுதல் பொங்கற் புதுநாளின் பாங்கு; மறுக்கவில்லை; ஆனால் முழுப் பாங்கு என்றதனை மொழிந்திட மாட்டேன் நான்; தித்திக்கும் சுவையுடனே, சிந்திக்கவும் வைக்கும் எண்ணங்கள் பற்பலவும் பொங்கி வருவதுதான் இந்நாளின் தனிச்சிறப்பு. முழுப்பாங்கு. மலரின் எழில் கண்டு மகிழ்வது மட்டும் போதாது, மணம் பெறவேண்டுமன்றோ!

அதுபோன்றே பொங்கற் புதுநாளன்று மனைதொறும் மனைதொறும் காணப்படும் கவர்ச்சிமிகு கோலம்-புறத்தோற்றம்-கண்ணுக்கு விருந்தாகிறது. ஆனால் அதுமட்டும் போதாது; கருத்துக்கும் விருந்து வேண்டுமன்றோ! உளது; உணர்பவர்களுக்கு உணர்பவர்களே பொங்கற் புதுநாளின் முழுப்பயனையும் பெற்றவராவர். உடன் பிறந்தோரே; நீவிர், அந்தன்னோக்கத்துடன் இத்திருநாளின் தன்மையினை உணர்ந்து பயன்பெற வேண்டுமெனப் பெரிதும் விழைகின்றேன்.

(1968 உலகத் தமிழ் மாநாடு விழா மலரிலிருந்து...)





# பொங்கல் விழா

## டாக்டர் எம்.ஜி.ஆர்





தமிழக மக்கள் கொண்டாடும் விழாக்களில் பொங்கல் திருநாள் தனிச் சிறப்புமிக்கதாகும். உழைப்பே உயர்வு தரும்என்பதையும், உழைப்பின் பயனை அனைவரும் பகிர்ந்துண்ணுவதே தமிழகத்தின் பண்பாடு என்பதையும் உலகறியக் கூறிடும் விழாவே பொங்கல் விழா.

உழவரும் பிற தொழில்களில் ஈடுபட்டுள்ள உழைப்பாளிகளும் தாங்கள் விளைவித்த செல்வங்களைச் சமுதாயத்துக்கு உரிமையாக்கிடும் சமத்துவ விழா இது. இயற்கை அளிக்கும் வளம் அனைவருக்கும் பொது என்பதை மையக் கருத்தாகக் கொண்டுள்ள திருநாள், பொங்கல் திருநாள்.

பொங்கல் திருநாள் போதிக்கும் நற்கருத்துக்கள் நமது வாழ்க்கைக்கு வழிகாட்டும் தத்துவங்கள் ஆகும்.

பல்வேறு ஆற்றல் பெற்றவர்கள் தங்களுடைய திறமைகளையும் உழைப்பையும் பொது நன்மைக்காக் ஒப்படைக்கின்ற ஒரு கூட்டு முயற்சியே இன்றைய தேவை என்பதே பொங்கல் திருவிழாவின் அடிப்படை என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

நாட்டு முன்னேற்றத்துக்கான பணிகளிலும், நம்மை விட நலிந்துள்ள மக்களின் துயர்களைப் போக்குவதிலும் கூட்டு முயற்சியோடு நாம் இன்னும் நம்மை முழு மூச்சுடன் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். இவ்வகையில் அரசின் திட்டங்களை நிறைவேற்று கிற பொறுப்புக்களை ஏற்றுள்ளவர்களின் கடமை மகத்தானதாகும்.

''உழைப்பே உயர்வுதரும்''
''உழைப்போம், உயர்வோம்''
''உழைப்போரே உயர்ந்தவர்''
''உழைப்பவராலே உலகம் உயர்ந்திடும்''

என்கின்ற சீரிய இலட்சிய முழக்கங்களை நெஞ்சில் பதிய வைத்திடும் தமிழர் திருநாள் பொங்கல்!



# தருமபுரி விற்பனைக்குழு, தருமபுரி-636 702.

**ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் பயன்கள்:**

**விவசாயிகட்கு:**

1. சரியான எடை
2. உடனடிப் பணம்
3. போட்டி விலை
4. எவ்விதப் பிடித்தமும் இல்லை
5. மறைமுக ஏலம்
6. இலவசச் சேவை
7. இலவசத் தரம் பிரிப்பு

**வியாபாரிகட்கு:**

1. ஒரே இடக்கொள்முதல்
2. தரமான தேர்ந்தெடுப்பு
3. குறைந்த மேற்செலவு
4. மறைமுக ஏலம்
5. இலவசத்தரம் பிரிப்பு
6. இலவசச் சேவை
7. சரியான எடை

**பொருளீட்டுக் கடன்:**

விவசாயிகளின் விளைபொருளுக்கு உரிய விலை கிடைக்காத பட்சத்தில் ஓசூர், போச்சம்பள்ளி, ஊத்தங்கரை, ஊரகக் கிட்டங்கிகளில் விளைபொருட்களை இருப்பு வைத்து 75 சதவிகிதம் கடன்பெற வசதி.

1. கடனுக்கு முதல் மாதம் வட்டி கிடையாது.
2. 2-ஆம் மாதம் முதல் 6-ஆம் மாதம் வரை 12 சதவிகிதம் தனி வட்டி வசூலிக்கப்படுகிறது.
3. வேறு எவ்விதக் கட்டணமும் கிடையாது.
4. அதிகபட்சம் ரூ.10,000/- வரை கடன் வழங்கப்படுகிறது.

**இயங்கும் ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள்:**

1. தருமபுரி
2. காவேரிப்பட்டினம்
3. கிருஷ்ணகிரி
4. ஓசூர்
5. கெலமங்கலம்
6. தேன்கனிக்கோட்டை
7. இராயக்கோட்டை
8. பர்கூர்
9. பாலக்கோடு
10. பாப்பாரப்பட்டி
11. பென்னாகரம்
12. கம்பைநல்லூர்
13. அரூர்
14. பாப்பிரெட்டிப்பட்டி
15. ஊத்தங்கரை
16. போச்சம்பள்ளி

ந. நடராஜன், பி.எஸ்சி.,(வே)
இணை வேளாண்மை இயக்குநர்/
தனி அலுவலர்

கா. கணேசன், எம்.எஸ்சி.,(வே)
உதவி வேளாண்மை இயக்குநர்/
செயலாளர்

# திருக்குறள், உயர்நெறி காட்ட வந்த ஒரு பொது அறநூல்

மாண்புமிகு நிதியமைச்சர்
டாக்டர் நாவலர்



திருக்குறள், தண்டமிழ் நாட்டில் தலைசிறந்து விளங்கிய, நன்னெறிச் சான்றோர்களில், அறிவிலும், ஆற்றலிலும் தகுதியிலும், திறமையிலும் நனிசிறந்து விளங்கிய சீரியோரான திருவள்ளுவப் பெருந்தகையாரால், இயற்றப்பட்டது. அது உலகம் உய்யும் பொருட்டு, உயர்நெறி காட்ட வந்த ஒரு பெரும் பொது அறநூலாகும்.

திருக்குறள், ஒரு குறிப்பிட்ட நாட்டினர்க்கோ, சமயத்தினர்க்கோ, இனத்தினர்க்கோ, வகுப்பினர்க்கோ, குழுவினர்க்கோ, நிறத்தினர்க்கோ, மொழியினர்க்கோ, இயக்கத்தினர்க்கோ உரிமையுடைய ஒரு நூல் அல்ல. அது, உலகம் தழுவிய மக்கள் எல்லோராலும் பொதுவாக ஏற்றுக் கொள்ளத்தக்கதாய், போற்றுவதற்குரியதாய், பின்பற்றத் தக்கதாய் அமைந்த பெற்றியினையுடையதாகும்.

திருக்குறள் உலக மக்கள் அனைவர்க்கும் பொதுப்படையாக அமைந்த 'பொதுநூல்' என்று பெயர் பெற்றது. உலகோர் போற்றிப் புகழுவதற்குரிய 'பொதுமறை நூல்' என்னும் பெருமையுடையது. மக்களின் வாழ்வியலைப் பற்றிக் கூறவந்த 'வாழ்வியல் நூல்' என்னும் சிறப்புடையது. எல்லா மக்களுக்கும் வாழ்க்கை வழிகாட்டியாகத் திகழக் கூடிய 'வாழ்க்கை வழிகாட்டி நூல்' என்னும் பெருமை பெற்றது. மக்கள் அனைவர்க்கும் அறநெறி கூற வந்த 'அறநெறிநூல்' என்னும் புகழ் பெற்றது. எல்லார்க்கும் அன்பு நெறியை அறிவுறுத்த வந்த 'அன்பு நெறிநூல்' என்னும் சிறப்புப் பெற்றது. மக்கள் பலர்க்கும் நீதி நெறிமுறைகளைத் தெளிவுபடுத்த வந்த 'நீதிநூல்' என்னும் பெருமைக்குரியது. உலகோர்க்குப் பண்பாடுகளைப் புகட்டவந்த 'பண்பாட்டு நூல்' என்னும் பெயர்பெற்றது. அனைவர்க்கும் பொருளியல் விளக்கம் தரவந்த 'பொருளியல் நெறி நூல்' என்னும் சிறப்புக்குரியது. நாட்டு மக்கள் அனைவர்க்கும் அரசியல் நெறிமுறைகளை அறிவுறுத்தவந்த 'அரசியல் நெறிநூல்' என்னும் பெருமை வாய்ந்தது. உலகோர்க்கு ஒழுக்க மேம்பாடுகளைக் கற்பிக்க வந்த 'ஒழுக்க நூல்' என்னும் புகழ் வாய்ந்தது. மக்களுக்கு இன்பவியலைப் பற்றிக் கூறவந்த 'இன்பவியல் நெறிநூல்' என்னும் சிறப்புப் பெற்றது. அறிஞர் பெருமக்களால், என்றும் அழியாச் சிறந்த இலக்கியமாகப் புகழுவதற்குரிய 'பேரிலக்கிய நூல்' என்னும் பெருமை வாய்ந்தது.

தமிழகம் வள்ளுவப் பெருந்தகையாரைப் பெற்றெடுத்து, உலகத்திற்கே தந்தது என்றும், அந்தச் செயலுக்குக் கைமாறாக, வான் புகழைத் தமிழகம் உலகத்திடமிருந்து பெற்றுக் கொண்டது என்றும், புதுமைக் கவிஞர் பாரதியார் பெரிதும் வியந்து, 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து, வான் புகழ் கொண்ட தமிழ்நாடு' என்று பாடியுள்ளார்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள், 'தெள்ளுதமிழ் நடை சின்னஞ்சிறிய இரண்டடிகள், அள்ளு தொறுஞ்சுவை உள்ளுந் தொறும் உணர்வாகும் வண்ணம், கொள்ளும் அறம்- பொருள்- இன்பம் அனைத்தும் கொடுத்த திருவள்ளுவனைப் பெற்ற தாய்பெற்ற தேபுகழ் வையகமே!' என்று புகழ்ந்துரைத்துள்ளார்.



சங்ககாலத் தமிழ் இலக்கிய நூல்கள் எல்லாம், ஆசிரியப் பாக்களாலும், வஞ்சிப் பாக்களாலும், கலிப்பாக்களாலும், பரிபாடலாலும், நேரிசை இன்னிசை பஃறொடை வெண்பாக்களாலும் விரிந்தும், பரந்தும், நெடியனவாகவும் நீண்டும் திகழ்வனவாகும். ஆனால், திருக்குறளோ மிகச் சுருங்கிய அளவில், ஏழு சீர்களைக் கொண்டதாக, ஒன்றேமுக்கால் அடியில் விளங்கும் குறட்பாக்களையே கொண்டதாகும். படிப்போர் உள்ளத்தில் ஒவ்வொரு குறளின் சொல்லும், பொருளும், அவற்றின் சுவையும், பயனும் எளிதாக, என்றென்றும் படிய வேண்டும் என்ற சீரிய குறிக்கோளுடன்தான், வள்ளுவப் பெருந்தகையார், திருக்குறளை இயற்றித் தந்துள்ளார்.

'திரு' என்ற சொல் தமிழில் பத்தொன்பது வகையான பொருள்களை உணர்த்தும் சிறந்த ஒரு சொல்லாகும் என்பர். பத்தொன்பது வகையான சிறந்த பண்புகளையும் உள்ளடக்கிய அடைமொழியைப், பிற்காலத்தவர் குறளுக்கு இட்டிருப்பதற்குக் காரணமே, அதன் தன்னேரில்லாத் தனிச் சிறப்புக் கருதியேயாகும். திருக்குறளுக்கு முதலில் 'முப்பால்' என்ற பெயரும், பின்னரே 'அறம்', 'திருக்குறள்', 'பொதுமறை', 'பொய்யாமொழி' போன்ற பெயர்களும் ஏற்படலாயின என்று, ஆராய்ச்சி அறிஞர்கள் கூறியுள்ளனர்.

திருவள்ளுவர் ஆண்டு 2024 தொடக்கத்தையொட்டி வெளியிடப்படுகிறது...

# தைத்திங்களே தாய்த்திங்கள்!

டாக்டர் ஔவை நடராசன்
துணைவேந்தர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்



தவழ்ந்தாடும் பனியோடு தமிழர் நெஞ்சில்
தவழவந்த தைத்திங்கள்! தமிழர் வாழும்
புவியெல்லாம் இன்றைக்குப் புதுமைப் பொங்கல்!
பொங்கிவரும் காவிரியின் கரையோரத்துக்
குவிகின்ற நெற்கதிர்கள்; இஞ்சி மஞ்சள்
கணுவில்லாக் கதலிகளும், கணுக்கரும்பும்
இவையெல்லாம் தரும்திங்கள் ஆத லாலே
இத்திங்கள் தாய்த்திங்கள் என்று ரைப்போம்!

நெல்விளைத்து உயிர்வளர்த்து இந்த மண்ணின்
நெடும்புகழை வரலாற்றைக் காத்த கைகள்;
கல்லுடைத்தும்; கட்டடங்கள் பலஅ மைத்தும்
கவினார்ந்த கணவாய்கள் சிற்றூர்ச் சாலை
நல்வகையால் வழங்கியவர் ஏழை யென்னும்
நலிவுநிலை மாற்றுதற்குச் சூளு ரைப்போம்!
எல்லோரும் எல்லாமும் பெறுவ தற்கே
ஏறுபோல் நடையிடுவோம்! ஏற்றம் காண்போம்!

கதலிகளும் செங்கரும்பும் கறந்த பாலும்
கற்கண்டும் தெளிதேனும் கலந்து வைத்தே
இதயத்தால் புத்தரிசிப் பொங்க லிட்டே
இனிய தமிழ் நாட்டினர்கள் மகிழும்வேளை
பொதியமலைத் தீந்தமிழை; தமிழர்வாழ்வை
பண்பாட்டை, கலைமொழியைக் காத்துநாளும்
புதிய ஒளி, புதிய வழி, பொதுமை வாழ்வு
பெற்றிடவே சூளுரைப்போம்! வெற்றி காண்போம்!





## தருமபுரி மாவட்டம்

# மகளிர் மேம்பாடு



தமிழக அரசின் முக்கியக் குறிக்கோள்களில் ஒன்று, பெண்களின் முன்னேற்றமாகும். பெண்களின் சமூக மற்றும் பொருளாதார நிலையை உயர்த்துவதற்காகத் தமிழக அரசு பல்வேறு வளர்ச்சி மற்றும் நல்வாழ்வுத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. இத்தகைய திட்டங்களில் ஒன்று தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டம் ஆகும்.

இத்திட்டத்தின் மூலம் பெண்களின் பொருளாதார நிலையை உயர்த்துவதுடன் அவர்களின் தன்னம்பிக்கை மற்றும் பொது அறிவினையும் மேம்படுத்துவது இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இந்தத் திட்டம் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம் என்னும் அரசு நிறுவனத்தின் மூலம் செயல்படுத்தப் படுகிறது.

**தருமபுரி மாவட்டத்தில் மகளிர் மேம்பாட்டுத் திட்டம்**

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் தருமபுரி மாவட்டத்தில் மகளிர் மேம்பாட்டுக்காக ஒரு தன்னிகரற்ற திட்டம், ரோம் நாட்டிலுள்ள 'பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதியத்தின்' (International Fund for Agricultural Development) - IFAD) உதவியுடன் 1989-ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டது. இந்தத் திட்டத்தின் செயல்பாடுகள் மற்றும் முன்னேற்றம் குறித்து திட்ட அலுவலர் திரு. ஏ. இராமதாஸ் அவர்களை நேரில் சந்தித்தபோது கூறினார் -

''இந்தத் திட்டம் ஆசியாவிலேயே - அதிலும் குறிப்பாக இந்தியாவில் தருமபுரி மாவட்டத்தில்தான் முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கமே, பொருளாதாரத்தில் பின்தங்கிய மகளிரை முன்னேற்றுவதாகும். கிராம அளவில், வறுமைக் கோட்டிற்குக் கீழ் இருக்கும் மகளிர் அனைவரும் குழுக்களாக அமைந்து, தங்களது முன்னேற்றத்திற்காக ஒத்துழைத்து, முன்னேறுவது இத்திட்டத்தின் சிறப்பு அம்சமாகும். இந்தத் திட்டத்தில் 15 முதல் 20 பெண்கள் இணைந்து குழுக்களாகச் செயல்படுகின்றனர். இவ்வாறு பெண்கள் குழுக்களாக இணைந்து செயல்படுவதால் அவர்களது பொதுப் பிரச்சினைகளையும் தனிப்பட்ட குடும்பப் பிரச்சினைகளையும் தங்களுக்குள் விவாதித்து தீர்த்துக் கொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

''மேலும் குழுவில் உள்ள பெண்கள் எந்தத் தொழிலை மேற்கொள்ள வேண்டுமென்று தாங்களாகவே முடிவு செய்ய இயலுகிறது. அரசு சாரா அமைப்புகளின் மூலம் (Non Governmental Organisation) இந்தக் குழுக்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு, இவற்றின் சமூக பொருளாதார முன்னேற்றம் மெதுவாகவும் படிப்படியாகவும் உயர நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

'மகளிர் குழுக்கள் அமைப்பதோடு மட்டுமன்றி சமூக நலத் திட்டங்கள் குறித்து பெண்களிடையே ஒரு விழிப்புணர்ச்சியை உண்டாக்குவதும், சுற்றுப்புறச் சுகாதாரம் பற்றி எடுத்துக்கூறுவதும் இந்தத் திட்டத்தின் மற்றொரு குறிக்கோளாகும்.'

குழுவின் சேமிப்பு நிதிக்காக, முறையாகச் சேமிப்பு செய்யும் பழக்கம் குழு உறுப்பினர்களிடையே வலியுறுத்தப்படுகிறது. இந்தத் திட்டத்தின்கீழ் மகளிர் குழுவிலுள்ள ஒவ்வொரு உறுப்பினரும் மாதம் ரூ.10 அல்லது 15 சேமிப்புக்கு ஒதுக்க வேண்டும். இவ்வாறு சேமிக்கப்பட்ட பணம் குழுவின் பெயரில் வங்கிகளில் போடப்படுகிறது.



ஒவ்வொரு சேமிப்புக் குழுவிலும் 25 முதல் 30 உறுப்பினர்கள் இருப்பர். 18 முதல் 55 வயதுக்குள் இருக்கும் மகளிரே, அதிலும் குறிப்பாக, திருமணமான பெண்களே இந்தத் திட்டத்தில் சேர அனுமதிக்கப்படுவார்கள்.

குழு உறுப்பினர்களது சொந்த அவசரத் தேவைகளுக்காகச் சிறு கடன்களைக் குழு சேமிப்பு நிதியிலிருந்து கொடுத்து உதவுவது இத்திட்டத்தின் மற்றொரு சிறப்பு அம்சமாகும். வட்டி விகிதத்தையும் கடனை அடைக்கும் காலக் கெடுவையும் குழுவே தீர்மானிப்பதால் கிராமப் பெண்கள் தங்களது அவசரத் தேவைகளுக்காகத் தனி நபர்களிடம் மிக அதிக வட்டியில் கடன் பெறுவது தவிர்க்கப்படுகிறது.

தருமபுரி மாவட்டத்தில் இது வரை 795 மகளிர் குழுக்கள் உருவாக்கப்பட்டு இதன்மூலம் 19,431 பெண்கள் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். இந்தக் குழுக்கள் ரூ.33.88 இலட்சம் தொகையைச் சேமிப்பாக வங்கிகளில் போட்டிருக்கிறது.

**ஒவ்வொரு குழுவிலும் ஒரு ஊக்குநர்**

ஒவ்வொரு குழுவுக்கும் ஒரு ஊக்குநர் நியமிக்கப்படுவார். இவர் அந்தக் குழுவில் ஒரு உறுப்பினராக இருப்பதோடு, குழு உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவராகவும் இருக்க வேண்டும். இந்த ஊக்குநருக்கு IFAD திட்டத்தின் மூலம் மாதம் ரூ.180 நன்கொடையாக அளிக்கப்படுகிறது. அரசு சாரா அமைப்புகளின் மூலம் இந்த ஊக்குநர்களுக்குச் சிறந்த முழுமையான பயிற்சி அளிக்கப்படும். ஊக்குநர்களின் பணியைக் கண்காணிக்க 12 முதல் 15 ஊக்குநர்களுக்கு ஒரு மேற்பார்வையாளர் நியமிக்கப்படுவார். இந்த மேற்பார்வையாளர்கள் பெண்கள் குழுக்களை நல்ல முறையில் இயங்கச் செய்வதுடன் கிராமங்களிலுள்ள எல்லாக் குழுக்களும் முன்னேற்றம் அடைய வழிவகை செய்கிறார்கள்.

பட்டப்படிப்பு படித்த பெண்களே மேற்பார்வையாளர்களாக நியமிக்கப்படுகிறார்கள். இவர்களுக்கு மாதம் 1,300 ரூபாய் நிலையான ஊதியமாக வழங்கப்படும். மகளிர் குழுக்களுக்கும் திட்டத்துக்கும் இடையே ஒரு தொடர்பாளராக இருந்து செயல்படுவதும் மேற்பார்வையாளர்களின் ஒரு முக்கியப் பணியாகும்.




**கடன் உதவி**

குழு உறுப்பினர்களின் வருகை சேமிப்பு அளவு ஆகியவற்றைக் கண்காணித்து, குழுக்கள் நிலையான வளர்ச்சியை அடைந்த பிறகு (சுமார் 6 மாதங்களுக்குப் பிறகு, பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதியத்தின் மானியத்துடன் தருமபுரி மாவட்டத்திலுள்ள இந்தியன் வங்கியின் மூலம் இக்குழுக்களுக்குக் கடன் உதவி அளிக்கப்படுவதாகத் திட்ட அலுவலர் கூறினார். இத்திட்டத்தின் கீழ் விவசாயம், வேளாண் காடு வளர்ப்பு, தோட்டக்கலை, பட்டுப் பூச்சி வளர்ப்பு, பூச்செடி வளர்த்தல், கால்நடை மற்றும் கிராமக் கைத் தொழில்கள் போன்ற நிலம் சார்ந்த தொழில்களுக்கு மகளிர்க்குக் கடன் உதவி வழங்கப்படுகிறது. மேற்கண்ட தொழில்கள் சம்பந்தப்பட்ட துறையின் ஒத்துழைப்புடன் செயல் படுத்தப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

மானியமாக வழங்கப்படும் தொகை, பயன்பெறுபவரின் பெயரில் கடன் வழங்கப்படும் வங்கியிலேயே வைப்புத் தொகையாகச் செலுத்தப்பட்டு, கடன்தொகை முழுமையாகச் செலுத்தப்பட்டபின் மானியத்தொகை பயனாளிக்கு வழங்கப்படும். இந்த மானியத் தொகையின் மூலம் பெறும் கூடுதல் வட்டி, பயனாளிகளின் கடன் தொகையிலிருந்து கழிக்கப்படுகிறது.

குழு உறுப்பினர்களுக்குச் சம்பந்தப்பட்ட துறையின் மூலம் 2 அல்லது 3 நாட்கள் பயிற்சி அளிக்கப்படும். மேற்கொள்ளப்படும் தொழிலுக்கு ஏற்பப் பயிற்சியின் கால அளவும் மாறுபடும்.

**திட்ட ஒருங்கிணைப்புக் குழு**

மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களைத் தலைவராகவும், மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் திட்ட அலுவலரைச் செயலாளராகவும் கொண்டு ஒரு திட்ட ஒருங்கிணைப்புக் குழு அமைக்கப்பட்டு, செயல்பட்டு வருவதாகக் கூறினார் திட்ட அலுவலர் திரு. இராமதாஸ். இந்த ஒருங்கிணைப்புக் குழுவில் இந்தியன் வங்கியின் மண்டல மேலாளர் ஒருவரும், சம்பந்தப்பட்ட துறையின் ஆறு அலுவலர்களும் உறுப்பினர்களாக இருப்பார்கள். இந்தக் குழு மாதத்தில் ஒரு முறை கூடி மகளிர் குழுக்களின் முன்னேற்றம் குறித்து ஆராயும்.

இதுதவிர, விவசாய நிலம் உள்ள உறுப்பினர்களுக்கு, பாசனக் கிணறுகளை ஆழப்படுத்துதல், சுவர் கட்டுதல், குழாய் அமைத்தல் போன்ற வேளாண் பொறியியல் சம்பந்தமான தொழில்களுக்கும் கடனுதவி வழங்கப்படும். மேற்கண்ட வேளாண் பொறியியல் சம்பந்தமான பணிகளுக்குத் தேவையான மொத்தத் தொகையும் IFAD திட்டத்தின் மூலமே கடனாக வழங்கப்படும்.

தருமபுரி மாவட்டத்தில் தளி, கெலமங்களம், சூளகிரி, தருமபுரி, நல்லம்பள்ளி, பெண்ணாகரம், பாப்பிரெட்டி பட்டி, மொரப்பூர், அரூர், ஊத்தங்கரை, மத்தூர் மற்றும் பர்கூர் ஆகிய 12 வட்டாரங்களில் மகளிர் மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது. இந்தத் திட்டத்தின் கால அளவு 7 ஆண்டுகள் 1996-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் வரை இந்தத் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

இந்தத் திட்டத்தின் மூலம் தருமபுரி மாவட்டத்தில் கடந்த 3 ஆண்டுகளில் 6,200 பேர் பயனடைந்துள்ளனர். இவர்களுக்குக் கடன் மற்றும் மானியமாக ரூ.334 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

நடப்பு நிதியாண்டில் (1992-93) 3,600 நபர்களுக்கு ரூபாய் ஒரு கோடி மானியத்துடன் ரூபாய் 3 கோடி அளவுக்கு வங்கிக் கடன் வழங்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது. இதில் வேளாண் காடுவளர்ப்புப் பணிகளுக்கு 500 நபர்களுக்கு ரூ.41.645 இலட்சமும், பட்டு வளர்ப்புக்கு 750 நபர்களுக்கு 97.125 இலட்சமும், கால்நடை வளர்ப்புக்கு 900 நபர்களுக்கு 63.550 இலட்சமும் வழங்கப்படும். இதுதவிர, வேளாண் பொறியியல் துறையின் மூலம் 500 நபர்களுக்கு நேரடியாகவும் கடனுதவி வழங்கப்படும்.

மேலும், நடப்பு ஆண்டில் சுமார் 100 பெண்களுக்குச் செயற்கை வைரப் பட்டை தீட்டும் தொழில் (Gem cutting) அறிமுகப் படுத்தப்படவிருக்கிறது. இதற்கான பயிற்சி அரூர் மற்றும் பர்கூர் வட்டாரங்களில் விரைவில் ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

## மலைவளமும் வனவளமும்

தமிழ்நாட்டின் வடஎல்லையில் அமைந்திருக்கின்ற தருமபுரி மாவட்டத்தில்தான் கிழக்குத் தொடர்ச்சி மலையும், மேற்குத் தொடர்ச்சி மலையும் கூடுகின்றன.

இம்மாவட்டம் முழுவதுமே உயரமான அல்லது தாழ்வான குன்றுகள் தலைதூக்கி நிற்கின்றன; குன்றுகள்தோறும் கோயில்கள் காணப்படுகின்றன.

தருமபுரி மாவட்டம் வனவளம் மிக்கதும் ஆகும்; மாவட்டத்தின் மொத்தப் பரப்பான 9,645 ச.கி.மீட்டரில், 1,700 ச.கி.மீட்டர் நிலப்பரப்பில் காடுகள்தான்!

## கனவு மாளிகை

மொகலாயர்களிடமிருந்து காரன்வாலிஸ் பிரபு ஒசூர் பகுதிகளைக் கைப்பற்றினான். அப்போது, சேலம் மாவட்ட ஆட்சித் தலைவராக 'பிரட்' என்பார் நியமிக்கப்பட்டார். அவர், தன்னுடைய காதலிக்காக ஒசூர் பகுதியில் ஒரு கனவு மாளிகையைக் கட்டலானார். அந்த இலண்டன் மாநகரக் காதலிக்கு அவ்வப்போது மகிழ்வோடு இதுபற்றித் தெரிவித்தும் வந்தார் அவர்.

அந்தக் காதல் மாளிகை, அரசுப் பணத்தில் முறைகேடாகக் கட்டப்பட்ட காரணத்தால், ஆங்கிலேய அரசு, மாவட்ட ஆட்சித் தலைவரை ஒசூரை விட்டு மாற்றிவிட்டது. இதையறிந்த அவரது அன்புக் காதலியும் இலண்டனிலிருந்து இங்கு வர அடியோடு மறுத்துவிட்டாள்.

இதனால் மனம் உடைந்து போன காதல் மன்னன் பிரட், தனக்குத்தானே சுட்டுக்கொண்டு தற்கொலை செய்து கொண்டான், அதே அழகு மாளிகையில்!

அதன்பின், அம்மாளிகை 'சப்கலெக்டர் அலுவலகம்' ஆக்கப்பட்டது.

நாளடைவில்- அந்தக் காதலைப் போலவே சிதைந்து சின்னா பின்னமாகி அதுவும் உருக்குலைந்து போய்விட்டது!

—ஆர். மலர்மங்கை



# காலம் வரும் காத்திருப்போம்!

நான்

சரஞ்சரமாய்ப் பாட்டுகளை
அள்ளிவிடப் போறேன்
சுதந்திரமாய் மனம்திறந்து உண்மைகளைச்
சொல்லிவிடப் போறேன்.

கோழி கொத்துன எழுத்துக் கூட்டிக்
கோமாளிப் பேச்சுப்பேசி-நம்மை
ஏமாளியாக்க இங்கே
இந்தித்திணிப்பு நடக்குதுங்க.

பட்டப்பகல் நேரத்திலும்
வெட்டுப்பழி-குத்துப்பழி
செத்துப்போன ராமருக்கும், பாபருக்கும்
ரத்தம் சிந்தும் யுத்தவெறி!

தைக்கரும்பை எடுக்கும்போது
கன்னத்துல கண்ணீரு
கண்ணுக்குள் ஓடுதம்மா
காவேரித் தண்ணீரு!

திண்ணைப்பேச்சு வார்த்தைகளில்
திக்விஜயம் நடக்குது
உண்மைகளை எடுத்துச் சொன்னா
உலகமெல்லாம் சிரிக்குது.

மேடு பள்ளம் இல்லாத
நாடுகளைப் படைக்கணும்
காடு கரை எல்லாமே
கரும்பு நட்டு வளர்க்கணும்.

அதுவரைக்கும்-
கனவுப்பட்டு கட்டிகிட்டு
!பொங்கல் வைப்போம்
காலம் வரும் - காத்திருப்போம்.

கவியரசு நா.காமராசன்





# தருமபுரி

தருமபுரி மாவட்டமானது, சேலம் மாவட்டத்திலிருந்து 2.10.1965- இல் பிரிந்தது; அதற்காக நடைபெற்ற துவக்க விழா, அன்றைய உணவு அமைச்சர், திரு. வெ. ராமையா அவர்கள் தலைமையில் நடைபெற்றிருக்கிறது. அந்த விழாவில் கலந்துகொண்ட தமிழகத்தின் அந்நாள் முதல்வர் திரு. மீ. பக்தவத்சலம் அவர்கள்தான் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டடத்திற்கே கடைகால் நாட்டியிருக்கிறார்.

அதற்கடுத்த இரண்டாண்டுக் காலத்தில் - அதாவது 26.8.1967-இல் தான், இப்போதுள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டடம் கட்டி முடித்துத் திறந்து வைக்கப்பட்டுள்ளது. அவ்விழாவில், அந்நாள் முதல்வர் அறிஞர் அண்ணா அவர்கள் கலந்துகொண்டு, இக் கட்டடத்தைத் திறந்து வைத்திருக்கிறார்; விழாவுக்கு, உணவு அமைச்சராக இருந்த திரு. கே.ஏ. மதியழகன் அவர்கள் தலைமை தாங்கியிருக்கிறார்.



பின்தங்கிய மாவட்டமான தருமபுரி மாவட்டத்தில் முதல் மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்தவர் திரு. ஜி. திருமால், இ.ஆ.ப., அவர்கள் இப்போதைய மாவட்ட ஆட்சித் தலைவராக இருப்பவர் திரு. ஏ. தசரதன், இ.ஆ.ப., அவர்களாவார்.

இவற்றையெல்லாம் அறிந்து கொண்டு, தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தின் படிக்கட்டுக்களில் கால் வைத்தோம் நாங்கள். கீழ்த்தள வராண்டாவிலேயே ஏராளமான ஆண்களும் பெண்களுமாகக் கூடியிருந்தனர்; ஒவ்வொருவர் கையிலும் நீண்ட கவர் அல்லது வெள்ளைத்தாள் மடிப்புகள் காணப்பட்டன. என்ன விஷயம் என்று விசாரித்த போதுதான் அன்று திங்கட்கிழமை என்பதும், மாவட்ட ஆட்சித் தலைவர், மக்களின் குறைகளைக் கேட்கும் நாள் அது என்பதும் தெரிந்தது.

அலுவலக இளநிலை உதவியாளரான திரு. எஸ். ஆறுமுகம் என்பவர், ஒவ்வொரு கோரிக்கை மனுவாக வாங்கி 'மக்கள் குறை கேட்கும் நாள் மனு... மனுவைப்பெற்ற நாள்... அறிக்கை அனுப்ப வேண்டிய நாள்...' என்று ரப்பர் ஸ்டாம்ப் குத்தி அடுக்கிக் கொண்டிருந்தார்.

எதிரே மாட்டப்பட்டிருந்த, செய்தி மக்கள் தொடர்புத் துறையின் அறிவிப்புப் பலகையில் - அரசின் அண்மைக்கால நிகழ்ச்சிகள் பற்றிய புகைப்படங்கள், அடிக்குறிப்புகளோடு காட்சியளித்தன. முதியவர் ஒருவர் பொறுமையுடன் அவற்றை உற்று உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார்.

நம்முடைய பார்வை-நான்கு பக்கச் சுவர்களிலும் துண்டு துண்டாக மாட்டப்பட்டிருந்த அறிவிப்புப் பலகைகளில் படர்ந்தது.

வீட்டு மனைப்பட்டா கோரும் மனுதாரர் கவனத்திற்கு உடல் ஊனமுற்றோர் உதவித் தொகை பெற விரும்புவோர் கவனத்திற்கு... வங்கிக் கடன் பெறவிரும்பும் மனுதாரர் கவனத்திற்கு... விவசாயக் கூலி உதவித் தொகை பெற விரும்புவோர் கவனத்திற்கு... நலிவுற்றோருக்கு வீடுகட்டுதல் கோரி மனுச் செய்வோர் கவனத்-

'நம்பர் ஒன்' என்று கூறப்படும் 'ஜெம் ரெட் கிரானைட்' தருமபுரி மாவட்டத்தில்தான் எடுக்கப்படுகிறது. தங்கமும், வேறு சில தாதுப் பொருட்களும்கூட இந்த மாவட்ட மண்ணில் இருந்துஎடுக்க முடியும் என்று கண்டறியப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டில், எங்கள் மாவட்டத்தில் பதினாறாயிரம் பேருக்குக் குடும்பக் கட்டுப்பாடு செய்தாக வேண்டும் என்ற குறியீட்டையே நாங்கள் தாண்டியிருக்கிறோம்; புரட்சித் தலைவி இலவச மருத்துவ முகாம்கள் இதுவரை 750 நடத்தி இதன்மூலம் சுமார் 2¼ இலட்சம் நலிந்த மக்களுக்கு நலம் சேர்த்திருக்கிறோம். ஃபோலியோ கவரேஜ், ஊட்டச்சத்துத் திட்டம் (TINP) சாமல்பட்டி வாட்டர் ஷெட் ஸ்கீம், கசிவுநீர்க்குட்டைத் திட்டம் எல்லாம் ஏராளமாக நிறைவேற்றி வருகிறோம். தமிழகத்தில், இந்த மாவட்டத்திலேதான் கசிவுநீர்க் குட்டை மூலமான விவசாயமே அதிகம். சிப்காட், சிட்கோ, டிட்கோ, டிக் போன்ற பல்வேறு திட்டங்களையும் குறைவின்றி நிறைவேற்றி வருகிறோம். இந்த மாவட்டத்தில் பொது விநியோகம் வேறெந்த மாவட்டத்தையும் விட நல்லபடி நடக்கிறது.'

'சூரியகாந்தி எண்ணெய் உற்பத்தி, மகளிர் மேம்பாட்டுத் திட்டம் ஆகியவை முதன் முதலில் இந்த மாவட்டத்தில்தான் துவக்கப்பட்டன. கொடி நாள் வசூல் குறியீடு ரூ.5.50 இலட்சம் என்றாலும், 7.25 இலட்சம் ரூபாய் இதுவரை வசூலித்திருக்கிறோம். சிறுசேமிப்பில் மட்டும் ஏழு கோடி ரூபாய் சேர்த்திருக்கிறோம்... இதன் குறியீடு (Target) ரூ.11 கோடியாகும்.

அகில இந்திய மாம்பழக் கண்காட்சி எங்கள் தருமபுரி மாவட்டத்திலேதான் முதன்முதலாக எந்த ஆண்டும் இல்லாதபடி சென்ற (1992) ஆண்டு ஜூன் மாதத்தில் ஐந்து நாட்கள் நடைபெற்றது; அதில் அதிக அளவில் விளைகிறது என்பதால் மட்டுமல்ல; அதிக ருசியுடைய மாம்பழம் விளைவிப்பதற்கான முதல் பரிசு எங்கள் மாவட்டத்திற்குத்தான் கிடைத்தது. கிளிமூக்கு மாங்கனி எங்கள் மாவட்ட ஸ்பெஷல். இந்த மாவட்டத்தில் 22 ஆயிரம் எக்டேரில் மாமரம் பயிரிடப்பட்டுள்ளது.

'சந்தன மரங்களில் அதிக மணம் பொருந்தியது எங்கள் சித்தேரி மலைச் சந்தன மரங்களே என்பது உறுதி செய்யப்பட்டிருக்கிறது. காய்கறி உற்பத்தியில் எங்கள் ஒசூர் இணையற்றுத் திகழ்கிறது; பட்டுத் தொழில் மூலம் தருமபுரி மாவட்டம் தன்னிகரற்று விளங்குகிறது...'

தொலைபேசி ஒலிக்கவே, மாவட்ட ஆட்சித் தலைவர் சிறிது பேச்சை நிறுத்தினார்; அவருடைய தொலைபேசிப் பேச்சு முடிந்த அடியோடு நாம் வினா தொடுத்தோம்'.

'தருமபுரி மாவட்டத்தைப் பொருத்தவரை வேறு என்னவெல்லாம் குறிப்பிடத்தக்க முக்கிய செய்திகள் இருக்கின்றன என்று சொல்லுங்களேன்?'





## ஔவையாரும் தருமபுரியும்

தமிழ் மூதாட்டி ஔவைப் பாட்டியின் பாடல்கள் அகநானூறு, புறநானூறு, நற்றிணை, குறுந்தொகை ஆகியவற்றிலே காணப்படுகின்றன.

புறநானூற்றில்தான் ஔவையாரின் பாடல்கள் அதிக அளவில் காணப்படுகின்றன; அதாவது 33 பாடல்கள். அவைகளில் 23 பாடல்கள் அதியமான், நெடுமான் அஞ்சியைப் பற்றியன; 3 பாடல்கள் அவனுடைய மகன் பொருட்டெழினி பற்றியவை.

இந்த இருவருமே தகடூரைத் (தருமபுரி) தலைநகராகக் கொண்டு ஆட்சி செலுத்தி வந்தவர்களாவர்.

"ராஜாஜி போன்ற மூதறிஞர்கள், கவிஞர்கள், கலைஞர்கள் பிறந்த மாவட்டம் இது; சுப்பிரமணி சிவா போன்ற தியாகச் செம்மல்கள், தேசிய வாதிகள், சிறைக்கஞ்சாச் சிங்கங்கள் பல வாழ்ந்து மறைந்த மாவட்டம் இது. தமிழ், உருது, தெலுங்கு, கன்னடம், இந்தி எனப் பல மொழி பேசுவோரும்

## சரித்திரத்தில் தகடூர்

ஜெகதேவிராய என்ற விஜயநகரப் பேரரசின் சிற்றரசன் ஆட்சியாண்டான 17-ஆம் நூற்றாண்டில்தான், அதுவரை 'தகடூரா'க இருந்த இவ்வூர் 'தர்மபுரி' ஆயிற்று.

மூவேந்தர் காலத்திலும் அவர்களுக்கு இணையாக இருந்த அதியர் மரபு இப்பகுதியில் அரசாண்டது. இம் மரபினரில் நெடுமான் அஞ்சி தலைசிறந்த மன்னனாக விளங்கினான்; ஔவை மூதாட்டியின் அளவற்ற பாசத்திற்கு ஆளான மன்னன் இவன்.

சங்க காலத்திற்குப் பிறகு - கட்டி மரபினர், கங்கர், பாணர் போன்ற சிற்றரசர்கள் தகடூரை வென்று குறுநில அரசுகளை நிறுவினார்கள். இவர்கள் காலத்தில்தான், களச்சாவு கண்டோருக்கு நடுகல் நிறுவும் பழக்கம் ஏற்பட்டது; அவைகளில் பல, இம்மாவட்டத்தில் இன்றும் காணக் கிடைக்கின்றன.

5-ஆம் நூற்றாண்டில், களப்பிரரை வீழ்த்திப் பல்லவர் ஆட்சிக்குத் தகடூரும் உட்பட்டிருந்தது.

கி.பி.873-இல், இப்பகுதியில், நுளம்பர்கள் அரசாண்டனர். அப்போது இப்பகுதி 'நுளம்ப பாடி'.

முதலாம் இராசராச சோழன் காலத்தே இது அவன் ஆட்சிக்குட்பட்ட தனி மண்டலமாகியது; அதன் பெயர் அப்போது 'நிகரில் சோழ மண்டலம்'.

பிறகு, தன்னை அதியன் மரபினன் எனக் கூறிக்கொண்ட விடுகாதழகிய பெருமான் இப்பகுதியை அரசாண்டான். இவன் ஒரு குறுநில மன்னன்.

அவர்களுக்குப் பின்னர், போசளர் ஆட்சி ஏற்பட்டது.

அவர்களுடைய வீழ்ச்சிக்குப் பிறகு, தகடூர், விஜயநகரப் பேரரசின் ஒரு பகுதி ஆகியது. அவர்களுக்குப் பின்-தகடூர் நாடு பாளையக்காரர்கள் வசமாயிற்று. அதற்குப்பின், மைசூர் மன்னர்கள் தகடூரைக் கைப்பற்றினர்.

பிறகு ஐதர் அலியின் மேலாதிக்கத்திற்கு உரிய பகுதியாயிற்று இது. அவன் மகன் திப்பு சுல்தான் அடிக்கடி ஆங்கிலப் படையோடு மோதும் நிலை ஏற்பட்டது. முடிவாக, மூன்றாவது மைசூர்ப் போரில் (1790-92) திப்பு தோற்றான். ஆங்கிலேயருடன் சமாதானம் செய்துகொண்ட அவன் போர் நட்ட ஈட்டுத் தொகையோடு தனது நாட்டின் பெரும் பகுதியையும் கொடுக்க வேண்டியதாயிற்று.

'எம்மதமும் சம்மதமே' என்ற வகையில் தேசிய ஒருமைப்பாட்டு உணர்வோடு இணைந்து வாழும் மாவட்டம் எங்கள் தருமபுரி. தமிழ்நாட்டிலேயே மாவட்ட வளர்ச்சிக் கழகம் செயல்படுவது எங்கள் தருமபுரி மாவட்டத்தில்தான். கிருஷ்ணகிரி அணைக்கட்டு, பையூர் வேளாண் ஆராய்ச்சிப் பண்ணை, சென்னை நகர வளர்ச்சிக் குழுமம் போலத் தமிழகத்தில் ஒசூரில் மட்டுமே அமைக்கப்பட்டுள்ள ஓசூர் புதிய நகர விரிவாக்கக் குழுமம் போன்றவை குறிப்பிடத்தக்கவை. இதுவரை மாவட்டத் தலைநகர்களில் மட்டுமே செயல்பட்டு வந்த குடிசைப்பகுதி மாற்று வாரியத் திட்டங்கள் இங்குள்ள சிற்றூரான பர்கூரிலும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மாவட்ட வளர்ச்சிப் பணிகளை முழுமையாக நிறைவேற்றிய மாவட்டம் எங்கள் தருமபுரி மாவட்டம்தான். இப்படி எங்கள் சாதனைகளை அடுக்கிக் கொண்டே போகலாம்...'

'ஆமாம், தருமபுரி என்ற பெயர் சூட்டப்படக் காரணம் என்னவாக இருக்கும் என்று உங்களுக்குத் தெரியுமா?'

'தமிழ்மூதாட்டி ஔவைப் பாட்டிக்கு இந்தத் தருமபுரியானது தகடூராக இருந்த பழங்காலத்தில், இப்பகுதியில் ஆட்சிபுரிந்த அதியமானுக்கும்தான் அது வெளிச்சம்.

நான் என்ன நினைக்கிறேனென்றால்... அரிதாகக் கிடைத்த கருநெல்லிக் கனியால் ஆயுள் விருத்தி உண்டென அறிந்தும், அதை ஔவைப் பாட்டிக்குத் தருமமாகக் கொடுத்தான் அதியமான்; தமிழகத்தில், காவிரியாறு எங்கள் தருமபுரி மாவட்டத்தில்தான் வலது காலை எடுத்து வைத்துப் புகுந்து நாடெங்கும் வலம் வருகிறது; ஆனால் அதன் மூலம் ஒரு ஏக்கர் நிலத்திற்குக்கூட இந்த மாவட்டத்தில் பயனில்லை! இப்படி எல்லா வகையிலும் தருமம் புரிகிற மாவட்டமாக இருப்பதால்தானோ என்னவோ இம்மாவட்டம் தருமபுரி மாவட்டம் என்று அழைக்கப்படுகிறதோ என எண்ணுகிறேன் நான்!"

- மாவட்ட ஆட்சித் தலைவர் ஏக்கத்தோடு சொன்ன இதைக் கேட்டு, நாங்களும் அனுதாபத்தோடு சிரித்தோம்.

'வேறு ஏதாவது இந்த மாவட்டத்தில் குறிப்பிடத்தக்க செய்திகள்?...'

- என்று நாங்கள் கடைசியாக இழுத்தபோது,

"மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் போட்டியிட்ட பர்கூர் தொகுதி இருப்பதே எங்கள் மாவட்டத்தில்தான் சார்' என்று முகமலர்ச்சியோடும் தனி அழுத்தத்தோடும் தெரிவித்தார் தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஏ. தசரதன் அவர்கள்.

- பி.எல். ராஜேந்திரன்.

NO.1 சேமிப்பு — சிறுசேமிப்பு

# வருமான வரிச் சலுகை பெற முத்தான மூன்று திட்டங்கள்

NSS '92

PPF

NSC VIII Issue

★ உறுதியான வருவாய்

★ மத்திய அரசின் முழுப்பாதுகாப்பு.

இன்றே முதலீடு செய்வீர்

தேசிய சேமிப்புத் திட்டம் (NSS'92)
தேசிய சேமிப்புப் பத்திரம் 8வது வெளியீடு (NSC)
15 ஆண்டு பொது சேமநல நிதிக் கணக்கு (PPF)

தமிழ்நாட்டில்
செய்யப்படும் ஒவ்வொரு
ரூ. 500 - முதலீட்டிற்கும்
ஒரு இலவச பரிசு கூப்பன் பெற்று
கவர்ச்சிகரமான 'மாருதி கார்'
உட்பட 536 பரிசுகளை
வெல்ல வாய்ப்பு



மாத ஊதியம் பெறுவோர் சம்பளப் பட்டியல்
சேமிப்புத் திட்டம் மூலமாகவும் சேரலாம்.

மேலும் விபரங்களுக்கு

ஆணையர், சென்னை மாநகராட்சி
(சி.சே. பிரிவு) சென்னை-3,
தொலைபேசி: 584440.
மண்டல இயக்குநர், தேசிய சேமிப்பு
நிறுவனம் 92, அண்ணா சாலை, சென்னை-2.
தொலைபேசி: 849962.
மாவட்ட ஆட்சியாளர்கள், அஞ்சல் அதிகாரிகள்
மற்றும் சிறுசேமிப்பு முகவர்கள்

பிரத்யேகமான
உயர் ஊக்கத்தொகை
ஜனவரி 2½%
பிப்ரவரி 2¼%
மார்ச் 2%

வெளியீடு : இயக்குநர், சிறுசேமிப்புத் துறை, 621, அண்ணா சாலை,
சென்னை-600 006. தொலைபேசி: 8251784, 8251685.
சிறு குடும்பம் செல்வக் குடும்பம்

இன்றைய சேமிப்பு நாளைய பாதுகாப்பு



# மாணவர்கள் தென்னை வளர்ப்பு

தமிழ்நாட்டில் உள்ள 22 மாவட்டங்களில் நடப்பு ஆண்டில் 10 மாவட்டங்களில் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களின் மாணவர்கள் தென்னை வளர்ப்புத் திட்டத்தைச் செயல்படுத்துமாறு அரசு ஆணையிட்டுள்ளது.

அதன்படி, பின்தங்கிய மாவட்டமான தருமபுரி மாவட்டத்திலும் இத்திட்டம் துவக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தைத் தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ஏ.தசரதன் அவர்கள் தலைமையில், மாண்புமிகு தமிழ்நாடு பாடநூல் நிறுவனத் தலைவர் திருமதி சுலோச்சனா சம்பத் அவர்கள் தொடங்கி வைத்தார்.

கிருஷ்ணகிரி கோட்டம், காவேரிப்பட்டினம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த, திம்மாபுரம் கிராமத்தில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியில் 6-ஆம் வகுப்பு படிக்கும் மாணவர்களுக்கு இலவசமாகத் தென்னைக் கன்றுகளை வழங்கி இத்திட்டத்தைத் தமிழ்நாடு பாடநூல் நிறுவனத் தலைவர் அவர்கள் தொடங்கி வைத்துப் பேசியதாவது - இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் முதன்முதலாக இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகவும், இது ஒரு சிறப்புமிக்க திட்டம் என்றும் கூறினார்.

மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ஏ.தசரதன் அவர்கள் இத்திட்டத்தைப் பற்றிப் பாராட்டிப் பேசுகையில் தருமபுரி மாவட்டத்தில் மொத்தம் 6-ஆம் வகுப்புப் படிக்கும் மாணவர்கள் 55,540 பேர் உள்ளனர். இதில் தேர்ந்தெடுக்கப்பட்ட 6-ஆம் வகுப்பு படிக்கும் 3,340 மாணவ, மாணவிகளுக்கு இலவசமாகத் தென்னைக் கன்றுகள் வழங்கப்பட்டுள்ளது என்றார்.

இலவச ஆய்வு, இலவசப் பட்டப் படிப்பு, சத்துணவு என்று பல்வேறு திட்டங்களை ஏழைகளின் நலன்களுக்காக வழங்கிய தமிழக அரசானது தற்பொழுது இலவசமாக மாணவர்களுக்குத் தென்னைக் கன்றுவழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.



மக்களின் நலனில் அக்கறை கொண்ட தமிழ்நாடு அரசானது பின்தங்கிய மக்களை முன்னேற்றவும், பொருளாதாரப் பற்றாக்குறையால் இளம் வயதிலேயே மாணவர்கள் பள்ளிப் படிப்பைத் தொடர முடியாமல் தவிக்கும் ஏழை மாணவர்களுக்கு இத்திட்டம் உதவியாக இருக்கும் என்றார்.

**இத்திட்டத்தின் முக்கிய நோக்கம்**

1. சுற்றுப்புறச் சூழல் கெடாமல் பாதுகாப்பது.



திற்கு... கணவனால் கைவிடப்பட்டோர் உதவித் தொகை பெற விரும்புவோர் கவனத்திற்கு... மொத்த வணிக உரிமம் புதிதாய்க் கோரும் வணிகர்கள் கவனத்திற்கு... நலிவுற்ற கலைஞர்கள் நல்வாழ்விற்கு... வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து காத்திருக்கும் பட்டியலில் உள்ளோர் கவனத்திற்கு...

- என்கிற அப் பலகைகளின் தலைப்புகளை மட்டும் படித்தபடி மேல் தளத்திற்குப் போனால், அங்கேயும் ஒரு அறிவிப்புப் பலகை துணையின்றித் தொங்கியது - 'தேசிய சேமிப்புப் பத்திர முதலீடு களுக்குப் பரிசுக் கூப்பனும் ஒரு சதவீகித கழிவும் வழங்கப்படும்'.

'ஒரு நிமிஷம் சார்' என்று கூறி எங்களை முந்திக் கொண்டு, வேகமாக மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக அறைக்குள் நுழைந்த மக்கள் தொடர்பு அதிகாரி திரு. மு. கிருட்டிணன், அதே வேகத்தில் திரும்பிவந்தார்.

'உங்களுடைய வருகை பற்றிச் சொன்னேன்; இன்று மக்கள் குறைகேட்கும் நாளானதால் பிறகு பார்ப்போமே என்கிறார் கலெக்டர்' என்றார் தயக்கத்தோடு.

'காரணம் சரியாக இருக்கவே, அதற்குச் சம் மதித்த நாங்கள் விடாப்பிடியாக அன்று மாலையே மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. தசரதன் அவர் களை அவர் வீட்டிலேயே (பங்களா) போய்ப் பார்த்தோம். மகிழ்வோடு வரவேற்றார்.

'தமிழரசு' தருமபுரி மாவட்டச் சிறப்பு மலர் வெளியிட, விருப்பத்தை தெரிவித்த நாங்கள். 'அதற்கான, விவரங்கள் பற்றிப் பேசக் கொஞ்சம் நேரம் ஒதுக்க வேண்டுமே?' என்றோம்.

'மிக்க மகிழ்ச்சி. ஒரு மணி நேரம் போதுமே?' என்று சிரிப்போடு கேட்டுவிட்டு 'இப்போதே நான் தயார்; பேசலாம்!' என்றார்.

'இந்த மாவட்டத்தில் தருமபுரி, அரூர், பென்னாகரம், கிருஷ்ணகிரி, பாலக்கோடு, ஊத்தங்கரை, ஓசூர், தென்கனிக்கோட்டை ஆகிய எட்டு வட்டங்கள் அதாவது தாலுக்காக்ள் இருக் கின்றன. சென்ற ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி 23,95,606 பேர் தருமபுரி மாவட்டத்தில் இருக்கிறார்கள்; இதில் ஆண்கள் மட்டும் 12,32,292 பேர்; பெண்கள் 11,63,314 பேர்களாவர். இவர்களில் கல்வியறிவு பெற்ற வர்கள் எண்ணிக்கை 9,54,156 ஆகும். அதாவது மொத்த மக்கள் தொகையில் நாற்பது சதவிகிதம் பேர். எங்களுடைய தருமபுரி மாவட்டத்தில் 1,106 வருவாய்க் கிராமங்கள் இருக்கின்றன. பதினெட்டு ஊராட்சி ஒன்றியங்களும், மூன்று நகராட்சிகளும், பதினேழு நகரப் பஞ்சாயத்துக் களும் ஐநூற்று எண்பத்தெட்டு கிராமப் பஞ்சாயத் துகளும் உடையது எங்கள் தருமபுரி மாவட்டம்...'

- மனிதர் எப்படித்தான் இந்தப் பள்ளி விவரங்களையெல்லாம் மனதில் வைத்திருப் பாரோ! மளமளவென்று சொல்லிக் கொண்டே போன மாவட்ட ஆட்சித் தலைவர் பேச்சில் நாம் குறுக்கிட்டோம்.

"தருமபுரி என்றாலே தளி, களி, புளி, கம்பளி என்று ஒரு மாதிரியாகச் சொல்கிறார்களே, அதென்ன சார்?"

சிரித்துக்கொண்டே பேசலானார் மாவட்ட ஆட்சித் தலைவர் - "எங்கள் மாவட்டத்தில் உள்ள தளி என்கிற ஊர் எப்போதும் குளிர்ந்த சீதோஷ்ண நிலையோடிருக்கும்; இதனால் அதை சர் தாமஸ் மன்றோவே 'லிட்டில் இங்கிலண்ட்' என்று குறிப் பிட்டுருக்கிறார். இந்த மாவட்டத்தில் நெல் விளையும் பகுதி குறைவு; ஆகையால் பெரும் பாலான மக்கள் கேழ்வரகுக் களியையே உண வாகக் கொண்டு பழகியிருக்கிறார்கள்; இப்பகுதி யில் 'உரிகம் புளி' என்றொரு வகைப் புளி அதிகம் காய்க்கிறது; இந்தவகைப் புளியங்காய் நல்ல சதைப் பிடிப்போடும் மிக நீளமாகவும் காணப்படும்; வேறெங்கும் இப்படி இருக்காது. குளிருக்கேற்ற கம்பளி உடை தயாரிக்கத் தகுந்தபடி அடர்த்தியான உரோமம் கொண்ட மேச்சேரி வகைச் செம்மறியாடுகள் இங்கு அதிகம் இதுதான் நீங்கள் கேட்ட தளி, களி, புளி, கம்பளிக்கான விளக்கம்...'

'வேறு மாதிரியாக அல்லவா இதைப்பற்றிச் சொல்லுகிறார்கள்?' இது நாம்.

மறுபடியும் சிரிப்பு. 'நீங்கள் நேராகக் கேட்பது தானே சார்?'... புளியைத் துவையலாத் தொட்டுக் கொண்டு, களியைச் சாப்பிட்டுவிட்டு, கம்பளி யைப் போர்த்திக் கொண்டு சோம்பலோடு தூங்கி வழிவதே பெரும்பான்மையான மக்கள் பழக்கம் என்று யாராவது சொல்லியிருப்பார்கள் அதானே?... அதெல்லாம் தவறு. எங்கள் மாவட்டத்தில் உள்ள ஓசூர், கடல் மட்டத்திலிருந்து சுமார் 2,900 அடி உயரத்தில் இருக்கிறது. அதன் உஷ்ணநிலையானது வேனிற்காலத்தில் 30 டிகிரி செல்சியஸ், குளிர்



## ஏலக்கி

ஏலக்கி வாழைப்பழம்: பார்ப்பதற்குப் பூவன் பழம் போல- சற்று மெலிவோடு இருக்கும் இந்தப் பழம் மிகுந்த ருசியாக வும் சத்து நிறைந்ததாகவும் இருப்பதால் அனைவரும் இதை விரும்பிச் சாப்பிடு கிறார்கள். இந்தப் பழத்தை உண்பதால் உடலுக்கு எவ்விதக் கெடுதலும் ஏற்படு வதில்லை. மேலும் இதில் நீர்ச்சத்தும் குறைவு. இதன் சிறப்பு என்ன வென்றால், ஏலக்கி வாழைப்பழம் பார் வைக்குப் பூவன் பழம் போலிருந்தாலும், கற்பூர வாழை ருசியோடிருக்கும்; அதிக நாட்களுக்குக் கெடுவதில்லை.

தருமபுரி மாவட்டத்தில் கிடைக்கும் வாழைப்பழங்களில் இது சிறந்த வகை என்று கருதப்படுகிறது. இம்மாவட்டத் தில் ஓசூர், டென்கனிக் கோட்டை, தளி ஆகிய இடங்களில் மட்டுமே இந்தப் பழம் அதிக அளவில் விளைகிறது.

முன்னாள் இந்தியப் பிரதமர் திரு மொரார்ஜி தேசாய் அவர்கள் 1976-இல் ஒரே சமயத்தில் ஒரு டஜன் ஏலக்கி பழங்களை விரும்பிச் சாப்பிட்ட தாகக் கூறிய மாவட்ட ஆட்சித் தலைவர்- இன்னொரு வாழைப்பழம் பற்றியும் வியப்போடு குறிப்பிட்டார்.

"உதிரும் பழம் என்றோர் ரக வாழைப் பழமும் எங்கள் மாவட்ட ஸ்பெஷல் ஆகும். கீழே ஒரு சீப்பு வாழைப்பழம் இருக்கிறதென்றால், மற்றவர்களுக்குத் தர அந்தச் சீப்பை எடுத் தோமென்றால் எல்லாப் பழமும் கீழே உதிர்ந்து விடும்; அவ்வளவு மென்மையும் கனிவும் உடையது இந்தப் பழம்; இதை 'உதிரம்பழம்' என்றும் கிராமப் பகுதி மக்கள் குறிப்பிடுவார்கள்.



காலத்தில் 15 டிகிரி செல்சியஸ். அதாவது கோடை காலத்திலும் அப்பகுதி மக்களுக்குக் கம்பளி தேவைப்படும். அவ்வளவு குளிர். அதை வைத்து யாரேனும் அவ்வாறு சொல்லியிருக் கலாம். ஆனால் இப்போது அப்படியல்ல; தொழில் மயமாகிவிட்ட அப்பகுதி மக்கள் இப் போது குளிர்காரணமாக அதிகாலையில் எழுவது வேண்டுமானால் தாமதப்படலாமே தவிர... சோம்பல் என்கிற பேச்சுக்கே இடமில்லை!'... இது மாவட்ட ஆட்சித் தலைவரின் ஆணித்தர மான பதில்.

மலைசூழ்ந்த மாவட்டம்தான் தருமபுரி; ஆனாலும் மண்வளம் இருக்கிறது; மழை வளம் இல்லாத 'Rain shade area'வாக இது இருக்கிறது; என்ன செய்வது? கடுமையாக உழைத்தால்தான் இப்பகுதி மக்களால் ஓரளவுக்காவது சம்பாதிக்க முடிகிறது! இதுதான் உண்மை நிலை' என்று கூறி, தன் பதிலுக்கு மேலும் ஒரு முத்தாய்ப்பு வைத்தார் மாவட்ட ஆட்சித் தலைவர்.

'அரசுத் தரப்பில் நீங்கள் புரிந்துவரும் சாதனை களைப் பற்றிக் கொஞ்சம் சொல்ல முடியுமா?' என்றோம் நாம்.

"நிறையவே சொல்ல முடியும். இந்த மாவட் டத்தில் சிறந்த சுற்றுலாத் தலமான ஒகேனக் கல்லுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக் கையை அதிகரிப்பதற்காக அங்கே ஒரு தொங்கும் பாலம், மலைகளுக்கிடையே அமையவிருக்கிறது. ஊட்ட மலையையும் சுற்றுலாத் தலமாக்கத் தகுந்த நடவடிக்கை எடுத்து வருகிறோம். உலகிலேயே




தருமபுரி மாவட்டச் சுதந்திரப் போராட்ட வீரர்களில் முதறிஞர் இராஜாஜியுடன் தோளோடு தோள் நின்று போராடிய சிறப்புடைய தேசியவாதி திரு. தீர்த்தகிரி முதலியார் (1882-1953).

தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த அன்னசாகரத்தில் பிறந்து வளர்ந்த இவருடைய நூற்றாண்டு விழா 1985-இல் கொண்டாடப்பட்டது. பல்வேறு சமூக சேவைகளுக்காகவும், ஆதிதிராவிடர் முன்னேற்றத்திற்காகவும் தமது பெருஞ்செல்வத்தையும் செலவிடத் தயங்காத பெருமை கொண்ட இவர்- இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு ஒன்பதாண்டுக்காலச் சிறைத்தண்டனை பெற்றவர்.

கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி., பாலகங்காதர திலகர், தமிழ்த் தென்றல் திரு.வி.க. போன்றோருடன் தியாக சீலர் தீர்த்தகிரியார் மிக நெருக்கமாகத் தொடர்பு கொண்டிருந்தார். இவரே காந்தியடிகளையும், சுவாமி விவேகானந்தரையும் முதன்முதல் தருமபுரிக்கு வரவழைத்தவரும் ஆவார்.

தியாகி சுப்பிரமணியசிவா, இவரை 'எம்டன்' என்று பெயரிட்டழைப்பார்.

தருமபுரி நகரமன்றத்திடல், 'தியாகி தீர்த்தகிரியார் சதுக்கம்' என்று பெயரிட்டுச் சிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

தந்தி: சென்கோபேங்க்
டெலக்ஸ்: 453-205

தொலைபேசி எண்: 6051
அஞ்சல்பெட்டி எண்: 3

## தருமபுரி மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி (வரை)
### தருமபுரி-1

தருமபுரி மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி டெபாசிட்டுகள் மற்றும் சேமிப்புக் கணக்குகளுக்கு முன்னைவிட அதிக வட்டி வழங்குகிறது.

**1. குறித்த கால இட்டுவைப்பு**

| | |
|---|---|
| 46 நாட்கள் முதல் 270 நாட்கள் வரை | 12.50% |
| 271 நாட்கள் முதல் 364 நாட்கள் வரை | 12.25% |
| 1 வருடமும் அதற்கு மேலும் | 12.50% |

**2. சேமிப்புக் கணக்கு** 6.50%

### வைப்புத் தொகைகளுக்கு இவ்வங்கி வழங்கும் சிறப்புச் சலுகைகள்

1. இட்டுவைப்புகளுக்கு ரூ.30,000/- வரை இன்சூரன்ஸ் பாதுகாப்பு உண்டு.
2. வர்த்தக வங்கிகளைவிட ½% கூடுதல் வட்டி
3. இட்டுவைப்புகளுக்கு உயர்ந்தபட்ச வட்டி 12.50%
4. 64 மாதங்களில் இருமடங்கு வழங்கும் 'லட்சுமி' டெபாசிட் திட்டம்

எங்கள் வங்கியின் பல்வேறு வகையான டெபாசிட் திட்டத்தில் முதலீடு செய்து பெருந்தொகை பெற்றுப்பயனடையக்கேட்டுக் கொள்கிறோம். விவரங்களுக்கு எங்கள் தலைமை அலுவலகத்தையும் மற்றும் 26 கிளைகளையும் தொடர்பு கொள்க.

(கி.ஆ. நடராசன்)
இணைப்பதிவாளர்/தனி அலுவலர்
தருமபுரி மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி

# தருமபுரி மாவட்ட காவல் துறை

தமிழ்நாட்டில், பரப்பில் ஒன்பதாவது மிகப்பெரிய மாவட்டமாக தருமபுரி மாவட்டம் திகழ்கிறது. இந்த மாவட்டத்தின் காவல்துறைப் பணிகள் குறித்து, காவல்துறை கண்காணிப்பாளர் திரு. கு.இராமானுஜம் அவர்களை நேரில் சந்தித்தோம். அப்போது அவர் கூறினார்-

தருமபுரி மாவட்டத்தில் மொத்தம் 1,200 காவல் நிலையங்கள் உள்ளன. இரண்டு உதவி ஆய்வாளர்கள் உட்பட 30 பெண் காவலர்கள் இம்மாவட்டத்தில் பணியாற்றுகிறார்கள். கோட்டப்பட்டி மற்றும் பாகலூர் ஆகிய இரு இடங்களில் அமைக்கப்பட்டிருந்த இரு புறக் காவற்படைகள் (Police Outpost) இவ்வாண்டு முதல் காவல் நிலையங்களாக உயர்த்தப்பட்டிருப்பதாக காவல்துறைக் கண்காணிப்பாளர் தெரிவித்தார்.

தருமபுரி, கிருஷ்ணகிரி, ஓசூர் ஆகிய இடங்களில் மூன்று பெண் காவலர்கள் பிரிவுகளும், போக்குவரத்துக் காவல் நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன.

இம்மாவட்டத்தில் நக்ஸலைட்டுகளின் பிரச்சினை குறித்து வினவிய போது, நாயக்கன்கொட்டாய் என்ற பகுதி ஒரு காலத்தில் நக்ஸலைட்டுகளின் பரம்பரைக் கோட்டையாகத் திகழ்ந்ததாகவும், 'நக்ஸலைட் சிறப்புப் பணிப் பிரிவு (Naxelite Special Duty Wing) என்ற தனிக் காவற்படை ஏற்படுத்தப்பட்டதன் மூலம் நக்ஸலைட் பிரச்சினை தற்போது கட்டுப் படுத்தப்பட்டிருப்பதாகவும் கண்காணிப்பாளர் தெரிவித்தார். இந்தச் சிறப்புக் காவற்படை கடந்த 10 ஆண்டுக் காலங்களாக இம்மாவட்டத்தில் செயல்பட்டு வருகிறது.

தருமபுரி மாவட்டத்தில் சுமார் 300 ஆயுதப்படைக் காவலர்கள் பணியாற்றுகிறார்கள். இவர்களில் 138 காவலர்களுக்கு குடியிருப்புகள் ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளன. 60 குடியிருப்புகள் தற்சமயம் கட்டப்பட்டு வருகின்றன.

மாவட்டக் காவல்துறையின் சாதனையைப் பற்றிக் கேட்டதற்கு, கள்ளத்தனமாக ஆயுதங்கள் தயாரித்த இரண்டு குழுக்கள் கண்டுபிடிக்கப்பட்டு அதிலிருந்த ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதோடு இரு நபர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாகவும், கள்ளச் சாராயம் காய்ச்சுவது கட்டுப்படுத்தப்பட்டிருப்பதாகவும், அதிலும் குறிப்பாக பர்கூர் தொகுதியிலும் அதன் சுற்று வட்டாரங்களிலும் கள்ளச்சாராயம் காய்ச்சுவதும் விற்பதும் அடியோடு நீக்கப்பட்டிருப்பதாகவும், காவல்துறை கண்

## பர்கூர் காவலருக்கு மாதமோர் விருது





காவல்துறைக் கண்காணிப்பாளர்

2. எண்ணெய் உற்பத்தியைப் பெருக்குவது.

3. மாணவர்களிடையே நன்றி உணர்வை ஊட்டுவது.

4. மழை வளம் பெறுவதற்கு வகை காண்பது.

5. பின்தங்கிய பகுதி மக்களின் பொருளாதாரத்தை முன்னேற்றம் அடையச் செய்வது ஆகியவை இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்கள் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் கூறினார்.

பையூர் வேளாண்மை ஆராய்ச்சி மையமானது அல்லும் பகலும் செய்த ஆராய்ச்சியின் பயனாக நெட்டை குட்டை என்ற வீரிய தென்னைக் கன்றுகளை இத்திட்டத்திற்காக அர்ப்பணம் செய்துள்ளதாகக் கூறினார். நெட்டை குட்டை தென்னையின் சிறப்பு என்னவென்றால், நெட்டை என்ற பெண் பூவையும், குட்டை என்ற ஆண் பூவையும் ஒன்றாக இணைத்து வீரிய தென்னை உருவாக்கப்பட்டுள்ளது என்றும், இதனை 6-ஆம் வகுப்பில் படிக்கும் பொழுது பயிரிடத் தொடங்கினால் பள்ளி இறுதி ஆண்டு படிக்கும்பொழுது காய்க்கத் தொடங்கும் என்றும் சுமார் 150 காய்கள் வரை காய்க்கும் என்றும், இதன்மூலம் ரூ.450 முதல் ரூ.600 வரை பெற வாய்ப்புள்ளது என்றும் கூறினார்.

நல்ல தண்ணீர் வசதி உள்ள இடத்தில் பயிரிட வேண்டும். உரம் இட்டு, நன்கு பாதுகாப்புடன் வளர்த்து வந்தால் நல்ல பயனை அடைய முடியும் என்றும் சிறு மாணவர்களுக்கு அதிகப் பயனைத் தரும் என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் கூறினார்.

இதனைத் தொடர்ந்து காவேரிப் பட்டனம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. முனுசாமி, பையூர் வேளாண்மை ஆராய்ச்சி மையப் பேராசிரியர் திரு. ராஜகோபால் வேளாண்மைத் துறை இணை இயக்குநர் சர்தார் மொஹைதீன், பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் திரு. வெங்கட்ராமன் ஆகியோர் இத்திட்டத்தினைப் பாராட்டி உரை ஆற்றினர்.

திரு. இரா. பால்ராஜ்
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
தருமபுரி.

தர்மபுரி:

## சின்னச் சின்ன செய்திகள்



★ பாராமகால் என்பது மைசூர் பீட பூமியை ஒட்டிய - இப்போதுள்ள தருமபுரி மாவட்டத்தின் பெரும்பகுதியைக் கொண்டிருந்த பிரதேசமாகும். இதில் 12 வருவாய்ப் பிரிவுகள் அடங்கியிருந்தன; ஒவ்வொரு பிரிவிலும் ஒவ்வொரு அரண்மனையை உள்ளடக்கிய கோட்டை இருந்தது. இதனால் தான் இப்பகுதிக்குப் 'பாரா மகால்' என்று பெயர். பாரசீக மொழியில் 'பாரா' என்றால் பன்னிரெண்டு; மகால் என்றால் அரண்மனை. இந்தப் பகுதியை உருவாக்கியவன், பெனுகொண்டாவிலிருந்து இப்பகுதிக்கு வந்த ஜெகதேவராயன் என்கிற பாளையக்காரனாவான்.

★ கிருஷ்ணகிரிக்கு வடமேற்கே, இப்போது சிதைந்து காணப்படும் 'தேவர் குந்தாணி' என்ற நகரத்தைத் தலைநகராகக் கொண்டு நாற்பதாண்டுக் காலம் ஆட்சி செய்தான், பேரரசன் வீரராமநாதன் என்பான்.

★ தருமபுரி மாவட்டத்தின் வட எல்லை ஆந்திரப் பிரதேசத்தைச் சேர்ந்த சித்தூர் மாவட்டம் ஆகும்; தெற்கெல்லை சேலம் மாவட்டம்; கிழக்கெல்லை வட ஆர்க்காடு-அம்பேத்கர், தென்னார்க்காடு மாவட்டங்கள்; மேற்கெல்லை கர்நாடகம்.

★ இம்மாவட்டத்தின் வழியாக இரண்டு தேசிய நெடுஞ்சாலைகள் செல்கின்றன. அவை: காசி-கன்னியாகுமரி சாலை, சென்னை- பெங்களூர் சாலை.

★ தருமபுரி மாவட்டத்தின் பாசனத்திற்கு உதவும் ஆறுகள் தென் பெண்ணை ஆறு, சின்னாறு, வாணியாறு, தொப்பையாறு, கல்லாறு, பாலாறு, வரட்டாறு, பாம்பாறு ஆகியவைகளாகும்.

★ இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் உருவானதே கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத் திட்டம். 1954-இல் இதன் கட்டுமானப் பணிகள் தொடங்கின; 1957-இல் முடிவுற்றன. இரண்டு கோடி ரூபாய் மதிப்பீட்டில் உருவான இந்த அணையின் நீளம் 3,290 அடி; உயரம் 76 அடி.

★ ஒசூர் மாவட்டத்தில் உள்ள தொரப்பள்ளி கிராமத்தில் 1878 டிசம்பர் 10-ஆம் நாள் தம் குடும்பத்தின் மூன்றாவது மகனாகப் பிறந்தார் மூதறிஞர் ராஜாஜி.

★ 'காலால் நடந்துவந்தா
காலங் கடக்குமின்னு
ராசா ஒன் மொகம்பார்க்க
காருவெச்சி ஓடிவந்தேன்
வாயார ஒருவார்த்தை
வந்தவளைக் கேக்காமெ
காரேறி வருமுன்னே நீ
தேரேறிப் போயிட்டியே!'

-தருமபுரி மாவட்டக்
கிராமியப் பாடல்.






## தமிழ் நலங் காத்த தகடூர்

க. தியாகசீலன்

அறஞ்செயவி ரும்பென்றாள் ஔவைப் பாட்டி
அவ்வழியில் தருமம்செய் என்னும் எம்மூர்
திறமான தமிழ்வளர்த்த அன்னாள், இந்தத்
திண்புவியில் நெடுங்காலம் வாழ்வதற்கே
நிறங்கறுத்த அருநெல்லிக் கனியைத் தந்தே
நெடியபுகழ் ஈட்டியவன் அதியன் என்று
புறங்கூறும்; அவன்மக்கள் நாங்கள் என்றும்
புறங்கூறோம் வாய்மைவழி வந்தோ ரன்றோ!

ஊர் திரண்டு வந்தாலும் உலையா நெஞ்சம்
உடற்பவித்த சுப்ரமண்ய சிவாவின் ஆன்மா
பூர்த்தியுற்ற இடத்தினிலே கோயில் கண்டு
பூசித்து வருவதுவும் எங்கள் ஊரே!
நீர் திரளும் நினைத்தாலே நெஞ்சம் வேகும்
நெக்குவிடா நெஞ்சோடு செக்கி ழுத்த
தீர்த்தகிரி முதலியார் என்னும் த்யாகத்
தீபத்தை ஏற்றியதும் எங்கள் மண்ணே!

மூதறிஞர் ராஜாஜி பிறந்த திங்கே
மூச்செல்லாம் பேச்செல்லாம் முருக னாக
ஓதிவரும் வாரியார் பெருமா னாரும்
ஓடிவிளை யாடிவளர்ந் திட்ட வூராம்
கோதிலரும் குலமாந்தர் குலவு கின்ற
குமரபுரி தகடூர்பால் உண்டு கண்டீர்!
வேதநெறி விளக்கவந்த விவேகா னந்தர்
வீற்றிருந்த மாளிகையும் இங்கே உண்டு.

பொன்னிநதிப் பெண்ணழகி பூரிப் போடு
புதுப்பாடல் இசைத்தபடி ஒகே னக்கல்
என்னுமிடத் தினிலாடும் எழிலைக் காண
இருவிழிகள் போதாவாம்; நீர்வீழ்ச் சிக்கண்
கன்னியரும் ஆடவரும் அருவி யாடக்
கட்டியுள்ள படித்துறையின் கவிதைப் பாடல்
பண்ணுதற்கு நான்கம்ப னில்லை; நேரில்
பார்த்தவரோ அதனழகில் சொக்கிப் போவார்!

உச்சிமலை மீதினிலே யாருங் காணா
உழையிருந்து விழும்நீர் வீழ்ச்சி கண்டு
மெச்சிமலை வெய்தாரும் உண்டோ? தீர்த்த
மலைப்பெருமை யாராலே வகுத்தற் கேலும்?
வச்சிரத்தோன் வாய்ந்திட்ட அதிகை மன்னன்
வழிபட்ட பழங்கோயில் தானும் உண்ட
கைச்சரத்தால் தூர்ப்பணகை மூக்க றுத்த
கதைவழங்கும் மூர்க்கனூர் மலையிங் குண்டே!

கவிக்கடிமை யாயிருந்த நெடுமா னஞ்சி
கட்டிவைத்த கோட்டையுள்ள இடத்தி னின்று
புவிக்கடியில் பொற்காசு கிடைப்ப தாகப்
பொன்னேரைப் பூட்டுகின்ற உழவர் கூற்றாய்
செவிக்கடிக்க வருகின்ற செய்தி யுண்டு.
சீரழிந்த கோட்டையினைச் செப்பஞ் செய்யின்
துவைக்கடிக்கத் துணிவெண்மை யாதல் போல
தொன்மைமிகு தகடூரின் புகழ்து லங்கும்!

பழியறியாத் தமிழ்க்கிழவி வாழ்ந்த பூமி;
படித்தாரின் துயர்களைந்தே பழக்கப்பட்ட
அழிவறியா அதிகையரின் தாய்நி லத்தை
ஆளற்ற பெண்ணைப்போல் ஆக்கி டாது
தொழிற்சாலை வளம்பெருக்கிக் காட்டி எல்லாத்
துறையினிலும் முன்னேற்றங் காணச் செய்து
எழிற்காடாய்த் தகடூரை இயங்கச் செய்வோர்
இணையடியை முடிசுமந்து இசைப்பேன்
வாழ்த்தே!





சும் வேலைபார்த்து வயசான அப்பா அம்மாவைக் காப்பார்த்தறதுன்னு முடிவு செஞ்சேன்; எங்கெல்லாமோ தேடியும், எம் படிப்புக்கு எந்த வேலையும் நல்லபடியா கெடைக்கல்லே.

''உன்னோட குடும்ப நெலமை தெரிஞ்சா முதலமைச்சர் உதவி செய்வாங்க, எழுதிப்போடுன்னு என்னோட ஃபிரண்டெல்லாம் ஒரு பெட்டிஷன் ஆட்டோ ஓட்ட எடுத்த லைசென்ஸ் காப்பியோட எழுதிப் போட்டேன்க. நான் ஒண்ணும் அவங்க கட்சிக்காரன் இல்லே. அதனால, அதுல நம்பிக்கையில்லாமெதான் இருந்தேன்; ஆனா பாருங்க.. திடீர்னு ஒரு நாள் ஒரு அதிகாரி வந்து, உனக்கு சீஃப் மினிஸ்டர் ஆட்டோ கொடுக்கிறதா முடிவு பண்ணியிருக்காங்கன்னு சொன்னாரு.. திகைச்சுப் போயிட்டேன்; அவர் நேர்லயே என்னை அவங்ககிட்ட அழைச்சிகிட்டுப் போனாரு; ஒரு புது ஆட்டோ.. அவங்களே எனக்குக் குடுத்தாங்க; கெட்டிக்காரத்தனமா வெச்சிகிட்டு நல்லபேரு எடுக்கணும்னாங்க.. 'சரிங்கம்மா'ன்னு தாங்கமுடியாத சந்தோஷத்தோட அவங்க கையாலயே ஆட்டோ சாவியை வாங்கிகிட்டு வந்தேன்; அவங்க தயாள குணத்தெ இப்ப நெனைச்சாலும் எனக்கு ஒடம்பு சிலிர்த்துப் போவுது பாருங்க! இந்த உதவியைக் கால காலத்துக்கும்.. நான் மட்டுமில்ல- என்னோட குடும்பமே மறக்காதுங்க!''



பெட்டிக்கடை சாரதாம்மாள்

திரு. கணபதி ஆச்சாரி என்பவரின் மனைவி திருமதி. சாரதாம்மாளும் மாண்புமிகு முதல்வர் அவர்களிடம்,' பெட்டிக்கடை வைப்பதற்காக நிதியுதவி பெற்றுக் கொண்டவர் ஆவார். நேரில் கேட்டபோது, அவர் சொன்னது இது:

''எனக்கு ரெண்டு பெண்ணுங்க மட்டுந்தானுங்க; அவங்க ரெண்டு பேருக்கும் கண்ணாலம் பண்ணி வெச்சதோட அவர் போய்ச் சேர்ந்துட்டாரு. இட்லி, வடைன்னு வியாபாரம் பண்ணி கஷ்ட சீவனம் பண்ணிக்கிட்டிருந்தேனுங்க; முதலமைச்சர் அம்மாவுக்கு எளுதிப் போடு, ஒதவி பண்ணுவாங்கன்னு எல்லோரும் சொன்னாங்க. ஒரு புள்ளயாண்டான் மூலமா, உள்ளதெச் சொல்லி எளுதி வாங்கி அனுப்புச்சேனுங்க. அந்தப் புண்ணியவதி என்னெக் கூப்புட்டு இந்தா மூணாயிரம் ரூவா, எதுனா பொட்டிக்கடை வெச்சி கண்ணியமா பொழச்சிக்கோன்னாங்க.

''மொகந் தெரிஞ்ச வங்ககூட மூணு ரூவா குடுக்க யோசிக்கிற இந்தக் காலத்துல.. என்னெ யாருன்னே தெரியாத அந்த மவராசி இவ்வளவு பணம் கொடுத்து ஆதரிச்சதை நான் மட்டுமில்லைங்க... எங்க ஊரு ஜனங்க பூராவுமே பாராட்டுதுங்கையா!''- என்று கண்கலங்க, உணர்ச்சி மயமாகக் கூறி, தலைக்கு மேலே இரு கரங்களையும் குவித்தார், மாண்புமிகு முதல்வர் மீதான நன்றியோடு.

'வாட்ச் ரிப்பேரர்' உஸ்மான்

நலிவுற்றோருக்கு உதவத் தயங்க மாட்டார் நம் முதல்வர் என்ற நம்பிக்கையோடு- பர்கூரில் சிறிய தோர் கடிகார ரிப்பேர் கடை வைத்திருக்கும் ஜ.உஸ்மான் என்ற

தருமபுரிக்கு அருகில் லண்டன்?

தருமபுரி மாவட்டத்தில் உள்ளது லண்டன் என்றால் உங்களுக்கு வியப்பாக இருக்கும்!

[illegible]



33-வது வாலிபர் மாண்புமிகு முதல்வரிடம் உதவிகோரி மனுச் செய்திருக்கிறார்.

அங்குள்ள கட்சி அலுவலகத்தில் தரப்பட்ட இந்த மனுவின்மீது தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது; அதன்படி மாண்புமிகு முதல்வர் அவர்களால் ஐயாயிரம் ரூபாய் அவருக்கு நிதியுதவி செய்யப்பட்டிருக்கிறது.

''ஏற்கெனவே கடை வைத்திருக்கும் தங்களுக்கு ஏன் பணம்?'' என்று அவரை அழைத்து விசாரித்தோம் நாம்.

அதற்கு அவர் சொன்னார்:

''போதுமான ஸ்பேர்பார்ட்ஸ் வாங்கி வைக்க வசதியில்லீங்க; அப்பா அம்மாவோட மூணு தங்கைங்களெ நான் காப்பாத்தியாகணும்; சொந்த சொத்துபத்துன்னு எதுவும் இல்லே. சரியான முதல் போட முடியாததால தொழில் வேற மந்தமுங்க சார். எப்பாடு பட்டாலும் மாசாமாசம் வருமானம் நானூறு ரூபாயெத் தாண்டாது. இந்த நிலைமைல எப்படிங்க குடும்பம் நடத்த முடியும்?... அதான் முதலமைச்சர் அம்மாகிட்ட நிதியுதவி கேட்டெழுதினேன்!''

''உமக்குக் கல்யாணம் ஆயாச்சோ?'' என்று நாம் கேட்க அதைக் கேட்டுச் சிரிப்போடு அவர் சொன்னார்-'' இனிமேதான் ஆகணும்; ஏன் இப்படிக் கேட்கறீங்கன்னு எனக்குத் தெரியும்; எங்க குடும்பம் நல்லாயிருக்கணும்கிற நல்ல நினைப்போட அம்மா அவங்க குடுத்த அந்தப் பணத்துல.. அதுக்காக நான் பைசா தொடமாட்டேங்க. எங்க கடைக்கு வந்து பாருங்களேன், இப்ப ஸ்பேர் பார்ட்ஸ் ஏராளமா வாங்கி வெச்சி, தொழில் ஜாம் ஜாம்னு நடக்குது. நம்ப முதலமைச்சருக்கு ஆண்டவன் நீண்ட ஆயுளைக் குடுப்பாருங்க.''



# தமிழறிஞர் பார்வையில் தகடூர்



சில குறிப்புகள்: தகடூர் கொங்கு நாட்டிற்குட்பட்ட பகுதியே

'இன்று நாமக்கல் என்று வழங்கப்படும் ஆரைக்கல் பண்டு அதியமான் அரசர்களின் கீழ் இருந்தது. சங்ககால அதியன் வழி வந்தவர்களில் கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் சோமன் என்னும் அதியேந்திரன் புகழ் மிக்கவன். இதுகாறும் நமக்குக் கிடைத்துள்ள கல்வெட்டுகளின்படி மிகவும் வலிமையுள்ளவனாக கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் ஆண்ட சோமனாகிய அதியேந்திரனே நாமக்கல் குகைக் கோயிலைத் தோற்றுவித்தவன் ஆவான்.'

- 'கலை' என்ற கட்டுரை -
தொல்லியல் துறை இயக்குநர்
இரா. நாகசாமி, எம்.ஏ.,

'இன்று தர்மபுரி எனப் புகழ் பெற்ற பண்டைய தகடூரில் வரலாற்றுச் சிறப்புள்ள இரு கோயில்கள் உள்ளன. இவை இன்னும் வரலாற்று ஆசிரியர்களின் கவனத்தைக் கவரவில்லை. இவை இரண்டும் ஒரே திருச்சுற்றில் உள்ளன. நுளம்பர்கள் 8-ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஆண்டனர். அவர்களால் இவை எடுக்கப்பட்டிருத்தல் வேண்டும். மல்லிகார்ஜுனர் ஆலயச் சிறப்புக் கருவறை முன் உள்ள மண்டபமாகும். இம்மண்டபத் தூண்கள் ஒப்பற்ற சிற்பச் செழுமை வாய்ந்தவை. இவற்றின் மேலுள்ள விதானத்தில் நடனமாடும் பெருமானின் உருவம் எழில் வாய்ந்தது. இருப்பினும் இவை தமிழக மரபில் இல்லாமல் அனந்தப்பூருக்கு அருகில் ஹேமாவதியைத் தலைநகராகக் கொண்ட நுளம்பர் மரபில் உள்ளன. இவை கொங்கில் கண்டு மகிழத்தக்க ஒப்பற்ற கலைப்படைப் பாகும்.'

- மேற்படி கட்டுரை

'பண்டைக் காலத்தில் தகடூர் என்று புகழ் பெற்ற தர்மபுரியில் 9-10-ஆம் நூற்றாண்டுகளில் சமணம் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்தது. நொளம்ப அரசன் மகேந்திரன் காலத்தில் இங்கு ஒரு சமணத் திருக்கோயிலை ஒரு வணிகரின் மக்கள் நிதியண்ணன், சண்டியண்ணன் என்பவர் கட்டினார். இக்கோயிலுக்கு அவர்கள் நிவந்தங்கள் அளித்தனர். கி.பி. 892-ஆம் ஆண்டு (மல்லிகார்ஜுனர் ஆலயத் தூண்) கல்வெட்டுப் பதிவு செய்துள்ளன.'

—கட்டுரை: சமணம் - கொங்கு
நாட்டு சமணத் தலங்கள்
- டாக்டர் அர. சம்பகலட்சுமி

'கொங்கு நாடு பழங்காலத்தில் தற்போதைய கோவை, சேலம், தர்மபுரி ஆகிய மாவட்டங்களையும், மதுரையில் பழனி வட்டத்தையும், திருச்சியில் சில பகுதிகளையும் கொண்ட நாடாகத் திகழ்ந்தது.'

—கட்டுரை: 2000
ஆண்டுகளுக்கு முந்தைய
கொங்கு நாடு.
- சா. குருமூர்த்தி,
எம்.ஏ., எம்.லிட்.,

'ஆத்தூர், ஊத்தங்கரை, வட்டங்கள் ஒழிந்த இன்றைய சேலம்- மாவட்டம், கோவை மாவட்டம், மதுரையில் பழனி வட்டம், திருச்சி மாவட்டத்தில் கரூர் வட்டம் ஆகியவற்றை உட்கொண்ட நிலப்பகுதியே கொங்கு நாடென்று கல்வெட்டு. இலக்கியச் சான்றுகள் குறிப்பிடுகின்றன.'

கட்டுரை: நாட்டுப் பிரிவுகள்
ஒய். சுப்பராயலு,
எம்.ஏ., எம்.லிட்.,

'அதியமான் நெடுமானஞ்சியின் அத்தை மகளாகிய நாகையார் கொங்கு நாட்டில் நங்கை நல்லாரின் புலமைச் செறிவிற்குச் சான்றானவர்.'

—கட்டுரை: பொன்மனி
கொங்கின் புலமை நங்கை
- ஔவை. சு. நடராசன்,
எம்.ஏ.,எம்.லிட்.,

'கொங்கு நாட்டில் அரூர் வட்டத்திலுள்ள அச்சலவாடி, நவிலை, வேப்பாடி, செல்லம் பட்டி, கடத்தூர் நடுகல் சிற்பங்கள் கொங்கு நாட்டுப் புறப்பொருள் சிற்பக் காட்சிகள் சிலவேயாகும்.'

—கட்டுரை: புறப்பொருட்
சிற்பங்கள்
- கல்வெட்டாய்வாளர்,
புது. பேர. வேங்கடராமன்

'கொங்கு நாட்டுள் குறும்பர், எயினர், வேடர் ஆகியோரின் ஆளுகை ஒரு புறமும், மழவர், கோசர், கொங்கர் ஆளுகை ஒரு புறமும் அமைந்து கிடைத்தன.'

—கட்டுரை: சங்க இலக்கியத்தில்
கொங்கு
- க.ப. அறவாணன்,
எம்.ஏ., பி.ஓ.எல்.,

தொகுப்பு:
புலவர் கா.சி. கிருஷ்ணன்.

★ தருமபுரி மாவட்டத்தில் - 'இவத்த' என்பதற்கு இங்கே என்று பொருள். அதேபோல 'எவத்த-' என்றால் எங்கே? - 'அவத்த' என்றால் அங்கே. யாராவது தூரநின்று அழைத்தால் 'ஏன்?' என்போரைவிட 'ஒய்!' என்போரே இங்கு அதிகம். 'எமுட்டு' என்றால் எவ்வளவு என்று பொருள். 'வீசி எறி' என்பதற்கு 'விசாட்டு', 'கடாசு' என்பர். 'கேழ்வரகை' இப்பகுதி மக்கள் 'ஆரியம்' எனக் குறிப்பிடுகிறார்கள்.



# தருமபுரி மாவட்ட காவலர்களின் கரகாட்டம்

தருமபுரி மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளரைச் சந்தித்தபோது அவர் தருமபுரிக் காவலர்களின் கரகாட்டம் பற்றிக் குறிப்பிடத் தவறவில்லை. மாநிலத்திலேயே சிறந்த கரகாட்டக் குழு எங்களுடையது என்றும், டில்லியில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டியின்போது கரகாட்டக் கலைநிகழ்ச்சி நடத்தும் வாய்ப்பு இந்தக் குழுவுக்குக் கிடைத்தது எனவும் கூறிப் பெருமை அடைந்தார்.

காவல்துறையில் பணிபுரிபவர்கள் இரவு பகல் எனக் கருதாமல் கடைமை உணர்வோடு பணியாற்றி, தங்களுக்கு கிடைத்த ஓய்வு நேரத்தை வீணாக்காமல் கலை நிகழ்ச்சி நடத்த ஆர்வம் கொண்டனர். அதன் பயனாகத் தோன்றியது தான் காவலர் கரகாட்டக் குழு.

1981-இல் தருமபுரியில் தொடங்கிய இந்தக் கரகாட்டக் குழுவில், சுமார் 15 உறுப்பினர்கள் உள்ளனர். இந்தக் குழு மாநில, மாவட்ட அளவில் பல கலை நிகழ்ச்சிகளை நடத்திப் பெருமை சேர்த்தது. இந்தக் கரகாட்டக்குழு வெளி மாநிலங்களிலும் கரகாட்டம் நடத்தி அனைவரின் பாராட்டையும் பெற்றது. மாநில, மாவட்ட அளவில் ஆடிக் கொண்டிருந்த இந்தக் கரகாட்டக் குழுவுக்கு டில்லியில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டியின்போது கலை நிகழ்ச்சி நடத்த வாய்ப்புக் கிடைத்தது. உலகின் பல பகுதியிலிருந்தும் வந்த மக்கள் இந்தக் காவலர் கரகாட்டத்தைக் கண்டு களித்தது நமது நாட்டுக்கே ஒரு பெருமையாக இருந்தது. நாடே போற்றிப் புகழும் இந்தக் கரகாட்டம் இன்று தருமபுரி மாவட்டத்தில் காவல்துறை உயர் அலுவலர்களின் பேராதரவில் சிறப்புற்று விளங்குவதாகவும் இந்தக் குழுவின் தலைவர் கூறினார்.

காணிப்பாளர் தெரிவித்தபோது நாம் பெருமை அடைந்தோம். (50 காவலர்களைக் கொண்ட 3 மதுவிலக்கு அமல்படுத்தும் பிரிவுகள் இம்மாவட்டத்தில் செயல்பட்டு வருகின்றன) கடந்த 3 மாதங்களில் கள்ளச் சாராயம் மற்றும் மது பானங்கள் கடத்தலில் ஈடுபட்ட 5 லாரிகள் மற்றும் 2 ஜீப்புகள் கைப்பற்றபட்டுள்ளன.

வத்தல் மலை மீது சுமார் 25 ஏக்கரில் பயிர் செய்யப்பட்டிருந்த கஞ்சா செடிகள் அழிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். தருமபுரி மாவட்டக் காடுகளின் எல்லைகளில் பல ஆண்டுகளாகக் கொள்ளையில் ஈடுபட்டுவந்த 'ஊட்டமலை முத்து' என்ற நபரின் கும்பலைச் சேர்ந்த இருவரும், வங்கிக் கடன் வாங்கித் தருவதாகக் கூறி மக்களை ஏமாற்றியும், பெண்களைக் கற்பழித்தும் வந்த மாராண்டஹள்ளி கிராமத்தைச் சேர்ந்த அன்வர் பாஷா என்ற நபரும் சமீபத்தில் கைது செய்யப்பட்டிருப்பது . காவல்துறையின் சாதனையே ஆகும். பொதுவாக, கடந்த ஆண்டைக் காட்டிலும் இவ்வாண்டு குற்றங்கள் குறைந்திருப்பதாகக் கண்காணிப்பாளர் கூறினார்.

மாண்புமிகு முதல்வர் அவர்களால் சமீபத்தில் அறிமுகம் செய்யப்பட்ட காவல் துறையின் 'மக்கள் குறை தீர்க்கும் நாள்' பற்றிக் குறிப்பிட்டுப் பேசுகையில், மாதத்தின் முதல் திங்கட்கிழமையில் தருமபுரியிலும், இரண்டாவது திங்கட்கிழமை அரூரிலும், மூன்றாவது திங்கட்கிழமை கிருஷ்ணகிரியிலும், நான்காவது திங்கட்கிழமை ஓசூரிலும் மக்கள் குறை தீர்க்கும் நாள் நடத்தப்பட்டு இதுவரை சுமார் 50 மனுக்கள் பெறப்பட்டு நடவடிக்கை எடுக்கப் பட்டிருப்பதாகக் காவல்துறைக் கண்காணிப்பாளர் தெரிவித்தார்.

இம்மாவட்டத்திலுள்ள தருமபுரி, ஓசூர், கிருஷ்ணகிரி, பாலக்கோடு, தேன்கனிக்கோட்டை, அரூர் மற்றும் கடத்தூர் ஆகிய இடங்களிலுள்ள 7 காவல் நிலையங்களுக்கு 7 புதிய ஜீப் வாகனங்களையும், இம்மாவட்டத்திற்கெனச் சில புதிய நவீன ஆயுதங்களையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இவ்வாண்டு வழங்கியிருக்கிறார்.

தருமபுரி மாவட்டத்தில் பல மொழி, இன, மதத்தைச் சேர்ந்த மக்கள் வசித்தாலும் சமீபத்திய அயோத்தியா கலவரத்தின்போது இந்த மாவட்டத்தில் எந்தப் பகுதியிலும் எந்தவிதமான ஒரு சிறு அசம்பாவிதமும் நடைபெறவில்லை என மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர் தெரிவித்தபோது, அதை நம்மால் பாராட்டாமல் இருக்க முடியவில்லை.

பேட்டியின் முடிவில் ஏதேனும் சிறப்புச் செய்தி என்று கேட்டதற்கு, இந்த மாவட்டத்தில் நன்கு பராமரிக்கப்பட்ட காவல் நிலையமாக, பர்கூர் காவல்நிலையம் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாகவும், பர்கூர் காவல்நிலையத்தில் பணியாற்றும் திரு நீலகண்டன் என்ற காவலருக்கு இவ்வாண்டின் பாரதப் பிரதமரின் உயிர்காப்பு விருது (Life Saving Medal) கிடைத்திருப்பதாகவும் கூறினார் மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர் திரு இராமானுஜம்.

பேட்டி — ஜே.சந்திரன்





# பர்கூர் பயனாளிகள்

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தம்முடைய சட்டமன்றத் தொகுதி மக்கள் நலம் பெறுவதிலும் வளம் பெறுவதிலும் பெரிதும் ஆர்வம் கொண்டுள்ளார். இத்தொகுதியில் அரசு நிதி ஆதாரத்தைக் கொண்டு ஆற்றிவரும். நற்பணிகள் தவிர, தமது சொந்த நிதியிலிருந்தும் அவர் புரிந்துவரும் பேருதவிகளும் இதை நமக்கு உணர்த்தும். இந்த வகையில் நலம்பெற்ற நலிவுற்றோர் சிலரை நாம் நேரில் சந்தித்துப் பேசியபோது அவர்கள் தெரிவித்த கருத்துகளின் தொகுப்புக் கட்டுரை இது.

## ஆட்டோ ஓட்டுநர் அபுபக்கர்

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தமது சொந்த நிதியிலிருந்து அளித்த உதவிபெற்ற இளைஞர் திரு. ஏ.அபுபக்கர். வேலையற்றிருந்த இவருக்கு ஒரு ஆட்டோரிக்ஷா வழங்கப்பட்டுள்ளது. அவரை அழைத்து விசாரித்தபோது நன்றிப் பெருக்கோடு அவர் தெரிவித்ததாவது:



''பர்கூர், செஞ்சி செட்டித் தெருவுல இருக்கிற நான் பத்தாங் கிளாஸ் வரைக்கும்தான் படிச்சிருக்கேன்; மேல படிக்கிற அளவுக்கு வசதி இல்லீங்க. அதனால... ஏதாச்

## இவ்வளவு பெரிய ஆலமரமா!

அடையாறு ஆலமரமல்ல இது; அதன் வாரிசு போல ஒசூர் கால்நடைப் பண்ணைக்குள்ளே உயர வளர்ந்து கொடிபோலப் பரவி ஏராளமான விழுதுகளை விட்டிருக்கும் மிகப்பெரிய ஆலமரம். வயது 300 ஆண்டுகள்; இதன் பரப்பளவோ ஒன்றரை ஏக்கருக்கு மேல்!



# தொட்டில்!

— தகடூரான்

"ஏணையில புள்ளய போட்டு ஆட்டுக்கிறேன். செத்த வந்து ஆட்டிவுடு பாட்டி. களி ஓல கொதிக்குது மாவு போட்டு கெலாறணும்" என்று பாப்பாத்தி கூப்பிட்டாள். எதிர் வீட்டுத் திண்ணையில் கால் நீட்டி உட்கார்ந்திருந்த காமாட்சிப் பாட்டி எழுந்து சென்றாள்.

"லொலொ லொலொ லொலோ-ஆயி! தூங்குடா கண்ணா", என்று தாலாட்டுப் பாடினாள் பாட்டி.

அடுப்படியில் அமர்ந்திருந்த பாப்பாத்தி, "சமாச்சாரம் தெரியுமா பாட்டி" என்றாள்.

"என்றி சொல்ற...?"

"நம்ம செவத்தாம் பேத்திக்கு பொண்ணு பொறந்து செத்துப் போச்சின்னு போன வாரம் சொன்னாங்கில்ல..."

"ஆமா..."

"அது இல்லியாம்; பொறந்தது பொட்டன்னு தெரிஞ்சதும் கூடைய கழுத்து சாவடிச்சிட்டாங்களாம். இப்பதான் ஒவ்வொன்னா வெளி வருது".

"அட கசமாலம் புடிச்சவங்களே, நாசமா போவ... நா கூட சாவுக்கு போயிருந்தேன். புள்ள செக்கச் செவேல்னு இந்துச்சி. என்னுமோ அதுக்கு ஆயுசு அம் முட்டுதான்னு நெனச்சேன். இப்ப இப்படியா சேதி",

"நீ எங்கியாச்சும் ஒலாரி வைக்காதே. அப்பாலித்துக்கும் லக லகன்னு புடிச்சுக்குவாங்க"

"நா வம்பு சண்டைக்கும் போறதில்ல. வந்த சண்டைய உட்றதுமில்ல. நம்முளுக்கு எதுக்குடி அந்த காச்சாரம். அத வுடு. நீ சட்டு புட்டுனு வேலய கவனி. களிய பாத்து கெலாறு. கட்டி உலப் போவுது. உங்க ஊட்டுக்காரன் வந்தா லொள்லொள்ன்பான்" என்று பெருமூச்சு விட்டாள் பாட்டி.

வீட்டுக்குள் சிம்மினி விளக்கு காற்றுக்கு அலை பாய்ந்தது. பாட்டியின் மனமும் அப்படித்தான்.

"படுபாவிப் பசங்க, இப்பல்லாம் பொண்ணு பொறந்தா என்னமோ குடி முழுவிப் போனாப் படி அங்கலாய்க்கறாங்க.

சாவடிக்க தயங்க மாட்டாங்களே. பாவம் புண்ணியம் பாத்த காலமெல்லாம் மல ஏறிப் போச்சு. மாரியாத்தா, படவட்டா அவங்களுக்கு ந தாண்டியம்மா கூலி கொடுக்கணும்" என்று மனதில் நினைத்துக் கொண்டாள். மௌனமாக இருந்தாள்.

"ஆயா! என்னா கம்முனு ஒக்காந்திட்ட" என்ற குரல் அவளை மீண்டும் நிலைக்குக் கொண்டு வந்தது.

"வாடா! இப்பத்தான் வந்தியா... எம் மனசே கலஞ்சி போச்சிடாப்பா... பாலா போன மனசு கல்லா இல்லலே... வருட்டா! அடியே! பாப்பாத்தி இவனுக்கு கின்னி எடுத்து வைடி".

"என்ன பாட்டி சொல்ற?"

"ஒன்னுமில்லடா. நீ போய் சாப்புடு"

"நீயும் களி தின்னுட்டுப் போ"

"ராத்திரில சாப்ட்டா இப்பெல்லா வவுரு பிர்னு ஆவுது நா ஊட்டுக்குப் போறேன்" என்று கூறியபடி நடந்தாள்.

திண்ணையில் விரித்திருந்த கம்பளியைச் சரி செய்தாள். உட்கார்ந்தாள்; சுவரில் சாய்ந்தாள். புகையிலைத் துண்டை வாயிலிட்டு மெள்ளத் தொடங்கினாள்.

"வரவர ஆம்பளப் பசங்க அக்குருமம் தாஸ்தியாப் போயிடுச்சு. அந்த காலத்தில பரிசம் போட்டு பொண்ண கட்டிப்பாங்க. இப்ப என்னடான்னா பொண்ண கட்டிக்கிறதுக்கு அத குடு இத குடுன்னு பிச்சி பேனு பாக்கறாங்க... அதுக் கோசரம் பொட்ட புள்ளயே பொறக்கக் கூடாதுங்கறதா. ஈவு எரக்கமே இல்லாமப் போச்சே. எங்க பாரு இதே கத..." என்று நினைத்த பாட்டியின் மனதில் மற்றொரு காட்சி இரண்டு வாரங்களுக்கு முன் நடந்தது, வந்தது.

அன்று வெள்ளிக்கிழமை. காலையில் குளித்துவிட்டு ஊர்க் கோடியில் உள்ள மாரியம்மன் கோயிலுக்குச் சென்றாள். அப்பொழுது... கார் ஒன்று வந்து கோயிலருகே நின்றது. அதிலிருந்து நல்ல உடல் கட்டும் அழகும் கூடிய ஒரு ஜோடி இறங்கினர். கையில் பூமாலையுடன் அவன் நடந்து வர, பழத்தட்டை ஏந்தி பட்டுப்புடவை சரசரக்க அவள் தொடர்ந்து வந்தாள்.

"பெரியெடத்துப் புள்ளிங் களாட்டம் கீது" என்று தனக்குள் சொல்லிக் கொண்டு தள்ளி நின்றாள். பாட்டி, சில பெண்களும் ஆண்களும் "யார்ரா இது" என்று முணுமுணுத்தபடி தூரத்தில் நின்று பார்க்கத் தொடங்கினர்.

வந்தவர்கள் எவரையும் கவனிக்கவில்லை. அம்மனுக்குப் பூஜை செய்தனர். நீண்டு விழுந்து அவன் வணங்க, மண்டியிட்டு அவள் வணங்கினாள். பிறகு இருவரும் பழத்தட்டில் வைத்திருந்த துணித் துண்டை எடுத்தனர். கோயில் பக்கமிருந்த மரத்தருகே சென்றனர். கிளையில் கட்டித் தொங்க விட்டுத் திரும்பினர்! அம்மனை மீண்டும் வளங்கினர்.

"ஓ! அப்படியா சமாசாரம். புள்ள வரம் கேக்க வந்தவங்களா அட பாவமே! மாரியாத்தா தங்கச் செலையாட்டம் கீறவங்களுக்கு இப்டி கொற வச்சிட்டியே, தாயே! கண்ணைத் தொறந்து பாரம்மா" என்று கண்களை மூடி மனதில் வேண்டிக் கொண்டாள் பாட்டி. மீண்டும் அவள் கண்ணைத் திறந்த்



பொழுது அவளையே அவன் பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டாள்.

''நீங்க... கீர வித்த காமாட்சியம்மா தானே'' - அவன் கேட்டான்.

''ஆமா சாமி ... இப்பெல்லாம் ஊர் சுத்த முடிறிதில்ல. நாலஞ்சி வருஷமா நிப்பாட்டிட்டேன். ஆமா, நீங்க யாரு சாமி?''

''நா சாமி இல்ல பாட்டி... நா உம் பேரன் மாதிரி, டவுன்ல ராஜா வீதில ராமசாமி இருக்காரே அவரோட மகன். நீங்க தானே எங்க வீட்டுக்கு ரெகுலரா கீரை கொடுப்பீங்க''.

''அப்டியாப்பா... ரொம்ப சந்தோஷம்பா! அம்மா நல்லா கீறாங்களா... ஒங்கம்மா தங்கம்னா தங்கந்தான்''.

''எல்லோரும் நல்லா இருக்கோம். இவ எஞ் சம்சாரம்''.

காமாட்சிப் பாட்டியை அவள் வணங்கினாள்.

''ஐயய்ய... என்ன போயி கும்படறயேம்மா. ராஜா ராணி மாதிரி கீறவங்களுக்கு என்ன கொறன்னு புரிஞ்சிகிட்டேன். சாமி கைவுடாதும்மா, நல்லா கும்புட்டுக்கோ...''

''எவ்ளவு இருந்து என்னம்மா, வாரிசில்லாத குறை பெரிய குறை. என்னால தாங்க முடியும். இவளாலே...''

''பொம்பளைக்கு புள்ள பெத்து எடுத்து கொஞ்சற சுகம் பெரிய சுகம்பா.''

''ஆமாம்மா... இன்னைக்கு டாக்டர பார்க்க வேலூர் புறப்படறம். இந்த அம்ம வேண்டிக்கச் சொன்னாங்க. அதுக்குத்தான் வந்தோம்.''

''நா சொல்றேன், சாமி நல்ல வழி காட்டும். ஏதோ... ஒரு வழிய காட்டும் சந்தோஷமா போய்ட்டு வாங்க, சாமி''.

அவர்கள் மகிழ்ச்சி சிரிப்பைக் காட்டியபடி வெற்றிலைப் பாக்கு பழம் பூ கொடுத்தார்கள். பாட்டி மடியேந்தி வாங்கிக் கொண்டாள்.

''டவுனுக்கு வந்தா வீட்டுப்பக்கம் வாம்மா. உங்க வாக்குப்படி நடந்தா நானே வருவேன்'' என்று கூறியபடி

'மானே மருக்கொழுந்தே
ஆவாரம் பூக்கொழுந்தே
தேனேஎன் திணைக்கருதே
ஆசைக் கண்ணாட்டி - நம்ம
தேடித்தான் சோளக்கொல்லை
ஏங்குது கைகாட்டி!'

- தருமபுரி மாவட்டக்
கிராமியப் பாடல்

அவன் நடக்க, அவளும் நடந்தாள். பாட்டி பார்த்தபடி நின்றாள்.

இந்தக் காட்சி மறைந்தது. காமாட்சிப் பாட்டி புகையிலை எச்சிலை 'பிசுக்'கென்று உமிழ்ந்தாள். புகையிலையைக் காரித் துப்பினாள். நீண்டு படுத்தாள்.

''புள்ள பொறந்தா பொட்டைன்னு பொதார்ல போட்டி நாதாரியும் கீறான். புள்ள இல்லையேன்னு சாமிய கும்டற மவராசனும் கீறான்.'' என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள். ''மாரியாத்தா ஒன்ன கும்முட்டுட்டு போனவங்களுக்கு என்னா வழி காட்டனயோ?'' என்று நினைத்தவள் நினைவில் தொட்டில் ஒன்று ஆடத் தொடங்கியது. ''ஆராரோ ஆரிரோ'' என்று தாலாட்டுப் பாடுவதாகவும் உணர்ந்தாள்.

இது நடந்து இரண்டு நாள் ஆயிருக்கும்.

விடியற்காலை காமாட்சிப் பாட்டி கண் விழித்தபோது பாப்பாத்தியின் கணவன் வாந்தி எடுத்துக் கொண்டிருந்தான்.

''என்னடா ஒக்காளம் வருதா'' என்றெழுந்தாள்; வந்தாள்.

''ஒன்னுமில்ல பாட்டி - நீ போய் படு''

''தூக்கம் எங்க வரப் போவுது. அடியே பாப்பாத்தி - நீ என்னடி பண்ற உள்ள...'' பாட்டி அழைத்தாள்.

பாப்பாத்தி வெளியே வந்தாள். ''அடியே! பாட்டிய உள்ள இழுத்துனு வா, என்னுமோ ஏதோன்னு ஊரக் கூட்டிப்புடும்'' என்று அவள் காதருகே கூறினான். பாப்பாத்தியின் கணவன் உள்ளே நடந்தான்.

''என்னடி அவனுக்கு...?'' என்ற பாட்டியை, 'உஸ்... உள்ளவா' என்று அழைத்துச் சென்றாள்.

''ஒன்னுமில்ல பாட்டி, ஒரு காரியமாயி போச்சி. காலும் ஓடுல கையும் ஓடுல'' என்றான்.

'' என்னடா பண்ணிபுட்ட...''

''ஒண்ணும் தப்பு பண்ணல பாட்டி. எங்கியும் ஒலறிபுடாதே. ராத்திரி கோம்பைக்கு சாராயம் காய்ச்சறவங்களுக்கு வெல்ல மூட்டத் தூக்கினு வந்தோம். கூட வந்தவங்க பிரிஞ்சிட்ட பின்னாடி நா வந்துனேந்தேன். நம்ம ஊருக்கு கொஞ்ச தூரத்துல 'கியாங்கியாங்'னு கொளந்த சத்தம். சுத்தி முத்தி பாத்தேன். செடி பக்கத்துல துணி மூட்ட; தொட்டுப் பார்த்தேன். பச்ச கொளந்த என்ன பண்றது?'' ஒன்னும் ஓடுல. சட்டுனு ஆஸ்பத்திரி தொட்டில் ஞாபகம். அத தூக்கினு பரக்க பரக்க போயி தொட்டில்ல வச்சனா யார்ராதுன்னு யாரோ கூப்டாங்க. அம்முட்டுதான். அங்க புடிச்ச ஓட்டம். சந்து பொந்துல பூந்து ஓடியாந்து ஊட்லே புகுந்துகினேன் கொலப்பம் - ஒரே கொலப்பம் - கொமட்டல்...''

''ஒரு உசுர காப்பாத்திட்டடா'' என்று பெருமையாக அவனைத் தட்டிக் கொடுத்தாள். பாட்டி.

பகல் 11 மணியிருக்கும் ராமசாமியின் மகன் காரில் வந்திறங்கினான் காமாட்சிப் பாட்டியைப் பார்த்தான். ''வீட்டுக்கு அழைச்சிட்டுப் போக வந்திருக்கேம்மா. சாமி வழி காட்டும்னு சொன்னிங்க. வழி காட்டிச்சு. நாங்க வேலூர் போனம். எங்க ரண்டு பேருக்கும் குழந்தை பாக்யமில்லன்னு சொல்லிட்டாங்க. டாக்டர் சொன்னதிற்குப் பிறகு யோசிச்சோம். அரசு அறிவித்துள்ள தொட்டில் திட்டம் நினைவு வந்தது. நம்ம மருத்துவ மனையில் சொல்லி வைத்தோம். இன்றுதான் வழி பிறந்தது; ஒரு பெண் குழந்தெ கிடைச்சிது'' என்றான்.

காமாட்சி பாட்டி காதில் ஆராரோ ஒலிக்க, மனதில் ஒரு தொட்டில் ஆடத் தொடங்கியது; அவர்கள் வந்த காரைப் பார்த்தாள்; அதற்குள் ஒரு சின்ன அரும்பு சுகமாகத் தூங்கிக் கொண்டிருந்தது.

''பெண்களுக்குச் சம உரிமை பெண் சிசுக்களுக்குப் பாதுகாப்பு'' என்று பேச்சளவோடு நில்லாமல் அதைச் செய்துகாட்டி வரும் அரசின் திட்டத்தைக் காமாட்சிப் பாட்டியின் உள்மனம் பாராட்டியது.



## தர்மபுரி மாவட்ட




புடைப்புச் சிற்பத்தில் இராமாயணம்

### தி. சுப்பிரமணியன்

சங்க காலத்தில் கோயில்கள் மண், மரம், செங்கற்கள் ஆகியவற்றைக் கொண்டு கட்டப்பட்டன. இவை காலத்தால் அழியக்கூடிய பொருட்களாக இருந்த காரணத்தால்தான் சங்க காலத்தில் எடுக்கப்பட்ட கோயில்கள் அழிந்து விட்டன. இத்தகைய நிலையை மாற்றவே பல்லவ மன்னன் மகேந்திர வர்மன் மண், சுதை, செங்கல், மரம் ஆகிய பொருட்களை உபயோகிக்காமல் கல்லால் கோயில் எடுத்தேன் என்று கல்வெட்டு மூலம் கூறியுள்ளான்.

தருமபுரி பகுதியில் பல்லவர் காலம் தொட்டுக் கோயில்கள் எடுக்கப்பட்டுள்ளன. மலைசூழ்ந்த இம்மாவட்டத்தில், குன்றம் தோறும் சிறுசிறு கோயில்கள் காணப்படுகின்றன; அவற்றுள் சில புகழ்பெற்றவை.

#### தீர்த்தமலை

குகைக் கோயில்களை வடித்த பல்லவ மன்னர்கள் அருருக்கு அருகிலுள்ள தீர்த்தமலையில் கொற்றவை புடைப்புச் சிற்பம் ஒன்றைச் செதுக்கியுள்ளனர். இதில் ''ஸ்ரீ பகவதி குறுச்சூலி'' என்று வட்டெழுத்தில் கல்வெட்டு ஒன்றும் உள்ளது. கி.பி. 8-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கொற்றவை எட்டுக் கரங்களுடனும், பல்லவர் காலச் சிற்பச் சாயலிலும் காணப்படுகின்றாள்.

இங்குள்ள சிவன் கோயில் தீர்த்தகிரி ஈஸ்வரர் என்று பெயர் பெற்றுள்ளது. இங்கு கி.பி. 1012 முதல் கல்வெட்டுக்கள் உள்ளன. இங்கு கருவறை, அர்த்த மண்டபம், முகமண்டபம், பலிபீடம், துவஜஸ்தம்பம், சேனபுரம், திருசுற்று ஆகியன அழகாக அமைந்துள்ளன. விமானத்தில் சுதை உருவங்கள் பிற்காலத்தில்



செய்யப்பட்டவை. முதல் இராசேந்திரன் இக்கோயிலில் சேத்திரப்பாலர், சண்டிகேஸ்வரர் ஆகிய தெய்வங்களுக்கு தனிதனி கோயில்கள் எடுத்துள்ளார். மண்டபத்திலுள்ள தூண்கள், கபோதம் போன்றவை பிற்காலத்தில் எடுக்கப்பட்டவை.

### தருமபுரிகோட்டைக் கோயில்:

கி.பி. 8-ஆம் நூற்றாண்டிற்கு முன்னர் இந்து, சமண - சமயங்கள் தருமபுரி பகுதியில் இருந்தன. இங்கு சமண சமயக் கோயில் இருந்ததாகக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. அருள்மிகு மல்லிகார்சுனர் கோயில், காமாட்சி அம்மன் கோயில் ஆகிய இரு கோயில்கள் கோட்டைக் கோயில்களாகக் காணப்படுகின்றன.

காமாட்சியம்மன் கோயிலில் உள்ள ஒரு



அதியமான் கோட்டை கோயில்

தூண் 'தொங்கும் தூண்' எனப்படுகிறது. கீழே எவ்விதப் பிடிமானமும் இல்லாதிருப்பதே இதற்குக் காரணம்.

இக்கோயிலிலுள்ள ஆறு தூண்கள் கலை அழகு வாய்ந்தவை. தூண்களின் அடிப்பாகம் சதுரமாகவும், அதைத் தொடர்ந்து எண்பட்டை, தாமம், குடம், போதிகை ஆகியன கட்டடக் கலைக்குழு எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றன. தூண்களில் கஜசம்ஹாரமூர்த்தி, அடிமுடி காணா அண்ணல், பூவராகமூர்த்தியாக திருமால், இசைக் கலைஞர்கள்,



சந்திரசூடேஸ்வரர் கோயில்

நடனமாதர்கள் போன்ற காட்சிகள் வழங்கப்பட்டுள்ளன. மண்டபத்தின்மேல் விதானத்திலுள்ள திக்குபாலர்கள் வாகனங்களின்மேல் அமர்ந்த நிலையில் காட்டப்பட்டுள்ளனர். இவை நுளம்பர் கால கலைக்கு சிறந்த எடுத்துக்காட்டுகளாக உள்ளன.

காமாட்சியம்மன் கோயிலின் அதிட்டானத்தில் இராமாயணப் புடைப்புச் சிற்பங்கள் கோயிலைச் சுற்றிலும் செதுக்கப்பட்டுள்ளன. இவை உயிரோட்டம் உள்ளவை. இதில் நுளம்பர்களின் கலையுடன் சோழர், விஜய நகர மன்னர்களின் கலை



தொங்கும் தூண்

லுள்ள ஓவியங்கள் குறிப்பிடத்தக்கன. இதில் இராமாயண காட்சிகள் தெலுங்கு விளக்கங்களுடன் தீட்டப்பட்டுள்ளன. மையப்பகுதியில் திருமாலின் விஸ்வரூபம் காணப்படுகின்றது. மேலும் நடனமாதர்கள், சண்டைக் காட்சிகள் போன்ற ஓவியங்கள் தத்ரூபமாகக் காணப்படுகின்றன.

யழகும் காணப்படுகின்றது.

ஈஸ்வரன் சந்நிதி கோபுரத்தைவிட, அம்மன் சந்நிதிக் கோபுரம் உயரமாகச் காணப்படுகிறது.

### அதியமான் கோட்டைக் கோயில்

அதியமான் கோட்டை என்றதும், ஏதோ கோட்டை இருப்பதாகக் கற்பனை செய்து கொள்ள வேண்டாம்; முன்பு கோட்டை இருந்ததற்கான தடயம் உள்ளது. அதியமான் கோட்டையிலுள்ள சென்ன ராயசாமி கோயில் விஜய நகர மன்னர்களால் கட்டப்பட்டது. இக்கோயி



காமாட்சியம்மன் கோயில் மேல்விதானம்

கோயிலின் கருவறையில் விஷ்ணு தன் தேவியர்களுடன் காட்சியளிக்கின்றார். கருவறையின் விமானம், கோபுரம், திருச்சுற்று போன்றவை பிற்காலத்தில் எடுக்கப்பட்டவை.

பெண்ணேஸ்வர மடம் கோயில், கம்பை நல்லூர் கோயில் ஆகியன வரலாற்றுச் சிறப்புடையன.

... உள்ள எல்லா ... நிலைநிறுத்துகின்றது.

—இராமலிங்க...





தளி ஒன்றியத்தில்

# ஒரு முன்னோடித் திட்டம்

எஸ்.கே. பிரபாகர், இ.ஆ.ப.,
சார் ஆட்சியர் மற்றும் திட்ட அலுவலர்

ஒரு குறிப்பிட்ட மக்களுக்காக திட்டம் உருவாக்கப்பட்டு அது முனைப்புடன் செயல்படுத்தப்பட்டால் அங்குள்ள மக்கள் வறுமைக் கோட்டிலிருந்து வெளிவந்து, வாழ்க்கைத் தரம் உயர்ந்து, கூடுதல் வருவாயுடன் சிறப்பாக வாழ்வார்கள் என்பதற்கு ஒரு சான்று தளி ஊராட்சி ஒன்றிய மக்கள்.

தருமபுரி மாவட்டத்திலுள்ள தளி வட்டாரத்தில் பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பு (International Labour Organisation) மூலமாக ஒரு 'சிறப்புப் பொதுப் பணித் திட்டம்' செயல்பட்டு வருகிறது. இந்தியாவில், தமிழ்நாட்டில், தளி வட்டாரம் மற்றும் மேற்கு வங்காளத்தில் பந்துவான் வட்டாரம் ஆகிய இரு இடங்களில் மட்டுமே இச்சிறப்புத் திட்டம் செயல்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

தருமபுரி மாவட்டத்தில் ஒரு பின்தங்கிய பகுதியாகும் தளி ஒன்றியம். ஏனைய கிராம வளர்ச்சித் திட்டங்களைப் போன்று இத்திட்டத்தின் மூலம் சாலை வசதி, ஏரிகள் பராமரிப்பு, பட்டு வளர்ப்பு, காடு வளர்ப்பு சமுதாயக் கிணறுகள் அமைத்தல் போன்ற வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டாலும், இதர திட்டங்களில் இத்திட்டம் சற்று மாறுபட்டுள்ளது.

பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பு, இத்திட்டத்தை ஒரு முன்னோடித் திட்டமாகவும், (Pilot Project) இத்திட்டத்தின் அனுபவம், வழி முறைகள் முதலானவைகளைக் கொண்டு இதர வட்டாரப் பணிகளுக்கு விரிவுபடுத்தவும், கிராம வளர்ச்சி திட்டமிடுதலில் ஒரு புதிய யுக்தியைக் கையாள்வதற்கும், முயன்று வருகிறது.

முதலில், பணிகளைத் தேர்ந்து எடுத்து அப்பணிகளை மேற்கொள்வதற்கு அந்தந்தக் கிராம மக்களையே உட்படுத்துவதும், தேர்ந்தெடுத்த வேலைத் திட்டங்கள் இதர அரசு மற்றும் அரசு சார்பில்லா இதரத் திட்டங்களுடன் ஒருங்கிணைந்து செயல்படச் செய்வதும் இம் முன்னோடித் திட்டத்தின் தலையாய நோக்கமாகும். பின்னர் உள்ளூர் ஏழை மக்களைக் கொண்டே செயல்படுத்தப்படும் இப்பணிகளில், தொழிலாளர் நலன், அவர்களின் உரிமைகள் ஆகியவற்றைப் பாதுகாக்கத் தக்க வகையில் செயல்படுவது இதன் சிறப்பு அம்சமாகும். இந்தச் சிறப்பு முன்னோடித் திட்டத்தின் திட்ட அலுவலராக ஒரு சார் ஆட்சியர் நியமிக்கப்பட்டுள்ளார். டேனிடா (DANIDA) நிறுவனத்தின் மூலம் நன்கொடை பெற்று அதனைத் தருமபுரி மாவட்ட வளர்ச்சிக் கழகத்திற்கு, பன்னாட்டுத் தொழிலாளர் நிறுவனம் அளிக்கிறது. மாவட்ட வளர்ச்சிக் கழகம் இந்த நிதியை, சார் ஆட்சியர் மற்றும் திட்ட அலுவலருக்குத் தருகிறது. பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பைச் சேர்ந்த தேசிய நிபுணர் இத்திட்டத்தை மேற்பார்வையிடுகிறார்.



தளி வட்டாரத்தில் இச்சிறப்புத் திட்டம் 1.1.1989-இல் தொடங்கி மூன்று ஆண்டுகள் செயல்பட அனுமதி வழங்கப்பட்டு ரூ.15,240 இலட்சம், முதலில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் 30.6.'93 வரை இத்திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் மூலம் கிராமப்புற ஏழை மக்களுக்குக் கூடுதல் வேலைவாய்ப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதுடன் கிராமங்களுக்கு நிலையான சொத்துக்கள் உண்டாக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

நீர்ப்பிடிப்புப் பகுதி மேம்பாடு (Watershed development) திட்டத்தின்கீழ் 24 பணிகளும், சாலை மேம்பாட்டிற்காக முக்கிய 4 சாலைகளும், நீர்ப்பாசன மேம்பாட்டின் கீழ் 10 ஏரிகளில் பாசனக் கால்வாய் சீர்திருத்தப் பணியும் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

மண்வளப் பாதுகாப்பு மற்றும் நீர் மேலாண்மைத் திட்டத்தின்கீழ் அச்சுபாலு, மல்லிகார்ஜினாதுர்கம், தளி ஆகிய 3 நீர்ப்பிடிப்பு மையங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ரூ.16.49 இலட்சம் செலவில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1992-'93-இல் 4 கசிவுநீர்க் குட்டைகள் மற்றும் ஒரு தடுப்பு அணை கட்ட ரூ.11.37 இலட்சம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தளி வட்டாரம் மரங்கள் வளருவதற்கு உரிய தட்பவெப்ப சூழ்நிலையைச் சாதகமாகக் கொண்டிருப்பதால், சுமார் 1,000 ஏக்கர் நிலப்பரப்பில் வருமான இன மரங்கள் (economic trees) நடப்பட்டுள்ளன. அத்துடன் ஏழை விவசாயிகள் பட்டு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் முதல் மூன்று ஆண்டுகளில் 774 பயனாளிகள் பயன்பெறும் வகையில் 580 ஏக்கர் நிலப்பரப்பில் பட்டு மர நாற்றங்கால் அமைக்கப்பட்டுள்ளது. சுமார் 700 விவசாயிகளுக்குப் பட்டு வளர்ப்பு சம்பந்தமாகப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. கிராமப்புற மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், நார் மூலம் கயிறு திரித்தல், மூங்கில் கூடை முடைதல், ஊதுபத்தி தயாரித்தல், தேனீ வளர்த்தல், குழந்தைகள் பராமரிப்புப் போன்ற பணிகளுக்குப் பயிற்சி கொடுக்கப்பட்டுள்ளது.

இதைத்தவிர, இத்திட்டத்தின்கீழ் செய்து முடிக்கப்பட்ட பணிகளை 'கிராம மக்களே பராமரிக்க வேண்டும்' என்ற கோட்பாட்டினை வலியுறுத்த, கிராம மக்களிடையே விழிப்புணர்ச்சி தோற்றுவிக்கப்பட்டுள்ளது. பாசனத் திட்டங்களைப் பராமரிக்க "நீர்ப்பாசனக் குழுக்கள்" அமைக்கப்பட்டு, நிர்வாகத் திறமையை மேம்படுத்த போதிய பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.





இந்தச் சிறப்பு முன்னோடித் திட்டத்தின்கீழ் கடந்த மூன்று ஆண்டுகளில் சுமார் மூன்று இலட்ச மனித சக்தி நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இதில் 51 சதவிகிதம் பெண்களின் உழைப்பு நாட்களாகும். சுமார் 140 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. தற்போது இத்திட்டம் திட்டம் மேலும் 18 மாதங்களுக்கு நீட்டிக்கப்பட்டு, அதற்குக் கூடுதலாக சுமார் 70 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பன்னாட்டுத் தொழிலாளர் நிறுவனம் இதுவரை இந்த முன்னோடித் திட்டத்துக்கு ரூ.186 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. இதில் ரூ.141.88 இலட்சம் 30.11.'92 வரை பல்வேறு திட்டப் பணிகளுக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

மேற்கண்ட பணிகளைத்தவிர, இந்தச் சிறப்பு முன்னோடித் திட்டத்தின்கீழ், தளியில் ஒரு தேசிய திட்ட அலுவலகமும், ஒரு கிடங்கும் கட்டப்பட்டுள்ளன. இந்தச் சிறப்புப் பொதுப்பணித் திட்டத்தின் மூலம் பாசனம், நீர் மற்றும் மண்வளப் பாதுகாப்பு, காடு வளர்ப்பு, சாலை அமைத்தல், பட்டு வளர்ப்பு போன்ற துறைகளில் நிலையான சொத்துக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மேலும், இதன் விளைவாக நிலையான வேலை வாய்ப்பு ஏற்பட்டுள்ளதுடன் வாழ்க்கைத் தரமும் பன்மடங்கு உயர்ந்துள்ளது.



மிகவும் பின்தங்கிய, வளர்ச்சி பெறாத பகுதியாகக் கருதப்பட்ட தளி ஒன்றியம், இச்சிறப்புப் பணிகள் திட்டத்தின்கீழ் புதிய பொலிவு பெற்றுள்ளது.

இந்த முன்னோடித் திட்டம் பற்றி பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பின் தேசிய வல்லுநர் திரு. கே.கே.தீர் அவர்கள் கூறுகையில், 'இது ஒரு சிறந்த திட்டம் இதை மற்ற இடங்களிலும் செயல்படுத்துவது சிறந்தது. அதன், பயனாக அங்குள்ள மக்களுக்கு நீண்டகாலப் பயன்கள் கிடைக்கும். எனவே, இந்தத் திட்டத்தைத் தருமபுரி மாவட்டத்தில் மேலும் 6 அல்லது 7 ஒன்றியங்களுக்கு விரிவுபடுத்தும் கருத்து பரிசீலனையில் உள்ளது. இன்னும் ஆறு மாதங்களில் முடிவு தெரியும்' என்று கூறினார்.

இவ்வாறு இந்தச் சிறப்புத் திட்டம் விரிவுபடுத்தப்படும்போது தருமபுரி மாவட்டத்திலுள்ள சூளகிரி, கெலமங்கலம், தருமபுரி, மத்தூர், பெண்ணாகரம், அரூர் ஆகிய 6 ஒன்றியங்களில் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.



இது தருமபுரி மாவட்டத்தின் இரண்டாவது மிகப்பெரிய நகரமும் சரித்திரப் புகழ்மிக்க இடமுமாகும். இங்கு 'சையத் பாஷா மலைக்கோட்டை' என்ற பழமைவாய்ந்த கோட்டை காணப்படுகிறது. கிருஷ்ணகிரிக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் இந்தப் புகழ்மிக்க கோட்டைக்குச் செல்லாமல் போவதில்லை. இங்குள்ள கிருஷ்ணகிரி அணை ஒரு சிறந்த சுற்றுலாத் தலமாகும்.



## இரயில் போக்கு வரத்து

தருமபுரி மாவட்டத்தின் தெற்குப்பகுதி சேலம்-பெங்களூர் மீட்டர் இரயில்பாதையால் இணைக்கப் பட்டுள்ளது. இந்தக் குறுகிய இரயில் பாதையின் மூலம் தருமபுரி மாவட்டத்தின் வடக்குப்பகுதி பெங்களூர் நகரத்துடனும் தெற்குப்பகுதி சேலம் நகரத்துடனும் இணைக்கப்பட்டுள்ளன. இந்த மாவட்டத்தினூடே மொத்தம் 228 கி.மீ. தூரத்துக்கு இரயில் பாதைகள் போடப் பட்டுள்ளன. இதில் 57 கி.மீ தூரம் அகல இரயில் பாதை. மீதமுள்ள 171 கி.மீ. தூரம் குறுகிய இரயில் பாதையாகும். திருப்பத்தூரிலிருந்து பர்கூர் வழியாகக் கிருஷ்ணகிரி வரை 1941 வரை இரயில் பயணம் இருந்ததாக இம் மாவட்டத்தின் விவரச்சுவடி (Gazetter) கூறுகிறது.

**அன்னை சத்யா போக்குவரத்துக் கழகம்**
பாரதிபுரம், சேலம் சாலை, தலைமை அலுவலகம்,
தர்மபுரி - 636 705

சேவையே
எங்கள்
நோக்கம்

**அனைத்துக் கிராமங்களுக்கும் பேருந்து வசதி**
**செய்வதே தமிழக அரசின் குறிக்கோள்**

**அன்னை சத்யா போக்குவரத்துக் கழகம்**
தருமபுரி

# தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் -

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் 1989-ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இப்பல்கலைக்கழகம், கால்நடை மருத்துவ அறிவியல் பிரிவினையும், மீன்வள அறிவியல் பிரிவினையும், அடிப்படை அறிவியல் பிரிவினையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இப்பல்கலைக்கழகம், மூன்று கல்லூரிகளையும், ஐந்து கால்நடை மற்றும் கோழியின ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையங்களையும், மேலும் 19 கால்நடை அறிவியல் மற்றும மீன்வள அறிவியலைச் சார்ந்த மையங்களை கொண்டு இயங்கி வருகிறது.

இப்பல்கலைக் கழகத்தில் தற்பொழுது கல்வி பயிலும் மொத்த மாணாக்கர்களின் எண்ணிக்கை 1,642. 1991-92-ஆம் கல்வி ஆண்டு முதல், அரையாண்டுக் (Semester) கல்வி முறை செயல்படுத்தப்பட்டு வருகிறது. இப்பல்கலைக் கழகத்தில் மொத்தம் 375 ஆசிரியர்கள் பணியாற்றுகின்றனர். இப்பல்கலைக் கழகத்தின் வருடாந்தர வரவு செலவு 1,312 இலட்ச ரூபாயாகும்.

இப்பல்கலைக் கழகத்தின் இரண்டாம் பட்டமளிப்பு விழா, 12.12.92 அன்று எழும்பூர், ராணி மெய்யம்மை மண்டபத்தில் நடைபெற்றது. மேதகு ஆளுநர் மற்றும் பல்கலைக்கழக வேந்தர், திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் இப்பட்டமளிப்பு விழாவிற்குத் தலைமையேற்றார். இந்திய வேளாண்மைக் கழகத் தலைமை இயக்குநர் டாக்டர் வி.எல். சோப்ரா அவர்கள் பட்டமளிப்பு விழாச்சிறப்புரை நிகழ்த்தினார். மாண்புமிகு வேளாண்மை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திரு. கு.ப. கிருஷ்ணன் அவர்கள், விழாவில் கலந்துகொண்டு பேசுகையில், பல்கலைக்கழகப் பரிசுகள் வழங்குவதற்காக ஆளுநர் பெயரில் ரூ.25 ஆயிரம் நிதியில் ஒரு அறக்கட்டளையும், கல்வியில் சிறந்து விளங்கும் பெண்களுக்குப் பல்கலைக் கழகப் பரிசுகள் வழங்கவும் அறக்கட்டளைச் சொற்பொழிவு நிகழ்த்தவும் மாண்புமிகு முதல்வர் அவர்களின் பெயரில் ரூ.1.08 இலட்சம் மற்றும் ரூ.50 ஆயிரம் நிதியில் இரண்டு அறக்கட்டளைகள் நிறுவப்படுவதாகவும் அறிவித்தார்.

இப்பட்டமளிப்பு விழாவினையொட்டி, ஆட்சி, கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கம் ஆகிய பிரிவுகளில் இப்பல்கலைக் கழகம் அடைந்த சிறப்புகளைப் பற்றி ஒரு கண்காட்சி நடத்தப்பட்டது.

இப்புதிய பல்கலைக்கழகம், ஆட்சி, கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கப் பிரிவுகளில் அடைந்த சிறப்புகள் பற்றிய முக்கியக் குறிப்புகள் கீழ் வருமாறு. இப்பல்கலைக் கழகம் திட்டமிட்டுள்ள எதிர்காலச் செயல் நோக்கங்களும் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

## ஆட்சி

இப்பல்கலைக்கழகம் நிறுவிய முன்றாண்டுகளுக்குள்ளாக இப்பிரிவில் சில சிறப்புகளை அடைந்துள்ளது, குறிப்பாக,

அ. இப்பல்கலைக் கழகத்திற்கான சட்ட திட்டங்களைச் சிறப்பாக வடிவமைத்தது.

ஆ. இப்பல்கலைக் கழகத்திற்காக ஐந்து ஆட்சிப் பிரிவுகளை அமைத்தது.

இ. மத்திய மானியக் குழுவிடமிருந்து, இப்பல்கலைக் கழகத்திற்கான அங்கீகாரம் பெற்றது.

ஈ. இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்திடமிருந்து முன்னேற்ற மானியம் பெறுவதற்கான அங்கீகாரம் பெறப்பட்டது.

## கல்வி

அ. கல்வி கற்பிக்கும் முறையில் அரையாண்டு (Semester) கல்வி முறை செயல்படுத்தப்பட்டுள்ளது.

ஆ. பட்ட மேற்படிப்பிற்காக, கால்நடை உயிர்-தொழில் நுட்பவியலில் (Animal Biotechnology) ஒரு பட்ட மேற்படிப்பு திட்டம் தொடங்கப் பட்டுள்ளது.

இ. இளங்கலை பட்ட பாடத்திட்டத்தில், வன விலங்குகளைப் பராமரித்தலும் மற்றும் இனப்பெருக்கம் பற்றிய பாடங்கள் சேர்க்கப்பட்டு உள்ளன.

இவ்வறிக்கை காலத்தில் ஒரு அகில உலகக் கருத்தரங்கமும், 8 தேசிய கருத்தரங்கமும் மற்றும் செயல் கருத்தரங்கமும், இரண்டு கோடைப் பயிற்சி திட்டங்களும் நடத்தப்பட்டன.

இப்பல்கலைக் கழகத்தின் மூத்த ஆசிரியர்களுக்கு, பல்வேறு அங்கீகாரம் பெறப்பட்ட மத்திய நிறு







# தீர்த்தமலை

தருமபுரி மாவட்டத்தில் இருக்கும் தீர்த்தமலை அரூர் வட்டத்தில் அமைந்துள்ளது. தீர்த்தமலை நகரிலும் மலையின் மேல் இடைப்பகுதியிலும் ஆலயங்கள் உள்ளன. நகர்ப் பகுதியில் உள்ள ஆலயம் கீழ்க் கோயில் என்றழைக்கப் பெறுகிறது. இது புற மதில் அக மதில் என இரு மதில் சுவர்களை உடையதாகும். நந்திதேவர், சைவசமயக் குரவர் நால்வரின் படிமங்கள், செல்வ கணபதி, மயில் மீதமர்ந்த முருகன், மாடக் கோயிலில் வல்லப கணபதி, காசி விசுவநாதர், பால முருகன் காட்சியளிக்க அம்மையின் சந்நிதியின் இரு பக்கமும் கணபதியும் முருகனும் காட்சியளிப்பது சிறப்பு.

தீர்த்தமலையே லிங்க அமைப்புக் காட்சியாகும். தக்கன் செய்த யாகத்தை அழித்த பின்னர் தவம் புரிய இம் மலைக்கோலம் கொண்டான் என்கின்றனர். பாறைகளினிடையே ஊற்றாக என்றும் குறையாத ஐந்து தீர்த்தங்கள் குறிப்பிடத் தக்கவைகளாகும். நோய்த் தீர்க்கும் திறமுடையவைகள் என்பது சிறப்பு.

இவற்றின் நீர், சுவையில் வேறுபட்டுக் காண்கின்றன. அவை: 1. அகத்தியரின் குன்ம நோயை நீக்கிய அகத்தியத் தீர்த்தம், 2. அக்னி தேவனின் பாவத்தை நீக்கிய அக்னி தீர்த்தம், 3. இராமனின் பிர்மகத்தியை நீக்கிய இராம தீர்த்தம், 4. குமரக் கடவுளின் குறை தீர்த்த குமாரத் தீர்த்தம், 5. அன்னை கௌரி தவமிருந்து பெற்ற கௌரித் தீர்த்தம் என்பவைகளாகும். இவை ஆலயத்தினுள் அமைந்தவை.



ஆலயத்திற்கு மேல் - மலையின் மேல் வசிஷ்டர் குகை, வசிஷ்டர் தீர்த்தம் சீலநாய்க்கன்கோட்டை, உச்சிப் பிள்ளையார் கோயில் அமைந்துள்ளன. இது காட்டுப் பகுதியாகும்.

கி.பி. 1041-இல் முதலாம் இராசேந்திர சோழனால் இவ்வாலயத்தின் முன் மண்டபம் புதுப்பிக்கப்பட்டதாம்.

அனுமன் தீர்த்தம்: இது தென் பெண்ணை ஆற்றங்கரையில், அரூர் திருப்பத்தூர் சாலையில் அமைந்திருப்பது. பெண்ணை நதிக்கரையில் நீரூற்றாகக் காணும் இதனை ஆள் உயரச் சுற்றுச் சுவர் அமைத்து நீரினை விழச் செய்துள்ளனர். இது செம்புச் சத்து கலந்த நீர் என்பதால் நோய் நீக்கும் குணமுடையதென்பர். பெண்ணையாற்றில் இத்தீர்த்தம் அமைந்திருப்பினும் இதன் சுவை ஆற்று நீரிலிருந்து மாறுபட்டுள்ளது.

புனித நீராட வருவோர் தீர்த்த மலைக்குச் செல்லும் முன் இங்கு நீராடிச் செல்லும் வழக்கம் இருந்து வந்தது. இவ்விரண்டைப் பற்றிய புராணக் கதைகளாகப் பல கூறப் படுகின்றன.

சிட்டிலிங்: சிட்டிலிங் என்கிற மலையானது அரூரிலிருந்து 30 மைல் தொலைவுடையது. பசுமை நிறைந்து கண்ணுக்கும் கருத்துக்கும் இன்பமளிப்பது. சேலம் மாவட்டத்திலுள்ள கொல்லி மலைக்கு ஈடாக இதனைக் குறிக்கலாம். இதன் இயற்கையழகும் சூழலும் தட்பவெப்ப நிலையும் உணர்ந்தவர்கள் இதனைக் 'கோடை வாழிடமாக்க'த் தகுதி புடையது என்பர்.

- சின்ன கிருட்டினன்.

வனங்களில் ஆட்சித் திறனுக்காக பயிற்சி பயிற்றுவிக்கப்பட்டது.

**ஆராய்ச்சி**

இப்பல்கலைக்கழகம், பண்ணை யாளர்களின் உணர்ந்த தேவை களையும், காலத் தேவைகளையும், நடப்புப் பிரச்சினைகளையும் முழுவதும் உணர்ந்துள்ளது. இவற்றின் முக்கியத்தினை உணர்ந்து, இப்பல்கலைக்கழகம், தன்னுடைய முக்கிய மையங்களிலும், விரிவாக்க மையங்களிலும், செயல் அறிவியலில், ஒரு வலுமிக்க அடிப்படையினை நிறுவியுள்ளது. இப்பல்கலைக் கழகத்தில் கண்டறியப்பட்ட ஆராய்ச்சிக் கண்டுபிடிப்புகள் ஆராய்ச்சிக் கூடத்திலிருந்து பண்ணைக்குப் பரப்புவதற்காக, இரு மாதங்களுக்கு ஒரு முறை, 'செய்ரான்' எனப்படும் ஆராய்ச்சி இதழ் வெளியிடப்படுகிறது.

மேற்கூறிய கருத்தினைக் கவனத்தில் கொண்டு, தேசிய மற்றும் அகில உலக ஆராய்ச்சி நிறுவனங்கள், குறிப்பாக இந்திய வேளாண்மை ஆராய்ச்சி மையம், அயல்நாட்டு முன்னேற்ற நிறுவனம் (Overseas Development Agency) மத்திய மானியக் குழு மற்றும் பல்வேறு தனி நிறுவனங்கள், இப்பல்கலைக் கழகத்தில் வடிவமைக்கப்பட்ட 36 புதிய, பயனுள்ள ஆராய்ச்சிச்செயல் திட்டங்களுக்காக ஓராண்டிற்கு இரண்டு கோடி ரூபாய் மானியமாக அளித்துள்ளன.

இப்பல்கலைக் கழகத்தின் குறிப்பிடத்தக்க ஆராய்ச்சிக்கண்டுபிடிப்புகளாவன

**கால்நடை மருத்துவ அறிவியல்**

★கருமாற்றல் முறை பண்ணையில் செயல்படுத்துவதற்காக செம்மைப் படுத்தப்பட்டுள்ளது.

★செம்மறியாட்டின் உயிரினங்கள், பாதுகாப்பதன் பொருட்டு, செம்மறியாட்டுக் கிடாவின் விந்துவினை உறைவித்தல்.

★இறைச்சியில் கலப்படம் உள்ளதா எனக் கண்டறிய 'எலீசா' எனப்படம் பரிசோதனை முறை கண்டறியப்பட்டது.

★இறைச்சிக் கூடங்களில் சுகாதாரத்தினை அதிகரிக்க, மிகக் குறைந்த செலவினில் ஒரு முறையினைச் செயல்படுத்தியது.

★நெல்-வைக்கோலினைச் சிறந்த தீவனப் பொருளாக்க ஒரு தகுந்த முறையினைக் கண்டறிந்தது.

★வெக்கை நோய் போன்றே காணப் படும் ஆனால் மாறுபட்ட, ஆடுகள் மற்றும் அசைபோடும் சிறு பிராணிகளைத் தாக்கும் பி.பி.ஆர். எனப்படும் நோய் இந்தியாவிலேயே முதன் முதலாகக்கண்டறியப்பட்டு இதனைத் தடுக்கத் தக்க நடவடிக்கை மேற்கொள்ளபபட்டுள்ளது.

★கால்நடையைத் தாக்கும் , மிகக் கொடிய வெக்கை நோய், நாய்களைத் தாக்கும் 'பார்வோ' நோய் போன்ற தொற்று நோய்களைப் பண்ணையிலேயே உடனுக்குடன் கண்டறிய எளிதில் எடுத்துச் சென்று, இயக்கப்படும் உபகரணங்களைக் கண்டறிந்தது.

★முன் இரைப்பையிலிருந்து திரவத்தினை வெளிக்கொணர ஒரு திரவம் வெளிக்கொணரும் விசைக் கருவி, முன் இரைப்பையில் ஏற்படும் சப்தங்களைக் கண்டறிய வடிவமைக் கப்பட்ட ஒரு சப்த வரைவி ஆகிய கருவிகள், இப்பல்கலைக் கழகத்தில் வடிவமைக்கப்பட்டு அசைபோடும் பிராணிகளின் நோய்த் தீர்ப்புப் பிரிவுகளில் வெகுவாகப் பயன் படுத்தப்படுகின்றன.

★தடுப்பு மருந்து அளிக்கப்பட்ட கோழிகளில் நோய் எதிர்ப்புத் தன்மை உண்டாகியுள்ளதா எனக் கண்டறிய, உறிஞ்சும் காகிதம் மூலமாக இரத்தம் சேகரித்தல் ஒரு எளிய சிறப்பு முறையாக உருவாக்கப்பட்டுள்ளது.

★இப்பல்கலைக்கழகம், மாடுகளில் ஏற்படும் காச நோயினைப் பற்றிச் செய்து வரும் ஆராய்ச்சியினை இங்கிலாந்து அரசின், தட்ப வெட்ப கால்நடை நோய் ஆராய்ச்சி மையம் அங்கீகாரம் செய்து, இப்பல்கலைக் கழகத்தின் மையத்துடன் மேலும் தொடர்பு ஆராய்ச்சி செய்ய இசைந்துள்ளது.

பட்டமளிப்பு விழாவில் 195 நபர்களுக்கு நேரிலும் 50 நபர்களுக்கு தபால் மூலமாகவும் பட்டங்கள் வழங்கப்பட்டன.

**- நிகழ்ச்சித் தொகுப்பு ஜே. சந்திரன்.**

**துறைமுகம்**

**● ஆந்திரப் பிரதேசத்தில் கோதாவரி டெல்டா பகுதியில் உள்ள காக்கி நாடா துறைமுகம் நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய கப்பல் கட்டும் பணியில் ஈடுபட்டு வருகிறது.**

**கடந்த 30 ஆண்டுகளில் இத் துறைமுகம் பல்வேறு அளவுள்ள இரண்டாயிரம் கப்பல்களைக் கட்டியுள்ளது. ஆந்திரப் பிரதேச அரசு 1959-ஆம் ஆண்டு காக்கிநாடா கப்பல் கட்டும் துறைமுகத்தை நிறுவியது. இத்துறைமுகம் 1985-ஆம் ஆண்டிலிருந்து பிளாஸ்டிக் படகுகளை உற்பத்தி செய்து வருகிறது.**

**இந்தியக் கடற்படைக்குத் தேவையான அதிவேகப் படகுகளையும் இத்துறைமுகம் உற்பத்தி செய்கிறது. உலக வங்கித்திட்டத்தின் கீழ் 23 மீட்டர் நீளமுள்ள மரத்தினால் செய்யப்பட்ட மீன்பிடிப் படகு களைக் கட்டுவதற்கு இத்துறைமுகம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.**

**சுமார் 500 படகுகளை இத் துறைமுகம் உற்பத்தி செய்து பயன் படுத்துவோர்க்கு அளித்துள்ளது. இத்துறைமுகம் ஆண்டொன்றுக்கு 160 பிளாஸ்டிக் படகுகளை உற்பத்தி செய்யும் திறன் கொண்டது.**

**சாலைகள்**

**● நாட்டில் உள்ள சாலைகளின் மொத்த நீளம் 20,37,000 கிலோ மீட்டர்களாகும்.**

**● இதில் தேசிய நெடுஞ்சாலைகளின் நீளம் 33,689 கி.மீ.**

**● தேசிய நெடுஞ்சாலைகளில் 7,771 கிலோ மீட்டர் நீளம் ஒற்றை தடம் [illegible] 16,160 கிலோ மீட்டர் இருதடப் பாதை. 358 கிலோ மீட்டர் நான்கு வழித் [illegible]**

**● [illegible] கிலோ மீட்டர் தேசிய [illegible] இரு தடப் [illegible]**



# கூட்டுறவு

# கிராமப்புறத் தொழில்களுக்குக் கைகொடுக்கும் வங்கி!

**- பி.எஸ்.கே. கோஷ்முகமது சாகுல் அமீது,**
**தனி அலுவலர்,**
**தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கி**

தொழிற் கூட்டுறவுச் சங்கங்களை விரைவாக நல்ல முறையில் வளர்க்கவும், அதன் மூலம் நிறைந்த விரைவான வேலை வாய்ப்புகளைக் கிராமப் பகுதிகளிலும், பின்தங்கிய நகரப் பகுதிகளிலும் உருவாக்கவும் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டன. இத்தகைய கூட்டுறவுச் சங்கங்களின் மாநில நிர்வாகப் பொறுப்பு இதற்கென உருவாக்கப்பட்ட தொழில் மற்றும் வணிகத்துறைக்கு 1956-ஆம் ஆண்டு மாற்றப்பட்டது.

இந்திய அரசினால் உருவாக்கப்பட்ட பணிக்குழுவானது தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அதனுடைய கடன் உதவி தேவைகளைப் பூர்த்தி செய்யத் தனியான ஒரு நிதி உதவி அமைப்பை ஏற்படுத்தி, மாநில அரசுகளின் சுமையைக் குறைக்க வேண்டுமெனப் பரிந்துரை செய்தது. இதன் அடிப்படையில் தொழிற் கூட்டுறவு வங்கிகள் அமைக்கவும், தொழிற் கூட்டுறவு வங்கிகளின் அந்தந்த மாநிலங்கள் ஒரு பங்குதாரராக இருக்கவும் தொழிற் கூட்டுறவு வங்கி அமைக்கப்பட்டு இன்றைய அளவில் 'தாய்கோ வங்கி' எனச் சுருக்கமாக அழைக்கப்பட்டு, மாநில அளவில் புகழுடன் விளங்கி வருகிறது. தாய்கோ வங்கியானது 13.9.1961-இல் பதிவு செய்யப்பட்டு, நவம்பர் 1962 முதல் தனது வங்கிப் பணிகளைத் தொடங்கி நடைமுறைக்கு வந்தது.

**வங்கியின் அமைப்பு**

தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கியின் அடிப்படைக் கொள்கையானது பரந்து விரிந்து ஈடு இணை சொல்ல முடியாதது ஆகும். தேசிய கிராமப்புற விவசாய வளர்ச்சி வங்கியானது தொழில்களை இன வாரியாகப் பிரித்தது. அதன்படி கிராமப்புறச் சிறு தொழில்கள் என, கீழ்க்கண்டவாறு இனம் பிரித்துக் காட்டியது.

1. சிறு தொழில் நிறுவனங்கள்
2. குடிசைத் தொழிற்சாலைகள்
3. கைவினைப் பொருள் தயாரிக்கும் நிறுவனங்கள்.

மேற்கண்ட தொழில் பிரிவுகளுக்குத் தொழிற் கூட்டுறவு வங்கிகள் நிதி உதவி அளிக்கலாம் என இனம் பிரித்துக் காட்டியது. இதனையே தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கியும் அடிப்படையாகக் கொண்டு இவ்வகைத் தொழில்கள் மேம்பாடு அடையவும் அதனால் கிராமப்புற வேலைவாய்ப்புகள் பெருகவும் தன் உதவிக் கரத்தைத் தாராளமாக நீட்டியது.

**நிர்வாக அமைப்பு**

தொழில் வணிக இயக்குநரால் வங்கியின் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் நியமனம் செய்யப்பட்டு, வங்கியின் நிர்வாகம் திறம்படச் செயல்பட்டு வந்தது. இந்த ஏற்பாடு 12.6.76 வரை அமலில் இருந்து வந்தது. இதற்கு பிறகு வங்கியின் நிர்வாகம் தமிழக அரசுக் கொள்கை அளவில் எடுக்கப்பட்ட அவசரச் சட்டத்தின்படி மத்திய மற்றும் தலைமைக் கூட்டுறவு நிறுவனங்களுக்குத் தனி அலுவலர் நியமனம் செய்ய கோரியபடி, இவ்வங்கியும் தனி அலுவலரின் நேரடிப் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டது. இதுநாள் வரை இவ்வங்கியானது தனி அலுவலரின் பொறுப்பிலேயே ஓங்கி வளர்ந்து கொண்டு வருகிறது.

**கிராமப்புறத் தொழில்களை ஊக்குவித்தல், கைவினைப் பொருள்களுக்கு உதவுதல், வேலைவாய்ப்புகளை வழங்குதல் முதலான பணிகளைச் செவ்வனே ஆற்றி வருகின்றது, தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கி. இதன் சிறப்புப் பணிகளை விளக்கு கிறது இக்கட்டுரை.**

**வங்கிக் கிளைகள்**

சென்னையைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கி வரும் இவ்வங்கியானது கீழ்க்கண்ட இடங்களில் 11 கிளைகளைக் கொண்டு இயங்கி வருகிறது.

குன்னூர், கோவில்பட்டி, சாத்தனூர், மதுரை, திருச்சி, சேலம், விரிவாக்கக் கிளை, சேப்பாக்கம், சென்னை-5., வேலூர், நாகர்கோவில், கோயம்புத்தூர், தஞ்சாவூர்.

**வங்கியின் வளர்ச்சி**

**இவ்வங்கி தொடங்கியபோது இதனுடைய பணிகள் சிறியதாக இருந்தாலும், படிப்படியாக வளர்ந்து இன்று மற்ற வங்கிகளைப் போல் எல்லா விதமான பணிகளையும் செய்து இந்த 30 ஆண்டுக் கால வரலாற்றில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியையும் பெற்று மற்ற கூட்டுறவு வங்கிகளைப் போல் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.**

**மேலும், இவ்வங்கியானது தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் காலக் கடன் மற்றும் நடைமுறை மூலதனக் கடன் அளிப்பது மட்டுமல்லாமல், இம்மாநிலத்தில் உள்ள கிராமச் சிறு தொழில்களுக்குத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் தாராளமாகக் கடன் உதவித் திட்டத்தின்**



மூலம் உதவி செய்து, அவைகளின் முன்னேற்றத்தில் இவ்வங்கியும் ஒரு குறிப்பிடத்தக்க அளவு பங்கு பெறு கிறது.

**வங்கியின் செயல்பாடுகள்**

வங்கியானது கீழ்க்கண்ட வகை யான கடன்களைத் தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநரகத்தின் கட்டுப்பாட்டில் இயங்கும் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அளித்து வருகிறது. காசுக்கடன் பெற்று வளர்ச்சி பெறும் சங்கங்களில் சில குறிப்பிடத் தக்கவை.

**தீப்பெட்டி சிறு தொழிற் கூட்டுறவுச் சேவைச் சங்கங்கள்**

தங்கள் உறுப்பினர்களுக்குத் தீப்பெட்டி செய்வதற்குத் தேவை யான மூலப்பொருட்களான அட் டைக்கட்டு, தீக்குச்சி, மற்றும் பொட்டாசியம் முதலியவற்றை வங்கியில் பெற்ற, கடன் மூலம் வாங்கி வழங்குகிறது. பிறகு முடிந்த பொருள்களுக்குச் சங்கம் முன் பணமும் அளிக்கிறது. விற்பனைக் கும் வகை செய்கிறது. இவை யாவற் றிற்கும் வங்கியின் கடன் உதவியே காரணமாகும். தற்போது ஏறத்தாழ 21 சேவை தீப்பெட்டித் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் நடந்து வரு கின்றன.

**தேயிலை தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்**

உறுப்பினர்களுக்கு, தேயிலைக் கன்றுகள் வாங்குவதற்கும் அவற் றைப் பயிர் செய்யவும் மேலும் அவற்றிற்குத் தேவையான இர சாயன உரம் மற்றும் பூச்சி மருந் துகள் வாங்கவும் மற்றும் பரா மரிப்புக்கும் முன் பணம் அளிக் கிறது. மேலும் உறுப்பினர் களிடமிருந்து தேயிலை இலையைப் பச்சையாக வாங்கிக் கொண்டு, இதற்கும் அங்கத்தினர்களுக்கு முன் பணம் அளிக்கிறது. பச்சைத் தேயிலையைப் பதப்படுத்த, தேயிலை யாக உருவாக்க, தேயிலைத் தொழிற் கூடம் உருவாக்க இயந்திரங்கள் வாங்க இந்த வங்கி கடன் வழங்கு கிறது. தற்போது 15 தேயிலைக் கூட்டுறவுத் தொழிற்கூடங்கள் நடந்து வருகின்றன.

**பாலிதீன் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்**

மூலப் பொருட்கள் இவ்வங்கி யின் நிதி உதவி மூலம் வாங்க வங்கி கடன் அளிக்கிறது. இச்சங்கங்கள், தொழிற்கூடம் அமைத்து இயந்திரங் களை நிறுவனம் செய்து, கச்சாப் பொருளிலிருந்து பாலீதீன் பைகள் தயாரித்து, அரசு சார்புடைய துறை களுக்குக் குறிப்பாக வனத்துறை, பால் வழங்கும் துறை, ஆகியவை களுக்கு விற்பனை செய்கிறது. தொழிற்கூடம் கட்டவும், இயந் திரங்கள் வாங்கவும் இவ்வங்கி கடன் வழங்குகிறது. பாலிதீன் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்த வரை சென்னைக்கு மட்டுமே முன் னுரிமை அளிக்கப்படுகிறது. இவர் களுக்குக் கணிசமான கூலியும் வழங்குகிறது. இந்த தொழிற் கூட்டு றவுச் சங்கங்களினால் தமிழ்நாட்டில் பல்லாயிரக்கணக்கான வேலை வாய்ப்புகளை உருவாக்கித் தருகிறது மற்றும் பெண்களின் முன்னேற்றத் திற்காகவும் அவர்களின் பொருளா தார மேம்பாட்டிற்கும் இவை நல்ல துணை புரிகின்றன. தற்போது 15 பாலிதீன் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் இவ்வங்கியின் மூலம் கடன் உதவி பெற்று சிறப்புடன் இயங்குகின்றன.

மேலும், இவ்வங்கி கயிறு தயாரிப் போர் தொழிற் கூட்டுறவுச் சங்கம், அச்சுத் தொழிற் கூட்டுறவுச் சங் கங்கள், ஜவ்வரிசி தயாரிப்பாளர் சேவை தொழிற் கூட்டுறவுச் சங் கங்கள், பித்தளைப் பாத்திரம் தயாரிப்போர் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள், தொழிற் கூட்டுறவுப் பேட்டைகள் மற்றும் பொட்டாசியம் குளோரேட் தொழிற் கூட்டுறவு ஆலைக்கும் ஏனைய இதரக் கூட்டு றவுச் சங்கங்களுக்கும் ஆக ஏறத்தாழ 170 தொழிற் கூட்டுறவுச் சங்கங் களுக்குக் கடன் வழங்கிச் சிறப்புற இயங்கி வருகிறது.

**பிணையற்ற காசுக் கடன்**

புதிதாக ஆரம்பிக்கும் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்கு எவ்விதப் பிணையமும் இன்றி முதல் ஓராண்டு வரை இவ்வகையான சுத்தக் காசுக் கடனை அதனுடைய நடைமுறை மூலதனத்திற்கு அளித்து அதன் மூலம் அந்தச் சங்கம் மூலப் பொருட் களை வாங்கவும் உறுப்பினர்களுக்கு அவைகளை விநியோகிக்கவும், உறுப் பினர்களுக்கு முன் பணம் அளிக்க வும், அதன் மூலம் வேலைவாய்ப்பை, பெருக்கவும் தாராளமான கடன் உதவிக் கொள்கை மூலம் உதவி புரிகிறது.

**காசுக் கடன்**

இவ்வகையான கடன்கள் சங்கங் களின் நடைமுறை மூலதனத்திற்கு அதனுடைய சரக்கு இருப்பின்மீது 60 சதவிகிதக் கடன் அளிக்கிறது. இதன் மூலம் உறுப்பினர்களுக்கு முன் பணம் அளிக்கவும் அவர் களுக்கு முடிந்த பொருட்களைக் கொள்முதல் செய்யவும் இவ்வகை யான கடன் உதவி புரிகிறது.

இதைத் தவிர, இவ்வங்கி தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கீழ்க் கண்ட உதவிகளையும் செய்து வரு கிறது.

**உண்டியல் தள்ளுபடி**

தொழிற் கூட்டுறவுச் சங்கங் களின் முடிந்த பொருள்களை ரயில் மூலம் இதர மாநிலங்களில் உள்ள வியாபாரிகளுக்கு அனுப்பும்போது உண்டியலை இவ்வங்கி மூலம் அனுப்பும் போது சங்கங்களுக்கு அந்த உண்டியல் தொகையில் 90 சதவிகிதம் கடன் அளித்து சங்க உறுப்பினர்கள் உடனடியாகப் பயன் பெற இக்கடன் உதவி வசதி அளிக் கிறது. இந்த கடன் உதவியைப் பெரும்பாலும் தீப்பெட்டி தொழிற் கூட்டுறவுச் சங்கங்களே முழுமை யாகப் பயன்படுத்தி சங்க உறுப் பினர்கள் உடனடியாகப் பயன்பெற உதவி புரிகிறது.

**இடைக்காலக் கடன்**

இக்கடன் பெரும்பாலும் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள், தேசிய கிராம வளர்ச்சி வங்கி, தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம், தமிழ்நாடு பிற் படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம், தமிழ்நாடு ஆதி திராவிடர் நல முன்னேற்றக் கழகம் மூலம் கடன் பெற முயற்சி செய்து கடன் விண்ணப்பம் கொடுக் கப்பட்டு, அதில் காலதாமதம் ஏற் படும்போது அந்தக் காலத் தாமதத் தைத் தவிர்க்கவும், தொழிற் கூட்டு றவுச் சங்கங்களுக்கு அதன் உறுப் பினர்களுக்கும் உடனடியாகப் பயன் பெறவும் இவ்வங்கியானது இடைக் காலக் கடனாக இவ்வகைக் கடன் களை அளிக்கின்றது.

**சாவிக் கடன்**

தொழிற் கூட்டுறவுச் சங்கங் களுக்குத் தங்களுக்கு வேண்டிய மூலப் பொருட்கள் சந்தையில் தாராளமாகக் கிடைக்கும்போது வாங்கி இருப்பு செய்து உறுப்பினர் களுக்கு விநியோகித்து அவர்கள் லாபத்தை ஈட்டவும் செய்ய வேண் டும். ஆனால் நிதிப் பற்றாக்குறை யினால் இது முடியாதபோது, இவ் வங்கியானது தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுடன் சேர்ந்து மூலப் பொருட்களை வாங்கி கிடங்கில் இருப்பு வைத்து இரட்டைச் சாவி மூலம் பொறுப்பேற்கும். தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் தனக்கு எப் போது எவ்வளவு மூலப்பொருள் தேவையோ அந்த அளவுக்குப் பணத்தை வங்கியில் செலுத்தி மூலப்பொருள்களை பெறும். இதனால் உறுப்பினர்கள் மிகுந்த பயனும் லாபமும் அடைய வழி செய்கிறது.

**காலக் கடன்**

இவ்வகைக் கடன்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் தங்கள் உற் பத்திக்குத் தேவையான இயந் திரங்கள் வாங்கவும் தொழிற் கூடங்கள் கட்ட நிலம் வாங்கவும், தொழிற்கூடங்கள் கட்டவும், டாக்ஸி மற்றும் ஆட்டோரிக்ஷா தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் தங்கள் உறுப்பினர்களுக்காக ஆட்டோ ரிக்ஷா வாங்கவும் அளிக்கப்படு கிறது.

**வங்கிக் காப்புறுதி**

தொழிற் கூட்டுறவுச் சங்கங் களுக்கு அரசு நிறுவனங்களிடம் இருக்கும் தங்களுக்குத் தேவையான பொருட்களை விநியோகம் செய்ய ஆணைகள் கிடைக்கும் போது, அந்த மொத்த தேவைப் பொருள் களுக்கான மதிப்பை அந்நிறுவனத் திடம் சங்கங்கள் வங்கியின் மூலம் காப்புறுதி அளிக்க வேண்டும். இவ்வங்கியானது இவ்வகையான காப்புறுதிகளை அந்தச் சங்கங் களுக்காக அந்நிறுவனங்களுக்கு அளித்து தொழிற் கூட்டுறவுச் சங் கங்கள் முன்னேறவும், அதன் உறுப் பினர்கள் பயன் அடையவும் உதவி புரிந்து வருகிறது.

**தமிழக அரசின் நிதி உதவி**

தமிழ்நாடு அரசானது கீழ்க் கண்ட வகைகளில் தன் நிதி உதவியை இவ்வங்கிக்கு அளித்து வங்கி வளர்ச்சி பெறவும் அதன் மூலம் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் வளர்ச்சி பெறவும் உதவி செய்கிறது.

★ தமிழக அரசு, இந்த வங்கியில் எடுத்த பங்குத் தொகை ரூ.233.30 இலட்சம்.

★ இவ்வங்கி, வாடிக்கையாளர்களிட மிருந்து திரட்டு வைப்புத் தொகைகளுக்கு ரூ.500 இலட்சம் வரை தமிழக அரசு உத்தர்வாதம் அளித்துள்ளது.

★ இவ்வகையில் தமிழக அரசு தன் னுடைய நேசக்கரத்தை நீட்டி, பாரத மாநில வங்கியில் பிணையற்ற காசுக் கடன் ரூ.20 இலட்சம் பெற வழி வகை செய்ய தமிழக அரசு உத்தர வாதம் அளித்துள்ளது.

★ இவ்வங்கி, மேலும் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கிகளிடமிருந்து இவ்வகையில்

[illegible]

**முதல் நடமாடும் கூட்டுறவு**

1980-ஆம் ஆண்டு மே மாதம் முதல் சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கி தனது நடமாடும் கிளையை இயக்கி வருகிறது. தமிழ்நாட்டில் வங்கி வரலாற்றிலேயே புதுமையான திட்டமாக நடமாடும் கிளை ஒன்றை சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கி துவக்கியுள்ளது. இது வாடிக்கையாளர்களுக்கு [illegible] பட்ட புதிய சேவையாகும். இந்தியாவிலேயே மூன்றாவதாக இந்நடமாடும் கிளை உள்ளது. இந்த நடமாடும் கிளை எல்லாவிதமான வங்கிப் பணி வசதிகளை [illegible]

மூலதனமாக ரூ.75 இலட்சம் பெற்று வருகிறது.

இவ்வகையில் தமிழக அரசு தன்னுடைய நேசக்கரத்தை நீட்டி, வங்கி வளர்ச்சி பெற உதவி செய்து வருகிறது.

**தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கி இந்தியத் தலைமை வங்கி (R.B.I.) அங்கீகரித்தல்**

இவ்வங்கியை, இந்தியத் தலைமை வங்கி அங்கீகரிக்கவும், தேசீய கிராமப்புற வளர்ச்சி வங்கியின் மறு நிதி உதவியைப் பெறவும் 1971 முதல் பல்வேறு வகையான முயற்சிகள் எடுக்கப்பட்டு மிகவும் போராடி, கடைசியில் 1987 அக்டோபர் மாதம் இந்தியத் தலைமை வங்கியானது தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கியை அங்கீகரித்து, தேசிய கிராமப்புற வளர்ச்சி வங்கியின் மறு நிதி உதவியைப் பெறவும் வழி வகையேற்பட்டள்ளது.

இவ்வங்கியானது கீழ்க்கண்ட 8 மாவட்டங்களில் உள்ள தன் உறுப்பினர்களுக்குத் தேசிய கிராமப்புற வளர்ச்சி வங்கியின் மறு நிதி உதவி பெற்றுக் கடன் வழங்கலாம் எனவும் அனுமதி வழங்கப்பட்டள்ளது.

1. சென்னை மாவட்டம்.
2. திருச்சிராப்பள்ளி மாவட்டம்
3. இராமநாதபுரம் மாவட்டம்
4. பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம்
5. காமராசர் மாவட்டம்
6. திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம்
7. சிதம்பரனார் மாவட்டம்
8. நீலகிரி மாவட்டம்

இவ்வங்கியானது இதுவரை தேசிய கிராமப்புற வளர்ச்சி வங்கியில் மறு நிதி உதவி பெற்று ரூ.38.18 இலட்சம் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன் வழங்கியுள்ளது.

மேலும், தேயிலைத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் பாலிதீன் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் விரிவாக்கத் திட்டத்திற்காக ரூ.50 இலட்சத்திற்கு விண்ணப்பங்கள் தேசிய கிராமப்புற வளர்ச்சி வங்கியிடம் கொடுக்கப் பட்டுள்ளன.

இவ்வங்கியானது தொழிற் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள உறுப்பினர் அனைவரும் தாழ்த்தப்பட்ட சமூகத்தினராகவோ அல்லது பிற்படுத்தப்பட்ட சமூகத்தினராகவோ இருப்பின் அவர்கள் சம்பந்தப்பட்ட தமிழ்நாடு அரசு முன்னேற்றக் கழகத்திலிருந்தும், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திலிருந்தும் விளிம்புத் தொகை (Margin money) மற்றும் மானியத் தொகை (Subsidy) பெறவும் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இக்கழகங்களிடம் பரிந்துரை செய்கிறது. இதுவல்லாமல் இவ் உதவிகள் பெறுவதற்குத் தடையின்மைச் சான்றிதழ் (N.O.C.) வழங்குவது போன்ற சேவைகளையும் செய்து வருகிறது.

அதுவல்லாமல் இவ்வங்கியின் தனி அலுவலர் அவர்கள் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் கூட்டும் செயற்குழுக் கூட்டங்களில் கலந்து கொண்டு, மேன்மையான ஆலோசனைகள் வழங்கி மேன்மேலும் நிதி உதவிகளைத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்க ஆவன செய்து வருகின்றார்.

இவ்வங்கியானது, சொந்தமாக எழும்பூரில் தாளமுத்து- நடராசன் மாளிகை கீழ்த்தளத்தில் ரூ.47.70 இலட்சம் மதிப்பில் அமைந்துள்ள கட்டடத்தை வாங்கி வங்கிப் பணிகள் இயங்கி வருகின்றன. மேலும், வங்கிக்குச் சொந்தமாக ஒரு பல மாடி மாளிகையை சென்னை இராஜா அண்ணாமலைபுரத்தில் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது.

**நகைக் கடன்**

இவ்வங்கியானது ஏழை எளியவர்கள் தங்களிடம் இருக்கும் ஒரு சில நகைகளை தனியாரிடம் தந்து வட்டிக்கு வைத்து நகைகளை இழக்கும் அவலத்தைத் தடுக்கவும், அவர்களது நகைகளைப் பாதுகாப்புடன் காக்கவும் குறைந்த வட்டியில் நகைக் கடன் கொடுக்கவும் நகைக்கடன் திட்டத்தினை அறிமுகப்படுத்தி உள்ளது. பெட்டக வசதியும் செய்ய உள்ளது.

இவ்வங்கியானது, தொழிற் கூட்டுறவுத் துறையில் இப்போது முக்கிய பங்கு ஆற்றி வருகிறது. தன்னுடைய அமைதியான ஆரவாரமற்ற நிலையில், ஆனால் தன்னுடைய அடிப்படையான கொள்கையான கிராமப்புறச் சிறு தொழில்களை ஊக்குவிப்பது, கைவினைத் தொழில்களுக்குக் கை கொடுப்பது, கயிறு தொழிலுக்கு முறுக்கேற்றுவது மற்றும் கிராமத் தொழில்களுக்கு விடிவெள்ளியாக இருப்பது ஆகியவைதான் இவ்வங்கியின் நிலையான நிலைத்த கொள்கையாகும்.

அந்த வகையில் இது இன்று பீடு நடைபோட்டு வருகிறது. அதற்குத் தேசிய கிராமப்புற வளர்ச்சி வங்கியும் ஆலோசனைகளையும் மறு நிதி உதவி வசதிகளையும் அளித்து வருகிறது.







# தொகுதி மக்களுக்கு முதல்வர் உதவிகள்



பருகூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், 21.8.1991-இல்தான் முதன் முதலாகப் பருகூரில் நடைபெற்ற மாபெரும் பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு வாக்காளப் பெருமக்களுக்கு நன்றி தெரிவித்தார்.

அப்போது- தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் தொழில் வளாகம், குடிநீர்த் திட்டங்கள், குடியிருப்புகள், பாலங்கள் நீர்ப் பாசனத்திட்டங்கள், புதுமருத்துவமனை, பேருந்து நிலையம் ஆகியவற்றுக்கு அடிக்கல் நாட்டினார். புதிய பேருந்து வழித்தடங்களையும், ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டப் பணிகளையும் தொடங்கி வைத்தார்.

பெண்களுக்குத் தையல் இயந்திரங்கள், சலவைப் பெட்டிகள் ஆகியவற்றையும் வழங்கினார். கிணற்றில் தவறி விழுந்தவர்களைக் காப்பாற்றிய அத்தொகுதியில் உள்ள கூத்தானைப் பட்டி சம்பத்குமார், கொத்தூர் வேடியப்பன் ஆகியோருக்கு அரசு சார்பில் தலா ரூ.4 ஆயிரம், தம் சொந்தப் பொறுப்பில் ரூ.5 ஆயிரமும் வழங்கிப் பாராட்டினார்.

அன்றைய நிகழ்ச்சியில் தருமபுரி மாவட்டமும் பருகூர் தொகுதியும் பயன்பெறும் வகையில் தொடங்கப்பட்ட எல்லாத் திட்டங்களின் மொத்த மதிப்பீடு ரூ.33 கோடியே 97 இலட்சம் ஆகும்.

பருகூர் தொகுதியிலிருந்து, தமது குறைநீக்கக் கோரி மனுக் கொடுத்திருந்த பலரில்- நியாயமான 454 பேர்களின் மனுக்கள் ஏற்கப்பட்டது; அந்த மனுதாரர்களை 10.8.92 அன்று சென்னைக்கு அழைத்து வரச்செய்த மாண்புமிகு முதல்வர்



புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள்- ரூ.1 கோடியே 24 இலட்சத்து 21 ஆயிரத்து 524 ரூபாய் பெறுமானமுள்ள அரசு நலத்திட்ட உதவிகளை அவர்களுக்கு வழங்கினார்.

19.8.1992 அன்று, தம்முடைய பருகூர் தொகுதி நலிவுற்ற மக்கள் 92 பேரைச் சென்னைக்கு அழைத்து வரச்செய்து, நலத்திட்ட உதவிகளைத் தம் சொந்தச் செலவில் செய்தார் மாண்புமிகு முதல்வர் அவர்கள்; அவர்களுடைய போக்கு வரத்துச் செலவையும் அவரே ஏற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

தருமபுரியில் 18.7.1992 முதல் 26.7.1992 வரையில் தமிழ்நாடு அரசின். நலத்திட்டப் பணிகள் விளக்க முகாம் சிறப்புற நடைபெற்றது.

11.4.1992 அன்றும், 18.4.92 அன்றும், 20.6.92 அன்றும், 7.12.92 அன்றும் பர்கூர் தொகுதி நலிவுற்ற மக்கள் ஏராளமானோர் சென்னையிலுள்ள மாண்புமிகு புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் இல்லத்திற்கு அழைத்து வரப்பட்டனர். மாண்புமிகு முதல்வர் அவர்கள் அம்மக்களின் நியாயமான கோரிக்கைகளை ஏற்றுத் தொழிற் கருவிகளும், வண்டி மாடுகளும், வேறுபல நலத்திட்ட உதவிகளும், நிதியுதவியும் வழங்கினார். அம்மக்களின் போக்குவரத்துச் செலவையும் முதல்வரே ஏற்றார்.

கடந்த ஆண்டைப் போலவே இவ்வாண்டும் (1993), பொங்கல் திருநாளை முன்னிட்டு தமிழ்நாட்டில் வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள ஏழைகள், ஏழை விவசாயிகள் 60 இலட்சம் பேருக்கு வேட்டியும், 60 இலட்சம் பேருக்குச் சேலைகளும் இலவசமாக வழங்கப்பட்டன.

## நாடக உலகு நலம் பெற...

அருகிவரும் மேடை நாடகக் கலைக்குப் புத்துயிர் ஊட்டும் வகையில், தமிழ் நாட்டின் பண்புகளை, மாண்பினைச் சித்திரிக்கும் புதிய நாடகங்களை உருவாக்கும் பத்து நாடகக் குழுக்களுக்கு நிதியுதவி செய்யும் பொருட்டு, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ரூ.2 இலட்சம் தொகையை மானியமாக வழங்கி ஆணையிட்டுள்ளார்.



மேலும், மறைந்து வரும் குருகுல முறைக்கு மறுவாழ்வு அளிக்கும் வகையில் வழுவூர், கலா சேத்ரா, பந்தநல்லூர், தஞ்சாவூர் மற்றும் காட்டு மன்னார் கோவில் முத்துகுமாரப்பிள்ளை பாணியில் நட்டுவாங்கக் கலையைக் கற்றுத்தர ஐந்து பரத நாட்டிய ஆசிரியர்களுக்கும், இக்கலையினைப் பயில ஆர்வம் உள்ள பதினைந்து மாணவ மாணவியருக்கும் உதவித் தொகையாக மொத்தம் ரூ.1 இலட்சம் தொகையினை மானியமாக வழங்கி உத்தரவிட்டுள்ளர்ர்.

கிராமியக் கலைஞர்கள் மற்றும் கிராமிய கலைக் குழுவினர்களின் கலைப் பணியை மேலும் ஊக்குவிக்கவும், உதவி வழங்கவும், ஆடை, ஆபரணங்கள், இசைக் கருவிகள், மேடைப் பொருட்கள் வாங்குவதற்காகவும், மேலும்; கிராமியக் கலைகளின் மதுவிலக்குக் கொள்கையினை மக்களிடையே பரப்புவதற்காகவும் புதிதாகப் படைக்கப்படும் கிராமியக் கலை நிகழ்ச்சிகளுக்காகவும் ரூ.2 இலட்சம் தொகையை மானியமாக வழங்கி மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்.



# பையூரில் பசுமைப் புரட்சிக்கு ஓர் ஆராய்ச்சி நிலையம்!

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், வேளாண்மைச் சூழ்நிலைக்கேற்ப மாறுபடும் தமிழகத்தின் ஒவ்வொரு பகுதிக்கும் ஏற்ற ஆராய்ச்சிகள் மேற்கொள்ளும் பொருட்டு, தமிழகத்தை ஏழு மண்டலங்களாகப் பிரித்து ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகின்றது. இதில் வடமேற்கு மண்டலமாக அமைந்துள்ள சேலம், தருமபுரி மாவட்டங்கள் அடங்கிய பகுதிகளில் வேளாண் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும், புதிய கண்டுபிடிப்புகளின் மூலம் வேளாண் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கத்துடனும் 1973-ஆம் ஆண்டு தருமபுரி மாவட்டம் பையூரில் மண்டல ஆராய்ச்சி நிலையம் ஆரம்பிக்கப்பட்டது.

இந்த நிலையம் தருமபுரி-கிருஷ்ணகிரி நெடுஞ்சாலையில் தருமபுரியிலிருந்து 35-வது கிலோ மீட்டரில் அமைந்துள்ளது. இந்த மண்டலத்தில் 10.15 இலட்சம் எக்டேர் பரப்பில் முக்கியப் பயிர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. குறிப்பாக, மானாவாரிப் பயிர்கள் 70 சதவிகிதத்திற்கு மேல் சாகுபடி செய்யப்படுகின்றன. இந்த மண்டலத்தில் ஆண்டிற்குச் சராசரியாக (மலைப் பிரதேசங்கள் நீங்கலாக) சுமார் 700 முதல் 900 மி.மீ. மழை அளவு இருக்கும். மொத்த நிலப்பரப்பில் 80 சதவிகிதத்துக்கும் அதிகமாகச் செம்மண் வகைப் பூமியாக அமைந்துள்ளது. பெய்யும் மழை அளவு, மண்வகை, மற்றும் கடல் மட்டத்திலிருந்து உயரம் ஆகியவற்றின் அடிப்படையில் 13 வேளாண்மை உட்பிரிவுகள் கண்டறியப்பட்டு, அதன் அடிப்படையில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதன் கண்டுபிடிப்புகள் இந்த மண்டலத்தின் வேளாண் பிரச்சினைகளைத் தீர்க்கப் பயன்படுத்தப்படுகின்றன. தற்சமயம் இந்த ஆராய்ச்சி நிலையத்தில் 77 ஆராய்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### ஆராய்ச்சியின் நோக்கங்கள்

★ மானாவாரிக்கேற்ற சோளம், கேழ்வரகு, சாமை மற்றும் சிறுதானியங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள் மற்றும் வறட்சியைத் தாங்கவல்ல புதிய இரகங்களை உருவாக்குதல்.

★ மண்வளம் குறைவான ஈரத் தன்மையைத் தாங்கும் திறனற்ற செம்மண் நிலங்களில் மானாவாரிக்கு உகந்த செய்முறைகளை உருவாக்குதல்.

★ அதிக இலாபம் தரக்கூடிய பயிர்த் திட்டங்களையும், அதற்கேற்றவாறு இறவை மானாவாரிப் பயிர்களில் சாகுபடி நுணுக்கங்களையும் உருவாக்குதல்.

★ இப்பகுதிகேற்ற ஒருங்கிணைந்த பயிர் நோய், பூச்சிகள் பாதுகாப்பு மற்றும் நிர்வாகம்.

★ இந்நிலையத்தில் கண்டுபிடிக்கப்பட்ட புதிய வேளாண் நுணுக்கங்களை விரைவாகப் பண்ணைகளுக்கு எடுத்துக் கூறுதல்.

### ஆராய்ச்சித் திட்டங்கள்

மேற்கூறியுள்ள நோக்கங்களை நிறைவேற்றுவதற்காகக் கீழ் காணும் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

★ மண்டல ஆய்வு நிலையம் (இப்பகுதியிலிருக்கும் முக்கிய பயிர்களின் ஆராய்ச்சி)

★ மண் மற்றும் நீர்ப் பரிசோதனை நிலையம்.

★ நடுத்தர இழைப்பருத்தி ஆராய்ச்சித் திட்டம்.

★ ஒட்டுண்ணிகள் மூலம் பூச்சிகளைக் கட்டுப்படுத்துதல்.

★ நடைமுறைப் பயிர்த் திட்டங்களில் அதிகப் பயன் கிடைக்கும் பயிர்த் திட்டங்கள்.

★ திராட்சையில் அதிக மகசூல் பெற தருமபுரி மாவட்டத்திற்கு ஏற்ற புதிய நுணுக்கங்கள்.






★ தீவனப் பயிர்களில் மேம்பாட்டு முறைகள்.

★ சோயா மொச்சையை இப்பகுதியில் அறிமுகப்படுத்துவது.

★ உயிர் உரங்கள் உற்பத்தி மற்றும் விநியோகம்.

★ உயிர் உரங்கள் பற்றிய ஆராய்ச்சி.

★ மரப் பயிர்களுக்கு வேண்டிய உயிர் உரங்கள்.

★ உழவர்களுக்குக் காளான் வளர்ப்புக்கான தாய் வித்தை உற்பத்தி செய்தலும் அதைப்பற்றிப் பயிற்சியளித்தலும்.

★ ஆய்வுக் கூடத்தில் கண்டறியப்பட்ட புதிய நுணுக்கங்களை உழவர் நிலங்களில் சோதனை செய்து காட்டல்.

★ உழவர்கள் தொழில் நுட்பங்களைக் கடைப்பிடிப்பதில் உள்ள பிரச்சினையைப் பற்றிய ஆய்வு.

★ விரிவாக்கப் பணியாளர்களுக்கும் உழவர்களுக்கும் தேவைப்படும் நுட்பங்களைத் தெரிவித்தல்.

ஆராய்ச்சிக்குத் தேவையான கூடுதல் அடிப்படை வசதிகளைச் செய்து கொடுத்து தருமபுரி, சேலம் பகுதிகளில் உள்ள மிக முக்கியமான பிரச்சினைகளுக்கு விரைவாகத் தீர்வு காண ஆராய்ச்சிகள் மேற்கொள்ள தேசீய வேளாண்மை ஆராய்ச்சித் திட்டம் 1981-ஆம் ஆண்டு முதல் பையூர் மண்டல ஆராய்ச்சி நிலையத்தில் செயல்பட்டு வருகின்றது.

**நிலையத்தின் சில முக்கிய சாதனைகள்:**

**நெல்**

முன் சம்பாப் பருவத்தில் (ஆனி-ஆடிப்பட்டத்தில்) 140 நாட்களில் சராசரியாக எக்டேருக்கு 5 டன் மகசூல் தரக்கூடிய சன்ன ரகமான பையூர்.1 நெல் உருவாக்கப்பட்டு சாகுபடிக்காக 1982-இல் வெளியிடப்பட்டது.

பின் சம்பாப் பருவத்தில் (ஆவணி-புரட்டாசி) பயிரிடுவதற்கு ஏற்ற குளிர் தாங்கக்கூடிய வளர்ப்புகள் 10525, 4595 என்ற புதிய இரகங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இந்த இரகங்கள் ஒரு எக்டேருக்கு 5 டன் மகசூல் கொடுத்துள்ளன.

வேப்பம் பிண்ணாக்குடன் கலந்த யூரியாவை மூஉ்று தடவை (பாதியளவு அடி உரமாகவும், கால் பங்கு நட்ட 25-ஆம் நாளும், மீதியை 50-ஆம் நாளும்) பிரித்து இடுதல். இது சாதாரண யூரியாவை மூன்று முறை பிரித்து இடுவதை விட 515 கிலோ கூடுதல் மகசூல் கொடுக்கவல்லது.



கிருஷ்ணகிரிப் பகுதியில் சாம்பல் சத்தை (50 கி./எக்டேர்) அடி உரமாக இடுவதை விட தூர்கட்டும் பருவத்தில் மேலுரமாக இடுவது, எக்டேருக்கு 590 கிலோ அதிக மகசூல் தருவது கண்டறியப் பட்டுள்ளது.

**கேழ்வரகு**

சேலம், தருமபுரி பகுதிகளில் உள்ள மானாவாரி நிலங்களுக்கு ஏற்ற பையூர்.1 கேழ்வரகு 1984-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டு உள்ளது. இதன் வயது 120 நாட்கள். விரிந்த கதிர்களும் நீண்ட விரல்களும் உடைய இந்த ரகமானது மானாவாரியில் எக்டேருக்குச் சராசரியாக 1.8 டன் தானியமும், 4 டன் தாளும் கொடுக்க வல்லது.

கேழ்வரகு விதையைக் கைகோசில் 5 பி.பி.எம். ஹார்மோனில் 16 மணி நேரம் ஊறவைத்து, பின்னர் நிழலில் காயவைத்து விதைத்தால் மானாவாரியில் வறட்சி தாங்கும் தன்மையை அதிகப்படுத்தி பையூர்.1 ரகத்தில் 12 சதம் அதிக மகசூல் பெறலாம்.

மானாவாரியில் நாற்றுவிட்டு நடுவது இப்பகுதியில் சில இடங்களில் நடைமுறையில் இருக்கிறது. 21 நாளான நாற்றுகளை நட்டால் அது நேரடி விதைப்பைக் காட்டிலும் 32 சதவிகிதம் அதிக மகசூல் கொடுக்கிறது. குத்துக்கு மூன்று நாற்றுகளுக்கு மேல் நடவு செய்வதால் மகசூல் குறைகிறது. குத்துக்கு இரண்டு அல்லது மூன்று நாற்றுக்கள் மட்டும் நடுதல் அவசியம். மானாவாரி ராசிக்கு எக்டேருக்கு 40 கிலோ தழைச்சத்து போதுமானது.

இருபத்தியொரு நாட்களுக்கு மேலான வயதுடைய நாற்றுக்கள் நட நேர்ந்தால் குத்துக்கு 3 நாற்றுக்கள் வீதம் நடவு செய்வதோடு எக்டேருக்குச் சிபாரிசு செய்யப்படும் தழைச்சத்து அளவை விட 10 கிலோ கூடுதலாக இடுவதன் மூலம் மகசூல் இழப்பைத் தவிர்க்கலாம். 20 கிலோ தழைச்சத்து உரத்துடன் அசோஸ்பைரில்லம் உயிர் உரத்தை (விதையுடனும், தொழு உரத்துடனும்) ஒருங்கிணைப்பதன் மூலம், எந்த உரமும் இடாத பயிரைவிட 258 கிலோ தானியம் கூடுதலாகக் கிடைக்கப்பெற்றுள்ளது.

மானாவாரியில் கேழ்வரகில் பச்சைப் பயிரை ஊடுபயிராக 4:1 என்ற விகிதத்தில் சாகுபடி செய்யும்பொழுது தனிப் பயிராகச் சாகுபடி செய்வதைக் காட்டிலும் 73 சதம் வருமானம் பெறலாம். இராசியில் தோன்றும் குலை நோயைக் கட்டுப்படுத்த கிட்டாசின் (0.1 சதம்) மூன்று முறை (தூர்கட்டும் பருவத்தில் ஒரு முறையும் கதிர்ப் பருவத்தில் ஒரு முறையும்) தெளிக்கலாம்.

**சோளம்**

பையூர் - 1 என்ற புதிய தலை விரிச்சான் சோள இரகம் நடப்பு ஆண்டில் சேலம், தருமபுரி மற்றும் வட ஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டங்களுக்கு மானாவாரி சாகுபடிக்குப் பிரத்யேகமாக வெளியிடப்பட்டுள்ளது. இது வறட்சியைத் தாங்குவதாகவும், மானாவாரிக்கு ஏற்றதாகவும் உள்ளது. அடிச்சாம்பல் நோயை ஓரளவு தாங்கவல்லது. இது தற்போதுள்ள கோ.19 இரகத்தைவிட 15 சதவிகிதம் அதிக தானிய மகசூல் (970 கி./எக்.) கொடுப்பதுடன், சன்னமாக, சுவையான தட்டுக்களைக் கொடுக்க வல்லது.

மானாவாரி நிலங்களில் (செம்மண்) சோளத்தில் தழைச்சத்தை இடுவது மகசூலை அதிகரிக்கவல்லது என்பது கண்டறியப்பட்டுள்ளது. இந்த உரத்தை (40 கி/எக்.) அடியுரமாகவோ, அல்லது மேலுரமாகவோ இடலாம், மானாவாரி நிலங்களில் 5 செ.மீ. ஆழத்தில் விதைப்பது மேன்மையானது என்பது ஆராய்ச்சி மூலம் தெரியவந்துள்ளது.

மிதல்டெமாடான் அல்லது பாஸாலின் அல்லது குளோர்பைரி பாஸ் அல்லது மானோகுரோட்டோபாஸ் இதில் ஏதாவது ஒன்றில் ஒரு கிலோ சோளத்திற்கு 4 மில்லி என்ற விகிதத்தில் கலந்து விதை நேர்த்தி செய்து விதைக்கும் பொழுது சோளத்தில் குருத்து ஈயினைக் கட்டுப்படுத்தலாம்.

**சாமை**

நடுத்தர வயதுடைய (110 நாள்) பையூர்.1 சாமை 1987-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இந்த இரகம் எக்டேருக்கு 870 கிலோ தானிய மகசூல் கொடுக்கவல்லது. இது வறட்சி தாங்கும் தன்மை உடையது.

**காராமணி**

85 நாளில் மானாவாரியில் சராசரியாக எக்டேருக்கு 760 கிலோ மகசூல் தரவல்ல பையூர்.1 காராமணி 1984-இல் வெளியிடப்பட்டது. இது சி.152-ஐ விட 14 சதம் அதிக மகசூல் தரவல்லது. இந்த இரகத்தின் இலைகள் தானியம் முற்றும் வரையில் பசுமையாக இருப்பதால் தீவனத்திற்கும் சிறந்ததாக உள்ளது.

**கொள்ளு**

பையூர்.1 என்ற கொள்ளு இரகம் 1987-இல் வெளியிடப்பட்டது. இந்த இரகம் 105 நாட்களில் எக்டேருக்கு 674 கிலோ மகசூல் கொடுக்கவல்லது. கோ.1-ஐக் காட்டிலும் இந்த ரகம் 19 சதம் அதிக மகசூல் தரவல்லது. மணிச்சத்து 20 கிலோ/எக்டேருக்கு இடுவதால் உரமிடாததைக் காட்டிலும் அதிக மகசூல் பெறலாம். ரைசோபியம் உயிர் உரத்துடன் விதை நேர்த்தி செய்து பயிர் செய்வதால் விதை நேர்த்தி செய்யாததை விட 12 சதவிகிதம் அதிக மகசூல் கிடைக்கிறது.

**பச்சைப்பயிறு**

பையூர்.1 பாசிப்பயிறு 1985-ஆண்டு வெளியிடப்பட்டது. இது 90 நாட்களில் சராசரியாக எக்டேருக்கு 1060 கிலோ மகசூல் தரவல்லது. இது கோ, 4-ஐ விட 12 சதவிகிதம் அதிகமாகும்.

**மொச்சை**

டி.பி.ஐ. 1281 என்னும் கல்வர்



குறுகிய காலத்தில் (75 நாள்) அதிக மகசூல் தரவல்லது. இது ஒரு எக்டேருக்கு 950 கிலோ விதை கொடுக்கிறது.

மானாவாரி மொச்சையில் பூக்கும் தருணத்திலும் அதற்கு அடுத்த 10-வது நாளும் கார்பரில் 10 சதவிகிதத் தூளை எக்டேருக்கு 25 கிலோ வீதம் தூவினால் காய்ப்புழுவினைக் கட்டுப்படுத்தி, அதிக மகசூல் பெற முடியும் என்று கண்டறியப் பட்டுள்ளது.

**என்:**

பையூர்-1 எள் என்னும் உயர் விளைச்சல் இரகம் 1990-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இந்த இரகம் 90 நாட்களில் எக்டேருக்கு 650 கிலோ மகசூல் கொடுக்கவல்லது. கோடை இறவைச் சாகுபடிக்கு ஏற்றது.

**பருத்தி:**

அதிக விளைச்சலுடன் 'வறட்சியைத் தாங்கி வளரக்கூடிய பையூர்- 1 என்ற புதிய மத்திய இழைப் பருத்தி இரகம் இவ்வாண்டில் வெளியிடப்பட்டுள்ளது. இது எக்டேருக்கு 1,173 கிலோ மகசூல் கொடுக்கவல்லது. இதன் வயது 135 நாட்கள். மானாவாரியாகப் புரட்டாசிப் பட்டத்திற்கு மிகவும் ஏற்றது. அதிக அறவைத் திறனும் கொண்டது. கருங்கிளை நோய்க்கு எதிர்ப்புத்திறன் கொண்டது.

**மா**

1992-ஆம் ஆண்டு பையூர்-1 இரக 'மா' விவசாயிகளின் சாகுபடிக்கு வெளியிடப்பட்டுள்ளது.

**தக்காளி**

தக்காளியில் நடந்த இனப்பெருக்க ஆராய்ச்சியில் பையூர்-1 என்ற இரகம் மானாவாரிச் சாகுபடிக்கு 1988-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இது எக்டேருக்கு 36 டன் மகசூல் கொடுக்க வல்லது.

**மண் மற்றும் நீர் நிர்வாகம்**

மானாவாரி நிலங்களில் 'கோவை விதைக் கருவி'யின் மூலம் நிலக்கடலை விதைத்ததில் 15 சதவிகிதம் அதிக மகசூல் கிடைத்துள்ளது. மேலும், பயிர்களின் எண்ணிக்கையைச் சரியாகப் பராமரிக்க இக்கருவி உதவுகிறது.

கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத் திட்டத்தில் உள்ள களர், உவர் நிலங்களுக்கு ஜிப்சம் மற்றும் பசுந்தாள் உரமிட்டு வடிகால் வசதி செய்ததன் மூலம் களர் தன்மையைக் குறைத்து நெல்லின் மகசூல் 25 சதவிகிதம் அதிகரிக்க முடியும் என்று கண்டறியப்பட்டுள்ளது.

மேலும், இந்நிலையத்திலிருந்து ஒவ்வொரு ஆண்டும் 7 டன் அளவு பையூர்-1 விதை நெல் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. மற்றும் வெளியிடப்பட்ட 8 இரகங்களும் கருவிதை விதைப் பெருக்கத்திற்குத் தொடர்ந்து விநியோகம் செய்யப்படுகின்றது. களர் உவர் நிலங்களைச் சீர்திருத்தும் முறைகளும், மரவள்ளிக் கிழங்கில் பயிர் வெளுப் பேற்படுத்தும் 'குளோரோசிசை' போக்கும் வழி முறையும், பருத்தியில் மழை நீரைத் தக்க வைப்பதற்கு இரட்டை வரிசை விதைப்பு முறையும் மற்றும் புதிய இரகங்களின் சாகுபடி முறைகளும் விவசாயிகளின் நிலங்களில் வயல் வெளிப் பரிசோதனைகளாக நடத்தப் பட்டு வருகின்றன.

பல்வேறு பயிர்த் திட்டச் சூழ்நிலைகளில் அதிக இலாபம் தரக்கூடிய பயிர்த் திட்டங்கள் விவசாயிகளின் வயல்களில் நிரூபணம் செய்து காட்டப்பட்டன.

உற்பத்தியினைப் பெருக்குவதற்கு ஏற்ற புதிய வழிமுறைகள் இந்நிலைய ஆராய்ச்சியாளர்கள் மூலம் 1989-90, 1990-91-ஆம் ஆண்டுகளில் தேசிய நீர்ப் பிடிப்பு மானாவாரித் திட்டத்தின் கீழ் பருகூர் மத்தூர், கெலமங்கலம் ஆகிய கிராமங்களில் அனுசரணை ஆராய்ச்சி செய்து காட்டப்பட்டன.

**விரிவாக்க மக்கள் தொடர்புப் பணிகள்**

வடமேற்கு மண்டலத்தின் முக்கிய நிலையமாகப் பையூர் மண்டல ஆராய்ச்சி நிலையம் விளங்குவதால் சேலம், தருமபுரி மாவட்டங்களின் அரசு வேளாண்மைத் துறையுடன் இணைந்து செயலாற்றுகிறது.

**The Tamil Nadu State Apex Co-Operative Bank Ltd.,**

TNSC BANK

**233, N.S.C. Bose Road, Madras-600 001.**

**Rate of Interest on Deposits (Effective from 9.10.1992)**

| Sl.No. | Type of Deposit | Rate of Interest per annum |
|---|---|---|
| 1. | Savings Bank Accounts | 6.25% w.e.f. 24.4.92 |
| 2. | Fixed Deposits : | |
| | For 46 DAYS and above but upto 270 days | 12.25% |
| | For 271 DAYS and above but upto 364 days | 12.00% |
| | For 1 YEAR and above | 12.25% |

**Interest on Fixed Deposit for 1 year and above will be paid Quarterly**

- NRO & NRE Accounts Facilities are available in 6 designated Branches.
- Interest rates are subject to RBI directives from time to time.

THE BANK AT YOUR SERVICE




# காலத்தை வென்ற காவிய நாயகன்



காலத்தை வென்றிருக்கும்
சங்கப் பாட்டே!
காவியத்தின் கருப்பொருளே!
கவிதை நெஞ்சே!
ஞாலத்தில் மனிதாபி
மானம் என்னும்
நல்லுணர்வின் நடமாடும்
வடிவே! அன்புக்
கோலத்தில் வருகின்ற
தேவன் நீதான்!
கொடையினிலே உனக்குநிகர்
நீயே! வெற்றி
வேழத்தின் நடைகொண்ட
வேந்தே! எங்கள்
விழிபருகும் எழில்வடிவே
வாழ்க நீடு!

**கவிஞர் இளந்தேவன்**

மாதந்தோறும் நடைபெறும் சேலம், தருமபுரி மாவட்டங்களில் மாதாந்திரத் தொழில் நுட்பப் பணி மனைகளில் விஞ்ஞானிகள் கலந்துகொண்டு, தொழில் நுட்பங்கள் கடைப்பிடிப்பதில் உள்ள பிரச்சினைகளை விவாதித்து ஆலோசனை வழங்குகின்றனர்.

மாவட்டத் தொழில் நுட்பக் குழுக் கூட்டங்களை ஆண்டுக்கு இரு முறை நடத்தி வேளாண் பிரச்சினைகளை விவாதித்து ஆலோசனைகளை வழங்குகிறது. ஆண்டிற்கு இரு முறை மண்டல ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க ஆலோசனைக் கருத்தரங்குகளை ஏற்பாடு செய்து, புதிய ஆராய்ச்சித் திட்டங்களை வகுக்கவும், விவசாயிகளின் பிரச்சினைகளை அறிந்து தீர்வு காணவும் வழிவகை செய்கிறது.

மாதந்தோறும் ஏழாம் தேதி விவசாயிகள் விவசாயப் பெண்மணிகள் மற்றும் கிராமப்புற இளைஞர்கள் பயன் பெறும் வண்ணம் காளான் பயிற்சி நடத்தப்படுகிறது. இதுவரை 400-க்கும் மேற்பட்டோர் இப்பயிற்சியின் மூலம் பயன் பெற்றுள்ளனர். தருமபுரி மாவட்டத்தின் முக்கிய பணப் பயிரான மா சாகுபடியின் தொழில் நுட்பங்களை விவசாயிகளுக்கு விளக்கிக் கூற பயிற்சிகள், கருத்தரங்குகள், கருத்துக் காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. வேளாண்மையில் பெண்களின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்ட ஆண்டுதோறும் டிசம்பர் 4-ஆம் நாள் வேளாண்மையில் பெண்கள் நாள் நடத்தப்பட்டு பெண்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பின் முக்கிய அம்சங்களை விவசாயிகளுக்கு எடுத்துக் கூற சிறப்புப் பயிற்சி முகாம்கள் நடத்தப்படுகிறது. தானிய சேமிப்பு, உயிரியல் முறையில் பூச்சி நோய்க் கட்டுப்பாடு, எலி ஒழிப்பு முறைகள், நுண்ணுயிர் உரங்கள், ஊட்டமேற்றிய தொழு உரம், தென்னை நார்க்கழிவில் உரம் போன்ற மானாவாரித் தொழில் நுட்பங்களில் விவசாயிகள் மற்றும் விரிவாக்கப் பணியாளர்களுக்குச் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

மாநிலத்தில் பல்வேறு மாவட்டங்களில் பணிபுரியும் விரிவாக்கப் பணியாளர்களுக்கு மானாவாரி பயிர்ச் சாகுபடித் தொழில் நுட்பங்களில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இராகி, பருத்தி, சோளம், நெல், மற்றும் பல முக்கிய பயிர்களின் சாகுபடி முறைகளை விளக்கும் தொழில் நுட்பக் கருத்தரங்குகளை வேளாண் துறையுடன் இணைந்து நடத்துகிறது.

ஆண்டுதோறும் உழவர் பெருவிழா சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. பண்ணைக் கருவிகள் பற்றிய பயிற்சியும் நடத்தப்பட்டு வருகிறது. மரப் பயிர்களுக்கு நுண்ணுயிர் உரங்கள் இடும் தொழில் நுட்பங்களை விளக்கும் பயிற்சிகள் சமூக நலக் காடுகள் திட்டத்தில் பணிபுரியும் வனச்சரக அலுவலர்களுக்கு அளிக்கப்படுகிறது.

திராட்சைச் சாகுபடியில் விவசாயிகள் புதிய தொழில் நுட்பங்களை அறிந்து கொள்ள பயிற்சிகள் கிராமங்களில் நேரடியாக அளிக்கப்படுகிறது. புதிய வேளாண் மற்றும் தோட்டக்கலைத் தொழில் நுட்பங்களை விளக்கும் பல்வேறுபட்ட செயல் விளக்கங்களை ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள், விரிவாக்கப் பணியாளர்களுக்கும், விவசாயிகளுக்கும் அவ்வப்பொழுது செய்து காண்பித்து வருகிறார்கள்.

வானொலி மற்றும் தொலைக்காட்சி மூலம் புதிய கருத்துக்களும், செயல்பாடுகளும் விளக்கிக் கூறப்படுகிறது. இதற்காக பையூர் ஆராய்ச்சி நிலையத்தின் விஞ்ஞானிகள் பல்வேறு நிகழ்ச்சிகளைத் தயாரித்து அளிக்கிறார்கள்.

புதிய தொழில் நுட்பங்களையும், அவ்வப்பொழுது ஏற்படும் பிரச்சினைக்குரிய தீர்வுகளையும் நாளிதழ்கள் மூலம் வெளியிட்டு விவசாயிகளுக்குத் தெரிவித்து வருகிறார்கள். வீடியோ படக்காட்சி மூலம் காளான் வளர்ப்பு, தென்னையில் பூச்சித் தடுப்பு முறைகள், வேம்பின் பயன்கள், உயிரியல் கட்டுப்பாட்டு முறைகள், போன்ற சிறந்த தொழில் நுட்பங்களை விவசாயிகளுக்கு எடுத்துச் சொல்லி வருகின்றனர்.

வேளாண்மை மற்றும் தோட்டக் கலைத் தொழில் நுட்பங்களை விளக்கும் வெளியீடுகள் அவ்வப்பொழுது வெளியிடப்பட்டு வருகின்றன. அவ்வப்பொழுது காணப்படும் வயல் வெளிப் பிரச்சினைகளுக்கு நேரிலேயே சென்று தீர்வு காண, நிலைய விஞ்ஞானிகள் குழுவாக வயல்களுக்குச் சென்று விவசாயிகளின் பிரச்சினைகளை நேரிலேயே கண்டறிந்து ஆலோசனை வழங்குகிறார்கள்.

காரிப் மற்றும் ரபி பருவத்திற்குக் கடைப்பிடிக்க வேண்டிய சாகுபடி முறைகளை முன் கூட்டியே திட்டமிட்டுச் செயலாற்ற, தருமபுரி, சேலம் மாவட்டங்களில் நடத்தப்படும் முன் பருவப் பயிற்சி முகாம்களில் கலந்துகொண்டு தொழில் நுட்ப ஆலோசனைகளை வழங்குகிறார்கள்.

கிராமங்கள்தோறும் கருத்துக் காட்சிகள், முகாம்கள், கிராமக் கூட்டங்கள், செயல் விளக்கங்கள் போன்றவை அவ்வப்பொழுது நடத்தப்பட்டு வருகின்றன. பிளஸ்-2 படிக்கும் மாணவர்கள், விவசாயம் டிப்ளமா படிக்கும் மாணவர்கள் மற்றும் பல கல்வி நிலையங்களிலிருந்தும் நாள்தோறும் பண்ணைக்கு வருகை தரும் மாணவர்களும், பயிற்சியாளர்களுக்கும், அவரவர்களின் தேவைக்கேற்பச் சிறப்புப் பயிற்சிகள் நடத்தப்படுகின்றன.

மண்டல ஆராய்ச்சி நிலையத்தில் நடைபெற்று வரும் பல்வேறு ஆராய்ச்சித் திட்டங்களுக்கு, தமிழ்நாடு அரசு, இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம், மத்திய பட்டு ஆராய்ச்சி வாரியம், சமூக நலக்காடுகள் நிறுவனம் போன்ற நிறுவனங்களிலிருந்து ஆண்டுக்குச் சுமார் 38 இலட்சம் ரூபாய் நிதி உதவி கிடைத்து வருகிறது.

தமிழ்நாட்டில் அண்மையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ள ஜெ.ஜெ. நெல் ரகம் தருமபுரி மாவட்டத்தில் 6 இடங்களில் பயிரிடத் திட்டமிடப்பட்டிருப்பதாக இந்த ஆராய்ச்சி நிலையத்தின் விஞ்ஞானி டாக்டர் ஆர். ராஜகோபாலன் கூறுகிறார். இந்த நெல் 110 நாளில் வளரக் கூடியதாகும்.

இதைத்தவிர பையூர் மண்டல ஆராய்ச்சி நிலையத்தில் ஆண்டொன்றுக்கு 200 கிராம் எடையுள்ள 60 ஆயிரம் உயிர் உரப் பொட்டலங்கள் தயாரிக்கப்பட்டு விவசாயிகளுக்கு ஒரு பொட்டல உரம் மூன்று ரூபாய் வீதம் விற்பனை செய்யப்படுகிறது.

களை எடுக்கும் கருவியும், கரும்புக்கு மருந்து தெளிப்பான் கருவியும் புதிதாக இந்த மையத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மேலும் உழவடிக்க, பார்பிடிக்க தேவையான பண்ணைக் கருவிகளும் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. குறைந்த செலவில் கிராமங்களிலேயே இவற்றைத் தயாரிக்க முடியும்.

30 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு மண்டல ஆராய்ச்சிக் கவுன்சில் 6 மாதங்களுக்கு ஒருமுறை கூடி விவாதிப்பதாகவும், அதன் அடிப்படையில்தான் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் கூறினார் டாக்டர் ராஜகோபாலன்.

இந்த ஆராய்ச்சி நிலையத்தில் தற்போது 24 விஞ்ஞானிகள் பணிபுரிகிறார்கள். இந்த நிலையத்தின் ஆராய்ச்சி மற்றும் அரும்பணியின் மூலம் சேலம், தருமபுரி மாவட்டங்களிலிருந்து விவசாயிகளின் வாழ்க்கைத் தரம் உயர்ந்திருப்பது குறிப்பிடத்தக்கதும் பெருமைப்படக் கூடியதுமாகும்.



இந்தப் படத்தில் உள்ளவைகளெல்லாம் மைல் கற்களின் அணிவகுப்புப் போலத் தெரிகிறதல்லவா? ஆனால், அவையல்ல இவை! தமது நாய்களுக்காக வெள்ளையர்கள் அமைத்துள்ள கல்லறை அல்லது நடுகற்களே மேலே காணப்படுபவை.

ஒதூர் கால்நடைப் பண்ணைக்குள்ளே இவை காணப்படுகின்றன. ஜாக், விக்டர், பில், விட், சல்லி, பஞ்ச், பிட்டி, நான்ஸி, ராணி என ஒவ்வொரு கல்லின் மீதும் அதன்கீழ் புதைக்கப்பட்டுள்ள நாயின் பெயரும், அதன் பிறப்பு-இறப்பு விவரமும் செதுக்கப்பட்டுள்ளது.

கடைசியாக உள்ள ராணி என்ற ஒன்றைத் தவிர, மற்றவை யாவும் ஆங்கிலேயர்களால் மிகுந்த அன்போடு வளர்க்கப்பட்டவை. 'இவற்றில் இயற்கையாக இறந்தவைகளும் உண்டு; இந்தியாவை விட்டுச் செல்லும்போது, மற்றவர்களிடம் விட்டுப்போக மனமில்லாமல் ஆங்கிலேயர்களால் சுட்டுக் கொல்லப் பட்டவைகளும் உண்டு' என்று கூறப்படுகிறது.



இந்தப் படம், பார்க்கவே அச்சமாக இருக்கிறதல்லவா? இதைப் போல தருமபுரி மாவட்டத்தின் கோயில்களில் மட்டுமல்ல; கிராமங்களிலும், சாலையோரங்களிலும்கூட ஏராளமான முனீசுவரன், முரசன் போன்றோரின் முறுக்கு மீசை உருவங்கள் நம்மை அச்சுறுத்தக் காணலாம். இந்தப் படத்தில் காட்சி தருபவர் தருமபுரி- ஒகனேக்கல் சாலையில் உள்ள 'அக்ரகாரம் முனியப்பன் சுவாமி'.

## முதல் பக்க அட்டை:

டாக்டர் எம்.ஜி.ஆர். பிறந்த நாளையொட்டி (ஜனவரி 17-ஆம் நாள்) அவருடைய திருவுருவப் படம் அலங்கரிக்கிறது.

## கடைசிப் பக்க அட்டை

தென்பெண்ணையாற்றில் ரூ.2 கோடி செலவில் கட்டப்பட்டுள்ளது கிருஷ்ணகிரி அணை. இதன்மூலம் தருமபுரி மாவட்டத்தில் 10,000 ஏக்கர் நிலத்திற்குப் பாசன வசதி கிடைக்கிறது இப்போது!

**TNPSC** விளம்பர எண். 2/93

தமிழ்நாடு மருத்துவப் பணியில் அரசு மருத்துவமனைகளில் உணவு முறையாளர் (Diatitian) பதவிக்கு நேரடித் தேர்வின் மூலம் நியமனம் செய்யப்பட விண்ணப்பங்கள் 8.2.1993 அன்று மாலை 5.45 வரை வரவேற்கப்படுகின்றன.

**சம்பளம்:** மாதம் ஒன்றுக்கு ரூபாய் 1600-50-2300-60-2660.

**காலியிட எண்ணிக்கை:** 1 (பகிரங்கப் போட்டி)

**குறிப்பு:** இப்பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளைப் பெற்றிருந்து, குறைந்தபட்ச மதிப்பெண்களைப் பெறுவதன் மூலம் தெரிவுக்குத் தகுதியானவராகக் கருதப்படும் ஆதரவற்ற விதவைகள் அவர்களைவிட அதிக மதிப்பெண்களைப் பெற்றிருப்பவர்களைக் காட்டிலும் முன்னுரிமை வழங்கப்பட்டு தெரிவு செய்யப்படுவார்கள்.

**விளக்கம்:** 'ஆதரவற்ற விதவை' என்பது, வாழ்வதற்குத் தனக்கென்று எந்தவொரு வழியும் இல்லாதவரும், பட்டினியிலிருந்து தன்னைக் காப்பாற்ற எந்தவொரு ஆதரவாளரும் இல்லாதவரும் ஆன விதவையைக் குறிப்பதாகும்.

**வயது:** 1.7.1993 அன்று 40 வயதிற்குக் குறைவாக. (சலுகைகள் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன)

Qualification as on 29.12.1992 (The following or its equivalent)

i) B.A. or B.Sc., degree with Chemistry or Physiology as one of the subject or a degree in Domestic Science;

and

A diploma in Dietitics of the All Indian Institute of Hygiene and Public Health, Calcutta or any other Institution or body recognised by the Government of Tamil Nadu or the University Grants Commission for the purpose of its grant.

or

ii) A degree in Home Science

or

iii) B.Sc., degree in Nutrition and Dietitics of the Madras University.

or

iv A Post Graduate Diploma in Applied Nutrition and Public Health of the Madurai-Kamaraj University, Madurai.

Provided that, other things being equal preference shall be given to candidates conversant with the Dietitics and culinary habits of the people of the State and to persons who have rendered Social Service.

Provided further that, other things being equal, preference will be given to the released Emergency Commissioned Officers, released Short Service Commission Officers and other Ex-Service men.

ஆதிதிராவிட வகுப்பினர்/பழங்குடி வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர் மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆதரவற்ற விதவைகள், தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர், போன்றவர்களுக்கு அளிக்கப்படும் வயது மற்றும்/அல்லது தகுதி மற்றும்/அல்லது விண்ணப்பக் கட்டணச் சலுகைகள் தேர்வாணையத்தின் 'பணி வேட்பாளர்களுக்கான விதிமுறைகளில் தரப்பட்டுள்ளன.

விண்ணப்பப் படிவமும், நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு எழுத்து மூலம் கோரிப் பெற்றுக் கொள்ளலாம். கோரிக்கைகள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ பதவியின் பெயர் மற்றும் விளம்பர எண் ஆகியவற்றைக் குறிப்பிட்டு எழுதப்பட்டு, செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு வழங்கக்கூடிய 1.1.93 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10) சென்னை அண்ணா சாலை தபால் அலுவலகத்தில் செலுத்தத்தக்க கோடிட்ட அஞ்சல் ஆணை அல்லது பாரத ஸ்டேட் வங்கியின் (State Bank of India) ஏதாவதொரு கிளையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலாளருக்கு வழங்கக்கூடிய 1.1.1993 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட சென்னை-600 006 ஆயிரம் விளக்கு பாரத ஸ்டேட் வங்கியின் செலுத்தத்தக்க பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10) 'கேட்புக் காசோலை' (Demand Draft)-யுடன் சுய விலாசம் எழுதிய உறையுடனும் (26 x 12 செ.மீ.) அனுப்ப வேண்டும். கோரிக்கைகள் பிற மொழியில் இருக்குமாயின் அத்துடன் ஆங்கில மொழி பெயர்ப்பும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டா.

DIPR/21/MS/93



# தருமபுரி மாவட்டக் கோயில்கள்


தென்கரைக்கோட்டை


தேன்கனிக்கோட்டை


எலத்தகிரி

பொங்கல் வாழ்த்துக்கள்!

ஐடியல்
ஸ்பின்னிங் மில்
பட்டுகோனாம்பட்டி

எங்கள் மனமுவந்த பொங்கல் வாழ்த்துக்கள்!

ஸ்ரீ பழனியப்பா
சேகோ பேக்டரி
செம்பியானூர்

எங்கள் இதயங்கனிந்த பொங்கல் வாழ்த்துக்கள்!

திருவாளர்கள்,
சதர்ன் டைல்ஸ் (பி)
லிமிடெட்
கோம்பர்



**TNPSC**

**விளம்பர எண்: 1/93**

தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளை ஆட்சிப் பணியில் தொகுதி I-B-இல் அடங்கிய உதவி ஆணையர் (Assistant Commissioner) பதவிகளுக்கு நேரடித் தேர்வின் மூலம் நியமனம் செய்யப்பட விண்ணப்பங்கள் 8.2.1993 அன்று மாலை 5.45 வரை வரவேற்கப்படுகின்றன.

**இந்து சமயத்தைச் சார்ந்தவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கத் தகுதியுடையவராவர்**

**சம்பளம்:** மாதம் ஒன்றுக்கு ரூபாய் 2200-75-2800-100-4000.

**காலியிட எண்ணிக்கை:** 11

| | |
|---|---|
| ஆதிதிராவிட வகுப்பினர்/பழங்குடி வகுப்பினர் (ஆ.தி.வ./ப.வ.) | 2 |
| மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர் மரபினர் (மி.பி.வ./சீ.ம.) | 2 (ஒரு காலியிடம் பெண்களுக்கென ஒதுக்கப் பட்டுள்ளது) |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (பி.வ.) | 3 |
| பகிரங்கப் போட்டி | 4 (ஒரு காலியிடம் பெண்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ளது) |

**குறிப்புகள்:** (i) தெரிவு செய்யப்பட தேர்ச்சியும் தகுதியும் வாய்ந்த பெண் விண்ணப்பதாரர்கள் கிடைக்கப் பெறாவிடில் அக்காலியிடங்கள் ஆண் விண்ணப்பதாரர்களால் நிரப்பப்படும்.

(ii) இப்பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளைப் பெற்றிருந்து, குறைந்தபட்ச மதிப்பெண்களைப் பெறுவதன் மூலம் தெரிவுக்குத் தகுதியானவராகக் கருதப்படும் ஆதரவற்ற விதவைகள் அவர்களை விட அதிக மதிப்பெண்களைப் பெற்றிருப்பவர்களைக் காட்டிலும் முன்னுரிமை வழங்கப்பட்டு தெரிவு செய்யப்படுவார்கள்.

**விளக்கம்:** 'ஆதரவற்ற விதவை' என்பது, வாழ்வதற்குத் தனக்கென்று எந்தவொரு வழியும் இல்லாதவரும், பட்டினியிலிருந்து தன்னைக் காப்பாற்ற எந்தவொரு ஆதரவாளரும் இல்லாதவரும் ஆன விதவையைக் குறிப்பதாகும்.

**வயது:** 1.7.1993 அன்று 32 வயதிற்குக் குறைவாக.

**குறிப்பு:** ஆ.தி.வ./ப.வ., மி.பி.வ./சீ.ம. மற்றும் பி.வ.-க்கு வயது வரம்பு இல்லை.
(சலுகைகள் பற்றிய மேலும் சில விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன).

**தகுதி:** (15.12.1992 அன்றுள்ளபடி): கீழ்க்காண்பவை அல்லது அவைகளுக்கு இணையானவை:

i) a. A degree in Arts, Science and Commerce or a degree of B.O.L. of Annamalai University or B.B.A. of Madurai Kamaraj University or B.Litt. of University of Madras or B.B.M. or B.Litt. of Bharathiyar University; and

b. A degree in Law;

and

ii) Must be actually practising as an Adcovate or as a Pleader in a Court of Civil or Criminal Jurisdiction for a period of not less than three years.

ஆதரவற்ற விதவைகள், தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர், நாற்பது வயதிற்குக் குறைவாக உள்ள பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட மற்றும் பணியிலிருக்கின்ற தற்காலிக மாநில அரசுப் பணியாளர்கள் போன்றவர்களுக்கு வயது மற்றும்/அல்லது தகுதியிலிருந்து அளிக்கப்படும் சலுகைகள் தேர்வாணையத்தின் 'பணி வேட்பாளர்களுக்கான விதிமுறை'-களில் தரப்பட்டுள்ளன. ஆ.தி.வ./ப.வ., மி.பி.வ./சீ.ம., பி.வ., தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர் போன்றவர்களுக்கு அளிக்கப்படும் விண்ணப்பக் கட்டணச் சலுகையும் தேர்வாணையத்தின் 'பணி வேட்பாளர்களுக்கான விதிமுறை'-களில் தரப்பட்டுள்ளன. (பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு அளிக்கப்படும் சலுகைகள் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினருக்கும் பொருந்தும்).

விண்ணப்பப் படிவமும், நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு எழுத்து மூலம் கோரிப் பெற்றுக் கொள்ளலாம். கோரிக்கைகள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ பதவியின் பெயர் மற்றும் விளம்பர எண் ஆகியவற்றைக் குறிப்பிட்டு எழுதப்பட்டு செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு வழங்கத்தக்க 1.1.93 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10) சென்னை அண்ணா சாலை தபால் அலுவலகத்தில் செலுத்தத்தக்க கோடிட்ட அஞ்சல் ஆணை அல்லது பாரத ஸ்டேட் வங்கியில் (State Bank of India) ஏதாவதொரு கிளையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலாளருக்கு வழங்கத்தக்க 1.1.1993 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட சென்னை-600 006 ஆயிரம் விளக்கு பாரத ஸ்டேட் வங்கியில் செலுத்தத்தக்க பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10) 'கேட்புக் காசோலை' (Demand Draft)-யுடன் சுய விலாசம் எழுதிய உறையுடனும் (26 x 12 செ.மீ.) அனுப்ப வேண்டும். கோரிக்கைகள் பிற மொழியில் இருக்குமாயின் அத்துடன் ஆங்கில மொழிபெயர்ப்பும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டா.

DIPR/20/MS/93

**தாய்ப்பாலுக்கு நிகர் வேறில்லை!**
**ஆவின் பாலுக்கும் நிகர் வேறில்லை!!**

தருமபுரி மாவட்டத்தில் 1.65 இலட்சம் பால் உற்பத்தியாளர்களின் நம்பிக்கை நட்சத்திரம் தருமபுரி பால் பண்ணை. 50,000-க்கும் அதிகமான பால் நுகர்வோருக்குத் தரமான பால் வழங்கும் அட்சயப்பாத்திரம் தருமபுரி பால்பண்ணை.

1000-க்கும் அதிகமான கிராமிய பால் உற்பத்தியாளர்களையும், பால் நுகர்வோர் நிறைந்த நகரங்களையும் இணைக்கும் நல்லதோர் இணைப்புப் பாலம்.

ஐ.எஸ்.ஐ. முத்திரை கொண்ட தரமான பால்பவுடர்.

அக்மார்க் தர முத்திரை கொண்ட மிகச் சிறந்த ஆவின் நெய்.

வெண்ணெய், பால்கோவா, நறுமணப்பால் என அகில இந்தியப் பால் நுகர்வோரின் தேவையைப் பூர்த்தி செய்யும் 'அணில்' சேவை.

பால் உற்பத்தியில் தமிழகத்தில் நான்காவது இடம் பெறும் தருமபுரி மாவட்டக் கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் முதல் இடம் நோக்கி முன்னேறத் துடிக்கும் செயல்முறைத் திட்டங்கள் முனைப்புடன் செயல்படுத்தப்படுகின்றன.

உறுப்பினர்கள் விழிப்புணர்விற்கும், சங்கங்கள் மேம்பாட்டிற்கும் கூட்டுறவு வளர்ச்சித் திட்டங்கள் செயல்பாடு.

1.65 இலட்சம் உறுப்பினர்கள் 550-க்கும் அதிகமான பால் கூட்டுறவுச் சங்கத்தின் அங்கமாகிச் செயல்படும் நல்லதோர் கூட்டுக் குடும்பம் 'தருமபுரி மாவட்டப் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியமாகும்.

**தருமபுரி மாவட்டக் கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம்,**
**கிருட்டிணகிரி - 635 002.**



# ஒன்றே போதும்!

ஆம், இந்தியாவில் ஒவ்வொரு நிமிடத்திற்கும் 49 குழந்தைகள் பிறக்கின்றன! இதனால் ஆண்டுக்கு 1.70 கோடி வீதம் மக்கள் தொகை கூடிக்கொண்டே போகிறது. உலகின் மொத்த நிலப் பரப்பில் 2.4 சதவிகிதமே உள்ள நமது நாட்டின்



மக்கள் தொகையோ உலக மக்கள் தொகையில் 16 சதவிகிதமாகும்!

**அடுத்த இதழிலும்...**

**தருமபுரி மாவட்டம் தொடர்பான கட்டுரைகள், சுவையான செய்திகள் முதலியன அடுத்த இதழிலும் தொடர்கின்றன!**

# தருமபுரி மாம்பழமே!

தர்மபுரி மாவட்டத்தில் உள்ள ஜீனூரில், அரசு தோட்டக்கலைப் பண்ணை 122.38 எக்டேர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டிருக்கிறது. இது தவிர, திம்மாபுரத்திலும் வேறோர் பண்ணை உண்டு.

ஜீனூர் தோட்டக் கலைப் பண்ணையில் மா, கொய்யா, சப்போட்டா, நாவல், எலுமிச்சை, சீதா ஆகிய கனிதரும் மரக்கன்றுகள் வளர்க்கப்படுகின்றன. இந்தப் பண்ணையைப் பொருத்த மட்டில், மா இன ஒட்டுச்செடி வளர்ப்பே முக்கியமானதாகும்; பெங்களூரா, காளப்பாடு, மல்கோவா, காதரி, பீதர், செந்தூரா, நீலம் ஆகிய ஒட்டு மாங்கன்றுகள் இந்த மண்ணில் நல்ல வளர்ச்சி காண்கின்றன.

''சேலத்து மாம்பழமே'' என்று பாடியதெல்லாம் அந்தக் காலம்; தருமபுரி பிரிந்த பிறகு, அப்பெருமையைச் சேலம் இழந்து விட்டது என்றே கூறலாம். அண்மையில்- அகில இந்திய மாம்பழக் கண்காட்சி ஒரு வார காலம் கிருஷ்ணகிரியில் நடைபெற்றது அல்லவா? அதில்- அதிக மாங்கனி காய்ப்பிலும், அதிகச் சுவையுள்ள மாங்கனி உற்பத்தியிலும் தருமபுரி மாவட்டமே முதல் பரிசைப் பெற்றது.

வறட்சியைத் தாங்கும் சக்தி மாவுக்கு மட்டுமே உண்டு; இதனால்தானோ என்னவோ ஜீனூர் பண்ணையில் தண்ணீர்த் தட்டுப்பாடிருந்தும்கூட ஒட்டு மாங்கன்றுகள் செழித்து வளர்ந்திருக்கின்றன.

இந்த நேரத்தில் நாம் இன்னொன்றை முக்கியமாகச் சொல்லியாக வேண்டும். இந்தியாவிலேயே அதிக மாங்கனி தரும் மாநிலம் தமிழ்நாடுதான். தமிழ்நாட்டிலேயே அதிக மாங்கனி தருகின்ற மாவட்டம் தருமபுரிதான். தருமபுரியிலேயே அதிக மாங்கனி காய்க்கின்ற வட்டம் கிருஷ்ணகிரிதான். கிருஷ்ணகிரி வட்டத்திலேயே அதிகமாக மா பயிரிடும் ஊராட்சி ஒன்றியம், பருகூர்தான்!


1-2-1993 ரூ.1

# பொங்கல் பொங்குக!

—பி.வி. கிரி

உழைப்பின் அருமை
உலகம் உணர்ந்திட
உழுது வாழ்வோர்
உள்ளம் மகிழ்ந்திட
பொழுது புலர்ந்தது
புதுமை மலர்ந்தது!

பாடு பட்டவர்
பலனைப் பெற்றிட
நாடும் நகரமும்
நலமாய் விளங்கிட
பொழுது புலர்ந்தது
புதுமை மலர்ந்தது!

பெண்ணின் பெருமை
பேணி வளர்த்திட
விண்ணிலும் மண்ணிலும்
விஞ்ஞானம் வளர்ந்திட
பொழுது புலர்ந்தது
புதுமை மலர்ந்தது!

இந்திய ஒற்றுமை
இமைபோல் காத்திட
செந்தமிழ் எங்கணும்
செழித்து வளர்ந்திட
பொழுது புலர்ந்தது
புதுமை மலர்ந்தது!

மதுவின் அடிமை
மயக்கம் தெளிந்திட
பொதுமைப் பூங்கா
பூத்துக் குலுங்கிட
பொழுது புலர்ந்தது
புதுமை மலர்ந்தது!

எங்கும் அமைதி
இனிதே நிறைந்திட
பொங்கல் எங்கணும்
பொங்கி வழிந்திட
பொழுது புலர்ந்தது
புதுமை மலர்ந்தது!



ஆசிரியரும் வெளியிடுபவரும்: இரா. சம்பத், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி: தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927

எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்

* பருத்தி, பாலியஸ்டர்,
பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர்,
சர்ட்டிங்ஸ்,
பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர்
சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள்,
வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள்,
அலங்காரத்
துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ்
விற்பனை நிலையத்தை அணுகவும்.






# இந்த இதழில்


குடியரசு தினவிழா ... 2
ஆசிய விளையாட்டரங்குகளின் அரசி 6
தமிழ்த் திரையுலகின் தங்க விழா ... 12
தெலுங்கு-கங்கைத் திட்டம் ... 25
வரலாற்றுச் சிறப்பு ... 27
தேசிய ஒருமைப்பாட்டுக்கு நம் மாநிலம் செலுத்தும் மாபெரும் மரியாதை —மாண்புமிகு முதல்வர் உரை . 32
மின்துறையின் முற்போக்குத் திட்டங்கள் 37
ஒசூரில் சிப்காட் ... 41
திருவள்ளுவர் திருநாள் ... 45
மாமல்லபுரம் நாட்டிய விழா ... 49
ஒசூர் கால்நடைப்பண்ணை ... 51
கூட்டுறவுச் சர்க்கரை ஆலை ... 55
தருமபுரி மாவட்ட வளர்ச்சிக் கழகம் 59





# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2024

தைத் திங்கள் - 19

மலர்: 23 இதழ்: 15

1-2-1993








# குடியரசு தின விழா

இந்தியாவின் 44-வது குடியரசு நாள் விழா 26.1.1993 அன்று சென்னை மெரினா கடற்கரையிலுள்ள, காந்தி சிலையருகே கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. காலை ஆறு மணி முதலே பொதுமக்கள் காந்தி சிலையருகே, சாலையின் இருமருங்கிலும் ஆயிரக் கணக்கில் குவியத் தொடங்கினர். ஏழுமணிக்கெல்லாம், அகில இந்திய வானொலி நிலையக் கட்டடத்திலிருந்து விவேகானந்தர் இல்லம் வரை மக்கள் வெள்ளமெனத் திரண்டிருந்தனர். அனைவரது பார்வையும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் வருகைக்காகக் காத்திருந்தன.

சரியாக 7.43 மணிக்கு காந்தி சிலைக்கு வந்து சேர்ந்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் பார்வையாளர் பிரிவைச் சுற்றி வந்து பொது மக்களை நோக்கிக் கையசைத்து வாழ்த்துக்களைத் தெரிவித்தார். பொதுமக்களும் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் முதல்வரைப் பார்த்து கையசைத்தனர். பொதுமக்களைப் பார்வையிட்டபின், அணி வணக்கம் ஏற்கும் மேடையருகே வந்த முதல்வர் அவர்களை, தலைமைச் செயலாளர் திரு.டி.வி.வெங்கட்ராமன் இ.ஆ.ப., அவர்கள் வரவேற்றார்.

சிறிது நேரத்தில் மேதகு ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் பார்வையாளர் பிரிவைச் சுற்றிவந்து பொதுமக்களைபார்த்துக் கையசைத்த வண்ணம் வாழ்த்துக்களைத் தெரிவித்தார். பின்பு, மேடையருகே வருகை புரிந்த ஆளுநர் அவர்களை முதல்வர் அவர்கள் வரவேற்று, முப்படைத் தளபதிகளையும், காவல் துறைத் தலைவர்களையும் அறிமுகப் படுத்தினார்.

ஆந்திரம், தமிழ்நாடு, கர்நாடகம், கேரளா, கோவா மாநிலங்களின் தலைமைப் படைத் தலைவர் மேஜர் ஜெனரல் முல்யே, சென்னைக் கடற்படைப் பொறுப்பு அதிகாரி கமோடர் எச். ஷானி என்.எம்., தாம்பரம் வான் படை அதிகாரி ஏர் கமோடர் ஆர்.எஸ்.சேகல், காவல்துறை இயக்குநர் தலைவர் திரு.எஸ்.ஸ்ரீபால், இ.கா.ப., கூடுதல் காவல்துறைத் தலைவர் திரு.வால்டர் ஐசக் தேவாரம், காவல்துறை ஆணையர் திரு.ஆர்.ராசகோபாலன், இ.கா.ப., ஆகியோர் அறிமுகப்படுத்தப்பட்டனர்.









சரியாக 8.00 மணிக்கு மேதகு ஆளுநர் அவர்கள் தேசியக் கொடி ஏற்றி வைத்தார். உடனே நாட்டுப் பண் இசைக்கப்பட்டது.

## அணிவகுப்பு மரியாதை

அடுத்து, முப்படைகள், காவலர்கள், தேசிய மாணவர் படை, சாலைக் காப்புச் சுற்றுக் காவலர், தீயணைப்புப் படை, சென்னை மாநகர ஊர்க்காவல் படை, பாரத சாரணர், செஞ்சிலுவைச் சங்கம், ஆகியோரது அணிவகுப்பு மரியாதையை மேதகு ஆளுநர் அவர்கள் ஏற்றார்.

பின்பு, தீரச் செயல்புரிந்த திரு. கி. லோகநாதன் (தென்னார்க்காடு) திரு.எஸ்.குமார் (வட ஆர்க்காடு-அம்பேத்கர்), திருமதி மு. சரசாயாள் (பெரியார்), திரு. சு. வேலாயுதம் (சிதம்பரனார்), திரு. க. மோகன சுந்தரம் (செங்கை- எம்.ஜி.ஆர்.), திரு.ஆ.செபஸ்தியன் (திண்டுக்கல்-அண்ணா) அகிய 6 பேருக்குத் தலா ரூ.1,000 மதிப்புள்ள அண்ணா வீரப்பதக்கங்களையும் ரூ.1000-க்கான காசோலையையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார்.

ஊனமுற்றோரைப் பணியில் அமர்த்தும், தனியார் நிறுவனத்தாருக்கான மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் சிறப்பு விருது, கோயம்புத்தூர் ஸ்ரீ ராம கிருஷ்ணா மிஷன் வித்யாலயா கல்வியியல் கல்லூரிக்கு வழங்கப்பட்டது. இந்நிறுவனத்தைச் சார்ந்த டாக்டர் எம்.என்.ஜி.மணி அவர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களிடமிருந்து விருதினையும், பதக்கத்தையும், பாராட்டுச் சான்றிதழையும் பெற்றுக்கொண்டார்.

தொடர்ந்து, பள்ளிச் சிறார்களின் கண்கவர் ஆடல் பாடல் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. கண்கொள்ளாக் காட்சியாக விளங்கிய இந்நிகழ்ச்சி பொதுமக்களின் பலத்த வரவேற்பைப் பெற்றது. தென்னிந்தியக் கலாச்சார மையம் வழங்



மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் குடியரசுத் தினத்தன்று, சென்னை மெரீனா கடற்கரை, காந்தி சிலை எதிரில் நிறுவப்பட்டுள்ள சிம்சன் நிறுவனத்தின் கடிகாரத்தைத் திறந்து வைத்தார் (26.1.93).

கிய கர்நாடகா மாநிலத்தின்வீரகாசி, கேரள மாநிலத்தின் செண்ட மேளம், ஆந்திரப்பிரதேசம் மாதுரி, பாண்டிச் சேரி காளியாட்டம், குஜராத் கர்பா ஆட்டம் ஆகியவை அனைவரது கவனத்தையும் ஈர்த்தன.

அதைத் தொடர்ந்து நடைபெற்ற கரகம், காவடி, கொக்கலிக்கட்டை ஆட்டம், தாரைத் தப்பட்டை, சேவை ஆட்டம், ஒயிலாட்டம், கட்டைக் கூத்து ஆகிய கிராமிய நடனங்கள் கண்ணுக்கும் செவிக்கும் விருந்தாய் அமைந்தன.

அதற்குப் பின், அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்த அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பு நடை பெற்றது.

தமிழ்நாடு அரசு இசைப் பயிற்சி மையத்தில் நாயன இசை பயிலும் மாணவர்களின் இன்னிசையுடன் பவனி வந்த நாயன இசை ஊர்தி யுடன் அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பு தொடங்கியது. இதைத் தொடர்ந்து செய்தி-மக்கள் தொடர் புத்துறை, தோட்டக்கலைத்துறை, சென்னை மாவட்ட ஆட்சியர், காவல்துறை, வேளாண்மைத்துறை, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங் கல் மற்றும் வணிகத் துறை, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சுற்றுலாத்துறை, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, மீன்துறை, வீட்டுவசதி மற் றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, சுற்றுப்புறம் மற்றும் வனத்துறை, கூட்டுறவுத் துறை, ஊரக நலத்துறை, தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரி யம், ஆகியவற்றின் எழில்மிகு வண்ண வண்ண அலங்கார ஊர்தி களின் அணிவகுப்பு குடியரசு தின விழாவிற்குச் சிகரம் வைத்தாற் போல் அமைந்திருந்தது.

அலங்கார ஊர்திகளின் அணி வகுப்பு முடிந்ததும் செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர், திரு. இரா. சம்பத், இ.ஆ.ப., அவர்கள் நன்றி நவின்றார். பின்னர் நாட்டுப் பண் இசைக்க விழா இனிது நிறைவுற்றது.

- என். இளங்கோ.





பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் 76-ஆம் பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு 17.1.93 அன்று செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்தில், மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் புரட்சித் தலைவர் அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்துவைத்து அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கி விழாப் பேருரை ஆற்றினார். அவ்வமயம் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. சு. முத்துசாமி, மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன், மாண்புமிகு அரசுத் தலைமைக் கொறடா திரு கா.பா. பட்டாபிராமன் மற்றும் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட ஆட்சியர் திரு. கு. ஞானதேசிகன் ஆகியோர் உடனிருந்தனர்.



## டாக்டர் எம்.ஜி.ஆர். முக்கியக் குறிப்புகள்

| | |
|---|---|
| பிறந்த ஆண்டு | ... 1917 |
| திரைப்படங்களில் கதாநாயகனாக நடிக்கத் தொடங்கிய ஆண்டு | 1947 |
| தேசியப் பாராட்டைப் பெற்ற 'மலைக் கள்ளன்' திரைப்படம் வெளிவந்த ஆண்டு | ...1954 |
| அவரே தயாரித்து இயக்கிய 'நாடோடி மன்னன்' படம், சாதனை படைத்த ஆண்டு | ...1958 |
| டாக்டர் எம்.ஜி.ஆர். நடித்த மொத்தத் திரைப்படங்கள் | ... 132 |
| மத்திய அரசின் 'பாரத்' பட்டம் பெற்ற ஆண்டு | ... 1972 |
| சட்டமன்ற மேலவை உறுப்பினரான ஆண்டு | ... 1962 |
| மாண்புமிகு தமிழக முதல்வராகப் பதவியேற்ற ஆண்டு | ... 1977 |
| சென்னைப் பல்கலைக்கழகம் 'டாக்டர் பட்டம்' வழங்கிய ஆண்டு | ... 1984 |
| தொடர்ந்து மூன்றாம் முறையாக மாண்புமிகு தமிழக முதல்வரான ஆண்டு | ... 1985 |
| டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் இயற்கை எய்திய ஆண்டு | ... 1987 |





கட்டி முடித்த லார்சன் அண்டு டூப்ரோ நிறுவன கட்டுமானப் பிரிவின் துணைத் தலைவர் திரு. ராமகிருஷ்ணா, விளையாட்டு அரங்கின் வடிவத்தை அமைத்த திரு. ராகவேந்தர் ராவ் ஆகியோருக்கும் அவர் நினைவுப் பரிசுகள் வழங்கினார்.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.அழகு திருநாவுக்கரசு அவர்களும், மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. எஸ். கண்ணப்பன் அவர்களும் முதல்வர் அவர்களுக்கு நினைவுப் பரிசை வழங்கினார்கள்.

கால்பந்துப் போட்டிகளை முறைப்படித் தொடங்கி வைப்பதாக, முதல்வர் அறிவித்ததைத் தொடர்ந்து, போட்டியில் கலந்து கொள்ளும், நாடுகளைச் சார்ந்த விளையாட்டு வீரர்களின் அணிவகுப்பு நடைபெற்றது. இந்த அணி வகுப்பில் ருமேனியா, ரஷ்யா, பொலிவியா, பின்லாந்து, வடகொரியா, இந்தியா ஆகிய 6 நாடுகளும் பங்கேற்றன.

வீரர்களின் அணிவகுப்பு நடந்து கொண்டிருக்கும்போதே, மைதானத்தில், மேடைக்கு நேர் எதிரே அமைக்கப்பட்டிருந்த ஒரு பகுதியில் 3,000 மாணவர்கள் பல வண்ணத் துணிகளைக் கையிலேந்தியபடி, பல்வேறு வடிவங்களை அமைத்துக் காட்டினார்கள். முதலில் 'வருக வருக', (WELCOME), 'வணக்கம்', SPORTS FOR PEACE, SPORTS FOR ALL, WELCOME TO PM, WELCOME TO CM எனப் பல்வேறு வார்த்தைகளை வடித்துக் காட்டினார்கள். போட்டியில் பங்கு பெறும் அனைத்து நாடுகளின் பெயர்களையும், வடிவமைத்துக் காண்பித்தார்கள்.

இவற்றிற்கெல்லாம் சிகரம் வைத்தாற் போல, மாண்புமிகு முதல்வர் அவர்களின் உருவத்தையும், போட்டியின் சின்னமான லியோவின் சின்னத்தையும் வடிவமைத்து ரசிகர்களின் பாராட்டுகளைப் பெற்றனர்.

மைதானத்தைச் சுற்றி வந்து, விளையாட்டு வீரர்களின் அணிவகுப்பு நின்றதைத் தொடர்ந்து





இந்திய அணியின் தலைவர் சத்தியன் 10-வது நேரு தங்கக் கோப்பை சர்வதேசக் கால்பந்துப் போட்டிக்கான உறுதிமொழியைப் படித்தார்.

வீரர்கள் மைதானத்தை விட்டுச் சென்றவுடன், 12 பள்ளிக்கூடங்களைச் சேர்ந்த 1,250 மாணவர்களும், 1,250 மாணவிகளும் வெள்ளை உடையில் மைதானத்தைச் சுற்றி அணிவகுத்து வந்தார்கள். அவர்கள் அனைவரும் தங்களது கைகளில் பல வண்ணக் கொடிகளைப் பிடித்திருந்தார்கள். சிலர் கொத்துக் கொத்தாகப் பலூன்களை வைத்திருந்தனர்.

அவர்கள் அனைவரும் மைதானத்திற்கு வந்து நின்றதும், பலூன்களைப் பறக்க விட்டனர்.

அதன்பின்னர், மஞ்சள் நிறச் சீருடை அணிந்த 1,500 மாணவர்கள் வரிசையாக மைதானத்திற்கு வந்தனர். அவர்கள் பலவிதமான உடற்பயிற்சிகளைச் செய்து காட்டி



# ஆசிய விளையாட்டரங்குகளின் அரசி

**இந்தியாவின் விளையாட்டு வரலாற்றிலும், அனுதினமும் சாதனைகளைக் குவித்திடும் மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி அவர்களின் ஆட்சியின் வரலாற்றிலும் இவ்வாண்டு, ஜனவரி 18-ஆம் நாள் ஓர் பொன்னாளாகும்!**



10-வது நேரு தங்கக்கோப்பை சர்வதேச அழைப்பு கால்பந்துப் போட்டியை நடத்தும் பொறுப்பு தமிழகத்திற்கு வழங்கப்பட்டது. இத்தகைய போட்டிகளை நடத்துவதற்கு ஏதுவான, சர்வதேச விதிமுறைகளுக்கு ஏற்றதொரு, விளையாட்டு அரங்கம் நம்மிடம் இல்லையே என்றதொரு குறை அனைவர் மனதிலும் தோன்றியது. அதன் காரணமாக 10-வது நேரு தங்கக் கோப்பைக் கால்பந்து போட்டியை நம்மால் நடத்த இயலுமா என்ற ஐயப்பாடு எழுந்தது.

இந்தத் தருணத்தில் மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி அவர்கள் துணிச்சலானதொரு முடிவெடுத்தார்.

சர்வதேசக் கால்பந்துச் சங்கமும், சர்வதேச அத்லெடிக் சங்கமும், சமீபத்தில் வகுத்த விதிமுறைகளுக்கு ஏற்ப, பிரம்மாண்டமான விளையாட்டரங்கை 7½ மாதக் காலத்திற்குள் கட்டி முடிக்கும் சவாலை ஏற்றுக் கொண்டார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள், இந்த விளையாட்டரங்கம் பற்றி திட்டம் தீட்டப்பட்ட நாள் முதல் தொடக்க விழா வரை ஒவ்வொரு கட்டத்திலும் தனிப்பட்ட முறையில் சீரிய கவனம் செலுத்தி அனைவரையும் திறம்படச் செயலாற்ற வைத்து தமிழத்திற்குப் பெருமை சேர்க்கும் வகையில் காண்போர் வியக்கும் வண்ணம் ரூ.40 கோடி செலவில் கட்டி முடித்தார்.

மாண்புமிகு முதல்வர் அவர்களின் கற்பனைத் திறனுக்கும் கலை உணர்வுக்கும், தொலைநோக்குப் பார்வைக்கும், நிர்வாகத் திறனுக்கும் தக்க சான்றாக விளங்கும் இவ்விளையாட்டரங்கம், உலக அரங்கில் நீடித்த புகழைப் பெற்றுத் தந்திடும் என்பதில் சந்தேகமில்லை.

விழாவிற்கு, மேதகு தமிழக ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் தலைமை வகித்துச் சிறப்புரையாற்றினார்.

நேரு விளையாட்டு அரங்கினை மாண்புமிகு பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்கள் திறந்து வைத்தார். மேடையில் அமைக்கப் பட்டிருந்த பொத்தானை, பிரதமர் அவர்கள் அழுத்த, புல் தரையில் அலங்கார மேடை மீது அமைக்கப் பட்டிருந்த திரை மெல்ல விலகி, விளையாட்டரங்கின் மாதிரி (Model) எழிலோடு வெளிப்பட்டது. விளையாட்டரங்கில் கூடியிருந்த 40,000 மக்களும் • கைத் தட்டி, ஆரவாரம் செய்தார்கள். அதைத் தொடர்ந்து, மாண்புமிரு !ிரதமர் அவர்கள் பேசியதாவது:-

''சர்வதேசத் தரத்துடன் நவீன வசதிகளுடன் கட்டப்பட்ட, நேருவின் பெயர் சூட்டப்பட்ட இந்த ஸ்டேடியத்தைத் திறந்து வைக்கும் வாய்ப்பை எனக்கு அளித்தமைக்குத் தமிழகத்திற்கு - குறிப்பாக முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு நன்றி கூறுகிறேன். ஸ்டேடியக் கட்டுமானப் பணியில் முக்கியப் பங்கு வகித்த தமிழக முதலமைச்சரையும், மற்றவர்களையும் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். விளையாட்டுத்துறை முன்னேற்றத்துக்கு, பள்ளிக்கூடங்களில் விளையாட்டைக் கட்டாயப் பாடமாக்க வேண்டும். ஸ்டேடியங்கள் போன்ற பெரிய வசதிகள் தேவையில்லாத கபடி போன்ற விளையாட்டுக்களுக்கு நாம் முக்கியத்துவம் கொடுத்து, கிராம அளவில் வளர்ச்சி அடைய உதவ வேண்டும். இந்த ஸ்டேடியம் சிறப்பாக உருவானதைப் பாராட்டும் அதே நேரத்தில், இவ்வளவு வசதிகள் நிறைந்த ஸ்டேடியம் இல்லாவிட்டாலும், சிறிய அளவிலாவது ஸ்டேடியங்களை மாவட்ட அளவில் கட்டிக் கொடுப்பதன் மூலம், அடிமட்ட அளவில் விளையாட்டுத் திறனை வளர்க்க இயலும்''.

10-வது ஜவகர்லால் நேரு தங்கக்கோப்பை அழைப்பு சர்வதேசக் கால்பந்தாட்டப் போட்டியினை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தொடங்கிவைத்தார்.

மேடையிலிருந்த பொத்தானை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அழுத்த, மைதானத்தின் நடுவிலிருந்த அலங்கார மேடையிலிருந்த மஞ்சள் நிறத்திரை விலகியது. போட்டியின் சின்னமான சிங்கம் (Leo) கம்பீரமாகக் காட்சியளித்தது.

விழா மலரை, மத்திய அரசின் மாண்புமிகு மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. அர்ஜூன் சிங் அவர்கள் வெளியிட்டார். முதல் பிரதியை மாண்புமிகு பிரதமர் அவர்கள் பெற்றுக்கொண்டார். மேதகு ஆளுநர் அவர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் மலர் பிரதிகளை வழங்கினார்.

அதைத் தொடர்ந்து, பத்தாவது ஜவகர்லால் நேரு தூங்கக்கோப்பை அழைப்பு சர்வதேசக் கால்பந்து போட்டிகளை, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்துச் சிறப்புரை ஆற்றினார்.

பிரதமர், ஆளுநர், மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் ஆகியோருக்கு முதலமைச்சர் நினைவுப் பரிசுகளை வழங்கினார்.

மிகக் குறுகிய காலத்தில் சிறப்பாக விளையாட்டு அரங்கினைக்









# தமிழ்த் திரையுலகின் தங்க விழா

தமிழ்த் திரையுலகமே போற்றும் தங்க விழா ஒன்று அண்மையில் சீரும் சிறப்புமாக நடந்தேறியது.

கலை உலகினர், பல்துறை அறிஞர் பெருமக்களெல்லாம் போற்றிப் புகழ்ந்த விழா அது!

'இதுவரை, யாருமே இதுபோன்ற விழாவினை நடத்தவில்லை' என்று சொல்லத்தக்க வகையிலே அமைந்திருந்தது அந்த விழா!

அதுதான் 'மாநிலத் திரைப்பட விருது வழங்கும் விழா' எனும் மன்நிறைவு தரும் மகத்தான விழா!

சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா அரங்கத்தில், 21.1.93 அன்று, தமிழக அரசின் சார்பில் கொண்டாடப்பட்ட இந்த விழாவுக்கு, மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. சேடப்பட்டி இரா. முத்தையா அவர்கள் தலைமை வகித்தார்.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் மாநிலத் திரைப்பட விருதுகளை வழங்கினார்.

முன்னதாக, சங்கர்-கணேஷ், இசை விருந்து வழங்கினார். தேனினும் இனிய அந்த மெல்லிசையில் அனைவரும் மெய்மறந்தனர் என்றே சொல்ல வேண்டும். அந்த அளவுக்கு அருமையாக இருந்தது அந்த இன்னிசை மழை!

அடுத்து, தனக்கே உரித்தான நகைச்சுவை பாணியில் ஒரு சிறு நாடகத்தை நடத்தி, எல்லாரையும் வயிறு வலிக்கச் சிரிக்க வைத்தார், இல்லை சிந்திக்க வைத்தார் திரு. எஸ்.வி. சேகர்.

'ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரே கண்ணா!' என்கிற வாசகத்தை மெய்யாக்கும் வகையிலே, திரு. டி.கே.எஸ். பாபுவின் நடன நிகழ்ச்சி நம்மையெல்லாம் வெகுவாகக் கவர்ந்தது. நம் மன மென்னும் மேடையில் இன்னும் அந்த நடனமணிகள் நடனமாடுகின்ற ஓர் பிரமை!

ஆம். முத்தமிழும் முழங்கிய விழா என்றால், அது முற்றிலும் உண்மை!

செய்தி-சுற்றுலாத்துறை ஆணையர் மற்றும் செயலாளர் திருமதி சி.கே. கரியாலி, இ.ஆ.ப., அவர்கள் விழாவுக்கு



வந்திருந்தோரை வரவேற்றுப் பேசினார்.

மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. சேடப்பட்டி இரா. முத்தையா அவர்கள் பேசுகையில், ''கலை உலகில் பெற்ற செல்வாக்கை அரசியலிலும், அரசியலில் தனது திறமை மூலம் பெற்ற செல்வாக்கைக் கலை உலகிலும் பயன்படுத்தாதவர் மாண்புமிகு முதல்வர் அவர்கள். அவர் தன்னலம் அற்றவர்'' என்றார்.

திரைப்பட விருதுகள் தேர்வுக் குழுத் தலைவர், மாண்புமிகு நீதிபதி திரு. எஸ். பிரதாப் சிங் அவர்கள் பேசுகையில், ''ஒருமைப்பாடு, மதச்சார்பின்மை, வரதட்சிணை எதிர்ப்பு உள்ளிட்ட நல்ல கருத்துக்களைத் திரைப்படங்களில் பொழுதுபோக்கு அம்சங்களுடன் சேர்த்து வலியுறுத்த வேண்டும். அதன் மூலம் சமுதாயத்தில், விழிப்புணர்வை ஏற்படுத்த முடியும்'' என்றார்.

## மாண்புமிகு முதல்வர் அவர்களின் உரை

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், விழாப் பேருரையாற்றினர்ர். அப்போது அவர் குறிப்பிட்டார்:

**இந்த நன்னாள் என் வாழ்வில் மறக்க முடியாத ஒரு பொன்னாள்! விருதுகளும் பரிசுகளும் பெறுகின்ற பெருமக்க்ளுக்கு எத்தனை மகிழ்ச்சியோ, அதைவிட இரட்டிப்பு மகிழ்ச்சி - அவற்றை வழங்குகின்ற எனக்கு! காரணம் கலை அரசோச்சிக் கொண்டிருக்கின்ற காலம் இது! எனவேதான், திரை உலகப் பெருமக்களுக்கு, அரசு பரிசும், விருதும் வழங்குவது வழக்கம் என்றாலும், இந்த விழாவை உணர்ச்சிபூர்வமாக, ஒப்பற்ற விழாவாக நடத்த வேண்டும் என்று நான் விரும்பினேன்.**

**எனது தாய்வீடு என நான் பெருமையோடு கருதுகின்ற திரைப்படத் துறையினருக்கு, தமிழக அரசின் 1990 மற்றும் 1991- ஆம் ஆண்டிற்கான, மாநிலத் 'திரைப்பட விருதுகள்' வழங்கும் விழா நடந்தேறிக் கொண்டிருக்கிறது. தமிழ்த் திரைப்படத் துறையைச் சேர்ந்த நடிக, நடிகையருக்கு, தொழில்நுட்பக் கலைஞர்களுக்கு, மிகுந்த ஊக்கத்தினையும், பெருமிதத்தினையும் கொடுக்கக்கூடிய தனிச்சிறப்பு கொண்டது தமிழக அரசு வழங்கும் திரைப்பட விருதுகள். ஏனென்றால், மாநில அரசு விருது வழங்குகிறது என்றால் அதனைப் பெறும் கலைஞர்கள் தமிழக மக்கள் அனைவராலுமே கவுரவிக்கப்படுகின்றார்கள் என்பது தான் பொருள்.**

**கலை உலகில் ஈடுபட்டிருப்போர் பெரிதும் எதிர்நோக்குவது, வெறும் பணமும், பொருளும் ஈட்டுவது மட்டுமல்ல. அவர்கள் தேடும் செல்வம் ஓரளவு**

- **சிறந்த திரைப்படங்களுக்கும், கலைஞர்களுக்கும் அளிக்கப்படும் மாநில அரசின் விருதுகளில் 3 சவரன், 5 சவரன் என்றிருந்த பாகுபாடுகள் நீக்கப்பட்டு, அனைவருக்கும் 5 சவரன் தற்போது முதல் அளிக்கப்படுகிறது.**
- **கலைத்துறையில், திரைப்படத் துறையினர் ஈட்டும் வெற்றியையும், கௌரவத்தையும், செல்வத்தையும் சமுதாய மேம்பாட்டுக்காகப் பயன்படுத்த வேண்டும்.**









ரசிகர்களை மகிழ்வித்தார்கள்.

அவர்களைத் தொடர்ந்து நீல நிறச் சீருடை அணிந்த 1,100 மாணவிகள் வந்தனர். அவர்களில் சிலர் வளையல்களையும், சிலர் பந்துகளையும், மற்றவர்கள் சிவப்பு, நீல நிற 'ரிப்பன்'களையும் வைத்திருந்தார்கள்.

அவர்கள் மைதானத்திற்குள் நின்றபடி கடலில் அலைகள் எழும்புவதைப் போலவும், தாமரைப்பூ மலர்வது போன்றும் செய்து காண்பித்து, ரசிகர்களின் பாராட்டுக்களைப் பெற்றனர்.

அவர்களுக்குப் பிறகு பல வண்ண உடைகளை அணிந்து, 1,000 மாணவிகள் மைதானத்துக்குள் வந்தனர். அப்போது மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பாராட்டும் வகையில் ஒரு பாடல் இசைக்கப்பட்டது. மாணவிகள், அந்தப் பாட்டுக்கு ஏற்றபடி கோலாட்டம், மயிலாட்டம், ஒயிலாட்டம் ஆடினர்.

மாணவ-மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளுக்குப் பிறகு, போலீசாரின் கரகாட்டம், காவடி ஆட்டம் போன்றவை நடந்தன. இதில் பெண் போலீசார் உள்பட 300 பேர் கலந்து கொண்டார்கள்.

மைதானத்தின் நடுவே கலைஞர்கள் கூடியிருந்து நையாண்டி மேளம் அடிக்க, போலீசார் அதற்கேற்ப கரகம் - காவடி ஆட்டங்களை ஆடினர். அப்போது நாட்டுப்புறப் பாடல்களும் இசைக்கப்பட்டன.

இந்த நிகழ்ச்சியின் முடிவில், 2 போலீசார் கம்புகளின் மீது ஏறி





நின்றபடி, இளஞ்சிங்கம் பொறிக்கப்பட்ட கொடியை விரித்துக் காண்பித்தனர்.

போலீசார் மைதானத்தை விட்டு வெளியேறியதும், ஸ்டேடியத்தின் எல்லா விளக்குகளும் அணைக்கப்பட்டன. உடனே ரயில்வே பாதுகாப்புப் படையைச் சேர்ந்த 1,000 வீரர்கள் தீப்பந்தங்களை ஏந்தியபடி வந்தனர். வீரர்கள் அனைவரும் தீப்பந்தங்களினாலேயே 'நல்வரவு' என்று ஆங்கிலத்தில் வடிவமைத்தனர். கலை நிகழ்ச்சிகள் அனைத்திற்கும் சிகரம் வைத்தது போல் நடந்த இந்த நிகழ்ச்சியைப் பார்த்து ரசிகர்கள் கைத் தட்டி, மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர், தீப்பந்தங்களால், ''பிரதமர் நீடூழி வாழ்க'', ''முதல்வர் நீடூழி வாழ்க'', ''பிரதமருக்கு நன்றி'', ''முதல்வருக்கு நன்றி'', ''வணக்கம்'' போன்ற வாசகங்களை ஆங்கிலத்தில் வடிவமைத்தபோது ரசிகர்கள் எழுப்பிய ஆரவாரத்தினால் அரங்கமே அதிர்ந்தது. அதன்பிறகு வாணவேடிக்கை நடைபெற்றது.

சிறுமிகள் பலர் மத்தாப்புகளைக் கொளுத்தினர். இடி முழக்கம் போன்ற அதிர்வேட்டுகள் வெடிக்கப்பட்டன. சில பட்டாசுகள் உயரே பறந்து சென்று, வானத்தில் வெடித்து பல வண்ணங்களாகச் சிதறின.

வானத்தில் வண்ண ஜாலங்கள் நடந்து கொண்டிருந்தபோது, ஸ்டேடியத்தின் மேல் பகுதியில் புதுவிதமான மத்தாப்பு கொளுத்தப்பட்டது. அதில் ''நல்வரவு'', ''பிரதமர் நீடூழி வாழ்க'', ''வணக்கம்'' போன்ற வாசகங்கள் சுடர்விட்டு எரிந்தன.

கலை நிகழ்ச்சிகளையும், தீப்பந்த சாகசம், வாணவேடிக்கை போன்றவற்றையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ரசித்துப் பார்த்தார்.

சிறப்பான முறையில் நிகழ்ச்சிகளைச் செய்தபோது, மாண்புமிகு முதல்வர் அவர்கள் கைத் தட்டிப் பாராட்டினார். கலை நிகழ்ச்சிகளை முடித்துவிட்டு மாணவ-மாணவிகள் வெளியேறியபோது அவர்களைப் பார்த்துக் கையசைத்து மகிழ்ச்சி தெரிவித்தார்.

என். இளங்கோ.



## பலநோக்கு விளையாட்டரங்கம்

★ சர்வதேசக் கால்பந்தாட்டக் கூட்டமைப்பின் தர நிர்ணய அளவு கோல்களுக்கு ஏற்ப உருவாக்கப்பட்ட புதிய நேரு விளையாட்டரங்கம், ஆசியாவிலேயே அதிலும் குறிப்பாக இந்தியாவிலுள்ள விளையாட்டு அரங்கங்களில் மிகச் சிறந்த நவீன விளையாட்டரங்கமாகும்.

★ இந்த அதிநவீன விளையாட்டு அரங்கம் கால்பந்து மற்றும் உடற்பயிற்சிப் போட்டிகள் நடத்துவதற்கு ஏதுவாக அமைக்கப்பட்டுள்ளது.

★ சர்வதேச அளவிலான கால்பந்தாட்ட மைதானத்தைத் தவிர 8 Lane ஓட்டப்பந்தையக் களமும், Shot-put, High Jump, Discus, Hammer throw, Javelin போன்ற உடற்பயிற்சிப் போட்டிகள் நடத்த வசதியும் இங்கு உள்ளன.

### கொள்ளளவு:

★ நவீன ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கத்தில், 40 ஆயிரம் பார்வையாளர்கள் தவிர 500 முக்கிய விருந்தினர்களும், சிறப்பு அழைப்பார்களும், 500 பத்திரிகையாளர்களும் அமர வசதி செய்யப்பட்டுள்ளது.

★ விளையாட்டரங்கத்தின் மேற்பகுதியில் பார்வையாளர்களுக்கு இடையூறு ஏற்படாவண்ணம் 20 மீட்டர் நீளத்துக்குச் சிமெண்டாலான கூரை அமைக்கப்பட்டிருப்பது அரங்கத்துக்கு மேலும் அழகைச் சேர்ப்பதாகும்.

### மாநாட்டு அறை

★ 100 பேர் அமரக்கூடிய மாநாட்டு அறையும், மருத்துவச் சிகிச்சைப் பிரிவும், உடற்பயிற்சி அறையும் இங்கு தனித்தனியாக அமைக்கப்பட்டு உள்ளன.

### விஐபி ஏரியா

★ ஜவகர்லால் நேரு விளையாட்டு அரங்கத்தில் முக்கிய விருந்தினர்களுக்காக வண்டி நிறுத்துமிடமும், மின் தூக்கி (Lifts) உணவு அறையுடன் கூடிய குளிர்சாதன மாநாட்டு அறை போன்ற வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

### மாணவர்களுக்குப் பதக்கம் பரிசு!

18.1.93 அன்று நடைபெற்ற ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கின் தொடக்க விழாவில் பங்கு கொண்டு அனைவரது கண்ணையும் கருத்தையும் கவரும் வகையில் எழில்பொங்கும் கலை நிகழ்ச்சிகளையும், உவகையூட்டும் உடற்பயிற்சிகளையும் செய்து காட்டிய பள்ளிச்சிறார்கள் அனைவருக்குமே பதக்கங்கள் வழங்குமாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டார்.

அவரது ஆணைக்கு இணங்க 9,000 மாணவ மாணவியருக்குத் தலா ரூ.250 மதிப்புள்ள தங்க முலாம் பூசிய வெள்ளிப்பதக்கங்கள் பள்ளிதோறும் வழங்கப்பட்டன; சிறுவர் சிறுமியர் மகிழ்ச்சியில் திளைத்தனர்.

### மின்னணுத் தகவல் பலகை

★ சென்னையில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள நேரு விளையாட்டரங்கத்தில். 16 x 32" மற்றும் 16 x 3" அளவில் இரண்டு மின்னணுத் தகவல் பலகைகள் (Electronic Score Board) பொருத்தப்பட்டுள்ளன. கணிப்பொறி மற்றும் வீடியோ கருவிகளின் மூலம் தகவல் அறிவிப்பு செய்ய இதில் வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## கால்பந்தாட்டத்தின் கதை!

கால்பந்தாட்டம் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பிரபலமாக இருந்ததாகத் தெரிகிறது. கிறிஸ்து பிறப்பதற்கு முன்பும், கிரேக்கர்கள், ரோமானியர் ஆகியோரின் ராணுவப் பயிற்சிகளில் கால்பந்தாட்டமும் இருந்ததாக வரலாறு கூறுகிறது. முன்பு இருந்த கால்பந்தாட்டம், காலால் மட்டுமல்லாமல் கையாலும் பந்தை அடித்து, அதில் பலர் கலந்து கொண்டு, ஒரே ரகளையாக இருந்ததாகத் தெரிய வருகிறது.

இங்கிலாந்தில் ஆண்ட மூன்றாம் எட்வர்ட் இந்தப் பந்தாட்டத்திற்குத் தடை விதித்து, ஆடினவர்களுக்குக் காவல் தண்டனையும் விதித்தார். ஆனால் மக்களின் ஆர்வம் தணியவில்லை. காலப்போக்கில் பல மாறுதல்கள் அடைந்து பல ஆண்டுகளுக்குப் பிறகு பந்தாட்டத்தில் இரு கட்சிகள் தோன்றின. விதிகளில் ஒற்றுமையில்லாமல் இரு பிரிவாகப் பிரிந்தது. ஒன்று ரக்பி, இன்னொன்று சோக்கர் அல்லது கால்பந்தாட்டம்.

தற்காலத்திய கால்பந்தாட்டம் பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆடப்பட்டது. 1872-இல் இங்கிலாந்திற்கும், ஸ்காட்லாந்துக்கும் நடந்த போட்டியில் இங்கிலாந்தின் அணிவகுப்பு 1-1-3-8; ஸ்காட்லாந்து 1-2-2-6. ஆட்டம் கோல் போடாமல் சமநிலையாக முடிந்தது.

நம் நாட்டிற்கு ஆங்கிலேயர்கள் தான் கால்பந்தாட்டத்தைக் கொண்டு வந்தனர். அவர்கள் ஆடிய 1-2-3-5 முறையையே நாமும் கையாண்டோம்.

நன்றி: 'கால்பந்தாட்டம்' எம்.பி. சுப்பிரமணியன்







தான் திருப்தியையும், மகிழ்ச்சியையும் அளிக்கும். ஆனால், உண்மையான வெற்றியால் தங்களது கலைப்படைப்புகள், மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அடையாளம் கண்டுகொள்ளப்பட்டு, மதிக்கப்பட்டு, பாராட்டினைப் பெறும் போதுதான், அதனைக் கிடைத்தற்கரிய செல்வமாகத் திரை உலகக் கலைஞர்கள் கருதுகின்றார்கள்.

அந்த வகையில் மாநிலத் 'திரைப்பட விருதுகள்' பெறும் ஒவ்வொருவரும், அவர்கள் நடிகர்களானாலும் சரி, நடிகையரானாலும் சரி, அல்லது தொழில்நுட்ப வல்லுநர்களானாலும் சரி, இந்த விருதுகளை, தங்களது கலைத் திறமைகளுக்கு அளிக்கப்படும் மாபெரும் அங்கீகாரமாகக் கருதுகிறார்கள். இதனைப் பெறும்பொழுது பெருமை கொள்கிறார்கள். இத்துறையில் மேலும் பல சாதனைகள் புரிய ஊக்குவிக்கும் தூண்டுகோலாக இதை நம்புகிறார்கள். அதனால்தான், இந்தத் திரைப்பட விருதுகள் தமக்குக் கிடைக்க வேண்டுமென்று, தமிழ்த் திரைப்படத் துறையைச் சார்ந்த அனைவருமே பெரிதும் எதிர் பார்க்கிறார்கள். விரும்புகிறார்கள்.

அந்த வகையில் இன்று நீங்கள் பெறுகிற ஒவ்வொரு பரிசிலும், உங்கள் சகோதரியின் பாசமும் இழையோடியிருக் கிறது.

திரைப்படத் துறை என்பதைவிட, திரை உலகம் என்பதே பொருத்தமாகும். இது மக்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சியை அளிக்கின்ற உலகம், அவர்களுக்குக் கரை காணாத களிப்பையும் அளிக்கும் உலகம்! உழைத்துக் களைத்த ஏழை மக்களின் சோர்வினைப் போக்கும் அற்புத மருந்தை வழங்குகின்ற உலகம்! நமக்கு மகிழ்ச்சி யையும் மன நிறைவையும் வழங்குவது மட்டுமல்ல, வெள்ளித்திரையின் நன் கொடை; நமது வாழ்விற்கு வழிகாட்டும் ஆற்றலும், உயர்வுக்கு வழி வகுத்துத் தரும் திறனும், திரையுலகம் நமக்குத் தந்துள்ள புனிதப் பரிசுகள்.

திரைப்படத் துறையின் ஆற்றலை உலகம் எந்த அளவுக்கு உணர்ந்ததோ இல்லையோ, நம் தமிழகம் அதனை நன்கு உணர்ந்துள்ளது - என்பதற்கு எத்தனையோ எடுத்துக்காட்டுகள் நம்மிடம் உள்ளன.

மூன்று தமிழுக்கும் முறையான இடம் தருவது, திரைப்படம் என்பதால் தான், காஞ்சித் தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள், கலையுலகில் கால் பதித்து, கருத்துலகில் விதை விதைத்து, அரசியல் உலகில் அற்புதங்கள் பல நிகழ்த்தி, தனது இலக்கை அடைய முடிந்தது. குறிப்பாக, பேரறிஞர் அண்ணாவின் கலையுலகக் காவியங்கள், கருத்துப் புரட்சிக்கும், அரசியல் புரட்சிக்கும் அடித்தளம் இட்டன.

அந்த வகையிலே, 'உண்மையைச் சொல், நன்மையைச் செய்' என்ற தத்துவத்தை, தாரக மந்திரமாகக் கொண்டு, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், புதிய புதிய வெற்றிகளையும், சாதனைகளையும் படைத்து, தமிழகத்துக்குக் காணிக்கை யாக்கினார். பேரறிஞர் அண்ணாவும், புரட்சித் தலைவரும் அமைத்துக் கொடுத்த அந்தப் பாதையில் தான், இன்று வீறுநடை போடுகிறது, உங்கள் அன்புக் குரிய சகோதரியின் இந்த அரசு.

கலை, நாம் வாழும் வாழ்க்கைக்காக! உயிர்கொடுத்த நாட்டுக்காக! உணர்வு கொடுத்த மொழிக்காக - என்னும் அர்ப்பணிப்பு உணர்வு இருந்தால்தான்,



அந்தக் கலையுலக வித்தகர்கள், புதிய சமுதாயத்தைச் சமைக்க முடிந்தது; ஒரு புதிய தமிழகத்தைப் படைக்க முடிந்தது. கலை என்ற விதைதான், ஆட்சி என்னும் ஆலமரமாகி, இன்று ஆயிரமாயிரம் மக்களுக்கு அடைக்கலம் அளிக்கின்றது, அவர்களுக்கு அரணாகவும் திகழ்கின்றது. இந்தப் பெருமை, உலக நாடுகள் கண்டறியாதது; இந்தச் சிறப்பு வேறு துறைகள் கண்டறியாதது. அப்படிப்பட்ட கலைத்துறைக்கு, தங்களை அர்ப் பணித்துக் கொண்டோருக்கு அந்தக் கலையையே மூச்சாகக் கொண்டு வளர்ந்த நான், இன்று விருது வழங்குகின்றேன் என்பது, எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியை அளிக்கிறது.

திரையுலக வளர்ச்சியில் உங்கள் சகோதரியின் அரசு கொண்டிருக்கும் ஆர்வம் இதயபூர்வமானது. சர்வதேசத் தரம் வாய்ந்த ஒரு மாபெரும் திரைப்பட நகரம் இன்று உருவாகிக் கொண்டிருக் கிறது. இந்த நகரம் நாளைய திரையுலகத் தின் உற்பத்தி ஸ்தானமாக அமையப் போகிறது.

திரையுலகத் தொழிலாளர் பெருமக்க ளின் நலம் காக்கும் பொருட்டு, பணிபுரியும்போது உயிர் துறந்தாலோ, ஊனமுற்றாலோ, உதவித் தொகை வழங்குகிறது இந்த அரசு. இறந்தவருக்குப் பத்தாயிரம் ரூபாய், காயமுற்றவருக்கு ஐயாயிரம் ரூபாய் வழங்கும் அரிய திட்டத்தை இந்த அரசு கொண்டு வந்திருக்கிறது.

சிறு முதலீட்டுப் படங்களுக்கு அரசு அளித்து வந்த இரண்டு இலட்ச ரூபாய் உதவித் தொகையை, தற்போது மூன்று இலட்ச ரூபாயாக உயர்த்தி இருக்கிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே மற்றொரு கருத்தையும் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகின்றேன். சமீபத்தில் தமிழ்த் திரைப்படத் துறையில் ஒரு மாபெரும் பிரச்சினை ஏற்பட்டு அதன் விளைவாகத் தமிழகத்திலுள்ள பெரும்பாலான திரைப்பட அரங்குகள் மூடப்பட்டன. திரைப்படத் துறை பெரிதும் பாதிக்கப்பட்டது. இதனை நான் பத்திரிகைகளில் பார்த்தவுடன், அரசு உள்துறைச் செயலர் இதுகுறித்து சம்பந் தப்பட்ட இருதரப்பினரையும் உடன் அழைத்துப் பேசி நல்லதொரு தீர்வினைக் காண வேண்டுமென்றும், அவ்வாறு அவரால் தீர்வு காண முடியாவிட்டால், நானே நேரடியாகத் தலையிட்டுப் பேச்சு வார்த்தைகள் நடத்துகின்றேன் என்றும் தெரிவித்தேன். ஆனால், இரு தரப் பினருக்கும் திருப்தி ஏற்படும் வண்ணம் திரு. மலைச்சாமி அவர்கள் அழகாகப் பேச்சு வார்த்தைகள் நடத்தி, அவர் மட்டத்திலேயே தீர்வு காணப்பட்டது. இப்படி உங்கள் அன்புச் சகோதரியாகிய நான் உங்களுக்கு ஏற்படும் எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் அதை நீங்கள் என்னிடம் நேரில் வந்து கூறவேண்டும் என்று எதிர்ப்பார்ப்ப தில்லை. அதுபற்றி நான் அறிந்தவுடன், நானே அத்தகைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண அனைத்து முயற்சிகளையும் நடவடிக்கைகளையும் எடுத்து வருகின் றேன். இதுபோன்று எந்தத் துறையாக இருந்தாலும், எப்படிப்பட்ட பிரச்சினை யாக இருந்தாலும் அவற்றிற்கு உடனடி யாகத் தீர்வு காண வேண்டுமென்று ஓடோடி வந்து உரிய முயற்சிகளை மேற் கொண்டு வருவதுதான் இந்த அரசு.

இன்றைக்கு, பேரறிஞர் அண்ணா பெயரால், பாவேந்தர் பாரதிதாசன் பெயரால், கலைவாணர் என்.எஸ்.கே. பெயரால், ராஜா சாண்டோ பெயரால், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். பெய ரால், கலைவித்தகர்களுக்கு விருதுகள் வழங்கப்படுகின்றன.

சிறந்த திரைப்படங்களுக்கும், நடிக,



நடிகையருக்கும், இயக்குநர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்களுக்கும், 1990 மற்றும் 1991 ஆகிய இரண்டு ஆண்டுகளுக்கான பரிசுகளும் விருது களும் வழங்கப்படுகின்றன. மூன்று சவரன், ஐந்து சவரன் என்று முன்பிருந்த பாகுபாடுகள் தற்போது மாற்றப்பட்டு, எல்லோரும் ஐந்து சவரன் பரிசு பெறும் வகையில் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு, இன்று இந்த விழா உண்மையிலே தங்க விழாவாக மலர்ந்திருக்கிறது.

தமிழ்த் திரை உலகிற்குத் தங்களுடைய படைப்புகளால், அரிய சேவை ஆற்றி யுள்ள பல்வேறு மூத்த கலை வித்தகர்களுக்கு, சிறப்பு விருதுகளை நான் வழங்க உள்ளேன். அவர்கள் அனைவருக்கு முதற்கண் எனது மனமார்ந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

இன்று பேரறிஞர் அண்ணா விரு தினை மூன்று கலைவித்தகர்கள் பெறு

## கண்ணைக் கவரும் வண்ண மேடை!

விழா மேடை, கண்ணைக் கவரும் வண்ணம் அமைக்கப்பட்டிருந்தது.

திரைப்படச் சுருளுடன் கூடிய நட்சத் திரங்கள் மின்னின. மேடையின் இரு புறமும் மலர்களால் உருவாக்கப்பட்ட மயில்கள் காட்சியளித்தன. விருதுபெற்ற திரைப்படங்களிலிருந்து சில காட்சிகள் மேடையில் இருபுறமும், மையப் பகுதி யிலும் இருந்த குட்டித் திரையில் காண் பிக்கப்பட்டன. அப்போது மண்டபத்தின் மேற்புறம் பார்க்க வேண்டுமே! முத்துக் களைச் சிதறவிட்டாற்போன்று ஓர் பிரமை! ஆம். ஒளியமைப்பின் ஒய்யாரக் காட்சியே அது!

இரவைப் பகலாக்கும் ஒளி உமிழும் விளக்குகள் மட்டுமல்ல, தெளிவான ஒலியமைப்பும் சிறப்பாகச் செய்யப் பட்டிருந்தது ஒரு சிறப்பம்சமாகும்.

பொதுவாக, எண்ணம் கவரும் வண்ணமிகு விழா மேடை, வருகை தந்தோரை வசீகரித்துவிட்டது என்றே சொல்ல வேண்டும். அத்தனை அற்புத மாக அமைக்கப்பட்டு இருந்தது அது!



> "மாநில அரசு விருது வழங்குகிறது என்றால், அதைப்பெறும் கலைஞர்கள் அனைவரும் தமிழக மக்கள் அனைவராலுமே கௌரவிக்கப்படுகிறார்கள் என்பதுதான் பொருள்"
>
> - மாண்புமிகு முதல்வர்

கின்றனர். 'பாவேந்தர் பாரதிதாசன்' விருதினை நான்கு கவிஞர்கள் பெறுகின்றனர். 'கலைவாணர்' விருதினை நான்கு கலைவித்தகர்கள் பெறுகின்றனர். 'இராஜா சாண்டோ' விருதினை நான்கு திரைப்படத் துறை வல்லுநர்கள் பெறுகின்றார்கள். கலைவித்தகர்களுக்கான 'எம்.ஜி.ஆர்.' விருதினை நான்கு திரைப்படத் துறை கலைஞர்கள் பெறுகின்றார்கள். தங்களுடைய அரிய திறமைகளுக்காக இவ்விருதுகளைப் பெறும் அனைத்துத் திரையுலகச் சாதனையாளர்களையும் நான் பெரிதும் பாராட்டி மகிழ்கின்றேன்.

அடுத்து 1990 மற்றும் 1991 ஆகிய இரண்டு ஆண்டுகளுக்கான திரைப்பட விருதுகளைப் பெறும் இளைய தலைமுறைக் கலைஞர்கள் அனைவருக்கும் என் பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்த இனிய விழாவில் பல்வேறு கலை நிகழ்ச்சிகளை வழங்கி நம் அனைவரையும் மகிழ்வித்த கலைஞர்கள் அனைவருக்கும் என் பாராட்டுக்களையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம் அனைவருக்கும் மகிழ்ச்சி அளிக்கக்கூடிய திரையுலகத்தினருக்குப் புகழ் சேர்க்கும் இந்தத் திருநாளில், கலைத் துறையில் ஈட்டும் வெற்றியை, கவுரவத்தை, செல்வத்தை, நீங்கள் அனைவரும் சமுதாய மேம்பாட்டுக்கும் பயன்படுத்த வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். அதுதான் நீங்கள் ரசிகப் பெருமக்களுக்கும், இந்நாட்டு மக்களுக்கும், காட்டுகின்ற அன்பின் அடையாளம் என்பதை நினைவூட்டி, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தச் சீர்மிக விழாவில் பங்கு கொண்ட ஒவ்வொருவருக்கும் என் வாழ்த்துக்களை வழங்கி, விருதும் பரிசும் பெற உள்ள வித்தகர்களுக்கு என் பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்."

— பிறகு, மாநிலத் திரைப்பட விருதுகளை வழங்கினார். மாண்புமிகு முதல்வர் அவர்களின் திருக்கரத்தால், முதலில் விருது பெற்றவர் யார் தெரியுமா? நம் நெஞ்சமெலாம் கவர்ந்த அஞ்சலிப்பட அரும்பு மழலைச் செல்வம் பேபி ஷாம்லி. தேர்வுக் குழுவால் பேபி ஷாம்லி தேர்ந்தெடுக்கப்படவில்லை என்றாலும், மாண்புமிகு முதல்வர் அவர்கள் இக்குழந்தை நட்சத்திரத்தை விருது பெறுவதற்காகத் தேர்ந்தெடுத்தார். அன்பு முத்தத்துடன் அழகிய பரிசும் அக்குழந்தைக்கு வழங்கி மகிழ்ந்தார் மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

தொடர்ந்து, 1990-91-ஆம் ஆண்டுகளுக்கான சிறந்த திரைப்படங்களுக்கும், சிறந்த கலைஞர்களுக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்கள், விருதுகளை வழங்கினார்.

இசை வழங்கிய திரு. சங்கர்-கணேஷ் அவர்களுக்கும், நகைச்சுவை வழங்கிய திரு. எஸ்.வி. சேகர் அவர்களுக்கும், நடன நிகழ்ச்சி நடத்திய திரு. டி.கே.எஸ். பாபு அவர்களுக்கும், விழா நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கிய திருமதி சந்தியா ராஜகோபால், திரைப்பட நடிகை செல்வி கஸ்தூரி ஆகியோருக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்கள் நினைவுப் பரிசுகள் வழங்கினார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் வருகை தந்தபோதும், கலைஞர்கள் விருதுகள் பெறுகிறபோதும், அரங்கில் குழுமியிருந்தோர் உற்சாகத்துடன் கரவொலி எழுப்பினர்.

மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு. இரா. சம்பத், இ.ஆ.ப., அவர்கள், செய்தி-மக்கள் தொடர்புத்துறை சார்பில், நினைவுப் பரிசினை வழங்கி, விழா சிறப்புற அமைவதற்கு உதவியாக இருந்த அத்தனைப் பேருக்கும், தம் இதயங்கனிந்த நன்றியினைத் தெரிவித்துக் கொண்டார்.

இனிய மாலை நேரத்தில், இதயமெல்லாம் கவர்ந்த அந்தக் கலை விழா, நம் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தூட்டியது மட்டுமல்ல, கால வரலாற்றில் நிலைத்து நிற்கும் என்று கூறினால், அது உண்மை. வெறும் புகழ்ச்சியில்லை!

- பி.வி. கிரி.

## விருது பெற்றோர் விவரம்:

### 1990-ஆம் ஆண்டுக்கான திரைப்பட விருதுகள்-

சிறந்த திரைப்படங்கள்; முதல் பரிசு - புது வசந்தம் - படத் தயாரிப்பாளர் திரு. சௌத்ரி, இரண்டாம் பரிசு - கேளடி கண்மணி - படத் தயாரிப்பாளர் திரு. ஏ. சுந்தரம், மூன்றாம் பரிசு - கிழக்கு வாசல் - படத் தயாரிப்பாளர் திரு. தியாகராஜன், சிறப்புப் பரிசு - அஞ்சலி - படத் தயாரிப்பாளர் திரு. ஜி. வெங்கடேசுவரன்.

### கலைஞர்களுக்கான பரிசுகள்

சிறந்த நடிகர் - கார்த்திக் (கிழக்கு வாசல்), சிறந்த நடிகை - ரேவதி (கிழக்கு வாசல்), சிறந்த நடிகர் (சிறப்புப் பரிசு) - சத்தியராஜ் (நடிகன்), சிறந்த நடிகை (சிறப்புப் பரிசு) - கௌதமி (நம்ம ஊர் பூவாத்தா), சிறந்த இயக்குநர் - விக்கிரமன் (புது வசந்தம்), சிறந்த கதையாசிரியர் - விசு (வரவு நல்ல உறவு), சிறந்த உரையாடல் ஆசிரியர் - வாசு (நடிகன்), சிறந்த இசையமைப்பாளர் - தேவா (வைகாசி பொறந்தாச்சு), சிறந்த பாடலாசிரியர் - வாலி (கேளடி கண்மணி)

சிறந்த பின்னணிப் பாடகர் - எஸ்.பி. பாலசுப்பிரமணியம் (கேளடி கண்மணி), சிறந்த பின்னணிப்பாடகி - சித்ரா (வைகாசி பொறந்தாச்சு) சிறந்த ஒளிப்பதிவாளர் - அப்துல் ரகுமான் (கிழக்கு வாசல்), சிறந்த ஒலிப்பதிவாளர் - விஸ்வநாத் (வைகாசி பொறந்தாச்சு), சிறந்த





திரைப்படத் தொகுப்பாளர் (எடிட்டர்) - கணேஷ் குமார் (ஒரு வீடு இரு வாசல்), சிறந்த ஆர்ட் டைரக்டர் - சலம் (உலகம் பிறந்தது எனக்காக மற்றும் நடிகன்), சிறந்த சண்டைப் பயிற்சியாளர் (ஸ்டண்ட் மாஸ்டர்) - விக்ரம் தர்மா (நடிகன்), சிறந்த நடன ஆசிரியர் - சுந்தரம் (அஞ்சலி).

### 1990-ஆம் ஆண்டிற்கான சிறந்த கலை வித்தகர்களுக்கான விருதுகள்-

அறிஞர் அண்ணா விருது-கே. பாலச்சந்தர், பாவேந்தர் பாரதிதாசன் விருது-கவிஞர்கள் முத்துராமலிங்கம், குருவிக்கரம்பை சண்முகம், கலைவாணர் விருது-நாகேஷ், குமாரி சச்சு, ராஜா சாண்டோ விருது- பி.எஸ். வீரப்பா, வி. ராமமூர்த்தி, எம்.ஜி.ஆர். விருது- எம்.என். நம்பியார், மனோரமா.

### 1991-ஆம் ஆண்டுக்கான திரைப்பட விருதுகள்-

சிறந்த திரைப்படங்கள்: முதல் பரிசு - சின்னத்தம்பி - படத் தயாரிப்பாளர் திரு. பாலு, இரண்டாம் பரிசு - என் ராசாவின் மனசிலே - படத் தயாரிப்பாளர் திரு. ராஜ்கிரண், மூன்றாம் பரிசு - குணா - படத் தயாரிப்பாளர் திருமதி அலமேலு சுப்பிரமணியம், சிறப்புப் பரிசு - சேரன் பாண்டியன் - படத் தயாரிப்பாளர் திரு. சௌத்ரி.

### கலைஞர்களுக்கான பரிசுகள

சிறந்த நடிகர் - பிரபு (சின்னத்தம்பி), சிறந்த நடிகை - குஷ்பு (சின்னத்தம்பி), சிறந்த நடிகர் - (சிறப்புப் பரிசு) - ராஜ் கிரண் (என் ராசாவின் மனசிலே), சிறப்பு நடிகை (சிறப்புப் பரிசு) - பானுப்பிரியா (அழகன்), சிறந்த இயக்குநர் - பி. வாசு (சின்னத்தம்பி), சிறந்த கதையாசிரியர் - ஈரோடு சவுந்தர் (சேரன் பாண்டியன்), சிறந்த உரையாடல் ஆசிரியர் - ஈரோடு சௌந்தர் (சேரன் பாண்டியன்), சிறந்த இசையமைப்பாளர் - மரகதமணி (அழகன்), சிறந்த பாடலாசிரியர் - பிறை சூடன் (என் ராசாவின் மனசிலே), சிறந்த பின்னணிப் பாடகர் - மனோ (பல படங்கள்), சிறந்த பின்னணிப் பாடகி - சுவர்ணலதா (சின்னத்தம்பி), சிறந்த ஒளிப்பதிவாளர் - ரகுநாத் ரெட்டி (அழகன்), சிறந்த ஒலிப்பதிவாளர் - சம்பத் (சேரன் பாண்டியன்), சிறந்த திரைப்படத் தொகுப்பாளர் (எடிட்டர்) - ஜெயச்சந்திரன் (மாநகரக் காவல்), சிறந்த ஆர்ட் டைரக்டர் - தோட்டாத் தரணி (தளபதி), சிறந்த சண்டைப் பயிற்சியாளர் - சூப்பர் சுப்பராயன் (மாநகரக் காவல்), சிறந்த நடன ஆசிரியர் - டி.கே.எஸ். பாபு (சின்னத்தம்பி).

### 1991-ஆம் ஆண்டிற்கான சிறந்த கலைவித்தகர்களுக்கான விருதுகள்:-

அறிஞர் அண்ணா விருது-ஏ.எஸ்.பிரகாசம், வியட்நாம் வீடு சுந்தரம், பாவேந்தர் பாரதிதாசன் விருது-கவிஞர்கள் நா. காமராசன், இ. முத்துராமலிங்கம், கலைவாணர் விருது-எஸ்.வி. சேகர், கோவை சரளா, ராஜா சாண்டோ விருது-பி.மாதவன், . ஏ.சி. திருலோகசந்தர், எம்.ஜி.ஆர். விருது- ஆர்.எஸ்.மனோகர், பண்டரிபாய்.



With
Best
Compliments
From



M/s. Pioneer Match Industries, Dharmapuri

M/s. Premier Match Industries, Dharmapuri

M/s. Prabakar Match Industries, Dharmapuri

M/s. Popular Match Industries, Dharmapuri

M/s. J.P. Match Industries, Dharmapuri.



# மத்தூர்



*தருமபுரி மாவட்டத்தில் சட்டசபைத் தொகுதிகள் பத்தும், நாடாளுமன்றத் தொகுதிகள் ஐந்தும் இருக்கின்றன. நம்முடைய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், இம்மாவட்டத்தில் உள்ள பர்கூர் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்டுப் பெரும் வெற்றி பெற்றவராவார்; அத்தொகுதியில் பர்கூர்-மத்தூர் ஆகிய இரண்டு ஊராட்சி ஒன்றியங்கள் அடங்கியிருக்கின்றன; மத்தூர் ஒன்றியத்தில் அரசு மூலம் நிறைவேற்றப்பட்டுள்ள ஆக்கப் பணிகள் குறித்து விளக்கும் கட்டுரை இது:*

தருமபுரி மாவட்டத்தில் உள்ள பர்கூர் சட்டமன்றத் தொகுதியானது மத்தூர் மற்றும் ஊத்தங்கரை ஒன்றியத்தின் ஒரு பகுதி அடங்கியது. பர்கூர் ஊராட்சி ஒன்றியத்தின் வளர்ச்சிப் பணிகள் மற்றும் முன்னேற்றம் குறித்து சென்ற இதழில் விரிவாகப் பார்த்தோம். மத்தூர் ஊராட்சி ஒன்றியத்தின் மேம்பாடு மற்றும் வளர்ச்சிப் பணிகள் குறித்து இப்போது பார்ப்போம்.

மத்தூர் ஊராட்சி ஒன்றியம் தருமபுரியிலிருந்து திருப்பத்தூர் செல்லும் வழியில் அமைந்துள்ளது. பசுமை மிக்க இந்த ஊராட்சி ஒன்றியத்தில் 24 ஊராட்சிகள் அடங்கியுள்ளன. இந்த ஊராட்சி ஒன்றியத்தின் பணிகள் குறித்து இதன் வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்களைச் சந்தித்தபோது, 1991-92 மற்றும் 1992-93-ஆம் ஆண்டுகளில் ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம் மற்றும் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு திட்டப் பணிகள் குறித்து மிக விவரமாக நமக்கு விளக்கினார்.

ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் 1991-92-இல் ரூ.5,600 இலட்சம் செலவில் 8 ஊராட்சி அலுவலகங்களும், ரூ.11.023 இலட்சம் செலவில் 69 கூட்டுக் குடியிருப்புகளும் (Group Houses), ரூ.1,380 இலட்சம் செலவில் ஒரு பள்ளிக் கூடக் கட்டடமும், மத்தூரில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

இதே ஆண்டில் ரூ.24.148 இலட்சம் செலவில் 59 ஜீவன்தாரா கிணறுகள் வெட்டப்பட்டுள்ளன.

1992-93-ஆம் ஆண்டில் ரூ.2.40 இலட்சம் செலவில் இரண்டு பள்ளிக் கட்டடங்களும், 4 சத்துணவு மையங்களும் ரூ.2.68 இலட்சம் செலவில் மும்முரமாகக் கட்டப்பட்டு வருகின்றன. 46 சாண எரிவாயுக் (Bio-Gas) கலன்கள் அமைக்க அனுமதி வழங்கப்பட்டு இவை அனைத்தும் கட்டிமுடிக்கப் பட்டுள்ளன. இவற்றைத் தவிர, ரூ.9.12 இலட்சம் செலவில் 24 ஜீவன்தாரா கிணறுகள் வெட்டும் பணி இரவு பகலாக நடைபெற்று முடியும் தருவாயில் உள்ளன.

1991-92-இல் மட்டும், மத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் ரூ.1,380 இலட்சம் செலவில் ஒரு பள்ளிக் கூடக் கட்டடமும், ரூ.2,800 இலட்சம் செலவில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுக் கூட மையங்கள் 4 சிறப்புறக் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும் கே. எட்டிப்பட்டி, அந்தேரிப்பட்டி, ஒட்டப்பட்டி, ராம கிருஷ்ணாம்பட்டி, நாவலப்பட்டி ஆகிய 5 ஊராட்சிகளுக்கு 5 தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

## மன்றோ நினைவுத் தூண்



சென்னையில், எல்லா ஆங்கிலத் துரைகளின் சிலைகளும் அகற்றப்பட்ட போதிலும், குதிரைமேல் உள்ள மன்றோ சிலை மட்டும் கம்பீரமாக இன்னமும் காட்சி தருகிறதல்லவா? இந்த சர் தாமஸ் மன்றோ, தருமபுரியில், 1792 முதல் பத்தாண்டுக் காலம் வாழ்ந்திருக்கிறார். தாய்நாட்டு மண்ணைவிட நம் தமிழ்நாட்டு மண் அவருக்கு மிகவும் பிடித்துப் போயிருக்கிறது. இதனாலேயே, தருமபுரியில் அவர் நினைவாக ஒரு ஸ்தூபியும் எழுப்பப்பட்டுள்ளது. அதன் கீழுள்ள கல்லில்- 'சர் தாமஸ் மன்ரோ துரைக்கும் தருமபுரிக்கும் உள்ள சம்பந்தத்தைக் காட்டுவதற்காகச் சென்னபட்டனம் கவர்ன்மெண்டார் இந்த ஸ்தம்பம் கட்டியிருக்கிறார்கள்...' என்றெல்லாம் எழுதப்பட்டுள்ளது.

சர் தாமஸ் மன்ரோ அவ்வப்போது எழுதிய கடிதங்கள், நமது தமிழ்நாடு பற்றிய அவருடைய நல்லெண்ணத்தை வெளிப்படுத்துவதாக இருக்கின்றன. 1849-இல் அக் கடிதங்கள் யாவும் கிளே என்பவரால் தொகுத்து நூலாக வெளியிடப்பட்டிருக்கின்றன. அதன் பெயர் Life of Sir Thomas Munro என்பதாகும்.

—'ராஜு'

TNPSC

விளம்பர எண். 4|93

**தமிழ்நாடு சிறைச் சார்நிலைப் பணியில், மூதாய் (Matron) பதவியில் ஒரு காலியிடத்திற்கு நேரடித் தேர்வின் மூலம் நியமனம் செய்ய பெண் பணி வேட்பாளர்களிடமிருந்து மட்டும் விண்ணப் பங்கள் 22.2.1993 அன்று மாலை 5.45 மணி வரையில் வரவேற்கப்படுகின்றன. (நியமன ஒதுக்கீட்டு விதி இப்பதவிக்குப் பொருந்தாது.)**

குறிப்பு: இப்பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளைப் பெற்றிருந்து, குறைந்தபட்ச மதிப்பெண்களைப் பெறுவதன் மூலம் தெரிவுக்குத் தகுதியானவராகக் கருதப்படும் ஆதரவற்ற விதவை, அவர்களைவிட அதிக மதிப்பெண்களைப் பெற்றிருப்பவர்களைக் காட்டிலும் முன்னுரிமை வழங்கப்பட்டு தெரிவு செய்யப்படுவார்.

**விளக்கம்:** 'ஆதரவற்ற விதவை' என்பது, வாழ்வதற்குத் தனக்கென்று எந்தவொரு வழியும் இல்லாத வரும், பட்டினியிலிருந்து தன்னைக் காப்பாற்ற எந்தவொரு ஆதரவாளரும் இல்லாதவரும் ஆன விதவையைக் குறிப்பதாகும்.

**சம்பளம்:** மாதம் ஒன்றுக்கு ரூ.1,400-40-1,600-50-2,300-60-2,600|-

**வயது:** 1.7.1993 அன்றுள்ளபடி 30 வயதிற்குக் குறைவாக.

ஆதிதிராவிட வகுப்பினர்|பழங்குடி வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்|சீர்மரபினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வயது வரம்பு இல்லை.

(மேலும் சில சலுகைகள் கீழே அறிவிக்கப்பட்டுள்ளன.)

**கல்வித் தகுதி:** (13.1.1993 அன்றுள்ளபடி): அடியிற் குறிப்பிட்டுள்ளவை அல்லது அவைகளுக்கு இணையானவை:

ஏதேனும் ஒரு பல்கலைக் கழகத்திலிருந்து பி.ஏ. அல்லது பி.எஸ்.சி., அல்லது பி.காம்., அல்லது மருந்தியலில் (Medicine) பட்டம் அல்லது அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் பி.ஓ.எல். அல்லது மதுரை-காமராசர் பல்கலைக்கழகத்தின் பி.பி.ஏ., அல்லது சென்னைப் பல்கலைக்கழகத்தின் பி.லிட்., அல்லது பாரதியார் பல்கலைக்கழகத்தின் பி.பி.எம். அல்லது பி.லிட் பட்டம்.

**உடற் தகுதி (13.1.1993 அன்றுள்ளபடி):-**

குறைந்தபட்சம் 145 செ.மீ. உயரமும், 2.5 செ.மீ.-க்குக் குறையாமல் விரிவடையக் கூடிய, குறைந்தபட்சம் 71 செ.மீ. மார்பளவும் பெற்றிருக்க வேண்டும்.

ஆதிதிராவிட வகுப்பினர்|பழங்குடி வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்|சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், ஆதரவற்ற விதவைகள், தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணு வத்தினர், பிணைத் தொழிலாளர்கள், உடல் ஊனமுற்றோர், நாற்பது வயதிற்குக் குறைவாக உள்ள பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட மற்றும் பணியிலிருக்கின்ற தற்காலிக மாநில அரசுப் பணியாளர்கள் போன்றவர்களுக்கு வயது மற்றும்|அல்லது தகுதியிலிருந்து அளிக்கப்படும் சலுகைகள் மற்றும்|அல்லது விண்ணப்பக் கட்டணச் சலுகைகள் தேர்வாணையத்தின் 'பணி வேட்பாளர்களுக்கான விதிமுறைகளில்' தரப்பட்டுள்ளன. (பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு அளிக்கப்படும் சலுகைகள் மிகவும் பிற்படுத்தப் பட்ட வகுப்பினர்|சீர்மரபினருக்கும் பொருந்தும்).

விண்ணப்பப் படிவமும், நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களிடம் எழுத்து மூலம் கோரிப் பெற்றுக் கொள்ளலாம். கோரிக்கைகள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ பதவியின் பெயர் மற்றும் விளம்பர எண் ஆகியவற்றைக் குறிப்பிட்டு எழுதப்பட்டு செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர் வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு வழங்கக்கூடிய 13.1.93 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10) சென்னை அண்ணா சாலை தலைமை அஞ்சல் நிலையத் தில் செலுத்தத்தக்க கோடிட்ட அஞ்சல் ஆணை அல்லது பாரத ஸ்டேட் வங்கியில் (State Bank of India) ஏதாவதொரு கிளையில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலாளருக்கு வழங்கக்கூடிய 13.1.1993 அன்றோ அல்லது அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட பாரத ஸ்டேட் வங்கி, ஆயிரம் விளக்குக் கிளை, சென்னை-6-இல் செலுத்தத்தக்க பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10) 'கேட்புக் காசோலை' (Demand Draft)-யுடனும் சுய விலாசம் எழுதிய உறையுடனும் ( 26 x 12 செ.மீ.) அனுப்ப வேண்டும். கோரிக்கைகள் பிற மொழியில் இருக்குமாயின் அத்துடன் ஆங்கில மொழி பெயர்ப்பும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டா.

DIPR/115/MS/93



# உலக அரங்கில் உயரும் தமிழகம்!



*உலக அரங்கில் தமிழகத்தின் பெருமை மேலும் உயர்ந்திருக்கிறது.*

*இந்தியா எனும் மகுடத்தில் தமிழகமெனும் வைரக்கல் ஒளிவீசிக் கொண்டிருக்கிறது.*

*சிங்காரச் சென்னையின் சிறப்புக்குச் சிறப்புச் செய்யும் வகையில், பிரம்மாண்டமாக எழுந்துள்ளது, ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கம்.*

*கட்டடக் கலைக்குக் கட்டியம் கூறும் வகையில் அமைந்துள்ள இதன் எழில்மிகு தோற்றம், நம் இதயத்தைக் கவர்கிறது. நம்மை, இமயம்போல் இறுமாந்து நிற்க வைக்கிறது.*

*இந்தியாவிலேயே இந்த ஸ்டேடியம்தான் முதலிடத்தை வகிக்கின்றது. ஆசியாவிலுள்ள சிறப்பான ஸ்டேடியங்களுள் இதுவும் ஒன்று என்கிற பெருமையும் நமக்குண்டு.*

*பத்தாவது ஜவகர்லால் தங்கக்கோப்பை அழைப்பு சர்வதேசக் கால்பந்தாட்டப் போட்டி முதன் முதலாகச் சென்னையிலே தொடங்கியது.*

*அனைத்து நாட்டுத் தரத்திற்கு ஏற்ப, ஆசியாவிலேயே சிறந்த விளையாட்டு அரங்குகளில் ஒன்றான இது, 40 கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்பட்டுள்ளது.*

*இம்மாதிரியான விளையாட்டரங்குகளை உருவாக்குவதில் பேரும்புகழும் பெற்ற லார்சன் அண்டு டுப்ரோநிறுவனத்தாரின் கைவண்ணத்தில் இது கம்பீரமாகக் காட்சியளிக்கிறது. மிகக் குறுகிய காலத்தில் உருவான இது, ஐயாயிரத்துக்கும் மேற்பட்டவர்களின் கடும் உழைப்பினால் உருவாக்கப்பட்டுள்ளது.*

*இரவைப் பகலாக்கக் கூடிய, சக்திவாய்ந்த ஒளி உமிழும் விளக்குகள், இந்த அரங்கில் பொருத்தப்பட்டுள்ளன.*

*முக்கியப் பிரமுகர்களுக்கான குளிர்சாதன வசதியுடன் கூடிய அழகிய அறைகள், நவீன பாதுகாப்பு அமைப்புகள் முதலானவை இதன் சிறப்பம்சங்களாகும்.*

*கால்பந்தாட்டம் மட்டுமன்றி, உயரம் தாண்டுதல், நீளம் தாண்டுதல் போன்ற பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் நடத்துவதற்கு ஏற்பவும் இது உருவாக்கப்பட்டுள்ளது.*

*விளையாட்டு வீரர்கள் தங்குவதற்கு நல்ல வசதிகள், பயிற்சி பெறுவதற்கேற்ற இடங்கள், அதுமட்டுமா? ஓய்வு எடுத்துக் கொள்ளவும், சிகிச்சை பெறவும் இங்கே தக்க வசதிகள் உண்டு.*

*பத்து ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள இந்த எழில்மிகு விளையாட்டரங்கின் உயரம் 90 அடியாகும்.*

*உலக அரங்கில் நம் மதிப்பை மேலும் உயர்த்துகின்ற வகையில், இந்த அரங்கம் அமைந்திருக்கின்றது. அதுமட்டுமன்றி, உலகப் பந்தய வரலாற்றில், இந்தக் கால்பந்து விளையாட்டுக்கள் இடம் பெறுவது நமக்கெல்லாம் பெருமை தரக்கூடிய ஒன்றாகும்.*

*உலக நாடுகளான அல்ஜீரியா, காமரூன், இந்தியா, ருமேனியா, பொலிவியா, பின்லாந்து, வடகொரியா, ரஷ்யா ஆகிய நாடுகள் பங்கேற்க, பாங்காய் நடைபெறுகின்றன, கவின்மிகு கால்பந்தாட்டப் போட்டிகள்.*

*இந்த விளையாட்டுப் பந்தயங்களின் சின்னமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது கால்பந்தை உதைக்கும் இளஞ் சிங்கம்.*

*தில்லியில் நடந்த ஆசியப் போட்டியின் சின்னமான யானைக்கு அப்பு என்று பெயரிட்டதைப் போல, இந்தச் சின்னத்துக்கு 'லியோ' என்று பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. இந்தச் சின்னத்தையும் மாண்புமிகு முதல்வர் அவர்களே தேர்ந்தெடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.*

*இந்த இளஞ் சிங்கத்தின் முழக்கம் உலகமெலாம் ஒலிக்க, உள்ளமெலாம் கலகலக்க, உயரிய அந்தஸ்தை இது நமக்குப் பெற்றுத் தந்திருக்கின்றது.*

*தோழமைக்கும், நல்லெண்ணத்துக்கும், நல்லிணக்கத்துக்கும் சின்னமாகத் திகழும் இந்த இளஞ் சிங்கம், நமக்கு மட்டுமல்ல, பந்தயக் குழுக்களுக்கு உற்சாகத்தையும் உத்வேகத்தையும் ஊட்டி வருகின்றது.*

*ஆம். தேசிய ஒளிபரப்பில் ஆசிய விளையாட்டுகள்!*

*கனவு நனவாகிய கண்கொள்ளாக் காட்சிகள்!*

*உலகின் பார்வையெல்லாம் நம் பக்கம்!*

*உள்ளப் பூரிப்போ தமிழகத்துக்கு!*

*தோழமைக்குக் கால்பந்தாட்டம்! தொடரும், இந்த ஒருமைபாட்டுப் பூந்தோட்டம்!*

—பி.வி.ஜி

## எங்கள் இதயம் கனிந்த நல்வாழ்த்துக்கள்

வி. குப்பைய்யா,
ஓட்டல் விக்னேஸ்,
ஒகேனக்கல்.

வினாயகா பீடா ஸ்டால்,
ஒகேனக்கல்.

ஓட்டல் அமிர்தம்,
ஒகேனக்கல்.

எம். லட்சுமணன்,
ஓட்டல் மணி,
ஒகேனக்கல்.

கிருஷ்ணமூர்த்தி,
பரிசல் ஒப்பந்தக்காரர்,
ஒகேனக்கல்.





## ராமு பைனான்ஸ்
## பொன்மகள் சேமிப்புத் திட்டம்

டிபாசிட் செய்யும் தொகை: ரூ.1,000

6 வருடம் கழித்து பெறும் தொகை: ரூ.2,000

மகத்தான முதல் பம்பர் பரிசு 100 சவரன் தங்க நகை
மற்றும் 12 குலுக்கல்கள்
சிறப்புப் பரிசுகள் தங்க நகைகளாக உண்டு.

உங்கள் சேமிப்புக்கு முழுப் பாதுகாப்பு நிச்சயம்




## போட்டி விவரம்



10-வது ஜவகர்லால் நேரு தங்கக்கோப்பை அழைப்பு சர்வ தேசக் கால்பந்துப் போட்டிகள் 19.1.93 அன்று தொடங்கின.

கால்பந்துப் போட்டிகள் விவரம் வருமாறு:

ஜனவரி 19: பொலீவியா-வட கொரியா
ஜனவரி 20: இந்தியா-பின்லாந்து
ஜனவரி 21: ருமேனியா-ரஷ்யா
ஜனவரி 22: காமரூன்-பின்லாந்து
ஜனவரி 23: பொலீவியா-பின்லாந்து
ஜனவரி 24: இந்தியா-காமரூன்
ஜனவரி 25: ருமேனியா-வட கொரியா
ஜனவரி 26: இந்தியா-பின்லாந்து
ஜனவரி 27: பொலீவியா-ரஷ்யா
ஜனவரி 28: காமரூன்-பின்லாந்து
ஜனவரி 29: ரஷ்யா-வட கொரியா
ஜனவரி 30: இந்தியா-காமரூன்
ஜனவரி 31: முதல் அரையிறுதி
பிப்ரவரி 1: இரண்டாவது அரையிறுதி
பிப்ரவரி 2: ஒய்வு தினம்
பிப்ரவரி 3: இறுதிப் போட்டி.

## இந்திய வீரர்களின் அணி

பத்தாவது ஜவகர்லால் தங்கக் கோப்பை சர்வதேசக் கால்பந்தாட்டப் போட்டியில் பங்கேற்கும் இந்திய அணி வீரர்கள் விவரம் வருமாறு:

1. ஹேமந்த தோரா
2. முகம்மது யூசப்
3. முகம்மது காதிர்
4. பர்லாய் சாஹா
5. கபிர் கோஷ்
6. வி.பி. சத்யன் (காப்டன்)
7. யு. சரஃப் அலி
8. தூரியமணி சிங்
9. அலோக்தாஸ்
10. இமானுவேல்
11. தேஜிந்தர் குமார்
12. ஜோவல் பே
13. குணபீர் சிங்
14. சாந்தகுமார்
15. அகில் அன்சாரி
16. கே. சாம்சன்
17. ஐ.எம். விஜயன்
18. எஸ். பாஷா
19. கிரன் கோங்சாய்
20. அப்துல் காலிக்

## நேரு தங்கக்கோப்பை - ஒரு கண்ணோட்டம்

| ஆண்டு | போட்டி நடைபெற்ற இடம் | பங்கேற்ற நாடுகள் | கோப்பையை வென்ற நாடு |
|---|---|---|---|
| 1982- | கல்கத்தா | - உருகுவே, சீனா, தென் கொரியா, இத்தாலி, யூகோஸ்லேவியா, இந்தியா. | உருகுவே |
| 1983- | கொச்சி | - ருமேனியா, இரான், கேமரூன், சீனா, ஹங்கேரி, இந்தியா, இத்தாலி. | ஹங்கேரி, |
| 1984- | கல்சுத்தா | - போலந்து, சீனா, அர்ஜெண்டினா, ஹங்கேரி, ருமேனியா, இந்தியா. | போலந்து, |
| 1985- | கொச்சி | - இரான், சோவியத் ரஷ்யா, யூகோஸ்லேவியா, சீனா, தென் கொரியா, அல்ஜீரியா, இந்தியா, மொராக்கோ. | சோவியத் ரஷ்யா |
| 1986- | திருவனந்தபுரம் | - சோவியத் ரஷ்யா, கிழக்கு ஜெர்மனி, தென் கொரியா, சீனா, பெரு, இந்தியா. | சோவியத் ரஷ்யா |
| 1987- | கோழிக்கோடு | - சோவியத் ரஷ்யா, ஜெர்மனி, சிரியா, நைஜீரியா, சீனா, டென்மார்க், பல்கேரியா, இந்தியா. | சோவியத் ரஷ்யா |
| 1988- | சிலிகுரி | - சோவியத் ரஷ்யா, போலந்து, ஹங்கேரி, சீனா, பல்கேரியா, இந்தியா. | சோவியத் ரஷ்யா |
| 1989- | கோவா | - ஹங்கேரி,சோவியத் ரஷ்யா, போலந்து வட கொரியா, ஈராக், இந்தியா. | ஹங்கேரி |
| 1991- | திருவனந்தபுரம் | - ருமேனியா,ஹங்கேரி, சோவியத் ரஷ்யா, சீனா, இந்தியா, ஜாம்பியா. | ருமேனியா |

With
Best
Compliments
From

**Tmt. Ganthimathiammal**
**Pennagaram**

**Prop: Ramanath Theatre**
**Cauvery Road**
**Pennagaram**





# 1995-ஆம் ஆண்டு ஜூன் மாதத்துக்குள் சென்னை மாநகருக்குக் கிருஷ்ணா நதி நீர் கிடைக்கப் போதிய நிதி ஒதுக்கப்படும்!

## தமிழக-ஆந்திர முதல்வர்கள் கூட்டறிக்கை

சென்னை மாநகருக்குக் கிருஷ்ணா நதி நீர் கொண்டுவரும் தெலுங்கு-கங்கைத் திட்டம் குறித்து, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், மாண்புமிகு ஆந்திரப்பிரதேச முதல்வர் திரு.விஜயபாஸ்கரரெட்டி அவர்களுடன் 27.1.93 அன்று, ஐதராபாத்தில், ஆந்திரப்பிரதேசத் தலைமைச் செயலகத்தில், பேச்சுவார்த்தை நடத்தினார்கள். பின்னர் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களும், மாண்புமிகு ஆந்திரப்பிரதேச முதல்வர் திரு.விஜயபாஸ்கரரெட்டி அவர்களும், வெளியிட்ட கூட்டறிக்கையில், "1995-ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்குள், சென்னை மாநகருக்குக் கிருஷ்ணா நதி நீர் கிடைக்கும் வகையில், தெலுங்கு-கங்கைத் திட்டம் துரிதப்படுத்தப்படும்" என்று கூறப்பட்டுள்ளது.

ஐதராபாத்தில் உள்ள தலைமைச் செயலகத்தில் இந்தக் கூட்டம் நடந்தது. கூட்டம் முடிந்தவுடன், இரு முதலமைச்சர்களும் சேர்ந்து ஒரு கூட்டறிக்கை வெளியிட்டனர்.

தொடக்கத்தில் தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் பேசிய பேச்சில் உள்ள கருத்துக்களே பெரும்பாலும் இந்தக் கூட்டறிக்கையிலும் இடம் பெற்றுள்ளன.

ஆந்திர முதலமைச்சர் விஜயபாஸ்கரரெட்டி, முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா ஆகிய இருவரும் கையெழுத்திட்ட அந்தக் கூட்டறிக்கையில் கூறியிருப்பதாவது:

"இன்று (27.1.93) ஐதராபாத்தில், தெலுங்கு-கங்கைத் திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்து நாங்கள் கூட்டாக ஆய்வு நடத்தினோம்.

''மொத்தத்தில் ஏற்பட்ட தடைகள், மற்றும் எதிர்நோக்கிய கடும் பிரச்சினைகளைப் பார்க்கும் போது 1983-ஆம் ஆண்டு தொடங்கிய இந்தத் திட்டப் பணிகள் முன்னேற்றம் திருப்திகரமாகவே இருக்கிறது.

''திட்டம், வடிவமைப்பு, குறிப்பாக மாற்று மரம் நடும் செயல்கள், நிலம் கையகப்படுத்துதல் தொடர்பான கடும் பிரச்சினைகள் சமாளிக்கப் பட்டு, வெற்றிகரமாகத் தீர்க்கப்பட்டதைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்தோம்.

''இந்தத் திட்டத்தை விரைவில் நிறைவேற்றி முடிக்கக் கஷ்டமான பணிகளுக்கு முன்னுரிமை கொடுத்து, எடுத்துக் கொள்ள ஒரு செயல் திட்டத்துக்கு 1992-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நடந்த கூட்டுக் கூட்டத்தில் சம்மதம் தெரிவித்து இருந்தோம். இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளுக்குச் செயல்வடிவம் கொடுக்க, இரு அரசுகளும் திறமையான தொடர் நடவடிக்கைகள் எடுத்து இருப்பதைக் கண்டு மகிழ்ச்சியடைகிறோம்.

''இந்தத் திட்டத்தின் கடைக்கோடியில் இருக்கும் சென்னை மாநகருக்குக் கிருஷ்ணா நதி நீர் கிடைக்கும் வகையில் அனைத்துத் தேவையான பணிகளையும் நிறைவேற்ற அசல் ஒப்பந்தத்தில் குறிப்பிட்டபடி ஆந்திர அரசும், தமிழக அரசும் போதுமான நிதியை ஒதுக்கும்.

''இந்தத் திட்டத்தை வேகமாக நிறைவேற்றுவது தொடர்பான அனைத்து விஷயங்கள் பற்றிய நிர்வாக ஆலோசனைகளுக்காக, இப்போது உள்ள ஏற்பாடு மிகவும் திருப்திகரமாக நடந்து வருகிறது. இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் போது ஏற்படும் பிரச்சினைகளைச் சுமுகமாக்க இந்த ஒப்பந்தம் தொடரும்.''

- மேற்கண்டவாறு அந்தக் கூட்டறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

(தெலுங்கு-கங்கைத் திட்டம் குறித்து 27.1.93 அன்று, ஐதராபாத்தில் பேச்சுவார்த்தை நடத்திய பின், மாண்புமிகு ஆந்திர, தமிழ்நாடு மாநிலங்களின் முதலமைச்சர்கள் வெளியிட்ட கூட்டறிக்கை.)



★ உண்மையும், அகிம்சையும் மனித சமூகத்தை விட்டு விட்டுத் தனியாக உட்கார்ந்து கொண்டு அனுஷ்டிக்க வேண்டிய அறங்களல்ல; அவை மனித வர்க்கம் தினசரி வாழ்க்கையில் உபயோகிக்க வேண்டிய அறங்களாகும்.

★ நம்மிடம் அன்பாக இருப்பவர்களிடம் மட்டுமே அன்பாக இருப்பது என்பதல்ல அகிம்சை-நம்மை வெறுப்பவர்களிடமும் அன்பு கொள்வது ஒன்றே அகிம்சை.

★ சமூக அநீதி எங்கே நடப்பதாக இருந்தாலும் சரி, அதை எதிர்க்காத யாரும், தீவிரமாக அகிம்சையை அனுசரிப்பவராக இருக்க முடியாது.



# வரலாற்றுச் சிறப்பு

**ஆர். ஆறுமுகம்**, இ.ஆ.ப.,
உறுப்பினர் - செயலாளர்
தமிழ்நாடு விளையாட்டு
அரங்கங்கள் சங்கம்





**ப**ழைய நேரு ஸ்டேடியத்தின் வரலாற்றுச் சிறப்புகளையும் பொலிவு பெற்று நிற்கும் புதிய ஸ்டேடியத்தின் தனிச் சிறப்புகளையும், தமிழ்நாடு விளையாட்டு அரங்கங்கள் சங்கத்தின் உறுப்பினர்-செயலாளர் திரு. ஆர். ஆறுமுகம் விவரிக்கிறார்:

பல நூற்றாண்டுகளுக்கு முன் எளிமையான கிராமிய விளையாட்டுக்கள் என்ற அளவில் தொடங்கி, இன்று உலகளாவிய வகையில் தொலைக்காட்சி மூலம் இலட்சக்கணக்கான மக்கள் ஒரே நேரத்தில் கண்டுகளிக்கும் வண்ணம் பரபரப்பும், விறுவிறுப்பும் மிக்க விளையாட்டு யுகமாக மாறி விட்டது. இந்த நீண்ட கால வரலாற்றில், தமிழகத்தின் தலைநகர் சென்னையில், கண்கவர் எழுச்சித் தோற்றம் கொண்ட ஒரு பொறியியல் சாதனையாக ஜவகர்லால் நேரு விளையாட்டு அரங்கம் இன்று நிறைவு பெற்று இருக்கிறது.

இந்த விளையாட்டு அரங்கம் அகில உலக கால்பந்து இணையத்தின் சமீபத்திய கோட்பாடுகளுக்கு உட்பட்டு வடிவமைக்கப்பட்ட ஒன்றாகும். இன்று முழுமை பெற்று இருக்கின்ற ஜவகர்லால் நேரு விளையாட்டு அரங்கம், வரலாற்றுப் புகழ்

# அன்னை சத்யா போக்குவரத்துக் கழகம்

அன்னை சத்யா போக்குவரத்துக் கழகம் துவக்கப்பட்ட போது 142 நகரப் பேருந்துகளையும் 179 புறநகர் பேருந்துகளையும் மட்டுமே கொண்டிருந்தது; அவற்றுக்கென 8 பணிமனைகள் இருந்தன.

மெல்ல மெல்ல வளர்ந்து இக் கழகம் இப்போது 249 நகரப் பேருந்துகளையும் 256 புறநகர் பேருந்துகளையும் கொண்டுள்ளது. பேருந்துகளின் வளர்ச்சிக்கு ஏற்ப இக்கழகத்தின் பணியாளர்கள் எண்ணிக்கையும் 2,453 லிருந்து 3,925 ஆக உயர்ந்துள்ளது. கடந்த 5 ஆண்டுகளில் மட்டும் 1,472 பேர் புதிதாக வேலைவாய்ப்புப் பெற்றுள்ளனர். இக்கழகம் துவக்கப்பட்டதிலிருந்து 107 நகர்ப்புறத் தடங்களும் 77 புறநகர்த் தடங்களும் புதிதாகத் துவக்கப்பட்டுள்ளன.

மற்ற போக்குவரத்துக் கழகங்களைக் காட்டிலும் இக்கழகம் மூலம் பிற மாநிலங்களில் இயங்கும் பேருந்துகளின் எண்ணிக்கை அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது. கர்நாடக மாநிலத்தில் 85 பேருந்துகளையும் ஆந்திர மாநிலத்தில் 14 பேருந்துகளையும் பாண்டிச்சேரியில் 2 பேருந்துகளையும், அன்னை சத்யா போக்குவரத்துக் கழகம் இலாபகரமாக இயக்கி வருகிறது. ஆந்திர மாநிலத்திலுள்ள புட்டபர்த்தி மற்றும் திருப்பதிக்கு இங்கிருந்து நாள்தோறும் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. தருமபுரியிலிருந்து பெங்களூருக்கு ஒவ்வொரு அரைமணி நேரத்திற்கும் ஒரு பேருந்து வீதம் போய்வந்து கொண்டிருக்கின்றது.

நீண்டதூர வழித்தடங்களில் இயங்கும் ஒவ்வொரு பேருந்தும் ஆண்டுக்கு ஒருமுறை மாற்றம் செய்யப்பட்டு, வேறு புதிய பேருந்து இயக்கப்படுகிறது. பேருந்து வசதி பெற்றிராத 317 கிராமங்கள் புதியதாகப் பேருந்து வசதி பெற்றுள்ளன. இதனால் பயனடைந்த மக்கள் எண்ணிக்கை சுமார் 2.25 இலட்சம் ஆகும்.

அன்னை சத்யா பேருந்துகளில் நாள்தோறும் பயணம் செய்யும் பயணிகளின் எண்ணிக்கை சுமார் 4.3/4 இலட்சமாகும். தருமபுரி மாவட்ட வளர்ச்சியில் இக்கழகம் பெரும்பங்கு வகிக்கின்றது.

போக்குவரத்து நெரிசல் மிக்க இடங்களில் கூடுதல் பேருந்துகளும், சந்தை நாட்களில் கிராம மக்கள் தங்களின் விளைபொருட்களைக் கொண்டு வருவதற்கு வசதியாகச் சந்தைப் பேருந்துகளும் இயக்கப்படுகின்றன. இம்மாவட்டத்தில் அரூர், அஞ்செட்டி மற்றும் தேன்கனிக் கோட்டை பகுதிகளில் அடர்ந்த காடுகள் உள்ளன. அத்தகைய அடர்ந்த காடுகளில் வாழும் கிராமங்களுக்கும்கூட பேருந்து வசதி செய்யும் பொருட்டு சித்தேரி, வாச்சாத்தி, பெட்ட முகுளாளம், உரிகம், நாட்ரம்பாளையம் ஆகிய கிராமங்களுக்குப் பேருந்து வசதி செய்யப்பட்டுள்ளன.



தமிழக அரசின் முக்கியக் குறிக்கோளான சாலை வசதி உருவாக்கப் பெற்று 1000 பேருக்குக் குறையாத மக்கள் தொகை உள்ள அனைத்துக் கிராமங்களுக்கும் பேருந்து வசதி செய்யப்பட்டுள்ளன. முடிந்தவரை சாலை வசதி பெற்றுள்ள அனைத்துக் கிராமங்களுக்கும் பேருந்து வசதி செய்யப்பட்டு வருகின்றது.

இவ்வாறான பேருந்து வசதிகளினால் பொதுமக்கள் உரிய நேரத்தில் தக்க மருத்துவ வசதியும், மாணவர்கள் கல்விக் கூடங்கள் செல்லவும் முடிகின்றன. அவர்கள் வாழ்க்கை மேம்பாட்டிற்கு இக்கழகம் இந்த வகையிலே பேருதவி புரிகின்றன.

இவைமட்டுமன்றி, 9,460 மாணவ, மாணவியர் 50 சதவிகித இலவசக் கட்டணச் சலுகை மூலம் பேருந்தில் பயணம் செய்கின்றனர். மற்றும் சுமார் 36,867 மாணவ மாணவியர் இலவசமாகத் தங்கள் கல்விக்கூடம் சென்று வருகின்றனர். உடல் ஊனமுற்ற 28 நபர்களுக்கும் கண்பார்வையிழந்த 14 நபர்களுக்கும் இலவசப் பயணச் சலுகை வழங்கப்பட்டிருக்கிறது.

> அந்தக் காலத் திரையுலகின் சிறந்த
> கர்நாடக இசைமேதை
> எம்.கே. தியாகராஜ பாகவதர்
> திருச்சிராப்பள்ளிக்காரர் என்பது
> உங்களுக்குத் தெரியும்.
> இளமையில் பெற்றோருடன்
> கோபித்துக்கொண்டு, தருமபுரிக்கு
> வந்து தான் அவர் நீண்டகாலம்
> தட்டார் தொழில் செய்து வந்தார்.
> ஒருநாள், சுத்தியலால் கல்லாவில்
> தட்டித் தாளமிட்டபடி அவர்
> பாடிக்கொண்டிருந்ததைப் பார்த்த
> கடை முதலாளி, சீட்டுக் கிழித்து
> அனுப்பிவிட்டார்;
> தருமபுரியிலிருந்து சென்னைக்கு
> வந்த பிறகுதான் அவர்
> இசைமேதை!

அதேபோலத் தமிழ் மொழிக்காகப் போராடிய மொழிக் காவலர்கள் மற்றும் நாட்டு விடுதலைக்காகப் போராடிய தியாகிகள் 102 பேருக்கு இலவசப் பயணச் சலுகை வழங்கப்பட்டுள்ளது. நிருபர்களுக்கு 18 இலவசப் பயண அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.



கூட்டம் குறைவான இடத்தில் வேகமாகவும், நெரிசலுள்ள இடத்தில் சீராகவும் பேருந்தைச் செலுத்தி சரியான நேரத்தையும், எரிபொருள் சிக்கனத்தையும், விபத்தில்லாப் பயணத்தையும் 14 ஆண்டுக் காலமாக நிகழ்த்தியமைக்காக ஊக்கத்தொகை பெற்ற அன்னை சத்யா போக்குவரத்துக் கழக ஓட்டுநர் திரு.ஆர்.சுப்பிரமணியம்.

★ ★ ★



பொறுமையும் இனிய சுபாவமும் கொண்டு ஐந்தாண்டுக் காலமாக விபத்தின்றிப் பேருந்தைச் செலுத்தி ஊக்கத்தொகை பெற்ற அன்னை சத்யா போக்குவரத்துக் கழக ஓட்டுநர் திரு. முனிராஜ்.

★ ★ ★

திருவிழாக் காலங்களில், பயணிகளின் நெரிசலைக் குறைக்கும் பொருட்டு ஒகேனக்கல், தீர்த்தமலை, டி. அம்மாபேட்டை, திருப்பதி, திருவண்ணாமலை ஆகிய இடங்களுக்குச் சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. பயணிகளுக்கு வசதியாக ஆங்காங்கே நிழற்குடைகள் நிறுவப்படுகின்றன. பயணிகளின் பாதுகாப்பான பயணத்தை உறுதிசெய்யும் பொருட்டு அவ்வப்போது ஓட்டுனர்களுக்குத் தக்க வகையில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. மற்ற கழகங்களுடன் ஒப்பிடும்போது விபத்தின் விகிதம் இக்கழகத்தில் மிகமிகக் குறைவாகும். எரிபொருள் சிக்கனத்தைக் கடைபிடிக்கப் பல வழிகள் இக்கழகத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. இதனாலும் விபத்தின் எண்ணிக்கை குறைந்திருக்கிறது. எரிபொருள் சிக்கனத்தைச் சிறப்பாகக் கடைப்பிடித்ததற்காக அகில இந்திய அளவில் மூன்றாம் பரிசைப் பெற்ற பெருமை இப்போக்குவரத்துக் கழகத்திற்கு உண்டு.

விபத்தின்றிப் பேருந்து ஓட்டியவர்களுக்காகக் கடந்த ஆண்டு மட்டும் ரூ.3,61,400 ஊக்கத் தொகை வழங்கப்பட்டுள்ளது. பொறியியல் கல்லூரியில் படித்துவரும் பணியாளர் குழந்தைகளுக்குத் தலா ஆயிரம் ரூபாய் கல்வி உதவித் தொகை ஆண்டுதோறும் அளிக்கப்படுகிறது. ஆண்டில் ஒருமுறை, இங்குள்ள பணியாளர்கள் குடும்பத்தோடு 4000 கி.மீ. வரை இலவசப் பயணம் செல்ல அனுமதிக்கப்படுகிறார்கள்.

மூக்குக் கண்ணாடிக்கும் உதவித் தொகை அளிக்கும் இப்போக்குவரத்துக் கழகத்தில், சிறந்த இசைக்குழு ஒன்றும் இருக்கிறது.

இவ்வாறாகத் தருமபுரி மாவட்ட மக்களின் தங்குதடையற்ற போக்குவரத்துப் பணியில் அன்னை சத்யா போக்குவரத்துக் கழகம் ஆற்றிவரும் பணி போற்றத்தக்கதாக இருக்கின்றது.

- அ. கோமதி.

## 260 நாட்களில் திட்டமிட்டு நிறைவேற்றிய சாதனை!

**சென்னை மாநகரின் மகத்தான மையப் பகுதியாக உருவாகியுள்ள புதிய ஜவகர்லால் நேரு ஸ்டேடியம், சர்வதேச விதி முறைகளுக்கு ஏற்ப கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இங்கு இனிப் பல விளையாட்டுகளில் அருஞ் சாதனைகள் நிகழத் தொடங்கும்.**

**ஆனால் அந்தச் சாதனைகளில் எதுவும், இந்த மாபெரும் விளையாட்டு அரங்கத்தை நிர்மாணித்து முடித்த சாதனையை விஞ்ச முடியாது என்பது நிச்சயம். விரைவாகவும், நம்பகமாகவும் உறுதி யோடும் இந்த அரங்கத்தை உருவாக்க முன் கூட்டியே வார்த்து எடுக்கப்பட்ட கான்க்ரிட் பாளங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. லார்சன் அண்ட் டுப்ரோவின் ஈசிசி (L & T - ECC) கட்டு மானப்பிரிவு கடைப்பிடித்த தொழில்நுட்பத் திறனுக்கு இது ஒரு சான்று.**

**கட்டுமான வரலாற்றிலேயே இல்லாதவாறு, 260 நாட்களுக்குள்ளாகவே இந்த விளையாட்டு அரங்கத்திற்கான வடிவமைப்பைத் திட்டமிட்டு அதனைத் திறம்பட உருவாக்கியும் முடிக்க எல் அண்ட் டி ஈசிசி (L & T - ECC) கட்டுமானப் பிரிவின் தொழில்நுட்பத் திறன் உதவியுள்ளது.**

**கட்டுமானப் பணிக்கு இணையாகப் பொறி யியல் பணிகளும் உடன் மேற்கொள்ளப்பட்டு இந்த அரசாங்கம், மிகக் குறுகிய காலத்தில், அதே சமயம் மிக உறுதியான முறையில் உருவாக்கப் பட்டுள்ளது. பல்வேறு பொறியியல் நிபுணர்கள் மற்றும் கட்டடக் கலைஞர்களின் ஆலோசனை களும் வழிமுறைகளும் இக் கட்டுமானப் பணியில் மேற்கொள்ளப்பட்டன.**

**பிரமாண்டமான எலக்ட்ரானிக் ஸ்கோர் போர்டு, எங்குமே நிழல் படாதவாறு ஒரே மாதிரியாக அமைந்த ஒளிவிளக்கு அமைப்பு, தகவல் தொடர்புக்கான நவீன வசதிகள் அமைந்த அறை, முக்கியப் பிரமுகர்கள் ஓய்வெடுக்கும் பகுதி, முதலுதவி மற்றும் அவசரச் சிகிச்சை வசதி, உணவகம் ஆகியவை இதன் சிறப்பம்சங்களில் சில்.**

பெற்று விளங்கிய, சென்னை மாநகராட்சிக்குரிய பழைய நேரு விளையாட்டு அரங்கில் உருவாக்கப் பட்டிருக்கிறது.

பழைய நேரு விளையாட்டு அரங்கத்தில் எத் தனையோ வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சிகளும், போட்டிகளும் நிகழ்ந்துள்ளன என்பது நினைவு கூரத்தக்கது. ரஷியா, இந்தியா நாடுகளுக்கிடையே நடந்த கால்பந்தாட்டப் போட்டி, அகில உலக ரேனிபி ராங்க் ஹாக்கிக் கோப்பை போட்டி, உலக நாடுகளிடையே நடந்த கிரிக்கெட் போட் டிகள் அனைத்தும் இதே நேரு விளையாட்டு அரங்கில் நிகழ்ந்துள்ளது.

### ராணி எலிசபெத்

இங்கிலாந்து ராணி எலிசபெத் அம்மையார் அவர்களுக்குத் தமிழ்நாடே போற்றும் வண்ணம் ஒரு கண்கவர் வரவேற்பு அளித்ததும், அண்மைக் காலத்தில் மறைந்த பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் மற்றும் மறைந்த தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். ஆகியோர் கலந்து கொண்டு தெலுங்கு- கங்கைக் குடிநீர்த் திட்டத்தினைத் துவக் கிய விழா நடந்ததும், இந்த நேரு விளையாட்டு அரங்கத்தில்தான் என்பதுவும் குறிப்பிடத்தக்கது.

இந்தப் புகழ்பெற்ற மண்ணில்தான், இன்றைய கம்பீரமான ஜவகர்லால் நேரு ஸ்டேடியம் எழுந்து நின்று தமிழ்நாட்டின் பெருமையை அகில உலகத் திற்கும் பறைசாற்றிக் கொண்டிருக்கிறது.

இந்த விளையாட்டு அரங்கத்தின் வடிவமைப் பினை உருவாக்குகின்ற பணி புகழ்மிக்க கட்டடக் கலைஞர்கள் வி.என். நாராயண ராவ் அவர்கள் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது. விளை யாட்டு அரங்கத்தினைக் கட்டுகின்ற பணி இந்தத் துறையில் அகில உலகப் புகழ்பெற்ற லார்சன் அண்டு டூப்ரோ நிறுவனத்திடம் ஒப்படைக்கப் பட்டது. இந்த இரண்டு நிறுவனங்களும் கண்ணும் கருத்துமாகப் பணியாற்றி, தங்கள் பணிகளைச் செய்து முடித்து இருக்கின்றனர். லார்சன் அண்டு டூப்ரோ நிறுவனத்தினர் வரலாற்றில், இவ்வளவு குறுகிய காலத்தில் இத்தகைய பிரம்மாண்டமான ஒரு திட்டம் செய்து முடிக்கப்பட்டது என்பது இதுவே முதல் முறையாகும்.

வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த சாதனையைப் படைத்த பெருமை மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களையே சாரும்.

### தொலை நோக்குப் பார்வை

இந்த விளையாட்டு அரங்கம் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய தொலைநோக்குப் பார்வை, கலை உணர்வு, நிர்வாகம் மற்றும் திட்டச் செயல்திறன் ஆகியவற்றிற்கு நிரந்தரச் சாட்சியமாக விளங்குகிறது. மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய தொலைநோக்குக் கொண்ட, முற் போக்குச் சிந்தனையில் உருவானதுதான் இந்த ஜவகர்லால் நேரு விளையாட்டு அரங்கம். இதன் மூலம், உலக விளையாட்டு அரங்கில் தமிழகம் மிகச் சிறப்பான இடத்தைப் பெறுகிறது. இந்த விளையாட்டு அரங்கத்தை நிறுவியதன் மூலமாக, தமிழக மக்கள், இந்திய மக்கள், உலகின் சிறந்த விளையாட்டு வீரர்களைக் களத்தில் காண்கின்ற வாய்ப்பினைப் பெறுகிறார்கள். இந்திய இளைஞர்கள், ஒளிமயமான எதிர்காலத்தை உலக விளையாட்டு அரங்கில் பெறுவதற்கு இந்த ஜவகர்லால் நேரு விளையாட்டு அரங்கம் மிகச் சிறந்த தூண்டுகோலாக அமையும்.



## தமிழக அணியின் சீருடைகள்!



**இதுவரை தமிழ்நாட்டில் இருந்து செல்லும் ஒவ்வொரு விளையாட்டு அணியும் வெவ்வேறு சீருடைகளை அணிந்து செல்வது வழக்கமாக இருந்தது. இனிமேல் எல்லா விளையாட்டுப் பிரிவு களைச் சேர்ந்த தமிழக அணிகளுக்கும், ஒரே மாதிரியான சீருடை அணிய ஏற் பாடு செய்யப்பட்டுள்ளது.**

மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், இந்தச் சீருடையைத் தேர்வு செய்துள்ளார். பச்சையும், மஞ்சளும் அந்தச் சீருடையின் வண்ணங்களாகும்.

இனிமேல் மற்ற மாநில அணிகளுடன் விளையாடும் போட்டிகளிலும், தேசிய விளையாட்டுப் போட்டிகளிலும், தமிழக வீரர்கள் - வீராங்கனைகள் பச்சை- மஞ்சள் நிறச் சீருடையுடன் செல் வார்கள்.



**கால்பந்துப் போட்டியில் பங்கேற்கும் அணிகளின் சார்பாக, இந்திய அணிக் காப்டன் திரு. சத்யன் உறுதிமொழி எடுக்கிறார்.**

மாண்புமிகு முதல்வர் தலைமையின் கீழ், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. அழகு திருநாவுக்கரசு, தமிழக விளையாட்டு அரங்குகள் அமைப்பின் துணைத் தலைவராக, அரும்பணி ஆற்றி இருக்கின்றார். தொடர்ந்து அலுவலர்களை ஊக்கப்படுத்தியதன் மூலமும், ஒவ்வொரு கட்டத்திலும் பணிகளை ஆய்வு செய் வதன் மூலமும், திட்டம் விரைவாக, முழுமையாக நிறைவு பெற உறுதுணை புரிந்துள்ளார்.

இதுபோன்று தலைமைச் செயலாளர் இந்தத் திட்ட வளர்ச்சியை மிகுந்த ஆர்வத்துடன், தமிழக அலுவலர்கள் அளவில் வலிவான தொடர்வினை உருவாக்கி பணிகள் துரிதமாக நடைபெற நல் லுதவி புரிந்துள்ளார்.

### அரசு மானியம்

இத்திட்டத்திற்கான நிதிவசதி ஏற்பாடுகளைப் பொறுத்தமட்டில் தமிழக அரசு மானியமாக ரூ.5 கோடியும், வழி வகைக் கடனாக ரூ.12.5 கோடியும் அளித்து மிகச் சிறந்த ஊக்கத்தினை அளித்து இருக்கிறது. மத்திய அரசு ரூ.2 கோடி மட்டும் கொடுத்து இருக்கிறது. அரசு நிறுவனங்கள், கூட்டுறவு அமைப்புகள் மற்றும் தொழில் அதி பர்கள், பொதுமக்கள் ஆகியோரிடமிருந்து ஏறத் தாழ ரூ.8.5 கோடி நன்கொடையாகப் பெறப் பட்டுள்ளது.

இந்தியன் வங்கியிடமிருந்து பெரும் தொகை கடன் வசதியாகப் பெறப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்குத் தேவையான நிதிவசதி அளிப்பதில், இந்தியன் வங்கி என்றென் றும் பாராட்டுக்குரிய உதவிகளைச் செய்திருக் கிறது. மிகுந்த ஆர்வத்துடனும், நல்ல உள்ளத்துட னும் இந்தத் திட்டத்திற்கான நிதி வசதியை அளித்த இந்தியன் வங்கியின் தலைவர் திரு. கோபால கிருஷ்ணன் அவர்கள் நமது நன்றிக்கு என்றும் உரியவர் ஆவார்.

அகில இந்தியக் கால்பந்து இணையத்தின் துணைத் தலைவர் திரு. சி.ஆர். விஸ்வநாதன் அவர்கள் இந்தத் திட்டம் உருவாக்கப்பட்ட காலத் திலிருந்து முழுமையாகத் தன்னை இணைத்துக் கொண்டு ஓய்வின்றி உழைத்து, இந்தத் திட்டம் நிறைவு பெறுவதில் சிறந்த பங்கினை ஆற்றியுள் ளது பாராட்டுக்குரியது.

கோடி ரூபாய் உதவி அளித்தது. தொழில் அதிபர்கள், தொழில் முனைவோர்கள், கொடை வள்ளல்கள், விளையாட்டு ஆர்வலர்கள் எல்லாம், தமிழ்நாடு விளையாட்டுக் கழகத்தின், இந்த விழுமிய முயற்சிக்கு, உற்றுழி உதவியும், உறு பொருள் கொடுத்தும், தங்கள் பங்கினைப் பாங்குற ஆற்றியிருக்கிறார்கள்.

எந்தவித அசம்பாவிதங்களும் நேராமல், இந்த அரங்கம், 7½ மாதத்தில் எழுந்துள்ளது என்பது, நமக்கு இரட்டிப்புப் பெருமிதத்தை வழங்குகிறது. இந்த அரங்கிற்கான திட்டம், வடிவமைப்பு, பொறியியல் நுட்பம், நிர்வாகம், செயல்பாடு இவை அத்தனையும் விரைவுக்கும், தீவிர வேகத்திற்கும், அசையாத எடுத்துக்காட்டுகள். இந்த மகத்தான அரங்கைப் பற்றி, மகிழத்தக்க இன்னொரு செய்தியும் உண்டு. இது முற்றிலும் உள்நாட்டு உற்பத்திப் பொருட்களை மட்டுமே கொண்டு உருவாக்கப்பட்ட உன்னத அரங்கம். இன்று வரை விஞ்ஞானம் தந்த அனைத்து உத்திகளும், இதில் பயன்படுத்தப்பட்டிருப்பதால், புதுமைகளின் புதுமையாக இந்த அரங்கம் பொலிவதை, நீங்கள், பார்க்கிறீர்கள்.

எனவே தான், இந்த அரங்கைத் தொடங்கி வைக்க, மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்களைப் பாசத்துடன் அழைத்தோம். 27.12.1992 அன்று, மாண்புமிகு பிரதமர் அவர்கள் கன்னியாகுமரிக்கு வந்தபோது, இந்த விழாவுக்கு வருகைதந்து, இந்த விளையாட்டரங்கைத் திறந்து வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். உடனே அவர்கள் ஒப்புக் கொண்டது மட்டுமல்லாமல், இந்த நிகழ்ச்சிக்காகப் பல்வேறு பணிகளையும் ஒதுக்கி வைத்துவிட்டு, வந்திருந்து, விளையாட்டரங்கைத் திறந்து வைத்து நம்மையும் தமிழகத்தையும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியிருக்கிறார்கள். பிரதமர் அவர்களுக்கு என் இதயங்கனிந்த நன்றி.



இந்த இனிய விழாவிற்குத் தலைமை ஏற்று சிறப்பித்துக் கொடுத்துள்ள, மேதகு தமிழக ஆளுநர் டாக்டர் பீஷ்ம நாராயண்சிங் அவர்களுக்கும், என் நன்றி. இந்த நல்ல விழாவில், மாண்புமிகு மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. அர்ஜுன் சிங் அவர்கள், விழா மலர் வெளியிடுவது, மலருக்கும், இந்த மகிழ்ச்சியான விழாவிற்கும் சிறப்பூட்டும் செயல். அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றி.

இந்தச் சிறப்பு விழாவிலேயே, இன்னொரு சிறப்பும் அரங்கேற்றமாகிறது. அதுதான் ஜவகர்லால் நேரு தங்கக் கோப்பைக்கான, 10-வது சர்வதேசக் கால்பந்தாட்டப் போட்டி! இதற்கு முன்னர் இரண்டு முறை இசைவு கேட்கப்பட்ட போதும், இட வசதி இல்லாததால், தமிழகம் அந்த வாய்ப்பை இழந்தது.

சுமார் ஒன்பது மாதங்களுக்கு முன், இந்தப் போட்டிகளை நடத்த இசைவு கேட்கப்பட்ட போது, உங்கள் அன்புச் சகோதரியாகிய நான், தமிழகத்தில் இம்முறை தவறாது, இந்தச் சர்வதேசப் போட்டி நடத்தப்பட வேண்டும் என்று, தைரியமாகத் தமிழக மக்களை நம்பி, இத்திட்டத்திற்கு இசைவளித்தேன். அதனை முழுமையாக நிறைவேற்றும் வகையில், ஒப்புதல் அளித்த 7½ மாதங்களில், இந்த விளையாட்டரங்கம் எழுந்து நின்று, கால்பந்தாட்டப் போட்டிக்கு, உலக நாடுகளுக்கு அழைப்பு விடுத்துக் கொண்டிருப்பதைக் காணும் பொழுது, மகிழ்ச்சியாக இருக்கின்றது.

இந்த விளையாட்டு அரங்கத்தைக் கட்டுகிற இமாலயப் பணியில், எனக்குத் துணை நின்றவர்கள் பல



பேர். இந்த முயற்சியை, தங்களது மூச்சாகக் கருதி, உழைத்தவர்கள் நிறைய பேர் உண்டு. அவர்கள் அனைவரையும் இன்று நினைவு கூர்வது, எனது தலையாய கடமையாகும். அவர்களுடன் சேர்ந்து இந்த மாபெரும் வெற்றி தரும் மகிழ்ச்சியையும், பெருமிதத்தையும், பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். நன்றி கூற விழைகிறேன்.

முதலில், விபத்தே இல்லாமல், உயிர்ச்சேதமின்றி, இந்தச் சீர்மிகு அரங்கை உருவாக்கிக் கொடுத்த லார்சன் அண்ட் டூப்ரோ நிறுவனத்திற்கும், வடிவமைத்துக் கொடுத்த கட்டடக் கலை நிபுணர் திரு. சி.என். ராகவேந்திரா அவர்களுக்கும், இதை உருவாக்கக் காரணமாய் இருந்த 5,000 கட்டடத் தொழிலாளர்களுக்கும், என் மனமார்ந்த நன்றியையும், பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

என் இதயத்தின் விருப்பத்தை எடுத்துரைத்த உடன், தேனீக்களாகத் திரிந்து பறந்து பணியாற்றி, என் விருப்பத்திற்கு செயல் வடிவம் தந்திருக்கின்ற அமைச்சர் பெருமக்கள் அனைவருக்கும், குறிப்பாக அமைச்சர் திரு.அழகு திருநாவுக்கரசு அவர்களுக்கும், அழகான விழா மலரை குறுகிய காலத்தில் சிறப்புறத் தயாரித்துக் கொடுத்த அமைச்சர் திரு. எஸ். கண்ணப்பன் அவர்களுக்கும், மற்றும் தலைமைச் செயலாளர் திரு. டி.வி. வெங்கட்ராமன் அவர்களுக்கும், தமிழ்நாடு கால்பந்தாட்டச் சங்கத் தலைவர் திரு. சி.ஆர். விஸ்வநாதன் அவர்களுக்கும், அரசுத் துறை அலுவலர்களுக்கும், என் நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது அன்பான அழைப்பினை ஏற்று, அற்புதக் கலை நிகழ்ச்சிகளை இந்தக் குறுகிய காலத்தில், இடைவிடாத தீவிரப் பயிற்சிகள் மேற்கொண்டு, இன்று மிகச் சிறப்பாக நடத்திக்காட்ட உள்ள, பல்லாயிரம் பள்ளி மாணவ மாணவிகளுக்கும், காவல் துறையினருக்கும், மற்றும் இரயில்வே பாதுகாப்புப் படையினருக்கும், இசை அமைத்துக் கொடுத்துள்ள திரு. சங்கர்-கணேஷ் அவர்களுக்கும், பள்ளிக் குழந்தைகளை பயிற்றுவித்த ஆசிரியப் பெருமக்களுக்கும், என் நன்றியைத் தெரிவித்து, அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

சமாதானம், சகவாழ்வு ஆகிய தத்துவங்கள், இந்த விளையாட்டரங்கிலே விளைவாகி, மனித சமுதாயம் முழுவதற்கும், மகிழ்ச்சியையும் அமைதியையும் அளிக்கும், என்று நம்புகிறேன்.

It is a matter of great personal satisfaction to me that, today, a dream has become a reality. Jawaharlal Nehru Stadium which the Hon'ble Prime Minister of India has just now inaugurated, has fulfilled the aspirations of thousands of youth and children of our State, nay, of the whole country, who have longed to perform in an arena which is the best in Asia and one of the best in the world.

On two occasions, Tamil Nadu lost the opportunity to host the Jawaharlal Nehru Gold Cup Invitation International Foot Ball Tournament, simply because we did not have a stadium that would comply with international requirements. We had also lost the opportunity of hosting many other athletic events, sports and games in the past, owing to the absence of adequate facilities.

We now have a stadium that adheres to the standards for international competition. This is an achievement everyone in the country should be proud of. I am personally very, very happy, that I have played some part in helping to realise the vision of the sports loving people of our State.

Just about nine months ago, when it was mentioned to me, that Tamil Nadu had been offered the opportunity of hosting the 10th Jawaharlal Nehru Gold Cup Invitation International Foot Ball Tournament, and that even though the same opportunity had been offered twice earlier, the State could not avail itself of the offer, because a suitable stadium was not available. I decided that this time, we would accept the offer, and the youth of our State should have a stadium that the country could be proud of.

It was indeed a formidable challenge, daunting task. But we have succeeded. This majestic stadium has risen from the ground, in a short period of just seven and a half months. It is equipped with all the latest facilities available elsewhere in the world. It has unique features of construction which are not found in other stadia anywhere in the world.

## ஸ்டேடியத்தில் ஒரு புதுமை!

நேரு ஸ்டேடியத்தில் பாதுகாப்புக்காகச் சிறப்பு ஏற்பாடுகள் அனைத்தும் செய்யப்பட்டுள்ளன. தொலைக்காட்சிக் காமிராக்கள் மூலம் பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கவனிப்பது ஒரு சிறப்பு அம்சம் ஆகும்.

ஸ்டேடியத்தின் முக்கியப் பகுதிகளில் 13 தொலைக்காட்சிக் காமிராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. சிறப்புக் கட்டுப்பாட்டு அறையில் அமர்ந்தபடி இந்தக் காமிராக்களின் உதவியுடன் பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கண்காணிக்க இயலும். கட்டுப்பாட்டு அறையில், 5 தொலைக்காட்சிப் பெட்டிகள் நிறுவப்பட்டுள்ளன.

ஸ்டேடியத்தில் யாராவது சந்தேகப்படும் வகையில் நடமாடினால், காமிரா மூலம் பின் தொடர்ந்து சென்று அவரது நடவடிக்கைகளை, அந்த நபருக்குத் தெரியாமல் கண்காணிக்கவும் முடியும்! இந்தப் பாதுகாப்பு அமைப்பை, மராட்டிய மாநில எலக்ட்ரானிக் கழகம் தயாரித்துள்ளது. இதை நிறுவுவதற்கு ஆன மொத்தச் செலவு ரூ.55 இலட்சம்.

போட்டி முடிந்த அடுத்த 11 நிமிடங்களுக்குள் 40 ஆயிரம் பேர்களும் ஸ்டேடியத்திலிருந்து வெளியேறிவிட முடியும். மைதானத்துக்குத் தேவைப்பட்டால், ஆம்புலன்ஸ் மற்றும் தீயணைப்பு வண்டிகள் செல்லத் தனியே இரு வாசல்கள் அமைக்கப்பட்டுள்ளன.

ஸ்டேடியத்தில் நிகழ்ச்சிகள் இல்லாத போது, அத்துமீறி யாரும் நுழைய முடியாது. நுழைந்தால், அபாய ஒலி அலறும்!

Its design and architecture, its facilities, both on the field and in the stands are such, that one can say that given the will, it is possible to produce institutions of the highest quality in our country, and we do not have to go abroad for training or for assistance. It was mentioned to me a few weeks ago, that a group of Canadian Engineers visited the Stadium and expressed admiraiton, not only for the quality of work done, but also for the speed with which it had been accomplished. There is no doubt that the construction of the Jawaharlal Nehru Stadium will be a landmark in the history of Sports and Games in our Country.

It is most appropriate that the Stadium should have been inaugurated by the Hon'ble Prime Minister of India, Thiru P.V. Narasimha Rao, whose sense of history is as deep and profound, as his commitment to the future of the youth of our nation. On this historic occasion, I deem it my foremost duty to convey my sincere gratitude, to everyone who participated in the exhilarating process of designing and building this magnificent edifice, which is truly dedicated to the youth of our nation.

It is my earnest desire that this Stadium should inspire hundreds of young Indian men and women, to put forth their best, and to rise to pinnacles of glory in the arena of international sports and games. We have always known that there is no dearth of sports talent in our country. We have produced outstanding sports personalities, comparable to the best in the world, but we have been woefully lacking in the required facilities, equipment and training.

I expect the Jawaharlal Nehru Stadium to fill the gap in all these areas, so that our young men and women do not have to look for them outside our country. A stadium is not merely an arena or a structure where games are played. It is symbolic of the brotherhood of man. Sports and Games bring people together. They help to mould the character of the youth. They provide a constructive channel through which young people can find a release for their abundant overflowing energy and restlessness.

சென்னை மாநகரில் நடைபெறும், 10-வது ஜவகர்லால் நேரு தங்கக் கோப்பை சர்வதேச அழைப்புக் கால்பந்துப் போட்டி மிகச் சிறப்பாக நடைபெற, 27 பேர் கொண்ட உயர்மட்டக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. அதன் தலைவர், மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆவார்.

They inspire them to great feats of endurance which are tributes to the spirit of man. For over 2,500 years, ever since the first Olympic Games were played, sportsmen and women have sought to excel each other, in a spirit of friendly competition. In this troubled world, more than ever before, sports and games, however competitive they are, act as a soothing balm of peace and harmony and fill us with a spirit of unity and make us realise the universal brotherhood of man.

I am sure that the construction of the Jawaharlal Nehru Stadium will be the beginning of a new era, in the development of sports and games in our country. Jawaharlal Nehru was the architect of modern India. He was a great visionary who foresaw that the future of the country lay in the hands of the youth and gave them all encouragement. The Stadium is aptly named after him.

I am sure that the Jawaharlal Nehru Stadium will inspire generations of Indian sportsmen and women to perform superlative feats. Thousands of children have gathered here today. They will shortly be presenting a magnificent, spectacular display of physical skills and folk arts. I wish to thank each and every one of them and express the hope that at least a good number of them will come back to the Stadium, to improve their sporting and athletic prowess, and to perform feats of glory and earn encomiums in National and International events.

Thousands of construction labourers have toiled unceasingly and have completed the stadium in a record time of seven and a half months. I cannot adequately express in words my deep gratitude to all of them.

The Hon'ble Prime Minister of India has found some time to be with us on this most happy occasion, inspite of the fact that crisis after crisis has been confronting him in recent times and it has required all his sagacity and wisdom to resolve them.

On behalf of the people of Tamil Nadu and on my own behalf, I wish to offer my sincere thanks to the Prime Minister for his kind presence today. My thanks are due to His Excellency, the Governor of Tamil Nadu, Dr. Bhishma Narain Singh, who is presiding over this function. I am grateful to him for his consistent support in all our development efforts.

My thanks are also due to Shri Arjun Singh, the Hon'ble Union Minister for Human Resource Development, for releasing the commemorative souvenir. He has also helped us with a financial grant of 2 crore rupees from the Central Government, towards the construction of this Stadium. Over and above that, his interest in the welfare of our youth is well known. I am sure he will continue to support us in all our efforts in this regard.

இன்று பெருந்திரளாக வந்து, உங்கள் அன்புச் சகோதரியின் எந்தச் செயலுக்கும் உடனிருந்து, ஊக்கமும் உற்சாகமும் வழங்கும் உங்கள் அனைவருக்கும், என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



# மின்துறையின் முற்போக்குத் திட்டங்கள்

மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு. எஸ். கண்ணப்பன்




நாட்டின் மின்துறை பிரச்சினைகளைப் பற்றி விவாதிக்க இம்மாநாட்டைக் கூட்டியமைக்காக மாண்புமிகு மின்துறை இணை அமைச்சர் அவர்களுக்கு முதலில் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பம்பாயில் உற்பத்தியாகும் எரிவாயுவைத் தென் மாநிலங்கள் பயன்படுத்திக் கொள்ள வகை செய்யும் தென்னிந்திய எரிவாயு இணைப்பு அமைப்பின் முக்கியத்துவத்தை நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் 1985-ஆம் ஆண்டு முதல் உயர் அழுத்த மின் தொழிற்சாலைகள் மீது இருந்து வந்த தடைகள் அனைத்தும் முதன்முறையாக நீக்கப்பட்டன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் இந்த ஆண்டு அனல் மின் உற்பத்தி நிலைமை மிகவும் திருப்திகரமாக இருந்தது. மூன்று நிலையங்களின் மின்சுமை அளவு 63 சதவிகிதமாக இருந்தது. இது அகில இந்தியக் குறியீடான 56 சதவிகிதத்தை விட உயர்ந்தது என்பதில் சந்தேகமில்லை. தூத்துக்குடி அனல் மின் உற்பத்தி நிலையம் உற்பத்தித் திறனுக்கான மத்திய அரசின் சிறப்பு விருதினை இதுவரை ஆறு முறை பெற்றுள்ளது. நிலக்கரி சீராகக் கிடைக்குமானால் இன்னும் அதிகளவு மின் உற்பத்தியை நம்மால் பெருக்க முடியும்.

மத்திய அரசின் புதிய தொழிற்கொள்கைக்கு இணங்கவும், டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் வகுத்துத் தந்த

# தேசிய ஒருமைப்பாட்டுக்கு நம் மாநிலம் செலுத்தும் மாபெரும் மரியாதை!

இன்று சர்வதேச அதிசயமாகக் கட்டி முடித்து திறக்கப்பட்டுள்ள ஜவகர்லால் நேரு விளையாட்டு அரங்கம், இந்திய மண்ணில் நம் மால் படைக்கப்பட்ட ஒரு மாபெரும் நினைவுச் சின்னம். இன்று நாம் அடையும் இந்த மகிழ்ச்சி, இந்தப் பெருமிதம், எத்தனை நியாயமானது என்பதற்கு, இதை இன்று காணு கின்ற நீங்களும், நாளை காண வரப்போகின்ற, கோடிக்கணக்கான எதிர்காலத் தலைமுறையினருமே, சத்தியச் சாட்சிகள்!



ஜவகர்லால் நேரு விளையாட்டு அரங்கம்
தொடக்க விழாவில்

## மாண்புமிகு முதல்வர் உரை

விளையாட்டரங்குகளின் அரசி யாகத்திகழும் இந்த அரங்கம், நவ இந்தியாவின் சிற்பியான ஜவகர் லால் நேரு அவர்களுக்குத் தமிழகம் வழங்கும் அன்புக் காணிக்கை, தேசிய ஒருமைப்பாட்டுக்கு நம் மாநிலம் செலுத்தும் மாபெரும் மரியாதை.

எங்கே உடம்பு வலிமையோடு இருக்கிறதோ, அங்கு தான் உள்ளம் வலிமையோடிருக்கும், உயிர் ஆற்ற லோடு உலா வரும் என்பது, நடை முறை உண்மை. பண்டைத் தமிழகம், வீர விளையாட்டுகளின் தாயகம். வீரமும், வித்தகமும் அன்றைய தமிழ் இளைஞர்களின் உயிர் மூச்சு. பணி யும் விளையாட்டும், செயல்திறனை அடிப்படையாகக் கொண்டவை என் றாலும், விளையாட்டிலே ஈர்ப்பும் இன்பமும் இயல்பாக இருப்பதால், வேலையிலே இருக்கின்ற சோர்வு, விளையாட்டிலே தெரிவது இல்லை. 'உடலினை உறுதி செய்' என்றார் மகாகவி பாரதி. உடலினை உறுதி செய்யக் களம் தேவை; கருவிகள் தேவை; வாய்ப்பும் வசதியும் தேவை.

அவற்றை இன்றைய தலைமுறை யினருக்கும், எதிர்காலச் சந்ததி யினருக்கும் வழங்கத்தான், இந்த வரலாற்றுப் புகழ்மிகு அரங்கம் நிர்மாணிக்கப்பட்டு, இன்று திறப்பு விழா, காண்கிறது.

விளையாட்டுத் துறைக்கு, புத் துணர்ச்சி ஊட்டும் புதிய முயற் சிக்கு, நடத்தப்பட்ட கால்கோள் நிகழ்ச்சியின் நிறைவே இந்த அரங் கம். தமிழகத்தின் பெருமைக்காக வும், இந்தியாவின் கீர்த்திக்காகவும், உலக நாடுகளின் பாராட்டுகளுக் காகவும் மட்டுமே, இது உருவாக்கப் பட்டதல்ல. விளையாட்டுக் கலையை,



அறிவியல் முயற்சியாக ஆக்குவதற் காக, கட்டி முடிக்கப்பட்ட அடை யாளச். சின்னம் இது.

சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான இடத்தில், பண்டித ஜவகர்லால் நேரு அவர்களின் பெயரில் இருந்த, பழைய விளை யாட்டு அரங்கம், இன்று முற்றிலும் மாற்றப்பட்டு, ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கம் என்னும் பெய ரில், நவீன கட்டடக் கலையின் அற்புதமாக எழுந்து நிற்கிறது. 40 கோடி ரூபாய் செலவிலே உருவாக் கப்பட்டிருக்கிற, இந்த அரங்கத்தின் நிர்மானப் பணிக்கு, மத்திய அரசு 2



தொழிற் திட்டங்களுக்கு ஏற்பவும், மின் உற்பத்தியில் தனியார் பங்கேற்கும் வகையில், டிசம்பர் திங்களில் இதில் தொழில் முனைவோர்கள் தெரிந்தெடுக் கப்பட்டு மாநிலத்தில் முதலீடுகள் செய்யக் கூடிய திட்டங்களுக்கு இறுதி வடிவம் கொடுக்கப்பட்டன. ரூ.4800 கோடி மூலதனத்தில் மூன்று மின் திட்டங்கள் உட்பட மொத்தம் 22 புதிய திட்டங்கள் மொத்தம் ரூ.8,500 கோடி செலவில் விரைவில் தமிழகத்தில் தொடங்கப்பட உள்ளன.

தமிழகத்தைப் பொறுத்தமட்டில் மின் விநியோகத்தில் தனியார் பங்கே கிடையாது. ஐந்து நகராட்சி, மூன்று கிராம மின் கூட்டுறவுச் சங்கம் தவிர வேறு விநியோக அமைப்பே கிடையாது. இதில் நகராட்சிகள் மின் விநியோகத்தை மின் வாரியத்திற்குத் திருப்பித் தருவதற்குத் தயாராக உள்ளது. இந்தச் சூழ்நிலையில் மின் உற்பத்தியைத் தனியாரிடம் ஒப் படைக்கும் எண்ணம் விரைவில் செயல் வடிவம் பெறும் எனத் தோன்றவில்லை. நிலம், நீர், போக்குவரத்து, போன்ற அடிப்படை வசதிகள் பூர்த்தி செய்யப் பட்டப் பிறகு, தனியார் இதில் பங்கேற்க முனையலாம்.

1991-92-இல் மின் விநியோகத்தில் ஏற்பட்ட நட்டம் 18.35 சதவிகிதம் ஆகும். மாநிலத்தில் 13 இலட்சம் விவசாயப் பம்பு செட்டுகளும்,அனைத்துக் கிராமங்களில் தெருவிளக்குகளும், இருப்ப தால் இந்த நட்டத்தைக் குறைக்க இயல வில்லை. இந்த நட்டத்தைக் குறைக்க இயன்ற அளவு அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மின் வாரியம் இதற்கெனத் தீட்டியுள்ள செயல் திட்டத்தை அமல்படுத்த ரூ.500 கோடி தேவைப்படுகிறது. எட்டாவது திட்டத்தின் இறுதியில் மின் விநியோகத்தில் நட்டம் 2 சதவிகிதமாகக் குறையும் என எதிர் பார்க்கப்படுகிறது.

சென்னை அனல் மின் திட்டத்திற்கு, 150 மில்லியன் டாலர்களும், சென்னை நகருக்கு மின் விநியோகம் செய்ய 200 மில்லியன் டாலர்களும், ஆசிய வளர்ச்சி வங்கி (Asian Development Bank) வழங்க உள்ளது. இப்பணிகள் நடைபெற்றுக் கொண்டுள்ளன. இதுதவிர, Overseas Reono Co-operative Fund, பேசின் பிரிட்ஜ் திட்டத்திற்கு 11,450 மில்லியன் யென் (Yen)களை ஒதுக்கியுள்ளது.

எரிபொருளுக்காகவும், மத்திய நிலையங்களுக்காகவும், 73 சதவிகித வருவாய் செலவிடப்படுகிறது. இருப்பினும் தமிழ்நாடு மின் வாரியம் 1990-91-இல் ரூ.30.55 கோடியும், 1991-92-இல் ரூ.119.24 கோடியும் நிதி ஆதாரங்களைத் திரட்டி உள்ளது. 1992-93-இல் இது ரூ.150.11 கோடியாக உயரும் என எதிர்பார்க்கப் படுகிறது.

எங்கள் அரசு பொறுப்பேற்ற பிறகு இரண்டு முறை (1.9.91 மற்றும் 1.2.92) மின்கட்டணத்தை உயர்த்தியுள்ளது. இதனால் ஆண்டுக்கு கூடுதலாக ரூ.379.34 கோடி கிடைக்கும். தேசிய அனல் மின் கழகம் (National Therminal Power Corporation) நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் (Neyveli Lignite Corporation) அணு மின்நிலையம் (Nuclear Power Corporation) ஆகியவைகளுக்கு இரண்டு மாதக் கட்டணங்கள் மட்டுமே பாக்கியுள்ளது. அவைகளை விரைவில் தீர்க்க தமிழ்நாடு மின் வாரியம் அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறது. மின் உற்பத்திக்காக இறக்குமதி செய்யப்படும் நிலக்கரி, LNG ஆகியவைகளுக்கு அனைத்து வரிகளிலிருந்தும் விலக்கு அளிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

மின் துறையின் கூடுதல் திட்டங் களுக்குக் கூடுதல் மூலதனங்களைக் கொண்டுவர, எங்கள் அன்பிற்குரிய மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் முற்போக் கான தலைமையின் கீழ் சீரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என் பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்பு கிறேன்.

இம் மாநாட்டில் பங்குகொண்டு என் கருத்துக்களை உங்களோடு பகிர்ந்து கொள்ள வாய்ப்பளித்த மாண்புமிகு மின்துறை இணை அமைச்சர் அவர் களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**(புது டெல்லியில் ஜனவரித் திங்கள் 8,9 தேதிகளில் நடைபெற்ற மின் சாரத்துறை அமைச்சர்கள் மாநாட்டில் மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு. எஸ். கண்ணப்பன் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து).**

## கலைத்துப் பார்ப்போம்

| | | |
|---|---|---|
| Account Payee only | — | கணக்குடையார்க்கு மட்டும் |
| Blood group | — | குருதி வகை |
| Cancellation | — | செயல் நீக்கம் |
| Cancelled | — | செயல்நீக்கம் செய்யப்பட்டது |
| Convalescence | — | தேறுநிலை, தேறிவரும் நிலை |
| Duty officer | — | பணி அலுவலர், நாட்பணி அலுவலர் |
| Evolution | — | படிமுறை வளர்ச்சி |
| Fair copy | — | தெளிவு நகல் |
| Flow chart | — | செல்வழி அட்டவணை |
| Freshness | — | புதுமலர்ச்சி |
| Human Values | — | மனித மாண்புகள் |
| Leap year | — | சேர்ப்பு நாள் ஆண்டு, சேர்ப்பு ஆண்டு |
| Magnum opus | — | ஒப்பிலாப் படைப்பு, தலை சிறந்த படைப்பு |
| Make-up | — | மேன்மைப்படுத்து, ஒப்பனை செய் |
| Mail transfer | — | அஞ்சல் முறை மாற்றல் |
| Making Charges | — | செய் கூலி |
| Medium | — | ஊடகம் |
| Mesmerism | — | மனவசியம் |
| Message | — | செய்தி, மேன்மைச் செய்தி |
| Scam | — | கயமை, கயமைச் செயல், கயச் செயல் |
| Silent worker | — | அமைதிப் பணியாளர் |
| Stereo broadcast | — | பிரிநிலை ஒலிபரப்பு |
| Sun stroke | — | வெப்பத்தாக்கு |
| Team spirit | — | ஒருமையுணர்வு |
| Teen age | — | பதின் அகவை |

—நன்றி: முத்தமிழ் ஆய்வுமன்ற மலர்



# இராயக்கோட்டை



தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த இராயக்கோட்டை குறிப்பிடத்தக்க சரித்திரச் சிறப்பைக் கொண்டிருக்கிறது. கிருஷ்ணகிரியிலிருந்து பெங்களூர் செல்லும் இந்த ஊர்க் காவல் நிலையத்தில், தனி மேடைகட்டி பழங்காலப் பீரங்கி ஒன்றை வைத்திருக்கிறார்கள். காவல் நிலையத்திற்கு எதிரே சிறிது தூரத்தில் தலைதூக்கி நிற்கும் தனி மலை ஒன்றின்மேல் கோட்டைக் கொத்தளங்கள் காணப்படுகின்றன.

இந்த இரண்டுமே திப்பு சுல்தான் ஆட்சிக் காலத்தவையாகும்.

1983-இல், வட பிராந்திய டி.ஐ.ஜி யாக இருந்த திரு. தேவாரம், இராயக் கோட்டைக்கு 2 கி.மீ. தூரத்தில் உள்ள தோர் கிராமத்தில் புதைந்துகிடந்த 3 பீரங்கிகளை வெளிக்கொணரச் செய் திருக்கிறார். அதில் ஒன்றே இராயக் கோட்டை காவல் நிலையத்தில் இருப்ப தாகும். இதை அங்கே கொண்டுவந்து நிறுவியவர், அப்போது தருமபுரி மாவட்டக் காவல்துறைக் கண்காணிப் பாளராக இருந்த திரு. கே.விஜயகுமார்.

மலைமீதுள்ள கோட்டை இப்போது மத்தியத் தொல்பொருள் பாதுகாப்புத் துறையின் பொறுப்பிலிருக்கிறது.

அங்குள்ள கல்வெட்டுகளெல்லாம் கன்னட மொழியில் உள்ளன; இக் கோட்டை, கைலாச மன்னரால் கட்டப் பட்டதாக அதில் கூறப்பட்டிருக்கிறது. அவர்களுக்குப் பிறகு - விஜயநகர மன்னர்கள், ஐதர்அலி, திப்புசுல்தான் ஆகியோர் அங்கிருந்து அரசாண்டிருக் கிறார்கள்.

1791-இல், ஆங்கிலேயக் கிழக் கிந்தியக் கம்பெனி கவர்னராக இருந்த காரன்வாலிஸ் என்பான் நடத்திய போரில், திப்பு தோற்றான்; இராயக்கோட்டை ஆங்கிலேயர் வசமாயிற்று.

—ஆர். மருதமுத்து



## ஓதுதான் ஓசூர்

**'ஓதூர்' என்ற பெயர் கர்நாடகத்தின் தாக்கமாகும்; 'ஓச' என்றால் கன்னடத் தில் புதிய என்று பொருள். புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ஊர் என்பதாலேயே அது ஓதூர். கன்னடத்தில், 'அளே' என்றால் பழக என்று பொருள். 'அளே தருமபுரி' என்பது பழைய தருமபுரி.**

**தகடூர் நாடு, சோழர் ஆட்சிக்கு முன், பல நாடுகளாகச் சிதறிக் கிடந்தது; சோழர்கள் இப்பகுதியை முழுமையாகக் கைப்பற்றிய பிறகுதான், சோழநாட்டில் உள்ளது போல மண்டலங்களாகவும், நாடுகளாகவும் இதைப் பிரித்து வகைப் படுத்தினார்கள்.**

**அப்போதுதான், தகடூர் பகுதி நிகரிலி சோழ மண்டலம் என்று பெயர் பெற்றிருந்ததாகத் தெரிகிறது. முதலாம் இராசேந்திர சோழன் காலக் கல் வெட்டில் 'நுளம்ப பாடியாகிய நிகரிலி சோழ மண்டலம்' என்று வருகிறது.**

**இதுவே கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் ஓதூர் பகுதியும் கர்னாடகத்தின் ஒரு பகுதியும் சேர்ந்து 'முடிகொண்ட சோழ மண்டலம்' என்று பெயர் பெற்றது. ஓதூர் அந்நாளில் முரசு நாடு எனப்பட்டது.**



Phone: 52201, 52251, 51899 Salem
Cable: CARE JAYAMTRADE, Salem

**M/s. JAYAM FOOD PROCESSING INDUSTRIES**

18th, K.M. Dharmapuri - Pennagaram Road, S/F, No. 7/11 and 13/1
NALLANUR-636 813 (Konangihalli Post)
Near Thalapallam, Pennagaram Tk.,
Dharmapuri Dt.

*Registered Office:*
352, Suramangalam Main Road,
SALEM-636 009.



நல்வாழ்த்துக்களுடன்

பி. நல்லதம்பி
லஷ்மி சேம்பர் பிரிக்ஸ்
சின்னம்பள்ளி
பென்னாகரம் வட்டம்

மற்றும்
பெரும்பாலை கிராம தானிய
சில்லறை வணிகர்கள்

எங்களிடம் தரமான
சேம்பர் செங்கற்கள் கிடைக்கும்.



# ஓசூரில் சிப்காட் தொழில் இணையம்

**வ**ளர்ச்சியில் முதல்இடத்தையும்வரிசையில் இரண்டாவது இடத்தையும் பெற்றுள்ள சிப்காட் தொழில் இணையம் ஓசூர் தொழில் இணையம் ஆகும். 1973-இல் ஆரம்பிக்கப்பட்ட இராணிப் பேட்டைத் தொழில் இணையத்தை அடுத்து 1974-இல் தொடங்கப்பட்ட ஓசூர் தொழில் இணையம் வேகமாக வளர்ந்து தமிழ்நாட்டில் அமைக்கப் பட்டுள்ள தொழில் இணையங்களுக்கெல்லாம் ஓர் முன் மாதிரியாக விளங்கி வருகிறது.

இங்கு தொழில் இணையத்திற்காகக் கையகப்படுத்தப்பட்ட நிலம் 1235 ஏக்கர். இதில் 1090 ஏக்கர் நிலம் 147 தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மீதம் உள்ள நிலம், இணையத்தின் அடிப்படை வசதிகளுக்கென ஒதுக்கப்பட்டது. நிலம் பெற்ற 147 தொழில் நிறுவனங்களில் 75 தொழில் நிறுவனங்கள் நடுத்தர மற்றும் பெரிய தொழில் பிரிவையும் மற்ற 72 தொழில் நிறுவனங்கள் சிறிய தொழில் பிரிவையும் சார்ந்ததாகும். இவற்றுள் 102 தொழில் நிறுவனங்கள் வணிக ரீதியில் உற்பத்தியைத் தொடங்கியுள்ளன. உற்பத்தியைத் தொடங்கியுள்ள 102 தொழில் நிறுவனங்கள் செய்துள்ள முதலீடு ரூ.187 கோடி. இதன்மூலம் வேலைவாய்ப்புப் பெற்றோர் 16,000 பேர்; நிலம் பெற்ற 147 நிறுவனங்களும் தங்கள் தொழிலைத் தொடங்கும்போது அவை கூட்டாகச் செய்யும் முதலீடு ரூ.257 கோடியாகவும், வேலைவாய்ப்புப் பயன்பெறுவோர் எண்ணிக்கை 20,000 ஆகவும் உயரும்.

இவை தவிர, சிப்காட் தொழில் வளாகத்தைச் சுற்றி 30 பெரிய தொழிற்சாலைகளும், 11 நடுத்தரத் தொழிற்சாலைகளும் இயங்கி வருகின்றன. அவைகள் செய்துள்ள முதலீடு ரூ.30 கோடி. இத் தொழிற்சாலைகளில் பணிபுரிவோர் 8000 நபர்கள்.



சிட்கோ நிறுவனத்தின் மூலம் 150 சிறு தொழிற்கூடங்கள் சிப்காட் வளாகத்திலேயே அமையப்பெற்றுள்ளன. அவற்றின் கூட்டு முதலீடு ரூ.20 கோடி ஆகும். இவற்றின் மூலம் வேலைவாய்ப்புப் பெற்றோர் சுமார் 3,500 நபர்கள். இவ்விணையத்தின் மேம்பாட்டிற்காக சிப்காட் இதுவரை ரூ.444.38 இலட்சம் செலவு செய்துள்ளது.

பெரிய தொழிற்சாலைகளில் அசோக் லேலண்ட், டைடான் கடிகாரம், டிவிஎஸ் மொபெட், இந்தியன் டுபாக்கோ, பிரிமியர் மில்ஸ், கார்போரண்டம், பழம் பதனிடும் மையம் போன்றவை குறிப்பிடத்தக்கவை.

இவ்விணையத்தில் பின்கண்ட அடிப்படை வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

**சாலை:**

15 கி.மீ. தூரத்துக்கு தார்ச் சாலை போடப்பட்டுள்ளது.

தண்ணீர்: நிலத்தடி நீரையே முழுவதுமாக நம்பியுள்ள இவ்விணையத்தில் 34 ஆழ்கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் சுமார் 7 முதல் 8 இலட்சம் காலன் வரை நாளொன்றுக்குத் தண்ணீர் கிடைக்கிறது. இத்தண்ணீர், உற்பத்தியைத் தொடங்கியுள்ள தொழிற்சாலைகளின் தண்ணீர்த் தேவையை மட்டுமே நிறைவு செய்யப் போதுமானதாக உள்ளது. தண்ணீர் வழங்குவதற்காக 14.5 கி.மீ. வரை நிலத்தடிக் குழாய்கள் போடப்பட்டுள்ளன. தொடர்ந்து சில ஆண்டுகள் வான் பொய்த்ததன் காரணமாக நிலத்தடி நீர் குறையத் தொடங்கி, இதன் விளைவாக இவ்விணையத்தின்

தண்ணீர்த் தேவை முழுவதுமாகச் சமாளிக்க இயலவில்லை. நிலத்தடி நீர் குறையத் தொடங்கியுள்ளதாலும், ஓசூர் தொழில் வளாகத்தில் தொழிற்சாலைகள் விரிவாக்கம் செய்யப்படும்போது தேவைப் படும் அதிக அளவு நீரைக் கருத்தில் கொண்டு, இவ்விணையத்திற்கு அருகில் உள்ள கெலவரப்பள்ளி, நீர்த்தேக்கத் திலிருந்து தண்ணீர் கொண்டுவரத் திட்ட மிடப்பட்டு பணிகள் துரிதமாக நடை பெற்று வருகின்றன.

**கழிவு நீர் வெளியேற்றம்**

18 கி.மீ. அளவுக்கு நிலத்தடிக் கழிவு நீர்க் குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளன. தொழிற்சாலைகள் வெளியேற்றும் கழிவு நீர் இக்குழாய்களின் மூலம் கொண்டு சென்று இதற்கென அமைக்கப்பட்டுள்ள 11 ஆக்ஸிடேஷன் குளங்களில் சேர்க்கப் பட்டு அங்கிருந்து வெளியேற்றப்படுகிறது.

**மின்சாரம்**

இவ்வளாகத்தின் மின்சாரத் தேவைக்கு, சிப்காட் வளாகத்திலே சிப்காட் அளித் துள்ள 10 ஏக்கர் நிலத்தில் 110/33/11 கேவி. திறன்கொண்ட ஒரு துணை மின் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இது தவிர, சிப்காட் வளாகத்திற்கு வெளியே ஒவ்வொன்றும் 110/33/11 கே.வி.திறன் (10 எம்.வி.ஏ.) கொண்ட இரண்டு துணை மின் நிலையங்களும் உள்ளன. இவற்றிலிருந்தும் சிப்காட் வளாக தொழிற் சாலைகள் மின்சாரம் பெறுகின்றன.

**தீயணைப்பு நிலையம்**

347 ச.மீ. பரப்பளவில் சிப்காட் அமைத்துக் கொடுத்துள்ள கட்டடத்தில் ஓர் தீயணைப்பு ஊர்தியுடன் தீயணைப்பு நிலையம் செயல்பட்டு வருகிறது.

இது தவிர, சிப்காட் வளாகத்தில் ஒரு காவல் நிலையம், ஒரு முதல் உதவி நிலையம், ஒரு அஞ்சல் நிலையம் ஆகிய வையும் செயல்பட்டு வருகின்றன.

**தொலைபேசி நிலையம்**

சிப்காட் அளித்துள்ள 4.91 ஏக்கர் நிலத்தில் 400 இணைப்புகள் கொண்ட தான் இயங்கித் தொலைபேசி நிலையம் ஒன்று 1980 முதல் செயல்பட்டு வரு கிறது. பெருகிவரும் இத்தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்குடன் சிப்காட், இங்கு ஒரு நவீன தானியங்கி மின்னணுத் தொடர்பகம் (NEAX) நிறுவ ஏற்பாடு செய்து, இதற்காகத் தொலைபேசித் துறைக்கு ரூ.12 இலட்சம் முன் பணம் செலுத்தியிருக்கிறது. தவிரவும், 'டெலக்ஸ்' வசதிக்காக ரூ.2 இலட்சம் பணமும் அளிக்கப்பட்டுள்ளது. பல நவீன வசதி களுடன் 600 இணைப்புகள் கொண்ட இம்மின்னணுத் தொலைபேசி நிலையம் உடனே அமைக்கப்பட வேண்டிய அவசி யத்தைக் கருதி சிப்காட், தனது அலுவல கத்திலேயே ஓர் பகுதியை அளித்துள்ளது.

**தொழிலாளர் ஈட்டுறுதிக் கழக மருத்துவமனை**

சிப்காட், இம்மருத்துவமனைக்காக ஏழு ஏக்கர் நிலம் வழங்கியுள்ளது. தற்சமயம் அங்கு ஓர் புற நோயாளிகள் மருத்துவமனை அமைய ஏற்பாடுகள் நடைபெறுகிறது. 50 படுக்கைகள் கொண்ட உள்நோயாளிகள் மருத்துவ மனைக் கட்டடம் கட்டுமானப் பணி முடி வடையும் தறுவாயில் உள்ளது.

**வீட்டுவசதி**

சிப்காட் 30 ஏக்கர் நிலப்பரப்பில் 288 வீட்டுமனைகள் கொண்ட ஓர் வீட்டுவசதி வளாகம் அமைத்துள்ளது. இது தவிர 5 ஏக்கர் நிலத்தில் 10 உயர் வருவாய்ப் பிரிவு வீடுகள், 36 நடுத்தர வருவாய்ப் பிரிவு வீடுகள் அமைத்துள் ளது. பொருளாதாரத்தில் நலிந்துள்ள தொழிலாளர்களின் நலன் கருதி 288 அடுக்கு வீடுகளும் சிப்காட் கட்டியுள்ளது. இவையாவும் சம்பந்தப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டுவிட்டது.

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்துக்குச் சிப்காட் 25 ஏக்கர் நிலம் வழங்கியுள்ளது. இதில் வீட்டுவசதி வாரியம் 52 உயர்தர வருமானப் பரிவு வீடுகளும், 132 நடுத் தர வருமானப் பரிவு வீடுகளும் கட்டி யுள்ளது.

இதைத் தவிர, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் 6 இடங்களில் 1979 அடுக்கு வீடுகள் கட்டியுள்ளது. மேலும், சுமார் 1095 வீடுகள் கட்டும் திட்டமும் அவ் வாரியத்திடம் உள்ளது.

**பண்டக சாலை**

சிப்காட் அளித்துள்ள நிலத்தில் மத்தியப் பண்டக சாலைக் கழகம் 5000 டன் அளவுள்ள ஓர் பண்டக சாலை அமைத்துள்ளது. மாநிலப் பண்டக சாலைக் கழகமும் சிப்காட்டிடம் 5.85 ஏக்கர் நிலம் பெற்றுள்ளது. பண்டக சாலைக் கட்டடம் கட்டத் தொடக்க வேலைகள் நடைபெறுகின்றன.

**சிற்றுண்டிச் சாலை**

சிப்காட் ஓர் சிற்றுண்டிச் சாலை அமைத்து, அதைக் குத்தகை முறையில் தனியாருக்கு வழங்கியிருக்கிறது.

**வணிக வளாகம்**

இரண்டு அடுக்கு கொண்ட 24 கடைகள் உள்ள ஓர் வணிக வளாகம் இங்கு அமைத்துள்ளது. இவற்றில் சில விற்பனை செய்யப்பட்டுள்ளன. சில தவணை முறையிலும் மற்றவை மாத வாடகையிலும் அளிக்கப்பட்டுள்ளன.



பருகூரில் செயல்பட்டுவரும் கூட்டுறவு தொழில் பயிற்சி நிலையம்.



சிப்காட் தொழில் இணையத்திற்குக் கெலவரப்பள்ளி நீர்த் தேக்கத்திலிருந்து தண்ணீர் கொண்டு வரும் திட்டம்.

1977-ஆம் ஆண்டு சிப்காட் தொழில் வளாகத்திலிருந்து 10 கி.மீ. தொலைவில் பெண்ணையாறு ஆற்றின் குறுக்கே கெலவரப்பள்ளி என்ற இடத்தில் ஓர் அணை கட்ட அரசு ஆணையிட்டது. இத்திட்டத்தின் கீழ் அணையின் ஆயக் கட்டுப் பகுதியில் சுமார் 8000 ஏக்கர் நிலம் சாகுபடியின் கீழ் கொண்டு வரவும், ஓசூர் நகரத்திற்கும், சுற்றுப்புறக் கிராமங்களுக்கும் குடிநர் வசதி செய்ய வும், சிப்காட் தொழில் இணையங்களின் தண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்யவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் மதிப்பீடு 10 கோடி ரூபாய்.

இங்கிருந்து பெறப்பட உத்தேசிக்கப் பட்டுள்ள 6 எம்.ஜி.டி. தண்ணீரில் குடிநீர் உபயோகத்திற்காக 4 எம்.ஜி.டி. -யும், சிப்காட் தொழில் இணையங்களுக் காக 2 எம்.ஜி.டி.-யும் பெற வழி வகை செய்யப்பட்டுள்ளது. அணையைப் பொதுப்பணித்துறை கட்டி முடித்துள்ளது.

**ஓசூர் இரண்டாவது தொழில் இணையம்**

ஓசூர் - கிருஷ்ணகிரி சாலையில் ஓசூருக்கு 5 கி.மீ. தொலைவில் சிப்காட் தன் இரண்டாவது இணையத்தை அமைக்க 457 ஏக்கர் நிலம் கையகப் படுத்தியுள்ளது. இங்குள்ள தட்பவெட்ப நிலை மின்னணுத் தொழில்களுக்குச் சாதகமாக உள்ளதால், இதை ஓர் மின் னணு இணையமாக மேம்படுத்த அரசு ஆணையிட்டுள்ளது. இதன் மேம்பாட்டுச் செலவு ரூ.863 இலட்சம் ஆகும்.

இங்குக் கையகப்படுத்தப்பட்ட நிலத் தில் 10 ஏக்கர் நிலம் ஆண்டு ஒன்றுக்கு ஒரு ஏக்கருக்கு ரூ.100 வீதம் நீண்ட காலக் குத்தகை அடிப்படையில் ஒரு பள்ளிக்காக அளிக்கப்பட்டது. அதில் சுமார் 20 இலட்சம் செலவில் ஒரு பள்ளிக் கட்டடம் அமையப் பெற்றுள்ளது.

இந்த இரண்டாவது தொழில் இணை யத்தில் அசோக் லேலண்ட் நிறுவனத்தின் துணைப் பிரிவும், டைட்டான் ஜூவல்லரி என்ற ஒரு புதிய பிரிவும் வரவிருக் கின்றன.

**முதல் இணையத்தின் உடனடித் தேவைகள் பற்றிய கோரிக்கைகள்**

தற்சமயம் தொழிற்சாலைகள் ஆய் வாளர் (மேல் மட்டத்தில்) அலுவலகம் சேலத்திலும், தர்மபுரியிலும் இயங்கி வருகிறது. இங்குள்ள தொழிற்சாலைகள் தங்கள் பணிகளை நிறைவேற்ற அந்த இடங்களுக்குச் செல்ல வேண்டியுள்ள தால் காலமும் பணமும் வீணாகிறது. ஓசூரிலேயே இவ்வலுவலகம் செயல்பட ஏற்பாடு செய்ய வேண்டுமென்ற கோரிக் கையும், சேலம், தர்மபுரி ஆகிய இடங் களில் இருப்பதுபோல ஓசூரிலும் ஒரு தொழிலாளர் நல அலுவலகம் (Labour Welfare Office) அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையும் பரிசீலனையில் உள்ளன.

—மு. கிருஷ்ணன்
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
தருமபுரி.

# வள்ளல்கள் வாழ்ந்த பூமி

**சங்க காலத்தில் தகடூராக இருந்த இப்போதைய தருமபுரியிலேதான் - அதியன், காரி, ஓரி ஆகிய வள்ளல்கள் வாழ்ந்திருக்கிறார்கள்; அவர்கள் வாழ்வு எப்படி முடிந்தது தெரியுமோ? ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக்கொண்டு மாண்டுபோயிருக்கிறார்கள், வல்லமை பொருந்திய அந்த வள்ளல்கள்!**



பலவகை மன்னர்களின் ஆட்சிக்கும் உட்பட்டி ருந்தது தருமபுரி மாவட்டப் பகுதி; ஆகவே, பெரும்பாலான பகுதி மக்கள் பல மொழிகளிலும் பேசுவதைஅங்கேகாணலாம். ஓசூரில் ஒரு விந்தை- ஒரே வளாகத்திற்குள்ளேயே தமிழ், உருது, தெலுங்கு, கன்னடம், இந்தி ஆகிய மொழிகளுக் கெனத் தனித்தனிப் பாடசாலைகள் இயங்குவதை நாம் பார்க்கலாம்!

கூட்டுறவே நாட்டுயர்வு



சிறு குடும்பம் செல்வக் குடும்பம்

## தருமபுரி மாவட்டக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை
### பாலக்கோடு

### கரும்பில் அதிகம் மகசூல் பெற சிறந்த வழிமுறைகள்

1. உருவத்திற்கு ஏற்ற உடைகள் போல்
பருவத்திற்கு ஏற்ற ரகங்கள் பயிரிடுவீர்.
2. நாற்றங்கால் கரணைகளே நல்ல விளைச்சல் தரும்.
3. கரணைகளை அழுகல் நோயிலிருந்து காக்க முறையான விதை நேர்த்தி செய்வீர்.
4. பக்கவாட்டில் பருக்கள் நனைத்து நட்டால் பழுதற்று முளைக்கும்.
5. ஈரம் காக்க சோகை பரப்புவீர்; கோடையில் கிணற்றிலுள்ள நீர் அளவுக்குக் கரும்பு பயிரிடுவீர்.
6. தூக்கி மண் அணைத்தால் தாக்கும் காற்றிலும் - கரும்பு தள்ளாடாமல் தலை நிமிர்ந்து நிற்கும்.
7. சிக்கன உரத்துக்குச் சிறந்தது உயிர் உரம் 'கறுப்பு யூரியா'வே.
8. உர விரயம் தவிர்க்க வழி வகுக்கும் குழிமுறை உரம்.
9. அடியோடு வெட்டினால் அதிகம் மகசூல்_அதற்கு உண்டு கைக்கோடாரி.
10. மறுதாம்பில் கட்டை சீவுதல் தூருக்கு நன்றாம்; கங்கு அறுத்தல் வேருக்கு நான்றாம்.

எம்.பி. ஆபூர்வகுமார்
தனி அலுவலர்






# திருவள்ளுவர் திருநாள்

உலகப் பொது மறையாம் திருக்குறள் நெறிபரப்பும் பெருநோக்கில் தைத் திங்கள் இரண்டாம் நாளில், திருவள்ளுவர் திருநாளைத் தமிழ்நாடு அரசு சிறப்பாகக் கொண்டாடி வருகிறது.

தமிழக அரசு சார்பில் சென்னை கலைவாணர் அரங்கத்தில் 15.1.93 அன்று திருவள்ளுவர் திருநாள் கொண்டாடப்பட்டது. திருவள்ளுவர் திருநாள் விழா, புலவர் சொ. காளியப்பன் அவர்களின் திருக்குறள் எண் கவனக நிகழ்ச்சியோடு இனிதே தொடங்கியது. இதைத் தொடர்ந்து தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத் துறைச் செயலர் திரு. எஸ்.பி. இளங்கோவன் அவர்கள் வரவேற்றுப் பேசினார்.

மாண்புமிகு கல்வி அமைச்சர் டாக்டர் செ. அரங்கநாயகம் அவர்கள் தலைமை வகித்துப் பேசுகையில்,

''இந்தத் திருவள்ளுவர் திருநாளில் 1992-ஆம் ஆண்டிற்கான திரு.வி.க. விருது திரு. அ.மு. பரமசிவானந்தம் அவர்களுக்கும், பாவேந்தர் பாரதிதாசன் விருது திரு. இ. முத்துராமலிங்கம் அவர்களுக்கும், திருவள்ளுவர் விருது கல்லை தே.கண்ணன் அவர்களுக்கும் வழங்கப்படுகிறது. அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு நிதியுதவியும் வழங்கப்படுகிறது.

''தமிழக மக்களின் மறை நூலாகவும், உலக மக்கள் ஏற்றுக் கொள்ளும் வகையிலும் திருவள்ளுவர் திருக்குறளைப் படைத்துள்ளார். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு திருக்குறளை ஏன் படைத்தார் என்று நமக்குத் தெரியாது. சமுதாயத்தில் ஒழுக்கமும், பண்பாடும் சீர்குலையும் போது சமுதாய நலனில் அக்கறை கொண்டுள்ள பெரியவர்கள் ஒழுக்கத்தைச் சமுதாயத்தில் வலியுறுத்துவது வழக்கம். அந்த வகையில் அப்போது இருந்த சமுதாயத்திற்கு ஏற்புடைய வகையில் திருக்குறளை இயற்றியிருக்கலாம் என்று நினைக்கத் தோன்றுகிறது.

*திருவள்ளுவர் திருநாளன்று, திருவள்ளுவர் சிலைக்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மாலையணிவித்தனர் (15.1.93).*





Best
Compliments
From

**KRISHNAGIRI TEXTILE MARKET**

All kinds of
Textile Goods available

President:
P.A.S. CHINNARASAN


# மாமல்லபுரம் நாட்டிய விழா

தமிழகத்தில் நம் பண்பாட்டையும் பாரம்பரியத்தையும் எடுத்துக் காட்டுகின்ற வகையில், பல முக்கிய விழாக்கள் கொண்டாடப்பட்டு வருகின்றன.

வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளைக் கவருகின்ற வகையில், அரசு ஆண்டுதோறும் விழாக்களைக் கொண்டாடி வருகிறது.

மாமல்லபுரத்தில் நாட்டிய விழா, சிதம்பரத்தில் நாட்டியாஞ்சலி விழா, மதுரையில் சித்திரை விழா, ஊட்டியில் கோடை விழா, குன்னூரில் தேநீர் மற்றும் சுற்றுலா விழா ஆகியவை ஆண்டு விழாக்களாகக் கொண்டாட முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த வரிசையில், ஜனவரி, பிப்ரவரியில் நடத்தப்படும் நாட்டிய விழா, முதலில் வருகிறது.

முதன் முதலா...
மாமல்லபுரத்தில் 1991-ஆம் ஆண்டு கொண்டாடப்பட்டது. 1992-ஆம் ஆண்டு நாட்டிய விழா, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களால் தொடங்கிவைக்கப்பட்டு, ஒரு மாத காலம் நடைபெற்றது. இவ்விழாவை வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் அதிக அளவில் கண்டு களித்தனர்.

இந்த ஆண்டு இவ்விழா, மாமல்லபுரத்தில் 8.1.93 வெள்ளிக் கிழமை தொடங்கப்பட்டு 7.2.93 ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெற உள்ளது. இவ்விழாவின் முக்கிய அம்சங்களாக, பரத நாட்டியம், மோகினி ஆட்டம், குச்சுப்பிடி ஆகியவை இடம்பெறும். இக்கலை நிகழ்ச்சிகளை நிகழ்த்திக் காட்டுவதற்காகக் கலைஞர்கள் இந்தியா முழுவதிலிருந்தும் வந்திருக்கின்றனர்.

ஒது...
ரூ.3.13 இலட்சய...
இசைந்துள்ளது. இவ்விழாவிற்கு தென்மண்டலப் பண்பாட்டு மையம் ரூபாய் ஒரு இலட்சம் வழங்குகிறது. இவ்விழாவை தமிழக அரசு சுற்றுலாத் துறை, மத்திய அரசு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மற்றும் தென் மண்டலப் பண்பாட்டு மையத்துடன் சேர்ந்து கூட்டாக நடத்துகின்றது.

### தொடக்க விழா

'மாமல்லபுரம் நாட்டிய விழா - 1993', 8.1.93 வெள்ளிக்கிழமையன்று மாமல்லபுரத்தில் அர்ச்சுணன் தவம் என்ற இடத்தில், மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் திரு. டி.எம். செல்வகணபதி அவர்களால் தொடங்கிவைக்கப்பட்டது.





# வள்ளுவருக்கு வாழ்த்து மாலை!

வள்ளுவப் பெருந்தகையை அவனே அறிஞன், அவனே புலவன், அவனே தமிழை அறிந்தோன் என்று தமிழ்ப் பெருமக்கள் இரண்டாயிரம் ஆண்டுகளாக ஏற்றிப்போற்றி வருகின்றனர். ஈடு இணையற்ற பேராசான் வள்ளுவப் பெருந்தகையை நினைக்கும்பொழுது ஆங்கில நல்லிசைப் புலவனான பென் ஜான்ஸன், ஷேக்ஸ்பியரைப் பற்றிக் கூறிய ஒரு கருத்து என் நினைவிற்கு வருகிறது — "அவன் ஒரு யுகத்திற்கு மட்டுமல்ல, அவன் எல்லா யுகத்திற்கு எல்லாக் காலத்திற்கும் உரியவன்"

—ப.ஜீவானந்தம்

நமது சரித்திரத்திற்கும், நாகரிகத்திற்கும் பல இலக்கியங்களிலிருந்தும் பல காவியங்களிலிருந்தும் ஆதாரங்கள் எடுத்துக்காட்ட முடியும். ஆயினும், அவை பெரும்பாலும் பண்டிதர்களுக்குத்தான் புரியுமாகையால், பயன்படுமாகையால் திருக்குறள் ஒன்றுதான் பாமர மக்களும் புரிந்து கொள்ளும் வகையில், எப்படிப்பட்ட அறிவாளியும் ஏற்கும் தன்மைக்கு ஏற்ற ஆதாரமாய் அமைந்திருக்கிறது.

—தந்தை பெரியார்

கடைச்சங்கத்தார் நூற்றிரட்டுக்களில் திருக்குறளும் ஒன்றென்பது தமிழர் யாவருக்கும் ஒப்ப முடிவதாகும். அத்திரட்டு நூல்களுள்ளும் வள்ளுவர் நூல் தலை சிறந்ததென்பதற்கு இடை நெடுங் காலம் பிற பல நூலும் வழக்கிழந்தொழியவும் என்றும் பிரபல நூலாகக் குறள் நின்று நிலவியதே போதிய சான்றாம்.

—நாவலர் ச. சோமசுந்தர பாரதியார்

ஏனைய நூல்களை வாசிக்குங்கால் வரும் ஐயங்களை அகற்றும் ஆசிரியத் தன்மையது. பல மொழிகளில் பெயர்க்கப்பட்டிருப்பது வேற்றுமொழி வல்லார் காணாத விளக்கத்தக்கது குறள்.

—திருப்பாதிரிப்புலியூர் ஞானியாரடிகள்

குறள் நெறியுடன் வாழ்ந்த தமிழரை, சமுதாயத்தின் நச்சுப்பூச்சிகள் என்று கூறியவர் எவர்? ஏன் தமிழர் சமுதாயம் சீர்கெட்டது? இன்று மீண்டும் குறள் நெறிப்படி சாதி, சமயமற்ற சமுதாயத்தை நிறுவிட முன்வர வேண்டும் என்று நான் புலவர்களையும் மற்றோரையும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

—பேரறிஞர் அண்ணா

**திருக்குறள் உலக நூல்களில் உயர்ந்த நூல்; தமிழர்களுக்குத் தெவிட்டாத அறிவு விருந்து. எத்தனையோ நூற்றாண்டுகள் கழிந்த பிறகும் எவ்வளவோ அரசியல், சமய, சமுதாய மாறுதல்கள் ஏற்பட்டு மாறிய பிறகும், திருவள்ளுவரின் நூல் இன்று நம்முடன் வாழ்ந்து நமக்காக அறிவுரை கூறும் சான்றோர் ஒருவரின் தெளிந்த வாய்மொழி போல் விளங்குகிறது.**

—டாக்டர் மு. வரதராசனார்

திருக்குறள் தமிழ் மொழியில் பிறந்த ஒரு பெரும் பொதுமறை, உலகைக் கூறுபடுத்தும் பொருள்கள் அதன்கண் இல்லை. உலகை ஒருமைப்படுத்தும் செவ்விய பொருள்கள் அதன்கண் மிளிர்கின்றன. இப்பெரிய பொதுமறையை மன்பதை பயின்று ஒருமை இன்பத்தை நுகர்வதாக.

—தமிழ்த்தென்றல் திரு.வி.க.

"எந்த ஒரு சமுதாயத்திலும் ஒழுக்கம் முக்கியமாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் சமுதாயம் அழிந்துவிடும். தமிழ்ச் சமுதாயம் அழியாமல் காக்கப்பட வள்ளுவர் குறளைப் படைத்திருக்கிறார்.

"கிராமப்புற மக்கள் வாரந்தோறும் திருக்குறள் கருத்துக்களைக் கேட்டுப் படிக்கும்படி ஆசிரியர்கள் உதவ வேண்டும். திருக்குறளைப் படிப்பதால் நல்லொழுக்கம், தன்னம்பிக்கை, மன உறுதி ஆகியவை ஏற்படும்" என்றார்.

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் பேசுகையில்,

"திருவள்ளுவர் மனித வர்க்கத்திற்கே சொந்தமானவர். திருவள்ளுவர் மனித சமுதாயத்தைப் பற்றித்தான் தம் குறள்களில் எழுதியிருக்கிறார். அவர் எழுதிய 1330 குறட்பாக்களில் எந்த ஒரு குறளும் பயனற்றுப் போனதாகத் தெரியவில்லை என்றார்."

இதனைத் தொடர்ந்து, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் திரு.வி.க. விருது மற்றும் ரூ.10,000-த்தை பேராசிரியர் திரு. அ.மு. பரமசிவானந்தம் அவர்களுக்கும், பாவேந்தர் பாரதிதாசன் விருது மற்றும் ரூ.10,000-த்தை திரு. இ. முத்துராமலிங்கம் அவர்களுக்கும், திருவள்ளுவர் விருது மற்றும் ரூ.20,000-த்தை திரு. கல்லை தே. கண்ணன் அவர்களுக்கும் வழங்கினார்.

பிறகு, 42 சிறந்த நூல்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. சிறந்த பதிப்பகங்களுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

1992-ஆம் ஆண்டில் நிதியுதவி பெறும் 16 அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு ரூ.400-க்கான காசோலை வழங்கப்பட்டது.

முடிவில், தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத்துறை இயக்குநர் திரு. பண்ணீர் செல்வம் அவர்கள் நன்றி கூறினார்.

திருக்குறள் முனிசாமி, தஞ்சைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் ஔவை நடராசன் ஆகியோரும் விழாவில் கலந்துகொண்டு பேசினர்.

-நிகழ்ச்சித் தொகுப்பு: கரு. சண்முகசுந்தரம்.



## தியாகி சுப்பாராவ்



விடுதலைப் போராட்ட வீரர் சுப்பிரமணிய சிவாவுக்குச் சொந்த ஊர், மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த வத்தலக்குண்டுதான்; ஆனால் அந்தத் தியாகசீலர் வளர்ந்ததும், வாழ்ந்ததும், மடிந்ததும் தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த பாப்பாரப்பட்டி என்கிற ஊரில்தான்.

'இந்தியா - உறுதியாகச் சுதந்திரம் பெறும். இந்த மண்ணில் அதன் அறிகுறியாக நான் பாரத தேவிக்குக் கோயில் கட்டுவேன்' என்று மூச்சுக்கு மூச்சு சொல்லிக்கொண்டிருந்தவர் சிவா; இப்போது - அந்த ஊரில் அவருடைய நினைவாகக் கல்லாலான நினைவுக் கம்பம் ஒன்று நாட்டப்பட்டிருக்கிறது. சுற்றிலும் பூந்தோட்டம்; ஒரு காவலாளி.

எப்போதும் மாட்டுவண்டிப் பயணத்தில்சுகங்காணும் சிவாவுக்குப் பாப்பாரப்பட்டியில் தங்க நிழல்கொடுத்து ஆதரித்த பெருமை தியாகி சின்னமுத்து முதலியாரைச் சேரும்.

பாப்பாரப்பட்டியில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளிக்குச் சிவாவின் பெயரிடப்பட்டுள்ளது; அதன்முன் அவரது திருவுருவச் சிலையொன்றும் அமைக்கப்பட்டிருக்கிறது.

அந்தப் பள்ளி உருவாக முழு முதல் காரணமாக இருந்தவரான தியாகி சுப்பாராவ் தனது முதுமையையும் பாராமல் - திருமணமும் செய்துகொள்ளாமல் அப்பள்ளியை நல்லபடி நிர்வகித்து வருகிறார். 'சிவா ஆசிரமம்' அவர் கவனிப்பில் உள்ளது.

அந்தப் பள்ளி மாணவர்கள் மட்டுமல்ல; அவ்வூர் மக்களும்கூட அவருடைய அமைதியான நடவடிக்கைகளுக்கு மதிப்பளித்து அடங்கி நடந்து வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## தருமபுரி அருங்காட்சியகம்



தருமபுரி அருங்காட்சியகம் பண்டைக் கால வரலாற்று நூற்கள் பலவற்றைப் படித்த உணர்வை நமக்கு உண்டாக்குவதாக உள்ளது.

நடுகற்கள், முதுமக்கள் தாழிகள், ஈமப்பேழை, பெருங்கற்கால மக்கள் பயன்படுத்திய கருப்பு நிற-சிவப்பு நிற மண்பாண்டங்கள், செப்புத் திருமேனிகள் கற்காலக் கருவிகள், புதிய கற்காலக் கருவிகள், ஆங்கில ஆட்சிக் காலத் துப்பாக்கிகள் போன்ற ஏராளமான பொருட்கள் இங்கே பக்குவமாகச் சேகரித்து வைத்துப் பாதுகாக்கப்படுகின்றன.

'அல்லி அரசாணி மாலை' போன்ற ஓலைச் சுவடிகளும், காரிமங்கலம் கோயிலிலிருந்து கொண்டுவரப்பட்ட 200 ஆண்டுக் காலத்திற்கு முந்திய பழமையான இராவணன் வாகனமும் கூட இங்குள்ளன.

இதுவரை தொல்பொருள் ஆய்வுத்துறை மூலம் தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளியிடப்பட்ட 130 அரிய புத்தகங்களும், 'காலாண்டுக் கல்வெட்டு இதழும்' இங்கே விற்கப்படுகின்றன.

'மக்கள் ஆர்வத்தோடு இங்கெல்லாம் வந்து பார்க்கிறார்களா?" என்று அருங்காட்சியகத்தின் பொறுப்பாளரிடம் நாம் கேட்டபோது, சிரிப்புடன் வெளிப்பட்ட பதில் - "இந்த வகையில் ஆர்வமுள்ளவர்கள் மட்டும்தான் வந்துபோகிறார்கள்; ஒருவேளை இதற்கு நுழைவுக் கட்டணம் என்று போட்டால், பொதுமக்களுக்கு உள்ளே வந்து பார்க்கும் ஆவல் ஏற்படுமோ என்னவோ!"

## சிவா நினைவாக...



*Best*
*Compliments*
*From*

## J.P. PETROL BUNK

Bye-Pass Road, Krishnagiri.



Prop:
**JAYAPRAKASH**

*Best*
*Compliments*
*From*

## *READY MONEY SHOPPY*

*Cornation Ground,*
*Krishnagiri.*

***T.V., RADIO, WASHING MACHINE AND ALL OTHER HOME NEED THINGS AVAILABLE.***







***இந்த ஆண்டில், 35 டன் சர்க்கரை உற்பத்தி செய்து சாதனை படைக்கவிருக்கிறது தருமபுரி மாவட்டத்தில் உள்ள பாலக்கோடு சர்க்கரை ஆலை; அந்த ஆலையின் படப்பிடிப்பே இந்தக் கட்டுரை:***

**தருமபுரி மாவட்டம்:**

# கூட்டுறவு சர்க்கரை ஆலை

**எம்.பி. அபூர்வகுமார்**
**தனி அலுவலர்**

தருமபுரி மாவட்டத்தில் உள்ள வட்டங்களில் பாலக்கோடு வட்டத்தில் கரும்பு உற்பத்தி அதிக அளவில் இருந்து வந்தது. கரும்பு சாகுபடியாளர்களில் பலர் தங்கள் அருகில் உள்ள வெல்ல உற்பத்தியாளர்களுக்கே சரியான விலை இல்லாமல் தங்கள் கரும்பைக் கொடுக்க வேண்டியிருந்தது. சிலர் பல இடையூறுகளுக்கிடையில் அதிகப் போக்குவரத்துச் செலவு செய்து சுமார்150 கி.மீ. தொலைவிலுள்ள சேலம் சர்க்கரை ஆலைக்கோ அல்லது 110 கி.மீ. தொலைவிலுள்ள ஆம்பூர் சர்க்கரை ஆலைக்கோ தங்கள் கரும்பினை எடுத்துச் சென்று விற்று வந்தனர்.

இந்த நிலையில், கரும்பு சாகுபடியாளர்கள் தங்கள் கரும்பு விளைச்சலுக்குச் சரியான விலையைப் பெறவும், கிராமப் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடனும் திருவாளர்கள், எ. விமலன் மற்றும் டி. கிருஷ்ணமூர்த்தி கவுண்டர், பி.எம்.குப்புசாமி, பி.எம்.முனுசாமி கவுண்டர், கே.எஸ். சுப்பிரமணிய கவுண்டர் இவர்களை அமைப்பாளர்களாகக் கொண்டு இம்மாவட்டத்தில் ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைக்க முயற்சி எடுக்கப்பட்டது.

தருமபுரி மாவட்டம் துவங்கிய சில மாதங்களிலேயே அதாவது 1966-ஆம் ஆண்டு கூட்டுறவுத் துறையில் ஒரு சர்க்கரை ஆலையினை இம்மாவட்டத்தில் திம்மன அள்ளியில் நிறுவ மத்திய அரசு அனுமதியளித்தது. அதற்கு வேண்டிய துவக்கப் பங்கு முதலீட்டிற்காக 10 இலட்சம் ரூபாய் பங்குகளாக வசூல் செய்து கொடுக்க அப்பொழுது கூட்டுறவுச் சங்கங்களின் துணைப் பதிவாளராகத் தருமபுரியில் பணி புரிந்த திரு. இ. வெங்கடாசலம், தருமபுரி மாவட்ட ஆட்சியாளராக இருந்த திரு. ஜி. திருமால் ஆகியோர் பெருமளவில் உதவினார்கள்.

இவ்வாலைக்கான இடத்தை சேலம்-பெங்களூர் நெடுஞ்சாலையில் தருமபுரி மாவட்டத்தின் மையமாக உள்ள பொருத்தமான சீதோஷ்ண நிலையுள்ள மற்றும் போக்குவரத்து, தொலைத் தொடர்பு வசதிகள் உள்ள பாலக்கோடு அருகே 2 கி.மீ. தொலைவில் இருக்கும் திம்மனஹள்ளி கிராமத்தில் சுமார் 170 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டது; அங்கே ஆலை கட்டி முடிக்கப்பட்டு 1972-இல் இருந்து இயங்கி வருகின்றது.

தருமபுரி மாவட்டத்தில் இந்தக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைதான் முதல் பெரிய ஆலையாகும். இதற்கான மூலதனத்தைப் பங்குத் தொகையாக அங்கத்தினர்களிடமிருந்தும், கரும்புச் சாகுபடியாளர்களிடமிருந்தும், தமிழக அரசிடமிருந்தும் மற்றும் பிற கூட்டுறவு நிறுவனங்களிடமிருந்தும் 66 இலட்சங்கள் துவக்கத்தில் பெறப்பட்டது. இன்று பங்குகள் பெருகி 195 இலட்சங்களாகியுள்ளது.

துவக்கத்தில் இவ்வாலை ஒரு நாளைக்கு 1,250 டன் கரும்பு அரைவைத் திறன் கொண்டதாக ஆரம்பிக்கப்பட்டது. கரும்பு உற்பத்தியில் மக்கள் நல்ல வருமானம் பெற்றதனால் மேலும் அக்கறை கொண்டு கரும்பு விளைச்சல் அதிகமாகி கரும்பு விளைவிக்கும் அளவைக் கூடுதலாக்கி இவ்வாலை தன்னிறைவு பெற்று எஞ்சிய கரும்பைப் பிற ஆலைகளுக்கும் கொடுத்து வந்தது. இந்நிலையில் ஆலை மற்றும் விவசாயிகளின் நலன் கருதி 1987-ஆம் ஆண்டு ஆலை அரைவைத் திறன் 2,000 டன்களாக விரிவாக்கம் செய்யப்பட்டது. இச்சமயத்தில் அரசு இன்னொரு கூட்டுறவுச் சர்க்கரை ஆலையை அரூரில் ஏற்படுத்திக் கொள்ளவும் அனுமதி அளித்தது. கடந்த சில ஆண்டுகளாக நமது மாவட்டத்தில் கடும் வறட்சி நிலவியதால் கரும்பின் உற்பத்தி பாதிக்கப்பட்டு கடந்த 3 ஆண்டுகளாக மற்ற ஆலைகளிடமிருந்து உபரி கரும்பை எடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. சென்ற ஆண்டு முதல் அரூரில் அமைக்கப்பட்டுள்ள கூட்டுறவுச் சர்க்கரை ஆலையும் இயங்கி வருவதால், இந்த ஆண்டும் வெளி ஆலைகளிடமிருந்து கரும்பு எடுக்க வேண்டியுள்ளது. மேலும் அரூரில் அமைந்துள்ள சர்க்கரை ஆலைக்கு நமது ஆலைப் பகுதிகளில் சரிபாதி கொடுத்துள்ளதால் சுமார் 50 சதவிகித பரப்பு இழப்பு ஏற்பட்டுள்ளது. இழப்பை ஈடு செய்யும் வகையில் கிருஷ்ணகிரி, பென்னாகரம் ஆகிய பகுதிகளில் புதிய



**★ தம்மிடையே ஆயிரக்கணக்கில் குடிகாரர்கள் இருப்பதைவிட, இந்நாடு ஓட்டாண்டியாய் இருப்பதே எனக்குச் சம்மதம்.**



பண்ணைப் பயிற்சி அளிக்கப் படுகிறது. பால்பண்ணை, கோழிப் பண்ணை, செம்மறி ஆடு பராமரிப்பு போன்ற துறைகளில் செயல் முறைப் பயிற்சி பெற விரும்புபவர்களுக்கு உதவி புரியும் வகையில் இலவச ஊக்குவிப்புத் தொகை ரூ.8 உடன் 10 நாட்களுக்கு இலவசத் தங்குமிட வசதியுடன், பயிற்சி அளிக்கப்பட்டுச் சான்றிதழ் வழங்கப் படுகிறது. இப்பயிற்சிக்கு எழுதப் படிக்கத் தெரிந்த இளைஞர்கள் சேர்க்கப்பட்டு, சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் வங்கிகள் மூலம் கடனுதவி பெற்று தொழில் தொடங்க ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

இந்தக் கால்நடைப் பண்ணையைச் சுற்றிப் பார்க்க நம்மை அழைத்துச் சென்றார் பண்ணையின் துணை இயக்குநர் டாக்டர் கே. ரங்கா ராவ். ஓசூர் கால்நடைப் பண்ணையில் தற்சமயம் இந்த, ஜெர்சி, பிரீசியன் வகையைச் சேர்ந்த 903 கால்நடைகளும் (கலப்பின மாடுகளும்), மாண்டியா இனத்தைச் சேர்ந்த 1200 ஆடுகளும், 130 யார்க்ஷயர் இனப் பன்றிகளும் வளர்க்கப்படுகின்றன. இவற்றைத் தவிர 'பேப்காக்' (Bepeock) இனத்தைச் சேர்ந்த 2000 கோழிகளும் இந்தப் பண்ணையில் உள்ளன. ஜெர்சி, பிரீசியன் போன்ற அயல் இனக் காளைகளை இறக்குமதி செய்து, அதன்மூலம் கலப்பினக் காளைகள் உற்பத்தி செய்யும் பணி கடந்த 25 ஆண்டுகளாக நடைபெற்று வருகின்றன.

**அயல் இனக் காளைகள்**

ஜெர்சி இனக் காளைகள் ஜெர்மனி, டென்மார்க் நாடுகளிலும், பிரீசியன் இனக் காளைகள் மேற்கு ஜெர்மனியிலிருந்தும் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. இந்த அயல் இனக்காளை ஒன்றின் விலை சுமார் ரூபாய் ஒரு இலட்சம் எனவும், அந்த நாடுகள் அளித்த மானியத்தின் மூலம் ஒரு காளை ரூபாய் 40 ஆயிரத்துக்கு வாங்கப் பட்டதாகவும் துணை இயக்குநர் தெரிவித்தார். இந்த வகையில் ரூ.50 இலட்சம் செலவில் 140 அயல் இனக்காளைகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. இவற்றில் 50 காளைகள் உதவி மண்டலத்துக்கும், 50 காளைகள் ஈச்சங்கோட்டைக்கும் அனுப்பபப்பட்டுள்ளன. இந்தக் காளைகளைப் பார்த்ததும் நாங்களே பிரமித்துப் போய்விட்டோம். அவ்வளவு பெரிய உருவம். பிரீசியன் இன காளை ஒன்றின் சராசரி எடை 900 கிலோ கிராமாம். இதன் நீளம் 10 அடிக்கு மேல். உயரமோ 6 அடி. இந்த வகைக் காளையின் தாய் ஒரு நாளுக்கு 32 முதல் 35 லிட்டர் பால் கறக்குமாம்.



ஜெர்சி இனக் காளைகளின் சராசரி எடை 550 கிலோகிராம். இந்த வகைக் காளைகளின் தாய்ப் பால் அளவு ஒரு நாளுக்கு 20 லிட்டர். ஜெர்சி இனக் காளைகளின் விந்து உள்ளூர் சிந்தி இனப் பசுக்களுக்குச் செலுத்தப்பட்டு உயர்ரகக் கலப்பின மாடுகள் பெறப்பட்டுள்ளன. இங்கு தற்சமயம் வளர்க்கப் படும் அயல் இனக் காளைகளின் வயது சராசரி மூன்றரை ஆண்டுகள்.

இந்த அயல் இனக் காளைகளின் விந்து உற்பத்தி மூலம் கடந்த இரண்டு ஆண்டுகளில் ரூபாய் 30 இலட்சம் சம்பாதித்திருப்பதாக டாக்டர் ரங்காராவ் கூறினார். ஒரு காளை ஓராண்டில் விந்து மூலம் ரூபாய் ஒரு இலட்சத்திற்கு மேல் சம்பாதித்துக் கொடுத்திருப்பதாகத் தெரிவித்தார். இந்தக் காளைகள் 5 முதல் 7 ஆண்டுகள் வரை உயிரோடு. இருக்குமாம்.

**குதிரை இனவிருத்தி**

எந்த நோக்கத்திற்காக இந்தப் பண்ணை முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்டதோ, அதன் நினைவாக இன்றும் குதிரைகள் இங்கு வளர்க்கப்பட்டு வருகின்றன. தற்சமயம் கத்தியவாடி இனத்தைச் சேர்ந்த 9 குதிரைகள் இனவிருத்திக்காக இந்தப் பண்ணையில் வளர்க்கப்படுகின்றன. தமிழ்நாட்டில் ஓசூர் பண்ணையில்தான் குதிரை இனவிருத்தி செய்யப்படுவதாகப் பண்ணையின் துணை இயக்குநர் தெரிவித்தார். குதிரைக் கொட்டகையை சுற்றி வந்த போது 24 வயது முதிர்ந்த கண்ணகி என்ற குதிரையைப் பார்க்க நேர்ந்தது. இந்தக் குதிரை 13 குட்டிகள் போட்டுச் சாதனை படைத்திருக்கிறது.

**பதப்படுத்திய பசுந்தீவனப் பயிர்**

ஓசூர் பண்ணையின் மொத்தப் பரப்பில் சுமார் பாதிபாகம் (750 ஏக்கர்) மேய்ச்சல் நிலமாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்தப் பகுதியில் காலநடைகளுக்காகப் பலவகையான புற்கள் பயிரிடப்படுகின்றன. கால்நடைகளுக்குத் தேவையான தீவனங்கள் இந்தப் பகுதியிலிருந்தே பெறப்படுகின்றன. எதிர்பாராத வறட்சி ஏற்பட்டு புல் கிடைக்காத காலங்களில் 'பதப் படுத்திய பசுந்தீவனப் பயிர்' கால்நடைகளுக்குக் கொடுக்கப்படுகின்றன. இதற்காகப் பசுந்தழைகள் வெட்டப்பட்டு குழிகளில் போடப்பட்டு சுமார் 2,3 ஆண்டுகள் காப்பாற்றி வைக்கப்படுகின்றன.

இந்தப் பண்ணையில் தற்சமயம் 150 கறவை மாடுகள் உள்ளன. இவைகள் தினசரி 1200 லிட்டர் பால் தருவதாக இதன் பொறுப்பாளர் தெரிவித்தார். சில உயர் ரக இனத்தைச் சேர்ந்த பசுக்கள் நாளொன்றுக்குச் சுமார் 20 லிட்டர் பால் தருவதாகவும் கூறினார். இயந்திரங்களைப் பயன்படுத்தி கறவை மாடுகளிலிருந்து இங்கு பால் கறக்கப் படுகிறது. இதற்கென உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட 2 நவீன பால் கறக்கும் இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. ஒரு இயந்திரத்தின் மூலம் ஒரே நேரத்தில் 6 பசுக்களிடமிருந்து பாலைக் கறக்க முடியும். இங்குக் கிடைக்கும் பாலில் 50 சதவிகிதம் கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர் இணையத்தின் மூலம் பிற இடங்களுக்கு விநியோகம் செய்யப் படுகிறது.



**உறைவிந்து உற்பத்தி நிலையம்**

(Frozen Şemen Bank) தருமபுரி மாவட்டம் அடிப்படையிலேயே ஒரு பின் தங்கிய மாவட்டமாகும். பருவ மழை சரியான காலங்களில் பெய்யாததன் காரணமாக இங்கு வாழும் மக்கள் ஆண்டு முழுவதும் விவசாயத்தையே நம்பி வாழ முடிவதில்லை. எனவே, மாற்று ஏற்பாடாக இவர்கள் கால்நடை வளர்ப்பில் ஈடுபட் வேண்டிய ஒரு கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

பாலின் தரம் மற்றும் உற்பத்தியைப் பெருக்க உள்ளூர் பசுமாடுகளின் தரத்தை உயர்த்த வேண்டிய அவசியத்தைக் கருத்தில் கொண்டு ஒரு உறைவிந்து உற்பத்தி நிலையம் அமைக்கத் திட்டமிடப்பட்டது. ஓசூர் கால்நடைப் பண்ணையிலேயே இதற்கான அனைத்து அடிப்படை வசதிகளும் இருந்ததால் வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டத்தின் கீழ் ரூ.12.40 இலட்சம் நிதியுதவி பெற்று 1987-88-இல் ஒரு உறைவிந்து உற்பத்தி நிலையம் இங்கு அமைக்கப்பட்டது. இந்தப் பண்ணையிலுள்ள 28 அயல் இன உயர் ரகக் காளைகளிடமிருந்து, வாரத்துக்கு இருமுறை விந்து சேகரிக்கப்பட்டு, ஒரு இலட்சம் குச்சிகளில் (Straws) அடைக்கப்பட்டு திரவ நைட்டிரஜன் பாத்திரத்தில் இந்த நிலையத்தில் பாதுகாத்து வைக்கப்படுகிறது. இவ்வாறு பாதுகாக்கப்பட்ட உறை விந்துக் குச்சிகளை எத்தனை ஆண்டுகள் வேண்டுமானாலும் வைத்து தேவைப்படும் போது பயன் படுத்திக் கொள்ளலாம் என்கிறார் டாக்டர் ரங்கா ராவ்.



**உலகிலேயே ஆசியாவில்தான் சந்தன மரம் அதிக அளவில் இருப்பதாகக் கருதப்படுகிறது. ஆசியாவிலேயே பெரியதும் வயதானதுமான சந்தன மரம் ஓசூர் கால்நடைப் பண்ணையில் இருப்பது தருமபுரி மாவட்டத்துக்கே ஒரு தனிச் சிறப்பாகும்.**

இங்கிருந்து தருமபுரி, திருவண்ணாமலை-சம்புவராயர், வட ஆர்க்காடு-அம்பேத்கர், செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். ஆகிய 4 மாவட்டங்களுக்கு அனைத்து ரக உறை விந்துக் குச்சிகளும், பெரியார் மற்றும் கோவை மாவட்டங்களுக்குக் காங்கேய இனக் காளைகளின் உறைவிந்துக் குச்சிகளும் வினியோகிக்கப்படுகின்றன. 1991-92-ஆம் ஆண்டில் 4,28,205 உறைவிந்துக் குச்சிகள் தயாரிக்கப்பட்டுப் பாதுகாக்கப்பட்டுள்ளது. இதே ஆண்டில் 5,23,898 உறைவிந்துக் குச்சிகள் இந்த மையத்திலிருந்து மற்ற இடங்களுக்கு வினியோகிக்கப்பட்டிருப்பதாக இந்த நிலையத்தின் கால்நடை மருத்துவர் நம்மிடம் தெரிவித்தார்.

இந்த உறைவிந்து உற்பத்தி நிலையம் ஆரம்பிக்கப்பட்டதன் விளைவாக ஆண்டுதோறும் தடங்கலின்றி ஒரே சீராக உறைவிந்துக் குச்சிகள் வினியோகிக்க முடிவதாகவும், பல்வேறு இனக் காளைகளின் உறைவிந்துக் குச்சிகள் தேவையான நபர்களுக்குக் குறைந்த கட்டணத்தில் வினியோகம் செய்யப்படுவதாகவும் கூறினார் பண்ணையின் துணை இயக்குநர் டாக்டர் ரங்கா ராவ்.

- ஜே. சந்திரன்

# The Tamil Nadu State Apex Co-Operative Bank Ltd.,

TNSC BANK

233, N.S.C. Bose Road, Madras-600 001.

**Rate of Interest on Deposits (Effective from 9.10.1992)**

| Sl.No. | Type of Deposit | Rate of Interest per annum |
|---|---|---|
| 1. | Savings Bank Accounts | 6.25% w.e.f. 24.4.92 |
| 2. | Fixed Deposits : | |
| | For 46 DAYS and above but upto 270 days | 12.25% |
| | For 271 DAYS and above but upto 364 days | 12.00% |
| | For 1 YEAR and above | 12.25% |

**Interest on Fixed Deposit for 1 year and above will be paid Quarterly**

- NRO & NRE Accounts Facilities are available in 6 designated Branches.
- Interest rates are subject to RBI directives from time to time.

THE BANK AT YOUR SERVICE




# தருமபுரி மாவட்ட வளர்ச்சிக் கழகம்

வறட்சியால் பாதிக்கப்பட்டு மிகவும் பின்தங்கிய மாவட்டமாகிய தருமபுரி மாவட்டம் பல துறைகளிலும் முன்னேற்ற மடைய வேண்டும் என்பதை நோக்க மாகக் கொண்டு இந்தியக் கம்பெனிகள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டு 7.11.1975 முதல் இயங்கி வருகிறது தருமபுரி மாவட்ட வளர்ச்சிக் கழகம்.

இக்கழகம் ஆரம்பிக்கப்பட்டபோது, அரசாங்கம் ரூ.15 இலட்சத்தைக் இக் கழகத்தின் மூலதனமாக முதலீடு செய் தது. சேலம் மாவட்டத்திலிருந்து இம் மாவட்டம் பிரிக்கப்பட்டபோது அதற் குரிய இரயில்வே செஸ் நிதியின் பங்கு ரூ.15.59 இலட்சம் இக்கழகத்திடம் ஒப் படைக்கப்பட்டது. முன்னாள் மாவட்ட நலக்குழுவின் சொத்தாகிய தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரியில் உள்ள அண்ணா-காந்தி மணி மண்டபக் கட்ட டங்கள் இரண்டும் இக்கழகத்திடம் ஒப் படைக்கப்பட்டுள்ளன. இவற்றின் அப் போதைய மதிப்பு ரூ.7 இலட்சம் ஆகும்.

இச்சிறு அளவிலான மூலதனத்தைக் கொண்டு, இக்கழகம் இம்மாவட்டத்தில் பல துறை வளர்ச்சிக்கான பெரும் பங்கு ஆற்றியுள்ளது. படிப்படியாக இம் மாவட்ட வளர்ச்சிக் கழகம் சுமார் ரூ.122 இலட்சம் மதிப்புள்ள சொத்துக்களையும் தனக்கென உருவாக்கிக் கொண்டுள்ளது.

மாவட்ட வளர்ச்சிக்கான பல்வேறு வகைப் பணிகளைத் திட்டமிடுதல் அவற்றை அரசுத் துறைகளின் வழியாகவும், நேரடி யாகவும் செயல்படுத்துதல்.

நகராட்சிகளிலும், பேரூராட்சிகளிலும் வருவாய் தரத்தக்க அங்காடித் தொகுதிகள் முதலியவற்றைக் கட்டுதல்.

மைய மாநில அரசுகளின் சிறப்புத் திட்டங்களான வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டம், பட்டு வளர்ச்சித் திட்டம், தோட்டக்கலை வளர்ச்சித் திட்டம், அறிவியல் பயிற்சி அடிப்படையில் வேலைவாய்ப்புத் திட்டம் முதலியவற்றை முகமை அடிப்படையில் இம்மாவட்டத் தில் செயலாற்றுதல்.

- ஆகிய குறிக்கோளுடன் இக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது.

இம்மாவட்ட வளர்ச்சிக் கழகத்தின் பெருந்தலைவர் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆவார். மேலும் திட்ட அலுவலர், ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர் உட்பட 12 உயர் அலுவலர்கள் அடங்கிய நிர்வாக இயக்குநர் குழுக் கூட்டம், இக்கழகத்தின் பணிகளை நெறிப்படுத்துகிறது.

இதுவரை இக்கழகம் - கிருஷ்ணகிரி அங்காடித் தொகுதி, தருமபுரி அங்காடித் தொகுதி, கிருஷ்ணகிரி அண்ணா-காந்தி மணிமண்டபம், தருமபுரி அலுவலகக் கட்டடம், 7 வங்கிக் கட்டடங்கள், ஒகேனேக்கல்லில் பல்வகைக் கட்டடங்கள், தளியில் சமுதாய மையம், இராயக் கோட்டை அங்காடித் தொகுதி, கிடங்கு ஆகியவற்றைக் கட்டியுள்ளது. கார், ஜீப், மோட்டார் சைக்கிள்களையும் வாங்கி உள்ளது. இதற்காக, இதுவரையில் ரூ.131.72 இலட்சம் செலவிடப்பட்டிருக் கிறது.

இக்கழகம் கீழ்க்கண்ட 4 பெரும் பிரிவுகளைக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

1. கழகப் பொதுப்பிரிவு
2. வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டப் பிரிவு
3. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை
4. அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் பிரிவு.

கழகப் பொதுப் பிரிவில் மாவட்ட வளர்ச்சிக் கழக அலுவலகக் கட்டுமானப் பிரிவும் அடங்கும். இக்கட்டுமானப் பிரிவில், ஒரு நிர்வாகப் பொறியாளர் தலைமையில் இளநிலைப் பொறி யாளர்கள் மற்றும் தொழில்நுட்ப உதவி யாளர்கள் பணிபுரிகிறார்கள். பொறி யியல் பிரிவு மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் கட்டடப் பணிகளை மேற் கொண்டு வருகிறது.




அரசு ஆரம்பத்தில் கொடுத்த நிதி யைப் பயன்படுத்தி இக்கழகம் பல்வேறு அங்காடித் தொகுப்புகளையும், வங்கிக் கட்டடங்களையும் கட்டி வாடகைக்கு விட்டுள்ளது. இவற்றில் இருந்து சுமார் 20 இலட்சம் ரூபாய் ஒவ்வொரு ஆண் டும் வாடகைத் தொகையாகக் கிடைக் கிறது. மேலும் திட்டங்களுக்காக அரசாங்கம் வழங்கும் தொகையை வங்கியில் முதலீடு செய்து அதன்மூலம் கிடைக்கும் வட்டியும் இக்கழகத்திற்கு மற்றொரு நிதி ஆதார மாகும். பிற துறைகளின் கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளும் பொழுது இக்கழகம் அத்துறையினரிடமிருந்து 'சென்டேஜ் சார்ஜ்' வசூல் செய்கிறது.

இம்மாவட்டத்தில் உள்ள பல்வேறு ஊராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் போதிய நிதி இல்லாத காரணமாக அடிப்படை வசதிகளான பேருந்து நிலையங்கள், அங்காடித் தொகுப்புகள்



கோட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு தீவிர கரும்பு அபிவிருத்தி செய்யப் படுகின்றது.

இந்த ஆலை 1987-88-ஆம் ஆண்டின் உற்பத்தித் திறனுக்காக மாநில அளவில் முதல் பரிசு பெற்றது. 1988-89-இல் சிறப்பாகச் செயல்பட்டமைக்காக அகில இந்திய அளவில் தேசிய உற்பத்திக் குழுவின் பாராட்டையும், விருதையும் பெற்றது.

இவ்வாலை மூலம் ஒவ்வொரு அரைவைப் பருவத்திலும் சுமார் 8,500 கரும்பு விவசாயிகள் சுமார் 1,400 இலட்ச ரூபாயும் நேரடி வேலைவாய்ப்பின் மூலம் 950 தொழிலாளர்கள் 240 இலட்ச ரூபாயும் மறைமுகமாகச் சுமார் 2,100 விவசாயத் தொழிலாளர்கள் சுமார் 105 இலட்ச ரூபாயும் மற்றும் சுமார் 860 பேர் வாகனப் போக்கு வரத்து மூலமும் பல இலட்சங்கள் பெற்றுப் பயனடைகிறார்கள்.

இந்த ஆண்டுக்கு முந்தைய 10 ஆண்டுகளில் கடும் வறட்சி நிலவிய தால் அங்கத்தினர்கள் தங்கள் நிலத்தடி நீர்வளத்தைப் பெருக்கிக் கொள்ளக் கடந்த 3 ஆண்டுகளில் மத்திய அரசு அனுமதித்துள்ள சர்க்கரை அபிவிருத்தி நிதிக் கடனில் இது வரையில் 146.50 இலட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, புதிய கிணறு வெட்டவும், கிணற்றை ஆழப்படுத்தவும் ஆயில் இன்ஜின்/ மின் மோட்டார் வாங்கவும் 8 சதவிகிதக் குறைந்த வட்டி விகிதத் தில் கரும்பு பயிரிடும் அங்கத் தினர்களுக்குக் கடன் வழங்கப் பட்டுள்ளது.

மேலும் விவசாயிகளுக்கு நீர்ப் பாசனத் திட்ட மேம்பாட்டிற்காக ரூ.282 இலட்சம் எதிர்வரும் ஆண்டுகளில் கடன் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மற்றும் சொட்டு நீர்ப் பாசன முறையில் கரும்பைப் பராமரிக்க அரசு நிதி உதவியுடன் திட்டம் அறிமுகப் படுத்தப்பட உள்ளது.

கரும்புச் சாலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் (S.C.R.D.) சாலைகள் அமைக்கவும் பாலம் கட்டவும் ரூ.116 இலட்சம் இதுவரை செலவு செய்யப்பட்டுள்ளது.

ஆலையில் பணிபுரியும் தொழி லாளர்களுக்கு அதிகபட்சமாக 20 சதவிகித போனசும் மற்றும் ஊக்கு விப்புத் தொகையும் கடந்த ஆண்டு களில் வழங்கப்பட்டுள்ளது. தொழி லாளர்கள் நலனுக்காகச் சிற்றுண் டிச் சாலை, ஓய்வு விடுதி, உணவு அறை, மருந்தகம், கூட்டுறவுப் பண்டக சாலை, கூட்டுறவுச் சிக் கனம் மற்றும் கடன் சங்கம் ஆகிய வைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தொழிலாளர்களுக்கு இரண்டு ஆண்டிற்கு ஒரு முறை மூன்று ஜோடி சீருடையும், காலணியும் இலவசமாக வழங்கப்படுகின்றன.

நல்ல தரமான கல்வியை இப் பகுதியில் வாழும் ஆலை அங்கத் தினர் மற்றும் பணியாளர்கள் குடும்பங்களுக்கும் மக்களுக்கும் அளிக்க, ஆலையினரால் மெட்ரி குலேசன் பள்ளி ஒன்று நடத்தப்பட்டு வருகின்றது. மற்றும் ஆலை அங்கத்தினர் குடும்பங்களுக் கும் தொழிலாளர் குடும்பங்களுக் கும் பிரத்தியேக ஒதுக்கீட்டுடன் கூடிய அரசு அங்கீகாரம் பெற்ற தொழில் நுட்பப் பயிலகம் (Polytechnic) ஒன்றும் நடத்தப்படு கின்றது. இதனால் அங்கத்தினர்கள் மற்றும் தொழிலாளர்களின் பிள்ளைகள் முன்னுரிமையில் தொழிற்கல்வி படிக்க அரியதொரு வாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

தத்துக் கிராமங்களை இவ்வாலை எடுத்துச் செயல்பட்டதுடன் கிரா மப்புற அபிவிருத்திக்குப் பெரிதும் இவ்வாலை உதவி வந்துள்ளது. விவசாயக் கூலிகளுக்கு நல்லதொரு வாய்ப்பினை ஏற்படுத்தியதுடன் சிறுதொழில்கள் லாரி, டிராக்டர் மற்றும் டயர் வண்டி ஓட்டங்களுக்கு நல்ல வருவாயைத் தேடித்தந்துள்ளது.

நவீன முறையில் கரும்புச் சாகு படி செய்ய நாற்றங்கால், கரும்பு தயார் செய்து நல்ல சர்க்கரை கட்டு மானம் தரக்கூடிய புதிய ரகக் கரும்புப் பயிர் செய்யத்தக்க மானி யம் வழங்குதல், மானிய விலையில் பூச்சி மருந்து வழங்குதல், களைக் கொல்லி வழங்குதல், அங்கத் தினர்கள் கல்விச் சுற்றுலா ஏற்பாடு மற்ற பகுதிகளில் நடைமுறையில் உள்ள புதிய கரும்பு சாகுபடி வகைகள், முறைகளை அறிமுகப் படுத்தவும் மேலும் லாரி வாடகை மானியம் போன்ற வளர்ச்சிப் பணிகளுக்காக 40 முதல் 140 இலட்சம் வரை ஆண்டுதோறும் மானியமாக ஆலை செலவிட்டு வருகின்றது.

தமிழக அரசு ஆண்டு தோறும் அறிவித்து வரும் கரும்பு விலையைக் கால்த்தே கொடுப்பதுடன் ஒவ் வொரு ஆண்டு இலாபத்திலும்







கணிசமான அளவைக் கூடுதல் கரும்பு விலையாக டன் ஒன்றுக்கு ரூ.15-லிருந்து ரூ.50 வரை கொடுத்து வந்துள்ளது. கடந்த 1991-92-ஆம் ஆண்டிற்குத் தமிழ்நாட்டிலேயே மிக அதிகமான கூடுதல் கிரயமாக டன் ஒன்றுக்கு ரூ.45 வழங்கியுள்ளது. சென்ற ஆண்டில் கரும்பின் ஆரம்ப விலை ரூ.362.90- ம் கூடுதல் விலை ரூ.45-ம் சேர்த்துக் கரும்பின் மொத்த விலை டன் ஒன்றுக்கு ரூ.407.90 வழங்கப்பட்டது.

நடப்பு ஆண்டு அரைவைப் பருவத்திற்கு ஆலைப் பகுதியில் சுமார் 2 இலட்சம் டன்களும், வெளி ஆலைப் பகுதியிலிருந்து 1/2 இலட்சம் டன்களும் சேர்த்து மொத்தம் 3 1/2 இலட்சம் டன்கள் அரைவை செய்து சுமார் 35 ஆயிரம் டன்கள் சர்க்கரை உற்பத்தி செய்யப்படவுள்ளது. 1992-93-ஆம் ஆண்டிற்கான அரைவை 1.11.92-இல் துவக்கப்பட்டது.

காகித ஆலைகளுக்குக் கச்சாப் பொருளாகக் கரும்புச் சக்கை அளிக்கப்படுகிறது. சாராய ஆலை களுக்குச் சர்க்கரை கழிவுப்பாகு எரிசாராயம் தயாரிக்க கச்சாப் பொருளாக அனுப்பப்படுகின்றது. அயல்நாடுகளுக்குச் சர்க்கரை ஏற்று மதி செய்து அந்நியச் செலா வணியை நாட்டுக்கு ஈட்டித் தந் துள்ளது. இந்த ஆண்டு மட்டும் இதுவரை 6,000 டன் சர்க்கரை சுமார் ரூ.441 இலட்சம் மதிப்புக்கு ஏற்றுமதி செய்துள்ளது. நடப்பு ஆண்டு உற்பத்திக்கும் ஏற்றுமதிக் கான ஒதுக்கீடு பெற வாய்ப்புள்ளது. இந்த நடப்பு ஆண்டு கொள்முத லுக்கு அரசு விலை நிர்ணயம் செய்த வுடன் உரிய விலை வழங்கப்படும்.

இந்த ஆலை தருமபுரி மாவட்ட விவசாயிகளின் விளைபொருளுக்கு உரிய விலை அளித்தும் அவர் களுக்குத் தேவையான இடுபொருள் களை உரிய நேரத்தில் வழங்கியும் பாசனம் போன்ற வசதிகளைப் பெருக்கக் கடன் வழங்கியும், விவ சாயிகளின் பொருளாதார முன் னேற்றத்திற்கு உறுதுணையாக இருந்து வருகின்றது; தொழிலாளர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பும் விவசாய, போக்குவரத்துத் தொழிலாளர் களுக்கு மறைமுக வேலைவாய்ப்பு களையும் அளித்து வருகின்றது; மாவட்டத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படையான சாலை அமைப்பிலும் உதவியுள்ளது; விவ சாயிகள், தொழிலாளர்கள் மற்றும் பொதுமக்கள் குழந்தைகளின் கல்வி வளர்ச்சிக்கு அரும்பணி ஆற்றி வரு கின்றது. நாட்டு முன்னேற்றத்துக்கு அவசியமான அந்நியச் செலா வணியையும் ஈட்டி வருகின்றது. மொத்தத்தில் கிராமப்புற வளர்ச் சிக்குக் கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் ஒரு சிறந்த தூண்டுகோளாக அமை கின்றன என்பதற்கு இந்த ஆலை ஓர் எடுத்துக்காட்டாக அமைகின்றது என்றே கூறலாம்.

## மாதம் ஒரு மருத்துவர்:

### காது-மூக்கு-தொண்டை மருத்துவர் [ENT]பதில் சொல்கிறார்!

காது-மூக்கு-தொண்டைப் பகுதிகளின் மருத் துவச் சிகிச்சைத் துறையில், தனிப்புகழ் பெற்று வரும், FRCS போன்ற மேனாட்டு விருதுகள் பெற்றவருமான டாக்டர் கே.கே. இராமலிங்கம் அவர்கள், காது-மூக்கு-தொண்டை குறித்த உங்கள் கேள்விகளுக்குப் பதில் சொல்கிறார்.

இந்த மருத்துவப் பகுதிக்கு உங்கள் கேள்விகள் 20.2.93-க்குள் வந்து சேர வேண்டும். கேள்வி களை, அஞ்சலட்டையில் எழுதினால் போதும்.



அஞ்சலட்டையில், 'மாதம் ஒரு மருத்துவர்' என்று குறிப்பிடவும்.

அனுப்ப வேண்டிய முகவரி:

ஆசிரியர்
'தமிழரசு'
அரசினர் தோட்டம்
சென்னை-600 002

-o- நல்வாழ்த்துக்கள் -o-



**மாணிக்கம் ஏஜென்சீஸ்**

போச்சம்பள்ளி

(எச்.பி. டீலர்ஸ்)

தருமபுரி மாவட்டம்:

உரிமையாளர்:

எம். லட்சுமிகாந்தன்



போன் கடை: 353
வீடு: 253
குடோன்: 381

நல்வாழ்த்துக்கள்

**ஜி. பாஸ்கர்**

மளிகை,

போச்சம்பள்ளி

தருமபுரி மாவட்டம்:

மொத்தமாகவும், சில்லறையாகவும் குறைந்த விலையில்
தரமான மளிகைப் பொருட்கள் கிடைக்கும்
ஒரே இடம்.






முதலியன கட்ட இயலாமல் இருந்தன. இந்நிலையில் இக்கழகம் மேற்படி ஊராட்சி நிறுவனங்களுக்கு மிகக் குறைந்த வட்டி விகிதத்தில் (10 சதவிகிதம்) கடன் கொடுத்து இக்கட்டுமானப் பணிகளையும் செய்து கொடுக்கிறது. வழங்கப்பட்ட கடன் தொகைக்குக் கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு 40 சதவிகிதம் மானியமாகவும், பேரூராட்சிகளுக்கு 33 ⅓ சதவிகிதம் மானியமாகவும் அளிக்கிறது. இதற்காகக் கிராமப் பஞ்சாயத்துக்களும் மற்றும் பேரூராட்சிகளும் மொத்தத் திட்ட நிதியில் 10 சதவிகிதம் கட்டினாலேயே போதுமானது. இதுவரை 18 கிராமப் பஞ்சாயத்துக்கள் மற்றும் பேரூராட்சிகளுக்காக ரூ.40.22 இலட்சம் இக்கழகம் கடனாகக் கொடுத்துள்ளது. அதில் ரூ.13.38 இலட்சம் மானியமாகும். இது தவிர, இக்கழகத்தின் நிதியிலிருந்து "தாரா" நிறுவனத்திற்கும் (Tamil Nadu Rural Reconstruction Agency) விளையாட்டுத் திடல், அகில இந்தியச் சுற்றுலாப் பொருட்காட்சி முதலிய பல்வேறு இனங்களுக்கும் ரூ.21 இலட்சம் நிதியாக (Contribution) வழங்கியுள்ளது.

**ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம்**

தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் மற்றும் ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம் ஆகிய 2 திட்டங்களும் ஒருங்கிணைக்கப்பட்டு 1.4.89 முதல் ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம் என இந்தியா முழுவதும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம், கிராமப் பகுதிகளில் உள்ள வேலை வாய்ப்பற்ற ஆண் மற்றும் பெண்களுக்குக் கூடுதல் வேலைவாய்ப்பினை ஏற்படுத்துவதுடன், கிராமங்களில் வாழும் ஏழை, எளிய மக்களின் முன்னேற்றத்திற்காக நிலையான சொத்துக்களை உருவாக்குவதுமாகும்.

இத்திட்டத்தின் செலவினை மைய அரசும், மாநில அரசும் 50:50 என்ற விகிதத்தில் ஏற்கின்றன.

1991-92-ஆம் ஆண்டில் தருமபுரி மாவட்டத்திற்கு ஜவகர் வேலைவாய்ப்புத் திட்ட நிதி இலக்கு ரூ.912.660 இலட்சம் என நிர்ணயிக்கப்பட்டு, ரூ.900.490 விடுவிக்கப்பட்டுள்ளது. இத்தொகையில் மார்ச்சு 1992 முடிய ரூ.917.010 செலவிடப்பட்டுள்ளது. (ஆரம்ப இருப்புத் தொகையில் மீதி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது). நிர்ணயிக்கப்பட்ட மனித சக்தி நாட்கள் 35.370 இலட்சத்தில், மார்ச்சு 1992 முடிய 35.912 மனித சக்தி நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

1992-93-ஆம் ஆண்டிற்கு ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் ரூ.986.69 இலட்சம் உத்தேச ஒதுக்கீட்டில் இதுவரை ரூ.552.32 இலட்சம் விடுவிக்கப்பட்டு உள்ளது. இத்தொகையில் 30.11.92 முடிய ரூ.510.930 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1992-93-ஆம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட 39.470 இலட்சம் மனிதசக்தி நாட்களில், 22.895 இலட்சம் மனிதசக்தி நாட்கள் உருவாக்கப்பட்டு உள்ளன.



**சிறப்புத் தன்னிறைவுத் திட்டம்**

மாண்புமிகு முதல்வர் அவர்கள் பட்ஜெட் கூட்டத் தொடரின் பொழுது ஊராட்சி ஒன்றியங்களின் மூலம் 1991-92 மற்றும் 1992-93- ஆம் ஆண்டில் சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் செயல்படுத்தப்படும் என்றும், இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியமும் ரூபாய் ஒரு கோடி பெறும் அளவுக்குப் பல்வேறு ஆக்கப் பணிகள் மேற்கொள்ளும் என்றும் அறிவித்தார்.

அதன்படி, சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் தருமபுரி மாவட்டத்தில் 1991-92 மற்றும் 1992-93-ஆம் ஆண்டில் - கிராமச் சாலைகள், பேருந்துச் சாலைகள், தெருவிளக்குகள், சிறு பாசன ஏரிகள், கசிவு நீர்க் குட்டைகள், கிராமக் குடிநீர்த் திட்டப் பணிகள் ஆகியவை நிறைவேற்றப்பட்டுள்ளன. தொலைக்காட்சிப் பெட்டிகள் 90 வழங்கப்பட்டிருக்கின்றன.

**ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்**

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் (ஐ.ஆர்.டி.பி.) மத்திய அரசும், மாநில அரசும் இணைந்து செயல்படுத்தி வரும் திட்டமாகும். இத்திட்டத்தின்கீழ் வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள ஏழை மக்களின் வாழ்க்கைத் தரத்தினை

## பழங்குடி மக்கள்

**நம்முடைய தமிழகத்தில் - மொத்தத்தில் 36 வகைப் பழங்குடி மக்கள் வாழ்கிறார்கள். அவர்களில் 17 இனத்தவர்கள் மட்டுமே பண்டைப் பழங்குடியினர் என்று அரசு அறிவித்திருக்கிறது.**

**அவர்களில் - லம்பாடிகள், குறும்பர், இருளர், பஸ்தர், சிவாச்சாரத்தார் போன்றோர் தருமபுரி மாவட்டத்திலே காணப்படுகிறார்கள்.**

**இவர்களிலும் கூட - பழங்குடியிர் லம்பாடிகளே என்கிறார்கள் ஆய்வாளர்கள்.**

**லம்பாடி இனமக்களின் ஆடைகள், இப்போதைய இளம் பெண்களின் நவநாகரிக உடைகளுக்கு முன் மாதிரியானவை என்றால் வியப்பாக இருக்கும்! ஆம், அதுதான் உண்மை!**

**தம்முடைய உடைகளைத் தாங்களே தயாரித்துக் கொள்ளுவது லம்பாடிகளின் வழக்கம். லம்பாடிப் பெண்கள் குட்டைப் பாவாடை அணிகிறார்கள்; ரவிக்கையோ முன்புறம் மூடுவதாகவும், பின்புறத் திறப்போடும் சிறுசிறு கண்ணாடிகள் வைத்து அவர்களால் வடிவமைக்கப்படும்.**

**இப்போது - ஓரளவுக்கு இவர்கள் நாகரிகமாக உடுத்தவும் வாழவும் பழகிக் கொண்டிருக்கிறார்கள்.**

வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டத்தைச் செயல்படுத்த திட்டப் பொருளியலர் தலைமை தாங்குகிறார். இப்பிரிவு வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டப் பணிகளுக்கான திட்டங்களைத் தீட்டுதல், பல்வேறு துறைகள் மூலம் அவற்றைச் செயல்படுத்தப்படுவதைக் கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் முதலிய பணிகளைச் செய்து வருகிறது.

வறட்சிக்கு இலக்காகும் பகுதி திட்டத்தில் ஆண்டுக்கு ரூ.183 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு மண்வளப் பாதுகாப்பு, மரம் நடுதல், நீர் வளத்தை அதிகரித்தல், வேளாண்மையில் நவீன முறையை மேற்கொள்ளுதல், மா தோட்டங்கள் ஏற்படுத்துதல், பட்டுப்பூச்சி வளர்த்தல் போன்ற பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

பயனாளிகளிடமிருந்து இதுவரை 818 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, இம்மாவட்டத்திலுள்ள தேசிய மய மாக்கப்பட்ட பல்வேறு வங்கிகளுக்கும் கடன் அனுமதி பெறும் பொருட்டு அனுப்பப்பட்டுள்ளன.

**தேசிய புகையில்லா அடுப்புகள் (சூளா)**

புகையில்லா அடுப்புகள் (சூளா) அமைத்திடும் திட்டத்தின்கீழ் நடப் பாண்டிற்கு 1992-93) இம்மாவட்டக் குறியீடு 4,000 ஒதுக்கீடு செய்து உத்தரவு பெறப்பட்டுள்ளது. இந்த அடுப்புகளில் பெரும்பாலானவை ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் ஆதிதிராவிடர் களுக்குக் கட்டப்பட்ட வீடுகளில் அமைக் கப்பட்டு வருகின்றன. இதுவரை 4,301 அடுப்புகள் அமைக்கப்பட்டு இலக்கு நிறைவு செய்யப்பட்டது.

**ஒருங்கிணைந்த ஊரக எரிசக்தித் திட்டம்**

தமிழ்நாடு எரிசக்தி நிறுவனம் மூலம் இம்மாவட்டத்தில் பர்கூர் ஊராட்சி ஒன்றியம் மற்றும் அரூர் ஊராட்சி ஒன்றியம் மூலம் ஒருங்கிணைந்த ஊரக எரிசக்தித் திட்டத்தின்கீழ் 1992-93-ஆம் ஆண்டிற்கு அளிக்கப்பட்ட இலக்கும் பூர்த்தியாகிவிட்டது; இதுவரை அடைந்த சாதனைகளும் அளவிடற்கரியன.

தருமபுரி மாவட்ட வளர்ச்சிக் கழகம், பன்னாட்டுத் தொழில் நிறுவத்தின் மூலமாகத் தளி ஊராட்சியில் ஐ.எல்.ஓ/டானிடா சிறப்புப் பொது வேலைத் திட்டத்தின்கீழ் ரூ.232 இலட்சத்திற்கான மதிப்புள்ள பணிகளை மேற்கொண்டு அவற்றில் பெரும்பாலான பணிகள் முடிவுற்ற நிலையில் உள்ளன. இத்திட்டம் இக்கழகத்தில் சிறப்பாகச் செயல்படுத்தப் படுவதைப் பன்னாட்டுத் தொழிலாளர்கள் நிறுவன அலுவலர்கள் பலமுறை பாராட்டி உள்ளார்கள். இத்திட்டத்தை மேலும் பல ஊராட்சி ஒன்றியங்களுக்கு விரிவுபடுத்தத் திட்ட முன்மொழிவுகள் அனுப்பப்பட்டு உள்ளன.

இம்மாவட்டத்தின் பல்வேறு பகுதி களிலும் உள்ள விவசாயிகளுக்கு மாஞ் செடிகளும், இதர பழச் செடிகளும் நல்ல தரமான முறையில் கிடைக்கவேண்டும் என்ற நோக்கோடு, இம்மாவட்டத்தில் தேன்கனிக்கோட்டை வட்டம் நாகமங்கலம் மற்றும் அரூர் வட்டம் போளையம்பள்ளி ஆகிய இடங்களில் இக்கழகத்தால் தோட்டக்கலை நாற்றங்கால்கள் அமைக் கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. ஓதூர் வட்டம் மருதாண்டப்பள்ளி என் னும் இடத்தில் மற்றொரு தோட்டக்கலை நாற்றங்கால் அமைக்கும் பணி நடை பெற்று வருகிறது.

அதேபோல, பட்டு வளர்ச்சிக்கெனத் தேன்கனிக்கோட்டை வட்டம் நாக மங்கலம் என்னும் இடத்தில் பட்டுப் பண்ணை அமைக்கப்பட்டு, பராமரிக் கப்பட்டு வருகிறது. ஓசூர் வட்டம் மாதர்சனபள்ளி' என்னும் கிராமத்தில் சுமார் 25 ஏக்கர் பரப்பில் மற்றொரு பட்டுப்பண்ணை அமைக்கும் பணியும் முன்னேற்றத்தில் உள்ளது.

மத்திய அரசாங்கத்தின் விண்வெளித் துறை மூலம் ஐதராபாத்தில் உள்ள தேசியத் தொலையுணர்வு முகமை மற்றும் சென்னை அண்ணா பல்கலைக் கழகத் தின் தொலையுணர்வு மையம் ஆகிய வற்றின் ஒத்துழைப்போடு சாமல்பட்டி நீர்ப் பிடிப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் ரூ.626 இலட்சம் செலவில் ஐந்தாண்டுகளில் செயல்படுத்தப்படும்.

**ப. வேங்கடசாமி**

**திட்ட அலுவலர் மற்றும்**
**மேலாண்மை இயக்குநர்**
**தருமபுரி மாவட்ட வளர்ச்சிக் கழகம்**
**தருமபுரி**

**TNPSC** விளம்பர எண்: 3/93

## தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

**அகில இந்தியப் பணிகள் மற்றும் மாநிலப் பணிகளைச் சேர்ந்த அலுவலர்களுக் கான அரையாண்டு மற்றும் மொழித் தேர்வுகள் - மார்ச், 1993.**

அகில இந்திய பணிகள் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., ஐ.எப்.எஸ்., மற்றும் தமிழ்நாடு மாநிலப் பணிகளைச் சார்ந்துள்ள சில வகைப் பிரிவு அலுவலர்களுக்கான (Certain Classes of Officers) அரை யாண்டு மற்றும் மொழித் தேர்வு, இவ்வாணையத்தினால் 11.3.93 முதல் நடத்தப்படும். இத்தேர்வுக் கான விண்ணப்பங்கள் இவ்வலுவலகத்தில் வந்து சேர வேண்டிய கடைசி தேதி 9.2.1993 ஆகும். விண்ணப்ப படிவத்தையும் சம்பந்தப்பட்ட விவரங்களையும் தேர்வுக்கட்டுப்பாடு அலுவலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், அரசினர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை-600 002, அவர்களிடமிருந்து எழுத்து மூலம் விண்ணப்பித்துக் கேட்டுப் பெற்றுக் கொள்ளலாம்.

**குறிப்புகள்:** 1. மேற்குறிப்பிட்டுள்ள பணிகளில் தற்போது பணியில் இருப்போருக்கு மட்டுமே இத் தேர்வுகள் உரியதாகும்.

2. இத்தேர்வுகளுடன் நடத்தப்பெறும் தமிழ்மொழி உயர் நிலைத் தேர்வே மற்ற மாநிலங்களைச் சார்ந்த அகில இந்தியப் பணிகளில் பணிபுரியும் அலுவலருக்கான ரூ.1000 ரொக்கப் பரிசளிப்புத் திட்டத்தின் கீழான 'தமிழ்ப் புலமைத் தேர்வும்' ஆகும். இத்தேர்வு எழுத விரும்பும் அலுவலர்கள் பத்தாண்டு பணிக்காலம் பூர்த்தி செய்யாதவர்களாயிருத்தல் வேண்டும். தேர்வு எழுத விரும்புவோர் தங்கள் மாநில அரசாங்கத்தின் தலைமைச் செயலர் வாயிலாக, தமிழ்நாடு அரசு தலைமைச் செயலர், சென்னை-600 009 அவர்களுக்கு 9.2.93-க்குள் இத்தேர்வாணையத்திற்கு வந்து சேரும்படி விண்ணப் பித்துக் கொள்ளவேண்டும்.

DIPR/61/MS/93

ஆசிரியரும் வெளியிடுபவரும்: இரா. சம்பத், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927

**எளிமையானவை! நேர்த்தியானவை!**
**மேன்மை மிகுந்தவை!**
**தோற்றம் அளிப்பவை!**



கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள், வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தை அணுகவும்.

| | | | |
|---|---|---|---|
| தந்தி (DHARCOSPIN) ஊத்தங்கரை | | **எஸ்.டி.டி.எண்.** | **தொலைபேசி** |
| | ஆட்சியர் (தனி) | : 04341 | 2027 (ஊ.கரை) |
| | அலுவலகம் | : ” | 2061 2083 (ஊ.கரை) |
| | ஆட்சியர் (இல்லம்) | : 04179 | 20016 திருப்பத்தூர் |

# தருமபுரி மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை லிமிடெட்,

எண்.எஸ்.ஏ.108
அஞ்சல் பை எண்.2
ஊத்தங்கரை - 635 207.

**எங்களது ஆலையில் உள்ள நவீன இயந்திரங்களைக் கொண்டு தொழிலாளர்களின் முழு ஒத்துழைப்புடன் கூட்டுறவு முறையில் கீழ்க்கண்ட தரமான நூல்கள் தயாரிக்கப் படுகின்றன.**

## தயாராகும் நூல்கள்

| | | |
|---|---|---|
| ஹேங்க் நூல் | : | 20, 26, 32, 32 சிஆர், 40, 60, 60 சி, 80, 80 சிஆர், 2/17, 2/30, 2/40, 2/60. |
| கோன் நூல் | : | 20, 30, 34, 40, 60, 60 ஹெச்.டி., 80. |

**எங்களது ஆலையில் உற்பத்தியாகும் நூல்களை கூட்டுறவு நெசவாளர் சங்கங்களுக்கும், தனியார் நிறுவனங்களுக்கும் விற்பனை செய்கிறோம். தங்களது தேவைக்கு எங்களை அணுகுங்கள்.**



**எல். ஸ்ரீராமலிங்கம்,** பி.காம்., டி.பி.ஏ., டிப். இன் லா.,
**துணை இயக்குநர் / ஆட்சியர்.**






**● என்னுடைய எழுத்துக்களை மறந்தால் பரவாயில்லை; என்னுடைய செயல்களை மறவாதீர்; எழுத்துக்களைவிட, என் செயல்- வாழ்க்கை இரண்டையும் பார்த்து அவ்வாறே நடக்கப் பழகுக.**

உயர்த்தி அவர்களின் வருவாயைப் பெருக்க உதவி செய்யப்படுகிறது. இத்திட்டம் 2.10.1980 முதல் செயல் படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் சிறு விவசாயிகளுக்கு 25 சதவிகிதம், மிகச் சிறு விவசாயிகளுக்கு 33.⅓ சத விகிதமாகவும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு 50 சதவிகிதம் அல்லது உயர்ந்த பட்ச மானியமாக ரூ.5,000 என்ற வகையில் அரசு மானியம் மாவட்ட வளர்ச்சிக் கழகத்தால் அனுமதிக்கப்பட்டு, வங்கிகளில் அதற் கேற்றவாறு கடன் அனுமதிக்கப்பட்டு சொத்துக்கள் உருவாக்கப்படுகின்றன. வறட்சிக்கு இலக்காகும் பகுதியாக இருந் தால் ஆதிதிராவிடர் அல்லாத ஒரு குடும்பத்திற்கு அதிகபட்சமாக ரூ.4,000 வரை மானியம் வழங்கப்படுகிறது. வறட்சிக்கு இலக்காகாத பகுதிகளில் அதிகபட்ச மானியம் ரூ.3,000 வரை வழங்கப்படுகிறது.

1992-93-ஆம் ஆண்டிற்குத் தருமபுரி மாவட்டத்தில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 5,247 குடும்பங்களுக்கு உதவி செய்வதற்கு ரூ.185.482 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 40 சதவிகிதம் பெண்களுக்கும், 50 சதவிகிதம் ஆதிதிராவிடர் மற்றும் பழங் குடியினருக்கும் 3 சதவிகிதம் உடல் ஊனமுற்றோர்களுக்கும் உதவி புரிய அரசினரால் அறிவுரை வழங்கப்பட்டு உள்ளது.

1992-93-ஆம் ஆண்டில் இத்திட்டத் தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி யினர், பெண்கள், ஊனமுற்றோர் ஆகியோருக்குப் பெருமளவில் கடன் வழங்கப்பட்டிருக்கிறது. ●

கைவினைஞர் உதவி சிறப்புத் திட்டத் தின்கீழ் 1992-93-ஆம் ஆண்டில் 2000 கிராமப்புறக் கைவினைஞர்களுக்கு ஒரு நபருக்கு ரூ.2,000-க்கு மிகைப்படாமல் நவீன கருவிகள் வழங்க மத்திய அரசு ரூ.36 இலட்சம் வழங்கியுள்ளது. இத் திட்டம் இந்த நிதியாண்டிற்குள் செயல் படுத்தப்படும்.

**ஊரக இளைஞர்களுக்குச் சுயவேலை வாய்ப்புப் பயிற்சி (டிரைசம்)**

ஊரக இளைஞர்களுக்குச் சுயவேலை வாய்ப்புப் பயிற்சி அளிக்கும் திட்டம் (டிரைசம்) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச் சித் திட்டத்தில் ஒரு பகுதியாகும். இத் திட்டத்தின்கீழ் 1992-93-ஆம் ஆண்டில் பல்வேறு தொழில் பிரிவுகளில் 915 நபர்களுக்குப் பயிற்சி அளிக்கத் திட்ட மிடப்பட்டுள்ளது. இதில் 115 நபர் களுக்கு ஊறுகாய், பழம் பக்குவம் செய்தல், பொம்மை செய்தல் மற்றும் பனை ஓலையில் இருந்து பொருட்கள் தயாரித்தல் ஆகிய தொழில்களில் பயிற்சி அளிக்கப்பட்டு பயிற்சிக்குப்பின் தொடர்ந்து வேலைவாய்ப்பு வழங்கப்பட்டு வருகிறது.

செயற்கை வைரம் பட்டை தீட்டுதல், கார் ஓட்டுதல், தையல், மின்மோட்டார் காயில் கட்டுதல், கதர்த் துணி நூல் நூற்றல், மின்சாதனப் பொருட்கள் பழுதுபார்த்தல், ஸ்கூட்டர், மொபெட் வண்டிகள் பழுதுபார்த்தல், விவசாய டீசல் என்ஜின் பழுதுபார்த்தல், கயிறு திரித்தல் ஆகிய தொழில்களில் 599 நபர்கள் பயிற்சி பெற ஆணை பிறப் பிக்கப்பட்டுள்ளது.

1992-93-ஆம் ஆண்டில் இத் திட்டத்தினைச் செயல்படுத்துவதற்காக அரசு ரூ.20.75 இலட்சம் அனுமதித்துள்ளது.

**கிராமப்புற மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம் (டோக்ரா)**

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ், துணைத் திட்டமாகக் கிராமப்புற மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம் மத்திய அரசினால் 1982-83-ஆம் ஆண்டு தொடங்கப் பட்டது. முதலில் நமது நாட்டில் 50 மாவட்டங்கள் தேர்வு செய்யப்பட்டு இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. தமிழ்நாட்டில் 1983-84 முதல் இந்தத் திட்டம் தருமபுரி மாவட்டத்தில் செயல் படுத்தப்பட்டு வருகிறது.

வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள 10 முதல் 15 கிராமப்புறப் பெண்களைக் கொண்டு குழு அமைத்து அவர்களுக்கு ஏற்ற வருவாய் ஈட்டக்கூடிய தொழில் கண்டறிந்து, அவர்களின் வாழ்க்கைத் தரத்தைப் பொருளாதார ரீதியாக உயர்த்து வதே இத்திட்டத்தின் முக்கிய நோக்க மாகும்.

தருமபுரி மாவட்டத்தில் 1983-84-ஆம் ஆண்டில் முதன் முதலாகத் தருமபுரி மற்றும் காவேரிப்பட்டினம் ஆகிய இரண்டு வட்டாரங்களில் தலா 10 குழுக்கள் வீதம் அமைக்கப்பட்டு இத் திட்டம், செயல்படத் தொடங்கியது. பின்னர் இத்திட்டம் மற்ற 16 வட்டாரங் களுக்கும் விரிவாக்கப்பட்டு 1991-92 முடிய 590 மகளிர் குழந்தைகள் மேம் பாட்டுத் திட்டக் குழுக்கள் அமைக்கப் பட்டுள்ளன. இத்திட்டத்தில் இதுவரை 10,057 பெண்கள் பயனடைந்துள்ளனர். அவர்களில் 4,125 பேர் தாழ்த்தப்பட்ட வகுப்பையும், 572 பேர் மலைச் சாதி இனத்தையும் சார்ந்தவர்கள்.

உதாரணமாக இக்குழுக்கள் பால் உற்பத்தி, ஆடு வளர்ப்பு, பொம்மை தயாரித்தல், சாம்பார் மற்றும் மிளகாய்ப் பொடி தயாரித்தல், சாம்பார் மற்றும் மிளகாய்ப் பொடி தயாரித்தல், கிளினிங் பவுடர் செய்தல், ஆயத்த ஆடை தயாரித்தல், தென்னை நார், கயிறு உற்பத்தி, தென்னங்கீற்று பின்னுதல், புளி பதப்படுத்துதல் போன்ற பணிகளில் ஈடுபட்டுள்ளன. 1992-93-ஆம் ஆண்டிற்கு 30 குழுக்கள் அமைக்கப் பட்டுள்ளன. அக்குழுக்களைப் பதிவு செய்யவும், சுழல்நிதி வழங்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**தேசிய கரிமவாயுத் திட்டம்**

1992-93-ஆம் ஆண்டிற்கு இத் திட்டத்தின்கீழ் இம்மாவட்டத்திற்கு அளிக்கப்பட்ட இலக்கும், இதுவரை அடைந்த சாதனையும் வருமாறு:-

| | |
|---|---|
| இலக்கு | .. 360 |
| சாதனை | .. 138 |

இத்திட்டத்தின்கீழ் கொடுக்கப்பட்ட இலக்கைக் கடந்த ஆண்டைப் போல முழுமையாக எய்திடத் தீவிர நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.




தமிழரசு
16-2-1993 ரூ.1






இந்தியா-இங்கிலாந்து அணிகளுக்கிடையே சென்னை சேப்பாக்கம் ஸ்டேடியத்தில் நடைபெற்ற இரண்டாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 11.2.93 அன்று தொடங்கி வைத்தார். முதல்வர் அவர்களுக்கு இரு அணியின் வீரர்களும் அறிமுகப்படுத்தப்பட்டனர். அப்போது இந்திய அணியின் தலைவர் அசாருதீன் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு அறிமுகப்படுத்தப் பட்டார்.

## இந்த இதழில்


சட்டப்பேரவையில்
மேதகு ஆளுநர் உரை ... 2
ஜவகர்லால் நேரு 10-வது
தங்கக்கோப்பை இறுதிப்போட்டி ... 6
சிறந்த காவல் நிலையம் ... 9
தருமபுரியின் தொல்பழங்காலம் ... 11
இருமொழிக் கொள்கை:
சட்டமன்றத்தில் முதல்வர் தீர்மானம் ... 13
சட்டமன்றப் பேரவை அறிவிப்புகள் ... 15
தென்னார்க்காட்டில் இளைஞர் வாரவிழா ... 17
படமும் செய்தியும் ... 20
தருமபுரி மண்ணும்
விடுதலைப் போராட்ட உணர்வும் ... 24
தமிழ்நாடு அரசுப் பணியாளர்
தேர்வாணையம் அறிவிக்கை ... 27



# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2024

மாசித் திங்கள் - 5

மலர்:23 இதழ்:16

16-2-1993

## சட்டப் பேரவையில்



# மேதகு ஆளுநர் உரை

**மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களே,**

*1993* ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முதலாவது கூட்டத் தொடரில் உங்கள் முன் உரையாற்றுவதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். உங்கள் அனைவர்க்கும் என்னுடைய நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். *1993* ஆம் ஆண்டில் தமிழ்நாடு அனைத்துத் துறைகளிலும் முன்னேற்றம் காணும் என்று நம்பிக்கை தெரிவிக்கிறேன். *1992* ஆம் ஆண்டின் இறுதி நாள்கள் இந்திய நாட்டிற்குப் பெரும் சோதனைக்காலமாக அமைந்தன. அந்நாள்களில் நமது நாட்டில் பெருமளவில் உயிர்களுக்கும் உடைமைகளுக்கும் சேதங்கள் விளைந்தன; இவற்றைப் பெரிதும் தவிர்த்திருக்கமுடியும். எனினும், தமிழ்நாடு அமைதியும் நல்லிணக்கமும் நிலவித் தனித்து விளங்கியதோடு, ஏழை எளிய, ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்க்கை நிலையில் சீரான முன்னேற்றத்தைக் கண்டது. முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களுடைய தலைமையில் அமைந்துள்ள இவ்வரசு ஆக்கபூர்வமான பயனுள்ள பல திட்டங்களைத் தொடங்கியிருந்தது; மிகக் குறுகிய காலத்தில் குறிப்பிடத்தக்க அரும்பணிகளை ஆற்றியுள்ளது. *1993* ஆம் ஆண்டில் இன்னும் பல அரும்பெரும் சாதனைகளை ஆற்றிட இவ்வரசு ஆர்வத்தோடு பாடுபட இருக்கிறது.

2. முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பதவியேற்பதற்கு முன்னர் தமிழ்நாட்டில் நிலவிய சட்டம்-ஒழுங்கு நிலைமையையும், வெளிநாட்டுப் போராளிகளும், தீவிரவாதிகளும் இம்மாநிலத்தில் பேரளவிற்கு ஊடுருவியிருந்த நிலைமையையும் மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். சட்டம் - ஒழுங்கு நிலைமையை மீண்டும் நிலை நாட்டவும், அமைதி, ஒற்றுமையைப் பேணிக்காக்கவும் அவர் மேற்கொண்ட துணிவு மிக்க நடவடிக்கைகள் அனைத்துத்தரப்பினரின் பாராட்டுகளையும் பெற்றுள்ளன. வெளிநாட்டுப் போராளிகள், தீவிரவாதிகளின் தேச விரோத, கவிழ்ப்பு நடவடிக்கைகள் ஒடுக்கப்பட்டுவிட்டன. கடல் எல்லை ரோந்து நடவடிக்கைகள் வலுப்படுத்தப்பட்டுள்ளன. கப்பல் படை, கடலோரப் பாதுகாப்புப் படை, மாநிலக் காவல்துறை, சுங்கத்துறை ஆகியவற்றின் ஒருங்கிணைந்த நடவடிக்கைத் திட்டம் வகுக்கப்பட்டுச் செயல்படுத்தப்பட்டுள்ளது. பெட்ரோலியப் பொருட்கள், ஏனைய பொருட்களைக் கள்ளத்தனமாகக் கடத்துகின்ற சட்டவிரோத நடவடிக்கைகள் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன. பெட்ரோலியப் பொருட்கள், எஞ்சின் ஆயில், கியர் ஆயில், நாட்டு வெடிகுண்டுகள், ஜெலடின் குச்சிகள், வெடி மருந்துகள், படைக் கலன்கள், துப்பாக்கித் தோட்டாக்கள் போன்றவை பெருமளவுக்குக் கைப்பற்றப்பட்டுள்ளன. சந்தேகத்திற்கிடமான நபர்கள் சட்டத்தின் பல்வேறு விதித்துறைகளின் கீழ் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர். குற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்ட பலர் மீது தொடர்புடைய சட்டங்களின் கீழ் வழக்கு தொடரப்பட்டுள்ளது. வெளிநாட்டுப் போராளிகளால் ஏற்பட்டுள்ள இப்பேராபத்தினை அறவே களையும் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட இத்திட்டத்தைச் செயற்படுத்துவதை முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து கண்காணித்து நெறிப்படுத்திவந்துள்ளார்கள். தமிழ்நாட்டில் நிலவும் சட்டம்-ஒழுங்கு நிலைமை குறித்துக் குறிப்பாக வெளிநாட்டுப் போராளிகளை ஒடுக்குவதில் மேற்கொண்ட நடவடிக்கை குறித்து மத்திய உள்துறை அமைச்சரும், மத்திய உள்துறை இணை அமைச்சரும் தங்களின் முழு மனநிறைவைத்தெரிவித்துள்ளனர். தீவிரவாதிகளின் சதித்திட்டங்களுக்கு எதிராக இவ்வரசு எப்போதும் விழிப்புடன் இருந்து செயல்படும் என்பதையும், அவர்களது நடவடிக்கைகளை அடக்கி ஒடுக்கத் தேவையான அனைத்துமுயற்சிகளையும் ஒன்றுவிடாமல் மேற்கொள்ளும் என்பதையும் அறிந்து நாம் பாதுகாப்பாக உள்ளோம் என்று நிம்மதி அடையலாம். இவ்வாறு திட்டமிட்டுக் கவனமுடன் கண்காணித்து வருவதன் காரணமாகத் தமிழ்நாட்டுக் குடிமக்களிடையே அமைதியும் நல்லிணக்கமும் நிலவ முழுமையாக உறுதி செய்யப்பட்டுள்ளது என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

3. அயோத்தியில் நடந்த நிகழ்ச்சிகளும் அதனையடுத்து நடைபெற்ற கலவரங்களும் நமது தேசத்தின் மனச்சாட்சியை மிகப் பெரிதும் பாதித்தன. நமது அரசியலமைப்பின் அடித்தளமாக விளங்குகின்ற அரசியலமைப்புச் சட்டத்தில் சில அடிப்படைக் கூறுகள் இடம் பெற்றுள்ளன. அவற்றில் மிக மிக இன்றியமையாததாக விளங்குவது மதச்சார்பின்மையாகும். மதச்சார்பின்மை என்பது நன்னோக்கத்துடன் கூடிய கோட்பாடாகும். உண்மையான மதச்சார்பின்மை, பல்வேறு வகுப்பினரிடையே அமைதியையும் ஒற்றுமையையும் உருவாக்கும் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு அமையும். நமது முதலமைச்சர் அவர்கள் 1992 நவம்பரில் புதுடில்லியில் நடைபெற்ற தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டத்தில் தொலைநோக்குடன் தமது அரிய கருத்தை வெளியிட்டார். அதாவது, அயோத்தியில் தகராறுக்குட்பட்ட இடத்தில் இராமர் கோயில் உருவாக அனுமதிக்கலாம் என்றும், அதே சமயம் அங்குள்ள மசூதியை அப்படியே விட்டுவிட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். முதலமைச்சர் அவர்கள் அன்று கூறிய கருத்து சகிப்புத்தன்மை உணர்வில் ஆழமாக வேரூன்றிய கருத்தாகும். இந்த உணர்வு, நமது நாட்டில் வாழும் பல்வேறு சமூகத்தினரிடையே அவர்கள் நிலைத்து வாழ்வதற்கு நிலவ வேண்டிய ஒன்றாகும். முதல்வர் அவர்கள் கூறிய கருத்து, தமிழ்நாட்டில் பல நூற்றாண்டுக் காலமாக பல்வேறு சமுதாயத்தினரிடையே நிலவி வந்துள்ள சகிப்புத்தன்மை, நல்லெண்ணம் இவற்றில் வேரூன்றிய பண்பாட்டினைப் பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது.

4. நம்நாட்டின் பல மாநிலங்களில் வன்முறைக் கலவரங்கள் எழுந்து தலைவிரித்தாடின; இதன் விளைவாகப் பல நூற்றுக்கணக்கானோர் மடிந்தனர்; துயர வெள்ளம் எங்கும் சூழ்ந்தது. ஆனால் அதே சமயம், தமிழ்நாட்டு மக்கள் சகோதர மனப்பான்மையுடன், ஒருவருக்கொருவர் பாச உணர்வோடு உறுதியாக நின்றனர். இம் மாநிலம் கலவரப் பாலைவனத்திடையே அமைதி நல்லிணக்கச் சோலைவனமாகத் தனித்து நின்றது. சிறிய பதட்டச் சூழ்நிலைகள் எழுந்தபோது, அவை விரைவாகவும், உறுதியாகவும் கட்டுப்படுத்தப்பட்டன. இராணுவத்தையோ, துணை இராணுவப்படைகளையோ உதவிக்கு அழைக்க வேண்டிய சந்தர்ப்பம் எதுவும் நேரவில்லை. இங்கு எழுந்த சூழ்நிலை மிகச் சிறப்பாகச் சமாளிக்கப்பட்டதோடு மட்டுமல்லாமல், அருகிலுள்ள கருநாடக மாநில அரசு கேட்டுக் கொண்டதற்கிணங்க அங்கு எழுந்த சட்டம்-ஒழுங்குச் சூழ்நிலையைச் சமாளிப்பதற்காக நமது மாநில அரசு நம்முடைய காவல் படையின் இரண்டு கம்பெனிகளை அனுப்ப முடிந்தது. இவ்வாறு, சமுதாய ஒற்றுமையையும் நல்லிணக்கத்தையும் பேணிக் காப்பதில் நாம் நாட்டின் பிற பகுதிகளுக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கியுள்ளோம் என்பது குறித்து உண்மையில் நாம் பெருமை கொள்ளலாம்.

5. அதே சமயம், இம் மாநிலத்தில் வகுப்புவாதம் தலையெடுக்கவோ, மக்களைப் பிளவு படுத்தவோ இடந்தராமலிருப்பதற்காக, நமது அரசு பயனுள்ள பல

நடவடிக்கைகளை எடுத்துள்ளது. தமிழ்நாட்டில் சமுதாய அமைதியும், நல்லிணக்கமும் சிறப்பாக நிலவுகின்றன என்ற களங்கமற்ற நற்பெயர் தொடர்ந்து பேணி வரப்படும். அரசு, தடைசெய்யப்பட்ட அமைப்புகளுக்கு எதிராக விரைந்து செயல்பட்டது. 245 பேர் கைது செய்யப்பட்டனர்; 34 வளாகங்கள் சட்டவிரோதமானவை என்று அறிவிக்கப்பட்டன; 61 வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டன. தமிழ்நாட்டில் நிலைமை இவ்வாறிருக்கையில், பம்பாயில் குறிப்பாகத் தமிழ் பேசும் மக்களுக்கெதிராக மீண்டும் மீண்டும் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறை நமக்குப் பெரும் கவலையைத் தோற்றுவித்துள்ளது. பம்பாயை விட்டுத் தமிழ் பேசும் மக்கள் கிட்டத்தட்ட 4,700க்கும் அதிகமானோர் வெளியேறிச் சென்னைக்கு வந்துள்ளார்கள். இவர்களில் பெரும்பாலோர் தங்களுடைய சொத்துக்களையும், சொந்த உடைமைகளையும் இழந்து விட்டனர். சமூக விரோத சக்திகள் அவர்கள் குடியிருந்த குடியிருப்புகளைக் கூடத் தங்கள் வசப்படுத்திக் கொண்டுள்ளார்கள். பம்பாயில் வாழும் தமிழர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்கு உறுதி செய்ய அனைத்து நடவடிக்கைகளும் எடுக்குமாறு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மகாராஷ்டிர முதலமைச்சரையும், மத்திய உள்துறை அமைச்சரையும் கேட்டுக் கொண்டுள்ளார்கள். பம்பாயை விட்டு வெளியேறி வந்தவர்கள் இழந்துவிட்ட உடைமைகளுக்கு உரிய இழப்பீட்டைப் பெறுவதற்கும், அவர்கள் மீண்டும் அங்கு சென்று தங்கள் தொழிலை அமைதியாக நடத்துவதற்கும் உறுதி செய்ய இம்மாநில அரசு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்.

6. மாநிலக் காவல் படையினர், இந்தச் சூழ்நிலையைச் சமாளிக்கும் விதத்தில் முழுமையாக ஈடுகொடுத்துப் பணியாற்றினர் என்பதும், மேலும் அவர்கள், புதிய கண்ணோட்டம் கொண்டு, மாறுபட்ட புதிய பாதையில், புதிய குறிக்கோளை உளம் கொண்டு செயல்பட்டனர் என்பதும் மிகுந்த மனநிறைவு அளிக்கக் கூடியதாக உள்ளது. மாநிலக் காவல் படையை ரூ.80.45 கோடி செலவில் நவீனமயமாக்குவதற்கான விரிவான செயற் குறிப்பு ஒன்று மத்திய அரசிடம் அனுமதி பெறுவதற்கு அனுப்பப்பட்டுள்ளது. மத்திய அரசு, இதுவரை ரூ.10 கோடி அனுமதித்துள்ளது. அதைக் கொண்டு காவல் படையை நவீனப்படுத்தும் சில உடனடிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நடப்பாண்டில் மேலும் 30 கோடி ரூபாய்க்கு அனுமதியளிக்க மாண்புமிகு மத்திய உள்துறை அமைச்சர் அவர்கள் உறுதியளித்துள்ளார். மாநில அரசு, காவல் படையை நவீனமயமாக்கும் பணியின் இரண்டாம் கட்டப் பணியை மேற்கொள்வதற்காக, இந்த நிதியை விரைவில் வழங்குமாறு நாங்கள் மத்திய அரசை வலியுறுத்துவோம். சீருடைப் படையினர் தேர்வு வாரியத்தின் மூலம் 9,500 காவலர்களைத் தேர்வு செய்யும் பணி விரைவில் முடிக்கப்படும். குறித்த காலப் பயிற்சிக்குப் பிறகு அவர்கள் காவற்படையிற் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

7. நீதித்துறை முறையாகச் செயல்படுவதற்குப் போதுமான வசதிகள் அளிக்கப்பட வேண்டும் என்னும் கருத்தை இவ்வரசு ஒப்புக் கொள்கிறது. நீண்டகாலமாக முடிவு செய்யப்படாமல் இருந்த நீதித்துறையினரின் முறையீடுகளை அரசு பரிசீலித்து, அவர்களுடைய குறைகளில் பலவற்றைத் தீர்த்து வைத்துள்ளது. புதிதாக ஏற்படுத்தப்பட்ட மாவட்டங்களில் அமையும் நீதிமன்றங்கள் உட்பட, பத்தொன்பது நீதிமன்றங்கள் குறித்தகாலத் திட்டத்தின் கீழ்ப் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ளன. ரூ.4 கோடி செலவில் உயர்நீதிமன்றத்தின் இணைப்புச் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. சென்னை உயர்நீதி மன்றத்தைக் கலந்தாலோசித்து, மதுரையில் உயர்நீதிமன்றக் கிளை ஒன்றை அமைப்பது பற்றி தீவிரமாகப் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. முதலமைச்சர் அவர்கள் மத்திய திட்டக் குழுவின் துணைத் தலைவருடன் நடத்திய விவாதங்களின் போது, நீதி நிருவாகத்திற்கான நிதியொதுக்கீட்டைத் திட்ட ஒதுக்கீட்டின் கீழ் கொண்டு வருவது பற்றி விவாதித்தார்கள். இது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. நீதி நிருவாகத்தை மேம்படுத்துவதற்காகவும் மற்றும் நிலை உயர்த்துவதற்காகவும் ரூ.123.37 கோடி நிதியொதுக்கீட்டுடன் கூடிய விரிவான பெருந்திட்டம் ஒன்று, புதிய திட்டப்பணிகளின் கீழ் நிதியுதவி பெறுவதற்காக மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

8. அரசியலமைப்புச் சட்ட நெறிமுறைகளின் படி, மதுவிலக்கு என்பது அரசின் முக்கியமான கொள்கையாகும். முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் தலைமையில் அமைந்துள்ள இவ்வரசு, தான் அறிவித்திருந்த மதுவிலக்குக் கொள்கைகளுக்கிணங்க, பதவி ஏற்றவுடன் முதன் முதல் முடிவு எடுத்துச் செயற்படுத்திய நடவடிக்கை மாநிலம் முழுவதிலும் உள்ள மலிவு விலை மதுக்கடைகளை ஒழித்ததேயாகும். இந்த நடவடிக்கை ஆண்டுக்கு ரூ.390 கோடி அளவுக்கு வருவாய் இழப்பு ஏற்படுத்துவதாக இருந்தபோதிலும், அரசு இதனை மேற்கொண்டது என்பதை இம்மன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நன்கறிவர். மதுவிலக்குச் செயலாக்கப் பிரிவை அமைத்ததன் மூலம், கள்ளச் சாராய விற்பனை, கள்ள மது ஆகியவற்றிற்கெதிராக எடுக்கப்பட்டுவந்த நடவடிக்கை மும்முரப்படுத்தப்பட்டது. முதலமைச்சர் அவர்கள் தவறிழைக்கும் அதிகாரிகளுக்கு எதிராக எடுத்த நடவடிக்கையின் காரணமாகக் கள்ளச் சாராய நிகழ்வுகளின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவுக்குக் குறைந்துள்ளது. மக்கள் தொடர்புச் சாதனங்கள் அனைத்தின் வாயிலாகவும் மதுவின் தீமைகளை எதிர்த்துப் பெருமளவிலான பிரச்சார இயக்கம் ஒன்றும் தொடங்கப்பட்டுள்ளது. 7 கோடி ரூபாய் செலவில் மதுவிலக்குச் செயலாக்கப் பிரிவை மேலும் வலுப்படுத்துவதன் மூலம், கள்ளச் சாராயத்தை எதிர்த்து மேற்கொள்ளும் நடவடிக்கைகளை இன்னும் முனைப்பாக்க நாங்கள் முடிவு செய்துள்ளோம். இதன் படி, ஒவ்வொரு காவல் துணைக் கோட்டத்திலும் மதுவிலக்குச் செயலாக்கப் பிரிவின் ஓர் அலகு ஏற்படுத்தப்படும். இவற்றின் துணை கொண்டு, மதுவிலக்குச் செயலாக்கப் பிரிவு கள்ளச்சாராயத் தொழிலில் ஈடுபட்டுள்ள சமூக விரோத சக்திகளுக்கெதிராகப் பயனுள்ளவகையில் செயற்படமுடியும். அரசு மக்களின் நலனுக்கே மிக உயர்ந்த முக்கியத்துவம் அளிக்கிறது. இந்த வகையில், ஏற்படும் வருவாய் இழப்பையும் பொருட்படுத்தாமல், உயர்ந்தபட்ச சமூக நலனையே அரசு பெரிதெனக் கருதி வருகிறது. அயல்நாட்டுவகை மதுக் கடைகளுடன் இணைந்துள்ள "மது அருந்துமிடங்களுக்கு" (Bars) வழங்கப்பட்டுள்ள உரிமங்களை, 1993 ஜூனில் தொடங்கும்




ஆயத்தீர்வை ஆண்டிலிருந்து ரத்து செய்துவிடுவதென்று அரசு மேற்கொண்டுள்ள முடிவை இம்மாமன்றத்தின் உறுப்பினர்கள் முழுமனதுடன் வரவேற்பார்கள் என்று நம்புகிறேன்.

9. பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வேலைவாய்ப்பிலும், கல்வியிலும் இடஒதுக்கீடு அளிப்பது குறித்து உச்சநீதி மன்றம் தீர்ப்பு அளித்துள்ளதைத் தொடர்ந்து எழுந்துள்ள நிலைமை நமக்குப் பெருங்கவலை தரக்கூடிய மற்றொரு சமுதாயக் கொள்கைப் பிரச்சினையாகும். மண்டல் குழுவின் பரிந்துரைகளைச் செயல்படுத்தும்போது, ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 50 சதவீத இடஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்துகின்ற தீர்மானம் ஒன்றை 1991 செப்டம்பர் 30ஆம் நாளன்று இந்த அவை நிறைவேற்றியதை மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கு நினைவுகூர வேண்டுகிறேன். இப்போது தமிழ்நாடு, சமூகக் கொந்தளிப்பிலிருந்து விடுபட்டுக் காணப்படுகின்றது என்றால், அதற்கு பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 50 சதவீத இட ஒதுக்கீடு வழங்கப்படும் வகையில் பரந்த நோக்கோடு எடுத்த குறிப்பிடத்தக்க நடவடிக்கையே காரணமாகும். இப்போது மொத்த இட ஒதுக்கீடு 69 சதவீதமாக உள்ளது. இது, பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான வாய்ப்புகள் பெருகுவதற்கு உதவியுள்ளது. இவ்வளவு சிறப்பாகத் தொடங்கப்பட்ட இந்த நடவடிக்கையின் பலன், அரசியலமைப்புச் சட்டத்தில் யாருக்காக இந்தச் சிறப்பு விதித்துறை

(-37 ஆம் பக்கம் பார்க்க)






தருமபுரி மாவட்டம் :



# சிறந்த காவல் நிலையம்

தருமபுரி மாவட்டச் சிறப்பிதழ் தயாரிக்கச் சென்ற நாம் - மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொகுதியான பருகூரில் சட்டம் ஒழுங்கு நிலைமை எப்படியிருக்கிறது என்பதை அறிய அவ்வூர் காவல் நிலையத்திற்குப் போனோம். முன்னறிவிப்பில்லாமல் நாங்கள் சென்றதால் காவல் நிலைய ஆய்வாளர் திரு. வி. இராமமூர்த்தி அங்கில்லை; அலுவலகப் பணி காரணமாகத் தருமபுரிக்குப் போய்விட்டிருந்தார்; உதவி ஆய்வாளர் திரு. கே.என். முரளி கிடைத்தார்.

நாங்கள் அவரிடம் எங்கள் வருகையின் நோக்கத்தைத் தெரிவித்தோம். ''இந்த மாவட்டத்திலேயே முதல் தரக் காவல் நிலையமாக எங்கள் காவல் நிலையம்தான் சார் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறது...'' என்று உற்சாகத்தோடு எடுப்பான குரலில் பேசலானார் திரு. கே.என். முரளி. மேலும் அவர் தெரிவித்தவை இவை:

மாண்புமிகு முதல்வர் அவர்களின் மிகக் கண்டிப்பான ஆணையை அமலாக்கும் விதத்தில், பருகூர் தொகுதியில் கள்ளச்சாராயம் காய்ச்சுவது அடியோடு ஒழிக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தொழில் மூலம் பிழைத்து வந்தவர்களுக்கெல்லாம் நாணயமான வேலைசெய்து குடும்பம் நடத்துமளவுக்குக் கடனுதவி பெற வகை செய்யப்பட்டுள்ளது.

இதனால் பக்கத்து மாநிலங்களி லிருந்து யாராவது மது கடத்தி வந்தால் கூட, இத்தொகுதியில் உள்ள பழம் பெருச் சாளிகள் அவர்களை நேரே காவல் நிலையத்திற்குப் பிடித்துக் கொண்டுவந்து நிறுத்திவிடுகிறார்கள்.

14 காவலர்கள் இந்தக் காவல் நிலையத்தில் இருக்கிறார்கள்;- ஆனால்,





பருகூரில்- கள்ளச் சாராயம் காய்ச்சுவதே தொழிலாகக் கொண்டிருந்து, பிறகு மனம் திருந்தி, வேறு நல்ல தொழில் செய்து வாழ்வோர்.

முதலாவது பக்க அட்டைப்படக் கட்டுரை:



# ஜவகர்லால் நேரு 10-வது தங்கக்கோப்பை இறுதிப் போட்டி: வெற்றி பெற்ற வீரர்களுக்கு முதல்வர் பரிசு

ஜவகர்லால் நேரு பத்தாவது தங்கக்கோப்பை சர்வதேசக் கால்பந்துப் போட்டியின் நிறைவு விழாவும், இறுதிக் கால்பந்தாட்டப் போட்டியும் சென்னை நேரு விளையாட்டரங்கில் 3.2.'93 அன்று மாலை நடைபெற்றது. மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு, இறுதிக் கால்பந்தாட்டப் போட்டியில் வெற்றி பெற்ற வீரர்களுக்குப் பரிசுகளும் பதக்கங்களும் வழங்கிச் சிறப்பித்தார்.

சென்னை நேரு விளையாட்டரங்கில் ஜனவரி மாதம் 19-ஆம் தேதி முதல் நடைபெற்று வந்த 10-வது ஜவகர்லால் நேரு தங்கக்கோப்பை அழைப்பு சர்வதேசக் கால்பந்துப் போட்டியில் இந்தியா உட்பட ருமேனியா, ரஷ்யா, பின்லாந்து, கேமரூன், வடகொரியா, பொலிவியா, இந்தியா ஆகிய ஏழு நாடுகள் கலந்துகொண்டன. இந்தக் கால்பந்தாட்டப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் ருமேனியா மற்றும் வடகொரியா அணிகள் மோதின.

ஆரம்ப்ம் முதலே ஆட்டம் விறுவிறுப்பாக இருந்தது. கடந்தமுறை சாம்பியனான ருமேனியா அணி வடகொரிய அணியிடம் தோற்றது. வடகொரியா அணி முதன்முதலாக ஜவகர்லால் நேரு தங்கக்கோப்பைக் கால்பந்தாட்டப் போட்டியில் கலந்துகொள்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. ஆட்டத்தின் ஒவ்வொரு பாதியிலும் வடகொரிய அணியினர் தலா ஒரு கோல் போட்டு 2-0 என்ற கோல் கணக்கில் ருமேனியா அணியினரைத் தோற்கடித்தனர். இந்தப் போட்டியில் ருமேனியா அணியினருக்குக் கோல் போடப் பல வாய்ப்புகள் கிடைத்தும் சந்தர்ப்பத்தை நழுவவிட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

வடகொரிய அணியின் முதல் கோலைப்போட்ட கோய் யாங்சன், இந்தக் கோலைப் போட்டதன் மூலம் இந்த ஆட்டத் தொடரிலேயே அதிகக் கோல்கள் போட்ட வீரர் என்ற பெருமையைத் தட்டிச் சென்றார். (இவர் போட்டது மொத்தம் 5 கோல்கள்.)

**ஜவகர்லால் நேரு 10-வது தங்கக்கோப்பையை வென்றதன் மூலம் இந்தக் கோப்பையை வெல்லும் முதல் ஆசிய நாடு என்ற பெருமையையும் வடகொரியா பெற்றது.**

பின்னர் நடந்த பரிசளிப்பு விழாவில் மாண்புமிகு முதல்வரும், போட்டியின் அமைப்புக் குழுத் தலைவருமான புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் கலந்துகொண்டு பரிசுகளை வழங்கினார்.

முதலில், இறுதிப் போட்டியில் இரண்டாவது இடத்தைப் பெற்ற ருமேனியா அணி தலைவருக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ரன்னர் கோப்பையையும், ரூ.25 ஆயிரம் ரொக்கப் பரிசினையும் வழங்கினார். பின்னர் 10-வது ஜவகர்லால் நேரு தங்கக்கோப்பையையும், ரூ.50 ஆயிரம் ரொக்கப் பரிசையும் போட்டியில் வென்ற வடகொரிய அணியின் தலைவருக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார். இரு அணிகளைச் சார்ந்த ஒவ்வொரு வீரருக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் பதக்கம் அணிவித்து சான்றிதழ்களை வழங்கினார்.

**இந்திய அணிக்கு விருது**

10-வது ஜவகர்லால் நேரு தங்கக் கோப்பை கால்பந்தாட்டப் போட்டியில் கலந்துகொண்ட அணிகளில் விதிமுறைகளுக்கு உட்பட்டு நெறி தவறாமல் சிறப்பாக ஆடியதற்காக (Fair play) இந்திய அணிக்கு விருது வழங்கப்பட்டது. இந்த விருதினை இந்திய அணியின் மேலாளர் திரு. கே.எஸ். பத்மராஜன். அவர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களிடமிருந்து பெற்றுக் கொண்டார்.

கடந்த ஆண்டின் சிறந்த ஆட்டக்காரருக்கான விருதினை, இந்திய வீரர் திரு. ஐ.எம். விஜயனுக்கு முதல்வர் அவர்கள் வழங்கினார்.

இந்தச் சர்வதேசக் கால்பந்தாட்டப் போட்டியினைச் சிறப்பாக நடத்திய நடுவர்களுக்கும், ஆசிய கால்பந்தாட்டக் கூட்டமைப்பின் அமைப்பாளருக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் நினைவுப் பரிசுகளை வழங்கினார்.

பின்னர், விழாக் குழுவின் சார்பில் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரும், போட்டி அமைப்புக் குழுவின் துணைத் தலைவருமான திரு. அழகு திருநாவுக்கரசு அவர்கள் வெள்ளியினாலான நேரு விளையாட்டரங்க மாதிரியொன்றை நினைவுப் பரிசாக மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் வழங்கினார். அகில இந்தியக் கால்பந்தாட்டக் கூட்டமைப்பின் தலைவர் திரு. பிரியரஞ்சன்தாஸ் முன்ஷி, போட்டியின் இயக்குநர் திரு. சி.ஆர். விஸ்வநாதன் ஆகியோரும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நினைவுப் பரிசுகளை வழங்கினார்கள்.

இதுவரை நடந்த ஆட்டங்களிலேயே இறுதி போட்டியன்றுதான் அதிக எண்ணிக்கையில் ரசிகர்கள் வந்திருந்தனர். சுமார் 50 ஆயிரம் ரசிகர்கள் இந்த இறுதிப் போட்டியைக் கண்டுகளித்தனர்.

தமிழகச் சட்டப் பேரவைத் தலைவர் திரு சேடப்பட்டி முத்தையா, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு டி.வி. வெங்கட்ராமன், மற்றும் உயர் அதிகாரிகள், காவல்துறைத் தலைவர் திரு. ஸ்ரீபால், இந்திய ஒலிம்பிக் சங்கத் தலைவர் திரு. பா. சிவந்தி ஆதித்தன் ஆகியோரும் நிறைவு விழாவில் கலந்துகொண்டனர்.

**நிகழ்ச்சித் தொகுப்பு: சந்திரன்.**





BEST
COMPLIMENTS
FROM



M/s. POPULAR STEELS
AND
ROSHAN GRANITE
Krishnagiri
Dharmapuri District




# அண்ணா-எம்.ஜி.ஆர். ஆகியோர் கண்போல் கட்டிக்காத்த இரு மொழிக் கொள்கையை இவ்வரசு தொடர்ந்து தீவிரமாகப் பின்பற்ற உறுதிபூண்டுள்ளது

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

பேரறிஞர் அண்ணா வகுத்துத் தந்த இரு மொழிக் கொள்கையில் அ.இ.அ.தி.மு.கழகம் இப்போதும் உறுதியாக உள்ளது. தொடர்ந்து இக் கொள்கையில் உறுதியோடு இருக்கும். தமிழ், மாநில ஆட்சி மொழியாகவும், ஆங்கிலம் அகில இந்தியத் தொடர்பு மொழியாகவும் இருக்க வேண்டும் என்கின்ற எங்கள் நிலையில் எவ்வித மாற்றமும் இல்லை. இனி இருக்கப் போவதும் இல்லை.

அண்மையில், மத்திய அரசு, தொலைக்காட்சியில் தமிழ் மொழி நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்படும் நேரத்தை மாற்றி இந்தி மொழி நிகழ்ச்சிகளுக்கு, அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளது. இதனால், தமிழக மக்கள் அதிருப்தி அடைந்துள்ளார்கள் என்பது மட்டுமல்ல; கட்டாயமாக நம் மீது இந்தியைத் திணிக்க, மீண்டும் மத்திய அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாகக் கருதி, தமிழகமெங்கும் பலத்த எதிர்ப்புக் கிளம்பி உள்ளது.

தமிழக மக்களின் உணர்வுகளே எங்கள் உணர்வுகள் என்ற நிலையில், அந்த உணர்வுகளைப் பிரதிபலிக்கும் வகையில், அவற்றை மத்திய அரசிற்குத் தெரிவிக்கும் முகத்தான் ஒரு தீர்மானத்தை இந்தப் பேரவையில் நிறைவேற்றுவது இந்த அரசின் கடமை எனக் கருதி, கீழ்க் கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

இத்தீர்மானம் தமிழக மக்களின் ஒட்டுமொத்த உள் உணர்வுகளைப் பிரதிபலிக்கின்ற வகையில் அமைந்துள்ளது என்பதை, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும், கட்சிப் பாகுபாடுகளுக்கு அப்பாற்பட்டு ஏற்றுக் கொள்வார்கள் என்று நம்புகின்றேன். எனவே, தீர்மானத்தைப் பேரவை ஒருமுகமாக நிறைவேற்றித் தர வேண்டுமென மாண்புமிகு பேரவைத் தலைவர் மூல்மாக அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.



## சட்டப்பேரவையில் மாண்புமிகு முதல்வர் தீர்மானம்

மாண்புமிகு முதல்வர் அவர்கள் (10.2.1993 அன்று) முன்மொழிந்த அரசினர் தனித் தீர்மானம்:

"கட்டாய இந்தி மொழித் திணிப்புக் கூடாது என்று பேரறிஞர் அண்ணா அவர்களின் ஆட்சிக் காலத்திலும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஆட்சிக் காலத்திலும் தமிழக மக்களின் எண்ணத்தை வலியுறுத்தும் வகையில் இம் மாமன்றத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்

அவர்களுக்கான குடியிருப்பில் அத்தனை வீடுகள் இல்லை; அதன் எண்ணிக்கையும், காவலர் எண்ணிக்கையும் அதிகரிக்கப்பட வேண்டும் என அவர்கள் அரசுக்குக் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். மிகத் துரிதமாக வேலை வாய்ப்புத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வரும் இத்தொகுதியில் பெண் காவலர்களும் நியமிக்கப்பட வேண்டுமென கோரப்பட்டிருக்கிறதாம்.

கொலை, கொள்ளை போன்ற பயங்கரக் குற்றங்கள் எதுவும் இதுவரை இந்தச் சரகத்தில் இல்லை.

பருகூர் காவல் நிலையத்தைப் பற்றி ஒருமுறை ஒசூர் தொகுதி காங்கிரஸ் கட்சியின் சட்டமன்ற உறுப்பினரான திரு. கே.ஏ. மனோகரன் சட்டமன்றத்தில் கூறியது இது: ''கள்ளச் சாராயத்தை அடியோடு ஒழிக்கப் பாடுபட்ட பர்கூர் காவல் நிலையக் காவலர்களின் பலன் கருதாத பணிக்காகவே, அரசு அவர்களுக்கு நல்ல பல சலுகைகளையும் செய்யலாம். டி.வி.எஸ்.50 அல்லது சைக்கிளாவது அங்குள்ள ஒவ்வொருவருக்கும் வாங்கித் தரலாம்.''

பருகூர் காவல் நிலையத்தில், சிறிய தோர் மருந்துக்கடை அளவில் ஒரு பெரிய முதலுதவிப் பெட்டியே வைத்திருக்கிறார்கள். எங்காவது அடிதடி என்று காயம்பட்டு வருகிறவர்களுக்காகவாம் இது.



பருகூர் மலைப்பகுதியில் நடந்த கள்ளச் சாராய வேட்டை.

பருகூரிலிருந்து தருமபுரிக்கு வந்த நாம், அந்தச் சூட்டோடு சூடாகக் காவல் துறை மாவட்டக் கண்காணிப்பாளரைப் போய்ப் பார்த்தோம்.

தமிழகக் காவல்துறையில் 'ஹானஸ்ட்' குப்புசாமி என்றோர் உயர் அதிகாரி இருந்தாரல்லவா? அந்தப் புகழ்மிக்க அலுவலரின் மகன் திரு. இராமானுஜம் தான் தருமபுரி மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர் என்றறிந்த மகிழ்வுடன் நாங்கள் அவர் அறைக்குள் நுழைந்தோம்.

அவர் தலைக்குமேலே - சுவரில் -
'அன்பின் வழியது உயிர்நிலை
அறிவின் வழியது உயர்நிலை
செய்யும் தொழிலே தெய்வம்...'
- என்கிற அர்த்தமுள்ள அறிவிப்புப் பலகைகள் காட்சி தந்தன. கல்லுக்குள்ளும் ஈரம் என்பதைப் போலக் காக்கிச் சட்டைக்குள்ளும் கனிவும், அமைதியும் இருக்கும் என்பதை நிதானமான அவருடைய பேச்சும் நடவடிக்கைகளும் நமக்குணர்த்தின. - பி.எல்.ஆர்.


நல்வாழ்த்துக்கள்

சந்திரா டிரேடர்ஸ்
கிருஷ்ணகிரி

எங்களிடம் ரெடிமேட் ரகங்கள், நவீன வீட்டுச் சாமான்கள்
மலிவான விலையில் கிடைக்கும்.

பஸ்வேஸ்வரா ஸ்டோர்ஸ்
கிருஷ்ணகிரி நர்சரி,
தொகரப்பள்ளி

எல்லா ரக மாங்கன்றும், இதர பழவகைச் செடிகளும்
தரமானதாகக் கிடைக்கும்.




தருமபுரியின்

# தொல் பழங்காலம்

சுமார் 50,000 ஆண்டுகட்கு முன்னாலேயே தருமபுரி பகுதியில் மனிதன் வாழ்ந்துள்ளான் என்பதை அண்மையில் தொல்லியல் ஆய்வாளர்கள் - இப்பகுதியில் ஆய்வு செய்து கண்டு பிடித்துள்ளனர். கிருஷ்ணகிரி வட்டம் ஹட்டன பள்ளிக்கு அருகே உள்ள மலையடிவாரத்தில் ஏராளமான பழைய கற்காலக் கருவிகள் மற்றும் அதனுடன் கூடிய கிளீவர், கீரிப்பர் எனும் முட்டை வடிவிலுள்ள கல் ஆயுதங்களும் இங்கு சேகரிக்கப்பட்டன; இதனைக் கொண்டே தருமபுரி மாவட்டம் 50,000 ஆண்டுகட்கு முந்தைய வரலாற்றைத் தன்னகத்தே கொண்டுள்ளது என்று நாம் உறுதியாக எண்ண முடியும்.

அடுத்து பர்கூர் அருகே அமைந்துள்ள தொகரப் பள்ளி, கப்பலவாடி பகுதியில்தான் தொல்லியல் மற்றும் புவியியல் ஆய்வாளர் ராபர்ட்புருஸ்புட் இப்பகுதியில் முதன்முதலாகப் புதிய கற்காலக் கருவிகளைக் கண்டு பிடித்துள்ளார். மல்லப்பாடி குகையில் தமிழகத் தொன்மையைப் பறைசாற்றும் வகையில் முதன்முதலாக வரலாற்றுக்கு முந்தைய கால ஓவியங்கள் இங்குதான் கண்டுபிடிக்கப் பட்டன. பின்னரே ஆய்வாளர்கள் தமிழகத்தின் பிற பகுதிகளில் இவ்வோவியங்கள் இருப்பதைக் கண்டனர்.

பெருங்கற்காலம் என்ற பண்பாட்டைச் சார்ந்த மக்கள் வாழ்ந்த காலம் சுமார் 2,500 ஆண்டுகட்கு முற்பட்டது. அந்த மக்கள் பயன்படுத்திய பொருட்கள் தருமபுரி மாவட்டத்தில் அனைத்து வட்டங்களிலும் நிறைந்து காணப்படுகின்றன. கல்திட்டை, குத்துக் கல், கல்பதுக்கை, தாழி, ஈமப்பேழை என்னும் அனைத்து வகையான சின்னங்களையும் இம் மாவட்டத்திலே காண முடியும்.

மல்ல சந்திரம், மல்ல சமுத்திரம் ஆகிய பகுதிகளில் அதிக அளவு இதுபோன்ற நினைவுச்



சின்னங்கள் குன்றுகளின்மேல் அமைந்துள்ளதைக் காணலாம். பாலக்கோடு, திருமல்வாடி பகுதியில் குத்துக்கல் என்ற நினைவுச்சின்னம், கல் வட்டங்கள் போன்றவற்றைக் காணலாம்.

அடுத்ததுசிறப்பு நடுகற்கள். இங்கு இறந்துபட்ட வீரனுக்குக் கல் எடுத்து—பேரும், அவன் புகழையும் அதில் பொறித்து விழா எடுத்து சிறப்பிப்பது வழக்கம். அவை இங்கு கி.பி. 4-ஆம் நூற்றாண்டு முதல் தொடர்ந்து விசயநகர காலம் வரை வழக்கில் இருந்து வருவதை நாம் ஆங்காங்கே கிடைக்கும் சான்றுகளைக் கொண்டு காணலாம்.

குழுவின மக்களின் வாழ்க்கை முறையே இங்கு அதிகமாக இருந்துள்ளது. எனவே நடுகல் பண்பாடு சிறப்பு பெற்றுத் திகழ்ந்துள்ளது.

எனவே, தருமபுரி மாவட்டம் வரலாற்றுக்கு முந்தைய காலம் முதல் தொடர்ந்து விசயநகர காலம் வரை மிகவும் சிறப்புடன் திகழ்ந்தமைக்கு தொடர்ச்சியாகக்கிடைக்கும் சான்றுகள் இப்பகுதியில் ஏராளம், ஏராளம்!

—ச. செல்வராஜ்

## இராமாயணக் கோயில்

தென்கரைக் கோட்டையில் உள்ள இராமர் கோயிலுக்கு ஒரு தனிச் சிறப்பு உண்டு; எல்லாக் கோயில்களையும் போலன்றி, இங்குள்ள கோயிலில் - இராமன், லட்சுமணன், பரதன், சீதை, அனுமன் எல்லோருக்குமே கர்ப்பகிரகத்தில் விக்கிரகங்கள் வைக்கப்பட்டுள்ளன. - வாலிக்கும் இங்கே தனிச் சந்நிதானம்.

என. அவற்றில் தெளிவுற வலியுறுத்தப்பட்ட இருமொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதுதான் இந்த அரசின் உறுதியான கொள்கை ஆகும். அதுவே தமிழக மக்கள் அனைவரின் முழுமையான விருப்பமும் ஆகும்.

இந்தி மொழி பேசாத மக்கள்மீது நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ, இந்தி மொழியைத் திணிப்பதற்கான நடவடிக்கைகள் அவ்வப்போது எடுக்கப்பட்டு வருவது, இந்தி மொழி பேசாத மக்களுக்குப் பெருங்கவலையையும், அச்சத்தையும் ஏற்படுத்தி வருகின்றது. இந்தி மொழி பேசாத மக்கள், மாற்றம் ஒன்றை விரும்பாத வரையிலும் ஆங்கிலமே இணையத்தின் ஆட்சி மொழியாகத் தொடர்ந்து இருந்து வரும் என்ற உறுதிமொழி பண்டித ஜவகர்லால் நேரு அவர்களால் தரப்பட்டு, அவருக்குப்பின் வந்த பாரதப் பிரதமர்கள் அனைவராலும் தொடர்ந்து உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த உறுதிமொழியினை அரசமைப்புச் சட்டத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று மீண்டும் மீண்டும் வற்புறுத்தி வந்திருக்கின்றோம்.

பேரறிஞர் அண்ணாவின் வழியில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் அடிச்சுவட்டில் நடந்து வரும் தமிழக அரசு, அப்பெருந்தலைவோர்கள் கண் எனக் கட்டிக் காத்து வந்த இருமொழிக் கொள்கையை எல்லா வகையிலும் செயல்படுத்தி வருகிறது. தொடர்ந்து அதனைக் கட்டிக்காத்து தீவிரமாகப் பின்பற்ற உறுதி பூண்டு உள்ளது.

இந்நிலையில், தமிழகத்திற்கு மட்டுமென்றே சென்னைத் தொலைக்காட்சி நிலையத்தின் முதல் அலைவரிசை நிகழ்ச்சிகளைத் தமிழில் இரவு 9.00 மணி வரை ஒளிபரப்பக் கொடுத்திருந்த பிரத்தியேக அனுமதியை மைய அரசு தன்னிச்சையாகக் கடந்த 1.1.1993 முதல் இரவு 8.45 மணி வரைதான் என்று குறைத்து ஆணையிட்டுச் செயல்படுத்தத் தொடங்கியுள்ளது.

இந்த நேரக்குறைப்பை ஈடு செய்யும் வகையில் தொலைக்காட்சித் தமிழ் நிகழ்ச்சிகளை முன் கூட்டியே தொடங்கப்படுகின்றன என்ற முகாந்திரம் அளித்தாலும், இரவு 9.00 மணி வரை காட்டப்பட்ட தமிழ் நிகழ்ச்சிகள் தற்போது 8.45 மணிக்கே முடிவடைகின்றன என்பதையும், பெரும்பாலான மக்கள் பார்க்கக்கூடிய இந்த நேரத்தை மைய அரசு குறைத்திருப்பது, மறைமுகமாக இந்தி மொழி ஆதிக்கத்தைப் புகுத்த மேற்கொண்ட முயற்சியோ என்று ஐயுறப்படுகிறது.

மேலும் தற்போது தொலைக்காட்சியில் காண்பிக்கப்படும் அறிவியல் நிகழ்ச்சிகள், தேசிய ஒளிபரப்பு நிகழ்ச்சிகள் மற்றும் உயர் கல்வி ஒளிபரப்பு நிகழ்ச்சிகள் பெரும்பாலும் இந்தி மொழியிலேயே அமைந்துள்ளன. எனவே, தமிழகத்திலுள்ள மக்கள் இந்நிகழ்ச்சிகளினால் பயன் பெறும் வாய்ப்பை இழந்த நிலையில் உள்ளனர். மத்திய அரசின் தகவல் தொடர்புச் சாதனங்கள் இந்த அளவு இந்தி மொழி நிகழ்ச்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளது, இந்தித் திணிப்பை தீவிரப்படுத்தப்பட்டுள்ளதோ என்ற ஐயப்பாடு தமிழக மக்கள் மனதில் ஏற்படுத்தி, ஒரு பதட்ட நிலையை உருவாக்கி உள்ளது.

தமிழக மக்களின் மனத்தில் எழுந்துள்ள உண்மையான அச்ச உணர்வுகளையும், கவலைகளையும் முழுமையாகப் போக்கும் வகையில் மீண்டும் இரவு 9.00 மணி வரை தமிழ் நிகழ்ச்சிகளைச் சென்னைத் தொலைக்காட்சி நிலையத்தினர் ஒளிபரப்ப அனுமதி அளிக்க வேண்டும் என்றும் மாநில மொழியாகிய தமிழ் மொழிக்கு, அரசமைப்புச் சட்டத்தில் கொடுத்துள்ள உரிய இடத்தை மதித்துச் செயல்படும் வகையிலும், பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் அளித்த உறுதி மொழியைக் காக்கும் வகையிலும், மாநில மொழிக்கு மாநிலத்தில் அதிக முக்கியத்துவம் அளிக்கும் வகையிலும் மத்திய அரசு எல்லா நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும் என்றும் இம் மாமன்றம் மத்திய அரசைக் கேட்டுக்கொள்கிறது

பொதுமக்களுடன் அன்றாடமும் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது அஞ்சல் சேவை. தனது சமூகப் பொறுப்பை உணர்ந்துள்ள அஞ்சல் துறையும் தன்னால் இயன்றவரை தன் பணியைச் செவ்வனே செய்து வருகிறது.

முன்னேற்றம் என்பது ஒரு தொடர் நிகழ்வு. எனவே, சேவையில் குற்றம் குறைகள் இருப்பின், அவற்றை உடனே களைவது மிகவும் அவசியமாகிறது. இதற்கு உதவும் முகமாக அனைத்து அஞ்சலகங்களிலும் புகார் - ஆலோசனைப் புத்தகம் வைக்கப்பட்டுள்ளது. இதில் குறிக்கப்படுபவை, தகுந்த விசாரணை மற்றும் மேல் நடவடிக்கைக்காக உரிய அதிகாரிக்குத் தெரிவிக்கப்படுகின்றன.

அஞ்சலகங்களின் தலைமை நிர்வாக அதிகாரிகள், தம்மை நேரில் சந்தித்துப் புகார் தெரிவிக்க வரும் பொதுமக்களைச் சந்திப்பதற்காக, புதனன்று எந்தவொருகூட்டத்திலும் கலந்து கொள்ளாமல் அலுவலகத்திலேயே இருக்கவேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

முக்கியத் தலைமை அஞ்சல் அலுவலரால் மூன்று மாதத்திற்கு ஒரு முறை 'டாக் அதாலத்' எனப்படும் அஞ்சல் தீர்ப்பாயம் ஏற்பாடு செய்யப்படுகிறது. இதுகுறித்து முன்பாகவே அறிவிப்பும் செய்யப்படுகிறது. அஞ்சல் கோட்டங்களிலும் கூட இதே முறை பின்பற்றப்படுகிறது. இந்தத் தீர்ப்பாயங்களில் பொதுமக்கள் தமது புகார்களை நேரில் தெரிவித்து உடனுக்குடன் தீர்ப்பும் பெற வழி செய்யப்பட்டுள்ளது.

'Help us to help you' என்பதாக இது அனைவருக்கும் நன்மை அளிப்பதாய் அமையுமன்றோ!



# சட்டமன்றத்தில்



★ கள்ளச்சாராயம் எங்கு காய்ச்சினாலும் விற்கப்பட்டாலும் இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது தயவு தாட்சண்யம் இன்றி கடும் நடவடிக்கை எடுக்கும்படி மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

★ தொழில் நிறுவனங்களுக்கு மட்டுமே வரி விதிக்கப்படுகிறது. பங்குதாரர்களுக்கு வரி விதிக்கப்படமாட்டாது என்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. அழகு திருநாவுக்கரசு அவர்கள் கூறியுள்ளார்.

★ திருத்தணி நகரில் ரூ.1.20 கோடி மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையம் அமைக்கப்பட உள்ளது.

★ திருச்சி மத்தியப் பேருந்து நிலையத்துக்கு அருகில் ராஜாஜி டி.பி. சானடோரியம் அமைந்துள்ள இடத்தில், புறநகர் பேருந்து நிலையம் அமைக்கவும், தற்போதுள்ள பேருந்து நிலையத்தை நகரப் பேருந்து நிலையமாகப் பயன்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

★ பட்டதாரி ஆசிரியர்களாக வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ள 247 பார்வையற்றோரில் 154 பேருக்கு இதுவரை வேலை கொடுக்கப்பட்டுள்ளது.

★ இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்குத் தமிழகத்தில் மொத்தம் 514 கோடி பயணிகள் பேருந்துகளைப் பயன்படுத்துகிறார்கள். சுற்றுலா வேன்கள் 7,203 உள்ளன.

★ நலிந்த ஆலைகளை நவீனமயப்படுத்த ரூ.7 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

★ மதுரை மாநகராட்சி, சாலைகளைப் பழுது பார்த்து பராமரிக்க இவ்வாண்டு ரூ.1.5 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

★ திருச்சி வரகூர் தொகுதி உறுப்பினர் திரு.பொன்னுவேல் தமது பகுதியில் பேருந்து வசதி செய்து தரும்படி கோரினார். உடனே மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு.கே.ஏ. செங்கோட்டையன் ''நாளை காலையிலிருந்து குறிப்பிட்ட அப்பேருந்தை இயக்க நடவடிக்கை எடுக்கப்படும்'' என்று உறுதி அளித்தார்.

★ நடப்பு ஆண்டில் தமிழகத்தில் சத்துணவுக் கூடங்களுக்குப் பதிலாக 1,400 கட்டடங்கள் கட்டப்படும்.

★ கடந்த ஆண்டு ரூ.35 கோடியில் 500 புதிய கட்டடங்கள் ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் கட்டப்பட்டன.

★ பம்பாயில் இருந்து தமிழகம் வந்துள்ள 6000 பேரில் இங்கேயே நிரந்தரமாகத் தங்க உத்தேசித்திருப்பவர்கள் இங்கு தொழில் தொடங்க விரும்பினால் அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் பொருட்டு தமிழக அரசு தேவையான உதவிகளை



நிச்சயம் செய்யும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறியுள்ளார்.

★ இந்த ஆட்சி பொறுப்பேற்று 1½ ஆண்டுகளில் ரூ.20,000 கோடிக்கு முதலீடு கிடைத்துள்ளது. புதிய தொழில் முனைவோருக்கு உடனடியாக நிலம், மின்சாரம் தண்ணீர் போன்ற தேவைகளைப் புரிந்து அதைச் செய்து கொடுக்க 'டான்சிட்' என்ற கார்ப்பரேஷன் தொடங்கப்பட்டுள்ளது என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறியுள்ளார்.

★ அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் இருந்து பலர் இந்தியாவில் முதலீடு செய்ய விரும்பும்போது, முதலில் தமிழ்நாட்டில்தான் முதலீடு செய்ய விரும்புகிறார்கள் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறியுள்ளார்.

★ ஆராய்ச்சி போன்ற முக்கிய விஷயங்களை மனதில் கொண்டுதான் அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகம் கொடைக்கானலில் அமைய வேண்டும் என்று அன்றைய முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் இடத்தைத் தேர்வு செய்தார். ஆனால், அதற்குப் பின்னர் வந்த ஆட்சியாளர்கள் குடிநீர் இல்லை என்று காரணம் காட்டி சட்ட விரோதமாகச் சென்னைக்கு மாற்றிவிட்டனர். இதை ஆராய்ந்த அரசு மீண்டும் கொடைக்கானலுக்கே பல்கலைக் கழகத்தைக் கொண்டு செல்ல முடிவெடுத்து உள்ளது. மாணவர்களுக்கு முழுப் பாதுகாப்பும், பல்கலைக் கழகத்துக்கு அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்படும் என்று மாண்புமிகு கல்வியமைச்சர் திரு. செ. அரங்கநாயகம் அவர்கள் தெரிவித்துள்ளார்.

★ தமிழ்நாட்டில் மொத்தம் பத்து இறால் பண்ணைகள் உள்ளன. இவற்றின் மூலம் நான்கு இலட்சத்து 50 ஆயிரம் டன் இறால் மீன் உற்பத்தி செய்து பிடிக்கப்பட்டுள்ளது. இது இந்த ஆண்டு அதிகரிக்கும். கடந்த ஆண்டு தமிழ்நாட்டில் இருந்து இறால் ஏற்றுமதி செய்யப்பட்டதன் மூலம் மத்திய அரசுக்கு ரூ.228 கோடி அன்னியச் செலாவணி கிடைத்துள்ளது என்று மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு. ஜெயக்குமார் அவர்கள் தெரிவித்துள்ளார்.

**(4.2.93-இல் தொடங்கி 13.2.93-இல் நிறைவுற்ற சட்டமன்றக் கூட்டத்தொடரில் அறிவிக்கப் பட்ட அரசின் ஆக்கப் பணிகளின் சுருக்கமே இவை.)**

**இந்திய-சிங்கப்பூர் வர்த்தக மண்டலம் குறித்து, சிங்கப்பூரிலிருந்து வந்துள்ள உயர்மட்டக் குழுவினர் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களைத் தலைமைச் செயலகத்தில் சந்தித்தனர் (15.2.1993).**





# தென்னார்க்காட்டில் இளைஞர் வாரவிழா

ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் செயல்பட்டுவரும் 'நேரு கேந்திர'த்தின் நேரு இளைஞர் மையங்கள் மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் இளைஞர் அலுவல்கள் மற்றும் விளையாட்டுத் துறையின் கீழ் இயங்கி வரும் ஒரு இளைஞர் நலம் பேணும் அமைப்பாகச் செயல்பட்டு வருகின்றன.

கிராமப்புறங்களில் வாழும் மாணவர் அல்லாத இளையோர்களை இளைஞர் மன்றங்கள், மாதர் சங்கங்கள் மூலமாக ஒருமுகப்படுத்தி ஆக்கப்பூர்வமான பணிகளில் ஈடுபடுத்துவதே இந்த நேரு இளையோர் மையங்களின் தலையாய குறிக்கோள். தென்னார்க்காட்டில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட கிராமங்களில் இளைஞர் மன்றங்களும், மாதர் சங்கங்களும் நேரு இளைஞர் மையத்தால் கிராமப்புறங்களில் தொடங்கப் பட்டு, கிராமப்புற இளையோர்களிடையே ஒரு எழுச்சியை, விழிப் புணர்ச்சியை, சமுதாயப் பணி ஆர்வத்தை, மத இணக்கத்தை, தேசிய ஒருமைப்பாட்டு உணர்வைப் பல்வேறு செயல் திட்டங்கள் மூலமாக ஏற்படுத்தி வருகிறது.

இளையோர்களுக்கென்று சுயவேலை வாய்ப்புப் பயிற்சி, பல்வேறு அரசுத் திட்டங்கள் பற்றிய விழிப்புணர்ச்சியை அதைத் தொடர்ந்து தன்னம்பிக்கையை ஏற்படுத்தும் இளையோர் தலைமை தாங்கும் தகுதிக்கான பயிற்சிகள் உழைப்பின் உயர்வை உறுதிப் படுத்தி சமுதாயப்பணி முகாம்கள், எழுத்தறிவு அற்றவர்களுக்கு வாழ்வில் ஒளி ஏற்ற முதியோர் கல்வி மையங்கள், கிராமப்புறக் கலை, கலாச்சாரத்தைக் கட்டிக்காக்கும் நடவடிக்கைகள், துடிப்புள்ள விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளை உருவாக்கும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகள், மத இணக்கத்தை, சமூக ஒற்றுமையை, தேசிய ஒருமைப்பாட்டு உணர்வை வளர்க்கும் பல்வேறு தேச முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சிகள் இப்படிப் பல்வேறு நிகழ்ச்சிகளின் மூலம் இளைஞர்கள் - குறிப்பாகக் கிராமப் புற இளையோர்கள் பக்குவப்படுத் தப்பட்டு வருகிறார்கள்.

கிராமப்புற இளையோர் மையங்கள் நலிந்த பிரிவினருக்கு ஆற்றிவரும் சேவைகளின் அடிப் படையில் பார்த்தால் இளைஞர் மன்றங்கள் மொத்தத்தில் கிராமப் புற மக்களுக்கும் அரசுத்துறைகளுக்கும் இடையே ஒரு பாலமாக இருந்து செயல்பட்டு வருகின்றன.

இப்படி நாட்டு நலனுக்காகத் தன்னையே அர்ப்பணித்துக் கொண்டிருக்கிற இளைஞர் சக்திகளை நினைவுகூர்ந்து நன்றி சொல்லுகின்ற வகையில்தான் ஒவ்வொரு ஆண்டும் சுவாமி விவேகானந்தர் பிறந்த நாளான ஜனவரி 12-ஆம் நாள் தேசிய இளைஞர் நாளாகவும் 12-ஆம் நாள் முதல் 19-ஆம் நாள் வரை தேசிய இளைஞர் வாரமாகவும் கொண்டாடப்பட்டு வருகிறது.

இந்தத் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த இளைஞர் வாரவிழா ஜனவரி 12-ஆம் நாள் முதல் 19-ஆம் நாள் வரை தென்னார்க்காட்டில் நேரு இளையோர் மையத்தின் மூலம் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இதற்கான தொடக்க விழா கடலூரில் ஜனவரி 12-ஆம் நாளன்று நடைபெற்றது. மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர் திரு. எஸ்.ஆர்.ஜான் கிட், ஐ.பி.எஸ்., மாவட்ட வருவாய்த் துறை அலுவலர் திரு. டி.ஏ. சுப்பிரமணியம் தலைமையேற்றுத் தொடங்கிவைத்தார்.

இளையோர்கள் பங்குபெற்ற கவிஅரங்கம், பட்டிமன்றம், கருத்தரங்கம், கிராமியப் பாடல்கள், நடனங்கள் ஆகியவை நிகழ்ச்சியில் இடம் பெற்றன. அதைத் தொடர்ந்து ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கிராமத்தில் 13-ஆம் நாள் காணை ஒன்றியம் பெருகலம்பூண்டியில் கலைகலாச்சார நாளாகவும்-அதைத் தொடர்ந்து நாள்தோறும் குறிஞ்சிப்பாடி ஒன்றியம் அய்யம்பேட்டை மீனவர் கிராமத்தில் பங்கேற்பு நாளாகவும், கீரப்பாளையம் ஒன்றியம் பெரியநற்குணம் கிராமத்தில் இளையோர் சேவை நாளாகவும், கடலூர் சிங்காரத்தோப்பு கிராமத்திலும் பண்ருட்டி ஒன்றியம் வல்லம் கிராமத்திலும் உடல்திறன் நாளாகவும், மேல்மலையனூர் ஒன்றியம் ஞானோதயம் கிராமத்தில் அமைதி நாளாகவும், வானூர் ஒன்றியம் இராயப்பேட்டைக் கிராமத்தில் திறன் வளர்ப்பு நாளாகவும், சிறப்பு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டு, ஆங்காங்கே உள்ள இளையோர் மன்றங்களின் மூலம் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

இந்தச் சிறப்பு நிகழ்ச்சிகளைத் தவிர்த்து, தென்னார்க்காடு மாவட்டம் முழுவதும் பரவிக் கிடக்கும் இளையோர் மன்றங்கள் மூலமாக இந்த ஏற்பாடு ஒரு வாரக் காலத்தில் ஆக்கப்பூர்வமான பல பணிகள் நடந்தேறியது. இதன்மூலம் இளையோர் சக்தி ஒரு எழுச்சிமிக்க சக்தியாக மாறிவருவதைப் பரவலாகக் காணமுடிந்தது.

நிறைவு நாள் விழா, கடலூரில் 19-ஆம் நாளன்று மாவட்டக் கூடுதல் ஆட்சியர் திரு. வி. இறையன்பு, ஐ.ஏ.எஸ்., தலைமையில் நடைபெற்றது. மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஜி. இராமகிருஷ்ணன், இ.ஆ.ப., சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு 1992-ஆம் ஆண்டிற்கான மிகச் சிறந்த சேவை ஆற்றிய இளையோர்களுக்கு இளைஞர் விருதுகளை வழங்கிப் பாராட்டினார்.

மு. பாலசுப்பிரமணியன்
**ஒருங்கிணைப்பாளர்**
**நேரு யுவகேந்திரா**
**தெ.ஆ. மாவட்டம்**

TNPSC

விளம்பர எண்.5/93

## தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002.

### அரசு ஊழியர்கள் மற்றும் மற்றவர்களுக்கான துறைத் தேர்வுகள், மே, 1993.

அரசு ஊழியர்களுக்கும் மற்றவர்களுக்குமான அடுத்த துறைத் தேர்வுகள் (Departmental Tests) 1993-ஆம் வருடம் மே திங்கள் 3-ஆம் நாள் திங்கட்கிழமை முதல் மே திங்கள் 20-ஆம் நாள் வியாழக்கிழமை வரையிலும் நடைபெறவிருக்கின்றன. தேர்வாணைய அலுவலகத்திற்கு இதற்கான விண்ணப்பங்கள் வந்து சேர்வதற்கான கடைசி நாள் 1.3.1993 ஆகும். மே 1992 வரையில் சிறப்புத் தேர்வுகள் என்ற தலைப்பின் கீழ் நடைபெற்ற தேர்வுகள் அனைத்தும் அரசாணை எண்.21, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள் 10.1.1990-ன்படி ஒன்றாக சேர்த்து ஆணையிடப்பட்டு (Tamil Nadu Government Gazettee) அரசிதழ் எண். 48-D நாள் 18.12.1991-இல் வெளியாகியுள்ளது. இனி அவை துறைத் தேர்வுகள் என்றே அழைக்கப்படும். எனவே விண்ணப்பதாரர்கள் எத்தனை தேர்வுகள் எழுத விரும்பினாலும் ஒரே ஒரு விண்ணப்பத்தினை மட்டும் அனுப்ப வேண்டும். இதற்கான முழு விவரங்களையும் அதற்கான விண்ணப்பப் படிவங்களையும் பெறுவதற்கான கோரிக்கைகள் ரூ.8.00 அஞ்சல் தலையுடன் கூடிய சுய விலாசமிட்ட உறையுடன் (30 x 12 செ.மீ.) செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை-600 002 அவர்களுக்குத் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ தாங்கள் எழுத விரும்பும் தேர்வு அல்லது தேர்வுகள் போன்ற விவரத்தைக் குறிப்பிட்டனுப்பி பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பதாரர்கள் விண்ணப்பப் படிவத்தினைப் பெறுவதற்கு ஒரே ஒரு கோரிக்கை மனு மட்டும் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அவ்வாறு ரூ.8.00 அஞ்சல் தலையுடன் கூடிய சுய விலாசமிட்ட உறையுடன் (30 x 12 செ.மீ.) வரப்பெறாத கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டா. முன்பு நடைபெற்ற தேர்வுகளுக்காக வழங்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களை இத்தேர்வுக்கும் மற்றும் அடுத்து வரும் தேர்வுகளுக்கும் கண்டிப்பாக உபயோகிக்கக் கூடாது. இத்தேர்வுக்கென பெற்ற விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்து தேர்வுக் கட்டணத்திற்கான அஞ்சல் ஆணைகளுடன் அல்லது கேட்புக் காசோலையுடன் கையொப்பமிட்ட ஒரே மாதிரியான புதிய இரண்டு பாஸ்போர்ட் அளவுள்ள நிழற்படங்களையும் (Photographs) இணைத்து, விண்ணப்பங்கள் நேரடியாகத் தேர்வாணைய அலுவலகத்திற்கு 1.3.1993 அன்று மாலை 5.45 மணிக்குள் வந்து சேரும்படி அனுப்பப்பட வேண்டும்.

குறிப்பு: இவ்விளம்பரம் அரசுப் பணிகளில் புதிதாக நியமனத்திற்கோ அல்லது தற்காலிகப் பணியில் இருப்பவர்களுடைய பணியினை நிரந்தரப்படுத்துவதற்காகவோ அல்ல.

DIPR/146/MS/93


நல்வாழ்த்துக்கள்

**கிருஷ்ணகிரி வட்டம் லாரி உரிமையாளர்கள் சங்கம்**

எண்.59, தேர்நிலையத் தெரு, கிருஷ்ணகிரி.



லேலண்டு மற்றும் பென்ஸ்
வண்டிகளுக்கு உதிரிப் பாகங்கள்
கிடைக்கும்.

தலைவர்:
எஸ். சவுரியப்பன்

செயலாளர்:
கணேஷ்சிங்

மற்றும்
அங்கத்தினர்கள்.




## மாணவர் பக்கம்

### தெரிந்து கொள்ளுங்கள்

#### தானம்

மூன்று மாதத்திற்கு ஒரு முறை ஒருவர் இரத்த தானம் செய்யலாம். யார் அவர் ? ..... 18 வயது முதல் 60 வயது வரை உள்ள ஆரோக்கிய மான நபர்.

இரத்த தானம் செய்வதால் ஒருவருக்கு எவ்வித இழப்பும் இல்லை. தொண்டுள்ளம் படைத்த நல் உள்ளங்கள் இந்நாட்டில் 70 சதவிகித இரத்தத்தைத் தானமாக வழங்குகிறார்கள். இருப்பினும், ஒட்டுமொத்தத் தேவையில் 50 சதவிகிதம் இன்னமும் தேவைப் படுகிறது.

குறைந்தபட்சமாக 47.5 கிலோ எடையுள்ள ஒரு நபரின் உடலில் நான்கு லிட்டர் இரத்தம் இருக்கும். இதைத் தவிர 800 மில்லி லிட்டர் இரத்தம் சேமிப்பில் இருக்கும். இரத்த தானம் அளிக்கும்போது, அவர் உடலிலிருந்து 350 மில்லி லிட்டர் மட்டுமே எடுக்கப்படும். இந்த அளவு மூன்று நாட்களுக்குள் ளாகவே மீண்டும் அவர் உடலில் சுரந்துவிடும்.

#### சக்கர நாற்காலி

இரயில் பயணம் செய்யும் உடல் ஊனமுற்றோர், உடல் நலம் சரியில் லாதவர்கள், வயதானவர்கள் நலனைக் கருத்தில் கொண்டு, அவர் களின் உபயோகத்திற்கெனச் சக்கர நாற்காலியை இரயில்வே துறை அறிமுகப்படுத்தியுள்ளது.

முக்கிய மாவட்டத் தலைநகர மற்றும் இரயில் சந்திப்பு நிலையங் களில் இவ்வசதி ஏற்படுத்தப்பட்டுள் ளது. இவ்வசதியைப் பயன்படுத் துவது குறித்த தகவலை இரயில் நிலைய அறிவிப்புப் பலகையில் காணலாம். சக்கர நாற்காலிகள் பயணிகளுக்குப் பயன்படும் வகை யில் அவற்றைச் சீராக வைத்திருக்கு மாறு மண்டல இரயில் நிலையங் களுக்கு இரயில்வே அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது.

### சிக்கனமே சிறந்தது!

-கவிஞர். அ.சுப்பையன்



சிக்கனமே சிறந்த தென்போம் - சிறு
சேமிப்பே உயர்ந்த தென்போம்!
எக்காலும் கைகொடுக்கும் - நாம்
ஏற்றம்பெற வழிவகுக்கும்!

எறும்புக்கும் சேமிக்கும் - நல்ல
இயல்புண்டாம்; அறிந்திருந்தும்
பொறுப்புள்ள நாம்மட்டும் - இன்னும்
புத்தியின்றித் திரியலாமா?

ஊதாரிச் செலவுகளை - இனி
ஒருபோதும் செய்யாது
ஏதேனும் சேமிக்கும் - நல்
இயல்பதனைப் பெற்றிடுவோம்!

வரவுக்கு மேல்செலவு - பின்பு
வறுமைக்கே வழிகாட்டும்;
பொறுமையுடன் சேமிப்போம் - நாம்
புதுவாழ்வு பெற்றிடுவோம்!

### அறிவுச்சுடர்

* தவளைகளுக்கு மார்பெலும்புகள் இல்லை.
* சன்னியாசி நண்டுகள் இப்போது நத்தை ஓடுகளுக்குப் பதில் பிளாஸ்டிக் பாட்டில்களில் கூட வாழ ஆரம்பித்து விட்டன.
* அந்திப்பூச்சிகள் விளக்கைச் சுற்றுவதன் காரணம் சந்திரன்தான். சந்திரனைச் சார்பாக வைத்துக் கொண்டு இவை திசைகளை அறிகின்றன. செயற்கை ஒளிகள் இவற்றை திசை திருப்பி விடுகின்றன.
* இரவில் பூச்சிகளை பற்றி ஆராய சிவப்பு அல்லது மஞ்சள் நிற ஒளியைப் பயன்படுத்துங்கள், அவை இவ்வொளிகளை அறிவதில்லை.
* தாய் மூன்று மாதக் குழந்தைக்கு பாலிலிருந்து கெட்டி உணவுக்கு அறிமுகப்படுத்துவது போல் நாய், நரிகள் கூட தான் தின்று ஜீரணித்ததை கக்கி அதை ஊட்டுகின்றன.
* உலகின் 8 சதவீத உயிரினங்கள் பூச்சிகள் தான்.
* கடலில் வளரும் தாவரங்களில் (பாசிகள்) கால் பகுதிதான் நிலத்தில் ஒரு வருடத்தில் வளர்கின்றன.
* உங்களைக் கொட்டிய மறுகணமே தேனீ இறந்து போகிறது.
* சிக்காடா என்ற தத்துப் பூச்சி நான்கு வாரங்கள் மட்டுமே வாழ்ந்தாலும் அதன் லார்வா வளர 17 வருடங்கள் பிடிக்கின்றன.
* மனிதர்களை கைரேகை வைத்துக் கண்டுபிடிப்பது போல் கால்நடைகளை மூக்கு ரேகை வைத்துக் கண்டுபிடிக்கலாம்.

நன்றி: 'கலைக்கதிர்'



ஆந்திரப் பிரதேச சுற்றுலா, கலை மற்றும் பண்பாட்டுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெ. கீதாரெட்டி அவர்கள், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களை, தலைமைச் செயலகத்தில் சந்தித்துப் பேசினார் (9.2.'93).

# படமும் செய்தியும்

சென்னை நேரு விளையாட்டரங்கத்திலுள்ள சிறிய மருத்துவமனைக்கு மருத்துவ உபகரணங்கள் வாங்குவதற்காக ரூபாய் மூன்று இலட்சத்துக்கான நன்கொடை பத்திரத்தை மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களிடம் சென்னையிலுள்ள 'யுனிவெர்சல் ஸ்போர்ட்ஸ் டிரஸ்டின்' நிர்வாக அறங்காவலர் செல்வி அபர்ணா விஸ்வநாதன் அவர்கள் தலைமைச் செயலகத்தில் வழங்கினார் (4.2.'93).







அண்ணா போக்குவரத்துக்கழகத் தொழிலாளர்களின் ஒருநாள் ஊதியமான ரூ.4,76,562 (ரூபாய் நான்குஇலட்சத்து எழுபத்து ஆறாயிரத்து ஐந்நூற்று அறுபத்தி இரண்டு)-க்கான காசோலையை முதல்வர் அவர்களின் வெள்ள நிவாரண நிதிக்காக, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களிடம் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் தலைமைச் செயலகத்தில் வழங்கினார் (4.2.'93).

உயர்நிலை விற்பனைவரி சீரமைப்புக் குழுவின் அறிக்கையை, அக்குழுவின் தலைவர் திரு. பி. விஜயராகவன், இ.ஆ.ப., அவர்கள் மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களிடம் தலைமைச் செயலகத்தில் வழங்கினார் (4.2.'92). மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வணிகவரித்துறை செயலர் திரு. தங்கராசு, இ.ஆ.ப., ஆகியோர் உடன் இருந்தனர்.





மூதறிஞரும் பேரறிஞரும்

# தருமபுரி மண்ணும் விடுதலைப் போராட்ட உணர்வும்

இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரலாக இருந்த ராஜாஜி அவர்கள் அறிஞர் அண்ணா அவர்களாலேயே மூதறிஞர் என்று போற்றிப் புகழப்பட்டவர்; அந்த அளவுக்குத் தலைசிறந்த ராஜதந்திரியாகவும், விடுதலைப் போராட்ட வீரராகவும் திகழ்ந்த ராஜாஜி அவர்கள் பிறந்தது, தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த தொரப்பள்ளி என்கிற ஒரு மிகச் சின்ன கிராமத்திலாகும்.

அவர் பிறந்த - நாட்டு ஓடு வேயப்பட்ட அச்சிறிய வீடு, தமிழ்நாடு அரசால் நினைவுச் சின்னமாக ஏற்கப்பட்டுப் பாதுகாக்கப்படுகிறது இப்போது.

தருமபுரி மாவட்ட மண்ணுக்கு, விடுதலைப் போராட்ட வேகத்தை உண்டாக்கும் சக்தி இருக்கிறது என்கிறார்கள் அம் மாவட்டத்தைச் சேர்ந்த மூத்தோர் பலர்.

இந்திய விடுதலைப் போராட்டத்திற்கு முன்பாகத் தருமபுரி எப்படி ஆங்கிலேயர் வசமாயிற்றுத் தெரியுமா? அங்கிருந்து அரசாண்டு வந்த திப்பு சுல்தான், மூன்றாவது மைசூர் போரில் ஆங்கிலேயரிடம் தோற்றான்; இதன் காரணமாகப் போர் நஷ்டஈடாக ஒரு பெரும் தொகையையும், தருமபுரியையும் அவன் அவர்களுக்குத் தாரைவார்த்தான்.

இம் மாவட்டத்தைச் சேர்ந்த தொப்பூர் கணவாய், மிக அதிகமான போர்களைக் கண்ட பகுதியாகும்.

அதெல்லாம் இருக்கட்டும்; சுதந்திரப் போராட்டத்திற்கும் தருமபுரிக்கும் உள்ள தொடர்பை நாம் கொஞ்சம் பார்ப்போம். இம்மாவட்டத்தில் சுதந்திர தாகம் கொண்டவர்கள் பலர். இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே விடுதலைப் போராட்டக் களத்தில் மூதறிஞர் ராஜாஜி அவர்கள் குதித்த காலத்தில் - அவரோடு இந்த மாவட்டத்தில் தோளோடு தோள் நின்றவர்கள் - சுப்பிரமணிய சிவா, டி.என். தீர்த்தகிரி முதலியார், டி.சி. கிருஷ்ணமூர்த்தி, எம்.எஸ். ஐயம்பெருமாள், பாப்பாநாய்டு, சுப்பாராவ், மாரண்டஹள்ளி உடையார், தீர்த்தகிரி கவுண்டர், பி.ஆர். முனுசாமி செட்டியார், பி.ஆர். இராசகோபால் கவுண்டர், திரு. ஆர். வெங்கட்ராமன் முதலான பலராவர்.

தருமபுரி மாவட்டத் தியாகிகள் சங்கத்தின் செயலாளர், 77 வயதுப் பெரியவரான திரு. சி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இந்த விவரங்களையெல்லாம் நமக்கு மிக நிதானத்தோடு தெரிவித்தார்.

''ராஜாஜியோடு நான் பேசிப் பழகியதுண்டு; ஆனால் அவர் எனக்கு மிக வேண்டியவராக இருந்தார் என்று நான் சொல்ல மாட்டேன்; ஏனென்றால், வக்கீல் தொழில் காரணமாக அவர் சேலத்திற்குப் போய், அங்கிருந்து சென்னைக்குச் சென்றுவிட்டதோடு எங்களுக்குள் தொடர்பில்லாமல் போய்விட்டது'' - என்று உண்மையைச் சொன்ன இவர் - கள்ளுக்கடை மறியல், ஆகஸ்ட் புரட்சி, அந்நியத் துணி பகிஷ்காரம், உப்புச் சத்தியாகிரகத்திலெல்லாம் பங்கேற்றவர்.

1931-இல் காந்தியாரும், 1937-இல் பண்டித நேருவும் அங்கு வருகை தந்ததைப் பெருமிதத்தோடு நினைவு கூர்ந்த இவர் - அக்காலத்தில் சுப்பிரமணிய சிவா ஆற்றிய தேசத்தொண்டுகள் பற்றியும் பெருமகிழ்வுடன் நினைவு கூர்ந்தார்.

ஆகஸ்ட்டுப் போராட்டத்தில் கைதாகிப் பெல்லாரி சிறையில் 6 மாதகாலம் அடைக்கப்பட்ட இவரோடு - திரு. பி. இராமமூர்த்தி (கம்.), வெங்கடாச்சாரியார், நாகராச மணியகாரர் ஆகியோரும் சிறைவாசத்தை அனுபவித்தார்களாம்.

''இப்படியெல்லாம் பாடுபட்டுச் சுதந்திரம் பெறக் காரணமாயிருந்த என் போன்றவர்களுக்கு, கடந்த டிசம்பர் ஆறாம் தேதியன்று அயோத்தியில் நடைபெற்ற சம்பவங்கள் மிகுந்த மனக் கலக்கத்தை உண்டாக்கிவிட்டன; காந்தியார் காணவிரும்பிய இந்து-முஸ்லீம் ஒற்றுமை இன்னமும் ஏற்படவில்லையே என்ற வருத்தத்தில் நான் இரண்டு மூன்று நாள் சாப்பிடவேயில்லை...'' அவருடைய நா தழுதழுத்தது.

''தமிழ்நாடு அரசு பற்றிய உங்கள் கருத்தைச் சொல்லுங்களேன்?'' என்றோம் நாம்.

கணீரென்ற குரலில் பதில் வந்தது. ''இந்தியாவில் உள்ள பல மாநில அரசுகளும் புரியாத சாதனைகளைச் சாதித்து வருகிறார் தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள். குறிப்பாக என்போன்ற தியாகிகளுக்கு, இவர் செய்திருக்கும் உதவிகளைப் போல, வேறெந்த மாநில அரசாங்கமும் செய்யவில்லை. காங்கிரஸ்காரரான பக்தவத்சலம் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதுகூட என்போன்ற விடுதலைப் போராட்ட வீரர்களுக்கெல்லாம் ஐம்பது ரூபாய் மட்டும் தான் ஓய்வூதியமாகத் தரப்பட்டது. இப்போது அந்தத் தொகை ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டிருப்பதால் எங்களைப் போன்றவர்களின் பதினைந்தாயிரம் குடும்பமே முதல்வரை வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறது!'' என்று உளமார்ந்த உற்சாகத்தோடு தெரிவித்தார், தியாகி திரு. சி. கிருஷ்ணமூர்த்தி.



ராஜாஜி பிறந்த வீடு



தியாகி வெங்கட்ராமன்

**திரு. எம்.எல். ஐயம்பெருமாள்:**

தருமபுரி மாவட்டத்தில் தற்போது உயிரோடிருக்கும் வயது முதிர்ந்த தியாகிகளில் ஒருவர் திரு. எம்.எஸ். ஐயம்பெருமாள். இவருக்குத் தற்போது 81 வயதாகிறது. பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்தவர். இவரைப் பேட்டி கண்டபோது சொன்னார்:

''1921-இல் முதன்முதலில் தியாகி சுப்ரமணிய சிவாவுடன் சேர்ந்து ஒத்துழையாமை இயக்கத்தில் கலந்துகொண்டேன். அப்போது எனக்கு வயது 9. அதன் பின்னர் கிராமங்களில் தேசியச் சங்கம் அமைத்து, காங்கிரஸ் தீர்மானங்களை மக்களுக்கு எடுத்துரைத்தேன். இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு 'தேசீய வாலிபர் சீர்திருத்தச் சங்கம்' அமைத்து, சேரிகளுக்குச் சென்று, காந்தீயக் கொள்கைகளான தீண்டாமை ஒழிப்பு, மதுவிலக்கு போன்ற பிரச்சாரங்களைப் பரப்புதல் ஆகியவற்றில் தீவிரமாக ஈடுபட்டேன்.

''1939-இல் இரண்டாவது உலகப்போர் ஆரம்பிக்கப்பட்டபோது, யுத்த எதிர்ப்புப் பிரச்சாரத்தில் ஈடுபட்டதற்காக 1940-இல் கைது செய்யப்பட்டு, சுமார் 14 மாதங்கள் வேலூர், கோயமுத்தூர், பெல்லாரி, போன்ற இடங்களில் சிறை வைக்கப்பட்டேன். சிறையிலிருந்து விடுதலை பெற்ற பிறகு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் தருமபுரி மாவட்ட அமைப்பாளராக இருந்து மாநிலம் தழுவிய இயக்கத்தில் கலந்துகொண்டேன். 1941-இல் மீண்டும் யுத்த எதிர்ப்புப் பிரச்சாரத்தில் ஈடுபட்டுத் தலைமறைவாகப் பணியாற்றினேன்'' என்று தமது விடுதலைப் போராட்ட காலச் செயல்களை நினைவு கூர்ந்தார்.

இவர், பாப்பாரப்பட்டியில் 5 ஆண்டுகளுக்கு முன்னர் 'கைத்தறி' நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்' அமைக்கக் காரணகர்த்தாவாக இருந்தார். 1963-லிருந்து சுமார் 14 ஆண்டுகள் சமூக நல ஊழியராகப் பணியாற்றி, அதற்காக மாநில அரசிடமிருந்து ரூ.520 ஓய்வூதியமாகப் பெறுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

தியாகி ஐயம்பெருமாள்



## அன்னையும் குழந்தையும்

★ அண்ணா போக்குவரத்துக் கழகத்திலிருந்து 1987-இல், தருமபுரியைத் தலைமையிடமாகக் கொண்டு பிரிக்கப்பட்டதே அன்னை சத்யா போக்குவரத்துக் கழகம்.

அன்னை சத்யா போக்குவரத்துக் கழகத்தின் மூலம் ஏ.எஸ்.டி.சி. என்ற ஏடு ஒன்றும் நடத்தப்படுகிறது. எல்லா ஏடுகளிலும் மலர்:1 - இதழ்:1 என்று போடுகிறார்கள் அல்லவா? அதை இந்த ஏட்டில் 'அன்னை:1 - குழந்தை:1' என்று புதுமையாகப் போட்டிருக்கிறார்கள். அப்போக்குவரத்துக்கழக ஊழியர்கள் - நிகழ்ச்சிகள் பற்றிய செய்திகளைத் தெரிவிப்பதாக இருக்கிறது இது! - சி.கு. சரவணன்

## கடைசிப் பக்க அட்டையில்...

சென்னை-மயிலாப்பூரில் உள்ள அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில் குளத்தில் ஐந்தாண்டுக் காலத்திற்குப் பிறகு, 6.2.93 அன்று நிலைத் தெப்போற்சவம் மிகச் சிறப்பாக நடைப்பெற்ற காட்சி.

புகைப்படம்:

**TNPSC** **விளம்பர எண். 6/93**

தமிழ்நாடு சீர்திருத்தப் பள்ளிகள் சார்நிலைப் பணியில், அரசு கூர்நோக்கு இல்லங்களின் கண்காணிப்பாளர் (Superintendent of Government Observation Homes) பதவியில் ஒரு காலியிடத்திற்கு நேரடித் தேர்வின் மூலம் நியமனம் செய்ய விண்ணப்பங்கள் 1.3.1993 அன்று மாலை 5.45 வரையில் வரவேற்கப் படுகின்றன. (சாதிகளின் அடிப்படையிலான நியமன ஒதுக்கீட்டு விதி இத்தெரிவுக்குப் பொருந்தாது.)

**குறிப்புகள்**

1. இக்காலியிடம் பெண்களுக்காக ஒதுக்கப்பட்டது. எனினும் ஆண்களும் விண்ணப்பிக்கலாம். தகுதி வாய்ந்த பெண் பணிவேட்பாளர் தெரிவு செய்யக் கிடைக்கப் பெறாவிடில், அவர்களுக்காக ஒதுக்கப்பட்ட இக்காலியிடம் ஆண் பணி வேட்பாளரால் நிரப்பப்படும்.

2. இப்பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளைப் பெற்றிருந்து, குறைந்தபட்ச மதிப்பெண்களைப் பெறுவதன் மூலம் தெரிவுக்குத் தகுதியானவராகக் கருதப்படும் ஆதரவற்ற விதவை, அவரைவிட அதிக மதிப்பெண்களைப் பெற்றிருப்பவர்களைக் காட்டிலும் முன்னுரிமை வழங்கப்பட்டு தெரிவு செய்யப்படுவார்கள்.

**விளக்கம்:** 'ஆதரவற்ற விதவை' என்பது, வாழ்வதற்குத் தனக்கென்று எந்தவொரு வழியும் இல்லாதவரும், பட்டினியிலிருந்து தன்னைக் காப்பாற்ற எந்தவொரு ஆதரவாளரும் இல்லாதவரும் ஆன விதவையைக் குறிப்பதாகும்.

**சம்பளம்:** மாதம் ஒன்றுக்கு ரூ.1,820 - 3,200.

**வயது:** 1.7.1993 அன்று 30 வயதிற்குக் குறைவாக.

ஆதிதிராவிட வகுப்பினர், பழங்குடி வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வயது வரம்பு இல்லை. (மேலும் சில சலுகைகள் கீழே அறிவிக்கப் பட்டுள்ளன.)

**தகுதி:** (19.2.1993 அன்றுள்ளபடி): அடியிற் குறிப்பிட்டுள்ளவை அல்லது அவற்றிற்கு இணையானவை:

கலை அல்லது அறிவியல் அல்லது வணிகவியல் ஒரு பட்டம் அல்லது அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் பி.ஓ.எல். அல்லது மதுரை-காமராசர் பல்கலைக்கழகத்தின் பி.பி.ஏ., அல்லது சென்னைப் பல்கலைக்கழகத்தின் பி.லிட்., அல்லது பாரதியார் பல்கலைக்கழகத்தின் பி.பி.எம். அல்லது பி.லிட் பட்டம்.

ஆதிதிராவிட வகுப்பினர்,பழங்குடி வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், ஆதரவற்ற விதவைகள், தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர், நாற்பது வயதிற்குக் குறைவாக உள்ள பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட மற்றும் பணியிலிருக்கின்ற தற்காலிக மாநில அரசுப் பணியாளர்கள் போன்றவர்களுக்கு வயது மற்றும்/அல்லது தகுதியிலிருந்து அளிக்கப்படும் சலுகைகள் மற்றும்/அல்லது விண்ணப்பக் கட்டணச் சலுகைகள் தேர்வாணையத்தின் 'பணி வேட்பாளர்களுக்கான விதிமுறைகளில்' தரப்பட்டுள்ளன. (பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு அளிக்கப்படும் சலுகைகள் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினருக்கும் பொருந்தும்).

விண்ணப்பப் படிவமும், நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களிடம் எழுத்து மூலம் கோரிப் பெற்றுக் கொள்ளலாம். கோரிக்கைகள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ, பதவியின் பெயர் மற்றும் விளம்பர எண் ஆகியவை குறிப்பிட்டு எழுதப்பட்டு செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு வழங்கக்கூடிய 19.1.93 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட ரூ.10-க்கான (ரூபாய் பத்து), சென்னை அண்ணா சாலை தலைமை அஞ்சல் நிலையத்தில் செலுத்தத்தக்க கோடிட்ட அஞ்சல் ஆணை அல்லது பாரத ஸ்டேட் வங்கியின் (State Bank of India) ஏதாவது ஒரு கிளையில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையச் செயலாளருக்கு வழங்கக்கூடிய 19.1.1993 அன்றோ அல்லது அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட, பாரத ஸ்டேட் வங்கி, ஆயிரம் விளக்குக் கிளை, சென்னை-6-இல் செலுத்தத்தக்க ரூ.10- க்கான) 'கேட்புக் காசோலை' (Demand Draft)-யுடனும் சுய விலாசம் எழுதிய உறையுடனும் (26 x 12 செ.மீ.) அனுப்ப வேண்டும். கோரிக்கைகள் பிற மொழியில் இருக்குமாயின் அத்துடன் ஆங்கில மொழி பெயர்ப்பும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டா.

DIPR/135/MS/93





With Best Compliments From

**Wholesale and Retail Merchants of**

**Pennagaram Town,**

**Dharmapuri District**



ராஜாஜி எழுதிய கடி

**தியாகி திரு. ஆர். வெங்கட்ராமன்:**

73 வயதாகும் தியாகி திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்களைச் சந்தித்தபோது -

"1936-இல் காங்கிரஸ் கட்சியில் உறுப்பினராகி, காந்தியடிகளின் நிர்மாணத் திட்டத்தை மக்களிடையே பிரச்சாரம் செய்தல், கொடியேந்திக் கொண்டு ஊர்வலம் செல்லுதல் போன்ற பணிகளில் ஈடுபட்டேன்.

கதர், மதுவிலக்கு, தீண்டாமை ஒழிப்புப் போன்ற திட்டங்களில் கலந்துகொண்டேன். அப்போது எனக்கு 16 வயதிருக்கும். காங்கிரஸ்காரர்களுடன் சேர்ந்து பிரச்சாரத்திற்குச் சென்றபோது ஒரு அரிசன வீட்டில் சாப்பிட்டதற்காக எனது மாமனார் வீட்டிலிருந்து சுமார் 6 ஆண்டுக் காலம் ஒதுக்கிவைக்கப்பட்டேன். எனக்கு14வயதில்திருமணம் நடந்தது. பின்னர் 1941-இல் காந்தியடிகளின் தனிநபர் சத்தியாக்கிரக இயக்கத்தில் கலந்து கொண்டதற்காக 3 மாதங்களும், 1942-இல் 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தில் ஈடுபட்டதற்காக சுமார் 4 மாதங்களும் சிறைவாசம் அனுபவித்தேன்" என்று தமது சுதந்திரப் போராட்ட நினைவுகளைத் துல்லியமாக நினைவுபடுத்தி எடுத்துரைத்தார்.

சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டதற்காகத் தமக்கு அளிக்கப்பட்ட சலுகைகள் பற்றிக் கேட்டதற்கு, 1989-இல் 100 ரூபாயாக இருந்த ஓய்வூதியத்தை 1992 ஆகஸ்ட் முதல் மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆயிரமாக உயர்த்திக் கொடுத்திருப்பதாகவும், தற்போதைய ஓய்வூதியம் திருப்திகரமாக இருப்பதாகவும் கூறினார்.

இறுதியில், சுதந்திரப் போராட்ட இயக்கத்தில் ஈடுபட்டதால் பள்ளிப் படிப்பைத் தொடர முடியாமல் போனதற்காக வருத்தப்பட்டார்.

## கோழி கூப்பிடும் நேரம்



★ தருமபுரி மாவட்டத்தில் - 'கோழி கூப்பிடும் நேரம்' என்றால் அதிகாலை 5 மணி. 'கூழ் நேரம்' என்றால் காலை 7 மணிமுதல் 9 மணி வரை. 'உச்ச 'இரணிய நேரம்' என்பது பகல் 12 மணி. நேரம்' என்றால் பகல் ஒரு மணி. காலையில் பொழுது விடிந்ததிலிருந்து மதியம் வரை ஒவ்வொரு மணி நேரத்தையும் 'ஒரு மார் பொழுது', 'இரண்டு மார் பொழுது' என்கிறார்கள். இரவு சுமார் 7 மணி முதல் 8 மணி வரை 'கனி நேரம்' ஆகும்.

## 'சனோலா!'

தருமபுரி மாவட்டத்தில் உள்ள போச்சம்பள்ளியில் தான் - இந்தியாவிலேயே முதன்முதலாகச் சூரியகாந்தி எண்ணெய் ஆலை தொடங்கப்பட்டது.

இப்போதுகூட, மற்றெல்லா ஆலைகளிலும் சூரியகாந்தி விதையின் தோலை நீக்காமல் போட்டு எண்ணெய் ஆட்டி வருகிறார்கள்; ஆனால் இங்கேயோ தோல் நீக்கப்பட்ட வித்துக்களே எண்ணெய் ஆட்டப் பயன்படுத்தப்படுகின்றன.

1978-இல் ரூ.53 இலட்சம் முதலீட்டில் தொடங்கப்பட்ட இந்த ஆலையில் அப்போது 500 டன் எண்ணெய் எடுக்கப்பட்டிருக்கிறது; 1992-93-இல் 3,500 டன் எண்ணெய் எடுத்திருக்கிறார்கள்; இது தவிர, 1,400 டன் சுத்திகரிக்கப்பட்ட எண்ணெயும் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

இந்த போச்சம்பள்ளி சூரியகாந்தி எண்ணெய் ஆலைக்கு மட்டும், ஒரு நாளைக்கு 40 டன் சூரியகாந்தி விதை எண்ணெய் எடுக்கத் தேவைப்படுகிறது; நாடு முழுவதிலும் இப்போது இதற்கு நிறையத் தேவையிருக்கிறது.

1978-இல் ஒரு கிலோ 1.75 ரூபாய் விற்ற இந்த வகை எண்ணெயின் இப்போதைய விலை ரூ.10.50 என்றால் பார்த்துக்கொள்ளுங்களேன்!

இந்தியாவிலேயே சூரியகாந்திச் செடி பயிரிடுவதில் கர்நாடகம் முதலிடம் வகிக்கிறது தமிழகமோ 5-வது இடம் வகிக்கிறது. அதிலும் குறிப்பாக இந்தப் பகுதியில் விளைச்சல் அதிகம்; இதற்கு ஏற்ற மண்வளமும், சீதோஷ்ண நிலையும் இங்கிருப்பதே அதற்குக் காரணம்.

இடையே, வறட்சிக் காலத்தில் நான்காண்டுக் காலம் நிலக்கடலை எண்ணெய் ஆட்டும்படி நேர்ந்தாலும் கூட - இந்த ஆலை மூலம் நேரடியாக 200 பேரும் மறைமுகமாக மேலும் பலரும் வேலைவாய்ப்புப் பெறுகிறார்கள்.

- என். மணி




TNPSC

விளம்பர எண்.7/93

# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

## அறிவிக்கை

நான்காம் தொகுதிப் பணிகளில் உள்ளிட்ட இளநிலை உதவியாளர் (பிணையம் உள்ளது மற்றும் பிணையம் இல்லாதது) வருவாய் ஆய்வாளர், வரித்தண்டலர் தரம்-1, ஊர்நல அலுவலர் தரம்-II காசாளர், பிரச்சார ஆய்வாளர், விழிப்புப் பணி ஆய்வாளர் மற்றும் தட்டச்சர் பதவிகளில் நியமனம் செய்வதற்காக வரும் 18.7.1993 அன்று கீழ்க்காணும் மையங்களில் முதனிலைத் தேர்வு (Preliminary Examination) நடைபெறவுள்ளது.

### தேர்வு மையங்கள்

| குறியீட்டு எண். | தேர்வு மையத்தின் பெயர் | குறியீட்டு எண் | தேர்வு மையத்தின் பெயர் |
|---|---|---|---|
| 001 | - கோயம்புத்தூர் | 053 | - பழநி |
| 002 | - கடலூர் | 054 | - பாளையங்கோட்டை |
| 003 | - தர்மபுரி | 055 | - பரமக்குடி |
| 004 | - திண்டுக்கல் | 056 | - பட்டுக்கோட்டை |
| 005 | - ஈரோடு | 057 | - பெரம்பலூர் |
| 006 | - காஞ்சிபுரம் | 058 | - பெரியகுளம் |
| 007 | - கும்பகோணம் | 059 | - பொள்ளாச்சி |
| 008 | - சென்னை | 060 | - பொன்னேரி |
| 009 | - மதுரை | 061 | - இராமேஸ்வரம் |
| 010 | - நாகர்கோயில் | 062 | - ராசிபுரம் |
| 011 | - புதுக்கோட்டை | 063 | - சிவகாசி |
| 012 | - இராமநாதபுரம் | 064 | - ஸ்ரீவைகுண்டம் |
| 013 | - சேலம் | 065 | - தென்காசி |
| 014 | - சிவகங்கை | 066 | - தக்கலை |
| 015 | - தஞ்சாவூர் | 067 | - துறையூர் |
| 016 | - திருச்சிராப்பள்ளி | 068 | - திண்டிவனம் |
| 017 | - திருநெல்வேலி | 069 | - திருச்செந்தூர் |
| 018 | - தூத்துக்குடி | 070 | - திருச்செங்கோடு |
| 019 | - உதகமண்டலம் | 071 | - திருப்பத்தூர் (வடஆர்க்காடு) |
| 020 | - வேலூர் | 072 | - திருப்பூர் |
| 021 | - விருதுநகர் | 073 | - திருத்துறைப்பூண்டி |
| (022 | - நீக்கப்பட்டுவிட்டது) | 074 | - திருத்தணி |
| 023 | - அம்பாசமுத்திரம் | 075 | - திருவள்ளூர் |
| 024 | - அறந்தாங்கி | 076 | - திருவண்ணாமலை |
| 025 | - அரியலூர் | 077 | - திருவாரூர் |
| 026 | - அரக்கோணம் | 078 | - உடுமலைப்பேட்டை |
| 027 | - அருப்புக்கோட்டை | 079 | - உசிலம்பட்டி |
| 028 | - ஆத்தூர் | 080 | - உத்தமபாளையம் |
| 029 | - செங்கல்பட்டு | 081 | - வள்ளியூர் |
| 030 | - செய்யார் | 082 | - விழுப்புரம் |
| 031 | - சிதம்பரம் | 083 | - விருத்தாச்சலம் |
| 032 | - குன்னூர் | 084 | - வாலாஜாபேட்டை |
| 033 | - தாராபுரம் | 085 | - ஆர்க்காடு |
| 034 | - கோபிசெட்டிபாளையம் | 086 | - ஆரணி |
| 035 | - கூடலூர் | 087 | - ஆவடி |
| 036 | - குடியாத்தம் | 088 | - பவானி |
| 037 | - அரூர் | 089 | - தேன்கனிக்கோட்டை |
| 038 | - ஓசூர் | 090 | - தேவகோட்டை |
| 039 | - கள்ளக்குறிச்சி | 091 | - நெய்வேலி |
| 040 | - காரைக்குடி | 092 | - ஓமலூர் |

041 - கரூர்
042 - கோவில்பட்டி
043 - கிருஷ்ணகிரி
044 - மணப்பாறை
045 - மன்னார்குடி
046 - மார்த்தாண்டம்
047 - மேலூர்
048 - மேட்டூர்
049 - முசிறி
050 - மயிலாடுதுறை
051 - நாகப்பட்டினம்
052 - நாமக்கல்

093 - பட்டாபிராம்
094 - போளூர்
095 - பூந்தமல்லி
096 - ராஜபாளையம்
097 - சங்கரி
098 - சீர்காழி
099 - சங்கரன்கோவில்
100 - ஸ்ரீவில்லிபுத்தூர்
101 - தாம்பரம்
102 - திருமங்கலம்
103 - வாணியம்பாடி

2. எல்லா பதவிகளுக்கான பணியிடங்கள் தோராய எண்ணிக்கை 2,700. இவ்வெண்ணிக்கை தெரிவின்போது கூடவோ அல்லது குறையவோ செய்யலாம்.

3. நியமன ஒதுக்கீடு

அ. நியமன ஒதுக்கீட்டு விதியை (அதாவது ஆதிதிராவிட வகுப்பினர், பழங்குடி வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பகிரங்க போட்டி போன்ற நியமன ஒதுக்கீடு) பின்பற்றி தெரிவு செய்யப்படும்.

ஆ. 30 சதவிகித பணியிடங்கள் பெண்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன.

இ. 3 சதவிகித பணியிடங்கள் உடல் ஊனமுற்றோர்க்கென ஒதுக்கப்பட்டுள்ளன.

குறிப்பு: மேலே கூறப்பட்ட பெண்களுக்கான 30 சதவிகித இட ஒதுக்கீடும், உடல் ஊனமுற்றவர்களுக்கான 3 சதவிகித இட ஒதுக்கீடும் ஒவ்வொரு துறை அலகிலும், பல்வேறு பதவிகளுக்கென அமைந்த பணியிடங்களைப் பொறுத்தும், இட ஒதுக்கீடு சுழற்சியைப் பொருத்தும் அமையும்.

இ. இப்பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளைப் பெற்றிருந்து, குறைந்தபட்ச மதிப்பெண்களைப் பெறுவதன் மூலம் தெரிவுக்குத் தகுதியானவராகக் கருதப்படும் ஆதரவற்ற விதவைகள் அவர்களைவிட அதிக மதிப்பெண்களைப் பெற்றிருப்பவர்களைக் காட்டிலும் முன்னுரிமை வழங்கப்பட்டு தெரிவு செய்யப்படுவார்கள்.

விளக்கம்: 'ஆதரவற்ற விதவை' என்பது, வாழ்வதற்குத் தனக்கென்று எந்தவொரு வழியும் இல்லாதவரும், பட்டினியிலிருந்து தன்னைக் காப்பாற்ற எந்தவொரு ஆதரவாளரும் இல்லாதவரும் ஆன விதவையைக் குறிப்பதாகும்.

4. சம்பள ஏற்றமுறை: ரூ.975-25-1150-30-1660

5. தகுதிகள்

அ. வயது: (1.7.1993 அன்று)

1. ஆ.தி.வ./ப.வ., மற்றும் ஆரதவற்ற விதவைகள் -35 வயதிற்குள்.
2. ஆ.தி.வ./ப.வ., மற்றும் ஆதரவற்ற விதவைகள் அல்லாதவர்கள் - 30 வயதிற்குள்.

குறிப்பு: 1. ஆ.தி.வ./ப.வ., மி.பி.வ./சீ.ம., பி.வ. எல்லா வகுப்பையும் சேர்ந்த ஆதரவற்ற விதவைகள் முதலியோர் புதுமுக வகுப்பு அல்லது மேல்நிலைக் கல்வி அல்லது அதற்குச் சமமான கல்வியில் தேர்ச்சி பெற்றிருப்பின் அவர்களுக்கு வயது வரம்பு இல்லை.

2. 31.3.1991 அன்று பணியிலிருந்து அனைத்து தற்காலிக பணியாளர்கள் மற்றும் 1.4.1986-லிருந்து 31.3.1991 வரை குறைந்தபட்சம் ஓராண்டு தொடர்ந்து பணியாற்றிய பின், பணி நீக்கம் செய்யப்பட்ட, பொது விதி 10 (a)(1) (1)-ன்படி அரசுப் பணியில் நியமனம் செய்யப்பட்ட மற்ற அனைத்து நபர்களும் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட நபர்களும் நிர்ணயிக்கப்பட்ட வயது வரம்பைக் கடந்திருந்தாலும், இத்தேர்விற்கு விண்ணப்பிக்கலாம். தேவைப்பட்டால் அவர்களுக்கு வயது வரம்பு தளர்த்தப்படும்.

ஆ. கல்வி: (இந்த அறிவிக்கை நாளன்று (அதாவது 3.2.1993 அன்று)

1. இளநிலை உதவியாளர் (பிணையம் உள்ளது மற்றும் பிணையம் இல்லாதது), வருவாய் ஆய்வாளர், வரித்தண்டலர் தரம்-1, ஊர்நல அலுவலர் தரம்-11, காசாளர், பிரச்சார ஆய்வாளர், விழிப்புப் பணி ஆய்வாளர் பதவிகளுக்கு:

குறைந்த பட்ச பொதுக் கல்வித் தகுதி அல்லது பள்ளியிறுதி வகுப்புத் தேர்வில் தேர்ச்சி பெற்று கல்லூரி படிப்பிற்கோ அல்லது மேல்நிலைக் கல்விப் படிப்பிற்கோ சேருவதற்கான தகுதி அல்லது தேர்வாணையத்தால் கருதப்படும் அதற்கு இணையான தகுதி.



2. தட்டச்சர் பதவிக்கு (1) மேலே பத்தி 5(ஆ)(T)-இல் உள்ளபடி மற்றும்

II. அரசுத் தொழில் நுட்பக் கல்வியில் தட்டச்சில் கீழ்க்கண்டவற்றில் தேர்ச்சி:

அ. தமிழ் மற்றும் ஆங்கில தட்டச்சில் உயர்நிலை:

(அல்லது)

ஆ. தமிழ் தட்டச்சில் உயர்நிலை மற்றும் ஆங்கில தட்டச்சில் கீழ்நிலை:

(அல்லது)

இ. ஆங்கில தட்டச்சில் உயர்நிலை மற்றும் தமிழ் தட்டச்சில் கீழ்நிலை.

குறிப்பு: மேலே 2(11) (அ)-விலுள்ள தொழிற்கல்வித் தகுதி பெற்ற தட்டச்சர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படத் தகுதியில்லாத நபர்கள், இல்லாத பட்சத்தில், 2(11)(ஆ)-விலுள்ள தொழிற்கல்வித் தகுதி உடையவர்களும், மேலே 2(11)(அ) மற்றும் 2(11)(ஆ) பிரிவுகளின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட நபர்கள் இல்லாத பட்சத்தில் 2(11)(இ)-விலுள்ள தொழிற்கல்வித் தகுதி உடையவர்களும் தேர்வுக்கு கருதப்படுவர்.

6. தேர்வுக் கட்டணம்: ரூ.30 (முப்பது ரூபாய் மட்டும்)

அட்டவணைப்படுத்தப்பட்ட வங்கியில் (Scheduled Bank) ஏதாவதொரு கிளையில்,

குறிப்பு: மேற்படித் தேர்வு கட்டணம், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலாளருக்கு சென்னை நகரில் வழங்கக் கூடியதாகவும், சென்னை-2, வழங்கக்கூடியதாகவும் கூடிய கேட்புக் காசோலை (Demand Draft) மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். மற்ற எவ்வகைகளிலும் அனுப்பப்படும் கட்டணம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கேட்புக் காசோலை 3.2.1993-க்குப் பிறகு பெற்றிருத்தல் வேண்டும்.

கீழே குறிப்பிட்டுள்ள நபர்கள் விண்ணப்பக் கட்டணம் செலுத்துவதினின்றும் விலக்கு அளிக்கப்படுகின்றனர்:

அ. 1. ஆ.தி.வகுப்பினர் மற்றும் ப. வகுப்பினர்.
2. தாயகம் திரும்பியோர்.
3. மாத வருமானம் ரூபாய் 350-க்கு மேற்படாத உடல் ஊனமுற்றவர்கள்.

ஆ. இதற்கு முன்னர் மூன்று முறை விண்ணப்பக் கட்டணம் செலுத்துவதினின்றும் விலக்குப் பெறாத பட்டதாரி பிற்படுத்தப் பட்ட வகுப்பினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர்.

இ. இதற்கு முன்னர் இரண்டு முறை தேர்வுக் கட்டணம் செலுத்துவதனின்றும் விலக்குப் பெறாத முன்னாள் இராணுவத்தினர்.

குறிப்பு: ஆ.தி.வ.ப.வ., மி.பி.வ./சீ.ம., பி.வ. ஆதரவற்ற விதவைகள், முன்னாள் இராணுவத்தினர், தாயகம் திரும்பியவர்கள், கொத்தடிமைகள், உடல் ஊனமுற்றோர், நாற்பது வயதிற்குக் குறைவாக உள்ள பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட மற்றும் பணியிலிருக்கின்ற தற்காலிக மாநில அரசுப் பணியாளர் போன்றவர்களுக்கு வயது மற்றும்/அல்லது தகுதியிலிருந்து அளிக்கப்படும் சலுகைகள் மற்றும்/அல்லது தேர்வுக் கட்டணச் சலுகைகள் மற்றும் மற்ற விவரங்கள் கொண்ட தேர்வாணையத்தின் "பணி வேட்பாளர்களுக்கான விதிமுறைகள்" 16.8.89 நாளிட்ட தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செய்தி அறிவிப்பு வெளியீட்டில் (Bulletin) வெளியிடப்பட்டுள்ளது. செய்தி அறிவிப்பு வெளியீடு, அரசு எழுதுபொருள் மற்றும் அச்சகத் துறையின், 'அரசு வெளியீட்டு விற்பனை மையங்களின்' மூலம் விலைக்கு கிடைக்கப்பெறும். மேற்படி பணி வேட்பாளர்களுக் கான விதிமுறைகள் 1.9.89 நாளிட்ட 'தமிழரசு' ஆங்கிலம் மற்றும் தமிழ் பதிப்புகளில் வெளியிடப்பட்டுள்ளது.

7. தேர்வுத் திட்டங்கள்

இப்போட்டித் தேர்வு அடுத்தடுத்து இரண்டு நிலைகளை உடையது. அவை:

1. முதநிலைத் தேர்வு மூலம் முதன்மைத் தேர்வுக்குத் தெரிவு செய்தல்.
2. முதன்மைத் தேர்வின் மூலம் பதவிகளுக்கு நபர்களைத் தெரிவு செய்தல்.

7(அ). முதனிலைத் தேர்வின் திட்டம்:

பாடம்: பொது அறிவு (கொள் குறிவகை 200 வினாக்கள்.)
அதிகபட்ச மதிப்பெண்கள்: 100
கால அளவு: 2 மணி நேரம்.
பள்ளியிறுதி வகுப்புச் சான்றிதழ் (SSLC) தரத்திலான முதல்நிலைத் தேர்வுக்கான பாடத்திட்டம்.

பொது அறிவு

1. பொது அறிவியல், 2. இந்திய வரலாறு, 3. இந்தியப் புவியியல்,

4. பொருளாதாரமும் வணிகமும், 5. இந்திய அரசு அமைப்புமுறை, 6. இந்திய தேசிய இயக்கம்,

7. நடப்புக் கால நிகழ்ச்சிகள், 8. அறிவுக் கூர்மைப் போட்டி.

Advertisement No.7/93

## FORMAT

## TAMIL NADU PUBLIC SERVICE COMMISSION

### APPLICATION FOR PRELIMINARY EXAMINATION FOR POSTS INCLUDED IN GROUP-IV SERVICES, 1993.

1. Examination centre...
   (Name to be specified in block letters) Code

2. Register Number
   (To be assigned by Office)

Paste here a signed copy of recent photograph of passport size (5 cms. x 7 cms.)

3. Details of fee paid

| Name of the Bank | Number of the Demand Draft | Date | Value Rs. P. |
|---|---|---|---|
| | | | |

4. Do you claim fee exemption? If YES, mention relevant category under which exemption is claimed......................................................................................................... YES NO

5. Name and address

   a) Name in CAPITALS
   (as recorded in SSLC)

   b) Father's/Husband's Name

   c) Present Postal address

PIN



6. Date of birth
   (as recorded in SSLC) Day Month Year

Example Write 1st September 1967 as

0 1 | 0 9 | 1 9 6 7

Do you claim age relaxation? Yes No

If YES, mention the relevant category

7. SEX
   (Tick the relevant Box) 01 Male 02 Female

8. (a) Religion ____________ (b) Name of Community ____________
   (Name of Religion and Community to be specified in block letters clearly)

(Tick the relevant Box

| | | |
|---|---|---|
| 01 | SC | |
| 02 | ST | |
| 03 | BC | |
| 04 | Others | |
| 05 | MBC/DC | |

9. Do you possess the requisite minimum educational qualification?
   (Tick the relevant box) YES NO

| SSLC | Higher Secondary | Degree | Post Graduate |
|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 |

10. Do you posses the requisite technical qualification for the post of typist?
    If YES, tick the relevant box. YES NO

| Subject | Language | Exam. Grade | Code |
|---|---|---|---|
| Type writing | Tamil | Higher/Senior | 01 |
| | | Lower/Junior | 02 |
| | English | Higher/Senior | 03 |
| | | Lower/Junior | 04 |

11. Do you claim any preference on account of being:-
(If YES, evidence to be produced)

a) Destitute Widow

| YES | NO |
|---|---|
| 01 | 00 |

b) Physically Handicapped: (Specify nature of handicap by tick mark)

| Partially blind/one eyed | |
|---|---|
| YES | NO |
| 02 | 00 |

| Totally blind | |
|---|---|
| YES | NO |
| 03 | 00 |

| Dumb | |
|---|---|
| YES | NO |
| 04 | 00 |

| Deaf | |
|---|---|
| YES | NO |
| 05 | 00 |

| Orthopaedic | |
|---|---|
| YES | NO |
| 06 | 00 |

c. If you claim any concession state reasons therefor.

12. **DECLARATION**

I hereby declare that all the particulars furnished in this application are true, correct and complete to the best of my knowledge and belief. In the event of any information being found false or incorrect or ineligibility being detected before or after the examination, action can be taken against me by the Commission.

I have read the notification advertised and 'Instructions etc., to candidates' carefully and I hereby undertake to abide by the instructions therein.

I further declare that I fulfil all the eligibility conditions prescribed for admission to the examination.

* I have informed my employer in writing that I have applied for this examination.

(* Strike off this, if not applicable).

DATE:

SIGNATURE OF THE APPLICANT



## TAMIL NADU PUBLIC SERVICE COMMISSION
## MADRAS-2

### ATTENDANCE SHEET

Preliminary Examination for the posts included in Group-IV Services - 1993

(To be filled by applicant)

Register Number: [ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ]
(To be filled by office)

Name of the applicant.......................................................

Date of birth.......................................................

Communication address.......................................................

Examination Centre.......................................................

Paste here a signed copy of your recent passport size photograph (5 x 7 c.m.)

Code: [ ][ ][ ]

| Date and Time | Examination Subject | Applicant's Signature |
|---|---|---|
| | | |

DIPR/195/MS/93

# பார்த்தோம் படித்தோம்

**புதுமையான புத்தாண்டு இதழ்!**

*1.1.93* இதழ், முதல் மற்றும் நான்காம் அட்டை அருமை. புரட்சித் தலைவர் வாழ்க்கைக் குறிப்பு படித்து மகிழ்ந்தேன். புத்தாண்டு இதழ், புதுமையான இதழாக மலர்ந்திருந்தது!

- எஸ். ரங்கராஜ்
பள்ளிப்பாளையம், (கோவை)

'வாழும்போதே வரலாறு' புரட்சித் தலைவர் வாழ்க்கை வரலாறு, மற்றும் ஆசிய பசிபிக் நாடுகள் மாநாடு' பற்றிய கட்டுரையும் சிறப்பாக இருந்தன.

- எஸ். அப்துல் ரபீக்
சின்னசேலம்
(தென்னார்க்காடு மாவட்டம்)

'உழவர் உயர்வுக்கு வேளாண்மைப் பொறியியல் துறை' கட்டுரை பயனுள்ளதாக இருந்தது.

- என். குப்புசாமி
புங்கோடைகாளிபாளையம், (திருச்சி)

'உழவர் உயர்வுக்கு வேளாண்மைப் பொறியியல் துறை' கட்டுரை, உழவர்களுக்குப் பயன்தருவதாகும்.

- வி. சென்றாயன்,
கருப்பூர், (சேலம்)

எம்.ஜி.ஆர். நினைவகம் முகப்பு, படு தூப்பர்!

- க. ஜெயகாந்தன்
சிறுபுலியூர்.

'மூளைக் காய்ச்சலைத் தடுப்பது எப்படி?' கட்டுரை பாராட்டத்தக்கது. பொதுமக்களுக்கு மிகவும் பயன்தர வல்லது.,

'தீர்த்தமலை' பற்றிய விவரங்கள் படித்து மகிழ்ந்தேன். இதுபோன்ற சிறப்பு வாய்ந்த கட்டுரைகளை ஒவ்வொரு இதழிலும் இடம்பெறச் செய்ய வேண்டும்.

- கே. அனந்தநாராயணன்
கன்னியாகுமரி

மயிலை சீனி வேங்கடசாமி பற்றிய கட்டுரை, தற்காலத் தமிழாராய்ச்சியாளர்களுக்கு ஓர் வழிகாட்டியாக அமையும் என்பது திண்ணம்.

- என். குப்புசாமி
புங்கோட்டை, (திருச்சி)

'வலிப்பு நோய் - சில செய்திகள்' கட்டுரை, பல நல்ல செய்திகளை வழங்கியது. இந்த நோயைக் குணமாக்கும் முறையைக் கூறியிருப்பது, மிகவும் பயனுள்ளதாக இருந்தது.

- அ. தூசைமேரி
அணிலாடி,
(தென்னார்க்காடு மாவட்டம்)

## தொடரட்டும் மாவட்ட மலர்கள்

**16.1.93** இதழ் கண்டேன். தருமபுரி மாவட்டம் தொடர்பான சிறப்புகளை அறிய முடிந்தது. தமிழ்ப் ப்லகலைக் கழகத் துணைவேந்தர், கவிஞர் நா. காமராசன் ஆகியோரின் பாடல்கள் சிறப்பு. ஒவ்வொரு மாவட்டமும் 'தமிழரசு' இதழால் சிறப்பு அடையட்டும்.

**—மு. இளங்கோவன்**
**தமிழியல் துறை**
**புதுவைப் பல்கலைக் கழகம்**
**புதுவை.**

புத்தாண்டில் (16.1.93) தொடங்கி உள்ள, மாவட்ட மலர்கள் வெளியிடுதல் திட்டத்தில், தருமபுரி மாவட்ட மலர் வெளிவந்துள்ளதில் மகிழ்வடைகின்றேன். எதை எப்படி அளிக்க வேண்டும் என்ற உணர்வுடன் செய்திகள் வழங்கப்பட்டு உள்ளன. அட்டைப்படமும், பாதுகாத்து வைத்துக் கொள்வதற்கேற்ப அமைந்து உள்ளது. பாராட்டுக்கள்.

- கே.சி. கிருஷ்ணன்
தருமபுரி-2.

தருமபுரி மாவட்டம் தொடர்பான கட்டுரைகள் மற்றும் சுவையான செய்திகள் படிக்கவும் பாதுகாக்கவும் உபயோகமாக இருந்தன.

- எல். மாணிக்கவாசகம்
சங்கரன்கோவில்

தருமபுரி மாவட்டம் பற்றிய செய்திகள், வளர்ச்சிப் பணிகள் எல்லாமே தேனினும் இனியனவாக இனித்தன.

- ப. முருகேச பாண்டியன்
கரப்பாடி (கோவை).

எம்.ஜி.ஆர். திருவுருவப்பட முகப்பு படுஜோர். அதைக் கண்ணாடி போட்டு மாட்டிவிட்டேன்.

- க. ஜெயகாந்தம்
சிறுபுலியூர்.

டாக்டர் ஔவை நடராசன், கவியரசு நா. காமராசன், கவிஞர் இளந்தேவன், கவிஞர் பி.வி. கிரி இவர்களின் எல்லாக் கவிதைகளும் போற்றும்படி இருந்தன.

— இன்பவல்லி வாசுதேவன்
கீரைசாத்து.

## வழிமுறைகள் கண்டறிவோம்!

**சிறுநீரகம் செயலற்றுப் போவதால் ஆண்டுதோறும் 80,000 நோயாளிகள் இந்தியாவில் உயிரிழக்க நேரிடுகிறது என்பது அதிர்ச்சியான உண்மையாகும்.**

**பொருத்தமான மாற்றுச் சிறுநீரகம் கிடைக்காமல் போவதும், அதிகச் செலவு பிடிக்கும் மருத்துவமும் இதன் வெவ்வேறு பரிமாணங்கள். அதே சமயம் மாற்றுச் சிறுநீரகம் பொருத்தலும், 'டயாலிஸிஸ்' சிகிச்சையும் இத்துறையில் பெரும் சாதனைகள். வருமுன் காத்தல் சிறந்ததெனினும், வந்தபின் மாற்றுச் சிறுநீரகம் பொருத்துதல் நல்லது. 'எய்ட்ஸ்' அபாயம் பரவியுள்ளதால், இதில் கவனமாய்ச் செயல்பட வேண்டும் எனச் சொல்லவும் தேவையோ?**

**சிகிச்சைக்குத் தேவைப்படும் விலையுயர்ந்த சாதனங்கள், கருவிகள் மற்றும் மருந்திற்கு மாற்றாக, செலவு குறைந்த வழிமுறைகள் கண்டறியப்பட வேண்டும்; கிராமப்புறங்களில் இதற்கான சிகிச்சை வசதிகள் கிடைக்க வேண்டும்; சிறுநீரகத்தைத் தானமாக அளிக்க பலர் முன்வர வேண்டும். இந்தப் பாதிப்புக்குப் பலியாவோர் எண்ணிக்கை இவ்வழிகளால் கணிசமாகக் குறையக்கூடும்.**



(—5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இயற்றப்பட்டுள்ளதோ அந்த மக்களுக்கு முழுமையாகச் சென்றடைவதற்குச் சிறிதுகாலம் பிடிக்கவே செய்யும். இந்தச் சூழ்நிலையில், மொத்த இட ஒதுக்கீட்டை 50 சதவீதமாகக் குறைக்க வகை செய்யும் உச்ச நீதிமன்றத்தின் உத்தரவுக்கிணங்க நடப்பது தமிழ்நாட்டில் நடைமுறையில் சாத்தியப்படாத ஒன்று என்பது தெளிவு. இட ஒதுக்கீட்டில் திடீரென்று குறைப்பு செய்தால், அது சமூகக் கொந்தளிப்பை ஏற்படுத்தும்; அதனை நம்மால் தாங்கிக் கொள்ள முடியாது. மேலும், உச்சநீதிமன்றம் உத்தரவிட்டவாறு, இட ஒதுக்கீடு வழங்குவதில் பின்தங்கிய வகுப்பினரிடையே முன்னேற்றம் அடைந்தவர்களை நீக்கிவிடுவது (Separation of the creamy layer) என்பது மிகப்பலவான இடர்ப்பாடுகளை உருவாக்கக் கூடிய ஒன்றாகும். ஆகவே, இந்தப் பிரச்சினைகளில் உச்சநீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுகளை மறுஆய்வு செய்யும்படி கேட்டுக் கொள்ளவும் அரசு தீர்மானித்துள்ளது. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை ஆராய நிரந்தரமான குழு ஒன்றும் அமைக்கப்படும்.

10. பாரத் ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் உருவாக்கிய கொள்கைகளையும், திட்டங்களையும் நிறைவேற்ற இவ்வரசு முற்றிலும் உறுதி கொண்டுள்ளது. பதவியேற்ற பின்னர் உடனடியாக, இவ்வரசு மெரீனா கடற்கரையில் அறிஞர் அண்ணாவின் சமாதிக்கருகில், அன்பிற்குரிய மறைந்த தலைவரின் நினைவாகப் பொருத்தமான நினைவுச் சின்னம் ஒன்றினை அமைக்கும் பணியை மேற்கொண்டது. ரூ.1.55 கோடி செலவில் ஒரு பெருஞ்சிறப்பு வாய்ந்த புதிய நினைவுச் சின்னம் அமைக்கும் பணி பன்னிரெண்டே மாதத்தில் முடிக்கப்பெற்றது ஒரு சாதனையாகும். பாரத் ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள இந்த அழகிய நினைவுச் சின்னம் பொதுமக்களின் அனைத்துப் பிரிவினரின் வரவேற்பையும் பெற்றுள்ளது. பொது மக்கள் இங்கு பெருந்திரளாக வருகைதந்து அஞ்சலி செலுத்துகின்றனர்.

11. அருஞ்சாதனை என்று கூறுமளவிற்கு மிகக் குறுகிய கால அளவான 7 1/2 மாதங்களில், ரூ.40 கோடி செலவில் சென்னையில் கட்டிமுடிக்கப்பட்டுள்ள புதிய ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கத்தினை அண்மையில் பாரதப் பிரதமர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். பொறியியல் துறையில் வியக்கத்தக்க சாதனையான, பிரம்மாண்டமான, மலைக்க வைக்கக்கூடிய இந்த விளையாட்டரங்கம், ஆர்வக்கிளர்ச்சியும் உள்ளத்து எழுச்சியும் கொண்ட தமிழக இளைஞர்தம் உணர்வுகளை எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது. தமிழ்நாடு இதற்கு முன்னர் இரண்டுமுறை நேரு தங்கக்கோப்பை சர்வதேசப் போட்டியை நடத்தும் வாய்ப்பினை இழந்துள்ளது. இத்தகைய பிரம்மாண்டமானதொரு திட்டத்தைத் தொடங்கி நடத்த முடியுமா? அதுவும் உரிய காலத்தில் முடிக்க இயலுமா? என்ற ஐயப்பாடு பலருக்கும் எழுந்தது. இன்று இந்த விளையாட்டரங்கம், முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்கிற்கும், உறுதிப்பாட்டிற்கும் ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகிறது. ஒப்பற்றதொரு கட்டுமானச் சிறப்புடைய இந்த விளையாட்டரங்கம் ஆசியாவிலேயே தலை சிறந்ததாக விளங்குகிறது. இந்த விளையாட்டரங்கத்தில் மேற்கூரையமைப்புடன், தனித்தனியே பொருத்திய இருக்கைகளுடன் 40,000 பேர் உட்கார்ந்திருந்து போட்டிகளைக் கண்டுகளிக்கும் வசதி உள்ளது. இந்த விளையாட்டரங்கத்தில், இரவும் பகலும் விளையாட்டுப் போட்டிகளை நடத்த இயலக்கூடிய மிக நவீன ஒளிவிளக்கு ஏற்பாடு, உலகம் முழுவதும் தொடர்பு கொள்ளக்கூடிய அனைத்துவகைத் தொலைத் தொடர்புச் சாதன ஏற்பாடுகள், உயர்வகை விளையாட்டு வீரர்களுக்கான உயர்தர வசதிகள், கணினிமயமாக்கப்பட்ட 'ஸ்கோர் போர்டு', மின்னணுவியல் கண்காணிப்பு ஏற்பாடு, "குளோஸ்டு சர்கியூட் டி.வி" அமைப்பு ஆகியவை உள்ளிட்ட மிக நவீன, மிக உயர்தர வசதிகள் உள்ளன. பெருமை கொள்ளத்தக்க வகையில், குறுகிய கால அளவிற்குள் விளையாட்டரங்கம் கட்டும் திட்டத்தை வெற்றிகரமாக முடித்ததும், பத்தாவது ஜவகர்லால் நேரு தங்கக் கோப்பை சர்வதேச அழைப்பு கால்பந்தாட்டப் போட்டியை இந்த விளையாட்டரங்கத்தில் நடத்தியதும் இவ்வரசு செயற்கரிய அரும்பெரும் திட்டங்களையும் நிறைவேற்றி முடிக்கும் திறனைக் கொண்டுள்ளது என்பதனை மிக நன்றாக வெளியுலகுக்கு உணர்த்திய பெருஞ்சாதனைகள் ஆகும்.

12. இந்த அரசு பதவியேற்றபோது நிலவிய கடுமையான நிதி

நெருக்கடியை அவையின் உறுப்பினர்கள் நன்கு அறிவர். 1991-92 ஆம் ஆண்டுக்காக ஒப்பளிக்கப்பட்ட ஆண்டுத் திட்டம், அதாவது ரூ.1,605 கோடிக்கான திட்டப் பணிகள் முழுமையாக நிறைவேற்றப்படுமா என்பது குறித்துப் பெருத்த ஐயப்பாடுகள் எழுந்தன. உண்மையில், 1991-92 ஆம் ஆண்டுக்கு ஆகிய திட்டச் செலவு ரூ.1,651 கோடி; இது திட்ட இலக்கையும் விஞ்சியது என்பது பெரும் மனநிறைவளிக்கக் கூடியதாகும். 1992-93 ஆம் ஆண்டுத் திட்ட ஒதுக்கீடு, ரூ.1,486 கோடி அளவில் நிர்ணயிக்கப்பட வேண்டும் என்ற கருத்தை முதலமைச்சரிடம் தெரிவித்தபோது, அவர் 1992-93 ஆம் ஆண்டில் ரூ.1,751 கோடி திட்ட ஒதுக்கீட்டை எய்த தமிழ்நாடு ஒரு வழியைக் கண்டுபிடிக்கும் என்று வலியுறுத்தினார் என்பதையும் இங்கு நினைவுகூர வேண்டும். நடப்பாண்டில் திட்டச் செலவில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் மிக மிகச் சிறப்பாக உள்ளது. இது 1992-93 ஆம் ஆண்டிற்கான ரூ.1,751 கோடி திட்ட ஒதுக்கீட்டையும் விஞ்சக்கூடும் என்பதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன. 1992-97 ஆம் ஆண்டுக்கான எட்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தைப் பரிசீலனை செய்கையில் அப்போது நிலவிய கடுமையான நிதி நெருக்கடி காரணமாக அதனைப் பயனுள்ள வகையில் முடிவு செய்வது குறித்துப் பெருத்த ஐயப்பாடுகள் எழுந்தன என்பதை அவையின் உறுப்பினர்கள் நினைவுகூரலாம். எட்டாம் ஐந்தாண்டுத் திட்டத்திற்காக, ரூ.10,200 கோடி ஒதுக்கீட்டிற்கு ஒப்புதலளிக்குமாறு மத்திய திட்டக்குழுவை ஏற்றுக்கொள்ளச் செய்வதில் முதலமைச்சர் அவர்கள் வெற்றியடைந்துள்ளார்கள். இவ்வாறாக, இந்த ஒதுக்கீடு, ஏழாம் ஐந்தாண்டுத் திட்ட ஒதுக்கீட்டைவிட குறிப்பிடத்தக்க வகையில் மிகப்பெரும் அளவிற்கு, அதாவது 77 சதவீதம் அளவிற்கு உயர்ந்துள்ளது. எட்டாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின் முதல் ஆண்டான 1992-93 ஆம் ஆண்டில், ஒதுக்கீடான ரூ.1,751 கோடியை விஞ்சுகின்ற நிலையில் தமிழ்நாடு உள்ளது. இது, தற்போது தமிழ்நாடு உரிய வளர்ச்சிப் பாதையில் செல்கிறது என்பதைச் சுட்டிக் காட்டுகிறது. வளர்ச்சி நடவடிக்கைகளுக்குப் புதிய உத்வேகம் அளிக்கப்பட்டுள்ளது என்பது உண்மையிலேயே மனநிறைவளிக்கிறது. இந்த உண்மை, முதலமைச்சர் அவர்களுக்கும் மத்திய திட்டக்குழுவின் துணைத் தலைவருக்கும் இடையில், அண்மையில் 1992 நவம்பரில் நடைபெற்ற கூட்டத்தில், 1993-94 ஆம் ஆண்டிற்கான திட்ட ஒதுக்கீடு ரூ.2,101 கோடியாக முடிவு செய்யப்பட்டது என்பதிலிருந்து மீண்டும் மீண்டும் உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த ஒதுக்கீடு, 1992 - 93 ஆம் ஆண்டிற்கு ஒப்புதலளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீட்டைவிட 20 சதவீதம் அதிகமாகும். தமிழ்நாட்டை மீண்டும் விரைந்த வளர்ச்சிப் பாதையில் கொண்டுவருவதில் இவ்வரசின் சிறப்பான சாதனை குறித்து எவ்வித மாறுபட்ட கருத்தும் இருக்கமுடியாது.

13. தமிழ்நாட்டில் 1992 நவம்பரில் ஏற்பட்ட புயல், வெள்ளம் மாநிலத்தைப் பெரிதும் சேதப்படுத்தியது. 238 பேர் உயிரிழந்தனர்; 5.93 இலட்சம் ஏக்கர் நிலத்தில் வளர்ந்து நின்ற பயிர்கள் சேதமடைந்தன; 1.71 இலட்சம் குடிசைகள் சேதமடைந்தன. சாலைகள், பாசன ஆதாரங்கள், பொதுக் கட்டிடங்கள் ஆகியவை உள்ளிட்ட அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளுக்குப் பெருத்த சேதம் ஏற்பட்டது. முதலமைச்சர் அவர்கள் வெள்ளம் பாதித்த பகுதிகளை நேரடியாகச் சென்று பார்வையிட்டு, நிவாரண நடவடிக்கைகளுக்கு உத்தரவிட்டார். நிவாரணப் பணிகளை விரைவாகவும் திறம்படவும் மேற்கொண்டது அனைவரின் பாராட்டுதலையும் பெற்றது. புயல், வெள்ளத்தினால் ஏற்பட்ட சேதங்களின் அளவை விவரிக்கும் குறிப்பும், ரூ.530 கோடி அளவிற்கு நிதியுதவி கோரும் குறிப்பும் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டன. வெள்ளம் பாதித்த பகுதிகளைப் பார்வையிடுவதற்காகப் பாரதப் பிரதமர் அவர்கள் வந்தபோது, முதலமைச்சர் அவர்களும் உடன் சென்றார்கள். விரிவாக விவாதித்த பின்னர், பாரதப் பிரதமர் அவர்கள் இம்மாநிலத்திற்குக் கூடுதலாக ரூ.50 கோடி வழங்குவதாக அறிவித்தார்கள். இத்தொகை, 1993 - 94 ஆம் ஆண்டில் மாநிலத்திற்குச் சேரவேண்டிய இடர் நிவாரண நிதியின் மத்திய அரசின் பங்குத்தொகையில் 50 சதவீதமான ரூ.14.63 கோடியுடன் கூடுதலாக வழங்கப்பட்டதாகும். பாரதப் பிரதமர் அவர்கள் அளிப்பதாக உறுதியளித்த ரூ.50 கோடி, மத்திய வரிகளில் மாநிலத்தின் பங்குக்குரிய முன்பணமாக மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. இத்தொகை, 1993 மார்ச்சில் சரிக்கட்டப்படவுள்ளது என்பது ஏமாற்றம் அளிப்பதாக உள்ளது. அரசு ஏற்கெனவே பரவலாக வெள்ள நிவாரணப் பணிகளையும், சீரமைப்புப் பணிகளையும் மேற்கொண்டுள்ளது. இடருதவி, உழவர்கள், மீனவர்கள், ஏனையோர்க்கு நிவாரணம், சாலைகள், பாசன ஏற்பாட்டுத் திட்டங்கள், கட்டிடங்கள் ஆகியவற்றிற்கு அவசர சீரமைப்புப் பணிகள் மேற்கொள்வதற்காக ரூ.68.52 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது. வெள்ள நிவாரணச் செலவு, மாநிலத்திற்குக் கடுமையான நிதிச் சுமையை ஏற்படுத்தியுள்ளது. ஒன்பதாம் நிதிக் குழு பரிந்துரைத்த இடர் நிவாரணநிதி ஏற்பாடுகள் போதுமானதாக இல்லை என்பதையும் இது சுட்டிக் காட்டுகிறது. உலக வங்கியின் நிதியுதவியுடன் தமிழ்நாட்டில் புயல் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சீரமைப்புத் திட்டம் மேற்கொள்ளப்படும் என்று பாரதப் பிரதமர் அவர்கள் முதலமைச்சரிடம் உறுதியளித்துள்ளார்கள். அதற்கிணங்க, மொத்தம் ரூ.2,560 கோடி மூலதனச் செலவில் திட்ட அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டு, மத்திய அரசிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மத்திய அரசு, இத்திட்டத்தினை உலக வங்கிக்கு அனுப்பியுள்ளது. இத்திட்டத்திற்கு உலகவங்கி விரைவில் அனுமதி அளிக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்.

14. அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தினால் வளர்ந்து நின்ற பயிர்களும், அண்மையில் நாற்று நடப்பட்ட பயிர்களும் சேதமடைந்த போதிலும், வளர்ந்த பயிர்களைக் காப்பாற்றுவதற்கும் புதிதாகப் பயிரிடுவதற்கும் பயனுள்ள வகையில், கணிசமான அளவிற்கு நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. நல்ல விளைச்சல் தரக்கூடிய பயிர்களைப் பயிரிட இயலும் வகையில், விதைகள், இரசாயன உரங்கள், பூச்சி கொல்லி மருந்துகள் ஆகியவை போதிய அளவிற்கு வழங்கப்பட்டுள்ளன. 1991-92 ஆம் ஆண்டில் தமிழ்நாடு இதற்கு முன்னர் எப்போதும் அடைந்திராத அதிக அளவு உற்பத்தியான 90.70 இலட்சம் மெட்ரிக் டன் உணவு உற்பத்தியை அடைந்துள்ளது என்பதை அவையின் உறுப்பினர்கள் அறிவர். 1992-93 ஆம் ஆண்டில் உணவு தானிய உற்பத்தியானது, எய்துவதற்கு மிகக் கடினமான 100 இலட்சம் மெட்ரிக் டன் என்ற அளவையும் தாண்டிச்செல்ல இருப்பதன் மூலம், முன் எப்போதும் கண்டிராத மேற்சொன்ன சாதனையை அடையக்கூடும் என்பது மனநிறைவளிக்கத்தக்கதாகும். இது உண்மையிலேயே தமிழ்நாட்டின் அயராது உழைக்கும் உழவர்களின் உயர்ந்த சாதனையாகும். அரிசி உற்பத்தி எப்போதும் கண்டிராத உயர் அளவான 76 இலட்சம் மெட்ரிக் டன்னை எய்தும் என மதிப்பிடப்பட்டுள்ளது. நடப்பாண்டில் பருத்தி உற்பத்தி கூட மிக உயர்ந்த அளவை எய்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. மாநில விவசாயிகளின் மிகச் சிறந்த முயற்சிகளுக்கு அரசு முழுமையாக ஆதரவளித்து வந்துள்ளது. தொழில்நுட்ப விரிவாக்க ஆதரவு, இயற்கைச் சீற்றங்களின்போது விரைந்து நிவாரணம் வழங்கல், போதுமான ஆதரவு அளித்தல் ஆகியவகைகளில் அளிக்கப்பட்ட புதுமையான தொகுப்பு உதவிகள், ரூ.55 கோடி அளவிற்கு அரசு வழங்கிய விரிவான கடன் நிவாரணத் தொகுப்புதவி ஆகியவை தமிழ்நாட்டு விவசாயிகள் நல்ல பயன்களை அடைய உதவின. பருவமழை அனுகூலமாக இல்லாது போனாலும்கூட, இப்படிப்பட்ட குறிப்பிடத்தக்க சாதனைகளைத் தொடர்ந்து நிலைபெறச் செய்ய உறுதி செய்வது நமது முயற்சியாக இருக்கும். இந்தக் காரணத்திற்காகவே, தரிசு நிலங்களைச் சாகுபடி செய்தல், ஒருங்கிணைந்த நீர்வரத்துப் பகுதி மேம்பாடு, ஏனைய வறட்சித்தாப்புப் பணிகள் ஆகியவை மீண்டும் வலியுறுத்தப்படும்.

15. ஊரகப் பொருளாதாரம் விரைந்த வளர்ச்சி பெறவேண்டும் என்பதற்காகக் கால்நடை வளர்ப்பு-மீனளம் போன்ற விவசாயம் சார்ந்த நடவடிக்கைகளுக்கு அரசு மிகுந்த முன்னுரிமை அளித்துள்ளது. ரூ.68.19 கோடி மூலதனச் செலவில் பால் பெருக்கத் திட்டம் (மூன்றாம் கட்டம்) செயற்படுத்தப்பட்டு வருகிறது. இதன்மூலம் மாநிலம் முழுவதும் உள்ள பால்பண்ணை விவசாயிகளுக்குப் புதிய வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில், பால் உற்பத்திப் பெருக்கத்தில் கிட்டத்தட்ட ஒரு புரட்சியே நிகழவுள்ளது. 1992 ஆம் ஆண்டில் நாள் ஒன்றுக்கு 93.81 இலட்சம் லிட்டராக இருந்த மொத்தப் பால் உற்பத்தி, 1997 ஆம் ஆண்டில் நாள் ஒன்றுக்கு 115.22 இலட்சம் லிட்டராக உயர்த்தப்படும். பால் கூட்டுறவு ஒன்றியங்கள், பால் கூட்டுறவு இணையம் ஆகியவற்றில் கையாளப்படும் பாலின் அளவு தற்போதைய

1. **பொது அறிவியல்:** இப்பகுதியில் வரும் வினாக்கள் படித்த ஒரு மனிதனின் பொது அறிவியல் சார்ந்த அறிவினை சோதிக்கும் வகையில்அமையும். அன்றாட வாழ்வில் அறிவியல் சாதனங்கள் கோட்பாடுகள் எவ்வாறு பயன்படுகின்றன என்பதை அறிந்திருத்தல், போற்றுதல் முதலியனவும் அடங்கும். இயற்பியல், வேதியியல், உயிரியல் ஆகிய பாடத் தலைப்புகளில் வரும் அறிவியல் விதிகள், கருவிகள், புதிய கண்டுபிடிப்புகள், அறிவியல் மேதைகளின் கருப்பொருள், மனித உடலியல், நோய்க் காரணங்கள், நோயினைத் தடுத்தல் மற்றும் நிவாரணம், உணவு, உணவுச் சமன்பாடு, மனித மரபியல், பாலூட்டிகள், பறவையினம், விலங்கினம், சுற்றுப்புறச் சூழ்நிலை, அதன் தூய்மை, கனிமங்கள், கூட்டுப்பொருள், திராவகங்கள், உப்பு மற்றும் தொடர்புப் பொருட்கள், பொருட்களின் இயக்கம் - நியூட்டனின் இயக்க விதிகள், பொருட்கள் பொருட்களின் தன்மைகள், மின்சாரம், தேசிய பரிசோதனைக் கூடங்கள் மற்றும் தொடர்புடைய பாடத் தலைப்புகள்.

2. **இந்திய வரலாறு:** சிந்து சமவெளி நாகரிகம், வேதகால ஆரிய கால வரலாறு, சங்ககாலம், மௌரியர்கள், புத்தமும், சைனமும், குப்தர்கள், வர்தனர் ஆட்சி, பல்லவர் சோழர் மற்றும் பாண்டியர், சுல்தான் மற்றும் மொகலாயர் கால ஆட்சி முறையின் தன்மைகள், நிகழ்ச்சிகள், ஐரோப்பியரின் வருகை, ஆங்கிலேய ஆதிக்கம் அதன் தொடர்பான வரலாற்று நிகழ்வுகள்.

3. **இந்தியப் புவியியல்:** பூமி, பூமியின் வடிவம், அமைப்பு, இயக்கம், பூமியின் சுழற்சியும், அதன் விளைவுகளும், இந்திய இயற்கை அமைப்பு, தட்பவெட்ப நிலை, பருவ காலங்கள், வானிலை, மழை அளவு, இயற்கைச் சீற்றங்கள் - அழிவுகள், இந்திய நகரங்கள், முக்கிய இடங்கள், மலைவாழ் இடங்கள், தேசீய பூங்காக்கள், சரணாலயங்கள், துறைமுகங்கள், விவசாயப் பயிர்கள், கனிமப் பொருட்கள், பெரும் தொழிற்சாலைகள் இட அமைப்பு, வனமும் வன விலங்குகளும், இந்திய மக்கட் தொகை பரவு மற்றும் தொடர்புடைய பாடத் தலைப்புகள்.

4. **பொருளாதாரமும் வணிகமும்:** இந்திய விவசாயம், விவசாயப் பயிர்கள் பயிர்முறை, தொழில் வளர்ச்சி - பெருந் தொழில், சிறு தொழில்கள், கிராமிய குடிசைத் தொழில்கள் - அவற்றின் வளர்ச்சி - வீட்டு வசதி - குடிநீர் வழங்குதல் - இவற்றுக்கான வளர்ச்சித் திட்டங்கள் - விலைவாசிக் கொள்கை - பணப் பெருக்கம் - மக்கட் தொகை வளர்ச்சியும் வேலை யின்மை பிரச்சினையும் - இந்திய ஏற்றுமதி இறக்குமதிக் கொள்கை மற்றும் தொடர்புடைய தலைப்புகள்.

5. **இந்திய அரசு அமைப்பு முறை:** இந்திய அரசியலமைப்பு, சிறப்பியல்புகள் குடியுரிமை - தேர்தல் முறை - பாராளு மன்றமும், மாநில சட்டமன்றங்களும் செயலாட்சி முறை - நீதித்துறை - உள்ளாட்சி அமைப்பு முறைகள் - மத்திய, மாநில அரசு உறவு முறைகள் - மொழிக் கொள்கை - அயல்நாட்டுக் கொள்கை மற்றும் தொடர்புடைய தலைப்புகள்.

6. **இந்திய தேசீய இயக்கம்:** தேசிய சுதந்திரப் போராட்டம், சுதந்திரப் போராட்டத்தில் பால கங்காதர் திலக், கோபால கிருஷ்ண கோகலே, தாதாபாய் நௌரோஜி, மகாத்மா காந்தி, ஜவகர்லால் நேரு போன்ற தலைவர்களின் பங்கு - சுதந்திரப் போராட்டத்தில் தமிழ்நாட்டின் பங்கு - பாரதியார், வ.உ.சி. சுப்ரமணிய சிவா, இராஜாஜி மற்றும் தலைவர்கள்.

7. **நடப்புக் கால நிகழ்ச்சிகள்:** சமீப கால அறிவியல் தொழில் நுட்ப வளர்ச்சிகள், அரசியல் செய்திகள், வரலாற்றுச் செய்திகள் - வாணிபம், போக்குவரத்து மற்றும் தொலைத் தொடர்புச் சாதனங்கள் இவற்றின் வளர்ச்சி - நாட்டியம், நாடகம், ஓவியம், படங்கள் போன்ற நுண் கலைத் துறை வளர்ச்சி - மொழி இலக்கிய வெளியீடுகள், வெளிப்பாடுகள் விளையாட்டுப் போட்டிகள் - பரிசுகள், உலக தேசீய அமைப்புகள், இயக்கங்கள் - சுருக்கு சொல் எழுத்துக்கள் விரிவு - உயர் பதவியில் இருப்போர், புத்தகங்களும் ஆசிரியர்களும், சொல்வகராதி - இன்றைய இந்தியாவின் நிகழ்வுகள் - இந்தியாவும் அதன் அண்டை நாடுகளும் மற்றும் தொடர்புடைய செய்திகள்.

8. **அறிவுக் கூர்மைப் போட்டி:** இப்பகுதி வினாக்கள், விண்ணப்பதாரர்கள் கொடுத்துள்ள அட்டவணை மற்றும் விளக்கப் படங்களின் உய்த்துணர்ந்தோ அல்லது உய்த்தறிந்தோ சில முடிவுகளை எடுக்கத்திறமை உள்ளவரா என்பதைக் கண்டறிய ஏதுவாக அமையும். பள்ளிக் கணக்குப் புத்தகங்களிலுள்ள அடிப்படைக் கணிதமுறையும் கேள்விகளாக அமையும்.

**குறிப்பு:** இத்தாளில் கேட்கப்படும் சில கேள்விகள் தமிழ்நாட்டுக்கு சார்புடையனவாக அமையும்.

7. ஆ. 1. முதன்மைத் தேர்விற்கு அனுமதிக்கப்படும் விபரம்: முதன்மைத் தேர்வு எழுத அனுமதிக்கப்படும் விண்ணப்ப தாரர்கள் முதனிலைத் தேர்வில் பெற்ற மதிப்பெண்களை இறுதியாகத் தேர்ந்தெடுப்பதற்கு கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது. முதனிலைத் தேர்வின் முடிவின் பின் முதன்மைத் தேர்வில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படும் விண்ணப்பதாரர் களின் எண்ணிக்கை ஒதுக்கப் பணி விதியின்படி, அந்தந்தத் தேர்விற்குத் தெரிந்தெடுக்கப்படவிருக்கும் விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கையை விட சரியாகப் பத்து மடங்கு கூடுதலாக நிர்ணயம் செய்யப்படும்.

2. முதன்மைத் தேர்வு எழுதத் தகுதியடைந்தவர்களுக்குத் தேர்வாணையத்தால் பின்னர் அனுப்பப்படும் விண்ணப்பப் படிவத்துடன் முதன்மைத் தேர்வின் பாடத் திட்டத்தின் விபரங்கள் அனுப்பி வைக்கப்படும்.

8. விண்ணப்பிக்கும் முறை: அ. முதனிலைத் தேர்வில் கலந்து கொள்வோர் கீழே தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தில் கண்டுள்ளவாறு 30 x 21 செ.மீ. அளவுள்ள முழுநீள வெள்ளைத்தாளில் சீராக இடைவெளிவிட்டு, தட்டச்சு செய்யப்பட்ட அல்லது அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தினையும், வருகைத்தாளையும், பூர்த்தி செய்து கையொப்பமிட்டு செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-2 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

அ. 'நான்காம் தொகுதிப் பணிகளில் அடங்கிய பதவிகளுக்கான முதனிலைத் தேர்வு - 1993' என மேலுறையில் தெளிவாக எழுதி அனுப்ப வேண்டும்.

இ. விண்ணப்பதாரர் விண்ணப்பத்துடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவைகளை அனுப்புதல் வேண்டும்.





இந்தியாவுக்கான இங்கிலாந்து நாட்டுத் தூதர் சர் நிகோலாஸ் பென்கிங் தமது துணைவியார் திருமதி லேடி பென் உடன் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களைத் தலைமைச் செயலகத்தில் சந்தித்தார் (9.2.'93).

1. தேர்வுக் கட்டணத்தை கேட்புக் காசோலை மூலம் அனுப்ப வேண்டும். (கட்டணச் சலுகை பெறுவோர் தவிர)

2. வருகைத் தாள் (Attendance sheet)

3. அண்மையில் எடுக்கப்பட்ட ஒரே மாதிரியான பாஸ்போர்ட் அளவு '5 x 7 செ.மீ.) நிழற்படி நகல்கள் இரண்டில் கையொப்பமிட்டு அவற்றின் ஒன்றினை விண்ணப்பத்தில் முதல் பக்கத்திலும் மற்றொன்றினை வருகைத் தாளிலும் ஒட்டி அனுப்ப வேண்டும்.

4. சுயவிலாசமிட்ட 45 காசுகள் கூடுதல் அஞ்சல் வில்லை ஒட்டப்பட்ட ஓர் அஞ்சல் அட்டை (Post Card).

5. சுய விலாசமிட்ட 12 x 28 செ.மீ. அளவிலான அஞ்சல் வில்லை ஒட்டப்படாத உறை ஒன்று.

6. வயது, கல்வித் தகுதி மற்றும் சாதி ஆகியவைகளுக்குச் சான்றாக சான்றளிக்கப்பட்ட ஆவணங்கள்/சான்றிதழ்கள் (attested copies) அல்லது விண்ணப்பதாரரால் சரியாக உள்ளதென சான்றளிக்கப்பட்ட (Self attested) சான்றிதழ்களின் நகல்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

ஈ. அரசுப் பணி மற்றும் அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்ட துறைகளில் பணி செய்யும் விண்ணப்பதாரர்கள் நேரடியாகத் தேர்வாணையத்திற்கு விண்ணப்பிக்கலாம். அதே சமயத்தில் விண்ணப்பதாரர் இத்தேர்தலில் கலந்து கொள்ளும் விபரத்தை துறைத் தலைவருக்கு எழுத்து மூலம் தெரிவித்திருப்பதாகவும் உறுதி மொழி அளிக்க வேண்டும்.

உ. தகுந்த தேர்வு கட்டணம் செலுத்தப்படாத, கையெழுத்து இடப்படாத மற்றும் குறைபாடுள்ள விண்ணப்பங்கள் தள்ளுபடி செய்யப்படும்.

ஊ. மாநில அரசுத் துறைகள் மற்றும் மாநில அரசுக்குச் சொந்தமான மற்ற நிறுவனங்களில் பணியாற்றும் குறைந்த பட்சக் கல்வித் தகுதியைப் பெறுவதற்கான பொதுக் கல்வித் தேர்வினை (General Educational Test) எழுதுவதற்கு தற்போது விண்ணப்பிக்க வேண்டாம். அது குறித்து அறிவிக்கை பின்னர் வெளியிடப் படும். கல்வித்தகுதி பெறாத பணியாளர்கள் மேற்படி குறைந்த பட்சக் கல்வித் தகுதியைப் பெறுவதற்கான

எ. சுருக்கெழுத்து தட்டச்சர்/நேர்முக எழுத்தர் பதவிகளுக்கான தேர்வு குறித்த விளம்பரம் தனியாக வெளியிடப்படும்.

9. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் தேர்வாணையத்திற்கு 8.3.93 அன்று மாலை 5.45 மணிக்குள் வந்து சேரும்படி அனுப்பப்பட வேண்டும். இத்தேதிக்குப் பின்னர் தேர்வாணையத்திற்கு வந்து சேரும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா.

**சுருக்கங்கள்:**

| | | |
|---|---|---|
| ஆ.தி.வ. | - | ஆதிதிராவிட வகுப்பினர் |
| ப.வ. | - | பழங்குடி வகுப்பினர் |
| மி.பி.வ. | - | மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் |
| சீ.ம. | - | சீர்மரபினர் |
| பி.வ. | - | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் |
| ப.போ. | - | பகிரங்கப் போட்டி |

தென் மாநிலங்கள் அனைத்தும் கூட்டாகச் சேர்ந்து நிதியளிக்கலாம் என்றும்கூடத் தெரிவித்துள்ளார். மத்திய அரசு, அண்மையில் தென்னக எரிவாயு இணைப்புத் திட்டத்திற்குக் கொள்கை அளவில் அனுமதியளித்துள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்த விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று நாங்கள் நம்புகிறோம். பன்னாட்டு நிதித்துறை மையமாக விரைந்து வளர்ந்து வருகின்ற சென்னை மாநகரைத் தலைமையிடமாகக் கொண்டு, தென் மண்டலத் தொழில் வளர்ச்சி வங்கியை ஏற்படுத்தும் கருத்தினையும் முதலமைச்சர் அவர்கள் முன்வைத்துள்ளார்கள். பொருளாதாரத்துறையில் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டநிலையில், அனைத்திந்திய நிதி நிறுவனங்கள் நாடு முழுவதும் பரவலாக அமைந்து மண்டல அளவில் ஓரளவு சமநிலை அமைய வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும். இந்நாட்டின் நிதியமைப்பு ஏற்பாட்டைச் சீரமைக்கும் வகையில், இந்தக் கருத்தினை விரைவில் பரிசீலிக்க வேண்டியது அவசியமாகும். கூடங்குளம் அணுமின் திட்டத்திற்குப் புத்துயிரளிக்கப்பட வேண்டும். இத்திட்டத்தை மேற்கொள்ளும் நிறுவனத்தின் பங்கு மூலதனத்தில் முதலீடு செய்ய மாநில அரசு தன்னுடைய இசைவைத் தெரிவித்துள்ளது. இத்திட்டம் விரைவில் செயல்படத் தொடங்க இயலும் வகையில், மத்திய அரசு இத்திட்டத்தின் செயலாக்கம் குறித்து விரைவில் முடிவெடுக்க வேண்டியது அவசியமாகும்.

21. மத்திய அரசு செயற்படுத்தத் தொடங்கியுள்ள புதிய பொருளாதாரக் கொள்கைகளுக்குப் பொதுவாக ஆதரவளிக்கின்ற அதே சமயம், அக்கொள்கைகளைச் செயல்படுத்துவதால் ஏற்படுகின்ற பொருளாதாரக் கட்டமைப்பைச் சரிப்படுத்தும் நடவடிக்கைகளால் உண்டாகின்ற சுமை, ஏழை எளிய மக்களின் மீதும் ஒடுக்கப்பட்ட மக்களின் மீதும் விழுந்து விடக்கூடாதே என்கின்ற கவலை மாநில அரசுக்கு எப்போதும் இருந்துவந்துள்ளது. பணவீக்கத்தை, குறிப்பாக, உணவு தானியங்கள் மற்றும் பிற இன்றியமையாப் பொருட்களின் விலை உயர்வைக் கட்டுப்படுத்துவதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். விலைகளில் ஏற்ற இறக்கத்தை ஏற்படுத்துகின்ற பெரிய பொருளாதார நடவடிக்கைகள் யாவும் பெரும்பாலும் மத்திய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளபடியால், ஏழை எளிய மக்களைப் பாதிக்கக்கூடிய வகையில் உள்ள கொள்கைகள் தவிர்க்கப்பட வேண்டும் என்று, மாநில அரசு வலியுறுத்துகிறது. மத்திய அரசு அண்மையில் அரிசியின் விற்பனை விலையை உயர்த்தியது மாநில அரசின்மீது ஒரு புதிய சுமையை ஏற்றி வைத்துள்ளது. கடந்தகாலத்தில், மாநில அரசு வழங்குகின்ற மானியத்தை அதிகரிப்பதன் மூலம் விலை உயர்வு மக்களைப் பாதிக்காதவகையில், அதனை அரசே ஏற்றுக்கொள்வதற்கு முடிந்த அளவு அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. அவ்வாறிருக்க, இப்போது இந்த அரசை எதிர்நோக்கியுள்ள கடுமையான நிதி இடர்ப்பாடுகளின் காரணமாக, அதுபோன்று இனிமேலும் மானியத்தை உயர்த்தி விலை உயர்வை அரசே ஏற்றுக்கொள்ள வழியில்லை. இந்தக் காரணத்தினால் அரிசி விற்பனை விலையை அதிகரிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அப்படி இருந்தும்கூட, தமிழ் நாட்டில் பொது விநியோக முறையின் கீழ் வழங்கப்படும் அரிசியின் விலைதான் நமது நாட்டிலேயே மிகக் குறைவானதாகத் தொடர்ந்து இருந்து வருகிறது. தமிழ்நாட்டில் 1992 ஆம் ஆண்டில் பொது விநியோக முறையின் கீழ் உள்ள 22,000 நியாய விலைக்கடைகள் மூலம் 14.67 இலட்சம் டன் அரிசி விநியோகிக்கப்பட்டது என்பது நாம் பெருமளவில் பெருமைப்படத்தக்கதாகும். பொது விநியோகமுறை, மாநிலத்தின் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் வாழ்கின்ற மக்களைச் சென்றடையும் வண்ணம் திறம்பட்ட வகையில் செயலாற்றும் திறன் அனைவராலும் பாராட்டப்பட்டுள்ளது. பணிகளைத் தொடர்ந்து கண்காணித்து இடையறாமல் எச்சரிக்கையுடன் செயல்பட்டு, விநியோகப் பணிகளில் செய்யப்பட்ட மேம்பாடு காரணமாகப் பொது விநியோகமுறையின் கீழ் அனைத்து நுகர்வோர்க்கும் பொருள்கள் வழங்குதலுக்கு உறுதிசெய்யப்பட்டுள்ளது. குறுவை நெல் அறுவடை அமோகமாக இருந்தது. சம்பா நெல் சாகுபடியும் சிறந்த சாதனையாகக் குறிப்பிடத்தக்க அளவுக்கு உள்ளது. இவையிரண்டும் கொள்முதல் இலக்குகள் எய்தப் பெறுவதற்கு உறுதி செய்யும். இதனால், இந்த ஆண்டு முழுவதற்கும் பொது விநியோக முறையின் கீழ் வழங்கப்படும் அரிசியின் இருப்பில் பற்றாக்குறை எதுவும் ஏற்படாது.

22. மக்களுக்குக் குறிப்பாக ஏழை, எளிய ஒடுக்கப்பட்ட மக்களுக்குச் சிறப்பான வாழ்க்கைத் தரத்தை ஏற்படுத்தித்தருவதை உறுதிசெய்வதற்காகவே இவ்வரசு எந்நாளும் பாடுபட்டு வருகிறது. அறுபது இலட்சம் பெண்களுக்கு இலவசச் சேலையும், அறுபது இலட்சம் ஆண்களுக்கு இலவச வேட்டியும் வழங்கும் திட்டம் இரண்டாவது ஆண்டாகத் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டுள்ளது. ரூ.45 கோடி செலவு பிடிக்கும் இத்திட்டம் ஏழை, எளிய மக்களுக்கு மிகப் பெரிய வரப்பிரசாதமாகும். இம் மாநிலத்திலுள்ள நெசவாளர்களுக்கும் இத்திட்டத்தினால் வாழ்வு கிடைத்துள்ளது.

23. புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா மருத்துவ நலத்திட்டம், வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளது. 9,226 மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் "அனைவர்க்கும் நல்வாழ்வு" என்னும் கோட்பாடு நனவாகியுள்ளது. இந்த முகாம்களினால் 51.64 இலட்சம் பேர் பயனடைந்துள்ளனர். குடும்பநலப்பணியில் தமிழ்நாட்டின் செயல்திறன் நாட்டிலேயே தலை சிறந்தது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் தடுப்பூசித் திட்டம் மிகமிகப் பயனுள்ளதாகவுள்ளது எனத் தனிப்பட்ட முறையில் நடத்தப்பெற்ற மதிப்பீட்டாய்வின் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது. அரசின் அனைத்து மருத்துவமனைகளிலும், மருந்தகங்களிலும் மருந்துப்பொருட்கள் தேவையான அளவில் இருப்பதற்கு உறுதிசெய்யும் வகையில், நடப்பு ஆண்டில் மருந்துகளுக்காக இதுவரை இல்லாத அளவிற்கு இப்போது பெரும் அளவில், அதாவது ரூ.70 கோடி நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

24."புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம்" (Puratchi Thalaivi Dr.J.Jayalalitha Girl Child Protection Scheme) என்றழைக்கப்படும் ஒரு புதிய திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. பெண்குழந்தையின் முதலாவது பிறந்த தினத்தின்போதும், அக்குழந்தையின் கல்விக்காகவும் அக்குழந்தைக்கு இருபத்தொரு வயதாகும்போது ரூ.10,000 மொத்தத் தொகை வழங்கவும் உரிய வகையில் அக்குழந்தைக்குச் சிறப்புப் பயன்கள் வழங்க இது வகை செய்யும். கொடிய பழக்கமான பெண் சிசுக்கொலைக்கெதிராக சமுதாய விழிப்புணர்ச்சி எழுவதற்கு உரிய அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுவரும் அதே வேளையில், மரபு விலங்கை உடைத்தெறியத் தாய்மார்களுக்கு ஊக்கமளிக்கவும், வேண்டாத பெண்குழந்தைக்கு நல்ல வாழ்க்கை அமைவதற்கான வாய்ப்பை அளிக்கவும் அரசு 'தொட்டில் திட்டம்' என்னும் திட்டத்தைக் கொண்டு வந்துள்ளது. இக்குழந்தைகளை அரசு தனது பாதுகாப்பில் எடுத்துக் கொண்டு பேணி வளர்க்கும். உலக வங்கியின் உதவியுடன், புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம் வலுப்படுத்தப்பட்டுள்ளது. 6 திங்களிலிருந்து 36 திங்கள் வரையிலான வயதுத் தொகுதியில் உள்ள குழந்தைகளும் தாய்மார்களும் இத்திட்டத்தின்கீழ் பயன்பெறுகிறார்கள். பெண்களின் பொருளாதார நிலையை மேம்படுத்துவதற்கு மகளிர் குழுக்களுக்கு நிதி உதவி வழங்கும் 'ஒருங்கிணைந்த பெண்கள் மேம்பாட்டுத் திட்டம்' ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் ஓர் இலட்சம் பெண்கள் உதவி பெறுவார்கள். உடல் ஊனமுற்றோருக்கான திட்டங்களுக்குத் தனி முக்கியத்துவம் கொடுக்க, உடல் ஊனமுற்றோருக்காக ஒரு புதிய துறை உருவாக்கப்பட்டுள்ளது. உடல் ஊனமுற்றோருக்கு உதவி செய்வதில் மிகச் சிறந்த செயல்பாட்டுக்காக, எந்த மாநிலமும் பெற்றிராத அளவில், 15 தேசிய விருதுகளை வென்று தமிழ்நாடு தனிச் சிறப்பு எய்தியிருக்கிறது.

25. தமிழ்நாடு அரசு தொழிலாளர் நலனுக்கு மிகவுயர்ந்த முன்னுரிமை கொடுத்து வருகிறது. அரசால் எடுக்கப்பட்ட ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளால் பின்னி லிமிடெட், ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் ஆகிய நிறுவனங்களை மீண்டும் திறக்க முடிந்தது. துணி ஆலைத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்திற்கு விரைவான தீர்வு காணப்பட்டது. மத்திய அரசால் கொண்டு வரப்பட்டுள்ள புதிய பொருளாதாரக் கொள்கைகளின் காரணமாக, தொழில்களை நவீனமயமாக்கிப் புதுப்பித்துக் கட்டமைக்கின்ற நடவடிக்கைகளினால் ஏற்படும் உடன்விளைவுகள் அனைத்தையும் மாநில அரசே தனித்து எதிர்கொண்டு சமாளிக்க இயலாது. தொழில்களை நவீனப்படுத்தல், சீரமைத்தல் ஆகியவற்றின் மூலம் பாதிக்கப்படும் தொழிலாளர்களுக்கு நியாயமாக உரியவற்றை வழங்க




அளவைவிட 50 சதவீதம் உயர்த்தப்படவிருக்கிறது.

16. இருவகையான அணுகுமுறைகளின் வாயிலாக உவர் நீர் இறால் பண்ணைக்குப் பெருமளவு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. முதலாவதாக, பெரிய தொழில் நிறுவனங்கள் இறால் பண்ணை அமைக்க ஊக்கம் அளிக்கப்படுகிறது. இரண்டாவதாக, சிறு விவசாயிகளை ஒருங்கிணைத்து இறால் வளர்ப்புத் தொழிற்பேட்டைகள் உருவாக்கப்பட்டுவருகின்றன . பாக் நீர்ச்சந்தியில் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் நோக்குடன், ரூ.7.50 கோடி செலவில், இராமநாதபுரம் மாவட்டத்தில் உவர் நீர் இறால் வளர்ப்புத் தொழிற்பேட்டை ஏற்படுத்தப்படும். கடலோர மாவட்டங்கள் ஐந்தில் 6,050 மீனவர்கள் பயனடைவதற்கு ரூ.15.88 கோடி செலவில் ஒருங்கிணைந்த ஆழ்கடல் மீனள வளர்ச்சித் திட்டம் ஒன்று அண்மையில் தொடங்கப்பட்டுள்ளது.

17. இந்தியப் பொருளாதாரத்தை, குறிப்பாக, இந்தியத் தொழில் துறையை உலகப் பொருளாதாரத்துடன் ஒருங்கிணைப்பதும், அதன் வளர்ச்சிக்கு மிகவும் தேவைப்படும் ஊக்கமளிப்பதும் நாட்டின் புதிய பொருளாதாரக் கொள்கையின் பொதுவான நோக்கமாகும். இருப்பினும், தேசிய அளவில் புதிய முதலீடுகள் திரட்டப்படுவது குறிப்பிடத்தக்க அளவிற்கு வேகம் பிடிக்கவில்லையென்பது கவலை அளிப்பதாக உள்ளது. புதிய முதலீட்டுக்கும், விரைவான வளர்ச்சிக்கும் உகந்த சூழ்நிலைகளை நாம் உருவாக்க வேண்டும். மாநிலத்துக்கே உரிய புதிய தொழில் கொள்கையை முதலமைச்சர் விளக்கியுள்ளார். பயனுள்ள நடவடிக்கைக்கு உரிய விரிவான முழுமையான அடிப்படைத் திட்டமாக இக்கொள்கை அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. தேசிய அளவில் புதிய முதலீடு திரட்டுவது எளிதாக இல்லாதபோது, தமிழ்நாட்டில் மாநில அரசு மேற்கொண்ட பயனுள்ள நிலைத்த முயற்சிகள் நல்ல பயன்களைக் கொடுத்துள்ளன. ரூ.8,500 கோடி மூலதனத்தை உள்ளடக்கிய புதிய முதலீட்டுத் திட்டங்களைக் குறித்துக் கலந்து பேசி முடிவுகாண, 1992 டிசம்பரில் முதலமைச்சர் விரிவான ஆலோசனைகளை நடத்தினார். இதனால், மாநிலத்தில் உள்ள பல்வேறு திட்டங்களில் மொத்தம் ரூ.20,000 கோடி புதிய முதலீட்டைப் பெறுவதில் அரசு வெற்றி கண்டுள்ளது. முதலமைச்சர் அவர்களின் உறுதிமிக்க முயற்சிகளாலும், தமிழ்நாட்டில், தொழில் வளர்ச்சிக்கு உகந்த சூழ்நிலை நிலவுவதைப் படிப்படியாகப் பலரும் தெரிந்து கொண்டுள்ளபடியாலும், மேலும் சிறப்பான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் இருப்பதனாலும், தேசியச் சூழ்நிலையில் இடர்ப்பாடுகள் இருந்தபோதிலும், அரசு இத்துறையில் தனிச்சிறப்பான சாதனையை எய்த முடிந்துள்ளது. மிகக் குறைந்த கால அளவிற்குள், இந்த முதலீடுகள் நிறைவேற்றப் பெறுவதற்கு அரசு முயற்சிகளை மேற்கொள்ளவிருக்கிறது.

18. இம்மாநிலத்தில் விரைவுபடுத்தப்பட்ட தொழில் வளர்ச்சியை ஏற்படுத்துவதற்காகப் புதிய முயற்சிகள் பல ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு தொழில் அடிப்படைவசதிக் கட்டமைப்பு மேம்பாட்டுக்கழகம் (TACID) என்கிற புதிய கழகம், இம்மாநிலத்தில் வளர்ச்சி மையங்களை ஏற்படுத்துவதில் முனைப்புடன் செயல்பட்டுவருகிறது. வலுவான தொழில்களின் அடிப்படை வசதிக் கட்டமைப்பு வளர்ச்சிக்கு இந்த வளர்ச்சி மையங்கள் திட்டம் புதிய வேகத்தை அளிக்கும். இந்த வளர்ச்சி மையங்களை உரிய கால அளவுக்குள் நிறுவிமுடிப்பதற்காக, இம்மாநிலத்திற்கு வழங்குவதாக உறுதியளித்த நிதியை வழங்குமாறு மத்திய அரசை இத்தருணத்தில் கேட்டுக்கொள்வது பொருத்தமாக இருக்கும். இந்தோ-சிங்கப்பூர் வர்த்தக ஏற்பாடு குறித்த கோட்பாட்டிற்கு முழு வடிவம் கொடுக்க வல்லுநர் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மேற்சொன்ன உத்தேச ஏற்பாடு குறித்த விவரங்களைத் தயாரிக்க, உயர் அளவிலான அதிகாரிகள் குழு ஒன்று அண்மையில் சிங்கப்பூர் சென்றுள்ளது. இது குறித்த சாத்தியக்கூறு ஆய்வு ஒன்று நடந்தேறி வருகிறது; சென்னை அருகே இப்புதிய வர்த்தக மையத்தை உருவாக்கும் பணிகளை விரைவுபடுத்துவது இதன் நோக்கமாகும். இப்புதிய அமைப்பின்கீழ், பெரிய அளவில் முதலீடுகள் செய்வதற்குத் தமிழ் நாட்டின் சூழ்நிலை ஏதுவாகவுள்ளது.

19. புதிய தொழில் மேம்பாட்டினை ஊக்குவிக்கச் சிறந்த வழிவகையாக விளங்குகிற அடிப்படைவசதிகளில் போதிய முதலீடுகளைச் செய்வதற்கு அரசு உறுதி செய்ய வேண்டுமென்பது நமது தெளிந்த கருத்தாகும். மின்விசைத் துறையில் அதிக நாட்டமும் முக்கியத்துவமும் மிகச் சரியான முறையில் அளிக்கப்பட்டுள்ளது. மின்விசைத் துறையில் அரசு சிறந்த சாதனையை எய்தியுள்ளது. தமிழ்நாட்டில் மின் வெட்டு அறவேயில்லை. தூத்துக்குடி அனல்மின் நிலையம் தேசிய அளவில் தலை சிறந்த மின் உற்பத்தி நிலையங்களில் ஒன்றாக அறிவிக்கப்பட்டுள்ளது. எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு மிக அதிகமாக, ஒட்டுமொத்த திட்ட ஒதுக்கீட்டிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டதன் விளைவாக, 1992-1997 கால அளவில் மின்விசைத் துறைக்கு ரூ.3,000 கோடி ஒதுக்க முடிந்துள்ளது. இத்துடன், கூட்டுத்துறையிலும், தனியார் துறையிலும் கணிசமான அளவுக்குப் புதிய முதலீடுகள் திரட்டப்பட்டு வருகின்றன. எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மின் உற்பத்தித் திறனை 1,630 மெகாவாட் அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்துடன், ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் தேவைகளைக் கருத்தில் கொண்டு போதிய அளவுக்குப் புதிய திட்டங்களுக்கு இசைவு வழங்கப்பட்டுள்ளது. ரூ.7,000 கோடி நிதி ஒதுக்கீட்டில் 1,500 மெகாவாட் உற்பத்தித் திறனில் கூட்டுத் துறையில் ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரிச் சுரங்க மற்றும் மின் உற்பத்தித் திட்டம், ரூ.3,000 கோடி நிதி ஒதுக்கீட்டில் கடலூரில் தனியார் துறையில் 1,000 மெகாவாட் அனல் மின் திட்டம், ரூ.1,000 கோடி செலவில் நெய்வேலியிலிருந்து கிடைக்கக்கூடிய உபரி பழுப்பு நிலக்கரியைப் பயன்படுத்தித் தனியார் துறையில் ஒவ்வொன்றும் 250 மெகாவாட் திறன் கொண்ட இரண்டு அனல் மின் திட்டங்கள், ஆகியவை மின்துறையில் இசைவு அளிக்கப்பட்ட புதிய திட்டங்கள் ஆகும் . இவ்வாறாக, மொத்தம், நிறுவவிருக்கும் புதிய திட்டங்களில், ரூ.11,000 கோடி முதலீடு செய்யப்படவுள்ளது. இத்திட்டங்களின் மூலம் மொத்த உற்பத்தித்திறன் 3,000 மெகாவாட் ஆகும். ஒன்பதாவது திட்டக்காலத்திற்கான புதிய முதலீட்டிற்கு முன்கூட்டியே திட்டமிடுவதானது, தமிழ்நாட்டில் நீண்டகால அளவில் மின்விசை கிடைப்பதை உறுதி செய்வதாக உள்ளது. முக்கியத்துவம் வாய்ந்த இத்துறைக்கு அத்தகைய ஒருமித்த பயனுள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ள வகையிலான மொத்தப் பெருமையும் அரசையும், குறிப்பாக முதலமைச்சர் அவர்களையும் சார்ந்ததாகும். மின் அனுப்புகை, மின் பகிர்வு ஆகியவற்றிற்குப் பெரிய அளவில் முதலீடு செய்யும் திட்டத்துடன், மின்விசைத் தரம் குறித்தும் அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

20. தமிழ்நாட்டில் மத்திய அரசின் முதலீடு குறைந்துள்ளது. முதலமைச்சர் அவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு மன்றங்களில் இப்பிரச்சினையை முன்வைத்துள்ளார்கள். முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்ட முயற்சியின் பலனாக, மொத்தம் ரூ.2,000 கோடி நிதி ஒதுக்கீட்டில் 'அரோமாட்டிக்ஸ்' திட்டம் (AROCHEM) ஒப்புதலளிக்கப் பெற்றுள்ளது. இத்திட்டத்தைச் செயற்படுத்தும் பணி தற்போது நடந்தேறி வருகிறது. துணைத் தொழில்கள் உட்பட, மொத்த முதலீடு முடிவில் ரூ.4,000 கோடியாக இருக்கும்; அதன் மூலம் நேரடியாகவும் மறைமுகமாகவும் 70,000 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். மத்திய அரசு முதலீடு குறித்து முடிவு எடுக்கவேண்டிய ஏனைய பல்வேறு திட்டங்கள் நிலுவையில் உள்ளன. குறிப்பாக, 'பம்பாய் ஹை'யிலிருந்து தென் மாநிலங்கள் அனைத்திற்கும் இயற்கை எரி வாயுவைக் கொண்டுவர தென்னக எரிவாயு இணைப்புத் திட்டத்தை மேற்கொள்ள, 1992 நவம்பரில் நடைபெற்ற தென் மண்டலக் குழுக் கூட்டத்தில் தெளிவுபடுத்தியவாறு தென்மாநிலங்களின் முதலமைச்சர்களுடைய ஒருமித்த கருத்தை இங்குக் குறிப்பிட விழைகிறேன். முதலமைச்சர் அவர்கள், இந்தத் தென்னக எரிவாயு இணைப்புத் திட்டத்தைச் செயலாக்கும்படி அழுத்தமான வேண்டுகோள் விடுத்துள்ளார். இத்திட்டம் வெற்றிகரமாக நிறைவேற்றப்படுவதற்கு உறுதியளிக்கும் வகையில்,

இந்த அரசு அனைத்து முனைகளிலும் குறிப்பிடத் தகுந்த வகையில் சிறப்பாகச் செயல்பட்டுள்ளது என்பது தெரிய வரும். சட்டம்-ஒழுங்கு மீண்டும் நிலை நாட்டப்பட்டுள்ளது. அயல்நாட்டுப் போராளிகளால் ஏற்படும் அபாயம் ஒடுக்கப்பட்டுள்ளது; நெருக்கடியான நிதிநிலை திறம்படக் கையாளப்பட்டு, வளர்ச்சிக்கு மீண்டும் வேகம் ஊட்டப்பட்டுள்ளது. அனைத்திற்கும் மேலாக, ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்க்கைத் தரங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

33. தமிழ்நாட்டில் அமைதியும் ஒற்றுமையும் மிகச் சிறந்த முறையில் பராமரிக்கப்படுவதற்கு உறுதிசெய்ய இவ்வரசு தொடர்ந்து பாடுபடும். வெளிநாட்டுப் போராளிகளின் நடவடிக்கைகள் தொடர்ந்து விழிப்புடன் கண்காணிக்கப்படும். அவர்கள் இம்மாநிலத்தில்கால்பெருவிரலை ஊன்றி நிற்பதற்குக்கூட அனுமதிக்கப்படமாட்டார்கள். வகுப்புவாத நடவடிக்கைகளும் அவற்றோடிணைந்து காணப்படும் பகைமையுணர்வுகளும், இம்மாநிலத்தின் சமூகக் கட்டமைப்பைக் குலைக்க அனுமதிக்கப்படமாட்டாது. சமூக நீதியை நிலை நாட்ட, இவ்வரசு உறுதியான ஆக்கபூர்வமான நடவடிக்கையை மேற்கொண்டு அதன் மூலம் பெரும்பான்மை மக்களுக்கு நம்பிக்கையூட்டி அவர்களுக்கு மெய்யான அனுகூலங்களையும் வழங்கும். தேசிய முதலீடுகளில் தமிழ்நாட்டிற்கு உரிமையான பங்கினைப் பெற அரசு பெருமுயற்சி மேற்கொள்ளும். புதிய பொருளாதாரக் கொள்கையின் ஓர் அங்கமாகவுள்ள அடிப்படைக் கட்டமைப்பைச் சரிப்படுத்தும் நடவடிக்கைகளுக்கு நடுவே, ஏழை எளிய, ஒடுக்கப்பட்ட மக்களின் நலனைப் பாதுகாப்பதற்குத் தொடர்ந்து இவ்வரசு அதிக முக்கியத்துவம் அளிக்கும்.

34. பல்வேறு பிரச்சினைகள் குறித்து அரசு மேற்கொண்ட உறுதியான தீர்க்கதரிசனமான நடவடிக்கைகளை இம்மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் முழுமையாக வரவேற்பார்கள் என்பதில் எனக்குச் சிறிதும் ஐயமில்லை. அமைதி, ஒற்றுமையை நிலைநாட்டுவதிலும், நிலைத்த பொருளாதார வளர்ச்சியைக் காண்பதிலும் இவ்வரசு மேற்கொண்ட புதிய சீரிய முயற்சிகள் தமிழ்நாட்டிற்கு அகில இந்திய அளவில் பெருமதிப்பைப் பெற்றுத்தந்துள்ளன. இது அனைவரும் வியந்து போற்றுவதற்குரிய தன்னிகரற்ற சாதனையாகும். இந்தப் பாராட்டை ஆர்வத்தோடும் எழுச்சியோடும் உழைத்துக் கட்டிக் காத்துக் கொள்ளவேண்டும். இம்மாமன்றத்தில் உறுப்பினர்கள் மேற்கொள்ளும் விவாதங்கள் தமிழகத்தை முன்னேற்றமும் செழிப்பும் மிக்க பாதையில் அழைத்துச் செல்வதாக அமையும் என்று நான் நம்புகிறேன். ஏழை, எளியவர்கள் மற்றும் வசதி வாய்ப்பற்றவர்கள் ஆகியோர்க்குச் சிறப்பான வாழ்க்கைத்தரத்தைப் பெற்றுத்தருவதற்கு இவ்வரசு எப்போதும் பாடுபடும். எப்போதும் இம்மாநிலத்தின் முன்னேற்றத்திற்கே முதலிடம் தந்து, இம்மாமன்றத்தில் நீங்கள் மேற்கொள்ளும் விவாதங்களும் கருத்துக்களும், ஆக்கபூர்வமானவையாகவும் பொருள் பொதிந்தவையாகவும் அமையும் என்பதில் எனக்குச் சிறிதும் ஐயமில்லை. **நன்றி, வணக்கம்.**

- மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள்தான் தமிழ்நாடு கிரிக்கெட் சங்கத்தின் (டி.என்.சி.ஏ.) உறுப்பினராகச் சேர்ந்த முதல் பெண் உறுப்பினராவார்; 1975-இல் அவர் இச்சங்கத்தில் உறுப்பினரானார்; அதுவரை இதில் ஆண்கள் மட்டுமே உறுப்பினர்களாக இருந்தார்கள். இப்போதும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதில் உறுப்பினரே!
- சென்னை-மயிலாப்பூரில் உள்ள திருக்குளத்தில் மூழ்கி இறந்துபோன மூன்று சிறுவர்களின் குடும்பங்களுக்கு, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், முதல்வரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.25 ஆயிரம் நிதியுதவி வழங்கினார்.
- சென்னை மாநகரில், மிகச் சிறந்த முறையில் பத்தாண்டுக் காலம் பணி முடித்த 140 காவலர்களுக்கு முதலமைச்சர் பதக்கங்கள், சென்னை நகரக் காவல் துறை ஆணையரால் (12.2.1993) வழங்கப்பட்டன.






# தருமபுரி மாவட்ட வளர்ச்சிக் கழகம் லிட்.,

(தமிழ்நாடு அரசு நிறுவனம்)
தருமபுரி-5.

**மாவட்ட வளர்ச்சித் திட்டப் பணிகள் 1992-93**







ப. வேங்கடசாமி
திட்ட அலுவலர் மற்றும்
மேலாண்மை இயக்குநர்
மாவட்ட வளர்ச்சிக் கழகம், தருமபுரி

ஏ. தசரதன், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும்
பெருந்தலைவர், மாவட்ட வளர்ச்சிக் கழகம்
தருமபுரி

**தேசிய புதுப்பிப்பு நிதியை விரைந்து செயற்படச் செய்து மாநிலங்களுக்கு முழு அளவில் ஆதரவளிக்க வேண்டும்.**

26. நிதிப் பற்றாக்குறையைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையானது, சுகாதாரம், சத்துணவு, தொடக்கக்கல்வி, பெண்கள் குழந்தைகள் நலத் திட்டங்கள் போன்ற இன்றியமையாத சமூகத்துறைகளின் மீதான முதலீட்டைக் குறைப்பதில் போய் முடியக்கூடாது என்னும் கவலை தேசிய அளவில் இருந்து வருகிறது. இந்தத் துறைகளில் மாநில அரசுகள் எப்போதும் முக்கியப் பங்கை வகித்து வந்துள்ளன. மாநிலங்கள் இந்த முக்கியத் துறைகளுக்குச் செய்துவரும் முதலீட்டின் அளவைத் தொடர்ந்து அப்படியே நிலை நிறுத்த இயலாவண்ணம் நிதி இடர்ப்பாடுகள் அவற்றை நெருக்கடிக்கு உள்ளாக்குகின்றன. சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைத் திட்டம் ஒன்றிற்காக, 500 மில்லியன் அமெரிக்க டாலர்கள் உதவியளிக்க உலக வங்கி அண்மையில் உறுதியளித்துள்ளது. ஏழை மக்களுக்கான சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகளில் பெரும்பங்கு வகிக்கும் மாநில அரசுகளுக்கு இந்த நிதி ஒதுக்கப்படவேண்டுமென்பதே நமது கோரிக்கையாகும்.

27. 1993 மார்ச்சுக்குள் முடிவடையவிருக்கும் சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ், அனைத்து ஊரகப் பகுதிகளிலும் அடிப்படைத் தேவைகளுக்கு வகைசெய்ய் அரசு முடிவெடுத்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ரூபாய் ஒரு கோடி என்ற வகையில் மொத்தம் ரூ.387 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பெருந்திட்டத்தின் கீழ் 7,502 கிலோமீட்டர் தொலைவுள்ள சாலைகளுக்கு மேம்பாட்டுப் பணிகள், 8,972 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதி செய்து கொடுத்தல், 1.5 இலட்சம் தெரு விளக்குகள் அமைத்தல், 3,231 சிறுபாசன ஏரிகளை மேம்படுத்துதல், 2,198 தொடக்கப் பள்ளிக் கட்டிடங்கள் கட்டுதல், 2,879 சத்துணவு மையங்கள் கட்டுதல், 1,861 தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

28. அண்மையில் 1992 டிசம்பர் திங்கள் நடைபெற்ற நாடாளுமன்றக் கூட்டத் தொடரில், உள்ளாட்சி மன்றங்கள் தொடர்பாக அரசியலமைப்புச் சட்டத்தில் முக்கியத் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. உள்ளாட்சி மன்றங்களுக்குப் புத்துயிரளிக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும், நாட்டின் அடித்தளமாக அமைந்துகிடக்கும் கிராமங்கள் அளவில் நல்ல ஜனநாயக மரபுகள் வளர்க்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும் இருவேறுபட்ட கருத்துக்கள் இருக்க முடியாது. இருப்பினும், இது முற்றிலும் மாநிலங்களின் நிருவாக வரம்பிற்கு உட்பட்டதாகும். இவ்வாறு, செயற்படுத்துவதற்குக் கடினமான நடைமுறைகள் கொண்ட விதிகளைச் சட்டத் திருத்தங்கள் வாயிலாக மாநில அரசுகள் மீது சுமத்துவது என்பது, வெவ்வேறு மாநிலங்களில் நிலவும் வேறுபட்ட அமைப்பு முறைகளை மத்திய அரசு உணரத் தவறியது என்றே பொருளாகும். இத்திருத்தங்கள் மாநிலங்களின் அதிகாரங்கள், பொறுப்புகளின் வரம்பிற்குள் ஊடுருவிப் பாதிப்பதாக அமைந்துள்ளன என்று இந்த அரசு கருதுகிறது. அரசின் இக்கருத்து நாடாளுமன்றத்திலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுவே இந்த அரசின் பிறழாத நிலையாகும். இரு நிலை நிருவாக அமைப்பு முறையைக் கொண்டு, தமிழ்நாடு சிறப்பாக இயங்கி வந்துள்ளது என்பதால், மாவட்ட அளவிலான நிருவாக அமைப்பு நிலை உட்பட, மூன்று நிலை நிருவாக அமைப்பைக் கொண்டு வருவதை இந்த அரசு ஆதரிக்கவில்லை. ஒவ்வொரு நிலை அமைப்பிற்கும் இவற்றில் வரையறுக்கப்பட்டுள்ள தேர்தல் முறைகள்கூட, தமிழ்நாட்டில் நன்கு உருவாகி நிலைபெற்றுள்ள நடைமுறையிலிருந்து மிகவும் வேறுபட்டனவாக உள்ளன. இவ்வாறாக, மாநிலங்களின் அதிகாரங்கள் தொடர்பான அடிப்படைக் கொள்கை என்ற வகையிலும் சரி, அது தொடர்பான






நடைமுறைகள் என்ற வகையிலும் சரி, இம்மாநில அரசு அரசியல் அமைப்புச் சட்டத்தில் செய்யக் கருதியுள்ள திருத்தங்களுக்கு எதிராக எடுத்த தனது நிலையை ஒருபோதும் மாற்றாமல் தொடர்ந்து எதிர்த்து வந்துள்ளது. இந்த நிலை முழுவதுமாக மறு ஆய்வு செய்யப்பட வேண்டும் என்றும் இத்துறையில் மாநிலங்களின் நிலைமை பாதுகாக்கப்படவேண்டும் என்றும் இவ்வரசு தொடர்ந்து வலியுறுத்தும்.

29. ஊரக வளர்ச்சியை விரைவு படுத்துவதில் நிலச் சீர்திருத்தத்தின் முக்கியத்துவம் குறித்து பிரதமர் அவர்கள் முதலமைச்சருக்குக் கடிதம் எழுதியுள்ளார்கள். தமிழ்நாட்டில் தற்போதுள்ள நிலச் சீர்திருத்தச் சட்டங்களின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட உபரி நிலங்கள் பெரும்பாலும் முழுவதும் பகிர்ந்தளிக்கப்பட்டு விட்டன. முந்தைய சட்டத்தில் உள்ள குறைபாடுகளை நீக்கும் நோக்கத்துடன்தான், இந்த அவை புதிய சட்டத்தை நிறைவேற்றியது. உபரியாகவுள்ள நிலங்களின் சில **உரிமை மாற்றங்களைச் செல்லாததாக்கக் கோரும் இந்தச் சட்டம், 1991 அக்டோபர் திங்களிலிருந்து குடியரசுத் தலைவரின் இசைவை எதிர்பார்த்துக் காத்திருக்கிறது.** இச்சட்டத்திற்கு விரைவில் ஒப்புதலளிக்குமாறு மத்திய அரசை இவ்வரசு வலியுறுத்துகிறது. இச்சட்டம் இம்மாநிலத்தில் நிலச்சீர்திருத்தத்திற்கு ஒரு புதிய உத்வேகத்தை அளிக்கும்.

**30. சென்னைக்கு அருகிலுள்ள ஏரிகளின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில்** பருவமழை குறைவாகப் பெய்ததன் பயனாக, நீர் சேமிப்பளவு குறைந்ததால், சென்னை மாநகரில் ஒருநாள் விட்டு ஒருநாள் குடிநீர் வழங்கும் முறையைக் கொண்டுவரவேண்டி வந்தது. நீர் சேமிப்பளவு குறைவாக இருந்தபோதிலும், பயனுள்ள வகையில் குடிநீர் வழங்குவதை உறுதி செய்ய, ரூ.24 கோடி செலவில் அவசரத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் ஓர் அங்கமாக, கடைக்கோடியிலுள்ள பகுதிகளுக்குக்கூட, முறையாகக் குடிநீர் கிடைக்க வகை செய்ய லாரிகள் மூலம் குடிநீர் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படும். குடிநீர்ப் பிரச்சினைக்கு நிலையான தீர்வு, **கிருஷ்ணா நீரைச் சென்னைக்குக் கொண்டு வருவதே ஆகும்.** முதலமைச்சர் அவர்கள் 1993, ஜனவரித் திங்கள் 27 ஆம் நாளன்று ஐதராபாத்தில், ஆந்திரப் பிரதேச முதலமைச்சருடன் இது குறித்து விவாதித்தார். 1995, ஜூன் திங்களுக்குள் சென்னைக்குத் தண்ணீர் கொண்டுவருவதை உறுதிசெய்யும் வகையில், தெலுங்கு கங்கைத் திட்டத்தை விரைவுபடுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. திட்டப்பணி முடிவடைவதை உறுதி செய்ய, போதிய அளவு நிதி வழங்க ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. இது தொடர்பாக ரூ.1,100 கோடி செலவிலான, சென்னை மாநகர் குடிநீர் வழங்கல் திட்டத்திற்கு நிதியுதவி வழங்குமாறு உலக வங்கியை அணுகுவதற்குக் குறுக்கே எழுந்த தடைகள் அகற்றப்பட்டு, வழி வகுக்கப்பட்டுள்ளது.

**31. இம்மாநிலத்தில் வீடில்லாத அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்திற்கு அரசு உயர் முன்னுரிமை அளித்துள்ளது.** நடப்பாண்டில் பல்வேறு வீட்டுவசதித் திட்டங்களின் கீழ் ஓர் இலட்சத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பயனடைந்துள்ளன. ஏழை எளிய மக்களுக்குத் தற்போது அரசு நிலத்திலுள்ள வீட்டு மனைகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. மேலும், ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இலவச வீட்டு மனைகளை வழங்குவதற்காக, ஒவ்வோராண்டும் நிலங்களைக் கையகப்படுத்தும் பணியும் மேற்கொள்ளப்படுகிறது. ஏழை எளிய குடும்பம் ஒவ்வொன்றும் வீட்டு மனையைப் பெற இயலும் வகையில், மூன்றாண்டு கால அளவில் வீட்டு மனைகள் வழங்கும் குறித்தகாலப் பெருந்திட்டம் ஒன்றை அரசு மேற்கொள்ளும்.

32.சில கொள்கைப் பிரச்சினைகளின் மீது உங்கள் நாட்டத்தை ஈர்ப்பதுடன், நமது மாநிலம் வளர்ச்சி பெறுவதற்கு அரசு பின்பற்றவிருக்கும் வழி எது? என்பதைக் குறிப்பிடுவதும் என்னுடைய நோக்கமாகும். வெளிநாட்டுப் போராளிகளால் ஏற்படுத்தப்பட்ட மிகச்சிக்கலான பிரச்சினைகள், சட்டம் - ஒழுங்கு சீர்குலைவு, மிகச் சோதனையான நிதிநிலை, தேசிய பொருளாதார நெருக்கடியின் விளைவாக ஏற்பட்ட இக்கட்டான பொருளாதார முடிவுகள், பொது நிருவாகத்தில் காணப்பட்ட மோசமான சீர்கேடு ஆகியவை நமது மாநிலத்தை எதிர்கொண்ட நிலையில், இந்த அரசு ஆட்சிக்கு வந்தது. விருப்பு வெறுப்பற்ற நடுநிலை நோக்கோடு பார்க்கின்ற எவருக்கும்

TNSC BANK

## The Tamil Nadu State Apex Co-Operative Bank Ltd.,

233, N.S.C. Bose Road, Madras-600 001.

**Rate of Interest on Deposits**
**(Effective from 9.10.1992)**

| Sl.No. | Type of Deposit | Rate of Interest per annum |
|---|---|---|
| 1. | Savings Bank Accounts | 6.25% w.e.f. 24.4.92 |
| 2. | Fixed Deposits : | |
| | For 46 DAYS and above but upto 270 days | 12.25% |
| | For 271 DAYS and above but upto 364 days | 12.00% |
| | For 1 YEAR and above | 12.25% |

**Interest on Fixed Deposit for 1 year and above will be paid Quarterly**

- NRO & NRE Accounts Facilities are available in 6 designated Branches.
- Interest rates are subject to RBI directives from time to time.

THE BANK AT YOUR SERVICE

ஆசிரியரும் வெளியிடுபவரும்: இரா. சம்பத், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927

## எளிமையானவை! நேர்த்தியானவை!
## மேன்மை மிகுந்தவை!
## தோற்றம் அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

- பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
- பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
- பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
- லுங்கிகள், துவாலைகள், வேட்டிகள்.
- படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

*அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தை அணுகவும்.*













# தமிழரசு

1-3-1993 ரூ.1













# தமிழரசு

1-3-1993 ரூ.1

பூவையர் மகிழும் வண்ணம்
புதுமைகள் படைத்திடும் கதர்பட்டுப் பு
அணியும் அழகே ஓர் ஆனந்தம்



DIPR/2687

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
குறளகம், சென்னை - 600 108



மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் 45-வது பிறந்த நாளையொட்டி மேதகு தமிழக ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண்சிங் அவர்கள் முதல்வரின் இல்லத்துக்குச் சென்று, முதல்வர் அவர்களுக்குப் பூங்கொத்துக் கொடுத்து வாழ்த்துக் கூறினார் (24.2.'93).

# இந்த இதழில்...

முதல்வரின் முத்துக்கள் ... 2
ஆசியாவின் ஹாலிவுட் ... 4
உழவர் வாழ்வு உயர! ... 11
தென்னார்க்காடு மாவட்டத்தில் மனிதச் சங்கிலி ... 15
புதுக்கோட்டை மாவட்டம்: நலத்திட்டப் பணிகள் ... 17
நாகையில் அறிவொளி இயக்கம் ... 18
அரசு அலுவலர்களுக்குச் சுற்றுலா மேம்பாட்டுக் கழகம் மூலம் பயண விடுப்புச் சலுகைகள் ... 21
தருமபுரி மாவட்டத்தில் பட்டுத்தொழில் வளர்ச்சி ... 24
தமிழ்நெறிக் காவலர் மயிலை சிவமுத்து ... 27
வீர வரலாறு கூறும் நடுகற்கள் ... 29
எரிபொருள் சிக்கலுக்கு ஏற்றமுறை ... 35
எண்ணெய்ப் பனை: தமிழ்நாட்டின் காமதேனு ... 39
தியாக தீபம் தில்லையாடி வள்ளியம்மை ... 43

தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2024
மாசித் திங்கள் - 18

மலர்:23 1-3-1993 இதழ்:17



# முதல்வரின் முத்துக்கள்

■ திறமைக்கும் - நேர்மைக்கும் - வளர்ச்சிக்கும் - உயர்வுக்கும் - லஞ்ச ஊழலற்ற தன்மைக்கும் - எடுத்துக்காட்டான அரசு தமிழக அரசு ஒன்றே எனும் பெயர் எடுக்கும் வகையில் எங்கள் பணி அமையும்.

தமிழகம் தலைநிமிர்ந்து தன் தனித்தன்மையோடும் தனிச் சிறப்போடும் திகழ உங்கள் பிரதிநிதியாக என்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளேன்.

■ தமிழகத்து மக்களின் ஏகோபித்த அன்பினாலும், ஆதரவினாலும் முதலமைச்சராகி இருக்கிற நான் எனது அமைச்சரவை பதவி ஏற்பு விழாவிற்கு அழைப்பிதழ் அனுப்பும்போது எனது ஆசிரியருக்குத்தான் முதலில் அதை அனுப்பினேன் என்று உங்களுக்கு அறிவிப்பதில் மிகுந்த பெருமை கொள்கிறேன். ஏனெனில், இன்றைக்கு வாழ்க்கையில் நான் அடைந்துள்ள உயர்வுக்கெல்லாம் அடிப்படை அமைத்துத் தந்தவர்கள் எனது ஆசிரியர்களே ஆவர். ஆசிரியர் பணி ஒரு புனிதமான கடமை. தன்னைவிடத் தன் மாணவர்கள் பெருமை பெற வேண்டுமென்ற தாயுள்ளம் கொண்டவர்கள் ஆற்றும் அரும்பணியே ஆசிரியர் பணியாகும்.

■ கல்வி கற்பிப்பது என்பது வெறும் அறிவைப் பெற்று ஆங்காங்கே காணப்படும் செய்திகளை, தகவல்களைச் சேகரிப்பது என்ற எல்லையில் வெறுமனே முடிந்துவிடுவது அல்ல. வாழ்க்கையின் முதன்மையை, முழுமையை, முழுவதுமாக உணர்ந்து கொண்டு, சிறந்த மனிதனாக மாறுவதற்கு நல்ல பயிற்சியை வழங்குவதுதான் கல்வி என்று நாம் கருத வேண்டும். அந்த வகையில் வாழ்வின் அனுபவமே ஒரு வகையில் நாம் கற்கும் கல்வி என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

■ ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சியை ஊக்குவிக்கிற வகையில் உருவாக்கப்பட்டது தான் சிறப்புத் தன்னிறைவுத் திட்டம்; இதன்மூலம், தமிழகத்திலுள்ள அனைத்துக் கிராமங்களுக்கும் வேண்டிய அடிப்படை வசதிகள், போர்க்கால நடவடிக்கைகளின் மூலம் வழங்கப்பட்டு வருகின்றன.

■ தமிழகத்தின் பண்பாட்டு மையங்களான ஆலயங்களின் புனிதத்தன்மை காக்கப்பட வேண்டும். மரபுகள் கெடாத வகையில் திருக்கோயில்களின் நிர்வாகங்கள் சரியான முறையில் அமைத்துச் செயல்பட வேண்டும். பல்லாயிரக் கணக்கில், பராமரிப்பு இன்றி, பாதிக்கப்பட்டுள்ள புராதனக் கோயில்கள் சிறப்பான முறையில் பராமரிக்கப்பட வேண்டும். அவற்றின் அன்றாடத் தேவைகள், பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்ற எங்களுடைய எண்ணம், நாங்கள் அமைத்து இருக்கின்ற ஆலய நிர்வாக வாரியத்தின் மூலம் நிறைவேற்றப்படும் என்பதில் நம்பிக்கை கொண்டுள்ளோம்.





■ காலங்காலமாக நம் நாடு, கல்வியின் பலத்தை உணர்ந்து, சமுதாய கலாச்சார அம்சங்களில் கல்விக்கு முக்கிய இடத்தைத் தந்துள்ளது. சுய வளர்ச்சிதான் கல்வியின் முக்கிய நோக்கமாகக் கருதப்படுகிறது. சுய ஞான வளர்ச்சியைப் பெறுவதே, அறிவைப் பெறுவதன் நோக்கமாகக் கொண்டுள்ளது. கல்வி பயிலுவதென்பது வாழ்நாள் முழுமைக்கும் தொடர்கிறது. தீவிர ஆன்மிக உணர்வினை அடிப்படையாகக் கொண்ட சமூகப் பண்புகளைக் கடைப்பிடித்து, உணர்வினை அடிப்படையாகக் கொண்ட சமூகப் பண்புகளைக் கடைப்பிடித்து மக்களிடையே அமைதி, நல்லிணக்கம், நல்லுறவு ஆகியவற்றை வளர்க்கும் வகையில் சமுதாய முன்னேற்றத்திற்கும் அயராது பாடுபடும் தனி மனிதத் தகுதிகளை வளர்க்கக் கல்வி ஒரு வழிமுறையாகும்.

■ மகாத்மா என்கிற மந்திரச் சொல், சாதாரண இந்தியனை உலகச் சரித்திரத்தில் சுயமரியாதையோடும், பெருமையோடும் அறிமுகப்படுத்தி வைத்த பெயர்.

■ 'கண்ணியத்தின் மறுபெயர் காயிதே மில்லத்' எனப் பேரறிஞர் அண்ணா அவர்களால் புகழப்பட்ட, இந்திய இஸ்லாமிய இனத்தின் புகழ்மிக்க தலைவர்களில் ஒருவரான பெருந்தகை முகமது இஸ்மாயில் அவர்களின் நினைவினை என்றும் பசுமையாகப் போற்றிடும் வகையில், உருவாக்கப்பட்டதுதான் நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டமாகும்.

■ தமிழ்நாடு, சுற்றுலாப் பயணிகளுடைய சொர்க்க பூமி என்றால் அது மிகையாகாது. இது கலையும், கலாச்சாரமும் நிறைந்த நாடு; சுற்றுலா வளங்கள் கொண்ட சரித்திர பூமி; காண்போரைக் கவரத்தக்க எழில்மிகு கோடை வாசஸ்தலங்கள்; தமிழ்ப் பண்பாட்டின் நிலைக் கலன்களாக விளங்கும் பெருங்கோயில்கள்; சிற்பக் கலைக்கு மகுடஞ்சூட்டிய பெருமை; இணையற்ற கலாச்சாரத்தை வெளியுலகிற்குப் பறைசாற்றுகின்ற புராதன பொக்கிசங்கள் நிறைந்ததுதான் தமிழ்நாடாகும்.

■ தலைவர்களுக்கெல்லாம் தலைவர் என்கிற தகுதியும்; தமிழக வரலாற்றில் ஒரு சகாப்தமாகவும், பகுத்தறிவுப் பகலவனாகவும், சமுதாய மேம்பாடு, முற்போக்கு எண்ணங்கள், புரட்சிகரச் சிந்தனை ஆகியவற்றைத் தனது வாழ்நாள் முழுவதும் கட்டிக்காத்து வளர்த்து, வெற்றி கண்டவர் தந்தை பெரியார்.

■ ''நடனக் கலை தமிழ்நாட்டின் பழங்கலைகளில் ஒன்றாகும். சங்ககாலம் முதற்கொண்டு, தமிழர்களின் வாழ்க்கையில் நடனம் அல்லது கூத்து மக்களின் உள்ளங்களிலே ஆன்மிக வேட்கையை உருவாக்குவதற்குப் பயன்பட்டுள்ளது. நமது தொல்காப்பியம், ஆடலுக்கு இலக்கணம் கூறும் நூல். சிலப்பதிகாரம், பயிற்றுவிக்கப்பட வேண்டிய நடனக் கலையின் இலக்கணத்தையும், நுட்பத்தையும், பெருமையையும் விளக்குகிற காவியம். சுருக்கமாகச் சொன்னால், பல்லவ, சோழ, சேர, பாண்டிய மன்னர்கள் காலத்தில், நடனக்கலை மன்னர்களால் போற்றப்பட்டு, மக்களால் வரவேற்கப்பட்டு, அன்றாட வாழ்க்கையின் இன்றியமையாத ஒரு அம்சமாகக் கருதப்பட்டது. இன்றும் தமிழக நடனக் கலைகளில், தலைசிறந்த படைப்பாகப் பரத நாட்டியம் விளங்குகிறது.

■ உலகத்தின் முதல் மனிதன் தமிழன்! முதல்மொழி தாய்மொழி தமிழ்! முதல் பண்பாடு தமிழ்ப் பண்பாடு! முதல் நாகரிகம் தமிழ் நாகரிகம்! அந்தப் பெருமை மிகு தமிழ் இனத்தின் தலையாய நூல்தான் திருக்குறள்!

■ கோடிக்கணக்கான ஏழைகளின் உதடுகளுக்குப் புன்னகையாகவும் - புது நம்பிக்கையாகவும், இளமைக் காலம்முதல், திரைப்படத்துறையிலும் அரசியல் வாழ்விலும் திகழ்ந்தவர் புரட்சித் தலைவர்.

■ எத்தனையோ தலைவர்களைக் கண்டுள்ளது இந்திய நாடு; ஆனால் மூளை பலமும், இளகிய இதயமும் கொண்ட மாமனிதர்கள், ஒரு சிலரே ஆவர். அவர்களில் முதன்மையானவர்கள்தான், அண்ணல் காந்தியடிகளும், பேரறிஞர் அண்ணாவும், நம் இதய தெய்வம் புரட்சித் தலைவரும் ஆவர்.

■ ''மக்களின் வரிப்பணம் மக்கள் நல்வாழ்வுக்கே பயன்பட வேண்டும்'' என்றார் பேரறிஞர் அண்ணா.

''திட்டங்களின் பயன்கள் ஏழை எளியவர்களுக்குப் போய்ச் சேரவேண்டும்'' என்றார் புரட்சித் தலைவர்.

இவ்விரு தலைவர்களின் அடிச்சுவட்டில் நடைபோடும் எங்கள் அரசு - அவர்கள் காட்டிய இந்த உயரிய நோக்கங்களைத் தனது இலக்காகக் கொண்டு, எவ்வளவு தெளிவாகவும், தீர்மானமாகவும், உறுதியாகவும் காரியமாற்றி வருகிறது என்பதை, நாங்கள் நடைமுறைப்படுத்தி வரும் திட்டங்களில் இருந்து, மிகத் தெளிவாக அனைவரும் அறிந்துகொள்ளலாம்.

■ ''எத்தகைய திட்டங்களைத் தீட்டுகிறோம் என்பது மட்டுமல்லாமல், எத்தகைய மக்களுக்காகத் திட்டங்கள் தீட்டுகிறோம்' என்பதற்கே முதலிடம் தந்து, நாங்கள் மக்கள் நலத் திட்டங்களைத் தீட்டி வருகிறோம்.

நான்காம் அட்டைப்படக் கட்டுரை:

# ஆசியாவின் ஹாலிவுட்



தமிழ்த் திரையுலகின் நீண்ட நாள் கனவை நனவாக்கும் வகையில் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் மகத்தானதொரு திரைப் பட நகரை உருவாக்குவது எனத்தீர் மானித்தார்.

அதன்படி, திரையுலகப் பிரமுகர் அனைவரும் பிரமிக்கும் வகையில் திரைப்பட நகரம் உருவாகி வரு கிறது.

1992 மே திங்களில் நடை பெற்ற இனிமையானதொரு விழா வில், மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

'ஆசியாவின் ஹாலிவுட்' என்ற பெருமையினைப் பெற இருக்கின்ற,



எம். சண்முகம்
தனி அலுவலர்
திரைப்பட நகர்
சென்னை-600 113

இந்தத் திரைப்பட நகரம் தரமணி யில் 86 ஏக்கர் நிலப்பரப்பில் சிறப்பாக உருவாகி வருகின்றது. இந்தப் பெருமைமிகு நகரில், குறைந்த செலவில் சிறந்த படங் களை உருவாக்க விரும்பும் திரைப் பட, வீடியோ பட, தயாரிப்பாளர் களுக்குத் தேவையான ஏராளமான படப்பிடிப்புத் தளங்களை வழங்கும்.

இந்நகரில், வயல் வெளிகள் உருவாகி வருகின்றன. தென்னந் தோப்புகளும் மாந்தோப்புகளும் படப்பிடிப்புகளுக்கு உருவாகி வரும் கிராமத்தை அலங்கரிக்கின்றன. அந்தக் கிராமத்திலே குளம் உண்டு.

அக்ரஹாரத் தெரு உண்டு, கடைத் தெருக்கள் உண்டு, பள்ளி உண்டு, ரயில் நிலையமும், பஞ்சாயத் துக்கள் கூட பெரிய ஆல்மரமும் உண்டு. அய்யனார் சிலையும், காத்த வராயன் சிலையும், கிராமத்தின் நுழைவு வாயிலை அலங்கரிக்கின்றன நகரத்தின் அங்கமாக விளங்கக் கூடிய பல அடுக்கு மாடிக் கட்டிடங் களும் உண்டு. நடுத்தர, ஏழை மக்களின் கட்டிடங்களும் உண்டு. கூட்டுறவு நிலையம், பால் பூத்து, தபால் நிலையம் என்று பலவும் உண்டு. ஒரு நடுத்தரமான இரயில்வே நிலையமும், கிராம இரயில் நிலைய மும், ஜட்கா ஸ்டாண்டுடன் உள்ளது. இந்தத் திரைப்பட நகரத்திற்கு பெருமை சேர்க்கும் வகையில், கோயில், கிறிஸ்துவ ஆலயம், மசூதி என மூன்றும் உண்டு. ஒரு பஸ் ஸ்டாப்புடன் கூடிய தெரு, வகுப்பறை, ஆபரேஷன் தியேட்ட ருடன் கூடிய மருத்துவமனை என்று படப்பிடிப்புக்குத் தேவையான ஒவ் வொரு அங்கமும் மிகுந்த கவனத் துடன் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. அழகான ஒரு ஏரி, அருகிலுள்ள ஒரு தீவுடன் மூங்கில் பாலத்தால் மிக நேர்த்தியாக இணைக்கப்பட் டுள்ளது. அருகே படகுக் குழாமும் அமைக்கப்பட்டுள்ளது. ஒன்றரை கிலோமீட்டர் நீளமுள்ள கால் வாயின் குறுக்கே பல வடிவங்களில் பாலங்கள் அமைக்கப்பட்டு வருகின் றன. அதன் கரையருகே ஒரு சேரி யும், நடுத்தர பிரிவினரின் வீடுகளும், பெரியதொரு பங்களாவின் உட்புற மும் வெளிப்புறமும் படபிடிப்புக்குத் தேவையான வகையில் நேர்த்தியான வகையில் அமைக்கப்பட்டு வரு கின்றன.



அகில உலகத் தரத்திற்கேற்ப இங்குள்ள மிகப்பெரிய ஸ்டுடியோ முற்றிலுமாக மாற்றியமைக்கப் படுகிறது.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்ததற்கு ஏற்ப, இந்த நகரத் தில், படப்பிடிப்பு முடிந்த பிறகு படத் தயாரிப்புக்குத் தேவையான ரீ-ரெக்கார்டிங் தியேட்டர், டப்பிங் தியேட்டர், வீடியோ ஸ்டுடியோ, எடிட்டிங், மற்றும் processing ஆகி யவை அகில உலகத் தரத்திற்கேற்ப அமைக்கப்பட்டு வருகிறது.

ஆராய்ச்சிகளுக்கு ஏற்ற வகை யில் திரைப்பட ஆவணக் காப்பக மும் (Film-archive), ஒரு நூல் நிலை யமும் அமைக்கப்பட்டுள்ளது.

மொகலாயத் தோட்டங்களை ரசிக்க நமது படத் தயாரிப்பாளர்கள் இனிமேல் காஷ்மீருக்கும், டெல்லிக் கும் செல்ல வேண்டிய அவசிய மில்லை. இங்கிலாந்து புல்வெளி களும், இத்தாலியத் தோட்டமும், கண்ணைக் கவரும் வகையில் இங்கே உருவாகி வருகின்றன. ஒரு ஜப் பானியத் தோட்டமும், ஒரு ஜப் பானிய' வீடும், ஒரு ஜப்பானியக் கோவிலும் இங்கே உருவாகி, இந் நகரம், ஒரு குட்டி ஜப்பானாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.

இவை தவிர, நீச்சல் குளம், நீருக்கடியில் படப்பிடிப்புச் செய்தல் போன்ற நவீன வசதிகள் நமது படத் தயாரிப்பாளர்களைப் பிரமிக்க வைக்கும் வகையில் உருவாகி வரு கின்றன. இந்த வசதிகளையெல்லாம் நன்கு பயன்படுத்திக் கொண்டு ஒரு படத் தயாரிப்பாளர் செய்ய வேண் டியதெல்லாம் தமது படபிடிப்புக் குழு மற்றும் கதை வசனத்துடன் திரைப்பட நகருக்கு வந்து குறைந்த செலவில் படத்தை முடித்துக் கொண்டு போக வேண்டியது தான்!

தன்னிகரில்லா வகையில், மாண்புமிகு முதல்வர் அவர்களின் சிந்தனையில் உதித்த இத்திரைப்பட நகரம் இந்த நூற்றாண்டில், சென்னை யின், ஏன் நமது நாட்டின் சாதனை யாக உருவாகி இந்த ஆண்டின் இறுதியில் தயாரிப்பாளர்களுக்கு படப்பிடிப்புக்குத் தயாராக விளங் கும். இது ஒரு சாதாரண அறிவிப்பு அல்ல. சமீபகாலமாக இங்கே வருகை புரியும், அமெரிக்கா, இங்கிலாந்து, ஜெர்மனி, பிரான்ஸ், ஸ்விட்ஸர்லேண்ட், சிங்கப்பூர், ஹாங்காங் மற்றும் ஜப்பானி லிருந்து இங்கு வருகை புரிந்தோரின் ஒருமித்த கருத்தாகும்!

அனைத்து நவீன வசதிகளையும் ஒருங்கே தன்னகத்தே கொண்ட இந்தத் திரைப்பட நகரம் தென்னிந் தியத் திரைப்படத் தயாரிப்பாளர் களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றும் ஒரு வரப்பிரசாதமாக அமையும் என்பதில் ஐயமில்லை!

TNSC BANK

# The Tamil Nadu State Apex Co-Operative Bank Ltd.,

233, N.S.C. Bose Road, Madras-600 001.

**Rate of Interest on Deposits (Effective from 9.10.1992)**

| Sl.No. | Type of Deposit | Rate of Interest per annum |
|---|---|---|
| 1. | Savings Bank Accounts | 6.25% w.e.f. 24.4.92 |
| 2. | Fixed Deposits : | |
| | For 46 DAYS and above but upto 270 days | 12.25% |
| | For 271 DAYS and above but upto 364 days | 12.00% |
| | For 1 YEAR and above | 12.25% |

**Interest on Fixed Deposit for 1 year and above will be paid Quarterly**

- ❖ NRO & NRE Accounts Facilities are available in 6 designated Branches.
- ❖ Interest rates are subject to RBI directives from time to time.

THE BANK AT YOUR SERVICE




# 2,730 மனுதாரர்களுக்கு 3.77 கோடி ரூபாய் நலத்திட்ட உதவிகள்!

## மாண்புமிகு முதல்வர் வழங்கினார்

***சிதம்பரனார் மாவட்டத்தைச் சார்ந்த 2,730 மனுதாரர்களுக்கு 3.77 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார்.***

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் சிதம்பரனார் மாவட்டத்திலிருந்து மனு கொடுத்திருந்த ஆயிரக்கணக்கான பேர்களில் தகுதியானவர்கள் 2,730 நபர்களைத் தேர்ந்தெடுத்து ரூபாய் 3.77 கோடி மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை 22.2.93 அன்று தலைமைச் செயலகத்தில் வழங்கினார்.

சமூகநலத்துறையின் சார்பில் புரட்சித்தலைவி பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் 15 பெண்களுக்கு ரூ.1.95 இலட்சம் நிதியுதவியும், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டத்தின்கீழ் 70 பெண்களுக்கு ரூ.3.50 இலட்சம் நிதியுதவியும், டாக்டர் முத்துலெட்சுமிரெட்டி மகப்பேறு திட்டம், விதவை மறுமண உதவி, விதவை மகள் திருமணம், தையல் இயந்திரம் வழங்குதல், காதொலிக் கருவிகள் வழங்குதல், இலவச மூன்று சக்கர வண்டி, ஊனமுற்றோருக்குக் காலிபர் வழங்குதல், ஆதரவற்ற பெண்களுக்கான திருமண நிதியுதவி ஆகிய திட்டத்தின்கீழ் 44 பேர்களுக்கு ரூ.70,000 மதிப்பீட்டில் உதவிகள் வழங்கப்பட்டன.

ஊரக வளர்ச்சித் துறையின்கீழ் கறவை மாடுகள் வாங்க 203 பேர்களுக்கு ரூ.8.06 இலட்சம் கடனுதவியும், ஆடுகள் வாங்க 31 பேர்களுக்கு ரூ.1.35 இலட்சம் கடனுதவியும், வண்டிமாடு வாங்க 40 பேர்களுக்கு ரூ.3.11 இலட்சம் கடனுதவியும், இத்துறையின் இதர திட்டத்தின்கீழ் பெட்டிக்கடை வைக்க, நெசவுத் தொழில் செய்ய, மீன்வலை வாங்க, சைக்கிள்கடை வைக்க மற்றும் இதர சலுகைகளின் கீழ் 269 பேர்களுக்கு ரூ.16.53 இலட்சம் மதிப்பீட்டில் நிதி உதவிகள் வழங்கப்பட்டன.

நலிந்தோர் உதவித்திட்டத்தின் கீழ் 10 பெண்களுக்கும், இலவச வீட்டுமனைப் பட்டா 111 பேர்களுக்கும், இயற்கை இன்னல் நிவாரண உதவி 3 பேர்களுக்கும் ஆக மொத்தம் 124 பேர்களுக்கு வருவாய்த் துறையின்கீழ் ரூ.1.66 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டன.

முன்னாள் படைவீரர் நலத்துறையின்கீழ் திருமண மானியமாக ஒரு பெண்ணுக்கு ரூ.2,000-மும், 3 பெண்களுக்கு வெட்கிரைண்டர் வாங்க ரூ.14,000 மானியமாகவும் வழங்கப்பட்டது.

ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் தையல் இயந்திரம் ஒருவருக்கும், இஸ்திரிப் பெட்டிகள் 13 பேர்களுக்கும், வீட்டுமனைப்பட்டா 10 பேர்களுக்கும், பிற்பட்டோர் நலத் துறையின்கீழ் 11 பேர்களுக்கு இஸ்திரிப் பெட்டிகளும், சவரக் கருவி இருவருக்கும் ரூ.30,000

# இரயில்வே பட்ஜெட்

## சாதாரண மக்களைப் பாதிக்கும்:

### மாண்புமிகு முதல்வர் அறிக்கை



**பா**ராளுமன்றத்தில் 1993 பிப்ரவரி 24-ஆம் நாள் மத்திய அரசின் இரயில்வே துறை அமைச்சர் அளித்த இரயில்வே நிதிநிலை அறிக்கையில் பயணக் கட்டணத்தையும், சரக்குக் கட்டணத்தையும் உயர்த்தியிருப்பதை நான் கடுமையாக ஆட்சேபிக்கிறேன்.

பயணக் கட்டணத்தை நேரடியாக உயர்த்தி இருப்பது, குறிப்பாக 2-ஆம் வகுப்புப் பயணக் கட்டணத்தை உயர்த்தி இருப்பது, சாதாரண மக்களை மிகவும் பாதிக்கும். சரக்குக் கட்டணத்தை உயர்த்தி இருப்பதும், அத்தியாவசியப் பொருட்களைக் கொண்டு செல்ல, அளிக்கப்பட்டிருந்த சலுகைகளைத் திரும்பப் பெற்றுக் கொண்டதும் பணவீக்கத்தை அதிகப்படுத்தி, சாதாரண மக்களின் சுமையை அதிகரிக்கும்.

சரக்குக் கட்டணத்தை உயர்த்தியதால் மக்களின் அன்றாடச் செலவு மிகவும் அதிகரிக்கும். ஏழை மக்கள் மிகவும் பாதிக்கப்படுவர். பல்வேறு நடவடிக்கைகள் மூலம் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதாகக் கூறிக்கொள்ளும் மத்திய அரசு செயலில் வேறுவிதமாக நடந்து கொள்கிறது. இரயில்வே பட்ஜெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள பயணக் கட்டண, சரக்குக் கட்டண உயர்வு மைய அரசு தன்னுடைய எண்ணங்களைச் செயல்படுத்துவதில் தீவிரமாக இல்லை என்பதையே காட்டுகிறது.

விரைவு வண்டிகளிலும், சாதாரண வண்டிகளிலும் இரண்டாம் வகுப்புப் பயணக் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது. அன்றாட வாழ்க்கைக்கே அவதிப்படும் மக்கள்தான் இரண்டாம் வகுப்புப் பயணத்தை மேற்கொள்கிறார்கள். இது அவர்களை நேரடியாகப் பாதிக்கும். இரயிலில் பயணம் செய்வது சாதாரண மனிதர்களுக்கு மலிவாக இருந்து வந்தது. இது இப்பொழுது பேருந்து பயணத்தைவிட மிகவும் அதிக செலவாகக்கூடியதாகிவிட்டது. உதவித் தொகைகளைச் சீர்படுத்தி சாதாரண மக்களுக்கு மலிவான பயணத்தை வழங்குவதே மத்திய அரசின் முயற்சியாக இருந்திருக்க வேண்டும்.

புறநகர் இரயிலில் அனைத்து வகுப்புக் கட்டணத்தை உயர்த்தியது, குறிப்பிட்ட தொகை வருமானமாகப் பெறுபவர்களையும் சிறு வியாபாரிகளையும் மிகவும் பாதிக்கும். பயணக் கட்டண உயர்வினால் சாதாரண மக்களிடையே ஏற்பட்ட பாதிப்பைத் தவிர்த்திருக்கலாம்.

பணவீக்கத்தின் பாதிப்புடன் கூடிய சரக்குக் கட்டண உயர்வு சாதாரண மனிதனைப் பாதிக்கும். தானியங்கள், பருப்பு, டீசல், சர்க்கரை போன்ற அத்தியாவசியப் பொருட்களுக்குச் சரக்குக் கட்டணத்திலிருந்த சலுகை விலக்கிக் கொள்ளப்பட்டதென்பது, இப்பொருட்களின்விலையேற்றத்திற்கு வழிகோலும். பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதுதான் நமது கொள்கை என்று அறிவித்துவிட்டு சரக்குக் கட்டணத்தை-குறிப்பாக, அத்தியாவசியப் பொருட்களின் சரக்குக் கட்டணத்தை உயர்த்தியுள்ளது ஆச்சரியப்படுத்தியுள்ளது.

சாதாரண மக்களையும், நமது பொருளாதார ஸ்திரத் தன்மையையும், கவனத்தில் கொண்டு மத்திய இரயில்வே அமைச்சர் கொண்டுவந்துள்ள இரயில்வே பயணக் கட்டண உயர்வையும், சரக்குக் கட்டண உயர்வையும், மறுபரிசீலனை செய்ய வேண்டும் என நான் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.



## போக்குவரத்துக் கழகப் பணியாளர்களுக்கு ஓய்வு கால

# சேம நலநிதித் திட்டம்



தமிழக அரசுப் போக்குவரத்துக் கழகப் பணியாளர்களுக்கு அவர்கள் ஓய்வுபெற்ற பிறகு ஏற்கெனவே அவர்களுக்குள்ள பிராவிடெண்ட் நிதி உதவி, கிராச்சுவிடி நிதியுதவி ஆகிய இரண்டுக்கு மேலும் மூன்றாவது சலுகையாக 'ஓய்வு காலச் சேமநல நிதித் திட்டம்' ஒன்றினைச் செயல்படுத்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார். இது, இந்திய நாட்டில் வேறு எந்த மாநிலத்திலும் இதுவரை செயல்படுத்தாத ஒரு புதிய திட்டமாகும்

இத்திட்டத்தின்படி 1.9.1992 முதல் அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றி ஓய்வு பெறும் ஒவ்வொரு தொழிலாளிக்கும் மாதந்தோறும் ஒரு குறிப்பிட்ட தொகை அவர் இறக்கும் வரை கீழே கொடுக்கப்பட்டுள்ளவாறு ஓய்வு காலச் சேம நலநிதியாக வழங்கப்படும்.

| | |
|---|---|
| 1.9.1992 முதல் 31.8.1997 வரை பணியிலிருந்து ஓய்வு பெறுவோர் மாதந்தோறும் பெறும் தொகை | ரூ.300. |
| 1.9.1997 முதல் 31.8.2002 வரை | ரூ.450 |
| 1.9.2002 முதல் 31.8.2007 வரை | ரூ.600 |
| 1.9.2007 முதல் 31.8.2012 வரை | ரூ.750 |
| 1.9.2012 முதல் 31.8.2017 வரை | ரூ.1000 |
| 1.9.2017 முதல் 31.8.2022 வரை | ரூ.1,250 |

பணியிலிருக்கும்போது ஒரு தொழிலாளி இறந்துவிட்டால், அந்தத் திட்டத்தின்படி தொழிலாளருடைய நியமனதாரருக்குத் தொழிலாளர் இறந்த தேதியிலிருந்து 15 ஆண்டுக் காலத்திற்கு நிதி உதவி வழங்கப்படும்.

இதற்காக ஒவ்வொரு தொழிலாளியும் மாதந்தோறும் தன்னுடைய பங்குத்தொகையாக ரூ.50 செலுத்தவேண்டும். நிர்வாகம் தனது பங்காக ஒவ்வொரு தொழிலாளிக்கும் தலா ரூ.1,000 தொகையை 40 சம மாதத் தவணைகளில் மாதம் ரூ.25 வீதம் செலுத்தும். இந்த நிதியை நிர்வகிக்கத் தனியானதொரு டிரஸ்ட் உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்படும். நிதி வசதிக்கேற்ப உதவி நிதியின் அளவும் எதிர்காலத்தில் அதிகரிக்கவும் கூடும்.

இத்திட்டத்தின்கீழ் பின்வரும் நபர்கள் 22.2.93 அன்று மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களிடமிருந்து சேமநல நிதி உதவியினைப் பெற்றார்கள்.

1. திரு கே. நாராயணசாமி, ஓட்டுநர், பல்லவன் போக்குவரத்துக் கழகம் ... ரூ.300.00
2. திரு. எம். கோபால், ஓட்டுநர், போக்குவரத்துக் கழகம் ... ரூ.300.00
3. திரு. வி. தேவேந்திரன், ஓட்டுநர், போக்குவரத்துக் கழகம் ... ரூ.300.00
4. திரு. டி.என். பாலன், நடத்துநர், திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் ... ரூ.300.00
5. திரு. டி. அய்யாதுரை, ஓட்டுநர் பயிற்சியாளர், திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் ... ரூ.300.00



மதிப்பீட்டில் வழங்கப்பட்டன.

வேளாண்துறையின்கீழ் தேசிய பயிறு பெருக்கத் திட்டம், ஒருங்கிணைந்த அரிசி உற்பத்தித் திட்டங்களுக்கென 32 பேர்களுக்கு ரூ.1.33 இலட்சம் நிதியுதவியும், மீன்வளத் துறையின்கீழ் 70 பேர்களுக்கு இலவசமாகக் குடியிருப்புக் கட்டிக்கொள்ள ரூ.18.20 இலட்சம் மானியமும், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் வாயிலாகச் சிறுதொழில் செய்ய ஒருவருக்கு ரூ.3.60 இலட்சம் கடனுதவியும், பொதுத்திட்டத்தின்கீழ் 6 பேர்களுக்கு ரூ.19.36 இலட்சம் கடனுதவியும், கதர்மற்றும் கிராமத் தொழில் வாரியத்தின்மூலம் 11 பேர்களுக்கு ரூ.1.02 இலட்சம் மதிப்பீட்டில் கடனுதவியும் வழங்கப் பட்டது.

தாட்கோ நிறுவனம் மூலம் உழவு மாடு வாங்க 14 பேர்களுக்கும், வண்டியும் மாடும் வாங்க 17 பேர்களுக்கும், மினிவேன் வாங்க ஒருவருக்கும், டிராக்டர் மற்றும் டிரெயிலர் வாங்க இருவருக்கும், இதர சலுகைகளின்கீழ் 18 பேர்களுக்கும், ரூ.12.57 இலட்சம் மதிப்பீட்டில் நிதியுதவிகள் வழங்கப் பட்டன.

உள்ளாட்சித் துறையின் கீழ் சைக்கிள்கடை, மளிகைக்கடை வைக்கவும், இதர இனங்களின்கீழும் 26 பேர்களுக்கு ரூ.2.20 இலட்சம் நிதியுதவியும், மாவட்டத் தொழில் மையம் மூலமாக 31 பேர்களுக்குத் தொழில் முதலீட்டுக் கடனாக ரூ.5.11 இலட்சமும், பாரத ஸ்டேட் வங்கியின் மூலம் 33 பேர்களுக்குத் தொழில் தொடங்க ரூ.99.53 இலட்சம் கடனுதவியும், மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் குறுகிய கால, மத்தியக் காலப் பருவக் கடனாக 1,566 பேர்களுக்கு ரூ.115.90 இலட்சம் கடனுதவியும், 5 நபர்களுக்கு வேளாண் சாராக் கடனாக ரூ.32.83 இலட்சமும் வழங்கப்பட்டன.

சிறு சேமிப்புத் திட்டத்தின்கீழ் சாதனை புரிந்தமைக்காக அரசின் ஊக்கத்தொகை ரூ.10 இலட்சமும், பேரூராட்சித் திட்டப் பணிகளுக்காக ரூ.18.70 இலட்சமும் வழங்கப் பட்டன.

இதுதவிர பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 19 பேர்களுக்கு இருதய அறுவைச் சிகிச்சைக்கென ரூ.3,06,000 (ரூபாய் மூன்று இலட்சத்து ஆறாயிரம் மட்டும்) நிதி உதவியினையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார். இந்நிகழ்ச்சியின் போது சிதம்பரனார் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு ஹேமந்த் குமார் சின்ஹா, இ.ஆ.ப., அவர்கள் உடனிருந்தார். ●

'தமிழரசு' அடுத்த இதழில்...

காது - மூக்கு - தொண்டை
மருத்துவ நிபுணர்
டாக்டர்.கே.கே.ராமலிங்கம்



பதில்கள் இடம்பெறும்.





# உழவர் வாழ்வு உயர....

திரு. கு.ப. கிருஷ்ணன்
(மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்)

தமிழக அரசின் வேளாண்துறை மிகச் சீரிய முறையில் பல்வேறு வேளாண் உற்பத்தித் திட்டங்களை வெற்றிகரமாகச் செயல்படுத்தி வருகிறது.

'வரப்பே தலகாணி
வைக்கோலே பஞ்சுமெத்தை
வேர்வையே பெருங்குளியல்
வெற்றுடம்பே பட்டாடை'யாகக்

கொண்டு பாடுபடும் சிறு மற்றும் குறு விவசாயிகள்- உளம் மகிழ, பல்வேறு திட்டங்களை டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் தலைமையிலான இந்த அரசு பொறுப்பேற்ற நாள் முதல் திட்டமிட்டுச் செயலாற்றி வருகிறது.

இந்த ஆண்டு நல்ல மழை பெய்து, பலலாண்டுகளுக்குப் பிறகு, குறித்த காலத்தே மேட்டூர் அணை திறக்கப்பட்டு, குறுவைச் சாகுபடி சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு சென்ற ஆண்டைவிட ஒரு இலட்சம் எக்டேர் கூடுதலாகக் குறுவைச் சாகுபடி செய்யப்பட்டது. உற்பத்தித் திறனும் உயர்ந்துள்ளது. தமிழக அரசு வரலாற்றில் இதுவரை எட்டாத உயர்ந்த அளவு உணவு உற்பத்தியினை இவ்வாண்டு பெறுவோம் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பயறு வகைகள், எண்ணெய் வித்துகள், பருத்தி, கரும்பு உற்பத்தியிலும் குறிப்பிடத்தக்க சாதனையை நாம் இவ்வாண்டு அடைய உள்ளோம்.

14 மாவட்டங்களில் மட்டுமே செயல்படுத்தப்பட்டு வந்த ஒருங்கிணைந்த அரிசி உற்பத்தித் திட்டம் இந்த ஆண்டு முதல் 20 மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டு, 9.5 கோடி ரூபாய் செலவில் செயல்பட்டு வருகிறது.

'புஞ்சை விளைந்தால் பஞ்சம் தீரும்'- என்ற பழமொழிப்படி, சோளம், கேழ்வரகு பயிர் சாகுபடிக்கென ஒரு சிறப்புத் திட்டம் 1.25 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. உழவர்கள் நெற்பயிரையும், பணப் பயிரெனக் கருதி, வருவாயைப் பெருக்கிட ஜே.ஜே.92 என்ற புதிய வாசனை ரக நெல்லை, 'பொங்கல் பரிசாக' பொங்கல் நன்னாளில் இருந்து விவசாயிகளுக்கு அறிமுகம் செய்துள்ளோம். இதனை உழவர்கள் பயிரிட்டு அதிக வருவாயைப் பெருக்க வேண்டுகிறேன். விந்திய மலைக்குத் தென் பகுதியில் பயிரிடச் சிறந்த , 105 நாட்கள் முதல் 110 நாட்களுக்குள் விளையக்கூடிய வாசனை ரகம் இந்த ஜே.ஜே.92 என்பது குறிப்பிடத்தக்கது.

இரசாயன உரத்தின் விலை உயர்வால் வேதனையுறும் விவசாயிகளுக்குக் குறைந்த விலையில் உரங்கள் கிடைப்பதற்கு டன்னுக்கு ஆயிரம் ரூபாய் மானியமாக 35 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டு வருகிறது. இதுவரை எந்த அரசும் செயல்படுத்தாத வகையில் கடந்த ஆண்டில் 75 இலட்சம் ரூபாய் செலவில் 5,000 எக்டேர் தரிசு நிலங்கள் சாகுபடிக்குக் கொண்டு வரப்பட்டன. மேலும் 10,000 எக்டேர் தரிசு நிலத்தைச் சாகுபடிக்குக் கொண்டுவர 150 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



நீர்ப்பிடிப்புப் பகுதிகளை மேம்பாடு செய்யத் தேசீய மானாவாரி நீர்பிடிப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் என்ற ஒரு சீரிய திட்டத்தினை வகுத்து இத்திட்டம் 35 கோடி ரூபாய் செலவில் 14 மாவட்டங்களில் 84 வட்டாரங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சிறு-குறு விவசாயிகளும் விசை உழவைக்கொண்டு வேளாண் தொழிலில் தீவிரமாக ஈடுபடும் வகையில், 2,000 பவர் டில்லர்கள் வழங்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு பவர் டில்லருக்கும் ரூபாய் 12,000 மானியம் வழங்கத் தமிழ்நாடு அரசு 2.5 கோடி ரூபாய் ஒதுக்கி உள்ளது.

பெண்ணினத்திற்குப் பெருமை சேர்க்கும் வகையில் தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆற்றிவரும் பணி மகத்தானது. வேளாண் தொழிலிலும் பெண்கள் மேம்பாடு அடைய வேண்டும் என்ற தொலை நோக்கில், வேளாண் பெண்கள் மேம்பாட்டுத் திட்டம் என்ற ஒரு திட்டத்தை உருவாக்கிச் செயல்படுத்தி வருகிறார்கள். விதை விதைப்பது முதல் விளைந்த பொருளைச் சந்தையில் விற்பனை செய்வது வரை மகளிர் ஆற்றும் பணி சிறந்திட வேண்டும் என்ற உயர்ந்த நோக்கோடு 'டென்மார்க்' அரசு உதவியுடன், 4.25 கோடி ரூபாய் செலவில், தமிழகத்தில் 6 மாவட்டங்களில் உழவர் பயிற்சி நிலையங்கள் மூலமாக வேளாண் தொழில் நுட்பங்கள் பற்றிய பயிற்சிகள் பெண்களுக்கு அளிக்கப்பட்டு வருகிறது.

## நீர்நிலைகள்!

தருமபுரி மாவட்டம் 'மழை மறைவு' மாவட்டம்தான்; ஆனால் - இம்மாவட்டத்தில் காவிரி, தென்பெண்ணை, சனத்குமார நதி, மார்க்கண்டேய நதி, பாம்பாறு, வாணியாறு, தொப்பையாறு, நாகாவதி ஆறு, தும்பலஹள்ளி ஆறு, கெலவரப்பள்ளி ஆறு, சிங்கிரிப்பள்ளி ஆறு போன்ற ஆறுகளும் - அவ்வாறுகளில் கட்டப்பட்டுள்ள மூத்தூர் அணை, பஞ்சப்பள்ளி அணை, கெசர்குளி அணை, தும்பலஹள்ளி அணை, நாகாவதி அணை, தொப்பையாறு அணை, பாம்பாறு அணை, வாணியாறு அணை, சின்கிரிப்பள்ளி அணை, கெலவரப்பள்ளி அணை, தளகிரி அணை, ஈச்சம்பாடி அணை போ[illegible] தேக்கங்களும் உள்ளன;

1858-ஆம் ஆண்டு [illegible] பாரூர் ஏரி, பெனு[illegible] ஏரி, ஆலாபுரம் ஏரி, [illegible] ஏரி, ராமகால் ஏரி, [illegible] உருவாக்கப்பட்ட [illegible] கோட்டை ஏரி, அன்ன[illegible] கடத்தூர் ஏரி, தளி [illegible] களிக் கோட்டை ஏரி, [illegible] ஜி.பி. ஏரி, ஓசூரின் [illegible] களிலும் அமைந்துள்ள [illegible] ஏரிகள், கடத்தூர் [illegible] கம்பைநல்லூர் ஏரி [illegible] நிலைகளும் இம்மா[illegible] வேளாண்மைக்கு [illegible]

அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டம் செயல்பட 24 கோடி ரூபாய் செலவில் இத்திட்டம் இந்த ஆண்டு முதல் செயல்பட உள்ளது.

இதுபோன்ற இன்னும் பல திட்டங்களை வேளாண் பெருமக்களுக்கென்றே அரசு செயல்படுத்தி வருகிறது. எனவே, இவற்றை உழவர்கள் நன்கு பயன்படுத்தி, வாழ்வில் உயர்வு அடைய வேண்டுகின்றேன்.

'கரும்போடு நெல்பருத்தி
மஞ்சள் நல்ல
கனிவாழை பழவகைகள்
தானி யங்கள்
தரும்உழவர் புன்சிரிப்பு
நிலைத்து நிற்கத்
தமிழ்போல என்றென்றும்
சுவைத்து வாழ
வருமானம் மிகப்பெருகி
இன்பம் சூழ
வகை செய்வோம் வரலாறு
சமைப்போம் கட்டிக்
கரும்பாக இனிக்கட்டும்
உழவர் வாழ்க்கை
கனிவோடு வாழ்த்துகிறேன்,
வாழ்க நீங்கள்!'

## கல்வித் தரம் உயர...

ஆதி திராவிடர் நலப் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியரின் கல்வித்தரத்தை உயர்த்த வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஏற்கெனவே ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைக்கு அறிவுரை வழங்கியதன் பயனாக, கடந்த கல்வி ஆண்டில் ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியரின் தேர்வு விழுக்காடு அதிகரித்து உள்ளது. இதனை மேலும் உயர்த்தவேண்டும் என்றால் அப்பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களும், பாட ஆசிரியர்களும் ஊக்கத்துடன் மாணவர்களுக்குப் பாடங்களை பயிற்றுவித்தால்தான், அந்த மாணவ மாணவியர்கள் சிறந்த முறையில் பயிற்சி பெறுவார்கள்.

எனவே, அவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு, ஆதிதிராவிடர் நலப்பள்ளிகளில் உள்ள தலைமை ஆசிரியர்களுக்கும், பாட ஆசிரியர்களுக்கும் ஊக்கப் பரிசுகளை வரும் கல்வி ஆண்டில் இருந்து வழங்க மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார். அதன்படி உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு அப்பள்ளியின் வெற்றி விழுக்காடு 75 சதவிகிதம் இருந்தால் ஊக்கத்தொகை 1,500 ரூபாயும், 60 சதவிகிதம் முதல் 74 சதவிகிதம் வரை இருந்தால் 1000 ரூபாயும் ஆண்டு ஒன்றுக்குப் பெறுவார்கள். அதேபோல் சம்பந்தப்பட்ட பாட ஆசிரியர்கள் 100 சதவிகிதம் வெற்றி விழுக்காடு காண்பித்தால் 750 ரூபாய் ஊக்கத் தொகையாக ஆண்டு ஒன்றுக்குப் பெறுவார்கள்.

இந்த ஊக்கத் தொகை ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளில் மாணவ மாணவியர்களைப் பயிற்றுவிப்பதில் தலைமை ஆசிரியர்களுக்கும், பாட ஆசிரியர்களுக்கும் ஒரு பெரும் ஊக்கத்தைக் கொடுப்பதாக அமையும்.






எங்கள் இதயங்கனிந்த நல்வாழ்த்துக்கள்!

அம்மன் கிரானைட்ஸ்

100 சதவிகித ஏற்றுமதி நிறுவனம்
அரூர் - 636903 - தமிழ்நாடு

அனைத்து ரக நினைவுச் சின்னங்களையும், ஏற்றுமதி செய்யும் தலைசிறந்த நிறுவனம் அமெரிக்காவிலிருந்தும் ஐரோப்பாவிலிருந்தும் வாடிக்கையாளர்களிடமிருந்து சிறப்பான நினைவுச் சின்னங்களுக்கென ஆர்டர்களைப் பெறுவதில் தலைசிறந்து விளங்குகிறது.

ஒவ்வொரு ஆண்டிலும் இந்த நினைவுச் சின்னங்கள் ஏற்றுமதியில் 100 சதவிகிதம் அதிகரித்துள்ளோம்.

தொழிற்சாலை:
கேபிள்: CHENGRANIT
அரூர் தொலைபேசி: 2169, 2119
ஃபேக்ஸ்: (04346), 2033
எம்.ஜி. காலனி-அரூர் 636903
தமிழ்நாடு. இந்தியா.

சென்னை அலுவலகம்:
ஃபேக்ஸ்: 91-44-869155
தொலைபேசி: 868056
129 அபிபுல்லா ரோடு,
தி.நகர்
சென்னை - 600 017.

நல்வாழ்த்துக்கள்





**திம்மி செட்டி**

**செயலாளர்,**

**கிருஷ்ணகிரி கிரானைட் சங்கம்**

**தர்மபுரி மாவட்டம்**

**போன்: 2399**





**இந்திய ஒருமைப்பாட்டையும் இன ஒற்றுமையையும் வலியுறுத்தி**

**தென்னார்க்காடு மாவட்டம் முழுவதும்**

# மனிதச் சங்கிலி

அமைதிப் பூங்காவான தமிழகத்தில் பூத்த அழகான மலர்க்கொத்து தென்னார்க்காடு மாவட்டம். இம் மாவட்டத்தில் அதிக அளவில் வீழும் தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்களும் மற்ற இனத்தவரும் சமூக, பொருளாதார வாழ்வில், மலரும் மணமும் போல் இணைந்து வாழும் பெருமையைப் பறைசாற்றிக் கொண்டு உள்ளார்கள்.

மாவட்ட ஆட்சித் தலைவர், திரு ஜி. இராமகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையின் கீழ், தென்னார்க்காடு மாவட்ட நிர்வாகத்தினரும், பொதுமக்களும் மற்றும் பல்வேறு சமுதாய முன்னேற்றச் சங்கங்களும், சமூக சேவை நிறுவனங்களும் இணைந்து நாட்டிற்கும் வீட்டிற்கும் நன்மைபயக்கும் ஓர் ஒருமைப்பாட்டுச் சாதனையை, தைப்பூசத் தினத்தன்று நிகழ்த்திக் காட்டினர்.

சமயச் சார்பற்ற பாரதத்தை இம்மண்ணில் நிலைநாட்டுவதும், நாம் வாழ்வது பல்வேறு இனத்தினர் வாழ்ந்தாலும் என்றும் அது ஒன்றுபட்ட ஒரே இந்தியா என்பதை உறுதிப்படுத்துவதும்தான் இன்றைய காலகட்டத்தில் நம்முள் உள்ள தலையாய கடமை என்பதை இந்த மனிதச் சங்கிலி நிகழ்ச்சி எடுத்துக் காட்டியது.

அண்ணல் காந்தியடிகள், மனித குலமாணிக்கம் பண்டித நேரு, கோபாலகிருஷ்ண கோகலே, பால கங்காதர திலகர், மகாகவி பாரதியார், செக்கிழுத்த செம்மல் வ.உ.சி., தில்லையாடி வள்ளியம்மை, ஆன்மிக நெறி வகுத்துக் கொடுத்த அருட்பிரகாச வள்ளலார் போன்றவர்கள் பண்படுத்திய நிலம் நமது இந்தியத் திருநாடு. இதனைப் பாழ்படுத்திட எந்தச் சக்திகள் முயன்றாலும் அதனை முறியடிப்பது நமது ஒவ்வொருவரின் கடமையாகும்.

இதை வலியுறுத்தும் வகையில், தென்னார்க்காடு மாவட்ட நிர்வாகம் 6.2.1993 அன்று காலை 11.00 மணி முதல் 11.20 வரை தென்னார்க்காடு முழுவதும் 800 கி.மீ. தூரத்திற்குச் சிதம்பரம், விருத்தாசலம், கடலூர், திருக்கோயிலூர், திண்டிவனம் கோட்டங்களில் முக்கியச் சாலைகளில் மனிதச் சங்கிலித் தொடர் நிகழ்ச்சியை நிகழ்த்திக் காட்டியது.

**கடலூர்**

கடலூரில் நடைபெற்ற மனிதச் சங்கிலியில் மாண்புமிகு ஆதி திராவிட நலத்துறை அமைச்சர் திரு எம். ஆனந்தன் அவர்கள் கலந்து கொண்டு இந்தியத் திருநாட்டின் ஒற்றுமையைக் காப்போம், இமயமும், குமரியும் எங்கள் எல்லை, எம்மதமும் சம்மதம், மனிதநேயம் காப்போம் என உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சரைத் தொடர்ந்து மாவட்ட ஆட்சித் தலைவர் திரு ஜி. இராமகிருஷ்ணன், இ.ஆ.ப., கடலூர் சட்டமன்ற உறுப்பினர் திரு பி.ஆர்.எஸ். வெங்கடேசன், கடலூர் பாராளுமன்ற உறுப்பினர் திரு பி.பி. கலியபெருமாள், மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர் திரு எஸ்.ஆர். ஜாங்கிட்,

இ.கா.ப., கூடுதல் ஆட்சியர் (மேம்பாடு) திரு பெ. இறையன்பு, இ.ஆ.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு தி.ஆ. சுப்பிரமணியம், கோட்ட வருவாய் அலுவலர், திரு ஜெயராமன், நேரு யுவக் கேந்திரா ஒருங்கிணைப்பாளர் திரு பால சுப்பிரமணியம் ஆகியோர் உறுதி மொழி படித்தனர்.

இந்தியன் வங்கி மண்டல மேலாளர் திரு சீனிவாசன், பள்ளிக் கூட மாணவ மாணவிகள், என்.எஸ். எஸ்., என்.சி.சி. மாணவர்கள், வர்த்தகச் சங்கத்தினர், அரிமா சங்க மண்டல மேலாளர் திரு என்.எஸ். ரங்கநாதன் மற்றும் அனைத்துக் கட்சிப் பிரமுகர்களும் பெருமளவில் கலந்துகொண்டனர்.

**விருத்தாசலம்**

மனிதச் சங்கிலி நிகழ்ச்சியை யொட்டி சங்கொலி ஒலிக்கப்பட்டதும், வரிசையில் கைகோத்து நின்றவர்கள் தேசிய ஒருமைப்பாடு மத நல்லிணக்க உறுதிமொழி எடுத்தனர். விருத்தாசலம் பாலக்கரையில் சிதம்பரம் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ப. வள்ளல் பெருமாள், சட்டமன்ற உறுப்பினர் திரு அரங்கநாதன், கோட்ட வருவாய் அலுவலர் திரு கிருஷ்ணமூர்த்தி, கோட்ட வளர்ச்சி அலுவலர் திரு ரங்கநாதன், அரசு ஊழியர்கள் அலுவலர் சங்கத் தலைவர்கள் மற்றும் திரளான மக்கள் கலந்துகொண்டனர்.

திண்டிவனம் :

திண்டிவனம்-சென்னை நெடுஞ்சாலையில் நடைபெற்ற இந்த மனிதச் சங்கிலியில் பொதுமக்கள், அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், மாணவ மாணவிகள், அரிமா சங்க அமைப்புகள் கலந்து கொண்டன. திண்டிவனம் உதவி மாவட்ட ஆட்சியர் திரு ஜவகர், இ.ஆ.ப., சட்டமன்ற உறுப்பினர் திரு பன்னீர்செல்வம், மாவட்டக் கல்வி அலுவலர் செல்வி பாத்திமா ஆகியோர் கலந்து கொண்டனர்.

**விழுப்புரம்**

விழுப்புரம் பகுதியில் தேசீய நெடுஞ்சாலையில் 161 கி.மீ. தூரத்திற்குச் சுமார் 65 ஆயிரம் பேர்கள் கலந்து கொண்டனர். நான்குமுனை தேசிய நெடுஞ்சாலையில் நடந்த மனிதச் சங்கிலியில் வள்ளலார் மாவட்டத் தனி அலுவலர் திரு ரமேஷ்குமார் கன்னா, இ.ஆ.ப., உதவிக் காவல்துறைக் கண்காணிப்பாளர் திரு இராமச்சந்திரன் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

எம்.ஜி. ரோடு சந்திப்பில் நடந்த மனிதச் சங்கிலியில் விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினர் திரு தே. ஜனார்த்தனம் மற்றும் அனைத்துப் பள்ளியைச் சேர்ந்த மாணவ மாணவிகள் கலந்துகொண்டனர்.

**நெல்லிக்குப்பம்**

அண்ணாசாலையில் நடைபெற்ற மனிதச் சங்கிலியில் நெல்லிக்குப்பம் சட்டமன்ற உறுப்பினர் திரு தாமோதரன், அரசுப் பெண்கள் உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியை பத்மாவதி, கிராம நிர்வாக அலுவலர்கள், வாசகர் வட்டம், நுகர்வோர் பேரவை மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

பண்ருட்டி தாசில்தார் லட்சுமி நாராயணன், வருவாய்த்துறை அலுவலர் சங்கச் செயலாளர் பன்னீர் செல்வம், பண்ருட்டி அரசு மேல்நிலைப் பள்ளி மாணவர்கள், பெண்கள் பள்ளி மாணவியர்கள், பாலவிகார் மெட்ரிகுலேஷன், காந்தி ஆங்கிலப் பள்ளி, அறிஞர் அண்ணா ஆங்கிலப் பள்ளி மற்றும் அரசுத் தொடக்கப்பள்ளி மாணவ மாணவிகள் கலந்துகொண்டனர்.

கண்டமங்கலம் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் திரு வி. சுப்பிரமணியம், மேல்மலையனூர் சட்டமன்ற உறுப்பினர் திரு ஜானகிராமன் ஆகியோர் அவரவர் தொகுதியில் நடைபெற்ற மனிதச் சங்கிலியில் கலந்து கொண்டனர்.

விழுப்புரம் சாலமேட்டில் உள்ள தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத் தலைமையகம் முன்பு, மேலாண்மை இயக்குநர் பால சண்முகம், பொது மேலாளர் மற்றும் நிதிக் கட்டுப்பாடு அலுவலர் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

தென்னார்க்காடு மாவட்ட நிர்வாகம் மிகக் குறுகிய கால அவகாசத்தில் ஏற்பாடு செய்த இம்மனிதச் சங்கிலி நிகழ்ச்சி, மாவட்டம் முழுமையிலும் தேசீய ஒருமைப்பாட்டுணர்வைத் தோற்றுவிப்பதில் மகத்தான வெற்றி பெற்றுள்ளதாகப் பல பத்திரிகைகள் பாராட்டி யுள்ளன.

**- அ. சந்திரசேகரன்**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்**
**தென்னார்க்காடு மாவட்டம்**





# புதுக்கோட்டை மாவட்டம் நலத்திட்டப் பணிகள்

**பு**துக்கோட்டை மாவட்டத்தில் ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் நடைபெற்று வருகின்றன. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 1992-93-ஆம் நிதி ஆண்டில் ரூ.150.70 இலட்சம் செலவில் 4,623 பயனாளிகளுக்கு உதவி வழங்கத் திட்டமிடப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தில் சொத்துக்களை நன்கு பராமரிப்பதிலும், வங்கிக்குரிய கடன்களைத் திரும்பச் செலுத்துவதிலும், தனி நபர் பயனாளிகளைக் காட்டிலும் குழுவாக அமைத்துச் செயல்படும் பயனாளிகளின் செயல் திறன் சிறப்பாக அமைந்துள்ளதால், நடப்பாண்டில் குழு செயல்பாட்டிற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

1992 செப்டம்பர் 21-ஆம் நாள் அன்று மாண்புமிகு முதல்வர் அவர்களால் 600 பயனாளிகளுக்கு ரூ.40 இலட்சம் மதிப்புள்ள பொருள்கள், வறுமை ஒழிப்புத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளன.

**சிறப்புத் தன்னிறைவுத் திட்டம்**

1992-93-ஆம் ஆண்டில் தார்ச் சாலைகள் அமைக்கவும், பள்ளிக் கட்டடங்கள், மதிய உணவுக் கூடங்கள் கட்டுவதற்கும், சிறு பாசனக் கண்மாய்கள் மேம்படுத்தவும், ஊராட்சிகளுக்குத் தெரு விளக்குகள் அமைக்கவும், குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பாதிக்கப்பட்ட குடிநீர் வசதி செய்யவும் ரூ.669.99 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**வறட்சிக்கு இலக்காகும் பகுதிக்கான திட்டம்**

1992-93-ஆம் ஆண்டில் ரூ.60 இலட்சம் செலவில் 918 எக்டேர் பரப்பளவில் இத்திட்டத்தைச் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டு, இதுவரை ரூ.25.71 இலட்சம் செலவு செய்யப்பட்டு 596 எக்டேர் நிலம் பயனடைந்துள்ளது.

கரிமவாயுத் திட்டத்தின் கீழ் 300 கலன்கள் அமைக்கப்படவுள்ளது. 3,000 புகையில்லா அடுப்புகள் அமைக்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டதில் இதுவரை 750 அடுப்புகள் அமைக்கப்பட்டுள்ளன.

**சமூகக் காடுகள்**

1992-93-ஆம் ஆண்டில் ரூ.16.03 இலட்சம் செலவில் 10 இலட்சம் மரக்கன்றுகள் வளர்க்கத் திட்டமிடப்பட்டு, அவற்றை 468 எக்டேர் பரப்பில் நடவு செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதுவரை 309 எக்டேர் பரப்பில் நடவு செய்யப்பட்டுள்ளது.

**கிராமக் குடிநீர்த் திட்டம்**

புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள கிராமப் பகுதிகளில் நடப்பு நிதியாண்டில் குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் ரூ.200 இலட்சம் செலவில் 157 குடியிருப்புகளுக்காக 18 கைப்பம்பு மற்றும் 139 விசையிறைப்பான்கள் அமைத்து குடிநீர் வழங்கவும், நீராதாரம் பொய்த்த 32 பழைய திட்டங்களுக்குப் புதிய ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கவும், பழுதடைந்துள்ள 95 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளைச் செப்பனிடவும் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் இதுவரை சுமார் 30,000 பேர் பயனடைந்துள்ளனர்.

இந்த மாவட்டத்தில் புதிதாக ஆழ்குழாய்க் கிணறுகள் 200 அமைப்பதற்கு அரசு அனுமதியளித்துள்ளது. இதில் முதல் கட்டமாக ரூ.71.93 இலட்சம் செலவில் 150 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு சுமார் 29,800 பேர் பயனடைந்து வருகிறார்கள்.

**பேரூராட்சிப் பணிகள்**

ஆலங்குடிப் பேரூராட்சிக்கென ஆயுள் காப்பீட்டுக் கழக நிதியுதவியுடன் ரூ.51.53 இலட்சத்திற்கான திட்டம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. பொன்னமராவதி பேரூராட்சிக்கான குடிநீர்த் திட்டத்திற்கு ரூ.45.35 இலட்சம் செலவில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

அரிமளம் பேரூராட்சிக்கு ரூ.45.35 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர்த் திட்டம் .செயல்படுத்தப்பட்டு சுமார் 7,200 பேர் பயன் பெறுகிறார்கள். கறம்பக்குடிப் பேரூராட்சிக்கு ரூ.45.95 இலட்சம் செலவில் திட்டம் முடிக்கப்பட்டு சுமார் 11,000 பேர் பயன் அடைந்துள்ளனர்.

நகரங்கள் நலமடைய வேண்டுமானால், கிராமங்கள் வளமடைய வேண்டுமென்றார் அண்ணல் காந்தியடிகள். அந்த வகையில் கிராமப்புற மக்களின் நிதி ஆதாரத்தைப் பெருக்கிடும் வகையில்-ஏழை, எளிய மக்கள், குறிப்பாக வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் மக்கள் பயனடைய, இதுபோல் பல்வேறு நலத்திட்டப் பணிகள் செயல்படுத்தப்படுகிறது.

**உல. இரவீந்திரன்**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி)**
**புதுக்கோட்டை**

# VGP Easy Purchase Scheme



The VGP Easy Purchase Scheme has been divided into different groups for your convenience. Choose a group that suits you best. Payment is by way of regular, monthly instalments. After the completion of all your 12 monthly instalments, you can take home the product you need + Free gift.

Scheme Ending Free Gift

| Rs.100 | Rs.200 | Rs.300 | Rs.500 | Rs.1000 |
|---|---|---|---|---|
| p.m | p.m | p.m | p.m | p.m |
| Group | Group | Group | Group | Group |
| Rs.100 worth Free Gift | Rs.200 worth Free Gift | Rs.300 worth Free Gift | Rs.500 worth Free Gift | Rs.1000 worth Free Gift |

**VGP V.G.PANNEERDAS & CO.**

3, K.H.(Double Road, Bangalore-27. PH:236499, 225828
Branch: VGP "Victory Plaza", 30th Cross, 7th Main, 4th Block Jayanagar Bangalore-11. Ph:646301

Also at Madras: Saidapet Ph:45333. Mount Road Ph:830314. T.Nagar Ph:440246. Rattan Bazaar Ph:564949. Red Hills Ph:67398 and all Mofussil Branches. Branches: Chingleput Ph:237. Kancheepuram Ph:2934. Villipuram Ph:2519. Arkonam Ph:232. Thiruvannamalai Ph:2664. Vellore Ph:22[illegible]29. Trichy Ph:41956. Madurai Ph:3199. Coimbatore. Hyderabad Ph:232219. Bombay Ph:4091092. Delhi Ph:582146


# அரசு அலுவலர்களுக்குச் சுற்றுலா மேம்பாட்டுக் கழகம் மூலம் பயண விடுப்புச் சலுகைகள்



அரசு அலுவலர்களுக்குச் சுற்றுலா மேம்பாட்டுக் கழகம் மூலம் பயண விடுப்புச் சலுகைகள் அனைத்து அரசு அலுவலர்களுக்கும் இருவழிப் பயணம் மற்றும் ஒரு வழிப் பயணம் (Leave Travel Concession) மேற்கொண்டு சுற்றுலாத் தலங்களைச் சுற்றிப் பார்க்க அரசு சலுகை அளித்திருப்பது அனைவரும் அறிந்த ஒன்றாகும்.

**சுற்றுலா மேம்பாட்டுக் கழகம் மூலம் சலுகைகள்**

இதே சலுகையைச் சுற்றுலா மேம்பாட்டுக் கழகம் நடத்தும் சொகுசுப் பேருந்து மூலம் பல சுற்றுலாத் தலங்களைச் சுற்றிப் பார்க்க, (அரசு ஆணை (நிலை) எண். 75898/அலவன்ஸ்/92.1, நாள் 6.11.92 மூலம் அறிவித்துள்ள விதிமுறையின்படி) அரசு அலுவலர்கள் இருவழி பயணச் சலுகையை அனுபவிக்க ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

இப்புதிய திட்டம், முதன் முதலில் சென்னையில் மட்டும் செயலாக்கப்பட்டிருந்தாலும், நாளடைவில், மதுரை, கோவை போன்ற பெரிய நகரங்களிலும் இத்திட்டம் விரிவு படுத்தப்படவுள்ளது.

**பயன்பெற விரும்புவோர் கவனிக்க**

இத்திட்டத்தின் மூலம் பயன்பெற விரும்புவோர், ஒரு வழிப் பயணச்சலுகையை அனுபவிக்க இயலாது. இருவழிப் பயணச் சலுகையை அனுபவிக்க இயலும். இதற்காக அரசு ஊழியர் செலுத்தும் கட்டணத்தில் தங்கும் வசதிக்கான செலவும் அடங்கும்.

அனைத்து அரசு ஊழியர்களும் (ரயிலில் முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்பு செல்லும் அனைத்து அரசு ஊழியர்களுக்கு) இச்சலுகையை அனுபவிக்க இயலும்.

மேலும் ஏற்கெனவே அரசு ஆணையில் அறிவித்தபடி, 80 சதவிகிதம் முன்பணம் பெற்றுக் கொள்ளலாம். இம் முன் பணத்தைப் பெறுவதற்கு முன், சுற்றுலா மேம்பாட்டுக் கழகம் நடத்தும் சுற்றுலாவுக்கு முன்பதிவு ரூ.25 வீதம் கட்டணம் செலுத்திப் பதிவு செய்ய வேண்டும்.

80 சதவிகிதம் போக, மீதமுள்ள 20 சதவிகித பணத்தைச் சுற்றுலா சென்று வந்து, உரிய பட்டியலை வழங்கி, பணத்தை அரசிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**இதனால் என்ன நன்மை?**

இருவழிப் பயணச் சலுகையைப் பயன்படுத்தி ரயிலில் பயணம் செய்தால், குறிப்பிட்ட ஓர் இடத்தை மட்டும்தான் பார்க்க முடியும். முக்கிய சுற்றுலா மையத்தைச் சுற்றியுள்ள இடங்களைப் பார்க்க வேண்டுமாயின், சொந்தப் பணத்தைச் செலவிட்டுப் பார்ப்பதோடு அல்லாமல், தலைமையிடத்திற்குத் திரும்ப எந்த இடத்திலிருந்து பயணச் சீட்டு வாங்கினோமோ அந்த இடத்திற்கே வந்து ரயில் பயணம் தொடங்க வேண்டும்.

சுற்றுலா மேம்பாட்டுக் கழகம் நடத்தும் சுற்றுலாவில் கலந்து கொண்டால் பல இடங்களைப் பார்க்க முடியும். குறிப்பாக சுற்றுலா மேம்பாட்டுக் கழகம் நடத்தும் சுற்றுலாவில் கலந்து கொண்டால், தஞ்சாவூர், தாராசுரம், இராமேஸ்வரம், மண்டபம், கன்னியாகுமரி, மதுரை, திருச்சி என்று பல சுற்றுலா மையங்களையும், வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த எழில்மிகு தலங்களையும் பார்க்க இயலும்.

**சுற்றுலா மாளிகையில் சொகுசான வசதி**

சுற்றுலா மேம்பாட்டுக் கழகம் நடத்தும் சுற்றுலாவில் இரவில் தங்குவதற்கு ஆங்காங்கே இருக்கும் தமிழ்நாடு சுற்றுலா விடுதிகளில் தங்கலாம். இதற்காகக் கட்டணம் எதுவும் செலுத்தத் தேவையில்லை.

தவிரவும், ஒவ்வொரு சுற்றுலாத் தலத்தின் தொன்மையையும் வரலாற்றுப் பெருமையையும் விளக்கிக் கூற ஒரு வழிகாட்டியும் (Guide) சுற்றுலாப் பயணிகளுடன் வருகிறார். சுருக்கமாகச் சொல்லப்போனால், ஒரு அரசு விருந்தாளியாகச் சென்று வருவது போன்ற உணர்வினைப் பெற முடிகிறது.

ஆதலால் சுற்றுலா மேம்பாட்டுக் கழகம் நடத்தும் 'சொகுசு சுற்றுலா' திட்டத்தின் மூலம் விடுப்புப் பயணச் சலுகை (இருவழிப் பயணம்) மேற்கொண்டு அரசு ஊழியர்கள் பயன் பெறலாம்.

**சுற்றுலா செல்வது எப்படி?**

இத்திட்டத்தின் மூலம் சுற்றுலா மேம்பாட்டுக் கழகம் நடத்தும் சுற்றுலாக்களும் சுற்றுலாவுக்கான

# அறிவொளி இயக்கம்



# கல்லாத பேர்களே இல்லாதநிலை...

"கல்லாத பேரையெல்லாம் கல்வி பயிலச் செய்து காண்பதிலே தான் இன்பம்" - என்று பாடினார் ஒரு கவிஞர். அந்த வரிவடிவத்திற்குச் செயல்வடிவம் கொடுத்திட, கல்லாத பேர்களே இல்லாத நிலை உருவாக்கிட அறிவொளி இயக்கத்தை தீவிர முனைப்புடன் செயல் படுத்திட களத்தில் இறங்கி விட்டது நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம்.

நாகப்பட்டினம்-காயிதேமில்லத் மாவட்டம், 18.10.1991 அன்று புதிய மாவட்டமென, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களால் பொலிவுடன் தொடங்கி வைக்கப் பட்டது. மாவட்டத்தின் மொத்த மக்கள் தொகை 24 இலட்சம் ஆகும். இதில் கற்றவர் தொகை 14 இலட்சம், கல்லாதோர் எண்ணிக்கை 10 இலட்சம் ஆகும்.

நாகப்பட்டினம் - காயிதேமில்லத் மாவட்டம், விவசாயமே முழுமுதற் தொழிலாக உள்ள மாவட்டம். அதனால் ஏழை விவசாயத் தொழிலாளர்களைப் பெருமளவாக உள்ளடக்கிய மாவட்டம். எழுதப்படிக்கத் தெரியாதவர் எண்ணிக்கையும் பேரளவாக இருப்பதற்கு. இதுவும் ஒரு காரணமாகும்.

சமுதாயத்தின் அடித்தட்டிலே இருக்கும் இத்தகைய மக்கள், அரசின் பல்வேறு துறைகளின் மூலம் செயல்படுத்தப்படும் வளர்ச்சித் திட்டங்களின் பயனைப் பெற வேண்டும் என்றால், அவர்களைக் கற்றவர்கள் ஆக்க வேண்டியது அவசியம். இக்கொள்கையை நிறைவேற்றும் தீவிரத் திட்டமே அறிவொளி இயக்கம். கல்லாதோரில் 9 வயது முதல் 45 வயதுடையோருக்கு எழுதவும், படிக்கவும், கணக்கறிவு பெறவும் செய்வது இவ்வியக்கத்தின் நோக்கமாகும்.

மாவட்ட அளவில் இத்திட்டத்தினைச் செயல்படுத்திட மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் மாவட்ட அலுவலர்கள் கொண்ட குழுவும், வட்டார அளவில் வட்டார வளர்ச்சி அலுவலர், வட்டாட்சியர், உதவிக் கல்வி அலுவலர் கொண்ட குழுவும், ஊராட்சி அளவில் அங்கு பணி புரியும் அனைத்துத்துறை அலுவலர்களையும் கொண்ட குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளன. இக்குழுக்களில் அந்தந்தப் பகுதிகளைச் சேர்ந்த சேவை மனப்பான்மையும், தொண்டுள்ளமும் கொண்டவர்களும், கல்விப்பணி சிறக்க ஆதரவளிக்கும் பெரியோர்களும் சேர்க்கப்பட்டுள்ளனர்.



நாகப்பட்டினம் - காயிதேமில்லத் மாவட்டத்திலுள்ள கல்வி கற்பிக்கப் பட வேண்டிய 9 வயது முதல் 45 வயது வரையிலானவர்களின் எண்ணிக்கை துல்லியமாகக் கணக்கெடுக்கப்பட்டுள்ளது. இதன்படி ஆண்கள் 1.29 இலட்சம், பெண்கள் 2.35 இலட்சம் ஆக மொத்தம் 3.64 இலட்சம் பேர்களுக்குக் கல்வி கற்பிக்கப்படுதல் வேண்டும். இவர்களுக்கு எழுதவும், படிக்கவும், கையொப்பமிடவும் கற்றுத்தர 10 நபர்களுக்கு ஒரு தன்னார்வத் தொண்டர் என்ற வகையில் 36,400 பேர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் கல்லாதோர் வசித்துவரும் குடியிருப்புகளுக்கு அருகிலேயே இருந்து கல்வி கற்றுத் தர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தீவிர முனைப்புடன், நாகப்பட்டினம்-காயிதேமில்லத் மாவட்டத்தில் செயல்படத் தொடங்கியுள்ள அறிவொளி இயக்கத்தின் மாவட்ட மாநாடு 27.12.1992 அன்று நாகப்பட்டினம் காவல்துறை அணிவகுப்பு மைதானத்தில் நடைபெற்றது.

இம்மாநாட்டுக்கு வருகை தந்தோரை, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட அலுவலர் திரு. இரா. அழகிரிராஜூ அவர்கள் வரவேற்றார்.

மாவட்ட ஆட்சித் தலைவரும் மாவட்ட அறிவொளி இயக்கத் தலைவருமான திரு. கே. ஸ்கந்தன், இ.ஆ.ப., அவர்கள் மாநாட்டுக்குத் தலைமை வகித்தார்.

கல்வி அமைச்சர் மாண்புமிகு செ. அரங்கநாயகம் அவர்கள் அறிவொளிக் கொடியை ஏற்றிவைத்து, பின் அறிவொளிச் சுடர் ஏற்றி மாநாட்டைத் தொடக்கி வைத்தார். பின்னர் அறிவொளி வீடியோ ஒளிப்பேழை, ஒலி நாடா மற்றும் 'அறிவொளித் தீபம்' நூல் ஆகியவற்றை வெளியிட்டு விழாப் பேருரையாற்றினார்.

மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களிடமிருந்து வீடியோ ஒளிப்பேழையை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கே. ஸ்கந்தன், இ.ஆ.ப., அவர்களும் ஒலி நாடாவைத் திட்ட அலுவலர் திரு. இரா. அழகிரிராஜூ அவர்களும், 'அறிவொளி தீபம்' புத்தகங்களை முதன்மைக் கல்வி அலுவலர் திரு. ஜி. இராதாகிருஷ்ணன் அவர்களும் பெற்றுக்கொண்டார்கள்.

அறிவொளி இயக்க எழுத்தறிவு உறுதி மொழியை, அரசுத் திட்டத் துறைக் கூடுதல் செயலாளர் திருமதி குட்சியா காந்தி, இ.ஆ.ப., அவர்கள் அனைவரையும் ஏற்க வைத்து உரையாற்றினார்.

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி அனுராதா கதிராஜீவன், இ.ஆ.ப., அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. எஸ். ஆசைமணி, திரு. ஆர். கோடிமாரி, திரு. எம். பூராசாமி, திரு. வே. தம்புசாமி, திரு. கோ. பழனிச்சாமி, வயதுவந்தோர் கல்வித் துறை இயக்குநர் திரு. கண்ணன், பள்ளிச் சாராக் கல்வி கருவூல இயக்குநர் எம்.ஜெ.ஏ. ரஞ்சன்தாஸ் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

முன்னதாக 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தன்னார்வத் தொண்டர்கள் பங்கேற்ற பிரம்மாண்டமான அறிவொளி பேரணி அன்று மாலை தொடங்கியது. புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி அனுராதா கதிராஜீவன், இ.ஆ.ப., அவர்கள் கொடி அசைத்து ஊர்வலத்தைத் தொடங்கிவைத்தார். ஊர்வலம் தேசிய மேல்நிலைப் பள்ளியிலிருந்து தொடங்கி முக்கிய வீதிகள் வழியாக மாநாடு நடைபெற்ற காவல்துறை அணிவகுப்பு மைதானத்தை அடைந்தது.

மாநாட்டில் அறிவொளி இயக்கத்தினரால் சிறப்பான கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பெற்றன.

அறிவொளி இயக்கத்தின் மூலம் கல்லாதவர்களுக்குக் கல்வி கற்றுத் தரும் பணி 1993 ஜனவரித் திங்களில் தொடங்கி செப்டம்பர் மாதத்தில் முழுமை அடையும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது.

— வை. புண்ணியமூர்த்தி

-செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்





***சீன நாட்டின் வானொலி, திரைப்படம், தொலைக்காட்சித் துறையின் மாண்புமிகு அமைச்சர் திரு. ஏ.ஐ. ஜோஹங் அவர்கள் தலைமையில் இந்தியாவிற்கு வந்த எட்டுப் பேர் கொண்ட பிரதிநிதிக் குழுவினர் 8.2.1993 அன்று தலைமைச்' செயலகத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்களைச் சந்தித்து இரு நாட்டு உறவுகள் பற்றிய கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர். இக்குழு உறுப்பினர் அனைவருக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் நினைவுப் பரிசுகள் வழங்கினார்.***

நாட்கள் மற்றும் அதற்கான கட்டணங்களும் அறிவிக்கப்பட்டுள்ளன.

**சுற்றுலா மையங்கள்**

சுற்றுலா எண்-1
சென்னை-சிதம்பரம்-பூம்புகார்-நாகூர்-தஞ்சாவூர்-மதுரை-திருச்சி-சென்னை.

சுற்றுலா மேற்கொள்ளப்படும் நாட்கள் - 5

சுற்றுலாவுக்கான கட்டணம் (நபர் ஒன்றுக்கு) ரூ.825.

சுற்றுலா எண்-2
சென்னை-தஞ்சாவூர்-தாராசுரம்-இராமேஸ்வரம்-கன்னியாகுமரி- மதுரை-சென்னை.

சுற்றுலா மேற்கொள்ளப்படும் நாட்கள் - 5

சுற்றுலாவுக்கான கட்டணம் (நபர் ஒன்றுக்கு) ரூ.900.

சுற்றுலா எண்-3
சென்னை-தஞ்சாவூர்-கொடைக்கானல்-பழனி-திருச்சி-சென்னை.

சுற்றுல்லா மேற்கொள்ளப்படும் நாட்கள் - 5

சுற்றுலாவுக்கான கட்டணம் (நபர் ஒன்றுக்கு) ரூ.875.

சுற்றுலா எண்-4
சென்னை-பாண்டிச்சேரி-பிச்சாவரம்-சிதம்பரம்-ஓகேனக்கல்- உதகை-சென்னை.

சுற்றுலா மேற்கொள்ளப்ப்படும் நாட்கள் - 4

சுற்றுலாவுக்கான கட்டணம் (நபர் ஒன்றுக்கு) ரூ.900.

தொடங்கப்படும் காலங்கள் :

முதற்கட்டம்

முதல் பயணம் - ஜூன்-செப்டம்பர்.
பயண நாட்கள் - வாரம் ஒரு முறை
வியாழன் தோறும்.

2-வது பயணம் - பிப்ரவரி-மார்ச்
பயண நாட்கள் - வாரம் ஒரு முறை
வியாழன் தோறும்

3-வது, 4-வது பயணம் - வாரம் ஒரு முறை வெள்ளி தோறும்.

**இரண்டாம் கட்டம்**

அனைத்துப் பயணங்கள் (1,2,3,4)

ஏப்ரல் - மே, அக்டோபர்-ஜனவரி
15 நாட்களுக்கு ஒரு முறை - வியாழன் தோறும் (முதல் வாரம்)

வெள்ளிக்கிழமை - கடைசி வாரம். (வாகனம் இருக்குமேயானால்)

இந்தப் பயணச் சலுகையை, அரசு அலுவலர்கள் அனைவரும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

**- ஆர்.எஸ். மணி.**



# நூல் நயம்

### அருளொளி திருமுருகன் அந்தாதி

**ஆசிரியர்:** வி.கே. சுப்பிரமணியம்
**வெளியீடு:**
செந்தமிழ்க் கலா நிலையம், பினாங்கு
**விற்பனை உரிமை:**
செந்தமிழ்க் கலா நிலையம்
(இந்தியக் கிளை)
மனை எண் 704,
கொழுந்துறை இல்லம்
அண்ணாநகர் மேற்கு விரிவாக்கம்
சென்னை-600 101

பக்கம்:102 விலை:ரூ.20/-

**பி**னாங்கு நகரில் உள்ள கொடி மலையில் கோயில் கொண்டுள்ள முருகப் பெருமான் மீது அந்தாதி முறையில் பாடப்பெற்ற நூல் இது.

இதிலுள்ள சந்த நயம், படிப்போரை மகிழ்விக்கிறது. பொருள்நயம் இனிமை பயக்கிறது. காவடிச் சிந்து களிப்பு நல்கு கிறது. வருகைப் பதிகம் பிள்ளைத் தமிழின் சுவையை அள்ளித் தருகிறது. ஆசிரியரின் மொழிப் புலமையும் கவித் திறமையும் • பன்னூற் பயிற்சியும் இந் நூலாற் பெரிதும் விளக்கமுறுகின்றன. வெளிநாட்டிலும் செந்தமிழ் ஓங்கு புகழ் பெற்றுள்ளதையும் திறம்பெறு புலவர் ஆங்கு வதிகின்றதையும் இந்நூல் தெளி வாக்குகிறது.

—தமழ்ப்பித்தன்

### சசிகலா

**ஆசிரியர்.** ஆருத்ராபீரலன்
**வெளியீடு:**
பூங்கொடி பதிப்பகம்
14, சித்திரைக் குளம்
மேற்கு வீதி, சென்னை-600 004.

பக்கம்:272 விலை:ரூ.34/-

**இ**ந்நாலில் படைக்கப்பட்டுள்ள புதுமைப்பெண் சசிகலா உழைப்பால் உயர்ந்த புரட்சிப்பெண். தன் அறிவு ஆற்றலால் தானும் நிமிர்ந்து நின்று, தான் பணியாற்றிய தொழிற்சாலையை யும் அமைதியாக இயக்கி, தொழிலாளர் நிர்வாகத்தின் உறவை ஓங்கச் செய்த பாங்கினை இந்நாவல் மனக்கண்முன் காட்சியாக நிறுத்துகிறது.

ஆருத்ரா பாலன் எழுதிய முதல் நாவல் "என்றாலும், பல நாவல்களை எழுதி ஆழ்ந்த அனுபவம்பெற்ற முதிர்ச்சி யான எழுத்தாற்றலை இந்நூலில் காண முடிகிறது.

—ம.அரி

### ஏணி

**ஆசிரியர்:** அய்க்கண்
**வெளியீடு:**
கார்த்திக் பதிப்பகம்,
36-ஏ-7, கோவிந்தன் சாலை,
சென்னை-600 033.

பக்கம்:132 விலை:ரூ.20/-

**நா**மெல்லாம் வாழ்க்கையில் உயர்வதற்கு ஏணியாக இருந்து உதவியவர்கள் ஆசிரியப் பெருமக்களேயன்றோ?

இந்த நாடகத்தில் வரும் ஆசிரியர் ஆறுமுகம், அவரது துணைவியார் தெய்வானை ஆகியோரை மையமாக வைத்துப் பின்னப்பட்ட இந்நாடகத்தின் வாயிலாக, பல நல்ல அறிவுரைகளைக் கூறுகிறார் நாடகாசிரியர்.

''ஒவ்வொரு மாணவனும் தன் வாழ்நாளில் ஒரு நாள்— ஒரு நிமிஷம்— 'என்னை இந்நிலைக்கு உயர்த்தியவர் என் ஆசிரியர்' என்று ஒரே ஒரு முறை நினைத்தானென்றால், அதுதான் என் சேவைக்கு உரிய கைம்மாறு என்று கருதுவேன்'' என்று ஒரு காட்சியில் ஆசிரியர் கூறும் கருத்தை நாமெல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

நடிக்கவும் படிக்கவும் ஏற்ற நாடகம்.

—பி.வி.கிரி

### அறிவியல் அதிசயங்கள்

**ஆசிரியர்:** செ.ஆ. கிருஷ்ணமூர்த்தி
**வெளியீடு:**
மீனா புத்தகப் பண்ணை
வில்லியம் லே-அவுட் 2-வது தெரு,
விழுப்புரம்-605 103.

பக்கம்:156 விலை:ரூ.22/-

**அ**றிவியல் மின்னல் வேகத்தில் சென்று கொண்டிருக்கும் காலம் இது. அன்றாட வாழ்க்கையில் அறிவியலின் துணை இல்லாமல் இல்லை என்று சொல்லத்தக்க வகையில் அதன் இன்றிய மையாத தேவை உள்ளது. அத்துடன் நாளும் வளர்ந்து வரும் அறிவியல் சாதனங்கள் குறித்து நாம் தெரிந்து கொள்ளும் வகையில் இந்நூலில் பல அரிய செய்திகள் கூறப்பட்டுள்ளன.

விமானம், கேமரா, தையல் இயந் திரம், சைக்கிள், ஹெலிகாப்டர், அச்சுக் கலை, கடிகாரம், வானொலி, தொலைக் காட்சி இப்படி 45 சாதனங்கள் குறித்த தகவல்கள், அதைக் கண்டுபிடித்தவர்கள் முதலான தகவல்கள் உரையாடல் வடிவில் தரப்பட்டுள்ளன.

மாணவர்கள் மட்டுமல்ல, மற்றவர் களும் படித்துத் தெரிந்துகொள்ளலாம்.

- 'கிரிஜா'.

### 'இமைகளும் சுமையடி'

**ஆசிரியர்:** தேவிபாலா
**வெளியீடு:**
மயிலவன் பதிப்பகம்
92, கங்கை அம்மன் கோவில் தெரு,
வடபழனி, சென்னை-26

பக்கம்:192 விலை:ரூ.24/-

**இ**ந்நூலில் முதல் கதை 'இமைகளும் சுமையடி'. கல்யாணி பணக்காரக் காமுகன் ஒருவனுக்கு வாழ்க்கைப்பட்டு, அவள் படும் துன்பங்களை, துயரங் களைச் சொல்வது அவளைத் தற்கொலை முயற்சியில் இருந்து காப்பாற்றி, தன் இறுதி மூச்சுவரை அவளுக்குத் துணை யாக இருக்கும் பெரியசாமி வித்தியாச மான பாத்திரம்தான். தங்கள் தங்களு டைய எண்ணங்களை அவர்கள் வலி யுறுத்திச் சொல்லி நியாயம் கற்பித்துக் கொள்ளும் இடங்களில் எல்லாம் உரை யாடல் சிறப்பு.

கல்யாணியின் நன்றியுணர்வு, பெரிய சாமியோடு தொடர்ந்து வாழ அவள் விதிக்கும் நிபந்தனைகள் ஒரு காலகட்டத் தில் பெரியசாமியின் கண்ணியம், பெருந் தன்மை, அன்பு இவற்றால் இளகி தான் விதித்த நிபந்தனைகளைத் தானே மீறும் தன்மை ஆகியவை கல்யாணியை ஓர் அற் புதப் பெண்ணாக்குகின்றன..

இரண்டாவது கதை 'சாலையோர சதிகள்'. திருமணத்தின்போது பிறகு செய்து தருவதாகச் சொன்ன நகைகளை வாங்கி வருமாறு ரவியின் தங்கை துரத்தப்படுகிறாள். ரவி, தான் பணி புரியும் பேங்கில் உள்ள கணக்கொன்றி லிருந்து பணத்தைத் திருடுவதற்கு அவன் நண்பன் திட்டமிடுகிறான். திட்டத்திற்கு உதவியாக, திருடப் போகும் கணக்கிற்கு உரிய குடும்பத்தில் குழப்பத்தை மொட் டைக் கடிதங்களால் உருவாக்கி, கொலை செய்யும் அளவுக்கு அக்குடும்பத்தினர் கொண்டு செல்லப்படுகின்றனர். கதைகள் இரண்டுமே எழுத்தாற்றலால் சிறப்படை கின்றன.

—என்.குமாரசாமி

# தருமபுரி மாவட்டத்தில் பட்டுத் தொழில் வளர்ச்சி

**பட்டுத் தொழிலில், தருமபுரி மாவட்டம் தமிழகத்திலேயே முதன்மைபெற்ற மாவட்டமாகத் திகழ்கிறது; அத்தொழிலுக்கேற்ற மண்வளமும், சீதோஷ்ண நிலையும் அங்குள்ளது. இது குறித்து இந்தக் கட்டுரை மேலும் பல விளக்கங்களைத் தருகிறது.**



பட்டு வளர்ப்பு என்பது வேளாண்மையை அடிப்படையாகக் கொண்டது; மேலும், அதிக வேலைவய்ப்பும் அந்நியச் செலாவணியும் தரக்கூடியது. தருமபுரி மாவட்டத்திலுள்ள அனைத்து ஒன்றியங்களிலும் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது, இத்தொழில். நம் மாநிலத்திலேயே பட்டுத் தொழிலில் அதிக வளர்ச்சி அடைந்த மாவட்டம் தருமபுரி மாவட்டம் ஆகும். இம் மாவட்டத்தில் மட்டும் 26,000 ஏக்கர் நிலத்தில் மல்பரி சுமார் 40,000 விவசாயக் குடும்பத்தினால் பயிர் செய்யப்படுகிறது.

இந்த மாவட்டத்தின் பெருமை என்னவென்றால், இம்மாவட்டத்தில் தான் மல்பரி இலையிலிருந்து புழு வளர்த்து, பட்டு நூலாக்கி முறுக்கப்பட்டு, அது பட்டுச் சேலையாகவும் பட்டுத் துணிகளாகவும் இங்கேயே மாற்றப்படுகிறது. கர்நாடகத்தை ஒட்டி இம்மாவட்டம் இருப்பதாலும், தட்ப வெட்ப நிலை சாதகமாக இருப்பதாலும் இத்தொழில் இப்பகுதியில் மிகச் சிறப்பாக வளர்ந்து வருகிறது.

**பல்வேறு திட்டங்கள்**

இம்மாவட்டத்தில் பட்டுத் தொழிலை மேலும் அதிகப்படுத்த உலக வங்கி நிதி உதவியுடன் தேசீயப் பட்டு வளர்ச்சித் திட்டம் 1989-90 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்காக ரூ.1,750 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கீழ்க்கண்ட அடிப்படை வசதிகள் செய்ய தருமபுரி மாவட்டத்தில் மேலும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது; அது குறித்த விவரம் வருமாறு:

பட்டு முட்டைகளின் தரத்தை உயர்த்துவதற்கு ஆவலப்பள்ளி, பேரிகை, கல்கொண்டபள்ளி, தளி முதலிய இடங்களில் உள்ள பட்டுப் பண்ணைகளை உயர்தர ஆதாரப் பண்ணைகளாக மாற்ற ரூ.89.4 இலட்சம் செலவிலும் - ஓசூர் உத்தனப்பள்ளி மற்றும் உளிமங்கலத்தில் இரண்டாம் நிலை ஆதாரப் பண்ணை உருவாக்க ரூ.100.74 இலட்சம் செலவிலும் ஒரு பட்டுப் பயிற்சிப் பள்ளி உருவாக்கப்படவிருக்கிறது.

விவசாயிகளுக்கு மூலாதாரமாக உள்ள பட்டுப் பூச்சி முட்டைகளை விஞ்ஞான முறைப்படி தரத்துடனும் உற்பத்தியை இருமடங்கு அதிகப்படுத்தவும் ஓசூர், கிருஷ்ணகிரி, பென்னாகரம் முதலிய இடங்களில் பட்டு முட்டை வித்தகங்களுக்காக ரூ.117.07 இலட்சம் செலவிலும் - விவசாயிகள் தங்கள் உற்பத்தி செய்த பட்டுக் கூடுகளை விற்பதற்காக ஓசூர், தேன்கனிக்கோட்டை, தருமபுரி, பென்னாகரம், அஞ்செட்டி முதலிய ஊர்களில் உள்ள பட்டுக்கூடு அங்காடிகளுக்கு அதிக இடவசதியும் துல்லியமாக எடை போட எலக்ட்ரானிக் கருவிகளும், கூடுவிற்க வரும் விவசாயிகளுக்கும் பெண்களுக்கும் தங்கும் மற்றும் கழிவிட வசதிகளும் செய்ய ரூ.88.29 இலட்சம் செலவிலும் திட்டங்கள் நிறைவேற்றப்படவிருக்கிறது.

இத்துறையில் பணி செய்யும் பணியாளர்களின் தொழில்நுட்ப ஆற்றலை மேம்படுத்தவும் புதிய நபர்களுக்குப் பயிற்சி தரவும் ஓசூரில் ரூ.59.96 இலட்சம் செலவில் ஒரு பட்டுப் பூச்சிப் பள்ளியும் -பட்டுத் தொழிலில் முன்பே ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்குப் புதிய நுட்பத்தைக் கற்பிக்கவும், புதிதாக ஈடுபடுபவர்களுக்குப் பட்டுத் தொழிலைக் கற்றுத்தரவும் தருமபுரியில் ஒரு விவசாயிகள் பயிற்சி மையம் ரூ.46.54 இலட்சம் செலவிலும் - உற்பத்தி செய்யும் பட்டுக் கூடுகளை பட்டு நூலாக மாற்ற - தொழில் நுட்பம் தெரிந்த கைவினைஞர்களை உண்டாக்க ஓசூர் மற்றும் பென்னாகரத்தில் ரூ.55.5 இலட்சம் செலவில் இரு பட்டு நூற்புப் பயிற்சிப் பள்ளியும் உருவாக்கப்பட உள்ளது.

தருமபுரி மாவட்டத்தில் தொழில் நுட்பத்தை விவசாயிகளுக்கு எடுத்துக் கூறவும் விவசாயிகளுக்குத் தேவைப்படும் வங்கிக் கடன் விதைக்குச்சிகள் பட்டு முட்டைகள் எளிதில் கிடைக்கச் செய்யவும் தேன்கனிக்கோட்டை, தளி, பாலக்கோடு, பென்னாகரம், ஏரியூர், லலிகம், தருமபுரி, காவேரிப்பட்டினம், பர்கூர், ஓசூர், பாகலூர், சூளகிரி ஆகிய 12 இடங்களில் தொழில் நுட்பச் சேவை மையங்களை உருவாக்க ரூ.298.23 இலட்சம் செலவிலும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.



இத்திட்டத்தினால் இம்மாவட்டத்தில் மல்பரி பயிர் செய்யும் விவசாயிகளுக்குப் பயிர்க்கடன் புழு வளர்ப்பு உபகரணங்கள் வாங்கவும் புழுவளர்ப்பு மனை கட்டவும் வங்கிக் கடனாக ரூ.7.06 கோடி வழங்கப்பட உள்ளது. இதில் ஒவ்வொரு விவசாயிக்கும் புழுவளர்ப்பு மனை உபகரணங்கள் வாங்க வங்கிக் கடன் ரூ.20,100 வழங்கப்பட்டு வருகிறது. தவிரவும் 5,500 விவசாயிகளின் பயிற்சி முதலியவற்றுக்கு ரூ.16.5 இலட்சம் மானியத் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

இங்கு, பட்டுநூற்புத் தொழிலை அதிகரிக்கவும் 106 தனியார் புதிய ஆலைகளை உருவாக்கவும் ரூ.72.6 இலட்சம் வங்கிக் கடனாக வழங்கப்பட உள்ளது. மேலும் 400 புதிய பட்டுநூற்புக் கைவினைஞர்களை உருவாக்க ரூ.6 இலட்சம் மானியத் தொகையும் ஒதுக்கப்பட்டுள்ளது.

தருமபுரி மாவட்டத்திற்கு மட்டும் இவ் உலக வங்கித் திட்டத்தின் கீழ் ஒட்டு மொத்தமாக ரூ.17.50 கோடி செலவில் எட்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் செலவிடப்பட்டுள்ளது; இத்திட்டத்தில் சென்ற ஆண்டு வரை 1074.59 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இவ்வாண்டு இதுவரை ரூ.230.4 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இத்திட்ட முடிவில் தருமபுரி மாவட்டத்தில் புதிதாக மல்பரி நடவு செய்யப்பட நிர்ணயிக்கப்பட்ட இலக்கான 6,000 எக்டேர் இதுவரை 4,600 எக்டேர் நடவு செய்யப்பட்டுள்ளது. இத்திட்ட முடிவில் தருமபுரி மாவட்டத்தில் 38,000 எக்டேர் மல்பரி பரப்பில் ரூ.128 கோடி மதிப்புள்ள 71 இலட்சம் கிலோ பட்டுக் கூடுகளும் 7.1 இலட்சம் பட்டுநூலும் உற்பத்தி செய்யப்படும். இத்திட்டங்களினால் இம்மாவட்டத்தில் உள்ள கிராமப்புற மக்களுக்கு அதிகப்படியாக - முக்கியமாக இலட்சம் பெண்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படவிருக்கிறது.



**வறட்சி நிவாரணப் பணித்திட்டம்**

இம்மாவட்டத்தில் வறட்சி நிவாரணப் பணித் திட்டத்தின்கீழ் (டிபிஏபி) 75 ஏக்கர் மல்பரி நடவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் வீட்டைச் சுற்றி - மற்றும் தோட்டங்களைச் சுற்றி மல்பரி மரங்கள் நடவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்காக ரூ.6 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.

**மகளிர் மேம்பாட்டுத் திட்டம்**

இத் திட்டத்தின்கீழ் பென்னாகரம், தருமபுரி, அரூர், மொரப்பூர் பாப்பிரெட்டிபட்டி, ஊத்தங்கரை, பருகூர், மத்தூர், சூளகிரி, கெலமங்கலம், தளி மற்றும் நல்லம்பள்ளி போன்ற 12 ஊராட்சி ஒன்றியங்களில் 750 மகளிர் பயனாளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்குப் பட்டு வளர்ச்சித் திட்டத்தின்கீழ் வங்கிக் கடனாகத் தலா ரூ.12,950 வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் மகளிர் மேம்பாட்டுக் கழகம் மூலம் செயல்பட்டு வருகிறது.

**மலைவாழ்மக்கள் மேம்பாட்டுத் திட்டம்**

இத் திட்டத்தின்கீழ், சித்தேரி மலைப்பகுதியில் உள்ள 25 மலைவாழ் குடும்பங்கள் இந்த ஆண்டு பயன்பெறும்; அவர்கட்கு ரூ.1.54 இலட்சம் கடன் மற்றும் பயிற்சிக்காகச் செலவிடத் திட்டமிடப்பட்டு உள்ளது.

**சிறப்பு ஆதிதிராவிடர் நலத்திட்டம்**

தருமபுரி மாவட்டத்தில் உள்ள ஆதிதிராவிடர்களுக்கு மல்பரி பயிரிட்டுப் பட்டுப் புழு வளர்க்க மானியத்துடன் கூடிய கடன் ரூபாய் 1.96 கோடி (ஒரு கோடியே தொண்ணூற்றாறு இலட்சம்) அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இதன் மூலம் 400 ஆதிதிராவிடர்கள் பயன்பெறுவார்கள்.



பென்னாகரம் பட்டுத் தொழில் அங்காடி

நிலமற்ற ஆதிதிராவிடர்களுக்கு தலா ஒரு ஏக்கர் பயிர் செய்யக் கூடிய நிலம் வாங்கிக் கொடுத்து பட்டுத் தொழிலில் ஈடபடக் கடன் வசதிகள் வழங்கப்படும். இத் திட்டத்தின்கீழ், அரூர் மற்றும் பென்னாகரம் ஒன்றியங்களில் தலா 100 ஆதிதிராவிடர்கள் வீதம் 200 ஆதிதிராவிடர்கள் பயன்பெறுவார்கள். இத் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு பயனாளிக்கும் ரூ.64,000-ம் மானிய வசதியுடன் கடன் வழங்கப்படும். இதில் ரூ.15,000 மானியமாகவும், ரூ.16,000 ஆதாரக் கடனாக 'தாட்கோ'வும், ரூ.33,000 வங்கிகள் மூலமும் கடன் வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

நிலமற்ற ஆதிதிராவிடர்களுக்கு மல்பரி பயிரிட்டு, பட்டுத் தொழிலில் ஈடுபட ரூ.34,000 மானியத்துடன் கூடிய கடன் வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்படும். இத்திட்டம் பருகூர் மற்றும் மத்தூர் ஒன்றியங்களில் செயல்படுத்தப்பட உள்ளது. ஒவ்வொரு ஒன்றியத்திலும் தலா 100 பயனாளிகள் வீதம் மொத்தம் 200 ஆதிதிராவிட விவசாயிகள் பயன்பெறுவர். ஒவ்வொரு பயனாளிக்கும் ரூ.15,000 மானியமாகவும், ரூ.8,500 தாட்கோ மூலம் ஆதாரக் கடனாகவும் வங்கிகள் மூலம் ரூ.10,500 கடனாகவும் வழங்கப்படும்.

இத்திட்டத்தைச் செயல்படுத்திக் கண்காணிக்க மாவட்ட அளவில் ஒரு குழு மாவட்ட ஆட்சித் தலைவரைத் தலைவராகக் கொண்டு செயல்படும்.

இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு விவசாயியும் ஒரு ஏக்கர் மல்பரி சாகுபடி செய்து, பட்டுப் புழு வளர்ப்பில் ஈடுபடுவதன் மூலம் ஆண்டொன்றுக்கு ரூ.25,000



வருமானம் பெறுவர். இதன் மூலம் 400 ஆதிதிராவிட விவசாயக் குடும்பங்களின் பொருளாதாரம் மேம்பட்டு வாழ்க்கைத் தரம் உயர்வதோடு 2000 வேலையற்ற ஆதிதிராவிடர்களுக்கும் இத்தொழில் மூலம் வேலைவாய்ப்புக் கிடைக்கும். எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதிக்குள் 15 ஆயிரம் ஏக்கர் அளவில் புதிதாக மல்பரி பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் 40,000 கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பளிக்கத் திட்டமிடப் பட்டிருக்கிறது.

***உலகத் தொழிலாளர் நிறுவனம் (ஐ.எல்.ஓ)***

இத்திட்டத்தின் கீழ் தளி ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் மல்பரி நடவு செய்யப்படும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

***ஸ்வில் வளர்ச்சிக் கழகத்தின் திட்டங்கள்***

பட்டுத் தொழிலில் பெண்கள் 75 சதவிகிதம் ஈடுபட்டு உள்ளதால் அவர்களுக்காகக் கூட்டுறவுச் சங்கங்கள் மருதேபள்ளியில் பட்டுப்புழு வளர்ப்புச் சங்கமும் கம்பைநல்லூர் மரவாடி மற்றும் சூளகிரி பகுதியில் பட்டுநூற்புச் சங்கமும் சிறப்பாக முழுவதும் மகளிருக்காக என்றே செயல்பட்டு வருகின்றன.

இம்மாவட்டத்தில் ஆண்டு ஒன்றுக்குச் சுமார் 154 இலட்சம் பட்டு முட்டைகள் தேவைப்படுகிறது. இதற்குத் தேவையான விதைக்கூடுகள் மற்றும் தமிழ்நாடு முழுவதுக்கும் தேவையான பட்டு முட்டைகளின் தேவைக்கு வேண்டிய விதைக் கூடுகள் சுமார் 10 இலட்சம் டன் தேன்கனிக்கோட்டை பகுதியிலிருந்து உற்பத்தி செய்யப்பட்டு விநியோகம் செய்யப்படுகிறது என்பது இம்மாவட்டத்தின் மிகச் சிறப்பு ஆகும். பட்டு முட்டைகள் அரசு பட்டுமுட்டை வித்தகங்களில் மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டு வந்தன; தற்போது விவசாயிகளின் பெருகிவரும் முட்டைகளின் தேவையைக் கவனத்தில் கொண்டு தனியாரும் பட்டு முட்டை உற்பத்தி செய்யத் தேசியப் பட்டு வளர்ச்சித் திட்டத்தின்கீழ் அனுமதி வழங்கப்பட்டு, தருமபுரி பகுதியில் மூன்று வித்தகங்களும் கிருஷ்ணகிரி பகுதியில் மூன்று வித்தகங்களும் ஒசூர் பகுதியில் ஐந்து வித்தகங்களும் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. தேசியப்பட்டு வளர்ப்புத் திட்டத்தின்கீழ், இத் தனியார் வித்தகங்களுக்கு மானியம் வழங்கப்பட்டு உள்ளது. இத் தனியார் வித்தகங்களுக்குத் தேவையான விதைக் கூடுகள் பட்டு வளர்ச்சித் துறையின் மூலம் வழங்கப்படுகிறது.

பாலக்கோடு பட்டுநூல் மெருகூட்டு மையம்





பாப்பாரப்பட்டி மல்பரித் தோட்டம்

பட்டுநூற்பு அபிவிருத்தி செய்யப் பட்டுநூற்பாளருக்காக 2½ சதவிகித வட்டி மானியம் வழங்கப்படுகிறது. இதன்மூலம் அதிக நூற்பாளர்கள் இம்மாவட்டத்தில் பயன் பெற்று வருகின்றனர். மேலும் பலமுனை நூற்பு இயந்திரம், கே.ஆர்.பி. டேம், மற்றும் ஒசூர் பகுதியில் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. பட்டுநூற்புப் பயிற்சி பெறுவதற்கெனப் பென்னாகரத்தில் ஒரு பயிற்சி மையம் ஆரம்பிக்கப்பட்டு, அதன் மூலம் பட்டுநூற்பாளர்களால் அனுப்பப்படும் பணியாளர்களுக்கும் மற்றும் பயிற்சி பெறுகிறவர்களுக்கும் மாதம் ரூ.250 உதவித் தொகையுடன் பயிற்சி அளிக்கப்படுகிறது. பட்டு நூற்பகங்கள் நல்ல முறையில் செயல்படப் புகைவராத சிக்கனப் பொருளாதார அடுப்புகள் அமைக்க 30 சதவிகித மானியம் வழங்கப்படுகிறது. வெற்றிகரமாகப் பட்டுக்கூடு மகசூல் அறுவடை செய்ய நோய்த் தடுப்பு நடவடிக்கைகளில் முக்கியத்துவத்தைக் கருதி விவசாயிகளுக்கு25 சதவிகித மானிய விலையில் பார்மலின் மற்றும் பிளீச்சிங் பவுடர் போன்ற கிருமிநாசினிகள் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. இம்மாவட்டத்தில்தான் பட்டு வளர்ச்சித் துறையின் மூலம் அது தொடர்பான எல்லாத் திட்டங்களும் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பது பெருமைக்குரியது.

நீர்ப்பாசன வசதி குறைவாக உள்ள இம்மாவட்ட விவசாயிகளுக்குப் பட்டுத் தொழில் ஓர் வரப்பிரசாதமாகும். •

“ கிருஷ்ணகிரிக்கு வடமேற்கே, சீர்கெட்டுக் காட்சிதரும் தேவர் குந்தாணி என்ற நகரைத் தலைநகராகக் கொண்டு 40 ஆண்டுக்காலம் ஆட்சி செலுத்தியவன் பேரரசன் வீரராமநாதன் என்ற ஒய்சாளப் பேரரசன்; இது நடந்தது 13-ஆம் நூற்றாண்டில்.

★ ★ ★



## தமிழ் வளர்த்த பெரியார்:

## தமிழ்நெறிக் காவலர்

# மயிலை சிவமுத்து

- மயிலை முத்தெழிலன்



**ப**ள்ளி செல்லாப் பாப்பா முதல் பள்ளி செல்லும் பிள்ளைகள் வரை படித்து மகிழும் வகையில், ஆங்கில மழலைப் பாடல்கள் (Nursery Poems) போன்று நயங்கொண்ட பாடல்கள் எழுதப்படவேண்டும் என்று பேராசிரியர் மயிலை சிவமுத்து எண்ணினார். எனவே, அவர் தாம் எழுதிய பாடநூல்களில் பல கவிஞர்களின் பாடல்களை இடம் பெறச் செய்ததோடல்லாமல், தாம் எண்ணிய வகையிலும் பாடல்களைப் பாடித் தம் பாடநூல்களில் இடம் பெறச் செய்தார். எதையும் எண்ணிச் செய்ய வல்ல மயிலை சிவமுத்து அவர்கள், மழலைப் பாடல்களை எழுத ஆழ்ந்து சிந்தித்தார்.

ஒவ்வொரு பாட்டை எழுதவும் பல நாட்கள் சிந்தித்தார். அதனால்தான் அப்பாடல்கள் நீதியும் புதுமையுங் கொண்டிருந்ததோடல்லாமல் எளிமையும் இனிமையுங் கொண்ட அருமையான பாடல்களாக இருந்தன.

குழந்தைகள் தாங்களே படித்து மகிழும் வகையில், அவர்கள் அறிந்த சொற்களைக் கொண்டு பாடியுள்ளார். அப்பாடல்களை ஒரு முறைப் படித்தாலும் மனத்தில் பதியும் வண்ணம் பாடியிருப்பது அவருடைய பாடல்களின் தனிச் சிறப்பாகும்.

அவரெழுதிய பாடல்கள் பலவற்றைத் தொகுத்து ‘முத்துப் பாடல்கள்’ என்ற நூல் ஒன்று வெளிவந்தது. அந்நூல் நடுவணரசின் பரிசையும் பெற்றது. அப்பாடல்கள் முத்துப் (புலவர்) பாடிய பாடல்கள் என்பது மட்டுமல்ல, அவை ஒவ்வொன்றும் முத்தான பாடல்கள் என்பதாலேயே, அந்நூல் ‘முத்துப் பாடல்கள்’ எனப்பட்டது.

அப்பா அம்மா வாரும்;
பலகை புத்தகம் தாரும்!
பாட சாலை போவேன்;
பெரிய மனிதன் ஆவேன்!
காசும் பணமும் பெறுவேன்;
கையில் வாரித் தருவேன்!

என்ற இப்பாடல் ஆங்கில மழலைப் பாட்டைப் போன்று ஒவ்வொரு பாட்டின் இறுதிச் சொல்லும், அடுத்த பாட்டின் இறுதிச் சொல்லுடன் ஒன்றி வந்து ஓசை நயம் ஊட்டுவதை உணரலாம். இவ்வமைப்பை முதன் முதல் திட்டமிட்டு மழலைப் பாட்டில் எழுதியவர் மயிலை சிவமுத்து என்றால் மிகையாகாது. அவர் எழுதிய மழலைப் பாடல்களில் பலருடைய உள்ளத்தைக் கவர்ந்த பாடல் ‘மாமி சுட்ட பிட்டு’ என்ற பாட்டாகும். அப்பாட்டை ஆயிரக்கணக்கான பாப்பாக்கள் பாடி மகிழ்ந்துள்ளனர்.

மாமி சுட்ட பிட்டு;
மடியில் வாங்கிக் கட்டு!
சீனி சர்க்கரை இட்டு;
சிறிது நெய்யும் சொட்டு!
உண்டு ஏப்பம் விட்டு;
ஓடி வாநீ பட்டு!

என்ற மிகச் சுவையான இப்பாடலில் குழந்தைக்கேற்ற பிட்டைக் குறிப்பிடுவதோடல்லாமல், ‘நெய்யைக் கொட்டக் கூடாது’ ‘சொட்டு விட வேண்டும்’ என்று சொல்வது பாட்டை நெய் மணக்கச் செய்கிறது.

மற்றொரு பாட்டில் குழந்தையின் பிற்காலத்தில் அது எவ்விதம் விளங்க வேண்டும் என்பதையும், என்ன செய்ய வேண்டும் என்பதையும் குழந்தைகள் உள்ளத்தில் கொள்ளச் செய்கின்றார்.

அப்பா வைப்போல் நான்ஆனால்;
ஆயிரம் ரூபாய் சேர்த்திடுவேன்;
ஆனை குதிரை வாங்கிடுவேன்!

அப்பா வைப்போல் நான்ஆனால்;
எங்கும் பொன்னே குவித்திடுவேன்;
எல்லா ருக்கும் அளித்திடுவேன்!

அப்பா வைப்போல் நான்ஆனால்
உலகம் முழுவதும் சுற்றிடுவேன்;
உண்மை பலவும் கற்றிடுவேன்!

ஈற்றெதுகையோடு அமைந்த இப்பாடல் அறுபதாண்டுகளுக்கு முந்திய நிலைமைச் சுட்டுவதால், ‘ஆயிரம் ரூபாய்’ என்பது பெருந்தொகையாகவும், ‘ஆனை, குதிரை’ வாங்குவது பெருமைக்குரியதாகவும் குறிப்பிடப்பட்டாலும், பாடல் மூலம் குழந்தைக்கு உரிய உயரிய எண்ணத்தை ஊட்டுவது என்றைக்கும் தேவையான கருத்தாகும். இப்பாடலில் ‘அப்பாவைப் போல் நானானால்’என்ற சொல் அடிக்கடி இடம்பெற்று பாட்டிற்கு ஒரு புதிய பொலிவைத் தருகிறது.

இவ்விதம் ஓசை நயங்கொண்ட பாடல்களைப் பாடிய தோடல்லாமல், சிறுவர்கள் ஆடிப்பாடும் வகையிலும் பல பாடல்கள் பாடியுள்ளார். மிருகங் களையும், பறவைகளையும் பாட்டில் வைத்துப் பாடியுள்ள ஒரு பாட்டு,

மயில் போல் ஆடுவேன்;
மான் போல் ஓடுவேன்!
குயில் போல் பாடுவேன்;
குருவி போல் தேடுவேன்!
பூனை போல் பதுங்குவேன்;
புலி போல் பாய்வேன்!
ஆனை போல் நடப்பேன்;
ஆருக்கும் நான் அஞ்சேன்!

என்ற இந்தப் பாடல் குழந்தைகள் இசையோடு பாடும் வகையிலும், எதுகை, மோனை நிறைந்ததாகவும் பாடப் பட்டுள்ளதல்லவா! இப்பாடலைப் பாடு வதோடல்லாமல் குழந்தைகள் ஆடிடவும் பயன்படும் வகையில் அமைந்த 'அபிநய மழலைப் பாடல்' எனலாம்.

எல்லோரும் குழந்தைகளுக்குத் தாலாட்டு தான் பாடியுள்ளனர். ஆனால் எதையும் புதுமையாகச் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தினரான மயிலை சிவமுத்து 'பாலர் பள்ளியெழுச்சி' பாடியிருக்கிறார்.

பொழுது விடிந்தது எழுந்திரு பாப்பா;
பொன்வண்டு போலநீ எழுந்திரு பாப்பா!
சிட்டுக் குருவிபோல் எழுந்திரு பாப்பா;
சிரித்த முகத்துடன் எழுந்திரு பாப்பா!

இவைகளைப் போன்று பல பாடல் களைப் பாடிய, தமிழ்நெறிக் காவலர் மயிலை சிவமுத்து, தமிழின் பெருமையை விளக்கும் பாடல் இது,

எங்கள் தமிழ் நல்ல தமிழ்;
எழுத பேச எளிய தமிழ்!
ஏணை ஆட்டி எங்கள் அன்னை
இன்ப மாகப் பாடுந் தமிழ்!
குழந்தை யாகத் தவழ்ந்த போது
கொஞ்சி முத்தம் கொடுத்த தமிழ்!
பாலுந் தேனும் கலந்த தமிழ்;
நாளும் நாங்கள் கற்கும் தமிழ்!

இந்தப் பாடலில், எத்துணை எளிய நடையில் தமிழின் இனிமையையும், பெருமையையும் கூறிய தோடல்லாமல், அது நம் தாய்மொழி என்பதையும் குழந்தைகளே கூறும்படிப் பாடியுள்ளார்.

மற்றொரு பாட்டில் குழந்தைகள் உடலை வலிமையுடையதாக வைத்துக் கொள்ள, உடற்பயிற்சி செய்யவேண்டும் என்கிறார். பள்ளியில் ஆசிரியர் கற்பிக் கும் உடற்பயிற்சி மட்டும் போதாது. வீட்டிலேயும் செய்யவேண்டும் என்கிறார். வீட்டில் உடற்பயிற்சியா என்று கேட்கும் பிள்ளைகளுக்கு விடையளிக்கும் விழுமிய பாட்டு இது. பாட்டின் தொடக்கத்தில் இராமாயணம், மகாபாரதம் போன்ற வற்றை மாணவர்கள் அறியவேண்டித் தூண்டுகிறார்.

வீமனைப் போல் வலுவேண்டும் - நல்ல
வீரமும் தீரமும் வேண்டும்! - ரகு
ராமனைப் போல் குணம்வேண்டும்-அந்த
ராவணன் ஆண்மையும் வேண்டும்!

என்று கூறிவிட்டு,

கட்டையும் வெட்டுதல் வேண்டும்-அதைக்
கட்டிச் சுமந்திடல் வேண்டும்!-சிறு
பெட்டி எடுத்திடக் கெஞ்சும் - ஒரு
பேதையைக் கண்டுல கஞ்சும்.

என்ற வரிகளின் மூலம் சோம்பல் உடையவனை, வீட்டுவேலை செய்ய மறுப்பவனை 'உலகத்தினர் வெறுப் பார்கள் என்று மாணவர்க்கு உணர்த்து கிறார்!

அன்னையின் அன்பைப் படம் பிடித்துக் காட்டும் பாடலைப் படித் தாலும், படிக்கக் கேட்டாலும், நம் விழிகள் கண்ணீர் மழையைப் பொழியும். அவ்வளவு உருக்கமாக அப்பாடலைப் பாடியுள்ளார். அவருடைய அன்னையை எண்ணிப் பாடியதால்தான் அந்தப் பாடல் அத்துணை உருக்கமாக அமைந்து விட்டது. இதோ அந்தப் பாடல்,

என்னைப் பெற்ற நற்றாயே,
எங்கே அன்பு கற்றாயே!
'என்றன் கண்ணே!' என்பாயே,
எனக்குத் தந்தே தின்பாயே!
'அம்மா, தலைநோய்!' என்றாலும்;
அலுத்து களைத்து நின்றாலும்,
அழுது கண்ணீர் வடிப்பாயே;
அன்பால் நெஞ்சம் துடிப்பாயே!

என்று நீண்டு செல்கிறது இப்பாடல்.

மயிலை சிவமுத்து தனித்தன்மை உடைய தகைசான்ற கவிஞராவார். அவர் மறைந்து கால் நூற்றாண்டாகிவிட்டது. கடந்த ஆண்டு, அவருடைய நூற்றாண்டு, அவர் மறைந்தாலும், அவரது படைப் புகள் என்றும் நிலைத்து நிற்கும் தன்மையன!



'ஜே.ஜே.92' என்கிற உயர்ரக நெற்பயிரைக் கண்டுபிடித்தது ஆடுதுறை விவசாய ஆராய்ச்சிப் பண்ணைதான்; ஆனால், தருமபுரி மாவட்ட மண்ணிலும் 'ஜே.ஜே.92' அமோகமாக விளை கிறதாம்- இதைப் பையூர் ஆராய்ச்சி நிலையத்தார் தெரிவித்திருக்கிறார்கள்.



# வீர வரலாறு கூறும் நடுகற்கள்



புலவர் கி. நரேந்திரன்

காவிரியின் கானல் வரிகளால் இயற்கைக் கவின் கொஞ்சும் காட்சிகளும், குறிஞ்சியும் முல்லையும் மருதமும் ஒருங்கே அமைந்த மாட்சிகளும் காவியம் பாடிடக் கருப்பொருள் குவித்திடும் மாவட்டம் தருமபுரி மாவட்டம்.

இப்பகுதி தமிழகத்தின் முகப்புப் பகுதியாக இலங்கு வதால், பிற பகுதியினர் நுழைகின்ற வாயிலாகத் திகழ்ந்தது. எத்தனை மன்னர்கள் கலை தவழும் இப் பகுதியைக் கொலை தவழும் களமாக்கினர்.

இத்தனை மன்னர்களும் இப்பகுதியைத் தம் ஆட்சிக்கு உட்படுத்த எத்தனைப் போர்களை நடத்தியிருக்கிறார்கள். அத்தனைப் போர்களுக்கும் ஈடுகொடுத்து வரலாற்றைத் தன்னகத்தே கொண்டது தகடூர் என்னும் தருமபுரி மாவட்டம். அதனால் வீர வரலாற்றுக்கு எடுத்துக் காட்டாக இம்மாவட்டத்தில் வீர நடுகற்கள் ஏராளமாக உள்ளன. தமிழக வரலாற்றையே மாற்றியமைக்கக் கூடிய வகையில் அரிய செய்திகளை இந்த நடுகற்கள் நமக்குத் தெரிவிக்கின்றன.

தருமபுரி மாவட்டம் முழுவதும் பரவிக் கிடக்கும் ஏராளமான நடுகற்களில், அழிந்துபோனது போக நல்ல நிலையில் உள்ள நடுகற்களைத் தமிழ்நாடு அரசு தொல் பொருள் ஆய்வுத்துறையும், தருமபுரி மாவட்ட வர லாற்றுப் பேரவையும் படியெடுத்துள்ளன. சில நடுகற்கள் தருமபுரியில் உள்ள அருங்காட்சியகத்தில் வரலாற்றுப் பேரவையால் அளிக்கப்பட்டு பாதுகாக்கப்படுகின்றன.

### நடுகல் இலக்கணம்

''காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்
சீர்த்தகு சிறப்பிற் பெரும்படை வாழ்த்தலென்
திருமூன்று வகையிற் கல்லொடு புணர''

- என்று நடுகல் என்பது என்ன என்பதற்குத் தொல் காப்பியம் நமக்கு இலக்கணம் பகர்கிறது. பழங்காலத்தில் மாற்றானொடு பொருது இறந்த மன்னர்களுக்கும், வீரர்களுக்கும் வீரக்கல் நட்டு வழிபடுவது வழக்கம்.

நடுகல்லில் இறந்துபட்ட மறவனின் பெயரும், சிறப்பும், பெற்ற வெற்றிகளும், போர் நடந்த விவரமும் குறிக்கப்படுகிறது என்பதை

'ஆடவர்
பீடும் பெயரும் எழுதி அதிர்தொறும்
பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்'

- என அகநானூற்றுப் பாடல் தெளிவாகச் சொல் கிறது.

இத்தகு நடுகல்லைத் தவிர வேறு தெய்வம் இல்லை யெனத் தமிழர் நம்பினர். அதனைப் புறநானூற்றின் 335-ஆம் பாடல் நமக்குக் காட்டுகிறது.

### நடுகல் அமைப்பு

புறமுதுகு காட்டா வீரவிழுப்புண்பட்டு, சிறந்த முறையில் போரிட்டு வீரமரணம் அடைந்த வீரர்களுக்கு எடுத்த நடுகற்கள் மூன்று நிலைகளை உடையதாக உள்ளன. நடுகல்லின் கீழ்ப்பகுதியில் போர்க்காட்சியும், நடுப்பகுதியில் போரில் பட்டு வீர சுவர்க்கம் புகும் வீரனைத் தேவமாதர் தாங்கிச் செல்லும் காட்சியும், மேல்பகுதியில் அவ்வீரனின் சமயநிலையை உணர்த்த சிவன், விஷ்ணு சின்னமும் வடிக்கப்பட்டுள்ளன.

நடுகற்களில் உருவம் அமைக்கப்பட்ட முறையானது முதலில் கோட்டு உருவங்களையும், பின்னர் சிறிது சிற்ப வடிவமாகவும் பின்னர் புடைப்புச் சிற்பங்களாகவும் வடிக்கப்பட்டன. அவ்வாறு அமைக்கப்பட்ட நடுகற் களைப் பண்டைய, இடைக்கால, பிற்கால நடுகற்கள் என மூவகைப்படுத்தலாம்.

### இருளப்பட்டி நடுகற்கள்

தருமபுரி மாவட்டம் அரூருக்கு அருகில் உள்ள இருளப்பட்டியில் (பாப்பம்பாடி) கிடைத்த இரண்டு நடுகற்கள் மிகவும் தொன்மையானவை. இதனைக் கண்டு பிடித்தவர் துரிஞ்சிப்பட்டி ஆசிரியர் புது.போ.

வெங்கடராமன் அவர்கள். இந்த நடுகற்கள் தமிழக வரலாற்றாய்விற்கும், தொல்லெழுத்தாய்விற்கும் சிறந்த ஆதாரங்கள் என்றும், இக்கற்களில் உள்ள கல்வெட்டுக்கள் தமிழ், தமிழ்வட்டெழுத்து ஆகிய இருவகை எழுத்துக்களிலும் அமைந்துள்ளன. அதனால் தென்னிந்தியத் தொல்லெழுத்தியலைப் படித்தறியச் சிறந்த கருவூலம் என்றும் தமிழக அரசின் தொல்பொருள் ஆய்வுத் துறையின் மேனாள் இயக்குநர் திரு இரா. நாகசாமி அவர்கள் கூறியுள்ளார்.

இந்த நடுகற்களை அவ்வூர் மக்கள் வேடியப்பன் என்று அழைக்கின்றனர். ஒரு நடுகல்லில் வீரன் சினத்துடன் போரிடும் காட்சி சித்திரிக்கப்பட்டுள்ளது. அவனின் வலக் கையில் வாளும், இடக் கையில் கேடயமும் உள்ளன.

மற்றொரு நடுகல்லில் இரண்டு வீரர்களின் உருவங்கள் வடிக்கப்பட்டுள்ளன. அவர்களின் வலக் கையில் வாளும், இடக் கையில் கேடயமும் உள்ளன. ஒவ்வொருவரின் வலக் கைகளின் கீழேயும் தனித்தனியாகக் கல்வெட்டுக்கள் உள்ளன. அவை அவர்களின் வீரச் செயல்கள் பற்றிக் கூறுகின்றன.

**முதல் வீரனின் கல்வெட்டு:**

"வாணவரும் அரைசரு சேவகன் உழமுனுகன் மகன் விசயமங்கல மாண்ட விண்ணப் பேரேனாதி கல்"

**இரண்டாம் வீரனின் கல்வெட்டு :**

"விண்ணப் பேரேனாதி சேவகன் கொற்றந்தை கோடன் கல்"

முதல் நடுகல்லிலுள்ள கல்வெட்டால் மூன்று அரசர்கள் அறியப்படுகிறார்கள். கோவிசைய விண்ணவர்மன் இந்த அரசன் காலத்தில்தான் இந்த நடுகல் எடுக்கப்பட்டது. குருவுடையூர் நாட்டை ஆளும் கங்க மன்னன்; இந்த மன்னன் மீதுதான் படையெடுப்பு நடந்தது. கங்கமன்னனைப் பாதுகாக்க வந்த வாண அரசன். இந்த அரசன்தான் போரில் இறந்துபட்டான்.

இரண்டாவது கல்லிலுள்ள கல்வெட்டால் வாணவருமனின் படையில் பணியாற்றும் உழமுனுகன் மகன் விசயமங்கலத்தை ஆண்ட விண்ணப் பேரனாதி என்பதும், விண்ணப் பேரனாதியிடம் படையில் பணியாற்றும் கொற்றந்தை கோடன் என்பதும் தெரியவருகிறது. இவர்கள் வாண அரசனின் படைத்தலைவர்களாக இருக்கலாம். இவர்களும் இப்போரில் இறந்துபட்டனர்.



அகநானூற்றின் 301-ஆவது பாடலை அதியன் விண்ணத்தன் என்ற புலவர் பாடியுள்ளார். விண்ணத்தன் என்பவன் அதியனின் மகனாக இருக்கலாம். இந்த நடுகற்கள் அதியன் ஆண்ட நாட்டில் இருப்பதாலும், இதில் கூறப்பட்டுள்ள அரசன் கோவிசைய விண்ணவர்மன் காலத்தில் இந்த நடுகற்கள் நடப்பட்டிருப்பதும் ஆய்வுக்குரியதாகும். இந்த விசைய விண்ணவர்மன் அதியன் விண்ணத்தனின் வழிவந்தவனாகவும் இருக்கலாம்.

கங்க அரசர்கள் கி.பி. 5-ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் ஆட்சி செய்தார்கள் என வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகிறார்கள். இந்த நடுகற்களினால் நாம் அறியும் செய்தி குருவகையூரை ஆண்ட கங்க மன்னன் மீது படையெடுத்து வந்தபோது கங்க மன்னனுக்கு வாண அரசன் உதவ வந்தான். அந்தப் போரில் அவனும், அவனின் படைத்தலைவர்களும் மாண்டனர் என்பதாகும். இதனால் விண்ணவர்மன், கங்க மன்னன், வாணவர்மன் ஆகிய மூன்று அரசர்களும் நட்பு பூண்டிருந்தனர் என்பது தெளிவாகிறது.

இந்தப் போரில் படையெடுத்து வந்த மன்னன் யார்? போரின் முடிவு என்ன? என்பது தெரியவில்லை. இருப்பினும் தமிழகத்தின் இருண்டகாலம் எனக் கூறப்படும் கி.பி.4,5-ஆம் நூற்றாண்டுகளின் வரலாற்றினை அறிய இந்த நடுகற்கள், நமக்குச் சிறிதே உதவுகின்றன.

பாலவாடி நடுகற்கள்

தருமபுரி மாவட்டம் பாலவாடி கிராம ஊரின் நேர் கிழக்கே ஏரிக்கரையை அடுத்த பெருமாள் கோயிலின் முன்புறம் இரு நடுகற்கள் உள்ளன. நீண்ட சதுரக்கருங்கற்களினால் வீரர்களின் உருவம் போர் செய்யும் நிலையில் அழகாகச் செதுக்கப்பட்டுள்ளன. கையில் வில்லும் அம்பும் ஏந்திப் பகைவரை எதிர்க்கின்ற பாவனையில் அமைந்துள்ள சிற்பங்கள் உன்னதமாக உள்ளன. ஒரு சிற்பத்தின் தலையில் நீண்ட சடை காணப்படுகிறது. அந்தக் காலத்தில் வீரர்கள் பூச்சூடி, போருக்குச் சென்றனர் எனப் புறப்பொருள் வெண்பாமாலை கூறுவதற்கு இது சான்றாகும். தலைப்புறத்தில் வட்டெழுத்தில் வீரரின் பீடும், பெயரும் பொறிக்கப்பட்டுள்ளன.

வடபுறக் கல்லினால் அறியப்படும் செய்தி பரைகளாடர் என்பவர் தகடூர் நாட்டின் படையோடு போரிட்டு இறந்துபட்டார் என்பது தெரிகிறது. அதனால், பாலவாடி தகடூர் நாட்டின் ஆதிக்கமின்றி தனி அரசனால் ஆளப்பட்டது என்பதும், எக்காரணம் பற்றியோ தகடூர் நாட்டின் படைகளுக்கும் பாலவாடி படைகளுக்கும் போர் நிகழ்ந்துள்ளன. அதில் வீரத்துடன் போரிட்ட பரைக்களாடனாருக்கு நடுகல் எடுக்கப்பட்டள்ளது. இதன் காலம் கி.பி.7 அல்லது 8-ஆம் நூற்றாண்டாக இருக்கலாம்.

தென்புறக்கல்லால் அறியப்படும் செய்தி ஸ்ரீ புருசவர்மன் கங்க அரசனின் 10-ஆவது ஆட்சியாண்டில் இக்கல்வெட்டு எடுக்கப்பட்டுள்ளது. இதில் பாலவாடிக் கோட்டையைப் பெரும்பாண முத்தரைசர் என்ற குறுநில மன்னன் ஆட்சி செய்துள்ளார். பாலவாடிக்குக் கிழக்கே 10 கி.மீ. தொலைவிலுள்ள இன்றைய சோகத்தூர் (போகற்றூர்) கள்வர்கள் பாலவாடி ஆநிரைகளைக் கவர்ந்து சென்றபோது போர் நடந்துள்ளது. அந்தப் போரில் கோட்டையைக் காத்துநின்ற சாத்தனார் என்பவர் தீரத்துடன் போரிட்டு மாண்டார். அவருக்காக இக்கல் எடுக்கப்பட்டுள்ளது.

புறப்பொருள் வெண்பாமாலை, மாற்றானை தன் நாட்டு எயிலுக்குள் புகாமல் மதிலைக் காத்தல் நொச்சித்திணை என இலக்கணம் கூறுகிறது. இங்குச் சாத்தனார் தன் நாட்டுக் (பாலவாடி) கோட்டையைக் காக்க வீரத்துடன் போரிட்டதால் நொச்சிச் சாத்தனார் எனச்சிறப்புச் செய்யப்பட்டுள்ளார்.

**மகேந்திரவர்மன்**

பலிஞ்சர அள்ளியில் கிடைத்த நடுகல்லால் மகேந்திரவர்மன் தகடூரை ஆண்ட செய்தியை அறிய முடிகிறது.

இக்கல்வெட்டு வட்டெழுத்தால் அமைந்துள்ளது. மெய்யெழுத்துக்களுக்குப் புள்ளிவைத்து எழுதப்பட்டுள்ளது சிறப்பம்சமாகும். மகேந்திரவர்மனின் ஐந்தாவது ஆட்சியாண்டில் காடந்தைகள் என்பவர்களுக்கும், புதுப்பள்ளிகள் என்பவர்களுக்கும் நடந்த போரில் காடந்தைகள் படைத்தலைவன் எருமெதிகாரி என்ற வீரன் இறந்துபட்டான். அவனுக்காக இக்கல் எடுக்கப்பட்டுள்ளது.

**நவகண்டம்**

போரில் வெற்றி பெறுவதற்காக வீரர்கள் தம் உறுப்புகளை வெட்டி, கொற்றவைக்குக் காணிக்கையாகப் படைத்து வழிபட்ட செய்தியை இலக்கியங்கள் தெளிவாகக் காட்டுகின்றன.

அந்த இலக்கியங்களுக்குச் சான்றாகக் கிருட்டினகிரிக்கு அருகில் குந்தாணி என்ற இடத்தில் கண்டெடுக்கப்பட்ட நடுகல் விளங்குகிறது. இந்தக் கல்லில் பலிக்கொடை புரியும் காட்சி அமைந்துள்ளது. ஒரு வீரன் நின்றவாறு தனது கழுத்தைத் தானே வெட்டிக் கொள்வதும், பக்கத்தில் குதிரைமீது அமர்ந்த மற்றொரு வீரன் அந்த வீரனின் தலையைத் தட்டில் தலைக்கு மேல் தாங்கிச் செல்வதையும் காணலாம்.

காவேரிப்பட்டிணம் அருகிலுள்ள பெண்ணேசுவர மடத்தில் நவகண்ட நடுகற்கள் பெரிதும் காணப்படுகின்றன. நவம் என்றால் ஒன்பது; கண்டம் என்றால் துண்டு. கை,கால்,மூக்கு,காது,கண் போன்று உடலை ஒன்பது துண்டங்களாக வெட்டி இறுதியில் தன் தலையையும் வெட்டித் துர்கைக்குப் படைப்பதாகும்.

**அரிய நடுகற்கள்**

பிக்கன அள்ளியில் கண்டெடுக்கப்பட்ட நடுகல் ஒருவீரன் புலியுடன் டும்போர் புரிந்து, அதன் வாயில் வாளைப் பாய்ச்சிக் கொல்கிறான். அவனுடன் அவனின் வேட்டை நாய்களும் புலியை எதிர்த்துப் பாய்கின்றன. போரில் வீரனும் இறக்கிறான். அவனின் வீரத்தைப் பாராட்டி எடுக்கப்பட்ட கல்லே புலிகுத்துப்பட்டான் கல் ஆகும். புலியுடன் வீரன் போரிடுவதும் - நாய்கள் தாக்குவதும் சிறப்பாகச் சித்திரிக்கப்பட்டுள்ளன.

**★ சுவாமி விவேகானந்தர் 1901-இல் தர்மபுரிக்கு வருகை தந்திருக்கிறார்; அதன் நினைவாகவே விவேகானந்தர் கல்விச் சங்கம் இங்கே உருவாயிற்று. 'விவேகானந்தர் டவுன் ஹால்' என்கிற இடமே அது!**

இட்டன அள்ளியில் கிடைத்த நடுகல் ஒரு வீரன் பாய்கின்ற காட்டுப்பன்றியுடன் போரிட்டு அதனைக் கொன்று தானும் இறக்கிறான். அவனின் வீரத்தைப் போற்றி எடுக்கப்பட்ட நடுகல்லே பன்றிகுத்தி பட்டான் கல் ஆகும்.

பூசாரியும் போர் புரிந்தான் என்பதைப் போச்சம்பள்ளியில் கிடைத்த நடுகல் நமக்குக் காட்டுகிறது. அதில் வீரனின் வலக் கையில் வாளும், இடக் கையில் கோயில் மணியும் உள்ளது. அருகில் கரகம் ஒன்றும் வடிக்கப்பட்டுள்ளது. அதனால் மதப் பூசல் ஏற்பட்டு நடந்த போரில் பூசாரிகளும் கலந்துகொண்டு போரிட்டுள்ளனர் என்பதை அறியமுடிகிறது.

'காதல் கணவனொடு கனைஎரி மூழ்கும்
மாதர் மெல்லியல் மரபுரைத் தன்று'

-என்ற புறப்பொருள் வெண்பாமாலைக்குச் சான்றாக தருமபுரியில் காமாட்சியம்மன் தெருவிலுள்ள கோயிலொன்று தீபாஞ்சியம்மன் என்னும் பெயரில் அழைக்கப்படுகிறது. இதனால் கற்புத் தெய்வமாகக் கணவன் இறந்தபின் உயிர் வாழாது தீயில் தன்னை மாய்த்துக் கொண்ட பெண்ணின் நினைவாகக் கல்நட்டு வழிபட்டு வருவதை அறியமுடிகிறது.

மேலே குறிப்பிட்டுள்ளது போன்ற ஏராளமான நடுகற்கள் தருமபுரி மாவட்டம் முழுவதும் பரவிக்கிடக்கின்றன. இத்தகு நடுகற்களினால் தகடூர் நாட்டின் வரலாற்றை மட்டுமன்றித் தமிழ்நாட்டின் வரலாற்றையே அறிய முடிகிறது. வீரத்தின் விளை நிலம் தகடூர் என்பது தெளிவாகிறது.

தகடூர் மாவட்ட வரலாற்றுப் பேரவையின் வாயிலாய், பல அரிய நடுகற்கள் கண்டெடுக்கப்பட்டு, தருமபுரியில் அமைக்கப்பட்டுள்ள அரும்பொருட்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன. வரலாற்றுப் பேரவையால் அமைக்கப்பட்ட காட்சியகம் தற்பொழுது தமிழக அரசின் தொல்பொருள் ஆய்வுத்துறையால் ஏற்கப்பட்டு சிறப்பான வகையில் கல்வெட்டுகளைப் பாதுகாத்து வருகிறது. இந்த அருங்காட்சியகம் தருமபுரி பேருந்து நிலையத்தின் அருகில் கிருட்டிணகிரி செல்லும் நான்கு சாலை சந்திப்பில் அமைந்துள்ளது.

**குறிப்பு**

இக்கட்டுரை எழுதுவதற்குத் துணைபுரிந்தவை தொல்பொருள் ஆய்வுத்துறை மேனாள் இயக்குநர் திரு இரா. நாகசாமி, இந்நாள் இயக்குநர் திரு நடன. காசிநாதன் ஆகியோர்எழுதிய தகடூர் நடுகற்கள் பற்றிய கட்டுரை, 1979 மே - திங்களில் தருமபுரியில் நடைபெற்ற கல்வெட்டுப் பயிற்சியில் தொல்பொருள் ஆய்வாளர்கள் நிகழ்த்திய சொற்பொழிவுக் குறிப்புகள், தருமபுரி மாவட்ட அரும்பொருட்காட்சியகத் திறப்பு விழா மலர்-1979.

Phone No. 2363, 2841, 3524

With
Best
Compliments
From

KARTHIK AGENCIES

Distribution for Bharat Gas of
BHARAT PETROLIUM CORPORATION LTD.,
Bharat Gas for Modern Cooking.



# முதல்வர் பிறந்த நாளையொட்டி 786 கைதிகள் விடுதலை!

## சிறைவாசிகள் மனம் திருந்தி மறுவாழ்வு பெற முதல்வர் ஆர்வம்!

தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தலைமையில் புதிய அரசு அமைக்கப்பட்டு நல்லாட்சி நடைபெற்று வருவதை வரவேற்றும் மற்றும் அவர்களுடைய பிறந்த நாளை முன்னிட்டும் 1992-ஆம் ஆண்டு நல்லெண்ணம் மற்றும் மனித நேயத்தின் பேரில் 242 சிறைவாசிகளுக்கு முன் விடுதலையும், 713 சிறைவாசிகளுக்குத் தண்டனைக் குறைப்பும் வழங்கியதன் அடிப்படையில், இந்த ஆண்டும் கருணை காட்டி தண்டனைக் குறைப்பு வழங்கி பொது மன்னிப்பு அடிப்படையில் தங்களை முன் விடுதலை செய்யுமாறு கைதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சிறைவாசிகள் மனம் திருந்தி மறுவாழ்வு பெற வேண்டுமென்பதில் ஆர்வமும் அக்கறையும் கொண்டுள்ள தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் கைதிகளுடைய கோரிக்கையை மனித நேயத்தோடு ஆய்வு செய்ய ஆணையிட்டுள்ளார். அதற்கிணங்க, 18.12.78 அன்று அல்லது அதற்குப் பின்னரோ ஆயுள் தண்டனை பெற்ற 12 ஆண்டுகள் முழுமையாகச் சிறைத் தண்டனை அனுபவித்த ஆண் ஆயுள் கைதிகளை மன்னித்து முன் விடுதலை செய்ய அரசு ஆணையிட்டுள்ளது. 18.12.78-க்குப் பின் ஆயுள் தண்டனை பெற்று 10 ஆண்டுகள் முழுமையாகச் சிறைத் தண்டனை அனுபவித்த பெண் கைதிகளையும் மன்னித்து முன் விடுதலை செய்யவும் ஆணையிடப்பட்டுள்ளது.

மேலும், கொலை, களவு, கள்ளக்கடத்தல் போன்ற குற்றங்களுக்காகத் தண்டனை பெற்றவர்களைத் தவிர்த்து, ஏனைய குற்றங்களுக்காகச் சிறைத் தண்டனை அனுபவித்து வரும் பெண் கைதிகளுக்கு முழு தண்டனைக் குறைப்பும், ஆண் கைதிகளுக்கு 6 மாதச் சிறைத் தண்டனைக் குறைப்பும் வழங்குமாறும் ஆணையிடப்பட்டுள்ளது.

இதனால், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் பிறந்த நாளான 24.2.1993 அன்று இரண்டு பெண் கைதிகள் உட்பட 134 ஆயுள் தண்டனை பெற்ற கைதிகள், விடுதலை ஆனார்கள்.

ஆயுள் தண்டனையைத் தவிர்த்து மற்ற தண்டனை பெற்றுள்ள 23 பெண் கைதிகளும் இந்நாளில் விடுதலை ஆனார்கள். ஆயுள் தண்டனையைத் தவிர்த்து மற்ற தண்டனை பெற்றுள்ள 629 ஆண் கைதிகளும் தண்டனைக் குறைப்பு பெற்று விடுதலை ஆனார்கள். பயனடைந்த சிறைவாசிகளின் மொத்த எண்ணிக்கை 786.

டாக்டர் புரட்சித்தலைவியின் கருணை உள்ளத்தைப் பாராட்டி, பயன்பெறும் சிறைவாசிகள் மனம் திருந்தி மறுவாழ்வு பெற்று புதிய வாழ்க்கையினைத் தொடங்குவார்கள் என அரசு விழைகிறது.

## சரியான தமிழ்ச் சொற்கள்

Absentee landlord - செல்லா நிலக்கிழார்
Active service - செயற்படு பணி
Advantage - ஆ பயன்
Adviser to the Governor - ஆளுநரின் ஆய்ந்துரைஞர்
Agenda - நிகழ்ச்சிப் பட்டியல்
Agreeable diet - மாறுபாடில்லா உண்டி
Air-condition - வளிச்சீர்மை (A/C. வ/சீ.)
Alarm time-piece - எழுப்பு மணிப்பொறி
Amity - நல்லுறவு
Antenna - கவர்கம்பி
Artisan plot - அளவு மனை
Aspiration - உயர்வுள்ளல்
Assessment - மதிப்பீடு, வரிவிதிப்பு
Assignment - உரிமையளிப்பு, குறித்தளிப்பு, நல்குபணி
Attention - நிமிர்ந்து நில்
Auto - தானி
Autograph - வாழ்த்தொப்பம்
Avenue - அளாவம், நிழற்சாலை
Balcony - காண்பு மாடம்
Banner - பெயர்ச்சீலை
Bill of lading - கலச் சரக்கேற்றுச் சீட்டு
Block - படக்கட்டை
Blood pressure - குருதி அழுத்தம்
Bonus - பூரிப்பு ஊதியம்
Brain wash - உரையேற்றுதல்
Brief case - குறும் பேழை

—நன்றி: 'ஆட்சி மொழி அருஞ்சொற்கள்'

**TNPSC**

விளம்பர எண். 8/93

தமிழ்நாடு பொதுப்பணியில் சமூகநலத்துறையில் 18 சிறார் மேம்பாடு திட்ட அலுவலர்/வட்ட திட்ட ஊட்டச்சத்து அலுவலர்/சிறப்பு அலுவலர் (பங்க் ஸ்டால்) (Child Development Project Officer/Taluk Project Nutrition Officer/Special Officer (Bunk Stall) பதவிகளுக்கு நேரடித் தேர்வின் மூலம் நியமனம் செய்ய விண்ணப்பங்கள் பெண் வேட்பாளர்களிடமிருந்து மட்டும் 22.3.1993 அன்று மாலை 5.45 வரை வரவேற்கப்படுகின்றன.

**சம்பளம்:** மாதம் ஒன்றுக்கு ரூபாய் 1820-60-2300-75-3200

ஒதுக்கீடு:

| | | |
|---|---|---|
| ஆதிதிராவிட வகுப்பினர், பழங்குடி வகுப்பினர் (ஆ.தி.வ./ப.வ.) | : | 3 |
| மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர் (மி.பி.வ./சீ.ம.) | : | 3 |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (பி.வ.) | : | 5 |
| பகிரங்கப் போட்டி | : | 7 |

**குறிப்பு:** இப்பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளைப் பெற்றிருந்து, குறைந்தபட்ச மதிப்பெண்களைப் பெறுவதன் மூலம் தெரிவுக்குத் தகுதியானவராகக் கருதப்படும் ஆதரவற்ற விதவைகள், அவரைவிட அதிக மதிப்பெண்களைப் பெற்றிருப்பவர்களைக் காட்டிலும் முன்னுரிமை வழங்கப்பட்டு தெரிவு செய்யப்படுவார்கள்.

**விளக்கம்:** 'ஆதரவற்ற விதவை' என்பது, வாழ்வதற்குத் தனக்கென்று எந்தவொரு வழியும் இல்லாதவரும், பட்டினியிலிருந்து தன்னைக் காப்பாற்ற எந்தவொரு ஆதரவாளரும் இல்லாதவரும் ஆன விதவையைக் குறிப்பதாகும்.

**வயது:** 1.7.1993 அன்று 30 வயதிற்குக் குறைவாக.

**குறிப்பு:** ஆதிதிராவிட வகுப்பினர், பழங்குடி வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வயது வரம்பு இல்லை.

(சலுகைகள் பற்றிய மேலும் சில விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.)

**தகுதி:** (15.2.1993 அன்றுள்ளபடி): கீழ்க்காண்பவை அல்லது அவைகளுக்கு இணையானவை:

A degree in Nutrition or Home Science

or

A degree with a Post Graduate Diploma in Rural Services awarded by the Gandhigram University.

ஆதரவற்ற விதவைகள், தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர், நாற்பது வயதிற்குக் குறைவாக உள்ள பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட மற்றும் பணியிலிருக்கின்ற தற்காலிக மாநில அரசுப் பணியாளர்கள் போன்றவர்களுக்கு வயது மற்றும்/அல்லது தகுதியிலிருந்து அளிக்கப்படும் சலுகைகள் தேர்வாணையத்தின் 'பணி வேட்பாளர்களுக்கான விதிமுறைகளில்' தரப்பட்டுள்ளன. (ஆதிதிராவிட வகுப்பினர்/பழங்குடி வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர் போன்றவர்களுக்கு அளிக்கப்படும் விண்ணப்பக் கட்டணச் சலுகைகளும் தேர்வாணையத்தின் 'பணி வேட்பாளர்களுக்கான விதிமுறைகளில்' தரப்பட்டுள்ளன. (பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு அளிக்கப்படும் சலுகைகள் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினருக்கும் பொருந்தும்).

விண்ணப்பப் படிவமும், நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு எழுத்து மூலம் கோரிப் பெற்றுக் கொள்ளலாம். கோரிக்கைகள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ, பதவியின் பெயர் மற்றும் விளம்பர எண் ஆகியவை குறிப்பிட்டு எழுதப்பட்டு - செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு வழங்கக்கூடிய 1.2.93 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10), சென்னை அண்ணா சாலை தபால் அலுவலகத்தில் செலுத்தத்தக்க கோடிட்ட அஞ்சல் ஆணை அல்லது பாரத ஸ்டேட் வங்கியில் (State Bank of India) ஏதாவதொரு கிளையில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையச் செயலாளருக்கு வழங்கக்கூடிய 1.2.1993 அன்றோ அல்லது அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட, சென்னை-600 006, ஆயிரம் விளக்கு பாரத ஸ்டேட் வங்கியில், செலுத்தத்தக்க - பத்து ரூபாய்க்கான (ரூ.10-) 'கேட்புக் காசோலை' (Demand Draft)-யுடனும் சுய விலாசம் எழுதிய உறையுடனும் (26 x 12 செ.மீ.) அனுப்ப வேண்டும். கோரிக்கைகள் பிற மொழியில் இருக்குமாயின் அத்துடன் ஆங்கில மொழி பெயர்ப்பும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டா.

DIPR/265/MS/93





# எரிபொருள் சிக்கனத்திற்கு ஏற்ற முறை

கற்களைக் கொண்டு நெருப்பு உண்டாக்கிய மனிதன் பிறகு வீட்டு எரிபொருளுக்கு இயற்கை வளமான மரங்களைப் பயன்படுத்தினான். பிறகு மண்ணெண்ணையும் தொடர்ந்து எரிவாயுவும் பயன்படுத்தப்பட்டது. திரவப்படுத்தப்பட்ட பெட்ரோலிய வாயு சிலிண்டர்களில் அழுத்தத்தில் நிரப்பப்பட்டு சமையலுக்கு 'எரிவாயு'வாகப் பயன்படுத்தப்படுகின்றது. நகரத்தின் வாழ்க்கை முறையும் கிராம வாழ்க்கை முறையும் பெரிதும் வேறுபடுகின்றன. இன்றும் கிராம மக்கள் மரத்தை மட்டுமே எரிபொருளாகப் பயன்படுத்துகின்றனர். இந்நிலையில்தான் 'சாண எரிவாயு' முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

உயிரினக் கழிவுப்பொருளில் இருந்து எரிசக்தி உற்பத்தி செய்வது மாற்று முறையாக உருவாக்கப்பட்டது. மாட்டுச் சாணம் கிராமங்களில் எருவாகப் பயன்படுத்தப்படுகின்றது. கிடைக்கும் மொத்தச் சாணத்தில் கால்பகுதி அளவுதான் எருவாக்கப்படுகின்றது. மற்றொரு பகுதி எருவாட்டியாக எரிபொருளாகப் பயன்படுத்தப்படுகின்றது. இதே சாணத்தைச் சாண எரிவாயு முறையில் பயன்படுத்தினால் கூடுதல் எரிசக்தி கிடைக்கும்.

இந்தியாவில் ஓராண்டு கிடைக்கும் மாட்டுச் சாண அளவு 1,335 மில்லியன் டன் ஆகும். இதில் 265 மில்லியன் டன் சாணம் நேரடி எரிபொருளாகப் பயன்படுத்தப்படுகின்றது. மொத்த சாணமும் எரிவாயு முறைப்படி பயன்படுத்தப்பட்டால், ஓராண்டுக்கு 22,425 மில்லியன் லிட்டர் மண்ணெண்ணெய் சேமிக்கப்பட வாய்ப்புள்ளது.

இந்தியாவில் 1939-இல் சாணத்தை எரிவாயு முறையில் பயன்படுத்தும் செயல் திட்டம் தொடங்கப்பெற்றது. 1961-இல் உத்திரப்பிரதேசத்தில் கோபர் வாயு ஆராய்ச்சி நிலையம் தொடங்கப்பெற்றது. 1971-இல் ஆயிரக்கணக்கான சாண எரிவாயு அமைப்புகள் உருவாக்கப்பட்டன. 1974-75-இல் கதர் மற்றும்கிராமத் தொழில்கள் கமிஷன் 10,000 சாண எரிவாயு அமைப்புகளை உருவாக்கியது.

1981-82-இல் குடும்ப உபயோகச் சாண எரிவாயு முறையைப் பரவலாக்க ''உயிரினக் கழிவு வாயு அபிவிருத்திக்கான தேசிய செயல் திட்டம்'' தொடங்கப்பெற்றது. இத்திட்டத்தின் கீழ் 1981-82 முதல் 1990-91 வரை 14.03 இலட்சம் கிராமக் குடும்பங்கள் கொண்டுவரப்பட்டன.

1991-92-இல் ரூ.64 கோடி பட்ஜெட் மதிப்பீட்டில் 1,47,000 சாண எரிவாயு அமைப்புகளை உருவாக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. சாண எரிவாயு அமைப்பை உருவாக்க அரசு மானியம் வழங்குகின்றது. ரூ.1700 முதல் ரூ.7300 வரை எரிவாயு அமைப்பின் அளவு, எந்த மாநிலம், பொருளாதார நிலை முதலான அடிப்படைகளைப் பொறுத்து மானியமாக வழங்கப்படுகின்றது.

1991-92-இல் தமிழ்நாட்டுக்கான சாண எரிவாயு அமைப்பை உருவாக்கும் இலக்காக 8000 நிர்ணயிக்கப்பட்டது. ஏப்ரல் - டிசம்பர் 91 வரையான காலத்துக்கான இலக்கு 4000 ஆகும். இது முழு அளவில் நிர்மாணிக்கப்பட்டுவிட்டது.

Phone: 2365

Best Compliments From



**SRI ANJANEYA BLUE METAL**

**87/25 Krishnapuram Village**
**K. Pethathalapalli**
**Krishnagiri**
**Dharmapuri District**

**Prop: M. KARTHIKEYAN**

கோயம்புத்தூர் உட்பட 13 இடங்களில் வட்டார உயிரினக் கழிவு எரிவாயு அபிவிருத்தி மற்றும் பயிற்சி மையங்கள் உள்ளன. ஒட்டு மொத்தத் தொழில் நுட்பம், பயிற்சி, விளம்பரம் ஆகியவற்றை இந்த வட்டார மையங்கள் மாநில அரசின் துறைகளுக்கு வழங்குகின்றன.

இதுவரையிலான எரிவாயுக் கலங்கள் எரிவாயு தயாரிக்க மட்டுமே பயன்பட்டன. எரிவாயுவின் கழிவுகள் பயனற்றவையாக ஒதுக்கப்பட்டன. ஆனால், தற்பொழுது சாண எரிவாயுக் கலத்தில் இருந்து வரும் கழிவானது நல்ல உரச் சத்தைக் கொண்டுள்ளது. இரசாயன உரங்களுக்கு இந்தக் கழிவை உபயோகப்படுத்தலாம். சாணத்தில் எந்த அளவு உரச்சத்து உள்ளதோ அதே அளவு உரச்சத்து கழிவிலும் உள்ளது. நைட்ரஜன், பாஸ்பரஸ், பொட்டாசியம் அளவுகள் கழிவிலும் அப்படியே திரும்பக் கிடைக்கின்றன. அம்மோனியா நைட்ரஜன் என்னும் உரச்சத்து 70 சதவிகிதம் வரை கூடுதல் அடைகின்றது.

சாண எரிவாயுக் கலத்தில் இருந்து வரும் கழிவை நீரில் சரியான அளவில் கரைத்து அதில் பாசி வகைகளை வளர்க்கலாம். இதனால் நுண்ணுயிர்கள் பெருக்கமடைந்து நீரில் வாழும் மற்ற உயிர்களுக்கு உணவாகப் பயன்படுகின்றன. இவற்றைப் பயன்படுத்தி மீன்களின் உயிரி உணவாகிய டாஃப்னியா சிமிலிஸ் என்பதை வளர்க்கலாம். கழிவு நீரில் இந்த உயிரி 30-38 நாட்களில் 478-691 வரை பெருகுகின்றது. மேலும் இந்நீரில் இருந்து லெம்னா என்னும் நீரில் மிதக்கும் செடிகளை வளர்த்து அதன்மூலம் உயிர்க்கூளம் தயாரிக்க முடியும். உயிர்க்கூளம் புரதச்சத்து மிக்கதாக இருப்பதால் அதை மீன் உணவாகவும் பயன்படுத்தப்படலாம்.

பெட்ரோலிய மற்றும் இயற்கை எரிவாயு அளவு - தேவையை நிறைவு செய்யும் வகையில் இல்லை. ஏனவே, வாழ்வின் அனைத்துத் துறைகளிலும் மாற்றுச் சக்தி, மாற்று எரிபொருள் பயன்படுத்துவது இன்றியமையாத் தேவையாகும்.

—என். ரெங்கநாதன்

[illegible] இடங்களில் நான் வாழ்த்தப்படுகிறேன்; [illegible] இடங்களில் வசைகளைப் பெறுகிறேன். வசையால் நான் தாழ்ந்துவிடப் போவதில்லை; வாழ்த்தால் நான் உயர்ந்துவிடப் போவதுமில்லை; காரணம்- இறைவனிடம் உண்மையாக நடக்கிற நான் எவருக்கும் அஞ்சத் தேவையில்லை.

—காந்தியடிகள்




## தமிழ்நாடு மின்சார வாரியம்

### டெண்டர் அறிவிப்பு - COAL-10

தமிழ்நாடு மின்சார வாரியம் சார்பில் அதற்காக, கீழ்க்கண்டவற்றை வழங்குவதற்காக முத்திரையிடப்பட்ட டெண்டர்கள் இரண்டு பகுதி டெண்டர் முறையின் கீழ், நிர்ணயிக்கப்பட்ட முடிவு தேதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ கீழே கையொப்பமிட்டவரை வந்தடையும்படி வரவேற்கப்படுகிறது.

| | |
|---|---|
| பொருட்கள் பற்றிய விபரம் | : இரண்டு மில்லியன் மெட்ரிக் டன் இறக்குமதி செய்யப்பட்ட நீராவி நிலக்கரி (Steaming Coal) |
| விவரக் குறிப்பிடுகை எண் | : COAL-10 DATED 12.2.1993 |
| விவரக் குறிப்பிடுகை கட்டணம் | : A-தமிழ்நாட்டில் அமைந்துள்ள யூனிட்டுகளுக்கு<br>1. ரூ.1,000 நேரில் பெறுவதற்கு<br>2. ரூ.1,050 இந்தியாவிற்குள் தபால் மூலம் பெறுவதற்கு<br>B-தமிழ்நாட்டிற்கு வெளியே அமைந்துள்ள யூனிட்டுகளுக்கு<br>1. ரூ.1,000 நேரில் பெறுவதற்கு<br>2. ரூ.1,150 (CST ரூ.100 உட்பட) இந்தியாவிற்குள் தபால் மூலம் பெறுவதற்கு. |
| டேவணி டெப்பாஸிட் தொகை | : ரூபாய் ஒரு கோடி மட்டும். |
| டெண்டர் பெற்றுக் கொள்வதற்கான முடிவு தேதி மற்றும் நேரம் | : 10.3.93 அன்று 14.00 மணி |
| டெண்டர் திறப்பு நேரம் | : 10.3.93 அன்று 14.00 மணி. |
| டெண்டர் திறக்கும் இடம் | : இயக்குநர்/நிலக்கரி (COAL)<br>2-வது தளம், கே.ஆர்.ஆர். மாளிகை,<br>மேற்குப் பிரிவு, 800, அண்ணாசாலை,<br>மின்சார அவின்யூ,<br>சென்னை-600 002 |

விவரக் குறிப்பிடுகையின் நகலை, கட்டணத்தை ரொக்கம் அல்லது மணி ஆர்டர் மூலம் தலைமை உள் தணிக்கை அலுவலர், தமிழ்நாடு மின்சார வாரியம் முதல் தளம், கே.ஆர்.ஆர். மாளிகை, 800, அண்ணா சாலை, சென்னை-600 002 அவர்களுக்கு செலுத்தி, விவரக் குறிப்பிடுகை எண்ணைக் குறிப்பிட்டு, விஷயத்தைப் பொறுத்து ரொக்க ரசீது அல்லது மணி ஆர்டர் ரசீதை இயக்குநர்/நிலக்கரி, இரண்டாவது தளம், மேற்குப் பிரிவு, கே.ஆர்.ஆர். மாளிகை, 800, அண்ணா சாலை, சென்னை- 600 002 அவர்களுக்கு அனுப்பி, அத்துடன் முழு அஞ்சல் முகவரியையும் குறிப்பிட்டு, வேண்டுதல் மனு அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். டெண்டர்கள் மூன்று நகல்களில் கீழ்க் கையொப்பமிட்டவருக்குக் குறிப்பிடப்பட்ட முடிவுத் தேதி மற்றும் நேரத்திற்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

விவரக் குறிப்பிடுகை இயக்குநர்/நிலக்கரி, 2-வது தளம், மேற்குப் பிரிவு, கே.ஆர்.ஆர். மாளிகை, மின்சார அவின்யூ, 800, அண்ணாசாலை, சென்னை-600 002 அவர்கள் அலுவலகத்தில் 19.2.1993 முதல் 9.3.1993 வரை எல்லா வேலை நாட்களிலும் காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை பரிசீலனை செய்யப்படும்.

முடிவு தேதி மற்றும் நேரத்திற்குப் பிறகு பெறப்படும் டெண்டர்கள் பரிபூரணமாக நிராகரிக்கப்படும். தபால் மூலம் ஏற்படும் விவரக் குறிப்பிடுகை நகலின் இழப்பு மற்றும் காலத் தாமதத்திற்கு வாரியம் பொறுப்பு ஏற்காது. முடிவுத் தேதிக்குப் பிறகு கால நீடிப்பு அனுமதிக்கப்படமாட்டாது.

விவரக் குறிப்பிடுகையின் நகல்கள் 19.2.1993 முதல் விற்பனைக்குக் கிடைக்கும்.

டெண்டர்கள் சமர்ப்பிப்பதற்கான முடிவுத் தேதி அன்று விவரக்குறிப்பிடுகையின் நகல் விற்பனைக்கு வழங்கப்படமாட்டாது.

**தலைமைப் பொறியாளர் (எந்திரவியல்/நிலக்கரி)**

2-வது தளம், மேற்குப் பிரிவு,
800, அண்ணா சாலை NPKRR மாளிகை
சென்னை-600 002
டெலக்ஸ்: 041-7261; பேக்ஸ்: 91-044-831210.

DIPR/233/MS/93.

அலுவலர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. கேரளாவிலும் ஆந்திரப் பிரதேசத்திலும் உள்ள எண்ணெய்ப் பனை ஆராய்ச்சி நிலையங்களில் இவர்கள் இப்பயிற்சியைப் பெற்றனர்.

**எண்ணெய்ப் பனைக்கு எட்டாவது திட்ட கால ஒதுக்கீடு**

கேரளா, அந்தமான் நிக்கோபார் தீவுகள், மகாராஷ்டிராவின் கொங்கனப்பகுதி, கர்நாடகாவின் ஷிமோகா மாவட்டம், ஆந்திராவின் கிழக்கு கோதாவரி மாவட்டம் ஆகியவை எண்ணெய்ப் பனைச் சாகுபடி செய்வதற்கேற்ற இதரப் பகுதிகளாகும். எண்ணெய்ப் பனைச் சாகுபடியை ஊக்குவிக்க எட்டாவது திட்ட காலத்தில் ரூ.94 கோடி ஒதுக்கப்பட்டுஉள்ளது. இதன்படி 80,000 எக்டேர் நிலப்பரப்பில் எண்ணெய்ப் பனைச் சாகுபடி செய்யப்படும். நாட்டில் எண்ணெய்ப் பனைச் சாகுபடிக்கான ஒளிமயமான எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டால், எட்டாவது திட்ட காலத்தில் நாட்டின் மொத்த எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி 2.3 கோடி டன் இலக்கையும் மிஞ்சுமென எதிர்பார்க்கப்படுகிறது.



**பணப் பயிர்**

மற்ற எண்ணெய் வித்துக்களை விட எண்ணெய்ப் பனையிலிருந்து அதிகமான சமையல் எண்ணெய் கிடைக்கிறது. எண்ணெய்ப் பனைச் சாகுபடியின் மூலம் ஒரு எக்டேரில் மூன்று முதல் ஏழு டன் வரை எண்ணெய் பெறலாம். ஆனால், இந்தியாவில் பயிரிடப்படும் இதர எண்ணெய் வித்துக்களான வேர்க்கடலை, எள், கடுகு, ஆளிவிதை போன்றவற்றிலிருந்து சராசரியாக 670 கிலோ கிராம் எண்ணெயே பெறப்படுகிறது. எண்ணெய்ப் பனையின் ஆயுட்காலம் நூறு ஆண்டுகளுக்கும் அதிகமாகும். முதல் நான்கு ஆண்டுகள் கழித்து தொடர்ந்து எண்ணெய் உற்பத்தி செய்யும் செம்பனை, சாகுபடியாளர்களுக்குக் காமதேனு போன்றதொரு வரப்பிரசாதமாக விளங்கும்.

**எண்ணெய் பிழிதல்**

செம்பனைப் பழத்திலிருந்து எண்ணெய் பிழிந்தெடுக்கப்பட்டபின், எஞ்சியுள்ள சக்கை கால் நடைகளுக்குத் தீவனமாகப் பயன்படுத்தப்படுகிறது. செம்பனை எண்ணெயிலிருந்து பிரித்தெடுக்கப்படும் திரவத்தை இதர சமையல் எண்ணெய்யுடன் சேர்க்கலாம். எண்ணெய்ப் பனை வித்துக்களிலிருந்து சமையல் எண்ணெயைப் பிழிந்தெடுக்கப்பட்டபின் கிடைக்கும் ஒருவகை எண்ணெயைச் சோப்பு தயாரிப்புக்கும் பயன்படுத்திக் கொள்ளலாம். செம்பனைப் பழங்களையும், கொட்டைகளையும் அறுவடை செய்த 24 மணி நேரத்திற்குள் எண்ணெய் பிரித்தெடுத்து விட வேண்டுமென்பதால், எண்ணெய்ப் பனைச் சாகுபடி பகுதியிலேயே எண்ணெய் பிழியும் ஆலை அமைக்கப்பட வேண்டும்.

## ஆந்தையாரின் சேவை!



ஆந்தை என்றவுடன் நமக்கு நினைவுக்கு வருவது திரைப்படங்களில் திகிலூட்டும் காட்சிகளில் பின்னணி இசையில் இதன் அலறலும், கெட்ட சகுனமாய் கருதுவதும் தான். ஆந்தையாரின் அமைதியான சேவையை அறிந்த பின்னர் உங்கள் எண்ணம் மாறக்கூடும்.

பெரிய ஆந்தைகளின் முக்கிய உணவு எலி, சுண்டெலி. ஓர் இரவில் குறைந்தது இரண்டு அல்லது மூன்று எலிகளை ஆந்தை தனது இரைப்பைக்கு இரையாக்குகிறது. இரண்டு எலிகளைக் கொள்வதானது 880 எலிகளின் பிறப்பைத் தடுப்பதற்கு ஒப்பாகும். அப்படியானால் ஆண்டின் 365 இரவுகளிலும் வேலை நிறுத்தமோ சம்பளத்துடன் கூடிய விடுப்போ இன்றி ஒரு ஆந்தையல்ல, ஊரிலுள்ள அத்தனை ஆந்தைகளும் செய்யும் சேவையானது...!

ஆந்தையாரின் இந்த அமைதியான அரிய சேவையை இவ்வாறு நகைச்சுவையுடன் குறிப்பிட்டுள்ளார் பறவை ஆராய்ச்சியாளர் சலீம் அலி. அதனால்தானோ என்னவோ, இலட்சுமியின் வாகனமாக ஆந்தையார் வடநாட்டில் வழங்குகிறார்.

இனிமேலாவது ஆந்தையை அருவருப்புடன் ஒதுக்காமல் ஆதரிப்போமாக!



## பார்த்தோம் படித்தோம்

**1.2.93** இதழில், 'ஆசிய விளையாட்டரங்குகளின் அரசி' கட்டுரை சிறப்பாக இருந்தது. அது தொடர்பான செய்திகளும் படிக்கச் சுவையாக இருந்தன.

—வி.பி. செல்வராஜ்
கும்பகோணம்

'தமிழ்த் திரையுலகின் தங்க விழா' நிகழ்ச்சித் தொகுப்பு படித்தேன். நேரில் காண்பது போன்ற பிரமை ஏற்பட்டது.

—புஷ்பராஜ்
சென்னை-79.

தருமபுரி மாவட்டச் சிறப்புச் செய்திகள் பயனுள்ளவை- பாதுகாக்கப் பட வேண்டியவை.

—பொன். மறைமலைதாசன்
திருவள்ளூர்

'மாணவர் பக்கம்' அருமை. பள்ளி மாணவர்க்குப் பயன்தரும் பக்கம். பக்கத்தை அதிகப்படுத்துங்கள்.

—பி. சேகர்
ஆர்க்காடு

தமிழரசின் ஒவ்வொரு அட்டைப் படமும் கண்ணைக் கவரும் வண்ணம் அமைந்து வருகிறது. பாராட்டுக்கள்.

—சண்முகம்
பேரணாம்பட்டு

**தமிழ்த் திரையுலகின் தங்க விழா...**

'தமிழரசு' 1.2.93 இதழில் வெளிவந்த 'தமிழ்த் திரையுலகின் தங்க விழா' எனும் கட்டுரையில், 1990-ஆம் ஆண்டிற்கான சிறந்த கலை வித்தகர்களுக்கான விருதுகள் பெற்றவர்களில் பாவேந்தர் பாரதிதாசன் விருது பெற்றவர்களில் முதலாமவர் பெயரைக் கவிஞர் முத்துலிங்கம் என்று திருத்திப் படிக்க வேண்டுகிறோம்.

—ஆசிரியர்

## முதல்வர் பிறந்தநாள்!

## கைத்தறித் துணிகளுக்கு

## 20 சதவிகிதம் தள்ளுபடி!

மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் 45-வது பிறந்தநாளை முன்னிட்டு, ஒரு வார காலம் கைத்தறித் துணிகளுக்கு 20 சதவிகிதம் தள்ளுபடி வழங்கப்பட்டது.

சென்ற மாதம் 22-ந் தேதி முதல் 28-ந் தேதி வரை தமிழகத்திலுள்ள அனைத்துக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனங்களில் கைத்தறித் துணிகளுக்குத் தள்ளுபடி வழங்கப்பட்டது.

With best compliments from

**UMA SHANKAR ENGINEERING WORKS**



**No.42/1, Rajeswari Nagar,**
**Govinda Agravaram,**
**Begepalli Post, Hosur-635 126.**

**V. SHAMLA**
**Proprietor**

**UMA SHANKAR LOOMS**

**57, A-Cross Road, (Muddappa Garden),**
**Dayanandanagar, Srirampuram,**
**Bangalore- 560 021. Phone: 350389**

## தருமபுரி மாவட்டச் சிறப்பு மலர் வெளியிட்ட 'தமிழரசு'க்கு வாழ்த்துக்கள்


1. பழநியப்பா தியேட்டர், பி.துரிஞ்சிப்பட்டி, போன்: 439.
2. ஸ்ரீ பழநியப்பா சேகோபேக்டரி, செம்பியானூர், போன்: 429.
3. செம்பியானூர் 55-ஏக்கர் "தென்னந்தோப்பு"- கார்டன்.
4. அஜ்ஜம்பட்டி "மாந்தோப்பு"- கார்டன்.
5. ஸ்ரீபழநியப்பா லாரி சர்வீஸ்.
6. ஏ.எம்.ஜி. ஸ்கூல் - பொம்மிடி, போன்: 477.

பி. கோவிந்தகவுண்டர் அண்டு சன்ஸ்
உரிமையாளர்
செம்பியானூர், பி.துரிஞ்சிப்பட்டி - (போஸ்ட்)
அரூர் (தாலுக்கா), தருமபுரி (மாவட்டம்).

திருமகள் பெட்ரோலியம் ஏஜன்ஸீஸ், ஊத்தங்கரை.
திருமகள் டிரான்ஸ்போர்ட், ஊத்தங்கரை.
திருமகள் அக்ரோ சர்வீஸ், ஊத்தங்கரை.
திருமகள் ஸ்டோர்ஸ், ஊத்தங்கரை.
உரிமையாளர்
திரு. ஆர். பாலசுப்ரமணியம்
ஊத்தங்கரை.



அரிமா. அ. பழனியப்பன்
மாவட்ட இணைச் செயலாளர், திராவிடர் கழகம்
உரிமை: இராசா மருந்தகம்
ஊத்தங்கரை

இயக்குனர்:
சதர்ன்சால்வெண்ட் எக்ஸ்டென்ஸன் (பி) லிட்.
காலிப்பேட்டை, அரூர் வட்டம்,
தருமபுரி மாவட்டம்.

பழனியாண்டவர் ஜின்னிங் பேக்டரி
சரவணா அண்டு கமிஷன் மண்டி
ஓமலூர் ரோடு, கொங்கனாபுரம், சேலம் மாவட்டம்.
உரிமையாளர்:
என். இராமக் கவுண்டர்
என். செங்கோட கவுண்டர்

சி.ஏ.கே. பெட்ரோலியம் ஏஜன்ஸீஸ், திருவண்ணாமலை ரோடு, ஊத்தங்கரை.
உரிமையாளர்:
எம். சந்திர்சேகரன், பி.ஏ. ஊத்தங்கரை.

டாக்டர் தே. செங்குட்டுவன்
டி.பி.ஜி. மருத்துவமனை
கன்னாண்ட அள்ளி

சிவலிங்கம் ரெட்டியார் மளிகை ஸ்டோர்ஸ்
ஊத்தங்கரை




# எண்ணெய்ப் பனை

## தமிழ்நாட்டின் காமதேனு

- எஸ். சுப்பிரமணியன்



பாரம்பரியமாக வேர்க்கடலையைப் பயிரிட்டு வரும் தமிழ்நாடு, தற்போது மிகப்பெரிய அளவில் எண்ணெய்ப் பனை சாகுபடியை மேற்கொண்டு உள்ளது. எண்ணெய்ப் பனையைச் சாகுபடி செய்வதற்கேற்ற பகுதி காவிரிப்படுகை என்று கண்டறியப்பட்டுள்ளது. நிலையான நீர்ப்பாசன வசதியும், ஆண்டிற்கு 2,000 மி.மீ. மழை அளவும் இப்பகுதியில்தான் கிடைக்கிறது.

அடுத்த இரண்டாண்டுகளில், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் மாவட்டங்களில் காவிரிப் பாசனப் பகுதியில் உள்ள 25,000 எக்டேர் நிலப்பரப்பில் மத்திய அரசின் விரிவாக்கப் பகுதித் திட்டத்தின்கீழ், எண்ணெய்ப் பனைச் சாகுபடி மேற்கொள்ளப்படவுள்ளது. இத்திட்டத்தைச் செயலாக்க, தமிழ்நாட்டிற்கு மத்திய அரசு ரூ.1.30 கோடியை ஒதுக்கியுள்ளது.

இத்திட்டத்தின்படி 3.4 இலட்சம் எண்ணெய்ப் பனை வித்துக்கள் லத்தீன் அமெரிக்க நாடான கோஸ்டாரிகாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. இவை ஒவ்வொன்றின் சராசரி விலை ரூ.15 (0.45 அமெரிக்க டாலர்) ஆகும். மூன்று கப்பல்களின் மூலம் ஏற்கெனவே இவை பெறப்பட்டு விட்டன.

தமிழ்நாட்டிற்கு இன்னும் இரண்டு கப்பல்களில் கோஸ்டாரிகாவிலிருந்து பெறப்பட உள்ளன. எல்லா எண்ணெய்ப் பனை வித்துக்களும் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள சாக்கோட்டை விதைப் பண்ணையிலும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள இனுன்குர் விதைப் பண்ணையிலும் நடப்பட்டுள்ளன.

தொடக்கத்தில் இவை ஒவ்வொன்றும் தனி பாலிதீன் பைகளின் மூலம் 15 மாதங்களுக்கு வளர்க்கப்படும். தெளிப்பு நீர்ப்பாசன முறை மூலம் இவை பராமரிக்கப்படும். மொத்தம் 15 முதல் 18 மாதங்களுக்குப் பிறகு ஒவ்வொரு செம்பனைக் கன்றும் தனித்தனியாக நடப்படும். அப்போது இதனுடைய சராசரி விலை ரூ.35 முதல் 45 வரை இருக்கும்.

இவை திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் மாவட்டங்களில் உள்ள உழவர்களுக்கு மானிய விலையில் அளிக்கப்படும். நான்கு ஆண்டுக் காலப் பயிரான செம்பனை, தமிழ்நாட்டில் வரும் 1995-ஆம் ஆண்டு முதல் எண்ணெய் உற்பத்தி செய்யும்.

எண்ணெய்ப் பனைச் சாகுபடியில் ஈடுபடும் அனைவரும், திருச்சி, தஞ்சாவூர் காவிரிப்படுகையில் அமைய உள்ள பாமாயில் பிழியும் ஆலையில் உறுப்பினர்களாகப் பதிவு செய்யப்படுவார்கள். இந்த ஆலை எண்ணெய்ப் பனைச் சாகுபடியாளர்களிடமிருந்து செம்பனைக் கொப்பரைகளையும், பழங்களையும் கொள்முதல் செய்யும். பாமாயில் உற்பத்தி மற்றும் விற்பனையை இவ்வாலையே மேற்கொள்ளும். சர்க்கரை ஆலைகள் கரும்புச் சாகுபடியாளர்களின் நலனைப் பாதுகாப்பது போன்று, இந்த ஆலை எண்ணெய்ப் பனைச் சாகுபடியாளர்களின் நலனையும் பாதுகாக்கும். இவ்வாலை அடுத்த ஆண்டிற்குள் இயங்கத் தொடங்கும்.

தமிழ்நாடு அரசு, தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள பட்டுக்கோட்டையில் ரூ.10 இலட்சம் செலவில் முன்னோடி எண்ணெய்ப் பனைச் சாகுபடித் திட்டம் ஒன்றை மேற்கொண்டுள்ளது. திருவனந்தபுரத்தில் உள்ள மத்திய எண்ணெய்ப் பனை நிலையத்தில் இருந்து 40,000 செம்பனைக் கன்றுகள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. இதே நிலையத்தில் இருந்து மேற்கொண்டு 40,000 கன்றுகளை அளிக்க புதுதில்லியில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சிக் குழுவின் தலைமை இயக்குனரகம் ஒப்புக்கொண்டுள்ளது. எண்ணெய்ப் பனைச் சாகுபடி குறித்து ஒன்பது தமிழக வேளாண்

மண் மணக்கப் புகழ் குவித்த
சங்கத் தமிழ் முழக்கமிடும்
சாதனைகள் படைத்த
'தமிழரசு' இதழை
—வாழ்த்தும்—





B.C. இராமன்,
முன்னாள் பேரூராட்சித் தலைவர்,

ஸ்ரீ லக்ஷ்மி நாராயணா கிரானைட்ஸ்
B.C.R. ரப்பர் இண்டஸ்டிரீஸ்
B.R. மனோகரன்

ஜனதா எக்ஸ்போர்ட்
காரிமங்கலம் - 635 111
தருமபுரி (மாவட்டம்)




ஓர் பெண் குழந்தையும் பிறந்தது. தங்களது குலதெய்வம், மற்றும் அருணாசலக் கவிராயரின் தாயார் பெயருமாகிய 'வள்ளி' என்பதையே தங்களது குழந்தைக்கும் சூட்டினார். பின்னர் சிறுமி வள்ளியம்மை அங்குள்ள 'காலனி சர்க்கார் பெண்கள் மற்றும் ஆர்பன்ஸ் கான்வெண்டில்' சேர்ந்து படிக்கலானார். தென்னாப்பிரிக்காவுக்குப் பிழைக்கச் சென்ற இந்தியர்களுக்கு ஆங்கிலேயர்களால் கடும் துன்பங்கள் ஏற்பட்டன. இந்தியர்கள் அடிமைகள் என்றும், நிற வேற்றுமையைப் பெரிதும் கொண்டு இந்தியர்களைக் கசையடித்தல், காதறுத்தல், போன்ற கொடுமைகளுக்கு உள்ளாக்கினர். முக்கியமான பெண்களின் திருமணத்தைப் பற்றியே மிகுந்த சர்ச்சைகளை ஏற்படுத்தி, மிகவும் கேவலப்படுத்தினர். இதுவே அங்குள்ள இந்தியர்களுக்குள் பெரும் கிளர்ச்சியாக மூண்டு விட்டது.



ஜோஹன்ஸ்பர்க்கில் அண்ணல் காந்தியடிகள் தனிப்பட எடுத்துக்கொண்ட புகைப்படம்.

தென்னாப்பிரிக்காவில் பாரிஸ்டராக உத்தியோகம் பார்த்து வந்த காந்தியடிகள், அங்கு இந்தியர்கள், குறிப்பாகப் பெண்கள் படும் துயரங்களை நேரிலேயே கண்டார். 1906-ஆம் ஆண்டு செப்டம்பர் 11-இல் ஜோஹன்ஸ்பர்க்கில் கூடிய மூவாயிரம் பேர்களுக்கு மேல் திரண்ட மாநாட்டில் காந்தியடிகள் அகிம்சா முறையில் போராட்டத்தைத் தொடங்கினார். இதுவே காந்தியடிகள் நடத்திய முதல் போராட்டமாகும். தென்னாப்பிரிக்காவில் இந்தியர்களின் சார்பில் நடக்கும் கூட்டங்களுக்குப் பள்ளி மாணவி வள்ளியம்மை தன் தாயாருடன் செல்வாள். அப்போது அங்குள்ள தலைவர்கள் மற்றும் காந்தியடிகள் நிகழ்த்திய பல வீரச் சொற்பொழிவுகள் சிறுமி வள்ளியம்மையின் மனதிலும் ஆழப் பதிந்தன. சிறுமி வள்ளியம்மையும் பெரியோர்கள் நடத்தும் போராட்டங்களிலும் கலந்துகொள்ள முடிவு செய்தாள். தாயார் மற்றும் இதர பெரியோர்கள் எவ்வளவு புத்திமதிகளைக் கூறியும் வள்ளியம்மை அதனை ஏற்காமல் போராட்டத்தில் வெகு தீவிரமானாள்.

ஒரு சமயம் திடீரென ஜோஹன்ஸ் பர்க்கிலிருந்து ஓர் பெரும் மாதர்கள் அணி பிரிட்டிஷாரின் அநீதிகளைக் கண்டிக்கும் வகையில் நியூகாசில் வரையில் சென்று பேரணி ஊர்வலம் நடத்த தயாராயினர். 1913-ஆம் ஆண்டு அக்டோபர் முதல் வாரத்தில் ஜோஹன்ஸ்பர்க்கிலிருந்து புறப்பட்ட மாபெரும் மாதர் அணி ஊர்வலம் பிரிட்டிஷாரின் ஆட்சியை எதிர்த்து பலத்த கோஷங்களோடு சென்றனர். இதனைக் கண்ட ஆட்சியாளர்கள் எவ்வளவு தடுத்தாலும் தொடர்ந்து நாள் தவறாமல் ஊர்வலம் நியூகாசில் நோக்கியே சென்றது. அதே ஆண்டு டிசம்பர் 22-இல் 'வோல்கிஸ்ரங்டு' என்ற இடத்தில் போலீசார் ஊர்வலத்தை பலாத்கார முறையில் தடுத்து நிறுத்தி அத்தனைப் பெண்களையும் கைது செய்து 'மாரிட்ஸ் பர்க்' சிறையில் கொண்டுபோய் அடைத்தனர். இதில் 16 வயதான சிறுமி தில்லையாடி வள்ளியம்மையும் ஒருவளாவாள்! அவர் சிறைத்தண்டனை அடைந்ததைப் பற்றிச் சிறிதும் கவலையேபடவில்லை.

சிறுமி வள்ளியம்மையைச் சிறை அதிகாரிகள் மிகக் கொடுமையாக நடத்தினர். அச்சிறுமியால் செய்ய முடியாத அளவிற்கு அவளிடம் கடுமையாக வேலை வாங்கப்பட்டது. போதிய உணவோ, தண்ணீரோ அளிக்காமல் அவள் உண்ணும் உணவில் சிறுசிறு கற்களும், மணலும் கலந்த உணவையே அளித்தனர். சுகாதாரக் கேடுகள் நிறைந்த சிறையில் நரக வேதனையும் அடைந்தாள் அவள். இதனால் உடல் நலன் பாதிக்கப்பட்ட வள்ளியம்மைக்குப் போதிய மருத்துவச் சிகிச்சையும் அளிக்கப்படவில்லை. விதிக்கப்பட்ட தண்டனைக் காலம் முடிவதற்கு முன்பு, சிறையில் கொடுமைகளை அனுபவித்து நேர்மையோடு தனது வேலைகளைச் செய்து வந்ததனால் அதிகாரிகள் ஜெயில் சட்டப்படி சில நாட்களுக்கு முன்பாகவே 1914-ஆம் ஆண்டு பிப்ரவரி 11-ஆம் தேதியே வள்ளியம்மையை விடுதலை செய்தனர்.

சிறையிலிருந்து எலும்பும் தோலுமாக விடுதலையடைந்த வள்ளியம்மை உடல் நலமின்றி வீட்டிலேயே படுத்தபடுக்கையாக இருப்பதாக கேள்விப்பட்ட மகாத்மா காந்தியடிகள் அவளைக் காண அவளது இல்லத்திற்கே சென்றார். வீட்டில் அங்கோர் மூலையில் கட்டிலில் துணியோடு துணியாகி மெலிந்து படுத்திருக்கும் வள்ளியம்மையைக் கண்டதுமே காந்திஜி மிகுந்த கவலையோடு, ''வள்ளியம்மா! நீ ஜெயிலுக்குச் சென்றதற்காக வருத்தப் படுகிறாயா?'' என்றதற்குச் சிறுமி வள்ளியம்மை தனது இருகரங்களைக் குவித்து அவரை வணங்கியபடியே, 'பாரிஸ்டர் ஐயா! வருத்தமா? ஒரு துளியும் இல்லையே! இப்போதும்கூட இன்னொரு தடவையும் என்னைக் கைது செய்தாலும் நான் சிறைக்குச் செல்லத் தயார்!''என்றாள்.

''அப்படியா வள்ளியம்மா! மறுபடியும் சிறைக்குச் சென்று அதனால் நீ இறந்து போவதாக இருந்தால் என்ன செய்வாய்?''...

''பாரிஸ்டர் ஐயா! மரணமா?... அதை நான் பொருட்படுத்தவே மாட்டேன். தாய்நாட்டிற்காக உயிரைக் கொடுக்க விரும்பாதவர்கள் யாராவது இருப்பார்களா? நான் உயிரைக் கொடுக்கத் தயார்!'' என்றதுமே மகாத்மா காந்திஜியே வியப்படைந்தார். வள்ளியம்மையின் தாய்நாட்டுப்பற்றுதலை பெரிதும் பாராட்டிய காந்திஜி, அவளது உடல் நலன் தேறவும் ஆசி கூறிச் சென்றார்.

பின்பு அடுத்த சில தினங்களுக்குள் சிறுமி வள்ளியம்மையின் உடல்நலன்

With Best Compliments From:



**Thiru L. Selvaraj**

**Abirami Thirai Arankam**

**Shoolagiri**

எங்கள் இதயங்கனிந்த நல்வாழ்த்துக்கள்

**நெசவாளர்கள்**

**தங்கவேலு ஸ்பின்னிங் மில்ஸ்**

**(பி) லிமிடெட்**

தருமபுரி மாவட்டம்






# தியாக தீபம் தில்லையாடி வள்ளியம்மை

- ரகமி

**1913-ஆம் ஆண்டு அக்டோபரில் தென்னாப்பிரிக்காவில் மகாத்மா காந்தியடிகள் தலைமையில் நடந்த சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டு சிறை சென்ற அத்தனைப் பெண்களுள் சிறுமி தில்லையாடி வள்ளியம்மையும் ஒருவளாவாள். சிறையில் கடும் சித்திரவதைகளுக்கு ஆளாகிய அச்சிறுமி விடுதலைக்குப் பின் உடல் நலன் தேறாமல் 1914-ஆம் ஆண்டு பிப்ரவரி 22-இல் தனது 16-ஆம் வயதில் காலமானாள். 'தியாக தீபம்' வள்ளியம்மையின் 80-வது நினைவு ஆண்டு நிறைவினையொட்டி இக்கட்டுரை வெளியிடப்படுகிறது!**

"சூரியனே அஸ்தமிக்காத மாபெரும் பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியம்" எனத் திக்கெட்டும் புகழ் பரப்பிய ஆங்கிலேயர்கள் தென்னாப்பிரிக்காவில், காலனி ஆதிக்கத்தை ஏற்படுத்திக்கொண்டு அதிகாரம் செய்து வந்தனர். தங்களிடம் வேலை செய்ய இந்தியாவிலிருந்து ஆட்களை அனுப்பும்படி, காலனி சொந்தக்காரர்கள் இந்திய அரசாங்கத்தினிடம் கேட்டனர். இதனால் இந்தியாவிலுள்ள பிரிட்டிஷாரும் தென்னிந்தியாவிலிருந்து பெருமளவில் ஆட்களை அனுப்பத் திட்டமிட்டனர். இந்தியரிடம் பிரிட்டிஷாரின் பெருமைகளை மிகைப்படுத்திக் கூறவும், இந்தியாவில் வாழ்வதைவிட வெளிநாடுகளிலுள்ள பிரிட்டிஷ் காலனிகளுக்குச் சென்றால், அங்கு மிகுந்த சம்பாத்தியம் பெறலாம் என நயவஞ்சகமாகப் பிரச்சாரங்கள் செய்யவும் தங்களுக்குச் சாதகமாகச் சில முகவர்களை நியமித்தனர். இவர்களுக்குக் 'கங்காணிகள்' என்று பெயர். கங்காணிகள் என்ற ப்தம் ஆரம்பத்தில் 'கேங்-கேனி' (Gang Canny சாமர்த்தியமாகப் பேசிக் கூட்டத்தைச் சேர்ப்பவன்) என்றிருந்தது. அதுவே கடைசியில் தமிழில் 'கேங்-காணி' அல்லது 'கங்காணி' என்றாயிற்று! இந்த 'கங்காணி'யின் வலைகளில் சிக்கிய ஆயிரக்கணக்கான இந்தியர்களை கப்பல்களில் ஆடு மாடுகளைப் போல் ஏற்றித் தென்னாப்பிரிக்காவுக்கு அனுப்பினர்.

தென்னிந்தியாவில் பிரெஞ்சு ஆதிக்கத்தின்கீழ் இருந்த, புதுச்சேரி டூப்ளேக்ஸ் தெருவில் வசித்து வந்தவர் ஆர். முனுசாமி முதலியார். இவர் நெசவுத் தொழிலாளி குடும்பத்தினர். தஞ்சை மாவட்டம் மயிலாடுதுறைக்கு அருகேயுள்ளது தில்லையாடி கிராமம். பிரபல தமிழ்க் கவிஞர் அருணாசலக் கவிராயர் பிறந்ததும் இங்குதான். இங்கு 'மங்களத்தம்மாள்' என்ற ஜானகி அம்மாள் செங்குந்தர் முதலியார் வகுப்பைச் சேர்ந்தவர். புதுவை முனுசாமி முதலியாருக்கும், தில்லையாடி மங்களத்தம்மாளுக்கும் திருமணம் நடந்தது. தம்பதியர் தில்லையாடியிலேயே வசித்துத் தங்களது நெசவுத் தொழிலையே செய்து வாழ்ந்து வந்தனர்.

இந்தியாவில் பிரிட்டிஷார் லங்காஷயரிலிருந்து ஆலைத் துணிகளை அதிக அளவில் இறக்குமதி செய்யவே, இங்கு கைத்தறித் துணிகளுக்கு 'மவுசும்' குறைந்தது. நெசவுத் தொழிலும் படுத்துவிட்டது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திய 'கங்காணிகள்' தங்களது வசீகர, பேச்சுத் தந்திரங்களினால் தென்னிந்திய நெசவுத் தொழிலாளர்களைத் திசைத் திருப்பினர். கங்காணிகள் பேச்சுகளில் மதிமயங்கிய பல்லாயிரக்கணக்கானவர்களில் முனுசாமி முதலியாரும் ஒருவராவார். பிழைப்பிற்காகத் தென்னாப்பிரிக்கா செல்பவர்களில் இவரும் ஒருவராவார். அப்போது இவருடைய மனைவி மங்களத்தம்மாள் கர்ப்பமாக இருக்கவே, முனுசாமி முதலியார் தன் மனைவியோடு 1898-ஆம் ஆண்டு தென்னாப்பிரிக்காவுக்குக் கப்பலில் பயணமானார்.

தென்னாப்பிரிக்காவில் ஜோஹன்ஸ்பர்க்கில் குடியேறிய முனுசாமி முதலியார் ஆரம்பத்தில் சிறுகடையை வைத்து வாழ்ந்து வந்த சில மாதங்களுக்குள் மனைவி மங்களத்தம்மாளுக்கு அழகான

தருமபுரி மாவட்டச் சிறப்பு மலர் வெளியிட்ட 'தமிழரசு'க்கு வாழ்த்துக்கள்

தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர்கள் சங்கம்
அரூர் வட்டக்கிளை, தருமபுரி மாவட்டம்

Best Compliments

M/s சதர்ன் டைல்ஸ் (பி) லிமிடெட்,
கோம்பூர், மஞ்சவாடி
தருமபுரி

தமிழ்நாட்டில் முதன்முதலாக உற்பத்தி செய்யும் உயர்தரமான மேங்கலூர் ஓடுகள், மற்றும் ஒயர் கட் பிரிக்ஸ், மூலை ஓடுகள் மார்ச் மாதம் 1-ஆம் தேதி முதல் விற்பனைக்குத் தயாராக உள்ளது.

மேலாளர்

With the best compliments from:

M/s. JAYASHREE THEATRE
M/s. RAVI PRIYA THEATRE
PAPPIREDDIPATTI - (P.O.) 636905
HARUR (TK) DHARMAPURI (DT)

BEST COMPLIMENTS FROM

Grams: "SREESANKU"
Phone: Office: 63619
M.D.: 66553

SREE SANKU CHAKKARA MILLS (P) LTD.,
REGD. OFFICE: No.4, RAJAJI ROAD, SALEM-636 007.

With Best Compliments From:

Phone: Off: 463 & Res: 435

M/s. THANGAVELU SPG MILLS PRIVATE LIMITED
Mfrs. of Quality 40s & 2/40s Cotton Yarn
Bommidi:635301, DHARMAPURI DIST.

Founder Chairman & Managing Director : P. THANGAVELU

Installed Capacity : Spinning 17764 Spindles
:Doubling 6096 Spindles

With the best compliments from:

Ideal Spinning Mills Limited

Regd. Office:
Ideal Garden Complex (1st Floor)
7/54, Junction Main Road
Five Roads, Salem-636 004
Phone: 77447, 7002
Telex: 0450 372 ISML IN
Gram: IDEAL, Salem-4

Mills:
Kumarakottam
Pattukonampatti-636 905
Harur Taluk
Dharmapuri Dt.,
Phone: 52 & 44
(Pappireddipatty)



தேறாமல் 1914-ஆம் ஆண்டு அதே பிப்ரவரி மாதம் 22- இல் காலமானார். அப்போதுதான் வள்ளியம்மைக்கு 16 வயது பூர்த்தியடைந்திருந்தது. சிறுமி தில்லையாடி வள்ளியம்மையின் தேச பக்தியைப் பாராட்டிய ஜோஹன்ஸ்பர்க் தமிழர்கள் அச்சிறுமியின் நினைவாக அங்கோர் நினைவாலயத்தை எழுப்பினர். 1914-ஆம் ஆண்டு ஜூலை 15-இல் மகாத்மா காந்தியடிகள், மிஸர்ஸ் சாஸ் பிலிப்ஸ் தலைமையில் அதைத் திறந்து வைத்து அஞ்சலி செலுத்தினார். பின்னர் அவர் தனக்கு ஜோஹன்ஸ்பர்க் மக்கள் அளித்த ஓர் பாராட்டுக் கூட்டத்தில்:

"…..எல்லாவற்றிலும் அதிக முக்கிய மானது வள்ளியம்மை பிறந்த இடம் ஜோஹன்ஸ்பர்க். நான் உங்களிடம் இப்போது இங்கே பேசும்போது என் கண்ணெதிரில் தெரிவது அந்த இளம் தியாகச் சிறுமி வள்ளியம்மையின் திருவுருவந்தான். சத்திய இலட்சியத்திற்காக வள்ளியம்மாள் தனது உயிரையே தியாகம் செய்தார். இலட்சியத்தில் குருட்டு நம்பிக்கைக் கொண்டவள். இவளைப் போலவே உயிர்த் தியாகம் செய்துவிட்ட தமிழ் இளைஞர்களாகிய நாகப்பனையும், நாராயண சுவாமியையும் பெற்றெடுத்த பூமி இந்த ஜோஹன்ஸ்பர்க் தான்! ஆகையால் புகழுக்கும், பாராட்டுதலுக்கும் உரியவர்கள் யாராவது உண்டென்றால் போராட்டத்தில் உயிர் நீத்த அந்த மூவருமே அதற்குரியவராவர்!" என்றார்.

1934-ஆம் ஆண்டு காந்திஜி தமிழ்நாடு சுற்றுப் பயணம் மேற்கொண்ட போது தனது பிரச்சாரங்களில் எல்லாம் "தில்லையாடி வள்ளியம்மை"யைப் பற்றிப் பேசிய பின்புதான் பிரச்சாரத்தையே முடிப்பார். தில்லையாடிக்கு காந்தியடிகள் 1934 பிப்ரவரி 9-ஆம் தேதி வந்திருந்தபோது அங்குள்ள மக்கள் அவருக்கு மகத்தான பாராட்டுதலையும் படித்து அளித்தனர். இந்த இளம் வீரத் தமிழ்ப் பெண்மணியை நினைவுகூரும் வகையில் 1969-ஆம் ஆண்டு அக்டோபர் 22-இல் தியாகிகளின் மூதாதையோரின் பூர்வீகக் கிராமமான "தில்லையாடி"யை ஓர் மாதிரி கிராமமாக ஆக்கும் பணியை அன்றைய தமிழக அரசு தொடங்கி வைத்தது. அங்கு தியாக தீபமாகிய வள்ளியம்மைக்கு ஓர் நினைவாலயமும் ஏற்படுத்தியது. இன்றும் அது சிறப்புடன் விளங்கி வருகிறது.

"தில்லையாடி" வள்ளியம்மையின் மாபெரும் தியாகத்தின் பெருமையும் என்றென்றும் நினைவுகூரும் வகையில் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் ('கோ-ஆப்டெக்ஸ்') தனது 600-வது புதுமனை விற்பனை நிலையத்தை சென்னை எழும்பூர் பாந்தியன் சாலையிலுள்ள அங்காடிக்குத் 'தில்லையாடி வள்ளியம்மை மாளிகை' எனப் பெயரையும் சூட்டிப் பெரும் மகிழ்வு கொண்டுள்ளது. இந்த ஆண்டு (1993) பிப்ரவரி 22-ஆம் தேதி "தியாக தீபம் தில்லையாடி வள்ளியம்மை"யின் 80-வது நினைவு ஆண்டு நிறைவடைவதை முன்னிட்டு, அந்தத் தியாகச் சிறுமிக்கு நினைவாஞ்சலி செலுத்துவது தமிழர்களாகிய நம் அனைவரின் முதல் கடமையாகும். ●



உலக வங்கி உதவியுடன் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை பார்வையிட சென்னை வந்த உலக் வங்கியின் நிர்வாக இயக்குநர் திரு. எர்னெஸ்ட் ஸ்டொர்ன் மற்றும் புதுடெல்லியிலுள்ள அவ்வங்கியின் தலைமை அலுவலர் திரு. ஏக்டே யெனால் ஆகியோர் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களைத் தலைமைச் செயலகத்தில் சந்தித்துப் பேசினார்கள் (18.2.'93).



எங்கள் இதயங்கனிந்த நல்வாழ்த்துக்கள்

## ஜெயஸ்ரீ தியேட்டர்

பாப்பிரெட்டிபட்டி

தருமபுரி மாவட்டம்

எங்கள் இதயங்கனிந்த நல்வாழ்த்துக்கள்

## ரவிப்பிரியா தியேட்டர்

முக்காரெட்டிபட்டி

தருமபுரி மாவட்டம்

எங்கள் இதயங்கனிந்த நல்வாழ்த்துக்கள்

## ஸ்ரீசங்கு சக்கரா மில்ஸ் (பி) லிமிடெட்

புதுரெட்டியூர், கடத்தூர்

தருமபுரி மாவட்டம்

ஆசிரியரும் வெளியிடுபவரும்: இரா. சம்பத், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927

## எளிமையானவை! நேர்த்தியானவை!
## மேன்மை மிகுந்தவை!
## தோற்றம் அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்

தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள். வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ்
விற்பனை நிலையத்தை அணுகவும்.




## அரசுப் பணியாளர் நலன்:

★ அரசுப் பணியாளர்களுக்கு வீட்டு வாடகைப்படி உயர்த்தப்பட்டுள்ளது.

★ வீடு கட்டக் கடனுதவிக்கான ஒதுக்கீடு ரூ.25 கோடியிலிருந்து ரூ.34.50 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

★ அரசு அலுவலர் நலவாழ்வு நிதியின் கீழ் வழங்கப்படும் மானியம் ரூ.25,000-லிருந்து ரூ.50,000 அல்லது அறுவைச் சிகிச்சைக்கான செலவில் 75 சதவிகிதம் இதில் எது குறைவோ அது வழங்கப்படும்.

★ அரசுப் பணியாளர் குழந்தைகளுக்கான உயர்கல்வி முன்பணம் உயர்த்தப்பட்டுள்ளது.

# இந்த இதழில்...

தமிழ்நாடு அரசின் நிதிநிலை அறிக்கை — 1993-94 ... 2

'மக்கள் என் பக்கம் இருப்பதால் இறுதி வெற்றி எனக்குத்தான்!' — சேலம் விழாவில் மாண்புமிகு முதல்வர் உரை ... 18

'ஏழை எளிய மக்களின் சிரிப்பிலே வாழ்வின் அர்த்தத்தையே காண்கிறேன்!' — தருமபுரி விழாவில் மாண்புமிகு முதல்வர் உரை ... 24

கலைமாமணி விருது வழங்கும் விழா —மாண்புமிகு முதல்வர் உரை ... 29

தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2024

பங்குனித் திங்கள் - 3

மலர்:23

16-3-1993

இதழ்:18

**நான்காம் அட்டையில்:**

19-வது அகில இந்தியச் சுற்றுலாத் தொழில் பொருட்காட்சியில், சில எழில்மிகு காட்சிகள்...



# தமிழ்நாடு அரசின் நிதிநிலை அறிக்கை 1993-94

***தமிழ்நாடு அரசு மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் 1993-94 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தைச் சட்டமன்றப் பேரவையில் வைத்து 1993 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 12 ஆம் நாள் அன்று ஆற்றிய உரை.***

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!**

1992-93ஆம் ஆண்டிற்குரிய திருத்த மதிப்பீடுகளையும், 1993-94 ஆம் ஆண்டிற்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளையும், இந்தப் பேரவையின் மேலான ஒப்புதலைப் பெறும் பொருட்டுப் பேரவையின் ஆய்வுக்கு வைப்பதில், நான் பெருமிதமும் பெருமகிழ்ச்சியும் கொள்கிறேன்.

**" இன்சொலால் ஈத்தளிக்க வல்லாற்குத் தன்சொலால்
தான்கண் டனைத்துஇவ் உலகு "**

இனிய சொற்களைக் கூறி, வேண்டுவோர்க்கு வேண்டிய பொருள்களைக் கொடுத்து, அவர்களையெல்லாம் காப்பாற்ற வல்ல நாடாள்பவருக்கு, அவரது செல்வாக்காலேயே இவ்வுலகமானது, அவர் கருதுகின்ற அளவுக்கு, அவருக்கு மிகவும் கட்டுப்பட்டு நடக்கும் என்பது வள்ளுவப் பெருந்தகையார் வழங்கிய பொன்மொழியாகும்.

இத்தகைய நற்பண்புகளைக் கொண்டுதான், மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தமிழ்நாட்டில் நல்லாட்சி நடத்தி வருகிறார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் வகுத்துத் தந்த கொள்கை-குறிக்கோள்-ரணநாயக நெறிமுறைகள் ஆகியவற்றைப் பின்பற்றி, பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் நெறிப்படுத்திக் காட்டிய மனிதவள மேம்பாட்டுப் பணிகளை ஏற்று நடைமுறைப்படுத்தி வருவதில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் கண்ணுறுங் கருத்துமாக இருந்து வருகிறார்கள்.

2. தமிழ்நாட்டில் அமைதி-சட்டம்-ஒழுங்கு-ஒற்றுமை ஆகியவற்றை நிலை நாட்டுவதிலும், அவற்றிற்கு எதிராக ஏற்பட்ட வன்முறை இடையூறுகளை அகற்றுவதிலும் சிறப்பான வெற்றி காணப்பட்டிருக்கிறது. இந்திய நாடு முழுவதிலும் ஆங்காங்கு வன்முறைகளும், கலவரங்களும், குழப்பங்களும் மிகுந்து காணப்படும் சூழ்நிலையில், தமிழகம், கலவரப் பாலைவனத்திடையே நிலவும் அமைதி-நல்லிணக்கப் பூஞ்சோலையாகத் திகழ்கிறது. தமிழக மக்கள், தாங்கள் அமைதியாக வாழ்கிறோம், தங்களுக்குத் தக்க பாதுகாப்பு இருக்கிறது, தங்கள் தங்கள் தொழில்களை ஆர்வத்தோடும், அக்கறையோடும் தொடர்ந்து நடத்திவரத் தக்க வாய்ப்பு அமைந்துள்ளது என்று எண்ணி மனநிறைவு கொள்ள முடிகிறது.

3. வகுப்புவாத-இனவெறிச் செயல்களின் காரணமாகப் பல மாநிலங்களில் வன்முறைச் செயல்கள் நடைபெற்றுப் பொருளாதாரப் பின்னடைவு ஏற்பட்டது என்றாலும், தமிழகத்தில் சட்டம்-ஒழுங்கு-அமைதி முறையாகக் காக்கப்பட்டு வந்ததால், திட்டமிட்ட வளர்ச்சிப் பணிகள் சிறப்பாகவும்-செம்மையாகவும் நிறைவேறி வருகின்றன.

4. 1991 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் இந்த அரசு பதவியேற்றபோது, பொருளாதார அளவில் இந்திய நாட்டில் நிலவிய நெருக்கடி நிலைமை பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். இந்த அரசு எதிர்கொள்ள வேண்டி இருந்த பொருளாதார நெருக்கடியும் முன்பு எப்போதும் இருந்திராத வகையிலானதாகும். 1991-92 ஆம் ஆண்டில் இந்திய நாட்டின் பொருளாதார வளர்ச்சி வெறும் 1.2 சதவீதம் மட்டுமே. 1991-92 ஆம் ஆண்டு முடிவில் பண வீக்க வீதம் 13.6 சதவீதமாக இருந்தது. இந்தச் சூழ்நிலையில்தான் இவ்வரசு பதவி ஏற்றது. 1992-93 ஆம் ஆண்டில் நம் நாட்டின் பொருளாதார வளர்ச்சி 4 சதவீதத்தையும் விஞ்சும். பண வீக்க வீதம் ஏறத்தாழ 7 சதவீதமாகவுள்ளது. கடந்த ஓராண்டில், அரிசி, டீசல், சமையல் எரிவாயு, நிலக்கரி, இரும்பு, இரயில்வே பயணிக் கட்டணம்-சரக்குக் கட்டண வீதங்கள், இரசாயன உரங்கள் போன்ற பல்வேறு இனங்களில் மத்திய அரசு ஏற்படுத்திய விலை உயர்வு காரணமாக 1992 ஆம் ஆண்டு முழுவதிலும் பணவீக்க வீதம் தொடர்ந்து உயர்ந்த அளவிலேயே இருந்தது. இவ்வாறு தொடர்ச்சியாகப் பல பொருள்களின் நிர்ணய விலைகளில் செய்த உயர்வின் விளைவு, ஏழை, எளிய வசதி வாய்ப்பற்ற மக்களை மிகக் கடுமையாகப் பாதித்துள்ளது. பொருளாதார வளர்ச்சிக்குத் தூண்டுதல் அளிக்கவும், விதிமுறைகளை எளிதாக்கவும் நடைமுறைகளில் உள்ள கடுமையைத் தளர்த்தவும், இந்தியப் பொருளாதாரத்தை உலகப் பொருளாதாரத்துடன் ஒருங்கிணைக்கவும் மத்திய அரசு எடுக்கும் பொருளாதாரக் கொள்கைகளுக்கு நாங்கள் ஆதரவு அளிக்கின்ற அதே நேரத்தில், இக்கொள்கைகள் வறிய மக்களின் வாழ்க்கைத் தரத்தில் உடனடியாக ஏற்படுத்துகின்ற பாதிப்பை எண்ணிக் கவலை அடைகிறோம். மாண்புமிகு முதல்வர் அவர்கள் தாம் பேசுகின்ற தேசிய, மண்டல மன்றங்கள் ஒவ்வொன்றிலும், ஏழை மக்களைப் பாதிக்கக் கூடிய கொள்கைகளைச் செயற்படுத்துவதில் மத்திய அரசு நிதானத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று வலியுறுத்தி வந்துள்ளார்கள். 1992 ஆம் ஆண்டு நவம்பரில் நடைபெற்ற தென் மண்டலக் குழுக் கூட்டத்தில், உணவு தானியங்களின் விற்பனை விலையை இனிமேலும் உயர்த்துவதற்கான முயற்சி எதுவும் மாநில அரசுக்குச் சுமையைத் தாங்க இயலாததாக்கிவிடும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எச்சரிக்கை விடுத்திருந்தார்கள்.

5. குறைந்தபட்சம் மேலும் சிறிது காலத்திற்காவது பண வீக்கச் சக்திகளுக்கு எதிராக ஏழைகளுக்குக் காப்பளிக்கும் பொருட்டு, வழங்கப்படுகின்ற உணவு உதவித் தொகை உயர்ந்த அளவில் தொடர்ந்து இருக்கச் செய்வது மத்திய அரசிற்கு இன்னும் பொருத்தமாக இருந்திருக்கும் என்பது மாநில அரசின் உறுதியான கருத்தாகும். நிதி ஆதாரங்கள் வலுவற்றுள்ளபோது, தொடர்ந்து அதிக அளவிலான உணவு உதவித் தொகைச் சுமையைத் தாங்குவது மாநிலங்கள் அளவில் மிகக் கடினமாகும். இப்போதுள்ள நிலவரப்படி, மத்திய அரசு செயற்படுத்தியுள்ள, அரிசி விலை ஏற்றத்தை முற்றிலுமாக நுகர்வோர் மீது நாம் சுமத்திவிடவில்லை. **இதன் விளைவாக, முன்னெப்போதும் இருந்திராத வகையில் ஆண்டொன்றுக்கு ரூ.400 கோடி அளவில் உணவு உதவித் தொகைச் சுமையைத் தாங்க நேரிட்டுள்ளது.** நாம் கொடுக்க வேண்டிய உணவு உதவித் தொகை நிலுவை ரூ.110 கோடியைச் சேர்த்து, 1993-94 ஆம் ஆண்டில், இந்த வகையில் நமது மொத்த ஒதுக்கீடு நம்மை மலைக்க வைக்கின்ற அளவிற்கு ரூ.510 கோடியாக உயர்ந்துள்ளது. பொது விநியோகத்தின் மூலம்

## வரலாற்றுப் புகழ்மிக்க வரிச் சீரமைப்பு

★ 1959-க்குப் பின் மேற்கொள்ளப்படும் மிகத் துணிவான வரிச் சீரமைப்பு நடவடிக்கை.

★ தற்போதுள்ள 17 வரி விகிதங்கள் 9 வரி விகிதங்களில் கொண்டுவரப்பட்டுள்ளன.

★ ஏழை எளிய மக்களால் பெரிதும் பயன் படுத்தப்படும் காப்பிக்கொட்டை, மண்ணெண்ணெய், புளி, மிளகாய், சோப்புக் கட்டி, மஞ்சள், மிளகு, கோதுமைப் பொருட்கள், கையினால் தயாரிக்கப்படும் சோப்பு ஆகியவற்றின் வரி குறைக்கப் பட்டுள்ளது.

★ மருந்துப் பொருட்கள், பிளாஸ்டிக் பொருட்கள், அலுமினியப் பாத்திரங்கள் போன்ற அன்றாடம் பயன்படுத்தப்படும் பொருட்களின் மீதான வரி குறைக்கப் பட்டுள்ளது.

★ ஒரு இலட்ச ரூபாய் வரை ஆண்டிற்கு வியாபாரம் புரியும் சிறு வியாபாரிகளுக்கு வரி விலக்கு அளிக்கப்படுகிறது. இதனால், 60 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பயன் பெறுவர்.

★ இப்புதிய வரிவிகிதங்கள் 12.3.93 முதல் அமலுக்கு வருகின்றன.

★ வேளாண்மை வருமான வரிக்கான வருமான வரம்பு ரூ.22,000- லிருந்து ரூ.28,000 ஆக உயர்த்தப்படுகிறது.

★ மருத்துவர்கள், வழக்கறிஞர்கள், இளங் கலைஞர்கள் ஆகியோரின் தொழில் வரி குறைக்கப்பட்டுள்ளது.

★ 1993-94-ஆம் ஆண்டிற்கான திட்ட மதிப்பீடு வேறு எப்போதும் இருந்திராத அளவான ரூ.2,101 கோடி என நிர்ண யிக்கப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டைக் காட்டிலும் 20 சதவிகிதம் அதிகமானது.

வழங்கபபடும் அரிசியின் விலை தமிழகத்தில்தான் மிகவும் குறைந்த நிலையில் உள்ளது. மேலும், மற்றைய மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கையில், தமிழக அரசுதான் மிக அதிக அளவில் உணவு உதவித் தொகை வழங்கி வருகிறது. இப்பொழுது மத்திய அரசின் நிதி நிலைமை சற்றுச் சீரடைந்திருப்பதால், மத்திய அரசு ஏழைகளை மேலும் பாதிக்கின்ற வகையில் அமையும் விலையேற்ற நடவடிக்கைகளில் நிதானம் காட்டி, பொருளாதாரக் கட்டமைப்புச் சரிக்கட்டல் நடவடிக்கைகளால் ஏழைகள் மீது தாங்க முடியாத அளவிற்கு விழுந்துள்ள சுமையைக் குறைப்பதற்கான கொள்கைகளையும், திட்டங்களையும் இனி வகுக்கும் என்று நாம் நம்புகிறோம்.

6. "மத்தியிலே வலுவான கூட்டாட்சி; மாநிலத்திலே வளமான தன்னாட்சி" என்ற தத்துவத்திற்கேற்ப, நாட்டின் அரசாண்மையைக் கட்டிக் காப்பதற்குரிய அதிகாரங்கள் மத்திய அரசிடமும், மக்கள் முன்னேற்றத்திற்கும் நல்வாழ்விற்கும் உரிய அதிகாரங்கள் அனைத்தும் மாநில அரசுகளிடமும் அமைய, அரசியலமைப்புச் சட்டம் திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பதே, நாங்கள் எப்போதும் வலியுறுத்தி வந்துள்ள கொள்கையாகும். இந்த நிலையை நாங்கள் தொடர்ந்து வலியுறுத்துவோம்.

7. இந்தச் சூழ்நிலையில் மத்திய, மாநில நிதி உறவுகளில் அண்மைக் காலத்தில் காணப்படும் சில போக்குகள் குறித்து நாங்கள் கவலை கொள்வதற்குக் காரணம் உள்ளது. முக்கியமாக, மாநிலங்களின் வரம்பிற்குள் வருகின்ற துறைகளில் மத்திய அரசு தானே முனைந்து ஆதிக்கம் செலுத்தும் பாங்கு வளர்ந்து வருவதை நான் குறிப்பிடுகிறேன். சமூகப் பாதுகாப்புத் திட்டமொன்றிற்காக உலக வங்கி 500 மில்லியன் அமெரிக்க டாலர்களை வழங்கியுள்ளது. எளியோர் நல ஒதுக்கீடுகளில் குறைவு ஏற்பட்டு அதனால் தோன்றியுள்ள வரவேற்கவியலாத போக்கினை மத்திய அரசு இதன் மூலம் திருத்திக் கொள்ள முடிந்தது. அதே சமயத்தில், மத்திய அரசின் பல்வேறு அமைச்சகங்களுக்கு இந்நிதி ஆதாரங்களை ஒதுக்கீடு செய்வதற்குப் பதிலாக, இவற்றை எல்லா மாநிலங்களுக்கும் நியாயமாக உரிய அளவில் பகிர்ந்தளிப்பது மிகப் பொருத்தமானதாக அமையும். மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் படிப்படியாக மாநில அரசுகளுக்கு மாற்றப்பட வேண்டும் என்று தேசிய வளர்ச்சிக்குழு ஏற்கெனவே, *1991* டிசம்பர் திங்களில் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. இந்தத் திட்டப் பணி நடவடிக்கைகளை மாநிலத் திட்டப் பணிகளின் மூலம் மேற்கொள்ள அனுமதித்து, மாநிலங்களுக்கு நேரடியாக வழங்கப்படும் இந்த நிதி ஆதாரங்களை அதிகரிப்பது மிகவும் பொருத்தமானதாக இருந்திருக்கக் கூடும். இவற்றை மத்திய அமைச்சகங்கள் மூலம் வழங்குவதில் தமிழ்நாடு போன்று சமூகத் துறைகளில் ஏற்கெனவே சாதனைகளைப் புரிந்துள்ள மாநிலங்கள் இழப்பையே அடைந்துள்ளன என்பதையும் குறிப்பிட்டுக் காட்ட வேண்டியுள்ளது. கடந்த காலங்களில் இத்துறைகளுக்கு முக்கியத்துவம் அளிப்பதைப் புறக்கணித்திருந்த மாநிலங்கள் தற்போது நேரடியாக வழங்கப்பெறும் கூடுதல் நிதி ஆதாரங்களைப் பெற்றதன்மூலம் பலனடைந்துள்ளன. ஆனால், அத்துறைகளில் சாதனைகளைப் புரிந்து தொடர் செலவுகளையும் தாங்களே ஏற்றுக்கொண்டு வருகிற மாநிலங்கள் தங்களது சொந்த நிதி ஆதாரங்களையே சார்ந்திருக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன. இது முற்றிலும் நியாயமல்ல. இந்தக் கூடுதல் நிதி ஆதாரங்களை மாநிலங்களுக்கிடையே ஒதுக்கீடு செய்வதில் தேசிய அளவில் கருத்தொற்றுமை காண வேண்டும் என்பதே நமது வேண்டுகோள்.

8. மேலும், அண்மைக்காலத்தில் மத்திய அரசின் நிதிநிலை மீதுதான் முழுக் கவனமும் செலுத்தப்பட்டு வந்துள்ளது. அதே வேளையில், மாநிலத்தின் இடர்ப்பாடான நிதி நிலைமை புறக்கணிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசு பொருளாதாரக் கட்டமைப்பில் சரிக்கட்டல்களைச் செய்ய உலக வங்கியிடமிருந்து கடன்களும், பன்னாட்டு நிதியமைப்பிடமிருந்து (IMF) தனி நிதியும் பெற முடியும்; அதே சமயம் மாநில அரசுகளுக்கு அத்தகைய வசதிகள் எவையும் இல்லை. மாநிலத்தின் நிதி நிலையைச் சீரமைப்பது தொடர்பான குறிப்பிடத்தக்க நடவடிக்கைகள் எவையும் செயற்படுத்தப்படவில்லை. குறிப்பாக, நிறுவன வரியைப் பகிர்ந்து கொள்வது தொடர்பாக சர்க்காரியா கமிஷன் அளித்த பரிந்துரையைக் குறிப்பிட நான் விரும்புகிறேன். மத்திய அரசு இந்தப் பிரச்சனையைக் குறித்து ஆய்வு செய்யுமாறு குறிப்பிடாததால், அடுத்தடுத்து வந்த நிதிக் குழுக்கள்யாவும் இதனை ஆய்வு செய்ய இயலவில்லை. பொருளாதாரக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்ட இந்த நிலையில் மாநில அரசுகள்தாம் புதிய முதலீட்டைச் செய்வதற்கு முனைப்பாக ஊக்கம் தர வேண்டும் என்று இப்போதும் மத்திய அரசு கருத்துத் தெரிவித்து வருகிறது. அடிப்படை வசதிகள், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் சமூக ஆதரவுப் பணிகள், ஏற்றுமதி நடவடிக்கைகளுக்கு ஆதரவு ஆகிய வகையில் முக்கியச் செலவுகளை மாநில அரசுகள் செய்யவேண்டியுள்ள நிலையில், நிறுவன வரியின் பங்கு ஏதும் மாநிலங்களுக்கு அளிக்கப்படாதது நியாயமற்றதாகும் என்பது தெளிவு. இது தொடர்பாக அரசியலமைப்பில் தேவையான திருத்தத்தைக் கொண்டு வரவேண்டும் என்றும் நிறுவன வரியில் ஒரு பங்கை மாநிலங்களுக்கிடையே ஒதுக்கீடு செய்வது குறித்துப் பத்தாவது நிதிக் குழுவின் குறிப்பான ஆய்வுக்கு அனுப்ப வேண்டும் என்றும் நாம் மத்திய அரசைத் தொடர்ந்து வலியுறுத்துவோம்.

9. சரக்கு ஒப்படை வரி விதிப்பதில் உள்ள காலதாமதம் பற்றியும் நாம் மிகுந்த கவலை கொண்டுள்ளோம். இவ்வரி விதிப்பது குறித்து மறு சிந்தனை வேண்டியதில்லை என்று முதலமைச்சர் அவர்கள் மத்திய நிதி அமைச்சருக்கு *1992* டிசம்பரில் கடிதம் எழுதியுள்ளார்கள். மூன்று திங்கள் கால அளவுக்குள் இதற்கு வகைசெய்கிற சட்ட முன்வடிவு ஒன்று கொண்டுவரப் படவேண்டும் என்றும் கருத்துத் தெரிவித்துள்ளார்கள். அனைத்து மாநிலங்களும் வலியுறுத்தியுள்ளவாறு இந்தச் சட்ட முன்வடிவு ஒன்று நாடாளுமன்றத்தின் நடப்புக் கூட்டத் தொடரில் கொண்டுவரப்படும் என்று நாங்கள் நம்புகிறோம். பொருள் மதிப்பு மிகுமையிலான வரி மதிப்பைக் கூட்டும் வகையிலான வரியைக் (Value Added Tax) குறித்த ஆய்வு தொடர்பான அறிவிப்பு பற்றியும் நாங்கள் பெரிதும் கவலை கொண்டுள்ளோம். அத்தகைய வரி விற்பனை வரியை ஆதாரமாகக் கொண்டுள்ள மாநில நிதி ஆதாரங்களைப் பெரிதும் பாதித்து விடும். இப்பிரச்சனை குறித்து மேற்கொண்டும் ஏதேனும் நடவடிக்கை எடுக்குமுன்னர், மத்திய அரசு மாநில அரசுகளுடன் உரிய முறையில் கலந்தாலோசிப்பது பொருத்தமாக இருக்கும்.

10. வளர்ச்சிப் பணிகளுக்கான ஒதுக்கீடுகளில் உயர்வு காணும் வகையில் நாம் சேமிப்பை மேம்படுத்த வேண்டும். இந்தக் காரணத்திற்காகவே, *1993-94* ஆம் ஆண்டுக்கான மத்திய வரவு-செலவுத் திட்டத்தின் ஒரு பகுதியாக சிறு சேமிப்புக்குப் புதிய சிறப்புச் சலுகைகளை வழங்குவது குறித்து மத்திய அரசை நாம் வலியுறுத்தியிருந்தோம். *1992-93*ல் சிறு சேமிப்புத் தொகைகள் குறைவாக இருந்தபோதிலும், அண்மையில் வெளியான மத்திய அரசின், வரவு-செலவுத் திட்டத்தில் சிறு சேமிப்புகளுக்குப் புதிய சலுகைகள் எவற்றையும் வழங்குவது குறித்து மத்திய அரசு அறிவிக்க விரும்பவில்லை என்பது நம்மை ஏமாற்றம் அடையச் செய்துள்ளது. திட்டமிட்ட வளர்ச்சிக்கான நிதிவாயில்களைக் கண்டறியும் நமது முயற்சிகளுக்கு இது ஒரு பின்னடைவாகும். மத்திய அரசு நமது கோரிக்கையைச் செவிமடுத்துக் கேட்குமென்றும், குறைந்தபட்சம் சிறு சேமிப்புகளுக்காவது சில சிறப்புச் சலுகைகள் கிடைக்க வகை செய்யுமென்றும் நாம் நம்புகிறோம்.

## பத்தாம் நிதிக் குழு

11. மாநிலங்கள் மிகமிகக் கடுமையான நிதி நெருக்கடிப் பிரச்சனைகளை எதிர்நோக்கியுள்ள சமயத்தில் பத்தாம் நிதிக் குழு அமைக்கப்பட்டுள்ளது என்பதை அவையின் மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். தற்போது மாநிலங்கள் கடும் இடர்ப்பாடான நிதி நிலைமையில் உள்ளன என்பதை, நிதிக் குழு குறிப்பாகக் கவனத்தில் கொள்ளவேண்டும். ஒன்பதாம் நிதிக் குழு போதுமான அளவிற்கு நிதி ஆதாரங்களை அளிக்காத காரணத்தால், பல மாநிலங்கள் இக்கட்டான நிதி நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளன என்பதைச் சுட்டிக் காட்டுவது அவசியமாகும். கடந்த இரு ஆண்டுகளில் ஏற்பட்டுள்ள பணவீக்க நிலைமையும், அண்மையில் அடுக்கடுக்காகப் பல்வேறு பொருட்களின் நிர்ணய விலைகளை உயர்த்தியிருப்பதும் மாநிலங்களை மிக நெருக்கடியான நிதி நிலைக்குக் கொண்டு சென்றுள்ளன. மாநில அரசுகள் மக்களுக்கு மிகவும் நெருக்கமாக இருந்து செயல்பட வேண்டியவை; அவை இந்த நிலைமையைக் குறித்து ஏழை மக்களுக்கு விளக்கிக் கூற வேண்டிய விரும்பத்தகாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. பத்தாம் நிதிக் குழு, தன்னுடைய பரிந்துரைகளில் இந்த உண்மைகளைக் கருத்தில் கொள்ள வேண்டும். நிதி ஆதாரங்களை மாநிலங்களுக்கு மாற்றித் தருவதில் புதிய வழிகளை இக்குழு கண்டறிந்தாக வேண்டும்.

12. ஒன்பதாம் நிதிக் குழு செய்த பரிந்துரைகளினால், குறிப்பாகத் தமிழ்நாடு பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது. மதுவிலக்குக் கொள்கையையொட்டி ஏற்பட்ட வருவாய் இழப்பு போதிய அளவிற்குக் கருத்தில் கொள்ளப்படவில்லை. வருவாய்க் கணக்கில் செலவு குறித்து நிதிக் குழு செய்த மதிப்பீடுகள், முற்றிலும் இலக்குகளை விட்டு விலகிச் சென்றுள்ளன. நடப்பு வருவாய்க் கணக்கில் உபரிநிலை என்று ஒருபுறம் நிதிக்குழு தீர்மானித்திருந்தாலும், பற்றாக்குறையைத் தான் நம்மாநிலம் எதிர்நோக்க வேண்டியிருந்தது. மத்திய வரி வருவாயைப் பகிர்ந்தளிப்பதில், மாநிலங்கள் அனைத்திற்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள மத்திய ஆயத்தீர்வைகளின் பங்கு, உண்மையிலேயே முதலில் இருந்த அளவான 40 சதவீதத்திலிருந்து 37.575 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளதால், தமிழ்நாடு அந்த வகையிலும் பாதிக்கப்பட்டுள்ளது. திட்ட வருவாய் மானியங்களைப் பொறுத்தவரையிலும் இந்நிலையே காண்கிறோம். மொத்தத்தில் தமிழகம், தனது நிதி நிலையில் ஒரு அபாயகரமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இதன் விளைவாக தமிழ்நாட்டின் நிதி நிலையில் ஏற்பட்டுள்ள கடுமையான ஏற்றத்தாழ்வைப் பத்தாம் நிதிக் குழு கருத்தில் கொண்டு, பொருத்தமான நிவாரண நடவடிக்கைகளைப் பரிந்துரைக்க வேண்டும். விரைவிலேயே விரிவான முன் மதிப்பீடுகளையும், குறிப்புக்களையும் பத்தாம் நிதிக் குழுவிடம் சமர்ப்பிக்கவுள்ளோம். இந்த நிதிக் குழுவாவது, இன்று மாநிலத்தில் நிலவுகிற உண்மையிலேயே இடர்ப்பாடான நிதி நிலைமையைக் கவனத்தில் கொண்டு பொருத்தமான பரிந்துரைகளைச் செய்யும் என்று நம்புகிறோம்.

## எட்டாவது ஐந்தாண்டுத் திட்டம்

13. எட்டாவது ஐந்தாண்டுத் திட்டம், *1-4-1992* முதற்கொண்டு தொடக்கி வைக்கப்பட்டுள்ளது என்பதையும், இது *1992-97* ஆம் ஆண்டுக் கால அளவை உள்ளடக்கியது என்பதையும், இம்மன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். இம்மாநிலத்தை எதிர்நோக்கியுள்ள நிதி நெருக்கடியையும், மிகக் கடுமையான நிதிப் பற்றாக்குறையையும் கருதிப்பார்க்கையில், இம்மாநிலம் எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பொருளார்ந்த வகையில் தொடங்க இயலுமா? என்ற அச்சம் மேலோங்கியது. ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட அளவிற்கே எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட நிதி ஒதுக்கீட்டளவும் இருக்குமாறு விடலாமென்றும் ஆலோசனைகள் வழங்கப்பட்டன. இது நிதி ஒதுக்கீடுகளின் உண்மையான அளவில் பெருமளவு குறைப்புச் செய்வதாக அமைந்திருக்கும். தமிழ்நாடு முன்னேற்ற வழியில் செல்ல வேண்டுமெனில், இம்மாநிலத்திற்குரிய எட்டாவது திட்ட ஒதுக்கீட்டைப் பொருளார்ந்த வகையில் பெறுவதற்கு முயற்சி மேற்கொள்ள வேண்டுமென்று முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் உறுதி பூண்டார்கள். *1992* ஏப்ரலில் மத்தியத் திட்டக் குழுவின் துணைத் தலைவரும் முதலமைச்சர் அவர்களும் நடத்திய பேச்சு வார்த்தைகளை அடுத்து, தமிழ்நாட்டுக்கான எட்டாவது திட்ட ஒதுக்கீடு ரூ.*10,200* கோடியாக நிர்ணயிக்கப்பட்டது; இது ஏழாவது திட்ட ஒதுக்கீட்டளவான ரூ.*5,750* கோடியை விட, வலுவான அளவுக்கு, அதாவது *77* சதவீதம் அளவிற்கு அதிகமானதாகும்.

## ஆண்டுத் திட்டம்

14. இம்மாநிலத்தை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்ல, இவ்வரசு திட்டமிட்ட வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் அளித்துள்ளதை இம்மன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். *1991-92* ஆம் ஆண்டிற்கான திட்டச் சாதனை, அவ்வாண்டிற்கான இலக்கினை விட மேலானதாகும். *1992-93*ஆம் ஆண்டுக்கான திட்ட ஒதுக்கீடு ரூ.*1,486* கோடியாக வரையறுக்கப்படலாமென்று, அதாவது, முந்தைய ஆண்டின் ஒதுக்கீட்டளவைக் காட்டிலும் குறைவாக வரையறுக்கப் படலாமென்று ஒரு சமயம் மத்தியத் திட்டக் குழு தெரிவித்த ஆலோசனையையும் இம்மன்றத்தின் உறுப்பினர்கள் அறிவார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்ட அயராத முயற்சியினாலேயே மத்தியத் திட்டக் குழு, தன்னுடைய முடிவை மறுபரிசீலனை செய்து, *1992-93*ஆம் ஆண்டிற்கு, ரூ.*1,751* கோடி அளவிலான திட்ட ஒதுக்கீட்டிற்கு ஒப்புதலளித்தது. *1992-93* திருத்த மதிப்பீடு, தற்போது மொத்தம் ரூ.*1,810* கோடி அளவில் நிதி ஒதுக்கீட்டிற்கு, அதாவது, ஒப்புதலளிக்கப்பட்ட ரூ.*1,751* கோடி திட்ட நிதி ஒதுக்கீட்டளவுக்கும் ரூ.*59* கோடி அதிகமாகவே வகை செய்கிறது. இவ்வாறாக, திட்ட இலக்கிற்கும் மேலாகச் சாதனை புரியும் தனது வலிமையை அரசு நிலை நாட்டியுள்ளது. *1992* நவம்பரில், *1993-94*ஆம் ஆண்டுக்கான ஆண்டுத் திட்ட ஒதுக்கீடு குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேச்சு வார்த்தை நடத்தியபோது, மத்தியத் திட்டக் குழுவின் துணைத் தலைவர் இது குறித்துப் பாராட்டு தெரிவித்தார். இலக்கைத் தாண்டி எய்தும் சாதனைத் திறன்தான், *1993-94*ல் தமிழ்நாட்டிற்கு ரூ.*2,101* கோடி என்கின்ற மிகவுயர்ந்த அளவிலான ஒதுக்கீட்டிற்கு ஒப்புதலளிக்க மத்தியத் திட்டக் குழுவைத் தூண்டியது. இது *1992-93* ஆம் ஆண்டின் ஒப்புதலளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீட்டளவைக் காட்டிலும் *20* சதவீதம் அதிகமாக இருப்பதோடு, இது அனைத்து மாநிலங்களுக்கிடையேயான மிகவுயர்ந்த அளவு நிதி ஒதுக்கீடுகளில் ஒன்றாக அமைந்துள்ளது. *1993-94*ல் தமிழ்நாட்டின் நபர்வாரி திட்ட ஒதுக்கீடு மீண்டும் அனைத்திந்திய சராசரி அளவை விஞ்சும் என்பது இம்மாமன்றத்தின் உறுப்பினர்களுக்கு மிக்க மகிழ்ச்சியளிக்கக் கூடியதான செய்தியாகும். இவ்வாறாக, தமிழ்நாட்டில் திட்டமிட்ட வளர்ச்சி, முறையான வளர்ச்சி வழியில் செலுத்தப்பட்டுள்ளது. இனி, நான் பல்வேறு துறைகளில், திட்டங்கள் , திட்டப் பணிகளைக் குறித்துச் சிறிது விளக்கிக் கூற விழைகிறேன்.

## காவல் துறை

15. மாநிலக் காவல்படை, புதிய கண்ணோட்டம் கொண்டு, மாறுபட்ட புதிய வழியில், புதிய குறிக்கோளை உளங்கொண்டு செயல்படச் செய்வதே இவ்வரசின் முயற்சியாக இருந்து வந்துள்ளது. மாநிலக் காவல் படையினர் பல்வேறு நெருக்கடியான சூழ்நிலைகளில் முழுமையாக ஈடு கொடுத்து அவற்றைச் சமாளிக்கும் விதத்தில் சிறப்பாகப் பணியாற்றியுள்ளார்கள் என்பது பெருத்த மனநிறைவளிக்கக் கூடியதாக உள்ளது.

16. **வரவு-செலவுத் திட்டத்தில் காவல் படைக்கு மொத்தம் ரூ.306 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.** காவல்படையை நவீனமயமாக்கும் திட்டத்திற்காக நாம், ரூ.*80.45* கோடி தொகை வழங்கக் கோரினோம்; இதுவரை மத்திய அரசிடமிருந்து நாம் ரூ.*10* கோடி பெற்றுள்ளோம். காவல் படையை நவீனமயமாக்கும் முதல் கட்டப் பணியின் கீழ்ப் பல்வேறு இனப் பணிகளை மேற்கொள்வதற்காக அத்தொகை [illegible]

காவல் படையை நவீனமயமாக்கும் இரண்டாம் கட்டப் பணியை மேற்கொள்ள இயலும் வகையில், மத்திய உள்துறை அமைச்சர் வாக்குறுதி அளித்த ரூ.30 கோடி விரைவில் வழங்கப்படுமென்று நாம் நம்புகிறோம்.

17. சீருடைப்பணியினர் தேர்வு வாரியம் ஏற்படுத்தப்பட்டதை இம் மன்றத்தின் உறுப்பினர்கள் அறிவார்கள். **புதிதாக 10,000 காவலர்களைத் தேர்வு செய்து பணியில் அமர்த்த, இந்த வரவு-செலவுத் திட்டம் வகை செய்கிறது.** இதன் மூலம் மாநிலக் காவல் படையின் திறமையும், சாதனைகளும் பெருமளவில் மேம்படுத்தப்பட முடியும்.

18. காவல்படையின் கட்டுப்பாட்டுணர்வையும், செயல்திறனையும் மேம்படுத்த அரசு மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகளை இம் மன்றத்தின் உறுப்பினர்கள் அறிவார்கள். காவல் படையினர்க்கு இன்றியமையா உணவுப் பொருட்கள் வாங்குவதற்காக உதவித் தொகை அண்மையில் அதிகரிக்கப்பட்டுள்ளது. **நிலை II காவலர் பதவிகள் 21,000-ஐ நிலை I காவலர் பதவித் தரத்திற்கு உயர்த்தவும், நிலை I காவலர் பதவிகள் 2,700-ஐத் தலைமைக் காவலர் பதவித் தரத்திற்கு உயர்த்தவும் பெரும் திட்டமொன்று செயற்படுத்தப்பட்டு வருகிறது.** இந்த வரவு-செலவுத் திட்டம் மேற்சொன்ன திட்டங்களுக்கு நிதி ஒதுக்குகிறது.

19. காவலர் வீட்டு வசதிக்கு உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. ரூ.12.5 கோடி செலவில் 1,000 காவலர் குடியிருப்புகள் விரைவில் கட்டி முடிக்கப்படும். **மேலும், 1,000 காவலர் குடியிருப்புகளைக் கட்ட இந்த வரவு-செலவுத் திட்டம் வகை செய்கிறது.** இத்திட்டம் 'ஹட்கோவின்' நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படும்.

## புயல் - வெள்ள நிவாரணம்

20. 1992 நவம்பரில் புயல், வெள்ளத்தினால் ஏற்பட்ட சேதங்களை இம் மன்றத்தின் உறுப்பினர்கள் அறிவார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிவாரணப் பணிகளை நேரடியாக ஆய்வு செய்து மேற்பார்வையிட்டார். பல்வேறு வெள்ள நிவாரணப் பணிகளுக்காகவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதியுதவியளிக்கவும் நாம் இதுவரை ரூ.106 கோடி அனுமதித்துள்ளோம். 1993-94 ல் இடர் நிவாரண நிதிக்கு மத்திய அரசின் பங்கில் 50 சதவீதமான ரூ. 14.63 கோடி மட்டுமே கூடுதலாக நாம் பெற்றுள்ளோம். ஒன்பதாம் நிதிக் குழு, இடர் நிவாரண நிதியின் அளவு குறித்து அளித்துள்ள பரிந்துரை முற்றிலும் போதுமானதாக இல்லை என்பது தெளிவாகியது. 1.12.92 அன்று முதலமைச்சருடன் நடத்திய பேச்சு வார்த்தையில், பாரதப் பிரதமர் வாக்குறுதி அளித்த ரூ.50 கோடி கூடுதல் தொகை, மத்திய வரிகளில் மாநில அரசின் பங்குத் தொகையின் முன் பணத்தொகையாகவே பெறப்பட்டுள்ளது. அத்தொகை 1993 மார்ச்சில் சரிக்கட்டப்பட வேண்டியதாகும். ஆனால், அவ்வாறு 1993 மார்ச்சில் சரிக்கட்டல் செய்யக் கூடாதென மத்திய அரசை நாம் வலியுறுத்தியுள்ளோம். ஏனெனில், அதனால் நமக்கு அதிக நிதி இடர்ப்பாடு ஏற்படும். மத்திய அரசின் ஒப்புதலுடன் ரூ.2,560 கோடி மொத்த ஒதுக்கீட்டில் புயல் சேதச் சீரமைப்புப் பெரும்திட்டம் ஒன்றை உலக வங்கிக்கு நாம் அனுப்பி வைத்துள்ளோம். முதலமைச்சர் அவர்கள் உலக வங்கியின் நிருவாக இயக்குநருடன் இது குறித்து விவாதித்துள்ளார்கள். தற்போது பரிசீலனையில் உள்ள திட்டங்கள், இசைவு பெறக் காத்திருக்கும் புதிய திட்டங்கள் ஆகியவற்றின் கீழ், மேற்குறிப்பிட்ட திட்டத்தின் சில புதிய கூறுகளைக் கருதிப் பார்க்கவும் உலக வங்கி தன்னுடைய விருப்பத்தைத் தெரிவித்துள்ளது. இருப்பினும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்நோக்கத்திற்காகத் தனியே ஒரு திட்டத்தை வலியுறுத்தியுள்ளார்கள். இதனைக் குறித்து உலக வங்கியிடம் தொடர்ந்து அணுகவிருக்கிறோம். இத்திட்டத்திற்கு இசைவு பெற மத்திய அரசை நாம் வலியுறுத்தவிருக்கிறோம்.

## வேளாண்மை

21. தமிழ்நாட்டில், 1992 நவம்பரில் புயல், வெள்ளம் ஏற்பட்ட போதிலும், மாநிலத்தின் உணவு தானிய உற்பத்தி, எய்துவதற்கரிய இலக்கு என்றிருந்த 100 இலட்சம் மெட்ரிக் டன் அளவையும் தாண்டிச் செல்லும் என்பதை அறிந்து, மன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் பெருமகிழ்ச்சி அடைவார்கள். அயராது உழைக்கும் தமிழ்நாட்டு உழவர்களின் இந்த உயர்ந்த சாதனைக்கு நம்முடைய மனமார்ந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். 1992-93 ஆம் ஆண்டில் ரூ. 216 கோடியாக இருந்த வேளாண்மையும், அது தொடர்பான பணிகளும் குறித்த திட்ட ஒதுக்கீடு, 1993-94 ஆம் ஆண்டில் ரூ. 235 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

22. வேளாண்மைத்துறை, மாநில உற்பத்தியளவில் (State Domestic Product) கிட்டத்தட்ட 22 சதவீத உற்பத்திக்குக் காரணமாக இருப்பது மட்டுமின்றி, உழைக்கும் மக்களில் ஏறத்தாழ 60 சதவீதம் பேருக்கு வேலை வாய்ப்பினையும் அளிக்கிறது. இத்துறையில் நாம் எடுத்துச் செயற்படுத்துகின்ற கொள்கை முடிவுகள், அதிக விளைச்சல் தரக்கூடிய பயிர்களுக்காக அரிதாகக் கிடைக்கக்கூடிய நிலத்தையும், நீர் ஆதாரங்களையும் திறமையாக பயன்படுத்துவது, கிடைக்கக் கூடிய நீரைப் பயனுள்ள வகையில் சிக்கனமாகப் பயன்படுத்துதல், சுற்றுச்சூழலுக்கு ஏற்ற நடவடிக்கைகள் உட்பட, புதிய அறிவியல் தொழில்நுட்ப உத்திகளைப் பின்பற்றுவதன் மூலம் உற்பத்திச் செலவைக் கட்டுப்படுத்துதல், தரிசு நிலங்களைப் பாசனத்தின் கீழ் கொண்டுவருதல், பொதுவான அடிப்படை முறையில் ஒருங்கிணைந்த பண்ணை நிருவாகம், வேளாண்மையில் மூலதன முதலீடு செய்வதை ஊக்குவித்தல், பொருத்தமான விலைக் கொள்கைகளை வகுத்தல் ஆகிய பல்வேறு வகையான நடவடிக்கைகள் மூலமாக உற்பத்தித் திறனை விரைவில் அதிகரிப்பதற்கு முக்கியத்துவம் அளிப்பதாக இருக்கும். தமிழ் நாட்டில் வேளாண்மைத் துறை மொத்த வளர்ச்சிக்கான உந்து விசையாக மாறும் வகையில் போதிய ஆற்றலைப் பெறத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

வீட்டுவசதி:

★ 1.25 இலட்சம் குடும்பங்கள் 1993-94-ல் புதிய வீடுகள் பெற வழிவகை செய்து தரப் படும்.

★ கிராமப்புற ஏழை மக்கள் இலவச வீட்டு மனைகள் பெறுவதற்கு வருமான வரம்பு ஆண்டுக்கு ரூ.6,400-லிருந்து ரூ.9,000 ஆக உயர்த்தப்படுகிறது. இதற்கான இவ் வாண்டு ஒதுக்கீடு ரூ.86 கோடி.

23. **நெல், கரும்பு ஆகியவற்றைப் பொறுத்த வரையில், இதற்குமுன் எப்போதும் இருந்திராத அளவுக்கு உயர்ந்த அளவு கொள்முதல் விலைகள் உழவர்களுக்கு வழங்கப்பட உறுதி செய்துள்ளோம். நடப்பாண்டில் ரூ55 கோடி செலவில் கடன் நிவாரணப் பெருந்திட்டமொன்று செயற்படுத்தப்பட்டுள்ளது.**

24. வேளாண்மை ஆராய்ச்சியும், திறன் மேம்பாடும் இனிவருங்காலங்களில் உற்பத்தித் திறனை அதிகரிக்க இன்றியமையாததாக இருப்பதால், இவற்றிற்கு உயரளவு முக்கியத்துவம் அளிக்கப்படும். உலக வங்கி நிதியுதவியுடன், மொத்தம் ரூ309.29 கோடி செலவில் தமிழ்நாடு வேளாண்மை மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. **வேளாண்மை அறிவையும், திறனையும் மேம்படுத்தும் புதுமுயற்சியின் ஒரு பகுதியாக, நாங்கள், 1993-94 ஆம் ஆண்டில்,"டேனிடா" நிதியுதவியுடன், ரூ23.43 கோடி செலவில், 70,000 பண்ணை மகளிருக்கு வேளாண்மையில் பயிற்சி அளிக்கும் திட்டமொன்றைத் (TANWA-II) தொடங்கவுள்ளோம்.** ரூ.150 கோடி செலவில் உலக வங்கியின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படவுள்ள, வேளாண்மையில் மனித வள மேம்பாட்டிற்கான திட்டமொன்றையும் நாங்கள் வகுத்துள்ளோம். **ஏற்றுமதி நோக்கங்களுக்காக, அதிக மணமும் விளைச்சலும் தரக்கூடிய புதிய ஜே.ஜே. 92 நெல் ரகத்தை அறிமுகப்படுத்தியிருப்பது இம் முயற்சிக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது.** எண்ணெய் தயாரிக்கப் பயன்படும் பனை மரங்களை வளர்க்கும் திட்டத்தின் கீழ், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், நாகப்பட்டினம் காயிதே மில்லத் ஆகிய மாவட்டங்களில் 5,000 ஏக்கர் நிலப்பரப்பில் எண்ணெய்வகைப் பனை மரங்களை வளர்க்க "கோஸ்டா ரிகா" நாட்டிலிருந்து போதிய வித்துக்கள் இறக்குமதி செய்தோம். இத்திட்டம் 1993-94 ஆம் ஆண்டில் மேற்கொண்டும் விரிவுபடுத்தப்படும்.

25. நீர்வரத்துப் பகுதி நிருவாகத்தின் புதிய கொள்கைக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. 1992-93 ஆம் ஆண்டில் 77,500 ஏக்கர் நிலம் இத்திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. **1993-94 ஆம் ஆண்டில் மொத்தம் 1.21 இலட்சம் ஏக்கர் நிலத்தை இத்திட்டத்தின் கீழ் கொண்டுவரக் கருதப்பட்டுள்ளது. இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், காமராசர் ஆகிய மாவட்டங்களில் மொத்தம் ரூ.12.82 கோடி செலவில் 27,500 ஏக்கர் நிலப்பரப்பை இத்திட்டத்தின் கீழக் கொண்டுவருவதற்காக நீர்வரத்துப் பகுதி மேம்பாட்டுப் புதிய திட்டமொன்றை மேற்கொள்ள நாங்கள் "டேனிடா" நிறுவனத்தை அணுகியுள்ளோம்.** சொட்டுநீர் மற்றும் தெளிப்பு நீர்ப் பாசன முறைகளுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. 1992-93 ஆம் ஆண்டில் ரூ.3.87 கோடி முதலீட்டில் 7,500 ஏக்கர் நிலப்பரப்பை இத்திட்டத்தின் கீழ் கொண்டுவர முடிந்தது. **1993-94 ஆம் ஆண்டில், ரூ5 கோடி செலவில், இத்திட்டத்தின் கீழ் கொண்டுவரப்படும் நிலத்தின் பரப்பை 13,750 ஏக்கராக நாம் உயர்த்துவோம்.**

26. மாநிலத்திலுள்ள தரிசு நிலங்களைப் படிப்படியாகச் சாகுபடியின் கீழ்க்கொண்டு வருவது எங்களுடைய முயற்சியாகும். 1991-92 ஆம் ஆண்டில் பெருந்திட்டம் ஒன்று தொடங்கப்பட்டது. 17 மாவட்டங்களில் 25,000 ஏக்கர் நிலங்கள் இத்திட்டத்தின் கீழ்க்கொண்டு வரப்பட்டுள்ளன. **1993-94 ஆம் ஆண்டில் கூடுதலாக 37,500 ஏக்கர் நிலங்களை இத்திட்டத்தின் கீழ்க் கொண்டுவர உத்தேசிக்கப்பட்டுள்ளது.** வருகிற ஆண்டில் ரூ.6 கோடி நிதியொதுக்கீட்டுடன், மரம் வளர்ப்போர் கூட்டுறவுத் திட்டம் என்ற புதிய திட்டம் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், தருமபுரி ஆகிய மாவட்டங்களில் தொடங்கப்படும்.

27. வேளாண்மைத் துறையில் விரைவான வளர்ச்சி ஏற்பட, புதிய முதலீடுகள் போதுமான அளவில் செய்யப்பட வேண்டும். இந்த மாற்றத்தைக் கொண்டுவரத் தேவையான சூழ்நிலைகளை உருவாக்குவது எங்களுடைய முயற்சியாக இருக்கும். முதற்படியாக, ரூ.53 கோடி நிதியொதுக்கீட்டை உள்ளடக்கிய பெருந்திட்டமொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ்ச் சிறிய மற்றும் குறுநில உழவர்களுக்காகப் பம்பு செட்டுகள், பண்ணைச் சாதனங்கள், டிராக்டர்கள், ரப்பர் டயர் பொருத்தப்பட்ட மாட்டு வண்டிகள் முதலானவற்றில் புதிதாக முதலீடுகள் செய்ய முடிந்தது. 1993-94 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து இத்திட்டத்தைச் செயல்படுத்தும்படியும், வேளாண்மையில் புதிதாக மூலதன முதலீடுகளைச் செய்ய இயலும் வகையில் உழவர்களுக்குப் போதிய கடன் வசதிகளை அளிக்கும்படியும் மத்திய அரசை நாங்கள் கேட்டுக் கொண்டுள்ளோம்.

28. காய்கறிகளை உற்பத்தி செய்வது எங்களுடைய புதிய முயற்சியாக இருக்கும். **வருகிற ஆண்டில், காய்கறிப் பயிர் மேம்பாட்டு மும்முரத் திட்டம் ஒன்றைத் தொடங்க உள்ளோம். தக்காளி, கத்தரி போன்ற, பொதுவான காய்கறிச் செடிகளைப் பயிரிடுவதற்குத் தொழில் நுட்ப ஆதரவுக்கும், தொழில்நுட்பப் பணிகளுக்கும் வகை செய்ய வேண்டுமென்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். தேசிய பால் பண்ணை மேம்பாட்டு வாரியத்துடன் கூட்டாகச் சேர்ந்து, ரூ45 கோடி நிதியொதுக்கீட்டில் காய்கறிப் பயிர் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படும்.** இத்திட்டத்தின் கீழ்ப்பண்ணைப் பணிகள், சேமிப்புக் கிடங்கு வசதிகள், அங்காடி நிலவரத்தைச் சமன்படுத்தும் நடவடிக்கைகள் ஆகியவை மேற்கொள்ளப்படும். இதனால், மாநிலத்தில் காய்கறிச் செடிகள் பயிரிடுவோர் பெரிதும் பயனடைவர்.

## பாசனம்

29. தமிழ்நாடு, தன்னுடைய மேற்பரப்புப் பாசன நீர் ஆதாரங்களில் 98 சதவீதத்தையும், மதிப்பிடப்பட்ட நிலத்தடி நீர் ஆதாரங்களில் 83 சதவீதத்தையும் ஏற்கெனவே பயன்படுத்தியுள்ளது. இந்நிலையில், இம்மாநிலத்திலுள்ள நீர் ஆதாரங்களைப் பாதுகாக்கச் சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளையும் நாம் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. காவிரி நீர்ப் பிரச்சினை குறித்த நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையைச் செயல்படுத்த, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்ட உறுதியான நடவடிக்கைகளை இம்மன்றத்தின் உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். இடைக்கால ஆணையைச் செயல்படுத்த வேண்டுமென்று நாம் தொடர்ந்து வலியுறுத்திவருவோம்.

30. பெரும்பாசனம்-சிறுபாசனத் திட்ட ஒதுக்கீடு, 1992-93ல் இருந்த ரூ.91.57 கோடியிலிருந்து 1993-94ல் ரூ.119.70 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. நீர் ஆதாரங்களின் மிகக் கடுமையான பற்றாக்குறையைக் கருத்திற்கொண்டு, தற்போதுள்ள நீர் ஆதாரங்களை வருங்காலத்தில் திறமையாகப் பயன்படுத்த எடுக்கவிருக்கும் முயற்சிகள் குறித்துத் திட்டமிட்டுச் செயல்படுத்த வேண்டும். **இப்பொதுவான குறிக்கோளை மனதில் நிறுத்தி, மொத்தம் ரூ804 கோடி அளவில் நீர் ஆதாரங்கள் தொகுப்புத் திட்டம் ஒன்றை நாங்கள் தயாரித்துள்ளோம்.** இத்திட்டத்தை உடனடியாகப் பரிசீலனை செய்யுமாறு உலக வங்கியின் நிருவாக இயக்குநரை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார். உலக வங்கியும் இதனைச் சாதகமாகக் கருதிப்பார்த்து, தற்போது இத்திட்டத்தை விரிவாகப் பரிசீலனை செய்து வருகிறது.

31. பாசன ஏற்பாடுகளின் பராமரிப்பு குறித்த ஒதுக்கீட்டை மிகப் பெருமளவு உயர்த்த வரவு-செலவுத் திட்டம் வகை செய்கிறது என்பதை அறிவதில் இம்மன்றத்தின் உறுப்பினர்கள் மகிழ்ச்சியடைவார்கள். **பெரிய பாசனத் திட்டங்களின் பராமரிப்பிற்காக வருமாண்டில் ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ200ம், சிறிய பாசனத் திட்டங்களுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ264ம் என்கிற வகையில் நிதி ஒதுக்கீடுகள் செய்துள்ளோம். ஒன்பதாவது நிதிக் குழு பரிந்துரைத்த விதிமுறையளவிற்கு மேல் முதன்முறையாக இவ்வொதுக்கீடுகள் உயர்த்தப்பட்டுள்ளதை இது காட்டுகிறது.** அதே சமயம், நீர்ப்பாசனத்தில் பயனடைவோர் பாசனத் திட்டங்களின் மூலதனச்

செலவில் பங்கேற்காவிடினும், குறைந்தபட்சம் பாசனத் திட்டங்களின் நிருவாக மற்றும் பராமரிப்புச் செலவில் போதிய அளவுக்குப் பங்கேற்க வேண்டும்.

32. திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் ரூ.22.5 கோடி செலவில் வடக்குப் பச்சையாறு திட்டம் ஒன்றை நாம் மேற்கொள்ளவிருக்கிறோம். இப்பெருந்திட்டம் 1880 ஏக்கர் நிலப்பரப்பிற்கு நேரடியாகப் பாசனமளிப்பதுடன், 1418 ஏக்கர் நிலப்பரப்பிற்குப் பாசன வசதியினையும் உறுதி செய்யும். 4074 ஏக்கர் ஒருபோகப் புன்செய்ப் பயிரை இருபோகப் புன்செய்ப் பயிராக மாற்றுவதற்கும் இது வகை செய்யும்.

33. தேசிய நீர் நிருவாகத் திட்டத்திற்காக நாங்கள் ரூ.17.33 கோடி ஒதுக்கீடு செய்துள்ளோம். தொழுதூர் பொறி மதகுப் பாசனத் திட்டம், சித்தாறு நீர்த்தேக்கப் பாசனத் திட்டம் ஆகியவற்றில் நடப்பாண்டில் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. திருக்கோயிலூர் அணைக்கட்டுப் பாசனத் திட்டம், கிருஷ்ணகிரி நீர்த்தேக்கப் பாசனத் திட்டம், மஞ்சளாறு நீர்த்தேக்கப் பாசனத் திட்டம், பிளவுக்கல் நீர்த்தேக்கப் பாசனத் திட்டம் ஆகிய திட்டங்களில் வருமாண்டில் பணிகளை மேற்கொள்ளவிருக்கிறோம்.

34. தமிழ்நாட்டில் மொத்தம் 39,202 சிறுபாசன ஏரிகள் உள்ளன. இவற்றில் 18.55 இலட்சம் ஏக்கர் ஆயக்கட்டுகளைக் கொண்ட 8939 பெரிய ஏரிகள் மற்றும் பாசன ஏற்பாட்டில் சேர்க்கப்பட்ட ஏரிகள் (system tanks) பொதுப்பணித் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ளன. ஒவ்வொன்றும் 100 ஏக்கருக்குக் குறைவாக 3.96 இலட்சம் ஏக்கர் ஆயக்கட்டுக்களைக் கொண்ட 20,413 சிறிய ஏரிகள் ஊராட்சி ஒன்றியங்களின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ளன. முன்னாள் ஜமீன் ஏரிகள் என்றழைக்கப்படும் ஏனைய 9,850 ஏரிகள் எந்த அமைப்பாலும் பராமரிக்கப்பட்டு வரவில்லை. 1-4-1993 முதற்கொண்டு ஒவ்வொன்றும் 100 ஏக்கருக்கும் குறைவாக ஆயக்கட்டுள்ள முன்னாள் ஜமீன் ஏரிகள் அனைத்தையும் ஊராட்சி ஒன்றியங்களின் கட்டுப்பாட்டின் கீழும், ஒவ்வொன்றும் 100 ஏக்கருக்கும் அதிகமாக ஆயக்கட்டுள்ள ஏரிகள் மற்றும் பாசன ஏற்பாட்டில் சேர்க்கப்பட்டுள்ள (system tanks) ஏரிகள் அனைத்தையும் பொதுப் பணித் துறையின் கட்டுப்பாட்டின் கீழும் கொண்டுவர முடிவு செய்துள்ளோம். சம்பந்தப்பட்ட துறைகள் அவற்றைத் தங்கள் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் எடுத்துக்கொண்டவுடன், இந்த முன்னாள் ஜமீன் ஏரிகளுக்கு மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 2 கோடி நிதி ஒதுக்கப் பட்டுள்ளது.

35. ஐரோப்பியப் பொருளாதாரக் குழுவின் நிதியுதவியுடன் ஏரிகளை நவீனமயமாக்கும் திட்டப் பணியின் II ஆம் கட்டப் பணிகளின்கீழ் 55,284 ஏக்கர் ஆயக்கட்டுகளைக் கொண்ட 230 ஏரிகளின் பணிகள் ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1993-94ல் இத்திட்டத்திற்காக வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.24.51 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

36. புதிதாக, அணை பாதுகாப்பு-புதுப்பித்தல் திட்டம் ஒன்று உலக வங்கியின் உதவியுடன் தொடங்கப்பட்டுள்ளது. இதற்கு ஆகும் மொத்தச் செலவு ரூ.48.33 கோடி. 1993-94 ஆம் ஆண்டில் இத் திட்டத்திற்கு ரூ.3.07 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

## ஊரக வளர்ச்சி

37. இந்த அரசு ஊரகப் பகுதிகளில் விரைவான வளர்ச்சிக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருகிறது. பதவி ஏற்ற உடனேயே, நாங்கள் பேரளவிலான சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தைச் செயல்படுத்தத் தொடங்கினோம். ரூ.387 கோடி நிதியொதுக்கத்துடன் கூடிய இப்பெருந்திட்டம், அடிப்படை மற்றும் இன்றியமையாப் பணிகளை மேற்கொள்ள, ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திற்கும் ரூ. 1 கோடி நிதியொதுக்கீட்டிற்கு வகை செய்தது. இத்திட்டப் பணிகள் 1993 மார்ச்சுத் திங்களில் முழுவதுமாக முடிக்கப்படும். இத்திட்டத்தின் கீழ் பின்வரும் பணிகள் முடிக்கப்படும்.

| திட்டத்தின் பெயர் | எண்ணிக்கை | திட்டப்பணிகளின் செலவு (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| குடிநீர் வழங்கல் | 8,979 குடியிருப்புகள் | 98 |
| சாலைகள் மேம்பாடு | 7,398.6 கி.மீ. | 174 |
| தெரு விளக்குகள் அமைத்தல் | 1,68,895 | 33 |
| தொடக்கப் பள்ளிக் கட்டிடங்கள் | 2,288 | 31 |
| சத்துணவுக் கூடங்கள் கட்டுதல் | 2,933 | 20 |
| சிறுபாசன ஏற்பாடுகளைப் புதுப்பித்தல் | 5,535 | 28 |
| தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குதல் | 1,919 | 3 |

அடிப்படைத் தேவைகளுக்கு வகை செய்யும் இப்பெருந்திட்டம் அனைவரின் பாராட்டுதலையும் பெற்றுள்ளது.

38. திட்டமிடும் பணியினைப் பரவலாக்கும் நடைமுறையின் ஒரு பகுதியாக, மாவட்டங்களுக்கு நிபந்தனையற்ற நிதி வழங்கப்பட வேண்டும் என்று நாங்கள் முடிவு செய்துள்ளோம். அதிகாரப் பரவல் முறையில் அமைந்த மாவட்டத் திட்டம் ஒன்றைப் புதிதாகத் தொடங்க நாம் முடிவெடுத்துள்ளோம். மாவட்ட அளவில் நிபந்தனையற்ற நிதி கிடைக்கும்படி செய்யப்படும். மாவட்டத் திட்டம் ஒன்றின் அடிப்படையில் மாவட்ட மேம்பாட்டுக் குழுவிடம் கலந்தாலோசித்து இந்தத் தொகை பயன்படுத்துவது முடிவு செய்யப்படும். மக்களின் நீண்ட காலத் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் திட்டமிடுதல், திட்டப் பணிகளை நிறைவேற்றுதல் ஆகியவற்றில் இது பெருத்த மாறுதலை ஏற்படுத்தும். இத்திட்டத்திற்கு, வரவு-செலவுத் திட்டத்தில் மொத்தம் ரூ.20 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

39. உள்ளாட்சி மன்றங்களைத் தற்சார்புடன் இயங்கும்படி செய்தால்தான், ஜனநாயக அடிப்படையிலான அதிகாரப் பரவல் முறையை நாம் செயல்படுத்த முடியும். பல ஆண்டுகளாகத் திருத்தியமைக்கப்படாமல் இருந்த உள்ளூர் செஸ் வரியும், உள்ளூர் செஸ் மேல் வரியும் 1.7.92 முதல் திருத்தியமைக்கப்பட்டதை இம் மன்றத்தின் உறுப்பினர்கள் நினைவு கூரலாம். முக்கிய வரியான உள்ளூர் செஸ் மேல்வரி நில வருவாய் ரூபாய் ஒன்றுக்கு ரூ.2.50 ஆக இருந்தது. இது, நிலவருவாய் ரூபாய் ஒன்றுக்கு உயரளவாக ரூ.10 எனத் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. வரித் திருத்தம் தேவையே என்றாலும், அது மிதமானதாக இருக்க வேண்டும் என்கிற முக்கிய வேண்டுகோள் வந்துள்ளது. நாங்கள் இந்த வேண்டுகோளை ஏற்று, எந்த ஓர் ஊராட்சி ஒன்றியமும் நிலவருவாய் ரூபாய் ஒன்றுக்கு உள்ளூர் செஸ் மேல்வரியாக 5 ரூபாய்க்கு மேல் விதிக்காமல் இருப்பதை உறுதி செய்ய முடிவெடுத்துள்ளோம். உள்ளூர் செஸ் மேல்வரி அதிகரிக்கப்பட்டுள்ளதையடுத்து, நாங்கள் 1993-94 ஆம் ஆண்டில் ஊராட்சி ஒன்றியங்களுக்கு உள்ளூர் செஸ் மேல்வரி இணை மானியமாகக் கூடுதலாக ரூ.32.5 கோடி ஒதுக்கீடு செய்துள்ளோம்.

## கால்நடை வளர்ப்பு

40. கால்நடைகளுக்குச் சிறந்த மருத்துவப் பணிகள் அளிக்கும் பெரும் திட்டம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது என்பதை அறிவதில், பேரவை உறுப்பினர்கள் மகிழ்ச்சியடைவார்கள். இத்திட்டத்தின்கீழ், 1992-93ல் மேலும் 484 கால்நடை மருந்தகங்களுக்கும், துணை மையங்களுக்கும் உறைவிந்து வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன. ஒசூரிலும், ஈச்சங் கோட்டையிலும் உள்ள உறைவிந்து உற்பத்தி செய்யும் வசதிகள், மொத்தம் ரூ.2.52 கோடி செலவில் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், தருமபுரி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் உறைவிந்து வங்கிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

41. தொலைதூர கிராமப்பகுதிகளில் கால்நடை மருந்தகங்கள் ஏற்படுத்தும் திட்டத்தின்கீழ், 400 நடமாடும் கால்நடை மருந்தகங்கள் புதிதாக ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. மருந்துகளுக்கான ஒதுக்கீடு, நடப்பாண்டிற்கு இருந்த ரூ.3.38 கோடி என்ற அளவிலிருந்து, 1993-94 ஆம் ஆண்டிற்கு ரூ.5.00 கோடி என்ற அளவிற்கு உயர்த்தப்பட்டுள்ளது. கால்நடை நோய்களைக் கண்டுபிடிப்பதற்குச் சிறப்பு நோய்அறி பணிகள், நடப்பாண்டில் அனைத்து மாவட்டங்களிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஈரோட்டில், கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்கள் குறித்த சிறப்புத் தகவல் பிரிவு ஒன்றும், சேலம் மாவட்டத்திலுள்ள அண்டஹளூரில் கோழி இன நோய் அறி ஆய்வகம் ஒன்றும் வருமாண்டில் ஏற்படுத்தப்படும். கால்நடை நோய்களைச் சரியாக அடையாளங்காணவும், அவைகளைக் கட்டுப்படுத்தவும் நாம் மிகுந்த முன்னுரிமை அளிக்க இருக்கின்றோம்.

கல்வி:

★ ஒரு கிலோ மீட்டர் தொலைவிற்குள் அமைந்த 500 மக்கள் தொகை கொண்ட ஒவ்வொரு குடியிருப்புக்கும் ஒரு தொடக்கப் பள்ளி அமைக்கப்படும். இவ்வாண்டு 305 தொடக்கப் பள்ளிகள் புதிதாக ஏற்படுத்தப் படும்.

★ கட்டாயத் தொடக்கக் கல்விக்கான புதிய சட்டம் கொண்டு வரப்படும்.

42. தமிழ்நாட்டில், புதிய பால் உற்பத்திப் புரட்சி தொடங்கும் நிலையுள்ளது. தேசிய பால் பண்ணை மேம்பாட்டு வாரியத்தின் நிதியுதவியுடன் ரூ.68.19 கோடி மொத்தச் செலவில் மூன்றாவதுகட்ட பால் பெருக்கத் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், நாளொன்றுக்கு 4 இலட்சம் லிட்டர் பால் உற்பத்தித் திறன் கொண்ட, புதிய பாற்பண்ணை ஒன்று 1993 செப்டம்பரில் சென்னை அருகே உள்ள சோழிங்கநல்லூரில் ரூ.20 கோடி செலவில் தொடங்கப்படும். வருமாண்டில் புதிய செய்முறை மற்றும் குளிர் பதன வசதிகள் மூலம் குளிர்பதனத்திறன் நாளொன்றுக்கு 7.5 இலட்சம் லிட்டரிலிருந்து 10.11 இலட்சம் லிட்டராகவும், பால் கொள்முதல் திறன் நாள் ஒன்றுக்கு 17.04 இலட்சம் லிட்டரிலிருந்து 23.04 இலட்சம் லிட்டராகவும் அதிகரிக்கப்படும். இத்திட்டத்தின்கீழ் கொண்டு வரப்படாத மாவட்டங்களில், ஒருங்கிணைந்த பால் பண்ணை வளர்ச்சித் திட்டத்தைச் செயற்படுத்த, தேசியக் கூட்டுறவு வளர்ச்சி நிறுவனத்திடமிருந்து உதவியைப் பெற்றுள்ளோம். ரூ.4.65 கோடி செலவில் காமராஜர் மாவட்டம் இத்திட்டத்தின்கீழ்ப் பயனடைந்துள்ளது. 1993-94 ல் ரூ.2.36கோடி செலவில் கன்னியாகுமரி மாவட்டத்திலும், ரூ.3.86கோடி செலவில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்திலும் இத்திட்டத்தை மேற்கொள்ளவிருக்கின்றோம்.

## மீனளம்

43. செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர், தஞ்சாவூர், இராமநாதபுரம், சிதம்பரனார், கன்னியாகுமரி மாவட்டங்களில் மொத்தம் ரூ.15.88 கோடி செலவில் ஒருங்கிணைந்த ஆழ்கடல் மீனள வளர்ச்சித் திட்டம் ஒன்றைத் தொடங்கியுள்ளோம். 5 ஆண்டுகள் கால அளவில் செயற்படுத்தப்படவிருக்கும் இத்திட்டத்தின்கீழ், 6050 மீனவர்களுக்கு மீன்பிடி படகுகள், தளவாடம், படகுக்கு உள்ளேயும், வெளியேயும் பொருத்தப்படும் எஞ்சின்கள், வலைகள் போன்றவை வழங்கப்படும்.

44. இருவகையான அணுகுமுறைகளின் வாயிலாக உவர்நீர் இறால் பண்ணைக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்துள்ளோம். முதலாவதாகப், பெரிய தொழில் நிறுவனங்கள் இறால் பண்ணை அமைக்க ஊக்கம் அளிக்கப்படுகிறது. இரண்டாவதாக, மீனவர்களை ஒருங்கிணைத்து இறால் வளர்ப்புத் தொழிற்பேட்டைகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. சிதம்பரனார் மாவட்டத்தில் உள்ள தருவைக்குளத்தில் ரூ.7.2 கோடி செலவில், 343 ஏக்கர் பரப்பில் இறால் வளர்ப்புத் தொழிற்பேட்டை ஒன்றை ஏற்படுத்தும் பணி தொடங்கியுள்ளது. பாக் விரிகுடாவில் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் நடவடிக்கையாக மொத்தம் ரூ.7.5 கோடி செலவில் மற்றொரு இறால் வளர்ப்புத் தொழிற்பேட்டை இராமநாதபுரம் மாவட்டத்தில் ஏற்படுத்தப்படும்.

45. மாநிலத்தில் மீன்குஞ்சு உற்பத்தியை அதிகரிக்க விரைவுத் திட்டம் ஒன்றைத் தொடங்கவும் முடிவு செய்துள்ளோம். தற்போது, ஆண்டுத் தேவை 17 கோடி மீன்குஞ்சுகள் ஆகும். வழங்கல் சுமார் 6 கோடி மீன்குஞ்சுகள் மட்டுமேயாகும். மீன்குஞ்சுகள் வழங்கலை மேலும் 4 கோடி அதிகரிக்கப் பெரும் திட்டமொன்றை வரும் ஆண்டில் செயற்படுத்தவிருக்கிறோம். வரவு-செலவுத் திட்டத்தில் தூத்துக்குடி, கோட்டைப்பட்டினம் மீன்பிடி துறைமுகங்களின் மேம்பாட்டிற்காகவும் ரூ.26 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

46. மீனவர்களின் நலனை இந்த அரசு தனது முன்னுரிமைகளில் முதலாவதாக வைத்துள்ளது. மீனவர்கள் சேமிப்பு-நிவாரணத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. மீன்பிடி தொழிலில் வருமானம் இல்லாத காலங்களில் மீனவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.60வீதம் 3 மாதங்களுக்கு வழங்கப்பட்டு வந்த பயன், நடப்பாண்டிலிருந்து மாதம் ஒன்றுக்கு ரூ.270 வீதம் 4 மாதங்களுக்கு வழங்கப்படும்வகையில் உயர்த்தப்பட்டுள்ளது. 1992-93ல் திருத்திய திட்டத்திற்காகும் செலவு ரூ.5.34 கோடியாகும். இத்திட்டத்தின் மூலம் 82,000 மீனவர்கள் பயனடைந்துள்ளனர். நடப்பாண்டில் மீனவர்களுக்காக 2000

வீடுகள் கட்டி முடிக்கப்படுவதை உறுதி செய்ய, நாங்கள் ஒருமித்த நடவடிக்கையை எடுத்துள்ளோம். 1993-94 **ஆம் ஆண்டில் மேலும் 2000 வீடுகளைக் கட்டும் பணியை மேற்கொள்வோம்.**

## காட்டுவளம்

47. தற்போதுள்ள காட்டுவளங்களைப் பாதுகாக்கின்ற அதே சமயத்தில் இப்பகுதியை விரைவாக விரிவுபடுத்த வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும். நடப்பாண்டில் மொத்தம் 1.13 இலட்சம் ஏக்கர் பரப்பில் காடு வளர்ப்புத் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. வருகிற ஆண்டில் 1.25 இலட்சம் ஏக்கர் பரப்பை இத்திட்டத்தின்கீழ் கொண்டு வர நாங்கள் கருதியுள்ளோம். நடப்பாண்டில் காடு வளர்ப்புத் திட்டத்திற்கான மொத்த ஒதுக்கீடு ரூ.39 கோடியாகும். இதனோடு ஒப்பிட, 1993-94 ஆம் ஆண்டில் இது ரூ.43 கோடியாக இருக்கும்.

48. நீலகிரியிலும், ஆனைமலையிலும் உள்ள 7,500 ஏக்கர் பரப்பில் தேயிலைத் தோட்டங்களை ஏற்படுத்தும் பெருந்திட்டம் ஒன்றை மேற்கொண்டுள்ளோம். இத்திட்டத்தின்கீழ் 1,830 ஏக்கர் பரப்பு தேயிலைச் சாகுபடியின்கீழ் ஏற்கெனவே கொண்டு வரப்பட்டுள்ளது. 1993-94 **ஆம் ஆண்டில் மேலும் 1,250 ஏக்கர் பரப்பில். தேயிலை பயிரிடப்படும். வருகிற ஆண்டில் ரூ.8.5 கோடி செலவில் 3 புதிய தேயிலைத் தொழிற்சாலைகள் திறுவப்படும்.** தமிழ்நாட்டின் தேயிலையைப் பிரபலப்படுத்தி, ஏற்றுமதி செய்வதற்கான நடவடிக்கையும் நடப்பாண்டில் தொடங்கப்பட்டுள்ளது.

49. **நடப்பாண்டில் காகிதக் கூழ் மரங்கள் பயிரிடும் பரப்பை அதிகரிக்கச் செய்யும் பெருந்திட்டமொன்று தொடங்கப்பட்டுள்ளது. மொத்தம் ரூ.84.73 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டுவருகின்ற இத்திட்டத்தின்கீழ், 1992-93ஆம் ஆண்டில் 26,000 ஏக்கர் பரப்பு கொண்டு வரப்பட்டுள்ளது. 1993-94ஆம் ஆண்டில் கூடுதலாக 26,000 ஏக்கர் பரப்பு கொண்டுவரப்படும்.**

50. சுவீடன் நாட்டின் பன்னாட்டு வளர்ச்சி நிறுவனத்திடமிருந்து (SIDA) நிதியுதவி பெற்றுள்ள சமூகக் காடு வளர்ப்புத் திட்டத்தின் II வது கட்ட விரிவாக்கப் பணியைச் செயல்படுத்த வரவு-செலவுத் திட்டம் 1993-94ல் ரூ.25 கோடிக்கு வகை செய்கிறது. உலக வங்கி நிதியுதவி வழங்கவிருக்கும், ரூ.350 கோடி தற்காலிக மதிப்பீட்டில் புதிய காடு வளர்ப்புத் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது.

## தொழில்கள்

51. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உருவாக்கிய மாநிலத்திற்குரிய புதிய தொழில் கொள்கை இம்மாநிலத்தின் விரைந்த தொழில் வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைந்துள்ளது. **தொழில் தொடங்கத் தேவையான அடிப்படைவசதிகள் மற்றும் சிறப்பாக அத் தொழிலை நடத்திச் செல்லத் தேவையான ஊக்க நடவடிக்கைகள் ஆகியவற்றுடன் உருவாக் கப்பட்டுள்ள தெளிவான இத்தொலைநோக்குத் தொழில் கொள்கை, இம்மாநிலத்தில் தொழில் வளர்ச்சிக்கு உகந்த சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளது. ரூ.8,500 கோடி மூலதனத்தை உள்ளடக்கிய புதிய முதலீட்டுத் திட்டங்களைக் குறித்துக் கலந்துபேசி முடிவு காண, 1992 டிசம்பரில் முதலமைச்சர் அவர்கள் விரிவான ஆலோசனைகளை நடத்தினார்.** இதையும் சேர்த்து, மாநிலத்திலுள்ள பல்வேறு தொழில் மற்றும் மின்சக்தித் திட்டங்களில் மொத்தம் ரூ.20,000 கோடி அளவிற்குப் புதிய முதலீட்டைப் பெற முடிந்தது. மாநிலத்தின் விரைந்த தொழில் வளர்ச்சிக்கு இது தக்கதொரு நல்வாய்ப்பாக அமையும்.

52. தமிழ்நாட்டின் பொருளாதாரம், தன் எல்லைக்கும் அப்பாற்பட்டுச் செயல்பட வேண்டிய நேரமிது. இந்த நிலையைக் கருத்திற் கொண்டு, புதிய தாராளமயமாக்கப்பட்ட பொருளாதாரக் கொள்கையில் தொழில் வளர்ச்சியை விரைவுபடுத்த எங்களால் இயன்றதைச் செய்வோம். அதே நேரத்தில், சுங்கத் தீர்வைகளைக் குறைத்திருப்பது புதிதாகத் தொடங்கப்பட்ட தொழில்களின் வளர்ச்சியைத் தடுத்து நிறுத்துவதாக இருக்கக் கூடாது. புதிதாகத் தொடங்கப்பட்ட தொழில்களின் நலனுக்குப் பாதகமான வகையில் இந்திய அங்காடிகளில் பொருட்களைக் குவிப்பதைத் தடைசெய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்குமாறு நாங்கள் மத்திய அரசை வலியுறுத்துவோம்.

53. பொருளாதாரத் துறையில் வெளிநோக்குக் கொள்கையைக் கடைப்பிடிக்கும் வாயிலாக, நேரடி வெளிநாட்டு முதலீட்டை வரவேற்கிறோம். இக்காரணத்தினால்தான், சென்னையில் இந்திய-சிங்கப்பூர் வர்த்தக மையத்தை முனைப்புடன் அமைக்க முனைந்துள்ளோம். விரிவான சாத்தியக்கூறு அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. வல்லுநர் குழு ஒன்று அண்மையில் சிங்கப்பூர் சென்றுள்ளது. அமைச்சர்கள் தலைமையிலான மேல்மட்டக் குழு ஒன்று சிங்கப்பூரிலிருந்து சென்னைக்கு வந்து, முதலமைச்சருடன் விரிவாகப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது. உலக வங்கியும் ஆதரவளிப்பதாக உறுதியளித்துள்ளது. **இயன்ற அளவிற்கு மிக விரைவில் இப்புதிய மையத்தை ஏற்படுத்துவது எங்களுடைய பெருமுயற்சியாக அமையும்.**

54. தொழில் வளர்ச்சியைப் பெருக்கும் வகையில், இம்மாநிலத்தில் அடிப்படை வசதிகளை மேம்படுத்த நாங்கள் தொடர்ந்து பாடுபடுவோம். இந்த நாட்டிலேயே, சிறந்த அடிப்படை வசதிகள் கொண்ட மாநிலங்களில் தமிழகமும் ஒன்று என்று அண்மையில் இந்தியப், பொருளாதார ஆய்வு மையம் (CMIE) மேற்கொண்ட ஆய்வில் மதிப்பிட்டுள்ளது. இம்மாநிலத்தின் நிலையான வாழ்க்கைத் தன்மையும், உயர்ந்தரக அடிப்படை வசதியும் தற்போது தொழில் முதலீடு செய்வதற்குச் சாதகமான சூழலை ஏற்படுத்தியுள்ளன. **இந்த வரவு-செலவுத் திட்டத்தில் தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதிக் கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகத்திற்கு (TACID) சமவீதபங்குத்தொகையாக ரூ. 10 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.** இது, பெரியார் மாவட்டத்திலுள்ள பெருந்துறை, திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்திலுள்ள கங்கைகொண்டான், நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டத்திலுள்ள பனங்குடி ஆகிய இடங்களில் வளர்ச்சி மையங்களை ஏற்படுத்துவதில் விரைந்த முன்னேற்றத்தை உறுதி செய்வதற்காகும். இந்த வளர்ச்சி மையங்களுக்காக மத்திய அரசு அளிப்பதாக உறுதியளித்த சமவீதப் பங்குத் தொகையை அளிக்குமாறு நாங்கள் அவ்வரசைக் கேட்டுக் கொள்கிறோம். இத்துடன், தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகம் திண்டுக்கல் அண்ணா மாவட்டத்திலுள்ள நிலக்கோட்டையில் வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட தொழில்பேட்டை ஒன்றையும், தருமபுரி மாவட்டத்திலுள்ள பருகூரில் இன்னொரு சிறப்பு வளர்ச்சி மையத்தையும் ஏற்படுத்தும் பணியில் முனைப்புடன் ஈடுபட்டுள்ளது. **அடிப்படை வசதிக் கட்டமைப்புக் கடன்-நிதியுதவிப் பணிகள் நிறுவனத்தின் (ILFS) ஆதரவுடன். தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகம், திருப்பூருக்கான அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டம் ஒன்றையும் செயல்படுத்தும். மின்னணுவியல் கணினித் தொழில்** நுட்பவியல் மையம் ஒன்று ஏற்படுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இது, ரூ.40.65 கோடி திட்டச் செலவில் சென்னைக்கு அருகில் அமையவிருக்கிற புதிய மின்னணுவியல் நகரத்தின் பகுதியாக இருக்கும்.

55. **1992-93ஆம் ஆண்டில் இது வரையிலும் ரூ.200 கோடி அளவிற்கு விற்பனை வரி தள்ளிவைப்புச் சலுகைகள் அளிக்கப்பட்டுள்ளன. பல தொழிலதிபர்களும் தொழிலகச் சங்கங்களும் கேட்டுக் கொண்டதன்பேரில், தள்ளிவைக்கப்பட்ட விற்பனை வரியை, வருமான வரிச் சட்டத்தின் 43-B பிரிவின் நோக்கத்திற்காகச் செலுத்தப்பட்டதாகக் கருத, சட்டத்தில் திருத்தங்கள் கொண்டுவர நாங்கள் முடிவு செய்துள்ளோம்.** மூலதன உதவித் தொகைக் கோரிக்கைகளுக்கு விரைந்து அனுமதி வழங்கும் முறை கொண்டு வரப்பட்டுள்ளது. முன்னர் இருந்த தடைகள் நீக்கப்பட்டுள்ளன. **மாநிலத்தின் மூலதன உதவித் தொகையை உடனுக்குடன் வழங்குவதை உறுதி செய்யும் வகையில், 1992-93 வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.18 கோடியாக இருந்த நிதியொதுக்கம், 1993-94ல் ரூ.27.05 கோடியாக பெருமளவு அதிகரிக்கப்பட்டுள்ளது.** மாநிலத்தில் புதிய முதலீடுகளுக்கு வழிகாட்டியுதவும் "தொழில் வழிகாட்டி ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகம்" (GUIDANCE) என்னும் ஒரு முகவரமைப்பை நாங்கள் ஏற்படுத்தியுள்ளோம். நடைமுறைகளை மேற்கொண்டும் எளிமைப் படுத்துவதற்கும், ஒரு முனை ஒப்புதல் ஏற்பாட்டைக் (one step clearance) கொண்டு வரவும் தலைமைச் செயலாளரின் தலைமையில் முக்கியமான அரசுத் துறைச் செயலாளர்கள் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

56. அனைத்திந்திய நிறுவனங்கள், தொழில் நிதியுதவி வழங்குவதில் காணப்படும் இடையூறுகள் குறித்து நாங்கள் மனவருத்தமடைகிறோம். அனைத்திந்திய நிறுவனங்கள் மறு நிதியுதவி வசதிகளைக் குறைத்ததன் காரணமாகத் தமிழ்நாடு சிறு தொழில் ஊக்கக் கழகமும், தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனமும் நிதி இடர்ப்பாடுகளை எதிர்நோக்கியுள்ளன. இக்காரணத்தினால்தான், தென்மண்டலத் தொழில் வளர்ச்சி வங்கி ஒன்றைச் சென்னையில் அமைக்குமாறு நாங்கள் மத்திய அரசை வலியுறுத்தி வருகிறோம்.

57. சிறு தொழில்களின் வளர்ச்சியை மேம்படுத்த முனைப்பான நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ளவிருக்கின்றோம். அரசு பொதுத் துறை நிறுவனங்கள் சிறு தொழில் நிறுவனங்களுக்குத் தொகைகளை உடனுக்குடன் வழங்குவதற்கு உறுதி செய்துள்ளோம். சிறு தொழில்கட்கு இனி 1993-94ஆம் ஆண்டிலிருந்து ஆதாயம் ஈட்ட உதவும் வகையில் வட்டி வீதங்களை மேலும் குறைக்க மத்திய அரசையும், இந்திய ரிசர்வ் வங்கியையும் வலியுறுத்துகிறோம். நடைமுறை மூலதனம் ஒரு பிரச்சினையாகவே தொடர்ந்து இருந்து வருகிறது. நாயக் குழுவின் பரிந்துரைகளை விரைவில் செயற்படுத்துமாறு நாம் வலியுறுத்துவோம். சிறு தொழில் நிறுவனங்களுக்கு நிதியுதவி செய்யும் சிறு தொழில் உற்பத்தி மேம்பாட்டு அமைப்பின் (SIPPO) முயற்சிகளுக்கு நாம் ஆதரவளிக்கவிருக்கின்றோம். உயர் தொழில்நுட்பப் பேட்டைகள் திட்டத்தின்கீழ், ஜப்பானின் நிதியுதவியுடன் திருப்பூரில் முதல் தொழில்பேட்டை அமைக்கப்படவுள்ளது. **உலக வங்கியின் ஓர் இணை நிறுவனமான பன்னாட்டு நிதியுதவிக் கழகத்தின் நிதியுதவியுடன், அரிய மற்றும் புதிய முறைத் தொழில் துவங்கும் மூலதன நிதி (Venture Capital Fund) ஒன்றைத் தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் ஏற்படுத்தும்.**

58. 1991ல் தொழில் உரிமம் பெறும் முறை தளர்த்தப்படுவதற்கு முன்னர், உரிமம் வழங்கும் அதிகாரம் மத்திய அரசிடம் இருந்தது. தமிழ்நாடு போன்ற மாநிலங்களுக்கு மிகவும் பாதகமாக இருக்கும் வகையில் புதிய தொழிற்சாலைகளை அமைக்கும் இடத்தைத் தேர்வு செய்வதில் மத்திய அரசு அந்த அதிகாரங்களைப் பயன்படுத்தி வந்தது. மத்திய அரசு நேரடி ஆட்சிக்குட்பட்ட சில பகுதிகளில் புதிதாகத் தொடங்கும் தொழில்களுக்கு முதல் 5 ஆண்டுகளுக்கு இனி வரி விதிக்கப்பட மாட்டாது என்ற புதிய அறிவிப்பு மறுபடியும் தமிழ்நாட்டைப் பாதிக்கும். மத்திய அரசின் நேரடி முதலீடு மாநிலத்தில் குறைந்துள்ளதாலும் தமிழ்நாடு பாதிக்கப்பட்டது. **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் இடைவிடாத முயற்சியின் பலனாக, மணலியில் 'அரோமாட்டிக்ஸ்' திட்டத்திற்கு மத்திய அரசு ஒப்புதலளித்தது. "பம்பாய் ஹை" பகுதியிலிருந்து எரிவாயுவை தமிழ்நாட்டிற்குக் கொண்டு வருவதற்குத் தென்னக எரிவாயு இணைப்புத் திட்டத்தை ஏற்படுத்த மத்திய அரசை நாம் வலியுறுத்துவோம்.** இத்திட்டத்திற்குக் கொள்கை அளவில் அனுமதி அளிக்கப்பட்ட போதிலும், நிதி இடர்பாடுகள் இதைச் செயற்படுத்துவதில் தடையாக உள்ளன என்று கூறப்படுகிறது. இத்திட்டத்தை விரைவில் நிறைவேற்றும் வகையில் தென் மாநிலங்கள் கூட்டாகச் சேர்ந்து நிதியளிக்கலாம் என்று முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே கருத்துத் தெரிவித்துள்ளார்கள். இந்தப் பெரும் திட்டத்தை விரைவில் தொடங்குவதற்கு மத்திய அரசை நாம் வலியுறுத்துகிறோம்.

## மின் சக்தி

59. தமிழ் நாடு, ஏனைய எல்லா மாநிலங்களுடனும் ஒப்பிட, மின் வெட்டிலிருந்து அறவே விடுபட்ட மாநிலமாகத் திகழ்கிறது. மின் தேவையளவிலும், மின் வழங்கல் அளவிலும் வெட்டு எதுவும் இல்லாத மகிழ்ச்சிகரமான நிலையை எய்தியுள்ளோம். இந்நிலை தொடர்ந்து நிலவுவதை உறுதி செய்ய, அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறோம். தூத்துக்குடியில் 420 மெகாவாட் திறன் கொண்ட 4 வது, 5 வது மின் உற்பத்திப் பிரிவுகள், 1993 மார்ச் மாதத்திலிருந்து முறையாக மின் உற்பத்தியில் ஈடுபடும். 1993-94 **ஆம் ஆண்டில் வட சென்னை அனல் மின் நிலையத்தின் மின் உற்பத்திப் பிரிவு, மின் மைய ஏற்பாட்டுடன் இணைக்கப்பட்டுச் செயல்படத் தொடங்கும் போது, நாம் மேலும் கூடுதலாக 210 மெகாவாட் திறன் கொண்ட மின் சக்தியைப் பெறுவோம்.**

60. மின் சக்தித் துறைக்காக ரூ.541 கோடி அளவில் திட்ட ஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ளது. இதற்கு மேலாக ரூ.210 கோடி அளவில் முன் எப்பொழுதும் இல்லாத அளவில் கூடுதல் ஒதுக்கீடு செய்யப்பட்டு **மின் துறையில் முன் எப்போதும் இருந்திராத வகையில் மொத்த திட்ட ஒதுக்கீடு ரூ.751 கோடியாக இருக்கும்.**

61. பொதுத் துறையில் மின் சக்தி குறித்த முதலீட்டை அதிகரிக்கத் தொடர்ந்து நடவடிக்கை எடுக்கையில் வருங்காலத்தைப் பற்றியும் , கூடிவரும் பெருமளவு மின் தேவை பற்றியும் சிந்தித்துப் பார்க்க வேண்டியுள்ளது. இக்காரணத்தினால் இத்துறையில் பெருமளவில் தனியார் துறை முதலீட்டை ஆதரிக்க நாங்கள் முடிவு செய்துள்ளோம். இவ்வாறு, மொத்தம் ரூ.11,600 கோடி அளவில் 3,000 மெகாவாட் மின் உற்பத்தித் திறன் கொண்ட புதிய திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. கூட்டுத் துறையில் ரூ.7,000 கோடி முதலீட்டுடன், 1,500 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட ஜெயங்கொண்ட சோழபுரம் பழுப்பு நிலக்கரிச் சுரங்கம் வெட்டுதல்-மின் உற்பத்தித் திட்டம், தனியார் துறையில் ரூ.3,000 கோடி முதலீட்டுடன் 1,000 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட கடலூர் அனல்மின் நிலையம், நெய்வேலி பழுப்பு நிலக்கரியைப் பயன்படுத்தி ரூ.1,600 கோடி செலவில், ஒவ்வொன்றும் 250 மெகாவாட் மின் உற்பத்தி செய்யும் இரண்டு அனல்மின் நிலையங்கள் ஆகியவையே அப்புதிய திட்டங்களாகும். இதன்மூலம் ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்கு போதுமான அளவில் புதிய திட்டங்களுக்கு நாங்கள் வகை செய்துள்ளோம்.

62. தமிழ் நாட்டில் மத்திய அரசின் பல்வேறு மின் உற்பத்தித் திட்டங்கள் செயல்படுத்தப்படுவதில் காணப்படும் காலத் தாழ்வு குறித்து நாங்கள் மிகுந்த கவலை அடைந்துள்ளோம். நெய்வேலியில் மூன்றாவது சுரங்கம் வெட்டும் பணியும் அதனுடன் இணைந்த மின் உற்பத்தித் திட்டமும் உடனே தொடங்கப்பட வேண்டும். இத் திட்டங்களைச் செயல்படுத்துவது தொடர்பாக விரைந்து முடிவெடுக்கும்படி மத்திய அரசை நாங்கள் வலியுறுத்துவோம். கூடங்குளம் அணுமின் நிலையத்திற்கு நிதிதிரட்டும் பணியில் பங்கேற்கத் தயாராக இருப்பதை நாங்கள் ஏற்கெனவே சுட்டிக் காட்டியுள்ளோம். இத்திட்டத்தைச் செயல்படுத்துவது குறித்து மத்திய அரசு விரைவில் முடிவெடுக்க வேண்டும்.

63. வழங்கப்படுகின்ற மின் சக்தியின் தரத்தை மேம்படுத்தவும், மின்கம்பித் தொடர்களில் ஏற்படும் இழப்பைக் குறைக்கவும், மின் அனுப்புகை-வழங்கல் பணிகளுக்கு மேம்பாடுகளைச் செய்வதற்கு நாங்கள் மிகவுயர்ந்த முக்கியத்துவம் கொடுத்திருக்கிறோம். இதற்காக ரூ.1,278 கோடி மொத்த முதலீட்டில் ஒரு பெருந்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. **1993-94 ல் இதற்கான ஒதுக்கீடு ரூ.170 கோடியாகும். நமது குறிக்கோள், எட்டாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தற்போதைய இழப்பை 18 சதவீதத்திலிருந்து 15 சதவீதமாகக் குறைப்பதேயாகும்.**

64. தமிழ்நாடு மின் வாரியம் எதிர்நோக்குகின்ற கடுமையான நிதி இடர்ப்பாட்டைப் பேரவை உறுப்பினர்கள் நன்கறிவார்கள். விவசாய பம்புசெட்டுகளுக்கு வழங்கப்படும் மின்சக்தியின் விலை ரூ. 802.87 கோடி ஆகும். இது யூனிட் ஒன்றுக்கு ரூ.1.62 என்ற மதிப்பில் வழங்கப்பட்ட 495.6 கோடி யூனிட்டுகளுக்கு உரிய விலையாகும். விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கப்படும் திட்டத்திற்குரிய செலவு இதுவேயாகும். இந்த இழப்பைச் சரிக்கட்ட மாநில அரசு தமிழ்நாடு மின் வாரியத்திற்கு ரொக்க உதவித் தொகையாக ரூ.350 கோடி வழங்குகிறது. மேலும், அரசிடமிருந்து மின்வாரியம் பெற்றுக் கொண்ட கடன்கள் மீதான வட்டி வகையில் அரசுக்குச் சேர வேண்டிய ரூ.100 கோடியையும் அரசு தள்ளுபடி செய்கிறது. எஞ்சிய தொகையை தமிழ்நாடு மின்வாரியமே ஈடுசெய்து கொள்ள வேண்டும். பண்ணைகளுக்குச் சொந்தமான பம்பு செட்டுகளுக்கு தமிழ்நாடு மின்வாரியம், யூனிட் ஒன்றுக்கு மின் கட்டணமாக 50 காசு விதிக்க வேண்டுமென்று மத்திய அரசு தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது. இக் கட்டண விதிப்பை 31.3.1993க்கு முன்னர் நடைமுறைப்படுத்த வேண்டுமென்றும் மத்திய அரசு கருத்துத் தெரிவித்துள்ளது. ஒவ்வோராண்டும் 40,000 பம்பு செட்டுகளுக்குப் புதிதாக மின் இணைப்பு வழங்கும் திட்டத்திற்குக் கடனுதவி பெறுவது கடினமாகியுள்ளது. இப்பிரச்சினை குறித்து உழவர்களின் பிரதிநிதிகளுடன் நாங்கள் விரிவாகப் பேச்சு வார்த்தைகள் நடத்தியுள்ளோம். 1992 பிப்ரவரியில் ஒரு தடவையும், மீண்டும் 1993 பிப்ரவரியில் மற்றொரு தடவையுமாக நிலக்கரியின் விலை திருத்தியமைக்கப்பட்டதால் மின் உற்பத்திச் செலவு கூடியுள்ளது. இரயில்வே சரக்குக் கட்டணங்களும் அதிகரித்துள்ளன. மாநிலத்தின் நிதி ஆதாரங்கள் வலுவற்றுள்ள இந்நிலையில், அரசு இதற்காக தமிழ்நாடு மின் வாரியத்திற்குத் தற்போது வழங்கி வருகின்ற உதவித் தொகையான ரூ.350 கோடிக்கு மேற்பட்டு கூடுதலாக உதவித் தொகை வழங்கும் நிலையில் இல்லை. கடந்த ஓர் ஆண்டில் ஏற்பட்டுள்ள விலையேற்றத்தையாவது சரிக்கட்டியாக வேண்டும். வசதி படைத்த விவசாயிகள் இடுபொருள்களுக்குத் தகுந்த விலை செலுத்துவதற்கும், தங்களது உற்பத்திப் பொருட்களுக்கு ஆதாயமுள்ள சந்தை விலையைப் பெறுவதற்கும் ஆர்வத்தோடு முன்வர வேண்டும். மின்சாரத்தை இலவசமாக வழங்குவதால் அதனை வீணாக்க வாய்ப்பு ஏற்படுகிறது. இந்தப் பிரச்சனை குறித்து மேலும் பரிசீலித்து விரைவில் தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் ஐயமில்லை.

65. வழக்கத்திற்கு மாறான புதிய முறைசாரா எரிசக்தி ஆதாரங்களின் மேம்பாட்டிற்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கவிருக்கின்றோம். வரும் ஆண்டில் ஒருங்கிணைந்த ஊரக எரிசக்தி மேம்பாட்டுத் திட்டம் மேலும் 2 வட்டாரங்களில் விரிவு படுத்தப்படும். தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு நிறுவனம் (TEDA) 1993-94 ல் 30 கிலோவாட் சூரிய ஒளி மின்சக்தி உற்பத்தி நிலையம் ஒன்றை ஏற்படுத்தும். சூரிய வெப்பத்தினால் நீரைச் சூடுபடுத்தும் ஏற்பாட்டையும் நாம் மக்களிடையே பிரபலப்படுத்த இருக்கின்றோம்.

## சாலைகளும் சாலைப் போக்குவரத்தும்

66. சாலைகள் குறித்த நிதியொதுக்கீடு 1990-91 ஆம் ஆண்டு ரூ.166.87 கோடியாக இருந்தது; 1993-94 ஆம் ஆண்டில் இந்நிதியொதுக்கீடு ரூ.330.39 கோடியாக இருக்கும். சாலைகளுக்கான ஒதுக்கீடு 1993-94 இல் மோட்டார் வண்டி வரியின்மூலம் பெறப்படும் தொகையைக் காட்டிலும் அதிகரிக்கிறது.

67. முதல் தடவையாக 1992-93 ஆம் ஆண்டில் சாலைகள் பராமரிப்பிற்காக, ஒன்பதாம் நிதிக்குழு வரையறை செய்த நெறிமுறை அளவுக்கு அதிகமாகவே ஒதுக்கீடு அமைந்திருப்பதை உறுப்பினர்கள் இங்கு நினைவுகூரலாம். **1992-93 ஆம் ஆண்டில் சாலைகளின் பராமரிப்பிற்காக வரவு-செலவுத் திட்ட நிதியொதுக்கம் ரூ.125 கோடியாக இருந்தது. இது 1993-94 ஆம் ஆண்டில் ரூ.155 கோடியாக இருக்கும்.** சாலைகளின் முறையான பராமரிப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகளுக்கு நாங்கள் தொடர்ந்து எந்த அளவிற்கு முக்கியத்துவம் அளித்துள்ளோம் என்பதை இது புலப்படுத்தும்.

68. கடந்த காலங்களில் சாலைகள் தகுந்த அளவில் பராமரிக்கப் படாமல் இருந்ததைக் கருத்திற் கொண்டு, மொத்தம் ரூ.150 கோடி ஒதுக்கீட்டுடன் 5 ஆண்டுகளில் முடிக்கக் கூடிய **சிறப்புப் பழுது பார்ப்புத் திட்டமொன்றைத் தொடங்கியிருந்தோம். இத்திட்டத்திற்கான ஒதுக்கீடு 1993-94 ஆம் ஆண்டில் தற்போதைய ஒதுக்கீட்டு அளவான ரூ.30 கோடியிலிருந்து ரூ.40 கோடியாக அதிகரிக்கப்படும். 1993-94 ஆம் ஆண்டில் 1,500 கி.மீ. சாலைகள் மேம்படுத்தப்படும். நடப்பாண்டில், தொழிற்சாலைகள் நிறைந்துள்ள பகுதிகளுக்கு அருகேயுள்ள சாலைகளைச் சிறப்பான முறையில் பழுதுபார்க்கும் புதிய திட்டம் ரூ.5 கோடி ஒதுக்கீட்டுடன் வருகின்ற ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.**

69. உலக வங்கியின் நிதியுதவியுடன் நடப்பாண்டில் ஊரகச் சாலைகள் துணைத் திட்டம் ஒன்றைத் தமிழ்நாடு விவசாய வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நாங்கள் தொடங்கியுள்ளோம். **ரூ.45.28 கோடி மொத்த நிதியொதுக்கீட்டுடன் 800 கிலோ மீட்டர் சாலைகளை நாங்கள் இத்திட்டத்தின் கீழ்க் கொண்டு வந்துள்ளோம். இத்திட்டம் செங்கை எம்.ஜி.ஆர், தென்னார்க்காடு, வட ஆர்க்காடு அம்பேத்கார், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், நாகப்பட்டினம் காயிதே மில்லத் ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்படும்.**

70. "மக்களுக்குப் பாலங்கள்" (Bridges to People) **கட்டும் புதிய திட்டமொன்றைத் தொடங்க நாம் முடிவு செய்துள்ளோம். இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும் ஒரு பாலம் கட்ட ரூ.5 இலட்சத்திற்கு மிகாமல் ஒதுக்கப்படும். 234 சட்டமன்றத் தொகுதிகளிலும் பாலங்களைக் கட்ட இத் திட்டத்திற்காகும் மொத்தச் செலவு ரூ.11.70 கோடியாக இருக்கும்.** ஒவ்வொரு தொகுதியிலும் நிலையான சொத்து உருவாக்கப்படுவதை உறுதி செய்யும் இப்புதிய திட்டத்தை, இம் மன்றத்தின் உறுப்பினர்கள் பெரிதும் வரவேற்பார்கள் என்று உறுதிகொள்கிறேன். தமிழ்நாட்டில் புதிய சாலைகள் அமைக்கும் திட்டத்திற்கான வளவாய்ப்புக் குறித்து உலக வங்கியின் மேலாண்மை இயக்குநருடன் முதலமைச்சர் அவர்கள் அண்மையில் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். சுமார் 5,000 கி.மீ. நீளமுள்ள சாலைகளை வலுப்படுத்தவும், மேம்படுத்தவும் ரூ.500 கோடி தற்காலிக ஒதுக்கீட்டுடன் கூடிய இத்திட்டத்திற்கு உலக வங்கி ஆதரவு நல்கும்படி அவர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

71. மத்திய சாலை நிதியில் கூடுதலாகச் சேர்ந்துள்ள நிதியை, சாலைகளின் மேம்பாட்டுக்காக மாநில அரசுகளுக்குக் கணிசமாகக் கொடுத்துதவ வேண்டும் என்று நாடாளுமன்றத்தில் தீர்மானம் ஒன்று நிறைவேறியுள்ள போதிலும், மத்திய அரசு இத் தீர்மானத்தைச் செயற்படுத்த முன்வராதது எங்களுக்குப் பெரிதும் கவலையளிப்பதாக உள்ளது. மத்திய அரசு, இந்நிதியை மாநிலங்களுக்குக் கொடுத்துதவ வேண்டிய கடமை உள்ளது. இந்நிதி மாநில அரசுக்குப் பல தவணைகளில் அளிக்கப்பட்டாலும் கூட, இம் மாநிலத்தில் விரைவில் சாலை மேம்பாட்டை நாம் உறுதி செய்ய முடியும் என்று கருதுகிறோம். இம்மாநிலத்தில், சென்னை-மதுரை, சென்னை-பெங்களூர் செல்லும் தேசிய நெடுஞ்சாலைகளை நான்கு வழித்தடங்களாக அமைப்பதற்கு முன்னுரிமை அளிக்குமாறு நாங்கள் மத்திய அரசைத் தொடர்ந்து வலியுறுத்துவோம். நில அமைப்பின் மூலம் முக்கியத்துவம் உடைய கிழக்குக் கடற்கரையோர நெடுஞ்சாலையையும், நாகப்பட்டினம் - கூடலூர் - மைசூர் நெடுஞ்சாலையையும் தேசிய நெடுஞ்சாலையாகத் தரமுயர்த்த வேண்டுமென்று மத்திய அரசை வேண்டுகிறோம்.

72. பேருந்துப் போக்குவரத்துக் கழகங்கள் தற்போது இழப்பை எதிர்நோக்கி இருக்கின்றன; 1993-94 ல் இவை ரூ.125 கோடி இழப்பைச் சரிசெய்ய வேண்டியுள்ளன. 1992 செப்டம்பரில் டீசல் விலையில் ஏற்பட்ட உயர்வே இதற்குக் காரணமாகும். அந்நியச் செலாவணியை ரூபாய் மதிப்புக்கு முழு அளவில் மாற்றிக் கொள்ளத் தக்க வகையில் செய்யப்பட்ட செலாவணி முறைமாற்றத்தையடுத்து, டீசலின் விலை மேலும் உயராமல் பார்த்துக்கொள்ள மத்திய அரசை நாங்கள் வலியுறுத்துவோம். 1992 செப்டம்பரில் டீசல் விலையைக் கடைசியாக உயர்த்திய பின்னர், பேருந்துக் கட்டணங்களை நாங்கள் இன்னும் திருத்தியமைக்கவில்லை. இது, போக்குவரத்துக் கழகங்களின் செயல்பாட்டைப் பாதிக்கிறது.

## சுற்றுச் சூழல்

73. சுற்றுச் சூழல் பாதுகாப்பு நாம் பெருங்கவனம் செலுத்துகின்ற பொருள்களில் ஒன்றாக தொடர்ந்து இருந்து வருகிறது. நிரந்தர வளர்ச்சிக்கு உறுதி செய்ய இயலும் வகையில், நம்முடைய வளர்ச்சித் திட்டச் செயல்முறையை நாம் வகுப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை நாம் எடுத்துவருகிறோம்.

74. சுற்றுச் சூழலைப் பாதுகாக்கப் புதிய நடவடிக்கைகளை எடுப்பதில் தமிழ்நாடு முன்னோடியாக உள்ளது. சுற்றுச் சூழல் நிலைமையைக் கண்காணிப்பதிலும், அதனைப் பாதுகாப்பதிலும் பயனுள்ள பங்கினை ஆற்றும் பொருட்டு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் வலுப்படுத்தப்பட்டுள்ளது. **ரூ.5 கோடி செலவில், கட்டிடங்கள் மற்றும் தேவையான சாதனங்களுடன் 8 மாவட்ட ஆய்வுக் கூடங்களை ஏற்படுத்துவோம்.** இத்திட்டத்திற்கு ஆதரவு அளிக்குமாறு நாங்கள் உலக வங்கியைக் கேட்டுக் கொண்டுள்ளோம். மணலியில் அவசர கால இடர் உதவி நிலையம் ஒன்றை ஏற்கெனவே அமைத்துள்ளோம். **1993-94 ஆம் ஆண்டில் மணலியில், சுகாதாரக் கேட்டினை உண்டாக்கும் கழிவுப் பொருட்களை அகற்றும் வசதியை ஏற்படுத்தவும்** முடிவு செய்துள்ளோம்.

75. நம்முடைய நீர் ஆதாரங்களை மாசு ஏற்படாமல் பாதுகாக்க வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும். இந்நோக்கத்திற்காக, காவிரியில் மாசு கலக்காமல் பாதுகாக்கும் பெருந் திட்டமொன்றை நிறைவேற்ற நாங்கள் கருதியுள்ளோம். ரூ.332 கோடி செலவிலான இத்திட்டம், மத்திய அரசின் அனுமதியை எதிர்பார்த்திருக்கிறது. **கங்கை, யமுனை நதிகளில் மாசு கலக்காமல் காப்பதற்காக மத்திய அரசு பெருந் திட்டங்களை ஏற்கெனவே மேற்கொண்டுள்ளது. காவிரித் திட்டத்தையும், நிதியுதவிக்காக வெளிநாட்டு பொருளாதார ஒத்துழைப்பு நிதியத்திற்கு அனுப்பிவைக்க வேண்டும் என்று நாங்கள் மத்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளோம்.**

76. **உதகமண்டலம் ஏரியில் மாசு ஏற்படுத்தும் கழிவுப் பொருட்களைச் சேர்க்கின்ற அனைத்து வாயில்களையும் தடுக்கும் வகையில், ரூ.10 கோடி செலவில் பெருந் திட்டமொன்றை செயற்படுத்தி வருகிறோம்.** ஏரியில் தூர் வாருவது உட்பட, இத்திட்டப் பணி, 18 மாதக் கால அளவில் முடிவடையும் என்று நாங்கள் நம்புகிறோம். **கோடைக்கானல் ஏரியில் மாசு கலக்காமல் தடுக்கவும் திட்டமொன்றைச் செயற்படுத்துவோம்.**

## நகர்ப்பகுதி மேம்பாடு

77. தமிழ்நாடு நகர்ப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தை நாம் செயற்படுத்தி வருகிறோம். இது, உலக வங்கியின் நிதியுதவி பெறும் பெருந்திட்டமாகும். **இத்திட்டம் ரூ. 632 கோடி மொத்தச் செலவில் 1995 செப்டம்பரில் முடிக்கப்படவுள்ளது. 1993-94 ஆம் ஆண்டில், இத்திட்டத்திற்கான ஒதுக்கீடு ரூ.150 கோடியாக இருக்கும்.**

78. **நகராட்சிகளின் பல்வேறு திட்டங்களுக்கு நிதியுதவி செய்ய, நகராட்சி நகர்ப்பகுதி மேம்பாட்டு நிதி (MUDF) ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.** எல்லா நகராட்சிகளும், அனைத்து வகையான நடவடிக்கைகளுக்காக தமிழ்நாடு நகர்ப்பகுதி நிதியுதவி அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகத்தை அணுக இயலும் வகையில், இதற்கென அமர்த்தப்பட்ட ஒரே அமைப்பாக ஆக்க, இத்திட்டத்தை அதனுடன் இணைக்க நாம் திட்டமிடுகிறோம். நகராட்சிப் பகுதிகளின் தேவைகளுக்காக ஒரே இடத்தில் பரிசீலனை செய்து நிதியுதவி அளிக்கும் இந்நடவடிக்கை பெரிதும் வரவேற்கப்படும் என நான் உறுதியாக நம்புகிறேன். நகராட்சி **நகர்ப்பகுதி மேம்பாட்டு நிதியமைப்பு 1993-94ல் ரூ.60 கோடி முதலீட்டிற்கான திட்டங்களுக்கு நிதியுதவியளிக்கும்.**

79. நகர்ப்பகுதி வளர்ச்சி என்பது பல்வேறு வசதிகளை மட்டும் அமைத்துத்தருவதுடன் நின்றுவிடுவதில்லை. நகர்ப்பகுதி ஏழை மக்களின் நிலையையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டியிருக்கிறது. **வருமான அதிகரிப்புத் திட்டங்களின் மூலம் நகர்ப் பகுதிகளில் 58,533 பயனடைவோர்களுக்கு நாம் இதுவரை நிதியுதவியளித்துள்ளோம். ஏழைகளுக்கான இன்றியமையாத அடிப்படை வசதிகளை வழங்க நகர்ப்பகுதி அடிப்படைப்பணிகள் திட்டத்தை நாம் தொடங்கியுள்ளோம்.** ரூ.3.76 கோடி ஒதுக்கீட்டில் 1993-94 ஆம் ஆண்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். **1.3 இலட்சம் ஏழைக் குடும்பங்களுக்கு நகர்ப்பகுதி அடிப்படை வசதிகளை இது வழங்கும்.**

80. உலர் கழிப்பிடங்களை நீரடிக் கழிப்பிடங்களா க மாற்றவீட்டுவசதி நகர்ப்பகுதி வளர்ச்சிக் கழகத்தின் நிதியுதவியுடன் பெரும் திட்டம் ஒன்றைத் தொடங்கியுள்ளோம். இத்திட்டத்தின் கீழ் 1995 மார்ச் மாதத்திற்கு முன்னர் அனைத்து நகராட்சிகளிலும் 100 சதவீதம் என்ற அளவுக்கு இந்தப் பணியைச் செய்து முடிக்கக் கருதப்பட்டுள்ளது. 1992-93 ஆம் ஆண்டில் 27,280 கழிப்பிடங்கள் மாற்றப்பட்டுள்ளன. 1993-94 ஆம் ஆண்டில் மேலும் 80,000 கழிப்பிடங்கள் மாற்றப்படும்.

## சென்னை மாநகர் மேம்பாடு

81. சென்னை மாநகரை நாட்டின் முதன்மையான மாநகராக்கிட "எழில்மிகு சென்னை - 2000" என்னும் திட்டத்தைச் செயலாக்கியுள்ளோம். இரண்டாவது சென்னைக் குடிநீர் வழங்கல் சுற்றுப்புறத் துப்புரவுத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு முதல் முன்னுரிமையளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் ரூ.1,100 கோடியளவில் தீட்டப்பட்டுள்ளது. உலக வங்கி **இத்திட்டத்திற்கு ஆதரவளிக்குமென நாங்கள் எதிர்பார்க்கிறோம். இத்திட்டத்தின் வாயிலாக, சென்னை மாநகரின் நீர் வழிகளை மேம்படுத்தும் பணியையும் நாம் மேற்கொள்ள இயலும்.**

82. ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதியுதவியுடன் இம்மாநகரில் மின் வழங்கல் நிலைமையை மேம்படுத்த நவீனத் திட்டமொன்று செயல்படுத்தப்பட்டுவருகிறது. இத்திட்டத்திற்காகும் மொத்தச் செலவு ரூ.225 கோடியாகும். முதல் முறையாக எரிவாயு மின் துணை நிலையங்கள் ஏற்படுத்தப்படும். இத்திட்டத்திற்கு 1993-94 ல் ஒதுக்கீடு ரூ.36.58 கோடியாக இருக்கும்.

83. இம்மாநகரில் பயணிகள்-சரக்குகள் போக்குவரத்து வசதியின் தரத்தை மேம்படுத்துவது மூன்றாவது முக்கியக் குறிக்கோளாகும். இத்திட்டத்தில் விரிவான சாலை வடிவமைப்பு மற்றும் மேம்பாடு, போக்குவரத்து நெரிசல் ஏற்படுத்தும் தடைகளை அகற்றுதல், புதிய போக்குவரத்து மேலாண்மை ஏற்பாடு ஆகியவை அடங்குகின்றன. இத்திட்டத்திற்கு 1993-94 ல் ஒதுக்கீடு ரூ.70 கோடியாக இருக்கும்.

84. மிக அதிகமாக மழை பொழியும் போது, அனைத்துப் பகுதிகளிலும் வெள்ளம் சூழப்பட்டு மாநகரில் வெள்ள நீர் வழிந்தோட இயலாத வடிகால் பிரச்சினையை இம்மாநகரம் சந்திக்க வேண்டியிருக்கிறது. மாநகரின் வடிகால் வசதியை மேம்படுத்த விரிவான திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுவருகிறது. தொழில்நுட்ப அறிக்கைகள் தயாரான உடனேயே நாங்கள் தேவையான நிதியை வழங்குவோம்.

85. மாநகரில் நெரிசலைக் குறைப்பதற்கும், புறநகர் வளர்ச்சிப் பணிகளுக்கும் உரிய முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. புற நகர்ப் பகுதிகளின் அருகே புதிய நகர்ப் பகுதிகள் திட்டமிடப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

86. சென்னை மாநகரைச் சிறந்த வாழ்விடமாக உயர்த்திட, 1993-94 வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்படும் ரூ.171 கோடியுட்பட, சென்னை மாநகருக்கென மொத்தம் ரூ.275 கோடி முதலீடு செய்யப்படும்.

## வீட்டு வசதி

87. "ஒவ்வொரு குடும்பத்திற்கும் சொந்தமாக ஒரு வீடு இருக்க வேண்டும்" என்பது இந்த அரசின் குறிக்கோளாக இருந்து வருகிறது. புதிய வீட்டு வசதிக்காக மேம்படுத்தப்பட்ட மனைத் தொகுப்புகள், முன்கூட்டியே கட்டி முடிக்கப்பட்ட வீடுகள் எளிதில் கிடைத்தல், [illegible]

மும்முனைக் கொள்கையை நாம் கடைப்பிடித்து வந்துள்ளோம். வீட்டு வசதி விரைவான வளர்ச்சியினையடைய இயலும் வகையில், அரசு அமைப்புகள், தனியார் துறை ஆகிய இரண்டுக்கும் ஊக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

88. வீட்டு வசதியைப் பெருக்கும் வகையில், மேம்படுத்தப்பட்ட மனைகள் கிடைக்க ஏற்பாடு செய்வது தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் முக்கியப் பணியாகும். **தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் 1993-94 ஆம் ஆண்டில் பல்வேறு திட்டங்களின் மூலம் 10,000 மேம்படுத்தப்பட்ட மனைகளை வழங்கும்.** மேலும், **தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் 1993-94 ஆம் ஆண்டில் 10,200 வீடுகளைக் கட்டி முடிக்கும்.**

89. 1993-94 ஆம் ஆண்டில் குடிசைப்பகுதி மேம்பாட்டுப் பெருந் திட்டத்தின்கீழ்த், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் 20,000 குடும்பங்களை இத்திட்டத்தின்கீழ்க் கொண்டுவரும். விரைவுபடுத்தப்பட்ட குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் 10,000 குடும்பங்கள் பயனடையும். 5,000 குடும்பங்களுக்கு வீடு வழங்கப்படும். வெள்ளத்தால் பாதிக்கப்படக்கூடிய ஆற்றங்கரைகளில் வாழும் 55,000 குடும்பங்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் வகையில் ரூ.105 கோடி ஒதுக்கீட்டுடன் கூடிய மனையிடங்கள்-பணிகள் குறித்த சிறப்புத் திட்டம் ஒன்று நிதியுதவி அளிப்பதற்காக வெளிநாட்டு மேம்பாட்டு அமைப்பிற்கு (ODA) அனுப்பி வைக்கப்படுகிறது.

90. கூட்டுறவு வீட்டு வசதி இணையம், நகர்ப்பகுதி கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் மூலமாக நகர்ப்பகுதிகளில் 10,000 வீடுகள் கட்டப்படுவதற்கு வகை செய்யும். ஊரக வீட்டு வசதியைப் பொறுத்தவரையில், வட்ட அளவிலான வீட்டு வசதிக் கூட்டுறவுச் சங்கங்களும், **மாநில இணையமும், 1993-94 ஆம் ஆண்டில் 30,000 வீடுகளைக் கட்டி முடிக்க வசதியளிக்கும்.**

91. கிராமப் பகுதிகளில் வீடுகளை நிலை உயர்த்தும் திட்டத்தின் (SHUPRA) முதற்கட்டமாக 30,000 வீடுகளை நிலை உயர்த்தும் பணியை நாங்கள் மேற்கொண்டுள்ளோம். **1993-94 ல் மேலும் 30,000 வீடுகளை நிலை உயர்த்தும் பணியை மேற்கொள்வோம்.** நடப்பாண்டில் பல்வேறு திட்டங்களின் கீழ் 1.1 இலட்சம் குடும்பங்களுக்குப் புதிய வீடுகளைக் கட்டித் தரும் பணிக்கு ஆதரவு அளிக்க இயலும் என்பதை நான் கோடிட்டுக் காட்டியுள்ளேன். வரும் ஆண்டில் இந்த எண்ணிக்கை உயர்த்தப்பட்டு, 1.25 இலட்சம் குடும்பங்கள் இத்திட்டத்தின் கீழ் கொண்டுவரப்படும்.

**92. கிராமப்பகுதி ஏழை மக்களுக்கு, இலவச வீட்டு மனைகள் வழங்கும் 3 ஆண்டுத் திட்டம் ஒன்றைத் தொடங்க முடிவுசெய்துள்ளோம். தற்போது இத்திட்டம் ஆதி திராவிடர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் ஆகியோர்க்குப் பயனளிக்கும். கிராமப் பகுதி ஏழைமக்கள் அனைவரும் இப்புதிய திட்டத்தின்கீழ் கொண்டு வரப்படுவர். இலவச வீட்டுமனைகள் பெறுவதற்குத் தகுதிபெறுவதற்கான வருமான வரம்பு ஆண்டுக்கு ரூ.6,400 ஆகும். இதனை நாங்கள் ஆண்டுக்கு ரூ.9,000 ஆக உயர்த்துவோம். இத்திட்டத்திற்காக இந்த வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.8.6 கோடி ஒதுக்கியுள்ளோம்.**

93. போதிய கடன் வசதி கிடைக்காததே வீட்டு வசதித் திட்டத்திற்கு உள்ள முக்கியமான பிரச்சினையாகும். வீட்டு வசதித் திட்டம் பெருமளவிலான தொழிலாளர்களுக்கு ஆதரவளிக்கும் ஒரு முக்கியமான பொருளாதார நடவடிக்கை என்பது அங்கீகரிக்கப் பட்டுள்ளது. வீட்டு வசதித் துறைக்கு அதிக கடன்நிதி ஒதுக்கீடு

★ அறிவொளி இயக்கம் ஏற்கெனவே நீட்டிக்கப்பட்ட 12 மாவட்டங்களோடு மேலும் 10 மாவட்டங்களுக்கு இவ்வாண்டு நீட்டிக் கப்படும்.

★ எழுத்தறிவு இயக்கத்துடன் சேர்த்துக் கூடுதலாக 625 நூலகங்கள் ஏற்படுத்தப் படும். இதன் மூலம் 5000 மக்கள் தொகைக் கும் அதிகமாக உள்ள ஒவ்வொரு குடியிருப் பிலும் ஒரு நூலகம் அமையும்.

---

செய்வது பற்றிய பிரச்சினையை நாங்கள் மத்திய அரசிடமும் மற்றும் இந்திய ரிசர்வ் வங்கியிடமும் எடுத்துச் சொல்வோம்.

## கல்வி

94. இந்த வரவு-செலவுத் திட்டத்தில் கல்விக்காக மொத்தம் ரூ.1,802 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் திட்ட ஒதுக்கீடான ரூ.74.79 கோடியும் அடங்கும். கல்வி குறித்த ஒதுக்கீடு, வருவாய்க் கணக்கிலானச் செலவில் கிட்டத்தட்ட 22 சதவீதமாக அமைகிறது.

95. **வருமாண்டில் நாங்கள் 305 தொடக்கப் பள்ளிகளைப் புதிதாக ஏற்படுத்துவோம். இதன்மூலம், ஒரு கிலோ மீட்டர் தொலைவிற்குள் அமைந்த 500 மக்கள் தொகை கொண்ட ஒவ்வொரு குடியிருப்புகளுக்கும் ஒரு தொடக்கப்பள்ளி ஏற்படுத்தப் படுவதற்கு உறுதியளிக்கிறோம்.** மாநிலத்தில் பிறப்பு வீதம் குறைந்துள்ளதைக் கருத்திற்கொண்டு, கல்வி முறையில் நாம் தற்போது மேற்கொண்டுள்ள முன்னுரிமைகளைத் திருத்தியமைப்பது மிகவும் முக்கியமானதாகும். கல்வித் துறையில் தமிழ்நாட்டில் தனியானதொரு திட்டத்திற்கு நிதியுதவி அளிக்குமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உலக வங்கியின் நிருவாக இயக்குநரைக் கேட்டுக்கொண்டுள்ளார். இத்திட்டம் தொடக்கப்பள்ளி முறையின் தரத்தில் மேம்பாட்டைக் கொண்டுவருவதை முக்கிய நோக்கமாகக் கொண்டிருக்கும். விரிவான திட்ட அறிக்கையில் நாங்கள் தற்போது மேற்கொண்டும் மேம்பாடுகளைச் செய்துள்ளோம். கிட்டத்தட்ட ரூ.1,200 கோடி மொத்தச் செலவில் இத்திட்டத்தை மேற்கொள்ள மத்திய அரசு உலக வங்கியின் நிதியுதவியை எங்களுக்குப் பெற்றுத்தரும் என்று நாங்கள் நம்புகிறோம்.

96. மாநிலத்தின் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் தொடக்கப்பள்ளிகளை ஏற்படுத்தும் பணி முடிவடைந்துள்ளது; எனவே, **குழந்தைகளைக் கட்டாயமாகப் பள்ளிகளில் சேர்த்துக் கொள்ளவும், அவர்களைத் தொடர்ந்து படிக்க வைக்கவும் சட்டம் இயற்றுவதற்கு இது நல்ல தருணமென நாங்கள் கருதுகிறோம்.** இச்சட்டம், தற்போதைய சட்டத்தை மாற்றியமைத்து, **ஒவ்வொரு பெற்றோரும் தங்கள் குழந்தையைப் பள்ளிக்கு அனுப்பி வைப்பதைக் கட்டாயமாக்கும்.** பள்ளிப்படிப்பைப் பாதியிலேயே விட்டு விடுகிற பிரச்சினையைச் சமாளிக்கவும் ஒவ்வொரு குழந்தையும் அடிப்படைக் கல்வி எனும் அனுகூலத்தைப் பெறவும் இச்சட்டம் தெரிந்தெடுத்த சந்தர்ப்பங்களில் மட்டும் பயன்படுத்தப்படும்; **இம்மாநிலத்தில் கட்டாயக் கல்வி கற்கப் புதிய சட்டத்தைக் கொண்டுவரும் வகையில் எடுக்கப்பட்ட பரந்த விளைவைத் தரும் இந்த நடவடிக்கையை அவை உறுப்பினர்கள் அனைவரும் வரவேற்பார்கள் என்று உறுதி கொள்கிறேன்.**

97. பெரும் எண்ணிக்கையில் மாணவர்கள் இடைநிலைப் பள்ளி முறையில் சேர்வதன் பயனாக, அவர்களுக்கு நல்ல தரமான கல்வி அளிப்பதை உறுதி செய்யும் பிரச்சினை எழுந்துள்ளது. இந்த வரவு-செலவுத் திட்டம், 17 நடுநிலைப்பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், 10 உயர்நிலைப் பள்ளிகளை மேல் நிலைப் பள்ளிகளாகவும் நிலை உயர்த்த வகை செய்கிறது. சமுதாய அமைப்புகள் பங்கு கொள்ளும் புதிய திட்டமொன்றைத் தொடங்க நாங்கள் கருதியுள்ளோம். இத்திட்டத்தின் கீழ்ச் சமுதாய அமைப்புகள் வழங்கும் 50 சதவீதப் பங்குத் தொகையைக் கொண்டு புதிய பள்ளிக் கட்டிடங்கள் கட்டப்படும். எஞ்சிய தொகையை மாநில அரசு வழங்கும். **மேல்நிலைப்பள்ளி மாணவர்களும் உயர்நிலைப் பள்ளி மாணவர்களும் மாநிலம் முழுவதிலும் உள்ள பல்வேறு அரசுத் துறைகளில் உருவாக்கப்பட்டுள்ள கணினி வசதிகளைப் பயன்படுத்தி, இத்துறையில் தேர்ச்சி பெறும் புதிய திட்டம் (CIL) ஒன்றும் செயல்படுத்தப்படவுள்ளது.**

98. எல்லோருக்கும் எழுத்தறிவிக்கும் இயக்கத்தின் ஓர் அங்கமாக, "அறிவொளி இயக்கம்" இதுவரையிலும் 12 மாவட்டங்களில் நீட்டிக்கப்பட்டுள்ளது. **அடுத்துவரும் ஆண்டில் 10 மாவட்டங்களில் இத்திட்டம் நீட்டிக்கப்படும். இவ்வாறாக, மாநிலம் முழுவதிலும் இத்திட்டம் நீட்டிக்கப்படும். மாநிலத்திலுள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் இத்திட்டத்தை நீட்டிப்பது குறித்து ஏற்படும் மொத்தச் செலவு ரூ.51.63 கோடியாக இருக்கும். இத்திட்டம் 86.08 இலட்சம் பேருக்குப் பயனளிக்கும்.** எழுத்தறிவு இயக்க நிலைக்குப் பிந்தைய இயக்கம் ஒன்றையும் நாங்கள் தொடங்கியுள்ளோம். எழுத்தறிவு இயக்கத்தின் மூலம் அடைந்த பயன்களை இந்த இயக்கத்தின் வாயிலாக உண்மையிலேயே தக்கவைத்துக் கொள்ள இயலும். **எழுத்தறிவு இயக்கத்துடன் சேர்த்து, கூடுதலாக 625 நூலகங்களையும் ஏற்படுத்தவுள்ளோம். அதன் மூலம் 5000 மக்கள் தொகைக்கும் அதிகமாக உள்ள ஒவ்வொரு குடியிருப்பிலும் ஒரு நூலகம் ஏற்படுத்தப்படும்.**

99. நடப்பாண்டில் **உலக வங்கி நிதியுதவியுடன் மொத்தம் ரூ.76 கோடி செலவில் தொழில் நுட்பப் பணியாளர் கல்வித் திட்டத்தைத்** தொடங்கியுள்ளோம். 55 பல்தொழில் நுட்பப் பயிலகங்கள் இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்காக 1993-94 ஆம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் ரூ.4.86 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

100. பள்ளிக் கல்விக்குக், குறிப்பாகத் தொடக்கக் கல்விக்கு அதிக நிதி ஆதாரங்கள் கட்டாயத் தேவை இருப்பதைக் கருத்திற் கொண்டு, உயர் கல்விப் பணிகளில் தகுந்த கட்டணம் வசூலிப்பது அவசியமாகிறது. இம்மாநிலத்திலுள்ள பல்கலைக் கழகங்களுக் கிடையில் நடவடிக்கைகளைச் சிறந்த முறையில் ஒருங்கிணைக்கும் வகையில் மாநில உயர்கல்வி மன்றத்தை ஏற்படுத்தியுள்ளதை உறுப்பினர்கள் அறிவார்கள். பல்கலைக் கழக மானியக் குழு ஆதரவளிக்கும் பல்கலைக்கழகங்களின் திட்டப் பணிகளுக்குத் தேவையான உரிய பங்கை வழங்க, மாநில உயர்கல்வி மன்றத்திற்கு மேம்பாட்டு மானியமாக ரூ.50 இலட்சம் வழங்கப்படும்.

101. **சென்னையில் ரூ.40 கோடி செலவில் புதிதாக ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம் ஒரு குறிப்பிட்ட கால அளவான 7 1/2 மாதங்களில் கட்டி முடிக்கப் பட்டுள்ளது. இந்த விளையாட்டரங்கம் முதலமைச்சர் அவர்களின் தொலை நோக்கிற்கும், உறுதிப்பாட்டிற்கும் ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகிறது.** மாநிலத்தில், போட்டி விளையாட்டுக்களுக்கான ஒரு விரிவான கொள்கையை வகுக்க

நாங்கள் முடிவு செய்துள்ளோம். எல்லா விளையாட்டுக்களுக்கும், விளையாட்டுப் போட்டிகளுக்கும் தனி ஊக்கம் அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தியுள்ளார்கள். மாநிலத்தில் போட்டி விளையாட்டு வளர்ச்சிக்கென விளையாட்டுக்கள் வளர்ச்சி அதிகார மன்றத்தினை ஏற்படுத்தியுள்ளோம். விளையாட்டுகளில் சிறந்து விளங்கும் குழந்தைகளின் விளையாட்டுத் திறனை இளம் வயதிலிருந்தே ஊக்குவிப்பதற்கான புதிய திட்டமொன்றைத் தொடங்க நாங்கள் முடிவு செய்துள்ளோம். **புதுக்கோட்டை, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், நாகப்பட்டினம்-காயிதே மில்லத், திண்டுக்கல் -அண்ணா, இராமநாதபுரம், திருவண்ணாமலை -சம்புவராயர் ஆகிய ஆறு மாவட்டங்களில் ஒவ்வொன்றும் ரூ.60 இலட்சம் செலவில் விளையாட்டு மையம் மற்றும் விளையாட்டரங்க வளாகங்கள் நிறுவ நாங்கள் முடிவு செய்துள்ளோம்.** இத் திட்டம், மொத்தம் ரூ.3.60 கோடி செலவில் மத்திய அரசிடமிருந்து பெறும் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும்.

## தமிழ் வளர்ச்சி - பண்பாடு

102. தற்போது இயங்கிவரும் பல்வேறு அமைப்புகளை ஒருங்கிணைத்து கலை-பண்பாட்டு இயக்ககம் ஒன்றை நாம் புதிதாகத் தோற்றுவித்துள்ளோம். அண்மையில் புதுப்பிக்கப்பட்ட அரும் பொருட்காட்சியக அரங்கில் திறமை மிக்க இளம் கலைஞர்களைக் கொண்டு புதிய நிகழ்ச்சிகளை இந்த இயக்ககம் அளித்து வருகிறது. **கிராமியக் கலைப் பயிற்சி ஆராய்ச்சி நிலையம் ஒன்று மதுரையில் ஏற்படுத்தப்படும்.**

103. மதுரையில் உள்ள இசைப் பயிற்சி நிலையத்துக்கென்று இடவசதி அளிக்க புதிய கட்டிடம் ஒன்று கட்டப்படும். **புதிதாக இசைப் பயிற்சி நிலையம் ஒன்று கோயம்புத்தூரில் ஏற்படுத்தப்படும்.**

104. நாடகக் குழுக்கள் நாடகம் நடத்தப் பேருந்துகளில் பயணம் செய்யும்போது, அவர்களுக்கு 50 சதவீத கட்டணச் சலுகை அனுமதிப்பதன் மூலம் இக்குழுக்களுக்குத் தனி ஊக்கம் அளிக்கப்படுகிறது.

105. பெருங்கடல்களிடையே கலம் செலுத்திய நமது வரலாற்றுச் சிறப்பை ஆவணப்படுத்துவதற்கான முன்னோடித் திட்டம், தேசியக் கடலியல் நிறுவனத்துடன் கூட்டாகச் சேர்ந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது. மதுரையில் உள்ள திருமலை நாயக்கர் அரண்மனையைப் புதுப்பிக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளோம். வரும் ஆண்டில் சரஸ்வதி மஉறால், தஞ்சாவூர் அரண்மனை ஆகியவற்றைப் புதுப்பிக்கவும், சீரமைக்கவும் நாம் நடவடிக்கை மேற்கொள்ளவிருக்கின்றோம்.

106. **மாண்புமிகு முதலமைச்சர் அறிவித்துள்ளவாறு, எட்டாம் உலகத் தமிழ் மாநாடு 1994 இல் தமிழ்நாட்டில் நடைபெறும் என்பதை அறிவதில், இம்மன்ற உறுப்பினர்கள் மகிழ்ச்சியடைவார்கள். உலகமெங்கும் உள்ள தமிழ் அறிஞர்களும், வல்லுநர்களும் ஒரே இடத்தில் கூடுவதற்கு இது வகை செய்யும். இம்மாநாட்டை மிகப் பேரளவில் சிறப்புடன் நடத்துவதற்கு நாங்கள் தயாராகி வருகிறோம்.**

## சுகாதாரம் - குடும்பநலம்

107. பொருளாதாரக் கட்டமைப்பு நடவடிக்கைகளில், சுகாதாரத் துறைக்கு, குறிப்பாகத் தொடக்கச் சுகாதாரத்திற்கான நிதி ஒதுக்கீடுகள் காக்கப்படுவது முக்கியமானதாகும். **1993-94ல் சுகாதாரம்-குடும்பநலத்திற்கான ஒதுக்கீடு முன் எப்போதும் இருந்திராத உயரளவான ரூ.554.70 கோடியாக இருக்கும்.** மருந்துகளுக்கான நிதியொதுக்கம், நடப்பாண்டிற்கு இருந்த ரூ.70 கோடி என்ற அளவிலிருந்து, வருமாண்டிற்கு ரூ. 75 கோடி என்ற அளவிற்கு உயர்த்தப்பட்டுள்ளது. **தொடக்கச் சுகாதார நலன், குடும்ப நலன் ஆகியவற்றுக்கான ஒதுக்கீடு 1992-93ல் ரூ.137.21 கோடி என்ற அளவிலிருந்து, 1993-94ல் ரூ.174.21 கோடி என்ற அளவிற்கு அதிகரிக்கப்பட்டுள்ளது.**

108. நடப்பாண்டில் தொடக்கச் சுகாதார நிலையங்களில் மருந்துகள், மருந்துப் பொருட்களுக்கான நிதி ஒதுக்கத்தை ரூ.40,000லிருந்து ரூ.50,000 ஆக நாம் உயர்த்தியுள்ளோம். **1993-94 ஆம் ஆண்டில் மருந்துகள், மருந்துப் பொருட்களுக்கான நிதி ஒதுக்கம், ரூ.50,000லிருந்து ரூ.75,000 ஆக உயர்த்தப்படும். இதற்காகும் கூடுதல் செலவு ரூ.3.37 கோடியாகும்.**

109. 'புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா மருத்துவ நலத்திட்டம்' நம் நாட்டில் வேறு எங்கும் ஏற்படுத்தப்படாத மிகப் பெரிய நல்வாழ்வுத் திட்டமாகும். இத்திட்டத்தின் கீழ் 9226 முகாம்கள் நடத்தப்பட்டன. 51.6 இலட்சம் மக்கள் பயனடைந்தனர். **இத்திட்டத்தையொட்டி, தாய் சேய் நல முகாம்கள் நடத்தும் புதிய திட்டம் ஒன்றும் தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 1993-94 ஆம் ஆண்டில் 1600 முகாம்கள் நடத்தப்படும்.**

110. **உடல் நலம் அதிகம் பாதிக்கப்படும் நிலையிலுள்ள தாய்மார்களைக் கண்டறிந்து வல்லுநர்கள் நிறைந்த மருந்தகங்களுக்கு அனுப்பும் பணியை (referral service) உலக வங்கியின் நிதி ,உதவியுடன் செயல்படுத்தவுள்ளோம். இத்திட்டத்திற்கென ரூ.6.32 கோடி செலவில் தொடக்கச் சுகாதார நிலையங்களுக்கு 316 வண்டிகள் வழங்கப்படவுள்ளன.**

111. நாங்கள் "யுனிசெப்" நிறுவனம், உலக வங்கி ஆகியவற்றிடமிருந்து கிடைக்கும் நிதியுதவியைக் கொண்டு, "ஈன்ற குழந்தையின் உயிர் காத்தல் மற்றும் பாதுகாப்பான தாய்மைப் பேறு" பற்றிய திட்டத்தைச் செயற்படுத்துகிறோம். **சேலம், திண்டுக்கல் அண்ணா, மதுரை, காமராசர் ஆகிய மாவட்டங்களை இத்திட்டத்தின்கீழ் கொண்டுவரும் இரண்டாம் கட்டப்பணி, 1993 ஆம் ஆண்டில் தொடங்கப்படும்.** 8681 மருத்துவத் துணை நிலையங்கள் ஒவ்வொன்றும் அவற்றைச் சேர்ந்த சுகாதாரப் பணியாளர்களும் உரிய மருத்துவக் கருவிகள் அடங்கிய சிறு பெட்டி ஒன்றினையும், அடிப்படை மருந்துப் பொருட்களையும் பெறுவதற்கு உறுதி செய்யத் தேவையான நிதி ஒதுக்கியுள்ளோம். தடுப்பூசி போடுதல், வயிற்றுப்போக்கு நோய்களைத் தடுத்தல் ஆகியவற்றிற்குத் தொடர்ந்து முக்கியத்துவம் அளிப்போம்.

112. **வரும் நிதியாண்டில், "டேனிடா" நிறுவன நிதியுதவியுடன், தருமபுரி, நாகப்பட்டினம்-காயிதே மில்லத், தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கும் சுகாதாரப் பாதுகாப்புத் திட்டமொன்றைத் தொடங்குவோம். இத்திட்டம் ரூ.34.83 கோடி செலவில் இந்த மாவட்டங்களில் தரம் உயர்த்தப்பட்ட தொடக்கச் சுகாதாரக் காப்புப் பணிகளை அளிக்கும்.**

113. தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொரு வட்டத்திலும் குறைந்தது 32 படுக்கை வசதிகளைக் கொண்ட பொருத்தமான ஒரு மருத்துவமனை



# மக்கள் என்பக்கம் இருப்பதால், இறுதி வெற்றி எனக்குத்தான்!

## சேலம் விழாவில் முதல்வர் உரை

ஆர்ப்பரித்து, அலைகடலென இங்கே திரண்டு, என்னைப் பாசத்தோடு வரவேற்கக் காத்திருக்கும் உங்கள் முகங்களில், நான் காணுகின்ற ஒளியையும், பெருமிதத்தையும், மகிழ்ச்சியையும் கண்டு, பெரும் பூரிப்படைகின்றேன். எத்திசை நோக்கினும், எங்கிருந்து வந்தது இந்த மக்கள் வெள்ளம், என்று எண்ணத் தோன்றிடும் மக்கள் கடலின் மத்தியில், இன்று மாங்கனி நகராம் சேலத்தில், உங்களைச் சந்திப்பதில், மட்டற்ற மகிழ்ச்சி கொள்கிறேன். என்னை வளர்த்து, ஆதரித்து, அன்பு காட்டிவரும் தமிழ்ப் பெருமக்களுக்காக, அல்லும் பகலும் நான் தொடர்ந்து பாடுபட்டு வருவதன் பலன், முழுமையாக உங்களைச் சென்றடைகிறது என்பதன் அடையாளமே, இங்கே திரண்டுள்ள மக்கள் கூட்டம் என்பதை அறிந்து, நிம்மதி அடைகின்றேன்.

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாய், உலக அரங்கில் பட்டொளி வீசிப்பவனி வந்து கொண்டிருந்த தமிழகம்; எத்தனை எத்தனையோ இன்னல் நேர்ந்த காலங்களில் எல்லாம், தன் நிறம் மாறாமல், ஒளி குன்றாமல், வரலாற்றில் தனக்கென, ஓர் தனி இடத்தைப் பெற்று வந்த தமிழகம்; இடையில் ஏற்பட்ட சில அரசியல் மாற்றங்களினாலும், பொருளாதாரப் பின்னடைவுகளினால் உருவாக்கப்பட்ட பெரும் நெருக்கடியினாலும், வன்முறைக் கலாச்சாரத்தினாலும், தட்டுத் தடுமாறி, தவித்து நின்ற காலக் கட்டத்தில், உங்கள் அன்புச் சகோதரியான என் மீது, நீங்கள் முழு நம்பிக்கை வைத்து, தமிழகத்தை ஆளும் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்தீர்கள்;

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை, மீண்டும் ஆட்சிக் கட்டிலில் அமர்த்தினீர்கள். அந்த உங்கள் நம்பிக்கை வீண் போகாது, பேரறிஞர் அண்ணாவும், இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரும், கற்றுத் தந்த கடமை உணர்வோடும், தமிழ் நிலத்திற்கே உரித்தான கட்டுப்பாடு, மற்றும் கண்ணிய மிக்க பண்பாட்டோடும், தமிழர்களை எவரும் பயமுறுத்திப் பணிய வைத்துவிட முடியாது என்ற உண்மையை, உலகமும், இந்தியத் துணைக் கண்டமும், உணர்கின்ற வகையில் தான், கடந்த ஒன்றே முக்கால் ஆண்டுக் காலமாக, மக்கள் நலனை மட்டுமே மூலக் கருத்தாயக் கொண்டு, நீங்கள் இட்ட கட்டளைகளைச் சிரமேற்கொண்டு செயல்படுத்தி வந்துள்ளேன்.

தமிழகத்தின் ஒவ்வொரு வீட்டிலும், விளக்கேற்றி வைப்பதே என் குறிக்கோள் என்ற தூளுரை எடுத்துத்தான், முதலமைச்சர் நாற்காலியில் நான் அமர்ந்தேன்; அந்த என் இலட்சியம் நிறைவேறும் நாள் வரை, ஓயாது ஒழியாது உங்களுக்காக உழைத்துக் கொண்டே இருப்பேன்.

இந்த என் இலட்சியப் பயணத்திற்கு எதிராக, எத்தனை எத்தனை இடையூறுகள் வந்தாலும், புற்றீசல் போல், புல்லுருவிகளால், இன்னல்கள் தோற்றுவிக்கப்பட்டாலும், இங்கே இலட்சோப இலட்சமெனத் திரண்டிருக்கும், மக்கள் சக்தியின் துணை கொண்டு, அவற்றை வீழ்த்திக் காட்டுவதோடு, விரட்டி அடிக்கவும் முடியும், என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

தமிழகத்தில் கடந்த ஒன்றே முக்கால் ஆண்டுக் காலமாக, உங்கள் அன்புச் சகோதரியின் தலைமையில், ஓர் நல்லாட்சி அமைந்ததன் பலன்; இன்று இலட்சோப இலட்சம் மக்கள் வாழ்வில், ஒளி வீசுகின்றது. இதோ, இன்று உங்கள் கண் முன்னே, சேலம் மாவட்ட மக்களின் நலனுக்காக, 353 கோடி ரூபாய்க்கான திட்டங்களை, நான் இன்று தொடங்கி வைத்துள்ளேன்.

அடிமட்டத்தில் - நசுக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டுக் கிடக்கின்ற, ஏழை எளிய மக்களின் வாழ்வில் ஒளியேற்றும், பல சீர்மிகு மக்கள் நலத் திட்டங்களின் கீழ், உதவிகள் பலவற்றை, இங்கே வழங்க உள்ளேன்.

நிறைவேற்றப்பட்டு, இன்று பயன் தரும் வகையில், தொடங்கி வைக்கப்படும் திட்டங்கள், மற்றும் பணிகள் மட்டும், 83 கோடியே 53 இலட்சம் ரூபாய்க்கு உரியது ஆகும். மேலும், அரசின் ஒப்புதல் அளிக்கப்பட்டு, இன்று அடிக்கல் நாட்டப்படும் பணிகளின் மதிப்பு மட்டும், 249 கோடியே. 95 இலட்சம் ரூபாய் ஆகும். அதாவது, ஏறத்தாழ 250 கோடி ரூபாய்!

இவை மட்டும் அல்லாது, நேரடியாக வறுமைக் கோட்டிற்கும் கீழே வாழ்ந்து, வதங்கிக் கொண்டிருப்போருக்கும், தாழ்த்தப்பட்டோர் மற்றும் சமுதாயத்தில் பின் தங்கியிருப்போர், ஏழை எளியோர் என, ஏறத்தாழ 58,552 பேருக்கும், 19 கோடியே 72 இலட்சம் ரூபாய் மதிப்பிலான, பல நலத் திட்ட உதவிகள், இன்று இங்கே வழங்கப்பட உள்ளன. எல்லாவற்றையும் கூட்டிப் பார்ப்பீர்களானால், சேலம் மாவட்ட மக்களுக்கென, மொத்தம் 353 கோடியே 21 இலட்சம் ரூபாய் மதிப்பிலான திட்டங்களை, உங்களுக்கு அர்ப்பணிக்கும் விழா தான், இன்றைய விழா என்பதை அறிவீர்கள்.

இன்றைய தினம், இங்கே கோடிக் கணக்கான ரூபாய் மதிப்பீட்டில், தொடங்கி வைக்கப்படும் பணிகளின் பலன், நமக்குக் கிட்டும் நாள், வெகு தொலைவில் இல்லை என்பதையும். தெரிவித்துக் கொள்கிறேன். தொடங்கி வைக்கப்படும் ஒவ்வொரு திட்டமும், இந்த இந்தக் காலக் கெடுவுக்குள் முடித்தாக வேண்டும், என்ற கடுமையான உத்தரவோடு தான், கால்கோள் நாட்டப் பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய தினம், இம்மாவட்ட மக்கள், மன நிறைவு கொள்ளத்தக்க வகையில், இங்கே நிறைவேற்றப்படும் இத்திட்டஙகளைப் போல், கடந்த ஒன்றே முக்கால் ஆண்டுக் காலத்தில், தமிழக மக்கள் அடைந்த பலன்கள், கணக்கற்றவை ஆகும்.

தமிழகம் இன்றைக்கு ஆக்கபூர்வமான திட்டங்களை, ஆய்ந்து தீட்டி, அருஞ்செயல்கள் புரிந்து, மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக, முன்னேற்றப் பாதையில் வெற்றி நடைபோடுகிறது என்றால், அது மிகையாகாது.

இதன் பின்னரும் என்னைச் சிலர் ஏசுகிறார்கள்; ஈனம் பேசுகிறார்கள்; இன்னும் சிலர் பின்னாலிருந்து முதுகிலே குத்திட, நேரம் பார்த்துக் காத்திருக்கின்றார்கள்.

தமிழகத்தில் தற்போது, வேலையற்ற வீணர்களின் பிதற்றல் பெருத்து வருகிறது. 'வேலையற்ற வீணர்களின் மூளையற்ற வார்த்தைகளை வேடிக்கையாகக் கூட, தமிழக மக்கள் நம்பிவிட மாட்டார்கள்', என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. எனவே வேறு எந்தச் சிந்தனைக்கும் இடமளிக்காது, தொடர்ந்து தொய்வின்றி, உங்களுக்காகப் பணியாற்றுவதே என் கடமை என்பதை, நெஞ்சில் நிறுத்திச் செயல்படுகிறேன் என்பதை, இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

வரலாற்றில் நம்முடைய பழம் பெருமையும், நாகரீகமும், முதல் இடம் பெற்றுத், தழைத்தோங்கி வந்திருந்தாலும், நவீன வளர்ச்சிக்கு ஏற்றவாறு, நம் பொருளாதாரம் சிறந்தோங்கிடவில்லை. அறிவியல், தொழில் நுட்ப வளர்ச்சியின் வேகத்தோடு, நமது பொருளாதார வளர்ச்சி பற்றிக் கவனம் செலுத்தாத ஓர் தேக்க நிலை, தமிழகத்தில் இருப்பது அறிந்து, பெரும் வேதனை அடைந்தேன்.

கடந்த 20 ஆண்டுகளில், மத்திய அரசின் சார்பில், எந்த ஒரு பெருந் தொழிலும் தமிழகத்தில் தொடங்கப்பட





வில்லை என்றால், எண்ணிப் பாருங்களேன் - எந்த அளவுக்கு நாம் புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளோம் என்பதை.

இதே சேலத்தின் அருகில், பெருமளவில் கிடைக்கும் இரும்புத் தாதுவைப் பயன்படத்தி, இரும்பு எஃகு ஆலை அமைக்குமாறு, தொடர்ந்து வற்புறுத்தியும், உருக்காலைக்குப் பதிலாக, உருட்டாலைதான் தொடங்கினார்கள் என்பதை, நீங்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள்.

இந்நிலையில் தான், ஆட்சிப் பொறுப்பேற்றது முதல், மீண்டும் மீண்டும் தொடர்ந்து வற்புறுத்தியதன் பலனாக, சென்னை அருகே 2,000 கோடி ரூபாய் முதலீட்டில், ஆரோமேடிக் தொழிற்சாலை அமைக்க, மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

இந்த நம் முயற்சியின் காரணமாக, 70,000 பேருக்கு வேலை கிடைக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இது போன்ற அதிக அளவிலான வேலை வாய்ப்பு, கடந்த இருபது ஆண்டுகளில், ஒன்று கூடத் தமிழகத்திற்குக் கிடைத்ததில்லை.

எங்களது முயற்சி இப்போது பலன் தர ஆரம்பித்துள்ளது. தொழில் முனைவோர்கள் பலர், தமிழ்நாட்டில் தொழில் தொடங்க முன் வந்துள்ளார்கள். சென்ற டிசம்பர் மாதம், தொழில் அதிபர்களை நான் நேரில் சந்தித்து, இரண்டே நாட்களில், 8,500 கோடி ரூபாய் மதிப்பீட்டிற்கான, 27 தொழிற்சாலைகளுக்கு அனுமதியளித்தேன். அவை அனைத்தும் விரைவில் தொடங்கப்படும்.

இனி தமிழகத்தில், மின் வெட்டும் இருக்காது; மின் வெட்டினால் தொழில் பாதிப்பும் இருக்காது. சேலம் மாவட்டம், தொழில் துறையில் எவ்வளவு முன்னேற்றம் அடைந்துள்ளது, என்பதை நான் அறிவேன். இன்னும் நிறையத் தொழிற்சாலைகளை இங்கே அமைக்கலாம்; அதற்கான சாத்தியக் கூறுகளை ஆய்ந்து அறிவிக்குமாறு, அதிகாரிகளைப் பணித்துள்ளேன்.

பொருளாதார வளர்ச்சிப் பணிகளிலும் சரி; தொழில் வளர்ச்சித் திட்டங்களிலும் சரி; தமிழகத்திற்கு இனி தேக்க நிலை, எப்போதும் இருக்காது என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். இனி ஒவ்வொரு நாளும் முன்னேற்றம்தான் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் கூற விரும்புகின்றேன்.

எத்தகைய திட்டப் பணிகளை மேற்கொண்டு செயலாக்கினாலும், கஷ்டப்படுகிற மக்களை மறக்கலாகாது என்பது தான், நம் இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், நமக்குக் காட்டிய அன்பு வழி. இந்தியாவின் பெரும்பாலான மாநிலங்கள், நல்வாழ்வுத் திட்டங்களைப் பின்னுக்குத் தள்ளி, வளர்ச்சித் திட்டங்களையே கவனிக்க முற்பட்ட, இந்த நவீன யுகத்தில், நாமும் கூட பொருளாதாரப் பிரச்சினைகளில் சிக்குண்டிருந்தாலும், புரட்சித் தலைவர் வழிவந்த நாம், ஏழைகளை மறக்காமல், ஏழை எளியோரையும், வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள அப்பாவி மக்களையும், கண்ணும் கருத்துமாகப் பாதுகாத்து வருகின்றோம்.

அந்த வகையில் பொங்கல் திருநாளை முன்னிட்டு, கடந்த இரண்டு ஆண்டுகளாக, ஒரு கோடியே 20 இலட்சம் ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கும், நகர்ப்புற ஏழை எளியோருக்கும், இலவசமாக சேலை வேட்டிகளை வழங்கியுள்ளோம். தமிழகத்தின் கிராமங்கள் தோறும், இலவச மருத்துவ நல முகாம்கள் நடத்தி, மக்கள் நல்வாழ்வைப் பேணியுள்ளோம். முதியோர் நலன், ஊனமுற்றோர் மற்றும் ஆதரவற்ற மகளிர் நல்வாழ்வு, போன்ற அத்தனைத் திட்டங்களும், அரசின் நேரடிப் பார்வையில், செவ்வனே நிறைவேறி வருகின்றன.

புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். குழந்தைகள் சத்துணவுத் திட்டம், குழந்தைகளுக்கான ஊட்டச் சத்துத் திட்டம், என்பதோடு நில்லாமல், எங்கள் அரசு இந்தியாவிலேயே முதன் முதலாக, அரசாங்கமே நர்சரி பள்ளிகள் நடத்துகிறது, எனப் பெயர் பெறும் வகையில், அவை சீரமைக்கப்பட்டுள்ளன.

அண்மையில், பெண் குழந்தைகளைப் பாதுகாக்கும் திட்டத்தை, அரசே அவர்களை எடுத்து வளர்க்கும், தொட்டில் குழந்தைகள் திட்டத்தை அறிமுகப்படுத்தி இருக்கின்றேன். ஆண்களுக்குப் பெண்கள் குறைந்தவர்கள் அல்ல.

பெண்ணுக்குச் சம உரிமை தர வேண்டும், என்று குரல் கொடுத்த தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். வாழ்ந்த மண்ணில், பெண் குழந்தைகளை அழிக்கும் பாவம், இனியும் தொடரக் கூடாது. அதனைத் தொடரவிட மாட்டேன் என்று தூளுரைத்துத் தான், புரட்சிகரமான இந்தப் புதிய திட்டத்தைக் கொண்டு வந்தேன். இந்தத் திட்டத்தையும் அரசியல் இலாபத்திற்காக, என் மீதுள்ள காழ்ப்புணர்ச்சியின் காரணமாக, ஒரு சாரார் குறை கூறுகின்றனர்.

நான் அவற்றைப் பற்றி எல்லாம் கவலை கொள்வதில்லை. இன்று வரை 32 பெண் சிசுக்களின் படுகொலையை, இத்திட்டத்தினால் தடுத்திருக்கின்றோமே, என்ற மன நிம்மதியைத்தான், நான் அடைகின்றேன். இத்திட்டம் அறிமுகப் படுத்தப்படாமல் இருந்திருக்குமானால், அந்த 32 பச்சிளம் பெண் குழந்தைகளும், பலியாகி இருப்பார்களே என்பதைக் கூட மறந்து, மனிதாபிமானம் சிறிதும் இல்லாமல், சிலர் ஏதோதோ கூறி வருகின்றனர். பெற்றோர்கள், பெண் குழந்தைகளுக்குச் செய்ய வேண்டிய கடமைகள் என்னென்னவோ, அவை அனைத்தையும் அரசே ஏற்றுச் செய்ய வேண்டும், என்ற நல்லெண்ணத்தில் தான், இந்தத் திட்டம் உருவாக்கப் பட்டுள்ளது.

அரசு ஏற்கும் இப்பெண் குழந்தைகளுக்கு, நல்ல கல்வி அறிவு புகட்டுவதுடன், தங்கள் சொந்தக் காலில் நின்று, தங்களது வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும் திறமை உடையவர்களாக, அவர்களை உருவாக்கவும், அவர்களது திருமணம் வரை பாதுகாக்கவும், அரசு முடிவு செய்துள்ளது. உதவி கோரி என்னைச் சந்தித்த ஆயிரக்கணக்கான பெண்களின் துயரத்திற்கு, அவர்களின் அறியாமையும், கல்வி அறிவு இன்மையுமே காரணம் என்பதை, நான் உணர்ந்ததினால்தான் அரசு எடுத்து வளர்க்கும் பெண் குழந்தைகள், நமது சமுதாயத்தில் உயர்ந்த நிலையை எய்தி, உண்மையான பெண்கள் முன்னேற்றம் இது தான் என்று, உலகிற்கு எடுத்துக்காட்டும் வண்ணம், பாரதி கண்ட புதுமைப் பெண்களாக, அவர்களை வளர்க்க வேண்டும் என்று முடிவு செய்தேன். அதற்கிணங்க, இத்திட்டம் வடிவமைக்கப் பட்டு, செயல்படுத்துப்படுகின்றது என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

எத்தனைத் திட்டங்கள், எந்த அளவு செம்மையுடன் தீட்டப்பட்டாலும், இந்திய நாட்டைப் பொறுத்தமட்டில், இதன் ஜீவ நாடியாக உள்ள கிராமங்களுக்கு, அதன் பலன் சென்றடைந்தால்தான், உண்மையான வள்ர்ச்சியை நாம் அடைய முடியும் என்றார், அண்ணல் காந்தி அடிகள். அவரது வாக்கில் நம்பிக்கை கொண்ட அரசாக, நம்முடைய அரசு திகழும் காரணத்தால் தான், வேறெந்த மாநில அரசும் தீட்டாத, தன்னிறைவுத் திட்டத்தைத் தீட்டிச் செயல்படுத்தியுள்ளோம்.

நம்முடைய திட்டத்தின் பயனாக, சின்னச் சின்னக் குக் கிராமங்கள் கூட, இன்று அடிப்படை வசதிகள் அனைத்தையும் பெற முடிந்துள்ளது. இந்தியாவிலேயே, கிராமத் தன்னிறைவுத் திட்டங்களை, சிறப்பாக நிறைவேற்றியுள்ள மாநிலம், தமிழ்நாடுதான் என்று, மைய அரசே பாராட்டியுள்ளது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஏழை எளிய மக்களின், கல்விக் கண் திறப்பதிலே கவனம் செலுத்தி, பள்ளிச் சிறார்கள் மட்டுமல்லாது, பள்ளி செல்லாத சிறார்கள், வயதுவந்தோர்,



## சேலம் மாவட்டம்:

### அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா

**சேலம் மாவட்டத்தில் அரசுத் திட்டப்பணிகள் தொடக்கம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா 7.3.1993 அன்று பிரம்மாண்டமான அளவில் நடைபெற்றது.**

**மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களுக்கு, அனைவராலும் பாராட்டக் கூடிய அளவில், எடுக்கப்பட்ட அவ்விழா வரலாற்றுச் சிறப்புமிக்கதாக அமைந்திருந்தது.**

**சேலம் மாவட்டத்தின் தொடக்கமான ஆத்தூரிலிருந்தே கண்ணைப் பறிக்கும் அலங்கார வளைவுகளும், தோரணங்களும் முதல்வர் அவர்களை வரவேற்றன.**

**மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பின், சேலத்தில் கலந்துகொண்ட முதல் நிகழ்ச்சி இதுவேயாகும்.**

**சேலம் தியாகராய பாலிடெக்னிக் மைதானத்தில் பிரம்மாண்டமாக அமைக்கப்பட்டிருந்த பந்தலில், பிற்பகல் 3.00 மணியளவில் விழா தொடங்கியது. விழாவினைக் காண, பந்தலின் உள்ளேயும் வெளியேயும் இலட்சக்கணக்கான மக்கள் திரண்டிருந்தனர்.**

**விழாவிற்கு மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. சேடப்பட்டி முத்தையா அவர்கள் தலைமை வகித்தார்.**

**விழா ஏற்பாடுகளை அதிசயிக்கத்தக்க அளவிற்குச் செய்த மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு. செல்வகணபதி அவர்கள் வரவேற்றுப் பேசினார்.**

**விழாவில், அரசுத் திட்டங்களையும், அண்ணா போக்குவரத்துக் கழகப் புதிய வழித்தடங்களையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொடங்கிவைத்தார். புதிய திட்டங்களுக்கு அவர் அடிக்கல் நாட்டினார். ரூ.353 கோடி மதிப்பீட்டில் அரசுத் திட்டப்பணிகளைத் தொடங்கிவைத்து, நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார்.**

**இவ்விழாவில், நீலகிரி மாவட்ட மக்கள் 165 பேருக்கு ரூ.11 இலட்சம் மதிப்பீட்டில் நல உதவிகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார்.**

**மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுக்கு, அமைச்சர் பெருமக்களும் மாவட்ட ஆட்சித் தலைவரும் மற்றும் பிரமுகர்களும் நினைவுப் பரிசுகளை வழங்கினார்கள்.**

**மாண்புமிகு முதல்வர் பெருமக்களும், வாரியத் தலைவர்களும், சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொண்டு, விழாவைச் சிறப்பித்தனர்.**

**விழா முடிவில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. இராமையா அவர்கள் நன்றி கூறினார்.**

**- என். இளங்கோ.**



அனைவரும் பயிலும் வண்ணம், அறிவொளி இயக்கத்தைத் தீவிரப்படுத்தியதன் பயனாக, ஏழு மாவட்டங்களில், எழுத்தறிவில்லா மக்கள், கல்விக் கண் பெற்றுள்ளனர். இந்த ஆண்டு, உங்கள் சேலம் மாவட்டத்தையும் சேர்த்து, மொத்தம் 10 மாவட்டங்களில், அறிவொளி இயக்கம் தொடர்ந்து நடைபெறுகிறது.

இவ்வளவு நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வரும், திறன் மிக்க ஓர் அரசை, உங்கள் பிரதிநிதியாக இருந்து, நான் நடத்தி வந்தாலும், ஆட்சி அமைப்பு முறை காரணமாக நாம் எதிர்நோக்கியுள்ள சில சங்கடங்களையும் தெரிவிப்பது, என் கடமை எனக் கருதுகிறேன்.

இந்தியாவைப் பாதுகாப்பதற்குத் தேவையான அதிகாரங்கள், மத்தியக் கூட்டாட்சியிடத்திலும், மக்களை வாழ வைக்கத் தேவையான அதிகாரங்கள், மாநில அரசுகளிடத்திலும் அமைய வேண்டும். இதற்கேற்ப, அரசியலமைப்புச் சட்டம், திருத்தம் செய்யப்பட வேண்டும் என்று, எங்கள் அரசு பொறுப்பேற்ற காலத்திலிருந்தே, வலியுறுத்தி வருகிறது.

மத்திய அரசு அண்மையில், கிராமங்களுக்கு அதிக அதிகாரம் தருகின்ற போர்வையில், மாநில அரசின் உரிமையைப் பறிக்கின்ற வகையில், பாராளுமன்றத்தில் பஞ்சாயத்து ராஜ் மற்றும் நகர் பாலிகா அரசியல் சட்டத் திருத்த மசோதாக்களை, நிறைவேற்றி உள்ளது. கேட்டால், மக்களுக்கு நேரடியாக அதிகாரம் வழங்குவதற்காக,. இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளதாகக் கூறுகிறார்கள்.

அந்தந்த மாநில மக்களால், பெரும்பான்மையோடு தேர்ந்தெடுக்கப்பட்ட, மாநில அரசைத் தாண்டி, அதிகாரம் வழங்குவது என்பது, என்ன நடைமுறை நியாயம்? இது ஆசிரியர் இல்லாமல், பள்ளிகளில் பாடம் சொல்லி கொடுக்கின்றோம் என்பது போன்ற செயல் மட்டுமல்ல; பரீட்சை எழுதுகின்ற மாணவர்களைக் கண்காணிக்க, ஆசிரியர் தேவையில்லை என்பதைப் போன்ற, ஒரு அவல நிலைமையும் உருவாக்கியுள்ளது.

மேலும், தற்போது தமிழகத்தில் நடைமுறையில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கு, உறுப்பினர்களையும், தலைவர்களையும் மக்கள் நேரடியாக வாக்களித்துத் தேர்ந்தெடுக்கும் ஜனநாயக முறையைக் கைவிட்டு, ஏற்கெனவே நடைமுறையில் இருந்து எடுக்கப்பட்டுவிட்ட, பழைய முறையான, உறுப்பினர்கள் மூலம் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் முறையைப் புகுத்தும் சட்டத் திருத்தமாக அமைந்துள்ளதால், இது மக்களின் உரிமைகளைப் பறிக்கும், பாதிக்கும் என்றே கருத வேண்டியுள்ளது.

இது நமது அரசியல் சாசனத்தின், அடிப்படை தத்துவத்தையே, உடைக்கின்ற முயற்சியாக இருக்கின்றது. அதோடு, மாநில அரசைத் தேர்ந்தெடுக்க, தேர்தலின் போது நிதானமாகச் சிந்தித்து, ஓட்டுப் போட்ட வாக்காளப் பெருமக்களையும், அவர்களது உரிமையையும் சுரண்டுவதோடு, கிராம வளர்ச்சியில் திட்டமிட்டு முன்னேறிக் கொண்டிருக்கும், மாநில அரசின் நோக்கத்தையே சிதறடிக்கும், இரட்டை ஆட்சி முறையைத் தெரிந்தே அறிமுகப்படுத்துகின்ற வீம்புச் சட்டமாகவும், இது இருக்கிறது. கிராம மக்களின் முன்னேற்றம் சம்பந்தப்பட்ட விஷயம் என்பதால், எனது கருத்தை இங்கே கூற வேண்டியது, அவசியம் என்று கருதி, நான் இதையெல்லாம் இங்கே தெரிவிக்கின்றேன். இது போல, மாநில அரசின் உரிமைகள், பறிக்கப்பட்டிருக்கின்ற பல்வேறு துறைகளும் இருக்கின்றன. அவைகளை எல்லாம் எடுத்துச் சொல்ல, இங்கே நேரமில்லை என்பதால், இந்த அளவில் நிறுத்திக் கொள்கின்றேன்.

இன்று - அரிசி விலையைக் கட்டுப்படுத்தக் கூட, எண்ணற்ற பொருளாதாரச் சிரமங்களை, நாம் அடைய வேண்டியுள்ளது. பொது மக்களுக்கு மிகவும் நெருக்கமாக உள்ள மாநில அரசு தான், பதில் கூற வேண்டியுள்ளது. இந்த உண்மை நிலையை, மக்களுக்கு நாம் எடுத்துரைக்கத்தான் வேண்டும். குறிப்பாக, மக்களை நேரடியாகப் பாதிக்கும், அரிசி விலை ஏற்றம் போன்ற சில பிரச்சினைகளையாவது, மாநில அரசைக் கலந்து முடிவெடுங்கள், என நான் விடுத்துவரும் வேண்டுகோள்கள் கூடச், செவிமடுக்கப்படாததால், மாநில அரசு இன்று, மக்களுக்குப் பதில் சொல்ல வேண்டிய நிலைக்கு ஆளாகி உள்ளது.

குறிப்பாக, அண்மையில் ஏற்பட்ட சொல்லொணா வெள்ளச் சேதத்தை, சுற்றுப் பயணம் செய்து பார்த்த பின்பும், வெள்ள நிவாரணமாக, தமிழ்நாடு அரசு கேட்டிருந்த 530 கோடி ரூபாய்க்குப் பதில், மைய அரசு நமக்கு அளித்தது வெறும் 50 கோடி ரூபாய் மட்டும் தான். அதுவும் எப்படி? தமிழ்நாட்டுக்கான அடுத்த ஆண்டு ஒதுக்கீட்டிலிருந்து, முன் பணமாக! இதையெல்லாம் நீங்கள் நன்கு அறிந்துகொள்ள வேண்டும். தமிழகத்தின் நியாயமான கோரிக்கைகள் கூட, எப்படி தோல்விகளைச் சந்திக்கின்றன என்பது, உங்களுக்கு விளங்கவேண்டும் என்பதற்காக, இவற்றைக் கூறுகிறேன்.

இவை போன்ற இடர்ப்பாடுகளையும்-பல்வேறு தடங்கல்களையும் தாண்டித்தான் - சமாளித்துத்தான், சரி செய்துதான், உங்கள் சகோதரியின் அரசு, சாதனைகள் பலவற்றை நிகழ்த்தி வருகிறது!

'தடை பல உண்டெனினும்
தடந்தோள் உண்டென்போம்'

- என்ற பாவேந்தர் கவிதை வரிகளுக்கொப்ப, உங்கள் ஆதரவும் அன்பும் என்றென்றும் உள்ளதால், எப்பேர்ப்பட்ட தடைகளையும் சங்கடங்களையும் தாங்கி, சிரித்த முகத்தோடு, உங்களைக் காண ஓடோடி வந்துள்ளேன்.





பெண்களின் முன்னேற்றத்திற்குக் கல்வியறிவும் அவரவர்களின் பொருளாதார நிலையில் உயர்வும் மிகவும் முக்கியமானவை. பெண்களை முழுவதும் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாக மாற்ற "அறிவொளி இயக்கத்தை" இந்த அரசு தீவிரமாகச் செயல்படுத்தி வருகிறது. அவர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்த ஒருபுறம் திருமண உதவி, மகப்பேறு கால உதவி, இலவச சேலை போன்றவற்றை வழங்குவதோடு, மற்றொரு புறம் அவர்களுக்கு வேலைவாய்ப்பு வசதிகளையும் இந்த அரசு உருவாக்கித் தந்து வருகிறது.

ஆட்சிப் பொறுப்பேற்ற பின், சேலம் நகரில் நடைபெறும் அரசு விழாவில் கலந்துகொள்ள, இன்று முதல் முறையாக வந்திருக்கின்றேன். சென்ற ஆண்டு இறுதியிலேயே இங்கு வர நான் திட்டமிட்டு இருந்தும், தென் மாவட்ட மக்கள் புயலாலும் வெள்ளத்தாலும் பெரிதும் பாதிக்கப்பட்ட நிலையில், அங்கு செல்ல நேரிட்டதால், அப்போது வர இயலவில்லை. தற்போது தாமதமாக இங்கு வந்து உங்களைச் சந்தித்தாலும், தாராளமாகப் பல திட்டங்களுடன் தான் வந்துள்ளேன் என்பதை அறிந்து, நீங்கள் மகிழ்ச்சி கொள்வீர்கள் என்று நம்புகின்றேன்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் காலம் முதல், இன்று வரை, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்குச் சேலம் மாவட்ட மக்கள், நிலையான பெரும் ஆதரவினை அளித்து, பல மாபெரும் வெற்றிகளையும் ஈட்டித் தந்துள்ளார்கள். இந்த ஆட்சி அமைவதற்குத் தங்களது அயராத உழைப்பைத் தாரை வார்த்தவர்கள், தங்களது இன்னுயிரை ஈந்தவர்கள், ஓடியாடி உழைத்த செயல் வீரர்கள், எண்ணற்றோரைத் தன்னகத்தே கொண்ட எழுச்சிமிக்க மாவட்டம் தான் சேலம் மாவட்டம் என்பதை, நான் எப்போதும் மறவேன்.

இனியும் அந்த நிகரில்லா ஆதரவினை, தொடர்ந்து எங்களுக்கு நல்குவீர்கள் என்று நம்புகிறேன். உங்கள் மாவட்ட அமைச்சர் அன்புத் தம்பி செல்வகணபதி அவர்கள், மிகமிகச் சிறப்பாக, எனது சுற்றுப்பயணத்தையும், இம்மாபெரும் விழாவினையும் ஏற்பாடு செய்துள்ளமைக்காக, அவரை நான் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். அவர் துடிப்புள்ள இளைஞர்; கடினமான உழைப்பாளி; ஆற்றல் மிக்கவர். எப்பொழுதும் பொறுப்புடன் செயல்படக் கூடியவர். மக்கள், மனதில் என்ன நினைக்கிறார்கள் என்பதைச் சரியாகக் கணித்துக் கருத்துக் கூறுபவர். கசப்பான செய்திகளானாலும், கழகத்தையும், அரசையும் கட்டிக் காப்பதே, தன் தலையாய கடமை என்று கொண்டு, தயங்காது என்னிடம் தெரிவிக்கும் தைரியம் கொண்டவர்.

பலர் என்னைத் திருப்திப்படுத்த வேண்டும் என்பதற்காக, சில குறிப்பிட்ட நல்ல செய்திகளையே என்னிடத்தில் தெரிவிக்கின்றார்கள். கசப்பான செய்திகள் மிக முக்கியமானவை என்றால் கூட, என்னிடம் சொல்லாமல் சென்று விடுகிறார்கள். தம்பி செல்வகணபதி அப்படிப்பட்டவர் அல்ல; தயக்கமின்றித் தன் கருத்துக்களை, என்னிடம் கூறுகின்றார் என்பது மட்டுமல்ல, அவர் கூறும் கருத்துக்கள் எப்பொழுதும், அறிவு பூர்வமானதாகவும், மக்களின் மன நிலையைச் சரியாகப் பிரதிபலிப்பதாகவும் அமைந்தே இருக்கும்.

உங்கள் மாவட்ட அமைச்சர் இத்தகைய அறிவாற்றல் காரணமாகத் தான், மிகக் குறுகிய காலத்திலேயே பல உயர்வுகளைப் பெற்றார். இவரது தகுதிகளையும், திறமைகளையும் அடையாளம் கண்டுதான், நான் இவருக்குக் கழகத்தின் இளைஞர் அணி மாவட்டச் செயலாளர் பொறுப்புக் கொடுத்தேன். அதனைத் தொடர்ந்து, சேலம் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளராக உயர்வு பெற்றார். பின்னர் சட்டமன்ற உறுப்பினராகி, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அமைச்சரவையில், தன் இளம் வயதிலேயே இடம் பெற்றார். தன் பணிகளை மிகவும் சிறப்பாகவும், செம்மையாகவும் செய்து வருவதோடு, நான் ஏற்கெனவே தெரிவித்த சிறப்பு இயல்புகளையும் கொண்டவராகத் திகழ்ந்தார்.

இருந்தும், சகோதரர் செல்வகணபதி அவர்களுக்குத் தெரிந்த, ஒரே திராவிட இயக்கத் தலைவி, நான்தான். என்னைத் தவிர வேறு எந்தத் தலைவரையும் அவருக்குத் தெரியாது. தான் கொண்ட தலைமைக்கு என்றென்றும் உண்மையானவர், என்ற சிறப்புக்கும் உரியவராகத் திகழ்கிறார்.

இனிய பண்பும், செயல்திறனும், கொண்ட கொள்கையில் உறுதியும், விசுவாசமும் மிக்க சகோதரர் செல்வகணபதி அவர்களுக்குச் சிறந்த ஒளிமயமான எதிர்காலமும், வளமான பல உயர்வுகளும் உண்டு என்பதைத் தெரிவித்து, அவரைப் பெரிதும் பாராட்டுகின்றேன்.

சென்னையில் இருந்து, சேலம் வரை நான் பயணம் செய்த சாலையின் இருமருங்கிலும், நீண்ட நேரமாக என் வருகைக்காகக் காத்து நின்று, என்னைக் கண்டவுடன், உணர்ச்சிப் பெருக்கோடு வாழ்த்தி வரவேற்ற மக்கள் ஒவ்வொருவருக்கும், என் நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கை ஆக்குகின்றேன்.

நான் பல்வேறு தரப்பு மக்களின் பாசத்திற்கு உரியவள். ஜாதி, மத உணர்வுகள் எனக்குக் கிடையாது. அதைத் தெள்ளத் தெளிவாக, என் அன்பிற்குரிய உங்களின் முன்னே, தெளிவாக்கக் கடமைப்பட்டுள்ளேன். எவரிடமும் எனக்குப் பகை உணர்வு இல்லை. அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக, என் மீது அவதூறைப் பரப்புபவர்கள், நான் சில பிரிவினர் மீது எதிர்ப்புக் கொண்டிருப்பதாக, சுயலாப நோக்கத்துடன், பொய்ப் பிரச்சாரம் செய்து கொண்டிருக்கிறார்கள். மக்கள் என் பக்கம் இருப்பதால், இதிலும் இறுதி வெற்றி எனக்குத்தான் என்பதை, என்னை எதிர்ப்பவர்கள் தெரிந்து கொள்ளும் நாள், வெகு தூரத்தில் இல்லை.

இந்நாட்டு மக்கள் யாராக இருந்தாலும், எல்லோரும் எனக்கு ஒன்றுதான். அவர்கள் ஒவ்வொருவரும் என் அன்பிற்குரிய சகோதரர்கள் தான்! சகோதரிகள் தான்! இதில் எவ்வித மாற்றமும், எப்போதும் இருக்காது.

எங்கள் பாதையும் பயணமும், சத்திய சோதனைகள் பலவற்றை வென்ற அண்ணாவுடையன! புரட்சித் தலைவருடையன! அந்தத் திராவிட தீபங்கள் காட்டும் ஒளி வழியே, வீறுநடை பயின்று, வெற்றி பெறுவோம், என்ற உறுதியை ஏற்று விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

## தருமபுரி மாவட்டத்தில் அரசு நலத்திட்ட உதவி வழங்கும் விழா

**தருமபுரி மாவட்டத்தில் ரூ.238 கோடி செலவில் அரசு திட்டப் பணிகள் தொடக்க விழாவும், நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவும் பிரம்மாண்டமான அளவில் 8.3.93 அன்று நடைபெற்றது.**

**மாண்புமிகு முதல்வர் அவர்களின் சொந்தத் தொகுதியான பர்கூர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள ஒரப்பம் கிராமத்தில் நடைபெற்ற இந்த விழாவிற்கென பிரம்மாண்டமான பந்தல் அமைக்கப்பட்டிருந்தது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் மாலை நான்கு மணிக்கு வந்தார். மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. சேடப்பட்டி முத்தையா அவர்கள் தலைமை வகித்தார். மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் வரவேற்றுப் பேசினார்.**

**விழாவில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் திரு. முத்துசாமி, திரு. கே.ஏ. செங்கோட்டையன், திரு மதுசூதனன், திரு. கண்ணப்பன், திரு. அழகு திருநாவுக்கரசு, திரு. செல்வகணபதி, திருமதி இந்திரகுமாரி, திரு. ரகுபதி ஆகியோர் கலந்துகொண்டனர்.**

**பின்னர் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் அவர்கள், தருமபுரி மாவட்டத்திற்கு ரூ.237 கோடியே 73 இலட்சம் மதிப்பீட்டிலான திட்டங்களைத் தொடங்கிவைத்தார்.**

**மேடையில் இருந்த ஒரு பொத்தானை அவர் அழுத்தியதும் புதிய திட்டங்களுக்கான அடிக்கல்லை மூடி இருந்த திரை விலகியது. அப்போது மக்கள் கைதட்டி பலத்த மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.**

**பின்னர் நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார். அதைத் தொடர்ந்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் சிறப்புச் சொற்பொழிவாற்றினார். விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு ஏராளமான நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டன.**

நாட்டின் இருதயம் போன்ற கிராமங்களில் ஆரம்பித்து, ஊரக வளர்ச்சிக்கான திட்டங்கள், கிராமங்களுக்கான அடிப்படை வசதிகள், கல்வித் திட்டங்கள், ஏழை எளியோருக்கான நலத் திட்டங்கள், போன்றவற்றைச் செயலாக்கினோம்;

மகளிர் உட்பட வேலை வாய்ப்பற்றோருக்கு, சுய வேலை வாய்ப்புகளை உருவாக்கித் தந்தோம். எழுத்தறிவில்லாதவர்களுக்கு, அறிவொளி இயக்கத்தின் மூலம் அறிவூட்டினோம். ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியமும், தன்னிறைவு அடையச் செய்தோம். நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டங்கள் மூலம், நகர்ப்புறங்கள் அடிப்படை வசதிகளைப் பெறச் செய்தோம். தற்போது, தொழில் வளர்ச்சி காண்பதன் மூலம், பொருளாதார முன்னேற்றத்தின், முதற் கட்டத்தைத் தாண்டி உள்ளோம்.

முறைப்படுத்தி வகைப்படுத்தி வகுத்த, இச்சீரிய திட்டங்கள் மூலம், அனைத்துத் துறைகளிலும், தமிழ்நாடு வெற்றி கண்டு வருகிறது. இதைக் கண்டு பொறுக்க முடியாத சிலர், பொறாமையால், புரட்டுக்களை அள்ளி வீசுகிறார்கள். கோடிக்கணக்கான தமிழக மக்களாகிய உங்கள் ஆதரவும், அன்பும் இருக்கும் வரை, தீயசக்திகளின் ஓலங்களும், மாய்மாலங்களும், ஒருபோதும் எடுபடாது.

சட்டம் ஒழுங்கோடு, அமைதி தவழுகின்ற தமிழ்நாடு, மத இன காழ்ப்புணர்ச்சிக்கு அப்பாற்பட்ட மாநிலம், சுயலாபத்திற்காகப் பொய்யை விற்று, தன் மக்களையும், மாநிலத்தையும் காட்டிக் கொடுக்கின்ற, சமூக விரோதிகளின் முயற்சிகள், இந்தத் தமிழ் மண்ணில் எடுபடாது என்பதை, இந்த நேரத்தில் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். 5.5 கோடி தமிழக மக்களின் அரசு இது. உங்கள் நலனுக்காகச் செயல்படுத்தப்படும் திட்டங்களில், ஒளிமறைவு கிடையாது.

தமிழ்நாட்டுக்கும், தமிழக மக்களுக்கும், தமிழ் மொழிக்கும், தீங்கு ஏற்படுகின்ற நிலை வரும் போது, நாங்கள் போர்க்கொடி உயர்த்தவும் தயங்க மாட்டோம்; இதில் எந்தவிதச் சொந்த விருப்பு வெறுப்புகளுக்கும் சிறிதும் இடமில்லை. பிறந்த மண்ணைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு, 'நீ பெரியவனா? நான் பெரியவனா?' என்று போட்டி போட்டுக் கொள்பவர்களுக்கு, தமிழகத்தில் என்றும் இடமில்லை. மக்கள் பணி ஆற்றுபவர்களை, வீழ்த்த நினைப்பவர்கள், என்றும் வென்றது இல்லை.

பொது வாழ்வு என்பது மக்கட் பணி. அந்தப் பணியை யார் உண்மையாகச் செய்கின்றார்கள் என்பதும் மக்களுக்குத் தெரியும். உண்மையிலேயே தங்களுக்காகப் பாடுபடுபவர்கள் யார் என்பதை, தமிழக மக்கள் நன்கு அறிந்து வைத்திருக்கிறார்கள். அதனால் தான், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், ஆட்சிப் பொறுப் பேற்றது; சாதனை மேல் சாதனையாக, வெற்றிகளைக் குவித்துக் கொண்டிருக்கிறது!

மக்கள் சக்தி என்ன என்பது, புரட்சித் தலைவருக்கும் எனக்கும், மற்றவர்களைவிட மிக நன்றாகவே தெரியும். அந்த மகா சக்தி தான் எனக்குப் பேராதரவாய், பக்கபலமாய், ஊக்கப் பொருளாய் இருக்கின்றது, என்பதை எண்ணும் போது, பெருமிதமும், பூரிப்பும் அடைகின்றேன்.

எனது தருமபுரி மாவட்டச் சுற்றுப் பயணத்தையும், பர்கூர் தொகுதியில் இந்த மாபெரும் விழாவினையும், மிகவும் சிறப்பாக ஏற்





பாடு செய்து கொடுத்துள்ள, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களான திரு. செங்கோட்டையன், திரு. கண்ணப்பன், திரு. அழகு திருநாவுக்கரசு மூவருக்கும் என் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். பர்கூர் தொகுதியின் வளர்ச்சிப் பணிகள், தொய்வின்றி நடந்திட வேண்டும் என்பதற்காக, நான் அடிக்கடி அவர்களையும், அண்ணன் எஸ்.டி.எஸ். அவர்களையும் அனுப்பி வைத்து, இங்கே பல நல்ல பணிகளை நிறைவேற்றியுள்ளேன்.

நான் என்ன பணி சொன்னாலும், சொன்ன வேகத்தில் செய்து முடிக்கும் திறமை மிக்க செயல் வீரர்கள் அவர்கள். இயக்கத் தொண்டர்களிடம் பிணைப்பும், பொதுமக்கள் பிரச்சினைகளில் ஈடுபாடும் கொண்டு, ஓய்வுறக்கமின்றி அவர்கள் சிறந்த முறையில் பணியாற்றி வருவதை, நான் பாராட்டுகின்றேன். அவர்களின் செயல் திறத்தால், இன்று பர்கூர் தொகுதியில் இச்சீர்மிகு விழா, சிறப்புடன் நடந்தேறியுள்ளது. அதற்காக, இத்தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில், அவர்களுக்கு எனது நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அண்ணன் எஸ்.டி.எஸ் அவர்கள், இப்பகுதியில் சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் போதெல்லாம், தவறாமல் பர்கூருக்கு வந்து, எனது சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்திற்கும் சென்று, இத்தொகுதியின் வளர்ச்சிப் பணிகளில் தனிக் கவனம் செலுத்தி, மிகுந்த அக்கறை காட்டி வருகிறார். அதற்காக, அண்ணன் எஸ்.டி.எஸ். அவர்களுக்கு, நான் பெரிதும் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.



இத்தொகுதியின் நலனில், மிகுந்த அக்கறையோடு பணியாற்றி வரும், மாவட்ட ஆட்சித் தலைவர், மற்றும் அரசு அலுவலர்கள் அனைவருக்கும், எனது பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்றாரே, பேரறிஞர் அண்ணா; இன்று நான், ஏழை எளிய மக்களின் சிரிப்பிலே, வாழ்வின் அர்த்தத்தையே காண்கின்றேன். அவர்களது மகிழ்ச்சியில், எங்கள் அரசின் நோக்கத்தையும், அதன் நிறைவையும் காண்கின்றேன். அந்த மகிழ்ச்சியை ஏழை எளியவர்களிடம், நிரந்தரமாக நிலைக்க வைப்பதே, எனது தலையாய கடமையாகும். என்று உணர்ந்தவள் நான்.

அந்த நம்பிக்கையை எந்நாளும், உங்களுக்கு வழங்குகின்ற உங்கள் சகோதரியாக, உங்கள் பிரதிநிதியாக, உங்களுக்காக, அல்லும் பகலும் அயராமல், உறங்காமல், தொடர்ந்து பாடுபடுவேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

# ஏழை எளிய மக்களின் சிரிப்பிலே வாழ்வின் அர்த்தத்தையே காண்கிறேன்!

## தருமபுரி மாவட்ட அரசு திட்டப் பணிகள் தொடக்க விழாவில் மாண்புமிகு முதல்வர் உரை

**வ**ரலாற்றுச் சிறப்பும் சரித்திரப் பெருமையும் மிக்க, தருமபுரி மாவட்டத்தின் மக்களாகிய உங்கள் அனைவரையும், மீண்டும் சந்தித்துப் பேசி மகிழ்வதில், பெருமகிழ்ச்சி அடைகின்றேன். தமிழ்நாட்டை ஆளுகின்ற முதலமைச்சர் என்கின்ற உயர்ந்த நிலை எனக்குக் கிடைத்து இருந்தாலும், தமிழகச் சட்டமன்றத் திற்கு, என்னை அனுப்பி வைத்த பெருமை, இந்த மாவட்டத்தைச் சார்ந்த பர்கூருக்கு உண்டு என்பதை, நீங்கள் அனைவரும் அறிவீர்கள்.

தமிழர் வாழ, அவ்வைக்கு நெல்லிக்கனி ஈந்து, நம் இதயத்தில் இன்றைக்கும், ஏன், என்றைக்கும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற, அதியமான் வாழ்ந்த மண் இது. சுதந்திர வேள்வியில், தங்களைப் புடம் போட்ட தங்கங்களாக மாற்றிக் கொண்ட, சுப்பிரமணிய சிவாவும், மூதறிஞர் ராஜாஜியும், வாழ்ந்து மகிழ்ந்த வரலாற்று ஸ்தலம் இது.

ஆனால், நான் தேர்தலில் நிற்பதற்கு, இந்த மாவட்டத்தை ஏன் தேர்ந்தெடுத்தேன் என்றால், அதற்கு இவையெல்லாம் காரணங்கள் அல்ல. தமிழ்நாட்டிலேயே, மிகவும் பிற்பட்ட பகுதியாக, பின்தங்கிய மக்களைக் கொண்ட மாவட்டமாக, ஏழைகள் நிறைந்த இடமாக, இந்தப் பகுதி இருந்ததால் தான், அவர்களுக்கு உதவுகின்ற வகையில், என்னாலான பணிகளை, என் சக்திக்கு இயன்ற அளவில், செய்து கொடுக்க வேண்டும் என்ற ஆர்வத்தோடு தான், நான் பர்கூரைத் தேர்ந்தெடுத்தேன். அந்த வகையில் இதுவரை, இந்தத் தொகுதியின் வளர்ச்சிக்கும், இம் மாவட்டத்தின் வளர்ச்சிக்கும் பெரிதும் உதவியுள்ளேன்.

முதல் அமைச்சராகப் பொறுப் பேற்ற பின்பு, நான் முதன்முதலாகப் பர்கூருக்கு வந்தபொழுது, 34 கோடி ரூபாய்க்கான திட்டங்களை அளித்துவிட்டுச் சென்றேன். இதில் குறிப்பாக, தமிழ்நாடு கனிம நிறுவனத்தின், கருங்கல் மெருகூட்டி உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றை; 15 கோடி ரூபாய் செலவில் அமைக்கும் பணிக்கு, அன்று நான் அடிக்கல் நாட்டினேன். இன்று அந்தத் திட்டம் நிறைவேற்றப் பட்டு, புதிய தொழிற்சாலை இயங்கும் தறுவாயில் உள்ளது என்பதை, மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல், நான் இரண்டாம் முறையாகப் பர்கூருக்கு உங்களைக் காண வந்தபொழுது, 22 கோடி ரூபாய் செலவில், பெண்களுக் கெனத் தனியாக, ஒரு புதிய கூட்டுறவு நூற்பாலை ஏற்படுத்து வதற்கு, அடிக்கல் நாட்டினேன். அந்த நூற்பாலையின் பூர்வாங்கப் பணிகள் முடிந்து, இடம் தேர்வு செய்யப்பட்டு, அதன் பணிகள் விரைவில் தொடங்க இருப்பதை, நான் மகிழ்ச்சியோடு உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிற அதே நேரத் தில், எனக்கு முன்னால் மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் அவர்கள் இந்தத் தகவலை ஏற்கெனவே உங் களுக்குத் தெரிவித்திருக்கிறார். இந்த நூற்பாலையைத் தொடங்க நேரடி யாக நான் மீண்டும் வரவேண்டும் என்று அவர் வேண்டுகோள் விடுத் தார். இதற்காக வேண்டுகோள் விடுக்க வேண்டிய அவசியமே இல்லை. இந்த நூற்பாலையைத் தொடங்குவதற்குக் கட்டாயமாக நான் வருவேன் என்பதை இந்த நேரத்தில் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று மூன்றாம் முறையாக உங்களைச் சந்திக்க நான் வந்திருக் கின்றேன். தருமபுரி மாவட்டம் பயன்பெறும் வகையில் இன்று,

- 141 கோடி ரூபாய் மதிப் புள்ள, பல கட்டுமான பணிகளுக் கும், திட்டங்களுக்கும், அடிக்கல் நாட்டி உள்ளேன்.

- 49 கோடி ரூபாய் மதிப்புள்ள, புதிய கட்டடங்களைத் திறந்து வைத் துள்ளேன்.

- 37 கோடி ரூபாய் மதிப்புள்ள, புதிய திட்டங்களைத் தொடங்கி வைத்துள்ளேன்.

- 11 கோடி ரூபாய் மதிப்புள்ள, அரசு நலத்திட்ட உதவிகளை வழங் கிட உள்ளேன்.

ஆக, மொத்தம் 238 கோடி ரூபாய் மதிப்புள்ள பணிகளுக்கு, இங்கே, இன்று அடிக்கல் நாட்டிய திலும், புதிய திட்டங்களைத் தொடங்கி வைத்ததிலும், கட்டடங் களைத் திறந்து வைத்ததிலும், நான் எனது மகிழ்ச்சியை, உங்களோடு சேர்ந்து பகிர்ந்துகொள்ள விரும்பு கிறேன்.

அரசு எத்தனை உதவிகள் செய் தாலும், இயற்கையே நமக்கு எதிரி யாக, சில சமயங்களில் இருப்பது, தவிர்க்க முடியாதது. வறட்சி, ஒவ்வொரு ஆண்டும் மக்களது வாழ்வை, திசை மாற்றிவிடுகிறது. வெள்ளம், சாதாரண மக்களின் பொருளாதார ஸ்திரத்தன்மையை, சீர்குலைக்கின்றது. இப்படி இயற் கைச் சீற்றங்களினால் மக்கள் பாதிக்கப்படுகின்ற நேரத்தில், ஓடோடி வந்து உதவிக்கரம் நீட்டு வது தான், உங்கள் அரசு. எப்படிப் பட்ட நிதிநிலை நெருக்கடியிலும், ஏழை எளியோர் நலன் பெறும் திட்டங்கள், சிறிதும் தொய்வில் லாமல் தொடரச் செய்து வருவது தான், உங்கள் அரசு.

மரங்கள் பூமியின் மிகச் சிறந்த செல்வம், மரங்கள் அழிவதால், மனித குலத்துக்கே தீங்கு விளையும் என்பது, நடைமுறை உண்மை. காடுகள் மிகுதியாக இருக்கின்ற இடத்தில் தான், மழை அதிகமாகப் பெய்யும்;

சுற்றுச் சூழல் தூய்மையாக விளங்கும். எனவே, காடுகளை அழிப்பவர்கள், மக்களின் எதிரிகள் என்பதை, நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். அவர்களின் அராஜகச் செயலுக்கு, உதவுபவர் களைத் தடுத்து நிறுத்த, நீங்கள் முன்வர வேண்டும்.

தரும்புரி மாவட்டத்தில், தொழில் களுக்கு நல்ல எதிர்காலம் உள்ளது. தொழில் துறையில் கல்வி அறிவு, நல்ல பலனைத் தரும். வேளாண் மையையே முழுதும் நம்பியுள்ள நீங்கள், தொழில்கள் தொடங்கவும் முன்வர வேண்டும். அந்த வகையில் உங்கள் பிரதிநிதியான நான், உங்களுக்கு உதவ எப்போதும் காத் திருக்கின்றேன். உங்களை ஆர்வத் தோடு நான் வரவேற்கிறேன். முதலமைச்சரைப் பயன்படுத்திக் கொள்ள நிறைய பேர் ஆர்வமாக உள்ளார்கள். ஆனால், உங்களைப் பொருத்தமட்டில்; உங்களைப் பயன் படுத்த, முதலமைச்சர் ஆர்வமாக இருக்கின்றார் என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன். இது வேறு எந்தத் தொகுதிக்கும் கிடைக்காத அரிய வாய்ப்பு. இதனை நீங்கள் அனைவரும், தவறாது பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழக அரசு, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். வழிவந்த மக்கள் அரசு. இதுவரை ஆட்சி செய்தவர்களைப் போல, பழங்கதை பேசாமல், மக்கள் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்பட, ஆழ்ந்து சிந்தித்து, ஆய்ந்து அறிந்து, திட்டங்களைத் தீட்டுகின்ற அரசாகத் திகழ்கிறது, எங்கள் அரசு. அந்தத் திட்டங்கள் தான், இன்று செயல்வடிவம் பெற்று, சாதனை களாக மலர்ந்துள்ளன.

இந்தத் திட்டங்கள் அனைத் துமே, மக்களின் நல்வாழ்வினைத், தங்களது நியாயமான மைய நோக்க மாகக் கொண்டவை. பொது மக்களின் எல்லா வாழ்வு நிலை களையும், அம்சங்களையும், குறை பாடுகளையும் சரி செய்து, அவர் களை மேம்படுத்துவதற்காக, எங்கள் அரசு எடுத்துக் கொண்ட முயற்சி களும், அடைந்த சாதனைகளும், எண்ணில் அடங்கா என்பதை, நீங்கள் நன்கு அறிவீர்கள்.








TNSC BANK

## The Tamil Nadu State Apex Co-Operative Bank Ltd.,

233, N.S.C. Bose Road, Madras-600 001.

**Rate of Interest on Deposits (Effective from. 9.10.1992)**

| Sl.No. | Type of Deposit | Rate of Interest per annum |
|---|---|---|
| 1. | Savings Bank Accounts | 6.25% w.e.f. 24.4.92 |
| 2. | Fixed Deposits | |
| | For 46 DAYS and above but upto 270 days | 12.25% |
| | For 271 DAYS and above but upto 364 days | 12.00% |
| | For 1 YEAR and above | 12.25% |

**Interest on Fixed Deposit for 1 year and above will be paid Quarterly**

- NRO & NRE Accounts Facilities are available in 6 designated Branches.
- Interest rates are subject to RBI directives from time to time.

THE BANK AT YOUR SERVICE




# "கலைகளையும், கலைவித்தகர்களையும் என்றென்றும் கட்டிக்காப்பேன்!"

## 'கலைமாமணி' விருது வழங்கும் விழாவில் மாண்புமிகு முதல்வர் உரை

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் நடத்திடும் விழாக்களில் தலைசிறந்து விளங்குவது, 'கலைமாமணி' விருது வழங்கும் விழாவாகும். இயல், இசை, நாடக, நாட்டிய, திரைப்பட, ஊரகக் கலைகளில் புகழோடு விளங்கிய பழம்பெரும் கலைஞர்களுக்கும், புகழோடு விளங்கிடும் இன்றைய இளம் கலைஞர்களுக்கும் தமிழக அரசின் சார்பில் மன்றம் விருது வழங்கிச் சிறப்பிக்கிறது. இந்த வரிசையில் 1992-93-ஆம் ஆண்டின் 'கலைமாமணி' விருது வழங்கும் விழா 11.3.93 அன்று சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்றது.

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் விழாவில் கலந்துகொண்டு மறைந்த கலைமேதைகளின் திருவுருவப் படங்களைத் திறந்துவைத்து, விருது பெறும் கலைஞர்களுக்குக் 'கலைமாமணி' பட்டமும், நலிந்த கலைஞர்களுக்குப் பொற்கிழியும் வழங்கினார். மேதகு தமிழக ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண்சிங் அவர்கள் விழாவில் கலந்துகொண்டு விருது பெற்ற கலைஞர்களுக்குப் பொன்னாடையும், பொற்பதக்கமும் வழங்கினார்.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் தலைவர் திரு.குன்னக்குடி வைத்தியநாதன் அவர்கள் முன்னதாக வரவேற்புரை நிகழ்த்திப் பேசுகையில், "நீண்ட நெடுநாட்களாகக் கலைத்துறைக்குச் சேவை செய்தவர்களுக்கு இதுநாள் வரை கொடுக்கப்படாமல் இருந்தவந்த கலைமாமணி விருது, இன்று நமது முதல்வர் அவர்களால் வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கதும் பெருமைக்குரியதுமாகும்" என்றார்.

பின்னர் மேதகு ஆளுநர், மாண்புமிகு முதல்வர், மாண்புமிகு கல்வி அமைச்சர் ஆகியோருக்கு மன்றத்தின் சார்பில் பொன்னாடைகள் போர்த்தப்பட்டன.

மன்றத்தின் உறுப்பினர்-செயலாளர் திரு. ஆர்.எஸ். மனோகர் அவர்கள் அறிக்கை வாசித்தார்.

விழாவிற்குத் தலைமையேற்று மாண்புமிகு கல்வி அமைச்சர் டாக்டர் செ. அரங்கநாயகம் அவர்கள் பேசுகையில், "கலைகள் வீழ்ச்சி அடைவதற்குக் காரணம் கலைஞர்



களுக்கும் கல்விக்கும் இடையே உள் இடைவெளி தான் என்றும் கல்வித் துறையில் கலைத்துறைக்கு முக்கிய இடம் இருக்க வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார். மேலும் அவர் பேசுகையில், படித்தவர்கள் நிறைய பேர் கலைத்துறைக்கு வந்து முக்கியப் பொறுப்புக்களை ஏற்க வேண்டும், கல்வித் துறையில் கலைகளுக்கு முதலிடம் தரவேண்டும் என்ற எண்ணம் மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் இருப்பதாகவும் கூறினார்.

பின்னர் மாண்புமிகு முதல்வர் அவர்கள் மறைந்த கலை மேதைகள் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், எஸ்.எம். சுப்பையா நாயுடு, சீர்காழி கோவிந்தராஜன், கொத்தமங்கலம் சுப்பு, பெரியசாமித்தூரன், மகாராஜபுரம் சந்தானம், மதுரை சோமசுந்தரம், டி.கே. ஜெயராமன், தூலமங்கலம் ராஜலட்சுமி, தி.ஜானகிராமன், கே. ராம்நாத், உடையப்பத்தேவர், மூன்றடைப்பு ராமசுப்பு, கௌரி சங்கர ஸ்தபதியார் ஆகியோரின் திருவுருவப் படங்களைத் திறந்து வைத்துப் பேருரை ஆற்றினார்.

## முதல்வர் உரை

மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசுகையில் கூறியதாவது:

பாரம்பரியச் சிறப்பு மிக்க கலைகளை, கலைஞர்களை, பேணி வளர்க்கும் பண்பாட்டு நிறுவனமாகிய, இயல் இசை நாடக மன்றத்தின், இந்த இனிய விழாவில் கலந்து கொண்டு, உங்கள் அனைவரையும் சந்திப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

உலகத்தில் எந்த மொழிக்கும் இல்லாத சிறப்பு, நமது சொந்த மொழியாகிய தமிழுக்கு உண்டு. ஆங்கிலத்தை, இயல் ஆங்கிலம், இசை ஆங்கிலம், நாடக ஆங்கிலம் என்று முப்பிரிவாகப் பிரித்துப் பார்ப்பதில்லை. உலகின் மிகப் பழமையான மொழிகளான, கிரேக்கம், இலத்தீனம், வடமொழி, ஹீப்ரு (Hebrew) சீனம், ஆகிய மொழிகளைக் கூட, இப்படிப் பிரித்துச் சொன்னதில்லை. தமிழ் மொழி ஒன்றுக்கு மட்டும் தான், இந்தத் தனிச் சிறப்பு இயல்பாகவே அமைந்திருக்கின்றது.

மற்ற மொழிகளிலும் இயல் உண்டு, இசை உண்டு, நாடகமும் உண்டு. ஆனால், மொழியைக் குறிப்பிடும்போது, 'முத்தமிழ்' என்று, தமிழைக் குறிப்பிடுவது போல, வேறு எந்த மொழியையும் அழைக்கின்ற மரபு உலகில் இல்லை.

இயலாய், இசையாய், இனிய கூத்தாய், இப்படி மூன்றாய் விளங்குகின்ற முத்தமிழுக்கு, மன்றம் வைத்து, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் என்னும் பெயர் சூட்டி, மரபை மங்காது காத்து வருகின்றது நம் அரசு.

கவிதையும் உரைநடையும், இலக்கியத்தின் ஏனைய வடிவங்களும், இயல் என்னும் பெயரில் ஒளி வீசக் காண்கின்றோம். முற்காலம் முதல் தற்காலம் வரை, படைக்கப்பட்டிருக்கின்ற இலக்கியங்கள், காலத்தால் அழியாத மாபெரும் படைப்புகளாக விளங்குகின்றன. அந்த இயலுக்கும் ஏற்ற சிறப்பை, இன்று நாம் வழங்குகிறோம். வாய்ப்பாட்டையும், வகை வகையான இசைக் கருவிகளின் இன்னிசையையும், இசை என்கிறோம்.

எது நம்மை இசைய வைக்கின்றதோ, அது இசை. இறைவனையே இசை என்றும், இசைப்பயன் என்றும், பாடி மகிழ்ந்த பெருமக்கள் நமது முன்னோர்கள். 'ஏழிசையாய், இசைப்பயனாய், இன்னமுதாய், என்னுடைய தோழனுமாய்' என்று, சுந்தரர் தேவாரம் சொல்லி மகிழ்கிறது.

இயலைப் பரப்ப, இசையைப் பயன்படுத்திய ஒரு மாபெரும் வரலாறு தான், நமது பக்தி இயக்க வரலாறு. இடைக்காலத்தில், இன்னிசையால் தமிழ் பரப்பப்படவில்லை. வேறு மொழிகளே பரப்பப்பட்டன. இரண்டாம் தமிழ் என்னும் இசைத் தமிழ், எங்கோ கிடந்தது. எனவே தான், தமிழிசை இயக்கம் என்னும் இயக்கம், இந்த இரண்டாம் தமிழைப் பேணுவதற்காகவே எழுந்தது என்பதைப் பார்க்கிறோம்.

அந்த இசைத் தமிழைப் பேணுவதையும், இலட்சியமாகக் கொண்டது தான், நமது இயல் இசை நாடக மன்றம். உள்ளக் கருத்தைப் பாவங்களாக வெளிப்படுத்துவதை, கூத்து அல்லது நாடகம் என்று கூறுகிறோம்.

இசைக் கலையும் நாடகக் கலையும் இணைபிரியாதவை. நாட்டியக் கலைக்கு அடிப்படை பாடல்கள். அந்தப் பாடல்கள் நாட்டுப் பாடல்களாகவும், பக்திப் பாடல்களாகவும், நாட்டியத்துக்கே உரித்தான நாட்டியப் பாடல்களாகவும், விளங்குவதைப் பார்க்கிறோம்.



தமிழரசு
16-4-93 இதழ்
தென்னார்க்காடு மாவட்டச்
சிறப்பிதழாக மலர்கிறது!
◉ அரசு ஆற்றி வரும் அரும் பணிகளின் தொகுப்பு!
மற்றும்
◉ சிந்தைக்கு விருந்தூட்டும் சிறுகதை!
◉ கருத்தைக் கவரும் கட்டுரைகள்!
◉ கற்கண்டாய் இனிக்கும் கவிதைகள்!
◉ பக்கத்துக்குப் பக்கம் படங்கள்!
தமிழரசு
படிக்க — பயன்பெற — பாதுகாக்க

இந்த இசைக் கலையையும், ஆடற் கலையையும், சிற்பக் கலையிலும், ஓவியக் கலையிலும், போற்றி வளர்த்த ஒரு புகழ் மிக்க மரபு, நம் தமிழ் மரபு. ஆலயங்களும், ஆலயம் சார்ந்த இடங்களும், இந்த அரிய உண்மைக்கு, அற்புதமான சான்றுகளாக இன்றும் திகழ்கின்றன.

இப்படிப்பட்ட முத்தமிழை முறையாகக் காப்பதில், தமிழர்களுக்கு எவ்வளவு பொறுப்பு இருக்கின்றதோ, அவ்வளவு பொறுப்பு தமிழக அரசுக்கும் இருக்கின்றது.

ஆண்டுதோறும், கலைமாமணி விருது வழங்கி, உணர்ச்சி பூர்வமாக முத்தமிழ் வல்ல பெருமக்களுக்கு ஊக்கம் அளிக்கின்றோம்; அதனால் நாம் உவகையடைகின்றோம். கலைக்கு, கற்றவர், கல்லாதவர் என்ற பேதமில்லை. ஆகவே தான், இந்த மண்ணிலே மலர்ந்து, மணம் பரப்பி வருகின்ற, நாட்டுப்புறக் கலைகளுக்கும், நாட்டுப்புறக் கலை வித்தகர்களுக்கும், அதே சிறப்பை நாம் செய்து வருகிறோம்.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், இந்தச் சீரிய பணியில் ஈடுபட்டிருப்போரைத் தெரிந்தெடுத்து, அவர்களுக்குக் காலத்தோடு நன்றி செய்கிற கடமையைச் செய்து வருகிறது. அந்த வகையில், இன்று 42 முத்தமிழ் வித்தகர்கள், 'கலைமாமணி' விருதினையும், வறுமையில் வாடிக்கொண்டிருக்கும், 5 கலைமாமணி விருது பெற்றவர்கள், 'பொற்கிழியும்' பெறுகின்றார்கள்.

கடந்த ஆண்டு, சகோதரர் ஆர்.எஸ். மனோகர் அவர்கள் விடுத்த வேண்டுகோளின் பயனாக, கலைஞர்களுக்கு வழங்கப்பட்ட உதவித் தொகை, 250 ரூபாயிலிருந்து உயர்த்தப்பட்டு, 400 ரூபாயாக வழங்கிட நான் ஆணையிட்டேன். எனக்கு நன்றாகத் தெரியும்; வறுமையை 'நடித்துக் காட்டுவது மட்டுமல்ல, அதை அனுபவித்து உழலும், பல்வேறு கலைஞர்கள் நம் நாட்டில் இருக்கின்றார்கள் என்று. இவர்களுக்கு என்ன உதவி செய்யலாம் என்பதைச் சிந்தித்து, அரசுக்குச் சொல்கின்ற அவசியமும் கடமையும், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்திற்கு உள்ளது என்பதை, இந்தத் தருணத்திலே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கலைஞர்களின் வழிகாட்டியாக, கலைஞர்களுக்கு உதவுகின்ற நிழல் மரமாக இருந்த, இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் வழியில் நடக்கும் நான், கலைகளையும், கலை வித்தகர்களையும், என்றென்றும் கட்டிக் காப்பேன் என்பதை, இத்தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று கலைமாமணி விருது பெறுகின்ற பெருமக்கள் அனைவருக்கும், பொற்கிழி பெறும் வித்தகர்களுக்கும், சுழல்கேடயம் பெறும் நாடகக் குழுவினருக்கும், கேடயம் பெறும் கலை நிறுவனத்தினருக்கும், எனது மனமார்ந்த பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், தனது சீரிய பணியை மேலும் தொடர வேண்டும் வளர வேண்டும் என வாழ்த்தி, விடை பெறுகிறேன்.

மேதகு தமிழக ஆளுநர் திரு.பீஷ்ம நாராயண்சிங் அவர்கள் பேசுகையில், " தமிழகம் இயல் இசை நாடக மன்றத்துறையில் போற்றத்தக்க பாரம்பரியக் கலாச் சாரத்தைக் கொண்டுள்ளது. தமிழகம் பல சிறந்த கலைஞர்களை உருவாக்கியுள்ளது. இந்தக் கலைஞர்கள் ஆற்றியுள்ள பணிகள் குறுகிய எல்லைகளை எல்லாம் கடந்து பல இடங்களுக்கும் பரவி, தமிழ்நாட்டின் கலையம்சங்களை இந்தியாவின் மற்ற இடங்களுக்கும் பரப்பி நல்ல வரவேற்பைப்பெற்றுள்ளன" என்றார்.

பின்னர் பல்வேறு கலைத் துறைகளைச் சேர்ந்த 42 முத்தமிழ் வித்தகர்களுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் 'கலைமாமணி' விருதும், 'கலைமாமணி' விருது பெற்ற 5 நலிந்த கலைஞர்களுக்குப் பொற்கிழியும் வழங்கினார். மேதகு ஆளுநர் அவர்கள் இந்த கலைஞர்களுக்குப் பொன்னாடையும், பொற்பதக்கமும் வழங்கிச் சிறப்பித்தார். மேலும் சிறந்த நாடகக் குழுவுக்கான சுழற்கேடயத்தைக் 'கிரேஸி கிரியேஷன்ஸ்' குழுவுக்கும், சிறந்த கலை நிறுவனத்துக்கான விருதினை, சென்னை நாரதகான சபாவுக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார்.

விழா முடிவில் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றச் செயலாளர் திரு ஆர்.எஸ். மனோகர் நின்றி கூற விழா இனிதே முடிந்தது.

- நிகழ்ச்சித் தொகுப்பு: -
ஜே. சந்திரன்.

## கலைமாமணி விருதுபெற்ற கலைஞர்கள்

| | |
|---|---|
| திரு. பகீரதன் | - இயற்றமிழ்க் கலைஞர் |
| திரு. ஏர்வாடி எஸ். இராதாகிருஷ்ணன் | - இயற்றமிழ்க் கலைஞர் |
| திரு. எஸ்.என். ஸ்ரீராமதேசிகன் | இயற்றமிழ் ஆராய்ச்சிக் - கலைஞர் |
| திரு. சேலம் டி. செல்லம் அய்யங்கார் | - இசைக் கலைஞர் |
| திரு. திருச்சூர் வி. இராமச்சந்திரன் | - இசைக் கலைஞர் |
| திரு. வி.வி. சுப்பிரமணியம் | - வயலின் கலைஞர் |
| திரு. இராமநாதபுரம் எம்.என். கந்தசாமி | - மிருதங்கக் கலைஞர் |
| திரு. மாயவரம் ஜி. சோமசுந்தரம் என்கிற மாயவரம் சோமு | - கஞ்சிராக் கலைஞர் |
| திரு. ஆனையாம்பட்டி எஸ். கணேசன் | - ஜலதரங்கக் கலைஞர் |
| திரு. சீர்காழி எஸ். திருஞானசம்பந்தம் | இறையருட் பாடற் - கலைஞர் |
| திரு. சேங்காலிபுரம் பி.என். இராமமூர்த்தி தீட்சிதர் | சங்கீத உபன்யாசக் - கலைஞர் |
| திரு. பத்தமடை எம். ராஜா | - நாதசுரக் கலைஞர் |
| திரு. சேஷம்பட்டி டி. சிவலிங்கம் | - நாதசுரக் கலைஞர் |
| திரு. பெரும்பள்ளம் பி. வெங்கடேசன் | - தவில் கலைஞர் |
| திருமதி கிருஷ்ணகுமாரி நரேந்திரன் | - பரதநாட்டிய ஆசிரியர் |
| திரு. டி.எஸ். கதிர்வேல் (பம்பாய்) | - பரதநாட்டிய ஆசிரியர் |
| செல்வி லெட்சுமி விசுவநாதன் | - பரதநாட்டியக் கலைஞர் |
| திருமதி ஆர். கௌரி | - பரதநாட்டிய இசைக் கலைஞர் |
| திரு. டி.பி. வேணுகோபால் பிள்ளை | பரதநாட்டிய மிருதங்கக் - கலைஞர் |
| திரு. மெரீனா (ஸ்ரீதர்) | - நாடக ஆசிரியர் |
| திரு. டி.பி. சாமிக்கண்ணு | - நாடக நகைச்சுவைக் கலைஞர் |
| திரு. தில்லை ராஜன் | - நாடகத் தயாரிப்பாளர் |
| திரு. எஸ்.ஆர். தசரதன் | - நாடக நடிகர் |
| திருமதி டி.ஆர். லதா | - நாடக நடிகை |
| திரு. பிரேமாலயா ஆர். வெங்கட்ராமன் | - திரைப்படத் தயாரிப்பாளர் |
| திரு. ஜி.ஆர். நாதன் | - திரைப்பட இயக்குநர் |
| திரு. நிழல்கள் எஸ். ரவி | - திரைப்பட நடிகர் |
| திருமதி ரேவதி | - திரைப்பட நடிகை |
| திரு. கே.கே. சௌந்தர் | - திரைப்படக் குணச்சித்திர நடிகர் |
| திரு. ஏ.எஸ். பிரகாசம் | - திரைப்பட வசனகர்த்தா |
| செல்வி சச்சு | - திரைப்பட நகைச்சுவை நடிகை |
| திரு. எஸ். இராஜேஸ்வர ராவ் | திரைப்பட - இசையமைப்பாளர் |
| திரு. ஏ.எல். ராகவன் | - திரைப்படப் பின்னணி பாடகர் |
| திரு. என். சுப்பிரமணிய தம்பிரான் | - தெருக்கூத்துக் கலைஞர் |
| திருமதி கொல்லங்குடி கருப்பாயி | கிராமிய இசைக் - கலைஞர் |
| திருமதி டி. லட்சுமி | - கரகாட்டக் கலைஞர் |
| திரு. பி.எஸ். மணிமுத்து பாகவதர் | பழம்பெரும் இசை - நாடகக் கலைஞர் |
| திரு. சேந்தமங்கலம் எஸ்.வி. பாலசுப்பிரமணியம் | - இசை நாடக நடிகர் |
| திருமதி டி.எம். பங்கஜா | - இசை நாடக நடிகை |
| திரு. எம்.எஸ். வெங்கடாசலம் | இசை நாடக - ஆர்மோனியக் கலைஞர் |
| திரு. எஸ்.ஆர். வீரராகவன் | - தொழில்முறை அல்லாத நாடக நடிகர் |
| திரு. எம்.எஸ். சிவப்பிரகாச ஸ்தபதியார் | - சிற்பக் கலைஞர் |


Best Compliments From

**Shanthi Theatre**
Phone No.2635

**'K' Theatre**
Phone No.2090

**Rao and Khan Motor's**
Krishnagiri
Phone No.2857




அமைக்கும் திட்டத்தின் கீழ் 1993-94 ஆம் ஆண்டில் குறைந்தது 32 படுக்கை வசதிகளுடன் **மேலும் 14 வட்டங்களில் இவ்வகை மருத்துவமனைகள் ஏற்படுத்தப்படும். இத்திட்டம் நிறைவு பெறுவதன் மூலம், தமிழகத்திலுள்ள அனைத்து வட்டங்களிலும், இவ்வகை மருத்துவமனைகள் வகையிலான அடிப்படை வசதிகள் உருவாக்கப்படுவதற்கு வசதி செய்யப்படும்.**

114. மாவட்ட அளவில் குறைந்தது 200 படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவமன ஒன்றை எல்லா மாவட்டங்களிலும் ஏற்படுத்துவதும் எங்களுடைய திட்டமாகும். இத்திட்டத்தின் பகுதியாக திருவண்ணாமலையில் உள்ள அரசு மருத்துவமனையில் புதிதாக 48 படுக்கை வசதிகள் கொண்ட வார்டு ஒன்றினையும், விழுப்புரத்தில் உள்ள அரசு மருத்துவமனையில் 24 படுக்கை வசதிகள் கொண்ட வார்டு ஒன்றினையும் நிறுவ இருக்கிறோம்.

115. உலகவங்கி ஆதரவு பெறும் இந்திய மக்கள் தொகைத் திட்டம்-V நடப்பாண்டில் மதுரை, கோயம்புத்தூர் மற்றும் கூடுதலாக 6 நகராட்சிகளுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. **1993-94 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ.13.27 கோடி செலவில், இத்திட்டத்தினை நாங்கள் மேலும் 15 நகராட்சிகளுக்கு விரிவுபடுத்துவோம்.**

116. **உலக வங்கியின் நிதியுதவியுடன், 1993-94 ஆம் ஆண்டில் விழிப்புலன் இன்மைக்குறையைக் கட்டுப்படுத்தும் புதிய திட்டமொன்றைத் தொடங்குவோம். மொத்தம் ரூ.56 கோடி செலவாகும் இத்திட்டம், 6 ஆண்டுகள் கால அளவிற்கு மேற்கொள்ளப்படும். இதன் மூலம் விழிப்புலன் இன்மையைத் தடுத்துக் கட்டுப்படுத்துவதற்கான வசதிகள் முற்றிலும் நவீனப்படுத்தப்படும்.**

### குடிநீர் வழங்கல்

117. பாதுகாப்பான குடிநீர் வழங்கும் பணிக்கு உயர் முன்னுரிமை அளிப்பது மேலும் தொடரும். குடிநீர் வழங்கல் திட்டத்திற்கு இந்த வரவு-செலவுத் திட்டம் எப்போதும் இல்லாத அளவுக்கு மிக அதிகமாக ரூ.288.52 கோடி நிதி ஒதுக்கியுள்ளது.

118. இம்மாநிலத்திலுள்ள மக்கள் உறைவிடம் ஒவ்வொன்றிலும், பாதுகாக்கப்பட்ட குடிநீர் ஆதாரம் குறைந்தது ஒன்றேனும் இருக்குமாறு உறுதி செய்துள்ளோம். குடிநீர் வழங்கல் நிலைமையை மதிப்பிட புதிதாக ஆய்வு ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. குடிநீர் வசதி ஓரளவே அளிக்கப்பட்டுள்ள உறைவிடங்களுக்கு முழு அளவில் தற்போது குடிநீர் வசதி அளிக்க இருக்கிறோம். இந்த அடிப்படையில் 37,833 குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி அளிக்கப்படவுள்ளது. **தமிழ்நாடு வேளாண் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மொத்தம் ரூ.47.68 கோடி செலவில் உலக வங்கியின் உதவியுடன் புதிய துணைத் திட்டம் ஒன்றை நாம் தொடங்கியுள்ளோம்.** வரும் ஆண்டில், துணைத் திட்டம், சேலம், தென்னார்க்காடு, தருமபுரி, திருவண்ணாமலை - சம்புவராயர் மாவட்டங்களுடன், திருச்சிராப் பள்ளி, புதுக்கோட்டை மாவட்டங்களுக்கும் நீட்டிக்கப்படும். 1993-94 இல் 3,162 குடியிருப்புகள் இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்படும்.

119. 1992-93ல் விரைவுபடுத்தப்பட்ட ஊரகக் குடிநீர் வழங்கல் திட்டத்தின்கீழ் மத்திய அரசு நமக்கு ரூ.20.19 கோடி மட்டுமே ஒதுக்கியுள்ளது. மத்திய வரவு-செலவுத் திட்டத்தில் இத்துறைக்கு அறிவிக்கப்பட்ட கூடுதல் ஒதுக்கீட்டினால், 1993-94ல் தமிழ்நாட்டிற்குக் குறைந்தது ரூ.75 கோடியாவது நிதி ஒதுக்குமாறு நாம் மத்திய அரசை வலியுறுத்துவோம். இதன் வாயிலாக, ஊரக உறைவிடங்களுக்கு மிக விரைவாக இத்திட்டத்தின் கீழ்க் குடிநீர் வழங்க இயலும். 1993-94ல் ஓரளவே குடிநீர் வசதி அளிக்கப்பட்டுள்ள 4,800 குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கல் வசதியளிக்க நாம் திட்டமிட்டுள்ளோம்.

120. கிராமப் பகுதியில் குடிநீர் வழங்கல் பணியில் காணும் ஒரு முக்கியமான பிரச்சினை அதனை உரியவகையில் பராமரிப்பதேயாகும். கிராமப் பகுதிகளில் கைப்பம்புகள் மற்றும் விசைப்பம்புகளைப் பராமரிப்பதற்கு நாங்கள் ரூ.5.34 கோடி ஒதுக்கியுள்ளோம். 'யுனிசெப்' நிறுவனத்தின் ஆதரவுடன் வருகிற ஆண்டில் முன்னோடித் திட்ட அடிப்படையில் "இந்தியா மார்க் III" பம்புகளை நிறுவவிருக்கிறோம். மேம்பட்ட இத்தகைய கைப்பம்புகளைக் கிராம அளவில் பராமரிக்கலாம்.

121. 1-4-1993 நிலவரப்படி, பத்மநாபபுரம் நீங்கலாக எல்லா நகராட்சிகளிலும், அடிப்படை குடிநீர் வழங்கல் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. பத்மநாபபுரம் நகராட்சியில் குடிநீர் வழங்கல் திட்டப் பணிகள் நடந்தேறி வருகின்றன. நகரியங்களில் சுத்திவாக்கம், மாதவரம் நீர் வழங்கல் திட்டம் சென்னை மாநகர குடிநீர் வழங்கல் திட்டத்துடன் எடுத்துக் கொள்ளப்படும். 1993-94ல், ரூ. 24.2 கோடி செலவில் 17 நகர்ப்பகுதி பேரூராட்சிகளும், 17 கிராமப்பகுதி பேரூராட்சிகளும் புதிய குடிநீர் வழங்கல் திட்டத்தின் வாயிலாகப் பயனடையும்.

122. உலக வங்கியின் நிதியுதவியுடன், ரூ.322 கோடி செலவில் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு குடிநீர் வழங்கல் திட்டம் 30-6-1993க்குள் முடிக்கப்பட வேண்டியுள்ளது. மேற்கொள்ளும் திட்டப் பணிகள் அனைத்தையும் முழுமையாக முடிக்க இயலும் வகையில், 1994 டிசம்பர் வரை இத்திட்டப் பணியை நீட்டிக்குமாறு உலக வங்கியைக் கேட்டுக் கொண்டுள்ளோம். மேற்சொன்ன புதிய திட்டப் பணிகள் 1993 ல் முடிக்கப்படும்போது, கடும் தண்ணீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ள புதுக்கோட்டை, திருவண்ணாமலை, மணப்பாறை, சங்கரன்கோயில், காஞ்சிபுரம், பொள்ளாச்சி போன்ற நகரங்களுக்குப் போதிய அளவில் தண்ணீர் கிடைக்கும். ரூ.530 கோடி அளவில் விரிவான புதிய திட்டம் ஒன்றை உலக வங்கியின் ஆதரவுடன் நாம் மேற்கொள்ளக் கருதியுள்ளோம்.

123. **இராமநாதபுரம் மாவட்டத்திற்காக ரூ.44 கோடி செலவில் விரிவான குடிநீர் வழங்கல் திட்டம் ஒன்றை மத்திய அரசின் நிதியுதவியுடன் 1993-94ல் மேற்கொள்ளவிருக்கிறோம். உப்பு நீரைக் குடிநீராக்கும் தொழில்நுட்ப உத்தியைப் பயன்படுத்துவதே இத்திட்டத்தின் சிறப்பாகும். நாளொன்றுக்கு 38 இலட்சம் லிட்டர் திறன் கொண்ட உப்பு நீரைக் குடிநீராக்கும் இந்தியாவின் மிகப் பெரிய நிலையம் ஒன்று பாரத மிகு மின் நிறுவனத்தின் உதவியுடன் சாயல்குடியில் நிறுவப்படும்.**

124. குடிநீர் வழங்கல் திட்டங்களுக்காக உள்ளாட்சி மன்றங்கள், ஆயுள் காப்பீட்டுக் கழகம் போன்ற நிதி நிறுவனங்களிடமிருந்து பெற்ற கடன்களைத் திருப்பிச் செலுத்துவது என்பது தற்போதுள்ள மிகப் பெரிய பிரச்சினையாகும். உள்ளாட்சி மன்றங்கள் உரிய கால அளவில் தாங்கள் பெற்ற கடன்களைத் திருப்பிச் செலுத்தத் தவறுவதால், புதிய திட்டங்களை மேற்கொள்ள இயலாமல் போய்விடுகிறது. பொருத்தமான தண்ணீர்க் கட்டணங்களை விதிப்பதன் வாயிலாக நிதி நிலைமை சிறிது முன்னேற்றம் அடைந்துள்ளது. இந்நடைமுறை தொடர்ந்து செயல்படுத்தப்படும். நகர்ப்புற நிதியுதவி வழங்கும் ஒரே அமைப்பாகச் செயல்படும் தமிழ்நாடு நகர்ப்பகுதி நிதியுதவி அடிப்படைக் கட்டமைப்பு வசதி மேம்பாட்டுக் கழகத்திடம்

(TUFIDCO) குடிநீர் வழங்கல் கழிவுநீரகற்றல் திட்டத்திற்காக கடன் வழங்குகின்ற மற்றும் கடன் தொகையை திருப்பி வசூலிக்கின்ற பணிப் பொறுப்புகளை ஒப்படைக்க முடிவு செய்துள்ளோம். தமிழ்நாடு நகர்ப் பகுதி நிதியுதவி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகம், நிதி வகையில் நலிந்த நகராட்சிகளுக்கான கடன் நிவாரணத் திட்டம் ஒன்றைச் செயற்படுத்தும். அத்துடன் ஏனைய நகராட்சிகளிடமிருந்து உரிய கால அளவில் கடன் தொகையை வசூலிக்கவும், எல்.ஐ.சி., ஹட்கோ போன்ற கடன் வழங்கு நிறுவனங்களுக்குக் கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தவும் உறுதி செய்யும்.

125 சென்னை மாநகரின் குடிநீர் ஆதார ஏரிகளின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் வடகிழக்குப் பருவமழை பொய்த்ததால், மாநகரில் ஒருநாள் விட்டு ஒருநாள் தண்ணீர் வழங்கும் ஏற்பாட்டைச் செயல்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. தண்ணீர்ப் பிரச்சினையைச் சமாளிக்க லாரிகளில் தண்ணீர் வழங்கவும், குடிநீர் வழங்கல் தொடர்பான ஏனைய பணிகளுக்கும் ஏற்கெனவே ரூ.24 கோடி அனுமதித்துள்ளோம். **மாநகரில் ஏற்பட்டுள்ள கடுமையான தண்ணீர்ப் பற்றாக்குறை, இதற்கான நீண்டகாலத் தீர்வு காண முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்ட தனி முயற்சிகளின் அவசியத்தை சுட்டிக் காட்டுகிறது.** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆந்திரப்பிரதேச முதலமைச்சருடன் 27.01.1993 அன்று பயனுள்ள வகையில் பேச்சுவார்த்தை நடத்தினார். **இதனால், தடைகள் நீங்கிப் பணிகள் முன்னேற்றமடைந்துள்ளன.** மூன்று மாதக்கால அளவில் தெலுங்கு கங்கைத் திட்டத்திற்காகச் செயல்முறை விதிகளைத் தயாரிக்க, தொழில்நுட்ப அதிகாரிகள் அடங்கிய குழு ஆய்வு ஒன்றை மேற்கொள்ளச் செய்வதற்கு ஆந்திரப்பிரதேச முதலமைச்சர் ஒப்புக் கொண்டுள்ளார். சென்னைக்குக் கிருஷ்ணா நதி நீர் 1995 ஜுன் மாதத்தில் கிடைக்கச் செய்வதை உறுதிசெய்ய, இத்திட்டத்திற்குரிய நிதியுதவியை உயர்த்தவும் ஆந்திரப்பிரதேச முதலமைச்சர் ஒப்புக் கொண்டுள்ளார். இந்த நிலையில்தான் கிருஷ்ணா நதி நீரைச் சுத்திகரித்து வழங்கவும், கழிவு நீரை அகற்றவும், இரண்டாவது சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் சுற்றுப்புறத் துப்புரவுத் திட்டத்தை முடித்துத் தருவதற்கு நிதியுதவுமாறு உலக வங்கியின் நிருவாக இயக்குநரை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்கள். **ரூ.1,100 கோடி அளவிலான இப்பெருந்திட்டத்தை உடனடியாகப் பரிசீலனை செய்ய உலக வங்கி நிருவாக இயக்குநர் உறுதியளித்துள்ளார்.** ஆந்திரப்பிரதேசத்தில் அமைப்புப் பணிகளுக்கு ரூ.60 கோடியும், தமிழ்நாட்டில் அமைப்புப் பணிகளுக்கு ரூ.30 கோடியும் உள்ளடக்கிய தெலுங்கு கங்கைத் திட்டத்திற்கு ரூ.90 கோடி நிதி ஒதுக்க இந்த வரவு-செலவுத் திட்டம் வகைசெய்கிறது. கிருஷ்ணா நீரைச் சுத்திகரிக்க ரூ.20 கோடி செலவில் நாளொன்றுக்கு 30 கோடி லிட்டர் நீரைச் சுத்திகரிக்கும் நிலையம் அமைக்கும் பணியை உலக வங்கி ஒப்புதலுடன் 1993-94-ல் நாம் மேற்கொள்ளவிருக்கிறோம். இது உலக வங்கி அனுமதி அளிக்க வேண்டிய ரூ.1,100 கோடி செலவு பிடிக்கும் புதிய திட்டத்தின் பகுதியாக அமையும்.

## மகளிர் மேம்பாடு, குழந்தை நலன், சத்துணவு

126. **ஒரு இலட்சம் மகளிர்க்குச் சுய வேலை வாய்ப்பளிக்க ஒருங்கிணைந்த மகளிர் மேம்பாட்டுத் திட்டம் ஒன்றைத் தொடங்கியுள்ளோம்.** வேளாண்மை மேம்பாட்டிற்கான அனைத்து நாட்டு நிதியிலிருந்து கிடைக்கும் நிதி உதவியைக் (IFAD) கொண்டு தருமபுரி, தென்னார்க்காடு, சேலம் மாவட்டங்களில் இத்திட்டத்தை நாம் மேற்கொண்டுள்ளோம். வேளாண்மை மேம்பாட்டிற்கான அனைத்து நாட்டு நிதி மேலும் வழங்குவதாக உறுதி கூறியுள்ள நிதியுதவியைக் கொண்டு, நடப்பாண்டில் இத்திட்டத்தை மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தியுள்ளோம். ஒரு சில மாவட்டங்களில் முன்னோடித் திட்ட அடிப்படையில் இத்திட்டத்திற்கு நிதியுதவி நல்க உலக வங்கி தன்னுடைய விருப்பத்தைத் தெரிவித்துள்ளது. இத்திட்டத்திற்கு நிதி உதவியளிக்குமாறு மத்திய அரசையும் கேட்டுக் கொண்டுள்ளோம். இத்திட்டத்தை வரும் ஆண்டில் முற்றிலுமாகச் செய்து முடிக்க நாம் முயல்வோம். முதல்கட்டமாக இத்திட்டத்தின்கீழ் 90,000 மகளிர் குழுக்களாக அமைக்கப்பட்டுள்ளனர்.

127. பெண் குழந்தை ஒவ்வொன்றுக்கும் வளமான மகிழ்ச்சியான வாழ்க்கை அமையப் பெறுவதில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றுள்ளார் என்பதை நாம் அனைவரும் அறிவோம். மிகக் கொடியதான பெண் சிசுக்கொலை வழக்கத்தை வேரோடு களைவது நம் நோக்கமாகும். இந்நோக்கத்துடன்தான் "அரசு தொட்டில் திட்டம்" தொடங்கப்பட்டது. **"புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டமும்" தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.4 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

128. புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் மற்றும் அதனோடு இணைந்த திட்டங்களுக்கு மொத்தம் ரூ.312 கோடி நிதி ஒதுக்கீட்டிற்கு இந்த வரவு-செலவுத் திட்டம் வகை செய்கிறது. இத்திட்டங்களின் பயன் மேலும் பலருக்குச் செல்லும் வகையில் திட்டத்தை மேம்படுத்தவும் விரிவாக்கவும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளோம். இத்திட்டப் பணியாளர்கள் 2,35,500 பேருக்கு வழங்கப்படும் மதிப்பூதியம் 1.11.1992 முதல் திருத்தப்பட்டுள்ளது. இதன் மூலம், இதற்காகும் ஆண்டுச் செலவு ரூ. 3.07 கோடியாகும். இந்தப் பணியாளர்களின் பணி நிலைமைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

129. ஊரகப் பகுதிகளில் சத்துணவுத் திட்டத்தை மிகப்பெரிய அளவில் மேம்படுத்த உலக வங்கியிடமிருந்து நாம் நிதியுதவி பெற்றுள்ளோம். நாங்கள் 6 மாதம் முதல் 36 மாத வயதுடைய குழந்தைகளுக்குச் சத்துணவு மற்றும் உடல் நலக் கவனிப்பு வசதிகள் அளிக்கும் வகையில் இத்திட்டத்தினை விரிவுபடுத்தியுள்ளோம். உடல் நலப் பாதிப்பு ஏற்படும் நிலையில் உள்ள கருவுற்ற தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள் இத்திட்டத்தின் கீழ்ப் பயனடைந்துள்ளனர். தருமபுரி, தென்னார்க்காடு மாவட்டங்கள் 1992-93 ல் இத்திட்டத்தின் கீழ்க் கொண்டுவரப்பட்டுள்ளன. 1993-94 ஆம் ஆண்டில் கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி மாவட்டங்கள் இத்திட்டத்தின் கீழ்க் கொண்டு வரப்படும்.

## ஆதி திராவிடர் பழங்குடியினர் நலன்

130. ஆதி திராவிடர்களுக்கான புதிய 10 அம்சத் திட்டத்தைச் செயற்படுத்துவதில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. தற்சார்பும் அடிப்படை வசதிகளும் அமைந்த இத்திட்டத்தை 1993-94 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்துவோம்.

131. கல்வி வசதிகளின் மேம்பாட்டிற்கு நாம் தனி முக்கியத்துவம் கொடுத்துள்ளோம். கல்வித்தரம் உயர உறுதி செய்யும் வகையில் வகுத்த சிறப்புத் திட்டம் நல்ல பயன்களைத் தந்துள்ளது. இதன் மூலம் **ஆதி திராவிடர் மாணவர்களில், 1992 மார்ச்-ஏப்ரலில் நடைபெற்ற பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்கள் எண்ணிக்கை முன்பிருந்ததைக் காட்டிலும் 20 சதவீதத்திற்கு மேல் உயர்ந்துள்ளது. இந்த முயற்சி தொடரும். 1993-94 ஆம் ஆண்டில் 20 புதிய மாணவரில்லங்கள் தொடங்கப்படும். 1993-94 ஆம் ஆண்டில் தற்போதுள்ள மாணவரில்லங்களில் கூடுதலாக 1000 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவர்.**

★ புதுக்கோட்டை, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், நாகப்பட்டினம்-காயிதேமில்லத், திண்டுக்கல்-அண்ணா, இராமநாதபுரம், திருவண்ணாமலை-சம்புவராயர் ஆகிய ஆறு மாவட்டங்களில் ஒவ்வொன்றும் ரூ.6 0 இலட்சம் செலவில் விளையாட்டு மையம் மற்றும் விளையாட்டரங்க வளாகங்கள் அமைக்கப்படும்.

132. பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களுக்கும் உயர்ந்த முன்னுரிமை அளிக்கப்படும். **இதனால், 1993-94 ஆம் ஆண்டில் 70,000 பேர் பயனடைவார்கள். தற்சார்புத் தொழில் முனைவோர்களின் சிறப்புத் திட்டம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. ரூ.200 கோடி மொத்த முதலீட்டைக் கொண்டுள்ள இத்திட்டத்தின் கீழ், 200 தொழில் முனைவோர்கள் நிதியுதவி பெறுவார்கள்.** கோயம்புத்தூர், பெரியார் மாவட்டங்களில் இரண்டு 'தனித் தொழிற்பேட்டைகளை ஏற்படுத்தும் திட்டம் இதில் அடங்கும். ஒவ்வொரு தொழிற்பேட்டையிலும் 100 ஆதி திராவிடர் தொழில் முனைவோர்கள் தாங்கள் நிருவகிக்கவிருக்கும் தொழிற்கூடங்களை ஏற்படுத்துவார்கள். **மொத்தம் ரூ.46 கோடி ஒதுக்கீட்டைக் கொண்டு, பட்டுப்புழு வளர்க்கும் திட்டம் ஒன்றும் தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 8,000 ஆதி திராவிடர்கள் பயன்பெறுவார்கள். 1,000 ஆதி திராவிடர் குடும்பங்களுக்குப் பயன்தரும் மற்றொரு பெரும் திட்டம் ரூ.100 கோடி ஒதுக்கீடு கொண்ட இறால் வளர்ப்புத் திட்டமாகும்.** வளமான சிந்தனைகளைத் தேக்கி உருவாக்கியுள்ள இச்சிறப்புத் திட்டங்களுக்குப் பல்வேறு நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் உதவியை நாங்கள் கோரியுள்ளோம்.

## பிற்படுத்தப்பட்டோர் நலன்

133. ஆளுநர் உரையில் முன்பே தெரிவித்துள்ளபடி, பிற்படுத்தப்பட்டோருக்கான மொத்த இட ஒதுக்கீட்டை 50 சதவீதமாகக் குறைப்பது பற்றியும், இட ஒதுக்கீடு வழங்குவதில் பின்தங்கிய வகுப்பினரிடையே முன்னேற்றம் அடைந்தவர்களை நீக்கிவிடுவது பற்றியும் உச்ச நீதி மன்றம் அளித்துள்ள உத்தரவை மறு ஆய்வு செய்யும்படி கேட்டுக் கொள்ள அரசு தீர்மானித்துள்ளது. அனைத்து வகையான சமூகக் கொந்தளிப்புகளிலிருந்தும் விடுபட்டு நிற்கிற தமிழ்நாட்டில் அந்நிலை தொடர்ந்து நிலவப் பாதுகாப்பளிப்பதே இதன் நோக்கமாகும். பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் சம்பந்தப்பட்ட பிரச் சினைகளை ஆராய நிரந்தரமான குழு ஒன்றும் அமைக்கப்படும்.

134. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்க்குப் போதிய கல்வி வசதிகளுக்கு வகை செய்வதே எங்களுடைய தலையாய முயற்சியாக இருக்கும். **மாணவிகளுக்கென்றே 20 புதிய இல்லங்கள் 1993-94ல் தொடங்கப்படும்.** வருகிற ஆண்டில் மாணவியருக்கென்று 24 இல்லங்கள் உட்பட மொத்தம் ரூ.9.17 கோடி செலவில் 66 புதிய இல்லங்களுக்கான கட்டிடங்கள் கட்டி முடிக்கப்படும் என்று நாங்கள் உறுதி கூறுகிறோம். 1993-94 ஆம் ஆண்டில் ரூ.35 இலட்சம் செலவில் சிறப்புப் பயிற்சி நிறுவனம் ஒன்றைப் புதிதாகக் கட்ட நாங்கள் நடவடிக்கை எடுத்துள்ளோம். ஆண்டொன்றுக்கு ரூ.24,000 ஆக இருந்த வருமான உச்சவரம்பையும் 1992 டிசம்பரில் நாங்கள் நீக்கியுள்ளோம். இதனால், திறமை வாய்ந்த மாணவர்கள் அனைவரும் சிறப்புப் பயிற்சி நிறுவனத்தில் சேர இயலும்.

135. நடப்பாண்டில், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் வருவாய் மேம்பாட்டுத் திட்டம் ஒன்றைப் புதிதாகத் தொடங்கியுள்ளோம். **மேலும், பல திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக இக்கழகத்திற்கு, வரவு-செலவுத் திட்டத்தில் சமவீதப் பங்குத் தொகையாக ரூ.1 கோடிக்கு நாங்கள் வகை செய்துள்ளோம்.** 1993-94ல் மேலும் பல திட்டங்களை மேற்கொள்வதற்காகப், புது டில்லி, தேசிய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நிதியுதவி மேம்பாட்டுக் கழகத்திற்கு நாங்கள் செயற்குறிப்புகளை அளித்துள்ளோம்.

## நெசவாளர் நலன்

136. நெசவாளர் நலனுக்கு இந்த வரவு-செலவுத்திட்டம் பெருமளவில் ஆதரவு அளித்துள்ளது. கிராமப்புற நிலமற்ற வேளாண்மைத் தொழிலாளர்களுக்கும், நகர்ப்பகுதிகளில் வறுமையில் வாடும் ஏழை மக்களுக்கும் இலவச வேட்டிகள், சேலைகள் ஆகியவற்றை வழங்குவதற்கான இத்திட்டம் ரூ.45 கோடி செலவில் 1992-93 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்டுள்ளது. **1993-94 ஆம் ஆண்டிலும் இத்திட்டத்தைச் செயல்படுத்த ரூ.45 கோடிக்கு வரவு-செலவுத் திட்டம் வகை செய்கிறது. இத்திட்டத்தின் கீழ் மொத்த உற்பத்தி அளவான 60 இலட்சம் வேட்டிகளும், 60 இலட்சம் சேலைகளும் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் மூலம் இம்மாநிலத்திலுள்ள கைத்தறி நெசவாளர்களால் உற்பத்தி செய்யப்படவுள்ளன. கைத்தறித் துணிகளின் தள்ளுபடி விற்பனைக்காக வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.40.86 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.**

137. கைத்தறிகளைப் படிப்படியாக விசைத்தறிகளாக மாற்றும் திட்டத்தின்கீழ், 1992-93 ஆம் ஆண்டில் 5,000 விசைத்தறிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. 1993-94 இல் மேலும் 10,000 விசைத்தறிகள் அறிமுகப்படுத்தப்படும். அதே சமயத்தில், 14,000 விசைத்தறிப் பிரிவுகளுக்குப் பயனளிக்கும் வகையில்,தற்போது சிறிய விசைத்தறிப் பிரிவுகளுக்கு யூனிட் ஒன்றுக்கு ரூ.1.75 ஆக உள்ள மின்கட்டண வீதம், யூனிட் ஒன்றுக்கு ரூ.1.00 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. மேலும், கைத்தறியை நவீனமயமாக்கும் திட்டத்தின்கீழ் ரூ.1 கோடி நிதியொதுக்கீட்டில் 8,582 கைத்தறிகள் நவீனப்படுத்தப்படும்.

138. கைத்தறித் துறையில் பல்வேறு நடவடிக்கைகளுக்காக கடன் வசதி பெறுவது பிரச்சனைகளை உருவாக்கியுள்ளது. எனவே, நாங்கள் நெசவாளர்களுக்காக ஒரு வங்கியை ஏற்படுத்த முடிவு செய்துள்ளோம். இந்நடவடிக்கைக்கு, இந்திய ரிசர்வ் வங்கி, வேளாண்மை-ஊரக வளர்ச்சி தேசிய வங்கி ஆகியவற்றிடம் நாங்கள் அனுமதியை எதிர்பார்க்கிறோம்.

139. நெசவாளரின் குடும்பத்திற்கு மாதமொன்றுக்கு ரூ.250 வழங்கும் ஓய்வூதியத் திட்டமொன்றை 1.1.1992 முதல் இவ்வரசு செயல்படுத்தியுள்ளது. நெசவாளர்களுக்கு ஈட்டுறுதித் தொகை ரூ.10,000 லிருந்து ரூ.15,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. **நெசவாளர்களின் சேமிப்பு-பாதுகாப்புத் திட்டத்திற்கான அரசு பங்குத் தொகையை 1.4.1993 முதல் 1 ரூபாய் ஊதியத்திற்கு 3 காசு என்பதிலிருந்து 4 காசாக நாங்கள் உயர்த்த உள்ளோம். 1993-94 ல் 1,500 நெசவாளர் வீடுகள்-தறிக் கூடங்கள் கட்டவிருக்கிறோம்.**

## தொழிலாளர் நலன்

140. மத்திய அரசின் புதிய பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் குறிப்பாக மத்திய அரசின் வரவு-செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ள அண்மைக்கால மாற்றங்கள் தொழிற் கட்டமைப்பிற்கும், சீரமைப்பிற்கும் வழிவகுக்கும் என்பது தவிர்க்க முடியாத உண்மையாகும். எந்தச் சூழ்நிலையிலும் தொழிலாளர்கள் நலம் பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்பது எங்களுடைய தெளிவான கருத்தாகும். தேசியப் புதுப்பிப்பு நிதிக்கான வழிகாட்டி நெறிமுறைக் குறிப்புகளை அண்மையில் மத்திய அரசு வெளியிட்டுள்ளது. மாநிலத் தொழிலாளர் மறுவாழ்வு நிதியை நாங்கள் ஏற்கெனவே ஏற்படுத்தியுள்ளோம். தொழிலாளர் நலனைப் பேணிக் காக்கும் வகையில் இந்நிதிக்கு ரூ.50 கோடியை மாற்றும்படி மத்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளோம். தேசியப் புதுப்பிப்பு நிதி 'லிருந்து 'நிதியுதவி பெறவிருக்கும் தனிப்பட்ட திட்டங்கள் ஒவ்வொன்றும் மத்திய அரசின் அனுமதியைப் பெற்றிருக்க வேண்டும் என்று இப்போது தெரிய வருகிறது. இதற்குத் தகுந்த வழிகாட்டும் நெறிமுறைக் குறிப்புகளை வகுத்துத்தந்து இதற்குரிய முகவரமைப்பாக மாநில நிதியை நியமனம் செய்வது மிகப் பொருத்தமானதாக இருக்கும்.

141. பாதகமான சூழ்நிலைகளுக்கிடையேயும் கூட, மூடிக்கிடந்த தொழிற்சாலைகளை, மீண்டும் தொடங்குவதன் மூலம் தொழிலாளர் நலனுக்கு உறுதி செய்தது இந்த அரசேயாகும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்ட முயற்சியின் விளைவாக, ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ், பின்னி ஆகிய நிறுவனங்கள் மீண்டும் செயல்படத் தொடங்கியுள்ளன. 1991 ஏப்ரல் திங்களிலிருந்து செயல்படாமல் இருக்கும் வடலூர் சேஷசாயி இண்டஸ்டரீஸ் நிறுவனமும் இந்த மாத இறுதிக்குள் மீண்டும் செயல்படத் தொடங்கும். துணி ஆலைத் தொழிலாளர்களின் ஊதியக் கொடை விவகாரம் இணக்கமான முறையில் தீர்த்து வைக்கப்பட்டுள்ளது.

142. தொழிலாளர்களின் அன்றாட வாழ்க்கைச் செலவு உயர்ந்திருப்பதைக் கருத்திற் கொண்டு, குறிப்பாக **தேர்ச்சி பெறாத தொழிலாளர்களுக்கு இதுவரை இருந்துவந்த குறைந்த அளவு நாள் ஊதியம் 15 ரூபாய் என்பதற்குப் பதிலாக, 1.2.1993 முதல் குறைந்த அளவு ஊதிய வீதங்கள் குறித்த அனைத்து அறிவிக்கைகளிலும் குறைந்த அளவு நாள் ஊதியம் 20 ரூபாய் என்று வகை செய்யப்படும் என்று அரசு முடிவு செய்துள்ளது. வேளாண் தொழிலாளர்களுக்கான குறைந்த அளவு ஊதிய வீதங்களும் விரைவில் திருத்தியமைக்கப்படும்.**

143. **கேடுபயக்கும் கொடிய குழந்தைத் தொழிலாளர் பிரச்சினையைச் சமாளிக்க இவ்வரசு பொறுப்பு ஏற்றுக் கொண்டிருப்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே சுட்டிக் காட்டியுள்ளார்கள்.** குறிப்பாகக் காமராசர் மாவட்டத்திலுள்ள தீப்பெட்டித் தொழிலில் காணப்படுகின்ற பிரச்சினையைக் கருத்திற்கொண்டு பல்வேறு குழுக்கள் இப்பிரச்சினையை ஆராய்ந்துள்ளன. 'யூனிசெஃப்' நிறுவனத்துடன் கூட்டாகச் சேர்ந்து மற்றொரு குழு இப்பிரச்சினையை விரிவாக ஆராய்ந்துள்ளது. இக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் 5 ஆண்டுகளில் இப்பிரச்சினைக்குத் தீர்வு காணச் சிறப்புத் திட்டம் ஒன்றை மேற்கொள்ள நாங்கள் முடிவு செய்துள்ளோம். இத்தகைய திட்டம் நடைமுறை நோக்கில் அமைந்திருக்கும் என்றும், இதில் சம்பந்தப்பட்டுள்ள அனைவரின் உடன்பாடான ஆதரவைப் பெற்றிருக்கும் என்றும் நாங்கள் முழுமையாக நம்புகிறோம். குழந்தைத் தொழிலாளர்களில் 80 சதவீதம் பேர் பெண் குழந்தைகளாக இருக்கின்றனர் என்பதை முக்கியமாகக் குறிப்பிட வேண்டியுள்ளது. எனவே, நாங்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டியது எல்லாவற்றைக் காட்டிலும் மிகவும் முக்கியமானதாக இருக்கிறது.

இத்திட்டம் பின்வரும் 4 முக்கியக் கூறுபாடுகளைக் கொண்டிருக்கும்:

*கட்டாயக் கல்விக்கான சட்டம் இயற்றப்படுவதைத் தொடர்ந்து குழந்தைகளை வேலைக்கு அனுப்புவதற்குப் பதிலாகப் பள்ளிக்கு அனுப்பும்படி ஒவ்வொரு பெற்றோரும் சட்டபூர்வமாகக் கட்டுப்படுத்தப் படுவர்.

*கையால் தயாரிக்கப்படும் தீக்குச்சித் தொழிற் பிரிவுகள் அனைத்தும் விற்பனை வரிவிலக்குச் சலுகையைப் பெற்று வருகின்றன. இனி, இத்தொழிற் பிரிவுகள் ஒரு குறிப்பிட்ட கால வரம்புக்குள், குழந்தைத் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துவதைப் படிப்படியாகக் குறைத்தால் மட்டுமே, இந்த விற்பனை வரிவிலக்குச் சலுகையைத் தொடர்வது பற்றிப் பரிசீலிப்போம்.

*குழந்தைத் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துவதால் ஏற்படும் தீமைகளுக்கு எதிராகச் சமூகத்தை ஒருங்கு திரட்டுவது, கருத்துக்களை எடுத்துக் கூறுவது, அக்கருத்துக்களுக்குச் செவிசாய்த்து நடக்கச் செய்வது ஆகியவற்றுக்கான பெருந் திட்டம் ஒன்று மேற்கொள்ளப்படும். இதனால், இத் தீய பழக்கத்திற்கு எதிரான சமூக விழிப்புணர்வை மக்களிடையே வளர்க்க இயலும்.

*இந்தப் பகுதியில் மகளிரின் பொருளாதார மேம்பாட்டுக்கான புதிய திட்டம் ஒன்று மேற்கொள்ளப்படும்.

144. இம் மாநிலத்தில் குழந்தைத் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துகின்ற பழக்கம் படிப்படியாக ஒழிக்கப்படுவதற்கு உறுதிசெய்யும் இத்திட்டத்தை இம்மன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்க்ள் வரவேற்பார்கள் என்று கருதுகிறேன். இந்தச் சோதனை நடவடிக்கை வெற்றி பெறுமானால், அதனையடுத்து, குழந்தைத் தொழிலாளர்கள் நிரம்பிய அளவில் வேலையில் அமர்த்தப்படுகின்ற வேறு இடங்களிலும் இப்பிரச்சினையைத் தீர்க்க நாங்கள் முயல்வோம்.

## ஏழை மக்களுக்கான சமூகப் பாதுகாப்புத் திட்டம்

145. இந்த அரசு மற்ற எல்லாத் திட்டங்களைக் காட்டிலும், ஏழை மக்களுக்கான சமூகப் பாதுகாப்புத் திட்டத்திற்கு அதிக முக்கியத்துவம் அளித்துள்ளது. இவ்வரசுக்கு நிதி நிலைமை நெருக்கடியாக இருந்தபோதிலும், ஏழை மக்களுக்கான சமூகப் பாதுகாப்புத் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடுகள் பெயரளவில் மட்டும் இருந்து விடக்கூடாது என்பதையும், அவர்களுக்கு உண்மையான சமூகப் பாதுகாப்பளிக்கும் வகையில் அத்திட்டங்களை மேம்படுத்த வேண்டும் என்பதையும் உறுதி செய்வதற்கு, இந்த அரசு முறையாக மேற்கொண்ட திட்டமிட்ட முயற்சியை இது எடுத்துக் காட்டுவதாக உள்ளது. ஏழை மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவற்கு உறுதி செய்ய நாங்கள் தொடர்ந்து பாடுபடுவோம். இவ்வரசுக்குப் பலவகையிலும் நிதி நெருக்கடிகள் இருந்தபோதிலும், **1993-94 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ஏழை மக்களுக்கான சமூகப் பாதுகாப்புத் திட்டத்திற்கு உரிய நிதி ஒதுக்கீடு, முன் எப்போதும் இருந்திராத அளவில், அதாவது, ரூ.1400 கோடி என்ற அளவிற்கு உயர்ந்துள்ளது என்பதை அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். 1991-92 ஆம் ஆண்டின் நிதி ஒதுக்கீட்டளவான ரூ.990 கோடியுடன் ஒப்பிடுகையில், இது மிகையாகும்.**

146. ஏழை மக்களுக்காக உருவாக்கப்பட்டுள்ள சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் முக்கியமான கூறுகள் வருமாறு:-

* உணவுப் பொருள் வழங்கலில் உத்தரவாதம்
* சத்துணவு
* ஏழை மக்களுக்கான தொடக்கச் சுகாதார வசதிகள் மற்றும் மருந்துப் பொருட்கள்
* குழந்தைகள் அனைவருக்கும் தொடக்கக் கல்வி அளிப்பதற்கான சிறப்பு முதலீடுகள்
* சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகள்
* ஏழை மக்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்குதல்
* அடிப்படைக் குடிநீர் வசதியை ஏற்படுத்தல்
* வீடில்லாதவர்களுக்கு வீட்டு வசதியும் புகலிடமும் அளித்தல்
* நலிவடைந்த பிரிவினருக்கான சிறப்புத் திட்டங்கள்

147. 1993-94 ஆம் ஆண்டில் செய்யப்பட்டுள்ள மொத்த முதலீடு, முந்தைய ஆண்டுகளின் முதலீடுகளைவிட பெருமளவு உயர்ந்துள்ளது. நிதி நெருக்கடி மிகக் கடுமையாக இருந்த நிலையிலும், கட்டமைப்புச் சரிக்கட்டல் நடவடிக்கைகளுக்கிடையே ஏழை மக்களுக்கு உண்மையில் பாதுகாப்பு அளிக்க உறுதி பூண்டுள்ள இந்த அரசின் மனத் துணிவையே இது காட்டுகிறது.

## கடன் திட்டம்

148. பொருளாதாரத்தின் நிதிப் பிரிவுச் செயல்பாட்டை மேம்படுத்த, மத்திய அரசு சில நடவடிக்கைகளை எடுத்துள்ளது. தேசிய வங்கிகளின் மூலதன அடிப்படையை வலுப்படுத்தி, அவற்றின் பங்குகளில் பொதுமக்கள் முதலீடு செய்ய அனுமதிக்கும் அதே நேரத்தில், அந்த வங்கிகளின் மீதுள்ள சமூகக் கட்டுப்பாடு தளர்ந்து விடாமல் பார்த்துக் கொள்ளப்படும் என்று நாங்கள் நம்புகிறோம். **முன்னுரிமைத் துறைகளுக்கு 40 சதவீதக் கடன்தொகை வழங்கப்படும் என்று அளிக்கப்பட்ட உறுதிமொழி, வருங்காலத்தில் எவ்வித மாற்றமுமின்றிப் பின்பற்றப்பட வேண்டும் என்றும் நாங்கள் வலியுறுத்துவோம்.**

149. மாநிலத்திலுள்ள ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஏற்ற வளவாய்ப்புள்ள இணைப்புத் திட்டங்களை வேளாண்மை-ஊரக வளர்ச்சி தேசிய வங்கி தீட்டியுள்ளது. இத்திட்டங்கள் மாவட்டக் கடன் திட்டத்திற்கு அடிப்படையாக அமைகின்றன. கடன் வழங்கு நடவடிக்கைகளுக்குத் தேவையான போதிய அடிப்படை ஆதரவுப் பணிகளுக்கு வகை செய்வதை உறுதி செய்வதன் மூலம் இந்த நடைமுறையை நாங்கள் வலுப்படுத்துவோம். 1993-94 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகின்ற அதிகாரப் பரவல் முறையில் அமைக்கப்பட்ட மாவட்ட வளர்ச்சித் திட்டம், ஏழை மக்களுக்குப் பயன் தரும் கடன் வழங்கு நடவடிக்கைகளுக்குத் தேவையான அடிப்படை ஆதரவுப் பணிகளுக்கு வகை செய்யக்கூடிய துணைப் பகுதி ஒன்றைக் கொண்டிருக்கும். இந்த மாற்றம், வழங்கப்படும் கடன்களும், வளர்ச்சிச் செலவினங்களும் ஏழை மக்கள் பயனடையக் கூடியவாறு சிறப்பான வகையில் ஒருமுகப்படுத்தப்படுவதற்கு உதவும்.

150. 1993-94ஆம் ஆண்டிற்கான கடன் திட்டம் ரூ. 2500 கோடிக்கும் அதிகமாக இருக்கும். இடுபொருட்களின் விலை உயர்வைச் சமாளிக்கவும், வேளாண்மையில் அதிக அளவு மூலதன முதலீடு செய்யவும் உழவர்களுக்குப் போதிய கடன் தொகை வழங்குவதை உறுதி செய்ய வேண்டியுள்ளது. இதற்கு வகைசெய்ய வேளாண்மை ஊரக வளர்ச்சி தேசிய வங்கி, வங்கி அமைப்புகள் ஆகியவற்றுடன் கலந்தாலோசித்துச் செயல்பட முயற்சி செய்வோம்.

## வேலை வாய்ப்பு

151. வேலை வாய்ப்பு அளிப்பதற்காக நாம் உருவாக்கியுள்ள கணக்கெடுப்பிலிருந்து தெரிய வந்த வேலைவாய்ப்பு குறித்த போக்கினைக் கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்டதாகும். இந்தத் திட்டச் செயல் முறையின் முதல் பகுதி, முதன்மைத் துறையில் வளர்ச்சியை விரைவு படுத்துவதாகும். முதன்மைத் துறையில் "உயர் வருமானம் தரும் வளர்ச்சிக் கொள்கையை" மேம்படுத்துவோம். வேலைவாய்ப்புகளைப் பல முனைப்படுத்தி, வேளாண்மை-ஊரக வளர்ச்சி தேசிய வங்கியின் ஒத்துழைப்புடன் கிராமப் பகுதிகளில் பண்ணைத் தொழில் அல்லாத பிற துறைப் பணிகளுக்குப் பெரும் முக்கியத்துவம் அளிக்கும் திட்டமொன்றை 1993-94-ல் தொடங்கவிருக்கிறோம். இதைத் தவிர, ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம், உழவுத் தொழிலாளர்களுக்குப் போதிய வருமானம் கிடைக்க வகை செய்து அதிக அளவில் வேலை வாய்ப்பு அளிப்போம். ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம் 1993-94 ல் 672 இலட்சம் மனித உழைப்பு நாட்களுக்கு வகை செய்யும். **1993 ஜனவரியில் வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தை நாம் தொடங்கியுள்ளோம் என்பதை இம் மன்றத்தின் உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். இது மாநில அரசின் திட்டம். இத்திட்டம் தருமபுரி, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், புதுக்கோட்டை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தை வரும் ஆண்டில் திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்திற்கு நீட்டிக்க இருக்கிறோம். இதற்கென்று வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.15 கோடி தனி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.** இத் திட்டத்திற்கு தேசியப் புதுப்பிப்பு நிதியிலிருந்து ஆதரவு அளிக்க வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டுள்ளோம்.

152. இரண்டாம் துறையில் நான் ஏற்கெனவே கோடிட்டுக் காட்டியுள்ள பல்வேறு திட்டங்களும், திட்டப் பணிகளும் உரிய நடவடிக்கைகளுக்கு மிகப் பெரும் அளவில் வாய்ப்பளிக்கும். குறிப்பாகத் தொழில் வளர்ச்சிக்கு நாங்கள் எடுத்துள்ள முயற்சிகள் புதிய வேலை வாய்ப்புகளைத் தோற்றுவிப்பதன் மூலம் பலனளிக்கத் தொடங்கும். நமது மாநிலத்தில் கட்டுமானத் தொழிலில் வேலைவாய்ப்பை அதிகரிக்கும் வகையில் கட்டுமானத் தொழிலுக்குப் பெருமளவில் ஊக்கம் அளித்துள்ளோம். பரந்த அளவில் வேலை வாய்ப்புகளைத் தோற்றுவிக்க உதவும் வகையில் **கிராமத் தொழில் துணைத் திட்டம்** (RISP) ஒன்றைத் தொடங்கியுள்ளோம். ஒரு இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பளிக்க இத் திட்டம் வகை செய்யும். 1.39 இலட்சம் பேருக்கு உதவியளித்ததன் மூலம் இந்தத் திட்ட இலக்கை நாங்கள் விஞ்சியுள்ளோம். 1993-94 ஆம் ஆண்டிலும் நாங்கள் இத்திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்துவோம்.

153. மூன்றாம் துறையில் நல்ல வளர்ச்சியை நாம் காண முடிகிறது. இருந்தபோதிலும், படித்து, வேலைவாய்ப்பற்று இருப்போரின் பிரச்சினையை சமாளித்தாக வேண்டியுள்ளது. இறுதியில் பொருளாதார வளர்ச்சி மட்டுமே ஆதாயம் தரத்தக்க வேலை வாய்ப்பைத் தோற்றுவிக்க முடியும். இம் மாநிலத்தில் வளர்ச்சி

---

தமிழ் வளர்ச்சி:

★ 1994-இல் எட்டாம் உலகத் தமிழ் மாநாடு தமிழ்நாட்டில் நடைபெறும்.

★ புதிய இசைப் பயிற்சி நிலையம் கோவையில் ஏற்படுத்தப்படும்.

★ கிராமியக் கலைப் பயிற்சி, ஆராய்ச்சி மையம் மதுரையில் அமைக்கப்படும்.

நடவடிக்கையை விரைவுபடுத்துவதே எங்களுடைய கொள்கையாகும். இதற்கிடையே, படித்து, வேலை வாய்ப்பற்றிருப்பவர்களைப் பயன்தரும் சமூகப் பணிகளில் ஈடுபடுத்துகின்ற ஒரு வாய்ப்பாக ஒரு புதிய திட்டத்தைத் தொடங்கியுள்ளோம். **இதன் கீழ்ப் பள்ளிசாராக் கல்வி, மதுவிலக்குக் கொள்கை விளக்கம் ஆகிய இரண்டு பணிகளும் எடுத்துக் கொள்ளப்படும்.** இப்போதுள்ள வேலையற்றோர் நிவாரணத் திட்டம் சீரமைக்கப்படும். படித்து வேலையற்றுள்ள இளைஞர்களும் இளம் பெண்களும் இந்தச் சமூகப் பயன்பாட்டுத் திட்டத்தில் ஈடுபடுத்தப்படுவார்கள். **இதில் 1.5 இலட்சம் இளைஞர்கள் பங்கு கொள்வார்கள். தற்போதுள்ள திட்டப்படி அவர்களுக்கு வழங்கப்படும் மதிப்பூதியம் 50 சதவீதம் உயர்த்தப்படும்.** அவர்கள் கற்பிக்கின்ற ஒவ்வொரு குழந்தைக்கும் இவ்வளவு தொகை என்ற வீதத்தில் இந்த மதிப்பூதியம் வழங்கப்படும். வேலைவாய்ப்பகம் ஒன்றில் பதிவு செய்து ஐந்தாண்டுகளுக்கு மேலாகியுள்ளவர்களும் கடந்த மூன்றாண்டுக் காலம் முழுமையாக நிவாரணத் தொகை வாங்கியிராதவர்களுமான பட்டதாரிகள், மேனிலைப் பள்ளிக் கல்வி (+2) இடைநிலைப் பள்ளிக் கல்வி (S.S.L.C.) தேர்ச்சி பெற்ற அனைவரும் இந்தத் திட்டத்தில் சேருவதற்குத் தகுதி உடையவர்கள். **இப்புதிய திட்டத்திற்காக வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.20 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.** இந்தப் பெருந்திட்டம் சமுதாயத்திற்குப் பயன்படுகிற திட்டமாக இருக்கும் என்பதோடு, படித்து வேலை வாய்ப்பு இல்லாமல் இருப்போருக்கு ஆதாயம் தரத்தக்க வேலைவாய்ப்பினையும் அளிக்கும்.

## அரசு அலுவலர் நலன்

154. அரசு அலுவலர்களின் பணி நிலமைகளைப் பொறுத்தவரை இந்த அரசு தொடர்ந்து ஒரு நியாயமான கொள்கையைப் பின்பற்றி வருகின்றது. நடப்பாண்டில் கடுமையான நிதி நிலை நிலவியபோதிலும் அரசு அலுவலர்களின் பல்வேறு கோரிக்கைகளை இவ்வரசு கனிவுடன் பரிசீலித்து முடிவுகளை அறிவித்துள்ளது. அரசுப் பணியாளர்களின் பல்வேறு அமைப்புகளுடன் விரிவான பேச்சு வார்த்தை நடத்திய பின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நீண்டகாலப் பயன் அளிக்கும் வகையில் அரசு அலுவலர்களின் ஊதிய விகிதங்களையும் பணி நிலைமைகளையும் மேம்படுத்த முனைந்துள்ளார்கள். இந்தப் பேச்சு வார்த்தைகளின் அடிப்படையில் ஐந்தாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளைச் செயல்படுத்துவதில் ஏற்பட்ட முரண்பாடுகள் முழுமையாக நீக்கப்பட்டுள்ளன. மாநில அரசின் முந்தைய ஊதிய விகிதத்திலிருந்து மத்திய அரசின் ஊதிய விகிதத்திற்கு மாற்றி உறுதி செய்யும் நோக்கத்துடன் தாராளமான முடிவுகளை இவ்வரசு எடுத்துள்ளது. இந்த மாற்றம் தற்போது வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டுள்ளது. அரசு அலுவலர்கள் ஊக்கத்துடன் பணியாற்றும் வகையில் பல புதிய பதவி உயர்வுகளுக்கானத் திட்டங்கள் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டுள்ளன. இந்தத் திட்டங்களுக்கான ஆண்டுச் செலவு ரூ. 50 கோடியாகும்.

155. அரசு அலுவலர் அமைப்புகளுடன் முதலமைச்சர் பேச்சு வார்த்தை நடத்தியபொழுது அவர்கள் நிதி நிலை அறிக்கையில் வீட்டு வாடகைப் படியை மேம்படுத்தும் வகையில் ஒரு திட்டம் அறிவிக்கப்படும் என்று தெரிவித்தார்கள். மத்திய அரசின் வீட்டு வாடகைப்பட தொகையைப் பொறுத்துவரை அதிகமாக இருந்தாலும் அது நகர எல்லைக்குள் உட்பட்ட பகுதிகளில் உள்ளவர்களுக்கு மட்டுமே பயன் அளிக்கும் வகையில் வரையரை செய்யப்பட்டுள்ளது. மத்திய அரசின் வீட்டு வாடகை படி விதிகளை நாம் அப்படியே பின்பற்றுவோம் என்றால் நகராட்சி எல்லைப் பகுதிக்கு அப்பால் வசிக்கக் கூடிய அரசு அலுவலர்கள் தற்போது பெற்று வருகின்ற பலன்களை இழக்கக் கூடிய நிலை ஏற்படும். இதனைக் கருத்தில் கொண்டு தற்போது மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் வீட்டு வாடகைப்படி வழங்கும் முறையை தொடர்ந்து கடைபிடிப்பது என்றும், அதே நேரத்தில் அளிக்கப்படும் தொகையை உயர்த்துவது என்றும் இவ்வரசு முடிவு செய்துள்ளது. இதன் அடிப்படையில் வீட்டு வாடகைப்படி கீழ்கண்டவாறு உயர்த்தி வழங்கப்படும்.

| பகுதி | தற்போது வழங்கக்கூடிய வீட்டு வாடகைப் படி | | திருத்தியமைக்கப் பட்ட வீட்டு வாடகைப்படி | |
|---|---|---|---|---|
| | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | குறைந்து பட்சம் | அதிக பட்சம் |
| பிரிவு - 1 | | | | |
| சென்னை மாநகரம் | 65 | 515 | 125 | 800 |
| மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகரங்கள் | 50 | 300 | 75 | 450 |
| பிரிவு - 2 | | | | |
| மாவட்டத் தலைநகரங்கள்/ நகரங்கள் | 40 | 225 | 60 | 350 |
| பிரிவு - 3 | | | | |
| வட்டாரத் தலைநகரங்கள்/ நகரங்கள் | 25 | 125 | 40 | 250 |
| பிரிவு - 4 | | | | |
| ஏனைய நகரங்கள் - தற்போது கிராம ஈட்டுப்படிக்கு தகுதியான பகுதிகள் | 20 | | 30 | 100 |

(ஒட்டுமொத்தமாக)

இவ்வாறு வீட்டு வாடகைப்படியை உயர்த்துவதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு ஏற்படும் கூடுதல் செலவு ரூ. 33 கோடியாகும்.

156. அரசு பணியாளர்கள் வீடு கட்டக் கடன் உதவி அளிப்பதில் மிகுந்த தேக்கநிலை காணப்பட்டுள்ளது. 1992 - 93 - ம் ஆண்டில் இத்திட்டத்திறகென ஒதுக்கப்பட்ட ரூ. 25 கோடியை 1993 - 94 ஆம் ஆண்டில் ரூ. 34.5 கோடி அளவிற்கு உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது. இந்த உயர்ந்த ஒதுக்கீட்டின் பயனாக தேங்கியுள்ள விண்ணப்பங்கள் கணிசமான அளவிற்கு குறையும் இது தவிர, பொது நிதி நிறுவனங்களிடமிருந்து இத்திட்டத்திற்கென ரூ. 30 கோடி அளவிற்கு நிதியுதவி பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த கூடுதல் நிதியுதவியும் கூடிய விரையில் கிடைக்க வகை செய்யப்படும். வீடு கட்ட வழங்கப்படும் முன் பணத்தின் அளவினை மிகப் பெரிய அளவில் உயர்த்தியதன் விளைவாக பெரும்பாலான விண்ணப்பதரார்கள் பயன் பெறுவர் என்று எதிர் பார்க்கப்படுகின்றது.

157. உயர் கல்விக்கான செலவினங்கள் அதிகரித்துக் கெகாண்டு வருவதால் அரசு அலுவலர்களின் பிள்ளைகளுக்கென வழங்கப்படும் கல்வி முன்பணத்தினை உயர்த்தி வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. தற்போது தொழில் நுட்ப பள்ளிகளில் பயிலும் அலுவலர்களின் பிள்ளைகளுக்கென வட்டியில்லா முன்பணமாக ரூ. 750/வழங்கப்பட்டு வருகின்றது. இது ரூ. 1000/- மாக உயர்த்தி வழங்கப்படும். அதேபோல் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் பள்ளைகளுக்கென தற்போது வழங்கப்படும் முன்பணமாக ரூ.1500/- ரூ.2000/-மாக உயர்த்தி வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் தொழில் கல்லூரிகளில் பயிலும்

**சுகாதாரம் - குடும்ப நலம்:**

★ சுகாதாரம் குடும்பநலத்திற்கான ஒதுக்கீடு, முன் எப்போதும் இருந்திராத உயர் அளவிலான ரூ.554.70 கோடியாக இருக்கும்.

★ ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு வழங்கப்படும் மருந்துப் பொருட்களுக்கான நிதி ஒதுக்கம் ரூ.50,000-லிருந்து ரூ.75,000 ஆக உயர்த்தப்படுகிறது.

பிள்ளைகளுக்கென ஒரு புதிய பிரிவு ஏற்படுத்தப்படும். இந்தப் பிரிவினர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் கல்வி முன் பணம் ரூ.1500-லிருந்து ரூ.2500/- ஆக உயர்த்தி வழங்கப்படும். இந்தத் திட்டத்தினை மேம்படுத்துவதன் காரணமாக அரசுக்கு ஆண்டொன்றுக்கு ஏற்படும் கூடுதல் செலவு ருபாய் ஒரு கோடியாகும்.

158. திவிர நோயினால் அவதியுறும் அரசுப் பணியாளர் நலனுக்கென ஏற்கெனவே அரசு அலுவலர் நல்வாழ்வு நிதி ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் அரசு அலுவலர்கள் குறிப்பிட்ட அறுவை சிகிச்சை வசதிகளைப் பெற ரூ.25,000/- மானிய உதவி வழங்கப்படுகின்றது. மருத்துவச் செலவினங்கள் கணிசமான அளவிற்கு உயர்ந்துள்ளதாலும் அரசு அலுவலர்களின் குடும்பங்களுக்கு ஏற்படும் பொருளாதார நெருக்கடியை குறைக்கும் வகையிலும் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் மானியத்தின் அளவினை ரூ. 25,000-லிருந்து ரூ.50,000 அல்லது அறுவை சிகிச்சைக்கான செலவில் 75 சதவிகிதம் இவை இரண்டில் எது குறைவாக உள்ளதோ அந்த அளவிற்கு உயர்க்தி வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

159. தற்போது கண் பார்வை அற்றோர் மற்றும் உடல் ஊனமுற்ற அரசு அலுவலர்களுக்கு அவர்களுடைய அடிப்படை ஊதியத்தில் 5 சதவிதம் அல்லது அதிகபட்சமாக மாதம் ரூ.50/- வாகனப்படியாக வழங்கப்பட்டு வருகின்றது. இந்த அதிக பட்ச தொகையினைமாதம் ஒன்றுக்கு ரூ. 75/- உயர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

## நிதி நிலைமை

160. நான் கோடிட்டுக் காட்டியுள்ள திட்டப் பணிகளையும், திட்டங்களையும் மேற்கொள்ளத் தேவைப்படும் நிதி ஆதாரங்களைக் கண்டறிகின்ற கடுமையான பொறுப்பைக் குறித்து இப்போது குறிப்பிட விரும்புகிறேன். இந்த அரசு பதவியேற்றபோது, மிகக் கடுமையானதும், கட்டமைப்பு வகையில் சிக்கல் வாய்ந்ததுமான நிதி நிலைமையை எதிர்நோக்கியிருந்ததை இம்மன்றத்தின் உறுப்பினர்கள் நினைவுகூரலாம். தேசியப் பொருளாதாரத்தில் நிகழ்ந்த சில மாறுதல்களும் அதன் காரணமாகத் தொடர்ச்சியாகப் பல்வேறு பண்டங்களின் நிர்ணய விலைகளில் செய்யப்பட்ட விலையேற்றமும் எங்களுடைய பணியை மிகக் கடுமையாக்கி விட்டுள்ளன. எந்த ஒரு சூழ்நிலையிலும் நாங்கள் ஏழை மக்களின் வாழ்க்கைத் தரம் கீழிறங்க அனுமதிக்கக் கூடாது. அதே சமயம், மாநிலத்தில் மேம்பாட்டுப் பணிகளுக்கு ஒரு புதிய வேகத்தை அளிக்கும் பொறுப்பையும் நாங்களே மேற்கொண்டோம். 1991-92 ஆம் ஆண்டிலும், மீண்டும் 1992-93 ஆம் ஆண்டிலும் இந்த இரு நோக்கங்களையும் நிறைவேற்றுவதில் நாங்கள் வெற்றியடைந்துள்ளோம்.

161. அந்த நிலையிலும், வரி விதிப்பதற்குப் புதிய ஆதாரங்கள் போதிய அளவு இல்லாமை, அரசு ஆற்றும் பணிகளுக்குக் குறைந்த அளவே தொகை வசூலிக்கப்பட்டமை, கணிசமான வருவாய் இழப்பை ஏற்படுத்துகின்ற மதுவிலக்குக் கொள்கையைப் பின்பற்றியமை, அதிக அளவு உதவித் தொகை வழங்குகின்ற பொறுப்பை ஏற்றிருந்தமை, அரசுப் பணியாளர்கள் வகையில் அதிகச் செலவை ஏற்க வேண்டியிருந்தமை ஆகியவற்றை உள்ளடக்கிய, பொருளாதாரக் கட்டமைப்பு வகையில் சிக்கல் வாய்ந்த தமிழ்நாட்டின் நிதி நிலைமையை நாங்கள் எதிர் கொள்ள வேண்டியிருந்தது. பத்தாவது நிதிக் குழுவின் பரிந்துரைகளின் வாயிலாக சிறிது நிவாரணம் கிடைக்கும் என்று நாங்கள் நம்புகிறோம். அந்த நிவாரணம் கிடைக்கும் வரையில், நிதி நிலை தொடர்ந்து இடர்ப்பாடுடையதாகவே இருக்கும். ஏழை எளிய மக்களின் நலன்களைப் பாதுகாத்தல், மாநிலத்தின் விரைவான மேம்பாட்டுக்கு உறுதியளித்தல் என்ற இரண்டு நோக்கங்களையும் நிறைவேற்றுவதற்கு எங்களால் இயன்ற அனைத்தையும் செய்வோம்.

## வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள்

162. வருவாய்க் கணக்கில் மொத்த வரவுகள் ரூ.6,446.54 கோடி என்பதையும், வருவாய்க் கணக்கில் மொத்தச் செலவுகள் ரூ.7,255.27 கோடி என்பதையும், இதனால் ஏற்படும் வருவாய்ப் பற்றாக்குறை ரூ.808.73 கோடியாகும் என்பதையும், 1992-93 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள் காட்டியிருந்தன. 1992-93 ல் ஏனைய கணக்குகளிலுள்ள பற்று-வரவுகளின் விளைவு பற்றாக்குறை ரூ.217.62 கோடி என்பதையும் ஆண்டுத் தொடக்கத்தில் இருந்த பற்றாக்குறை ரூ.401.47 கோடி என்பதையும் சேர்த்து, மொத்தப்பற்றாக்குறை ரூ.619.09 கோடியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

163. வருவாய்க் கணக்கில் மொத்த வரவுகள் ரூ.6661.20 கோடியாகும் என்பதையும், வருவாய்க் கணக்கில் செலவுகள் ரூ.7669.82 கோடியாகும் என்பதையும், வருவாய்க் கணக்கில் பற்றாக்குறை ரூ.1008.62 கோடியாகும் என்பதையும், 1992-93 ஆம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீடுகள் காட்டுகின்றன. வருவாய்க் கணக்கில் பற்றாக்குறை மேலும் அதிகரித்துள்ளதை அறியலாம். ஆண்டின் தொடக்கத்திலிருந்த ரூ.241.41 கோடி பற்றாக்குறையையும், ஏனைய கணக்குகளிலுள்ள பற்று வரவுகளின் நிகர விளைவையும் சேர்த்து, 1992-93 ஆம் ஆண்டின் முடிவில், இறுதிநிலைப் பற்றாக்குறை ரூ.275.94 கோடியாகும் எனத் தற்போது மதிப்பிடப்பட்டுள்ளது.

164. 1993-94 ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளின்படி, வருவாய்க் கணக்கில் வரவுகள் ரூ.6989.89 கோடி எனவும், வருவாய்க் கணக்கில் செலவுகள் ரூ.8300.87 கோடி எனவும், இதன் காரணமாக வருவாய்க் கணக்கில் பற்றாக்குறை ரூ.1310.98 கோடி எனவும் மதிப்பிடப் பட்டுள்ளன. 1993-94 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் அனைத்துக் கணக்குகளிலுமுள்ள பற்றுவரவுகளின் நிகர விளைவு (பற்றாக்குறை) பற்றாக்குறை ரூ.359.95 கோடியாக இருக்கும். 1992-93 திருத்த மதிப்பீடுகளின்படி எதிர் பார்க்கப்படும் இறுதி நிலைப் பற்றாக்குறை ரூ.275.94 கோடியுடன் இதனைச்சேர்க்க, 1993-94 ஆம் ஆண்டின் முடிவில் ஒட்டு மொத்தப் பற்றாக்குறை ரூ.635.89 கோடியாக இருக்கும்.

165. கூடுதலாகக் கடன் பெறும் நிதியை ஆதாரமாகக் கொண்டு. மிகவும் இக்கட்டான இக்குறுகிய கால நிதி நிலைமையைச் சமாளிப்பது நம்முடைய திட்டச் செயல் முறையாகும். நிலைமையை இவ்வாறு நாம் சமாளிக்க வேண்டியுள்ளது. இல்லையெனில், ஏழை மக்களின் நலத்திட்ட ஒதுக்கீட்டுச் செலவுகள் மீது வெட்டுவிழும். நாங்கள் பதவியேற்றவுடன் எதிர்நோக்க வேண்டியிருந்த மிகக் கடுமையான நிதி நிலைமையைக் குறிப்பிட்டு, கூடுதலாக மத்திய நிதியுதவி கேட்டு நாங்கள் வேண்டுகோளை முன்வைத்த போதிலும், கூடுதலாக மத்திய நிதி உதவி எதனையும் நாங்கள் பெறவில்லை. இத்துடன், 1992 நவம்பரில் புயல், வெள்ளத்தால் ஏற்பட்ட

பிரச்சினையையும் நாங்கள் எதிர்கொள்ள வேண்டியிருந்து, அதன் காரணமாகக் கூடுதல் செலவை மேற்கொள்ள வேண்டியிருந்தது. மேலும், தொடர்ச்சியாக அடுத்தடுத்துப் பல்வேறு பண்டங்களின் நிர்ணய விலைகள் மத்திய அரசால் உயர்த்தப்பட்ட நிலையையும் நாங்கள் எதிர்கொள்ள வேண்டியிருந்தது, இவையனைத்தும் மாநிலத்தின் நிதிநிலைமையை மேலும் மோசமாக்கின. மாநில நிதிநிலைமையை மேம்படுத்துவதற்காக நாம் மிகக்கடுமையாக போராட வேண்டியிருந்தது; எவ்வாறெனில், முன்னேற்றப் படியில் நாம் எடுத்துவைக்கின்ற ஒவ்வோர் அடியும் தேசிய அளவில் பெரிய பொருளாதார மாறுதல்கள் குறித்த நடவடிக்கையால் ஏற்பட்ட பாதகமான விளைவுகளால் தடைப்பட்டது; இந்தப் பெரிய பொருளாதார மாறுதல்கள் குறித்த நடவடிக்கைகள் மீது நமக்கு எந்தக் கட்டுப்பாட்டு அதிகாரமும் கிடையாது. எங்களுக்கு எதிராக அடுத்தடுத்து இத்தனை தடைகள் வந்தபோதிலும், பாராட்டத் தக்கவகையில், முன்னேற்றத் திட்டங்களை மேற்கொள்ள எங்களால் முடிந்தது என்பதையும், அதே சமயத்தில் ஏழை மக்களுக்கு நாட்டிலேயே மிகச் சிறந்த சமூகப் பாதுகாப்புத் திட்டங்களையும் நாங்கள் அளித்துள்ளோம் என்பதையும் முற்றிலும் உறுதியாகக் கூற முடியும்.

## செலவுக் கொள்கை

166. இந்தச் செயல்பாடு குறித்து நாம் பெருமையடைகின்ற அதே நேரத்தில், நடுத்தரக் காலத்தில் நிதி நிலைமையைச் சரிசெய்ய சில நடவடிக்கைகளை எடுக்க வேண்டியுள்ளது. வருவாய்க் கணக்கில் பற்றாக்குறை கணிசமான அளவிற்கு அதிகரித்துள்ளது நம்முடைய முக்கியமான கவலையாகும். வருவாய்க் கணக்கில் செலவு அதிகரிப்பதைத் தடுத்து நிறுத்துவதன் அவசியத்தை அது பிரதிபலிக்கிறது. கடன்களைத் திருப்பிச் செலுத்தும் செலவு அதிக அளவு அதிகரித்திருப்பதும், வருவாய்க் கணக்கில் செலவு அதிகரிப்பதைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதன் அவசியத்தைச் சுட்டிக் காட்டுகிறது. அண்மையில் பொருளாதாரத்தில் ஏற்பட்ட பணவீக்க நெருக்கடிகளினால், பெருமளவில் அதிகரித்த செலவினங்களுடன் நாம் போராட வேண்டியிருந்தது. பணவீக்க விதம் குறைந்துள்ளதால், சிறிது நிவாரணம் கிடைக்குமென்று நாங்கள் நம்புகிறோம். அதே நேரத்தில், வருவாய்க் கணக்கில் செலவு அதிகரிப்பதைக் கட்டுப்படுத்தி அதனை வருவாய்க் கணக்கில் வளர்ச்சி வீத நிலைக்குக் கீழ்க் கொண்டுவர இயலும் வகையில், தொடர்ந்து நடவடிக்கை எடுப்பது நம்முடைய முயற்சியாக இருக்க வேண்டும்.

167. எனவே, செலவு வளர்ச்சியின் வேகத்தைத் தணிக்கும் நோக்குடன், செலவுக் கொள்கை பற்றிய அறிக்கை ஒன்றினை நாங்கள் வகுத்துள்ளோம். இக்கொள்கை மும்முனை அணுகு முறைகளைக் கொண்டதாக இருக்கும். முதலாவதாக, பல்வேறு அரசுத் துறைகள் திறம்படச் செயல்படும் நடைமுறையை நாங்கள் தொடர வேண்டியுள்ளது. அரசுத் துறைகள் நல்ல முறையிலும், அதிகப் பயனுள்ள வகையிலும் செயல்படுவதற்கு, "விரைந்த வளர்ச்சிக்காகத் தொடக்க நிலையிலிருந்து வரவு-செலவுத் திட்டமிடும் முறையை" (Ze-BAG) நாங்கள் தொடர்ந்து மேற்கொள்வோம். நாங்கள் 20 துறைகளில் இந்த நடவடிக்கையை ஏற்கெனவே மேற்கொண்டுள்ளோம். இந்த நடவடிக்கையினால், தற்போதுள்ள ஆதாரங்களைப் புதிய பணிகளுக்காக மாற்றித் தருவதற்கும் பயன்படுத்துவதற்கும் எங்களால் முடிந்துள்ளது. பயனற்ற செலவினங்கள் இனங்கண்டறியப்பட்டு, சேமிப்பு ஏற்பட உறுதி செய்யப்படும் இந்தத் திட்டச் செயல்பாட்டின் இரண்டாம் பகுதி, பல்வேறு அரசுப் பணிகளிலிருந்து கிடைக்கும் வருவாயை மேம்படுத்துவதாக இருக்கும். உயர்கல்வி, ஏழைகள் அல்லாதவர்களுக்கு அரசு வழங்கும் உயர்நிலை மருத்துவப் பணிகள், அரசின் ஏனைய வணிக நடவடிக்கைகள் ஆகியவற்றிற்கு விதிக்கப்படும் கட்டணங்களை உயர்த்த வேண்டியுள்ளது. மேலும், கட்டணங்களும் அபராதங்களும் உரியவாறு திருத்தியமைக்கப்படும். இதன்கீழ், அனுமதி பெறாத அனுபோகம், குத்தகைகள், ஏனைய வகையில் ஆற்றிய பணிகளுக்கான கட்டணங்கள் ஆகியவை அடங்கும். மூன்றாவதாக, நிதி ஆதாரங்கள் அரிதாகவுள்ள சூழ்நிலையில், ஏழைகளல்லாத ஏனையோர் இந்த ஆதாரங்களைத் தாங்களே வசப்படுத்திக் கொள்ள முனைவதால், உண்மையிலேயே தகுதியுடைய ஏழை மக்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்வது மிகவும் முக்கியமாகும். அரிதாக உள்ள நிதி ஆதாரங்களை ஏழைகளல்லாத ஏனையோர் தங்கள் வசப்படுத்திக்கொள்ள முனைவதன் மூலம், ஏழை, எளிய மக்கள் பாதிக்கப்படக் கூடாது. ஏழை எளிய மக்களுக்கு அனுகூலங்கள் சென்றடையும் வகையில் நாங்கள் திட்டங்களை மாற்றியமைப்போம்.

168. நான் இங்கே கோடிட்டுக் காட்டியுள்ள, ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள், 1993-94 ஆம் ஆண்டில் நல்ல பயனை அளிக்குமென்று நாங்கள் நம்புகிறோம். நான் கோடிட்டுக் காட்டியுள்ள பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம், ரூ.95 கோடி நிதி திரட்ட முடியும் என்று நாங்கள் இலக்கு நிர்ணயித்துள்ளோம்.

## வரிகள்

### விற்பனை வரி

169. நிதி அமைச்சர், பற்றாக்குறையைக் குறைக்கும் பொருட்டு, விற்ப னை வரிகளைச் சற்று ஆராய்வது இயல்பே. ஆனால், இந்தாண்டு அவ்வாறு செய்யாமல் பெரியதொரு வரி விதிப்பு சீரமைப்புத் திட்டத்தையே செயல்படுத்த விழைகின்றேன். திரு. பி. விசயராகவன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் விற்பனை வரி மாறுதல்கள் சம்பந்தப்பட்ட உயர்மட்டக் குழு அளித்துள்ள விரிவான அறிக்கை அரசின் கவனத்தில் உள்ளது. வருவாயில் மாறுதல்கள் ஏற்படுத்தும் வகையிலும், வரி விதிப்பு முறைகளில் மாறுதல்கள் செய்யும் வகையிலும் பல விரிவான பரிந்துரைகள் இவ்வறிக்கையில் உள்ளன. வருவாய் மாறுதல்கள் குறித்த அனைத்து நடவடிக்கைகளும் ஒன்றுசேர நடைமுறைப்படுத்தினால், வருவாய்க்குச் சாதகமான சூழ்நிலை அமையப்பெறும். சரக்குகள் பலவற்றின் மீதும், நிறுவனங்கள் மற்றும் இதர அமைப்புகளுக் கும் இதுவரை அளிக்கப்பட்டுள்ள வரி விலக்குகள் நீக்கப்படுதல், கூடுதல் விற்பனை வரி விதிகதங்களை அதிகமாக்குதல், வரி விதிப்புக்குட்பட்ட ஆண்டு விற்பனை என்ற நிலையிலிருந்து, மொத்த விற்பனையின்மீது இவ்வரிவிதிப்பு என்ற நிலைக்கு மாறுதல் போன்ற மாறுபட்ட பல நடவடிக்கைகளும் இவைகளில் அடங்கும். இந்த உயர்மட்டக் குழு அறிக்கையில், வரிவிலக்குக்குட்பட்ட விற்பனைத் தொகையில் மாற்றம், வரி விகிதங்களை வகைப்படுத்துதல், அடிப்படை வரியின் மீது விதிக்கப்படும் மேல்வரி மற்றும் கூடுதல் மேல்வரி இரண்டையும் அவ்வரிவி கிதங்களுடன் சேர்த்துவிடுதல், மேலும் பொருட்களை உற்பத்தி செய்ய உதவும் மூலப்பொருட்களின் மீதான வரிச்சலுகைகளை விரிவாக்குதல் ஆகிய நடவடிக்கைகளும் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. பரிந்துரைகள் அனைத்தும் விரிவாகவும் கவனமாகவும், பரிசீலிக்கப்பட்டுள்ளன. பணவீக்கம் கட்டுக்குள் அடங்கியுள்ள சூழ்நிலையில், சலுகைகளை அறவே நீக்குதல் உட்பட்ட பரிந்துரைகள் அனைத்தும் ஒன்றுசேர அமல்படுத்தப்பட வேண்டியவையே. தொழில்துறையில செலவுக் குறைப்பில் போட்டித் திறனும், உற்பத்தித் திறன்பெருக்கும், மேல்நோக்கும் காணப்பட வேண்டிய இத்தருணத்தில் வரிவிகிதங்களை கூட்டுவது உகந்ததல்ல. ஆகவே, மேற்சொன்ன அறிக்கையிலிருந்து சில முக்கியமான பரிந்துரைகளை ஆராய்ந்து அவற்றின் அடிப்படையில் திருத்தியமைக்கப்பட்ட வரிவிதிப்புத் தொகுப்பொன்றை அமல்படுத்த முன்வந்துள்ளோம்.

170. குறிப்பிட்ட அட்டவணைகளின் கீழ் காணப்படாத விற்பனைப் பொருட்கள் மீது தற்போது, பிரிவு 3(1) இன் படி சதவிகத விற்பனை வரி விதிக்கப்படுகிறது. இப்பிரிவு அகற்றப்பட்டு விற்பனைப் பொருட்கள் பலவற்றை அட்டவணை I-ன் கீழ் கொண்டுவரவும், இவ்வட்டவணை யின் கீழ் **"இதரப்பொருட்கள்" என்ற புதிய பதிவை இணைப்பதற்கு ம் வழி வகை செய்யப்படும். "இதரப் பொருட்கள்" என்ற பகுதியி ன் கீழ் காணப்படும் விற்பனைப் பொருட்கள் தயாரிப்பதற்கான மூலப்பொருட்களை, படிவம் XVII , கீழ் முன்றுசதவிகத சலுகை வரிவிதிக்குட்படும் வகையில் உத்தேசிக்கப் பட்டுள்ள இந்த நடவடிக்கைகள் பெரியதொரு வரிவிதிப்பு சீர்திருத்த முறையாக அமையும். தொழில் துறையில் விற்பனைப் பொருட்களின் உற்பத்திச் செலவுக் கட்டுப்பாட்டிற்கு இது பெருமளவு உதவி செய்யும். தற்போது பிரிவு 3(3)-ன்படி நாப்தா மற்றும் கருப்பஞ்சாற்றுக் கசண்டு (மொலாசஸ்) ஆகியவை மூலப் பொருட்களாக உபயோகப்படுத்தப்பட்டால் அவைகளுக்கு சலுகை வரி கொடுக்கப்படமாட்டாது. மேலும் இவைகளுடன் கனிம எண்ணெய் (பதிவு-157), மசகு எண்ணெய் (பதிவு-156)** பல தரப்பட்ட வாயுக்கள் (பதிவு-106) ஆகியவையும் பிரிவு 3(3)-ல் சேர்த்துக் கொள்ளப்படும். அதாவது இவைகளுக்கும் சலுகை வரி அளிக்கப்பட மாட்டாது.

**171. உற்பத்திச் செலவை மேலும் குறைக்கும் வகையில் பிரிவு 3(3)கீழ் வி திக்கப்படும் சலுகைமுறை வரியான 3 சதவிகித விற்பனை வரி, விற் பனைப் பொருட்களுக்கான செறிவுப் பொருட்கள் (Packing Materials) பெயர் வில்லைகள் (Labels) மற்றும் பயன்படு பொருட்கள் (consumables) ஆகியவற்றுக்கும் விரிவுப்படுத்தப்படும். உற்பத்தி முறையில் பயன்படுத்தப்படும் இவ்வகைப் பொருட்களை படிவம்-XVII அளித்து சலுகை வரிவிகிதத்தில் உற்பத்தியாளர்கள் இனி வாங்கலாம்**

172. ரூபாய் ஒரு இலட்சம் . வரை மொத்த விற்பனை உள்ள வணிகர்களுக்கு தற்போது பிரவ 3(1) கீழ் மட்டும் விற்பனை வரியிலிருந்து வரி விலக்கு அளிக்கப்படுகிறது. இது ஒரு சில வணிகர்களுக்கே பயனளிக்கிறது. **தமி ழ்நாடு விற்பனை வரிச் சட்டத்தின்படி, ரூபாய் ஒரு இலட்சம் வரையிலான மொத்த விற்பனை அமையப்பெற்ற அனைத்து வணிகர்களுக்கும் அவர்களது விற்பனைப் பொருட்கள் எந்த அட்டவயையின் கீழ் அமையப்பெறினும் இவ்வரிச் சலுகை அளிக்கப்படும். தற்சமயம் வரி செலுத்தும் 1.50 இலட்சம் வணிகர்களில், அட்டவணை-1 கீழ் பதிவு செய்யப்பட்ட விற்பனைப் பொருட்களை கையாளும் 60,000 வணிகர்கள் வரிவிலக்கு பெற்று இதனால் பயனடைவார்கள்.** விற்பனையாளர்கள் பலரை வரிவிதிப்புக்கு உள்ளாக்காமல் இம்முறையை எளிதாக்கும் இச்சீரிய நடவடிக்கையை தொழில் துறையில் முனைந்துள்ள அனைவரும், வர்த்தகர்களும் பெரிதாக வரவேற்பார்கள் என்று நம்புகிறேன். இதனால், வணிக வரித்துறையின் கவனம் பெருமளவில் வரிவிதிப்புக்குட்படும் விற்பனையாளர்களின் மீது திருப்பி விடப்பட்டு வருவாயைப் பெருக்க சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்த இயலும்.

173. தற்போதைய சுயவரிவிதிப்புகணிப்பு முறையின்படி, 6000 வர்த்தகர்களே பயனடைந்து வருகிறார்கள். இம்முறையை மேலும் எளிதாக் குவதன் மூலம், பெருமளவில் வணிகர்கள் பயனடைய வகை செய்யப் படும். **எளிதாக்கப்பட்ட நடைமுறைகளினால் மேலும் 68000 வணிக ர்கள் பயனடைவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.**

★ நாட்டில் வேறெங்கும் ஏற்படுத்தப்படாத மிகப் பெரிய நல்வாழ்வுத் திட்டமான 'புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா மருத்துவ நலத் திட்டத்தை' ஒட்டி, தாய் சேய் நல முகாம்கள் நடத்தும் புதிய திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் இவ்வாண்டு 1,600 முகாம்கள் நடத்தப்படும்.

174. ஒப்பந்தப் பணிகள் மீதான (works contract) விற்பனை வரி முறைபற்றி சென்னை உயர்நீதி மன்றம் மற்றும் உச்ச நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்புகள், மேலும் இம்முறைபற்றி அத்தீர்ப்புகளில் சுட்டிக்காட்டிய குறைபாடுகள் ஆகியவற்றைக் கவனத்தில் கொண்டு, இவ்வரி விதிப்பு முறையில் சில மாறுதல்களை கொண்டுவரவேண்டியுள்ளது. தமிழ்நாடு விற்பனை வரிச் சட்டத்தின்படி வரிவிதிப்புக்குட்பட்ட விற்பனைப் பொருட்கள் இவ் ஒப்பந்தப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டால், அவற்றின் மீது மீண்டும் விற்பனை வரி விதிக்கப்படமாட்டாது. மார்ச் 11-ந் தேதி வரை, அட்டவணை-IV கீழ் விதிக்கப்படும் வரிகள் அமுலில் இருக்க, வரும் நாட்களில் ஒப்பந்தப் பணியில் வரிவிதிப்புக்குள்ளாகும் அனைத்து விற்பனைப் பொருட்களுக்கும் அந்தந்த பொருட்களுக்கு அட்டவணைகளின் கீழ் உள்ள வரிவிகிதங்கள் பின்பற்றப்படும். ஒப்பந்தப்பணிகளில் பொருள்கள் (Manufacturing) உற்பத்தி இல்லாத நிலையிலும் மற்றும் ஏற்கெனவே விற்பனை வரிவிதிப்புக்குட்படுத்தப்பட்ட விற்பனைப் பொருட்களின் மீது, மீண்டும் வரிவிதிக்கப்படாத நிலையிலும், இவ்விற்பனைப் பொருட்களுக் படிவம்-XVII கீழும், பிரிவு 3 (3) கீழும் அளிக்கப்படும் சலுகை முறை வரிவிகிதங்கள் பொருந்தாது. இந்தக் கூட்டத் தொடரில், இதற்கான சட்ட திருத்தங்கள் கொண்டுவரப்படும். கட்டுமானப் பணி ஒப்பந்தங்களைப் (Civil contracts) பொறுத்தவரை, சுயதேர்வு முறையில், வரிவிகிதங்களில் கூட்டமைப்பு முறை (Compounding) சலுகை வரிவிதிப்புபெற வழிவகை செய்யப்படும். கூட்டமைத்த சலுகை வரி விகிதம், இவ்வகைப் பணிகளுக்கு 2 சதவீதமாக அமையும். இதனால், கட்டுமான பணி ஒப்பந்தப்பணிகளின் மீது விதிக்கப்படும் வரி விதிப்பு முறை எளிமையாக்கப்படும். இத்தகைய இணக்க முறைகள் குஜராத் மற்றும் கர்நாடக மாநிலங்களில் பின்பற்றப்படுகின்றன.

175. குத்தகை முறை (Lease) விற்பனையின் மீது விதிக்கப்படும் வரி விகிதங்களையும் எளிதாக்க முனைந்துள்ளோம். குத்தகை விற்பனைக்குள்ளாகும் விற்பனைப் பொருட்கள் மீது தமிழ்நாடு விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் ஏற்கெனவே வரிவிதிக்கப்பட்டால், அவை மீண்டும் வரிக்குள்ளாக்கப்படமாட்டாது. ஒப்பத்தப் பணிகள் மீது வரிவிதிக்கும் முறையில் மாறுதல்கள் எவ்வாறு ஏற்படுத்தப்படவுள்ளனவோ, அவ்வாறே, 1993, மார்ச்-11 ஆம் நாள் வரை தற்போது நடைமுறையில் உள்ள வரி விகிதங்கள் அமலில் இருக்க, இனிவரும் நாட்களில் குத்தகை விற்பனையின் கீழ் விற்கப்படும் பொருட்கள் மீதான விற்பனை வரி, அவை அனைத்தும் தனித்தனியாக தத்தம் அட்டவணைகளின் கீழ் காட்டியுள்ள வரிவிகிதங்களுக்குட்பட்டு, விற்பனை செய்யப்பட்டதாகக் கொண்டு அமையும்.

*176.* சில குறிப்பிட்ட பொருட்களின் மீதும், நிறுவனங்களுக்கும் அளிக்கப்பட்டுள்ள வரி விலக்குகள் முழுமையாக நீக்கப்பட வேண்டும் என்பது குழுவின் மற்றொரு முக்கியமான பரிந்துரையாகும். வருவாயைப் பெருக்குவதற்கு எல்லா வகையான விற்பனையையும் வரிவிதிப்புக்குஉட்படுத்துவதற்கு இந்த பரிந்துரையை குழு செய்துள்ளது. இந்த வரிச் சலுகைகளை அறவே நீக்குவதால் மொத்தமாக ரூ.68 கோடி கிடைக்கும் என மதிப்பிட்ப்பட்டுள்ளது. வரிவிதிப்பு முறையை எளிமையாக்க இவ்வகையான பரிந்துரை ஏற்க தக்கதாகும். விற்பனை வரி விகிதங்களை கூடுதலாக்குவதற்கும், வரி அடிப்படையை விரிவாக்குவதற்கும் இது வழி வகுக்கும். இவற்றுள் பல வகையான சலுகைகள் வெவ்வேறு காலக் கட்டங்களில் போதுமான காரணங்கள் இல்லாமல் இருந்தும் வழங்கப்பட்டுள்ளன. இருப்பினும், பொது மக்கள் பயன் படுத்தும் நெல், அரிசி, கோதுமை, கம்பு, கேழ்வரகு, சோளம், உப்பு போன்ற பொருள்களுக்கும், இவ்வகையான சலுகைகள் அளிக்கப்பட்டிருப்பதால் இச்சலுகைகளை நீக்குவதில்லை என அரசு முடிவு எடுத்துள்ளது. சலுகை வழங்குவதற்கு போதுமான காரணங்கள் இன்றி வரிச்சலுகைகள் பெறுகின்ற பொருட்கள் எவை என விரிவாக ஆராயப்பட வேண்டியுள்ளது. இந்த முடிவினால் ஆண்டொன்றுக்கு ரூ.68 கோடி அளவிற்கு வருவாய் கிடக்கக் கூடிய வாய்ப்பை இழக்க நாங்கள் முடிவு எடுத்துள்ளோம் என்பதை மன்ற உறுப்பினர்கள் கருத்தில் கொள்ள வேண்டும். விலைவாசியை கட்டுப்படுத்த வேண்டிய அவசியத்தைக் கருத்தில் கொண்டு அரசு இந்த முடிவை எடுத்துள்ளது.

*177.* குழுவின் மற்றொரு முக்கிய பரிந்துரை, வரிவிதிப்பு விகிதத்தைப் பொறுத்தவரை 13 பிரிவுகளாக எல்லா பொருட்களையும் வகைபடுத்துவதாகும். இவ்வாறு மாற்றியமைக்கும் பொழுது மேல் வரி, கூடுதல் மேல் வரி ஆகியவை அடிப்படை வரியுடன் சேர்க்கப்பட்டு ஏற்ற வகையில் அடிப்படை விகிதத்தை உயர்த்தி அமைக்கலாம் என பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இந்தப் பரிந்துரையை அரசு கவனமாக பரிசீலித்துள்ளது. பொருட்களை தகுந்த முறையில் வகை படுத்தி வரி விகிதங்களில் எண்ணிக்கையை குறைப்பது ஏற்புடைய பரிந்துரையாகும். அதே சமயத்தில் மேல் வரியையும் கூடுதல் மேல் வரியையும் வரியுடன் சேர்த்து வரி விகிதங்களை கூடுதலாக்கிச் சீரமைப்பதனால் எல்லா பொருட்களின் விலையும் உயரக்கூடிய நிலை உருவாகும். மேலும் மேல் வரியிலிருந்து கிடைக்கும் வரியில் ஒரு பகுதி உள்ளாட்சி நிறுவனங்களுக்கும், கூடுதல் மேல் வரியில் இருந்து கிடைக்கும் வருவாய் சென்னைக் குடிநீர்த் திட்டத்திற்கும் பயன் படுத்தப் படுகின்றது. ஆகவே, மேல் வரியையும், கூடுதல் மேல்வரியையும் அடிப்படை வரியுடன் இணைக்கும் பரிந்துரையை அரசு ஏற்கவில்லை. அதே சமயம் பொருட்களை மேலும் விரிவான முறையில் வகை படுத்தி, வரி விகிதங்களைகுறைக்கவும், சீரமைக்கவும் நாங்கள் முடிவு எடுத்துள்ளோம்.

*178.* தற்போதுள்ள 17 வரிவிகிதங்களை 13 ஆகக் குறைக்கும் குழுவின் பரிந் துரைக்கு மேலாக சில குறிப்பிட்ட பொருட்களுக்கு எளிதான 5 வகையான விகிதங்களுடன் சில குறிப்பிட்ட பொருட்களுக்கு கூடுதலாக 4 வரிவிகிதங்கள் என்ற அடிப் படையில் மாற்றி அமைக்க முடிவு செய்துள்ளோம். அட்டவணை-1, அட்டவணை-6 ஆகியவற்றின் கீழ் வரும் பொருட்கள் மீது இனி 9 விகிதங்களில் வரி விதிக்கப்படும். இந்த வரிவிகிதங்கள் பின்வருமாறு (சதவிகிதங்களில்):

*1, 3, 5, 8, 12, 16, 20, 25, 50.*

ஏழை எளிய மக்களால் வெகுவாகப் பயன்படுத்தப்படும் பொருட்கள், மூலப் பொருட்கள், சாதாரண பொருட்கள், இடைநிலையான பொருட்கள், இயந்திரங்கள், நடுத்தர வருவாய் பிரிவினரால் பயன்படுத்தப்படும் பொருட்கள், ஆடம்பரப் பொருட்கள், சிறப்புப் பொருட்கள் மற்றும் வெளிநாட்டு மது வகைகள் என பொருட்களின் தன்மையின் அடிப்படையில் வகை படுத்தப்பட்டுள்ளன. அரசினால் மேற்கொள்ளப்படும் மிக விரிவான வரிச் சீரமைப்புகளில் இது ஒன்றாகும். வருவாய் மீது ஏற்படும் விளைவுகளைக் கருத்தில் கொள்ளாது இந்த நிர்வாகச் சீரமைப்பை நாங்கள் மேற்கொண்டுள்ளோம். இவ்வகையாக பொருட்களை வகைப்படுத்தினால் பல பொருட்களின் மீது உள்ள வரி விகிதம் குறைக்கப்படும். வரி விகிதங்களை வகை படுத்துவதனால் சில பொருட்களின் மீது ஓரளவிற்கு வரி உயரக்கூடும். *1959* - க்குப் பின் மேற்கொள்ளப்படும் மிகத் துணிவான வரிச் சீரமைப்பு நடவடிக்கை இதுவேயாகும். ஆகவே, பொருட்களை வகை படுத்துவதையும், வரி விகிதங்களைச் சீரமைப்பதையும் அடக்கிய இந்த நடவடிக்கையை வருவாய் பெருக்கும் நடவடிக்கையாகக் கருதாது வரிச் சீரமைப்பில் முக்கிமான நடவடிக்கையாகக் கருத்தில் கொள்ள வேண்டும்.

*179.* மார்ச் *12, 1993* முதல் செயலுக்கு கொண்டு வரப்படும் இந்த வரி விகிதங்களைக் கொண்ட அறிவிப்புகள் இன்று தனியாக வெளியிடப்படும். இருநூற்றுக்கு மேற்பட்ட பொருட்கள் இவ்வாறு மாற்றத்திற்கு உட்படுவதால் ஒவ்வொன்றையும் இங்கு குறிப்பிட இயலவில்லை. வரி விகிதங்கள் குறைக்கப்பட்டுள்ள முக்கியமான சில இனங்களையும், சிறிதளவு வரி ஏற்றம் உள்ள சில பொருட்களையும் இங்கே எடுத்துக்காட்டாகக் குறிப்பிட விரும்புகின்றேன். பின் வரும் பொருட்களின் மீது செய்யப்பட்டுள்ள வரிக் குறைப்பினால் அவை உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவார்கள் என நம்புகின்றேன்.

| பொருளின் பெயர் | தற்போதுள்ள வரி விகிதம் (சதவிகிதம்) | புதிய வரி விகிதம் (சதவிகிதம்) |
|---|---|---|
| மஞ்சள் | 4 | 3 |
| மிளகாய் | 4 | 3 |
| தனியா | 4 | 3 |
| சீயக்காய் | 4 | 3 |
| புளி | 4 | 3 |
| மிளகு | 4 | 3 |
| வெல்லம் | 6 | 3 |
| வனஸ்பதி | 8 | 5 |
| கடலை எண்ணெய் | 4 | 3 |
| தேங்காய் எண்ணெய் | 4 | 3 |
| நல்லெண்ணெய் | 4 | 3 |
| சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய் | 4 | 3 |
| கோதுமைப் பொருட்கள் | 4 | 3 |
| மண்ணெண்ணெய் | 4 | 3 |
| காப்பிக் கொட்டை | 6 | 5 |
| காப்பிப் பொடி | 6 | 5 |
| உடனடித் தேயிலை | 6 | 5 |
| கசகசா | 8 | 5 |
| ஜாதிக்காய் | 8 | 5 |
| சீரகம் | 6 | 5 |
| கையினால் செய்யப்பட்ட சோப்பு | 4 | 3 |

*180.* ஏழை எளிய மக்களால் பயன்படுத்தப்படும் பல்வேறு பொருட்களின் மீதான வரி விகிதம் இந்த சீரமப்பினால் குறைக்கப்பட்டுள்ளதை அவை உறுப்பினர்கள் வரவேற்பார்கள் என உறுதியாக நம்புகிறேன்.

*181.* குடும்பத்தில் அன்றாடம் பயன்படுத்தப்படும் இப்பொருட்களைத் தவிர, மக்களால் பெரிதும் பயன்படுத்தப்படும் பல்வேறு வகையான பொருட்களின் மீதான வரியும் குறைக்கப்பட்டுள்ளது. அவற்றுள் பின்வரும் பொருட்களும் அடங்கும்.

| பொருளின் பெயர் | தற்போதுள்ள வரி விகிதம் (சதவிகிதம்) | புதிய வரி விகிதம் (சதவிகிதம்) |
|---|---|---|
| மருந்தும் மருந்துப் பொருட்களும் | 6 | 5 |
| பிளாஸ்டிக் பொருட்கள் | 6 | 5 |
| அலுமினியப் பாத்திரங்கள் | 4 | 3 |
| செங்கல் | 4 | 3 |
| உலர் மின்கலங்கள் | 9 | 8 |
| சாக்குகள் | 5 | 3 |
| இரத்த வழங்கு அமைப்பு (Blood donor set) | 8 | 5 |
| இரத்தக் குழாய் அமைப்பு (intravenous set) | 8 | 5 |
| அறுவை சிகிச்சை கருவிகள் (Surgical instrument) | 10 | 5 |

*182.* மேலும், சீரமைப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாக சில தொழில் பொருட்களின் மீதும் வரி குறைக்கப்படும். இவற்றுள் பின் வருவனவையும் அடங்கும்.

| பொருளின் பெயர் | தற்போதுள்ள வரி விகிதம் (சதவிகிதம்) | புதிய வரி விகிதம் (சதவிகிதம்) |
|---|---|---|
| கருவிகள் | 10 | 8 |
| இயக்கிகள் | 10 | 8 |
| கச்சாப் படச் சுருள்கள் (திரைப்படம்) | 6 | 5 |
| பருத்தி கழிவுப் பொருள் | 6 | 5 |
| இணைப்புக் குழாய் இணைப்புகள் | 10 | 8 |
| மோட்டார் வாகன சக்கரப் பட்டைகளும், குழாய்களும் (Tyres and Tubes) | 9 | 8 |
| விசைப் பொறிகள் | 10 | 8 |
| இணைப்புக் கம்பிகளும் எலெக்ரோடும் (Welding Electrodes & Rods) | 10 | 8 |
| சணல் கயிறு | 8 | 3 |

## குடிநீர்:

**குடிநீர் வழங்கலுக்காக, முன் எப்போதும் இருந்திராத அளவான ரூ.288.52 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.**

★ இராமநாதபுரம் மாவட்டத்திற்காக, ரூ.44 கோடி செலவில் விரிவான குடிநீர் வழங்கல் திட்டம் மத்திய அரசின் நிதி உதவி யுடன் இவ்வாண்டு மேற்கொள்ளப்படும்.

*183.* நான் ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளதுபோல், இவ்வாறு பெருமளவில் பொருட்களை வகைப் படுத்தும்போது சிலவற்றின் மீதான வரி விகிதங்கள் உயர்வது தவிர்க்க இயலாததாகும். மக்களால் அதிகமாகப் பயன்படுத்தப்படும் பெருவாரியான பொருட்களின் மீது வரியைக் குறைக்கும் அதே நேரத்தில், பெரும்பாலும் செல்வந்தர்களால் பயன்படுத்தப்படும் சில பொருட்களின் மீதான வரி விகிதங்களை உயர்த்தியுள்ளோம்.

*184.* மண்ணெண்ணைய் மீதான வரியைக் குறைந்துள்ளோம். டீசல் எண்ணெய் (Diesel) மீதான வரி அதே அளவில் இருக்கும். பெட்ரோல் (Petrol) மீதான வரி, கேரளம், கர்நாடகம் ஆகிய மாநிலங்களில் இருப்பதுபோல் *18* சதவிகிதத்திலிருந்து *20* சதவிகிதமாக உயர்த்தப்படும்.

*185.* வரி விகிதம் உயர்த்தப்படும் பொருள்களில் சிலவற்றை எடுத்துக்காட்டாக இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

| பொருளின் பெயர் | தற்போதுள்ள வரி விகிதம் | புதிய வரி விகிதம் |
|---|---|---|
| குளிர் பதனப் பெட்டிகள் | 15 | 16 |
| தரை மற்றும் சுவர் ஓடுகள் | 15 | 16 |
| மின் உயர்த்திகள் | 15 | 16 |
| சலவைக்கல், சலவைக்கல் பொருட்கள் | 15 | 16 |
| வைரங்கள் | 10 | 12 |
| வாசனைப் பொருட்கள் (Scent and Perfumes) | 15 | 16 |
| வண்ணங்கள், வண்ணப் பொருட்கள் (Paints and Distempers) | 10 | 12 |
| காற்று சுத்திகரிப்புக் கருவிகள் (Air Purifiers) | 15 | 16 |
| குளிர்சாதன கருவிகள் (Air Conditioners) | 15 | 16 |
| பீங்கான் பொருள் | 10 | 12 |
| விரிப்புகள் | 15 | 16 |
| தந்தப் பொருட்கள், தந்தத்தால் இழைக்கப்பட்ட பொருட்கள | 10 | 12 |
| மோட்டார் சீருந்து | 5 | 8 |
| துப்பாக்கிகளும், சுழல் கைத் துப்பாக்கிகளும் | 15 | 16 |
| படிவப் பெருக்கும் கருவிகள் | 15 | 16 |

*186.* வரி அமைப்பை எளிதாக்கும் மற்றொரு நடவடிக்கையாக, ஒரு சிலவற்றைத் தவிர மற்ற உதிரிப் பொருட்கள் மற்றும் பாகங்கள் மீதான வரி, அடிப்படைப் பொருட்களின் மீதான வரிக்கு ஈடாகத் திருத்தி அமைக்கப்படுகிறது.

*187.* மார்ச்சு *12, 1993* முதல் நடைமுறைக்கு வரும் வண்ணம் இந்த வகை ப்படுத்தும் நடவடிக்கையின் விளைவாக ஏற்படு அனைத்து வரி விகித மாற்றங்களுக்கான அறிவிப்பு இன்று வெளியிடப்படுகிறது. இதன் நகல் அவையில் வைக்கப்படுகிறது அறிவிப்பிலுள்ள ஒவ்வொரு பொருளின் வரி விகிதங்களி

என்று கோரிக்கைகள் வந்துள்ளன. பல வணிகர்களுக்கு ஒரே விதமான வரிவிகிதம் என தற்போது உள்ளதால், வரி செலுத்துவதில் நல்ல இணக்கம் இருக்குமேயானால், மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஆய்வுகளுக்கான தேவையே இருக்காது. இந்த பிரிவின் கீழ் அளிக்கப்பட்டுள்ள அதிகாரம் அப்படியே நடைமுறைப் படுத்தப்பட்டாலும், முதுநிலை அதிகாரிகளால் மட்டுமே உபயோகப்படுத்தப்படும் என இவ்வரசு உறுதி செய்யும்.

199. வழக்கறிஞர்கள், ஒரு சில நிவாரணங்களை கோரியிருக்கிறார்கள். கீழ்கண்டவாறு வரி விகிதத்தை மாற்றியமைக்க இவ்வரசு முடிவு செய்துள்ளது.

| | தற்போதைய் விகிதம் அரையாண்டுக்கு | | புதிய விகிதம் அரையாண்டுக்கு | |
|---|---|---|---|---|
| | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
| இரண்டு வருடத்திற் குள்ளான வழக்குரை அனுபவம் உள்ளவர்கள் | 50 | 100 | 30 | 90 |
| இரண்டு வரடத்திற்கு மேலும் மற்றும் ஐந்து வருடத்திற்கு கீழ் | 200 | 500 | 90 | 300 |
| 5 முதல் - 10 வருடம் வரை | 750 | 1250 | 300 | 600 |
| 10 வருடம் மற்றும் அதற்கு மேல் | 750 | 1250 | 600 | 900 |

200. ஆயூர்வேதம், ஹோமியோபதி, சித்த மற்றும் யுனானி மருத்துவர்களை பொறுத்தவரையில் சட்டத்தின் அட்டவனை 2 (C) இன்படி தற்போதுள்ள மற்றும் மாற்றியமைக்கப்பட்ட வரி விகிதங்கள் கீழ்கண்டவாறு அமையும்.

| | தற்போதைய் விகிதம் அரையாண்டுக்கு | | புதிய விகிதம் அரையாண்டுக்கு | |
|---|---|---|---|---|
| | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
| 2 ஆண்டுகளுக் குட்பட்ட .மருத்துவ அனுபவம் உடையோர் | 50 | 100 | 30 | 90 |
| 2 ஆண்டுகள் மற்றும் அதற்கு மேல் ஆனால் 5 ஆண்டுகளுக்கு குறைவு | 100 | 150 | 90 | 120 |
| 5 ஆண்டுகள் மற்றும் அதற்கு மேல் | 200 | 300 | 120 | 210 |

## ஆதி திராவிடர் பழங்குடியினர் நலம்:

★ இவ்வாண்டு ஆதி திராவிடர்களுக்கு 20 புதிய மாணவர் இல்லங்கள் தொடங்கப் படும். தற்போதுள்ள மாணவர் இல்லங் களில் 1000 மாணவர்கள் கூடுதலாகச் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

★ பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த மாணவிகளுக்கென்றே 20 புதிய இல்லங்கள் தொடங்கப்படும்.

201. இதேபோல் அலோபதி மருத்துவர்களுக்கும் சில நிவாரணங்கள் அளிக்க முடிவு செய்துள்ளோம்.

| | தற்போதைய் விகிதம் அரையாண்டுக்கு | | புதிய விகிதம் அரையாண்டுக்கு | |
|---|---|---|---|---|
| | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
| 2 ஆண்டுகளுக்குட்பட்ட மருத்துவ அனுபவம் உடையவர்கள் | 100 | . 750 | 90 | 270 |
| 2 ஆண்டுகளுக்கு மேல் மற்றும் 5 ஆண்டுகளுக்கு கீழ் | 500 | 1250 | 270 | 540 |
| 5 முதல் 10 ஆண்டுகள் வரை | 750 | 1250 | 540 | 660 |
| 10 ஆண்டுகளும் அதற்கு மேலும் | 750 | 1250 | 660 | 960 |

202. இச்சட்ட அட்டவணையின் ஐந்தாவது இனத்தின்படி இந்தி நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ள நிறுவங்களின் அனைத்து இயக்குநர்களும், ஒரு பிரிவாக கொண்டுவரப்பட்டுள்ளார்கள். இயக்குநர்களிடையே, பகுதிநேர மற்றும் முழுநேர இயக்குநர்கள் உள்ளார்கள் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதைக் கருத்தில் கொண்டு தொழில் வரி விகிதங்களை கீழ்க்கண்ட தனி விகிதங்களாக மாற்றி அமைக்க நாம் முடிவு செய்துள்ளோம்.

| | தற்போதைய் விகிதம் அரையாண்டுக்கு | | புதிய விகிதம் அரையாண்டுக்கு | |
|---|---|---|---|---|
| | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
| பகுதிநேர இயக்குநர்கள் | 1000 | 1250 | 240 | 480 |
| முழுநேர இயக்குநர்கள் | 1000 | 1250 | 960 | 1020 |

203. சட்டத்தின் அட்டவணையின் இனம் 7 (C) யின் படி இளநிலை கலைஞர்கள், உற்பத்தி மேலாளர்கள், உதவி இயக்குநர்கள் ஆகியோர்களுக்கு சில நிவாரணங்கள் அளிக்க முடிவு செய்துள்ளோம். வரி விகிதங்கள் கீழ்க்கண்டவாறு மாற்றியமைக்கப்படும்.

| | தற்போதைய் விகிதம் அரையாண்டுக்கு | | புதிய விகிதம் அரையாண்டுக்கு | |
|---|---|---|---|---|
| | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
| இளநிலை கலைஞர்கள், உற்பத்தி மேளாலர்கள், உதவி இயக்குநர்கள் ஆகியோர் | 1000 | 1250 | 300 | 720 |

204. அட்டவணையின் இனம் 14 ல், லாரிகள், சரக்கு வண்டிகள் பேருந்துகள் ஆகியவற்றிற்கான அனுமதி சீட்டு வைத்திருப்போருக்கு, ஒரே வரி விகிதம், நிர்ணயிக்கப்பட்டுள்ளது, இதனை மாற்றி, ஊர்திகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் வரிவிதிப்பு அதிகரிக்கும் வகையில் தரப்படுத்தி இதனை மாற்றி அமைக்க வேண்டும் என்பது கோரிக்கை. இந்த கோரிக்கையினை ஏற்க நாம் முடிவு செய்துள்ளோம். வரி விகிதங்கள் கீழ்க் கண்டவாறு மாற்றியமைக்கப்படும்.

| | தற்போதைய் விகிதம் அரையாண்டுக்கு | | புதிய விகிதம் அரையாண்டுக்கு | |
|---|---|---|---|---|
| | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
| அனுமதி சீட்டு வைத்திருப்போர் லாரி/சரக்கு வண்டி/ பேருந்து ஒரு ஊர்திக்கு | 1000 | 1250 | 300 | 480 |
| ஒன்றுக்கு மேல் மற்றும் மூன்று ஊர்திக்குள் | 1000 | 1250 | 480 | 720 |
| மூன்று ஊத்திகளுக்கு மேல் | 1000 | 1250 | 720 | 1020 |

205. ஒரு நிறுவனத்தின் கூட்டாளிகளுக்கு இந்த வரி விதிப்பிலிருந்து முழு விலக்கு அளிக்க வேண்டும் என கோரிக்கைகள் வைக்கப்பட்டுள்ளன. இப்பிரச்சனை இந்த அவையிலும் எழுப்பட்டுள்ளது. தொழில்கள், வணிகங்கள் பணிகள் மற்றும் வேலைகள் மீது விதிக்கப்படும் தொழில் வரியானது, பரவலான அடிப்படையில், விதிக்கப்படும் ஒரு சிறிய வரியாகும். மகாராஷ்டிரா, மற்றும் கர்நாடகம் போன்ற மாநிலங்களில் கூட்டாளிகள் வரிவிதிப்பிற்கு உட்படுத்தப்படுகிறார்கள். இந்தக் கோரிக்கையினை தனியாக, விரிவாக ஆராய நாம் தீர்மானித்துள்ளோம். ஆனாலும், கூட்டாளிக்குப் பதிலாக, கூட்டு .நிறுவனம் இவ்வரி விதிப்பிற்கு உள்ளாக்கப் படவேண்டும் என நாம் முடிவு செய்துள்ளோம். ஒவ்வொரு நிறுவனத்திற்கான ஒரு அரையாண்டிற்கான குறைந்த பட்ச வரி ரூபாய் 840 ஆகவும் அதிகபட்ச வரி ரூபாய் 960 ஆகவும் இருக்கும்.

206. தமிழ்நாடு அடகு வியாபாரச் சட்டம் 1943 கீழ் உரிமம் பெற்ற அனைத்து அடகு வியாபாரிகள் மீதும் இத்தொழில் வரி விதிக்கப்படும். இதற்காக இச்சட்டத்தில் ஒரு புதிய பகுதி சேர்க்கப்படும். ஒரு அரையாண்டிற்கான குறைந்தப்பட்ச வரி ரூபாய் 840 ஆகவும் அதிகபட்ச வரி ரூபாய் 1020 ஆகவும் இருக்கும்.

207. ஒவ்வொரு பிரிவிலும், உச்ச வீதத்தில் அரையாண்டுக்கு, அதிக பட்ச வரியாக ஒரே சீராக ரூபாய் 1020 என நிர்ணயிக்கப்படும்.

208. மேலே குறிப்பிட்டுள்ள, புதிய வரி விகிதங்களின் அனைத்தும் 1.4.92 முதல் அமுல்படுத்தப்படும். இந்த மாற்றங்களை அமுல்படுத்துவதற்கான சட்ட திருத்தங்கள் பேரவையின் இந்தக் கூட்டத் தொடரில் கொண்டுவரப்படும்.

★ தேர்ச்சி பெறாத தொழிலாளர்களுக் கான தற்போதைய குறைந்த அளவு ஒரு நாள் ஊதியம் ரூ.15-லிருந்து ரூ.20 ஆக உயர்த் தப்படுகிறது.

★ படித்த வேலை வாய்ப்பற்ற இளைஞர் களுக்கான புதிய திட்டத்தில் 1.5 இலட்சம் இளைஞர்கள் பங்கு கொள்வார்கள். தற் போதுள்ள திட்டப்படி அவர்களுக்கு வழங் கப்படும் மதிப்பூதியம் 50 சதவிகிதமாக உயர்த்தப்படும்.

## வேளாண்மை வருமான வரி

209. வேளாண்மை வருமானவரி எங்களது முதல் வரவு செலவுத் திட்ட அறிக்கையில், மலைத் தோட்டப் பயிரல்லாத ஏனைய வேளாண்மைப் பயிர்களிலிருந்து பெரும் வருமானத்திற்கு, வேளாண் வருமான வரிச் சட்டத்தில் வ ரி விலக்கு அளித்தோம் என்பதை அவை உறுப்பினர்கள் நினைவு கூறலாம். மலைத் தோட்டப் பயிர்களிலிருந்து பெறும் வருமானத்திற்கான வரிவிகிதங்களையும் திருத்தியமைத்தோம். இப்பயிர் முறையில் ஈடுபட்டுள்ள சிறிய வேளாளர்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் இவ்வரி விதிப்பில் விலக்கு அளிக்கப்படும் வருமான வரம்பு ரூபாய் 22,000 -லிருந்து ரூபாய் 28,000-ஆக உயர்த்தி அமைக்க முடிவு செய்துள்ளோம். இது 1-4-1993 முதல் நடைமுறைக்கு வரும்.

## மோட்டார் வாகன வரி

210. ஒப்பந்தப் பேருந்துகளின்மீதான மோட்டார் வாகன வரி தற்போது கால் ஆண்டொன்றுக்கு இருக்கை ஒன்றுக்கு ரூபாய் 500 என்ற விகிதத்தில் உள்ளது. இதனை காலாண்டுக்கு இருக்கை ஒன்றுக்கு ரூபாய் 500 என்ற விகிதத்திலிருந்து ரூபாய் 1000 ஆக உயர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளது. திருத்தி அமைக்கப்பட்ட விகிதம் 1.4.93- ல் இருந்து செயலாக்கப்படும். ஆயினும் அகில இந்திய அளவில் சுற்றுலாப் பயணிகளுக்கான ஒப்பந்தப் பேருந்துக் ள் மீதான வரி தற்போதைய அளவில் காலாண்டுக்கு இருக்கை ஒன்றுக்கு ரூபாய் 500 ஆகவே இருக்கும்.

நான் இங்கே கோடிட்டுக் காட்டியுள்ள வரி விதிப்புச் செயற்குறிப்புகள் பொதுவாக பெரிய அளவிளான சலுகைகளைத் தெரியப்படுத்துகின்றன. இது நமது வரி விதிப்பு நடைமுறைகளை மேலும் எளிமைப்படுத்திச் சீரமைப்பது குறித்த நமது முயற்சிக்கிணங்க உள்ளது. இதன் மூலம் வரிச்சுமையை உயர்த்துவதற்குப் பதிலாக வரிசெலுத்துவோர் விதிகளைச் சிறப்பாக பின்பற்றச் செய்வதும் வரிவசூலை மேலும் திறம்பட செய்வதுமே எங்கள் நோக்கமாகும். இந்த சீரமைப்பு நடைமுறையின் பொதுவான முக்கியத்துவத்தையும் நாம் அளித்துள்ள பரவலான பல்வகைப்பட்ட வரிநிவாரணச் சலுகைகளையும் இம் மன்றத்தின் உறுப்பினர்கள் வரவேற்பார்கள் என்பதில் எனக்கு ஐயமில்லை.

## முடிவுரை

211. 1993-94 ஆம் ஆண்டிற்கான இறுதிப் பற்றாக்குறை ரூ.635.89 கோடி என்று நான் ஏற்கெனவே சுட்டிக்காட்டியுள்ளேன். செலவினங்களில் சிக்கனம், அரசு ஆற்றுகின்ற பணிகளுக்குச் சிறந்த வருவாயைப் பெறுதல், ஏழைகளுக்கு நன்மை தரக்கூடியத் திட்டங்களைச் சிறந்த முறையில் இலக்குகள் நிறைவேறச் செய்தல்

## சமூகப் பாதுகாப்புத் திட்டம்:

★ ஏழை மக்களுக்கான சமூகப் பாதுகாப்புத் திட்டத்திற்கு, உரிய நிதி ஒதுக்கீடு முன் எப்போதும் இருந்திராத அளவில் ரூ.1,400 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

---

ஆகியவை தொடர்பாக நாம் எடுக்கவிருக்கும் நடவடிக்கைகள் மூலமாக, நமக்கு ரூபாய் 95 கோடி நிகர சேமிப்பாகக் கிடைக்கும். இதற்குப் பிறகும் நம்மிடம் ரூ.540.89 கோடி பற்றாக்குறை நிரப்பப்பட முடியாமல் இருக்கும். இங்கு நான் குறிப்பிட்ட வரி விதிப்பு நடவடிக்கைகளின் விளைவாக, ரூ. 15 கோடி வருவாய் இழப்பு ஏற்படும். இதனால் 1992-93 ஆம் ஆண்டின் நிகர இறுதிப்பற்றாக்குறை ரூ. 555.89 கோடியாக இருக்கும். ஆகவே, நிதி நிலைமையைச் சரி செய்வதற்கு நாம் கணிசமான முயற்சியை மேற்கொண்டிருக்கிறோம் என்று குறிப்பிடலாம் என்றாலும், இன்னும்கூட நிதி நிலைமை தொடர்ந்து நெருக்கடியில் இருந்து வருகிறது. இந்த வரவு-செலவு திட்டத்தில் பெரிய அளவில் புதிய வரிச்சுமையைச் சுமத்துவதில் நாம் நிதானம் காட்ட முடிவு செய்துள்ளோம். அதற்குப் பதிலாக, ஏழைகளுக்குப் பாதுகாப்பு அளிப்பது, பொருளாதார வளர்ச்சியைத் தூண்டுவது ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு, பெரிய அளவில் வரி நிவாரணச் சலுகைகளை அளித்துள்ளோம். நமது நிதி நிலைமை கடுமையாக இருக்கின்ற நிலையிலும்கூட, நாம் எடுத்துள்ள இந்த நடவடிக்கைகளை இம்மன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் வரவேற்பார்கள் என்று கருதுகிறேன்.

212. வருவாய்ப் பற்றாக்குறை விரிந்து கொண்டே செல்வது நடப்பு வருவாய்களிலிருந்து அதிக அளவில் 'கையிருப்பு இல்லை' (negative balance) என்கின்ற நிலைமை ஏற்பட்டிருப்பது ஆகியவை கவலை அளிக்கக்கூடியனவாகும். இந்த நிலைமையைச் சரிசெய்வதற்கு நம்மால முடிநத அனைத்தையும் செய்துள்ளோம். நம்மை எதிர்ப்பட்டுள்ள பொருளாதாரக் கட்டமைப்பு இடையூறுகளைப் பத்தாம நிதிக் குழு நீக்கிச் சரிப்படுத்த வேண்டும். பத்தாம் நிதிக் குழுவிடமிருந்து தமிழ் நாட்டிற்கு நிதி வகையில் நீதி கிடைக்க நாம் அயராமல் பாடுபடுவோம்.

213. 1993-94 ஆம் ஆண்டில் தமிழ் நாட்டின் சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைக்குக் குறைந்தது ரூபாய் 150 கோடியாவது வழங்குமாறு நாம் மத்திய அரசை வலியுறுத்துவோம். 1991-92 ஆம் ஆண்டில் கடலோர எல்லைப் பகுதி மேம்பாட்டிற்காகத் தமிழ் நாட்டிற்கு மத்திய உதவியாக ரூ.15 கோடி மட்டுமே வழங்கப்பட்டது. இதற்கு 1993-94ல் மேலும் ஒரு தொகை வழங்குமாறு நாங்கள் மத்திய அரசை வலியுறுத்துவோம். மத்தியத் திட்டக்குழுவும்கூட, சென்னைப் பெரு நகர வளர்ச்சிக்காக ரூ.15 கோடி மட்டுமே ஒதுக்கீடு செய்துள்ளது. சென்னை மாநகர வளர்ச்சிக்காக நாங்கள் மிக அதிக அளவில் செலவு செய்து வருவதால், மத்திய அரசு அளிக்கும் தொகையை மேலும் உயர்த்தி, ரூ.50 கோடி வழங்குமாறு நாங்கள் கேட்டுக் கொள்வோம். இவ்வாறு கூடுதலாகக் கிடைக்கும் மத்திய அரசின் உதவியைக் கொண்டு, இம்மாநில அரசு இட்டு நிரப்ப முடியாதிருக்கும் பற்றாக்குறையைக் கணிசமான அளவிற்கு நிரப்ப முடியும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

214. நான் இப்பொழுது என்னுடைய உரையின் முடிவுப் பகுதிக்கு வந்துள்ளேன். தமிழ் நாட்டை எதிர்கொண்ட கடுமையான அறைகூவல்களைச் சமாளித்து, வளமிக்க வளர்ச்சிப் பாதையில் இம்மாநிலம் மீண்டும் நடைபோடச் செய்வதற்குப் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தலைமையில் அமைந்த அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தால் மட்டுமே முடியும் என மிகப் பெரும் நம்பிக்கையை வைத்துத் தமிழக மக்கள் ஆளும் கட்சிக்கு மிகப் பெரும் அளவில் வாக்களித்துக் கட்சியை வெற்றி பெறச் செய்தார்கள். மக்கள் இவ்வரசின் மீது வைத்துள்ள அளவிறந்த பெரும் நம்பிக்கையை இவ்வரசு முழு அளவில் காப்பாற்றியுள்ளது. வெளிநாட்டுப் போராளிகளும், தீவிரவாதிகளும் கொடுத்த பெரும் தொல்லையை அறவே ஒழித்ததன் மூலம், மிகப் பெரிய துன்பத்தை நாம் வென்றுள்ளோம். வகுப்புவாத சக்திகள் ஒடுக்கி வைக்கப்பட்டுத் தலைதூக்க ஒட்டாமல் செய்யப்பட்டுள்ளன. இந்தியப் பெருநாட்டிடையே இந்த மாநிலம் அமைதி நல்லிணக்கத்திற்கு ஒரு தனிச் சிறப்புடைய எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது. நிதி நிலைமை எந்தக் கணமும் மிக மோசமாகிச் சீர்குலைந்துவிடக்கூடும், வளர்ச்சி தடைப்பட்டு நிற்கும், ஏழைகளுக்கான சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகள் குலைக்கப்பட்டுவிடும் என்று பலவகையிலும் எழுந்துள்ள மிரட்டல் நிலை நீக்கப்பட்டுள்ளது. புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதாவின் சீரிய தலைமையில், தமிழகம் அமைதி ஒற்றுமையின் புகலிடமாகப் பொங்கிப் பெருகும் தன்னம்பிக்கையுடன், புத்துயிர் பெற்ற பொருளாதார வளர்ச்சியும் முன்னேற்றமும் பெற்றுச் சிறந்து நிற்கிறது.

215. ஏழைகளுக்கும், வசதி வாய்ப்பற்றவர்களுக்கும், சாதாரண மக்களுக்கும் சிறந்த வாழ்க்கைத் தரத்தைப் பெற்றுத் தருவோமென்று கூறிய சூளுரையை நாங்கள் ஒருபோதும் மறக்க மாட்டோம். ஏழைகள், வசதி வாய்ப்பற்றவர்கள் நலனுக்கு முதலிடம் தருமாறு, நமது முதலமைச்சர் அவர்கள், எல்லா மன்றங்களிலும் தயங்காமல் நின்று குரல் எழுப்பியுள்ளார்கள். நாங்கள் மிகக் கடுமையான, மிக மோசமான சூழ்நிலைகளைச் சந்தித்துள்ளோம். ஏழைகளின் வாழ்க்கைத் தரம் படிப்படியாக உயரும் என்று உறுதி அளித்துள்ளோம். தேசிய பொருளாதார நெருக்கடியில் ஏற்படக்கூடும் சோதனைகள், வேதனைகளிலிருந்து நாம் விடுபட்டு முன்னேற்றப்பாதையில் அடியெடுத்து வைத்துள்ளோம் என்பதைக் காட்டுவதே இந்த வரவு-செலவுத் திட்ட அறிக்கையாகும். மக்களுக்கு எல்லா வழிகளிலும் நன்மை பெற்றுத் தருவதற்குத் தமிழகத்தைப் புதிய உயர்ந்த வளர்ச்சிப் பாதையில் செலுத்த இது விழைகிறது. மிகக் கடுமையான இடையூறுகளை வென்றுள்ள நிலையில், ஆற்றலும் எழுச்சியும் ஊட்டுகின்ற நமது பெரும் திறமை வாய்ந்த முதல்வர் அவர்களின் தலைமையில் நாம் முன்னேற்றப் பாதையில் விரைந்து நடைபோடுவோம். விவாதத்தில் சூடு தணியட்டும்; ஒளி பெருகட்டும்.

216. இந்த நிதிநிலை அறிக்கையைச் சிறப்பான முறையில் உருவாக்கித் தர, பெருமுயற்சியினை மேற்கொண்டு; பேருதவியையும், ஒத்துழைப்பையும் நல்கிய நிதித் துறைச் செயலாளர் திரு. ந. நாராயணன் அவர்களுக்கும், அவருக்கு உறுதுணையாக இருந்து பெரும் பணிகள் பலவற்றையும் ஆற்றிய நிதித் துறை மற்றும் ஏனைய துறைகள் ஆகிய வற்றைச் சார்ந்த அதிகாரிகள், அலுவலாளர்கள் ஆகியோர்க்கும் என் உளங்கனிந்த நன்றியை உவகைப் பெருக்கோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

217. 1993-94 ஆம் ஆண்டிற்குரிய நிதிநிலை அறிக்கையை அன்புடன் ஏற்றுக்கொள்ளுமாறு அவையினர் அனைவரையும் விழைந்து கேட்டுக்கொள்கிறேன்.

வணக்கம்.

இரா. நெடுஞ்செழியன்,
நிதி அமைச்சர்.

சென்னை,
1993 ஆம் ஆண்டு
மார்ச் திங்கள் 12 ஆம் நாள்
திருவள்ளுவர் ஆண்டு 2024
மாசித் திங்கள் 29 ஆம் நாள்.


எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள். வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தை அணுகவும்.

மாற்றங்கள் என்னால் படிக்கப்பட்டதாகக் கருதப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். சரித்திர முக்கியம் வாய்ந்த இந்த வரிச் சீரமைப்பு நடவடிக்கைகளை அவை உறுப்பினர்கள் முழுமையாக ஏற்பார்கள் என நான் உறுதியாக நம்புகிறேன்.

188. கூடுதல் விற்பனை வரி விதிப்பைக் குறித்து குழு முக்கியமான பரிந்துரைகள் வழங்கியுள்ளது. மொத்த விற்பனைத் தொகை மீது சீரான 3 சதவீத கூடுதல் விற்பனை வரி விதிக்கப்பட வேண்டும் என குழு பரிந்துரைத்துள்ளது. இந்தக் கூடுதல் வரி உயர்வால் விலைவாசி உயரக்கூடும் எனக் கருதி இந்த பரிந்துரையை அரசு தள்ளிவைக்கத் தீர்மானித்துள்ளது. இதற்கு மாறாக மேலும் சில சலுகைகளைக், குறிப்பாக சிறிய வணிகர்களுக்கும் உற்பத்தியாளர்களுக்கும் அளிப்பதென முடிவெடுத்துள்ளோம். ஒரு கோடிக்குக் குறைவாக, வரிவிதிப்பிற்கு உட்பட்ட மொத்த விற்பனை அளவுடைய வணிகர்களுக்கு முதல் பத்து இலட்ச ரூபாய் விற்பனை அளவிற்கு விலக்கு அளிக்கப்படும். மொத்த விற்பனைத் தொகையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை மனதில் கொண்டு வரிப்படி முறை வீதங்களை (Tax slabs) மாற்றியமைக்க முடிவு செய்துள்ளோம். இச்சலுகை சிறிய வணிகர்களுக்கும், உற்பத்தியாளர்களுக்கும் பயனளிப்பதுடன், வரி விகிதங்களில் மாறுதல் ஏற்படும். ரூபாய் 10 இலட்சம் மட்டத்தில் நிகழக்கூடிய விற்பனைகளை மறைப்பதைக் கட்டுப்படுத்தும்.

தற்போதுள்ள வரி விகிதங்களுக்கு விற்பனைத் தொகைப்படிகளும் மட்டங்களும் பின்வருமாறு அமைந்துள்ளன.

| ஆண்டொன்றுக்கு வரிக்குட்பட்ட விற்பனை அளவு (ரூபாயில்) | தற்போதுள்ள கூடுதல் விற்பனை வரி விகிதம் (சதவிகிதம்) |
|---|---|
| 0 - 10 இலட்சம் | வரி இல்லை |
| 10 - 40 இலட்சம் | 1.25 (வரிவிதிப்பிற்குட்பட்ட மொத்த விற்பனை அளவின் மீது) |
| 40 இலட்சம்- 1 கோடி | 1.5 |
| 1 - 5 கோடி | 2.0 |
| 5 - 10 கோடி | 2.25 |
| 10 கோடிக்கு மேல் | 2.5 |

வரி விகிதங்களும் விற்பனை அளவு மட்டங்களும் பின்வருமாறு மாற்றியமைக்கப்படுகின்றன.

| ஆண்டொன்றுக்கு வரிக்குட்பட்ட விற்பனை அளவு (ரூபாயில்) | தற்போதுள்ள கூடுதல் விற்பனை வரி விகிதம் (சதவிகிதம்) |
|---|---|
| 0 - 10 இலட்சம் | வரி இல்லை |
| 10 இலட்சம் - 1 கோடி | 1.5 |
| (இந்த மட்டத்தில் உள்ளவர்களுக்கு மட்டும் முதல் ரூ.10 இலட்சம் வரை விலக்கு அளிக்கப்படும்) | |
| 1 - 5 கோடி. | 2.0 |
| 5 - 10 கோடி. | 2.25 |
| 10 - 300 கோடி. | 2.5 |
| 300 கோடிக்கு மேல் | 3.0 |

189. சிறிய வணிகர்களுக்கும், உற்பத்தியாளர்களுக்கும் சலுகைகள் அளிப்பதுடன், ரூ.10 இலட்ச அளவில் மொத்த விற்பனையளவு மட்டத்தில் வெளிப்படையான கணக்கு பராமரிப்பு நடைபெறும் என்ற கண்ணோட்டத்தில் இந்தக் கூடுதல் விற்பனை வரி மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கூடுதல் விற்பனை வரியின் பளுவை நுகர்வோருக்கு மாற்றுவது குறித்த சட்டப் பிரிவை நீக்குவது குறித்தும் கூர்மையாக ஆலோசித்தோம். விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ள இந்த சமயம், விலையுயர்விற்கு வழி வகுக்கும் என்ற ஒரு நடவடிக்கையும் ஏற்புடையதல்ல. ஆகவே, இந்தக் கருத்து குறித்து ஆய்வை தள்ளிவைப்பெதன முடிவெடுத்துள்ளோம். இந்தப் புதிய கூடுதல் விற்பனை வரி விகிதங்களும், விற்பனை அளவு மட்டங்களும் 1993 ஏப்ரல் முதல் தேதி முதல் செயலுக்கு வரும்.

190. இந்த முக்கியமான வரிச் சீரமைப்பு நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக 1985-ஆம் ஆண்டின் மத்திய உற்பத்தி வரிச் (Excise) சட்டத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் விவரங்களுக்கு ஏற்ப விற்பனை வரிச் சட்டத்தில் இரண்டாவது, மூன்றாவது அட்டவணைகளிலுள்ள பொருள்களின் விவரத்தை மாற்றியமைக்கக் கருதியுள்ளோம். இருப்பினும், இந்த அட்டவணைகளிலுள்ள வரி விகிதங்களில் எந்தவித மாற்றமும் இல்லை. இதற்கென அறிவிப்புகள் முறையாக வெளியிடப்படும்.

191. வரி விதிப்பு முறையைச் சீரமைத்து எளிதாக்குவதுடன், ஏழை எளிய மக்களின் மீதான வரிச் சுமையைக் குறைப்பதும் எங்களது நடவடிக்கைகளின் அடிப்படை நோக்கமென்பது தெளிவாகத் தெரியும். ஆகவே, வரி ஏய்ப்பைக் கட்டுப் படுத்துவதில் மிகுந்த கவனத்துடன் செயல்பட வேண்டும். வரி ஏய்ப்பையும், வரி விதிப்பிலிருந்து விடுபடுவதையும் தடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இந்த நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக வரி ஏய்ப்பு நிகழக் கூடிய சில பொருள்களை அட்டவணை ஆறில் சேர்க்க முடிவெடுத்துள்ளோம். அட்டவணை ஆறில் சேர்க்கப்படும் பொருள்களும், அவற்றின் மீதான வரி விகிதங்களும் பின்வருமாறு: 1. காற்றடைக்கப்பட்ட பானங்கள், புட்டியிலுள்ள அல்லது அடைக்கப்பட்ட குளிர்ப் பானங்கள்8 சதவிகிதம் 2.ஐஸ்க்ரீம் மற்றும் ஐஸ் புருட்12 சதவிகிதம் 3. ஷாம்பு16 சதவிகிதம் படிப்படியாக வரி அளவு அதிகரிப்பதைத் தடுக்க, முதல் கட்டத்தில் விதிக்கப்படும் அளவு வரி, இரண்டாவது கட்டத்தில் ஈடு செய்யப்படும்.

192. தமிழ்நாடு விற்பனை வரிச் சட்டத்தில் முன்பு இருந்த பிரிவு 3(4)க்கு ஒப்பான பிரிவு, சட்டப்படிச் செல்லும் என உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. ஆகவே மீண்டும் இந்தப் பிரிவை செயலுக்குக் கொண்டு வர முடிவெடுத்துள்ளோம். இந்தப் பிரிவின் அடிப்படையில் படிவம் XVII-ன் கீழ் இந்த மாநிலத்தில் மூலப் பொருட்கள் வாங்கப்பட்டு, உற்பத்தியான பொருள்கள் அனுப்பு பொருள் முறையில் (Consignment) வெளியில் விற்பனையாகும்போது, கூடுதலாக இரண்டு சதவிகிதம் மூலப் பொருட்கள் மீது வரி விதிக்கப்படும்.

193. அபராதங்களைச் சீரமைப்பது உட்பட பல்வேறு சீரமைப்புகள், நடைமுறை மாற்றங்கள் குறித்தும் குழு அறிக்கை அளித்துள்ளது. இந்தப் பரிந்துரைகளை ஆய்வு செய்து பொரும்பாலானவற்றை மார்ச்சு 12, 1993 முதல் நடைமுறைப்படுத்த முடிவெடுத்துள்ளோம். இந்த மாற்றங்களைச் செயல்படுத்தத் தேவையான திருத்தங்களை இந்தக் கூட்டத் தொடரில் கொண்டு வருவோம்.

194. 1959 - ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தில் மோட்டார் வாகனங்கள் விற்பனை மீது விதிக்கப்படும் வரி விகிதங்களில் செய்யப்பட்டுள்ள மாற்றங்களின் விளைவாக, மோட்டார் வாகனங்கள் மீதான நுழைவு வரி விகிதங்களும் திருத்தியமைக்கப் படவுள்ளன. தற்போதுள்ள வரி விகிதங்கள் பின்வருமாறு:

| வரிசை எண் | வகைப்பாடு | தற்போதுள்ள வரி விகிதம் (சதவிகிதத்தில்) |
|---|---|---|
| 1 | மோட்டார் சீருந்து | 10 |
| 2 | வாடகைச் சீருந்து | 20 |
| 3 | ஒப்பந்தப் பேருந்து | 12 |
| 4 | மோட்டார் வாகன அடிச்சட்டம் | 10 |
| 5 | மோட்டார் வாகன அடிச்சட்டத்தின் மீது கட்டப்பட்ட கூடுகள | 12 |
| 6 | ஆட்டோ ரிக்ஷா | 12 |
| 7 | மோட்டார் இரு சக்கர வண்டிகள் (பொறிகளின் கொள்ளளவு எவ்வளவாயினும்) | 8 |
| 8. | 1988 - ஆம் ஆண்டு மோட்டார் வாகனச் சட்டத்தின்படி லேசான மோட்டார் வாகனங்கள் | 12 |
| 8A. | எல்லா வகையான இயந்திரக் கலப்பைகள் | 7 |
| 9. | பாரஊர்தி, பேருந்து லாரிகள் | 12 |
| 10 | ஈப்புகள் | 12 |
| 11 | மோட்டார் வாகனங்கள் மீது பொருத்தப்பட்ட அல்லது கட்டப்படவுள்ள தொட்டிகள் | 20 |
| 12 | எல்லாவகையான இழுவைகள் | 12 |
| 13 | மேலே 1 முதல் 12 வரை குறிப்பிடப்படாத பிற மோட்டார் வாகனங்கள் | 20 |

மகளிர் மேம்பாடு:

★ 'புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா பெண் குழந்தைகள் பாது காப்புத் திட்ட'த்திற்காக இவ்வாண்டு ரூ.4 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

★ புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் மற்றும் அதனோடு இணைந்த திட்டங்களுக்கு ரூ.312 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

195. 1993 மார்ச் 12 முதல் திருத்தியமைக்கப்பட்டுள்ள புதிய விகிதங்கள் பின் வருமாறு:-

| வரிசை எண் | வகைப்பாடு | வரி விகிதம் (சதவிகிதம்) |
|---|---|---|
| 1 | எல்லா வகையான இரண்டு சக்கர, மூன்று சக்கர வண்டிகள், அவற்றின் அடிச்சட்டங்கள், அடிச்சட்டங்களின் மீது கட்டப்படும் கூடுகள் | 9 |
| 2 | எல்லா வகையான மோட்டார் சீருந்துகள், லேசான மோட்டார் வாகனங்கள், பார ஊர்திகள், பேருந்துகள், ஈப்புகள் , லாரிகள்/இவ்வகையான வண்டிகளின் அடிச்சட்டங்கள், அடிச்சட்டங்களின் மீது கட்டப்படும் கூடுகள், இவற்றின் எல்லா வகையான இழுவைகள் | 13 |
| 3 | இயந்திரக் கலப்பைகளும் இழுவைகளும் | 6 |
| 4 | எல்லா வகையான அள்ளுதல், ஏற்றுதல், கொட்டுதல் போன்றவற்றிற்குப் பயன் படுத்தப்படும் பளுவான மண் எடுத்துச் செல்லும் இயந்திரங்கள் சாலை அமைக்கும் உருளைகள் | 9 |
| 5. | மோட்டார் வாகனங்கள் மீது பொருத்தப்பட அல்லது கட்டப்பட உள்ள தொட்டிகள் | 20 |
| 6. | மேலே உள்ள 1 முதல் 5 வரை குறிப்பிடப்படாத பிற மோட்டார் வாகனங்கள் | 20 |

## தொழில் வரி

196. தொழில், வணிகம், பணிகள் மற்றும் வேலைகள் வரி விதிப்பு சம்ப ந்தப்பட்ட அனைத்து விதிகளையும் ஒருங்கிணைக்கும் முறையில் நாம் ஒரு புதிய சட்டத்தினை அமுல்படுத்தியுள்ளோம். அரசியலமைப்பு சட்டத்தின் அடிப்படையில், இந்த வரி விதிக்கப்படுகிறது. இதுபோன்ற தனி சட்டம், கர்நாடகம், மகாராஷ்டிரம் மற்றும் குஜராத் மாநிலங்களில் தற்போது நடைமுறையில் உள்ளது. வரி விதிப்பு அமைப்புகளில் இது ஒரு புதிய வரிவிதிப்பு இல்லை. அரசியலமைப்பு சட்டத் திருத்தத்தின்படி, இவ்வரியின் அதிகபட்ச அளவு ஆண்டு ஒன்றுக்கு ரூ.2,500 என உயர்த்தப்பட்டுள்ளது. இந்த திருத்தத்தின் அடிப்படையிலும் தொழில்வரிக்கான அனைத்து விதிகளையும் ஒருங்கிணைக்கும் வகையிலும்தான் நாம் இந்த புதிய சட்டத்தை அமுல் படுத்தியுள்ளோம். புதிய சட்டத்தின் அடிப்படையில் விதிக்கப்படும் இத் தொழில் வரியில் எந்த வித மாற்றங்களும் தற்போது செய்வதற்கில்லை. தமிழ்நாட்டில் இந்த வரி உள்ளாட்சி நிறுவனங்களால் வசூலிக்கப்பட்டு, அந்நிறுவனப் பணிகளுக்கெனவே செலவிடப்பட உள்ளது என்பதையும் மனதில் கொள்ள வேண்டும்.

197. ஏனைய பிரிவினர்க்கு அளித்ததுபோல, சிறிய வணிகர்களுக்கும் இந்த வரி விகிதத்தில் சலுகைகள் அளிக்க வேண்டுமென பல வணிக அமைப்புகளும் வணிகர்களும் கோரியுள்ளார்கள். இவ்வரி விதிப்பு சம்பந்தப்பட்ட செயல்முறைகள் வணிக அமைப்புகளுடன் விவாதிக்கப்பட்டன. இந் கலந்துரையாடலின் அடிப்படையில், இச்சட்டத்தின் அட்டவணையின் இனம் 8-ன் கீழ் உள்ள வரி விகிதத்தை மாற்றியமைக்க நாம் முடிவு செய்துள்ளோம்.

தமிழ்நாடு பொது விற்பனை வரி சட்டத்தின் கீழ் பதிவு செய்துள்ள வணிகர்கள் கீழ்க்கண்டவாறு வரி விதிப்பிற்கு உள்ளாக்கப்படுவார்கள்.

| | அரையாண்டுக்கான வரிவிகிதம் | |
|---|---|---|
| | குறைந்தபட்சம் ரூ. | அதிகபட்சம் ரூ. |
| ஆண்டொன்றுக்கு மொத்த விற்பனை அளவு ரூ.10 இலட்சத்திற்கு குறைவாக உள்ள பதிவு செய்த வணிகர்கள் | 240 | 360 |
| ஆண்டொன்றுக்கு ரூ.10 இலட்சத்திற்கு மேல் மொத்த விற்பனை அளவு உள்ள பதிவு செய்த வணிகர்கள் | 500 | 840 |

198. இச்சட்டத்தின் பிரிவு 19 (1) மற்றும் 21-ன்படி, கணக்கு மற்றும் ஆவணங்களின் ஆய்வு, வளாக சோதனை ஆகியவை செய்ய அதிகாரம் உள்ளது. இந்த அதிகாரம் தவறாக பயன்படுத்தக் கூடாது




# தமிழரசு

1-4-1993 ரூ.1









## ஊனமுற்றோர் உலக நாள் விழா

### மாண்புமிகு முதல்வர் வாழ்த்துச் செய்தி

''ஏழை - எளிய மக்களின் நல்வாழ்க்கையைக் குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டு வரும் இந்த அரசு, உடல் ஊனமுற்றோர் மறுவாழ்வுக்காக ஒரு தனித் துறையையே அமைத்து, பல புதிய திட்டங்களைச் செயல்படுத்தி வருவதைத் தமிழக மக்கள் நன்கு அறிவார்கள்.

''உடல் ஊனமுற்றவர்கள் சமுதாயத்தில் ஒதுக்கப்படக்கூடாது என்று இந்த அரசு மிகத் தீவிரம் காட்டி வருகிறது. உடல் ஊனமுற்றோர் உள்ள உறுதியோடு நல்ல வாழ்க்கை வாழவும், சம உரிமைகள் பெற்று அவர்கள் வசதிகளுடன் முன்னேறவும் இந்த ''ஊனமுற்றோர் உலக நாள் விழா''க் கொண்டாட்டங்கள் ஊக்கத்தை அளிக்கும் என்று நம்புகிறேன்.

''இந்தச் சீரிய விழாவில் பங்கு கொள்ளும் அனைத்துச் சகோதர, சகோதரிகளுக்கும் என் இதயம் கனிந்த நல்வாழ்த்துக்கள்!''

## இந்த இதழில்...


சட்டப்பேரவையில் ... 2
வெள்ளத்தால் வீடுகளை இழந்தவர்களுக்கு மாண்புமிகு முதல்வர் உதவி ... 4
திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்: நலத்திட்ட உதவிகள் ... 5
அரசின் அறிவிப்புகள் ஆக்கப் பணிகள் ... 6
முதல்வரின் தனிப்பிரிவில் ரூ.10 இலட்சம் செலவில் கணினி மையம் ... 9
செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம்: நலத்திட்ட உதவிகள் ... 11
சொல்லின் செல்வர் ரா.பி. சேதுப்பிள்ளை ... 13
காது - மூக்கு - தொண்டை மருத்துவம்: டாக்டர் கே.கே. ராமலிங்கம் பதில்கள்... 17
அரும்பொருட்களைப் பாதுகாக்க அரிய பயிற்சி ... 21
குடி மறப்பீர்! (கவிதை) ... 23
விஷ விருட்சம் (சிறுகதை) ... 24
தருமபுரி மாவட்ட மருத்துவமனைகள் ... 27
தேசிய மாணவர் படை ... 31
தமிழ்நாட்டில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் ... 33
தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி ... 37
ஆதிதிராவிடர் நலம் ... 41
மனித வாழ்க்கையில் மரங்கள் ... 45
சென்னை மாவட்டம்: நலத்திட்ட உதவிகள் ... 47
சவூதி செல்லவிருக்கும் தமிழக மருத்துவ நிபுணர்களுக்கு ... 48


அட்டைப்பட விளக்கம்:

முதல் அட்டை:

ரூபாய் பத்து இலட்சம் செலவில் கணினி மையத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் திறந்து வைத்தார் (1.3.'93).

நான்காம் அட்டை:

உலக வன நாளையொட்டி, முதுமலை வனவிலங்குச் சரணாலயம்.


# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2024

பங்குனித் திங்கள் - 19

மலர்:23 இதழ்:19

1-4-1993



# சட்டப்பேரவையில்...

## அரசு மருத்துவ மனைகளுக்கு மருந்து வாங்கத் தனி நிறுவனம்

அரசு மருத்துவ மனைகளுக்கு மருந்துகள் வாங்குவதற்காகத் தனி நிறுவ்ம் (கார்ப்பரேஷன்) அமைக்கப்படும். இந்த நிறுவனம் மூலம் மொத்தமாக அரசு மருத்துவ மனைகளுக்கு மருந்துகள் வாங்கப்படும். இதன் கிளைகள் மாவட்டங்கள் முழுவதும் அமைக்கப்படும். இந்தத் தகவலை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. சு. முத்துசாமி அவர்கள் சட்டப் பேரவையில் அறிவித்தார்.

தேவையான மருந்துகளைத் தேவைப்படும் அளவுக்கு வாங்குவது, அவற்றை அனைத்து மருத்துவ மனைகளுக்கும் சரியான வகையில் விநியோகிப்பது, மருத்துவமனைகளில் பயன்படாமல் தேங்கிக் கிடக்கும் மருந்துகளைத் திரும்பப் பெற்றுக்கொள்வது, மருந்து விநியோகத்தைக் கண்காணிப்பது போன்ற பணிகளை இந்தத் தனி நிறுவனம் மேற்கொள்ளும் என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார் (15.3.93).

## பயணிகளின் வசதிக்காகச் சென்னையில் இணைப்புப் பேருந்துகள்

சென்னையில் நெரிசல் நேரங்களில் பயணிகளின் வசதி கருதி, இணைப்புப் பேருந்துகளை இயக்குவது குறித்து அரசு பரிசீலனை செய்து வருகிறது. மேலும், சென்னையில் அலுவலக நேரங்களில் பேருந்துகளில் நெரிசலைக் குறைக்க கூடுதலாகப் பேருந்துகள் விடப்படும் என்று மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் தெரிவித்தார் (16.3.93).

## தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் அமைப்பு

மண்டல்குழு பரிந்துரைகள் மீதான வழக்குகளில் உச்சநீதிமன்றம் பிறப்பித்த ஆணைக்கிணங்க, 'தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம்' ஒன்றைத் தமிழக அரசு அமைத்துள்ளது. இதற்கான உத்தரவை மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பிறப்பித்துள்ளார்.

இந்த ஆணையத்தின் தலைவராக ஓய்வுபெற்ற நீதிபதி கே. சண்முகம் இருப்பார். இந்த ஆணையத்தில் ஒரு உறுப்பினர்- செயலரும், 7 உறுப்பினர்களும் இருப்பார்கள்.

உறுப்பினர்கள் விவரம் வருமாறு:

திரு. ஆர். செல்லமுத்து, இ.ஆ.ப.,- உறுப்பினர்-செயலர்.
திரு. யு.எஸ். நடராஜன், இ.ஆ.ப., (ஓய்வு) - உறுப்பினர்
திரு. எம். மாணிக்கவேலு, இ.ஆ.ப., (ஓய்வு) - உறுப்பினர்
திரு. சி. முத்துசாமி, இ.ஆ.ப., (ஓய்வு) - உறுப்பினர்
பொருளாதாரப் பேராசிரியர் டாக்டர் சி. முருகதாஸ்-உறுப்பினர்
சமூக இயல் பேராசிரியர் டாக்டர் டி. சுந்தரம் - உறுப்பினர்

**அலுவல் சார்ந்த உறுப்பினர்கள்**

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல இயக்குநர் - உறுப்பினர்

மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்குநர் - உறுப்பினர்.

**ஆய்வு வரம்பு:**

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் அலுவல் ஆய்வு வரம்புகள் பின்வருமாறு:

1. பிற்படுத்தப்பட்டோர் பட்டியல், மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கக் கோரும் கோரிக்கைகள், அப்பட்டியல்களில் கூடுதலாகச் சேர்க்கப்பட்டது அல்லது சேர்க்கப்படாமல் விடுபட்டது குறித்த புகார்கள் ஆகியவற்றைப் பெற்று, பரிசீலித்துப் பரிந்துரைகள் வழங்குதல்.

2. மாநிலத்திலுள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியல்களை மறு ஆய்வு செய்தல்.

மேற்கண்ட தகவல்களை மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலம் மற்றும் மீன்வளத்துறை அமைச்சர் திரு. டி. ஜெயக்குமார் அவர்கள் தெரிவித்தார் (16.3.93).

## காணாமல் போய்த் திரும்பிவந்த மீனவர்களுக்கு முதல்வர் உதவி

நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டத்திலிருந்து கடலில் மீன் பிடிக்கச் சென்று காணாமல் போய் சமீபத்தில் இலங்கையிலிருந்து திரும்பிய 12 மீனவர்களுக்குத் தலா ரூ.3 இலட்சம் செலவில் புதிய மீன் பிடிப் படகுகள், வலைகள் ம்ற்றும் மீன்பிடி சாதனங்கள் வழங்க மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

இந்த மீனவர்கள் இலங்கையிலிருந்து திரும்பியதும் மாண்புமிகு முதல்வர் அவர்களைச் சந்தித்து அவர்களுடைய மீன்பிடி சாதனங்கள் மற்றும் படகுகளை இழந்து விட்டதாக முறையிட்டனர். இவர்களின் மறுவாழ்வுக்காக முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து மேற்கண்ட நிவாரணத்தொகையை வழங்க உத்தரவிடப்பட்டிருப்பதாக, மாண்புமிகு முதல்வர் அவர்கள் சட்டப் பேரவையில் தெரிவித்தார் (18.3.'93).

## தமிழ்நாட்டில் பெண்கள் நலக் கமிஷன்

மத்திய அரசு உத்தரவுக்குப் பின் தமிழ்நாட்டில்தான் முதன்முதலாகப் பெண்கள் நலக் கமிஷன் அமைக்கப்பட்டிருக்கிறது. வரதட்சிணைக் கொடுமைகள் பிரச்சினைக்கு நிரந்தர முற்றுப்புள்ளி வைப்பதற்குத் தான் பெண்களுக்கு என்று தனியாக ஒரு கமிஷன் அமைக்கப்பட்டுள்ளது.

வரதட்சிணைக் கொடுமைகளை விசாரித்து உடனடி நடவடிக்கை எடுக்க, சென்னையில் பெண்கள் காவல் நிலையம் அமைக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து இங்கு ஏராளமான புகார்கள் வருகின்றன. இந்தப் புகார்களின்மீது நல்லவிதமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதனால் மற்ற எல்லா மாவட்டத் தலைநகரங்களிலும் இது போன்ற காவல் நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. மேற்கண்ட தகவலை, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் சட்டப்பேரவையில் தெரிவித்தார் (18.3.'93).

## பேருந்துப் பயணிகளுக்குக் கூடுதல் பாதுகாப்பு

தமிழ்நாட்டில் நெடுந்தூரப் பேருந்துகளில் பயணம் செய்யும் பயணிகளிடம் கொள்ளை அடிப்பதைத் தடுக்க நவீன வசதிகள் செய்யப்படுகின்றன. இதன்படி நெடுந்தூரம் பயணம் செய்யும் பயணிகளுக்கு பாதுகாப்பு அளிப்பதற்கு 'மொபைல் யூனிட்' ஏற்படுத்தப்பட்டு இதில் முன்னாள் இராணுவத்தினர் பயன்படுத்தப்படுவார்கள். இவர்கள் 25 கி.மீ. தூர இடைவெளியில் ஒயர்லெஸ் வசதியுடன் பாதுகாப்புப் பணி மேற்கொள்வர். மேலும் திருவள்ளுவர் பேருந்தில் பயணிகள் ஏறும்போது 'மெட்டல் டிகெக்டர்' மூலம் சோதனை செய்யப்படும். பயணிகளின் இருக்கையின் அருகே எச்சரிக்கை செய்வதற்கு அழைப்புமணி பொருத்த ஏற்பாடு செய்யப்படும்.

—மேற்கண்ட தகவலை மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் தெரிவித்தார் (18.3.'93).

## பணியிலிருக்கும்போது உயிரிழந்த அரசு அலுவலர்களின் வாரிசுதாரர்களுக்கு உடனடியாகப் பணி வழங்க 500 மிகையான பணியிடங்களைத் தோற்றுவிக்க மாண்புமிகு முதல்வர் ஆணை

ஒரு அரசு அலுவலர் பணியில் இருக்கும் போது இறக்க நேரிட்டால், இன்னலுறும் அக் குடும்பத்தில் ஒருவருக்கு அவரது தகுதியின் அடிப்படையில் வேலைவாய்ப்பு வழங்க வேண்டும் என்பது அரசுக் கொள்கையாகும்.

ஆனால், பல அரசுத் துறைகளில் போதிய பணியிடங்கள் காலியின்மையாலும் நிர்வாகத் தாமதங்களினாலும் பணியிலிருக்கும்போது உயிரிழந்த அரசு அலுவலர்களின் வாரிசுதாரர்களுக்கு உடனடியாகப் பணி வழங்க இயலாத நிலை இருப்பதை அறிந்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், அக்குடும்பங்களுக்கு உதவிடும் வகையில் 500 மிகையான பணியிடங்களைத் (Supernumerary Posts) தோற்றுவிக்க உத்தரவிட்டுள்ளார். இந்த மிகையான பணியிடங்களில் நியமிக்கப்படும் அலுவலர்கள் நிரந்தரப் பணிகளில் காலியிடம் ஏற்படும்போது அதில் நிரப்பப் படுவர். இதனால் கருணை அடிப்படையிலான நியமன வாய்ப்புகள் தொடர்ந்து உருவாகிவிடும்.

மேலும், பணியிலிருக்கும்போது இறந்த அரசு அலுவலர்களின் வாரிசுதாரர்களுக்கு, அவர்கள் மனுச் செய்த ஒரு மாதத்திற்குள் வேலைவாய்ப்பு அளிக்க வேண்டும் என்றும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

# அரசின் அறிவிப்புகள் ஆக்கப் பணிகள்!

ஏழை எளிய மக்களால் பெரிதும் பயன்படுத்தப்படும் காப்பிக்கொட்டை, மண்ணெண்ணெய், புளி, மிளகு, கோதுமைப் பொருட்கள், கையினால் தயாரிக்கப்படும் சோப்பு முதலியனவற்றிற்கு வரி குறைக்கப்பட்டுள்ள.







மருந்துப் பொருட்கள், பிளாஸ்டிக் பொருட்கள், அலுமினியப் பாத்திரங்கள் போன்ற அன்றாடம் பயன் படுத்தப்படும் பொருட்களின் மீதான வரி குறைக்கப் பட்டுள்ளது.

புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் மற்றும் அதனோடு இணைந்த திட்டங்களுக்கு ரூ.312 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.






மக்களுக்குப் பாலங்கள் என்னும் புதிய திட்டத்தின் கீழ், ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும் ஒரு பாலம் (ரூ.5 இலட்சத்திற்கு மிகாமல்) கட்டப்படும்.




1.25 இலட்சம் குடும்பங்கள், 1993-94-இல் புதிய வீடுகள் பெற வழிவகை செய்து தரப்படும்.



அறிவொளி இயக்கம் ஏற்கெனவே நீட்டிக்கப்பட்ட 12 மாவட்டங்களோடு மேலும் 10 மாவட்டங்களுக்கு இவ்வாண்டு நீட்டிக்கப்படும்.

ஒரு கிலோ மீட்டர் தொலைவிற்குள் அமைந்த 500 மக்கள் தொகை கொண்ட ஒவ்வொரு குடியிருப்புக்கும் ஒரு தொடக்கப் பள்ளி அமைக்கப்படும்.





கிராமியக் கலைப் பயிற்சி ஆராய்ச்சி மையம், மதுரையில் அமைக்கப்படும்.

புரட்சித்தலைவி ஜெ. ஜெயலலிதா மருத்துவ நலத் திட்டத்தை ஒட்டி, தாய் சேய் நல முகாம்கள் நடத்தும் புதிய திட்டங்களும் தொடங்கப்பட்டு உள்ளன.







அரசுப் பணியாளர்களுக்கு வீட்டு வாடகைப்படி உயர்த்தப்பட்டுள்ளது. அரசுப் பணியாளர் வீடு கட்டக் கடனுதவிக்கான ஒதுக்கீடு ரூ.25 கோடியிலிருந்து ரூ.34.50 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

**TNPSC**

விளம்பர எண். 12/93

தமிழ்நாடு புள்ளியியல் பணியில் கல்வித்துறையின் புள்ளியியல் உதவி இயக்குநரும் உள்ளிட்ட புள்ளியியல் உதவி இயக்குநர் (Assistant Director of Statistics including the Assistant Director of Statistics in the Education Department) பதவியில் ஐந்து காலியிடங்களுக்கு நேரடித் தேர்வின் மூலம் நியமனம் செய்யப்பட விண்ணப்பங்கள் 19.4.1993 அன்று மாலை 5.45 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

**சம்பளம்:** மாதம் ஒன்றுக்கு ரூபாய் 2200-75-2800-100-4000

| | | |
|---|---|---|
| ஆதிதிராவிட வகுப்பினர், பழங்குடி வகுப்பினர் (ஆ.தி.வ./ப.வ.) | : | 1 |
| மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர் (மி.பி.வ./சீ.ம.) | : | 1 |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (பி.வ.) | : | 2 |
| பகிரங்கப் போட்டி | : | 1 |

**குறிப்பு** (1) 6.4.92 நாளிட்ட தேர்வாணையத்தின் அறிவிக்கைக்கிணங்க கல்வித்துறையின் புள்ளியியல் உதவி இயக்குநரும் உள்ளிட்ட புள்ளியியல் உதவி இயக்குநர் பதவிக்கு நியமனம் செய்யப்பட ஏற்கெனவே விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரர்கள், மற்றபடி தகுதியானவர்களாயிருந்து அவர்கள் விரும்பினால் இந்த நியமனத்திற்கும் விண்ணப்பிக்கலாம். முந்தைய நியமனத்தின் முடிவின்படி தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் இந்த நியமனத்திற்கு விண்ணப்பக் கட்டணம் செலுத்தியிருந்தால் அதைத் திரும்பப் பெறவோ அல்லது அவர்களுக்கு அளிக்கப்பட்ட விண்ணப்பக் கட்டணச் சலுகை எண்ணிக்கையிலிருந்து இந்தமுறை விலக்களிக்கவோ கோரி விண்ணப்பிக்கலாம்.

(2) இப்பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளைப் பெற்றிருந்து, குறைந்தபட்ச மதிப்பெண்களைப் பெறுவதன் மூலம் தெரிவுக்குத் தகுதியானவராகக் கருதப்படும் ஆதரவற்ற விதவைகள், அவர்களைவிட அதிக மதிப்பெண்களைப் பெற்றிருப்பவரைக் காட்டிலும் முன்னுரிமை வழங்கப்பட்டுத் தெரிவு செய்யப்படுவார்கள்.

**விளக்கம்:** 'ஆதரவற்ற விதவை' என்பது, வாழ்வதற்குத் தனக்கென்று எந்தவொரு வழியும் இல்லாதவரும், பட்டினியிலிருந்து தன்னைக் காப்பாற்ற எந்தவொரு ஆதரவாளரும் இல்லாதவரும் ஆன விதவையைக் குறிப்பதாகும்.

**வயது:** 1.7.1993 அன்று 30 வயதிற்குக் குறைவாக.

**குறிப்பு:** ஆதிதிராவிட வகுப்பினர்/ பழங்குடி வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கு வயது வரம்பு இல்லை.

(சலுகைகள் பற்றிய மேலும் சில விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.)

**தகுதி:** (4.3.1993 அன்றுள்ளபடி): கீழ்க்காண்பவை அல்லது அவைகளுக்கு இணையானவை:

(i) A degree of M.A., or M.Sc., or a first class degree of B.A. or B.Sc., with Statistics, Mathematics, Economics or Mathematical Economics as the main subject.

and

(ii) Experience in Statistical investigation for a period of not less than three years in the case of persons holding a Master's degree and five years in the case of persons holding a Bachelor's degree.

Note: Regular members in any of the services of the Government of Tamil Nadu may also apply to this recruitment even if a period of five years has elapsed since their first appointment under the Government of Tamil Nadu provided that they posses the qualifications including the age-limit prescribed for appointment to the post.

ஆதரவற்ற விதவைகள், தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர், நாற்பது வயதிற்குக் குறைவாக உள்ள பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட மற்றும் பணியிலிருக்கின்ற தற்காலிக மாநில அரசுப் பணியாளர் போன்றவர்களுக்கு வயது மற்றும்/அல்லது தகுதியிலிருந்து அளிக்கப்படும் சலுகைகள் தேர்வாணையத்தின் 'பணி வேட்பாளர்களுக்கான விதிமுறைகளில்' தரப்பட்டுள்ளன. (ஆதிதிராவிட வகுப்பினர்/பழங்குடி வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர் போன்றவர்களுக்கு அளிக்கப்படும் விண்ணப்பக் கட்டணச் சலுகைகளும் தேர்வாணையத்தின் 'பணி வேட்பாளர்களுக்கான விதிமுறைகளில்' தரப்பட்டுள்ளன. (பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு அளிக்கப்படும் சலுகைகள் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினருக்கும் பொருந்தும்).

விண்ணப்பப் படிவமும், நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு எழுத்து மூலம் கோரிப் பெற்றுக் கொள்ளலாம். கோரிக்கைகள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ, பதவியின் பெயர் மற்றும் விளம்பர எண் ஆகியவற்றைக் குறிப்பிட்டு எழுதப்பட்டு - செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு வழங்கக்கூடிய 1.3.1993 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10), சென்னை அண்ணா சாலை தபால் அலுவலகத்தில் செலுத்தத்தக்க கோடிட்ட அஞ்சல் ஆணை அல்லது பாரத ஸ்டேட் வங்கியில் (State Bank of India) ஏதாவதொரு கிளையில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையச் செயலாளருக்கு வழங்கக்கூடிய 1.3.1993 அன்றோ அல்லது அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட, சென்னை-600 006, ஆயிரம் விளக்கு பாரத ஸ்டேட் வங்கியில், செலுத்தத்தக்க பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10) 'கேட்புக் காசோலை' (Demand Draft)-யுடன் சுய விலாசம் எழுதிய உறையுடனும் (26 x 12 செ.மீ.) அனுப்ப வேண்டும். கோரிக்கைகள் பிற மொழியில் இருக்குமாயின் அத்துடன் ஆங்கில மொழிபெயர்ப்பும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டா.

DIPR/435/MS/93



# முதல்வரின் தனிப்பிரிவில் ரூ.10 இலட்சம் செலவில் கணினி மையம்!

ஏழை எளிய மக்களின் குறைகளை நீக்கி அவர்களது நல்வாழ்விற்காகப் பணியாற்றுவதையே முக்கியக் குறிக்கோளாகக் கொண்டுள்ள மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், பொது மக்களிடமிருந்து நாள்தோறும் நேரிலும், பயணங்களின் போது பெற்றிடும் மனுக்கள் மற்றும் தபால் மூலம் பெற்றிடும் ஆயிரக்கணக்கான மனுக்களை உடனுக்குடன் பரிசீலனை செய்து, உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்ற முதல்வரின் ஆணைக்கிணங்க, முதல்வரின் தனிப்பிரிவு அன்றாடம் பெறும் ஆயிரக்கணக்கான மனுக்களை உரிய துறைகளுக்கு அனுப்பி, நடவடிக்கை எடுக்கச் செய்து உரிய மனுதாரருக்கு நடவடிக்கை குறித்துத் தெரிவித்து வருகிறது.

கடந்த காலங்களில், முதல்வரின் தனிப்பிரிவிற்கு வரும் மனுக்கள் சம்பந்தப்பட்ட துறைகளுக்கு மட்டுமே அனுப்பப்பட்டு வந்தன. மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பதவியேற்றவுடன் உடனடியாக உத்தரவிட்டதன் பேரில், இப்பிரிவிற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு, மனுக்கள் மீது எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்குப் பதில் பெறப்பட்டு, அவர்களது கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டு வரு

மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தலைமைச் செயலகத்தில் முதலமைச்சரின் தனிப்பிரிவில் கணினி மையத்தினைத் (Computer Center) திறந்து வைத்தார் (1.3.93).



# வெள்ளத்தால் வீடுகளை இழந்த 10,633 நபர்களுக்கு மாண்புமிகு முதல்வர் உதவி!

தமிழ்நாட்டில் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் மத்தியில் தாக்கிய பெரும்புயலாலும் அதனையொட்டி ஏற்பட்ட வெள்ளத்தாலும் மிகுந்த சேதம் ஏற்பட்டது. இந்தப் புயலால் கன்னியாகுமரி மாவட்டம் பெருத்த பாதிப்புக்குள்ளானது. கன்னியாகுமரி மாவட்டத்தில் புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் உடனடியாகப் பார்வையிட்டபோது, வீடுகளை முற்றிலும் இழந்தவர்களும், வீடுகள் இடிந்து மிகுந்த சேதம் ஏற்பட்டவர்களும் நிவாரண உதவி வழங்குமாறு மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் மனுக்கள் கொடுத்தனர்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்ட பிறகு மாண்புமிகு முதல்வர் அவர்கள் மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களுடன் கடந்த டிசம்பர் மாதம் 1-ஆம் தேதி அன்று சென்னையில் இந்தச் சேதங்கள் பற்றி நடத்திய விவாதத்தின் அடிப்படையில், தமிழகத்தில் முற்றிலும் வீடுகளை இழந்தவர்கள் மற்றும் மிகுந்த சேதத்திற்கு ஆளானவர்களின் வீடுகளைப் புதுப்பிப்பதற்காக நிவாரணம் வழங்குவதற்கு ரூ.383 கோடி திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டன. இதில் ரூ.152 கோடியினை மத்திய அரசின் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்தின் கடனுதவியும், மீதமுள்ள ரூ.231 கோடியினை மானியத் தொகையாகக் கருதி மத்திய மற்றும் மாநில அரசுகள் சரிபாதியாக ஏற்றுக்கொள்ளலாமெனவும் கேட்டுக்கொள்ளப்பட்டது. இதுவரை மாநில அரசால் கோரப்பட்ட இந்த நிவாரணத் தொகையை மத்திய அரசு வழங்கவில்லை.

வெள்ளத்தால் வீடுகள் சேதமடையப்பெற்ற கன்னியாகுமரி மாவட்ட மக்கள் மீண்டும் தங்களது வீடுகளைச் சீரமைப்பதற்காக நிவாரண உதவி கோரிப் பல மனுக்களை மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களிடம் கொடுத்துள்ளனர். அம்மனுக்களைக் கருணையுடனும், பரிவுடனும் பரிசீலித்த மாண்புமிகு முதல்வர் அவர்கள், மத்திய அரச தமிழக அரசின் கோரிக்கையை ஏற்காத நிலையிலும், பாதிக்கப்பட்ட கன்னியாகுமரி மாவட்ட மக்களின் நிலைமையைக் கருத்தில்கொண்டு மாவட்டத்தில் புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் கீழ்க்காணும் ஆணைகளை பிறப்பித்துள்ளார்:-

1. நல்ல நிலையிலிருந்த மங்களூர் ஓடுகள் போடப்பட்ட வீடுகள் வெள்ளத்தால் முற்றிலும் அடித்துச் செல்லப்பட்டிருந்தாலோ அல்லது முழுதும் பாதிக்கப்பட்ட நிலையில் இருந்தாலோ மீண்டும் வீடுகள் கட்டிக்கொள்ள ரூ.5,000 நிதி உதவி வழங்கப்படும்.

2. நல்ல நிலையிலிருந்த கான்கிரீட் தளமுள்ள வீடுகள் வெள்ளத்தால் முற்றிலும் அடித்துச் செல்லப்பட்டிருந்தாலோ அல்லது முழுதும் இடிந்துவிட்ட நிலையில் இருந்தாலோ மீண்டும் வீடுகள் கட்டிக்கொள்ள ரூ.10,000 வழங்கப்படும்.

இந்த நிவாரண உதவிகள் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவரால் இரண்டு தவணைகளாக வழங்கப்படும். இந்த உதவித்தொகையினை வருவாய்த்துறை அலுவலர்கள் வழங்குவார்கள்.

வருவாய்த்துறையினைச் சேர்ந்த வட்டாட்சியர் பதவிக்குக் குறையாத கள அலுவலர்களோ அல்லது ஒன்றியப் பொறியாளர்களோ முதல் தவணையாக வழங்கப்பட்ட தொகை முழுவதும் பயன்படுத்தப்பட்டுள்ளதா என்பதை ஆய்வு செய்த பின்னர், இரண்டாவது தவணை உதவித் தொகையை வழங்குவார்கள். இரண்டாவது தவணைத்தொகை வழங்கப்பட்ட இரண்டு மாதக் காலத்திற்குப் பின்னர், கள அலுவலர்கள் சம்பந்தப்பட்ட பகுதிகளை ஆய்வு செய்து வழங்கப்பட்ட நிவாரண உதவி முழுவதும் பயன்படுத்தப்பட்டுள்ளது குறித்த நிறைவுச் சான்றிதழ் (Completion Certificate) அளிப்பார்கள்.

கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த 10,653 பேர் இந்த உதவியினைப் பெறுவர். இதற்கு 6 கோடி ரூபாய் செலவாகும்.

இத்திட்டம் வருவாய்த்துறையினரால் வருவாய் நிர்வாக ஆணையாளர் மூலமாகக் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவரால் நடைமுறைப் படுத்தப்படும்.



# திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்:

## 10,007 பயனாளிகளுக்கு மாண்புமிகு முதல்வர் உதவி



மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்திலிருந்து மனு கொடுத்திருந்த ஆயிரக்கணக்கான பேர்களில் தகுதியானவர்கள் 10,007 நபர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு 11 கோடியே 12 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை 23.3.'93 அன்று தலைமைச் செயலகத்தில் வழங்கினார்கள்.

ஊரக வளர்ச்சித்துறை மூலமாக 2,050 பேர்களுக்கு 2 கோடியே 67 இலட்சத்து 11 ஆயிரம் ரூபாய் நிதியுதவியும், திருநெல்வேலி மத்தியக் கூட்டுறவு வங்கி மூலம் விவசாயக் கடனாகவும், தொழில் தொடங்கவும் 1,469 பேர்களுக்கு ரூபாய் 2 கோடியே 11 இலட்சத்து 82 ஆயிரம் நிதியுதவியும், பால்வள ஒன்றியம் மூலமாக 1,008 பேர்களுக்கு ரூபாய் 1 கோடியே 6 இலட்சத்து 16 ஆயிரம் கடனுதவியும், தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) மூலமாக 42 பேர்களுக்கு ரூபாய் 90 இலட்சத்து 59 ஆயிரம் கடனுதவியும், நகராட்சிகள் மூலம் 1,606 நபர்களுக்கு ரூபாய் 1 கோடியே 5 இலட்சத்து 21 ஆயிரம் கடனுதவியும், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் வாயிலாக 30 பேர்களுக்கு ரூபாய் 78 இலட்சத்து 64 ஆயிரம் கடனுதவியும், கூட்டுறவு நிலவள வங்கிகள் மூலம் 46 பேர்களுக்கு ரூபாய் 50 இலட்சத்து 50 ஆயிரம் கடனுதவியும், கூட்டுறவு நகர்ப்புற வங்கிகள் மூலம் 209 நபர்களுக்கு ரூபாய் 38 இலட்சத்து 25 ஆயிரம் கடனுதவியும், வீட்டு வசதித்துறை வாயிலாக 409 பேர்களுக்கு ரூபாய் 34 இலட்சத்து 76 ஆயிரம் கடனுதவியும், வருவாய்த் துறை மூலமாக 1,125 பேர்களுக்கு ரூபாய் 24 இலட்சத்து 53 ஆயிரம் மதிப்பீட்டில் பல்வேறு உதவிகளும், வேளாண்துறை மூலமாக 70 பேர்களுக்கு ரூபாய் 20 இலட்சத்து 14 ஆயிரம் நிதியுதவியும், வனத்துறை வாயிலாக 60 பேர்களுக்கு ரூபாய் 45 இலட்சத்து 46 ஆயிரம் மானியமாகவும், சமூக நலத்துறை மூலமாக 200 பேர்களுக்கு ரூபாய் 7 இலட்சத்து 75 ஆயிரம் மானியமாகவும், முன்னாள் படைவீரர் நலத்துறையின் மூலம் 52 நபர்களுக்கு ரூ.3,06,000-மும், ஆதிதிராவிடர் நலத்துறையின் மூலம் 880 பேர்களுக்கு ரூபாய் 6 இலட்சத்து 87 ஆயிரம் மானியமாகவும், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை வாயிலாக 250 பேர்களுக்கு ரூபாய் 1 இலட்சத்து 37 ஆயிரம் மானியமாகவும், கால்நடைப் பராமரிப்புத்துறை வாயிலாக 40 பேர்களுக்கு ரூபாய் 3 இலட்சம் நிதியுதவியும், தமிழ்நாடு கதர்கிராமத்தொழில் வாரியம் மூலம் 22 பேர்களுக்கு ரூபாய் 3 இலட்சத்து 93 ஆயிரம் நிதியுதவியும், பட்டு வளர்ச்சித்துறை மூலமாக 54 பேர்களுக்கு ரூபாய் 2 இலட்சத்து 98 ஆயிரம் நிதியுதவியும், மாவட்டத் தொழில் மையம் வாயிலாக 22 பேர்களுக்கு ரூபாய் 9 இலட்சத்து 71 ஆயிரம் மானியமாகவும், சிறுசேமிப்புத்துறை மூலமாக 352 பேர்களுக்கு ரூபாய் 3 இலட்சத்து 20 ஆயிரம் மானிய உதவியும், பேரூராட்சிகள் மூலமாக 7 பேர்களுக்கு ரூபாய் 18 ஆயிரம் மதிப்பீட்டில் நிவாரண உதவிகளும், குடும்பநலத்துறை மூலமாக 4 பெண்களுக்குக் குடும்ப நல அறுவைச் சிகிச்சைக்கான பரிசுத் திட்டத்தின்கீழ் ரூபாய் 8 ஆயிரமும் வழங்கப்பட்டது.

இதுவரை மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் மாவட்ட அளவில் வழங்கிய நலத்திட்ட உதவிகளில் திருநெல்வேலி மாவட்டம் ரூ.11 கோடிக்கு மேலாக நலத்திட்ட உதவிகளை வழங்கி முதலிடம் வகிக்கிறது.

இதுதவிர பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 20 பேர்களுக்கு இருதய அறுவை சிகிச்சைக்கென ரூ.3 இலட்சத்து 40 ஆயிரத்திற்கான நிதி உதவியினை மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் வழங்கினார்.

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஆர்.வேலு,இ.ஆ.ப., அவர்கள் இதற்கான ஏற்பாடுகளைச் செய் திருந்தார்.

கின்றது.

மாண்புமிகு முதலமைச்சரின் தனிப்பிரிவில் பெறப்படும் மனுக்கள் உடனுக்குடன் கணிப்பொறியில் மாவட்ட வாரியாகப் பதிவு செய்யப் படுகிறது. மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் மற்றும் துறைகளுக்கும் அனுப்பப்பட்ட மனுக்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதையும், கணிப்பொறியில் அவ்வப்போது பதிவு செய்து, மனுக்கள் மீது எடுத்த நடவடிக்கைகள் உடனுக்குடன் அறியப்படுகிறது. இப்போது மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களால் தொடங்கப்பட்ட கணிப்பொறி மையத்தால் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் ஆயிரக்கணக்கான மனுக்கள் மீது உடனடி துரித நடவடிக்கை எடுக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

மாவட்டங்களில் பெறப்படும் அறிக்கைகள் தலைமைச் செயலக முதல்வர் தனிப்பிரிவில் அமைக்கப்பட்டுள்ள கணிப்பொறி மையத்தில் ஒருங்கிணைக்கப்படுகிறது. இதனால் அனைத்து மாவட்டங்களிலும் மனுக்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை உடனுக்குடன் அறிந்து எஞ்சிய மனுக்கள் மீது தீவிர நடவடிக்கை மேற்கொள்ள ஏதுவாகியுள்ளது.

மாண்புமிகு முதல்வரின் தனிப்பிரிவில் அமைக்கப்பட்டுள்ள பொதுமக்கள் குறைதீர்க்கும் தகவல் அமைப்பில் ஓய்வூதியம், நிதியுதவி, வேலை வாய்ப்பு மற்றும் பணி விவரம் மற்றும் நில விவரங்கள், சமூக அநீதி புகார்கள், அடிப்படை வசதிகள் போன்ற 16 பல்வேறு தலைப்புகளில் மனுக்கள் பிரிக்கப்பட்டுப் பதிவு செய்யப்படுகிறது. மேலும், இப்பிரிவில் பின்வரும் முக்கிய ஆறு அம்சங்கள் கணிப்பொறியில்' பதிவு செய்யப்படுகின்றன.

1. மனுவாரியான விவரங்கள்.
2. எத்தரப்பு மக்களிடமிருந்து பெறப்பட்டது என்ற விவரம்
3. குறைகள் பற்றிய விவரம்.
4. சம்பந்தப்பட்ட துறைகள் நடவடிக்கை எடுத்த விவரம்.
5. உடனடி நடவடிக்கைக்கான மனுக்கள் விவரம்.
6. மற்றும் பல்விதமான அறிக்கைகள்.

மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் நேரில் கொடுக்கப்பட்ட 25,941 மனுக்களில் 20,196 மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுத் தீர்வு காணப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. 5,713 மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களிடத்திலும் நேரிலும் அலுவலகத்திலும் கொடுக்கப்பட்டு வரும் மனுக்களின் மீது உடன் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதற்காக, ரூ.10 இலட்சம் செலவில் தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு முதல்வர் தனிப்பிரிவில் கணினி மையம் (Computer Center) ஏற்படுத்தியுள்ளார்கள்.





## செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம்:

# 438 மனுதாரர்களுக்கு 3.75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள் முதல்வர் வழங்கினார்.

**மா**ண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டத்திலிருந்து மனு கொடுத்திருந்த ஆயிரக்கணக்கான பேர்களில் தகுதியானவர்கள் 438 நபர்களைத் தேர்ந்தெடுத்து ரூ.3.75 கோடி மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை அன்று தலைமைச் செயலகத்தில் வழங்கினார்.

சமூகநலத்துறையின் கீழ், புரட்சித் தலைவி பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், 7 பெண்களுக்கு ரூ.14 ஆயிரம் நிதியுதவியும், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டத்தின் கீழ் 45 பெண்களுக்கு ரூ.2.250 இலட்சம் நிதியுதவியும், குடும்ப விபத்து நிவாரண நிதியுதவி, பார்வையற்றோர் திருமண நிதியுதவி, அரசு ஊழியர் குடும்பநல உதவி, ஆதிதிராவிடர் நலத்திட்டம், தாட்கோ மூலம் ஆதிதிராவிடர்களுக்கு உதவிகள் வழங்கும் திட்டங்களின் கீழ் 41 பேர்களுக்கு ரூ.3.990 இலட்சம் மதிப்பீட்டில் உதவிகள் வழங்கப்பட்டன.

முதியோர் உதவித்தொகை 2 பேர்களுக்கு மாதம் தலா ரூ.75 வீதமும், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 246 பேர்களுக்கு ரூ.17.176 இலட்சமும், மாவட்ட தொழில் மைய உதவிகள் மூலம் 16 பேர்களுக்கு ரூ.161.720 இலட்சம் மதிப்பீட்டில் நிதியுதவிகளும் வழங்கப்பட்டன.

காஞ்சிபுரம் மத்தியக் கூட்டுறவு வங்கி தொழிற் கடன் உதவி 3 பேர்களுக்கு ரூ.18.30 இலட்சமும், கதர் மற்றும் கிராமத் தொழில் வாரிய நிதி உதவி 7 பேர்களுக்கு ரூ.38 ஆயிரமும், பிற்படுத்தப்

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், தலைமைச் செயலகத்தில், செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்ட மனுதாரர்களுக்கு பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார் (1.3.93).





மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 24 பேர்களுக்கு இருதய அறுவைச் சிகிச்சைக்காக ரூ.3,75,000-க்கான (ரூபாய் மூன்று இலட்சத்து எழுபத்தி ஐந்தாயிரம் மட்டும்) நிதியுதவியினை தலைமைச் செயலகத்தில் வழங்கினார் (1.3.93).

பட்டோர் நலத்துறை பேரறிஞர் அண்ணா நினைவு ஊக்கப் பரிசு 3 பேர்களுக்கு ரூ.6 ஆயிரமும் வழங்கப்பட்டது.

முன்னாள் படைவீரர் நலத்துறையின் கீழ் 4 பேருக்கு ரூ.10 ஆயிரமும், நகராட்சி நிர்வாகத்தின் கீழ் 3 பேருக்கு ரூ.0.191 இலட்சமும், கூட்டுறவுத் துறையில் வீடு கட்ட கடன் வழங்கும் திட்டத்தின் கீழ் 15 பேர்களுக்கு ரூ.1,305 இலட்சமும், கைத்தறி நெசவாளர் வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் 5 பேர்களுக்கு ரூ.74 ஆயிரமும் உதவிகள் வழங்கப்பட்டன.

மேலும், விவசாயத் துறையின் மூலம் 5 பேர்களுக்கு ரூ.0.145 இலட்சம் மதிப்பில் விவசாய தொழில் கருவிகளும், ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் 9 பேர்களுக்கு ரூ.0.082 இலட்சம் மதிப்பில் பொருட்களாகவும், சமூக நலத்துறையின் கீழ் 9 பேர்களுக்கு ரூ.0.078 இலட்சம் மதிப்பில் பொருட்களாகவும், பட்டு வளர்ச்சித் துறையின் கீழ் 10 பேர்களுக்கு ரூ.0.730 இலட்சம் மதிப்பில் பொருட்களாகவும், மீன் துறையின் கீழ் 4 பேர்களுக்கு ரூ.0.560 இலட்சம் மதிப்பில் பொருட்களாகவும் உதவிகள் வழங்கப்பட்டன. இதர உதவிகள் மூலம் 2 பேர்களுக்கு ரூ.67•925 இலட்சம் மதிப்பில் உதவிகளும் வழங்கப்பட்டன.

இது தவிர, பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 24 பேர்களுக்கு இருதய அறுவைச் சிகிச்சைக்காக ரூ.3,75,000 (ரூபாய் மூன்று இலட்சத்து எழுபத்தைந்தாயிரம் மட்டும்) நிதியுதவியினையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார்.

செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டத்தைச் சேர்ந்த வலசரவாக்கத்தில் வசிக்கும் ஓய்வு பெற்ற அரசு அலுவலர் திரு. சுப்பிரமணியம் என்பவர், தனது நான்கு பெண்களும் (வயது முறையே 42, 38, 36, 32) Spino Cerebellar degeneration என்னும் மூளைப் பாதிப்பால் உடல் உறுப்புகள் இயங்காத கொடிய வியாதிநோயால் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்று கூறி, மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் முறையிட்டார். தனக்குச் சென்னையில் வசிக்க இடம் இல்லாமல் மிகவும் சிரமப் படுவதாகக் கூறி, தனக்குக் குடியிருக்க இடம் வழங்க வேண்டும் என்றும் வேண்டிக் கொண்டார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள், மனுதாரரது கோரிக்கையைக் கருணையுள்ளத்துடன் ஏற்று திரு. சுப்பிரமணியம் குடும்பத்தாருக்குச் சென்னை, ஜாபர் கான் பேட்டையில் ஆர்ட்டிலான் பிளாட் வகையைச் சேர்ந்த ரூ.62,000 மதிப்புள்ள குடியிருப்பு மனையை திரு. சுப்பிரமணியத்திடம் 1.3.93 அன்று இலவசமாக வழங்கினார்.





# சொல்லின் செல்வர் ரா.பி.சேதுப்பிள்ளை



- மா.லோ. தாமோதரம்

"கற்றாரைக் காண்பதுவும் நன்று; கற்றார் சொற் கேட்பதுவும் நன்று; கற்றோரோடு இணங்கி இருப்பதுவும் நன்று" என்பர் நற்றமிழ் வல்லார். இக்கூற்றுக்குப் பொருத்தமாகவும் பொருளாகவும் சேர்ந்து ஒரு பிள்ளை பிறந்தது. ஆம்! திக்கெல்லாம் தான் பிறந்த 'ஊரும் பேரும்' விளங்க, தமிழகக் 'கடற்கரையிலே' உலாவி, 'தமிழின்பம்' பெற்று, 'தமிழ் விருந்து' படைக்க ஒரு பிள்ளை பிறந்தது.

'கம்பரும் இளங்கோவும் சேர்ந்து ஒன்றானவரோ' என்னும்படி உரையாடியது துள்ளும் நகைச் சுவையால் உள்ளம் யாவையும் அள்ளிக் கொண்டது. அந்தப் பிள்ளைதான், பொருநை பாயும் திக்கெலாம் புகழும் திருநெல்வேலிச் சீமையிலுள்ள இராசவல்லிபுரத்திலே சைவவேளாளர் குலத்திலே பிறவிப் பெருமாள் பிள்ளை என்பவருக்கும் சொர்ணத்தம்மையாருக்கும் 1896-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் இரண்டாம் நாள் பிறந்த சொல்லின் செல்வர் ரா.பி. சேதுப்பிள்ளை ஆவார்.

எல்லோரையும் போலவே ரா.பி.சே. தம்மூர் திண்ணைப் பள்ளிக் கூடத்திலே எழுதக் கற்று, பாளையங்கோட்டை அர்ச் சேவியர் உயர்நிலைப் பள்ளியில் பாடம் படித்து, திருநெல்வேலி இந்துக் கல்லூரியிலும் சென்னைப் பச்சையப்பன் கல்லூரியிலும் கல்வி கற்றுத் தேறியவர்தான் என்றாலும், தனிப்பட்ட ஒழுக்கக் கட்டுப்பாடுகளினால் தனிவழி ரா.பி.சே. தனிச் சிறப்புப் பெற்றார் என்பதை இக்கால மாணவர்கள் ஆழ்ந்து நோக்கி அறிய வேண்டும்.

ரா.பி.சே. அவர்கள் மாணவர் பருவத்தில் தம்முடைய காரியத்திலேயே கண்ணுங் கருத்துமாக இருப்பார். கல்வி கற்கும்பொழுது மற்றவர்களோடு வெற்றுரையாடார். வீண் பொழுது போக்கார். தனக்குத் தமிழ்க் கல்வியைக் கற்றுத் தந்த தமிழாசிரியர்கள் சுப்பிரமணிய பிள்ளை, சிவராமப் பிள்ளை அவர்களிடமிருந்து செந்தமிழ் உணர்வையும் சேர்த்து வளர்த்துக் கொண்டார்.

அதனால் இளமையிலேயே கல்லூரி பேச்சுப் போட்டியில் முதற் பரிசும், ஆங்கில மொழியில் தேறி, பரிசினையும் பெற்று அறிஞர் பெருமக்களால் பெரிதும் பாராட்டப் பெற்றார்.

இவ்வருடைய சொல்வன்மையும் தமிழறிவும், ஆசிரியராக இருந்து கொண்டே சட்டக்கலை கற்றுத் தேறி, பிறகு வழக்கறிஞராகத் தொழில்புரியவும் துணைபுரிந்தன.

வழக்கறிஞராக எட்டு ஆண்டுகள் தொழில் புரிந்தார். அந்தக் காலத்தில் நேர்மையான முறையில் அத் தொழிலை மேற்கொண்டு தனக்கும் பதவிக்கும் சிறப்புச் சேர்த்தார்.

வழக்கறிஞராக இருந்த பொழுதே நெல்லை நகர சபையின் துணைத் தலைவராகவும், மாவட்டக் கல்விக் கழக உறுப்பினராகவும், சென்னைப் பல்கலைக் கழகச் செனட் உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ரா.பி.சே. அவர்களுக்கு அகவை இருபத்து மூன்று நிரம்பியபொழுது திருமணம் நடைபெற்றது. வாழ்க்கைத் துணைவியாக அமைந்த சானகி அம்மையார் அன்னாரின் புகழுக்கும் துணைவியாகவே விளங்கினார். அதனால்தான், அவரின் சீரிய உள்ளம் ஈடு இணையற்ற அருந்தவம் ஆசிரியத் தொழிலையே நாடியது. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஆறு ஆண்டுகள் விரிவுரையாளராக அரும்பணி ஆற்றினார்.

1935-ஆம் ஆண்டில் சென்னைப் பல்கலைக் கழகத்தில் முதல் தமிழ்ப் பேராசிரியராகப் பணிபுரியத் தொடங்கினார். இருபத்தைந்து ஆண்டுகள் செவ்வனே இப்பணி செய்தார்.

புதுமை விருப்பும் பழமைப் பற்றும் ஒருங்கே கொண்டிருந்த பேராசிரியர் தம் பெயருக்கு ஏற்ப அவ்விரண்டையும் பாலமிட்டு இணைப்பதில் அனைவரும் மதிக்கத் தக்க வெற்றியே பெற்றார்.

இவருடைய மேடைப் பேச்சுக்கள் எதுகை மோனையமைந்து கேட்பதற்கு இனிமையாக இருந்தபடியால், இவருடைய இலக்கிய உரையைக் கேட்கத் தமிழ் நெஞ்சங்கள் தஞ்சமடைந்தன. அவருடைய பேச்சு அளந்து தெளிந்து குளிர்ந்த அருவிப் பேச்சு. அவர் எப்

**The Tamil Nadu State Apex Co-Operative Bank Ltd.,**

TNSC BANK

**233, N.S.C. Bose Road, Madras-600 001.**

**Rate of Interest on Deposits (Effective from 9.10.1992)**

| Sl.No. | Type of Deposit | Rate of Interest per annum |
|---|---|---|
| 1. | Savings Bank Accounts | 6.25% w.e.f. 24.4.92 |
| 2. | Fixed Deposits : | |
| | For 46 DAYS and above but upto 270 days | 12.25% |
| | For 271 DAYS and above but upto 364 days | 12.00% |
| | For 1 YEAR and above | 12.25% |

**Interest on Fixed Deposit for 1 year and above will be paid Quarterly**

- NRO & NRE Accounts Facilities are available in 6 designated Branches.
- Interest rates are subject to RBI directives from time to time.

THE BANK AT YOUR SERVICE




மருத்துவப் பகுதி:

# காது மூக்கு தொண்டை மருத்துவம்




டாக்டர் கே.கே. இராமலிங்கம் பதில்கள்

'தமிழரசு' இதழில் நாம் தொடங்கும் புதிய மருத்துவ வினா- விடைப் பகுதி இது! ஒவ்வொரு நோய் பற்றியும் அந்தந்தத் துறையில் நிபுணத்துவம் பெற்ற மருத்துவர்கள் தொடர்ந்து பதிலளிப்பார்கள்; வாசகர்கள் வினாத் தொடுக்கலாம்.

இதோ, அந்த வகையில் காது-மூக்கு-தொண்டை மருத்துவம் இடம் பெறுகிறது. நம் வாசகர்களின் வினாக்களுக்கு அந்தத் துறையில் வல்லவரான டாக்டர் கே.கே. இராமலிங்கம் அவர்கள் அளித்த பதில்களை இந்த இதழில் நன்றியோடு வெளியிட்டுள்ளோம், படித்துப் பயன் பெறுங்கள்:

**யு. ஜெயராமன்**
**அரவக்குறிச்சி**

**• என் காதின் உள்ளே ஓட்டை இருந்தது; வலி மிகுந்த காரணத்தால் அதற்காகப் பத்தாண்டுகளுக்கு முன்னால் தகுந்த டாக்டரிடம் காட்டி மருந்து மாத்திரை சாப்பிட்டேன் - குணமாகிவிட்டது; இப்போது மறுபடியும் வலிக்கின்றது; என்ன செய்யலாம் டாக்டர்?**

''பத்தாண்டுகளுக்கு முன்னால், காதினுள் இருந்த ஓட்டையால் ஏற்பட்ட துன்பத்திற்காக டாக்டரிடம் காட்டி குணம் பெற்றதாகச் சொல்லுகிறீர்கள்; இத்தனையாண்டுக் காலத்தில் உங்கள் உடலுறுப்புகளிலெல்லாம் வளர்ச்சி மாறுபாடுகள் அதிகம் ஏற்பட்டிருக்குமே? ஆகையால், மீண்டும் அத்தகைய காது வலி ஏன் வருகிறது என்று மறுபடியும் பரிசோதித்துப் பார்த்தால்தான் இதற்குச் சரியான பதில் உங்களுக்குக் கிடைக்கும்.''

**ஆ. திருப்பதி**
**கரம்பக்குடி**

**• அடிக்கடி எனக்குக் காது அடைத்துக் கொள்கிறது; உள்புறம் புண்ணாகிவிடுகிறது; வெயில் காலத்தில்தான் பெரும்பாலும் இப்படி ஆகிவிடுகிறது; இதற்கு என்ன செய்வது?**

''உங்கள் செவித்தொல்லைக்கு அழற்சியே (infection) காரணமாக இருக்கக் கூடும் என நினைக்கிறேன். நீங்கள் அதைச் சரியான காது மருத்துவ நிபுணரிடம் காட்டி, அவர்கள் ஆலோசனைப்படி தக்க சிகிச்சை பெற்றுக்கொள்வது நல்லது.''

**ஆர். ஜெயசாலி**
**கோபி**

**• எனது தொண்டையில் நான்கைந்து புண்கள் இருக்கிறது; ஏன் அப்படி ஏற்படுகிறது, என்ன செய்தால் சரியாகும் என்று தெரிவிக்கவும்?**



பொருளை எடுத்து விளக்கினாலும் அது கேட்போரின் உள்ளத்தில் ஆழமாகப் பதியும். நினைவில் சொல்லோவியமாகத் திகழும்.

தமிழே இன்பம், இன்பமே தமிழ். பேசுவதைப் போலவே இனிமையாகவும் எழுத வல்லவர்.

இக்கால மாணவர்களே, நீங்கள் மேடைப் பேச்சில் வல்லுநராக வேண்டுமா? ரா.பி.சே. தமிழ் நூல்களைப் படியுங்கள். கட்டுரைகள் எப்படி அமைய வேண்டும் என்று தெரிய வேண்டுமா? தேடுங்கள் ரா.பி.சே.-வின் தமிழ் நூல்களை! இவர் எழுதிய இருபத்தைந்து தமிழ் நூல்களும் உம் வெற்றிக்கு வழி காட்டும்.

'தமிழின்பம்' சாகித்தியக் கழகப் பரிசையும் 'ஊரும் பேரும்' தமிழக அரசின் பரிசையும் பெற்றுள்ளன. இதில் 'ஊரும் பேரும்' என்கிற நூலும், மற்றும் 'சொற்களும், அவற்றின் உட் கருத்தும்', 'செந்தமிழும் கொடுந் தமிழும்' என்கிற நூல்களும் ஆராய்ச்சி நலம் மிக்கவை.

இவர் எம்மதமும் சம்மதமாகக் கொண்ட பெருந்தகையாளர். இவருடைய நூல்களில் கிறிஸ்துவப் பின்னணி கொண்ட, 'கால்டுவெல் ஐயர் சரிதம்', 'கிறிஸ்துவத் தமிழ்த் தொண்டர்கள்' என்னும் இரண்டு வரலாற்று நூல்களும் அடங்கும்.

எழுத்தறிவிலும் சொல்லிலும் எப்படி தமிழ் இன்பத்தை வாரி வாரி வழங்கினாரோ அப்படியே செயலிலும் இவர் 'பொருளை' வாரி வாரி வழங்கி தமிழ்ப் பயிரை வளர்த்தார்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கும், சென்னைப் பல்கலைக் கழகத்திற்கும் ரூ.25,000 வழங்கித் தம் அன்னையார் சொர்ணம்மாள் பெயரால் இலக்கியச் சொற்பொழிவு அறக் கட்டளைகள் நிறுவினார். தாம் வாழ்ந்த ஊரில் ஒரு பிரசவ மருத்துவமனையையும் தம் தாயாரின் பெயரில் நிறுவினார்.

நாம், நன்கு பேசவும் ஆழமாக எழுதவும் சொல்லின் செல்வர் ரா.பி. சேதுப்பிள்ளை அவர்களின் நூல்களை - தமிழ் நூல்களைப் பயில வேண்டும். அதிலும் 'செந்தமிழுக்குச் 'சேதுப்பிள்ளை' என்கிற பட்டத்தை ரா.பி.சே.-க்குத் தந்த தவத்திரு சுத்தானந்த பாரதியார் முன்னுரை வழங்கிய 'தமிழின்பம்' நூல்களையும், தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்கள் முகவுரை அருளிய 'தமிழகம் - ஊரும் பேரும்' என்கிற முதல் தமிழ் ஊர்- பேர்- ஆய்வு நூலையும் நாம் கண்டிப்பாகத் தேர்ந்தெடுத்துப் படிக்க வேண்டும்.

கட்டுரையும் ஒரு கலையே - கவிதை போன்றதே என்பதைத் தம் 'யாழும் குழலும்', 'இடியும் மின்னலும்' போன்ற பேச்சுக் கட்டுரையாலும், எழுத்துக் கட்டுரையாலும் காண்பித்தவர் ரா.பி.சே.

ரா.பி.சே.-யின் ஆய்வுத் திறம் புதிய தமிழகத்தின் ஊர்ப் பேர்களெல்லாம் சீர்பெற உதவியது.

''தியாகத்தை நினைவூட்ட வேண்டிய தியாகராய நகரை 'தியாகை' என்று தமிழ் மரபுப்படிச் சுருக்காமல் தி.நகர், தி.நகர் என்று தீ நினைவு வர அழைக்கலாமோ'' என்பார் அவர்.

சென்னைப் பல்கலைக் கழகம் அதன் நூற்றாண்டு விழாவின் போது, ரா.பி.சே.-க்கு டி.லிட். பட்டம் வழங்கிற்று. அன்னாரின் பெயரில் ஆண்டுதோறும் ஆராய்ச்சி சொற்பொழிவு நிகழ அறக்கட்டளை நிறுவப் பெற்றது.

தமிழ் கொழிக்கும் பொருநைக் கரையில் பிறந்து, தமிழ் பொங்கும் பொதிகைத் தென்றலில் வளர்ந்து தளராமல் தமிழ்ப்பணி புரிந்த சொல்லின் செல்வர், 1961 ஏப்ரல் 25-இல் இயற்கையெய்தினார்.

அவர் மறைந்தாலும், அவரது இலக்கியப் படைப்புகள் இன்றும் நின்று நிலவி வருகின்றன. அவரது திருப்பெயரை நினைவூட்டிக் கொண்டே இருக்கின்றன.

## வயதானவர்கள் நீண்ட காலம் வாழ முடியும்!

அதிகம் வயதாகிப் போனால், சாவு நெருங்குகிறது என்பது பொதுவான நம்பிக்கை. ஆனால், வயதுபெருகப் பெருக இறப்பு விகிதம் குறைகிறது என்னும் வியப்புக்குரிய உண்மையை அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் வெளியிட்டுள்ளனர். மனிதனின் ஆயுளுக்கு ஏற்கெனவே வரையறுக்கப்பட்ட வரம்பு என்று ஏதும் இல்லை என்றும் இவர்கள் கூறி உள்ளனர்.

மத்தியதரைக் கடல் பகுதியைச் சேர்ந்த ஈக்கள் வகையை வைத்து இவர்கள் இந்த ஆய்வை நடத்தினர். ஈக்களுக்கு வயது அதிகரிக்க அதிகரிக்க அவற்றின் இறப்பு விகிதம் குறைகிறது என்று இவர்கள் கண்டுபிடித்தனர். மனிதர்களுக்கும் இது பொருந்தும் என்று இவர்கள் கூறியுள்ளனர்.

கலிபோர்னியா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பூச்சி இயல் நிபுணர் ஜேம்ஸ் கேரி என்பவர் 10 இலட்சம் ஈக்களை வைத்து இந்த ஆய்வை நடத்தினார். வயதான ஈக்களின் இறப்பு விகிதம், இதர ஈக்களைவிடக் குறைவாகவே உள்ளது என்று இவர் கண்டறிந்தார்.

'மனிதனின் ஆயுள் இவ்வளவுதான் என்று ஏற்கெனவே வரையறுக்கப்பட்டுள்ளதாகக் கருதுவது தவறு என்பதை இந்த ஆய்வுகள் நிரூபிக்கின்றன. நீண்ட ஆயுள் என்பது மரபு ரீதியாக வருவது என்றும், பெற்றோர் அதிக நாள் உயிர் வாழ்ந்தால், பிள்ளைகளும் அதிக நாள் வாழ்வார்கள் என்று கருதுவதும் தவறான கற்பனையே என்றும் இதன் மூலம் அறிகிறோம்' என்று டியூக் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த மக்கள் தொகை ஆய்வியல் வல்லுநர் ஜேம்ஸ் வாபெல் என்பவர் கூறினார்.

'85 வயது வரையில் ஒருவர் தாக்குப் பிடித்து வாழ்ந்து விட்டார் என்றால், அதற்கு மேல் தாக்குப் பிடித்து வாழ்வது ஒன்றும் பெரிய காரியமல்ல' என்று அவர் கூறினார்.



# ஆதித்திய கரிகாலன் காலத்திய அரிய நடுகற்கள் - கண்டுபிடிப்பு





தமிழ்நாடு அரசுத் தொல்பொருளாய்வுத்துறை அண்மையில் வட ஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டம், குடியாத்தம் வட்டம் வெங்கட்டூரில் அரிய நடுகற்கள் நான்கினைக் கண்டுபிடித்துள்ளது. அறிவொளி இயக்க ஆசிரியர் திரு தேவராஜுலு அவர்கள் அளித்த தகவலின்படி வெங்கட்டூரிலுள்ள திரு கே துரைசாமி என்பாரின் நிலத்திலுள்ள இக்கல்வெட்டுகளைத் திரு அர்ச்சுனன், கல்வெட்டாய்வாளர், திரு சீனிவாசன், இளநிலைக் கல்வெட்டாய்வாளர் மற்றும் திரு முருகேசன் கல்வெட்டுச் சிற்றெழுத்தர், திரு திருஞானம், நிழற்படக்காரர் ஆகியோர் உடன் படியெடுத்து வரும்படி இத்துறையின் இயக்குநர், நடன. காசிநாதன் அனுப்பி வைத்ததில் மேற்காணும் கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

நான்கு நடுகற்களில் இரண்டு நடுகற்கள் ஏழடி உயரமும் மூன்றரை அடி அகலமும் கொண்டதாக உள்ளன. மற்ற இரண்டும் அளவில் சற்றுச் சிறியதாக உள்ளன. பெரிய நடுகற்களில் உள்ள வீரர்கள் இடது கரங்களில் வில்லேந்தியும், வலது கரங்களில் கேடயம் கொண்டும் காட்சி தருகின்றனர். அவர்கள் உடலை அம்புகள் துளைத்துள்ளன. விளக்கு, முக்காலியின் மேல் வைக்கப்பட்ட மூக்குடன் கூடிய குடுவை ஆகியவை அவர்களின் வலது காலடியில் காணப்படுகின்றது. அருகில் பசுக் கூட்டங்களும் காணப்படுகின்றன. மற்ற இரண்டு சிறிய நடுகற்களில் வீரர் தம் உருவங்கள் இடுப்பு வரையே உள்ளன. மற்றப் பகுதிகளில் சிதைந்து காணப்படுகின்றன. சிதையாத பகுதியில் உள்ளவை மற்ற இருகற்களில் வீரர்களின் உடை அலங்காரத்தை ஒத்துள்ளன.

நான்கு நடுகற்களுள், ஆநிரை காக்கும் பூசலில் இறந்துபட்ட தந்தை, மகன் ஆகியோருக்காக எடுக்கப்பட்டவையாக இரண்டு நடுகற்கள் காணப்படுகின்றன. தந்தையின் பெயர் 'விக்கிரமாதித்தனாகிய தின்ம செட்டியின் மகன் சாத்தையன்' என்று குறிக்கப்பட்டுள்ளது. இப்பூசல் வீரபாண்டியன் தலை கொண்ட கோப்பரகேசரியின் மூன்றாம் ஆட்சியாண்டில் நிகழ்ந்துள்ளது. இம்மன்னன் முதலாம் இராஜராஜ சோழனின் அண்ணன் ஆவான். இவனுடைய இதே ஆட்சியாண்டில் சாத்தையனின் மகன் திருவூறல் என்பான் இறந்துபட்டதை இன்னொரு நடுகல் தெரிவிக்கிறது. எனவே, சோழனூர் என்ற தன் ஊரில் ஆநிரை காக்கும் போரில் தந்தையுடன் மகனும் இறந்துபட்டிருத்தல் வேண்டும். மற்ற இரண்டு சிறிய நடுகற்களும் தந்தை, மகனோடு உடன் போரிட்டு இறந்த வீரர்களுக்கு எடுக்கப்பட்டவை. தந்தையோடு உயிர்நீத்த வீரன் பெரியான் முத்தரையன் காரி என்றும், மகனோடு இறந்துபட்டவன் முத்தரையன் தும்பன் என்றும் கூறப்பட்டுள்ளன.

வீரன், ''கொட்டுப் பூசல்போய் தொறுமீட்டுபட்டான்'' என்று கல்வெட்டு குறிக்கிறது. இக்கொட்டுப் பூசலைக் கரந்தைப் போரோடு தொடர்புடையதாகப் புறப்பொருள் வெண்பாமாலை குறிக்கிறது. எனவே, பண்டைய இலக்கிய இலக்கண மரபுகளுக்கு இந்நடுகற்கள் சான்றாக உள்ளன என்பதை நாம் எண்ணி மகிழலாம். ஒரே குடும்பத்தைச் சார்ந்தவர்களும் அவர்தம் பணியாளர்களும் ஆநிரை காக்கும் போரில் இறந்துபட்டுள்ளனர் என்பதும், அவர்களுக்காக ஊர் மக்களே நினைவுச் சின்னங்களை எடுத்துள்ளனர் என்பதும் தெளிவு.

ஒரே குடும்பத்தைச் சார்ந்தவர்களின் நினைவாக எடுக்கப்பட்ட நடுகற்கள் ஒரே இடத்தில் காணப்படுவது மற்றுமொரு சிறப்பாகும். கல்வெட்டில் குறிக்கப்படும் மன்னனாகிய ஆதித்த கரிகாலன் குறுகிய காலமே வாழ்ந்திருந்தாலும் தமிழ்நாட்டின் வட எல்லை வரை அவனுடைய வலிமைமிகு ஆட்சி பரந்திருந்தது என்பதற்கு இக்கல்வெட்டுகள் அருமையான சான்றாக உள்ளன.



“மருவுபோல் அது சாதாரணப் புண்ணா - அல்லது வேறு ஏதாவது அபாயகரமான புண்ணா என்பதைப் பார்க்காமல் அதற்கு என்ன செய்வது என்று எப்படிப் பதில் சொல்வது?”

**எஸ். மாரியப்பன்**
**புதுக்கோட்டை**

**• என் வயது 40, அடிக்கடி தொண்டையில் ‘இன்பெக்ஷன்’, ‘டான்சில்’ ஏற்பட்டுத் தொல்லை தருகிறது; அறுவைச் சிகிச்சையின்றிக் குணப்படுத்த முடியுமா?**

“பொதுவாக ஒருவருக்கு டான்சில், (Tonsil) ஏற்பட வயது வித்தியாசமெல்லாம் கிடையாது. அழற்சியின் அளவைப் பொறுத்தே அதன் தன்மையும், விளைவுகளும் இருக்கும். டான்சில் எந்த அளவுக்கு வளர்ந்திருக்கிறது என்று சரிவர அறிந்த பின்பே - மருந்து மூலம் குணப்படுத்தி விடலாமா அல்லது அறுவைச் சிகிச்சை செய்துதான் தீரவேண்டுமா என்று நாம் தீர்மானிக்கமுடியும்.”

**இரா. இராகவன்**
**திருவரங்கம்**

**• எனக்கு முப்பதாண்டுகளுக்கு மேலாகத் தொடர்ந்து தொண்டையில் ஒருவித அரிப்பும், கரகரப்பும் அதனால் இருமலும், தோள்வலியுமாக இருக்கிறது; தாங்கள் தகுந்த மருந்து ஏதாவது தெரிவிக்கவும்?**

“முப்பதாண்டுக் காலமாக இப்படி இருப்பதாகச் சொல்லுகிறீர்கள்; ஆகையால் அதை ஆபத்தான ஒன்றாக எண்ண வேண்டியது இல்லை. தொண்டையில் ஏற்படும் அரிப்பிற்கும் கரகரப்பிற்கும் ஒவ்வாமை (Allergy) அல்லது அழற்சி (Infection) காரணமாக இருக்கக் கூடும். ஒரு நாளைக்கு இரண்டு அல்லது மூன்று முறை, வெதுவெதுப்பான நீரில் சிறிதளவு உப்பைப் போட்டு வாய்க்கொப்பளித்துப் பாருங்கள்; குணம் தெரியும். மற்றபடி தொண்டைக்கும் தோள்வலிக்கும் எவ்விதச் சம்பந்தமும் இல்லை.”

**க ஜெயகாந்தம்**
**சிறுபுலியூர்**

**• மூக்கின் மேல்பகுதியில் தட்டினாலே உள்ளே கலகலவென சளி இருப்பது தெரிகிறது; அப்போது கனத்த தலைவலியும் ஏற்படுகிறது; இதற்கு என்ன காரணம் - எப்படிப் போக்குவது?**

“நீங்கள் குறிப்பிடும் அறிகுறிகளைக் கொண்டு உங்களுக்கு ‘சைனஸ்’ (Sinus) தொல்லை இருக்கும் போல் தெரிகிறது. ‘எக்ஸ்-ரே’ பிடித்துப் பார்த்தால்தான் திட்டவட்டமாகச் சொல்ல முடியும்; ஒரு சிறந்த காது மருத்துவ நிபுணரிடம் பரிசோதித்துக் கொள்ளுங்கள், நிச்சயம் குணம்பெறலாம்.”

**செ ஜோதி**
**எஸ்.வி. பாளையம்**

**• குளிக்கும்போது ஒருமுறை காதில் நீர் புகுந்துவிட்டது; அதே நாளில் கடைவாய்ப் பல் ஒன்று பிடுங்கிவிட்டேன். அதிலிருந்து தலைமுழுகினால் காதில் ஒருவித வலியும், விடாமல் ‘சொய்ங்’ என்ற சப்தமும் ஏற்படுகிறது. இதற்கு என்ன செய்வது டாக்டர்?**

“இனிமேலாவது, குளிக்கும்போது காதில் நீர் புகுந்து விடாமல் கவனமாகப் பார்த்துக் கொள்ளுங்கள். காதுக்கும் பல்லுக்கும் கூட ஓரளவிற்குத் தொடர்பு உண்டு தான். ஆகையால் நீங்கள் அந்த இரண்டு துறை மருத்துவ நிபுணர்களையும் நேரில் பார்த்துச் சிகிச்சை பெறுவது நல்லது.”

**ஜி. துரைராஜ்**
**மறைமலைநகர்**

**• என் மனைவிக்கு சைனஸ் நோய்; மூக்கில் நீர் வடிகிறது. அடிக்கடி மூக்கு அடைத்துக் கொள்ளுவதும், தும்மலுமாக இருக்கிறது. முகத்தில் இலேசான வீக்கமும் உள்ளது.**



**இவைகளால் மூச்சு விடவும், சில நேரங்களில் சிரமப்படுகிறாள். இதற்கு என்ன செய்வது?**

“உங்களுடைய மனைவிக்கு ‘சைனஸ்’ என்கிறீர்கள்; அது அலர்ஜியாகவும் இருக்கலாம். அதற்கு இப்போது புதிதாக Functional endoscopic sinus operation என்கிற அறுவைச் சிகிச்சை முறையெல்லாம் வந்திருக்கிறது; இந்த வகையில் முயலுங்கள், உங்கள் மனைவி குணம் பெற முடியும்.”

**டி. மாலினி**
**சீர்காழி**

**• என் நாக்கில் அடிக்கடி புண் ஏற்படுகிறது; இது ஏன் - என்ன மருந்து சாப்பிடலாம்?**

“பொதுவாக - நாக்கில் புண் வருவதென்பது உடலில் வைட்டமின் ‘பி’ சத்துக் குறைவாலும் வரலாம்; வயிற்றில் பூச்சி இருக்குமானால், அதனாலும் வரலாம்; தொடர்ந்தாற்போலிருக்கும் மனக்கவலை - அடிக்கடி உண்டாகும் பதட்டம் ஆகியவைகளாலும் வரலாம். கொஞ்ச நாள் B-Complex சாப்பிட்டுப் பாருங்கள்; அதில் குணமாகாவிட்டால், அருகில் உள்ள டாக்டரிடம் காட்டிப் பரிசோதித்துக் கொள்ளுங்கள்.”

**சி. சேகர்**
**செங்கற்பட்டு**

**• எனக்கு ஹிரண்யா; ஹைட்ரல்; காதும் சரியாகக் கேட்பதில்லை; இதற்கும் அவைகளுக்கும் தொடர்பு உண்டா? அறுவைச் சிகிச்சை மூலம் இவைகளையெல்லாம் குணப்படுத்திவிட முடியுமா? காதில் ஆபரேஷன் செய்தால் மற்றவைகளால் உடலில் ஏதாவது பிரச்சினைகள் வருமா?**

“ஹிரண்யாவுக்கும், ஹைடிரசலுக்கும், காது கேளாமைக்கும் ஒன்றுக்கொன்று எவ்விதச் சம்பந்தமும் கிடையாது. மூன்றையுமே வெவ்வேறு அறுவைச் சிகிச்சை மூலம் குணப்படுத்திவிட முடியும். இப்போது எதனால் தொல்லை அதிகமோ, அதற்கு முதலில் அறுவைச் சிகிச்சை செய்துகொள்ளுங்கள்; மற்றவைகளுக்கான அறுவைச் சிகிச்சைகளை சிறிது காலம் கழித்துச் செய்து கொள்ளலாம்.

**சு. சுப்பிரமணியன்**
**சென்னை-21**

**• வெளிக்காற்று பட்டாலே எனது மூக்கிலிருந்து சளியும், தும்மலுமாக வருகிறது, சளித்தொல்லை நீங்க என்ன வழி டாக்டர்?**

“ஒருவித அலர்ஜியின் காரணமாகவே இவ்வாறு ஏற்படும்; முடிந்தவரையில் வெளிக்காற்று அல்லது தூசு பறக்கும் பகுதி ஆகியவற்றில் இருப்பதை நீங்கள் தவிர்ப்பது நல்லது; வேறு வழியில்லை.”

**—இன்னும் வரும்...**

*பி. தங்கவேல்*
*திருச்சிராப்பள்ளி*

**• காது, மூக்கு, தொண்டை - என்று மூன்றையும் இணைத்துச் சொல்லப்படுகிறதே அது ஏன் டாக்டர்?**

“மிகவும் நல்ல கேள்வி இது. மூக்கிலும், தொண்டையிலும் ஏற்படும் அழற்சியானது - தொண்டையையும் காதையும் இணைக்கும் Eaustachian Tube வழியாகப் பரவி, காதினை மிகவும் பாதிக்கும்.

“ஆகையால், காது தொடர்பான நோய்களுக்குச் சிகிச்சை மேற்கொள்ளும் முன்பாக ஒரு மருத்துவர் மூக்கின் நிலைமையையும், தொண்டையின் நிலைமையையும் மிகக் கவனமாகச் சரிபார்த்துக் கொள்ளும்படி இருக்கும். ஒருவருக்குக் காது கேட்டால்தான் தொண்டையால் பேச முடியும். காது கேட்காத குழந்தை, வாய் பேசாத குழந்தையாகத்தான் இருக்கும். குழந்தையானது முதலில் நாம் பேசுவதை உன்னிப்பாகக் கவனித்துக் கேட்கும், பிறகுதான் பதில் சொல்ல எத்தனிக்கும். ஆகவே, காது கேளாத குழந்தைக்குப் பேச இயலாத நிலைமையே அமைந்துவிடுகிறது.

“மூக்கிற்கும், தொண்டைக்கும்கூட தொடர்பு உண்டு. ஒருவருக்கு, மூக்கில் விடுகிற ஏதேனும் மருந்தின் குணம், தொண்டையிலும் தெரியும். மூக்கு சரியாக இருந்தால்தான், தொண்டையிலிருந்து பிறக்கும் ஒலி தெளிவாக இருக்கும்; மூக்கு அடைத்துக் கொள்ளும் ஒருவரின் பேச்சும் மந்தமாக இருக்கும்.

“இந்நேரம் உங்களுக்குப் புரிந்திருக்குமே? இவ்வாறு ஒன்றோடொன்று தொடர்புடையதாக இருப்பதால்தான், காது- மூக்கு-தொண்டை ஆகிய மூன்றும் இணைத்துச் சொல்லப்படுகிறது.”

## செவ்வாய்க் கிரகத்துக்கு ‘ரோபாட்கள்’ தயார்!

செவ்வாய்க் கிரகத்தை ஆராய்வதற்கென உருவாக்கப்பட்டுள்ள ‘ரோபாட்கள்’ பலவற்றை அமெரிக்க, ரஷிய விஞ்ஞானிகள் அண்மையில் நடைபெற்ற கண் காட்சி ஒன்றில் இயக்கிக் காட்டினர்.

அடுத்த பத்தாண்டுகளில், செவ்வாய்க் கிரகத்துக்கு மனிதனை அனுப்பி வைப்பதற்கு முன்னோடியாக, அங்கே ரோபாட்களை அனுப்பி வைப்பதென அமெரிக்காவும் ரஷியாவும் திட்டமிட்டுள்ளன. இதற்கென பல ரோபாட்களை அவை தயாரித்து வருகின்றன. இவற்றுள் 16 ரோபாட்கள் இந்தக் கண்காட்சியில் இயக்கிக் காட்டப்பட்டன.

**—அமெரிக்கத் தகவல் நிலையம்**

• ஏலகிரி மலை இன்று சுற்றுலா வட்டாரத்தில் 'ஏழைகளின் ஊட்டி' என்று அழைக்கப்படுகிறது. வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டத்தில் அமைந்துள்ள இம்மலையின் உயரம் கடல் மட்டத்திலிருந்து 3,000 அடியாகும்.

பசுமை போர்த்திய இம்மலையின் மேல் 14 கிராமங்கள் உள்ளன. இதில் உள்ள மொத்த மக்கள் தொகையின் எண்ணிக்கை 5200. இவர்களில் 4,900 பேர் பழங்குடியினர். இம்மலையில் வாழும் பழங்குடியினருக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை விநியோகிக்க 'லாம்ப்ஸ்' என்ற பெரிய அளவிலான பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கம் செயல்பட்டு வருகின்றது.

இச்சங்கம் நான்கு நியாய விலைக் கடைகளை நடத்தி வருகிறது. இதன்மூலம் 1,200 குடும்ப அட்டைதாரர்கள் பயன்பெறுகின்றனர். தமிழ்நாட்டில் செயல்பட்டு வரும் இத்தகைய 18 சங்கங்களில் இதுவும் ஒன்றாகும். வேளாண் விளை பொருட்கள் மற்றும் வனப் பொருட்களைப் பழங்குடியினரிடமிருந்து இச்சங்கம் கொள்முதல் செய்கிறது.

இந்தியாவில் முதன் முதலாக 1990-ஆம் ஆண்டு, மேகாலயா ஜெந்தியா மலைகளில் வெள்ளைப் புலி தென்பட்டதாக ஆதாரப்பூர்வமான குறிப்புகள் தெரிவிக்கின்றன. பண்டைய மன்னராட்சி பகுதியான 'ரேவா'விலும் வெள்ளைப்புலிகள் உலவியதாகத் தெரிகிறது. கடைசியாக, காட்டில் வெள்ளைப் புலி வேட்டையாடப்பட்டது 1958-இல் ஹஸாரிபாக் வனப்பகுதியில்.

சாதாரணமான புலிகளின் மரபுக் கூற்றில் ஏற்படும் சில மாற்றங்களினால் தான் வெள்ளைப்புலிகள் பிறக்கின்றன. 1980-இல் ஒரிஸாவிலுள்ள நந்தன்கானம் உயிரியல் பூங்காவில் வெள்ளைப்புலிக் குட்டிகள் பிறந்ததே இதற்குச் சாட்சி.

வெள்ளைப்புலி ஒவ்வொன்றும் வெளிநாடுகளில் .8,000 அமெரிக்கன் டாலர் வரை விலை போகிறது.



• கூட்டுறவே நாட்டுயர்வு. இந்தியாவில் பல்வேறு வகையான கூட்டுறவு நிறுவனங்கள் கூட்டுறவு இயக்கமாக மாறி பல பணிகளில் ஈடுபட்டுள்ளன. இன்று உலகில் 50 கோடி உறுப்பினர்களைக் கொண்டு 7.5 இலட்சம் கூட்டுறவு நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. இந்தியாவில் 16 கோடி உறுப்பினர்களைக் கொண்ட 3.53 இலட்சம் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இந்த நிறுவனங்களில் உள்ள நடைமுறை மூலதனம் ரூ.71,000 கோடியாகும்.

தமிழ்நாட்டில் முதலாவது கூட்டுறவுச் சங்கம் எம்.ஜி.ஆர். மாவட்டம் திருவள்ளூர் வட்டத்தில் உள்ள திரூர் என்ற இடத்தில் 1904-இல் தொடங்கப்பட்டது. இன்று தமிழகத்தில் 49 வகையான 30,000 கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. வேளாண் தொழில் வளர்ச்சிக்கென 4,655 தொடக்க நிலைக் கூட்டுறவு வங்கிகள் 181 நிலவள வங்கிகள் மூலமாக 1991-92-ஆம் ஆண்டில் ரூ.323 கோடியை குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட காலக் கடனாக அளித்துள்ளன. நடப்பாண்டில் இக்கடனுதவி 335 கோடியாக இருக்கும். தமிழ்நாட்டில் உள்ள 22,000 நியாய விலைக் கடைகளில் 21,000 கடைகளைக் கூட்டுறவுச் சங்கங்கள் நடத்துகின்றன.

• தொலைபேசி இலக்கம் அறிவதற்காக '197'க்குச் செய்யப்படும் தொலைபேசி அழைப்புகள் இலவச அழைப்புகளாகக் கருதப்படும் என்று தொலைத் தொடர்புத் துறை அறிவித்துள்ளது.

தொலைபேசி இணைப்பு வேண்டி ஓ.ஒய்.டி. பிரிவின் கீழ் பதிவு செய்துள்ளோருக்கு ஆறு மாதங்களுக்குள்ளாகவும், பொதுப்பிரிவின்கீழ் பதிவு செய்துள்ளோருக்கு இரண்டு ஆண்டுகளுக்குள்ளாகவும் 1993 மார்ச்சுக்குள் புதிய இணைப்புகள் வழங்க தொலைத் தொடர்புத் துறை திட்டம் தீட்டியுள்ளது.

1993 மார்ச்சிற்குப் பிறகு, அவ்வாறு இணைப்பு வழங்கத் தாமதமாகும் பட்சத்தில், டெபாஸிட் தொகைக்கு வங்கி வட்டி விகிதத்தை விட மூன்று சதவிகித வட்டி கூடுதலாக வழங்கப்படும். இணைப்பு வழங்கப்படும் வரை இது அளிக்கப்படும்.

1995-ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் மொத்தமுள்ள 2,32,054 கிராமப் பஞ்சாயத்துக்களுக்கும் தொலைபேசி இணைப்பு வழங்கப்பட்டுவிடும். இவ்வாண்டு மார்ச் வரை 65,172 பஞ்சாயத்துகளுக்கு இணைப்பு அளிக்கப்பட்டுள்ளது. 1992-93 நிதி ஆண்டிற்குள் 36,000 பஞ்சாயத்துகளுக்கு இவ்வசதி கிடைத்துவிடும்.





## அரும்பொருட்களைப் பாதுகாக்க அரிய பயிற்சி

சென்னையிலுள்ள அரசினர் அருங்காட்சியகமே இந்தியாவிலுள்ள அருங்காட்சியகங்களில் மிகப் பெரியதும், மிகப் பழமையானதுமாகும். விலை மதிப்பற்ற தொல்பொருட்களையும், கலைச் செல்வங்களையும் பாதுகாப்பதற்காக, ஆசியாவிலேயே முதன் முதலாக 1930-ஆம் ஆண்டில் ஒரு வேதியல் பாதுகாப்பு ஆய்வகத்தைத் (Chemical Conservation Laboratory) தொடங்கிய பெருமையும் சென்னை அரசினர் அருங்காட்சியகத்திற்கே உரியதாகும்.

இந்தியாவில் 200 பெரிய அருங்காட்சியகங்கள் உள்ளன. ஆனால், அவைகளில் ஒரு சில அருங்காட்சியகங்களே புராதனப் பொருட்களைப் பாதுகாக்கும் ஆய்வகத்தைச் சொந்தமாகக் கொண்டுள்ளன. அந்த ஆய்வகங்களிலும் அருங்காட்சியகப் பொருட்களைப் பாதுகாப்பதில் பயிற்சி பெற்றுள்ளவர்கள் மிகவும் குறைவாகவே உள்ளனர். எனவே, அருங்காட்சியகங்கள், நூலகங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களில் பணிபுரிவோருக்கு உதவிடும் எண்ணத்துடன் 1975-ஆம் ஆண்டு முதன் முதலாக இவ்வருங்காட்சியகத்தில் வேதியல் பாதுகாப்பு மறுபயிற்சி (Refresher Course in Chemical Conservation) தொடங்கப்பட்டது. இதனை இவ்வருங்காட்சியகத்தில் தொடங்க அப்போதைய காப்பாட்சியர் திரு நீலம் ஹரிநாராயணா உறுதுணையாக இருந்தார். நமது நாட்டின் தொல்பொருட்களையும் கலைப் பொருட்களையும் பேணிப் பாதுகாக்க இப்பயிற்சி அடிப்படை அறிவை அளிக்கிறது. இவ்வருங்காட்சியக வேதியல் பாதுகாப்புக் கூடத்தில் இந்தப் பயிற்சி நடத்தப்படுகிறது.

இந்தப் பயிற்சி ஜூன் 1 முதல் 30 வரை ஒரு மாதத்திற்கு ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்படுகிறது. இப்பயிற்சியில் அருங்காட்சியகம், கைவினைப் பொருள் உற்பத்தி, தொல்பொருள் ஆய்வு, அறநிலையங்கள், நூலகங்கள் ஆகிய துறைகளில் பணிபுரிவோரும் மற்றும் நுண்கலை, வரலாறு, மானிடவியல், தொல்பொருள், இந்திய தத்துவம், நூலகம் ஆகியவற்றைப் பயிலும் மாணவர்களும் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் பயிற்சி பெற எட்டு நபர்கள் நமது நாட்டின் பல பாகங்களில் இருந்து சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி மாத இறுதியில் நிறுவனங்களுக்கும் பல்கலைக்கழகங்களுக்கும் இப்பயிற்சி குறித்துச் சுற்றறிக்கை அனுப்பப்படுகிறது. இப்பயிற்சியில் சேர விரும்புவோர் இதற்கான மனுவைப் பூர்த்தி செய்து ஏப்ரல் - 15-க்குள் அருங்காட்சியக

சு. தங்கவேலு
உதவி இயக்குநர்
அரசு அருங்காட்சியகம், சென்னை.

இயக்குநருக்கு அனுப்பி வைக்கவேண்டும். தகுதி மற்றும் அனுபவத்தைப் பொருத்து உரியவர்கள் இந்தப் பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். நிறுவனங்கள் மற்றும் துறையின் மூலமாக அனுப்பப்படும் மனுக்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. இந்தப் பயிற்சியில் சேரக் கட்டணம் இல்லையென்றாலும், சில வேதியல் பொருட்களை வாங்க ஆகும் செலவை மாணவர்கள் ஏற்க வேண்டும்.

இப்பயிற்சியில் அரும்பொருட்களைப் பாதுகாக்க அமல்படுத்த எடுக்கப்படும் அடிப்படைக் கொள்கைகள் மற்றும் அவற்றை வகைப்படுத்துதல், அரும்பொருட்களுக்கு ஏற்படும் அழிவு, உலோகத்தின் பாதுகாப்பு, வண்ண ஓவியங்களின் பாதுகாப்பு, ஆவணங்களின் பாதுகாப்பு, துணிமணிகளைப் பாதுகாத்தல் முதலியவை இடம் பெறுகின்றன. இப்பயிற்சியில் போதனை செய்முறை ஆகிய இரண்டும் அடங்கியுள்ளன.

போதனை அருங்காட்சியக அலுவலர்களால் நிகழ்த்தப்படுவதுடன், இத்துறையில் பாண்டியத்தியம் உடைய நிபுணர்கள் அழைக்கப்பட்டு போதனை நிகழ்த்தப்படுகிறது. இந்தப் பயிற்சியின்போது மாணவர்கள் மத்தியத் தோல் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் தோல் அருங்காட்சியகத்திற்கும்; கோட்டை அருங்காட்சியகம் மற்றும் உதவி கண்காணிப்புத் தொல்பொருள் வேதியர் அலுவலகம்; பிரம்ம ஞான சபை மற்றும் அதன் நூலகம், தமிழ்நாடு ஆவணக் காப்பகம் ஆகிய இடங்களுக்கும் அழைத்துச் செல்லப்படுகிறார்கள். அவ்வமயம் ஒவ்வொரு நிறுவனத்தாலும் காட்சியுரை நிகழ்த்தப்படுகிறது. மேலும், மாணவர்களை மகாபலிபுரம், காஞ்சிபுரம் அழைத்துச் செல்வதால் நம்முடைய பண்டைய சின்னங்களின் கலையையும் கலாச்சாரத்தையும் அறியச் செய்வதுடன் அவைகளைப் பாதுகாக்கும் முறைகளையும் அறிந்து வருகிறார்கள்.

இப்பயிற்சியின் இறுதியில் ஒவ்வொருவரும் ஒரு கட்டுரை தயாரித்து அளிக்க வேண்டும். மாணவர்களால் பாதுகாக்கப்பட்ட பொருட்களைக் கொண்டு ஒரு கண்காட்சியும் மாணவர்களால் அமைக்கப்படுகிறது. இந்தக் கண்காட்சி பொதுமக்களின் பார்வைக்காக இரண்டு தினங்கள் காட்சிக்கு வைக்கப்படுகிறது. இப்பயிற்சியின் முடிவில் பயிற்சி பெற்றவர்களுக்குச் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

இவ்வாறு சென்னை அரசினர் அருங்காட்சியகம் கலைச் செல்வங்களையும் தொல்பொருட்களையும் காத்திடும் பணியில் இந்தியாவின் இதர அருங்காட்சியகங்களுக்கு வழிகாட்டியாக உள்ளது என்பது பெருமைக்குரியதாக உள்ளது.


எங்கள் இதயங்கனிந்த நல்வாழ்த்துக்கள்

**தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி**

**சாலாமேடு, விழுப்புரம்-605 602**

இ.எஸ். கல்வி அறக்கட்டளையின் கீழ் தமிழக அரசு அங்கீகாரத்துடன் 1989-90-ஆம் ஆண்டு முதல் கீழ்க்காணும் ஐந்து பிரிவுகளுடன் தமிழ்நாட்டில் உள்ள சிறந்த கல்லூரிகளில் ஒன்றாகச் சிறந்து விளங்குகிறது.

1. B.Sc., Computer Science
2. B.B.A. (Bachelor of Business Administration)
3. B.B.M. (Bachelor of Banking Management)
4. B.Com.,
5. B.Sc., (Chemistry)



**Prof. V. Rasu, M.A.,**
Principal

**E. Swamikannu**
Correspondent






# குடி மறப்பீர்!

— கவிஞர் நெ. அ. பூபதி

குடிப்பழக்கம் வந்தாலே குணங்கெ டுக்கும்;
குடும்பத்தின் நலன்கெடுக்கும்; உடல்கெ டுக்கும்;
குடிப்பெருமை குலப்பெருமை அழிந்து போகும்;
கொள்கையிலும் தடுமாற்றம் வந்து சேரும்;
குடித்தாலே மதிமயக்கும்; மனம்கெ டுக்கும்;
கொண்டவனைக் கொடுமைக்கே ஆட்ப டுத்தும்;
குடிப்பவனைக் குடிக்கடிமை யாக்கும்; மாற்றான்
குடிகெடுக்கத் தயங்காமல் துணவு கொள்ளும்!

குடிப்பவர்கள் வாய்குழறும்; நடைதள் ளாடும்;
கொண்டபொருள் கைவிட்டுத் தவறிப் போகும்;
படிப்பதற்கும் முடியாது; கண்ம றைக்கும்;
பார்ப்போரின் வெறுப்புக்கே இடம்உண்டாக்கும்;
குடிப்பதனால் குடல்வெந்து போகும்; கெட்ட
குணமெல்லாம் உடன்வந்து சேரும்; மெத்தப்
படித்தாலும் மரியாதை கெட்டுப் போகும்;
பதம்மாறிப் போனாலும் உயிர்ப றிக்கும்;

குடித்துவிட்டால் நடுத்தெருவில் ஆடச் செய்யும்;
கண்ணான நண்பனையும் பகையாய் மாற்றி
அடிதடியில் இறங்கிடவும் செய்யும்; பெற்ற
அன்னைதந்தை பெண்டுபிள்ளை உறவும் பாராக்
குடிவெறியில் கண்டபடி ஏசச் செய்யும்;
குடும்பத்தின் அமைதியினைக் கெடுக்கும்; பின்னர்
குடிபோதை தெளிந்தவுடன் வருந்தச் செய்யும்;
குடிப்பதில்லை எனஉறுதி ஏற்கும்; ஆனால்

குடிப்பதற்குக் கூழில்லை; என்ற போதும்
கடன்வாங்கிச் சாராயக் கடையைத் தேடிக்
குடிப்பதுவும் அவசியமா? வெட்கக் கேடு!
குடிக்காமல் பொழுதுவிடி யாதா சொல்வீர்!
குடியாலே கெட்டழிந்த பலரைக் கண்டும்
குடிகெடுக்கும் குடிப்பழக்கம் கொள்வ தேனோ
முடியாதா குடிக்காமல் இருப்ப தற்கு—
முன்னேற வேண்டுமெனில் குடிம றப்பீர்!

# விஷ விருட்சம்

பாலும், நீரும் கலந்த கலவையில் நீரை நீக்கிவிட்டுப் பாலை மட்டும் அருந்தும் ஆற்றல் பெற்றதாம் அன்னப்பறவை.

நாம் சொன்னதை அப்படியே திருப்பிச் சொல்லும் குணமுடையது கிளிப்பிள்ளை.

கள் இறக்கும் கலயத்திற்குள் சாரத்தையெல்லாம் விட்டுவிட்டுப் பூச்சி, மற்றும் அசுத்தங்களை மட்டும் பிடித்துக் கொள்ளும் குணமுடையது பன்னாடை!

அதேபோல் - நம்மில் மூன்று விதக் குணம் படைத்தவர்கள் உள்ளோம். நாட்டில் நடக்கும் நல்லவை தீயவை ஆகியவற்றில் தீயவைகளை நீக்கிவிட்டு, நல்லதை மட்டுமே செய்துகொண்டு போகும் வழக்கத்தை உடையவர்கள் முதல் ரகத்தைச் சேர்ந்தவர்கள்.

நல்லவை, தீயவை முதலியவற்றைச் சரியாக உணரும் பக்குவம் பெறாமல் மற்றவர்கள் சொல்வதைக் கிளிப்பிள்ளையைப் போல் அப்படியே சொல்லும் குணம் படைத்தவர்கள் இரண்டாவது ரகத்தைச் சேர்ந்தவர்கள்.

அதிலே கவனம் செலுத்தாமல் கண் முன்னே தீய விஷயங்களிலேயே கவனத்தைத் திருப்பி அதிலேயே உழன்று கொண்டிருப்பவர்கள் மூன்றாம் ரகத்தைச் சேர்ந்தவர்கள். இந்த முன்றாம் ரகத்தைச் சேர்ந்தவர்களிடமிருந்துதான் பெரும்பாலான குடிப்பழக்கம் உள்ளவர்கள் உருவெடுக்கிறார்கள்.

இத்தகைய குடிப் பழக்த்தைக் கொண்டவர்கள் நாட்டின் மொத்த மக்கள் தொகையில் பெரும்பான்மை-வகிக்கும்போது அவர்களின் குடும்பங்கள் சீர்குலைவதோடு - நாட்டின் வளர்ச்சியும், தளர்ச்சி அடைகிறது. அரசும், அறிஞர்களும் பலவகையான முன்னேற்றத்திற்கான திட்டங்கள் தீட்டியபோதும், முழுமையான பயன் நமக்குக் கிட்டாமல் போகிறது. உதாரணமாக ஒரு மனிதனைத் தேள் கொட்டிவிடுகிறது. ஆனால் அதே மனிதனைக் கடும் விஷம் உள்ள கருநாகம் கடித்துவிட்டால் தீவிர சிகிச்சை உடனே தேவைப்படுகிறது. இல்லாவிடில் அவன் மாண்டுபோவது உறுதி. இதற்குக் காரணம் தேளின் விஷத்தை எதிர்த்து அதை முறியடித்துவிடக் கூடிய ஆற்றல் மனித உடலுக்கு உண்டு. ஆனால் கருநாகத்தின் கடுமையான விஷத்தைத் தாங்கும் சக்தி மனித உடலுக்குக் கிடையாது.

அதேபோல் - ஒரு நாட்டில் சொற்ப அளவில் குடிப்பழக்கத்திற்கு அடிமையானோர் இருந்தால் சாதாரணக் காவல்துறைச் சட்டங்கள் மூலம் அவர்களைத் தடுத்துவிட முடியும். பெரும்பாலான மக்கள் குடியின் கோரப் பிடியில் சிக்கிவிட்டால், சிந்திக்கும் சக்தியையும், உழைக்கும் சக்தியையும் அவர்கள் இழந்துவிடுகிறார்கள். அதனால் வறுமை என்னும் கொடிய விஷம் நாட்டையே உலுக்கும் சூழ்நிலை உருவாகும்.

எனவேதான், தாய்நாட்டின் விடுதலைக்காக அறவழியில் போராடி வெற்றிகண்ட அண்ணல் காந்தி அடிகள், மதுவை ஒழிக்கவும் கடும் முயற்சிகள் மேற்கொண்டார். உலகப் பொது மறையாம் திருக்குறளை நமக்களித்த தெய்வப் புலவர் திருவள்ளுவரும் 'கள்ளுண்ணாமை' என்னும் தலைப்பில் ஒரு அதிகாரத்தையே ஏற்படுத்தி உள்ளார். அந்தச் சான்றோர்களுக்குப் பின் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம், செல்லரிக்கப்பட்ட ஆலமரத்தை, அதன் விழுதுகள் விழாமல் தாங்கிப் பிடித்துக் கொண்டிருப்பதுபோல் மது என்னும் அரக்கனால் ஏற்பட்டுள்ள பலவீனத்தை அகற்ற நம்மாலான முயற்சிகளை நாம் மேற்கொள்ள வேண்டும். 'நாம் எத்தகைய முயற்சி எடுத்தாலும் குடிகாரர்களைத் திருத்த முடியாது. வீணாக ஏன் நம் நேரத்தைச் செலவிட வேண்டும்' என்று கேட்பவர்களும் நம்மிடையே இருக்கலாம். அவர்களுக்கு ஒரு சிறு நிகழ்ச்சியை நினைவுக்குக் கொண்டு வருவோம்.

ஒரு சமயம் - பூலோகத்து மக்கள் மீது கோபம் கொண்ட சிவ பெருமான் 12 ஆண்டுகளுக்குச் சங்கை ஊதவேமாட்டேன் என்று முடிவு எடுக்கிறார். சிவன் சங்கை ஊதாவிட்டால் மழை பெய்யாது என்பது ஐதீகம்!

எனவே குடியானவர்கள் எல்லோரும் வேலை எதுவும் செய்யாமல் வீட்டிலேயே முடங்கிக் கிடந்தனர். ஒரே ஒரு குடியானவன் மட்டும் தன் நிலத்தில் ஏர் உழுது கொண்டிருந்தான். இதைக் கவனித்த தேவலோக ரிஷியான நாரதர், அக்குடியானவனின் அருகில் வந்து - "எல்லாக் குடியானவர்களும் வேலை செய்யாமல் இருக்கும்போது நீ மட்டும் வீணாக ஏன் வேலை





# தமிழரசு

தமிழ்நாடு அரசு ஏடு

**சந்தா விவரம்**

'தமிழரசு' தமிழ் (மாதம் இருமுறை)
ஆண்டுச் சந்தா ரூ. 24
அரையாண்டுச் சந்தா ரூ. 12

'தமிழரசு' ஆங்கிலம் (மாதம் ஒருமுறை)
ஆண்டுச் சந்தா ரூ. 12

சந்தாத் தொகையை — மணியார்டர் அல்லது பாங்க் டிராப்ட் மூலம் அனுப்ப வேண்டிய முகவரி:

—உதவி இயக்குநர்
'தமிழரசு'
அரசினர் தோட்டம்,
சென்னை-600 002.


செய்துகொண்டிருக்கிறாய்? சிவபெருமான்தான் பன்னிரண்டாண்டுகளுக்குச் சங்கை ஊதமாட்டேன் என்று சொல்லிவிட்டாரே! உனக்குத் தெரியாதா...?'' என்று கேட்டார்.

அதற்குப் புன்னகையோடு பதிலளித்த அக் குடியானவன் - ''சிவபெருமான் சொன்னது எனக்கும் தெரியும். ஆனால் அவ்வளவு காலம் ஏர் உழாமல் விட்டுவிட்டால், நிலம் இறுகிப் போகும்; இந்த ஏர் உழும் தொழிலும் எனக்கு மறந்து போகும். அதனால் தான் நான் உழுது கொண்டிருக்கிறேன்'' என்றான்.

அதைக் கேட்ட நாரதர் குடியானவன் சொன்ன பதிலை அப்படியே போய் சிவனிடம் கூறினார். அதைக் கேட்ட சிவபெருமான் - ''அந்தக் குடியானவன் சொன்னது சரிதான். நானும் பன்னிரண்டாண்டுகளுக்கு இச் சங்கை ஊதாமல் விட்டுவிட்டால், சங்கும் கெட்டுவிடும், சங்கும் ஊதும் தொழிலும் எனக்கு மறந்து போகும். எனவே இப்போதே அதை எடுத்து ஊதி விடுகிறேன்'' என்றவர் அவ்வாறே ஊதினார். மழையும் பெய்தது. அதனால் எல்லாக் குடியானவர்களும் நன்மை அடைந்தனர்.

அதேபோல் மதுவரக்கனின் பிடியிலிருந்து மக்களை மீட்க நம்மால் முடிந்த எல்லா முயற்சிகளையும் விளைவைப் பற்றிக் கவலைப்படாமல் தளர்ச்சியின்றி நாம் செய்ய வேண்டும். துருப்பிடித்து அழிந்து போவதைவிடத் தேய்ந்து அழிந்து போவது பிறர்க்குச் சிறிதளவாவது உபயோகப்படுவதால் மேலானது என்பதை நாம் அறிவோம்.

உறங்குகின்றவன் இறந்தவன் நிலையில் உள்ளான். அதேபோல் கள்ளுண்டு மதி மயங்கியவனும் இறந்தவனுக்குச் சமமே என்கிறார் வள்ளுவர். கள்ளுண்ணும் பழக்கத்தை உடையவனைக் கண்டு பகைவர்கள் அச்சம் கொள்ளார் என்றும் அறிவுறுத்துகிறார். மேலும் கள்ளுண்டு மயங்கியவனைக் காரணம் காட்டித் தெளிவித்தல் நீரில் மூழ்கிப் போன ஒருவனை எரிகின்ற விளக்கு கொண்டு தேடுவது போல் என்றும் இடித்துரைக்கிறார். பிணமாகவும், பகைவர்களுக்கு எளியவனாகவும், தெளிவற்றவனாகவும் குடிப்பழக்கம் உள்ளவர்கள் மாறுகிறார்கள் என்பதை இரத்தினச் சுருக்கமாக வள்ளுவப் பெருந்தகை கூறியிருப்பதைக் குடிப் பழக்கத்திற்கு அடிமையானோர் சிந்திக்க வேண்டும். வைராக்கியம் என்னும் கோடாரியைக் கொண்டு மது என்னும் விஷ விருட்சத்தை வெட்டிச் சாய்த்து விட வேண்டும். சுழன்று ஓடும் சக்கர வண்டிக்கு அச்சாணி மிகவும் அவசியம். அச்சாணியின்றி வண்டி ஓடுமானால் சக்கரங்கள் விலகி வண்டி சிதைந்துபோவது உறுதி. அதேபோல் வாழ்க்கை என்னும் சக்கரம் சீராக ஓட ஒழுக்கம் என்ற அச்சாணி மிகவும் தேவை.

ஒரு தாய் வெளியூரில் படிக்கும் தன் மகனைக் காணச் சென்றாள். மகனின் அறையில் நுழைந்ததும் அவள் அதிர்ச்சி அடைந்தாள். அறை முழுவதும் பெண்களின் ஆபாசம் நிறைந்த படங்கள் சுவரில் ஒட்டப்பட்டிருப்பதைக் கண்டாள். மகனிடம் - அது பற்றி எதுவும் கேட்காமல், விடைபெற்றுக் கொண்டு வீடு திரும்பினாள்.

பிறகு - தன் புகைப்படம் ஒன்றை அனுப்பி, 'உன் அறையில் இதையும் மாட்டி வை' என்று மகனுக்குக் கடிதம் எழுதினாள். மறுமுறை திரும்பவும் மகனைப் பார்க்க அவன் அறையில் நுழைந்த போது அந்தத் தாயின் போட்டோவைத் தவிர வேறு எந்தப் படங்களும் அங்கு இல்லை.

மற்ற படங்களைப் பற்றி விசாரித்த போது 'உங்கள் படத்தை வைத்த பின் மற்ற படங்கள் அங்கிருப்பது வெட்கக் கேடாக எனக்குத் தோன்றியது. அதனால் அவற்றை அகற்றி விட்டேன்' என்றான் அவன்.

அதேபோல் இருளை விரட்ட வேண்டுமானால், இருளோடு மோத வேண்டிய அவசியம் இல்லை. விளக்கு ஒன்றை வைத்தால் இருள் தானாக விலகி ஓடிவிடும். அதே போல், கள்ளுண்ணும் அறியாமை இருளை அகற்ற வைராக்கியம் என்னும் விளக்கை அப்பழக்கத்திற்கு அடிமையானோரெல்லாம் உடனே ஏற்றிடுவோம்!

குடி கெடுக்கும் குடியை விரட்டிடுவோம்...!

**(மது அருந்துவதன் தீமையை அடிப்படையாகக் கொண்டு எழுதப் பட்டுள்ள சிறுகதை)**



# தருமபுரி மாவட்ட மருத்துவமனைகள்



தருமபுரி மாவட்டம் தனியே பிரிக்கப்பட்டபோது, தருமபுரியில் வட்டத் தலைமையிட மருத்துவமனையாகச் செயல்பட்டுவந்த மருத்துவமனைதான் மாவட்டத் தலைமை மருத்துவமனையாக உயர்த்தப் பட்டது.

தருமபுரி மாவட்டத்தைப் பொருத்தமட்டில், அரசு பொது மருத்துவமனைகளாக, இயங்கி வருபவை அரசினர் மாவட்டத் தலைமை மருத்துவமனையும், தருமபுரி அரசினர் வட்டத் தலைமை மருத்துவமனைகள் ஏழும் ஆகும். அவை - கிருஷ்ணகிரி, ஓசூர், பென்னாகரம், பாலக்கோடு, அரூர், ஊத்தங்கரை, தேன்கனிக்கோட்டை ஆகிய இடங்களில் செம்மையுறச் செயல்பட்டு வருகின்றன.

**'நோய்நாடி நோயின் முதல்நாடி அதுதணிக்கும்**
**வாய்நாடி வாய்ப்பச் செயல்'**

**- என்றார் திருவள்ளுவர். அந்தவகையில், பெரும்புகழ்பெற்று விளங்குவது தருமபுரியில் உள்ள மாவட்டத் தலைமை மருத்துவமனை, அதன் இணை இயக்குநர் திரு. கே.எம். வரதராஜன் அவர்கள், அம் மருத்துவமனையின் சிறப்பை இந்தக் கட்டுரையில் விவரிக்கிறார்.**

இம்மாவட்டத்தில் உள்ள காவேரிப்பட்டினத்தில் ஒரு அரசினர் சமுதாய நலமையமும், 18 வட்டாரங்களில் முதன்மை அரசினர் ஆரம்பச் சுகாதார நிலையங்களும், 53 அரசினர் ஆரம்பச் சுகாதார நிலையங்களும் இயங்கி வருகின்றன; 18 முதன்மைச் சுகாதார நிலையங்களில் பாரூர், பர்கூர் மற்றும் கெலமங்கலம் ஆகிய மூன்றும் மேம்படுத்தப்பட்டு கூடுதல் வசதியுடன் செயல்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

மாவட்டத் தொழுநோய் அலுவலரின் கீழ், தொழுநோய்க் கட்டுப்பாடு நிலையங்கள் 5 உள்ளன. அவை பள்ளிப்பட்டி, ஓசூர், கிருஷ்ணகிரி, குப்பூர், தருமபுரி ஆகிய ஊர்களிலே உள்ளன.

குப்பூரில் உள்ள தொழுநோய்க் கட்டுப்பாடு நிலையத்தின் கீழ், 40 படுக்கைகள் கொண்ட தொழுநோய் மருத்துவமனை இயங்கி வருகிறது. கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனையில் தொழுநோய்ச் சிகிச்சைக்கென 20 படுக்கைகள் கொண்ட பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. தொழுநோயாளிகள் கிராமங்கள் தோறும் கண்டுபிடிக்கப்பட்டு நவீன கூட்டு மருந்து சிகிச்சை மூலம் தொடர் சிகிச்சை பெற்றுவருகிறார்கள்.

தருமபுரி மாவட்டத்தில் உள்ள ஓசூரிலும், கிருஷ்ணகிரியிலும் தொழிலாளர் ஈட்டுறுதி மருந்தகங்கள் மிக நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன.

### சித்த மருத்துவம்

மாவட்ட சித்த மருத்துவமனை, அரசினர் மாவட்டத் தலைமை மருத்துவமனையிலுள்ள தனிக்கட்டிடத்தில் செயல்படுகிறது. சித்த மருத்துவச் சிகிச்சை பெறும் ஆர்வம் இப்பகுதி மக்களிடையே நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. ஓமியோபதி வைத்தியப் பிரிவும் இதன் உள்ளேயே இயங்கி வருகிறது.

4 வட்டத் தலைமையிட மருத்துவமனைகளிலும், 11 முதன்மை ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும்

சித்த வைத்தியப் பிரிவு செயல்பட்டு வருகிறது. மெனசி, கோட்டப்பட்டி ஆகிய அரசினர் கிராம மருந்தகங் களிலும், பழங்குடியினர் நலத் திட்டத்தின் கீழ், சித்தேரியில் அரசினர் மருந்தகமும் சீரிய சித்த வைத்திய முறையில் இயங்கி வருகிறது.

இம்மாவட்டத்தில், குடும்பநலத் துறையில் 7 நகர்ப்புற குடும்பநல மையங்களும், 16 கிராமப்புறக் குடும்பநல மையங்களும் சிறப்பு வசதிகளுடன் செயல்பட்டு வரு கின்றன.

**காசநோய் ஒழிப்பு**

காசநோய் ஒழிப்புத் திட்டம், மாவட்டக் காசநோய் அலுவலரின் கீழ் அனைத்து அரசினர் மருத்துவ மனைகளிலும், அரசினர் ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும் செயல் படுத்தப்பட்டு வருகிறது. ஆரம்பச் சுகாதார நிலையங்களில், கோழைப்

அரூர் மருத்துவமனை 35 படுக்கை களுடனும் தேன்கனிக்கோட்டை மருத்துவமனை 34 படுக்கைகளுட னும், ஊத்தங்கரை மருத்துவமனை 32 படுக்கை வசதிகளுடனும் இருக் கின்றன. பாலக்கோடு மருத்துவ மனை 10 படுக்கைகளுடனும், பென்னாகரம் மருத்துவமனை 6 படுக்கைகளுடனும் இயங்கி வரு கின்றன.

பாலக்கோடு அரசினர் மருத்துவ மனைக்குக் கூடுதலாக 22 படுக்கை களும், பென்னாகரம் அரசு மருத் துவமனைக்குக் கூடுதலாக 26 படுக்



பிரிவு, மற்றும் தொற்று நோய் சிகிச்சைப் பரிவு.

கிருஷ்ணகிரியில் உள்ள வட்ட அரசு மருத்துவமனையில் கீழ்க்கண்ட சிறப்புச் சிகிச்சைப் பிரிவுகள் செயல்படுகின்றன; மகப்பேறு பிரிவு, முன்னாள் படைவீரர் பிரிவு, கண் மருத்துவம், தொற்றுநோய் சிகிச்சைப் பிரிவு, தோல் மருத் துவம், பல் மருத்துவம், குழந்தைகள் நலப் பிரிவு.

ஒசூர் அரசினர் மருத்துவமனை யில் மகப்பேறு, விபத்து, அவசரச் சிகிச்சை, பல் மருத்துவம், கண் மருத்துவம், குழந்தைகள் நல மருத் துவம், மகளிர் நல மருத்துவம், இரத்த வங்கி நரம்பியல் மருத்துவம் போன்ற சிறப்புப் பிரிவுகள் இயங்கி வருகின்றன.

அரூர் அரசு மருத்துவமனையில் மகப்பேறு, குழந்தைகள் நல மருத்

• மக்கள் சேவையே எனக்கு இறைவன் வழிபாடு; பிறந்தபோதே நம்மை மரணம் பிடித்துக் கொண்டு விட்டது; ஆகவே, இறுதியில் வழிபடுவதைவிட வாழ்வின் ஒவ்வொரு நொடியும் ஒப்பிலா முதல்வனை நினைந்துருக. வேண்டும்.

பரிசோதனை செய்யப்பட்டும், அரசினர் மருத்துவமனைகளில் நுண் கதிர் படபிடிப்பு மூலமும் காச நோயாளிகள் அடையாளம் கண்டு பிடிக்கப்படுகிறார்கள்.

காசநோயாளிகள் தங்கி மருத் துவம் செய்துகொள்ளத் தருமபுரி மாவட்டத் தலைமை மருத்துவமனை யில் 12 படுக்கை வசதிகளும், கிருஷ்ணகிரி வட்டத் தலைமை மருத் துவமனைகளில் 25 படுக்கை வசதி களும், செய்யப்பட்டுள்ளன.

காசநோயால் பாதிக்கப்பட்ட வர்களுக்கு வழங்கப்படும் தொடர் சிகிச்சை, மாவட்டக் காசநோய் அலுவலரால் மருத்துவமனைகளி லும் ஆரம்பச் சுகாதார நிலையங் களிலும் மாதந்தோறும் ஆய்வு செய்யப்படுகிறது.

**எத்தனை படுக்கைகள்**

தருமபுரி அரசினர் மாவட்டத் தலைமை மருத்துவமனை 396 படுக்கைகளுடனும், கிருஷ்ணகிரி மருத்துவமனை 187 படுக்கைகளுட னும், ஒசூர் மருத்துவமனை 100 படுக்கை வசதிகளுடனும் உள்ளன;

கைகளும் அனுமதிக்கப்பட்டு, கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன. நகர்ப்புறக் குடும்பநல மையத்திற்கென ஊத்தங்கரையிலும் அரூரிலும் ஆறு படுக்கைகள், குளிர்சாதன வசதியுடன் கூடிய அறுவை அரங்கம் ஆகியவை அனு மதிக்கப்பட்டு அவற்றுக்கான கட்டடப் பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளன.

**மருத்துவப் பிரிவுகள்**

மற்றும் அரசினர் மாவட்டத் தலைமை மருத்துவமனையில், கீழ்க் கண்ட சிறப்புப் பிரிவுகள் செயல் படுகின்றன;

விபத்து மற்றும் அவசரச் சிகிச் சைப் பிரிவு, மகப்பேறு பிரிவு, பால்வினை நோய் மருத்துவம், தோல் மருத்துவம், இயன்முறை மருத்துவம், இரத்த வங்கி, காது மூக்கு தொண்டைப் பிரிவு, பல் மருத்துவம், நரம்பியல் பிரிவு, மகளிர் நலப் பிரிவு, கண்மருத்துவப் பிரிவு, நீரிழிவு சிகிச்சைப் பிரிவு, மனநோய்ப் பிரிவு, தீவிர இருதய சிகிச்சைப் பிரிவு, எலும்பு முறிவுப்

துவம் கண் மருத்துவம் போன்ற சிறப்புப் பிரிவுகள் இருக்கின்றன.

தேன்கனிக்கோட்டை அரசு மருத்துவமனையில் மகப்பேறு, சித்த மருத்துவ உள்நோயாளிகள் பிரிவு, மகளிர் நலச் சிகிச்சை போன்ற சிறப்புப் பிரிவுகள் இயங்கிவரு கின்றன.

ஊத்தங்கரை மற்றும் பாலக் கோடு அரசு மருத்துவமனைகளில்





மகப்பேறு பிரிவு மட்டும் இயங்கி வருகிறது.

பென்னாகரம் அரசு மருத்துவ மனையில் மகப்பேறு பிரிவு, குழந் தைகள் நல மருத்துவம் ஆகிய சிறப்புப் பிரிவுகள் உள்ளன.

**குடும்ப நலச் செம்மை**

தருமபுரி மாவட்டத்தில் நடப்பு ஆண்டில் குடும்பநலத் திட்டத்தின் கீழ் 10,561 அறுவைச் சிகிச்சைகள் நடைபெற்றுள்ளன. 9,161 தாய் மார்களுக்குக் கருத்தடை வளையம் பொருத்தப்பட்டுள்ளது. கருத்தடை மாத்திரை 4,674 வழங்கப்பட்டு, தாய்மார்கள் கருத்தடை மாத்திரை பயன்படுத்துவோர் திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டனர்.

6,770 தகுதி வாய்ந்த தந்தையர் ஆணுறை பயன்படுத்துவோர் திட் டத்தின் கீழ் கொண்டு வரப்பெற் றனர்.

ப்ளோரஸிஸ் நோயினால் பாதிக்கப்பட்டவர்களைக் கண்டறி யத் தமிழ்நாடு குடிநீர் வடிகால், வாரிய ஒத்துழைப்புடன் தருமபுரி மாவட்டம் முழுவதும் மாவட்ட ஆட்சியரின் ஆலோசனையின்படி மருத்துவ முகாம் நடைபெற்று வரு கின்றது.

இளம்பிள்ளை வாதத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகளைக் கண் டறிந்து சிகிச்சை அளித்து, சேவை நிறுவனங்களின் உதவியுடன் அவர் களுக்குப் புது வாழ்வு அளிக்கப் படுகிறது.

இந்த மாவட்டம் முழுவதுமே, கண்புரையினால் பாதிக்கப்பட்டவர்

★ தகடூரை (தருமபுரி) ஆண்ட அதியமான்களை 'சத்திய புத் திரர்கள்' என்று குறிப்பிடுகின்றன அசோகர் காலக் கல்வெட்டுகள். அதியமானுக்கும், சேரன் பெருஞ் சேரல் இரும்பொறைக்கும் நடை பெற்ற போரைப் பற்றிய நூலே 'தகடூர் யாத்திரை; அந்நூலின் முழுப்பகுதிகளும் கிடைக்கவில்லை. அதியமான் மரபைச் சார்ந்தவர்கள் சங்க காலத்திலே மட்டுமன்றிப் பிற்காலச் சோழ-பாண்டியப் பேரரசர்கள் ஆட்சிக் காலத்திலும் வலமைமிக்க சிற்றரசர்களாக இருந் தார்கள்.

களுக்கெல்லாம் சேவை நிறுவனங் களின் ஒத்துழைப்புடன் தனி முகாம்கள் நடத்தி, அறுவைச் சிகிச் சையும் செய்து குணப்படுத்தப் படுகிறது.

புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா மருத்துவநலத் திட்டத்தின் கீழ் இம்மாவட்டத்தில் 475 மருத்துவ முகாம்கள் சிறப்புற நடத்தப்பட்டன.



இருதய நோயால் பாதிக்கப்பட்ட வர்களைக் கண்டறிந்து, சிகிச்சை யளிக்கத் தகுந்தபடி தொண்டு நிறு வனங்களின் ஒத்துழைப்புடன் இம் மாவட்டத்தில் துவளாமல் முகாம்கள் நடத்தப்பட்டன.

**நடமாடும் மருத்துவப் பிரிவு**

தருமபுரியில் இயங்கி வரும் நடமாடும் கண் மருத்துவப் பிரிவு மூலம், மாவட்டம் முழுவதும் கண் நோயால் பாதிக்கப்பட்டவர்களைக் கண்டறிந்து, அவர்களுக்குச் சிகிச்சை வழங்கப்படுகிறது.

மாவட்டத்தில் தர்மபுரி, அரூர், ஓசூர் ஆகிய இடங்களில் இயங்கி வரும் நடமாடும் மருத்துவப் பிரிவு மூலம், மலைவாழ் பிரிவினருக்கும் சமுதாயத்தில் பின்தங்கியவர்களுக் கும் முறைப்படி மருத்துவச் சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது.

1992-93-ஆம் ஆண்டில் தருமபுரி மாவட்ட அரசினர் தலைமை மருத்துவமனையில் கூடு தலாக 24 படுக்கைகள் கொண்ட ஒரு வார்டு கட்டவேண்டும் என்ற பணி அரசால் ஏற்கப்பட்டிருக்கிறது.

தருமபுரி அரசினர் தலைமை மருத்துவமனையில், எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்களைக் கண்டறி யும் எச்.ஐ.வி. கிருமிகளைக் கண்டு பிடிக்கும், நூதனக் கருவி ஒன்று வழங்கப்பட்டுள்ளது. அதன் உதவி யுடன் மாவட்டத்தில் எய்ட்ஸ் நோய் வராமல் தடுக்கவும், பரவாமல் கட்டுப்படுத்தவும் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



எய்ட்ஸ் வைரஸ்கள் பல்கிப் பெருகு வதைத் தடுக்கும் புதிய மருந்துக் கலவை யொன்றை அமெரிக்க விஞ்ஞானிகள் வெற்றிகரமாக உருவாக்கியுள்ளனர்.

மாஸசூஸட்ஸ் பொது மருத்துவ மனையின் சோதனைக் கூடத்தில் இந்த மருந்து உருவாக்கப்பட்டுள்ளது. இதனை எய்ட்ஸ் நோயாளிகள் சிலருக்குக் கொடுத்து சோதனை செய்து பார்க்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

எய்ட்ஸ் நோய் சிகிச்சையில் இதுவரை தனித்தனியே பயன்படுத்தப்பட்டு வந்த ஏ.இசட்.டி., டைடியாக்ஸி ஐனோசின் என்னும் இரு மருந்துகளுடன், பிரிடி னோன் என்னும் மற்றொரு மருந்தை இணைத்து இந்தப் புதிய மருந்துக் கலவை உருவாக்கப்பட்டுள்ளது.

இதுவரை தரப்பட்டு வந்த ஏ.இசட்.டி., டி.டி.ஐ. ஆகிய மருந்துகள் இந்த நோய் பரவும் வேகத்தை மட்டுமே கட்டுப்படுத்தி வந்தன. ஆனால் - இப்போது தரப் பட்டுள்ள மருந்துக் கலவையானது, எய்ட்ஸ் வைரஸ் பெருக்கத்தை முழுமை யாகத் தடுத்து நிறுத்தியுள்ளது.

எய்ட்ஸ் நோய்க்குக் காரணமான 'எச்.ஐ.வி' வைரஸில் 'ரிபோ நியூக்ளிக் அமிலம்' என்னும் மரபுக்கூறு ஒரு புரதப் படலத்தால் சூழப்பட்டுள்ளது. இந்த வைரஸ் ஒரு செல்லைத் தாக்கும்போது, இந்தப் புரதப் பூச்சு கரைந்து, ரிபோ நியூக்ளிக் அமிலமானது டியாக்ஸி நியூக்ளிக் அமிலமாக மாறுகிறது. இம் மாற்றத்திற்கு 'ரிவர்ஸ் டிரான்ஸ்கிப்டேஸ்' என்னும் நொதிப்பொருள் தேவை. இந்த மாற்றம் நிகழ்ந்தவுடன் இந்த வைரஸ், செல்லின் கருப்பகுதியை ஆக்கிரமித்துப் பக்கத்தில் உள்ள செல்களையும் தாக்க ஆரம்பிக்கிறது.

'ரிவர்ஸ் டிரான்ஸ்கிப்டேஸ்' நொதியை அழிப்பதன் மூலம், மேற்கூறிய மாற்றங்களைத் தடுத்து நிறுத்த முடியும். புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள மும் மருந்துக் கலவை, இந்த நொதியைத் தாக்கி அழிக்கிறது. இதனால் எய்ட்ஸ் வைரஸ்களின் பெருக்கம் தடுக்கப் படுகிறது.

# மாணவர் பக்கம்

## பொது அறிவுத் தகவல்கள்

இந்தியாவின் முதல் பிரதமர் யார்? ஜவஹர்லால் நேரு. இந்தியாவின் முதல் பெண் பிரதமர்? இந்திராகாந்தி. இந்தியாவின் தேசியப் பறவை? மயில்.

பாரதியார் பிறந்த ஊர் எது? எட்டையபுரம். அவரது சிறந்த படைப்புகள் யாவை? தேசிய கீதங்கள், பாஞ்சாலி சபதம், குயில் பாட்டு, பாரதியார் நடத்திய பத்திரிக்கையின் பெயர் என்ன? இந்தியா.

சர்.டி. முத்துசாமி அய்யர் அவரது கல்வி பற்றிய சிறப்புச் செய்தி என்ன? தெருவிளக்கில் படித்து முன்னேறியவர். கைவிளக்கு ஏந்திய பாவை என்று யாரை குறிப்பிடுவார்கள்? ஃப்ளாரன்ஸ் நைடிங்கேல்.

சூரியகிரகணம் எவ்வாறு ஏற்படுகிறது சூரியனுக்கும் பூமிக்கும் இடையில் சந்திரன் வந்து சூரிய வெளிச்சத்தை தடை செய்வதால்.

பூமியிலிருந்து வெகு தூரத்திலுள்ள கிரகம் எது - சனி.

காந்தியார் எங்கே உப்பு காய்ச்சினார்? தண்டியில்.

தமிழ்நாட்டின் உப்புசத்தியாக்கிரகம் எங்கு நடந்தது? வேதாரண்யத்தில். அதைத் தலைமை ஏற்று நடத்தியவர் யார்? சர்தார் வேதரத்தினம்.

சந்திர கிரகணம் எவ்வாறு ஏற்படுகிறது? சூரியனுக்கும் சந்திரனுக்கும் இடையில் பூமி வரும்போது பூமியின் நிழல் சந்திரன்மேல் படுவதால்.

மிகச் சிறிய கிரகம் எது - புதன்(மெர்குரி)

பூமி தன்னைத்தானே சுற்றும்போது எந்தத் திசையை நோக்கிச் சுற்றுகிறது? மேற்கிலிருந்து கிழக்காகச் சுற்றுகிறது.

உலகில் அதிமழை பொழியும் இடம் இந்தியாவிலுள்ள சிரபுஞ்சி - ஆண்டுமழை 1232 செ.மீ.

## "அறிவு வேண்டும்!"

—பசுமாத்தூர் மு. ஞானசேகரன்



அறிவு வேண்டும் தம்பி! அதனால்
ஆக்கம் ஊக்கம் உண்டே!
தெளிவு வேண்டும் போது எதையும்
தெரிந்து கொள்ள வேண்டும்!
அறிவினாலே உயர்ந்தார் தம்மை
அறிந்துகொள்ள வேண்டும்!
பரிவினோடு சொல்லும் பெரியார்
பண்பை உணர வேண்டும்!
கெட்ட அறிவு வேண்டாம் நல்ல
கேள்வி ஞானம் வேண்டும்!
அட்டியின்றிச் சொல்வேன் உயர
அறிவுச் செல்வம் வேண்டும்!

இரவும்பகலும் சமமாக இருக்கும்காலம் சூரியன் பூமத்திய ரேகையிலிருக்கும்போது, அதாவது மார்ச் 21. செப் 22. பூமிதன்னைத்தானே சுற்றுவதற்கு ஆகும் நேரம்-24 மணி.

துருவா என்பது என்ன? பம்பாயிலுள்ள அணுசக்தி ஆய்வு நிலையம்.

கோவா எந்த அந்நியர் ஆட்சியில் இருந்தது? போர்ச்சுகீசியர். அது எப்போது விடுதலை பெற்றது? 1961-இல்.

பாண்டிச்சேரியில் பிறந்த தமிழ்க் கவிஞர் யார்? பாரதிதாசன்.

இரப்பர் உற்பத்தியில் சிறந்து விளங்கும் நாடு - மலேசியா.

சீனிவாசா ராமானுஜம் எந்தத் துறையில் சிறந்து விளங்கினார் - கணிதம்.

இந்தியாவிலுள்ள மிகப்பெரிய நீர்மின் திட்டம் பக்ராநங்கல்.

மிகவும் ஒளியுள்ள கிரகம் சுக்கிரன் (வீனஸ்).

இந்தியாவின் முதல் பெண் முதலமைச்சர் யார்? சுசேதா கிருபளானி. இந்தியாவின் முதல் பெண் கவர்னர் யார்? சரோஜினி நாயுடு. சுதந்திர இந்தியாவின் முதல் சேனாதிபதி யார்? கரியப்பா.

உலகில் உள்ள மொத்தக் கண்டங்கள் எத்தனை? அவை யாவை? ஏழு. அவை ஆசியா, ஆப்பிரிக்கா, வடஅமெரிக்கா, தென்அமெரிக்கா, ஐரோப்பா, ஆஸ்திரேலியா, அண்டார்டிகா ஆகும்.

★ நல்ல எண்ணங்களைத் தூவினால்தான், அவை நல்ல பலனைத் தரும். பகுத்தறிவால் பண்படாத எந்த உள்ளத்தில் நல்லெண்ணத்தை விதைத்தாலும் அது நல்ல விளைவைத் தராது.





# தேசிய மாணவர் படை



மாணவ-மாணவிகளிடையே ஓரளவுக்குப் போர்க்குணம் உண்டாகத்தான் வேண்டும் என்பது இன்றைய காலகட்டத்தில், மிகவும் முக்கியமாகிவிட்டது. 'தேசிய மாணவர் படை' என்கிற அமைப்பு, இதைத்தான் தொடக்கம் முதலே செய்து வருகிறது.

தேசிய மாணவர் படையின் (National Cadet Corps) முக்கியக் குறிக்கோள்கள் இரண்டு ஆகும். அவை-

1. இளம் சமுதாயத்தினரைக் குண நலன்கள் உடையவர்களாக்குவது, துணிவுடையவர்களாக்குவது, சகோதர பாசமுடையவர்கள் ஆக்குவது, கட்டுப்பாடு பெறச்செய்வது, வழிநடத்திச் செல்லும் வல்லமை உடையவர்களாக்குவது, வீரதீரச் செயல்களில் ஈடுபடச் செய்வது, விளையாட்டுகளிலே ஆர்வம் கொள்ள வைப்பது, தியாக சீலர்களாக்குவது, நல்ல குடிமகனாகப் பெருமை பெறச் செய்வது ஆகியவை ஒரு பகுதி.

2. விவேகம் உள்ள வீரர்களாக்குவது, இளமை முதலே நல்லெண்ணத்தோடு வளரச் செய்வது, ஒழுங்கான செயல்பாடு உடையவர்களாக்குவது, தலைமை தாங்கத் தக்க திறமை பெறச் செய்வது, போர் வீரர்களைப் போல் பொலிவுற வைப்பது, சிறந்த நாட்டுப்பற்று உடையவர்களாக்குவது ஆகியவை இன்னொரு பகுதி.

1925-இல், பிரிட்டிஷாரால் 'பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் பயிற்சிப் படை' (University Officers Training Corp) என்றுதான் முதன் முதலாக இந்த அமைப்பு (VOTE) உருவாக்கப்பட்டது. அதில் கல்லூரி மாணாக்கர்களோ, பல்கலைக் கழக மாணாக்கர்களோதான் பங்குபெற முடியும்.

அதன்பின்பு, இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகு, 15.7.1948-இல் தான், நாடாளுமன்றத்தில் அது குறித்து முறைப்படி ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்டது. கல்லூரி மாணாக்கர்கள் மட்டுமன்றி உயர் நிலைப்பள்ளி மாணவ மாணவிகளும் பங்குபெறத் தக்கதாக அந்த அமைப்பை மாற்றுவது பற்றி அங்கே பரிசீலித்தார்கள். முடிவாக- 'தேசிய மாணவர் படை' என்ற அமைப்பு அதன்பேரில்தான் இந்தியாவில் அமைக்கப்பட்டது.

மத்திய அரசில் அதாவது டில்லியில், இந்த அமைப்பு பாதுகாப்புத் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கிறது; நம் தமிழ்நாடு போன்ற மற்ற மாநிலங்களிலோ, கல்வித்துறை மூலமே இது நிர்வகிக்கப்படுகிறது.

இப்போது - தமிழ்நாடு, புதுவை ஆகிய இரு மாநிலங்களைச் சேர்ந்த தேசிய மாணவர் படைகளின் உயர் அதிகாரியாக ஒருவரே பதவி வகிக்கிறார். அவர், கம்மோடர் ரவி ஆர். நாயர் என்கிற கடற்படை அதிகாரி ஆவார்.

சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை, கோயம்புத்தூர் - ஆகிய நான்கு பெரிய நகரங்களிலேயே தற்போது உயர்மட்ட தேசிய மாணவர் படை அமைக்கப்பட்டுள்ளது. 'ஏ' என்றும் 'பி' என்றும் சென்னையில் மட்டுமே இதில் இரண்டு அமைப்புகள் இருக்கின்றன.

இந்தப்படையில்- தரைப்படை, தொழில் நுணுக்கப் பிரிவு, கப்பற்படை, விமானப்படை, மருத்துவப் பிரிவு, மகளிர் பிரிவு என ஆறு பிரிவுகள் இருக்கின்றன.

கல்லூரி மாணவ மாணவிகள் உள்ள தேசிய மாணவர் படை முதுநிலைப் பிரிவு (Senior Wing) என்றும், உயர்நிலைப் பள்ளி மாணாக்கர் பங்கேற்பது இளநிலைப் பிரிவு (Junior Wing) என்றும் குறிப்பிடப்படுகிறது. இதுதவிர, மகளிர் பிரிவு (Girls Wing) ஒன்றும் தனியே இருக்கிறது.

இப்படைப் பயிற்சியின் கட்டுப்பாடெல்லாம் மத்திய அரசில் இருந்த போதிலும், இதற்காக ஆகும் செலவில் மூன்றில் ஒரு பகுதியை அந்தந்த மாநில அரசே ஏற்க வேண்டும் என்பது சட்டம். படிப்புக்கு இடையூறின்றி விடுமுறை காலத்தில்தான் தேசிய மாணவர் படையினர் முகாம் வெளியூர்களில் அமைக்கப்படும். அப்போது ஆகிற செலவில் மத்திய அரசும், மாநில அரசும் பாதிக்குப் பாதி என்ற அளவில் அதைப் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

★ நாகரிகம் என்பது நமது வாழ்க்கையின் தேவைகளை அதிகரித்துக் கொண்டே போவது அல்ல; தாமாகத் தேவைகளைக் குறைத்து வாழ்வதே உயர்ந்த நாகரிகமாகும்.

—காந்தியடிகள்

வினர்கள் பயனடையவும் ஏதுவாக அமையும். மேலும் அம்மாவட்டத்திலுள்ள பிரதம விற்பனைச் சங்கங்கள், மொத்த விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கைத்தறிக் கூட்டுறவுச் சங்கங்கள் இத்திட்டத்தினால் பயன் பெறக் கிடங்குகள், ஊர்திகள், காட்சியறைகள் மற்றும் பணிக் கட்டடம் போன்ற வசதிகளைச் செய்து தருவதால் மேற்படி கூட்டுறவு நிறுவனங்கள் லேவாதேவியை வளர்த்துக் கொள்ளும் வாய்ப்பும் அதே நேரத்தில் பொது மக்களுக்காகச் சேவையும் பெருக்க வாய்ப்புகளும். ஏற்படும்.

இதேபோன்று தென்னார்க்காடு மாவட்டமும் இத்திட்டத்தைச் செயல்படுத்தத் தெரிவு செய்யப்பட்டு, இத்திட்டத்தை ஐந்து ஆண்டுகளில் செயல்படுத்த ரூ.1508.207 இலட்சம் அனுமதித்துள்ளது. இத்தொகையானது தேசியக் கூட்டுறவு வளர்ச்சி கழகத்திடமிருந்து தமிழக அரசு கடனாக ரூ.1277.754 இலட்சமும் மானியமாக ரூ.115.2365 இலட்சமும் பெற்றும் மாநில அரசின் பங்கு மானியமாக ரூ.115.2365 இலட்சமும் சேர்த்து இத்திட்டத்தை தென்னார்க்காடு மாவட்டத்தில் செயல்படுத்துகிறது.

தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து பெறும் கடன் தொகை ரூ.1277.754 இலட்சத்தை தமிழக அரசு கூட்டுறவு நிறுவனங்களுக்குக் கடனாக ரூ.461.668 இலட்சமும் பங்குத் தொகையாக ரூ.815.816 இலட்சமும் அளிப்பதால் ஏற்படும் வட்டி இழப்பைப் பொது நலன் கருதி தமிழக அரசு ஏற்றுக் கொள்கிறது.

1991-92-ஆம் ஆண்டு அதாவது முதலாம் ஆண்டு நிதி உதவியில் 50 சதவிகிதம் திட்டம் செயலாக்கத்திற்கென ரூ.218.722 இலட்சம் அரசு விடுத்துள்ளது. இந்த நிதி உதவியானது 31.3.92 அன்று அரசால் விடுவிக்கப்பட்டதால் இத்திட்டம் 1991-92-ஆம் ஆண்டில் செயலாக்க இயலவில்லை.

இத்திட்டம் 1992-93-ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படும். தென்னார்க்காடு மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கி அனுப்பியுள்ள துணைத் திட்ட மதிப்பீடு வழி முறை (System of Sub Project Approval) தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது.

முதலாம் ஆண்டுக்கென ஒதுக்கப்பட்ட தொகையில் எஞ்சியுள்ள 50 சதவிகிதம் ரூ.218.392 இலட்சத்திற்கு முன் மொழிவுகள் அரசுக்கு அனுப்பி விடுவிக்கக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. இத்தொகையில் கடன் ரூ.68,93,975, பங்குத் தொகை ரூ.1,23,24,325 மானியம் ரூ.26,20,900 ஆகும். ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தைத் தென்னார்க்காடு மாவட்டத்தில் 1992-93 முதல் செயல்படுத்த திட்ட அமலாக்கக் குழு மற்றும் திட்ட அமலாக்க முகமைக் குழு போன்றவை ஏற்படுத்த அரசோடு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



இத்திட்டத்தினால் தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 98 இரும்புப் பெட்டகங்களும், 135 பாதுகாப்பு அறைகளும், 290 வங்கி முகப்புகளும், 146 கிடங்குகளும், 5 கட்டடங்களும் அமைத்துக் கொடுக்கப்படும். இதேபோன்று உழவர் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் பிரதம விற்பனைச் சங்கங்கள், விவசாயப் பொறியியற் சங்கங்கள், கைத்தறிச் சங்கங்கள், மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள், கால்நடைக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகிய கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கட்டுமானப் பணிகளும், தொழிற்கூடங்களும், பதனிடும் அலகுகளும் அமைத்துத் தருவதுடன் லேவாதேவி உயர்த்துவதற்காக பங்கு மூலதன உதவிகள் அளிக்க வழிவகை உள்ளதால், இக்கூட்டுறவு நிறுவனங்கள் தங்கள் லேவாதேவியை உயர்த்திக் கொள்ளவும், விவசாய அங்கத்தினர்களுக்கும் அங்கத்தினர் அல்லாதவர்களுக்கும் நலிவுற்ற பிரிவினர்களுக்கும் சேவை செய்ய வாய்ப்புகள் பெருக்கவும் ஏதுவாக அமைந்துள்ளன.

இத்திட்டத்தை மேலும் விரிவுபடுத்தும் பொருட்டு கோயம்புத்தூர் மற்றும் திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டங்கள் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டு திட்ட அறிக்கை தயாரிப்பதற்காக முறையே அக்ரிகல்சுரல் பைனான்ஸ் கார்ப்பரேசன் பம்பாய் மற்றும் டாட்டா எகனாமிக் கன்சல்டன்சி சர்வீசஸ், சென்னை ஆகியோர் நியமிக்கப்பட்டனர். கோயம்புத்தூர் மாவட்டத்திற்கு அக்ரிகல்சுரல் பைனான்ஸ்





கார்ப்பரேசன் தயாரித்த வரைவு ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்ட அறிக்கை 6.7.92 அன்று நடந்த மாநிலக் குழுக் கூட்டத்தில் ஒப்புதலுக்காக வைக்கப்பட்டபோது சில ம்மாற்றங்கள் பரிந்துரைக்கப்பட்டன. மாநிலக் குழுக் கூட்டம் பரிந்துரைத்துள்ள மாற்றங்கள் திருத்தம் செய்யப்பட்டு தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட வேண்டும்.

இதேபோன்று திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்திற்கென, டாட்டா எகனாமிக் சர்வீசஸ். சென்னை தயாரித்த வரைவுத் திட்ட அறிக்கை 21.4.92 அன்று மாவட்டக் குழுக் கூட்டத்தில் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டது. மாவட்டக் குழு வரைவுத் திட்ட அறிக்கையைப் பரிசீலனை செய்து சில திருத்தங்கள் பரிந்துரை செய்து திட்ட அறிக்கையை மீண்டும் வழங்கக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. திருத்திய வரைவுத் திட்ட அறிக்கை டாட்டா எகனாமிக்ஸ் கன்சல்டன்சி சர்வீசஸ் வழங்கப்பட வேண்டியுள்ளது.

மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் 14.9.92 அன்று சட்டப்பேரவையில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் தர்மபுரி மாவட்டத்தில் 1992-93-ஆம் முதல் செயல்படுத்தப்படும் என அறிவித்த தன்படி, தர்மபுரி மாவட்டத்தில் செயற்படுத்த தீர்மானிக்கப்பட்டது. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அலுவலகத்தில் செயல்படும் 'திட்டக் கண்காணிப்புக் குழு' தர்மபுரி மாவட்டத்திற்காக ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்ட அறிக்கை தயாரித்து மாநில அளவிலான குழு மற்றும் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் ஒப்புதலைப் பெறும் பொருட்டு அரசுக்கு அனுப்பி வைத்தது.

இத்திட்டத்தின் மொத்தத் தொகை ரூ.1492.528 இலட்சம் ஆகும். இந்த ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்ட வரைவு அறிக்கை 5.11.92 அன்று நடைபெற்ற மாநில அளவிலான குழுக் கூட்டத்தில் வைக்கப்பட்டது. இக்குழு இவ்வறிக்கையைப் பரிசீலனை செய்து சில மாற்றங்கள் செய்யவும் சில திட்டங்களைக் கைவிடவும் பரிந்துரை செய்துள்ளது.


எங்கள் இதயங்கனிந்த நல்வாழ்த்துக்கள்

ஏழுமலை தொழில் நுட்பக் கல்லூரி

சாலாமேடு, விழுப்புரம்-605 602

இ.எஸ். கல்வி அறக்கட்டளையின் கீழ் தமிழக அரசு அங்கீகாரத்துடன் 1983-84-ஆம் ஆண்டு முதல் கீழ்க்காணும் ஐந்து டிப்ளமோ இன் இன்ஜினியரிங் பிரிவுகளுடன் தமிழ்நாட்டில் உள்ள சிறந்த தொழில் நுட்ப பயிலகங்களில் ஒன்றாக விளங்குகிறது. 1990-91-ஆம் ஆண்டு தேர்வில் தமிழகத்தில் உள்ள அனைத்துப் பாலிடெக்னிக்குகளிலும் முதலாவதாக இங்கு பயின்ற திரு. ஜி. சரவணன் இடம் பெற்றது இப்பயிலகத்திற்குச் சிறப்பாகும்.

1. சிவில் இன்ஜினியரிங் (Civil Engineering)
2. மெக்கானிக்கல் இன்ஜினியரிங் (Mechanical Engineering)
3. எலெக்ட்ரிகல் & எலெக்ட்ரானிக்ஸ் இன்ஜினியரிங் (Electrical & Electronics Engineering)
4. எலெக்ட்ரானிக்ஸ் & கம்யூனிகேஷன் இன்ஜினியரிங் (Electronics & Communication Engineering)
5. கம்ப்யூட்டர் டெக்னாலஜி (Computer Technolo y)



சே.ம. சீனிவாசன்
முதல்வர்

ஏ. சாமிக்கண்ணு
தாளாளர்

ஆண்டுதோறும் ஜனவரி 26-ஆம் நாள், டில்லியில் குடியரசு நாள் விழா நடக்குமல்லவா? அதில் அணிவகுப்புகள் நடைபெறுவதுண்டு; அந்த அணிவகுப்பில் ஒவ்வொரு மாநிலத் தேசிய மாணவர் படையினரும் பங்கேற்கச் செய்வார்கள். அவர்களில் சிறந்த பயிற்சியாளராகத் திகழும் மாணாக்கர்களுக்கு இந்தியப் பிரதமரே தமது கரத்தால் விருது வழங்கிப் பாராட்டுவார்.

இந்த வகையில், கடந்த 1971-ஆம் ஆண்டு முதல் ஏழாண்டுக் காலம் தொடர்ந்து தமிழ்நாட்டுத் தேசிய மாணவர் படையினரே முதல் பரிசு பெற்று வந்தனர். இதுபற்றி முன்னாள் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்கள்- ''தமிழ்நாடு தேசிய மாணவர் படையினர் திறமையான பயிற்சியாளர்கள்'' என்று குறிப்பிட்டுப் பாராட்டிப் பேசியது உண்டு. அதன் பிறகும் ஓராண்டு நம் தமிழ்நாடு ஒரு முதல்பரிசு பெற்றது.

இப்போது தமிழ்நாடு முழுமையிலுமாக முதுநிலைப் பிரிவு தேசிய மாணவர் படையில் மொத்தம் 17,370 பேர் இருக்கிறார்கள். இளநிலைப் பிரிவிலோ 61,350 பேர் உள்ளனர். முதுநிலைப் பிரிவில் இருக்கின்ற பெண்கள் எண்ணிக்கை 3,200 ஆகும்; இளநிலைப் பிரிவில் உள்ள பெண்கள் எண்ணிக்கையோ 5,200.

இவ்வளவு பேர்களுக்கும் சிறந்த முறையில் பயிற்சியளிக்கின்ற அதிகாரிகள் தமிழ்நாட்டில் 949 பேர் இருக்கின்றனர்; இவர்கள் அனைவரும் முழுநேரப் படைப்பிரிவினர் அல்ல; கல்லூரிகளில் பேராசிரியர்களாகப் பணிபுரிகிறவர்களேயாவர்; இந்தப் பணி அவர்களுக்கு ஓய்வுநேரத் தனிப் பணி ஆகும்.

ஆக மொத்தத்தில்- தேசிய மாணவர் படை என்பது- இன்றைய சிறுவர்களை இந்த நாட்டின் நாளைய தலைவர்களாக்கும் உயரிய குறிக்கோளோடு ஆரம்பிக்கப்பட்டதேயாகும் என்பது குறிப்பிடத்தக்கதாகும். மாணவ மணிகள் ஆர்வத்தோடு இதில் சேர்ந்து பயிற்சி பெற்றால், ஒவ்வொருவரும் ஒளிமயமான எதிர்காலத்தைக் காண முடியும்.

—பி.எல்.ஆர்.

# சின்னச் சின்ன செய்திகள்

● 'ஆஸ்கார்' சர்வதேச அளவில் சிறந்த திரைப்படத்திற்காக வழங்கப்படும் விருது. அதற்குச் சமமான விருது ஒன்று, சேலம் உருக்காலைக்கும் கிடைத்துள்ளது.

பிரிட்டிஷ் பாதுகாப்புச் சபையின் 1991-ஆம் ஆண்டு கௌரவ வாள் விருது சேலம் உருக்காலைக்குக் கிடைத்துள்ளது. தொழிற்சாலைப் பாதுகாப்பு விதிகளைச் சிறந்த முறையில் கடைப்பிடிப்பதற்காக வழங்கப்படும் இவ்விருதினை சேலம் ஆலை மூன்றாவது முறையாகப் பெற்றுள்ளது.

ஏற்கெனவே 1984, 1986-ஆம் ஆண்டுகளில் இந்த விருது கிடைத்தது. தொழிற்சாலை பாதுகாப்பு சம்பந்தமான நிர்வாகம், தொழிலாளர் பயிற்சி, தொழிற்சாலை சுகாதாரம், விபத்துத் தடுப்பு ஆகியவற்றில் மிகச் சிறப்பாகச்சேவை புரியும் முப்பது நிறுவனங்களுக்கு இவ்விருது வழங்கப்படுகிறது.

● வர்த்தகம் என்றாலே லாப நோக்கு கொண்டதுதானே? அனைத்திந்திய வானொலியின் வர்த்தக ஒலிபரப்பு மட்டும் அதற்கு விதிவிலக்கா என்ன? 1991-92-ல் வர்த்தக ஒலிபரப்பு மூலம் வானொலிக்கு ரூ.53 கோடி லாபம் கிட்டியது. நடப்பாண்டில் இது 60 கோடியாக உயரக்கூடும். எட்டாவது திட்டகாலத்தில் மேலும் 10 விவித பாரதி மையங்களைத் திறக்க அரசு திட்டமிட்டுள்ளது. சுமார் பத்து கோடி குடும்பத்தினர் வர்த்தக ஒலிபரப்பினைக் கேட்டு இன்புறுகின்றனர்.

இவ்வாண்டு நவம்பர் முதல் தேதியன்று வர்த்தக ஒலிபரப்பு சேவை தொடங்கி 25 ஆண்டுகள் ஆகின்றன. நாட்டில் தற்போது முப்பது விவித பாரதி மையங்கள் உள்ளன. தினமும் சராசரி 800 நிமிடங்கள் ஒலிபரப்பாகும் நிகழ்ச்சிகளில் 80 நிமிடங்கள் மட்டுமே விளம்பரத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ளன.

● சுற்றுலாப் பயணிகளைக் கவர்வதற்காக, இந்தியச் சுற்றுலாத் துறை ''வெப்பமிகு தெற்கு'' என்ற சுற்றுலா வளர்ச்சித் திட்டமொன்றை அறிமுகப்படுத்த உள்ளது. தென் இந்தியப் பகுதிகளுக்குச் சுற்றுலாப் பயணியரை வரவழைக்கும் நோக்கத்தோடு இத்திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

கடந்த (அக்டோபர்) மாதத்தில் மட்டும் 11,557 சுற்றுலாப் பயணிகள் சென்னைக்கு வருகை புரிந்தனர். சென்ற ஆண்டின் இதே மாதத்தில் வருகை புரிந்த 10,158 சுற்றுலாப் பயணிகளுடன் ஒப்பிடுகையில், இது 14 சதவீதம் அதிகம். இன்னும் இரண்டு ஆண்டுகளில் சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்காக மொத்தம் 9,952 அறைகள் கொண்ட 199 நட்சத்திர ஓட்டல்கள் கட்டி முடிக்கப்படும். ஓட்டல் அறைகளின் எண்ணிக்கை இதனால் இரண்டு மடங்காக உயரும்.

குன்னூரில் டிசம்பர் 18 முதல் 20-ஆம் தேதி வரை நடைபெற உள்ள 'தேயிலை மற்றும் சுற்றுலா' விழாவைக் கண்டுகளிக்க, இங்கிலாந்து, மேற்கு ஜரோப்பா, அமெரிக்கா முதலான நாடுகளிலிருந்து ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.





# தமிழ்நாட்டில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம்

**எம். சுப்பையா**
கூடுதல் பதிவாளர் ஐ.சி.டி.பி. ஒருங்கிணைந்த கூட்டுறவு மேம்பாட்டுத் திட்டம்

நாட்டின் சில தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் கூட்டுறவு வளர்ச்சியைச் செயல்படுத்துவதற்கெனத் தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் 'ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம்' எனும் திட்டத்தினை உருவாக்கியுள்ளது.

பிரதமக் கூட்டுறவுச் சங்கங்களின் பணிகளான வேளாண்மை மற்றும் தோட்டக்கலை, பட்டுப்பூச்சி வளர்த்தல், பன்றி வளர்த்தல், கோழிப்பண்ணை, மீன் வளர்ப்பு போன்ற வேளாண்மை சார்ந்த பிரிவுகள் மற்றும் கைத்தறி, கிராமக் கைத்தொழில் கைவினைஞர் தொழில் போன்ற பண்ணை சாரா பிரிவுகள் முதலியவற்றில் பன்முகப்படுத்திப் பெருக்குதல் இத்திட்டத்தின் நோக்கமாகும். சங்கத்தை அடிப்படையாகக் கொள்ளாமல் பகுதி அடிப்படையிலான வளர்ச்சி காண்பதே இத்திட்டத்தின் குறிக்கோளாகும்.

தமிழ்நாட்டில் இத்திட்டத்தைச் செயல்படுத்த முதன்முதலில் காமராசர் மாவட்டம் தெரிவு செய்யப்பட்டது. காமராசர் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தை ஐந்து ஆண்டுகளில் செயல்படுத்த தமிழ்நாடு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. ஐந்து ஆண்டுகளில் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின் மொத்தச் செலவு ரூ.862.52 இலட்சங்களாகும்.

இந்த நிதி உதவி தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் தமிழக அரசுக்குக் கடனாக ரூ.742.41 இலட்சமும் மானியமாக ரூ.60.05 இலட்சமும் அளிப்பதுடன், தமிழக அரசு தனது பங்கான மானியத் தொகை ரூ.60.05 இலட்சம் ஏற்றுக்கொண்டு இத்திட்டத்தைச் செயல்படுத்துகிறது.

தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து பெறும் கடன் தொகை ரூ.742.41 இலட்சத்தில் தமிழக அரசு கூட்டுறவு நிறுவனங்களுக்கு ரூ.319.3175 இலட்சம் கடனாகவும், ரூ.423.0925 இலட்சம் பங்குத் தொகையாகவும் வழங்குவதால் ஏற்படும் வட்டி இழப்பை, பொது நலன் கருதி மாநில அரசே ஏற்றுக் கொள்கிறது.

முதன் மூன்று ஆண்டுகளுக்காக ஒதுக்கப்பட்ட தொகையான ரூ.638.90 இலட்சத்தில் தமிழ்நாடு அரசு இதுவரை ரூ.544.06 இலட்சம் விடுவித்துள்ளது. இத்தொகையானது கடனாக ரூ.1,91,14,255-ம், பங்குத் தொகையாக ரூ.3,04,16,745-ம், மானியமாக ரூ.48,75,000-ம் ஆகும். ரூ.544.06 இலட்சத்தில் உப திட்ட மதிப்பீட்டுக் குழு பல்வேறு துணைத் திட்டங்களுக்காக ரூ.505.74 இலட்சம் அனுமதி அளித்துள்ளது. திட்ட அமலாக்க முகமையான இராமநாதபுரம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி இதுவரையில் ரூ.393.64 இலட்சம் திட்ட நடைமுறைப்படுத்துவதற்கு விடுத்துள்ளது. மீதித் தொகையான ரூ.150.42 இலட்சம் தொடர்ந்து நடைமுறைப்படுத்துவதற்கு இராமநாதபுரம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியிடம் உள்ளது. நான்காம் ஆண்டிற்கென (1992-93) ரூ.158.68 இலட்சம் ஒதுக்கப்பட்டிருப்பினும் தொடர்ச்சியான திட்ட அமலாக்கத்திற்கு, ஏற்கெனவே உபரியாக இருக்கும் தொகையைக் கருத்தில் கொண்டும், சில துணைத் திட்டங்களை நீக்கி விட்டபடியாலும் ரூ.97.225 இலட்சம் மட்டுமே அனுமதிக்குமாறு அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டுள்ளன.

இத்திட்டத்தினால் காமராசர் மாவட்டத்திலுள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு 134 கிடங்குகள், 100 பாதுகாப்புத் துறைகள் 100 இரும்புப் பெட்டகங்கள், 100 வங்கி முகப்புகள், 22 டிராக்டர்கள் மற்றும் ரேஷன் கடைகள் போன்ற கட்டுமான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்க வழிவகைகள் உள்ளன. பங்கு மூலதனமும் பெற்று பயனடைவதால் அம்மாவட்டத்திலுள்ள விவசாய அங்கத்தினர் நலிவுற்ற பிரி

**கூட்டமைப்பின் அடிப்படையில் வழங்கும் கடன் உதவி:**

கனரா வங்கியைத் தலைமையாகக் கொண்ட வர்த்தகங்களை இணைக்கும் கூட்டமைப்பின் கீழ், தேசிய வங்கியின் கடன் வழங்கும் உரிமம் அளிக்கும் திட்டத்தின்கீழ் அனுமதி பெற்று இவ்வங்கி தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகத்திற்கு ரூ.2.50 கோடி அளவிற்கு காசுக்கடன் வரம்பு ஒப்பளித்துள்ளது. குறுகிய கால வேளாண்மைக் கடன்களுக்கான வட்டி வீதத்தை குறைத்ததன் விளைவாக, தலைமைக் கூட்டுறவு வங்கிகளுக்கு ஏற்படும் நட்டத்தை ஈடுகட்டும் பொருட்டு, தேசிய வங்கி, பாரத ஸ்டேட் வங்கியைத் தலைமையாகக் கொண்டு பல்வேறு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கிகளை உள்ளடக்கிய ஒரு உணவு தானியக் கூட்டமைப்பை உருவாக்கியுள்ளது. பதிவாளரது அனுமதியுடன் இவ்வங்கி மேற்குறிப்பிட்ட கூட்டமைப்பில் ரூ.5 கோடி செலுத்தியுள்ளது.

**தேசிய வீட்டு வசதி வங்கி:**

குடியிருப்பு வீடுகள் வாங்கவும், கட்டுவதற்கும் மற்றும் பழுது பார்த்தலுக்கும் வங்கிக்கடன்கள் வழங்கவும் அதற்கு முழு அளவு மறுநிதி உதவி வழங்கவும் தேசிய வீட்டு வசதி வங்கி ஒப்புக் கொண்டுள்ளது. மத்தியக் கூட்டுறவு வங்கிகள் வழங்கும் இவ்வகைக் கடன்களுக்கு மறு நிதி வழங்கப்படும் எனத் தெரிவித்துள்ளது.

**உலக வங்கி கிடங்கு கட்டுமானத் திட்டம்:**

தேசியக்கூட்டுறவு வளர்ச்சிக் கழகம், மூன்றாவது உலக வங்கி கிடங்கு கட்டுமானத் திட்டத்தின்கீழ், தமிழகத்தில் கிடங்கு வசதியை மேம்பாடு செய்வதற்கான ஒரு திட்டத்தை முன்வைத்துள்ளது. தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகக் கடனுதவி இவ்வங்கியின் மூலமாக அளிக்கப்படும். மாநில அரசு இக்கடனை 3 ஆண்டுகள் ஒத்திவைப்புக் காலத்துடன், 12 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்துவதற்கான அரசு பொறுப்பு நிதியளித்துள்ளது.

**தொழில் நுட்பப் பிரிவு:**

வேளாண்மை சாராக் கடன்கள் வழங்குவதற்குத் தேவையான தொழில் நுட்ப அறிவினை மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்குத் தந்து உதவிடவும், இவ்வகைக்கடன் விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்யவும் உருவாக்கப்பட்ட தொழில்நுட்பப் பிரிவுத் தொழில் துறையிலிருந்து மேலும் ஒரு உதவி இயக்குநர் எடுத்துக் கொண்டதன் மூலம் வலிவூட்டப்பட்டது.

## தருமபுரி: சீதோஷ்ண நிலை

**தருமபுரி மாவட்டத்தின் கர்நாடக எல்லையோரப் பகுதிகளைத் தவிர மற்ற இடங்களில் பொதுவாக மிதமான வெப்பமே காணப்படும். ஆண்டில் மார்ச் தொடங்கி மே மாதம் வரை இங்கு பொதுவாக அதிக வெப்பம் காணப்படும். ஏப்ரல் மாதத்தில் இந்த மாவட்டத்தின் அதிகபட்ச சீதோஷ்ண நிலை 38 டிகிரி சென்டிகிரேடு. டிசம்பர் முதல் பிப்ரவரி மாதம் வரை இந்த மாவட்டம் பொதுவாகக் கடுங்குளிராக இருக்கும். ஜனவரி மாதத்தில் இதன் சீதோஷ்ண நிலை குறைந்த அளவு 17 டிகிரி சென்டிகிரேடாக இருக்கும். தருமபுரி மாவட்டத்தின் ஆண்டு மழை அளவு 825 மி.மீட்டர். இது மாநிலத்தின் சராசரி மழை அளவைக் காட்டிலும் 10 சதம் குறைவாகும்.**

**சார்பு நிறுவனங்களின் முன்னேற்றம்:**

இவ்வங்கி 1985-86-ஆம் ஆண்டு முதல் தேர்ந்தெடுக்கப்பட்ட தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் நவீன வங்கி முகப்பு அமைக்கவும், மேஜை, நாற்காலி போன்ற தளவாடச் சாமான்கள் வாங்கவும் ஆகும் செலவில் 50 விழுக்காட்டினை மானியமாக அளித்து வருகிறது. இத்திட்டத்தின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் எண்ணிக்கை 1000-லிருந்து 1640-ஆக உயர்த்தப்பட்டுள்ளது. 31.10.1992 வரை வங்கியால் இத்திட்டத்தின் கீழ் 584 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு ரூ.33.36 இலட்சம் மானியமாக அளிக்கப்பட்டுள்ளது.

மத்தியக் கூட்டுறவு வங்கிகள் வசூல் பணியினைச் செவ்வனே நிறைவேற்றுவதற்காக அவைகளுக்கு இவ்வங்கி வாகனங்கள் வாங்கிக் கொடுத்துள்ளது. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் நகைக் கடன்கள் வழங்க ஏதுவாக இவ்வங்கி 150 தேர்ந்தெடுக்கப்பட்ட தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு இரும்புப் பெட்டகங்கள் வழங்கியுள்ளது.

இவ்வங்கி தனது நிதியிலிருந்து மாநிலத்திலுள்ள அனைத்து மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கும் அவற்றின் மாநில வரைவோலைத் திட்டத்தை மேலும் சிறப்பாகவும் துரிதமாகவும் செயல்படுத்த கம்ப்யூட்டர் பிரிண்டர், குளிர்சாதன வசதி மற்றும் அதற்குத் தேவையான சாஃப்ட்வேர் ஆகியவற்றை வழங்கியுள்ளது.

**வேளாண்மைக் கூட்டுறவுப் பணியாளர் பயிற்சி நிலையம்:**

கிடங்குகளைப் பெற்றுள்ள தொடக்கக் கூட்டுறவுகளின் பணியாளர்களுக்குத் தேவையான பயிற்சி அளிப்பதற்கு, இவ்வங்கி, தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் மூலமாக உலக வங்கியிடம் பெற்ற நிதியுதவியுடன் ஒரு பயிற்சி நிலையத்தைத் துவக்கியுள்ளது.

இந்தப் பயிற்சி நிலையத்துக்கான சொந்தக் கட்டடம் மாதவரத்தில் ரூ.245 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளது. இதில் ரூ.110 இலட்சம் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் மானியமாகும்.

ஒரே சமயத்தில் நான்கு பயிற்சி வகுப்புகள் நடத்துவதற்கு வசதியாக இப்பயிற்சி நிலையம் உருவாக்கப்பட்டுள்ளது. தலைமைக் கூட்டுறவு வங்கி, மத்தியக் கூட்டுறவு வங்கிகள், நகரக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் உள்ளிட்ட மாநிலத்திலுள்ள அனைத்து கூட்டுறவு வங்கிப் பணியாளர்களின் பயிற்சித் தேவைகளைப் பூர்த்திசெய்யும் ஒரு நிறுவனமாக இது அமையும்.

**தொடக்கக் கூட்டுறவு நிறுவனங்களின் வளர்ச்சி நிதி:**

தொடக்கக் கூட்டுறவு நிறுவனங்களுக்கு உதவும்பொருட்டு, தலைமைக் கூட்டுறவு வங்கி அளவில் "தொடக்கக் கூட்டுறவு நிறுவனங்களின் வளர்ச்சி நிதி" உருவாக்கப்பட்டுள்ளது. தலைமை வங்கியும், அனைத்து மத்தியக் கூட்டுறவு வங்கிகளும், தங்களது நிகர இலாபத்தில் 5 விழுக்காட்டினை இந்த நிதிக்கு ஒதுக்க வேண்டும். 31.10.1992 வரை இந்த நிதியில் சேர்ந்துள்ள மொத்தத் தொகை ரூ.74.57 இலட்சமாகும்.

**கிளைகள்:**

சென்னை மாநகரம் முழுமையிலும் பரவலாக 38 கிளைகளை வங்கி துவக்கியுள்ளது. இக்கிளைகள் குடியிருப்புப் பகுதிகளில் அமைந்துள்ளதால், வாடிக்கையாளர்களின் வசதிக்கிணங்க, ஐந்து தேர்ந்தெடுக்கப்பட்ட கிளைகள் ஞாயிற்றுக் கிழமைகளில் செயல்படுகின்றன. வெளிநாட்டில் வசிக்கும் இந்தியர்களிடமிருந்து வைப்புகள் திரட்டும் விதத்தில் ஆறு தேர்ந்தெடுக்கப்பட்ட கிளைகளில் வசதி செய்யப்பட்டுள்ளது. தலைமை அலுவலகம் மற்றும் 29 கிளைகளில் பாதுகாப்புப் பெட்டக வசதியுள்ளது.

**செயல்பாட்டு விருதுகள்:**

1982-83-ஆம் ஆண்டிலிருந்து சிறப்பாகச் செயல்படும் மாநிலக் கூட்டுறவு வங்கிகளுக்கு விருது வழங்கும் திட்டத்தினை மாநிலக் கூட்டுறவு வங்கிகளின் தேசிய இணையம் நிறுவியுள்ளது.

சிறந்த செயல்பாட்டிற்கான ஏதாவது ஒரு விருதினை 1985-86-ஆம் ஆண்டு முதல் ஐந்து ஆண்டுகளாக இவ்வங்கி தொடர்ந்து பெற்று வருகிறது.

இதனைப் பின்பற்றி மாநிலத்திலுள்ள மத்தியக் கூட்டுறவு வங்கிகளிடையே ஆரோக்கியமான போட்டியை ஏற்படுத்தவும், அவற்றின் செயல்பாடுகளில் மேலும் முன்னேற்றம் ஏற்படுவதை ஊக்குவிக்கவும், 1990-91-ஆம் ஆண்டு முதல் செயல்பாட்டு விருதுகள் வழங்கும் திட்டத்தினை இவ்வங்கி செயல்படுத்தி வருகிறது.

**★ செல்வத்தில் எல்லாம் சிறந்த செல்வம் கருத்துச் செல்வம். அடுத்து வரும் தலைமுறையினருக்கு அத்தகைய செல்வத்தை நாம் விட்டுச் செல்ல வேண்டும். அதற்கான பணியில் ஈடுபட்டால் சமுதாயம் நன்கு வாழ முடியும்.**



தமிழ்நாடு அரசின் உணவு, கூட்டுறவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் செயலரைத் தலைமையாகக் கொண்ட குழுவினால் மத்தியக் கூட்டுறவு வங்கிகளிடமிருந்து பெறப்பட்ட விபரங்களின் அடிப்படையில் 1990-91-ஆம் ஆண்டிற்கான சிறந்த செயல்பாட்டு விருதுகள் முடிவு செய்யப்பட்டன. இதன்படி, தென்னார்க்காடு மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி சிறந்த வங்கியாகத் தெரிவு செய்யப்பட்டது.

**இலாபம்:**

இவ்வங்கி 1991-92-ஆம் ஆண்டில் ரூ.12.63 கோடி இலாபம் ஈட்டியுள்ளது. நடைமுறை மூலதன அதிகரிப்பும், நிதியாதாரங்களைச் சீரிய முறையில் பயன்படுத்தியதும்தான் இந்த இலாப அதிகரிப்புக்கு முக்கியக்காரணங்களாகும்.

இவ்வங்கி 1990-91-ஆம் ஆண்டில் 14 சதவிகிதம் பங்கு ஈவுத்தொகை வழங்கியது. 1991-92-ஆம் ஆண்டிலும் அந்த அளவிற்கே வழங்க உத்தேசித்துள்ளது. ●




**தருமபுரி மாவட்டத்தில் நீர்வளம் குறைவே என்றாலும் மீன்வளத்திற்குப் பஞ்சமில்லை!**

**மாவட்டம் முழுமையிலுமாக 210 ஏரிகள் இருக்கின்றன; மீன் வளர்ப்பு நீர் நிலைகள் 10 உள்ளன. இந்தப் பத்திலும் எப்போதும் தண்ணீர் இருக்கும்படி கவனிக்கப்படுகிறது.**

**இங்கெல்லாம் மீன் வளர்ப்பு என்பது பத்தாண்டு குத்தகைக்கு விடப்படுகிறது; இது குறித்த தொகையை அந்தந்த ஊராட்சி ஒன்றியமே நிர்ணயிக்கிறது. திரு. வி. கே. ஜெகந்நாதன் தருமபுரியில் உள்ள மீன்வளர்ப்பு அமைப்புகளின் தலைமை நிர்வாக அதிகாரியாக இருக்கிறார்.**

**தருமபுரி மாவட்டத்தில் - கட்லா, ரோகு, மிர்கால், காமன்கார்ப் (சாதாக் கெண்டை), வெள்ளிக்கெண்டை, புலிக் கெண்டை போன்ற வகை மீன்கள் அதிக அளவில் வளர்க்கப்படுகின்றன- அல்லது கிடைக்கின்றன. மீன் வளர்ப்பில்- தளி, ஒசூர், தேன்கனிக்கோட்டை, கெளமங்கலம் போன்ற ஊர்கள் முன்னணியில் உள்ளன.**

**மீன் வளர்க்க முன்வருவோர்க்கு- அரசு விலை நிர்ணயத்தில் 25 சதவிகிதம் உதவித்தொகை என்ற வகையில் மீன் சினை தரப்படுகிறது தருமபுரி மாவட்டத்தில்!**

**இந்த மீன்வளர்ப்பு முகமைக்கு, மாவட்ட ஆட்சியாளரே தலைவராவார். இப்போதைக்கு, இம் முகமையின் பொறுப்பில் 467 எக்டேர் நீர்ப் பரப்புள்ள 164 ஏரிகள் இருக்கின்றன.**

**மீன் வளர்க்கும் விருப்புள்ளோருக்கு பயிற்சியும் அளிக்கப்படுகிறது இங்கே. இதுமட்டுமல்ல; மீன் வளர்க்கவும், அதற்கான இடுபொருட்களுக்காகவும் தக்கபடி கடனும் மானியமும் கூட அளிக்கப்படுகிறது.**

**சொந்த நிலம் வைத்திருப்போர், ஒரு எக்டேரில் மீன் வளர்ப்புக் குளம் கட்ட மொத்தம் ரூ.1,00,000 செலவிட்டால், அதில் ரூ.20,000-ஐ இம் முகமை மானியமாகத் தரும். இத்திட்டம் கடந்த ஆண்டிலிருந்து தான் செயல்படுத்தப்படுகிறது.—'இந்திரன்'**

# நூல் நயம்

### உலகக் கவிஞர்களின் கவிதைகளில் டாக்டர் புரட்சித்தலைவி

**ஆசிரியர்:** கே.கே. ராஜன்
**வெளியீடு:**
பிரிம்மா பதிப்பகம்,
1, திருவீதி அம்மன் கோவில் தெரு,
சென்னை-600 004.

பக்கம்:60 விலை:ரூ.50/-

**மா**ண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் அருமை பெருமைகளை, சிறப்பியல்புகளை, அருந்தொண்டுகளைச் சித்திரிக்கும் சிறப்புக் கவிதைகளின் தொகுப்பே இந்நூல். உலக நாட்டுக் கவிஞர் பெருமக்களின் உள்ளத்திலிருந்து ஊற்றெடுத்த உணர்ச்சிக் கவிதைகள் தித்திக்கும் தீந்தமிழில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளன. மொழிபெயர்த்த கவிஞர் முருகுவண்ணன் அவர்களையும், இந்நூலை அழகுறத் தயாரித்துத் தொகுத்த கே.கே. ராஜன் அவர்களையும் பாராட்ட வேண்டும்.

### மனோன்மணீயம்

**பதிப்பாசிரியர்:**
முல்லை பி.எல். முத்தையா,
**வெளியீடு:**
நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்
பிரைவேட் லிமிடெட்,
41-பி, சிட்கோ எஸ்டேட்,
சென்னை-600 098.

பக்கம்:360 விலை:ரூ.40/-

**த**மிழ் நூல்கள் பலவற்றிலும், முதல் முதலாக நாடக முறையில் வெளிவந்தது மனோன்மணீயமாகும். பேராசிரியர் சுந்தரம்பிள்ளை, சுந்தரத் தமிழில் எழுதியுள்ள இந்நாடகப் பெருநூல் பலராலும் போற்றப்பட்டு வரும் தனிச் சிறப்பு வாய்ந்ததாகும். படிக்கவும், நடிக்கவும் ஏற்ற இந்தப் பைந்தமிழ் நாடக நூல், தக்க விளக்கங்களுடன் பதிப்பிக் கப்பட்டுள்ளது.

பேராசிரியர் சுந்தரம்பிள்ளை வரலாறு, மனோன்மணீயக் கதைச் சுருக்கம்- விளக்கம்- விமரிசனம், நாடக மூலம், உரைக் குறிப்புகள் என்று படிப்ப தற்கு ஏற்ற வகையில் பக்குவமாய்த் தயாரிக்கப்பட்டிருக்கும் பாங்கு பாராட்டு தற்குரியது.

—பொ. மறைமலை

### மாணவர் மன்றம் மயிலை சிவமுத்து நூற்றாண்டு விழா மலர்

**கிடைக்குமிடம்:** சிவமுத்து நிலையம்,
41, இப்ராகிம் தெரு,
சென்னை-600 001.

பக்கம்:156 விலை:ரூ.50/-

**மா**ணவ மணிகள் மதிநலம் பெற மாணவர் மன்றம் கடந்த 60 ஆண்டு களாக நற்றொண்டாற்றி வருகிறது. மாணவர் மன்றப் பணிகள் மற்றும் பேராசிரியர் மயிலை சிவமுத்து அவர் களின் அருமை பெருமைகள் குறித்துப் பல கோணங்களில் எழுதப்பெற்ற சிறப் புக் கட்டுரைகள் இதில் அடங்கியுள்ளன.

பல்துறை அறிஞர் பெருமக்களின் கட்டுரைகள், தலை சிறந்த கவிஞர்களின் கவிதைகள், சுவையான துணுக்குகள் முதலானவை கருத்துக்கு விருந்தூட்டும் வண்ணம் அமைந்துள்ளன.

### இணையிலா மனிதர் ஏவி.எம்.

**ஆசிரியர்:** பி.வி. கிரி
**வெளியீடு:**
திருமலைப் பதிப்பகம்,
பிளாக்:என்.385,
அண்ணாநகர் கிழக்கு,
சென்னை-600 102.

பக்கம்:104 விலை:ரூ.15/-

**உ**ழைப்பையே மூலதனமாகக் கொண்டு உயர்ந்த உத்தமர் திரு. ஏவி.எம். அவர்கள். பள்ளிப் பருவத் திலேயே நாடக ஆர்வம் கொண்டு, அதுவே படிப்படியாக வளர்ந்து பிற் காலத்தில், படவுலகுக்கு நுழைய அடித் தளம் அமைத்தது.

தமிழ்த் திரையுலகில் பல திருப்பங் களை உண்டாக்கி, பல புதுமைகளை உருவாக்கிய முன்னோடி அவர். தம் வாழ்க்கையில் ஏற்பட்ட சோதனைகளை யெல்லாம் துணிவுடன் தாங்கி, சாதனை களாக்கிக் காட்டிய சரித்திர நாயகர் திரு. ஏவி.எம்.

அவரது வாழ்க்கை வரலாறு, முன் னேறத் துடிப்போர்க்கு ஒரு முன் மாதிரி யாக விளங்கும் என்றால் அது மிகை யில்லை. மாணவர்கள், இளைஞர்கள் இந்நூலைப் படிக்க வேண்டும். இந்தச் சுவையான உண்மைக் கதையை எளிய, இனிய நடையில் எழுதியுள்ளார் ஆசிரியர் பள்ளியில் பாடமாக வைக்கத் தக்க பயனுள்ள நூல்.

### யாருக்காக உலகம்

**ஆசிரியர்:** மூவேந்தர் முத்து
**வெளியீடு:**
பூவழகி பதிப்பகம்,
29/2 சீனுவாச பெருமாள்
சன்னதி தெரு,
இராயப்பேட்டை, சென்னை-600 014.

பக்கம்:324 விலை:ரூ.40/-

**எ**ழுத்து இவருக்குப் புதிதல்ல; ஏற் கெனவே இவர் சில படைப்புகளைத் தமிழுக்குத் தந்திருக்கிறார்.

சொல்லும் செயலும் முரண்படுவ தென்பது இயல்பாகிவிட்ட இந்த காலத் தில்- சொல்வதைச் செயலாக்குவதும், செயலாக்க முடிவதை மட்டுமே சொல் வதுமாக வாழ்கிற கதிரவனே இந்த நாவல் முழுவதும் விரவியிருக்கிறார்.

பல இடங்கள் குறிப்பிடும்படி இருந்தாலும் குறிப்பாக "மான்போல் ஒரு பெண் துள்ளித் திரிந்தால் அவளைப் புலிக் குணம் கொண்டவர்கள் துரத்து வார்கள்"

"இந்த உலகம் யாருக்காக, வாழ்க்கை யாருக்காக என்றும் அப்போது புரிய வில்லை" என்று கங்கா கூறும்போதும்,

"நீதி என்று வரும்போது ஆணுக்கு ஒரு நீதி, பெண்ணுக்கு ஒரு நீதி இல்லை. அதுவும் இந்தக் காலத்தில் பெண்கள் எல்லா நிலைகளிலும் உயர்ந்து உன்னத நிலையில் இருக்கிறார்கள்" என வெண்ணிலா கூறும்போதும் 'உலகம் யாருக்காக?' என்பதைப் புரிய வைக் கிறது. தலைப்பில் கவிஞர்களின் பாடல் வரிகளைச் சொல்லிக் கதையை கொண்டு செல்வது மேலும் மெருகு சேர்க்கிறது.

சுருங்கக் கூறின் "மூவேந்தர் முத்து அவர்களின் "யாருக்காக உலகம்" படிக்க வேண்டிய சொத்து!

—மருதமுத்து

### அருட்பெருஞ்சோதி வள்ளலார்

**ஆசிரியர்:** ஸ்வாமி முருகானந்தா
**வெளியீடு:**
கார்த்திகா பப்ளிகேஷன்ஸ்,
92, கங்கையம்மன் கோயில் தெரு,
சென்னை-600 026.

பக்கம்:112 விலை:ரூ.16/-

**வ**ள்ளலாரின் வாழ்க்கை வரலாறு மட்டுமல்ல, அவர் உலக மாந்தர் உய்ய வேண்டி உணர்த்திய உண்மைகளையும் அழகுறத் தொகுத்துக் கூறுகிறது இந்நூல்.

வள்ளலாரின் பெருமை சொல்லவும் அரிதே என்று சொல்லத்தக்க அளவில், சொல் மாலை கட்டியுள்ளார் நூலாசிரியர். எல்லாத் திறத்தாரும் படித்துப் பயன் பெறத்தக்க கருத்துக்கள் பொதிந்துள்ள நூல்.



# தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி - சில தகவல்கள்

**த**மிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி 1905-ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் தொடங்கப்பட்டு தமிழகத்திலுள்ள கூட்டுறவு நிறுவனங் களுக்குக் கடந்த 86 ஆண்டுகளாகப் பயனுள்ள சேவை புரிந்து வருகிறது.

வங்கி, குறுகிய கால மற்றும் நடுத்தரக் கால வேளாண்மைக் கடன்களை வழங்கி வருவதுடன், மாநிலத்திலுள்ள கூட்டுற வுச் சர்க்கரை ஆலைகள், கூட்டுறவு நூற்பாலைகள், கோ-ஆப்டெக்ஸ் நிறு வனம் உட்பட்ட கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் முன்னேற்றத் தில் பெரும் பங்காற்றி வருகிறது.

**பங்கு மூலதனம்**

31.10.1992 ஆம் நாளன்று வங்கியின் பங்கு மூலதனம் ரூ.5.83 கோடியாகும். இதில் தமிழ்நாடு அரசு ரூ.1.26 கோடி வங்கியின் பங்கு மூலதனத்தில் பங்கேற் றுள்ளது. மாநிலத்திலுள்ள 18 மத்தியக் கூட்டுறவு வங்கிகள் ரூ.4.50 கோடி அளவுக்குப் பங்குகள் எடுத்துள்ளன.

**காப்பு மற்றும் இதர ஒதுக்கீட்டு நிதிகள்:**

31.10.1992 அன்று வங்கியின் காப்புநிதி 31.77 கோடியாகும். இயற்கை யின் சீற்றத்தால் ஏற்படும் பயிர்ப் பாது காப்பிற்காக மத்தியக் கூட்டுறவு வங்கி களுக்கு நடுத்தரக் கால மாற்றுக் கடன்கள் வழங்க நிறுவப்பட்ட வங்கியின் வேளாண் மைக் கடன் (நிலைப்படுத்தும்) நிதியில் 31.10.1992-ஆம் நாளன்று ரூ.25.20 கோடி திரண்டுள்ளது. வங்கியின் இதர ஒதுக்கீடுகளில் ரூ.17.04 கோடி உள்ளது.

31.10.1992 அன்று வங்கி ரூ.522.59 கோடி வைப்புகள் பெற்றுள் ளது. 31.10.1992-ஆம் நாளன்று வங்கி பெற்ற கடன் ரூ.432.69 கோடியாக உள்ளது. 31.10.1992 அன்று அரசு (மத்திய மற்றும் மாநில) கடன் உறுதி ஆவணங்கள், மாநில நிலவள வங்கியின் கடனீட்டு ஆவணங்கள், பங்குகள் ஆகிய வற்றில் ரூ.176.27 கோடியளவிற்கு முதலீடுகள் உள்ளன.

**வழங்கிய கடன்கள்:**

31.10.1992-ஆம் நாளன்று வங்கி வழங்கிய கடன்களின் நிலுவை ரூ.792.52 கோடியாக உள்ளது. இவ்வங்கி வேளாண்மைக் கடன்கள், நடுத்தரக்கால வேளாண்மை சார்ந்த கடன்கள், நடுத் தரக்கால மாற்றுக் கடன்கள், நெசவுத் தொழில் முதலியனவற்றிற்குத் தேசிய வங்கி வழங்கும் நிதியைப் பெற்றுத் தரு கிறது. மேலும், வங்கி அதனது சொந்த நிதியாதாரங்களிலிருந்து கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டக சாலைகள், கூட்டுறவுச் சர்க்கரை மற்றும் நூற் பாலைகள் முதலியனவற்றிற்கு வழங்கும் நிதி வசதிகளுக்கு ஈடு செய்யும் காசுக் கடன் ஒப்பளிப்பு அளித்து வருகிறது. மேலும், இவ்வங்கி தேசிய வங்கியின் முழு மறு நிதி வசதித் திட்டத்தின்கீழ் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், சிறு மற்றும் மிகச் சிறு விவசாயிகளுக் கான பெருத்த நிதி உதவித் திட்டம், எரிவாயு மேம்பாட்டுத் திட்டம் முதலியன வற்றிற்கும், புன்செய் நில மேம்பாடு உட்பட்ட வேளாண்மை சார்ந்த காரியங் களுக்கான திட்டங்களுக்கும் மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கு மறுநிதி வசதி அளித்து வருகிறது. மேலும், மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் பொது வங்கியியல் தேவைகளுக்காக அவை முதலீடு செய் துள்ள அரசு பொறுப்பாட்சியர் கடன் பத்திரங்கள் மற்றும் தலைமை வங்கியில் வைத்துள்ள நிலை வைப்புகளின் பேரில் அவற்றின் நடப்புக் கணக்கின் மீது அதி கப்பற்று வசதிக்கு ஒப்பளிப்பு அளித்து வருகிறது.

சிறு அளவுத் தொழில்கள், சாலைப் போக்குவரத்து, சிறு வாகனம் இயக்குப வர்கள் ஆகியவற்றிற்கு நகர வங்கிகள் வழங்கும் காலக் கடன்களுக்கான மறுநிதி வசதியை இந்தியச் சிறுதொழில் மேம் பாட்டு வங்கியிடமிருந்து பெற்றுத் தரு கிறது. ரிசர்வ் வங்கி மறுநிதித் திட்டத்தின் கீழ் நகர வங்கிகள் சிறு அளவு தொழில்கள் நடைமுறை மூலதன வசதிக்கு மறுநிதி வழங்குகிறது.

இவ்வங்கி கிராமக் கைவினைஞர்கள், மிகச் சிறு கிராமக் குடிசை மற்றும் சிறு அளவு தொழில்கள் முதலியனவற்றிற்குக் கடன் வழங்க வேளாண்மை சாராப் பிரிவின் கீழ் தேசிய வங்கியிடமிருந்து மறுநிதி வசதி பெற்றுத் தருகிறது. தொழி லியல் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தமிழ்நாடு தொழிலியல் கூட்டுறவு வங்கி (TAICO BANK) கடன்கள் வழங்குவதற்குத் தேசிய வங்கியிடமிருந்து மறுநிதி வசதி பெற்றுத் தருகிறது.

31.10.1992 அன்று வங்கியின் நடைமுறை மூலதனம் ரூ.1090.69 கோடியாக உள்ளது.

தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம், தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கி, தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம், தமிழ்நாடு தொழிலியல் கூட்டுறவு வங்கி, தமிழ்நாடு கூட்டுறவுப் பால் உற்பத்தி யாளர்கள் இணையம், திருவல்லிக்கேணி நகரக் கூட்டுறவுச் சங்கம் மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய்வித்துச் சாகுபடியாளர் இணையம் முதலிய தலை மைக் கூட்டுறவு நிறுவனங்களுக்கு இவ் வங்கி நேரிடையாக நிதி வசதியினை அளித்து வருகிறது.

**சர்க்கரை மற்றும் நூற்பாலைகளுக்குக் காலக்கடன் வசதி:**

மாநிலத்திலுள்ள சர்க்கரை மற்றும் நூற்பாலைகளுக்கு வங்கி அதனது சொந்த நிதியிலிருந்து காசுக் கடன் வசதி அளித்து வருகிறது. மேலும், தொழில் மேம்பாட்டு வங்கி (IDBI), இந்தியத் தொழில் நிதி யுதவிக் கழகம் (IFCI), இந்தியத் தொழிற் கடன் முதலீட்டுக் கழகம் (ICICI), ஆயுள் காப்பீட்டுக் கழகம் (LIC) ஆகியவை காலக்கடன் வழங்குவதற்கு இடைப்பட்ட காலத்தில் இடைநிரப்பு வசதியளித்து வருகிறது. மேலும் மாநிலத்திலுள்ள சர்க்கரை மற்றும் நூற்பாலைகள் தவணை முறையில் இயந்திரச் சாதனங்களைப் பெறுவதற்கு வரையும் வட்டி பட்டிகளை ஏற்றுக்கொள்ளும் பொறுப்பேற்றுள்ளது.

**டி.எம். ஆறுமுகம், இ.ஆ.ப.,**
**தனி அலுவலர் - மேலாண்மை இயக்குநர்**
**தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவுத் தலைமை வங்கி**

## சுய வேலைவாய்ப்புப் பயிற்சித் திட்டங்கள்

இத்திட்டத்தின்கீழ், இந்து ஆதி திராவிட இளைஞர்கள் சுய வேலை வாய்ப்புப் பெறும் வகையில் அவரவர் கல்வி மற்றும் தகுதி அடிப்படையில் பல்வேறு தொழில்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சிகள் அரசு நிறுவனங்கள் மூலமும், தானியங்கிச் சேவை நிறுவனங்கள் (Voluntary Organisation) மூலமும் மற்றும் சிறந்த தனியார் நிறுவனங்கள் மூலமும் அளிக்கப்படுகின்றது.

பயிற்சியின்போது ஒவ்வொரு பயிற்சியாளர்களுக்கும் மாதம் ரூ.300 உதவித் தொகையும், பயிற்சியின் முடிவில் ரூ.500 பெறுமான தொழில் உபகரணங்களும் இலவசமாக அளிக்கப்படுகின்றன.



நடப்பு ஆண்டில் கீழ்க்கண்ட திட்டங்களில் பயிற்சி அளிக்க அரசு ஆணை வழங்கி தாட்கோ மாவட்ட மேலாளர் மூலமாகச் செயல்படுத்தி வருகிறது:

கம்ப்யூட்டர் பயிற்சி, அளிக்கப்படும் காலம் 12 மாதங்கள். இதேபோல, ரேடியோ மற்றும் டி.வி. மெக்கானிசம் டேப் ரிக்கார்டர், ஒலிபெருக்கி, வி.சி.ஆர். வீடியோ மற்றும் பூஸ்டர் மெக்கானிசம் 12 மாதங்கள், ரொட்டி மற்றும் மிட்டாய் தயாரித்தல் 6 மாதங்கள், எண்ணெய்ப்பொறி மற்றும் பெட்ரோல் மெக்கானிசம் 6 மாதங்கள், டெய்லரிங் 6 மாதங்கள், டர்னர் மற்றும் லேத் 12 மாதங்கள், ஃபிட்டர் பிளம்பிங் மற்றும் பம்பு மெக்கானிசம் 12 மாதங்கள், ஆட்டோமொபைல் மெக்கானிசம் மற்றும் கார் ஓட்டுநர் மெக்கானிசம் 12 மாதங்கள், கம்பளி ஆடை தயாரித்தல் 6 மாதங்கள், சிம்பிள் ஒயரிங் 6 மாதங்கள், வெல்டிங் 12 மாதங்கள், குளிர்சாதனம் மற்றும் குளிர்சாதனப் பெட்டி மெக்கானிசம் 12 மாதங்கள், ஆட்டோ எல்க்ட்ரிஷியன் 6 மாதங்கள், கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி 6 மாதங்கள், அச்சுக்கோத்தல் மற்றும் பைண்டிங் 6 மாதங்கள், சுருக்கெழுத்து மற்றும் தட்டெழுத்து 12 மாதங்கள், செயற்கை வைரம் பட்டை தீட்டுதல் 6 மாதங்கள், மின்மோட்டார் ரீவைண்டிங் 6 மாதங்கள், பாட்டரி சார்ஜிங் 6 மாதங்கள், மரம் மற்றும் கல் சிற்ப வேலை 6 மாதங்கள், ஸ்கிரீன் பிரிண்டிங் 6 மாதங்கள், தோல் பதனிடுதல் 12 மாதங்கள், காலணி தயாரித்தல் 12 மாதங்கள், இரண்டு சக்கர வாகனம் பழுதுபார்த்தல் 6 மாதங்கள்.

இவை தவிர, காவல்துறைப் பணி, வங்கிப் பணி, இந்திய ஆட்சிப் பணி தேர்வுகளில் சேருவதற்கு முன் பயிற்சி அளிக்கப்படுகிறது.

பெரும்பான்மையான ஆதிதிராவிட மக்கள் விவசாயத்தையே சார்ந்திருப்பதால், அவர்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக விவசாயம் மற்றும் அதனைச் சார்ந்த திட்டங்களைத் தாட்கோ நிறைவேற்றி வருகிறது.

## சிறு தொழில் கடன் (Petty Trade)

இத்திட்டத்தின்கீழ், பெட்டிக்கடை, காய்கறிக் கடைகள் ஆகியன போன்ற சிறு முதலீட்டில் எளிதாக நடத்தக்கூடிய கீழ்க்கண்ட தொழில்கள் தொடங்க ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி அல்லாது கிறித்துவ இந்து ஆதிதிராவிடர், மதம் மாறிய கிறித்துவருக்கும், நிதி உதவி அளிக்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ், பெறப்படும் கடனில் 50 சதவிகித மானியமும் 25 சதவிகித விளிம்புத் தொகைக் கடனும் மீதமுள்ள 25 சதவிகிதம் வங்கிக் கடனாகவும் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தில் கீழ்க்கண்ட தொழில்களுக்கு நிதி உதவி அளிக்கப்படுகிறது:

அச்சகம், காலணிகள் செய்தல், மோட்டார் மெக்கானிக், டிங்கரிங் மற்றும் ஸ்பிரே பெயிண்டிங், லேத் மற்றும் டர்னிங் பட்டறை, மின் மற்றும் கேஸ் வெல்டிங் மற்றும் கிரில் வேலைகள், மளிகைக் கடைகள் - (பேரூர்களில்), நகரங்களில் - ரேஷன் கடைகள் உட்பட, ஹோட்டல்கள் (டீ, காபி, பிஸ்கட், குளிர்பதனங்கள், கடைகள், இனிப்புக் கடைகள் வீட்டுக் கடைகள் உட்பட.) துணி மற்றும் தையல் கடைகள், சைக்கிள் வாடகை மற்றும் ரிப்பேர் கடை, மோட்டார் சைக்கிள் ரிப்பேர் கடை, பழம் மற்றும் காய்கறிக்கடை (வெற்றிலை பாக்குக் கடை உட்பட), தோல் பயிற்சி, தட்டெழுத்து நிலையம், மருந்துக்கடை (அலோபதி, ஆயுர்வேதம், யுனானி மற்றும் சித்த மருத்துவம் உட்பட), விறகு மற்றும் கரிக்கடை, தச்சு மற்றும் ஸ்லேட் செய்தல், சைக்கிள் ரிக்ஷா ஓட்டுதல், வணிகக் கலைகள், கயிறு தொழில், செருப்புத் தொழில், முடி திருத்தகம், லீகோ கரிக்கடை, செங்கற் சூளை, சுண்ணாம்புக் காளவாய், மாவு அரைக்கும் இயந்திரம், மோட்டார் பொருத்திய சைக்கிள் ரிக்ஷா ஓட்டுதல், ஊசியும், பாசி மணியும் செய்தல், பெட்ரோல் மற்றும் டீசல் துணை விற்பனை நிலையம், பிரம்புத் தொழில்.

## பயனாளிகள் தேர்வு மற்றும் கடன் வழங்கல் முறை

சுய வேலைவாய்ப்பு, விவசாயம் மற்றும் அதைச்சார்ந்த திட்டங்களுக்கு தாட்கோ மானியம் மற்றும் வங்கிக் கடனுதவி பெறுவதற்கு அரசு ஆணைப்படி, நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றன. அவையாவன:

மாவட்ட அளவில் மாவட்ட மேலாளர் (தாட்கோ)-வினால் ஆதிதிராவிடர் பயனாளிகளிடமிருந்து கடன் கோரி விண்ணப்பங்கள் பெறப்படுகின்றன. பெறப்பட்ட விண்ணப்பங்கள் வட்டார அளவில் நடைபெறும் தேர்வாணைக் குழு பரிசீலனை செய்கிறது. இக்குழுவில் தாட்கோ மாவட்ட மேலாளர் தலைவராகவும், பிரதம வங்கியின் மேலாளர் சம்பந்தப்பட்ட பகுதியின் வங்கி மேலாளர், மாவட்டத் தொழில் மையப் பொது மேலாளர்/பிரதிநிதி, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலக அலுவலர் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

பயனாளிகள் குழு நேர்முகத் தேர்வு செய்கிறது. குழுவினால் தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளின் விண்ணப்பங்கள் சம்பந்தப்பட்ட வங்கிகளுக்குக் கடன் வழங்க பரிந்துரை செய்யப்படுகிறது. வங்கிகள் கடன் வழங்கி அனுமதி அளித்த உடன் மாவட்ட மேலாளர்கள் மானியம் சம்பந்தப்பட்ட வங்கிகளுக்கு விடுவிக்கின்றனர். மானியம் பெற்றபின் வங்கிகள் பயனாளிகளுக்குக் கடன் வழங்கி சொத்துக்கள் ஏற்படுத்துகின்றனர்.





## தனி நபர் தொழில் முனைவோர் திட்டம்

சிறப்புமிகு இத்திட்டம் மூலம் இந்து ஆதிதிராவிடத் தொழில் முனைவோர் புதுத் தொழில் தொடங்கிட நிதியுதவி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் தாட்கோ ரூ.15,000 மானியம் வழங்குகிறது. மொத்தத் திட்ட மதிப்பீட்டில் 20 சதவிகிதம் அல்லது அதிகப்பட்சமாக ரூ.85,000 வரை தொடக்க நிதி உதவி அளிக்கப்படுகிறது. வழங்கப்படும் தொடக்க நிதி உதவிக்கு ஆண்டொன்றுக்கு 4 சதவிகித குறைந்த வட்டியில் வட்டி வசூலிக்கப்படுகிறது. இத்தொகை, பத்து ஆண்டில் தாட்கோவிற்குத் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும். திட்டத்தின் எஞ்சிய தொகையை வங்கிக் கடனாகப் பெறலாம்.

இத்திட்டத்தின்கீழ், பயன்பெற விண்ணப்பித்துள்ள பயனாளிகளை மாவட்ட அளவில் சுய வேலைவாய்ப்புத் திட்டத்திற்குத் தேர்வு செய்யும் மாவட்ட அளவிலான குழுவே இத்திட்டத்திற்கும் பயனாளிகளை நேர்முகத் தேர்வு செய்கிறது. தேர்வுக்குழுவில் தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பம் சம்பந்தப்பட்ட வங்கிகளுக்குக் கடன் வழங்க ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்படுகிறது. வங்கிகளின் அனுமதி பெற்றபின் மாவட்ட மேலாளர்களால் தாட்கோ தலைமை அலுவலகத்திற்கு மனுக்கள் பரிந்துரைக்கப்படுகின்றன. தாட்கோ, தலைமை அலுவலகத்தில் இதற்காக அமைக்கப்பட்டுள்ள மாநில அளவிலான தேர்வுக்குழு பயனாளிகளை நேரடித் தேர்வு செய்கிறது.

மாநிலக்குழு அனுமதி அளித்தபின் சம்பந்தப்பட்ட வங்கிகளுக்கு மானியம் மற்றும் விளிம்புத் தொகையை மாவட்ட மேலாளர்கள் மூலம் விடுவிக்கப்படுகிறது பின்னர் வங்கிகள் கடன் வழங்கி சொத்துக்கள் உருவாக்கப்படுகின்றன.

## சிறப்புப் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள்

தமிழ்நாட்டில் ஆதிதிராவிடர்களின் நலனை மேம்படுத்த சிறப்புப் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களைத் தாட்கோ மூலம் நிறைவேற்ற அரசு ஆணை வழங்கியுள்ளது.

கோயம்புத்தூர் மற்றும் பெரியார் மாவட்டங்களில் ஆதிதிராவிடர்களுக்கெனத் தலா ஒன்று வீதம் 2 தொழிற்பேட்டைகள் அமைக்கப்படும். ஒவ்வொரு தொழிற்பேட்டையிலும் பனியன் மற்றும் அதைச்சார்ந்த தொழில்களை மேற்கொள்ள 100 தொழிற்கூடங்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு தொழிற்பேட்டையின் மொத்த மதிப்பீடு ரூ.40 கோடி ஆகும்.

தமிழ்நாட்டில் நிலமுள்ள 4,000 விவசாயிகளுக்கும், நிலமற்ற 4,000 விவசாயத் தொழிலாளர்களுக்கும், பட்டுப்பூச்சி வளர்க்கும் திட்டம் செயல்படுத்தப்படும். நிலமுள்ள விவசாயிகளுக்குப் பட்டுப் பூச்சி வளர்க்கத் தேவையான உபகரணங்கள் மற்றும் பயிற்சி அளிக்கப்படும்.



நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்குத் தலா ஒரு ஏக்கர் வீதம் நிலம் தனியாரிடமிருந்து நிலம் வாங்கி இத்திட்டத்திற்காக வழங்கப்படும். இத்திட்டம் சென்னை, நீலகிரி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள் நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படும். இதற்கென ஒவ்வொரு மாவட்டத்திலும் நிலமுள்ள விவசாயிகளைத் தேர்வு செய்ய 2 வட்டாரங்களும் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களைத் தேர்வு செய்ய 2 வட்டாரங்களும் தேர்வு செய்யப்பட்டு இத்திட்டம் செயலாக்கப்பட்டு வருகிறது. நிலமுள்ள மற்றும் நிலமற்ற ஆதிதிராவிடப் பயனாளிகளைத் தேர்ந்தெடுக்க ஒவ்வொரு மாவட்டத்திலும் வட்டாரங்கள் தேர்வு செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 1992-93, 1993-94 மற்றும் 1994-95-ஆம் ஆண்டுகளில் நிறைவேற்றப்படும். இத்திட்டத்திற்குச் சுமார் ரூ.48 கோடி செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

## இறால் பண்ணை அமைக்கும் திட்டம்

தமிழ்நாட்டிலுள்ள 8 கடலோர மாவட்டங்களில், தகுதிவாய்ந்த 1000 ஆதிதிராவிட குடும்பங்களுக்குத் தலா ஒரு எக்டேர் வீதம் நிலம் வாங்கிக்கொடுத்து இறால் பண்ணை அமைக்கும் திட்டம் அமல்படுத்தப்படும். இத்திட்டம் 1992-93 மற்றும் 1993-94-ஆம் ஆண்டுகளில் நிறைவேற்றப்படும். இத்திட்டத்திற்கு ரூ.100 கோடி செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தினைச் செயல்படுத்த நிலம் மற்றும் பயனாளிகளைத் தேர்வு செய்ய உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



எங்கள் இதயங்கனிந்த நல்வாழ்த்துக்கள்

சிவமயம்

ஸ்ரீ அருஞ்சுனை காத்த அய்யனார் சுவாமி அருள்

தொலைபேசி: 3597, 3472

**ஸ்ரீ செந்தில் ஆண்டவர் ஆயில் மில்ஸ்**

**&**

**விநாயகர் லாரி சர்வீஸ்,**

கிழக்கு பாண்டி ரோடு,

விழுப்புரம்.

நிறைந்த வசதி     குறைந்த வாடகை

விழுப்புரத்தில் புதியதோர்

**பிரம்மாண்டமான கல்யாண மண்டபம்**

**மணிஅரசி திருமண மண்டபம்**

கிழக்கு பாண்டி ரோடு

விழுப்புரம்

உரிமையாளர்கள்:

சி. சுப்பிரமணிய நாடார்

(மதுரை நாடார் மகாஜன சங்கம் கல்வித் தந்தை)

எஸ். திருநாவுக்கரசி

எஸ். சுகுமார்

எஸ். முருகானந்தம்


# ஆதிதிராவிடர் நலம்




**வி.பி. துரைசாமி**

**தலைவர்**

**தமிழ்நாடு ஆதிதிராவிடர்**

**வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம்**


தமிழக அரசு இதுவரை ஆதிதிராவிட மக்களின் மேம்பாட்டுக்காக மாபெரும் பணியை ஆற்றியுள்ளது. ஆதிதிராவிட மக்களைக் காப்பாற்ற நான் இருக்கிறேன் என்று சொல்லி மத்திய அரசிடம் ரூ.16 கோடிக்கு உத்தரவாதம் கொடுத்துத் தொகையை வாங்கி ஆதிதிராவிட மக்களுக்கு நலத்திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார் தமிழக முதல்வர் புரட்சித்தலைவி அவர்கள்.

தாட்கோ நிறுவனம், பயனாளிகள், வங்கி அலுவலர்கள் ஆகியோர் ஒருங்கிணைந்து திட்டத்தைச் சீரிய முறையில் நிறைவேற்றி வருகிறோம். தமிழக முதல்வர் புரட்சித்தலைவி அவர்களின் ஆலோசனைப்படி, மாவட்டந்தோறும் பயணம் சென்று, மேற்கண்ட மூவரையும் ஒருங்கிணைக்கும் பணியை மேற்கொண்டு, நலத்திட்டங்களை நல்ல முறையில் நிறைவேற்றிட நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

வீடு கட்டுவதற்காகவே தொடங்கப்பட்ட தாட்கோ நிறுவனத்திடமிருந்து, வீடு கட்டும் பணியை உள்ளாட்சித்துறைக்குக் கடந்த கால அரசால் மாற்றப்பட்டுள்ள அதிகாரத்தை, மீண்டும் தாட்கோ நிறுவனத்திடமே ஒப்படைக்க வேண்டும் என்ற கோரிக்கையைத் தமிழக முதல்வர் புரட்சித்தலைவி அவர்களிடம் முன்வைத்துள்ளேன்.

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் 15.2.74 அன்று தோற்றுவிக்கப்பட்டது.

நலிந்த இந்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்களுக்கு இலவசமாக வீடுகள் கட்டிக்கொடுத்தல், இந்து ஆதிதிராவிடர் மாணவ மாணவியருக்குப் பள்ளிகள், தங்கும் விடுதிகள், சமுதாயக் கூடங்கள் மற்றும் குழந்தைகளுக்கான மையங்கள் (பால்வாடிகள்) ஆகியவற்றிற்கு இலவசமாகக் கட்டடங்கள் கட்டிக்கொடுத்தல், ஆதிதிராவிடர்களின் வருமானத்தை வறுமைக்கோட்டிற்கு மேலே உயர்த்திட பொருளாதாரத் திட்டங்களை வகுத்துச் செயல்படுத்துதல், அரசால் அவ்வப்போது ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்களுக்காகச் சமூக நலத்திட்டங்களைச் செயல்படுத்துதல் ஆகியவை தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் முக்கிய நோக்கங்களாகும்.

தாட்கோ - வளர்ச்சிப் பிரிவு, தொழில்நுட்பப் பிரிவு எனும் இரு பிரிவுகளாக இயங்கி வருகின்றது.

**வளர்ச்சிப் பிரிவு:**

இப்பிரிவு, பொது மேலாளர் (வளர்ச்சி)-யின் கீழ் இயங்கி வருகிறது. இது மூன்று மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றும் ஒரு மாவட்ட வருவாய் நிலையிலுள்ள மண்டல மேலாளரின் கீழ் செயல்படுகிறது. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் துணையாட்சியர் நிலையிலுள்ள அலுவலர் மாவட்ட மேலாளர் (தாட்கோ) தாட்கோ திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்.

**தொழில்நுட்பப் பிரிவு:**

தொழில்நுட்பப் பிரிவு, பொது மேலாளர் (தொழில்நுட்பம்) 8 கோட்டங்களாக இயங்கி வருகிறது. ஒவ்வொரு கோட்டமும் ஒரு செயற்பொறியாளரின் தலைமையின் கீழ் செயல்படுகிறது.

ஆதிதிராவிடர் மக்களின் சமூக பொருளாதார முன்னேற்றம் அடைய, கீழ்க்கண்ட பொருளாதாரத் திட்டங்களை மத்திய மாநில அரசின் நிதி உதவியுடன் தாட்கோ செயலாற்றி வருகின்றது.

1. சுய வேலைவாய்ப்புத் திட்டம்
2. சுய வேலைவாய்ப்புப் பயிற்சித் திட்டம்.
3. விவசாயம் மற்றும் அதனைச் சார்ந்த திட்டம்.
4. சிறுதொழில் கடன்.
5. தனி நபர் தொழில் முனைவோர் ஊக்குவிப்புத் திட்டம்.
6. பிற துறைகள் மூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு சிறப்புத் திட்டங்கள்.

**1. சுய வேலைவாய்ப்புத் திட்டம்**

நகர்ப்புறம் மற்றும் கிராமங்களில் வறுமைக் கோட்டின்கீழ் வாழும் இந்து ஆதிதிராவிட மக்களின் பொருளாதார நிலையை மேம்படுத்தி அவர்கள் சுய தொழில் செய்ய அவரவர் தகுதி, பயிற்சி மற்றும் அனுபவம் ஆகியவற்றிற் கேற்பத் தொழில் உருவாக்கிட நிதி உதவி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் அதிகப்பட்சமாக ரூ.10,000 நிதி வசதி பெறலாம். மொத்த திட்ட மதிப்பீட்டில் 50 சதவிகித வங்கிக் கடனாகவும், எஞ்சிய 50 சதவிகிதம் தாட்கோவின் மானியமாகவும் பெறலாம். இவ்வாறு அதிகப்பட்சமாக ரூ.5,000 மானியமாகத் தாட்கோ வழங்குகிறது.

மளிகைக் கடை, பெட்டிக்கடை, டீக்கடை, காய்கறிக் கடை, சைக்கிள் கடை, சிறு பாத்திரக் கடை, இட்லி ஆப்பக் கடை, கறிக்கடை, தோல் பொருள் விற்பனைக் கடை, மைக்செட், சைக்கிள் ரிக்ஷா, கட்பீஸ் வியாபாரம், மாவரைக்கும் இயந்திரம், விறகு தொட்டி, சுண்ணாம்புக்காளவாய், செங்கல் தொழில், தச்சுத் தொழில், ரெடிமேட் துணி விற்றல், தையல் இயந்திரம் அளித்தல், கூடை மற்றும் பாய் முடைதல், நைலான் பை முடைதல், ரேடியோ ரிப்பேர், கடிகார ரிப்பேர், கயிறு திரித்தல், கடலை மிட்டாய் தயாரித்தல், ஊறுகாய் தயாரித்தல் மற்றும் வருமானம் ஈட்டக்கூடியதும் அதிக முதலீடு தேவையில்லாததுமான பிற சுய தொழில்களுக்கு நிதி உதவி அளிக்கப்பட்டு வருகிறது.

TNPSC

விளம்பர எண். 13/93

தமிழ்நாடு பொதுப்பணியில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் அலுவலகத்தில் பொருளியலர் (Economist) பதவியில் ஒரு காலியிடத்திற்கு நேரடித் தேர்வின் மூலம் நியமனம் செய்யப்பட விண்ணப்பங்கள் 26.4.1993 அன்று மாலை 5.45 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

**சம்பளம்:** மாதம் ஒன்றுக்கு ரூபாய் 3000-100-3500-125-4500

(நியமன ஒதுக்கீட்டு விதி இத்தேர்விற்குப் பொருந்தாது)

**குறிப்பு:** இப்பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளைப் பெற்றிருந்து, குறைந்தபட்ச மதிப்பெண்களைப் பெறுவதன் மூலம் தெரிவுக்குத் தகுதியானவராகக் கருதப்படும் ஆதரவற்ற விதவைகள், அவரைவிட அதிக மதிப்பெண்களைப் பெற்றிருப்பவர்களைக் காட்டிலும் முன்னுரிமை வழங்கப்பட்டுத் தெரிவு செய்யப்படுவார்கள்.

**விளக்கம்:** 'ஆதரவற்ற விதவை' என்பது, வாழ்வதற்குத் தனக்கென்று எந்தவொரு வழியும் இல்லாதவரும், பட்டினியிலிருந்து தன்னைக் காப்பாற்ற எந்தவொரு ஆதரவாளரும் இல்லாதவரும் ஆன விதவையைக் குறிப்பதாகும்.

**வயது:** 1.7.1993 அன்று 40 வயதிற்குக் குறைவாக.

**குறிப்பு:** ஆதிதிராவிட வகுப்பினர், பழங்குடி வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கு வயது வரம்பு இல்லை.

(சலுகைகள் பற்றிய மேலும் சில விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.)

**Qualification as on 18.3.1993**

i. Educational qualification

A Doctorate in Economics or Econometrics;

and

ii) Experience

Practical eperience for a period of not less than three years in the fields of plan/project formulation, project scrutiny and appraisal at the Supervisory or Managerial level; *or*

Research experience for a period of not less than two years in areas relating to project formulation and appraisal; *or*

Teaching experience for a period of not less than three years at the Collegiate level in the field of investment analysis and appraisal.

ஆதரவற்ற விதவைகள், தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர், போன்றவர்களுக்கு வயது மற்றும்/அல்லது தகுதியிலிருந்து அளிக்கப்படும் சலுகைகள் தேர்வாணையத்தின் 'பணி வேட்பாளர்களுக்கான விதிமுறை'களில் தரப்பட்டுள்ளன. ஆதிதிராவிட வகுப்பினர்/பழங்குடி வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர் மரபினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், தாயகம் திரும்பியவர்கள் முன்னாள் இராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர் போன்றவர்களுக்கு அளிக்கப்படும் விண்ணப்பக் கட்டணச் சலுகைகள் தேர்வாணையத்தின் 'பணி வேட்பாளர்களுக்கான விதிமுறைகளில்' தரப்பட்டுள்ளன. (பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு அளிக்கப்படும் சலுகைகள் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினருக்கும் பொருந்தும்).

விண்ணப்பப் படிவமும், நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு எழுத்து மூலம் கோரிப் பெற்றுக் கொள்ளலாம். கோரிக்கைகள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ, பதவியின் பெயர் மற்றும் விளம்பர எண் ஆகியவற்றைக் குறிப்பிட்டு எழுதப்பட்டு - செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு வழங்கக்கூடிய 1.3.1993 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10), சென்னை அண்ணா சாலை தபால் அலுவலகத்தில் செலுத்தத்தக்க கோடிட்ட அஞ்சல் ஆணை அல்லது பாரத ஸ்டேட் வங்கியில் (State Bank of India) ஏதாவதொரு கிளையில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையச் செயலாளருக்கு வழங்கக்கூடிய 1.3.1993 அன்றோ அல்லது அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட, சென்னை-600 006, ஆயிரம் விளக்கு பாரத ஸ்டேட் வங்கியில், செலுத்தத்தக்க - பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10) 'கேட்புக் காசோலை' (Demand Draft)-யுடன் சுய விலாசம் எழுதிய உறையுடனும் (26 x 12 செ.மீ.) அனுப்ப வேண்டும். கோரிக்கைகள் பிற மொழியில் இருக்குமாயின் அத்துடன் ஆங்கில மொழிபெயர்ப்பும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டா.

DIPR/453/MS/93




# மனித வாழ்க்கையில் மரங்கள்!




**ம. ஹரிகிருஷ்ணன், இ.வ.ப.,**
**முதன்மை வனத்துறைத் தலைவர்**


உயிரினங்கள் தோன்றிய காலந் தொட்டே மனிதனின் வாழ்க்கைச் சூழலில் மரங்கள் முக்கிய அங்கம் வகித்து வந்திருக்கின்றன. மரங்களும் காடுகளும் மனித இனத்திற்கு இயற்கையால் அளிக்கப்பட்ட வரப்பிரசாதமாகும். வற்றாத வளம் தரும் செல்வங்களுள் சிறப்பானது மரங்களாகும். வனங்களிலிருந்து கிடைக்கப்பெறும் கண்ணுக்குத் தெரிந்தும் தெரியாமலும் கிடைக்கும் பொருட்கள் நமது பொருளாதாரத்திற்கும், வாழ்க்கை முன்னேற்றத்திற்கும் தீர்வு செய்ய முடியாத வகையில் தொடர்வு உடையதாக இருக்கிறது.

ஏறத்தாழ பூமியின் பரப்பில் மூன்றில் ஒரு பகுதி நிலப்பரப்பு (நான்கு மில்லியன் எக்டேர் பரப்பு) காடுகளால் சூழப்பட்டுள்ளது. பூமியில் ஏறத்தாழ 2,50,000 எண்ணிக்கை பூக்கும் தாவர இனங்கள் இருப்பதாகக் கண்டறியப் பட்டுள்ளது.

உலக உணவு மற்றும் வேளாண்மை நிறுவனத்தின் மதிப்பீட்டின்படி ஆண்டிற்கு 17 மில்லியன் எக்டேர் பரப்புள்ள காடுகள் அழிந்து வருகின்றன. இயற்கைச் சமன்பாட்டைப் பாதுகாக்கக்கூடிய காடுகளின் பணி நமது சுற்றுச் சூழலுக்கு இன்றியமையாததாகும்; எனவே, அவற்றைப் பாதுகாக்க வேண்டியதில் உலகந் தழுவிய அளவில் கவலையும் ஆர்வமும் ஏற்பட்டுள்ளது.

மனிதனுடைய வாழ்க்கை நிலையை மேம்படுத்துவதில் மரங்கள் அளிக்கும் தொண்டு மகத்தானது. மரத்தடிகள், கட்டடங்கள் கட்டவும், அறைகலன்கள் செய்யவும் உதவுகின்றன. விறகு, உணவு, மருந்துப் பொருள் தயார் செய்யப் படுகிறது. தாவரத்திலிருந்து உற்பத்தியாகும் மற்றொரு முக்கிய பொருளான 'காகிதம்' அறிவு வளர்வதற்கும், செய்திகள் பரவுவதற்கும் ஒரு சுழற்சி இயக்க மையமாகத் தொடர்கிறது. அத்தகைய அறிவுக் களஞ்சியங்கள் சாதாரண மனிதர்களுக்குக் குறைந்த செலவில் அதிக அளவில் உற்பத்தி செய்யப்பட்ட காகிதங்களால் புத்தக வடிவில் வந்துள்ளது. மரவகைகளிலிருந்து மனிதர்களுக்குப் பல தரப்பட்ட தேவையான கோந்து, மரப் பிசின், ரப்பர் முதலியன கிடைக்கப் பெறுவது மற்றொரு வரப்பிரசாதமாகும்.

**மனித வாழ்க்கையில் மரங்கள்**

வனத்திற்குள்ளும் மற்றும் வன ஓரத்திலும் வசிக்கும் மக்கள் வறுமைக் கோட்டிற்கும் கீழே வசிப்பதால் அவர்கள் வருவாயைப் பெருக்குவதற்குண்டான வசதிகளைப் பெருக்க நடவடிக்கை எடுக்கவேண்டியது அவசியமாகிறது.

வனங்கள் மக்களுக்குக் கீழ்க்கண்ட தேவைகளைப் பூர்த்தி செய்கின்றன;

சீராக உணவு வகைகள் கிடைப்பதற்கு நேரிடையாக வகை செய்கிறது.

ஊரக மக்களுக்கு ஆரோக்கியத்திற்குத் தேவையான மருந்துகளும், ஊட்டச்சத்துகளும், மற்ற உணவுகளுக்குத் தேவையான ஊட்டச்சத்துக்களும் கிடைக்க வனங்கள் வகைசெய்கின்றன. வனங்களிலிருந்து கிடைக்கும் மருந்துப் பொருட்கள், மருத்துவ வசதியே இல்லாத பழங்குடியினருக்குப் பெரும் உபயோகமாக இருக்கிறது. மரங்கள் நிரந்தரமாகவும் தொடர்ந்தும் உணவுப் பொருட்களை அளித்து உணவுத் தேவைக்குப் பாதுகாப்பளிக்கின்றன. மரங்கள் வீடு கட்டுவதற்கும், கால்நடைத் தீவனங்கள், பசுந்தாள் உரங்கள் மற்றும் மருந்துகளுக்குத் தேவையான மூலிகைகளையும் வழங்குகின்றன

வறட்சி மற்றும் நெருக்கடி காலங்களில் உணவுப் பற்றாக் குறையை, பசியைப் போக்கிக்கொள்ள உணவுப் பொருட்களைக் கொடுத்து, பற்றாக் குறையை நிவர்த்தி செய்கிறது.

உணவுப் பொருட்களைச் சமைப்பதற்கும், பதப்படுத்துவதற்கும், பாதுகாப்பதற்கும் எரிபொருளாக உதவுகிறது.

மண்வளத்தையும், நீர் அமைப்பையும், காற்றின் வேகத்தையும் கட்டுப்படுத்தி சீரான உணவு கிடைக்கவும், விவசாய உற்பத்தி மேம்படவும் உதவுகிறது.

பழக்கப்பட்ட உணவுப் பயிர்களை அபிவிருத்தி செய்யத் தேவையான மூலப் பொருள்களின் சேமிப்புக் கிடங்காக விளங்குகிறது.

**ஆரோக்கியத்திற்கான மரங்கள்**

முற்கால மனிதர்கள் நோய்த் தடுப்பிற்கும், குணப்படுத்தவும் மூலிகைகளை உபயோகப்படுத்தி வந்தார்கள் தற்பொழுது உலகம் முழுவதும் அவைகளைத் தொடர்ந்து பெருமளவில் வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் 80 சதவிகிதம் மக்கள் நோயைத் தீர்ப்பதற்கு மூலிகைகளை நம்பியிருக்கிறார்கள். வளர்ச்சியடைந்த நாடுகளும் நவீன

மருத்துவ வசதி சார்ந்திருந்தும் நோய்களைக் குணமாக்குவதற்கு மூலிகைகளை இன்றும் உபயோகித்து வருகிறார்கள்.

இந்தியா போன்ற நாடுகளில் ஆயுர்வேதம், யுனானி, சித்தா போன்ற உள்நாட்டு மருத்துவ முறையை அனுசரித்தாலும், 95 சதவிகித மருத்துவக் குறிப்புகள் மூலிகையைச் சார்ந்தவையாக இருக்கின்றன. இருந்த போதிலும், மனிதர்கள் பலதரப்பட்ட நோய்களுக்கும், வீட்டு மிருகங்களுக்கு ஏற்படும் நோய்களுக்கும் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக மூலிகைகளைப் பயன்படுத்தி தற்காலத்திலும் தொடர்ந்து முக்கியமாக உபயோகப்படுத்தப்பட்டு வருகிறார்கள்.

மரங்கள் நிலத்திற்கும் வானத்திற்கும் தொடர்ந்து ஆங்காங்கே ஏற்படும் மழை மேகங்களை நீர்த்துளிகளாக மாற்றி மழையாகவோ அல்லது தூறலாகவோ பொழியச் செய்கின்றன. மரத்தில் ஒரே ஒரு கிராம் உலர் பகுதி 300 முதல் 1000 கிராம் வரை நிலத்தடி தண்ணீர் இலைப் பரப்பின் மூலமாக நீராவியாக மாற்றி விடுகிறது. இந்த அளவு தண்ணீர் ஆவியாவது நிலப்பரப்பு மூலம் ஆவியாவதை விட மரத்தினால் சூழப்பட்ட அதே இடத்தில் மிகவும் அதிகமாக உள்ளது. இவ்விதமாக நீராவியாக மாற்றப்பட்ட தண்ணீர் சுற்றுப்புற ஈரத்தன்மையை அதிகப்படுத்தி சீதோஷ்ண நிலையைக் குறைத்து, மேகங்கள் மேலும் மேலும் உண்டாக உதவி செய்து மழையாக பெய்யச் செய்கிறது.

### மறைமுக நன்மைகள்

மரங்களினால் கிடைக்கின்ற மறைமுக நன்மைகள் எளிமையாகக் காணப்பட்டாலும் அதனுடைய பண மதிப்பு மனித இன மேம்பாட்டின் பொருாதார முக்கியத்துவத்தை விசாலப்படுத்துகிறது.

ஒரு நடுத்தர அளவான மரம் ஓராண்டில் சுமாராக ஒரு டன் பிராண வாயுவை உற்பத்தி செய்கிறது. மேலும், சராசரியாக ஐம்பது ஆண்டுக் காலகட்டத்தில் ரூ.0.25 மில்லியன் தற்கால அங்காடி விலைக்கு ஈடான பிராணவாயுவை உற்பத்தி செய்கிறது. இயற்கையாகக் கிடைக்கின்ற பிராண வாயுவை நாம் உபயோகிக்கவில்லையெனில், நமக்குக் கிடைக்கின்ற தினசரி வருமானத்தைக்கொண்டு உணவு, உடை, இருப்பிடம் ஆகியவற்றிற்குச் செலவிட இயலாமல், இந்தப் பயனுள்ள பொருளுக்கே அதிகம் செலவழிக்க வேண்டும்.

மரங்கள் காற்றைச் சுத்தப்படுத்தும் தன்மை இப்பொழுது நன்றாகத் தெரிந்ததாகவும், புரிந்துகொள்ளப்பட்டதாகவும் இருக்கிறது. மரம் உயர்ந்த அளவிலான நச்சுப்பொருள் மற்றும் இதர வாயுக்களான நைட்ரஜன், கந்தகம் மற்றும் கரியமிலத்தின் ஆக்சைட்களை எடுத்துக்கொள்கிறது. மரங்களின் இந்தச் செயல்களைச் செயற்கை முறையினால் மாற்றினால் ரூ.0.5 மில்லியன் மரம் செலவாகிறது; இதைத் தவிர ஆராய்ச்சி உபகரணங்கள் கொண்டு செயல்படுத்துவதற்கு மூலதனச் செலவு அதிக அளவில் தேவைப்படும். சுமார் ஐம்பது டன் எடையுள்ள நடுத்தர அளவிலான ஒரு மரம் சராசரியாகத் தன்னுடைய ஐம்பது ஆண்டுக் காலத்தில் ரூ.1.6 மில்லியன் மதிப்புள்ள உணர முடியாத நன்மைகளை உற்பத்தி செய்வதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

மரங்கள் மக்களுக்கும், பிராணிகளுக்கும், பயிர்களுக்கும், நிழலைக் கொடுக்கிறது. பல பயிர்கள் மரத்தின் நிழலில் நன்றாக துளர்கின்றன. பயிர் நிலங்களில் வளர்க்கப்படும் மரங்கள் நிலத்திற்கு ஊட்டச்சத்தை அளிக்கின்றன.

தமிழக அரசு தொடர்ந்து 1988-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்திய அரசின் தேசிய வனக்கொள்கையின் அடிப்படையில், திறமையான முறையில் நிலையான சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்க நடவடிக்கை எடுத்து வறுமைக்கோட்டின் கீழ் இருப்பவர்களுக்கும், ஏழைமக்களுக்கும் இயற்கையான முறையில் காடுகளினால் தேவைப்படும் பொருள்கள் அளித்து அவர்களுடைய வாழ்க்கைத் தரம் மேம்பட ஆவன செய்யப்படுகிறது.

நம்முடைய, பிறந்த நாட்கள், திருமண நாட்கள், மற்றும் முக்கிய நிகழ்ச்சிகளில் மரங்களை நட்டு அவைகளைப் பாதுகாக்க முன்வர வேண்டும். தொழிற்சாலைகளிலும், அரசாங்கப் பயிற்சிக் கூடங்களிலும், தனியார் துறையிலும், மற்றும் காலி இடங்களிலும் மரங்களை நட்டுப் பராமரிக்க வேண்டும். இதை ஒவ்வொருவரும் உறுதி மொழியாக ஏற்றுச் செயல்படுவோம்!



### வனவளம் காப்போம்!

உயிர்க் காக்கும் மருந்தாய் விளங்குவன மரங்கள்!

சுற்றுச் சூழலைப் பாதுகாத்து நாம் சுகம் பெற வழிவகுப்பன மரங்கள்!

வாரி வழங்கும் வள்ளலாய் மாரியைத் தருபவையும் மரங்களே!

இயற்கை அன்னை கொலுவீற்றிருக்கும் அற்புத அரண்மனை அல்லவா வனங்கள்!

சுற்றுலாப் பயணிவர்க்குமட்டுமல்ல, சொர்க்கப் பூமியாம் வனங்களைப் பற்றி ஆராய்வோருக்கும் இது ஒரு ஆராய்ச்சிக்கூடமன்றோ?

மரங்களை மகிழ்ச்சியுடன் வளர்ப்பது ஒருபுறம்; அதைத் தன்னலத்துக்காக அழிப்பது மற்றொரு புறம்.

இந்த நிலை மாற வேண்டும். மக்கள் மனத்திலே மந்த மாருதம் வீசவேண்டும்!

அரிய விலங்குகள் - அதிசய உயிரினங்கள் - அழகிய மலர்கள் - நெடிய மரங்கள் - கொடிகள், செடிகள், புல்பூண்டுகள் ஆம். தாவர இனங்கள் தவழ்ந்து விளையாடும் நற்ருபக் காட்சிகள். வனங்கள் அன்றோ?

காடுகள் வாழ்ந்தால், நாடுகள் வாழும். காடுகள் செழித்தால் நாடுகள் செழிக்கும். காடுகள் வளர்ந்தால் நாடுகள் வளரும்!

'வீட்டுக்கொரு மரம் வளர்ப்போம்!' என்பதை உண்மையில் செயல்படுத்துவோம்!

'மரம் வளர்ப்போம்!' எனக் கரம் உயர்த்துவோம்!

வனவளம் காத்து, பொதுநலம் பூத்திட உழைப்போம்.

—பி.வி.ஜி.



## சென்னை மாவட்டத்தைச் சார்ந்த 593 மனுதாரர்களுக்கு 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு முதல்வர் வழங்கினார்.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் சென்னை மாவட்டத்திலிருந்து மனு கொடுத்திருந்த ஆயிரக்கணக்கான பேர்களில் தகுதியானவர்கள் 593 நபர்களைத் தேர்ந்தெடுத்து, சுமார் ரூ.2 கோடி மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை 16.3.93 அன்று தலைமைச் செயலகத்தில் வழங்கினார்.

வாகனம் மற்றும் தொழில் கடனுதவித் திட்டத்தின்கீழ் 28 பேர்களுக்கு ரூ.91.38 இலட்சமும், நலிந்தோர் குடும்ப நல உதவித் திட்டத்தின்கீழ் 76 பேர்களுக்கு ரூ.2.65 இலட்சம் நிதியுதவியும், குடிசைமாற்று வாரியத் திட்டங்களின்கீழ் 125 பேர்களுக்கு ரூ.8.48 இலட்சம் கடனுதவியும், மீன் வளத் துறையின் நலத்திட்டங்களின் கீழ் 27 பேர்களுக்கு ரூ.25.44 இலட்சம் நிதியுதவியும், கூட்டுறவுத்துறைத் திட்டத்தின்கீழ் 36 நபர்களுக்கு ரூ.8.59 இலட்சம் கடனுதவியும், ஆதிதிராவிட உதவித் திட்டங்களுக்கு தாட்கோ மூலம் 50 நபர்களுக்கு ரூ.51.58 இலட்சம் நிதியுதவியும், 23 நபர்களுக்கு முதியோர் உதவித் தொகையாக ரூ.65,000-மும், 36 பெண்களுக்கு விதவை உதவித் திட்டத்தின்கீழ் ரூ.32,000-மும், விபத்து நிவாரண உதவித் திட்டத்தின்கீழ் இருவருக்கு ரூ.20,000-மும், சாலை விபத்து நிவாரண உதவி திட்டத்தின்கீழ் 28 பேர்களுக்கு ரூ.1,10,000-மும், இருதய அறுவைச் சிகிச்சைக்கென ஒருவருக்கு ரூ.5,000 நிதியுதவியும், நேரு வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் 10 பேர்களுக்குச் சிறு கடனுதவியாக ரூ.67,000-மும், ஆதிதிராவிடர் நலத்திட்டங்களின் கீழ் 14 பேர்களுக்கு ரூ.15,000 நிதியுதவியும், பிற்படுத்தப்பட்டோர் நலத்திட்டங்களின் கீழ் 27 பேர்களுக்கு ரூ.27,000 மானியமும், முன்னாள் படைவீரர் நலத் திட்டங்களின்கீழ் 9 பேர்களுக்கு ரூ.28,000 நிதியுதவியும், சமூக நலத் துறைத் திட்டங்களின் கீழ் 63 பேர்களுக்கு ரூ.1,88,000 கடனுதவியும், ஊனமுற்றோர் உதவித் திட்டத்தின்கீழ் 38 பேர்களுக்கு ரூ.46,000 மானியமும் வழங்கப்பட்டது.

இவை த்விர, பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 29 பேர்களுக்கு இருதய அறுவைச் சிகிச்சைக்காக, ரூ.4,70,000 நிதியுதவியினையும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் வழங்கினார்.

## பார்த்தோம் படித்தோம்

**16.2.93** இதழ், அட்டைப்படம் மிக அருமை. புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், இருமொழிக் கொள்கை குறித்து ஆற்றிய உரையைப் படித்து மகிழ்ந்தேன். இவ்விதழ் புத்துணர்ச்சியூட்டும் புதுமலராக மலர்ந்திருக்கிறது.

டி. மாரியப்பன்,
சிந்தாமணி
(நெல்லை-கட்டபொம்மன் மாவட்டம்)

**16.2.93** இதழில் 'தருமபுரி மண்ணும் விடுதலைப் போராட்ட உணர்வும்' என்னும் தலைப்பில் வெளியாகி இருந்த செய்திகள் பயனுள்ளதாக இருந்தன.

அ. துசை மேரி
அணிலாடி
(தென்னார்க்காடு மாவட்டம்)

சுதந்திரத் தியாகிகளின் வரலாறு அருமையிலும் அருமை!

கே.பி. சுந்தரமூர்த்தி
கொளத்தூர்

'மாணவர் பக்கம்' பயனுள்ளதாக இருந்தது. கவிஞர் அ. கப்பையன் எழுதிய 'சிக்கனமே சிறந்தது' கவிதை போற்றும்படி இருந்தது.

கோ. நேரு,
எரவலம்
(தென்னார்க்காடு மாவட்டம்)

'சிக்கனமே சிறந்தது' கவிதையும், 'அறிவுச்சுடர்' முத்துக்களும் சிந்தனைக்கு விருந்தாய் அமைந்ததோடு, தேன் போல் இனிக்கவும் செய்தன.

ஸ்ரீநிவாஸ் பிரபு
சென்னை-90

'அறிவுச்சுடர்' சிந்தனையைத் தூண்டும் சிறப்புச் சுடராக உள்ளது.

கே. சிவாசத்ரியன்
குமராட்சி

தருமபுரியைப் 'பெரும்கற்காலம்' என்ற பெரும் பண்பாட்டைச் சார்ந்தது என்றே அழைக்கலாம். தென்னார்க்காட்டில் 'இளைஞர் வார விழா' கட்டுரை படித்தேன். மிகவும் அருமை.

எல். அப்துல் ரபீக்
விஜயபுரம்
(சின்ன சேலம்)

தருமபுரி மாவட்டத்தில் சிறந்த காவல் நிலையம் பற்றிய கட்டுரை என் மனதை மிகவும் கவர்ந்தது.

வி. சென்றாயன்
ரயில்வே காலனி
சேலம்

'படமும் செய்தியும்' படிப்பதற்கும் பார்ப்பதற்கும் மிகவும் அருமையாக உள்ளது.

கே. கிருஷ்ணவேணி
நன்னாட்டம் பாளையம்
(தென்னார்க்காடு மாவட்டம்)

# சவூதி செல்லவிருக்கும் தமிழக மருத்துவ நிபுணர்களுக்கு...

**எஸ். இரகுபதி, இ.ஆ.ப.,**
**மேலாண்மை இயக்குநர்**

சவூதி அரேபியாவின் சுகாதார அமைச்சகத்தின் கீழ் உள்ள அரசுக்குச் சொந்தமான மருத்துவமனைகளில் பணியாற்ற, தமிழக அரசுக்குச் சொந்தமான அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் மூலம் ஏராளமான மருத்துவர்கள் மற்றும் மருத்துவத்தைச் சார்ந்த பணியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். பொதுவாக இந்திய மருத்துவப் பணியாளர்களுக்குச் சவூதி அரேபியாவில் நல்ல மதிப்பு இருந்தாலும், தமிழக மருத்துவர்களுக்குத் தனிச் சிறப்பு என்றும் உண்டு.

வழக்கமாகப் புது தில்லியில் நடத்தப்பட்டு வந்த நேர்முகத் தேர்வு, அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் நிர்வாக இயக்குநரின் முயற்சியினாலும், சவூதி அரேபியா அரசின் மருத்துவத் தேர்வு மைய அதிகாரியின் ஒத்துழைப்பினாலும் இம்முறை சென்னையில் நடத்தப்பட்டது. இதனால் நம் மருத்துவ நிபுணர்களின் நேரம் மற்றும் போக்குவரத்துச் செலவு மிச்சப்படுத்தப்பட்டதுடன், அவர்கள் அதிக அளவில் நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ள முடிந்தது. கடந்த ஆண்டு இறுதியில் சவூதி அரேபிய மருத்துவர்களால் நடத்தப்பட்ட நேர்முகத் தேர்வில் சென்னையில் சுமார் 1000 நபர்கள் பங்கு பெற்று - 802 நபர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். தேர்வு செய்யப்பட்டுள்ள மருத்துவ நிபுணர்கள் இவ்வாண்டு இறுதிக்குள் சவூதி அரேபியாவிற்கு அனுப்பப்படுவார்கள்.

நம் தமிழக மருத்துவ நிபுணர்கள் இவ்வாறு வெளிநாடு செல்வதால் அவர்கள் நவீன நுணுக்கங்களை அறிந்து வருவதோடு, அதிக அளவிலான அந்நியச் செலாவணியைப் பெற்றுத் தர வாய்ப்பிருக்கிறது. இதனால் தமிழகத்தில் வேலையில்லாமல் இருக்கும் மருத்துவ நிபுணர்களுக்கு வேலைவாய்ப்புப் பெற வழி அமைகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது. மேலும் பெட்ரோலியம் மற்றும் உரத் தொழிற்சாலைகளில் பணிபுரியும் பொறியியல் மற்றும் பொறியியல் துறையைச் சார்ந்தவர்களுக்குக் குவைத் நாட்டில் அதிக வாய்ப்பிருப்பதனால் கூடிய விரைவில் நேர்முகத் தேர்வு நடத்தி தேர்வு செய்ய குவைத் நாட்டுடன் அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் ஒப்பந்தம் செய்துள்ளது. இதுவரை சுமார் 5,000 நபர்களைப் பல்வேறு வளைகுடா நாடுகளுக்கு அனுப்பியுள்ள இந்நிறுவனம், வருங்காலங்களில் அதிக அளவில் அனுப்ப முனைந்து செயல்படுகிறது.

இந்நிறுவனத்தின் மூலம் வெளிநாடு சென்று பணிபுரிய விரும்புவோர் நேரில் அல்லது தபால் மூலம் ரூ.110-க்கான டிமாண்ட் டிராப்டை நிர்வாக இயக்குநர், ஓவர்சிஸ் மேன்பவர் கார்பரேசன் லிமிடெட், சென்னை என்ற பெயரில் எடுத்து, கீழ்க்கண்ட் முகவரிக்கு அனுப்பி விண்ணப்பத்தைப் பெற்று, பூர்த்தி செய்து பதிவு செய்து கொள்ளலாம்.

முகவரி:

அயல்நாட்டு வேலைவாய்ப்பு
நிறுவனம் (தமிழக அரசு நிறுவனம்)
12, முதல் மாடி,
கிருஷ்ணமா சாலை
நுங்கம்பாக்கம்,
சென்னை-600 034.


**தமிழரசு**

16-4-93 இதழ்

தென்னார்க்காடு மாவட்டச்

சிறப்பிதழாக மலர்கிறது!

- அரசு ஆற்றி வரும் அரும் பணிகளின் தொகுப்பு!

மற்றும்

- சிந்தைக்கு விருந்தூட்டும் சிறுகதை!
- கருத்தைக் கவரும் கட்டுரைகள்!
- கற்கண்டாய் இனிக்கும் கவிதைகள்!
- பக்கத்துக்குப் பக்கம் படங்கள்!

**தமிழரசு**

படிக்க — பயன்பெற — பாதுகாக்க



ஆசிரியரும் வெளியிடுபவரும்: இரா. சம்பத், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.



**எளிமையானவை! நேர்த்தியானவை!**
**மேன்மை மிகுந்தவை!**
**தோற்றம் அளிப்பவை!**



**கோ-ஆப்டெக்ஸ்**

- பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
- பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
- பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
- லுங்கிகள், துவாலைகள், வேட்டிகள்.
- படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தை அணுகவும்.



M 8676
Licence No. TN MS(C) PP-21






# இந்த இதழில்...


"எல்லா மதத்தினரும் இணைந்து வாழும் இனிய தமிழகத்தின் பெருமை காப்போம்!"
*—இராணிப்பேட்டையில் மாண்புமிகு முதல்வர் உரை* ... 2

மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய உரைகளின் தொகுப்பு நூல்கள் வெளியீட்டு விழா ... 12

பொருட்காட்சி நிறைவு விழாவில் முதல்வர் உரை ... 15

வளரும் தென்னார்க்காடு மாவட்டம் ... 17

பழுப்புப் புரட்சியில் நெய்வேலி ... 19

முன்னேற்றம் காணும் தென்னார்க்காடு ... 23

வடலூர் இராமலிங்க அடிகளார் ... 25

காது-மூக்கு-தொண்டை மருத்துவம் ... 30

ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலன் ... 33

பன்மொழிப் புலவர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் ... 47



# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2024

சித்திரைத் திங்கள் - 3

மலர்:23 இதழ்:20

16-4-1993


## தென்னார்க்காடு மாவட்டச் சிறப்பிதழ்

மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் - சட்டமேதை டாக்டர் அம்பேத்கரின் பிறந்த நாளன்று (14.4.93), சென்னையில் உள்ள அன்னாரின் திருவுருவச் சிலைக்கு மாலையணிவித்து மரியாதை செலுத்தினார்.





# இஸ்லாமிய சமுதாயத்தினரை என்னைவிட்டுப் பிரிக்கமுடியாது!

முடிவுகள் அறிவிக்கப்பட்டவுடன், இரு அணிகளாகப் பிரிந்திருந்த நாங்கள், வெற்றி வாய்ப்பை இழந்து, அதன் காரணமாக அன்றைக்குத் தி.மு.க. ஆட்சி அமைந்தவுடன், எங்கள் உடன்பிறப்புகள் வேட்டையாடப்பட்ட போது, எனக்காக முதல் உயிர்ப்பலி கொடுத்த செயல் வீரர், சென்னை நகரில் வாழ்ந்த 'ஆலந்தூர் ஜஹாங்கீர்' என்ற இஸ்லாமியச் சகோரர் தான், என்பதைக் கண்ணீர் மல்க நினைவு கூரக் கடமைப்பட்டுள்ளேன்.

இந்த அளவுக்கு, என் மீது உயிரையே வைத்துள்ள இஸ்லாமிய சமுதாயத்தினரைத் தான், என்னிடமிருந்து பிரித்து விட சிலர் முயன்று வருகின்றார்கள்.

நாடாளுமன்றத்திற்கு நான் முதன் முதலில் தேர்வு செய்யப்பட்டு, பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் அமர்ந்திருந்த அதே இருக்கையில் அமரும் அரிய வாய்ப்பைப் பெற்ற அன்றும் சரி; அப்பேரறிஞர் அண்ணாவும், இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும், அமர்ந்திருந்த தமிழக முதலமைச்சர் நாற்காலியில் அமர்ந்து, பணியாற்றும் வாய்ப்பினைப் பெற்றுள்ள இன்றும் சரி; என் உணர்வுகளும், எண்ணங்களும், சிறுபான்மையினரைப் பாதுகாப்பதிலும், அரவணைப்பதிலும் இருந்து வருகின்றது என்பதையும், அவர்களைப் பாதிக்கும் எந்த முயற்சியையும், முறியடிக்கும் திடமான நெஞ்சுறுதி, எனக்கு உள்ளது என்பதையும், தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

**பாபர் மசூதி - இராமர் கோயில்**

பிரச்சினை ஆக்கப்பட்டுவிட்ட 'பாபர் மசூதி - இராமர் கோயில்' விவகாரத்தில், எதிருக்குப் புதிரான கருத்துக்கொண்டவர்கள், சிறிதும் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை இன்றி, இதனைப் பூதாகாரமாக்கினர். ஒரு சாரார், மசூதி உள்ள இடத்தில் இராமர் கோயில் கட்டப்பட வேண்டும் என்றும், இன்னொரு சாரார், மசூதி மட்டுமே இருக்க வேண்டும் என்றும், நிலை கொண்டனர். எத்தரப்பினரும் பாதிக்கப்பட்டுவிடக் கூடாதே, என்ற ஆதங்கம்தான் எனக்கு.

தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரும், போற்றி வளர்த்துள்ள சமயப் பொறையுடைமை மிக்க, தமிழகத்தின் சார்பில் சென்று தேசிய ஒருமைப்பாட்டுக்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட நான், எப்படி ஒரு சாராருக்குச் சாதகமாகக் கருத்தை வெளியிடமுடியும்?

எனவே தான், நான் முதலமைச்சர் ஆனவுடன், 1991 நவம்பர் திங்களில் நடந்த, தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டத்தில், இப்பிரச்சினை தொடர்பான விவாதத்தை, பாபர் மசூதியா? அல்லது ராமர் கோயிலா? என்று இல்லாமல்; ராமர் கோயிலும்- பாபர் மசூதியும், என்று தான் வைத்துக் கொள்ள வேண்டும் என்று, அழுத்தம் திருத்தமாகத் தெரிவித்தேன். அதாவது,

"In so far as our party is concerned, we will support any decision that respects the rights of the minorities, acknowledges the freedom of the majority in this country to pursue its worship in a free and fair manner, and satisfies the aspirations of our people. the discussion need not be on RAM JANMA BHOOMI Vs BABRI MASJID, but could and ought to be on RAM JANMA BHOOMI AND BABRI MASJID."

- என்று குறிப்பிட்டேன். இந்த நிலையில் சிறு மாற்றமும் இன்றிதான், தொடர்ந்து சொல்லிவந்துள்ளேன்.

கடந்த 1992 நவம்பரில் நடந்த, தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டத்திலும், இதையேதான் மீண்டும் வலியுறுத்தினேன். மேலும், நான் மட்டும் தான், பாபர் மசூதி ஆதியிலேயிருந்து இருந்ததா, இல்லையா, என்கிற வரலாற்றுப் பிரச்சினையைக் கிளப்பக் கூடாது, இந்த நாட்டு மக்களை நிம்மதியாக வாழ வழிவகை செய்யுங்கள். மசூதி அப்படியே பாதுகாக்கப்பட வேண்டும், என்றும் தெரிவித்தேன்.

**இன்று நிலை என்ன?**

அப்போது என் கருத்துக்களுக்கு மதிப்பு அளித்தார்களா? இல்லை. நான் கூறிய நல்ல கருத்துக்களை அன்று புறக்கணித்ததோடு மட்டுமன்றி, என் மீது புழுதியும் வாரித் தூற்றினார்கள். பாபர் மசூதி எக்காரணம் கொண்டும் பாதிக்கப் படக்கூடாது; பாதுகாக்கப்பட வேண்டும்; நல்ல சூழ்நிலையை ஏற்படுத்தி, ராமர் கோயில் கட்டவேண்டும் என்று, இரு தரப்பினரும் பாதிக்கப்படக் கூடாது என்ற நல்லெண்ணத்தில் நான் தெரிவித்த கருத்துக்களை, எள்ளி நகையாடினர்.

இன்று நிலை என்ன? சரித்திரச் சான்றாகப் பல்லாண்டுக் காலம், நமது நாட்டின் சகோதரத்துவக் கொள்கையின் சின்னமாகத் திகழ்ந்த, பாபர் மசூதி இடிக்கப்பட்டது. இதற்கு யார் காரணம்?

பாபர் மசூதி பாதுகாக்கப்பட வேண்டும், என்று கூறிய நான்தான் காரணம் என்று, சிலர் கூறுகின்றனர். இதில் என்ன நியாயம் இருக்கின்றது? கர சேவையை நான் தான் அனுமதித்தது போன்றும், பாபர் மசூதியை நான்தான் இடிக்கச் சொன்னது போன்றும், ஒரு மாயையை ஏற்படுத்த, என்மீது அரசியல் காழ்ப்புணர்ச்சி கொண்ட சிலர், தொடர்ந்து முயற்சி செய்து வருகின்றார்கள்.

**இது நியாயமா?**

அந்தத் தேசிய ஒருமைப்பாட்டுக் குழுவின் கூட்டத்தில், மாண்புமிகு பாரதப் பிரதமருக்குத் தான், இப்பிரச்சினை குறித்து முடிவெடுக்க, அனைத்து அதிகாரங்களும் வழங்கப்பட்டன. அந்த முடிவிற்கு என்னுடைய ஆதரவைப் பிரதமருக்குத் தெரிவித்த



# யாரோ செய்த தவறுக்காக என்னைக் குறைகூறுவது நியாயமா?

தோடு, பி.ஜே.பி. தலைவர் திரு. அத்வானி அவர்களுக்கும், சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாக்க, உதவிட வேண்டும் என்று கோரி கடிதமும் எழுதினேன்.

இத்தனை முயற்சிகள் எடுத்துக் கொண்ட என் மீது, யாரோ செய்த தவறுக்காகக் குற்றம் சாட்டுகிறார்கள், குறை கூறுகிறார்கள். இது நியாயமா? நீங்கள் தான் நல்லதொரு முடிவு கூற வேண்டும்.

நிச்சயமாகக் கூறிக்கொள்கிறேன். நான் தெரிவித்த கருத்துக்களுக்கு மதிப்பு அளித்து, அதன்படி நடவடிக்கைகள் தொடர்ந்திருந்தால், இப்பிரச்சினைக்கு ஒரு சுமுகமான முடிவு ஏற்பட்டிருக்கும்.

இது போன்ற அவல நிலை ஏற்பட்டிருக்காது; இஸ்லாமியச் சகோதரர்களின் உணர்வுகள் பாதுகாக்கப்பட்டிருக்கும், என்று திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். உண்மை நிலை இவ்வாறு இருக்க, நான் சொன்ன கருத்துக்களை, அரசியல் ஆதாயத்திற்காக இருட்டடிப்புச் செய்துவிட்டு, நான் சிறுபான்மை முஸ்லீம் சகோதர சகோதரிகளுக்கு, விரோதமாக இருப்பது போலச் சிலர் இன்றும் பொய்ப் பிரச்சாரம் செய்து வருகிறார்கள். அவர்களை நீங்கள் நம்ப வேண்டாம். எந்தக் கால கட்டத்திலும், எக்காரணத்திற்காகவும், சிறுபான்மையிருக்கு முரண்பட்ட எந்த இயக்கத்தினருடனும், எங்களுக்குத் தோழமை இருக்காது என்பதைத் தெளிவுபட அறுதியிட்டுக் கூற விரும்புகிறேன்.

ஏக பரம்பொருளை வழிபடும் இஸ்லாமியச் சகோதரர்களும், கிறிஸ்தவச் சகோதரர்களும், இந்துச் சகோதரர்களும் சகோதரிகளும் இணைந்து வாழும் நம் இனிய தமிழகத்தின் ,பெருமையினை, எந்தச் சக்தியாலும் பிரிக்க முடியாது. அப்படிப் பிரிக்க முயலும் சக்திகளை, முறியடிக்க, எங்கள் அரசு தயங்காது, தவறாது, என்று உறுதி கூறுகின்றேன்.

நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற இந்த 21 மாத காலத்தில், தமிழக மக்களுக்காக - குறிப்பாக ஏழை, எளிய மக்களுக்காக, நலிவுற்ற சிறுபான்மையினருக்காக, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக, உங்கள் அரசு ஆற்றியுள்ள அரும் பணிகள் அனைத்தையும் நீங்கள் நன்கு அறிவீர்கள்.

இஸ்லாமிய சமுதாயப் பெருமக்களுக்கு, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஆட்சிக் காலத்திலும், தற்போது என்னுடைய தலைமையில் அமைந்துள்ள அரசின் ஆட்சிக் காலத்திலும், செய்துள்ள நன்மைகள் பற்றி, இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இஸ்லாமிய சமுதாயத்திற்குச் செய்த நன்மைகள்:

1. புரட்சித் தலைவர் ஆட்சிக்கு முன்பு, வக்பு வாரிய நிறுவனங்களின் மராமத்துக்காக, ஒரு இலட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டிருந்தது. இதை மாற்றி படிப்படியாக, 3 இலட்சம் ரூபாய், 4 இலட்சம் ரூபாய், 5 இலட்சம் ரூபாய் என்று, 1977-ஆம் ஆண்டு முதல் 1983-ஆம் ஆண்டு வரை, உயர்த்தி ஆணையிட்டார்கள்.

2. 1984 மற்றும் 1985-ஆம் ஆண்டுகளுக்கு, மேற்சொன்ன காரியங்களுக்காக, ஒரு கோடி ரூபாய் ஒதுக்கினார்கள்.

3. வக்பு நிறுவனங்களுக்கு நன்கொடை அளிக்கப்படும் சொத்துக்களுக்கு, சொத்து மதிப்பு எவ்வளவாக இருந்தாலும், 100 ரூபாய் மட்டுமே முத்திரைக் கட்டணம் செலுத்தினால் போதும் என்று ஆணையிட்டார்கள்.

4. சென்னை நகரில் வக்பு வாரியத்திற்கு அலுவலகம் கட்ட, 13 ஆயிரத்து 204 சதுர அடி நிலத்தை, மத்திய அரசின் பாதுகாப்புத் துறையிடம் இருந்து பெற்று, அதற்கான விலை 3 இலட்சத்து 7 ஆயிரத்து 692 ரூபாய் தொகையை, வக்பு வாரியத்திற்கு மானியமாக வழங்கினார்கள்.

5. 9.8.1980 அன்று, சட்டமன்றத்தில் காயிதேமில்லத் அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்துவைத்தார்கள்.

6. 1985-ஆம் ஆண்டு இஸ்லாமிய சமுதாயத்தினரின் (1) அன்சர் (2) ஷேக் (3) சையத் ஆகிய பிரிவினரை, பிற்பட்ட வகுப்பினராக அறிவித்தார்கள்.

7. **உலமா பென்ஷன்:**

1981-ஆம் ஆண்டு, 60 வயதிற்கு மேற்பட்டவராகவும், 20 ஆண்டு முஸ்லீம் மத நிறுவனங்களில் பணியாற்றியவர்களுக்கு, மாதந்தோறும் 250 ரூபாய் ஓய்வூதியம் வழங்க உத்தரவிட்டார்கள். அப்போது 400 நபர்கள் பயனடைந்தார்கள். படிப்படியாக அதனை 1,400 நபர்கள் என்று உயர்த்தினார்கள்.

நான் முதலமைச்சரான பிறகு இஸ்லாமிய சமுதாயத்திற்குச் செய்த நன்மைகள்:

1. இஸ்லாமிய சமுதாயத்தினரின் மயானங்களைச் சுற்றி சுவர் கட்ட, சென்ற ஆண்டு 2 இலட்சம் ரூபாய், எளிய கடனாக அரசு அனுமதித்தது. இத்தொகை இந்த ஆண்டு மேலும்



சமண சமய மகான் மகாவீரர் பிறந்த நாளையொட்டி, சென்னையில் உள்ள ஜெயின் ஆலயம், மகாவீரர் அகிம்சா பிரச்சாரச் சங்கம் ஆகியவற்றைச் சேர்ந்த 17 பேர் 5.4.93 அன்று காலை மாண்புமிகு முதல்வர் அவர்களை இல்லத்தில் சந்தித்துப் பொன்னாடை போர்த்தி வாழ்த்தினார்கள்.



# “எல்லா மதத்தினரும் இணைந்து வாழும் இனிய தமிழகத்தின் பெருமை காப்போம்!”

**வ**ரலாற்றுச் சிறப்புமிக்க வட ஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டத்திற்கு, வருகை தருவதிலும், இங்கே எழுச்சியோடு திரண்டு இருக்கின்ற, இலட்சக் கணக்கான அன்பு நெஞ்சங்களைச் சந்திப்பதிலும், நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

செல்லுகின்ற திசைகளில் எல்லாம், நாட்டு மக்கள் என் மீது, காட்டி வருகின்ற அன்பும், பாசமும், பரிவும், ஆதரவும், நாளுக்கு நாள் பெருகி வருவதைப் பார்த்து, நான் நெகிழ்ந்து போகிறேன். அதே நேரத்தில், மகத்தான இந்த மக்கள் சக்தியின் உணர்வுகளுக்கு, நான் எப்படி கைம்மாறு செலுத்தப் போகின்றேன் என்பதை எண்ணி மலைத்து நிற்கிறேன். நான், உங்களைச் சந்திக்க வருகின்ற இதுபோன்ற வேளைகளில், கை நிறையத் திட்டங்களுடனும், உதவிகளுடனும் வந்தாலும், அவை, நான் எண்ணும் அளவிற்கு, உங்களுக்குச் செய்த கைம்மாறாகக் கருத முடியாது என்பதை நன்கு அறிவேன். எனவே தான், உங்கள் வளர்ச்சிக்கும், உயர்விற்கும், இனிய வாழ்விற்கும், அயராது பாடுபடுகின்ற பழக்கத்தினை, எனது அன்றாடப் பணியாக ஏற்றுக்கொண்டு, பாடுபட்டு வருகின்றேன். மேலும், இதனை என் வாழ்நாள் கடமையாகக் கருதி, தொடர்ந்து பணியாற்றி வருகின்றேன். இந்த எண்ணங்களுக்கு உருக் கொடுக்கிற வகையில்தான், இன்னும் புதிய புதிய திட்டங்களைத் தீட்ட வேண்டும். மேலும் மேலும் நலப் பணிகள் தொடங்கப்பட வேண்டும், புதுப்புது உதவிகள் வழங்கப்பட வேண்டும், என்று என் உள்ளம் சிந்தித்துக் கொண்டே இருக்கின்றது.

உங்கள் அன்புச் சகோதரியான என்னிடத்தில், நீங்கள் வைத்திருக்கும் நம்பிக்கையைக் கண்கூடாகக் காணும் போதெல்லாம் நான் கடந்து வருகின்ற தடைகளும், இடர்ப்பாடுகளும், தூள் தூளாக மறைந்து போய்விடுகின்றன. அவைகளைத் தூசாக, துச்சமாக மதிக்கும் மனத்தெம்பும், தைரியமும், எனக்கு தானே வருகிறது.

தற்போது வளர்ந்துவரும் தொழில்களால், வரலாறு படைத்துக் கொண்டிருக்கும் மாவட்டம் இந்த மாவட்டம். சட்டமேதை, அண்ணல். அம்பேத்கர் அவர்களின் பெயரைத் தாங்கி நிற்கின்ற இந்த மாவட்டத்தில், உண்மையான ஒருமைப்பாடும், ஒற்றுமையும், ஓங்கி நிற்பதைக் கண்டு, உளம் மகிழ்கின்றேன்.

**அம்பேத்கரின் விளக்கம்**

மாபெரும் தலைவர், டாக்டர் அம்பேத்கர் அவர்கள், எது ஜனநாயகம் என்று, ஒருமுறை மிக அழகாக விளக்கம் கூறினார். அந்த விளக்கத்தில்,

''சகோதரத்துவமும், ஜனநாயகமும் வெவ்வேறானவையன்று. ஜனநாயகம் என்பது, ஒரு அரசியல் முறை மட்டுமன்று. ஒருவருக்கொருவர், அன்பு செலுத்துகிற, ஒரு சமூக வாழ்வேயாகும்'' - என்று குறிப்பிட்டார்.

இது அண்ணல் அம்பேத்கர் அவர்கள், ஜனநாயகத் தத்துவத்திற்குத் தந்த, அரிய, அற்புதமான விளக்கம் ஆகும். ஜனநாயகம் என்பது, சகோதரத்துவம்தான் என்று, ஆணித்தரமாக அறைகூவிய அண்ணல் அம்பேத்கர் அவர்களின் தத்துவத்தைத்தான், உங்கள் சகோதரியாகிய நான், இன்று செயல்படுத்தி வருகின்றேன்; உங்கள் அரசும் செயல்படுத்தி வருகிறது என்பதைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

ஜாதி மத பேதமற்ற சமதர்மச் சமுதாயத்தைத்தான், தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்

## ரூ.502 கோடிக்கான திட்டங்களை வழங்கி இராணிப்பேட்டையில் மாண்புமிகு முதல்வர் உரை!



களும், இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும், அமைக்க விரும்பினார்கள். அந்தச் சமுதாயத்தில், எல்லோரும் சகோதரர்களாக இருப்பார்கள்; இருக்க வேண்டும் என்பதற்காகத்தான், அந்தப் பெருந்தகையோர் தங்கள் வாழ்நாள் முழுவதும் பாடுபட்டனர். அந்தத் திராவிட இயக்கத் தலைவர்களின் இன்றைய பிரதிநிதியாக உங்கள் முன் நிற்கும் நான், ஒன்றைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். திராவிடப் பாரம்பரியத்தின் பரிசாக, இன்று எல்லாச் சமய மக்களும், நல்லிணக்கத்தோடு தமிழகத்தில் வாழ வகைசெய்துள்ள நிலையை, எந்தச் சூழ்நிலையிலும், எந்தக் காரணத்திற்காகவும், பாதிக்க, எங்கள் அரசு அனுமதிக்காது என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகின்றேன்.

ஏனென்றால், சமீபகாலமாக ஒரு சில அரசியல் கட்சியினர், மக்களைக் குழப்பும் முயற்சியில், தொடர்ந்து தவறான கருத்துக்களைப் பரப்பிவருகின்றனர்.

**நானும் சிறுபான்மைச் சமுதாயத்தினரும்**

இது கண்டு பொறாத சிலர், என்னோடு நேரடியாக மோத முடியாது, என்ற முடிவுக்கு வந்த பலர், இல்லாத பொல்லாத பொல்லாங்குகளை, என் மீது சுமத்திட, அன்றாடம் படாத பாடு பட்டு வருகிறார்கள் என்பதை, நீங்களே பார்த்துவருகிறீர்கள்.

சமீப காலமாகச் சிறுபான்மைச் சமுதாயத்திற்கு - குறிப்பாக இஸ்லாமிய இனத்திற்கு, நான் எதிரான கருத்துக் கொண்டுள்ளேன் என்ற நச்சுக் கருத்தை, நாட்டு மக்களிடையே பரப்பி, அவர்களைத் திசை திருப்ப முயன்றுவருகின்றன். எனவே கடந்த கால நிகழ்ச்சிகளையும், சில சம்பவங்களையும், இந்த நேரத்தில் நினைவுகூர்வது அவசியம் என்று கருதுகின்றேன்.

டுள்ளேன், என்ற மக்களின் மாபெரும் நம்பிக்கையே, என்னை இந்த அளவு உயர்த்தி உள்ளது.

இஸ்லாமியர்கள் மிகுந்திருந்த திருச்செந்தூர் தொகுதி. என்னுடைய அரசியல் வாழ்க்கையின் முதல் சவால் அது.

தங்கள் வீடுகளை விட்டுச், சாதாரணமாக வெளியே வராத இஸ்லாமியச் சகோதரிகள் பல்லாயிரம் பேர், நான் தேர்தல் பிரச்சாரத்திற்காக வந்துள்ளேன் என்பதை அறிந்து, வெளியில் வந்து என்னை வாழ்த்தியதோடு மட்டுமல்லாமல், எங்கள் வேட்பாளர் வெற்றி பெறுவதில் இருந்த, மிக நெருக்கடியான சூழ்நிலையை மாற்றி அமைத்து, நாங்கள் வெற்றி பெறச் செய்திட்ட உதவியையும், அவர்கள் எனக்குப் பெற்றுத் தந்த முதல் வெற்றியையும், என்னால் எப்படி மறக்க முடியும்?

இஸ்லாமியச் சகோதர சகோதரர்களின் பேராதரவு மட்டும் அன்று எனக்குக் கிடைத்திருக்காவிட்டால், என்னுடைய பொது வாழ்க்கையின் முதல் முயற்சியிலேயே தோல்வி அடைந்திருப்பேன். என்னுடைய அந்த வெற்றிக்கு முழுமுதற் காரணமாக இருந்த அந்த

## பாபர் மசூதி - இராமர் கோயில் இருதரப்பினரும் பாதிக்கப்படக் கூடாது!

தமிழகத்தின் அனைத்துத் தரப்பு மக்களும், என் மீது கொண்டிருக்கும் அழுத்தமான பிடிப்பும், பாசமும், அளவிட முடியாத தன்மையில் உள்ளதை அறிந்து, என் மனம் நெகிழ்கிறது. ஆனால், அதுவே இன்று பலர் கண்களை உறுத்துவதையும், என்னால் உணர முடிகிறது; என் மீது பலரும், இன்று குற்றமும் குறையும் கூறுவதற்கு, அதுதான் காரணம் என்பதை, என்னைவிட நீங்கள் நன்கு அறிவீர்கள்.

நாட்டு மக்கள், என் மீது இருந்த அளவுக்கு ஆழமான, அழுத்தமான நம்பிக்கை கொண்டிருப்பதற்கு அடிப்படைக் காரணம், மக்களோடு மக்களாய், மக்களின் பிரதிநிதிகளாய், மக்கள் சக்தியை அறிந்து, மக்களின் நன்மைக்கு என்றே, மக்களின் நம்பிக்கைக்கு உரியோராய், மக்கள் நலப் பணியாற்றி வந்த, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., ஆகிய மக்கள் சக்தியின் மகோன்னதத் தலைவர்களின் அடிச்சுவட்டில் இருந்து, துளியும் பிறழாது, என் பொது வாழ்வுப் பாதையை அமைத்துக்கொண்டு, மக்களுக்காக என்னை அர்ப்பணித்துக் கொண்

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் நோய்வாய்ப்பட்டு, பொது மக்களை அதிக அளவில் சந்திக்க முடியாதிருந்த ஒரு காலகட்டத்தில், அவர் சார்பில் மக்களைச் சந்திக்க, என்னைத் தேர்ந்தெடுத்தார் என்பதை, நீங்கள் அனைவரும் நன்கறிவீர்கள். அவர் என்னை, முதன்முதலாகத் தேர்தல் பணியில் ஈடுபடச் செய்த இடம்,

அன்புச் சகோதர சகோதரிகளுக்குத் தீங்கு விளைவிக்கும் எண்ணம் என் நெஞ்சில் ஏற்படுமா?

**எனக்காக உயிர்ப்பலி**

இன்னும் உணர்ச்சி பொங்க, ஒரு சம்பவத்தை உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். 1989.இல் சட்டமன்றத் தேர்தல் நடந்து முடிந்து, தேர்தல்

**அட்டைப்பட விளக்கம்**

**முதலாவது அட்டைப் படம்**

**வட ஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டம் இராணிப்பேட்டையில் நடைபெற்ற அரசு விழாவில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு, மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. ஜி. விசுவநாதன் அவர்கள் 'சிங்கக்குட்டி' பரிசளித்தார்; மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு சேடபட்டி முத்தையா அவர்கள் விழாத் தலைமை ஏற்றார்.**

**கடைசிப்பக்க அட்டைப் படம்**

**தென்னார்க்காடு மாவட்டம வடலூரில் உள்ள சத்திய ஞானசபை,**

அதிகரிக்கப்பட உள்ளது.

2. தமிழ்நாடு வக்பு வாரியம், அதன் கீழ் உள்ள நிறுவனங்களிலிருந்து பெறப் படும். 6 சதவிகித சகாயத் தொகையைக் கொண்டு, நிர்வாகச் செலவு செய்து வருகிறது. இத்தொகை அதன் நிர்வாகச் செலவிற்குப் போதவில்லை என்பதால், இதற்காகச் சென்ற ஆண்டு சிறப்பு இனமாக 5 இலட்சம் ரூபாயை அரசு மானியமாக வழங்கியது.

3. வக்பு வாரியத்திற்குப் புதிய கட்டடம் கட்ட, 5 இலட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டுள்ளது.

4. சிறுபான்மையினர் நலம் கருதி, சிறுபான்மையினர் நல ஆணையம் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. இவ் வாணையத்தின் தலைவராக, திருமதி பாதர் சையீத் என்ற பெண்ணை, முதன் முதலாக நியமித்துள்ளோம்.

5. உலமா பென்ஷன் பெறுபவர்கள் எண்ணிக்கையை, 1400-இல் இருந்து தற்போது 1500-ஆக உயர்த்தியுள்ளோம்.

6. 1991-ஆம் ஆண்டு, தஞ்சை மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, நாகப்பட்டினத்தைத் தலைமையிடமாகக் கொண்ட மாவட்டத்திற்கு, காயிதே மில்லத் அவர்களின் பெயரைச் சூட்டி உள்ளோம்.

- இப்படி, எங்கள் ஆட்சிக் காலம் முழுவதும், இஸ்லாமிய சமுதாயப் பெரு மக்களை அன்புடன் அரவணைத்து வந்துள்ளோம். அவ்வாறே இதர சிறு பான்மையினப் பெருமக்களுக்கும் நன்மைகள் பல செய்துள்ளோம். அனைத்து சிறுபான்மையினப் பெருமக் களையும் தொடர்ந்து அரவணைத்து, பாதுகாப்புடன், அவர்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்கு மேலும் பல புதிய புதிய திட்டங்களைத் தீட்டி செயல்படுத்து வோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

தமிழகத்தில், உடுத்த மாற்று உடை யின்றி, கந்தலையே கசக்கிக் கட்டிக் கொண்டிருந்த, ஏழை எளியோருக்கு, ஏதாவது உதவி செய்யவேண்டும் என்ற எண்ணம், நாங்கள் ஆட்சிப் பொறுப் பேற்றவுடனே என் நெஞ்சத்தில் தோன் றியது. அதன் வெளிப்பாடுதான், தமிழ கத்தில் வாழும் ஒரு கோடியே 20 இலட்சம் நிலமற்ற விவசாயிகளுக்கும், நகரங்களில், வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் ஏழை-எளியவர்களுக்கும், இலவச . சேலை-வேட்டி வழங்கும் திட்டம். கடந்த இரு ஆண்டுகளாகப்



★ மக்களின் ஒழுக்கத்தையும் மதியையும் கெடுப்பது மது.

**தந்தை பெரியார்.**



பொங்கல் திருநாளை முன்னிட்டு, இலவச சேலை-வேட்டி வழங்கினோம். அடுத்த ஆண்டும் இத்திட்டம், தொடர்ந்து சிறப்பாக நிறைவேற்றப்படும், என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கிராமப்புறங்களில் வாழும் மக் களுக்கு, கூடுதலாக மருத்துவ வசதி கிடைக்கவேண்டும் என்ற நோக்கத்துடன், மருத்துவர்களே கிராமங்களுக்குச் சென்று, மருத்துவ முகாம்களை நடத்தி, மக்களைச் சந்தித்து, நோயை அறிந்து, அங்கேயே அவர்களுக்குச் சிகிச்சை அளிக்கும், மகத்தான மருத்துவ நலத் திட்டத்தை அறிமுகப்படுத்தி மாபெரும் வெற்றியும் கண்டு உள்ளோம்.

மாவட்டம் தோறும் மக்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கைகளை, விரைவாக வும் முறையாகவும் பரிசீலனை செய்து, தகுதியுள்ள அனைவரையும் தலைமைச் செயலகத்திற்கு வரவழைத்து, பல்வேறு நலத் திட்டங்களின் கீழ், உதவிகள் வழங்கும் முறையை அறிமுகப்படுத்தி உள்ளதை, நீங்கள் நன்கு அறிவீர்கள்.

**சமுதாய வீதியில்...**

சமுதாய வீதியில், விலை போகாமல் வீசி எறியப்படுகிற பூக்களாக, பெண் குழந்தைகள், இத்தனைக் காலம், இந்தத் தேசத்தில் அடைந்த துன்பத்திற்கெல்லாம் ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று உறுதி கொண்டேன். எனவே தான் அண்மையில், பெண் குழந்தை களைப் பாதுகாக்கும் திட்டத்தையும், பெண் குழந்தைகளை அரசே வளர்க்கும் திட்டத்தையும், அறிமுகப்படுத்தி இருக் கிறேன்.

'மங்கையராகப் பிறப்பதற்கே, நல்ல மாதவம் செய்திட வேண்டும் அம்மா!' என்று, கவிஞர்கள் பெண்களின் புனிதத் தைப் பறைசாற்றினாலும், எதார்த்த நிலை, வேறாகவே உள்ளது. பிறக்கப் போகிற குழந்தை ஆணா, பெண்ணா என்று கண்டுபிடித்துச் சொல்லும் திற மையை, இன்று விஞ்ஞானம் பெற்றிருக் கிறது.

இது வளர்ச்சிதான் என்றாலும், அந்த அறிவியல் தகவலை அறிந்துகொண்டு, பெண் குலத்தின் ஆணிவேரையே அறுத்து எறிகிற வேதனை, தொடர்கிறது.

இந்தக் கொடுமைக்கு, சமூகம், மவுன சாட்சியாக இருக்கலாம். ஆனால் பெண் ணுரிமைக்குப் போராடிய தந்தை பெரி யாரும், பேரறிஞர் அண்ணாவும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரும், வகுத்த வழியிலே நடைபோடும் பொறுப்பான அரசு, ஒரு பெண்ணையே முதல்வராகக் கொண்ட இந்த அரசு, எப்படி இதைப் பார்த்துக்கொண்டிருக்க முடியும்?

வெற்றி பெறுகிற ஒவ்வொரு ஆணுக்குப் பின்னும், ஒரு பெண் இருக் கிறாள் என்பது, உலகறிந்த தத்துவம். இருந்தாலும், அந்தத் தத்துவத்தை உண ராத சில மக்களும், நம்மிடையே இருக்கத் தான் செய்கின்றார்கள். 'பெண் குழந்தையா? அது வேண்டாம். கருவிலே கலைத்து விடலாமா? அவ்வாறு கலைக்க முடியாவிட்டால், பிறந்த பெண் சிசுவை அழித்து விடலாமா?' என்ற அவல நிலை, ஒரு சில குறிப்பிட்ட பகுதிகளில் நிலவி வருகின்றது. ஆனால், இன்று உங்கள் சகோதரியான என் கையில்தானே, தமிழகத்தின் கோடானு கோடி மக்கள், ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்திருக் கின்றீர்கள்? நானும் ஒரு பெண் தானே!

திராவிட இயக்கத்தின் அடித்தளமே, பெண்ணுக்குச் சம உரிமை, என்ற உறுதியான கொள்கையின் அடிப்படை யில் - தானே அமைக்கப்பட்டது? தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆகி யோர் பெண்களின் உயர்விற்காகவும் உரிமைக்காகவும் எவ்வளவு பாடுபட்ட னர். இத்தனை முயற்சிகள் மேற்கொண்ட பின்னரும், தமிழகத்தில், பெண் குழந்தை களை அழிக்கும் எண்ணம், ஒரு சிலர் மனதில் தோன்றுகிறது என்றால், அவர்கள் எத்தனைக் கீழ்த்தரமானவர்கள்?

இந்த மாபெரும் கொடுமைக்கு, நிரந் தரமாக ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும், என்ற நல்லெண்ணத்தில் தான், புதியதொரு புரட்சிகரமான திட்டத்தை, அரசு தீட்டியது. கருவில் வளரும் குழந்தை, பெண் என்று அறிந்து, அதனை வேண்டாம் என்று எண்ணும் பெற்றோர்கள், தயவுசெய்து அந்தச் சிசுவை அழித்துவிடாதீர்கள்.

அவர்களை வளர்த்துக் காக்க, எங்கள் அரசு இருக்கின்றது. பெண் குழந்தை களைப் பெற்றெடுங்கள். அவர்களை வளர்த்து வாழ்வு அளிக்க வசதி இல்லை என்றால், அருகிலுள்ள சமூக நலத்துறை இல்லங்களில் ஒப்படையுங்கள். நாங்கள் அவர்களை வளர்க்கின்றோம் என்று அறிவித்தேன். பல சமூக நலத்துறை இல்லங்களுக்கு வெளியே, தொட்டில்கள் கட்டி வைக்கச் சொல்லி இருக்கின்றேன். பெற்றோருக்கு வேண்டாத அந்தப் பெண் குழந்தைகளைப் பிறருக்குத் தெரியாமல், அந்தத் தொட்டில்களில் போட்டுவிட்டுப் போகலாம்.

அவர்களுக்கு வேண்டாத அந்தப் பெண் குழந்தை, அரசுக்கு வேண்டும், தமிழகத்திற்கு வேண்டும். ஏனெனில், தாயாக ஒரு பெண் வேண்டும் - தாரமாக ஒரு பெண் வேண்டும் - தமக்கையாகக் கூட ஒரு பெண் வேண்டும் - ஆனால் தங்கள் குழந்தையாக ஒரு பெண் வேண்டாம் என்று எண்ணும் எத்தர் களுக்குப் பெண் குழந்தை வேண்டாம் என்றாலும், நல்லதொரு சமுதாயத்தை நாளை உருவாக்க, அவர்கள் எங்களுக்குத் தேவை, இந்நாட்டுக்குத் தேவை. எனவே அவர்களை ஏற்று, வளர்த்து, காக்கும் பொறுப்பை, அரசே ஏற்றுக்கொண்டு உள்ளது. இனி எந்தப் பெற்றோரும், பெண் குழந்தைகளை அழிக்க வேண்டிய அவசியமில்லை. இத்திட்டத்தைத் தயவு செய்து அவர்கள் தயங்காமல் பயன் படுத்திக் கொள்ளவேண்டும், என்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அரசின் ஒவ்வொரு துறை யிலும், புதுமைகளைப் படைக்கும் புரட்சிகரமான அரசாக, உங்கள் சகோதரி யின் அரசு செயல்பட்டு வருவதை, நீங்கள் கண்கூடாகக் காண்கின்றீர்கள். சமுதாயத்தில் உள்ள அனைத்துத் தரப் பினருக்கும், உரிய உதவிகளைச் செய்ய, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த, அவர்களைப் பாதுகாக்க, எங்கள் அரசு என்றுமே தயங்கியதில்லை.

**ரூ.502 கோடிக்கான திட்டங்கள்**

உங்களின் அன்புச் சகோதரியாகிய நான், இன்று கை நிறைய உதவிகளையும், மனம் நிறையத் திட்டங்களையும், சுமந்து கொண்டுதான் உங்கள் மாவட்டத்திற்கு வந்து இருக்கின்றேன்.

உங்கள் மாவட்டத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காக, 502 கோடி ரூபாய்க்கான திட்டங்களோடு வந்திருக்கின்றேன் என் பதை, மகிழ்ச்சியுடன் குறிப்பிட விரும்பு கின்றேன்.

நான் சட்டப்பேரவையில் 1991-ஆம் ஆண்டு ஆளுநர் உரைக்கு நன்றி தெரி விக்கும் தீர்மானத்தின் மீது உரையாற்றிய பொழுதே, தமிழகத்தில் அதிக அளவில் ஏற்றுமதி தொழில் செய்யும் நகரங் களுக்கு, அடிப்படை வசதிகளை அமைத் துத் தரும் திட்டங்களை, அரசு வகுத்து நிறைவேற்றும் என்று தெரிவித்தேன். அதன் அடிப்படையில், இம்மாவட்டத் தின் முக்கியத் தொழிலான, தோல பொருள் பதனிடல் மற்றும் தயாரித்தல் ஆகியவற்றில், பல ஆண்டுகளாக இந்தியா விலேயே முன்னணியில் இருந்துவரும் ஆம்பூர், வாணியம்பாடி, ராணிப் பேட்டை, மற்றும் பேரணாம்பட்டு ஆகிய பகுதிகளை, நவீன வசதிகளுடன் கூடிய, ஏற்றுமதி நகரங்களாக்கும் திட்டத்திற்கான ஆய்வுப் பணிகள், மூன்று மாதங்களில் முடிக்கப்பட்டு, மத்திய அரசு, உலக வங்கி, மற்றும் இதர நிதி நிறுவனங்களின் உதவியுடன், இந்தத் திட்டத்தினை ஐந்து ஆண்டுகளுக்குள் செய்து முடிக்க, அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப் படும். இத்திட்டம் இந்த மாவட்டத்தின் தொழில் முன்னேற்றத்திற்குப் பெரிதும் உதவும் என்று நம்புகின்றேன். மேலும், அரசின் பல்வேறு திட்டங்களின் கீழ், இம்மாவட்டத்தில் செய்து முடிக்கப்பட்ட பணிகளைத் திறந்து வைத்ததிலும், நலத் திட்ட உதவிகளை இம்மாவட்ட மக் களுக்கு வழங்கியதிலும், நான் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

தாங்கள் தேர்ந்தெடுத்த முதலமைச் சரை, சந்திக்க முடியாது என்ற ஒரு நிலை, தமிழக மக்களுக்கு, என் ஆட்சிக் காலத்தில் ஏற்பட்டுவிடக்கூடாது, என்ற எனது உறுதியான முடிவின் அடிப்படை யில் தான், இதுவரை சென்னை, தர்மபுரி, தென்னார்க்காடு, நாகப் பட்டினம்-காயிதே மில்லத், கோவை, பெரியார், சிதம்பரனார், திருச்சி, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், நீலகிரி, சேலம் ஆகிய மாவட்டங்களில், அரசு விழாக்களில் கலந்து கொண்டும், திருநெல்வேலி, சிதம்பரனார், கன்னியா குமரி ஆகிய மாவட்டங்களில், வெள்ளத் தால் பாதிக்கப்பட்ட மக்களை நேரடி யாகச் சந்தித்தும் வந்துள்ளேன்.

இப்படி, மக்களைச் சந்திப்பதற்கு, நான் கொடுத்து வரும் முக்கியத்துவத்தின் தொடர்ச்சியாக, இன்று, இங்கே, வட ஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்ட மக்களா கிய உங்கள் முன் நிற்கின்றேன்.

**தேர்தல் கருத்துக் கணிப்புகள்**

நாட்டுக்கு உழைக்கும் நல்லவர்களை யும், ஏழை, எளியோரின் பாதுகாவலர் களையும், எவராலும், என்றைக்கும், அசைக்க முடியாது என்ற திடமான நம் பிக்கைஎனக்கு இருக்கிறது. மக்கள் மத்தி யில், அரசியல் கட்சிகளுக்கு உள்ள செல் வாக்கைக் கணக்கிட்டுச் சொல்லுவதாகச் சில பத்திரிகைகள் கருத்துக் கணிப்புகளை வெளியிடுகின்றன.

அவை, கல்லூரி மாணவர்களைக் கொண்டு சேகரிக்கப்பட்ட புள்ளி விவரங் களின் அடிப்படையிலோ, அல்லது ஒரு பத்திரிகையின் வாசகர்களிடமிருந்து பெறப்படும் பதில்களின் அடிப்படை யிலோ, கணக்கிடப்படுபவை. இவற்றில், குறிப்பிட்ட சிலர் மட்டுமே கலந்து கொண்டு, கருத்துக்களைச் சொல்கின் றார்கள். எனவே, பொதுவாக இவை, மக்களின் ஏகோபித்த கருத்துக்களாக அமைவது கிடையாது. ஏன்? - என் னையே எடுத்துக் கொண்டால், இதுவரை பல முறை கருத்துக் கணிப்புகள் செய்து வெளியிட்ட பத்திரிகைகள் எதிலும் - நான் பொதுத் தேர்தலில் வெற்றி பெறுவேன், முதலமைச்சர் ஆவேன் என்று கருத்துச் சொன்னதில்லையே!

அவர்கள் கணிப்புகள் எல்லாம் தவறென்று, தமிழக மக்கள் நிரூபித்துக் காட்டினர். எனவே, எப்பொழுதுமே இதுபோன்ற கருத்துக் கணிப்புகளின் முடிவுகளுக்கு, நான் மதிப்புக் கொடுப்ப தில்லை. குறிப்பிட்ட சில பகுதிகளில் உள்ள, சில ஆயிரம் மக்கள் தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையில் அமையும், இதுபோன்ற "கருத்துக் கணிப்புகள்', பொது மக்களின் ஏகோபித்த உணர்வு களைப் பிரதிபலிப்பதாக எப்போதும் அமைவதில்லை. ஏனென்றால், பத்திரி கைகளில் வரும் இந்த முடிவுகளைப் பார்த்துவிட்டு, எங்களுக்கு ஓட்டளிக்கும் மக்கள் யாரும் தங்களது ஆதரவைத் தருவது பற்றித் தீர்மானிப்பதில்லை.

எனக்கு என்று ஒரு கணிப்பு உள்ளது. அதுதான் நான் மாவட்டங்களுக்குச் செல்லும்பொழுது, காண்கின்ற மக்களின் முகங்கள். அவற்றில் காணப்படும் ஆர்வம், அன்பு, மகிழ்ச்சி, ஆகிய உணர் வுகளே, எனக்கு உள்ள ஆதரவு என்ன என்பதைத் தெளிவாக எடுத்து உணர்த் துவதாக நான் கருதுகின்றேன். நான் ஒவ்வொரு முறை சுற்றுப் பயணம் செல்லும் பொழுதும், சந்திக்கின்ற மக்களின் கண்களில் மிளிர்கின்ற ஒளி யினைக் கொண்டே, அவர்களின் நெஞ் சங்களை என்னால் எடைபோட முடி கிறது. நாளுக்கு நாள், நான் செல்லும் இடங்களில் எல்லாம், மக்களின் எழுச்சி கூடிக்கொண்டே வருவதை நான் காண் கின்றேன். நாங்கள் வளர்ந்துகொண்டு வருவதையும் நான் உணர்கின்றேன்.



மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 25.3.93 அன்று ரம்ஜான் பண்டிகையையொட்டி, சென்னை, அண்ணாசாலையில் உள்ள தர்காவில் நடை பெற்ற பிரார்த்தனையில கலந்துகொண்டார்; ஏழை எளிய இசுலாமியர்களுக்கு வேட்டி, சேலை வழங்கினார்.

தமிழக மக்கள் என் மீது நம்பிக்கை வைத்து, அவர்களின் பேராதரவைத் தந்து, அவர்களுக்கு உழைக்கும் வாய்ப்பை எனக்கு நல்கி இருக்கிறார்கள். மக்கள் ஆதரவே, மகத்தானது என்தை உணர்ந் திருப்பவள் நான். மக்கள் பணியே மகேசன் பணி என்று கொண்டிருப்பவள் நான். எனவே எனக்கு உங்கள் ஆதரவு உள்ளவரை எந்தச் சக்தியாலும் எங்களை நெருங்க முடியாது, அசைக்க முடியாது.

**உங்களுக்கு நான் - எனக்கு நீங்கள்**

நான் எதைப்பற்றியும் கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை. என் மீது எத்தனை எத்தனையோ குற்றச்சாட்டுக் களையும், குறைபாடுகளையும், சிலர் திட்டமிட்டே கூறி வந்தாலும், உங்களுக் குப் பணிபுரிய நானும், என் மீது நம் பிக்கை வைத்து, பேராதரவு தர நீங்களும் இருக்கும் வரை, நான் எதைப் பற்றியும் கவலைப்பட மாட்டேன். தொடர்ந்து, என் மக்கட் பணியினை, தொய்வில்லாது ஆற்றுவேன் என்று, உறுதி கூறுகிறேன்.

இன்றைய தினம், இந்த மாபெரும் விழாவில், அலை கடல் என, ஆர்ப் பரித்துக் கூடியுள்ள அன்பு உள்ளங் களைச் சந்தித்ததில், நான் பெருமகிழ்ச்சி கொள்கிறேன். இந்த மாவட்ட மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கு, ஒரு புதிய பாதையை அமைத்துக் கொடுக்கும் வாய்ப்பு, எனக்குக் கிடைத்ததற்குப் பெருமை அடைகின்றேன்.

இந்த விழா, இத்தனைச் சிறப்பாக நடைபெற, அயராது உழைத்த, உங்கள் மாவட்டத்தைச் சார்ந்த மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர், சகோதரர் ஜி. விஸ்வநாதன் அவர்களை யும், மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் சகோதரி திருமதி இந்திர குமாரி அவர்களையும், பெரிதும் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். நித்தம், நித்தம், மக்கள் பிரச்சினை களையே எதிர்நோக்க வேண்டியுள்ள, முக்கியத் துறைகள் இரண்டின் பொறுப் பில் உள்ள சகோதரர் ஜி. விஸ்வநாதன், அவற்றை, எங்களை எதிர்ப்பவர்கள் கூட குறைகூற முடியாத அளவிற்கு, மிகவும் திறமையாக நிர்வகித்து வருகின்றார். புதிய பொதுவிநியோகத் திட்டத்தில் பல முற்போக்கான முறைகளை அறிமுகம் செய்துள்ளார், என்று கூடக் கூறலாம். அவருக்கு என் மனப்பூர்வமான பாராட் டுக்களை, மீண்டும் தெரிவித்துக் கொள் கிறேன்.

இந்த மாவட்டத்திற்குச் சட்டமன்ற உறுப்பினராகி, இன்று சமூக நலத்துறை அமைச்சராக - சிறப்பாகப் பணியாற்றி வருகின்ற திருமதி இந்திரகுமாரி அவர்கள், பல்வேறு,, சமூக நலத்திட்டங் களை ஆர்வத்தோடு செயல்படுத்தி வந் தாலும், என் எண்ணத்திற்குச் செயல் வடிவம் கொடுப்பதில் பாராட்டுக்குரிய வர்கள். குறிப்பிட்டுச் சொல்லவேண்டும் என்றால், பெண்சிசுக் கொலையினைத் தடுக்கும், தொட்டில் குழந்தைத் திட்டத் தினை மிகச் சிறப்பாக, விரைந்து நிறை வேற்றி வருகின்றார்.

இந்த விழாவை, வெற்றி விழாவாக ஆக்குவதற்கு, அவர்களுக்கு உறுதுணை யாக இருந்து ஒத்துழைப்பு நல்கிய அனை வருக்கும், வட ஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்ட ஆட்சித்தலைவர், திரு இராம சுந்தரம் அவர்களுக்கும், அரசு அலுவலர் களுக்கும், என் பாராட்டுக்களைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

சென்னையில் இருந்து, நான் இந்த விழாவில் கலந்துகொள்ள, வருகை தந்த பாதையில் எல்லாம், வழிமேல் விழி வைத்து, என் வருகைக்காகக் காத்திருந்து, என்னை உவகைப் பெருக்கோடு, வாழ்த்தி வரவேற்ற பெருமக்கள் ஒவ் வொருவருக்கும், என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைய தினம், இந்த விழாவில், பாசத்துடன் கலந்துகொண்டு, சிறப்பித் துள்ள பெருமக்கள் ஒவ்வொருவருக்கும், என் இதயம் கனிந்த நன்றியைக் காணிக் கையாக்கிக் கொள்கிறேன். உங்களின் அன்பும், ஆதரவும், இந்தப் பாசமும், பரிவும் உங்களுக்கான சேவைகளை, நான் இன்னும் வேகமாகத் தொடர, எனக்குப் புதிய சக்தியை அளித்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்து விடைபெறுகின்றேன்.

நன்றி, வணக்கம்.

**- மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 5.4.1993 அன்று வட ஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டம் இராணிப்பேட்டையில் நடைபெற்ற அரசு விழாவில் ஆற்றிய உரையின் முழு விவரம்.**





# தென்னார்க்காடு - வள்ளலார் மாவட்டம் : விழுப்புரம்-இராமசாமி படையாட்சியார் மாவட்டம்

## புதிய மாவட்டங்கள் உதயம்!

### மாண்புமிகு முதல்வர் அறிவிப்பு

எங்கள் அரசு பொறுப்பேற்றவுடன், பெரிய வருவாய் மாவட்டங்களை இரண்டாகப் பிரித்து சீரான நிர்வாக அமைப்பிற்கு வழி வகுத்து வரு கிறது. அதன் அடிப்படையில் சென்ற 2 ஆண்டு களில், தஞ்சாவூர் மாவட்டம் இரண்டாகப் பிரிக் கப்பட்டது. அதே போல், தென்னார்க்காடு மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து; கடலூரைத் தலைநகரமாகக் கொண்ட மாவட்டத்திற்கு, தென்னார்க்காடு-வள்ளலார் மாவட்டம் என்றும், விழுப்புரத்தைத் தலைநகரமாகக் கொண்ட மாவட் டத்திற்கு, விழுப்புரம் மாவட்டம் என்றும் பெயர் வைப்பது என்று முடிவு செய்து, வருவாய்த்துறை அமைச்சர், இந்தப்பேரவைக்கு, தனது மானியக் கோரிக்கை மீதான பதில் உரையில் தெரிவித்தார்.

இந்த அறிவிப்பினைத் தொடர்ந்து, விழுப்புரத் தினை தலைநகரமாகக் கொண்ட மாவட்டத்திற்கு, வைக்க வேண்டிய பெயர் குறித்து, பல்வேறு இடங்களில் இருந்தும், பலதரப்பட்ட மக்களிடம் இருந்தும், எனக்குக் கோரிக்கைகள் வந்துள்ளன. குறிப்பாக, வன்னியர் சமுதாய இனத்தைச் சேர்ந்த, வன்னியர் சமுதாய மக்களின் வளர்ச் சிக்கு வழிகோலும் 18 சங்கங்கள், என்னிடம் ஒரு கோரிக்கை மனுவை வைத்தார்கள்.

தமிழ்நாடு வன்னியர் மன்றம், தமிழ்நாடு வன்னியர் பேரவை, தமிழ்நாடு வன்னியர் சங்கம், தமிழ்நாடு வன்னியர் வளர்ச்சிக் கழகம், வன்னிய குலசத்திரிய மகா சங்கம், வன்னியர் நல உரிமைச் சங்கம், ஜனநாயக வன்னியர் பேரவை, தேசிய வன்னியர் பேரவை, வன்னிய இளைஞர் பேரவை, தமிழ்நாடு வன்னியர் மாணவ நலக் கழகம், சமுதாய மேம்பாட்டுக் கழகம், வன்னிய இளைஞர் இயக்கம், தமிழ்நாடு வன்னிய இளைஞர் மன்றம், வன்னியர் நலச் சங்கம், கிறித்துவ வன்னியர் அமைப்பு, ஐ.சி.எப். வன்னியர் பேரவை, உழைப் பாளர் முன்னேற்றக் கட்சி மற்றும் உழைப்பாளர் பொதுநலக் கட்சி.

இந்த 18 வன்னியர்கள் மன்றங்களை உள்ள டக்கிய, வன்னியகுலசத்திரிய நல அமைப்புகளின், மத்திய மையத்தின் தலைவர் இரா. குலசேகரன் 13.4.93 அன்று என்னை சந்தித்துக் கூட்டமைப் பின் தீர்மான நகலுடன், மனுவினைக் கொடுத் தார்கள். இச்சங்கங்கள் விழுப்புரத்தைத் தலைநகர மாகக் கொண்ட மாவட்டத்திற்கு எஸ்.எஸ். ராமசாமி படையாட்சியார் பெயரைச் சூட்ட வேண்டும் என்ற தீர்மானத்தை நிறைவேற்றி, அதை என்னிடம் வேண்டுகோளாகவும் வைத் தார்கள். அதே போல் 14.4.1993 அன்று பிரிக்கப்படாத தென்னார்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த 14 சட்டமன்ற உறுப்பினர்கள், ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் தலைமையில், என்னைச் சந்தித்து, ஒரு கோரிக்கைமனுவை கொடுத்தார்கள். அவர்களும், எஸ்.எஸ். ராமசாமி படையாட்சியார் பெயரை, விழுப்புரத்தைத் தலை நகரமாகக் கொண்ட மாவட்டத்திற்குச் சூட்ட வேண்டும் என்ற தங்களின் விருப்பத்தினை மாவட்ட மக்களின் சார்பாக வைத்தார்கள்.

எஸ்.எஸ். ராமசாமி படையாட்சியாரைப் பற்றி இந்த மாநிலத்தில் அரசியல் தெரிந்தவர்கள், அறியாமல் இருக்க வாய்ப்பு இல்லை. வன்னியர் சமுதாயப்பெருங்குடி மக்களிடையே மட்டுமன்றி, தன்னுடைய களங்கமற்ற பொது வாழ்க்கையாலும், அரசியல் சாதுரியத் தன்மையாலும், பேச்சு வன்மையாலும், எல்லா தரப்பு மக்களும் தன்னை மதிக்கும்படி வாழ்ந்து, தான் ஒரு சகாப்தம் என்பதை நிரூபித்துக்காட்டியவர் அவர். முதன் முதலாக கடலூர் சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந் தெடுக்கப்பட்டார் 1952 முதல் 1962 வரை, தமிழ்நாடு சட்டப்பேரவையில், சட்டப்பேரவை



# மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய உரைகளின் தொகுப்பு நூல்கள் வெளியீட்டு விழா!

**மா**ண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், ஆற்றிய உரைகளின் தொகுப்புப் புத்தகங்கள் வெளியீட்டு விழா, *31.3.93* அன்று சென்னைக் கலைவாணர் அரங்கில் மிகச் சிறப் பாக நடைபெற்றது.'

மாண்புமிகு தமிழகச் சட்டப் பேரவைத் தலைவர் திரு. சேடபட்டி இரா. முத்தையா அவர்கள் விழா வுக்குத் தலைமை வகித்தார்.

**தமிழக வரலாற்றில்...**

செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர், திரு. இரா. சம்பத், இ.ஆ.ப., அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில், ''இந்த இனிய விழா, தமிழக வரலாற்றிலே இடம் பெறத்தக்க ஒரு முக்கிய விழா என்று சொல்லலாம். மாண்புமிகு முதல்வர் அவர்களின் பேச்சு - செயல் - கொள்கைகள் - கோட் பாடுகள் எல்லாம் அவரது உரை களிலே பரக்கக் காணலாம்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் பல்வேறு காலகட்டங்களில் பேசிய உரைகளைத் தொகுத்துத் தமிழில் 'புரட்சித்தலைவியின் முழக்கம்' என்றும், ஆங்கிலத்தில் 'Jayalalitha Speaks' என்றும் இரு நூல்களை வெளியிட்டிருக்கின்றோம். ஆங்கில உரை, பிற மாநிலத்தவர் தெரிந்து கொள்ளப் பெரிதும் பயன்படும். ஆங்கிலத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குள்ள புலமை - நளினம்- சொல்லாற்றல் முதலியன இந்த



நூலைப் படித்தால் நன்கு விளங்கும்'' என்றார்.

பிறகு, இயக்குநர் அவர்கள், அமைச்சர் பெருமக்களுக்குப் பொன் னாடை அணிவித்தார்.

**நூல்கள் வெளியீடு**

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பதவி ஏற்று ஓராண்டுக் காலத்தில், பல்வேறு நிகழ்ச்சிகளில் தமிழில் ஆற்றிய உரைகளைத் தொகுத்து, 'புரட்சித்தலைவியின் முழக்கம்' என்றும், ஆங்கிலத்தில் ஆற்றிய உரைகளை 'Jayalalitha Speaks' என்றும் செய்தி-மக்கள் தொடர்புத்துறை தொகுத்திருந்தது.

இந்த இரு நூல்களை, மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் வெளியிட்டார். அவற்றின் முதல் பிரதிகளை, மாண்புமிகு தமிழகச் சட்டப்பேரவைத் தலைவர் திரு. சேடபட்டி இரா. முத்தையா அவர்கள் பெற்றுக் கொண்டார்.



**பயன்தரும் நூல்**

மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ் செழியன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டார்-

''ஓராண்டுக் காலத்தில் பல் வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு ஆற்றிய உரைகளை ஒன்று திரட்டி இரு நூல்களாக வெளியிட்டிருக்கிறார்கள். இரு நூல்களையும் மிக அழகுற உருவாக்கி யிருக்கிறார்கள். அழகிய - அரிய - அருமையான நூல்களை வெளி யிட்ட செய்தி-மக்கள் தொடர்புத் துறையினரைப் பாராட்டுகிறேன். இந்த நூல் நல்ல தாளில், நல்ல அச்சு வடிவமைப்புடன் உருவாக்கப் பட்டிருக்கிறது.

''கொள்கைகள்-கோட்பாடுகள்- குறிக்கோள்கள் அடிப்படையில் இதில் சொல்லப்பட்டிருக்கிற கருத் துக்கள் உங்களுக்கு மிகவும் பயன் தரும். இந்த நூலில் மாண்புமிகு முதல்வர் அவர்கள், வள்ளுவரைப் பற்றி, தந்தைப் பெரியாரைப் பற்றி, பேரறிஞர் அண்ணாவைப் பற்றி, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். பற்றி, சௌந்தரபாண்டியனாரைப் பற்றி, கண்ணியம் மிக்க காயிதே மில்லத் பற்றி மிகச் சிறப்பாகக் கூறியுள்ளார்கள்.''

**எங்கும் பரவ வேண்டும்!**

மாண்புமிகு கல்வியமைச்சர் திரு. செ. அரங்கநாயகம் அவர்கள் பேசுகையில், ''இந்த நூல்கள் மிகச் சிறப்பாக - நல்ல முறையில் வடிவ மைக்கப்பட்டுத் தயாரிக்கப்பட்டிருக் கிறது. இந்நூலில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் பல்வேறு தலைப்புகளில், பல்வேறு கருத்துக் களைச் சொல்லியிருக்கிறார். தொலை நோக்குப் பார்வையோடு, தமிழக முன்னேற்றம் கருதி, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அருமையாக உழைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது இந்த நூலைப் பார்த்தால் தெரியும். இந்த நூலை தமிழ்நாடு முழுவதும், இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் பரப்பவேண்டும்.'' என்றார்.

**கருத்துக் களஞ்சியம்**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. எஸ். கண்ணப்பன் அவர்கள் பேசுகை



யில், ''அரிய சிந்தனைகளின் தொகுப்பாக இந்நூல் விளங்கு கிறது. பேச்சுக் கலை என்பது யாருக்கும் எளிதல்ல; மாண்புமிகு முதல்வர் அவர்கள், நாட்டுக்கும் -

●●

## நல்ல அச்சமைப்பு!

**''இரு நூல்களையும் மிக அழகுற உருவாக்கியிருக் கிறார்கள். அழகிய - அரிய - அருமையான நூல்களை வெளியிட்ட செய்தித்துறை யினரைப் பாராட்ட வேண் டும். நல்ல தாள்; நல்ல அச்சமைப்பு...''**

**- மாண்புமிகு நிதியமைச்சர்**
**டாக்டர் நாவலர்**
**இரா. நெடுஞ்செழியன்.**

●●

மக்களுக்கும் பயன்படத்தக்கக் கருத் துக்களை இந்நூலில் கூறியிருக் கிறார்கள். எழுத்தாற்றல், பேச் சாற்றல் ஒருங்கே அமைந்த கருத்துக் களஞ்சியமாக இந்த நூல் விளங்கு கிறது'' என்றார்.



**ஆற்றல் மிக்க உரை**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் பேசு கையில், ''குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட உரையாற்றும் திறம், ஆழ்ந்த கருத்துக்களை எடுத்துக் கூறுகிற ஆற்றல் வேறு எவருக்கும் வராது. அத்தகைய ஆற்றல்மிக்க உரையைச் சிறப்பான முறையில் வடித்துள்ளதைப் பாராட்ட வேண்டும்'' என்றார்.



**வெற்றி முழக்கம்**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. கு.ப. கிருஷ்ணன் அவர்கள் பேசுகையில், ''இனிய முயற்சியுடன் திறமையோடு வெளியிட்டிருக்கிற செய்தித்துறைக் குப் பாராட்டுக்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமிழுக்காக,



தமிழ் மண்ணுக்காக ஆற்றிய உரை களைத் தொகுத்து இந்த வெற்றி முழக்கம் வெளிவந்திருக்கிறது'' என்றார்.

**பயன்தரக்கூடிய கருத்துக்கள்**

மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திரு. இ. மதுசூதனன் அவர்கள் பேசுகையில், ''மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி அவர் களின் எழுத்துக்களை - பேச்சுக்

# தென்னார்க்காடு மாவட்டம்




உறுப்பினராகத் தொடர்ந்து பணியாற்றி, தமிழக அரசியலில் தன்னுடைய ஆழமானமுத்திரையைப் பதித்தவர். 1954 முதல் 1957 வரை உள்ளாட்சித்துறை அமைச்சராகப் பணிபுரிந்து, பல சாதனைகளை, நிகழ்த்திக் காட்டியவர். அது மட்டுமின்றி, கடலூர் நகராட்சி மன்றத்தின் தலைவராகவும், உழவர் உழைப்பாளர் கட்சியின் தலைவராகவும் பல்வேறு சமூக பொது நல நடவடிக்கைகளில் பங்கு கொண்டு, நாட்டிற்காக உழைத்த நல்லவர், உத்தமர் எஸ்.எஸ். ராமசாமி படையாட்சியார் ஆவார்.

**விழுப்புரம் வட்டத்தில் உள்ள மண்டகப்பட்டில், பல்லவர் ஆட்சிக் காலத்தே கட்டப்பட்ட முதலாவது குகைக் கோயில் உள்ளது.**

**சிதம்பரத்திற்கு அருகே இருக்கும் குடிகாடு என்ற இடத்தில், கி.பி. 2-ஆம் நூற்றாண்டு ஆட்சிக் கால வரலாறு கூறும் தொல்பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.**



''உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்''

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கிணங்க, ஒரு மதிப்பு மிக்க உழவர் வகுப்பைச் சேர்ந்த அவர், பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலனில் மிகுந்த ஆர்வத்தையும், நாட்டத்தையும். காட்டி, அவர்கள் சமுதாயத்தில், மதிப்புமிக்க அங்கத்தினைச் சேர்ந்தவர்களாக வேண்டும் என்பதில், தீவிர ஆர்வம் காட்டியவர்.

ஜாதி, சமயம் போன்றவற்றைக் கடந்து நாணயமான அரசியல் வாழ்க்கை நடத்திய நல்லவர்களை, என்றென்றும் போற்றி வணங்குகின்ற பெருந்தன்மை உடையது, எங்கள் அண்ணா தி.மு.கழகம். அந்த உணர்வினைமதிக்கின்ற விதத்தில், ஏற்றத் தாழ்வற்ற சமுதாயத்தை நிர்மாணிப்பதில், இந்த அரசு காட்டுகின்ற ஆர்வத்தின் உந்துதலின் காரணமாக, விழுப்புரத்தைத் தலைநகரமாகக் கொண்ட மாவட்டத்திற்கு, ''விழுப்புரம்-ராமசாமி படையாட்சியார் மாவட்டம்'' என்று பெயர் சூட்டப்படும் என்பதை, இம்மாமன்றத்திற்கு மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**—சட்டப் பேரவையில், 15.4.93 அன்று ஆற்றிய உரையிலிருந்து.**

# முத்திரைத் தமிழில் சித்திரை வாழ்த்து!

கவிஞர் இளந்தேவன்



கரும்பிலே செய்த வில்லைக்
   காமனார் ஏந்தும் காலம்!
அரும்பிலே செய்த அம்பை
   அன்புடன் எய்யும் காலம்!

வேம்பிலே பூத்த பூக்கள்
   வெளியெலாம் பறக்கும் காலம்!
காம்பிலே தேனைப் பூக்கள்
   காதலாய் வளர்க்கும் காலம்!

வந்தது வசந்தம் என்று
   வழிந்தது மகிழ்ச்சி வெள்ளம்!
சென்றது துன்பம் என்று
   செழித்தது மக்கள் உள்ளம்!

ஆண்டதோர் ஆண்டு சென்று
   அரும்பிற்று புதிய ஆண்டு!
பாண்டியர் தமிழில் வாழ்த்துப்
   பாடிற்று உலகம் ஈண்டு!

ஆழிசூழ் உலகம் எல்லாம்
   அமைதிப்பெண் ஆடும் கூத்து!
நாழிகை எல்லாம் இங்கு
   நன்மைப் பெண் பாடும் பாட்டு!

பிறக்கின்ற புதிய ஆண்டு
   பெண்மைக்குப் புகழ்சேர்க் கட்டும்!
இருக்கின்ற திசைகள் எட்டும்
   இளமைக்கு முடிசூட் டட்டும்!



களின் வழி நடக்கும் எங்கள் அரசு, தமிழகத்தில் சுற்றுலா வளர்ச்சிக்கு, ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்துவருகின்றது. நாங்கள் எடுத்துள்ள நடவடிக்கைகள், தீட்டியுள்ள திட்டங்கள், வழங்குகின்ற உதவிகள் அனைத்தும், நாட்டு மக்களுக்கு நன்கு தெரிந்தவையே. சுற்றுலாப் பயணிகளைத் தமிழகத்திற்குக் கவர்ந்து இழுக்கும் வண்ணம், சுற்றுலாத்துறை பல சீரிய முயற்சிகளைக் கடந்த ஒன்றரை ஆண்டுக் காலமாக மேற்கொண்டதன் பயனாக, சென்ற ஆண்டு, வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் வருகையும் அதிகரித்துள்ளது; வருவாயும் அதிகரித்துள்ளது என்பதை, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

''தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு நிலை, சீர்கேடு அடைந்துள்ளது என்று, ஒரு சிலர் தொடர்ந்து கூறி வருகின்றார்கள்.

''ஆனால் தமிழகம் ஒன்று தான் இன்றைய நிலையில், பாதுகாப்பான மாநிலம், பத்திரமான மாநிலம், எவ்விதப் பாதிப்பும் இல்லாமல், சுற்றுலா சென்று வரக்கூடிய இடம் என்று, இதர மாநிலத்தினர் மட்டுமல்ல, வெளிநாட்டவரும் திடமாக நம்புகின்றனர் என்று குறிப்பிட்டால், அது மிகை ஆகாது. அந்த உண்மையான அமைதி நிலையின் காரணமாகத்தான், கடந்த ஆண்டு, நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்த குழப்பமான சூழ்நிலையிலும், பாதுகாப்பற்ற பதட்ட நிலையிலும், தமிழகத்திற்கு வருகை தந்த வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை, கணிசமான அளவு உயர்ந்துள்ளது.

''3,33,877 வெளிநாட்டுச்சுற்றுலாப் பயணிகள், 1991-ஆம் ஆண்டில் தமிழகம் வந்து சென்றுள்ளனர். இதனுடன் 1992-ஆம் ஆண்டில், தமிழகம் வந்து சென்ற வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளை ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, அவர்களின் எண்ணிக்கை 4,18,424 ஆக உயர்ந்துள்ளது என்பதைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். இது சென்ற ஆண்டைவிட, 25.32 சதவிகிதம் உயர்வாகும். தமிழகம் ஒரு அமைதிப் பூங்காவாகத் திகழ்கின்றது என்பதற்கு, இதைவிட வேறு சான்று தேவையில்லை. ஒரு மாநிலத்தில் நிலவும் அமைதியான சூழ்நிலையைக் கணக்கிட, இதைவிட சரியான அளவுகோல் வேறு இல்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

''தமிழகம் அமைதிப் பூங்காவாகத் திகழ்கின்றது என்பதை, வெளிநாட்டவரே தெளிவாகப் புரிந்து கொண்டிருக்கும்போது, நம்மவர்களில் ஒரு சிலர், அந்த உண்மையை ஏற்க மறுக்கின்றார்கள் என்பதைப் பார்க்கும்போது தான், அவர்களின் உள்நோக்கம் என்ன என்பது நமக்குத் தெரிய வருகின்றது. அரசியல் இலாபத்திற்காக, ஒரு சிலர் வெளியிடும் தவறான கருத்துக்களுக்கும், ஆதாரமற்ற செய்திகளுக்கும், மக்கள் எவ்வித முக்கியத்துவமும் கொடுக்க வேண்டாம் என்று, இத்தருணத்தில் கேட்டுக்கொள்கிறேன். தமிழகம், அமைதிப் பூங்காவாகத் தொடர்ந்து திகழவேண்டும் என்பதற்காகத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எங்கள் அரசு மேற்கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.





''சுற்றுலா வளர்ச்சி என்பது, அரசிற்கு வருவாயை மட்டும் ஈட்டித் தருவது என்று கருதினால், அது முற்றிலும் தவறான கருத்தாகும். ஒரு சுற்றுலாப் பயணியின் வருகை, மறைமுகமாக அப்பகுதியில் வாழும் பல்வேறு தரப்பு மக்களுக்கு, உதவியாக அமைந்து, அப்பகுதியின் பொருளாதார நிலையையே உயர்த்துகின்றது. அந்த வகையில் அரசு, சுற்றுலா வளர்ச்சியை எவ்வளவு ஊக்குவிக்கின்றதோ, வளர்க்கின்றதோ, அவ்வளவு நன்மை அப்பகுதி மக்களுக்கு நேரடியாகக் கிடைக்கின்றது, என்ற உண்மை நிலையை உணர்ந்து தான், எங்கள் அரசு சுற்றுலா வளர்ச்சியில் அதிகக் கவனம் செலுத்தி, ஆக்கமும், ஊக்கமும் அளித்து வருகின்றது. சட்டப்பேரவைத் தலைவர் அவர்கள் பேசும்போது, மத்திய அரசு மாநில அரசுக்குக் கைகொடுக்க வேண்டும் என்றெல்லாம் குறிப்பிட்டார்; மத்திய அரசு உதவுகிறதோ இல்லையோ சுற்றுலாத்துறை இலாபகரமாக இயங்க இங்கே இரண்டு பெண்மணிகள் உதவிபுரிகிறார்கள். இத்துறையானது, கடந்த 1990-ஆம் ஆண்டுவரை நட்டத்தில்தான் இயங்கி வந்தது; நான் இந்தத் துறையின் பொறுப்பேற்றபின் துறைச் செயலாளராக இன்னொரு பெண்மணியையும் (திருமதி சி.கே. கரியாலி), நிர்வாக இயக்குநராக மற்றொரு பெண்மணியையும் (திருமதி ப. சிவகாமி) நியமித்தேன்; இப்போது இத்துறை தொடர்ந்து இலாபகரமாக நடந்து வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மற்ற மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாக இந்த அளவுக்கு இந்தத் துறை விளங்குவதற்குக் காரணமான இவ்விரு பெண்மணிகளுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.



சுற்றுலா வளர்ச்சிக்கு இடையூறுகளாகவும், இடர்ப்பாடுகளாகவும் உள்ள பிரச்சினைகளை, எங்கள் அரசு உடனுக்குடன் பரிசீலித்து, விரைந்து முனைப்போடு தீர்த்து வருகின்றது. தமிழகத்தை உலக அளவில், ஒரு தலைசிறந்த சுற்றுலா மாநிலமாக ஆக்கவேண்டும் என்ற எங்கள் எண்ணத்திற்குச் செயல்வடிவம் கொடுத்து, விரைவில் செய்து முடிக்க, அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வோம் என்பதையும் தெரிவித்து, விடை பெறுகின்றேன்.''







# வளரும் தென்னார்க்காடு மாவட்டம்

தென்னார்க்காடு மாவட்டம் தமிழ்நாட்டிலேயே பரப்பளவிலும், மக்கள் தொகை அளவிலும் மிகப்பெரிய மாவட்டமாகத் திகழ்கிறது. 11000 ச.கி.மீ. பரப்பளவையும் 48 இலட்சம் மக்கள் தொகையும் கொண்டுள்ளது.

மாவட்டத்தின் கிழக்கில் வங்காள விரிகுடாக் கடலும், மேற்கில் சேலம் மாவட்டமும், வடக்கில் செங்கல்பட்டு- எம்.ஜி.ஆர்., வட ஆர்க்காடு- அம்பேத்கர் மாவட்டங்களும், தெற்கில் திருச்சி, தஞ்சை மாவட்டங்களும் எல்லைகளாக அமைந்துள்ளன.

- ஆறு காடுகளால் இம்மாவட்டம் சூழப்பட்டு இருந்ததால், ஆர்க்காடு என்றும், மற்றும் ஆர்க் மரங்கள் நிறைந்த காடுகளாக இருந்ததால் ஆர்க்காடு எனப் பெயர் பெற்றதாகவும் இம்மாவட்டத்தின் பெயர்க் காரணங்கள் கூறப்படுகின்றன.

கடலூர், சிதம்பரம், விருத்தாசலம், திருக்கோயிலூர், திண்டிவனம், நெய்வேலி என்ற ஆறு கோட்டங்களையும், 14 வட்டங்களையும், 35 ஊராட்சி ஒன்றியங்களையும் தென்னார்க்காடு மாவட்டம் நிர்வாக அமைப்புக்களாக கொண்டு நிர்வகிக்கப்படுகிறது.

அந்நிய நாடுகளில் வாழும் இந்தியர்களின் முதலீட்டால் வெகுவிரைவில் ரூ.1000 கோடி முதலீட்டில், பிரமாண்டமான மின் உற்பத்தி நிறுவனம் இம்மாவட்டத்தில் உருவாக உள்ளது. கோவையைச் சேர்ந்த திரு. ஜி.என். சாமி என்பவரின் முயற்சியின் பயனாக, வெகு விரைவில் இந்தத் தொழிற்சாலை இயங்கத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பண்ணுருட்டி அருகே காடாம்புலியூரில் ரூ.1000 கோடி முதலீட்டில் தமிழ்நாடு காகித ஆலை நிறுவனமும், ஐ.டி.சி. நிறுவனமும் இணைந்து ஒரு காகிதத் தொழிற்சாலை நிறுவ உள்ளன.

இம்முயற்சிகளின் பலனாக, தென்னார்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான படித்த வேலையில்லாத இளைஞர்கள் பயனடைவார்கள் என்பதில் ஐயமில்லை.

தமிழகத்திலேயே முதன் முதலில் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்ட மிகப் பழமையான சர்க்கரை ஆலை தென்னார்க்காட்டில் நெல்லிக்குப்பம் என்ற இடத்தில் இன்றும் சிறப்போடு இயங்கி வருகிறது. தமிழகத்திலேயே அதிகமான சர்க்கரை ஆலைகளைக் கொண்ட மாவட்டமும் தென்னார்க்காடு மாவட்டமேயாகும்.

இங்கே குன்னம் என்னுமிடத்தில் கிடைக்கும் கிரானைட் கருப்புக்கல் உலகப் புகழ் பெற்றது.

★ தீண்டாமைக்கு அடுத்தபடியாக மிகவும் கண்டிக்கத்தக்கது ஒன்று, உண்டானால் அது குடி என்ற சாபக்கேடுதான். மதுப் பழக்கம் ஒருவனுடைய மனிதத் தன்மையை அழித்து அவனை மிருகமாக மாற்றி, மனைவி, தாய், உடன் பிறந்தவர் முதலியவர்களைக் கூடப் பிரித்துணர இயலாதபடி ஆக்குகிறது.

- அண்ணல் காந்தியடிகள்.

**ஜி. இராமகிருஷ்ணன், இ.ஆ.ப.,**
மாவட்ட ஆட்சித் தலைவர்
தென்னார்க்காடு மாவட்டம்



**பலாப்பழம் விளையும் ஊர்கள் பல இருக்கலாம்; ஆனால், ஏராளமாகப் பலாப்பழம் விளையும் ஊர்-இன்னும் சொல்லப் போனால் இந்தியாவிலேயே சுவைமிகுந்த பலாப்பழம் விளையும் ஊர், தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள பண்ணுருட்டிதான்!**

இம்மாவட்டத்தில் வெட்டியெடுக்கப்படும் கிரானைட் கற்கள் மூலம் மட்டும் ஆண்டிற்கு ரூ.6 கோடி அன்னியச் செலாவணி கிடைக்கிறது.

பண்ணுருட்டியில் முந்திரியும், விருத்தாச்சலம்-கடலூரில் பலாப்பழமும் ஏராளமாக விளைகின்றன. தேவையான அளவில் ஏற்றுமதியும் செய்யப்படுகிறது.

டென்மார்க் நாட்டின் நிதி உதவியுடன் இயங்கும் டேனிடா திட்டமும், 'டேன்லேப்' (DANLEP) என்ற பெயரில் டேனிடா தொழுநோய் ஒழிப்புத் திட்டமும் தென்னார்க்காடு மாவட்டத்தில் மிகச் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

சுகாதாரத் திட்டங்கள், குடிநீர் வசதி அளித்தல், தொழுநோய் ஒழிப்பு ஆகிய பணிகள் இத்திட்டத்தின் மூலம் தீவிரமாகச்செயல்படுத்தப்படுகின்றன.

ஒவ்வொரு 90,000 மக்கள் கொண்ட பகுதிக்கும் ஒரு சுகாதாரக் கிளை மையம் என 58 மையங்கள் டேனிடா திட்டத்தின் கீழ் செவ்வனே செயல்படுகின்றன. இதனால் 2,389 கிராமங்கள் மிகுந்த பயனடைகின்றன.

''கல்வராயன் மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டம் சிறப்பாகச் செயல்படும் ஒரு நல்ல திட்டமாகும். மலைவாழ் மக்களின் குடிநீர் விநியோகம், பள்ளிகள், சாலை வசதிகள் ஆகிய தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன.

ஆதிதிராவிட நலத்துறையினரால் நடத்தப்படும் உண்டு உறைவிடப் பள்ளிகள் குறிப்பிடத்தக்க பயன்களை அளித்து வருகின்றன. மலைவாழ் மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்கான பட்டு வளர்ப்புத் திட்டம் அமல்படுத்தப்பட்டு வருகின்றது. கல்வராயன் மலையில் கிடைக்கும் கடுக்காய் மிகவும் பிரசித்தி பெற்றது. அவை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியும் செய்யப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. இங்கே விளையும் கருவேப்பிலை மிகவும் ருசியானது. இங்குள்ள வாழும் மக்களின் ஒருங்கிணைந்த முன்னேற்றத்திற்காக மலைமக்கள் மேம்பாட்டுத் திட்டம் செவ்வனே நடந்தேறி வருகிறது. இம்மாவட்டத்திலுள்ள அனைத்துக் கிராமங்களுக்கும் மின்வசதி செய்து ஒளிமயமாக்கப்பட்டுள்ளது என்பது மனநிறைவை அளிக்கும் சாதனையாகும்.

ஆதிதிராவிடர்களின் மேம்பாட்டிற்காகத் தென்னார்க்காடு மாவட்டத்தில் 1992-93-ஆம் ஆண்டில் 3,400 வீடுகள் கட்டியும், 950 ஜீவன் தாரா கிணறுகள் வெட்டியும் தரப்பட்டுள்ளன. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம் 11,151 குடும்பங்களுக்குப் பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. 1,710 எக்டேர் சமூகநலக் காடுகள் அமைக்கப்பட்டுள்ளன.

அனைத்துக் கிராமங்களிலும் பள்ளிக்கூட வசதிகள் ஏற்படுத்தித் தரப்பட்டுள்ளன. இங்கே படித்தவர்கள் 68 சதவிகிதம் உள்ளனர். வரும் ஆண்டில் இம்மாவட்டத்தில் அறிவொளி இயக்கம் செயல்படுத்தப்பட உள்ளது.

இம்மாவட்டத்தில் 89 கி.மீ. நீளக் கடற்கரை உள்ளது. 5000-க்கும் மேற்பட்ட மீனவர்கள் கடலை நம்பி வாழ்க்கை நடத்துகின்றனர். இவர்கள் வாழும் 40 கிராமங்களில் மீனவர்களுக்கான சிறப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. தற்சமயம் செயற்கை முறையில் இரால் வளர்ப்புத் திட்டங்கள் பெரிதும் வெற்றியடைந்து வருகின்றன. மீனவர்களுக்கென்று தனியே பள்ளிகள் நடைபெற்று வருகின்றன. மீனவர்களுக்கென வீடு கட்டும் திட்டம் நிறைவேறி வருகின்றது. அவர்களுக்குத் திட்டமிடப்பட்டுள்ள 400 வீடுகளில் 250 வீடுகள் இவ்வாண்டில் முடிவடைய உள்ளன.

இம்மாவட்டத்தில் உள்ள 200-க்கும் மேற்பட்ட குளங்களில் மீன்கள் பிடிக்கப்பட்டு வருகின்றன. மீனவர்கள் முன்னேற்றத்திற்கு அமைக்கப்பட்ட மீன் வளர்ப்போர் வளர்ச்சி முகமை இம்மாவட்டத்தில் சிறப்பாகப் பணியாற்றி வருகிறது.

இம்மாவட்டத்திலுள்ள பிச்சாவரம் என்கிற சுற்றுலா மையம் ஏராளமான சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கிறது என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

ஆண்டுதோறும் சிதம்பரம் நடராசர் கோயிலில் நடைபெறும் 'நாட்டியாஞ்சலி' பல்வேறு மாநிலங்களிலிருந்து வரும் நாட்டியக் கலைஞர்களைக் கொண்டு சிறப்பாக நடத்தப்படுவதாகும். இது அனைவரும் கண்டுகளிக்க வேண்டிய ஓர் ஒப்பற்ற நாட்டிய நிகழ்ச்சியாகும்.

பொதுமக்கள் அரசின் திட்டங்களைப் பயன்படுத்திக் கொண்டு தங்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்வதுடன், நாட்டின் முன்னேற்றத்திற்கு அரும்பணியாற்றிட வேண்டும்.



# பழுப்புப் புரட்சியில் நெய்வேலி



**பண்டித** நேருவுக்கும், நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்துக்கும் ஒரு தொடர்பு உண்டு. அது என்ன? பண்டித நேரு பிறந்தது நவம்பர் 14. நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் பிறந்ததும் நவம்பர் 14. ஆனால், ஆண்டுதான் வெவ்வேறு.

பண்டித நேருவின் 68-வது பிறந்த நாளன்று (14.11.1956) அவருடைய மாபெரும் கனவு நனவாகும் வகையில், நவீன இந்தியாவை உருவாக்கும் அவரது முயற்சியின் முதல் படியாக 'நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன்' அவரது பொற்கரங்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

21-ஆம் நூற்றாண்டுடன் இந்தியாவை இணைக்கும் சக்தி மிக்க பாலமாக விளங்கும் நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷனில் (NLC) இன்றைய தினம் 23,000 தொழிலாளர்கள், தங்களை அர்ப்பணித்துக் கொண்டுள்ளனர்.

என்.எல்.சி.-க்கு ஒருமுறை முன்னாள் குடியரசுத் தலைவர் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் வருகை புரிந்தபோது - "NLC has grown into a show piece of India" என்று புகழ்ந்தார்.

முன்னாள் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் என்.எல்.சி. பற்றிக் குறிப்பிடுகையில் "Neyveli has shown that public ownership, public mangament can be efficient, can give return on the investment that has been made and can work profitably for the development of the country". (''அரசு பொது நிறுவனங்கள் திறமையாக இயங்க முடியும்- போட்ட முதலீட்டுக்கு இலாபத்தை ஈட்டித்தர முடியும். நாட்டின் முன்னேற்றத்திற்கென இலாபகரமாக இயங்க முடியும் என்பதையே நெய்வேலி காட்டுகிறது'') என்று புகழாரம் சூட்டினார்.

என்.எல்.சி.-க்கென்றே தங்களை அர்ப்பணித்துவிட்ட ஆயிரக்கணக்கான தொழிலாளர்களும், நிர்வாகமும் தங்களது இடைவிடாத உழைப்பின் மூலம், 'பழுப்புப் புரட்சி'யினைச் (Brown revolution) சாதித்துக் காட்டியுள்ளனர்.

ஒவ்வொரு டன் லிக்னைட்டை உற்பத்தி செய்திட, 12 டன் தாதுப் பொருளை 80 மீட்டர் ஆழத்திலிருந்து வெட்டி எடுக்க வேண்டியுள்ளது.

1962 மே திங்களில் 50 மெகா வாட் உற்பத்தித் திறனுடன் [illegible] சாரப் பிரிவு செயல்படல் தொடங்கியது. படிப்படியாக 1970-இல் 9 பிரிவுகள் செயல்படத் தொடங்கின. என்.எல்.சி.- யின் மொத்த மின் உற்பத்தி அளவு 600 மெகா வாட்டை எட்டியது.

1987-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 27-ஆம் நாள் இரண்டாம் அனல் மின் நிலையத்தை, மறைந்த முன்னாள் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் நாட்டிற்கு அர்ப்பணித்தார். இவ்விரு மின் நிலையங்களும் தெற்காசியாவிலேயே முதன் முதலில் தொடங்கப்பட்ட மின் நிலையங்களாகும்.

நாட்டின் பிற பகுதிகளில் தொடர்ந்து வறட்சி ஏற்பட்ட காலங்களிலும் நெய்வேலியில் தண்ணீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டதே இல்லை. ஒரு டன் நிலக்கரி வெட்டி எடுக்கப் படும்போது 15 டன் தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. நாளொன்றுக்கு 30,000 டன் நிலக்கரி வெட்டி எடுக்கப்படுவதால், 4,50,000 டன் நீர் வெளியேற்றப்படுகிறது. இதில் 70 சதவிகிதம் நீர் விவசாயத்திற்கும் மீதமுள்ள 30 சதவிகிதம் சமுதாயத்தின் உபயோகத்திற்கும் பயன்படு



களைத் தொகுத்து நாட்டுக்குத் தந்துள்ளார்கள். டாக்டர் புரட்சித் தலைவியின் பேச்சில் சத்தியம் - நியாயம் - தொலைநோக்கு இருக்கும். அந்த வகையில் மக்களுக்குப் பயன்தரக்கூடிய கருத்துக்களை இந்த நூலில் சொல்லியிருக்கிறார். எழுத்தும் - பேச்சும் - செயலும் கொண்ட ஒரே தலைவி புரட்சித் தலைவி'' என்றார்.



**எல்லாரும் வாங்க வேண்டும்!**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. சு. முத்துசாமி அவர்கள் பேசுகையில், ''அழகிய வண்ண முகப்புடன் 44 தலைப்புகளில் முதல்வர் புரட்சித்தலைவி அவர்களின் உரைகள் தொகுக்கப்பட்டுள்ளன. இந்த நூலைத் தேவை




●●

## படிக்கத் தூண்டுகிற வகையில்...

**''இந்த நூல் மிக நேர்த்தியாக வெளியிடப்பட்டிருக்கிறது. பார்க்கிற நேரத்தில், படிக்கவேண்டும் என்கிற ஆவலைத் தூண்டுகிற வகையில் நூல் அமைந்திருக்கிறது. இதைத் தமிழ் கூறு நல்லுலகம் வரவேற்கும் என நம்புகிறேன்''.**

- மாண்புமிகு தமிழகச் சட்டப்பேரவைத் தலைவர் திரு. சேடபட்டி முத்தையா.

●●

யான அளவிற்குத் தயார் செய்து வழங்க வேண்டும். புரட்சித்தலைவி அவர்களின் உரைகளை வீடியோ - ஆடியோவாகத் தயாரித்து வெளியிட்டால், எல்லாரும் அறிய ஏதுவாகும். இந்தத் தொகுப்புகளை எல்லாரும் வாங்கிப் பயனடைய வேண்டும்'' என்றார்.

**நேர்த்தியாக உருவாக்கப்பட்ட நூல்!**

மாண்புமிகு தமிழகச் சட்டப் பேரவைத் தலைவர் திரு. சேடபட்டி இரா. முத்தையா அவர்கள் பேசுகையில், ''சில தலைவர்கள் நன்றாகப் பேசுவார்கள், சில தலைவர்கள் நன்றாக எழுதுவார்கள். இந்த இரண்டு திறமைகளும் ஒருங்கே பெற்றவர் புரட்சித்தலைவி அவர்கள்.

●●

## நல்ல வடிவமைப்பு!

**''இந்த நூல்கள், நல்ல வடிவமைப்புடன் மிகச் சிறப்பாகத் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு முயற்சி எடுத்துக் கொண்ட செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் அவர்களைப் பாராட்டுகிறேன்''.**

- மாண்புமிகு கல்வியமைச்சர் திரு. செ. அரங்கநாயகம்.

●●



பல்வேறு சந்தர்ப்பங்களில் ஆற்றிய உரைகளைக் கொண்ட இந்தத் தொகுப்பு மிக நேர்த்தியாக உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்த நூலைப் பார்க்கிற நேரத்தில், படிக்க வேண்டும் என்கிற ஆவலைத் தூண்டுகிறது. தமிழ்கூறு நல்லுலகம் இதனை வரவேற்கும் என நம்புகிறேன்'' என்றார்.

மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி ஆர். இந்திர குமாரி அவர்கள் பேசுகையில், ''முதல்வர் அவர்கள் புரட்சித்தலைவி அவர்களின் உரையை அழகாகத் தொகுத்துத் தந்துள்ளது செய்தித்துறை. ஒவ்வொரு தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர்களும் இதை வாங்கி மக்களுக்கு விநியோகிக்க வேண்டும். நாட்ரம்பள்ளித் தொகுதிக்கு 500 பிரதிகளை நான் வாங்கிக் கொள்கிறேன்'' என்று கூறி, முதல் நூறு பிரதிக்கான தொகையைக் கொடுத்தார்.

விழாவில், மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் திரு. டி.எம். செல்வகணபதி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு அழகு திருநாவுக்கரசு, மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. எஸ். ரகுபதி, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு எம். ஆனந்தன், மாண்புமிகு பிற்பட்டோர் நலம்-மீன்வளத் துறை அமைச்சர் திரு. டி. ஜெயக்குமார், மாண்புமிகு ஊரகத் துறை அமைச்சர் திரு. எஸ். நாகூர் மீரான் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த இனிய விழாவில், அரங்கம் நிறைந்த மக்களைக் காண முடிந்தது. விழா மேடை வண்ண மலர்களால் எழிலுற அமைக்கப்பட்டிருந்தது.

செய்தி-மக்கள் தொடர்புத்துறை இணை இயக்குநர் திரு. பா. செயப்பிரகாசம் அவர்கள் நன்றி நவின்றார்.

- பி.வி. கிரி.



# உலக அளவில் தமிழ்நாட்டை ஒரு தலைசிறந்த சுற்றுலா மாநிலமாக்குவோம்!

## பொருட்காட்சி நிறைவு விழாவில் முதல்வர் உரை



தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சென்னை-காமராசர் சாலையில் உள்ள தீவுத் திடலில் நடத்திவந்த 19-வது அகில இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி நிறைவு விழா 29.3.93 அன்று சிறப்புற நடைபெற்றது.

இவ்விழாவில் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பங்கேற்றுப் பரிசுகளை வழங்கி நிறைவு விழாப் பேருரையாற்றினார்.

மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. சேடப்பட்டி இரா. முத்தையா அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் - மாண்புமிகு தமிழக அமைச்சர்கள், மாண்புமிகு துணைச் சபாநாயகர், சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு தலைமைச் செயலாளர் மற்றும் உயர் அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

**விழா விவரம்**

செய்தி-சுற்றுலாத்துறையின் அரசுச் செயலரும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தலைவருமான திருமதி சி.கே. கரியாலி, இ.ஆ.ப., வரவேற்புரையாற்றினார்; மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தினார்.

சுற்றுலாத் துறையின் இயக்குநரும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நிர்வாக இயக்குநருமான திருமதி ப. சிவகாமி, இ.ஆ.ப., திட்ட அறிக்கை படித்தார்.

**தலைமை உரை**

மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர் திரு சேடப்பட்டி இரா. முத்தையா அவர்கள் தமது வரவேற்புரையில் குறிப்பிட்டதாவது:

''மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொறுப்பேற்றுள்ள எந்தத் துறையும் சோடைபோகாது என்பதை நிரூபிக்கும் வகையில் இந்தச் சுற்றுலாப் பொருட்காட்சி அமைந்திருக்கிறது. புரட்சித் தலைவி அவர்கள் தமிழ்நாட்டின் முதல்வராகப் பொறுப்பேற்ற பிறகு, ஆண்டுக்கு ஆண்டு இந்தத் துறை இலாபகரமாக வளர்ச்சி பெற்றுவருவதை நாம் பார்க்கிறோம்.

''மாநில அரசின் எல்லாத் துறைகளும் இந்தப் பொருட்காட்சியிலே அரங்கம் அமைத்துள்ளன. மாநிலத்தின் தலைநகராம் சென்னை மாநகரிலே நடைபெறும் இந்தப் பொருட்காட்சியில், மத்திய அரசின் அரங்குகள் ஆறே ஆறுதான் இடம் பெற்றுள்ளன. இந்த வருத்தத்தை மத்திய அரசுக்குச் சுட்டிக்காட்டும் நான், இந்த வகையிலாவது மத்திய அரசு மாநில அரசுக்கு இன்னும் அதிக அளவில் உதவவேண்டும் - கைகொடுக்க வேண்டும் என்பது தமிழக மக்களின் எண்ணமாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.''

- இவ்வாறு சட்டப்பேரவைத் தலைவர் உரையாற்றியதையடுத்து, மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிறைவு விழாப் பேருரையாற்றினார்; அதன்பின், சிறந்த அரங்குகளுக்குப் பரிசுகள் வழங்கினார்.

விழா முடிவில் - தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகப் பொது மேலாளர் திரு. டி.சி. மதுசூதனன் நன்றி கூறினார்.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் நிறைவு விழாப் பேருரை விவரம் வருமாறு:

''இன்றையதினம், பத்தொன்பதாவது அகில இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியின் நிறைவு விழாவில் கலந்துகொண்டு, உங்களை எல்லாம் சந்திப்பதில், மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். இந்த ஆண்டு, இப்பொருட்காட்சியைச் சிறப்பாக நடத்தி முடித்துள்ள, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தையும், அதன் அலுவலர்களையும், பொருட்காட்சியில் பங்குகொண்டவர்களையும், பரிசுகள் பெறுபவர்களையும் நான் பாராட்டுகின்றேன்.

''சுற்றுலா ஒரு தொழில்'' என்று அறிவித்த, புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்

## The Tamil Nadu State Apex Co-Operative Bank Ltd.,

TNSC BANK

233, N.S.C. Bose Road, Madras-600 001.

**Rate of Interest on Deposits**
**(Effective from 9.10.1992)**

| Sl.No. | Type of Deposit | Rate of Interest per annum |
|---|---|---|
| 1. | Savings Bank Accounts | 6.25% w.e.f. 24.4.92 |
| 2. | Fixed Deposits : | |
| | For 46 DAYS and above but upto 270 days | 12.25% |
| | For 271 DAYS and above but upto 364 days | 12.00% |
| | For 1 YEAR and above | 12.25% |

*** Interest on Fixed Deposit for 1 year and above will be paid Quarterly**

- NRO & NRE Accounts Facilities are available in 6 designated Branches.
- Interest rates are subject to RBI directives from time to time.

THE BANK AT YOUR SERVICE




கவிதை:

# முன்னேற்றம் காணும் தென்னார்க்காடு

—டாக்டர் நா. முருகேசன்

செங்கை மடியில் தலையை வைத்து
சேலம் தஞ்சை திருச்சி மண்ணில்
கால்களைப் பதித்துக் களிநடம் புரிந்து
வங்கக் கடலை ஒருகரம் தொட்டு

வடஆர்க்காட்டினை மறுகரம் அணைத்து
மகிழ்ச்சிக் கடலில் திளைக்கும் மங்கை,
தென்னார்க் காடெனும் செந்தமிழ்க்கங்கை!

மருதம் முல்லை நெய்தல் பாலை
நால்வகை நிலங்களும் நங்கையின் உடல்வளம்!
மணிலா கரும்பு வாழை நெல்வகை
மாற்றுக் குறையா மக்கட் செல்வம்!

உலகையே ஈர்த்திடும் உயர்ந்த நடனம்
அலகில் சோதியன் அம்பலத் தாடி,
அழைத்தே அருள்தரும் அற்புதச் சிதம்பரம்!

வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம்
வாடிய வள்ளலார் மக்களைத் திருத்த
சமரச சுத்தசன் மார்க்கம் கண்டதெம்
வடலூர் என்னும் மந்திர பூமியில்!

மலைகளின் வயிற்றில் கறுப்புவைரம்
விலையிலாச் சீதனம் விளையும் இடம்இது!
காவிரிக் கரங்கள் படுகிற இடமெலாம்
கருத்தைக் கவரும் பசுமைப் புரட்சி!

இளமை குறையா எளிமை அழகுடன்
தென்னார்க்காட்டுக் கடற்கரைப் பகுதிகள்!
கற்பு மாறாக்கடலூர்க்கடற்கரை,
காண்போர் மனத்தில் ஆட்சி செலுத்திடும்!
வங்கக் கடல்தரும் குளிர்ச்சியைப் போல
தெங்கிள நீரின் தென்னந்தோப்புகள்!

பிச்சாவரம் ஓர் உல்லாச உலகம்!
கடல்கள் ஒதுக்கிய கண்ணீர்க் குழந்தைகள்
அடக்கமாய் வாழும் அமைதி நீர்க் கிடங்கு!



படகுப் பயணமும் கரபுன்னை நடனமும்
மனதை மயக்கும் மகிழ்ச்சிப் பூங்கா!

கரும்பின் பிறப்பு அதிகம் இருப்பதால்
சர்க்கரைப் பிறப்பும் சட்டென நடக்க
ஐந்து ஆலைகள் அயரா துழைக்கும்!

பண்ணுருட்டியை எண்ணிடும் போதிலே
என்னடா நாக்கிலே இப்படி உமிழ்நீர்!
பலாப்பழங்களும் முந்திரிக் கொட்டையும்
உலா நடத்திடும்! ஊரைக் கூட்டிடும்!

கல்வராயன் மலைவாழ் மக்கள்
கள்ளம் கபடம் இல்லா உளத்தார்
முன்னேறத் துடிக்கும் முல்லை மனத்தார்!

நேசக்கரமுடன் ரஷ்ய நாட்டினர்
நெய்வேலி வளம்பெறச்செய்த உதவியால்
நிலக்கரி மின்விசை நித்தமும் கிடைக்கும்!
உற்பத்தித்திறன் உயரே செல்லும்!

என்னால் எழுத்தால் கண்ணைக் கொடுக்கும்
அண்ணாமலையார் பல்கலைக் கழகம்!

விண்ணையும் அடக்கி வெற்றியைக் குவித்த
திண்திறன் தோளான் தேசிங்கு ராஜன்
மலைமேல் எழுப்பிய கோட்டை கொத்தளம்
மங்காப் புகழின் தங்கப் பதக்கம்
சிந்தையை மயக்கும் செஞ்சி நகரிலே!

மாவட்ட ஆட்சித் தலைவர் மாண்புற
'கிளைவ்'வின் பங்களா சிறப்பாய் உதவும்!

எங்கள் இந்த மண்வாழ் மக்கள்,
பொருளாதாரம், சமூக வளர்ச்சியில்
மறுமலர்ச்சி; மாற்றம் விரும்பி
உழைப்பை மூல தனமாய் ஆக்கி
ஒவ்வொரு நொடியும் வெற்றி காண்கிறார்!
விரைவில் சாதனை நிச்சயம் நிகழும்!
தென்னார்க்காடு முன்னேற்றம் காணும்!



கிறது. நெய்வேலியைச் சுற்றி 25 முதல் 30 கி.மீ. பரப்பளவில் உள்ள கிராமங்கள் இதனால் பயனடைகின்றன. எனவே, மிகப் பெரிய பிரச்சினையாக உருவாகியிருக்க வேண்டிய தண்ணீர் ஒரு வரப்பிரசாதமாக அமைந்துவிட்டது.

தற்பொழுது என்.எல்.சி.-க்குச் சொந்தமாக இரண்டு பழுப்பு நிலக்கரிச் சுரங்கங்கள் (தெற்காசியாவிலேயே மிகப் பெரியது) இரண்டு பெரிய அனல் மின் நிலையங்கள், யூரியா தயாரிக்கும் உரத் தொழிற்சாலை, லிக்னைட் கோக் (Lignite Coke) மற்றும் கார்போ இரசாயனப் பொருட்கள் (Carbo Chemical Products) தயாரிக்கும் தொழிற்சாலை ஆகியவை உண்டு.

நாட்டிலேயே முதன் முதலாக 210 மெகாவாட் திறன் கொண்ட கொதிகலன்களை (210 MW lignite fired boilers) உடையது, இரண்டாம் அனல் மின் நிலையம். இங்கு தான் முதன் முதலில் Tower type boiler பயன்படுத்தப்பட்டது. இங்கு தான் முதன் முதலில் மிகச் சிறந்த Soft warebased burner management முறை பயன்படுத்தப்பட்டது.

இங்குதான் முதன் முதலில் ஹைட்டிரஜனைக் கொண்டு குளிர்ப்படுத்தப்படும் மிகப் பெரிய ஜெனரேட்டர் தொடங்கப்பட்டது. ஹைட்ரோபுளோரிக் அமிலத்தைக் கொண்டு இதை சுத்தம் செய்யும் முறையும் இங்கேதான் முதன் முதலில் தொடங்கப்பட்டது. இதனால் தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடக, கேரளா, பாண்டிச்சேரி ஆகிய மாநிலங்களின் இலட்சக்கணக்கான இல்லங்களுக்கு ஒளியை வழங்குகிறது.

என்.எல்.சி.-யின் மின் உற்பத்தித் திறனைத் தொடர்ந்து பெருக்கிக் கொண்டே செல்ல, இடையறாத முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்போதுள்ள மின் நிலையங்களின் உற்பத்தியளவையும், சுரங்கத்தின் உற்பத்தி அளவினையும் பெருக்குதல் - 500 மெகாவாட் யூனிட்டுகள் திறன் கொண்ட 3 பிரிவுகள் அடங்கிய மூன்றாம் அனல் மின் நிலையம் அமைத்தல் ஆகியவை என்.எல்.சி.-யின் அடுத்த கட்டத் திட்டமாகும். இதனால் மின் உற்பத்தியின் அளவு அடுத்த பத்தாண்டில் 4200 மெகாவாட்டாக உயரும். 2000-ஆம் ஆண்டிலும் அதற்கு அப்பாலும் நான்காவது, ஐந்தாவது, ஆறாவது அனல் மின் நிலையங்கள் முறையே



630, 1500, 1000 மெகாவாட் திறனுடன் அமைக்க உத்தேசிக்கப் பட்டுள்ளது.



நெய்வேலி, இயந்திரங்களுக்காகவும், தொழில் நுட்பத்திற்காகவும் மற்றவர்களை எதிர்பார்க்கும் காலம் மலையேறிவிட்டது. தமது 30 ஆண்டுக் கால அனுபவத்தையும் தொழில் நுட்பத்தையும் உலகத்தோடு பகிர்ந்து கொள்ளத் தயாராக உள்ளது. சுரங்கத் தொழிலிலும், மின் உற்பத்தியிலும், நீர் ஆதாரங்களை நிர்வகிப்பதிலும், மனித வள மேம்பாட்டிலும், மின் சக்தியை நிர்வகிப்பதிலும், தொழிற்சாலை சுற்றுச்சூழல் சமநிலையைப் பராமரிப்பதிலும் தன்து ஆற்றலையும் அனுபவத்தையும் நாட்டின் நலனுக்காக மற்ற நிறுவனங்களுடன் பகிர்ந்து கொள்ளத் தயாராக உள்ளது.

தமிழகத்தில் 480 ச.கி.மீ. பரப்பில் உள்ள நிலக்கரியைப் பற்றி



ஆய்வு செய்து வரைபடத்தை என்.எல்.சி. தயாரித்துள்ளது. தமிழகத்தின் சில பகுதிகள், பாண்டிச்சேரி, ராஜஸ்தான், ஜம்மு காஷ்மீர் பகுதிகளில் நிலக்கரி தோண்டும் பணிகளில் என்.எல்.சி. ஈடுபட்டுள்ளது. என்.எல்.சி.-யில் புதிய ஐந்து திட்டங்களுக்குத் திட்ட அறிக்கைகளைத் தயாரித்துத் தந்துள்ளது. இதன் மூலம் நெய்வேலியில் ஆண்டொன்றுக்கு 32 மில்லியன் டன் நிலக்கரியைப் பெற இயலும் என எதிர்பார்க்கப்படுகிறது. ராஜஸ்தானிலும், குஜராத்திலும் நிலக்கரியை வெட்டி எடுப்பதில் என்.எல்.சி. தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

ஜெர்மனியிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 'பக்கட்-வீல்' (Bucket-wheel) தொழில் நுட்பத்தை நமது சுற்றுப்புறச் சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு என்.எல்.சி. மாற்றிக் கொண்டது. தற்போது என்.எல்.சி.-க்குத் தேவைப்படும் 70 சதவிகிதம் உதிரி பாகங்கள் இந்தியாவிலேயே தயாரிக்கப்படுகின்றன என்பது பெருமைக்குரிய விஷயமாகும்.

நிலக்கரியை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் மின் நிலையங்களைப் புதிதாகத் தொடங்க திட்டமிடுதல், அமைத்தல், தொடங்கி வைத்தல், வெற்றிகரமாக மின்சாரம் தயாரித்தல், பராமரித்தல் ஆகிய பணிகளை என்.எல்.சி. செவ்வனே செய்து வருகிறது. மின் நிலையப் பொறியாளர்களுக்கும், நிர்வாகிகளுக்கும் இங்கே பயிற்சி அளிக்கப்படுகிறது. கல்பாக்கம், தாராபூர் அணுமின் நிலையங்கள் உள்ளிட்ட பல மின் நிலையங்களில் முக்கியப் பிரிவில் பணியாற்றும் பல நிறுவனங்களில் பணிபுரிவோர் என்.எல்.சி.-யில் பயிற்சி பெற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

நாட்டிலேயே லிக்னைட் நிலக்கரி தயாரிக்கும் ஒரே நிறுவனமாக என்.எல்.சி. இருப்பதால் இத்துறையில் ஆலோசனையும், பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

உலகிலேயே மிகச் சிறந்த தொழில் நுட்பமும், விஞ்ஞான வளர்ச்சியும், இந்தியாவின் கலாச்சாரத்திற்குப் பெருமை சேர்க்கும் வகையில், ''செய்யும் தொழிலே தெய்வம்'' என மதித்து அதற்குத் தங்களை அர்ப்பணிக்கும் உன்னதப் பண்பாடும் இணைந்து என்.எல்.சி.-யைத் தலைசிறந்த நிறுவனமாக விளங்கச் செய்துள்ளன.

-என். இளங்கோ

## 'தமிழரசு' இதழில்...



மருத்துவ நிபுணர் வினா-விடைப் பகுதியில் அடுத்ததாகக் **'கண் மருத்துவம்'** இடம் பெறுகிறது!

வாசகர்கள் கேட்கும் கேள்விகளுக்கு, அரசு கண் மருத்துவமனை இயக்குநரும் கண்காணிப்பாளருமான **டாக்டர் வி.எம். லோகநாதன்** அவர்கள் பதிலளிப்பார்.

கண் மருத்துவம் குறித்த வினாக்கள் அனுப்பப்பட வேண்டிய கடைசித் தேதி 16.5.1993

வினாக்களை அஞ்சலட்டையில் எழுதவும். எழுதும்போது தலைப்பில் 'மாதம் ஒரு மருத்துவர்' என்று குறிப்பிடவும்.

## முந்திரி



தமிழகத்திலேயே வேறெங்கும் இல்லாதபடி தென்னார்க்காடு மாவட்டத்தில் ஏராளமான இடங்களில் முந்திரி பயிரிடப் படுவதை நாம் காண முடியும்.

பண்ணுருட்டியில், கடந்த 40 ஆண்டுக் கால மாக இத்தொழிலில் ஈடு பட்டு முன்னேறியிருப் பவர் திரு. டி.ஆர். வெங்கடாசலம். முந்திரி பற்றி அவர் தெரிவித்த கருத்துக்கள் இவை:

தென்னார்க்காடு மாவட்டத்தில் சுமார் இரண்டு இலட்சம் ஏக் கரில் முந்திரி பயிரிடப் படுகிறது; குறிப்பாகப் பண்ணுருட்டி, கடலூர், விருத்தாசலம் பகுதிகளில் அதிகம். காரணம் இது செம்மண்ணும் சரளைக் கல்லும் கலந்த மண் வாகுள்ள பகுதி.



இங்கு வளரும் ஒரு பெரிய முந்திரி மரம் சுமார் 12 சென்ட் நிலத்தை ஆக்கிரமித்துக் கொள்ளும்!

முந்திரிக்கு அதிக மழையோ, குறைவான மழையோ கூடாது; ஓரளவு தண்ணீர் இருந்தாலே போதும்.

முந்திரியில் 22 ரகங்கள் இருக்கின்றன.



10 ரக முந்திரிப் பருப்பு இங்கிருந்து - அமெரிக்கா, ஜெர்மனி, ஆஸ்திரேலியா, ஹாங்காங், சிங்கப்பூர், துபாய், சவூதி போன்ற பல நாடுகளுக்கு முந்திரி ஏற்றுமதி செய்யப்படுகிறது. பண்ணுருட்டியில் மட்டும் இருபது முப்பது பேர் முந்திரி ஏற்றுமதித் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். சுற்றுப்புறத்திலுள்ள சுமார் முப்பது கிராம மக்கள் இலாபகரமானதாக இருப்பதால் முந்திரி பயிரிடுவதை முக்கியத் தொழிலாகக் கொண்டிருக்கிறார்கள்.



முந்திரி பயிருக்கான பூச்சி மருந்து வாங்குவது போன்ற சில வகைகளில் தமிழக அரசும் இதற்கு உதவி வருகிறது.

—'சித்தார்த்தன்'

# வடலூர் இராமலிங்க அடிகளார்

●●●

**உலகளாவிய புகழ்பெற்ற வள்ளல் பெருமானின் வாழ்க்கை வரலாறு இந்தக் கட்டுரை மூலம் இனிய-எளிய தமிழில் விளக்கப்படுகிறது:**

●●●

'அருட்பிரகாச வள்ளலார்' என்று பிற்காலத்தில் சிறப்புறக் குறிப்பிடப்பட்ட இராமலிங்கர், 5.10.1823-இல் (சுபானு ஆண்டு, புரட்டாசித் திங்கள் 21-ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை) பிறந்தார். அவருடைய பெற்றோர்-இராமையா பிள்ளை - சின்னம்மாள் தம்பதியாவர்.

பிறந்த ஊர், தில்லைக்கு வடமேற்கே உள்ள மருதூர்; பார்வதிபுரம் என்றும் இவ்வூருக்குப் பெயருண்டு.

இராமையா பிள்ளைக்குச் சின்னம்மாள் ஆறாவது மனைவி; அவருக்கு நம் இராமலிங்கர் ஐந்தாவது பிள்ளை - அதாவது கடைசி மகன். கருணீகர் மரபைச் சேர்ந்த சைவவேளாளர் குலத்தைச் சேர்ந்தவர்கள் இவர்கள்.

பிள்ளைப் பருவத்திலேயே இராமலிங்கரை 'அம்பலவாணரின் அருட்குழந்தை' என்று, தில்லையம் பதியில் அப்போது பணியாற்றிய சுப்பைய தீட்சிதர் என்பார் பாராட்டியுள்ளார். 'திருவருட்பாப் பெருநூலில்' இச்செய்தி காணப்படுகிறது.

இராமலிங்கரின் சிறுவயதிலேயே இராமைய்யா பிள்ளை மரணமடைந்தார். குடும்பத்தைக் காக்கும் பொறுப்பு அவரது மூத்த மகன் சபாபதியினுடையதாயிற்று. எல்லோரையும் அழைத்துக் கொண்டு, பொன்னேரியில் இருந்த தம் பாட்டியார் வீட்டுக்கு வந்து சேர்ந்தார் சபாபதி. பிறகு, சென்னையில் ஏழுகிணறு பகுதியில் உள்ள வீராசாமி பிள்ளை வீதி, 39-ஆம் எண்ணுள்ள வீட்டில் குடியேறினார்.

மகாவித்துவான் காஞ்சிபுரம் சபாபதி முதலியாரிடம் தமிழ்

**- பி.எல். ராஜேந்திரன்**





பயின்று புலமை பெற்றிருந்தவர், சபாபதி. ஆகவே, தமது தந்தையைப் போலவே சிறுவர் சிறுமியர்க்குத் தமிழ் கற்பித்தும்-புராணச் சொற்பொழிவுகள் ஆற்றியும் பணம் சம்பாதித்துக் குடும்பத்தை நடத்தி வரலானார் அவர்.

ஐந்து வயதடைந்த இராமலிங்கரை முறைப்படி பள்ளியில் சேர்த்தார்கள். பள்ளிப் படிப்பில் அவருக்கு நாட்டமில்லை. படிக்கவே பிடிக்காத தம்பிக்குத் தாமாவது கற்பிக்க எண்ணினார் சபாபதி; அதிலும் பயனில்லை. 'ஓதாதுணர்ந்த' இராமலிங்கர் பிற்காலத்தில் எப்படி தமிழிலும் வடமொழியிலும் பெரும்புலமை வாய்க்கப் பெற்றார் என்பதே எவருக்கும் புரியாத விந்தை!

ஆன்ம ஞானத்தால் புகழ்பெற்ற இராமகிருஷ்ண பரமஹம்சரே இரண்டாம் வகுப்புவரை படித்தவர்தானே! ஆகவே, நாம் அவரோடு இவரையும் சமமாக வைத்தெண்ணலாம்!

தம்பி படிக்காததற்காக மனம் மிக வருந்திய சபாபதி, இராமலிங்கரை வீட்டைவிட்டே துரத்தி விட்டார். அவர் மனைவியான பாப்பாத்தி அம்மாளோ, கணவருக்கும் தெரியாமல் அவருக்கு மறைவாக உணவளித்து வந்தார். தந்தையாரின் திதியன்றும் கூட நம். இராமலிங்கருக்கு இதே நிலைதான்!

இதற்காகக் கண்ணீர் விட்டனர் சபாபதியும் அவர் மனைவியாரும். அவர்கள் கவலைக்கான காரணத்தை உணர்ந்த இராமலிங்கர், 'இனிமேல் படிக்கிறேன்' என்று உறுதி கூறினார்; அவர்கள் வீட்டு மாடி அறையிலேயே தங்கினார்.

சின்ன வயதிலேயே தமிழ்க் கடவுளாம் சிங்காரவேலன் மீது மிகுந்த பக்தி கொண்டிருந்தார் இராமலிங்கர். மாடி அறையையாவது அவர் படிக்கப் பயன்படுத்திக் கொண்டாரா என்றால் அதுதான் இல்லை; எப்போதும் அங்கே தெய்வீக மணம் கமழ்ந்தது; மணிவாசகரின் தேன்தமிழ்ப் பாக்கள் இராமலிங்கரால் இசை ஞானத்தோடு பாடப்பட்டன. அங்கே யாருக்கும் தெரியாமல் அவர் வாங்கிப் போய் மாட்டிய கண்ணாடி ஒன்றில், தெய்வீகக் களை பொருந்திய தன் முகத்தைத் தானே அடிக்கடி பார்ப்பதும் பரவசப் படுவதும், முருகப் பெருமானைப் போற்றிப் பாடுவதுமே அவருடைய அன்றாடப் பணியாயிற்று.

அந்தக் கண்ணாடியில், ஒன்பதாம் வயதில், முருகக் கடவுளே தரிசனம் தரக்கண்டு ஆனந்தக் கூத்தாடி, பாடி அகம் மகிழ்ந்தார் அவர் என்கிறது வரலாறு.

அண்ணனும் அண்ணியும், தெய்வாம்சம் பொருந்திய இராமலிங்கரை முழுமையாக உணரத் தலைப்பட்டார்கள்.

அப்போது சென்னை-முத்தியாலுப்பேட்டை பகுதியில் இருந்த சோமு செட்டியார் என்பவர் வீட்டில், நாள்தோறும் தொடர்ந்து புராணச் சொற்பொழிவு நடத்தி வந்தார் சபாபதி. ஒருநாள், அவருக்குப் பெரிதும் உடல்நலக் குறைவு ஏற்பட்டது; சொற்பொழிவுக்குச் செல்லாவிட்டால் வருவாய்த் தட்டுப்பாடு ஏற்படக்கூடும் அல்லவா?

ஆகவே, தன் மனைவியின் ஆலோசனைப்படி

★★★

### சத்திய ஞானசபை

வள்ளல் இராமலிங்க அடிகளாரால், 25.1.1872-இல் அமைக்கப்பட்டது சத்திய ஞானசபை; மேலே எண் கோணமும், கீழ்ப்பிரகாரம் 43 கோணமும் உடையதாக உருவாக்கப்பட்டுள்ளது.

இதன் இடதுபுறம் பொற்சபையும், வலதுபுறம் சிற்சபையும் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. நுழைவாயில் வளைவில்- 'அருட்பெருஞ் ஜோதி அருட்பெருஞ் ஜோதி தனிப்பெரும் கருணை அருட்பெருஞ் ஜோதி' காணப்படுகிறது.

உள் சுவரில் பதிக்கப்பட்டுள்ள கருப்புச் சலவைக் கல்லில்- இராமலிங்க அடிகளார் எழுதிய 'அருட்பெருஞ் ஜோதி அகவல்' வடிக்கப்பட்டிருக்கிறது. அவர் எழுதிய சபை வழிபாட்டு விதிமுறைகளும், சத்திய ஞான சபையின் பராமரிப்பு முறைகளும்கூட அதேபோலப் பொறிக்கப்பட்டிருக்கின்றன.

சபையினுள், மனிதனின் ஆசாபாசங்களைக் குறிப்பதாக ஏழு வண்ண மாயத் திரைகள் உள்ளன; ஒவ்வொன்றாக அவை விலக்கப்பட்டபின், கடைசியாக உள்ள கண்ணாடியில் இறையொளி தோன்றும்; இதுவே அருட்பெருஞ் ஜோதிக் கடவுள்.

★★★

## சித்தி வளாகம்

கருங்குழியில், தமது அருட் திறத்தால் நீருற்றி விளக்கெரித்தார் வள்ளலார் எனப்படுகிறது.

அவர், 30.1.1874 வெள்ளிக்கிழமை இரவு பன்னிரண்டு மணிக்குத் தம் சீடர்களுக்கெல்லாம் உப்தேசித்து விட்டு, ''வெளியே பூட்டிக் கொள்ளுங்கள்'' எனக் கூறியபின் உட்புகுந்த நாட்டு ஓடு வேயப்பட்ட அந்தத் திருவறை மேட்டுக்குப்பம் சித்திவளாகத்தில் இருக்கிறது.

இன்னமும் பூட்டப்பட்டே கிடக்கும் அந்த அறையின் மேலே- 'திருக் காப்பிட்டுக் கொண்ட திரு அறை' என்று எழுதப்பட்டிருக்கிறது. அறைக்கு வலது புறம்—

'ஆடாதீர் சற்றும் அசையாதீர் வேறொன்றை
நாடாதீர் பொய்யுலகை நம்பாதீர் வாடாதீர்
என்மார்க்கம் இறப்பொழிக்கும்
சன்மார்க்கம்தானே!'

—என்னும் வள்ளலாரின் பாடலடிகள் எழுதப்பட்டுள்ளன.

கட்டடத்தின் முன்னே- மேலே மஞ்சள் வண்ணமும், கீழே வெள்ளை நிறமும் கொண்ட வள்ளலாரின் அமைதிக்கொடி அழகுறப் பறக்கிறது.

அதை அடுத்துள்ள உண்டியில்- 'தமிழக அரசு இந்த சமய அறநிலைய ஆட்சித்துறை ஆளுகை' என்ற எழுத்துக்கள் காணப்படுகின்றன.

★★★

தனக்குப் பதில் இராமலிங்கரைப் போய் வரச் சொன்னார் சபாபதி.

''இரண்டு மூன்று பக்திப் பாடல்களைப் பாடித் தீபாராதனை செய்துவிட்டு வா'' என்பதே அண்ணனின் ஆணை. ஆனால், அங்கு சென்ற தம்பி இராமலிங்கரோ, ஞானசம்பந்தரின் புராணச் சொற்பொழிவையே முறைப்படித் தொடங்கி மூன்று மணி நேரம் தங்குதடையின்றி நடத்திடலானார். திரண்டிருந்த பக்திமான்களெல்லாம் தித்திக்கும் அவரது தெய்வீகப் பாமழையிலே திணறிப்போனார்கள்.

நாளடைவில், தமது தம்பிக்கு இத்தனை ஆற்றலுண்டா என்றெண்ணி - அவர் சொற்பொழிவை மறைந்திருந்து கண்டும் கேட்டும் உணர்ந்து கொண்டார் சபாபதி. தம்பி இராமலிங்கர் 'ஓதாமையைக் கண்டு உள்ளம் கசந்தேன்; உணவளிக்கவும் மறுத்தேன்; உடையளிக்கவும் வெறுத்தேனே, ஐயோ! என்னுடைய அச் செய்கைகளெல்லாம் அவரின் பெருமையறியாத உன்மத்தனின் செயலாயிற்றே!' எனப் புலம்பி மனம் நொந்தார். அவரிடம் தனி ம்ரியாதை செலுத்திடலானார்.



ஆனால், இதையெல்லாம் இராமலிங்கர் சிறிதும் விரும்பினாரில்லை.

இதற்கிடையில் அடிகளாருக்குத் திருமணம் செய்து வைக்கும் முயற்சியும் நடைபெறலாயிற்று.

இராமலிங்கர் மனம் எப்போதும் தெய்வ சிந்தனையுடனேயே இருந்தது; அண்ணலோ தனது கடமையை உணர்ந்தார். வாலிபப் பருவத்தையடைந்த அவருக்கு அன்னையும் அண்ணனும் சேர்ந்து திருமணம் செய்து வைக்க முடிவெடுத்தார்கள்.

அடிகளாரால் எதிர்த்து நிற்க முடியாத நிலையில் தனது மூத்த சகோதரி உண்ணாமலையாரின் மகள் தனக்கோட்டி என்பாளுக்கு மற்றவர்கள் கட்டாயத்தின் பேரில் மாலையிட நேர்ந்தது. மணம்தான் முடிந்ததே தவிர, இராமலிங்கரால் இல்லற வாழ்வை இனிதே தொடர முடியவில்லை.

அதே நேரத்தில் - துறவு நிலை பூண்ட மனத்தரான அவர், பின்னாட்களில் தம்முடைய சீடர்கள் மனவாழ்வு மேற்கொள்ளுவதை ஆதரிக்கவே செய்தார். பெண் குலத்தைப் போற்றி மதித்தார். பெண் கல்வியை ஆதரித்தார் என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது.

ஒருநாள் அவ்வீட்டின் மேல் மாடி அறையிலிருந்து இராமலிங்கர் விடுதலை பெற்றார். திருவொற்றியூர் சென்று தியாகேசப் பெருமாளைப் பாடிப் பரவசமுற்றார். காஞ்சித் தமிழறிஞர் சபாபதி முதலியார் கோரியபடி 'மனு முறை கண்ட வாசகம்' என்ற நூலைச் சிறுவர்க்கேற்ப இயற்றித் தந்தார்.

தொழுவூர் வேலாயுத முதலியாரிலிருந்து பலரும் வெள்ளாடைத் துறவி போல் இருந்த இராமலிங்கரின் சீடர்களாயினர். பாதயாத்திரை மூலமே புதுவைக்கும் கடலூர், தில்லை, கருங்குழி எனத் தமிழகத்திலுள்ள பல ஊர்களுக்கும் இவர்களுடைய பக்திப் பயணம் தொடர்ந்தது.

இந்த நிலையில்தான் இராமலிங்கரின் தாயார் சின்னம்மாளும் இறந்து போனார். அடுத்த சில


சன்மார்க்கக் கொடிக்கம்பம்


அணையா விளக்கு
சித்திவளாகம்

காலத்தில் அண்ணன் சபாபதியும் சென்னையில் இயற்கை எய்தினார்.

அண்ணனை இழந்தபின், எல்லா உறவுமே தன்னைவிட்டுப் போய் விட்டதாக ஒருவித மனவிரக்திக்கு ஆளானார் இராமலிங்கர். சமரச சுத்த சன்மார்க்க சங்கம் நிறுவிட ஏதாவது ஒரு சிற்றூரைத் தேர்ந்தெடுக்க எண்ணினார். அப்படி அவர் வந்து சேர்ந்த இடம்தான் பொதுநிதியில் அவரால் 'சமரச சுத்த சன்மார்க்க சங்கம்' நிறுவப்பட்டுள்ள வடலூர் ஆகும்.

'பசித்திரு! தனித்திரு! விழித்திரு!

- என்கிற மூன்று முக்கிய மந்திரங்களைத் தம் அடியார்க்கெல்லாம் உபதேசித்து, இராமலிங்க அடிகளானார் அவர்.

பணம் சேர்க்கும் எண்ணம் ஒரு சிறிதும் அவரிடம் இருந்ததில்லை; யாருக்கேனும் உதவும்படி வேண்டுமானால் யாருக்காவது கூறியிருப்பாரே தவிர, அவரே தனக்கெனச் சேர்த்து வைத்தாரில்லை.

அவருடைய தோற்றம் பற்றி அன்னாரின் தலைமாணாக்கர் தொழூவூர் இராமையா முதலியார் 'திருவருட்பாப் பெருநூலில்' இவ்வாறு கூறியிருக்கிறார்.

'உருவத்தில் சாதாரண உருவமுள்ளவர்; மெலிந்த சரீரமுடையவர். எலும்புகள் தெரியும். ஆயினும் வீரியபலமுள்ளவர். நிமிர்ந்த தேகம்; தெளிந்த மாநிற (சாதாரண சிவப்பு) மேனியர். நீண்ட மெல்லிய நாசியுடையவர். பறந்த பொறி பறக்குங் கண்களையுடையவர். இவருடைய முகத்தில் சதா சற்று விசனக்குறி காணப்பட்டிருந்தது.

'இவர் கடைசிக் காலத்தில் முடியை நீளமாய் வளரவிட்டிருந்தார்.

'இவர் யோகிகளுக்கு அடுக்காத வழக்கமாகிய பாதரட்சையைத் (ஆர்க்காட்டுச் சோடு) தரித்தார்.

'இவருடைய உடை இரண்டு வெள்ளையாடையைத் தவிர வேறு இல்லை; ஒரே ஆடையை உடுத்தியிருந்ததாகவும் கேள்வி'.

- இவைகளே நம் இராமலிங்கரைப் பற்றிய படப்பிடிப்பு ஆகும்.

அவர் உடுத்திய வெள்ளாடை அந்நாளில் சிறப்புற்றிருந்த 'லாங்கிளாத் மல்' துணியே என்று அறியப்படுகிறது.

அடிகளார் தம்மைப் புகைப்படம் பிடிக்கவோ, சிலையாக வடிக்கவோ யாரையும் அனுமதித்ததில்லை; இதற்காகப் பலரும் அவரிடம் அனுமதி பெற முயன்று தோற்றதுண்டு.

★★★

## சத்திய தருமசாலை

வடலூர் சத்திய ஞானசபை அருகே உள்ளது சத்திய தருமசாலை.

வள்ளல் இராமலிங்க அடிகளால் ஏற்றப்பட்ட அணையா தீபமும், அடுப்பும் இங்குள்ளது. அவர் கைப்பட எழுதிய அகவல் மூலநூலும் இங்கே வைத்துப் பாதுகாக்கப்படுகிறது.

'மற்றவர்களின் பசி நீக்குவதே இறைவனை அடையும் உண்மை வழி' என்னும் கொள்கையோடிருந்த வள்ளலாரின் ஏழை எளிய அடியார்களுக்கு இங்கே நான்தோறும் இலவச உணவு அளித்து உபசரிக்கப்படுகிறது.

வள்ளலாரால் உருவாக்கப்பட்ட இந்த சத்திய தருமசாலைத் திருப்பணி ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் நடந்து கொண்டிருக்கிறது.

[illegible]வொரு நாள் உணவளிப்பிற்கும் ஆகும் [illegible] ஒவ்வொரு அன்னதானக் கட்டளை [illegible] கொள்கிறார்; அவர் பெயர் அங் [illegible] தகவல் பலகையில் தவறாமல் எழுதப்படுகிறது.

திருப்பணிக்கு ஐயாயிரம் ரூபாய்க்கு மேல் நிதியளிப்போரின் பெயர் கல்வெட்டில் இடம்பெறும்.

★★★

9 வயதில் தொடங்கி 50 வயது வரை பாடிக் கொண்டே இருந்தவர் இராமலிங்க அடிகள்; அவை யாவுமே தெய்வீகப் பாடல்கள்; ஒன்றுகூடத் தனிமனிதர் துதிப்பாடல்களல்ல.

மற்றவர் படும் துயரையும் தம் துயராக எண்ணிக் கலங்கும் மெல்லிதயம் படைத்தவர் அவர்.

வடலூர் மக்கள் காணிக்கையாகத் தமக்களித்த தொண்ணூறு காணி நிலத்தில் 22.5.1867-இல் சத்திய ஞானசபை நிறுவி, கட்டடத் திறப்பு விழாவும் நடத்தினார் அடிகளார்; அன்றே அன்ன தானப் பணி துவக்க விழாவும் நடைபெற்றது; அடுப்பில் இந்த நல்லெண்ணத்துடன் அங்கே அவர் அன்று மூட்டிய தீ, இன்றும் அணையாமல் எரிகிறது!

சத்திய ஞானசபையானது சமரச சன்மார்க்க நெறிப்படி எண்கோணத் தாமரை வடிவில் அமைக்கப்பட்டிருக்கிறது. இச்சங்கமே தமிழகத்தில் முதன்முதல் உருவான சமயச் சீர்திருத்த அமைப்பு எனப்படுகிறது.

வள்ளல் இராமலிங்க அடிகளார் அருளிய 'திருவருட்பா' ஆறு திருமுறைகளைக் கொண்டது ஆகும். அதிலே உள்ள ஆறாம் திருமுறையிலேயே அவரது சீர்திருத்தக் கருத்துக்களுடைய பாடல்கள் ஏராளம் காணப்படுகின்றன.

இளமைக் காலத்திலே அடிகளார் முருகப் பெருமானையும், வினாயகரையும், கலைமகளையும், திருமகளையும், திருமாலையும், தில்லை நடராசரையும் இன்னபிற தெய்வங்களையும் வழிபட்டுப் பாடியதுண்டு; ஆனால் அறிவால் முதிர்ந்த மனப்பக்குவம் அடைந்த நாளில் இறைவன் அருட்சோதி வடிவானவன் என்றே அவர் முடிவெடுத்தார். முன்பெல்லாம் உருவ வழிபாட்டை ஆதரித்த அவரே பிற்காலத்தில் அதை வெறுத்தார்; ஏற்க மறுத்தார். 'பொங்குபல சமயமெனும் நதிகள் எல்லாம் புகுந்து கலந்திட நிறைவாய்ப் பொங்கி ஓங்கும் கங்குகரை காணாத கடலே' என்றும் - 'அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே' என்றும் இறையருளைப் பாடிப் பரவசப்பட்டார்.

அந்நாளிலேயே, அவரது கருத்துக்களை எதிர்த்தோருண்டு; அருட்பாவுக்கு எதிராக மருட்பா இயற்றியோருண்டு; அடிகளார் மீது அவரது சீர்திருத்தக் கருத்துக்களுக்கு எதிராக ஆறுமுக நாவலர், கடலூர் மஞ்சக்குப்பம் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தது கூட உண்டு!

தனது 51-வது வயது முதலே தாம் இந்த உலகை விட்டு மறையப்போவதாகவும் சமாதி நிலை அடையப்போவதாகவும் தம் அடியார்களிடம் அடிக்கடி கூறிவந்தார் வள்ளலார். பெரும்பாலும் கடைசிக் காலத்தில் - மேட்டுக்குப்பத்தில் தாம் இருந்த சித்திவளாகத்தினுள்ளேயே இருப்பதும் பிறகு வெளிப்படுவதும், அடியார்களுக்



★★★

**வள்ளலார் கண்காட்சி**

**வடலூரில் உள்ள சத்திய ஞானசபை அருகே, வள்ளலாரின் வரலாற்றை விளக்கும் நிரந்தரப் பொம்மைக் கண்காட்சி ஒன்று நிர்மாணிக்கப் பட்டுள்ளது.**

**வள்ளல் பெருமானின் பிறப்பு முதல் சித்தி பெற்றது வரையிலான அவரது வரலாற்றுச் சம்பவங்கள் பல வண்ணப் பொம்மைகள் மூலம் விளக்கப்பட்டிருக்கின்றன. இந்தப் பொம்மைகள், காலால் மிதித்த களிமண்ணால் செய்யப்பட்டவை அல்ல; கையால் பிசைந்த களிமண்ணால் செய்யப் பட்டவை என்பது முக்கிய சிறப்பம்சமாகும்.**

**வள்ளலார் குறித்த நூற்கள், இசை மேதைகள் சிலர் இனிதே பாடிய அருட்பாப் பாடல்களின் ஒலி நாடாக்கள் ஆகியவைகளும் இங்கே விற்கப் படுகின்றன.**

★★★

கெல்லாம் அரிய உபதேசம் நிகழ்த்துவதுமாக இருக்கலானார் வள்ளலார்.

ஒரு நாள் முழுவதுமாக அப்படி உபதேசித்த அவர், முடிவாக ஒரு தீபத்தை ஏற்றி வைத்து, ''ஆண்டவன் இப்போது தீபமுனையில் விளங்குகிறபடியால் - வீணே காலங் கழிக்காமல்... நினைந்து நினைந்து என்று தொடக்கமுடைய பாடலில் கண்டபடி தெய்வ பாவனையை இந்தத் தீபத்திற்குச் செய்யுங்கள். நான் இப்போது இந்த உடம்பிலிருக்கிறேன். இனி எல்லா உடம்பிலும் புகுந்து கொள்ளுவேன்'' என்றார்.

அவர் - 'நாம் அருட் பெருஞ்சோதி ஆண்டவின் ஆணைப்படி கடைவிரித்தோம்; கொள்வாரில்லை, கட்டிவிட்டோம். ஆதலால் இனி இரண்டரைக் கடிகை நேரம் உங்களுடைய ஊனக் கண்களுக்குத் தோன்றமாட்டோம்... என்றெல்லாம் குறிப்பிட்டு, அவ்வறையை வெளியே பூட்டிக் கொள்ளுமாறு தன் அடியார்களுக்கு அன்புடன் ஆணையிட்டார்.

அவருடைய சீடர்களெல்லாரும் இதுகேட்டுக் கண்கலங்கினர். இராமலிங்க அடிகளார், மேலும் அவர்களை நோக்கி மிக நிதானமாகச் சொன்னார்-

''நான் உள்ளே பத்துப் பதினைந்து தினம் இருக்கப் போகிறேன்; பார்த்து அவநம்பிக்கை அடையாதீர்கள். ஒருக்கால் பார்க்க நேர்ந்து பார்த்தால், யாருக்கும் தோன்றாது; வெறும் வீடாகத் தானிருக்கும்படி ஆண்டவர் செய்விப்பார். என்னைக் காட்டிக் கொடார். நாம் திருக்கதவை மூடியிருக்குங்கால் அரசாங்கத்தினர் திறக்கும்படி ஆக்ஞாபிக்கின், ஆண்டவர் அருள் செய்வார் என்று சொல்லிவிட்டு, சித்திவளாகத்தினுள் புகுந்து தாளிட்டுக் கொண்டார், கதவு அவர் சொன்னபடியே வெளியில் பூட்டப்பட்டது.

இது நடந்தது 1874 ஜனவரி 30-ஆம் நாள் வெள்ளிக் கிழமையன்று நள்ளிரவு சரியாகப் பன்னிரண்டு மணிக்கு ஆகும். அப்போது அவருக்கு 51-ஆம் வயது நடந்துகொண்டிருந்தது.

தாம் நிறுவிய வடலூர் சத்திய ஞானசபையை, என்ன மனவிரக்தி காரணமாகவோ தாமே பூட்டிவிட்டு நான்காண்டுக் காலம் சித்திவளாகத்திலேயே கடைசிக் காலத்தைக் கழித்து வந்தார் இராமலிங்க அடிகளார். தைப்பூச நாளன்று மட்டும் அவர் சத்திய ஞானசபைக்கு வந்துபோய்க் கொண்டிருந்தார். அதே நேரத்தில், திங்கள் தோறும் பூசநட்சத்திரத்தில் ஞானசபைத் தரிசனம் நடக்க வகைசெய்திருந்தார் 'மரணமிலாப் பெரு வாழ்வில் வாழ்ந்திடலாம் கண்டீர் புனைந்துரையேன் பொய்புகலேன் சத்தியஞ்சொல் கின்றேன்'

- என்ற தம் சொல்லுக்குத் தாமே எடுத்துக் காட்டாகிவிட்ட அவரது மறைவுக்குப் பின் - அடிகளாரின் அடியார்கள் . அவர் விட்டுச் சென்ற தத்துவார்த்தங்களை வளர்க்கப் பாடுபடவில்லை. இதனாலேயே சன்மார்க்க சங்கமும் பலவீனம் அடைந்தது.

வள்ளலார் வையப் புகழ்பெறக் காரணமாக இருந்த வடலூர் பற்றி, அந்நாளில் தென்னார்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்த ஜே.எச். கார்டின்ஸ் எம்.சி.எஸ். என்பார் எழுதிய 'தென்னார்க்காடு மாவட்ட மானுவல்' எனும் நூலின் 316, 317 ஆகிய இருபக்கங்களில் அடிகளாரைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். அச்செய்திகளில் சில வருமாறு:

'இராமலிங்கப் பரதேசி, யாவரும் வியக்கத்தக்க வகையில் வாழ்ந்த சித்தர்களில் ஒருவராவார்; அவரை அவருடைய சீடர்கள் கடவுள் போலவே மதித்துப் போற்றினார்கள்.

''...இராமலிங்கப் பரதேசி தமது சீடர்களிடம், மாண்டவர்களும் மீண்டும் உயிர்த்தெழலாம் என்று உபதேசித்து வந்தார். இறந்த உடலை எரிப்பதை விடப் புதைப்பதே நல்லதென்றார்...

''...1874-இல், கருங்குழியைச் சேர்ந்த குக்கிராமமான மேட்டுக்குப்பத்தில், அவர் ஓர் அறைக்குள் புகுந்துகொண்டு வெளியே தாளிடச் செய்திருக்கிறார். அவ்வறையைத்தான் சமாதி அல்லது தியானத்திற்காக அவர் பயன்படுத்துவது வழக்கமாம். அந்த அறையைச் சில காலத்திற்குத் திறக்கக் கூடாது எனத் தம் அடியார்களுக்கு அவர் கட்டளையிட்டார். அன்றிலிருந்து அவர் காணாமல் போய்விட்டார். அந்த அறை இன்னமும் பூட்டியே கிடக்கிறது. அவருடைய சீடர்கள் அவர் கடவுளுடன் ஐக்கியமாகிவிட்டார் என்றும், காலம் வந்ததும் அவர் மீண்டும் தோன்றுவார் என்றும் நம்புகிறார்கள்...''



- இவ்வாறு அந்த ஆங்கிலேய மாவட்ட ஆட்சித் தலைவரே அடிகளாரைப் பற்றிச் சிறப்புற எழுதியுள்ள குறிப்பு, ஆழ்ந்து நோக்கத் தக்கதாகும்.

மனுமுறை கண்ட வாசகம், ஜீவகாருண்ய ஒழுக்கம் ஆகிய இரண்டு நூல்கள் வடலூர் இராமலிங்க அடிகளாரால் இயற்றப்பட்டவை, இவைமட்டுமல்ல; ஒரே இரவில், 1596 அடிகளைக் கொண்டதாக அடிகளார் எழுதிய 'அருட்பெருஞ்சோதி அகவல்' என்னும் நூலே சன்மார்க்க சங்கத்தாரின் பொதுமறை என்று கருதப்படுகிறது.

ஒழிவிலொடுக்கம், தொண்டை மண்டலச் சதகம், சின்மய தீபிகை ஆகிய நூற்கள் அவரால் பதிப்பிக்கப்பட்டன. அவற்றின் மூலமே - மேலும் 23 நூற்கள் எழுதி விரைவில் வெளியிடவிருப்பதாக அவரால், அறிவிக்கப்பட்டிருந்தது.

திருவருட்பா ஆறுதிருமுறைகளிலும் சேராத சில பாடல்களும் அடிகளாரால் அவ்வப்போது அருளப்பட்டன. மொத்தத்தில், அவர் பாடியவற்றுள் ஆறாயிரம் பாடல்களே நமக்குக் கிடைத்துள்ளன. சுத்த சன்மார்க்க சங்கம் (1865), சத்திய தருமசாலை (1867), சத்திய ஞானசபை (1872), சித்தி வளாகம் (1870) ஆகிய நான்கு தெய்வீக அமைப்புகள் நம் வடலூர் இராமலிங்க அடிகளாரால் நிறுவப்பட்டன.

ஏமசித்தி, சாகாக் கல்வி, தத்துவ நிக்கிரகஞ் செய்தல், கடவுள் நிலையறிந்து அம்மயமாதல் - ஆகிய நான்கு நெறிகள் அடிகளாரால் கற்பிக்கப் பட்டன.

இந்திரிய ஒழுக்கம், ஜீவ ஒழுக்கம், கரண ஒழுக்கம், ஆன்ம ஒழுக்கம் என்ற நால்வகை ஒழுக்கங்கள் அவரால் வலியுறுத்தப்பட்டன.

அன்னாரின் மந்திரச் சொற்களான -

'அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

- என்கிற வள்ளலாரின் அற்புதச் சொற்கோவை, அகிலமெங்கும் போற்றிப் புகழப் பெற்று, பக்திப் பரவசத்தோடு இன்னமும் இனிமையோடு உச்சரிக்கப்படுகிறது. ●

# காது மூக்கு தொண்டை மருத்துவம்






டாக்டர்
கே.கே. இராமலிங்கம்
பதில்கள்

**பி. கர்ணன்**
**கவரப்பட்டு**

**● எட்டாம் வகுப்பு படிக்கும் என் வயது 13. ஒரு தடவை கொஞ்சம் உரத்த குரலில் கத்தினாலே தொண்டை கம்மிவிடுகிறது; இந்த என் துன்பம் நீங்க வழிகூறுங்கள் டாக்டர்?**

"உரக்கக் கத்தினாலே தொண்டை கம்மிவிடுகிறது என்றால், குரல் வளையில் (Vocal cord) சிறுசிறு கட்டிகள் ஏற்படுவதே அதற்குக் காரணம். ஆகையால் நீங்கள் உரத்த குரலில் பேசாதிருக்கப் பழகுங்கள். ஒருவேளை அதனால் உங்கள் குரல் பாதிக்கப்படுமானால், அவ்வாறான காலத்தில் இரண்டு மூன்று நாட்கள் மௌன விரதம் இருங்கள் - சரியாகிவிடும்."

**வி. சுப்பிரமணியன்,**
**கீழகுண்டால்**

**● சுமார் 2 ஆண்டுகளாக எனக்குச் சரியாகக் காது கேட்பதில்லை; எப்போதும் அடைத்துக் கொண்டது போலவே இருக்கிறது. மூக்கை அடைத்து 'தம்' பிடித்தால், அதன் பிறகு சிறிது நேரம் காதில் விழும்; பிறகு மறுபடி பழைய மாதிரியே ஆகிவிடும். நிரந்தரமாக நன்றாகக் காது கேட்க என்ன செய்ய வேண்டும் டாக்டர்?**

"ஒரு சிறு அறுவைச் சிகிச்சையின் மூலம் உங்கள் காதின் செவிப்பறையில் சிறியதோர் Tube-ஐப் பொருத்தி, உங்களுடைய குறையை நிரந்தரமாகப் போக்கிவிடலாம். காது மருத்துவம் இப்போது நிறைய முன்னேறியிருக்கிறது."

**எம். ரேகா**
**தஞ்சாவூர்**

**● எனக்குத் தம்பி பிறந்த பிறகு, என் அம்மாவுக்கு அடிக்கடி விக்கல் ஏற்படுகிறது. அந்த விக்கல் உரத்த குரலில் நீண்ட ஒலியோடிருப்பது என்னவோ போலிருக்கிறது. இது ஏன் - எப்படி இதை நிறுத்துவது டாக்டர்?**

"ஒருவகையான மனநோய் உள்ளவருக்குத்தான் இப்படிப்பட்ட விக்கல் ஏற்படும். ஆனாலும் விக்கலுக்குப் பல காரணங்கள் இருக்கின்றன. எதற்கும் தகுந்த மருத்துவ நிபுணரைப் பார்த்து நீங்கள் ஆலோசனை பெறவும்."

**பி. தங்கவேல்**
**திருச்சி**

**● சிலருக்குப் பிறவியிலேயே காது கேளாமல் இருக்கிறது; சிலருக்குப் பாதியில் காது செவிடாகிறது; இது எதனால்? சில சாமியார்கள் இதைக் குணப்படுத்துவேன் என்கிறார்களே; நம்பலாமா?**

"விதை நல்லதாக இருந்தால் செடி நல்லபடி வளரும் அல்லவா? அதே போல ஆண் கருவும் பெண் கருவும் தக்கபடி எந்தக் குறையுமின்றிக் கலந்தே ஒரு பெண் கர்ப்பமாகிறாள்; பிறகு குழந்தை நல்லபடி பிறந்து நல்லபடி வளர்க்கிறது. கருவில் குறையிருந்தால், பிறக்கும் குழந்தையும் ஏதாவது குறையுடையதாகவே பிறக்கும். கணவன் மனைவியாகிய ஆணும் பெண்ணும் மிகமிக நெருக்கமான உறவு முறையினர்களாக இருந்தல் - அதாவது பரம்பரை பரம்பரையாகத் திரும்பத் திரும்ப நெருங்கிய சொந்தத்திற்குள்ளேயே கொள்ளல் கொடுத்தல் நிகழ்ந்திருக்குமானால், அவர்களுக்குப் பிறக்கும் குழந்தை, நீங்கள் சொல்லுவதுபோலச் செவிடாகப் பிறக்க வாய்ப்பு உண்டு.

"கருத்தரித்த பெண்மணி, முதலாவது மூன்று மாதத்திற்குள் - 'எக்ஸ்-ரே' பிடித்துக் கொள்ளுவதோ, கடுமையான மருந்துகள் சாப்பிடுவதோ கூடாது; அப்படிச் செய்தாலும் பிறவியிலேயே குழந்தை செவிடாக இருக்க வாய்ப்பு உண்டு.

"அல்லது உட்கொள்ளும் மருந்து ஒவ்வாமையாலும் இப்படி ஏற்படக் கூடும்.

"காது செவிட்டைப் போக்க சாமியார்களால் நிச்சயம் முடியாது என்பது என் கருத்து. அவர்கள் முறையின்றித் தரும் கண்ட மருந்துகளால், தொல்லை ஒருவேளை அதிகமானாலும் ஆகக்கூடும்; எச்சரிக்கையாகக் காதைக் கவனியுங்கள். சாமியார்களால் காதைக் கெடுத்துக் கொண்டு வந்த பல நோயாளிகளுக்கு நான் சிகிச்சையளித்திருக்கிறேன்.

**எஸ். சண்முகசுந்தரம்,**
**திருவில்லிபுத்தூர்**

**● எனக்கு வயது 65 ஆகிறது. 20 ஆண்டுகளாகக் காதில் 'நொய்ங்' என்று சப்தம் கேட்டுக் கொண்டே இருக்கிறது; காதும் சரியாகக் கேட்பதில்லை; என்ன செய்வது?**

"ஆண்களைப் பொறுத்தவரையில், பொதுவாகவே 60 வயதுக்கு மேல் செவியொலி மங்குவது இயல்புதான். ஆனால் நீங்களோ கடந்த 45 வயதிலிருந்தே இப்படி இருக்கிறது என்கிறீர்கள். இரத்த அழுத்தம், சர்க்கரை வியாதி இருந்தால் கூட, ஒருவருக்கு இவ்வாறான பாதிப்பு ஏற்படக் கூடும்; ஆகையால் இதற்காக நீங்கள் ஒரு பொது மருத்துவரிடம் (எம்.டி.) பரிசோதித்துக் கொள்ளுங்கள். முடிந்தவரையில் அனாசின் போன்ற காதின் கேட்பு உணர்வைப் பாதிக்கும் மருந்து மாத்திரைகளை அடிக்கடி உட்கொள்ளுவதைத் தவிர்ப்பது நல்லது."

**எஸ். திருநாவுக்கரசு**
**சென்னை-82**

**● காதில் ஈ, எறும்பு போன்ற சிறு பூச்சிகள் புகுந்துகொண்டால் என்ன செய்ய வேண்டும்?**

"அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் தலையைச் சாய்த்து வைத்து, காதில் சிறிதளவு தண்ணீர் விட்டாலே போதும் - அது உயிருடனோ, இறந்தோ வெளியில் வந்து விடும்; வராத பட்சத்தில் வேண்டுமானால் டாக்டரிடம் காட்டலாம். குச்சியை விட்டோ அல்லது ஹேர்பின்னை விட்டோ அதற்காகக் காதைக் குடையக் கூடாது."

**கே. ரவி**
**உதகை**

**● என் வயது 10, காதுகளின் கீழ்ப்புறம் அடிக்கடி வெடிப்பு (Cut) ஏற்படுகிறது; தேங்காய் எண்ணெய் தடவினால் சரியாகிவிடுகிறது; இப்படி எதனால் வருகிறது - இதற்குத் தகுந்த நிவாரணம் பெற நல்ல மருந்து என்ன?**

"நீ சொல்லுவதை வைத்துப் பார்த்தால் உனக்கு உள்ளது ஒரு வகை எக்சீமா (Eczema) நோய் போலத் தெரிகிறது. தேங்காய் எண்ணெயைவிடச் சிறந்த Ointmentகள் பல இப்போது வந்திருக்கின்றன. அப்படி வெடிப்பு உள்ளபோது சரியான தோல் வைத்தியரிடம் காட்டிக்கொள், இதில் அலட்சியம் காட்டக்கூடாது; ஏனென்றால் - இப்படி உண்டாகிற வெடிப்பு சிலருக்கு தோல் தொடர்பான தொழுநோய் அல்லது காச நோயாகவும் இருக்கலாம்.

**சண்முகசுந்தரம்**
**மதுரை**

**● மூக்கில் சைனஸ் தொந்திரவால் மூக்கெலும்பு உடைப்பு (Puncturing) வைத்தியம் செய்யப்பட்டது. ஒரு தடவை இந்த அறுவைச் சிகிச்சை செய்து கொண்டால் போதுமா? அடிக்கடி செய்து கொள்ள வேண்டுமா? இந்த அறுவைச் சிகிச்சையால் பிற்காலத்தில் ஏதாவது பிரச்சினை ஏற்படுமா?**

"ஒருமுறை இதற்காக Puncture செய்துகொண்டால், பிறகு அடிக்கடி செய்துகொள்ள வேண்டும் என்று பாமர மக்களிடையே ஒரு கருத்து பரவலாக நிலவுகிறது. அது தவறு. தகுந்த காரணம் இருக்கும் போது ஒரு தடவை Puncturing operation செய்து கொள்ளுவதே போதுமானது. திரும்பத் திரும்பச் செய்து கொள்ளத் தேவையில்லை. பிற்காலத்தில் அதனால் எவ்விதக் கெடுதல் ஏற்படவும் வழியில்லை."



**கதிரவன்**
**சென்னை**

**● தலைகுளித்த பிறகு காதில் அடைத்துக் கொண்டு அரிக்கிறது; ஏன் இப்படி? இதற்கு என்ன செய்யலாம்?**

"தலை குளிக்கும்போது, காதில் தண்ணீர் புகாமல் பார்த்துக்கொள்ளுவது தான் இதற்குச் சரியான வழி."

**ராகி**
**சென்னை-4**

**● நீண்டநேரம் காதில் நமைச்சல் இருப்பதால், குச்சிபோன்றவற்றால் குடைந்துகொண்டே இருக்க நேரிடுகிறது. இப்படி ஒரு வருடமாக உள்ளது. காதும் சில சமயம் வலிக்கிறது. என்ன செய்வது டாக்டர்?**

"எப்போதாவது, என்ன காரணத்தாலாவது காதில் அரிப்பு ஏற்பட்டுச் சிறிது நேரம் குச்சியால் குடைந்திருப்பீர்கள்; சுகமாக இருந்திருக்கும்; ஆகவே தொடர்ந்து அதே போல் செய்து வருகிறீர்கள் போல் தெரிகிறது. காதில் குச்சி விட்டுக் குடைந்தால் வலிக்கத்தான் செய்யும். அப்படிக் குடைவதே காது கெட முக்கியக் காரணம்.

"குச்சி நுனியில் பஞ்சைச் சுற்றி அதன் மூலம் நவீன முறையில் காது குடைகிற பழக்கமும் ஆபத்துதான்; இவ்வாறெல்லாம் குடைவதால் காதின் உட்புறம் புண்ணாகி, சீழ் பிடிப்பது போன்ற மோசமான விளைவுகள் ஏற்படக்கூடும்.

"காதில் அழுக்கெடுப்பது என்

கிறார்களே? அப்படி செய்வதும் தவறுதான். ஆகையால், காது குடையும் வழக்கத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக விட்டுவிடுங்கள்; அது தான் உங்களுக்கு நல்லது.''

**கே. சரவணபவன்**
**திருப்பத்தூர்**

**● குழந்தைகளுக்குத் திடீரென்று மூக்கில் இரத்தம் வருகிறது. இதை 'சில்லி மூக்கு உடைதல்' என்கிறார்கள். கிராமத்தில், வராட்டியை நுணுக்கி உறிஞ்சச் சொல்லுகிறார்கள். சரியாகிவிடுகிறது. இது என்ன நோய்? இதற்குச் சிகிச்சை என்ன?**

''சிறு குழந்தைகளுக்குத் தொடர்ந்து சளி பிடித்தால், அப்படி சிறிதளவு எப்போதாவது இரத்தம் வரக்கூடும். அப்போது மட்டும் கொஞ்ச நேரம் மூக்கை அழுத்திப் பிடித்துக் கொண்டிருந்தாலே அது தானாக நின்று விடும். அல்லது சிறிது பஞ்சை வைத்துக் கொண்டிருந்தாலும் இரத்தம் நின்றுபோய் விடும். அப்படி வருவது குழந்தை வளர வளரச் சரியாகிவிடும்.

''ஆனால் அதற்காக வராட்டி போன்றவற்றை நுணுக்கிப் போட்டால் டெடானஸ் (Tetanus) போன்ற உயிருக்கு ஆபத்தை உண்டாக்கக் கூடிய நோய்கள் வரவும் வழியுண்டு, ஜாக்கிரதை.''



**ஜே.எம். கன்னிமேரி**
**சென்னை**

**● என் மகன் சிறுவன்; அடிக்கடி சளி பிடித்து மூக்கடைப்பு ஏற்படுகிறது. அப்போது ஒரு மிளகை ஊசி நுனியில் குத்தி, விளக்கில் கருக்கிப் புகையை உறிஞ்சினால் சரியாகி விடும். இப்படிச் செய்தால் ஏதாவது தொந்தரவு ஏற்படுமா?**

''அது நல்லதல்ல. ஆகையால் உங்கள் மகனை அப்படி செய்து பழக்கிவிடாமல் பார்த்துக்கொள்ளுங்கள்; அடுத்த முறை சளி பிடித்தால், தகுந்த டாக்டரிடம் காட்டி மருந்து வாங்கிக் கொடுங்கள்; அதுதான் நல்லது.''

**இ. ராகவன்**
**சென்னை**

**● ''காதில் புண் மற்றும் வலி ஏற்பட்டால் என்ன செய்யலாம்?**

''அப்படியெல்லாம் ஏற்படப் பலவிதமான காரணங்கள் இருக்கின்றன; ஆகவே ஒரு சிறந்த டாக்டரிடம் காட்டலாம்.''

**சி. செல்வகுமார்**
**சத்தியமங்கலம்**

**● என் இரண்டு காதுகளிலும் அடிக்கடி சீழ் வருகிறது. நாற்றமடிக்கிறது, காதும் சரியாகக் கேட்பதில்லை; என்ன மருந்து போடலாம்? சில சாமியார்கள் இதைச் சரிப்படுத்தி விடுவேன் என்கிறார்களே, அதை நம்பி வைத்தியம் செய்து கொள்ளலாமா?**

''இதே அடிப்படையில் உள்ள கேள்விகளை - ஊத்தங்கரை வி. செல்வம், வேம்பூர் எஸ். இராதாகிருஷ்ணன், அனுப்பப்பட்டு டி. கண்ணன், புதுவை சி. வத்சலா உள்ளிட்ட பலரும் கேட்டிருக்கிறார்கள், அனைவருக்கும் பொதுவான விடை இது தான்:

''இதற்கு - காதின் உட்புறப் பகுதியில் ஏதோ பெரிய அளவிலான பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது என்று பொருள். மிகவும் ஆபத்தான நிலைமை இது. காதில் சீழ் வந்தாலே துர்நாற்றம், வலி, செவி கேளாமை, அவ்வப்போது மயக்கம், முக வீக்கம் ஆகிய எல்லாத்துன்பமும் இருக்கும். இந்தப் பாதிப்பிற்கு ஆளானவர்கள் கண்ட மருந்தையும் மாற்றி மாற்றித் தாமாகப் போட்டுக் குணம் பெற முடியாது; காது தொடர்பான திறமை மிக்க டாக்டரிடம் காட்டி அறுவைச் சிகிச்சைச் செய்து கொண்டால்தான் பரிபூரணமாக இந்தத் தொல்லையிலிருந்து நீங்கள் விடுபடமுடியும்.

''இதில் அலட்சியமாக இருந்தால், அந்தச் சீழானது நாளடைவில் மூளைக்கும் உங்களை அறியாமலே பரவக்கூடும். அப்படி நேருமானால், மூளைக் காய்ச்சல் கண்டு உயிருக்கே ஆபத்து நேரிடவும் வாய்ப்பிருக்கிறது.

''கைதேர்ந்த அறுவைச் சிகிச்சை நிபுணர் மூலம் மட்டுமே, நிரந்தரமாக இதைக் குணப்படுத்த முடியும். பச்சிலை வைத்தியம், சாமியார் மந்திரம் மூலமாக எல்லாம் காதிலிருந்து சீழ் வருவதை அத்தனை எளிதாக நிறுத்திவிட முடியாது என்பது என் அழுத்தமான கருத்தாகும்.''

**—இன்னும் வரும்...**



தென்னார்க்காடு மாவட்டத்தில்



# ஆதி திராவிடர்-பழங்குடியினர் நலம்

**திரு எம். ஆனந்தன்**
**மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர்**

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் வாழ்க்கைத் தரமும் வாய்ப்பும் வசதிகளும் பெருகுவதற்குத் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பல்வேறு திட்டங்களை முனைப்புடன் செயல்படுத்தி வருகிறார்கள்.

1991-ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகை 5.56 கோடி. இதில் ஆதி திராவிடர் 1.07 கோடியும், பழங்குடியினர் 5.74 இலட்சமும் ஆவர். மொத்த மக்கள் தொகை சுமார் 5-இல் ஒரு பங்குள்ள இப்பிரிவு மக்களின் முன்னேற்றத்தில் சிறப்புக் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பது டாக்டர் புரட்சி தலைவி அரசின் கொள்கையாகும்.

தமிழகத்தின் வரலாற்றில் தென்னார்க்காடு மாவட்டம் மிக முக்கியமான ஒரு இடத்தை வகிக்கிறது என்பதை நாம் அறிவோம். அனைத்து மாவட்டங்களையும் விட தென்னார்க்காடு மாவட்டத்தில்தான் ஆதி திராவிடர் சமுதாயத்தினர் அதிகம் வாழ்கின்றனர்.

1991-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி இம்மக்களின் எண்ணிக்கை 13.23 இலட்சம் ஆகும். அதேபோல இம்மாவட்டத்தின் கள்ளக்குறிச்சி வட்டம் கல்வராயன்மலையில் பழங்குடியினர் அதிகமாக வசிக்கின்றனர். அவர்களின் எண்ணிக்கை சுமார் 58,000. சமுதாயத்தின் அடித்தளத்தில் வாழும் இம்மக்களின் வாழ்க்கை நிலை உயர பாடுபட்ட பல பெரியோர்கள் இம் மாவட்டத்தில் இருந்திருக்கிறார்கள்.

அறுபத்து மூன்று நாயன்மார்களில் திரு நாளைப்போவாரின் வரலாற்றைக் கோபால கிருஷ்ண பாரதியார் 'நந்தன் சரித்திரக் கீர்த்தனைகளாகப்' பாடிப் புகழ் சேர்த்துள்ளார் என்பதை நாம் அறிவோம். நந்தனார் 'சிதம்பர தரிசனத்தை'த் தன் வாழ்நாளில் குறிக்கோளாகக் கொண்டிருந்ததும், இறுதியாகப் பல இன்னல்களைக் கடந்து அதை அவர் எய்தியதும் பக்தி வரலாற்றில் அழியா இடத்தைப் பெற்றவை. அத்தகைய சிறப்புப் பெற்ற தலமாகிய தில்லையம்பதியுடன், வரலாற்றில் நீங்கா இடம் பெற்றிருக்கும் மாவீரன் தேசிங்குராஜன் வாழ்ந்த செஞ்சியும் இம்மாவட்டத்தின்கண்ணே உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. 'அருட்பெருஞ்சோதி தனிப் பெருங் கருணை' என்ற ஆன்மிக தாரக மந்திரத்தை உலகுக்கு அளித்த இராமலிங்க வள்ளலார் பிறந்த பதியும் அவரால் நிறுவப்பட்ட அறக் கோயில் என்ற சிறப்பைப் பெற்றுத் திகழும் வடலூரும் இம்மாவட்டத்தில்தான் உள்ளன!

தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சிக்கு எடுத்துக் காட்டாகத் திகழும் நெய்வேலியும், அறிவுக் கோயிலாகத் திகழும் அண்ணாமலைப் பல்கலைக் கழகமும் இம்மாவட்டத்தில்தான் இருக்கின்றன.



## அடுத்த இதழில்...

- **சென்னையில் அமைக்கப்படவுள்ள அம்பேத்கர் நூற்றாண்டு விழா நினைவு மண்டப அடிக்கல் நாட்டு விழாவில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை.**
- **சென்னைத் தரமணியில் எம்.எஸ். சுவாமி நாதன் ஆராய்ச்சி நிறுவனத் தொடக்க விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை.**

**—மற்றும்-**

- **தென்னார்க்காடு மாவட்ட வளர்ச்சிப் பணிகள் குறித்த கட்டுரைகள் - சுவையான தகவல்கள் முதலியன இடம் பெறுகின்றன.**

**படிக்க — பயன்பெற — பாதுகாக்க**

எல்லாவற்றிற்கும் மேலாக அண்மைக் காலம் வரை நம்மிடையே இருந்து மறைந்த சுவாமி சகஜானந்தா பற்றியும் இங்கு நாம் நினைவுகூருவது சாலப் பொருத்தமாகும். சிறந்த கல்விமானாகவும், மிகப் பெரிய சுதந்திரப் போராட்ட வீரராகவும் விளங்கிய சுவாமிகள் சமுதாயத்தின் அடித்தளத்து மக்களான ஆதி திராவிடர்களின் அறிவுக் கண்களைத் திறக்க வேண்டும் என்ற நோக்கோடு நிறுவிய நந்தனார் கல்வி நிலையங்கள் இன்று அருகுபோல் வேர்விட்டு ஆல் போல் தழைத்து சுமார் 4,000 மாணவ மாணவியர் பயிலும் நந்தனார் மேல்நிலைப் பள்ளிகளாகச் சிறந்து விளங்குவதை இன்று நாம் கண்ணாரக் காண்கிறோம்.

### வளர்ச்சித் திட்டங்கள்

இத்தகைய சிறப்புப் பெற்ற தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் நலனுக்காக டாக்டர் புரட்சித் தலைவியின் அரசு பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. அவை யாவை என இப்போது காண்போம்.

### கல்வி வளம்

வறுமை ஒழிப்புக்கு முதல்படி அறியாமை ஒழிப்பே, அதாவது கல்வி வளம் பெருகுதலே, மகாகவி பாரதியார் -

'அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
அன்னயாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக் கெழுத்தறிவித்தல்...''

- என்று பாடியிருக்கிறார். இதனைக் கருத்தில் கொண்டு இந்த அரசு அனைத்துத் திட்டங்களிலும் முதன்மையானதாகக் கல்விக் கண் திறப்பதையே கருத்தாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.



இம்மாவட்டத்தில் நந்தனார் ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப் பள்ளிகள் உட்பட ஏழு மேல்நிலைப் பள்ளிகளும், ஏழு உயர்நிலைப் பள்ளிகளும், 6 நடுநிலைப் பள்ளிகளும், 216 தொடக்கப் பள்ளிகளும் நடத்தப்பட்டு வருகின்றன ஆதி திராவிடர் மக்களின் தொழிற் கல்விக்காக ஒரு தொழிற் பயிற்சி நிலையமும் சிதம்பரத்தில் இயங்கி வருகிறது. இத்துடன் 78 மாணவர் விடுதிகளும், 29 மாணவியர் விடுதிகளும் இயங்கி வருகின்றன.

தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் பொறுப்பேற்றவுடன் இம்மாவட்டத்திற்கு மொத்தம் 21 விடுதிகள் வழங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இவற்றின் மூலம் ஆதி திராவிடர் மாணவ மாணவியர் இலவச உணவு, உறைவிட வசதிகளைப் பெற்று வருகிறார்கள். மாணவ மாணவியர் பயன்பெறும் வண்ணம் அனைத்து விடுதிகளிலும் நூலகங்களைத் திறந்த பெருமை மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அவர்களையே சாரும்.

இத்துறை நடத்திவரும் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியருக்கும் மற்ற பொதுப் பள்ளிகளில் பயிலும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ மாணவியருக்கும் பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், சிலேட்டுகள் ஆகியவை இத்துறையினரால் இலவசமாக வழங்கப்படுகின்றன. இதற்காக இவ்வாண்டு சுமார் ரூ.62 இலட்சம் விடப்பட்டுள்ளது. இம்மாணவ மாணவியருக்கு இலவசமாக ரூபாய் 45 இலட்சத்தில் சீருடைகளும் வழங்கப்பட்டுள்ளன.

பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் பயிலும் ஆதி திராவிடர் பழங்குடியின மாணவ மாணவியரின் நலனுக்காகக் கல்வி உதவித் தொகைகள் வழங்குதல் உள்ளிட்டு இவ்வரசினால் இவ்வாண்டு சுமார் ஒரு கோடியே இருபத்தி மூன்று இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

### கல்வி ஊக்கத்தொகை

இவை மட்டுமல்லாது, பள்ளிப் பொதுத் தேர்வுகளில் சிறப்புடன் மதிப்பெண்கள் பெறும் மாணவர்க்கும், அதிக மதிப்பெண்கள் பெறுவதற்குப் பாடுபட்ட பாட ஆசிரியருக்கும், தேர்வு விழுக்காட்டினை அதிகமாகப் பெறும் தலைமை ஆசிரியர்களுக்கும் ஊக்கப் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

*1992-93-இல் செயல்படுத்தப்பட்ட வீட்டு வசதி மற்றும் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள்:*

**மனிதனுக்கு உறைவிடம் மிக அத்தியாவசியம் என்ற உண்மையை உணர்ந்து ஆதி திராவிடர் குடும்பத்தினருக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படுகின்றன. இவ்வகையில் 1992- 93-ஆம் ஆண்டில் இம்மாவட்டத்திற்கு 10,000 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குவதற்**காக ரூ.70 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் ஆதி திராவிடர் வாழும் குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதிக்காக இவ்வாண்டு ரூ.2.30 இலட்சம் செலவழிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்தில் உள்ள எந்த ஒரு ஆதி திராவிடர் குடியிருப்பும் இடுகாடு மற்றும் இடுகாட்டுக்குப்போகும் பாதை வசதியில்லாமல் இருக்கக் கூடாது என்று ஆணைப் பிறப்பித்து, அதற்குத் தேவையான நிதியும் ஒதுக்கியுள்ளதன் அடிப்படையில் இம்மாவட்டத்தில் சென்ற ஆண்டு இடுகாட்டுப் பாதை வசதிக்காக ரூ.2 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின் ஒரு பகுதியாக 190 பேருக்குச் சலவைப் பெட்டிகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

காலணிகள் செய்யும் தொழிலில் ஈடுபட்டுள்ள மக்களுக்காகப் பெட்டிக்கடை (Petty shops) அளிக்கும் பணிக்காக இவ்வாண்டு 200 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டுள்ள இவ்வின மக்களுக்கு உழவு மாடுகள் வாங்குவதற்காக இம்மாவட்டத்திற்கு இவ்வாண்டு ரூ.2.72 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதனால் 181 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் பயன் பெறுவர்.

### பழங்குடியினர் நலம்

இம்மாவட்டத்தில் உள்ள கல்வராயன் மலையில் உள்ள மலையாளி என்னும் பழங்குடியின மக்கள் ஒரு காலத்தில் ஜாகிர்தார்களிடம் கொத்தடிமைகளாய்ப் பிணைத் தொழிலாளர்களாய்ப் பணிபுரிந்தனர். ஆனால், தற்போது அவர்கள் அரசின் முயற்சியினால் கொத்தடிமைப் பிணைப்பிலிருந்து விடுபட்டு மற்றவர்களைப் போலவே சுதந்திரக் குடிமக்களாக வாழ்கின்றனர். அவர்களது சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்காக ஒருங்கிணைந்த பழங்குடியினர் வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பட்டு வளர்ப்பு, வேளாண்மை, பழத் தோட்டம், கால்நடைப் பராமரிப்பு, சுகாதாரம், நெடுஞ்சாலை போன்ற பல்வேறு துறைகளின் ஒருங்கிணைந்த முயற்சியுடன் பல சிறப்புப் பணிகள் கல்வராயன் மலையில் செயல்பட்டு வருகின்றன: இதன் பலனாக இங்கு வாழும் பழங்குடி மக்களின் வாழ்க்கைத் தரத்தில் பெரியதொரு மாற்றம் தெரிகின்றது.

பழங்குடியினர் கல்வி வளர்ச்சிக்கு இம்மாவட்டத்தில் 29 உண்டுறைவிடத் தொடக்கப் பள்ளிகளும், 5 உண்டுறைவிட நடுநிலைப் பள்ளிகளும், ஒரு உண்டுறைவிட மேல்நிலைப் பள்ளியும் செயல்பட்டு வருகின்றன. கள்ளக்குறிச்சி வட்டம் சங்கராபுரத்தில் பழங்குடி மாணவர்களின் நலனுக்காக ஒரு சிறிய தொழிற் பயிற்சி நிலையமும் நடத்தப்படுகிறது. இவற்றின் மூலம் பழங்குடியினரிடையே கல்வி மறுமலர்ச்சி வேகமாகப் பெருகி வருவதை நாம் அறிய முடிகிறது.

### தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம்:

தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் மூலமாகச் சுய தொழில் வேலை வாய்ப்புத் திட்டம், விவசாயம் மற்றும் அதைச் சார்ந்த திட்டங்கள், இதர பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் ஆகியவையும் செயல்படுத்தப்படுகின்றன. சென்ற ஆண்டு இம்மாவட்டத்தில் இவற்றின் மூலம் சுமார் 20,000 ஆதி திராவிடர் குடும்பங்கள் பயன் அடைந்துள்ளனர். அவற்றிற்காக ஏறக்குறைய ஒரு கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

இவற்றோடு, ஆதிதிராவிட மக்களின் பொருளார்தார மேம்பாட்டிற்கென, மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவியின் ஆணையின்படி இம்மாவட்டத்தில் பட்டுப்பூச்சி வளர்ப்புத் திட்டம், இறால் வளர்ப்புத் திட்டம் ஆகியவையும் மேற்கொள்ளப்பட உள்ளன.

இத்தகைய திட்டங்களைச் செயல்படுத்தி வருவதன் மூலம் ஆதி திராவிடர், பழங்குடியினர் போன்ற நலிந்த பிரிவினரின் வளர்ச்சிக்காக மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவியின் கீழ் இவ்வரசு அயராமல் பாடுபட்டு வருகிறது என்பதை நாம் தெரிந்துகொள்ளலாம்.

### 'தமிழரசு' அச்சகத்தில் அச்சுக் கோத்தல் மற்றும் இயந்திரங்கள் பிரிவு மேம்படுத்தல்:

**அச்சுக்கோத்தலை நவீனப்படுத்துவதற்காகவும், அச்சு எழுத்துக்களைப் புதிய வடிவமைப்புகளுடன் மேம்படுத்தவும் ரூ.4 இலட்சம் செலவில் (Desk Top Publishing System) டெஸ்க் டாப் பப்ளிஷிங் சிஸ்டம் என்ற நவீனக் கருவி ஒன்று நிறுவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.**

**அச்சு இயந்திரங்களைச் சுத்தப்படுத்தும் வேலைப் பளுவைக் குறைக்கும் வகையிலும், நேரத்தை மிச்சப்படுத்துவதோடு இயந்திரங்களை நல்ல முறையில் சுத்தம் செய்யும் வகையில் ரூ.30 ஆயிரம் செலவில் தானியங்கி டேம்ப்பர் ரோலர் கிளீனிங் மெஷின் (Automatic Damper Roller Cleaning Machine) ஒன்று 1993-94-ஆம் ஆண்டில் நிறுவப்படவுள்ளது.**

**'தமிழரசு' இதழின் சந்தாதாரர்களின் முகவரிகளைத் தொகுத்து நிர்வாகத்திற்கு உதவிட ரூ.1 இலட்சம் செலவில் புதிய கணினி வாங்க முடிவு செய்யப்பட்டது.**

**—மாண்புமிகு முதல்வர்**

விளம்பர எண். 14/93

தமிழ்நாடு பொது சார்நிலைப் பணியில், திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி தொழில்நுட்பப் பயிற்சி நிலையத்தில் படத்தொகுப்பு உதவி விரிவுரையாளர் (Assistant Lecturer in Editing) பதவியில் ஒரு காலியிடத்திற்கு நேரடித் தேர்வின் மூலம் நியமனம் செய்ய விண்ணப்பங்கள் 3.5.1993 அன்று மாலை 5.45 மணி வரையில் வரவேற்கப்படுகின்றன. (நியமன ஒதுக்கீட்டு விதி இத்தெரிவிற்குப் பொருந்தாது.)

**குறிப்பு:** இப்பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளைப் பெற்றிருந்து, குறைந்தபட்ச மதிப்பெண்களைப் பெறுவதன் மூலம் தெரிவுக்குத் தகுதியானவராகக் கருதப்படும் ஆதரவற்ற விதவை அவரைவிட அதிக மதிப்பெண்களைப் பெற்றிருப்பவர்களைக் காட்டிலும் முன்னுரிமை வழங்கப்பட்டுத் தெரிவு செய்யப்படுவார்.

**விளக்கம்:** 'ஆதரவற்ற விதவை' என்பது, வாழ்வதற்குத் தனக்கென்று எந்தவொரு வழியும் இல்லாதவரும், பட்டினியிலிருந்து தன்னைக் காப்பாற்ற எந்தவொரு ஆதரவாளரும் இல்லாதவரும் ஆன விதவையைக் குறிப்பதாகும்.

**சம்பளம்:** மாதம் ஒன்றுக்கு ரூ.1,640 - 2,900

**வயது:** 1.7.1993 அன்றுள்ளபடி 35 வயதிற்குக் குறைவாக.

ஆதிதிராவிட வகுப்பினர்/பழங்குடி வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆகியோர் பட்டம், இண்டர்மீடியட், புகுமுகவகுப்பு, மேல்நிலை வகுப்பு ஆகியவற்றில் எந்தக் கல்வித் தகுதியையேனும் பெற்றிருந்தாலோ அல்லது பி.டி.சி./பி.யு.சி./மேல்நிலை வகுப்பில் தேர்ச்சி பெற்ற பின்பு பட்டயம் (Diploma) பெற்றிருந்தாலோ அவர்களுக்கு வயது வரம்பு இல்லை.

எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி பெற்ற பின்பு பட்டயம் பெற்றிருக்கும் ஆதிதிராவிட வகுப்பினர்/பழங்குடி வகுப்பினருக்கு வயது வரம்பு ஐந்து ஆண்டுகள் உயர்த்தப்படும். (மேலும் சில சலுகைகள் கீழே அறிவிக்கப்பட்டுள்ளன.)

தகுதி29.3.1993 அன்றுள்ளபடி:- (கீழ்க்காண்பவை அல்லது அவைகளுக்கு இணையானவை.)

1. (அ) மாநிலத் தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சிக் குழுமம், தமிழ்நாடு வழங்கிய, படத்தொகுப்பில் ஒரு பட்டயம் (Diploma in Film Editing) மற்றும்

ஆ. திரைப்படத் தொகுப்பில் (Editing of Motion Pictures) இரண்டு ஆண்டுகளுக்குக் குறையாத செயல்வழி அனுபவம் அல்லது இப்பாடத்தைக் கற்பித்தலில் அதே கால அளவிற்கு அனுபவம். அல்லது

2. (அ) கலை அல்லது அறிவியல் வணிகவியலில் ஒரு பட்டம் அல்லது அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் பி.ஓ.எல். (B.O.L.) அல்லது மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் பி.பி.ஏ. (B.B.A.) அல்லது சென்னைப் பல்கலைக்கழகத்தின் பி.பி.எம்./பி.லிட் (B.B.M./B.Litt) மற்றும்

ஆ) திரைப்படத் தொகுப்பில் (Editing of Motion Pictures) மூன்று ஆண்டுகளுக்குக் குறையாத செயல்வழி அனுபவம்.

ஆதிதிராவிட வகுப்பினர்/பழங்குடி வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், ஆதரவற்ற விதவைகள், தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர், நாற்பது வயதிற்குக் குறைவாக உள்ள பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட மற்றும் பணியிலிருக்கின்ற தற்காலிக மாநில அரசுப் பணியாளர்கள் போன்றவர்களுக்கு வயது மற்றும்/அல்லது தகுதியிலிருந்து அளிக்கப்படும் சலுகைகள் க மற்றும்/அல்லது விண்ணப்பக் கட்டணச் சலுகைகள் தேர்வாணையத்தின் 'பணி வேட்பாளர்களுக்கான விதிமுறைகளில்'- தரப்பட்டுள்ளன. (பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வழங்கப்படும் சலுகைகள் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினருக்கும் பொருந்தும்).

விண்ணப்பப் படிவமும், நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களிடம் எழுத்து மூலம் கோரிப் பெற்றுக் கொள்ளலாம். கோரிக்கைகள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ, பதவியின் பெயர் மற்றும் விளம்பர எண் ஆகியவை குறிப்பிட்டு எழுதப்பட்டு, செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு வழங்கக்கூடிய 1.4.93 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட ரூ.10-க்கான (ரூபாய் பத்து), சென்னை அண்ணா சாலை தலைமை அஞ்சல் நிலையத்தில் செலுத்தத்தக்க கோடிட்ட அஞ்சல் ஆணை அல்லது பாரத ஸ்டேட் வங்கியின் (State Bank of India) ஏதாவது ஒரு கிளையில் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய செயலாளருக்கு வழங்கக்கூடிய, 1.4.1993 அன்றோ அல்லது அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட, பாரத ஸ்டேட் வங்கி, ஆயிரம் விளக்குக் கிளை, சென்னை-6-இல் செலுத்தத்தக்க ரூ. 10-க்கான 'கேட்புக் காசோலை' (Demand Draft)-யுடனும் சுயவிலாசம் எழுதிய உறையுடனும் (26 x 12 செ.மீ.) அனுப்பவேண்டும். கோரிக்கைகள் பிற மொழியில் இருக்குமாயின் அத்துடன் ஆங்கில மொழி பெயர்ப்பும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டா.

DIPR/483/MS/93





விளம்பர எண். 15/93

தமிழ்நாடு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி சார்நிலைப் பணியில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் பயிற்சிப் பிரிவில், விடுதிக் கண்காணிப்பாளர் மற்றும் உடற்பயிற்சி அலுவலர் (Hostel Superintendent-cum-Physical Training Officer) பதவியில் ஏழு காலியிடங்களுக்கு நேரடித் தேர்வின் மூலம் நியமனம் செய்யப்பட விண்ணப்பங்கள் 10.5.1993 அன்று மாலை 5.45 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

**சம்பளம்:** மாதம் ஒன்றுக்கு ரூபாய் 1,200-30-1,560-40-2,040

ஆதிதிராவிட வகுப்பினர்: 1
மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர்: 1
பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்: 2 (ஒரு காலியிடம் பெண்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ளது)
பகிரங்கப் போட்டி: 3 (ஒரு காலியிடம் பெண்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ளது)

**குறிப்புகள்:**

(1) தெரிவு செய்யப்பட்ட தேர்ச்சியும் தகுதியும் வாய்ந்த பெண் விண்ணப்பதாரர்கள் கிடைக்கப்பெறாவிடில் அக்காலியிடங்கள் ஆண் விண்ணப்பதாரர்களால் நிரப்பப்படும்.

(2) இப்பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளைப் பெற்றிருந்து, குறைந்தபட்ச மதிப்பெண்களைப் பெறுவதன் மூலம் தெரிவுக்குத் தகுதியானவராகக் கருதப்படும் ஆதரவற்ற விதவைகள், அவர்களைவிட அதிக மதிப்பெண்களைப் பெற்றிருப்பவரைக் காட்டிலும் முன்னுரிமை வழங்கப்பட்டுத் தெரிவு செய்யப்படுவார்கள்.

**விளக்கம்:** 'ஆதரவற்ற விதவை' என்பது, வாழ்வதற்குத் தனக்கென்று எந்தவொரு வழியும் இல்லாதவரும், பட்டினியிலிருந்து தன்னைக் காப்பாற்ற எந்தவொரு ஆதரவாளரும் இல்லாதவரும் ஆன விதவையைக் குறிப்பதாகும்.

**வயது:** 1.7.1993 அன்று 35 வயதிற்குக் குறைவாக.

**குறிப்பு:** ஆதிதிராவிட வகுப்பினர், பழங்குடி வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆகியோர் பட்டம், புகுமுக வகுப்பு, மேல்நிலை வகுப்பு ஆகியவற்றில் எந்தக் கல்வியேனும் பெற்றிருந்தாலோ அல்லது பி.டி.சி./பி.யு.சி./மேல்நிலை வகுப்பில் தேர்ச்சி பெற்று, பின்பு பட்டயம் (Diploma) பெற்றிருந்தாலோ அவர்களுக்கு வயது வரம்பு இல்லை.

எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி பெற்ற பின்பு பட்டயம் பெற்றிருக்கும் ஆதிதிராவிட வகுப்பினர் மற்றும் பழங்குடி வகுப்பினருக்கு வயது வரம்பு ஐந்து ஆண்டுகள் உயர்த்தப்படும்.

(சலுகைகள் பற்றிய மேலும் சில விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.)

**தகுதி:** (19.3.1993 அன்றுள்ளபடி): கீழ்க்காண்பவை அல்லது அவைகளுக்கு இணையானவை:

I.(a) A Diploma in pHysical Education of any University or Institution recognised by the University Grants Commission for the purpose of its grants. (or)

(b) The Teacher's Certificate in Physical Education (Higher Grade) and Teaching experience for a period of not less than one year. (and)

II. Must have been declared eligible for admission to the College Course of Study under the old 11 years Schooling or must have been declared eligible for admission to the Higher Secondary Course under the present 10 year schooling.

**Note:** Other things being equal, preference will be given to candidates who have completed one year Apprenticeship under the Government of India Scheme or one year training under the State Government Apprenticeship Scheme.

ஆதரவற்ற விதவைகள், தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர், பிணைத் தொழிலாளர்கள், நாற்பது வயதிற்குக் குறைவாக உள்ள பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட மற்றும் பணியிலிருக்கின்ற தற்காலிக மாநில அரசுப் பணியாளர் போன்றவர்களுக்கு வயது மற்றும்/அல்லது தகுதியிலிருந்து அளிக்கப்படும் சலுகைகள் தேர்வாணையத்தின் 'பணி வேட்பாளர்களுக்கான விதிமுறைகளில்' தரப்பட்டுள்ளன. ஆதிதிராவிட வகுப்பினர், பழங்குடி வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர், பிற்படுத்தப் பட்ட வகுப்பினர், தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர் போன்ற வர்களுக்கு அளிக்கப்படும் விண்ணப்பக் கட்டணச் சலுகைகளும் தேர்வாணையத்தின் 'பணி வேட்பாளர்களுக்கான விதிமுறைகளில்' தரப்பட்டுள்ளன. (பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு அளிக்கப்படும் சலுகைகள் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினருக்கும் பொருந்தும்).

விண்ணப்பப் படிவமும், நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு எழுத்து மூலம் கோரிப் பெற்றுக் கொள்ளலாம். கோரிக்கைகள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ, பதவியின் பெயர் மற்றும் விளம்பர எண் ஆகியவற்றைக் குறிப்பிட்டு எழுதப்பட்டு - செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு வழங்கக்கூடிய 1.4.1993 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10), சென்னை அண்ணா சாலை தபால் அலுவலகத்தில் செலுத்தத்தக்க கோடிட்ட அஞ்சல் ஆணை அல்லது பாரத ஸ்டேட் வங்கியின் (State Bank of India) ஏதாவதொரு கிளையில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையச் செயலாளருக்கு வழங்கக்கூடிய 1.4.1993 அன்றோ அல்லது அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட, சென்னை-600 006, ஆயிரம் விளக்கு பாரத ஸ்டேட் வங்கியில், செலுத்தத்தக்க - பத்து ரூபாய்க் கான (ரூபாய் 10) 'கேட்புக் காசோலை' (Demand Draft)-யுடன் சுயவிலாசம் எழுதிய உறையுடனும் (26 x 12 செ.மீ.) அனுப்பவேண்டும். கோரிக்கைகள் பிற மொழியில் இருக்குமாயின் அத்துடன் ஆங்கில மொழிபெயர்ப்பும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற் கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டா.

DIPR/507/MS/93

தொகுதி-2 (Group-II) மற்றும் தொகுதி-3 (Group-III)-இல் உள்ளிட்ட கீழ்க்காணும் பதவிகளுக்கு நேரடி நியமனம் செய்யப்படுவதற்காக நடைபெறவுள்ள முதனிலைத் தேர்விற்கு (Preliminary Examination) அனுமதிக்கப்பட விண்ணப்பங்கள் 10.5.1993 அன்று மாலை 5.45 மணிவரையில் வரவேற்கப்படுகின்றன:- **ஒரு தொகுதிக்குள் உள்ள எத்தனை பதவிக்கு விண்ணப்பித்தாலும் அத்தொகுதிக்கென்று ஒரு விண்ணப்பம் மட்டுமே அனுப்பினால் போதுமானது. எனினும், தொகுதி-2-க்கும் தொகுதி-3-க்கும் தனித்தனி விண்ணப்பங்கள் அனுப்பவேண்டும்.**

| பணி மற்றும் பதவியின் பெயர் (1) | காலி இடங்கள் (2) | வயது (1.7.93 அன்றுள்ளபடி) (3) | கல்வித்தகுதி (30.3.1993 அன்றுள்ளபடி) அடியிற்குறிப்பிட்டுள்ளவை அல்லது அவற்றிற்கு இணையானவை (4) | சம்பள விகிதம் (5) |
|---|---|---|---|---|
| தொகுதி-2 GROUP II SERVICES | | | | |
| 1. தமிழ்நாடு சிறை சார்நிலைப் பணியில் நன்னடத்தைப் பொறுப்பு அலுவலர். | 4 | அ. ஆ.தி.வ., ப.வ., மி.பி.வ.,/சீ.ம. மற்றும் பி.வ.-க்கு வயது வரம்பு இல்லை.<br>ஆ. பிற வகுப்பினருக்கு 22 வயதுக்கு மேல் 30 வயதிற்குள். | பல்கலைக்கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது ஒரு பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட பி.ஏ. அல்லது பி.எஸ்சி. அல்லது பி.காம். பட்டம் அல்லது அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் பி.ஓ.எல். பட்டம் அல்லது மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் பி.பி.ஏ. பட்டம் அல்லது சென்னைப் பல்கலைக்கழகத்தின் பி.லிட். பட்டம் அல்லது பாரதியார் பல்கலைக்கழகத்தின் பி.பி.எம். அல்லது பி.லிட். பட்டம். | ரூ.1820-3200 |
| 2. தமிழ்நாடு சீர்திருத்தப் பள்ளிகள் மற்றும் கண்காணிப்பு சார்நிலைப் பணியில் சமூக பாதுகாப்புத்துறையில் நன்னடைத்தைப் பொறுப்பு அலுவலர். | 1 | அ. ஆ.தி.வ., ப.வ., மி.பி.வ.,/சீ.ம. மற்றும் பி.வ.-க்கு வயது வரம்பு இல்லை.<br>ஆ. பிற வகுப்பினருக்கு 26 வயதுக்கு மேல் 40 வயதிற்குள். | பல்கலைக்கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது ஒரு பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட பி.ஏ. அல்லது பி.எஸ்சி. அல்லது பி.காம். பட்டம் அல்லது அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் பி.ஓ.எல். பட்டம் அல்லது மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் பி.பி.ஏ. பட்டம் அல்லது சென்னைப் பல்கலைக்கழகத்தின் பி.லிட். பட்டம் அல்லது பாரதியார் பல்கலைக்கழகத்தின் பி.பி.எம். அல்லது பி.லிட். பட்டம். | ரூ.1820-3200 |
| 3. தமிழ்நாடு வணிகவரித்துறை சார்நிலைப்பணியில் உதவி வணிகவரி அலுவலர். | 3 | அ. ஆ.தி.வ., ப.வ., மி.பி.வ.,/சீ.ம. மற்றும் பி.வ.-க்கு 35 வயதுக்குக் குறைவாக.<br>ஆ. பிற வகுப்பினருக்கு 30 வயதுக்குக் குறைவாக,<br>சட்டத்தில் ஒரு பட்டம் பெற்றவர்களுக்கு 32 வயதுக்குக் குறைவாக | - மேற்படி - | ரூ.1600-2660 |
| 4. தமிழ்நாடு தொழிலாளர் சார்நிலைப்பணியில் தொழிலாளர் உதவி ஆய்வாளர். | 5 | அ. ஆ.தி.வ., ப.வ., மி.பி.வ.,/சீ.ம. மற்றும் பி.வ. ஆகியோருக்கு வயது வரம்பு இல்லை.<br>ஆ. பிற வகுப்பினருக்கு 30 வயதுக்குக் குறைவாக. | பல்கலைக்கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது ஒரு பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட பி.ஏ. அல்லது பி.எஸ்சி. அல்லது பி.காம். அல்லது பொறியியலில் பட்டம் அல்லது அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் பி.ஓ.எல். பட்டம் அல்லது மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் பி.பி.ஏ. பட்டம் அல்லது சென்னைப் பல்கலைக்கழகத்தின் பி.லிட். பட்டம் அல்லது பாரதியார் பல்கலைக்கழகத்தின் பி.பி.எம். அல்லது பி.லிட். பட்டம். | ரூ.1600-2660 |
| 5. தமிழ்நாடு பொது சார்நிலைப் பணியில் இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர். | 17 | (6 இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர், உடல் ஊனமுற்றோர் உட்பட)<br>அ. இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர்<br>1. ஆ.தி.வ., ப.வ., மி.பி.வ.,/சீ.ம. மற்றும் பி.வ.-க்கு வயது வரம்பு இல்லை.<br>2. பிற வகுப்பினருக்கு 30 வயதிற்குக் குறைவாக<br>**ஆ. இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர்:** (உடல் ஊனமுற்றோர்)<br>1. ஆ.தி.வ., ப.வ., மி.பி.வ.,/சீ.ம. மற்றும் பி.வ. ஆகியோருக்கு வயது வரம்பு இல்லை.<br>2. பிற வகுப்பினருக்கு 40 வயதிற்குக் குறைவாக<br>3. விண்ணப்பதாரர் உடல் ஊனமுற்றவராயிருந்து, அன்னாரது உடல் ஊனம்50 சதவிகிதத்திற்குக் குறையாமலிருந்து அது சம்பந்தமான சான்றிதழ் உதவி மருத்துவர் தகுதிக்குக் கீழ் அல்லாத மருத்துவரால் வழங்கப்படவேண்டும். உடல் ஊனத்தின் விபரமும் இழப்பின் சதவிகிதமும் கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது. | பல்கலைக்கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது ஒரு பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட பி.ஏ. அல்லது பி.எஸ்சி. அல்லது பி.காம். பட்டம் அல்லது அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் பி.ஓ.எல். பட்டம் அல்லது மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் பி.பி.ஏ. பட்டம் அல்லது சென்னைப் பல்கலைக்கழகத்தின் பி.லிட். பட்டம் அல்லது பாரதியார் பல்கலைக்கழகத்தின் பி.பி.எம். அல்லது பி.லிட். பட்டம். | ரூ.1600-2660 |

| உடல் ஊனத்தின் விவரம் | இழப்பின் சதவிகிதம் |
|---|---|
| 1. தோள் பட்டையில் புஜ இழப்பு | 100 |
| 2. தோள் பட்டைக்குக் கீழே கை இழப்பு | 85 |

ஆவணக்காப்பக
சென்னை-600

| | |
|---|---|
| 3. மணிக்கட்டிலும், மணிக்கட்டின் மேலும் கையில் இழப்பு | 66 |
| 4. ஒரு கையின் மொத்த பக்கவாத பாதிப்பு | 50 |
| 5. விபத்தினால், முகவடிவமைப்பின் மொத்த பாதிப்பு | 50 |
| 6. ஒரு கையில் ஒரு பெருவிரலும் மறு கையில் நான்கு விரல்களும் இழப்பு | 60 |
| 7. ஒரு கையில் நான்கு விரல்கள் பாதிப்பு | 50 |
| 8. ஒரு கண் உடையவர்கள் | 50 |
| 9. முழங்காலுக்குக் கீழே மொத்த பக்கவாதம் | 60 |
| 10. அரை குறையான முடக்குவாத பாதிப்பு ஒரு காலில் முழங்காலுக்கு மேலும் மறுகாலில் முழங்காலுக்குக் கீழும் | 50 |

| | | | | |
|---|---|---|---|---|
| 6. தமிழ்நாடு பதிவுத்துறை சார்நிலைப் பணியில் சார்பதிவாளர் இரண்டாம் நிலை | 32 | அ) ஆ.தி.வ., ப.வ., மி.பி.வ.,/சீ.ம. மற்றும் பி.வ.-க்கு வயது வரம்பு இல்லை.<br>ஆ) பிற வகுப்பினருக்கு 20 வயதிற்கு மேல் 30 வயதிற்குள். | பல்கலைக்கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது ஒரு பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட பி.ஏ. அல்லது பி.எஸ்சி. அல்லது பி.காம். பட்டம் அல்லது அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் பி.ஓ.எல். பட்டம் அல்லது மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் பி.பி.ஏ. பட்டம் அல்லது சென்னைப் பல்கலைக்கழகத்தின் பி.லிட். பட்டம். | ரூ.1600-2660 |
| 7. தமிழ்நாடு சீர்திருத்தப் பள்ளிகள் மற்றும் கண்காணிப்பு சார்நிலைப் பணியில் மகளிர் நல அலுவலர் (மகளிர் மட்டுமே விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்) | 1 | அ. ஆ.தி.வ., ப.வ., மி.பி.வ.,/சீ.ம. மற்றும் பி.வ.-ஆகியோருக்கு வயது வரம்பு இல்லை.<br>ஆ. பிற வகுப்பினருக்கு 30 வயதுக்குக் குறைவாக. | -மேற்படி- | ரூ.1600-2660 |
| 8. தமிழ்நாடு அமைச்சுப் பணியில் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையில் உதவி ஆய்வாளர் | 68 | -மேற்படி- | -மேற்படி- | ரூ.1400-2600 |
| மாநில வணிகத் திட்டத்துறையில் உதவி ஆய்வாளர் | 26 | -மேற்படி- | -மேற்படி- | ரூ.1400-2600 |
| இந்து சமய அறநிலையத்துறையில் தணிக்கைப் பிரிவில் தணிக்கை ஆய்வாளர் (இந்துமத விண்ணப்பதாரர் மட்டுமே தகுதியுடையவர்) | 14 | -மேற்படி- | -மேற்படி- | ரூ.1400-2600 |



| | | | | |
|---|---|---|---|---|
| 9. தமிழ்நாடு கூட்டுறவு சார்நிலைப் பணியில் கூட்டுறவுச் சங்கங்களின் முதுநிலை ஆய்வாளர். | 40 | அ. ஆ.தி.வ., ப.வ., மி.பி.வ.,/சீ.ம. மற்றும் பி.வ. ஆகியோருக்கு வயது வரம்பு இல்லை.<br>ஆ. பிற வகுப்பினருக்கு 30 வயதிற்குக் குறைவாக | பல்கலைக்கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது ஒரு பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட பி.ஏ. அல்லது பி.எஸ்சி. அல்லது பி.காம். பட்டம் அல்லது அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் பி.ஓ.எல். பட்டம் அல்லது மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் பி.பி.ஏ. பட்டம் அல்லது சென்னைப் பல்கலைக்கழகத்தின் பி.லிட். பட்டம் அல்லது பாரதியார் பல்கலைக்கழகத்தின் பி.பி.எம். அல்லது பி.லிட். பட்டம். அல்லது ஊரகப் பணியில் பட்டயம் அல்லது பட்டயக் கணக்கர்களுக்கான நிலையங்களில் இணை உறுப்பினர்களுக்கான பட்டயம். | ரூ.1400-2600 |
| 10. தமிழ்நாடு வேளாண்மை விற்பனை சார்நிலைப் பணியில் மேற்பார்வையாளர் | 8 | -மேற்படி- | ஒரு பட்டம் (A degree) | ரூ.1400-2600 |
| 11. தமிழ்நாடு கூட்டுறவு சார்நிலைப் பணியில் கூட்டுறவு தணிக்கைத்துறையில் இளநிலை கூட்டுறவு தணிக்கையர். | 131 | -மேற்படி- | பி.காம். பட்டம் அல்லது பி.ஏ. (கூட்டுறவு) அல்லது பி.ஏ. (பொருளாதாரம்) | ரூ.1200-2040 |
| 12. தமிழ்நாடு சிறைத்துறை சார்நிலைப் பணியில் உதவி சிறை அலுவலர். | 1 | அ) ஆ.தி.வ., ப.வ., மி.பி.வ.,/சீ.ம. மற்றும் பி.வ.-ஆகியோருக்கு வயது வரம்பு இல்லை.<br>ஆ. பிற வகுப்பினருக்கு 30 வயதுக்குக் குறைவாக. | பல்கலைக்கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது ஒரு பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட பி.ஏ. அல்லது பி.எஸ்சி. அல்லது பி.காம். பட்டம் அல்லது அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் பி.ஓ.எல். பட்டம் அல்லது மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் பி.பி.ஏ. பட்டம் அல்லது சென்னைப் பல்கலைக்கழகத்தின் பி.லிட். பட்டம் அல்லது பாரதியார் பல்கலைக்கழகத்தின் பி.பி.எம். அல்லது பி.லிட். பட்டம். | ரூ.1200-2040 |
| | | உடற்தகுதி: உயரம்<br>மார்பு: | 168 செ.மீ.<br>(மூச்சு உள்ளிழுக்கும்போது) 86 செ.மீ.<br>விரிவடையவேண்டியது 5 செ.மீ. | |
| | | ஆ.தி.வ., ப.வ.-க்கு உயரம்<br>மார்பு | 160 செ.மீ.<br>(மூச்சு உள்ளிழுக்கும்போது) 79 செ.மீ.<br>விரிவடைய வேண்டியது 5 செ.மீ. | |

| | | | | |
|---|---|---|---|---|
| 13. தமிழ்நாடு அமைச்சுப்பணியில் வருவாய்த்துறையில் உதவியாளர் | 40 | அ. ஆ.தி.வ., ப.வ., மி.பி.வ.,/சீ.ம. மற்றும் பி.வ. ஆகியோருக்கு வயது வரம்பு இல்லை.<br>ஆ) பிற வகுப்பினருக்கு 30 வயதுக்குக் குறைவாக. | பல்கலைக்கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது ஒரு பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட பி.ஏ. அல்லது பி.எஸ்சி. அல்லது பி.காம். பட்டம் அல்லது அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் பி.ஓ.எல். பட்டம் அல்லது மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் பி.பி.ஏ. பட்டம் அல்லது சென்னைப் பல்கலைக்கழகத்தின் பி.லிட். பட்டம் அல்லது பாரதியார் பல்கலைக்கழகத்தின் பி.பி.எம். அல்லது பி.லிட். பட்டம். | ரூ.1200-2040 |
| 14. தமிழ்நாடு நகரிய ஊராட்சி சார்நிலைப் பணியில் நகரிய ஊராட்சித்துறையில் நிர்வாக அலுவலர் இரண்டாம் நிலை. | 2 | அ) ஆ.தி.வ., ப.வ., மி.பி.வ.,/சீ.ம. மற்றும் பி.வ.-க்கு வயது வரம்பு இல்லை.<br>ஆ) பிற வகுப்பினருக்கு 30 வயதுக்குக் குறைவாக | ஒரு பட்டம் (A degree) | ரூ.1200-2040 |
| **தொகுதி-3 GROUP III SERVICES** | | | | |
| 1. தமிழ்நாடு பதிவுத்துறை சார்நிலைப் பணியில் சார்பதிவாளர் இரண்டாம் நிலை | 7 (இக் காலியிடங்கள் ஆ.தி. வகுப்பினருக்கு ஒதுக்கப் பட்டவை | வயது வரம்பு இல்லை | இடைநிலைத் தேர்வு (Intermediate) அல்லது புகுமுக வகுப்பில் தேர்ச்சி (Pre-University) அல்லது மேல்நிலைப்பள்ளி கல்வியில் (Higher Secondary Courses) தேர்ச்சி பெற்றிருக்கவேண்டும்). | ரூ.1600-2660 |
| 2. தமிழ்நாடு கூட்டுறவு சார்நிலைப்பணியில் கூட்டுறவு சங்கங்களின் முதுநிலை ஆய்வாளர் | 84 (இக் காலியிடங்கள் ஆ.தி.வ., ப.வ., மி.பி.வ., /சீ.ம. மற்றும் பி.வ.-ருக்கு ஒதுக்கப்பட்டது.) | -மேற்படி- | -மேற்படி- | ரூ.1400-2600 |

**குறிப்பு:**

1. மேற்கண்ட அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ள காலியிடங்களின் எண்ணிக்கை தோராயமானவையே. அவை தெரிவு செய்யப்படும் போதோ அல்லது அதற்கு முன்னரோ அன்றைய நிலைமைக்கு ஏற்ப மாறக்கூடும்.
2. ஆ.தி.வ., ப.வ., மி.பி.வ.,/சீ.ம., பி.வ., ப.போ. பெண்கள் மற்றும் உடல் ஊனமுற்றோர் ஆகியோருக்கு ஒதுக்கப்பட்டுள்ள காலியிடங்களின் தெரிவு, நியமன ஒதுக்கீட்டு விதியைப் பின்பற்றி மேற்கொள்ளப்படும். தகுதியான பெண் பணி வேட்பாளர்கள் தெரிவுசெய்யக் கிடைக்கப் பெறாவிடில் பெண்களுக்காக ஒதுக்கப்பட்ட காலியிடங்கள் ஆண் பணிவேட்பாளர்களால் நிரப்பப்படும். தகுதியான உடல் ஊனமுற்ற பணிவேட்பாளர் தெரிவு செய்யக்கிடைக்கப்பெறாவிடில் அவர்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட சுற்றுமுறை (Turn) அதே பிரிவைச் சார்ந்த உடல் ஊனம் இல்லாத பணிவேட்பாளரால் நிரப்பப்படும்.



3. இப்பதவிகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளைப் பெற்றிருந்து குறைந்த பட்ச மதிப்பெண்களைப் பெறுவதின் மூலம் தெரிவுக்குத் தகுதியானவராகக் கருதப்படும் ஆதரவற்ற விதவைகள் அவர்களைவிட அதிக மதிப்பெண்களைப் பெற்றிருப்பவர்களைக் காட்டிலும் முன்னுரிமை வழங்கப்பட்டு தெரிவு செய்யப்படுவார்கள்.

**விளக்கம்:** 'ஆதரவற்ற விதவை' என்பது வாழ்வதற்குத் தனக்கென்று எந்தவொரு வழியும் இல்லாதவரும், பட்டினியிலிருந்து தன்னைக் காப்பாற்ற எந்தவொரு ஆதரவாளரும் இல்லாதவரும் ஆன விதவையைக் குறிப்பதாகும்.

**(2) தேர்வு மையங்கள் மற்றும் குறியீட்டு எண்கள்**

| தேர்வு மையம் | குறியீட்டு எண் | தேர்வு மையம் | குறியீட்டு எண் |
|---|---|---|---|
| கோயம்புத்தூர் | 01 | சேலம் | 13 |
| கடலூர் | 02 | சிவகங்கை | 14 |
| தர்மபுரி | 03 | தஞ்சாவூர் | 15 |
| திண்டுக்கல் | 04 | திருச்சிராப்பள்ளி | 16 |
| ஈரோடு | 05 | திருநெல்வேலி | 17 |
| காஞ்சிபுரம் | 06 | தூத்துக்குடி | 18 |
| சென்னை | 08 | உதகமண்டலம் | 19 |
| மதுரை | 09 | வேலூர் | 20 |
| நாகர்கோவில் | 10 | விருதுநகர் | 21 |
| புதுக்கோட்டை | 11 | நாகப்பட்டினம் | 51 |
| இராமநாதபுரம் | 12 | திருவண்ணாமலை | 76 |

**3. தேர்வுத்திட்டம்:** போட்டி எழுத்துத்தேர்வு, தொடர்ந்து மூன்று நிலைகளைக் கொண்டவை. அதாவது:

அ) முதன்மை எழுத்துத் தேர்வுக்கு விண்ணப்பதாரரைத் தேர்ந்தெடுப்பதற்கான முதனிலை எழுத்துத்தேர்வு.

ஆ) முதன்மை எழுத்துத் தேர்வு மற்றும்

இ) நேர்முகத் தேர்வு.

**முதனிலைத் தேர்வு:** இது பணிவேட்பாளர்களின் போட்டி எண்ணிக்கையைக் குறைப்பதற்காக நடத்தப்படும் எழுத்துத்தேர்வு (Screening Test) ஆகும். முதன்மை எழுத்துத்தேர்வுக்கு அனுமதிக்கப்படத் தகுதியானவர்களென அறிவிக்கப்படும் பணி வேட்பாளர்களின் இறுதி தகுதி நிலையை நிர்ணயிக்கும்போது அவர்கள் முதனிலை எழுத்துத் தேர்வில் பெற்ற மதிப்பெண்கள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது. முதனிலை எழுத்துத்தேர்வு முடிவின்படி, முதன்மை எழுத்துத் தேர்வுக்கு அனுமதிக்கப்படும் பணி வேட்பாளர்களின் எண்ணிக்கை நியமன ஒதுக்கீட்டு விதியைப் பின்பற்றி, தெரிவு செய்யப்படவேண்டிய பணிவேட்பாளர்களின் எண்ணிக்கையைப் போல் சரியாகப் பத்து மடங்காக இருக்கும். முதனிலைத் தேர்வு பொது அறிவு (கொள்குறி வகை) (Objective type) பாடத்தில் இரண்டு மணி நேர கால அளவில் மொத்தம் 100 மதிப்பெண்கள் கொண்டதாக அமையும்.

**குறிப்பு:** முதனிலைத் தேர்விற்கு அனுமதிக்கவே இவ்விளம்பரத்தின் மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. முதன்மைத் தேர்விற்கு அனுமதிக்கப்படும் விண்ணப்பதாரர்கள், தேர்வாணையத்தால் பின்னர் அறிவிக்கப்படும் விரிவான விண்ணப்பப் படிவத்தில் (Detailed Application) விண்ணப்பிக்க வேண்டும்.

**(4) முதனிலைத் தேர்விற்கான பாடத்திட்டம்**

**தொகுதி-2 பொது அறிவு (இளங்கலைப்பட்ட தரம்)**

1. Modern History of India and Indian Culture
2. Current Events of National and International Importance.
3. Statistical analysis, graphs and diagrams.
4. Indian Polity
5. Indian Economy and Geography of India
6. The role and impact of science and technology in the development of India.

Modern History of India and Indian Culture will cover the broad history of country from above the middle of the Nineteenth Century and would also include questions on Gandhi, Tagore and Nehru. The part relating to statistical analysis, graphs and diagrams will include exercises to test the candidtate's ability to draw common sense conclusions for information presented in statistical graphical or diagrammatical form and to point out deficiencies limitations or inconsistencies therein. The part relating to Indian Polity, will include questions on the political system in India. In the part pertaining to the Indian Economy and Geography of India, questions will be put on planning in India and the physical, economic and social geography of Tamil Nadu. In the third part relating to the role and impact of science and technology in the development of India, quetions will be asked to test the candidate's awareness of the role and impact of science and technology in India, emphasis will be on applied aspect.

Advertisement No. 16/93.

**APPLICATION FOR PRELIMINARY EXAMINATION FOR POSTS INCLUDED IN GROUP ............ SERVICES, 1993**
**(Specify Group II or Group III)**

1. EXAMINATION CENTRE: ............... CODE ________
(To be specified in block letters)

2. REGISTER NUMBER:
(To be assigned by Office)

**Paste here a signed copy of recent photograph of passport size (5 cms. x 7 cms.)**

3. Details of fee paid:

| Name of the Bank | Number of the Demand Draft | Date | Value Rs. P. |
|---|---|---|---|
| | | | |

4. Do you claim fee exemption? | Yes | No |
If yes, mention the relevant catagory under which exemption is claimed. : ....................

5. NAME AND ADDRESS
(IN CAPITALS)
(a) Name : ....................
(b) Father's Name : ....................
(c) Present Postal Address : ....................
Pin ....................

6. Date of Birth

| Day | Month | Year |
|---|---|---|
| | | |

Do you claim age relaxation? | Yes | No |

If Yes, mention the relevant category ....................

7. SEX
(Tick the relevant Box | MALE / FEMALE |

8. (a) Religion : ....................
(b) Name of the Community : ....................
(Tick the relevant Box)

| 01 | 02 | 03 | 04 | 05 |
|---|---|---|---|---|
| SC | ST | BC | OTHERS | MBC/DC |

9. Do you possess the requisite educational qualification? | Yes / No |
(Tick the relevant Box. If yes, gives details)

| Examination passed | Subjects of Study | Year of pass | Marks/ Grade | Institution |
|---|---|---|---|---|
| | | | | |

10. Do you possess any additional or preferential qualifications prescribed for the post? | Yes / No |
(Tick the relevant Box
If yes, give details)

| Examination passed | Subjects of Study | Year of pass | Marks/ Grade | Institution |
|---|---|---|---|---|
| | | | | |

11. Do you claim any preference/relaxation under the following category? : (If yes evidence to be produced)
(a) Destitute Widow : | Yes / No |
(b)Physically handicapped : | Yes / No |
If yes, tick the relevant category : | Blind / Deaf / Orthopaedic |

(c) If you claim any concession state reasons therefor.

**DECLARATION**

I hereby declare that all the particulars furnished in this application are true, correct and complete to the best of my knowledge and belief. In the event of any information being found false or incorrect or ineligibility being detected before or after the examination, action can be taken against me by the Commission.

I have read the advertisement, Notification and "Instructions to candidates' carefully and I hereby undertake to abide by the instructions therein.

I further declare that I fulfil all the eligibility conditions prescribed for admission to the examination.

* I have informed my employer in writing that I am applying for this examination.

(* Strike off this if not applicable).

Station:
Date: Signature of the candidate.

**TAMIL NADU PUBLIC SERVICE COMMISSION**
**Madras-2**
**ATTENDANCE SHEET**
**Preliminary examination for the post included in GROUP.............................................SERVICES, 1993.**
(Specify Group II or Group III)
(To be filled by candidate)

REGISTER NUMBER [ ]

Examination Centre : ........... (To be filled by office)
Code: [ ]

Name of the candidate: ............
Date of Birth : ............................
Communication address : ............
.............................................
.............................................
.............................................

**Paste here a signed copy of your recent passport size photograph (5 cm. x 7 cm.)**

(To be filled at the time of Examination)

| Date of Time | Examination Subject | Candidate's Signature |
|---|---|---|
| | | |



DIPR/537/MS/93

## தமிழ் வளர்த்த பெரியார்



### பன்மொழிப் புலவர்
### தெ.பொ. மீனாட்சி சுந்தரனார்

- புலவர் தமிழ்ப்பித்தன்

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் புலவர் இறுதி ஆண்டு வகுப்பறையின் உள்ளே நுழைகிறார் அந்தப் பேராசிரியர். அவரது கரத்திலே மாணவர்களின் விடைத்தாள்கள் தஞ்சம் அடைந்திருக்கின்றன. மாணவர்களை நோட்டமிட்டபடியே இருக்கையில் அமர் கிறார்.

"இந்த வகுப்பில் ஞானசம்பந்தம் என்பவர் யார்?" - பேராசியர் வினவு கிறார்.

ஒரு மாணவர் எழுந்து நிற்கிறார்.

"சேனாவரையர் உமக்கு என்ன கெடுதல் செய்தார்? ஏன் இவ்வளவு கடுமையாகத் தாக்கி எழுதியிருக் கிறீர்கள்?" பேராசிரியர் கேட்கிறார்.

மாணவர், மறுமொழி கூறாது நிற் கிறார்.

"சேனாவரையரின் கருத்துக்களை மறுத்திருக்கிறீர்களே, அவற்றிற்கெல்லாம் நீங்கள் கூறும் புதிய கருத்துக்கள் யாவை? அவற்றை ஏன் விடைத்தாளில் எழுத வில்லை?" - பேராசிரியர் வினாக்களைத் தொடர்கிறார்.

"சேனாவரையரின் கருத்துக்களில் பொருந்தாமை, குறைபாடு ஆகியவை எனக்குத் தோன்றுகிறதே தவிர புதிய கருத்துக்கள் தோன்றவில்லை. அதனால் மறுத்ததோடு நிறுத்திக் கொண்டேன்". - மாணவர் பதிலளிக்கிறார்.

"உங்கள் விடையிலிருந்து நீங்கள் சேனாவரையத்தை நன்கு கற்றிருக் கிறீர்கள் என்பது தெளிவாகத் தெரி கிறது. என்றாலும் முளையிலேயே கனிய நினைக்க வேண்டாம்". நன்கு வளர்ந்த பின் கனிவதே நல்லது" - என்று சொல்லிவிட்டு, விடைத்தாளை அந்த மாணவரிடம் கொடுக்கிறார் பேராசிரியர்.

விடைத்தாளை வாங்கிப் பார்த்த மாணவர் வியப்பில் மூழ்குகிறார். நம்ப முடியாத அளவுக்கு உயர்ந்த மதிப் பெண்கள் விடைத்தாளில் காணப்படு கின்றன.

கருத்து வேறுபாட்டிற்காக எவரையும் பழிவாங்காத பேராசிரியரின் பேருள் ளத்தை மாணவர் புரிந்துகொள்கிறார். அந்தப் பேராசிரியர்தான் பன்மொழிப் புலவர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார், மாணவர் டாக்டர் நன்னன்.

சென்னை சிந்தாதிரிப்பேட்டையில் வாழ்ந்து வந்த தென்பட்டினம் பொன்னுச் சாமி கிராமணி - ருக்மணியம்மாள் தம்பதியரின் இரண்டாவது மகனாக 1901 ஜனவரி 8-ஆம் நாளில் பிறந்தவர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார். கிருஷ்ணசாமி என்ற தமையனார். வடிவாம்பாள் என்ற தமக்கை, திரிபுர சுந்தரி என்ற தங்கை, முத்துக்குமாரசாமி என்னும் தம்பி தெ.பொ.மீ-யின் உடன் பிறந்தோர் ஆவர்.

பொன்னுச்சாமி தமிழ்ப் புலமை மிக்கவர். வீணை வாசிப்பதில் வல்லவர். மூத்த மகன் கிருஷ்ணசாமி, பாவலர் என்னும் சிறப்புப் பெற்றவர். நாடகப் பேராசிரியர். நாட்டுப்பற்றுள்ளவர். தேச பந்து என்னும் திங்கள் ஏட்டினை நடத்தி வந்தவர்.

பள்ளிக் கல்வியைப் பாங்குற முடித்த தெ.பொ.மீ. பச்சையப்பன் கல்லூரியில் "சரித்திரம், பொருளாதாரம், அரசியல்' என்னும் பிரிவில் பயின்று முதுகலைப் பட்டதாரி ஆனார். பின்னர் சென்னை சட்டக் கல்லூரியில் பயின்று சட்டக் கல்வி பெற்றார். முன்னாள் முதல்வர் பக்தவத்சலம் அவர்கள் சட்டக் கல்லூரி யில் இரவது சகமாணவர் என்பது குறிப் பிடத்தக்கது.

தெ.பொ.மீ. சிந்தாதிரிப்பேட்டை வேதாந்த சங்கத்தின் தலைவரும் பெரும் புலவருமான கோ. வடிவேலு செட்டி யாரிடம் தமிழ்க் கல்வி பயின்றார். வித்வான் முதல் நிலை, இறுதி நிலை இரண்டு தேர்வுகளையும் ஒரே ஆண்டில் எழுதி, மாநிலத்திலேயே முதல் மாண வராகத் தேர்ச்சி பெற்றார். அப்போது வித்வான் தேர்வுக் குழுவுக்குத் தலை வராக இருந்தவர் உ.வே.சா. என்பது குறிப்பிடத்தக்கது.

சென்னை மாநகராட்சி ஆல்டர் மேனாகவும், சைதை நகராட்சி வழக்கறிஞ ராகவும் சிறிது காலம் பணியாற்றிய தெ.பொ.மீ. சிந்தாதிரிப்பேட்டையில் தொடக்கப் பள்ளிக் கல்விச் சங்கத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றார். 1944 முதல் 1946 முடிய அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவராகப் பணி ஆற்றினார். 1952-இல் சென்னை மாநிலக் கல்லூரி யில் ஆய்வுப் பேராசிரியர் பணி; 1958-ஆம் ஆண்டில் மறுபடியும் அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பணியை மேற்கொண்டார்; அங்கே, மொழி இயல்துறை (Linguistics)-யின் தலைவராக அவர் நியமிக்கப் பெற்றார். அதே ஆண்டில் திராவிட மொழி இயல்

**Note:** Some of the questions asked in this paper shall be exclusively with reference to Tamil Nadu/

### தொகுதி - 3 பொது அறிவு - மேல்நிலைப்பள்ளிக் கல்வி தரம்

1. General Science, 2. Indian History, 3. Geography of India, 4. Economics & Commerce,
5. Indian Polity, 6. Indian National Movement, 7. Current Affairs, 8. Mental Ability Tests.

**General Science** General Science will cover general appreciation and understanding of science including matters of everyday observations and experience as may e expected of a well educated person who has not made any special study of any scientific discipline. The questions shall be from topics, in physics, chemistry and biology, viz. Scientific laws, Scientific Instruments, Inventions and Discoveries, Scientists and their contributions, Human Phyiology Disease-their cause, cure and prevention, diet-balanced diet, human genetics, animals, mammals and birds, environment and ecology, elements and compounds, acids, bases and salts and allied subjects; motion, newton's laws, matter-properties of matter, electricity, national laboratories and other related topics.

**History of India:** Dates and events relating to Indusvalley Civilization, Vedic, Aryan and Sangam age, Maurya Dynasty, Buddhism and Jainism, Guptas and Vardhanas, Pallavas, Cholas and Pandias, Sultanate and Mughal Period, Advent of European powers specially the British and other related, topics.

**Geography of India:** Earth, Motions of earth, Rotation and Revolution and their effects, structure of earth, Natural regions of India, Weather, Monsoon and Climate, Rainfall, Natural calamities, Indian Towns and places, Hill stations, National Parks, Major Ports, Crops and Minorals, Location of major industries, Forests and Wild life, population idstribution in India and other related topics.

**Economics and Commerce:** Agriculture, Major Crops and crop in India, Industrial development, Major Medium, Small Scale and Cottage Industries of Tamil Nadu, Village and Rural Development in India. Housing, Drinking water and other developmental schemes - Price Policy, Inflation, Population and unemployment problems, Imports and Exports.

**Indian Poli :y:** Indian Constitution, Salient features. Citizenship, Elections, Parliament and State Legislature Executive set up of State, Judiciary System, Local Self Governments, Centre State Relations, Language Policy, Foreign Policy.

**Indian National Movement:** National freedom movement and attainment of independance, contribution of National leader like Bal Ganga Dhar Tilak, Gopalakrishna Gokhale, Dada Bhai Naoroji, M.K. Gandhi, Jawaharlal Nehru and others, role of Tamil Nadu in freedom movement, Bharathiyar, V.O.C., Subbramaniya Siva, Rajaji and others.

**Current events:** Latest development in science and technology, political developments in India. New developments in trade, transport and communication, historical events. Fine arts like dance, drammas, films, painting, major literary works, games and sports, National and International awards, National and International Organisations, abbreviations, who is who, books nd authors, general terminology. India and it's neighbours, present day India and other related topics.

**Mental ability tests:** These tests are meant to verify the candidate's capability to draw conclusions through inductive or deductive reasoning from tables and charts. It will included elementary problems from school mathematics.

**Note:** Some of the questions asked in this paper shall be exclusively with reference to Tamil Nadu.

**தேர்வுக் கட்டணம்:** ரூ.40 (ரூபாய் நாற்பது மட்டும் - ஒவ்வொரு தொகுதிக்கும்) இத்தேர்வுக் கட்டணம் செயலாளர் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் அவர்களுக்கு வழங்கப்படக்கூடியதாக சென்னையில் செலுத்தத்தக்க 'கேட்புக் காசோலையாக' ஏதேனும் ஒரு ஷெட்யூலட் வங்கியில் பெற்று விண்ணப்பத்துடன் அனுப்பப்படவேண்டும். மேற்படி கேட்புக் காசோலை சென்னை ஆயிரம் விளக்கு, பாரத ஸ்டேட் வங்கி கிளையில் செலுத்தத்தக்கதாக ஏதேனும் ஒரு பாரத ஸ்டேட் வங்கி கிளையில் பெறப்பட்டிருப்பது விரும்பத்தக்கது. இக்கேட்புக் காசோலை 30.3.1993-க்குப் பிறகு பெறப்பட்டிருக்க வேண்டும்.



**விண்ணப்பிக்கும் முறை:** முதனிலைத் தேர்வில் கலந்து கொள்ள விரும்புவோர் கீழே கொடுக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தில் கண்டுள்ள விண்ணப்பம் மற்றும் வருகைத்தாளை 30 x 21 செ.மீ. அளவுள்ள ஒரு நீள வெள்ளைத்தாளில் சீராக இடைவெளியிட்டு தட்டச்சு செய்து, முறைப்படி நிரப்பி உரிய சான்றிதழ்களுடன் 'செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், அரசினர் தோட்டம், சென்னை-600 002 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். தேர்வாணைய விளம்பரத்தில் வெளியிடப்பட்டிருக்கும் அதே படிவத்தில் அமைந்திருக்கும் பட்சத்தில் தனியார் மூலம் விற்கப்படும் அச்சிடப்பட்ட விண்ணப்பங்களையும் பயன்படுத்தத் தடையில்லை. விண்ணப்பம் அனுப்பப்படும் உறையின் மீது 'தொகுதிப்பணிகளில் அடங்கிய பதவிகளுக்கான முதனிலைத் தேர்வு விண்ணப்பம்' என்பதைக் குறிப்பிடுதல் வேண்டும்.

அரசுப்பணியில் உள்ளவர்களும் அரசுக்குச் சொந்தமான நிறுவனங்கள் அல்லது அதைப் போன்ற நிறுவனங்களில் பணிபுரிவோரும் நேரடியாகத் தேர்வாணையத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும். ஆனால், தாம் தேர்வுக்கு விண்ணப்பிக்கும் விபரத்தை தங்களின் நியமன அதிகாரிகளுக்குத் தெரிவித்தல் வேண்டும்.

**விண்ணப்பத்துடன் அனுப்பப்படவேண்டியவை:**

1. தேர்வுக் கட்டணமாக ரூ.40-க்கான 'பாரத ஸ்டேட் வங்கி' கேட்புக் காசோலை (Demand Draft) (தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு கோருவோர் தவிர) (ஒவ்வொரு தொகுதிக்குரிய விண்ணப்பத்துடனும் தனித்தனியாகக் கேட்புக்காசோலை இணைத்தனுப்ப வேண்டும்).

2. வருகைத்தாள் (Attendance Sheet) (மாதிரிப்படிவத்தில் உள்ளவாறு).

3. அண்மையில் எடுத்த பணிவேட்பாளரின் கையொப்பமிடப்பட்ட (5 x 7 cms.) அளவுள்ள ஒரே மாதிரியான இரண்டு நிழற்படங்கள் (ஒன்றை விண்ணப்பத்தின் முதல் பக்கத்தில் அதற்காக ஒதுக்கப்பட்ட இடத்திலும், மற்றொன்றை வருகைத்தாளிலும் ஒட்ட வேண்டும்.)

4. வயது, கல்வித் தகுதிக்கான மற்றும் சாதிச் சான்றிதழின் சான்றளிக்கப்பட்ட நகல்கள்/ நகலச்சுகள் (Xerox copy)

5. சுயவிலாசமிட்ட 45 காசுகள் கூடுதல் அஞ்சல்வில்லை ஒட்டப்பட்ட ஓர் அஞ்சல் அட்டை.

**குறிப்பு:** தகுந்த தேர்வுக்கட்டணம் செலுத்தப்படாத அல்லது முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாத மற்றும் குறைபாடுள்ள விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. இது தொடர்பாக மறு பரிசீலனை செய்யக்கோரி பெறப்படும் கடிதங்கள் கவனிக்கப்படமாட்டா.

7. ஆ.தி.வ., ப.வ., மற்றும் பி.வ., ஆதரவற்ற விதவைகள், தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர், பிணைத்தொழிலாளர், நாற்பது வயதிற்குக் குறைவாக உள்ள பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட மற்றும் பணியிலிருக்கின்ற தற்காலிக மாநில அரசுப் பணியாளர்கள் போன்றவர்களுக்கு வயது மற்றும் கல்வித்தகுதி, கட்டணச் சலுகைகள் சம்பந்தமாக அனுமதிக்கப்பட்ட சலுகைகளைக் கூறும் 'பணி வேட்பாளர்களுக்கான விதிமுறைகளில்' 16.8.89 நாளிட்ட தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய செய்தி அறிவிப்பு வெளியீட்டிலும் (Tamil Nadu Public Service Commission Bulletin) 1.9.89 நாளிட்ட 'தமிழரசு' ஆங்கிலம் மற்றும் தமிழ் பதிப்புகளிலும் வெளியிடப்பட்டுள்ளன. செய்தி அறிவிப்பு வெளியீடு அரசு எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையில் அரசு வெளியீட்டு விற்பனை மையங்களின் மூலம் விலைக்கு கிடைக்கப்பெறும். (பிற்படுத்தப்பட்டவர்களுக்காக அறிவிக்கப்பட்டுள் சலுகைகள் அனைத்தும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினருக்கும் பொருந்தும்).

**சுருக்கங்கள்**

| | | |
|---|---|---|
| ஆ.தி.வ. | - | ஆதி திராவிட வகுப்பினர் |
| ப.வ. | - | பழங்குடி வகுப்பினர் |
| மி.பி.வ./சீ.ம. | - | மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர் மரபினர் |
| பி.வ. | - | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் |
| ப.போ. | - | பகிரங்கப்போட்டி |




# தமிழரசு

1-5-1993 ரூ.1

கழகத்தின் தலைமைப் பொறுப்பும், அனைத்திந்திய மொழியியல் கழகத்தின் தலைமைப் பொறுப்பும் இவரைத் தேடி வந்தன. இந்திய விடுதலைக்குப் பின்னர் உருவான மதுரைப் பல்கலைக் கழகத்தின் முதலாவது துணைவேந்தராக இவர் 1965-இல் நியமிக்கப் பெற்றார். ஐந்தாண்டுகள் இப்பணியை ஆற்றி 1971-இல் ஓய்வு பெற்றார். தமிழ்ப் புலமையின் அடிப்படையில் அவருக்குக் கிடைத்த பதவிதான் துணைவேந்தர் பதவி!

எழுத்தார்வம் மிக்க தெ.பொ.மீ. தமது பதினைந்தாவது வயதிலேயே (1916) கட்டுரைகளைத் தீட்டியிருக் கிறார். என்றாலும் அவை 1929-ஆம் ஆண்டில் தான் நூல் வடிவம் பெற்றன.

நமது அன்னைத் தமிழுக்கு ஒரு பெருமை உண்டு; தமிழ்க் கல்வி கற்று இலக்கியத் தொண்டாற்றிய புலவர்கள் மட்டுமன்றி சட்டக் கல்வி கற்று வழக்கறிஞ ராகிய பல பெருமக்களும் தமிழன்னை யின் புகழ் பாடியிருக்கிறார்கள்; நாவலர் சோமசுந்தர பாரதியார், வ.உ. சிதம்பரனார், ரா.பி. சேதுப்பிள்ளை, கா.சு. பிள்ளை இப்படி அந்தப் பட்டியல் நீளும். சட்டக் கல்வி கற்ற தெ.பொ.மீ. அவர்களும் தமிழன்னைக்குத் தொண்டு செய்வதில் ஈடுபட்டார். ஏனைய பெருமக்களுக்கும் இவருக்கும் ஒரு வேற்றுமை உண்டு. அவர்களில் பலர் தமிழின் பெருமை குறித்துத் தமிழிலேதான் எழுதி வந்தனர்; தமிழைக் குறித்து ஆங்கிலத்தில் நூல் எழுதியதில்லை. அந்தப் பணியை ஆர்வத் துடன் செய்து வேற்றுமொழியினருக்கும் வேற்று நாட்டினர்க்கும் தமிழின் பெரு மையை எடுத்துரைத்து, உலக அரங்கில் அதன் பெருமையை உயர்த்தியவர் தெ.பொ.மீ. ஆவார். 1929-ஆம் ஆண் டிலிருந்து அவர் எழுதிய நூல்களின் எண் ணிக்கை 42. இவற்றில் ஆங்கில நூல்கள் மட்டும் 13 ஆகும்.

குலசேகரர், கானல்வரி, குடிமக்கள் காப்பியம், நற்றிணை நாடகங்கள், வள்ளுவரும் மகளிரும், வள்ளுவர் கண்ட நாடும் காமமும், சம்பந்தரும் சமணரும், தமிழ் மணம், பாட்டிலே புரட்சி, கல்விச் சிந்தனைகள் இப்படி அவரது நூல்கள் பலவகையில் அமைந்தன. ஒவ்வொரு நூலிலும் அவரது முத்திரை ஒளி வீசும். இனிய நடை - வலுவான வாதம் - தக்க அகச்சான்றுகள் - புறச் சான்றுகள் அவரது நூல்களில் திகழும். படிப் போரைப் பயமுறுத்தும் நடை அவரிடம் கிடையாது. அவரது நூல்கள், இளநிலை, இளங்கலை, முதுகலை வகுப்புகளுக்கும் பாடநூல்களாக இடம் பெற்றிருந்தன.

கோவலன்-மாதவி பண்பு நலன் குறித்து ஆய்வு செய்து எழுதிய கானல் வரி நுட்பம் நிறைந்த நூலாகும். தமிழ் இலக்கியத் திறனாய்வு வரலாற்றில் முக்கியத்துவம் பெற்றதாகும்.

முல்லைப்பாட்டு குறித்து ஆய்வு செய்து ஆங்கிலத்தில் எழுதிய நூல் சான்றோர்களின் பாராட்டை அதிக அளவில் பெற்றது. 1952-இல் தமிழக அரசின் பரிசு பெற்றது.



## புலவர் தமிழ்ப்பித்தன் மறைவு

புலவர் தமிழ்ப்பித்தன் (எஸ். சண்முக சுந்தரம்) அவர்கள் 8.4.93 அன்று காலமானார்.

புலவர் தமிழ்ப்பித்தன், 'தமிழரசு' தொடங்கிய காலத்திலிருந்தே (1970) பணியாற்றி வந்தவர். முதலில் 'டைப்போ கிராப்பர்' ஆகச் சேர்ந்து, உதவியாசிரிய ராகி பிறகு இணையாசிரியராகப் (மக்கள் தொடர்பு அலுவலர்) பணியாற்றி ஓய்வு பெற்றவர் (1991).

கவியரசு கண்ணதாசன் அவர்களின் உதவியாளராக நீண்டநாள் பணியாற்றிய தோடு, அவரது தென்றல், முல்லை இதழ் களில் உதவியாசிரியராகவும் பணியாற்றி யவர். இலக்கிய உலகில் புகழ்பெற்றதைப் போலவே திரையுலகிலும் பல்லாண்டுகள் (1957-1969) பணிபுரிந்துள்ளார். முப்பதுக்கும் மேற்பட்ட நூல்கள் எழுதி யுள்ளார். 'தென்னாட்டுக் காந்தி' என்னும் நூலுக்குத் தமிழக அரசின் பரிசும் (1973), குழந்தை எழுத்தாளர் சங்க இலக்கியப் போட்டியில் வெள்ளிப் பதக்கமும் (1987) பெற்றவர்.

20 ஆண்டுக்காலத் 'தமிழரசு' குறித்து ஆய்வு செய்தவர். அது, ''இதழியல் உலகில் தமிழரசு'' என்னும் தலைப்பில் நூலாக வெளிவந்துள்ளது குறிப்பிடத் தக்கது.

அன்னாரின் மறைவுக்கு, 'தமிழரசு' ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள் கிறது.

தமிழ் இலக்கியத் துறையில் ஒப்பீட்டு இலக்கியம் வளர்வதற்குப் புதிய பாதையை உருவாக்கினார் தெ.பொ.மீ.

அறிவியல் கருத்துக்கள் தமிழில் பரவவேண்டும் என்பதில் தெ.பொ.மீ. அவர்களுக்கு மிகுந்த அக்கறை இருந்தது. அறிவியல் ஏடான கலைக்கதிரில் அறிவியல் கட்டுரைகள் பலவற்றை அவர் ஆவர்வத்துடன் தீட்டி வந்தார். ஐன்ஸ்டி னுடைய சார்புக் கொள்கையை (Theory of Relativity) முதன் முதலில் தமிழில் எடுத்துரைத்தார்.

மாண்டிசோரி அம்மையாரின் புதிய கல்வி முறையைப் போற்றினார். 1943-இல் அவரே மாண்டிசோரிப் பள்ளி ஒன்றைத் தொடங்கினார். ஓரளவு படித்தவர்களும் அந்த அம்மையாரின் கொள்கைகளைப் புரிந்து கொள்ளும் வகையில் குழவி உள்ளம் என்னும் நூலை எழுதினார். அதனை ஒரு பெண்ணின் பெயரில் வெளியிட்டார்.

உளவியல் நூல் (Psychology) ஒன்றை 1944-இல் எழுதினார். மாதை சாத்திரம் என்னும் தலைப்புள்ள அந்நூல்தான் தமிழ் மொழியில் முதன்முதலாக எழுதப் பட்ட உளவியல் நூல் ஆகும்.

விண்வெளி ஆராய்ச்சிச் சாதனைகள் குறித்துத் தமிழ் கூறும் நல்லுலகிற்கு 1945-ஆம் ஆண்டிலேயே எடுத்துரைத்த தெ.பொ.மீ. அவர்கள், தமது மூத்த மகள் காமேச்சுவரியின் திருமண வரவேற்பின் போது, வருகை புரிந்த பெருமக்களுக்கு 'வானக் குமிழி' என்னும் விண்வெளி ஆய்வு நூலை அன்பளிப்பாக வழங் கினார். விருந்தினர்க்குத் தேங்காய் பழம் தந்துவரும் வழக்கத்தை மாற்றி அறிவு தரும் நூல்களை வழங்கும் புதிய முறையை அறிமுகம் செய்தார்.

தமிழ்க் கலைக் களஞ்சியத்தின் பத்துத் தொகுதிகளிலும் தெ.பொ.மீ. அவர் களின் சாதனையைக் காணலாம். ஒவ் வோர் எழுத்துக் குறித்தும் அவர் எழுதிய குறிப்புகள் போற்றிப் பாராட்டத் தக்கவை.

1955-இல் அனைத்து அறிவியல் சொல்லாக்கக் குழுவின் தலைவராக நியமிக்கப் பெற்றார். தெ.பொ.மீ. - Personality என்பதற்குரிய தமிழ்ச் சொல் என்ன என்னும் சிக்கல் எழுந்த போது, ''ஆளுமை'' என்னும் சொல்லை அறி முகம் செய்தார். அச்சொல் இன்று எளியோராலும் விரும்பிச் சொல்லப் படும் பெருமை பெற்றுள்ளது.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: இரா. சம்பத், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை

எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

- ★ பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
- ★ பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
- ★ பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
- ★ லுங்கிகள், துவாலைகள். வேட்டிகள்.
- ★ படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ்
விற்பனை நிலையத்தை அணுகவும்.

காதிகிராப்ட்



DIPR/273/

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
குறளகம், சென்னை - 600 108

# இந்த இதழில்...

அண்ணல் அம்பேத்கர் மணிமண்டபம் 1 கோடி ரூபாய் செலவில் அமையும் —மாண்புமிகு முதல்வர் உரை ... 2
சென்னையில் குடிநீர்த் தட்டுப்பாட்டைச் சமாளிக்க நெய்வேலியிலிருந்து இரயில் மூலம் தண்ணீர் ... 5
ஊர்த் தொழிலாளர் உழைப்பு (கவிதை) ... 7
காவல் துறையை நவீனப்படுத்திட 10 கோடி ரூபாய் ஒதுக்கப்படும் ... 9
விஞ்ஞான நகரம் உருவாக்குவோம்! —மாண்புமிகு முதல்வர் உரை ... 11
தென்னார்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் மாளிகை ... 15
மேன்மையான நாள் (கவிதை) ... 16
கல்வராயன் மலை ... 17
தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் ... 21
தொழுநோய் ஒழிப்பு - 'டேன்லப்' திட்டம் ... 23
ஆடல் காணீரோ! ... 24
அண்ணாமலைப் பல்கலைக் கழகம் ... 27
மகளிர் நலம் பெற ... 29
'மக்கள் பணியே மகேசன் பணி' என்ற கடமை உணர்வோடு பணியாற்றுவீர்! —மாண்புமிகு முதல்வர் உரை ... 33
சந்தனக் கடத்தல் வீரப்பனைப் பிடிக்க கர்நாடக அரசுடன் கூட்டு முயற்சி ... 41
காது, மூக்கு, தொண்டை மருத்துவம் ... 44
அறிவியல் மேதை பெ.நா. அப்புஸ்வாமி... 47

தமிழரசு
திருவள்ளுவர் ஆண்டு 2024
சித்திரைத் திங்கள் - 18
இதழ்: 21
மலர்: 23
1-5-1993

## மேதினம் பூத்தது!



தொழிலாளி -முதலாளி முறையே இருக்கக்கூடாது; வேலை செய்பவர்கள் பங்காளிகளாக அல்லாமல் கூலிக்காரர்களாக இருப்பது அடிமைத்தனம்.



ஏழை என்றும் பணக்காரன் என்றும் இரு வர்க்கம் இருப்பது பொதுவாகவே சமூகத்துக்குக் கேடு, ஆபத்து என்று எடுத்துக் கூறி, பாட்டாளியின் துயரைத் துடைக்கப் பாடுபட்டார்கள், சமதர்ம நோக்குடைய தலைவர்கள் . அந்த அரும் பணியின் ஆரம்ப வேலை, தொழிலாளரின் உழைப்பு, காலம், அளவு, கட்டு திட்டம் முதலாளிகளால் சூறையாடப்படுவது தடுக்கப்பட வேண்டும் என்று தொடங்கப்பட்ட முதல் முயற்சி, மே தினம்!



சமத்துவச் சமுதாயம் காண்பதே உழைக்கும் வர்க்கத்தின் உண்மையான இலட்சியம் எனும் மூலக் கருத்திற்கு முதலிடம் தாருங்கள்! நம்மைக் காட்டிலும் நலிந்துள்ள நமது உடன் பிறப்புக்களை முன்னேற்றக்கூடிய பொருளாதார மாற்றத்திற்கு அடிப்படை அமைத்திடுங்கள்! புதுயுகத்தின் ஈட்டி முனைகளாக, முன்னோடிகளாக விளங்கிடுவீர்.

நான்காம் அட்டை:

மே தினத்தைக் குறிக்கும் உழைப்பாளர் சிலை.

இன்னொரு புதிய அத்தியாயம், இன்று எழுதப் படுகிறது என்று கூறிக்கொள்வதில், நான் பெரு மகிழ்ச்சி கொள்கின்றேன். நான் பெருமகிழ்ச்சி கொள்கின்றேன். அத்தியாயம், இன் று எழுதப் படுகிறது என்று கூறிக்கொள்வதில், போற்றத் தக்க அந்தப் புகழ் வரலாற்றில், இன்னொரு புதிய சமயங்களில் தவறாது வெளிப்படுத்தியே வந்திருக் கிறது. தலைவருக்குத் , தமிழகம் தன் மரியாதை யைத், தக்க வைத்தார்கள்.

''அம்பேத்கர் இருந்த இடமும், தூரமும், மிக அதிகம். எனினும், இங்கு தமிழ்நாட்டில் பற்பல இடங்களில், அம்பேத்கர் மன்றம், அம்பேத்கர் படிப்பகம், அம்பேத்கர் படத் திறப்பு, என்று அவரது அந்தப் பெயரைச் சொல்லி, உவகை கொள்வதுண்டு நாம்'', என்று, பேரறிஞர் அண்ணா அவர்கள் பெருமையுடன் கூறினார்கள். அன்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறியபடி, இன்று அவர் வழியில் நடை போடுகின்ற இந்த அரசு, அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பெயர், என்றென்றும் நிலைத்திருக்க வேண்டுமென்ற நல்லெண்ணத்தில், அவரது பெயரைத் தாங்கும் போக்குவரத்துக் கழகம் ஒன்று அமைக்க, ஆணை பிறப்பித்துள்ளது.

அதே வரிசையில்தான், இன்று இந்த மணி மண்டபத்திற்குக் கால்கோள் விழா நடந்தேறிக் கொண்டு இருக்கிறது. அந்தத் திராவிடப் பாரம் பரியத்தில் வந்த, உங்கள் அன்புச் சகோதரியாகிய நான், அண்ணல் அம்பேத்கர் அவர்களின் நினைவு, என்றும் நிலைத்திருக்க, தமிழகத்தின் தலை நகரில், அண்ணல் அம்பேத்கர் மணிமண்ட பத்திற்கு இன்று அடிக்கல் நாட்டுகின்றேன். இம் மணிமண்டபத்திற்காக 5 ஏக்கர் நிலம் கொடுக்கப் பட்டுள்ளது. ஏறத்தாழ ஒரு கோடி ரூபாய் செலவில், கட்டப்பட உள்ள இந்த மணிமண்டபத் திற்கு, 50 இலட்சம் ரூபாய் ஏற்கெனவே கொடுக் கப்பட்டுள்ளது.

டாக்டர் அம்பேத்கர் அவர்களின் எழுத்தோவி யங்களைக் கொண்ட ஒரு நூலகமும், ஒரு நவீன மாநாட்டுக் கூடமும், அழகுற அமைக்கத் திட்ட மிடப்பட்டுள்ளது. இப்பணிகள் விரைவில் தொடங்கப்பட்டு, மிகக் குறுகிய காலத்தில் கட்டி முடிக்கப்படும்.

தெற்கே தந்தை பெரியாரும், வடக்கே டாக்டர் அம்பேத்கரும், தோன்றியிராவிட்டால், தாழ்த்தப் பட்ட மக்களுக்கு நமது சமுதாயத்தில், மீட்சி என் பதே கிடைத்திருக்காது. அப்படிப்பட்ட மாபெரும் தலைவரான, விடுதலை வீரரான, சமூகப் போராட்ட சீலரான, இந்திய அரசில் சட்டத்தின் சிற்பியான, இந்திய அரசின் முதல் சட்ட அமைச் சரான, அண்ணல் அம்பேத்கர் அவர்களின் புகழ், என்றென்றும் வாழ்க, வளர்க, என்று வாழ்த்தி, அவர் புகழைப் போற்றும் வகையில், அவர் பெயரால், காலகாலத்திற்கும் நின்று நிலைக்கப் போகும், இந்த மணிமண்டபத்திற்கு அடிக்கல் நாட்டுவதில், பெருமகிழ்ச்சி அடைகிறேன் என்று தெரிவித்து விடைபெறுகிறேன்.

***—14.4.1993 அன்று, சென்னையில் நடைபெற்ற டாக்டர் அம்பேத்கர் நூற்றாண்டு நினைவு மண்டபம் அடிக்கல் நாட்டு விழாவில ஆற்றிய உரை.***

## தாயின் பெயரின் முதலெழுத்தையும் மாணவர்கள் பெயரில் சேர்க்க அனுமதி

**மாணவர்கள் பள்ளியில் சேரும் போது, தாயின் பெயரில் உள்ள முதலெழுத்தையும் அவர்கள் பெய ருக்கு முன்னால் சேர்த்துக்கொள்ள அனுமதிக்கப்படும்.**

**மாணவர்களின் நலனில் தாய் தந்தை இருவருமே பொறுப்பாக இருப்பதால் தாயினுடைய பெயரி லுள்ள முதல் எழுத்தும் மாணவரின் பெயருக்கு முன்னால் இடம் பெறு வது தகுதியாக இருக்கும். எனவே, மாணவர்கள் முதல் வகுப்பில் சேரும்போது விருப்பம் தெரிவித் தால் அவர்கள் பெயருக்கு முன் னால் தாய் பெயரின் முதலெழுத்தை 'இனிஷியலாக'ச் சேர்க்க வகை செய்யப்படும்.**

**மேற்கண்ட தகவலை, மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் திரு. செ. அரங்கநாயகம் அவர்கள் சட்டப் பேரவையில் அறிவித்தார் (1.4.'93).**

## தமிழ்நாட்டில் புதிய போக்குவரத்துக் கழகங்கள்

**த**மிழ்நாட்டில் புதிதாக மூன்று போக்குவரத்துக் கழகங்கள் உருவா கின்றன.

★ திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, தமிழ்நாட்டிலிருந்து வெளிமாநிலங் களுக்குச் செல்லும் பேருந்துகளைக் கொண்டு 'புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா போக்குவரத்துக் கழகம்' என்னும் பெயரில் புதிதாக போக்குவரத்துக் கழகம் ஆரம்பிக்கப் படும்.

★ கவிக்குயில் பாரதியாருக்குப் பெருமை சேர்க்கும் வகையில் சேரன் போக்குவரத்துக் கழகம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, மலைப் பிரதேசத்துக்குச் செல்லும் பேருந்து களைக் கொண்டு ஊட்டியில், 'மகாகவி பாரதியார் போக்கு வரத்துக் கழகம்' எனும் புதிய போக்குவரத்துக் கழகம் உருவாக் கப்படும்.

★ பல்லவன் போக்குவரத்துக் கழகத் தைப் பிரித்து 'டாக்டர் அம்பேத்கர் போக்குவரத்துக் கழகம்' என்ற பெயரில் புதிய போக்குவரத்துக் கழகமும் உருவாக்கப்படும்.

- போக்குவரத்துத்துறை மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத் துக்கு மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் சட்டப் பேரவையில் பதிலளித்துப் பேசுகை யில் அறிவித்தார். (6.4.1993).




## சென்னையில் குடிநீர்த் தட்டுப்பாட்டைச் சமாளிக்க நெய்வேலியிலிருந்து இரயில் மூலம் தண்ணீர்: முதல்வர் பெற்றுக் கொண்டார்

**சென்னை நகரக் குடிநீர்த் தட்டுப்பாட்டைச் சமாளிக்க ஈரோடு மற்றும் நெய்வேலி நகரங் களிலிருந்து இரயில் மூலம் தண்ணீர் கொண்டுவர அரசு முடிவு செய்தது.**

**இந்தத் திட்டத்தின்கீழ் நெய்வேலியிலிருந்து முதன்முறையாகச் சென்னைக்கு இரயில் மூலம் கொண்டுவரப்பட்ட தண்ணீரை, தமிழ்ப் புத் தாண்டுத் தினமான 14.4.'93 அன்று மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பெற்றுக் கொண்டார்.**

**ஒன்பது வேகன்களில் சென்னை எழும்பூர் வந்தடைந்த குடிநீரை, எழும்பூரில் நடைப்பெற்ற எளிமையான விழாவில் பச்சை விளக்கு காண் பித்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் வரவேற் றார். பின்னர் இரயிலில் ஒரு வேகனில் இருந்த குழாயைத் திறந்து, 9 பெண்களுக்குக் குடங்களில் தண்ணீர் விநியோகம் செய்து குடிநீர்த் திட்டத் தைத் தொடங்கி வைத்தார் முதல்வர் அவர்கள்.**

**நாள்தோறும் 18 இலட்சம் லிட்டர் தண்ணீர் நெய்வேலியிலிருந்து சென்னைக்கு இரயில் மூலம் கொண்டு வரப்படும். எழும்பூருக்குக் கொண்டு வரப்படும், இந்தத் தண்ணீர் பின்னர் லாரிகள் மூலம் கீழ்ப்பாக்கத்திலுள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்துக்குக் கொண்டு வரப்பட்டு பின்னர்,**



# அண்ணல் அம்பேத்கர் மணிமண்டபம் ஒரு கோடி ரூபாய் செலவில் அமையும்!



## அடிக்கல் நாட்டு விழாவில் மாண்புமிகு முதல்வர் உரை!

**மா**னுட இனத்தின் மகத்தான விடிவெள்ளியாகத் திகழ்ந்த, ஒரு மாமேதைக்கு மணிமண்டபம் அமைக்கும், இந்த மாபெரும் விழாவில் கலந்து கொள்வதில், மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

அண்ணல் அம்பேத்கர், ஆயிரம் ஆண்டுக்கு ஒரு முறை மட்டுமே மலரும் அதிசய மலர். ஒருவர் மாமேதையாக இருக்கலாம்; போராட்ட வீரராய் இருப்பதில்லை. போராட்ட வீரராய் இருக்கலாம்; பேரறிஞராய்த் திகழ்வதில்லை. அம்பேத்கர் அவர்கள், போராட்ட வீரராய்த் திகழ்ந்த மாமேதை!

அண்ணல் அம்பேத்கர் அவர்கள், தந்தை பெரியாரைப் போன்ற போராட்ட வீரர்!

பேரறிஞர் அண்ணாவைப் போன்ற மாமேதை!

புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களைப் போன்ற, ஒரு மனிதாபிமானி!

- எனவே தான், அவரைப் போற்றுவதில் வேறு யாரையும் விட நாம் முன் நிற்கின்றோம்.

அவருக்குச் செய்யப்படும் சிறப்பு, அறிவுக்குச் செய்யப்படும் சிறப்பு மட்டுமல்ல; புரட்சிக்கும், போராட்ட உணர்வுக்கும் செய்யப்படுகின்ற சிறப்பு; ஜனநாயகத் தத்துவத்துக்குச் செய்யப்படுகின்ற சிறப்பு; பலகோடித் தாழ்த்தப்பட்ட சகோதர, சகோதரிகளுக்கு, நாம் செய்யும் சிறப்பு!

அந்தச் சிறப்பை, திராவிட இனத்தின் இலட்








மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 14.4.93 அன்று சென்னையில் நடைபெற்ற விழாவில் டாக்டர் அம்பேத்கர் நூற்றாண்டு நினைவு மண்டபத்திற்கு அடிக்கல் நாட்டி, 365 ஆதிதிராவிட மக்களுக்கு ரூபாய் ஒரு கோடியே அறுபத்தைந்து இலட்சம் மதிப்புள்ள அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

— முதல் அட்டை சொல்லும் செய்தி: —

சிய விளக்கை, கைகளில் ஏந்தியிருக்கிற நான், இன்றைக்குச் செய்வதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்தியாவில் தோன்றிய அரசியல் இயக்கங்கள், சமூக சீர்திருத்த விடுதலை இயக்கங்கள், எத்தனையோ இருந்தாலும், திராவிடப் பாரம்பரியத்திற்கு மட்டுமே - திராவிட இயக்கங்களுக்கு மட்டுமே - மாமேதை அம்பேத்கர் அவர்களின் கொள்கை, நெருக்கமானது.

''1924-இல், தந்தை பெரியார் வைக்கத்தில் நடத்திய, தீண்டாமை ஒழிப்புப் போராட்டம் தான் என்னுள், பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது'' என்று, 1927-ஆம் ஆண்டிலேயே, அண்ணல் அம்பேத்கர் அவர்கள் பிரகடனம் செய்தார். ''அம்பேத்கர் அவர்களுக்குச் சமமாக, இந்தியாவில் யாரையும் சொல்ல முடியாது. இன்று மட்டுமல்ல, முப்பது ஆண்டுகளுக்கு முன்பாகவே, இதை நான் கூறியிருக்கிறேன். 1930-ஆம் ஆண்டு முதலே எனக்கு அவரைத் தெரியும்'' என்று, தமிழகம் தந்த தன்மானச் சிங்கம், தந்தை பெரியார் அவர்கள், அறிவுலக மேதை அம்பேத்கர் அவர்களுக்கு, மகுடம் சூட்டி மகிழ்ந்தார்.

வைர வரிகளாக விளங்கும், இந்த இரு வாசகங்களும், அண்ணல் அம்பேத்கர் யார், அவர்க்கும் நமக்கும் உள்ள இலட்சியப் பிணைப்பு என்ன, எப்படிப்பட்டது என்பதைக் காலமெல்லாம் நிலைத்து நின்று கூறப் போகிற, கருத்துக் கருவூலங்களாகும்.

புரட்சி மனப்பாங்கைப் போற்றுவதில், சீர்திருத்த உணர்வுக்குச் சிறப்பளிப்பதில், தமிழகம் என்றைக்குமே முன்னணியில் தான் நிற்கின்றது. 1990-ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள் 12-ஆம் நாள், அண்ணல் அம்பேத்கர் அவர்களின் திருவுருவப் படம், நாடாளுமன்றத்தில் திறந்து வைக்கப்பட்டது. ஆனால், அதற்குப் பத்தாண்டுகளுக்கு முன்னரேயே, அதாவது 1980-ஆம் ஆண்டிலேயே, அண்ணல் அம்பேத்கர் அவர்களின் திருவுருவப் படத்தை, நமது இதயதெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், தமிழ்நாடு சட்டப்பேரவையில் திறந்து வைத்தார்கள். தாழ்த்தப்பட்ட மக்களின் ஒப்பற்ற தலைவருக்குத், தமிழகம் தன் மரியாதையைத், தக்க சமயங்களில் தவறாது வெளிப்படுத்தியே வந்திருக்கிறது. போற்றத் தக்க அந்தப் புகழ் வரலாற்றில்,

# தொலைக்காட்சி நிலையம்

**(1) சென்னைத் தொலைக்காட்சி-2வது அலை வரிசைக்குப் புதிய கட்டடம்:**

தற்போது சென்னை தொலைக்காட்சி நிலையத்திலுள்ள பழைய கட்டடத்திலிருந்து 2-வது அலை வரிசை நிகழ்ச்சிகள் அஞ்சல் செய்யப்பட்டு வருகின்றன.

இரண்டாவது அலைவரிசைக்கென பழைய கட்டடத்தின் அருகாமையிலேயே புதிய கட்டடம் உருவாகி வருகிறது.

இவ்வருட இறுதிக்குள் நவீன காமிராக்கள் மற்றும் இதர சாதனங்கள் இக்கட்டடத்தில் வைக்கப்படும்.

**(2) இராமேஸ்வரத்தில் உயர் சக்தி தொலைக்காட்சி அஞ்சல் நிலையம்:**

இராமேஸ்வரத்தில் உயர்சக்தி தொலைக்காட்சி அஞ்சல் நிலையத்திற்கான 300 மீட்டர் உயரமான கோபுரம் கட்டும் பணி துவங்கப்பட்டு விட்டது. இந்த உயர் சக்தி அஞ்சல் நிலையத்திற்குத் தேவையான சாதனங்கள் தயாராக உள்ளன.

**(3) கும்பகோணத்தில் உயர் சக்தி அஞ்சல் நிலையம்:**

எட்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் கும்பகோணத்தில் ஒரு உயர் சக்தி தொலைக்காட்சி அஞ்சல் நிலையம் நிறுவப்படவுள்ளது. இதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

**(4) குறைந்த சக்தி கொண்ட தொலைக்காட்சி அஞ்சல் நிலையங்கள்:**

1992-93-ஆம் ஆண்டு திட்டத்தின்கீழ் கீழ்க்கண்ட இடங்களில் குறைந்த சக்தி கொண்ட தொலைக்காட்சி அஞ்சல் நிலையங்கள் நிறுவப்படவுள்ளன.-

1. ராஜபாளையம்
2. ஆர்க்காடு
3. குடியாத்தம்
4. பட்டுக்கோட்டை

மேலும், உடுமலைப்பேட்டையில் ஒரு குறைந்த சக்தி கொண்ட தொலைக்காட்சி அஞ்சல் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு உள்ளது.

**வானொலி-நிலையத் திட்டங்கள்**

**1. தூத்துக்குடி:** தூத்துக்குடியில் ஒரு 2 × 100 கிலோ வாட் மத்திய அலைவரிசை (Medium wave) டிரான்ஸ்மிட்டர் மற்றும் டைப் 1(ஆர்) அஞ்சல் திட்டம் முடியும் தருவாயில் உள்ளது.

**2. கிண்டி:** சென்னை, கிண்டியில் நேஷனல் சேனல் ஸ்டுடியோ அமைப்பதற்கான வரைவுகள் இறுதி செய்யப்படும் நிலையில் உள்ளன. இத்திட்டம் ஒப்புதலை எதிர்நோக்கி உள்ளது.

**3. கொடைக்கானல்** ஒரு 2 × 5 கி.வாட் பண்பலைவரிசை அஞ்சல் நிலையம், கொடைக்கானலில் உள்ள தொலைக்காட்சி அஞ்சல் நிலைய வளாகத்தில் நிறுவப்பட்டுள்ளது. கொடைக்கானலில் அகில இந்திய வானொலி பண்பலை நிலையம் அமைப்பதற்கு அனுமதிக்கப்பட்டு, கட்டப்பட்டு வருகிறது. இந்தப் பணி இந்த ஆண்டு இறுதிக்குள் முடிந்துவிடும்.

**4. உதகமண்டலம்:** மத்திய அலைவரிசை 1 கிலோ வாட் அஞ்சல் நிலையம் மற்றும் எம்பி ஸ்டுடியோ திட்டங்கள் ஏற்கனவே துவக்கப்பட்டு முடியும் தறுவாயில் உள்ளது. இது இன்னும் ஆறு மாத காலத்திற்குள் செயல்படுத்தப்படும்.

(செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல்-கொள்கை விளக்கக் குறிப்பிலிருந்து)

---

அங்கிருந்து குழாய்கள் மூலம் பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்படும்.

விழாவிற்கு வந்திருந்த மாண்புமிகு முதல்வர் அவர்களை உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. அழகு திருநாவுக்கரசு, கைத்தறித்துறை அமைச்சர் திரு. இ. மதுசூதனன் ஆகியோர் வரவேற்றனர்.

நெய்வேலியிலிருந்து சென்னைக்கு இந்த இரயில் வந்துசேர, ஆறரை மணி நேரம் ஆகிறது.

இதைப்போல ஈரோட்டிலிருந்து கொண்டு வரப்பட்ட தண்ணீர் வில்லிவாக்கத்தில் பெறப்பட்டு அங்கிருந்து லாரிகள் மூலம் எடுத்துச் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

விழாவில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சட்டப்பேரவைத் துணைத் தலைவர் பேராசிரியர் திரு. க. பொன்னுசாமி, நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், தமிழக அரசு தலைமைச் செயலாளர் திரு. டி.வி. வெங்கட்ராமன் இ.ஆ.ப. தென்னக இரயில்வே கூடுதல் பொது மேலாளர் திரு. சி.எஸ். கண்ணன், சென்னை குடிநீர் வாரிய அலுவலர்கள், சென்னை மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.



# ஊர்த் தொழிலாளர் உழைப்பு!

புரட்சிக்கவிஞர் பாரதிதாசனார்



சித்திரச் சோலைகளே! உமை நன்கு
திருத்த இப் பாரினிலே - முன்னர்
எத்தனை தோழர்கள் ரத்தம் சொரிந்தனரோ! உங்கள் வேரினிலே!

நித்தம் திருத்திய நேர்மையி னால்மிகு
நெல்விளை நன்னிலமே!-உனக்
கெத்தனை மாந்தர்கள் நெற்றி வியர்வை
இறைத்தனர் காண்கிலமே!

ஆர்த்திடும் யந்திரக் கூட்டங்களே! உங்கள்
ஆதி அந்தம் சொல்லவோ? - நீங்கள்
ஊர்த் தொழிலாளர் உழைத்த உழைப்பினில்
உதித்தது மெய் அல்லவோ?

நீர்கனல் நல்ல நிலம் வெளிகாற்றென
நின்ற இயற்கைகளே!-உம்மைச்
சாரும் புவிப்பொருள் தந்ததெவை? தொழிலாளர் தடக்கைகளே!

தாரணியே! தொழிலாளர் உழைப்புக்குச்
சாட்சியும் நீயன்றோ? - பசி
தீரும் என்றால் உயிர்போகும் எனச்சொல்லும்
செல்வர்கள் நீதி நன்றோ?

TNPSC

விளம்பர எண். 17/93

தமிழ்நாடு தொழில் சார்நிலைப் பணியில், இளநிலை வேதியியலர் (Junior Chemist) பதவியில் இரண்டு காலியிடங்களுக்கு நேரடித் தேர்வின் மூலம் நியமனம் செய்ய விண்ணப்பங்கள் 24.5.1993 அன்று மாலை 5.45 மணி வரையில் வரவேற்கப்படுகின்றன.

ஆதிதிராவிட வகுப்பினர் .. 1
பகிரங்கப் போட்டி .. 1

**குறிப்பு:** இப்பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளைப் பெற்றிருந்து, குறைந்தபட்ச மதிப்பெண்களைப் பெறுவதன் மூலம் தெரிவுக்குத் தகுதியானவராகக் கருதப்படும் ஆதரவற்ற விதவைகள், அவர்களைவிட அதிக மதிப்பெண்களைப் பெற்றிருப்பவர்களைக் காட்டிலும் முன்னுரிமை வழங்கப்பட்டுத் தெரிவு செய்யப்படுவர்.

**விளக்கம்:** 'ஆதரவற்ற விதவை' என்பது, வாழ்வதற்குத் தனக்கென்று எந்தவொரு வழியும் இல்லாதவரும், பட்டினியிலிருந்து தன்னைக் காப்பாற்ற எந்தவொரு ஆதரவாளரும் இல்லாதவரும் ஆன விதவையைக் குறிப்பதாகும்.

**சம்பளம்:** மாதம் ஒன்றுக்கு ரூ.1,640-2,900

**வயது:** 1.7.1993 அன்றுள்ளபடி 30 வயதிற்குக் குறைவாக.

ஆதிதிராவிட வகுப்பினர், பழங்குடி வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆகியோர் பட்டம் பெற்றிருந்தாலோ அல்லது பி.டி.சி./பி.யு.சி./மேல்நிலை வகுப்பில் தேர்ச்சி பெற்ற பின்பு பட்டயம் (Diploma) பெற்றிருந்தாலோ அவர்களுக்கு வயது வரம்பு இல்லை. எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி பெற்ற பின்பு பட்டயம் பெற்றிருக்கும் ஆதிதிராவிட வகுப்பினர், பழங்குடி வகுப்பினருக்கு வயது வரம்பு ஐந்து ஆண்டுகள் உயர்த்தப்படும்.

(மேலும் சில சலுகைகள் கீழே அறிவிக்கப்பட்டுள்ளன.)

**தகுதி:** (6.4.1993 அன்றுள்ளபடி): அடியிற்குறிப்பிட்டுள்ளவை அல்லது அவற்றிற்கு இணையானவை:

வேதியியலில் ஏதேனும் ஒரு பிரிவில், முதல் அல்லது இரண்டாம் வகுப்பில் முதுநிலைப் பட்டம்.

அல்லது

இன்ஸ்ட்டிடியூஷன் ஆஃப் கெமிஸ்ட்ஸ் (இந்தியா), தேர்வு மூலம் வழங்கிய அசோசியேட்ஷிப் டிப்ளமா.

ஆதிதிராவிட வகுப்பினர், பழங்குடி வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், ஆதரவற்ற விதவைகள், தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர், நாற்பது வயதிற்குக் குறைவாக உள்ள பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட மற்றும் பணியிலிருக்கின்ற தற்காலிக மாநில அரசுப் பணியாளர்கள் போன்றவர்களுக்கு வயது மற்றும்/அல்லது தகுதியலிருந்து அளிக்கப்படும் சலுகைகள் மற்றும்/அல்லது விண்ணப்பக் கட்டணச் சலுகைகள் தேர்வாணையத்தின் 'பணி வேட்பாளர்களுக்கான விதிமுறைகளில்' தரப் பட்டுள்ளன. (பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வழங்கப்படும் சலுகைகள் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினருக்கும் பொருந்தும்).

விண்ணபப் படிவமும், நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களிடம் எழுத்து மூலம் கோரிப் பெற்றுக் கொள்ளலாம். கோரிக்கைகள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ, பதவியின் பெயர் மற்றும் விளம்பர எண் ஆகியவை குறிப்பிட்டு எழுதப்பட்டு, செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு வழங்கக்கூடிய 1.4.93 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட ரூ.10/-க்கான (ரூபாய் பத்து), சென்னை அண்ணா சாலை தலைமை அஞ்சல் நிலையத்தில் செலுத்தத்தக்க கோடிட்ட அஞ்சல் ஆணை அல்லது பாரத ஸ்டேட் வங்கியின் State Bank of India) ஏதாவது ஒரு கிளையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலாளருக்கு வழங்கக் கூடிய 1.4.1993 அன்றோ அல்லது அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட, பாரத ஸ்டேட் வங்கி, ஆயிரம் விளக்குக் கிளை, சென்னை-600 006-இல் செலுத்தத்தக்க ரூ.10-க்கான 'கேட்புக் காசோலை' (Demand Draft) -யுடனும் சுயவிலாசம் எழுதிய உறையுடனும் (26 x 12 செ.மீ.) அனுப்ப வேண்டும். கோரிக்கைகள் பிற மொழியில் இருக்குமாயின், அத்துடன் ஆங்கில மொழி பெயர்ப்பும் இணைக்கப் பட்டிருக்க வேண்டும். மேற்கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டா.

DIPR/613/MS/93





# காவல்துறையை நவீனப்படுத்திட

# 10 கோடி ரூபாய் ஒதுக்கப்படும்!

(சட்டமன்றத்தில் காவல்துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதங்களுக்கு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் 22.4.'93 அன்று அளித்த பதிலுரையிலிருந்து சில பகுதிகள்...)

குழு பாதுகாப்புத் திட்டம்:

• காவல்துறையில் உள்ள அனைவரையும் ஒரு ஒட்டு மொத்த குழுப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் (Group Insurance Scheme) கொண்டு வந்து, அவர்களுக்கும் குறிப்பாக அவர்தம் குடும்பங்களுக்கும் ஒரு நிலையான பாதுகாப்பை அளிக்க இந்த அரசு முன் வந்திருக்கிறது. அண்டை மாநிலமான கர்நாடகம், ஆந்திரா போன்ற மாநிலங்களில் குழுப் பாதுகாப்புத் திட்டம் உள்ளது. அவற்றை எல்லாம் பரிசீலித்து, அவற்றைவிட அதிகப் பயனுள்ள வகையில் ஒரு பாதுகாப்புத் (Insurance) திட்டத்தைத் தீட்டியுள்ளோம். அதன்படி, காவல் துறையில் உள்ள அனைவரும் பணிபுரியும் பொழுது இறந்தால் (Death in duty) காவலர் முதல் கூடுதல் கண்காணிப்பாளர் நிலை வரை உள்ள அலுவலர்களுக்கு 1 இலட்சம் ரூபாயும், கூடுதல் கண்காணிப்பாளர் முதல் காவல்துறைத் தலைவர் நிலை வரை உள்ள அலுவலர்களுக்கு 5 இலட்சம் ரூபாயும், கூடுதல் காவல்துறை இயக்குநர் நிலை அலுவலர்களுக்கு 7.5 இலட்சம் ரூபாயும், காவல்துறை இயக்குநர் நிலையில் உள்ள அலுவலர்களுக்கு 10 இலட்சம் ரூபாயும் வழங்கப்படும்.

• புதிய குழுப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் (Unnamed Group Insurance Scheme) சந்தனக் கடத்தல்காரன் வீரப்பனைப் பிடிக்கவிருக்கும் தமிழ்நாடு சிறப்பு அதிரடிப்படையினர் (Tamil Nadu Special Task Force) மற்றும் மிக முக்கியப் பிரமுகர்களைப் (V.V.I.P.) பாதுகாக்கும் பணியில் இருக்கும் தனிப் பாதுகாப்புக் குழுவினர் (S.S.C.) ஆகியோர் கடமையாற்றும்போது இறந்தாலோ அல்லது நிரந்தரமாகப் பாதிக்கப்பட்டாலோ அவர்களுக்கு 10 இலட்சம் ரூபாய் வழங்கப்படும். எந்த அதிகாரி இறந்தாலும் 10 இலட்சம் வழங்கப்படும்.

எழில்மிக்க பல மாடிக் கட்டடம்:

• தற்சமயம், சென்னையில் இயங்கிவரும் காவல்துறை இயக்குநர் அலுவலகத்தை அகற்றிவிட்டு, அந்த வளாகத்தில் ஒரு எழில்மிக்க பல மாடிக் கட்டடத்தை எழுப்பி, சென்னை மாநகரத்தில் சிதறிக் கிடக்கும் பல்வேறு காவல்துறை அலுவலகங்களையும் ஒரே கட்டடத்தில் கொண்டு வர இந்த அரசு முயற்சி எடுக்கும். அதற்கான திட்டத்தை விரைவில் தயாரிக்கும்.

குழந்தைகள் கற்றுத் தேற:

• A Centre for Excellence என்று சொல்லக் கூடிய கூர்மதி மையம் ஒன்றை சென்னையில் நிறுவி, காவல் துறையினரின் குழந்தைகள் கற்றுத் தேற வகை செய்யப்படும். இதில் விடுதி வசதியும் செய்து தரப்படும். இந்தப் பள்ளியில் சின்னஞ்சிறு சிசுக்களுக்கான L.K.G. முதல் பள்ளி இறுதி வகுப்பு வரை தொடங்கப்படும்.

விளையாட்டு வீரர்களுக்கு வாய்ப்பு:

• காவல் துறையினரைத் தேர்ந்தெடுக்கும் போது, வாட்டசாட்டமான, திறம் சான்ற விளையாட்டு வீரர்களைக் கவரும் வண்ணம், இனிவரும் காவல் துறைத் தேர்வுகளில் ஒவ்வொரு முறையும் பத்து சதவிகித இடம் மிகச் சிறந்த விளையாட்டு வீரர்களைக் கொண்டு நிரப்பப்படும்.

மானிய விலையில் உணவுப் பொருள் வழங்கிட...

• இப்போது காவல் துறையினருக்குப் பொது விநியோக விலையில் 50 சதவிகித மானியத்தில் உணவுப் பொருட்கள் வழங்கப்படுகின்றன. இதே பயன், தீயணைப்புத் துறை மற்றும் சிறைத் துறையில் பணியாற்றும் பணியாளர்களுக்கும் விரிவாக்கம் செய்யப்படும். காவல் துறைப் பணியாளர்களைப் போன்று 50 சதவிகித மானிய விலையில் தீயணைப்புத் துறையினர் மற்றும் சிறைத் துறையினருக்கு அத்தியாவசிய உணவுப் பொருட்கள் வழங்கப்படும்.

காவல்துறையை நவீனப்படுத்திட...

• மைய அரசின் உதவி கிடைக்கும் வரை காத்திராது, நம் மாநில நிதியைக் கொண்டே முடிந்தவரை காவல்துறையை நவீனப்படுத்தும் திட்டத்தைச் செயல்படுத்துவது என்று அரசு முடிவு செய்துள்ளது. இதற்காக நடப்பு ஆண்டில், 10 கோடி ரூபாய் ஒதுக்கப்படும் என்ற மிகப் பெரிய செய்தியை இறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

# -நல்வாழ்த்துக்களுடன்-

பண்ணுருட்டி நகரம்

உரம் மற்றும்

பூச்சி மருந்து

வியாபாரிகள் சங்கம்

பண்ணுருட்டி

தென்னார்க்காடு மாவட்டம்





# விஞ்ஞான நகரம் உருவாக்குவோம்!

## எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி அறக்கட்டளையின் விவசாயம் மற்றும் கிராமப்புற வளர்ச்சி ஆய்வு மையத் தொடக்க விழாவில்

## மாண்புமிகு முதல்வர் உரை

**விவசாயம் மற்றும் கிராமப்புற வளர்ச்சிக்கான ஆராய்ச்சி மையம் சென்னை அடையாறு தரமணியில் அமைக்கப்பட்டுள்ளது. வேளாண்மை விஞ்ஞானி டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அறக்கட்டளை நிறுவனத்தால் அமைக்கப்பட்டுள்ள இந்த ஆராய்ச்சி மையத்தின் தொடக்க விழா 14.4.'93 அன்று நடந்தது. விழாவுக்கு முன்னாள் குடியரசுத் தலைவர் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் தலைமை வகித்தார்.**

**மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு குத்து விளக்கேற்றி இந்த மையத்தைத் தொடங்கி வைத்தார். அப்போது அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:**

நமது நாட்டின் கிராமப்புற வளர்ச்சியைக் குறிக்கும் வகையில் கவர்ச்சிகரமான புதிய வசதிகள் தொடங்கப்படும் இந்த முக்கியமான நிகழ்ச்சியில் பங்கேற்க என்னை அழைத்தமைக்கு டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்று தமிழ்ப் புத்தாண்டு நாள். இந்த மகிழ்ச்சிகரமான விழா இன்று நடைபெறுவது மிகவும் பொருத்தமே. புத்தாண்டு பிறப்பது, கொண்டாடுவதற்குரிய ஒரு சந்தர்ப்பமாக மட்டுமல்லாது, மனித வாழ்க்கையில் இயற்கையின் முக்கியத்துவத்தின் சின்னமாக விளங்குகிறது. ஏனெனில் பெரும்பாலான பொருளாதார, சமூக நடவடிக்கைகளைத் தொடங்கி வைக்கிறது. அவை கிராம மக்களின் வாழ்க்கையோடும் எதிர்காலத்தோடும் பிரிக்க இயலாத வகையில் பின்னிப் பிணைந்துள்ளன. மனித வாழ்க்கையுடன் இயற்கை எவ்வளவு தூரம் ஒன்றியுள்ளது என்பதையும், வாழ்வதற்கு, இயற்கையுடன் இணைந்து வாழ்வது ஒன்றே வழி என்பதையும் இங்கே உட்கார்ந்து கொண்டு, உணர்வது என்பது கடினமே. ஆனால் இயற்கையின் கீதத்தைப் புரிந்துகொண்டு ரசிப்பது, கிராம மக்களின் வாழ்க்கை முறையாகவே விளங்குகிறது. எனவே, இம்மையத்தில் உள்ள வசதிகளை இந்நன்னாளில் மக்களுக்கு அர்ப்பணிப்பது மகிவும் பொருத்தமேயாகும்.

கிராமப்புறங்களிலிருந்தே பெரும்பாலும் வரும் ஏழை எளிய மக்களின் உரிமைக்காகப் பாடுபட்ட டாக்டர் அம்பேத்கர் அவர்களின் நூற்றாண்டு விழாவின்போது இந்த அர்ப்பணிப்பு விழாவும் சேர்ந்து வருகிறது. இன்றைய விழா மிகவும் முக்கியத்துவம் பெறுகிறது. ஏனெனில் டாக்டர் அம்பேத்கர் அவர்கள் மிகவும் நேசித்த ஏழை மக்களின் முன்னேற்றத்திற்காக இந்த ஆராய்ச்சி மையத்தில் உள்ள வசதிகள் பயன்படுத்தப்படும்.

தொடர்ந்து நியாயமான முன்னேற்றம் காண்பதென்பது மனித சமுதாயத்திற்கு விடப்பட்ட பெரிய சவாலாக உள்ளது. கடந்த பத்தாண்டுக் காலத்தில் நல்ல முன்னேற்றத்தை அடைந்திருந்தாலும் உ திலு 100 கோடிக்கும் மேலான மக்கள் இ



**எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி மையத்தில் அமைக்கப் பட்டுள்ள பொருட்காட்சியை மாண்புமிகு முதல்வர் அவர்கள் சுற்றிப் பார்த்தார்.**

னும் வறுமையிலேயே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள், கல்வி, சுகாதாரம், வேலைவாய்ப்பு, நல்ல வாழ்க்கைக்குத் தேவையான வருமானம் இல்லாமல் வாடிக்கொண்டுள்ளனர். இந்தியாவில் உணவு உற்பத்தி பெருக்குதல், நீர் வளத்தை மேம்படுத்துதல், திருப்திகரமான வாழ்க்கைத் தரத்தைத் தேவையான வசதிகளை அனைவரும் பெறுவதை உறுதி செய்தல் ஆகிய பிரச்சினைகள் மகத்தானவை. நாம் கடக்க வேண்டிய தூரம் நெடியது. காலமோ சிறியது. நேரம் ஓடிக் கொண்டே உள்ளது. எனவே அதிக உணவு மற்றும் இதரப் பொருட்களைப் பெருக்குவதற்குத் தைரியமான, புதிய ஆராய்ச்சி யுக்திகளையும், பொதுக் கொள்கைகளையும் வகுப்பதைத் தவிர வேறுவழியில்லை. இவை கிராமப் புறங்களில் பல்வேறு விதமான வேலை வாய்ப்புக்களையும் உருவாக்கும்.

எனவே எதிர்வரும் பல ஆண்டுகளுக்கு வேளாண்மை, கிராமப்புற மேம்பாடு, விவசாயிகளின் பிரச்சினைகள், பண்ணைப் பொருட்கள், வேளாண் தொழில்நுட்பங்கள், விவசாயத்தில் வேலைவாய்ப்பு, விவசாயிகள் சமூக பொருளாதார முன்னேற்றங்கள் ஆகியவற்றில் நாம் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, சமுதாயத்தில் உழவர்களின் . முக்கியப் பங்கைப் பற்றித் திருவள்ளுவர்

''உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்
மற்றெல்லாம்
தொழுதுண்டு பின் செல்பவர்''

எனக் கூறினார்.

விவசாயத்தை நவீனப்படுத்த வேண்டும் என்ற நம் ஆர்வத்தில், சுற்றுப்புறச் சூழலிலும், தட்பவெட்ப நிலைகளிலும் ஏற்பட்ட பாதிப்புகளை நாம் கவனிக்கத் தவறிவிட்டோம். நாம் பாதுகாத்துத் தொடர்ந்து பேண வேண்டிய ஆதாரங்களுக்கு நமது முயற்சிகளே, சரிசெய்யப் பட முடியாத பாதிப்பை ஏற்படுத்தும் எனத் தோன்றுகிறது.

மேலும், கிராமப்புறத்து மக்கள் நிலத்தையும் மற்ற வள ஆதாரங்களையும் எத்தகைய செயல்முறை ஞானத்தோடும், நிதானத்தோடும், பயன்படுத்தினார்களோ, அவற்றை இழிவுபடுத்தாமல், மேலும் மேலும் வளப்படுத்திட, எந்த முயற்சிகளை மேற்கொண்டார்களோ, அவற்றோடு நமக்கிருந்த தொடர்பை நாம் இழந்துவிட்டோம். இந்த அறிவைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டிய கட்டாயத் தேவையைப் பொறுத்தே தொடர்ச்சியான முன்னேற்றம் சாத்தியமாகும்.

தொடர்ச்சியான வளர்ச்சி குறித்து 1987-இல் சுற்றுச் சூழல், வளர்ச்சிக்கான பன்னாட்டுக் குழு (World Commission on Environment and Devel,opment) பின் வருமாறு குறிப்பிட்டுள்ளது: ''எதிர்காலச் சந்ததியரின் தேவைகளைச் சுருக்கிக் கொள்ளாமல் நிகழ்காலச் சந்ததியரின் தேவைகளைப் பூர்த்தி செய்வதே தொடர்ச்சியான வளர்ச்சியாகும்.''

இந்தத் தலைமுறையின் ஏழைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வது தொடர்ச்சியான முன்னேற்றத்தின் இன்றியமையாத ஓர் அம்சமாகும். அது இனிவரும் தலைமுறைகளின் தேவைகளையும் கவனத்தில் கொள்ளும் இந்தச் சூழலில் தான் டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களுடைய கருத்தில் உருவான, 'வேளாண்மை மற்றும் ஊரக தொடர் வளர்ச்சிக்கான ஆராய்ச்சி மையத்தின்' குறிக்கோள்கள், விளைவுகள், திட்டங்கள், ஆகியவற்றைப் பொறுத்த வரையில் நாம் நிறைய எதிர்பார்க்க வேண்டிய உள்ளன.

இச்சந்தர்ப்பத்தில் நாம் எவ்வளவு அதிர்ஷ்டசாலியாக இருக்கிறோம் என்



பதைக் குறிப்பிட்டாக வேண்டும். டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் சென்னையிலேயே தங்கி, இம்மையத்தை வளர்த்து நம் மாநிலத்தின் முன்னேற்றத்திற்காக, தமது தொண்டை அர்ப்பணித்திருக்கிறார். அவர் நமக்கு வழிகாட்ட வேண்டுமென விரும்புகிறோம். நம் மாநிலத்தின் மேம்பாட்டிற்கான தொடர் வேளாண்மைத் திட்டங்களை, திட்டமிட்டு நிறைவேற்றுகின்ற முழுப் பொறுப்பையும் அவர் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று அழைப்பு விடுக்க விரும்புகிறேன்.

2000-வது ஆண்டில் எல்லோர்க்கும் உணவு, நலவாழ்வு, வேலைவாய்ப்பு, என்னும் தத்துவத்திற்குத் தமிழ்நாடு அரசு தன்னை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறது.

ஆரம்பச் சுகாதாரப் பாதுகாப்பு, ஆரம்பக் கல்வி, ஆகியவற்றிற்கான மிகப்பெரும் திட்டத்தை நாம் மேற்கொண்டுள்ளோம். அடுத்த ஐந்தாண்டுகளில் தமிழகத்தில் எழுத்தறிவு இன்மையை முற்றிலும் அகற்ற நாங்கள் விரும்புகிறோம். 1998-ஆம் ஆண்டு அளவில் குழந்தை இறப்பு விகிதத்தை 1000-க்கு 40 என்னும் அளவுக்குக் குறைத்துவிட உறுதிபூண்டிருக்கிறோம். பெண் சிசுக் கொலை, குழந்தைத் தொழிலாளர் முறை, தீண்டாமை, போன்ற சமூகத் தீமைகளை ஒழித்துவிடவும் உறுதி பூண்டிருக்கிறோம். இந்த மாபெரும் பணிகளையெல்லாம் நிறைவேற்ற வேண்டுமென்றால் கிராமப்புற ஆண்கள் பெண்களின் பொருளாதார நிலையை மேம்படுத்த வேண்டியது மிகவும் அவசியமாகும். நகர்ப்புறங்களில் சேரிகள் வளர்வதில் கிராம வேலைவாய்ப்பின்மை பிரதிபலிக்கிறது. கிராமப்புற ஏழ்மையும் நகர்ப்புற ஏழ்மையும் ஒன்றுக்கொன்று தொடர்புடையன. கிராமப்புற வேலை வாய்ப்புகளை அதிகப்படுத்துவதன் மூலமே நகர்ப்புறச் சேரிகளின் பிரச்சினைகளை நாம் தீர்க்க முடியும்.

தமிழ்நாட்டில் இயற்கை வளங்கள் குறைவே. இந்தியாவின் மற்ற பகுதிகளை விட தமிழ்நாட்டில்தான் தனிநபர்க்குக் கிடைக்கும் நிலம், நீர், குறைவாக இருக்கிறது. தீவிரக் குடும்பக் கட்டுப்பாடு நடவடிக்கைகளை நாம் எடுத்திருந்த போதும், 1991- இல் 556 இலட்சமாக இருந்த நம் மக்கள்தொகை 2000-ஆம் ஆண்டில் 650 இலட்சமாக உயரலாம். ஆக, இனி வருங்காலத்தில், குறைவான நிலத்தில் குறைவான நீரைக் கொண்டு நாம் அதிக உணவையும், அதிக ஆடையையும்,, அதிக எரிபொருட்களையும்,



**★ தீண்டாமையைத் தாக்குவது உயர்வு தாழ்வு வேற்றுமையைத் தாக்குவதாகும். தீண்டாமை ஒழித்தால், அதே விநாடியில் சாதிமுறை பரிசுத்தமாகி விடும்.**

அதிக வேளாண் பொருட்களையும் உற்பத்தி செய்யவேண்டியிருக்கும். இந்தச் சவாலை, உயர்தரமான, சமுதாயத் தேவைகளுக்குத் தொடர்புடைய விஞ்ஞானத்தின் மூலமே நாம் சமாளிக்க முடியும்.

இம்மையம் விஞ்ஞானத்திற்கும் சமுதாயத்திற்கும் இடையே உள்ள நல்லிணக்கக் கூட்டின் (Symbiosis) அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளது என்பதையும் அறிந்து மகிழ்ச்சியடைகிறேன்: இந்த ஆராய்ச்சி மையத்தின் பணிகளின் மூன்று அம்சங்கள் என்னை மிகவும் கவர்ந்துள்ளன.

முதலாவதாக, புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதிலும், கிராமப் பெண்களின் நேரத்திற்குப் பொருளாதார மதிப்பைக் கூட்டுவதிலும் இம்மையம் கவனம் செலுத்துவது. நிலமற்ற தொழிலாளர்களின் குடும்பங்கள் செய்யும் பணிக்குப் பொருளாதார மதிப்பு கூடும் வரை அவர்கள் வாழ்க்கைத் தரம் முன்னேற முடியாது. புதிய திறமைகளை வளர்ப்பதிலும், வேலைவாய்ப்புகளுக்கும், வேலை தேடுகின்ற தகுதிகளுக்குமிடையே உள்ள பாலமைப்பதிலும் குறியாக இருப்பது மிகவும் பொருத்தமேயாகும். இந்த நோக்கத்திற்காக உருவாக்கப்பட்ட 'பயோ வில்லேஜ்' (the concept of Bio-village) திட்டம் நமது தேவைகளுக்கு மிகவும் தொடர்புடையதாக இருக்கும்.

இரண்டாவதாக, தமிழ்நாட்டில் அபாயத்திற்கு உள்ளாகியுள்ள மலைவாழ் மக்களும், கிராம மக்களும் உருவாக்கும் மருந்துச் செடி உட்பட தாவர இனங்களைக் காப்பாற்ற இம்மையம் முற்போக்கான திட்டங்களைத் தீட்டியுள்ளது ஐக்கிய நாடுகள் சபை 1993-ஆம் ஆண்டை 'உலகச் சொந்த நாட்டு மக்கள் ஆண்டாக' முற்போக்கான திட்டங்களை (World Indigenous People) அறிவித்துள்ளது. இவ்வாண்டின் மையக் கருத்து 'சொந்த நாட்டு மக்கள் ஒரு புதிய கூட்டு' இந்த மையம் நடத்திவரும் Tribal Area Bio-diversity Network', நவீன விஞ்ஞானத்திற்கும், பண்டைய அறிவாற்றலுக்கும் உள்ள பயன்மிகு கூட்டாக விளங்குகிறது. வடிவமைக்கப்பட்ட கருத்துக்களை வார்த்தைக்கு வார்த்தை செயல்படுத்துவதைவிட, அதிக எதார்த்தமான அளவில் தொடர் வளர்ச்சிக்கான நமது திட்டங்களை வடிவமைக்கவே இந்தக் கூட்டு. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் தொல்காப்பியத்தில் கூறப்பட்ட வேளாண் சுற்றுச் சூழல் பகுப்பின் அடிப்படையில் இம்மையத்தின் தோட்டம் உருவாக்கப்பட்டு வருவது அறிந்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் தொல்காப்பியத்தில் குறிக்கப்பட்ட ஐவகை நிலங்கள் வேளாண்மை ஆராய்ச்சிக்கும் பயிற்சித் திட்டங்களுக்கும் அருமையான தளம் அமைத்துத் தருகின்றன.

இறுதியாக, கடற்கரை ஆய்வுக்கு மிகப் பெரும் முக்கியத்துவம் தரப்பட்டிருப்பது குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன். ஏனெனில், 1000 கி.மீ. தொலைவுக்கு மேலாக நீண்டதொரு கடற்கரை தமிழகத்திற்கு இயற்கையின் கொடையாகக் கிடைத்திருக்கிறது. தொழில் மயமான நாடுகளில் கடற்கரைப் பகுதிகள் வளமான பகுதிகளாக விளங்கிக் கொண்டிருக்க, நம் நாட்டிலோ அவை பெரும்பாலும் வறுமையில் மூழ்கிப் போயிருக்கின்றன. ஐரோப்பாவில் மத்திய தரைக் கடல் கடற்கரைப் பகுதி உலகச் சுற்றுலாப் பயணிகளில் $\frac{1}{3}$ பங்கினரைக் கவர்ந்திருக்கிறது.

மீனளம், உவர்நீர் உயிரின வளர்ப்பு, கடல் சார்ந்த நிலக் காடு வளர்ப்பு, வேளாண் - காடு வளர்ப்பு, சுற்றுலா ஆகிய அனைத்திலும் ஒரே நேரத்தில் கவனம் செலுத்துவதன் மூலம் நெய்தல் நிலப்பகுதிகளில் வாழுகின்ற சமூகங்களின் வளத்தை வளர்க்கலாம். அதே சமயத்தில் மாங்கரோவ் காடுகளையும்மற்ற நெய்தல் நிலத் தாவரங்களையும், பாதுகாப்பதன் மூலம் கடல் சார்ந்த பகுதிகளில் ஏற்படும் புயல் துன்பங்களைக் குறைக்க முடியும். பழங்காலத் தமிழருக்கு மாங்கரோவ் காடுகளின் முக்கியத்துவும் தெரிந்திருந்தது. உதாரணமாக, சிதம்பரம் நடராசர் திருக்கோயிலில் ஒரு மாங்கரோவ் மரத்தின் அழகிய சிற்பம் வடிக்கப்பட்டிருக்கிறது.

கடந்த ஆண்டு என்றும் ஏற்பட்டிராத அளவிற்குத் தமிழகக் கடற்கரைப் பகுதிகளில் வெள்ளச் சேதம் ஏற்பட்டபோது



# மேன்மையான நாள்

— கவிஞர் அ. சுப்பையன்

மேதினி எங்கும் கொண்டாடும்
மேன்மை யான நாள்இதுவாம்;
ஏதினி வர்க்க பேதமென்றே
இயம்பிடும் நாளே மேநாளாம்!

உழைப்புக் கேற்ற ஊதியத்தை
உரிமை யுடனே பெற்றதிந்நாள்;
களைப்பு நீங்கிப் பாகுபடக்
கணக்காய் நேரம் கண்டதிந்நாள்!

உழைக்கும் வர்க்கம் உயர்வடைய
உன்னத நிலையைத் தானடைய
வழிவகை செய்த நாள்இதுவாம்;
வாட்டம் போக்கிடும் நாள்இதுவாம்!

நித்தம் உழைத்திடும் பாட்டாளி
நிம்மதி கண்டிடும் நாள்இதுவாம்;
புத்தம் புதிய பலம் பெற்றுப்
பொலிவுடன் திகழ்ந்திடும் நாள்இதுவாம்!

அல்லும் பகலும் தொழிலாளி
அயரா துழைத்தது போதுமென
எல்லை வகுத்திடும் நாள்இதுவாம்;
ஏற்றம் பெற்றிடும் நாள்இதுவாம்!



# கல்வராயன் மலை



தென்னார்க்காடு மாவட்டம் என்றாலே நமக்குக் கல்வராயன்மலை நினைவு வரும். ஏனென்றால் அம்மாவட்டத்தில் உள்ள மலைகளிலேயே பெரிய மலை அது தான்.

கடல் மட்டத்திலிருந்து 100 முதல் 3,500 அடி உயரம் உடைய தாக-சுமார் 600 கிலோ மீட்டர் பரப்பளவு உடையதாக இருக்கிறது இம்மலை. இதனைப் பெரிய கல்வராயன் மலை, சிறிய கல்வராயன் மலை என்று இரு பிரிவினதாகக் குறிப்பிடுகிறார்கள்.

பெரிய கல்வராயன் மலையின் உயரம் சுமார் 4,300 அடி; சிறிய கல்வராயன் மலையின் உயரம் சுமார் 3000 அடி. இவ்விரண்டையும் சார்ந்த 106 கிராமங்களில் ஏறத்தாழ 40 ஆயிரம் பேர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

காடு சூழ்ந்த இம்மலைப் பகுதி வாழ் மலையாளிகளின் முன்னோரெல்லாம் மன்னர்களாக இருந்து கோலோச்சியதாக வரலாறு கூறுகிறது; பிற்காலத்திலோ இம்மக்களெல்லாம் நலமும் வளமும் குன்றி, செல்வாக்குள்ளோரின் அடிமைகளாக வாழப் பழகி விட்டார்கள்.

1976-இல்தான் இவர்களெல்லாம் ஜாகீர்தார்களின் அடிமைத் தளையிலிருந்து விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள். பல்லாண்டுக் காலம் அடிமைப்பட்டுக் கிடந்த இம்மக்களிடம் கல்வியறிவையோ, நாகரிக முதிர்ச்சியையோ காண முடியாத நிலை இருந்தது.

தமிழ்நாடு அரசு, அம்மக்களின் இத்தகைய அவலநிலைமாற்ற அரும்பாடுபட்டு வருகிறது. எல்லா வகையிலும் அவர்கள் முன்னேற அரசு உதவிக்கரம் நீட்டியுள்ளது.

**அரசின் உதவிகள்**

'உழவே தலை' என்று உணர்ந்துள்ள அம்மக்களுக்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 1991-92-இல் 110 உழவு மாடுகள் வழங்கப்பட்டிருக்கின்றன; மலைவாழ் மக்கள் என்பதால் அவர்கள் இதில் 50 சதவிகிதத்தைக் கடனாகப் பெற முடியும்.

எட்டுப் பேருக்குக் கறவை மாடுகளும், மளிகை- சிறுதொழில் தொடங்க 5 பேருக்குக் கடனுதவியும் செய்யப்பட்டிருக்கிறது. 'ஆயில் என்ஜின்' எண்மருக்கு வழங்கப்பட்டுள்ளது.

டயர் வண்டிகளும் மாடுகளும் அரசு மூலம் ஒன்பது பேருக்கு அளிக்கப்பட்டிருக்கின்றன ஆடுகள்



கல்வராயன் மலைவாழ் மக்களுக்கு வாரம் ஒரு முறை மருத்துவப் பரிசோதனை

ஓர் ஒருங்கிணைக்கப்பட்ட கடற்கரைப் பகுதி வளர்ச்சிக்கான திட்டம் உருவாக்கப்பட வேண்டிய அவசியத்தைப் பிரதமரின் கவனத்திற்குக் கொண்டு வந்தேன்.

அத்தகையதொரு திட்டம் விரைவில் தொடங்கப்படும் என்று நான் இன்னும் நம்புகிறேன். கடற்கரைப் பகுதியில் வாழும் மக்களது வாழ்க்கைப் பாதுகாப்புக்கும் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கும் அது வலிமையளிக்கும். நான் ஏற்கெனவே கடற்கரைப் பகுதி ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சிக்கான ஒரு திட்டத்தை வகுக்குமாறு தமிழ்நாடு திட்டக் குழுவைக் கேட்டுக்கொண்டிருக்கிறேன். அது, மீனளம், காடு வளர்ப்பு, கடற்கரைப் பகுதி தொழில் வளர்ச்சி (குறிப்பாக ஏற்றுமதி) மற்றும் சுற்றுலா ஆகியவற்றின் ஒருங்கிணைந்த வளர்ச்சியாக இருக்கும். காற்று மற்றும் சூரிய சக்தி ஆகியவற்றால், கடல் நீரை நன்னீராக்குதல், வேளாண்மை, தொழில்கள், ஆகியவற்றை மேற்கொள்ள கடற்கரைப் பகுதிகள் நல்ல வாய்ப்பளிக்கின்றன. புதுப்பிக்கக் கூடிய எரிசக்தி வடிவங்களைப் பயன்படுத்துவதில் உலகிற்கே ஒரு முன்னோடியாகத் திகழவேண்டும் என்று தமிழகம் விரும்புகிறது. மத்திய அரசின் மரபுசாரா எரிசக்தி வள அமைச்சகமும், அறிவியல் தொழில்துறை ஆராய்ச்சித் துறையும் சேர்ந்து இந்த ஆய்வு மையத்தில் தன்னிகரற்ற சூரியசக்தி உற்பத்திக் கலன் ஒன்றைப் படைத்திருக்கின்றன என்பது குறித்து நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். புதிய சூரியசக்தி உற்பத்திக் கலனை வடிவமைப்பதில் வெற்றிகண்ட மத்திய மின்னணுத் துறையை நான் பாராட்டுகிறேன்.

டாக்டர் சுவாமிநாதன் அவர்களின் அறிவுக் குழந்தையாகத் திகழும் இந்த மையத்திற்குத் தமிழ்நாடு அரசின் நன்கொடையாக ரூ.5 இலட்சத்தை அறிவிப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். கூடுதலாக 1.5 ஏக்கர் நிலத்தை ஒதுக்கித் தரவேண்டுமென டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் கேட்டுக் கொண்டார். தமிழ்நாடு அரசு அவருக்குக் கூடுதலாக 2.5 ஏக்கர் நிலத்தை அளிக்கும் என்பதை அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த உன்னத நோக்கத்திற்காகத் தேவையான நிலத்தையும், இன்னும் கூடுதலாக அவருக்குத் தேவைப்பட்டாலும் தமிழ்நாடு அரசு வழங்கும் என்பதை அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த வளாகத்தை ஒரு விஞ்ஞான நகரமாக (Science City) உருவாக்க வேண்டுமென ஆலோசனை நல்கிய திரு. சி. சுப்ரமணியம் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மகிழ்ச்சியுடன் இந்த ஆலோசனையை நான் ஏற்றுக் கொள்கிறேன். முன்னணி விஞ்ஞானிகள், தொழில்நுட்ப நிபுணர்களுடன் உதவியுடன், இப்பகுதியை உலகப் புகழ்பெற்றதொரு விஞ்ஞான நகரமாக உருவாக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்போம் என நான் உறுதியளிக்கிறேன்.

தமிழ்நாடு விரைவாகச் செயல்படுவதாக திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் கூறினார். விரைவாகவும், நல்ல தரத்துடனும் செயல்படுவதில் அரசு நம்பிக்கை வைத்துள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். உலகத் தரத்துடன் ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கினை ஒரு சாதனையாக, ஏழே மாதத்தில் நாங்கள் முடித்தோம்.

மேலும், என் உறுதிமொழிகள் காகிதத்தில் மட்டும் நிற்காமல், செயலிலும் நிறைவேற்றப்படும் என உறுதி கூறுகிறேன்.

டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களின் உதவியுடனும் வழிகாட்டுதலுடனும் தமிழ்நாடு, இம்மாநிலத்தின் கடலோரப் பகுதியை ஒட்டி கடலோரப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தை விரைவில் தொடங்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இப்பகுதியில் டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களின் நிபுணத்துவத்தை முழுமையாக நாங்கள் பயன்படுத்திக் கொள்வோம்.

ஊரக மறுமலர்ச்சிககுப் பெருந்துணையாகும் பல புதிய தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகளுக்கு இம்மையம் ஒரு நிலைக்கலனாக இருக்கும் என்று நான் நம்புகிறேன். இயற்கையையும் இயற்கை வளங்களையும் பாதுகாப்பதிலும் கிராமப்புற வாழ்வை மேம்படுத்தும் வழிமுறைகளைப் புதிதாகக் கண்டுபிடிப்பதிலும் வேட்கையோடு திகழும் இம்மையத்தின் விஞ்ஞானிகளும் பணியாளர்களும் மென்மேலும் வெற்றிபெற வாழ்த்துகிறேன். பல நாடுகளிலிருந்தும் தமிழகம் வந்து நமது விஞ்ஞானிகளோடு கருத்துப் பரிமாற்றம், அனுபவப் பரிமாற்றம் செய்ய வருகை புரிந்திருக்கும் டாக்டர் சாங் ஜியாங், பேராசிரியர் ஹம்மி, ஜோன் ஹோம்ஸ் ஆகியவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழகத்திலும் இந்தியாவிலும் நீங்கள் தங்கியிருக்கும் காலம் மகிழ்ச்சிகரமானதாக அமைய என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மனிதனுடைய தலைவிதி இயற்கையோடு இணைந்திருக்கிறது. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலேயே நமது பழம்பெரும் முனிவர்கள் இதை உணர்ந்திருந்தார்கள். நிலம், நீர், நெருப்பு, காற்று, வான் என்னும் ஐந்தையும் பரம்பொருளின் வடிவமாகவே அவர்கள் பாவித்து வியப்போடும் அச்சத்தோடும் மரியாதையோடும் வணங்கி வளமான வாழ்வை அவற்றின் நன்கொடையாக அவர்களால் அறுவடை செய்ய முடிந்தது.

அதர்வ வேதத்தில் முனிவர் பிருத்வி சூக்தத்தில் பின்வருமாறு பாடுகிறார்:

எதன்மீது ஆழ்கடல்கள்
அசைகின்றனவோ
எதை நோக்கி நதிகளும் மற்ற
நீர்ப்பரப்பும் நகர்ந்து செல்கின்றனவோ
எதன்மீது உயிர்களெல்லாம்
வாழ்கின்றனவோ,
எதன்மீது உணவுப் பொருட்களும் பிற
பயிர்களும் வளர்கின்றனவோ
அந்தப் பூமித்தாய் வாழ்வின் அமுதத்தை
நமக்கு முதலில் வழங்குவாராக!

கோடைக் காலம், மழைக் காலம், இலையுதிர் காலம், இளவேனிற் காலம் என்பவை ஒன்றன் பின் ஒன்றாகத் தொடர்ந்து வர உன்னுடைய பருவங்கள் அனைத்தும் ஒவ்வொன்றும் தமக்கே உரிய வகையில், ஓ! பூமித்தாயே எங்களுக்கு நல்ல விளைச்சலை நல்குவதாக!

இந்தத் தரிசனத்தின் அர்த்தத்தைப் புரிந்து கொள்வதிலும் போற்றுவதிலும் இவற்றுக்கு ஏற்ப வாழ்வாங்கு வாழ்வதிலும் தான் நமது ஞானம், எதிர்காலத்திற்கான நம்பிக்கைகள் அடங்கியிருக்கின்றன. தொடர் வேளாண்மை, ஊரக வளர்ச்சிக்கான இந்த ஆய்வு மையத்தை' நாட்டுக்கு அர்ப்பணிப்பதில் நான் பேருவகை கொள்கிறேன். நன்றி!

## 5-ஆம் வகுப்புக்கும் பொதுத் தேர்வு

தமிழ்நாட்டில் மாவட்ட அளவில் 5-ஆம் வகுப்பு மாணவர்களுக்கு ஒரு பொதுத் தேர்வு நடத்த அரசு முடிவு செய்துள்ளது. 1993-94-ஆம் கல்வியாண்டிலிருந்து இந்த முறை அமலுக்கு வரும்.

-சட்டப்பேரவையில் மாண்புமிகு கல்வி அமைச்சர் (1.4.1993).





# கிளைவ் இருந்த மாளிகை!

ஆங்கிலேய ஆளுநர்களும், துணை ஆளுநர்களும் தமிழ்நாட்டில் தங்குவதற்காகக் கி.பி.1738-இல் கடலூரில் உள்ள மஞ்சகுப்பத்தில் ஒரு தோட்ட மாளிகை கட்டப்பட்டது.




வெடிகுண்டுகளுக்கெல்லாம் ஈடுதரக்கூடிய வலிமைமிக்க சுவர்கள் கொண்டது அம்மாளிகை. மனித உடலுக்குள்ளது போலவே ஒன்பது வாசல் உடையது இது; எதிரி எப்படி வந்தாலும் உள்ளே இருப்போர் எளிதில் தப்பிச் சென்றுவிடலாம்.

இங்கிருந்து தேவனாம்பட்டினம் கடற்கரையைச் சென்றடையத்தக்க சுரங்கப்பாதைகள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

கி.பி.1756-இல், இங்கே கவர்னர் ஜெனரலாக இருந்த இராபர்ட் கிளைவ் இம்மாளிகையைக் கைப்பற்றிக் குடிபுகுந்தார். மொகலாயர் காலக் கட்டடப் பாணியும், ஐரோப்பியக் கலை நுணுக்கங்களும் உடைய அந்த மாளிகைதான் இப்போதைய தென்னார்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவரின் 'சிறப்புப் பணி அலுவலக'மாகப் (Camp Office) பயன்படுத்தப்பட்டு வருகிறது.

பல்லாண்டுக் காலத்திற்கு முந்தியது எனினும் - அதன் சுவர்களின் பளபளப்பு இன்றைக்கும் குறையவில்லை. கீழே, பிரம்மாண்டமான தூண்கள் நிமிர்ந்து நிற்கும் 'வராண்டா'வில், இராபர்ட் கிளைவ் அங்கே வாழ்ந்ததை நினைவுகூரும் கல்வெட்டு ஒன்று காணப்படுகிறது. வட்டமாக வழவழப்போடு காணப்படும் அதன் படத்தையே நீங்கள் இங்கே காண்கிறீர்கள்.

- பி. சம்பந்தம்.

இரண்டு பேருக்கு கொடுக்கப்பட்டுள்ளன.

-இந்த விவரங்களையெல்லாம் நமக்குத் தெரிவித்த கல்வராயன் மலை கால்நடை மருத்துவ அலுவலர், டாக்டர் சுப்பிரமணியம், 1992-93-இல் மேலும் அப்பகுதி மக்களுக்கு அளிக்கப்பட்ட அரசு உதவிகள் பற்றியும் நமக்குத் தெரிவித்தார்; ஊர்நல அலுவலர் திரு. பி. வடிவேலுவும் உடனிருந்து உதவினார்.

''உழவு மாடுகள் 31 பேருக்கும், ஆயில் என்ஜின் 9 பேருக்கும், கறவை மாடுகள் 5 பேருக்கும், டயர் வண்டியும் மாடுகளும்



...ர வகை மல்பரி' வளர்ப்பு

இருவருக்கும் அளிக்கப்பட்டுள்ளன;' மூவருக்குச் சிறுகடன் தொகை கொடுக்கப்பட்டிருக்கிறது. இவை தவிர- மாவட்ட ஆட்சித் தலைவர் ஆலோசனைப்படி இன்னும் நூறு பேர்களுக்கு இப்பகுதியில் உதவி செய்யவிருக்கிறோம்''.

## மருத்துவ உதவி

கல்வராயன் மலைவாழ் மக்களுக்கு மருத்துவ உதவி தங்குதடையின்றி கள்ளக்குறிச்சி அரசு மருத்துவமனை மூலம் அளிக்கப்படுகிறது.

டாக்டர் ஆர்.எம். இளங்கோவன், செவிலியர் திருமதி ஆர். மல்லிகா, மருந்தாளுநர் திரு. எம். பழனிவேல் முதலான 9 பேர் கொண்ட நடமாடும் மருத்துவ வண்டியொன்று, இதற்காக வெள்ளிக்கிழமைதோறும் கல்வராயன் மலைக்கு வந்து போய்க் கொண்டிருக்கிறது.

மற்ற நாட்களில் இக்குழு இந்த மலையின் மற்ற பகுதி மக்களுக்கு மருத்துவ உதவி புரியச் செல்லுகிறது.

உழவு மாடுகள்- கறவை மாடுகள் கடனில் பெற்ற திரு. வெள்ளி, திரு. மொட்டை, திரு. எம். இராசேந்திரன்- திருமதி. ஜெய்ராணி, திருமதி. பொட்டியம்மாள் ஆகியோர்தாம் பெற்ற பயன்பாடுகளுக்காகத் தமிழக அரசை மனமாரப் பாராட்டி வாழ்த்தினார்கள்.



கல்வராயன் மலையில் வெள்ளிக்கிழமை சந்தை

## பட்டுத் தொழில்

கல்வராயன் மலையில் வெள்ளிக்கிழமையன்று சந்தை களை கட்டியிருந்தது. அங்கு ஏராளமான பொருட்கள் மிக மலிவாகவும் தரமானதாகவும் கிடைக்கின்றன.

கடுக்காய் மரங்களும், கறிவேப்பிலை மரங்களும் மண்டிக் கிடந்து மணம் பரப்பும் கல்வராயன் மலையின்வெள்ளிமலைப் பகுதியில் புதுவகை மல்பரி செடிகள், ஒருங்கிணைந்த மலை வாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பயிரிடப்பட்டிருப்பதைக் கண்ணுற்றோம்.



அதைப்பற்றி அங்கிருந்த பட்டு வளர்ச்சித் துறை உதவி ஆய்வாளர் திரு. ஆர். ரங்கராஜ னிடம் பேசியபோது கிடைத்த விவரங்கள் இவை:

''தென்னார்க்காடு மாவட்டத்தில் சுமார் 200 ஏக்கர் அளவில் மல்பரி பயிரிடப்படுகிறது; இங்கு தயாராகும் பட்டுக்கூடு சேலம் சந்தைக்குப் போய் விற்பனையாகிறது. கல்வராயன் மலையில் மரவகை மல்பரி (Tree Type) பயிரிடுகிறோம்; வெற்றுடம்போடு சிறிது உயரமாக வளர்ந்து பிறகு தழைக்கும் வகையைச் சேர்ந்தது இது; உயர இருப்பதால் ஆடு, மாடு தின்ன முடியாது; இலாபகரமான தொழிலாதலால் இதில் சுமார் முந்நூறு நானூறு குடும்பத்தார் ஈடுபட்டிருக்கிறார்கள். மல்பரி இங்கே மூன்று அல்லது நான்கு போகம் வரை பயிரிடப்படுகிறது''.

பெரும்பாலானவை - குறிச்சி, பாடி, ஊர், பாக்கம், குப்பம் என்ற சொல்லுடனேயே முடிவதாக உள்ளன.

• தென்னார்க்காடு மாவட்டத்தின் எழில்மிகு சுற்றுலாத் தலமாக விளங்கும் பிச்சாவரம், சிதம்பரத்திலிருந்து சுமார் 15 கி.மீட்டர் தொலைவில் இருக்கிறது. இங்கு சுற்றுலாத்துறை மூலம் தங்குமிட வசதிகள் செய்யப்பட்டுள்ளன. சுரபுன்னை மரங்கள் மண்டிக் கிடக்கும் காடாக விளங்கும் தீவுப் பகுதியாகத் திகழ்வது இது; ஆழமற்ற உப்பங்கழியான இப்பகுதியில் உவகையுறப் படகுப் பயணம் செய்து மகிழ்வோர் பலராவர்; இப்பகுதியில் அடிக்கடி திரைப்படக் குழுவினரின் வெளிப்புறக் காட்சிப் படப்பிடிப்புகளும் நடப்பதுண்டு.

கல்வராயன் மலையில் உள்ள வெள்ளிமலையில் ஓர் அருவியில் கொஞ்சமாக நீர் கொட்டிக் கொண்டிருந்தது மிக அழகாக இருந்தது. எங்கு நோக்கினும் பச்சைப்பட்டுப் போர்த்திய குன்றுகள் மலிந்த கல்வராயன் மலை, விரைவிலேயே மிகச் சிறந்த சுற்றுலாத் தலமாக மாறும் என்பது திண்ணம்.

**அ. சந்திரசேகரன்**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்**
**தென்னார்க்காடு மாவட்டம்**



**The Tamil Nadu State Apex Co-Operative Bank Ltd.,**

TNSC BANK

233, N.S.C. Bose Road, Madras-600 001.

**Rate of Interest on Deposits (Effective from 9.10.1992)**

| Sl.No. | Type of Deposit | Rate of Interest per annum |
|---|---|---|
| 1. | Savings Bank Accounts | 6.25% w.e.f. 24.4.92 |
| 2. | Fixed Deposits : | |
| | For 46 DAYS and above but upto 270 days | 12.25% |
| | For 271 DAYS and above but upto 364 days | 12.00% |
| | For 1 YEAR and above | 12.25% |

**Interest on Fixed Deposit for 1 year and above will be paid Quarterly**

- NRO & NRE Accounts Facilities are available in 6 designated Branches.
- Interest rates are subject to RBI directives from time to time.

THE BANK AT YOUR SERVICE




# தந்தை பெரியார் போக்குவரத்துக்கழகம்

**போக்குவரத்து வசதி என்கிறபோது, இன்று குக்கிராமங்களில் கூட, பேருந்துகள் செல்கின்ற பாங்கினைப் பார்க்கின்றோம். அரசு எடுத்துவரும் நடவடிக்கைகளின் காரணமாகப் புதிய வழித்தடங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. அதனால், மக்கள் பெரிதும் பயனடைந்து வருகிறார்கள். குறிப்பாக, கிராமத்து மக்கள் பெரிதும் பயனடைந்து வருவதை நாம் முக்கியமாகக் குறிப்பிட வேண்டும். தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் ஆற்றிவரும் பணிகள் குறித்து இக்கட்டுரை விளக்குகிறது.**

தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் 1975-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 14-ஆம் நாள் நிறுவப்பட்டது. அப்போது 172 பேருந்துகளே இருந்தன. இப்போக்குவரத்துக் கழகத்திலிருந்து 1.12.1982-ஆம் ஆண்டு பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகமும், 1.4.1992-ஆம் ஆண்டு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். போக்குவரத்துக் கழகமும் பிரிந்தன. தற்பொழுது தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் திரு. சு. பாலசண்முகம் அவர்களை மேலாண்மை இயக்குநராகக் கொண்டு 802 பேருந்துகளையும், 6015 பணியாளர்களையும் கொண்டு சீரிய முறையில் இயங்கிவருகிறது.

தென்னார்க்காடு மாவட்டம் விவசாயத்தையே முக்கியத் தொழிலாகக் கொண்ட மாவட்டம் ஆகும். இம்மாவட்ட மக்கள் போக்குவரத்திற்கும், பொருட்களை எடுத்துச் செல்லுவதற்கும், தங்களுடைய அன்றாடத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளுவதற்கும் பேருந்தையே பெரிதும் நம்பி இருக்கிறார்கள்.

இலாபத்தை மட்டுமே கருத்தில் கொள்ளாமல் எல்லா மக்களுக்கும் போக்குவரத்து வசதி செய்து சேவை செய்வதையே முக்கியக் குறிக்கோளாகத் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் ஏற்றுக்



கொண்டுள்ளது.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள், 1000 மக்கள் தொகை கொண்ட கிராமங்களுக்கு 31.12.1992-க்குள் போக்குவரத்து வசதியை ஏற்படுத்த வேண்டுமென்று ஆணையிட்டதற்கேற்ப, கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் போக்குவரத்து வசதி இல்லாத 145 கிராமங்களுக்குப் புதிய வழித்தடங்களில் புதிய பேருந்துகளை இயக்கியதால், 1,96,059 மக்கள், தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் பயன் பெற்றுள்ளார்கள்.

1 முதல் 8-ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவிகளுக்கு 46,517 இலவசப் பயண அனுமதி அட்டையும், 9-ஆம் வகுப்பு முதல் உயர்கல்வி பயிலும் 32,963 மாண்வ மாணவியர்களுக்கு 50 சதவிகித சலுகையும் அளித்து அரைக் கட்டணத்தில் பயண அனுமதி அட்டையும் வழங்கப்பட்டுள்ளது. மேலும், ஊனமுற்றவர்கள் சுதந்திரப் போராட்ட வீரர்கள் ஆகியோர்களுக்கும் இலவசப் பயண அனுமதி அட்டை வழங்கப்பட்டு வருகிறது.

பண்ணுருட்டி, விழுப்புரம் ஆகிய இடங்களில் பணிமனையும், விக்ரவாண்டியில் ஓட்டுநர் பயிற்சிப் பள்ளி, தொழில் பயிற்சி பள்ளி, பயிற்சி மையம் எரிபொருள் சிக்கனச் சிறப்புப் பயிற்சி மையம் ஆகியனவும் இயங்கி வருகின்றன.

தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் தொடங்கப்பட்டதிலிருந்து இதுவரை சுமார் 15 இலட்சம் கிராம மக்கள் புதிதாகப் பேருந்து வசதி பெற்றுள்ளனர். இரவில் சாலை விபத்தினைத் தடுக்கும் பொருட்டு, இக்கழக இயக்க எல்லைக்குள் 7,915 மாட்டு வண்டிகளுக்கு 15,830 இலவச ஒலிப் பிரதிபலிப்பான்கள் 29,472 இலவச ஒளி பிரதிபலிப்பான்கள் பொருத்தப்பட்டுள்ளன. விழுப்புரத்தில் ரூ.1.75 இலட்சம் செலவிலும், கடலூரில் ரூ.2.30



இலட்சம் செலவிலும் தானியங்கி மின் விளக்குகள் பொருத்தப்பட்டு இயங்கி வருகின்றன. ஆண்டு ஒன்றிற்கு ரூ.50,000-க்கான பெயிண்ட், சாலை நடுக் குறியீட்டிற்காகக் காவல்துறைக்கும், நெடுஞ்சாலைத் துறைக்கும் வழங்கப்படுகிறது.

விழாக் காலங்களில் தனிச் சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. மாமண்டூரில் 60.82 இலட்சம் செலவில் நவீன சாலையோர உணவு விடுதி திறக்கப்பட்டது. இது நாள்தோறும் சுமார் 11,000 மக்களின் தேவையினைப் பூர்த்தி செய்துவருகிறது.

தொழிலாளர்களின் வருங்கால வாழ்வைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களால் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் சேமநல நிதித் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. தொழிலாளர்களுக்குக் குறைந்த விலையில் உணவு, அனைத்துப் பணிமனைகளிலும் படித்து மகிழ படிப்பக வசதி, தலைமையகத்தில் பரிசோதனைக் கூடத்துடன் கூடிய மருந்தக வசதி மற்றும் தொழிலாளர்கள் அவர்தம் குடும்பத்தவர்கள் பயன்பெறும் வண்ணம் அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் அரசு ஊழியர்களுக்கு இணையான மருத்துவ வசதி அளிக்கப்படுகிறது. அத்துடன் அவ்வப்போது பல்வேறு மருத்துவ முகாம்கள் மூலம் மருத்துவ வசதியும் செய்யப்படுகிறது.

தொழிலாளர்களின் வசதியைப் பெருக்கும் நோக்கில் தமிழக அரசின் கொள்கையின்படி, நமது போக்குவரத்துக் கழகங்கள், இந்தியத் துணைக் கண்டத்திலேயே வேறு எந்த அரசு நிறுவனமும் செயல்படுத்திடாத சொந்த வீடு கட்டும் திட்டத்தினைத் திறம்படச் செயல்படுத்தி வருகின்றது. இதன் முதற்கட்டமாக விழுப்புரத்தில் 393 வீடுகள் ரூ.4.85 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டு மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி அவர்களால் கடந்த 7.1.92 அன்று திறந்து வைக்கப்பட்டன. மேலும், கடலூர், பாண்டி, திருவண்ணாமலை ஆகிய இடங்களில் தொழிலாளர்களுக்கென வீடு கட்டும் திட்டம் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

பல கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழக மக்களுக்காகத் தினமும் தனது சேவையை அர்ப்பணித்து வரும் போக்குவரத்துக் கழகங்களுக்கு, பொதுமக்களின் ஒத்துழைப்பும், பாதுகாப்பும் மிகவும் தேவையாகிறது.

தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் பொது மக்களுக்கும், அதன் பணியாளர்களுக்கும் சிறந்த முறையில் பணியாற்றி வருகிறது.

—ம. அரிகிருஷ்ணன்
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலா





# தொழு ஒழிப்பு —

## டேன்லப் திட்டம்

சேலம், தருமபுரி, தென்னார்க் காடு ஆகிய மாவட்டங்களில் டென் மார்க் நாட்டு உதவியோடு செயல் படுத்தப்பட்டு வருவது 'டேன்லப்' (Danish Leprosy Eradication Project) திட்டம்.

தொழுநோயை அடியோடு ஒழித்து விட முடியும் என்ற உறுதியைக் கிராமப்புற மக்களுக்கும் உண்டாக் குவது இந்தத் திட்டம்.

டாக்டர்கள் என். முருகேசன், எஸ்.பி. ராமலிங்கம், டேனிடா திட்ட அலுவலர் டாக்டர் சந்திரன், திட்டத் துணை அலுவலர் திரு. அன்பு கணபதி ஆகியவர்களோடு அத்திட்டம் செயல்படுத்தப்படும் விதம் பற்றி அறியத் தென்னார்க் காடு மாவட்டக் கிராமப் புறங்களில் பயணம் சென்றோம் நாம்.

பணிக்கன் குப்பம் கிராமத்தில், மாணவ மாணவிகளும் இந்த முகா மில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். ''ஆரம்ப நிலையில் உள்ள தொழு நோயைக் கண்டுபிடிக்க டாக்டர்கள் தான் வேண்டும் என்பதில்லை; சாதாரண மக்களாலும் அது கண்ட றியப்பட வேண்டும் என்ற எண்ணத் தில்தான் இவ்வாறான முகாம்கள் நடத்தப்படுகின்றன என்றார் டாக்டர் என். முருகேசன்.

திருமதி. பாமா என்ற ஆசிரியை யின் தலைமையில் அன்று வந்திருந்த பத்துப் பதினைந்து மாணவிகளில் எஸ்.எஸ். சிவசங்கரி என்பவரை அழைத்து விசாரித்தோம்.

''உனக்கு இந்தப் பணியில் ஈடு படுவது அருவருப்பாக இல்லையா?''

''அப்படியிருந்தால் இதற்கு வந் திருக்கவே மாட்டேன்; மனப்பூர்வ மாகச் சம்மதித்தே இதற்கு வந்திருக் கிறேன்''.

''இதனால் படிப்புக்கு இடை யூறாக இல்லையா?''

''இல்லை; பெரும்பாலும் ஓய்வு நேரத்தில்தான் இந்தப் பொதுப் பணியில் ஈடுபடுகிறோம்!''

''யாருக்காவது தொழுநோய் இருக்கிறதா என்று கண்டறிய நீங்கள் கிராமப்புற வீடுகளுக்குச் செல்லும்போது மக்கள் வெறுப் போடு பார்க்கிறார்களா?''

''இல்லீங்க; நல்லபடி ஒத்துழைப் புத் தர்றாங்க; ஆண் பிள்ளைங்க மட்டும் கொஞ்சம் எங்ககிட்ட கூச்சப் படுவாங்க; அது மாதிரி நேரத்துல மாணவர்களைப் பார்க்கச் சொல் லிருவம். இன்னிக்கி இந்தக் கிராமத் துல நாங்க ரெண்டு சிறுவருங் களுக்குத் தொழுநோய் ஆரம்ப கட் டத்துல இருக்கிறதெ கண்டு பிடிச் சோம்''.

''இது மாதிரி வேலைங்களுக்கு நீங்க வர்றதெ ஒங்க வீட்லெல்லாம் அனுமதிக்கிறாங்களா?''

''வீட்ல பர்மிஷன் தராம நாங்கள்ளாம் இப்பிடி வெளி கிராமத்துக்கு வர முடியுங்களா?'' என்று சிரிப்போடு கேட்டார் அந்த மாணவி.

பண்ணுருட்டியைச் சேர்ந்த ஸ்ரீ சுப்பராய செட்டி மகளிர் மேனிலைப் பள்ளி மாணவிகளான அவர்களை திரு. ஆர். கந்தசாமி என்கிற 'டேன்லப்' திட்ட அலுவலரே வழி நடத்தினார்.

''சாதாரணத் தேமல் போல் காணப்படும் இடத்தில் கோழிச் சிறகால் நீவும்போது கூச வேண்டும்; குண்டூசியால் குத்தினால் வலிக்க வேண்டும்; அப்படியில்லாதபட்சத் தில் அதுவே தொழுநோய்க்கான அறிகுறி என அறியப்படுகிறது'' என்றார் அவர்.

—எஸ். சுதாகர்

***

★ திருக்குறட் சொற் பொழிவைத் தேன்நிகர் சுவையோடு ஆற்று வதாலேயே 'திருக்குறள் முனிசாமி' என்று குறிப் பிடப்படும் அத்தமிழறிஞர் இம்மாவட்டத்தைச் சேர்ந்த விழுப்புரத்தில் பிறந் தவரே.

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத் துணை வேந்தராக உள்ள டாக்டர் ஔவை நடராசன் பிறந்த ஊர் இந்த மாவட்டத்தில் உள்ள ஔவையார் குப்பமேயாகும்.

***



# ஆடல் காணீரோ

தென்னார்க்காடு மாவட்டத் திருக்கோயில்கள்- சமய வழிகாட்டிகள் குறித்த விவரங்கள் இங்கே தரப்படுகின்றன:

தமிழகத்தின் தலைநகராம் சென்னை மாநகருக்குத் தெற்கே 200 கி.மீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது கடலூர். தென்னார்க்காடு மாவட்டத்தின் தலைநகரமாகும் இது.

சங்ககாலம் முதலே இந்த மாவட்டம் சிறப்புற்றிருப்பதைப் புறநானூறு, அகநானூறு போன்ற இலக்கியங்களின் வாயிலாக நாம் உணரலாம்.

தேவாரம் பாடிய சைவ சமய குரவர்கள் நால்வருள் இருவரான' திருநாவுக்கரசரும் (திருவாமூர்), சுந்தரரும் (திருநாவலூர்) இம்மாவட்டத்தில் பிறந்தோரேயாவர்; தேவாரம் பாடிய மூவரில் இருவர் என்ற சிறப்பும் இவர்களுக்குண்டு. திருத்தொண்டர் புராணம் என்கிற பெரியபுராணம் பாடப்பட்டதும், அரங்கேற்றப்பட்டதும் தென்னார்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த சிதம்பரத்திலேயே ஆகும்.

திருநாவுக்கரசரின் தமக்கையார் திலகவதியார் பிறந்து பெருமை பெற்றதும் இங்குள்ள திருவாமூரிலே தான்.

'திருவருட்பா' அருளிய வள்ளல் பெருமான் (மருதூர்), சிவஞான போதம்' முதலான சைவ சமய நூல்கள் இயற்றியவர்களெல்லோரும் இம்மாவட்டத்தினரேயாவார்கள்.

இயற்றமிழுக்கு எழில் சேர்த்த ஆறுமுக நாவலர் வளர்ந்த ஊர் சிதம்பரமே.

**சிதம்பரம் கோயில்கள்**

இறை வழிபாட்டால் ஏற்றம் கொண்ட மாவட்டம் தென்னார்க்காடு மாவட்டம். சைவம் வைணவம் ஆகிய சமயத்தாரால் போற்றப்பட்ட திருத்தலங்கள் பல இங்குண்டு. சைவ சமயத்தின் முழு முதல் கடவுளான சிவபெருமானும், வைணவுத் தெய்வமாகிய திருமாலும் ஒருசேரக் காட்சி தரும் இடம் தில்லைத் திருத்தலம்.

ஆடற்கலையில் - சக்தியைத் தோல்வி காணச் செய்த ஆடல் வல்லானாகிய ஈசன் நடராசக் கடவுளாகக் காட்சிதருவதும் தில்லைத் திருத்தலத்திலேயேயாகும்.







**மாவட்டத் திருக்கோயில்கள்**

தென்னார்க்காடு மாவட்டத்தில் நின்றிலங்கும் திருக்கோயில்கள் பல.

திருநாரையூர் பொல்லாப் பிள்ளையார் கோயில், விருத்தாசலம் பழமலைநாதர் கோயில் பெண்ணாகடம், திருவதிகை, திருநாவலூர், திருப்பாதிரிப்புலியூர் (பாடலீசுவரர்), திருவெண்ணெய் நல்லூர், திருவாமூர் ஆகிய இடங்களில் உள்ள கோயில்கள் மிகச் சிறந்தவை; பெருமக்களால் பாடப்பெற்றவை.

இம்மாவடடத்தில் உள்ள திருவந்திபுரம் கோயிலுக்கு ஒரு சிறப்பு உள்ளதாகச் சொல்லப்படுகிறது.

திருப்பதி வெங்கடாசலபதிக்குப் பிரார்த்தனை செய்து கொள்ளுவோர், அங்கே செல்லமுடியாத நிலையில் இக்கோயிலில் தம் பிரார்த்தனையைச் செலுத்திக் கொள்ளலாம்; ஆனால், இக்கோயிலுக்குப் பிரார்த்தனை செய்து கொள்ளுவோர், அதற்குப் பதில் திருப்பதிக்குப் போனாலும் சமமானது ஆகாதாம்!

**சிதம்பரம் கோயில்**

சரித்திரப் பிரசித்தி பெற்றது சிதம்பரம் ஸ்ரீசபாநாயகர் கோயில் எனப்படும் அருள்மிகு நடராசர் கோயில்; 'ஆடல் காணீரோ' என ஆனந்தக் கூத்தாடும் ஈசனை இங்கே கண்டுவக்கலாம்.

1955-இல் திருக்குடமுழுக்கு நடந்ததன் பிறகு, 1987-இல் மறுபடியும் திருக்குடமுழுக்கு நடத்தப் பெற்றது. பூலோகக் கைலாயம் எனப்படும் கோயில் இது; பஞ்சபூதத் தலங்களிலே இதுவும் ஒன்று.

வைணவ சம்பிரதாயப்படி 'கோயில்' என்றால் திருவரங்கம் தான்; அதேபோலச் சைவ சம்பிரதாயப்படி 'கோயில்' என்றால் சிதம்பரம் திருக்கோயில்தான்.

பெரிய புராணம் பாடிய சேக்கிழாராலும் - திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், உமாபதிசிவம், வடலூர் இராமலிங்க அடிகளார் ஆகியோராலும் பாங்குறப் பாடப்பெற்ற தலம் இது.

**கோயிலின் கதை**

சிதம்பரம் கோயிலின் கிழக்கு வாசல் கோபுரம் கி.பி. 1250- இல் மதுரை சுந்தர பாண்டியனாரால் கட்டப்பட்டது; வடக்குக் கோபுரம் கி.பி. 1509-1530-இல் கிருஷ்ண தேவராயரால் கட்டப்பட்டது. தென் திசைக் கோபுரமும் மேற்றிசைக் கோபுரமும் கி.பி. 1243-இல் கோப்பெருஞ்சிங்க தேவனால் கட்டப்பட்டவை.

**• கடலூரையொட்டிச் செல்லும் கெடில நதி பாடல் பெற்ற நதியாகும். இது கடலில் கலக்குமிடத்தில், அந்நாளில் மிகப்பெரிய துறைமுகம் அமைந்திருந்தது; கடல் வழியே வந்த ஆங்கிலேயர் கால் ஊன்ற அதன் காரணமாகவே இந்த இடத்தைத் தேர்ந்தெடுத்தார்கள்.**

கிழக்கு-மேற்குக் கோபுரங்களில் 108 நாட்டிய வகைகளைக் காட்டும் சிற்பங்கள் இருக்கின்றன.

இந்தக் கோயிலினுள் இருக்கும் ஆயிரங்கால் மண்டபத்தில் 999 தூண்கள் உள்ளன; ஆயிரத்தில் இன்னொன்று - தில்லை நடராசரின் கால் எனப்படுகிறது.

கி.பி. 1118-1150-இல் கட்டப்பட்டது இது; பிரகாரங்கள் எல்லாம் சோழ மன்னர்களால் கட்டப்பட்டவை. இந்த மண்டபத்திலே தான் சேக்கிழாரின் பெரியபுராணம் அரங்கேற்றப்பட்டதாக வரலாறு கூறுகிறது.

பேரரசன் ராஜராஜ சோழன் காலத்திலே தான் (கி.பி. 985-1014), நம்பியாண்டார் நம்பிகள் திருமுறைகளைக் கண்டெடுத்துத் தொகுத்தளித்தார்.

**பொற்சபை விவரம்**

தில்லையம்பதியில் உள்ள - அருள்மிகு நடராசப் பெருமானுக்குரிய ஐந்து சபைகளில் ஒன்றான கனகசபையில் திருமூலநாதரும், உமையம்மையும் இணைந்தபடி எழிலாகக் காட்சி தருகின்றனர்; இச்சபையின் மேல்விதானம் பொன் ஓடு வேயப்பட்டதாகும்.

சிதம்பரத்திற்குத் தில்லைவனம், பெரும்பற்றப் புலியூர், பொன்னம்பலம், வியாக்கிரபுரம், பூலோகக் கைலாயம், புண்டரீகபுரம் என்ற பெயர்களும் உண்டு.

55 ஏக்கர் பரப்பளவுள்ள இந்தக் கோயிலில் உள்ள மூலவர் பெயர்

சபாநாயகர்; அம்பிகையின் பெயர் சிவகாமி. மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்றாலும் இத்தலம் பெருமை பெறுகிறது.

பொன்னம்பலம், பேரம்பலம், சிற்றம்பலம், நிருத்தசபை, ராஜசபை ஆகிய ஐந்து சபைகள் இங்குள்ளன. பிரம்மா, விஷ்ணு, உருத்திரர் ஆகிய மும்மூர்த்திகளும் இங்கே கோயில் கொண்டிருக்கின்றனர்.

இக்கோயிலின் தலவிருட்சமான தில்லை மரம் திருமூலட்டானக் கோயில் மேற்குப் பிரகாரத்தின் மேற்புரம் கருங்கல் வடிவில் செதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது.

ராஜகோபுரங்கள் ஒவ்வொன்றும் 135 அடி (40.5 மீட்டர்) உயரமும், ஏழு தளங்களும் கொண்டவை. கோபுரங்களின் மேல் 7 அடி 6 அங்குலம் உயரமுள்ள 13 செப்புக் கலசங்கள் உள்ளன. ராஜகோபுரங்களின் அடிப்பகுதி 90 அடி நீளமும் (27 மீட்டர்), 60 அடி (18 மீட்டர்) அகலமும் கொண்டு சதுர வடிவில் அமைந்திருக்கிறது. ராஜகோபுரவாயில்கள் தலா 40 அடி (12 மீட்டர்) உயரமுள்ளவை.

சிற்சபை எனப்படும் பொன்னம்பலத்தின் மேல், ஆய கலைகள் 64 என்பதை உணர்த்தும் விதத்தில் 64 கைமரங்கள் பொருத்தப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு நாளும் மனிதன் விடும் சுவாசங்களின் எண்ணிக்கையை விளக்கவே இதன் கூறை 21,600 ஓடுகளால் வேயப்பட்டிருக்கிறது என்பது ஐதீகம். இந்தப் பொன் ஓடுகளில் அறையப்பட்டுள்ள ஆணிகளின் எண்ணிக்கை 72,000.

இந்தச் சிற்றம்பலத்திற்கு முதலில் பொன்வேய்ந்தவன் இரண்யவர்மன் எனக் கோயில் தல புராணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவனுக்குப் பிறகு சோழ மன்னன் பராந்தகன் பொன்வேய்ந்தான். அவன் தந்தை ஆதித்த சோழனே பொன்னம்பலத்தின் முகப்பிற்குப் பொன் வேய்ந்தவன்.

இக்கோயிலில் உள்ள நடராசப் பெருமானின் திருவுருவம் - விஞ்ஞானம், சமயம், கலை ஆகிய அனைத்தையும் கொண்டு விளங்கும் உண்மை ஒளி எனப்படுகிறது.

**சிதம்பர ரகசியம்**

பூசைக் காலத்தில், சிற்சபையில் சபாநாயகரின் வலப்புறம் உள்ள திரை அகலும்; தீபாராதனை காட்டப்படும்போது உள்ளே திருவுருவம் ஏதும் தோன்றாது. தங்கத்தாலான ஒரு வில்வதளமே காட்சி தரும். ஆகவே இறைவன் ஆகாச உருவில் இருக்கிறான் என்பது ஐதீகம்.

இதுதான் சிதம்பர ரகசியம் எனப்படுவது!

இந்தியாவிலேயே நடராசப் பெருமானுக்கு இங்குதான் தனிக் கோயில் உள்ளது. இப்போதும் - தில்லைவாழ் அந்தணர்களாகிய தீட்சிதர்களுக்கே இந்தக் கோயில் சொந்தமாக இருக்கிறது; இதற்கென்று சொந்தமான நிலம் இல்லை.

ஆறுகாலப் பூசை, சிறப்புப் பூசை, திருவிழா ஆகியவற்றிற்குப் பலரால் கட்டளைகள் ஏற்படுத்தப்பட்டு, அவரவர் குடும்பத்தவரே அந்தக் கட்டளைகளைத் தீட்சிதர்கள் மூலம் நடத்திவருகின்றனர்.

திருவாதிரை நாள் ஆருத்ரா தரிசனம் இக்கோயிலில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுவதாகும்.

சமஸ்கிருதத்திலேயே சுமார் 1300 ஆண்டுகளுக்கு மேலாக மந்திரம் ஓதப்பட்டுவந்த இக்கோயிலில், அண்மையில் குடமுழுக்கு நடைபெற்ற காலத்தில் - தேனினும் இனிய தேவாரம், திருவாசகம் பாடிப் பரமன் தொழுது வணங்கப்பட்டான்.

**சமய வழிகாட்டிகள்**

சைவ, வைணவ சமய வழிகாட்டிகள் பலரும் தென்னார்க்காடு மாவட்டத்தில் பிறந்திருக்கிறார்கள்.

அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் பெண்ணாகடத்தில் தோன்றிய மெய்கண்ட தேவர், திருத்துறையூரில் தோன்றிய அருணந்தி சிவாச்சாரியார், திருவந்திபுரத்தில் பிறந்த வேதாந்த தேசிகர், திருப்பாதிரிப் புலியூரில் வாழ்ந்த ஞானியாரடிகள் ஆகியோராவர்.

வரலாற்றிலே...

பொய்கையார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் போன்றோர் பாடிய இங்குள்ள திருக்கோவிலூருக்கு வரலாற்றுச் சிறப்பொன்று உண்டு.

முன்னொரு காலத்தில் - இம் மாவட்டத்தின் பெரும் பகுதிகளைக் கொண்டதாக நடுநாடு - சேதிநாடு ஆகியவை விளங்கின; மலையமான் திருமுடிக்காரியும், மெய்ப்பொருள் வேந்தனும் திருக்கோயிலூரைத் தலைநகராகக் கொண்டு அரசாண்டுள்ளனர்.

பிற்காலத்தில் - நவாபுகள், நாயக்கர்கள், காடவர்கள், ஆங்கிலேயர் ஆகியோர் இப்பகுதியில் ஆட்சி செலுத்தியுள்ளனர்.

வரலாற்றைப் படித்தோமானால்- தில்லையம்பதியிலே முடிசூட்டிக் கொண்ட சோழ மன்னர்கள் பலரை நாம் காண முடியும்.

அக்காலத் தமிழகத்தில் சமணமும் ஓரளவுக்குப் பரவியிருந்தது; செஞ்சி வட்டம் மேல்சித்தாமூரில் உள்ள ஸ்ரீபார்சுவநாதர் ஆலயமே இதற்குச் சான்றாகும்.

சமணர் கோயிலான இதில் உள்ள பாகுபலேசுவரர் திருவுருவம், சரவணபெல்கோலாவில் உள்ளது போலவே தோற்றமளிக்கிறது.

**- இந்திரன்**

---

**அனல்வாதம் புனல்வாதம் எனப்பட்ட சமயப் போராட்டத்தின் காரணமாக அப்பர் சுண்ணாம்புக் காளவாயில் போடப்பட்டு உயிர் மீண்டதாகவும், கல்லைக் கட்டிக் கடல் நடுவே போடப்பட்ட பிறகும் திருநாவுக்கரசர் உயிரோடு கரை சேர்ந்ததாகவும் கூறப்படும் புராணச் சம்பவங்கள் நடந்த இடம் கடலூர்தான்!**

**எல்லாக் கோயில்களிலும் உழவாரத்தோடு நிற்கும் அப்பர் விக்கிரகத்தையே நாம் காண முடியும்; கடலூர் பாடலீசுவரர் கோயிலிலோ அத்தகைய சோதனைகளுக்கெல்லாம் பிறகு, உழவாரத்தோடு அமைதியாக அமர்ந்திருக்கும் அப்பரை நாம் காணலாம்.**

---



**தமிழ்நாட்டில் உள்ள கல்வி நிலையங்களில் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் பெற்றுள்ள புகழ் அளவிடற்கரியதாகும்; இதோ, அது பற்றிய விவரங்கள்:**

# அண்ணாமலைப் பல்கலைக்கழகம்



தென்னார்க்காடு மாவட்டம் என்றாலே நமக்கு நினைவு வரக்கூடியவை சிலவற்றில் அண்ணாமலைப் பல்கலைக் கழகமும் ஒன்றாகும்.

அண்ணாமலைப் பலகலைக்கழகம் தோன்றுவதற்கு அடிப்படையாக, செட்டிநாட்டரசர் டாக்டர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் தொலைநோக்கு உணர்வுடன் தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள சிதம்பரத்தில் இராமசாமி செட்டியார் உயர்நிலைப் பள்ளியில் 1920-ஆம் ஆண்டிலேயே மீனாட்சிக் கல்லூரியை நிறுவினார்.

கல்லூரிக்கு வேண்டிய அனைத்து வசதிகளையும் கொண்ட மீனாட்சிக் கல்லூரிதான் 1929-இல் அண்ணாமலைப் பல்கலைக் கழகமாக அண்ணாமலை நகரில் வளர்ச்சியுற்றுத் தென்னிந்தியப் பண்பாட்டிற்கும் கல்வி மேம்பாட்டிற்குமாகச் செயல்படத் தொடங்கியுள்ளது.

இப்பல்கலைக்கழகம் உயர்ந்தோங்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில் 300 ஏக்கர் நிலப்பரப்பையும் 20 இலட்சம் ரூபாயையும் செட்டிநாட்டரசர் அவர்கள் பெருங்கொடையாக வழங்கினார். செட்டிநாட்டரசர் அவர்கள் இணைவேந்தராக இருந்த 19 ஆண்டுகளிலும் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் ஒவ்வொரு துறையிலும் மிகச் சீரிய வளர்ச்சியினைக் கண்டது என்பது உண்மை - வெறும் புகழ்ச்சியில்லை.

**இசைத்துறை**

இந்தியப் பெருநாட்டில் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தனக்கென ஒரு தனிச் சிறப்பினைக் கொள்ளவேண்டும் என்ற நோக்கத்தில் உலகப் புகழ்பெற்ற மகாகனம் வி.எஸ். சீனுவாச சாஸ்திரி, சர். சாமுவேல் அரங்கநாதன் முதலிய பேரறிவாளர்கள் துணைவேந்தர்களாக நியமிக்கப்பட்டனர்.

இந்தியாவில் முதன் முதலில் இசைக்கு என ஒரு தனித் துறையை அமைத்த பெருமை செட்டிநாட்டரசர் அவர்களையே சாரும். மேலும் நம் நாட்டிற்கு மிகத் தேவையான பொறியியல் புலம் ஒன்றையும் அவர் 1945-இல் இங்கே தோற்றுவித்தார்.

**தனித்தனித் துறைகள்**

1948-ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் நிறுவனர் இயற்கை எய்தினார். பின்னர் அவருடைய மூத்த மகன் டாக்டர் இராஜா முத்தையா அவர்கள் இணைவேந்தரானார். இனிய சுபாவமும், தொண்டுள்ளமும் ஒருங்கே அமையப் பெற்ற டாக்டர் முத்தையா அவர்கள், புதிய பல்கலைக்கழகம் செயல்படப் பெரிதும் பாடுபட்டார்.

அவர் காலத்தில் தான் வேளாண்துறை, பொறியியல்துறை, வணிகவியல்துறை, நிர்வாக வணிக இயல்துறை, மருத்துவத்துறை ஆகியவை தோன்றலாயின. மேலும் 1979-இல் தொலைதூரக் கல்வி இயக்ககம் இப்பல்கலைக்கழகம் சார்பில் நிறுவப்பட்டது. இதன் காரணமாக பலரும் கல்வி தொடரும் நல்வாய்ப்பு ஏற்பட்டது.

மருத்துவப் பிரிவு அதனுடன் பல் மருத்துவம், செவிலியர் பயிற்சி, மருந்தகத்துறை ஆகியவற்றுடன் மேலும் விரிவுபடுத்தப்பட்டது.



கிளிஞ்சல் அலங்காரப் பொருட்கள்

எண்ணெய்வித்து, பட்டுவளர்ப்பு, தோட்டக்கலை, கால்நடை வளர்ப்பு, கதர்-கிராமத் தொழில்கள் ஆகிய தொழில்கள் செய்வதற்காக ரூ.137 இலட்சம் தொகையும், இதில் ரூ.63.74 இலட்சம் மானியமும் அளிக்கப்பட்டுள்ளது. இந்தக் கடன் தொகையை இந்தியன் வங்கி அளித்துள்ளது.

இந்த ஆண்டு இம்மாவட்டத்தில் மேலும் 644 மகளிர்களுக்கு ரூ.40•30 இலட்சம் கடனும் இதில் ரூ.14.05 இலட்சம் மானியமும் வழங்கப்பட்டுள்ளது. 1992-93-ஆம் ஆண்டிற்கு இம்மாவட்டத்தில் கோலியனூர், மைலம், விக்ரவாண்டி, உளுந்தூர்ப்பேட்டை ஆகிய ஒன்றியங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு கோலியனூர், மைலம் ஆகிய ஒன்றியங்கள் பவ்டா என்ற தொண்டு நிறுவனத்தின் மூலமும் விக்ரவாண்டி ஒன்றியம் 'கல்வி கேந்திரா' என்ற தொண்டு நிறுவனம் மூலமும், உளுந்தூர்ப் பேட்டை ஒன்றியத்தில் ''சிட்ட்ரஸ்ட்'' என்ற தொண்டு நிறுவனம் மூலமும் மன்றங்கள் அமைக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

1993-94-ஆம் ஆண்டிற்கு சங்கராபுரம் நல்லூர், ரிஷிவந்தியம், மங்களூர், செஞ்சி, மேல்மலையனூர், வல்லம், கரக்காணம் ஆகிய ஒன்றியங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. மகளிர் மேம்பாட்டுத் திட்டங்கள் நிறைவேற்றப்படவுள்ளன.

தென்னார்க்காடு, சேலம், தருமபுரி ஆகிய மூன்று மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வரும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தில் மூன்று ஆண்டுகளில் மொத்தம் 40,300 நபர்களுக்குப் பயிற்சி அளித்து, மன்ற உறுப்பினர்களாகச் சேர்த்து, கடன் வழங்கக் குறியீடு தமிழக அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பயனாளிகள் பயிற்சிக் காலம் ஒரு மாதம் ஆகும். பயிற்சிக்கால உதவித் தொகை ரூ.300 அளிக்கப்படுகிறது. தொண்டு நிறுவனங்கள், மகளிர் மன்றங்களை அமைக்கின்றன. இத்திட்டம் மூன்று ஆண்டு காலத்தில் நிறைவேற்றப்பட்டுப் பின்னர் மகளிர் மன்றங்கள் சுயமாக இயங்குமாறு தயார்ப்படுத்தப்படுகின்றன.

பயனாளிகள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்கு ரூ.5,000 சிறு விவசாயிகளுக்கு ரூ.3,000 மிகச் சிறு விவசாயிகளுக்கு ரூ.3,000 வரையிலும் அதிகபட்சக் கடன் வழங்கப்படுகிறது. மகளிர் மன்றங்கள் அமைக்கப்பட்டவுடன், இம்மன்றம் இந்தியன் வங்கியில் கணக்கு ஆரம்பித்து உறுப்பினர்கள் தங்களால் இயன்ற தொகையினை வங்கிக் கணக்கில் போட்டு வரவேண்டும். மூன்று மாதங்களுக்குப் பிறகு இத்தொகையினை உறுப்பினர்களுக்குக் கடனாகக் கொடுக்கப்படுகிறது. மகளிர் மன்ற உறுப்பினர்களில் கடன் பெற்று யாராவது ஒரு நபர் கடனைத் திருப்பிச் செலுத்தாவிட்டாலும் அனைவருக்கும் மறுபடியும் கடன் வழங்கப்படமாட்டாது என்ற விதிமுறையும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

**செயற்கை வைரம் பட்டை தீட்டுதல்**



தென்னார்க்காடு மாவட்டத்தில் மகளிர் மேம்பாட்டுத் திட்டம் சீரிய முறையில் நிறைவேற்றப்பட்டு வருவதுடன், கடன் பெற்ற உறுப்பினர்கள் அனைவரும் உரிய முறையில் கடனைத் திருப்பிச் செலுத்தி வருகிறார்கள் என மகளிர் மேம்பாட்டுத்திட்ட அலுவலர் திரு. டி.சீனிவாசன் தெரிவித்தார். பெண்கள் இத்திட்டத்தின் மூலம் தங்களை உயர்த்திக் கொள்வதுடன் நாட்டையும் உயர்த்துகிறார்கள். ●



பாய் முடைதல்



# நூல்நயம்

## SIDDHA SYSTEM OF TOXICOLOGY

**ஆசிரியர்:**
டாக்டர். எஸ். சிதம்பரதாணுப் பிள்ளை
**வெளியீடு:**
Siddha Medical Literature
Research Centre,
E-32, Anna Nagar (East),
Madras-600 102.

பக்கம்:104+10 விலை:ரூ.100/-

டாக்டர் சிதம்பரதாணுப் பிள்ளை அவர்கள் சித்த மருத்துவத்தில் ஒரு வல்லுநர். கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த இவரது குடும்பம் பல தலைமுறைகளாகச் சித்த மருத்துவச் சிகிச்சையளித்து வருகிறது.

இவர் இதுவரை சுமார் 60 சித்த மருத்துவப் புத்தகங்கள் எழுதியுள்ளார். இவர் எழுதியுள்ள Siddha System of Toxicology என்கிற இந்த நூலில், பல வகை விஷத்தினால் ஏற்படும் உடல் நலக்குறைவு, அதற்கான சிகிச்சை முறைகள் ஆகியவை விரிவாகக் கூறப்பட்டுள்ளன. உணவு மற்றும் தாவர வகைகள், இரசாயன மருத்துவப் பொருட்கள், பாம்புக்கடி, நாய்க்கடி, அட்டை முதலானவற்றால், ஏற்படும் உடல் நலக்குறைவு ஆகியவற்றிற்கு மருந்தும், சிகிச்சை முறையும், கடைப்பிடிக்க வேண்டி பத்தியமும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. சித்த மருத்துவர்களுக்கும், சித்த மருத்துவ முறையைப் பின்பற்றுவோருக்கும் இந்நூல் பெரிதும் பயன்படும்.

—ஆர். ராஜசேகரன்

## சமைப்போம் ருசிப்போம்!

**ஆசிரியர்:** திருமதி பவானி விஸ்வநாத்
**வெளியீடு:**
பூங்கொடி பதிப்பகம்,
14, சித்திரைக் குளம் மேற்கு வீதி,
சென்னை-600 004.

பக்கம்:128 விலை:ரூ.14/-

உயிர்வாழ நாம் உணவு உட்கொள்கிறோம். இந்த உணவு சில நேரங்களில் சுவையாகவும் சில நேரங்களில் சுவையற்றும் இருப்பதை நாம் காண்கிறோம். ருசியான உணவை எவ்வாறு தயாரிக்கலாம் என்பதை விளக்குகிறது இந்நூல்.

சாம்பார் பொடி, மசால் பொடி போன்ற பலவகையான பொடி வகைகளும், கறிகூட்டு வகைகளும் தயாரிக்க வேண்டிய பொருட்கள் மற்றும் செய்முறைப் பற்றி விவரமாகக் கூறியிருக்கிறார் ஆசிரியர்.

—ஜே.சி.

## நொண்டி நாடகம்

**ஆசிரியர்:** ந. இளங்கோ
**கிடைக்குமிடம்:**
976, டி.வி.எஸ். காலனி,
அண்ணாநகர் மேற்கு விரிவாக்கம்,
சென்னை-600 101.

பக்கம்:132 விலை:ரூ.18/-

சீதக்காதி நொண்டி நாடகம், ஞான நொண்டி நாடகம் என்னும் பொருளில் எம்.பில். பட்டத்திற்காக, சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு வழங்கப்பட்ட ஆய்வேடே இந்நூல்.

''ஆய்வைக் காலப் போக்கிற்காகச் செய்பவர் உண்டு; ஆய்வைப் பட்டம் பெறுவதற்காக மட்டுமே செய்பவர் உண்டு; ஆய்வை ஓர் உண்மை ஆய்வாகக் கருதிச் செய்பவர் அரிது. அவ்வாறிருக்க, இந்நூலாசிரியர் ஆய்வின் நோக்கமே தலைமையாய்க் கொண்டு நுணுகிக் காணும் முயற்சியை மேற்கொண்டவர்'' என்று இதற்கு அணிந்துரை நல்கிய டாக்டர் சூ. இன்னாசி கூறுவது முற்றுலும் உண்மை.

நொண்டி நாடக இலக்கியத்தின் தோற்றத்தை விளக்கும் பாங்கும், தமிழில் நொண்டி நாடகங்களைக் கூறி, நொண்டி நாடகப் பாகுபாடுகள் குறித்துத் தெரிவிக்கும் கருத்துக்களும், சீதக்காதி மற்றும் ஞான நொண்டி நாடகங் குறித்த ஒப்பீடும் நூலாசிரியரின் நுண்மாண் நுழைபுலத்தைக் காட்டுகின்றது. அனைவரும் படித்துப் பயன்பெற வேண்டிய நூல்.

—பி.வி.ஜி.

## சிந்தனைச் சோலை

**ஆசிரியர்:** ஆர்.சி. தமிழன்பன்
**வெளியீடு:**
கோமதி பதிப்பகம்,
247, அவ்வை சண்முகம் சாலை,
சென்னை-86.

பக்கம்:256 விலை:ரூ.33/-

சிந்தனையின் சிதறல்களாக இந்நூல் விளங்குகிறது. ஆசிரியரின் பழுத்த அனுபவமும், புலமைத் திறமும் ஒவ்வொன்றிலும் புலப்படுகிறது. நிலம் முதல் இறைமை ஈறாக 114 தலைப்புகளில் சிந்தனை விருந்து படைக்கிறார் அவர்.

நிலத்தின் வியர்வை நீர் ஊற்று என்றும், 'பெண்மையின் உடல் மென்மையானது, உள்ளமோ மேன்மையானது' என்றும், 'அறிவு வளர்ச்சிப் பண்ணை தான் கல்வி' என்றும், 'இயற்கைக் கூறுகளின் மறுபிறப்பே அறிவியல்' என்றும் இப்படிச் சிந்தனை ஊற்றுக்கள் பெருக்கெடுத்து ஓடுகின்றன.

படிக்கப் படிக்க இன்பந்தரும் இனிய வரிகள், நம் இருதயத்தைத் தொடுகின்றன; தமிழ் மொழி வளத்தை அள்ளித் தெளிக்கின்றன. தெளிந்த சிந்தனையில் மிதக்கும் தேனடைகளாக விளங்கும் இந்தச் சொல் மாலை மணக்கிறது. படித்து மகிழ வேண்டும்.

—பி.வி.ஜி.

## 'மனிதர்கள்'

**ஆசிரியர்:**
ஏர்வாடி. எஸ். இராதாகிருஷ்ணன்
**வெளியீடு:**
சுதா பதிப்பகம்,
4, முத்து முதலித் தெரு,
புரசைவாக்கம், சென்னை-600 007.

பக்கம்:92 விலை:ரூ.10/-

பாதிரியார், பெண் செயலாளர், தொழிற்சங்கத் தலைவர், அலுவலக மேலாளர், இந்தத் தலைமுறையின் பொழுதுபோக்குக் காதலைக் கண்டு குமுறும் பெரியவர், நட்புக்கு இலக்கணமாகத் திகழும் அலுவலர், பதவியின் பெருமையை உணரும் காவல்துறை அதிகாரி, காதலைப் போற்றும் கந்தசாமி ஏழ்மையை மதிக்கும் பெரியவர், சுற்றுச் சூழலைக் காக்கப் போராடும் முதியவர், மனந்திருந்தும் எழுத்தாளர், ... இப்படிப் பல துறையில் உள்ள பல மனிதர்களின், பெண்களின் குணநலன்களை அப்பட்டமாக விவரிக்கும் நூல் 'மனிதர்கள்' நல்ல தலைப்பு.

ஆரம்பித்தவுடனேயே ஆர்வத்தோடு படிக்கத் தூண்டும் நடை, ஒவ்வொரு கதையின் பிரச்சினைக்கும் தந்திருக்கும் தீர்வுகள் எதிர்பாராதவை. கதைகளுக்குச் சிறப்புச் சேர்க்கின்றன.

—என். குமாரசாமி

## அருளும் பொருளும் தரும் அபிராமி அந்தாதி

**ஆசிரியர்:**
எம். நாராயண வேலுப்பிள்ளை
**வெளியீடு:**
செந்தில் பதிப்பகம்,
10, பொன்னுசாமி நாயக்கன் தெரு,
சென்னை-600 014.

பக்கம்:76 விலை:ரூ.10/-

அபிராமிபட்டர் எழுதிய அபிராமி அந்தாதியின் மூலமும் உரையும் எளிய இனிய நடையில் எழுதப்பெற்றுள்ளது. இந்நூலின் சிறப்பு மூல நூலாசிரியரின் வரலாற்றுடன் பாடல்களும், பதவுரைகளும் எல்லாத் திறத்தாரும் படித்துப் புரிந்து கொள்ளும்வண்ணம் அமைந்துள்ளன.

இன்று மருத்துவக் கல்வி வசதிகள் பலவும் பெற்று 'இராஜா முத்தையா மருத்துவக் கல்லூரி' என்ற பெயரில் புதிய பொலிவோடு அது இயங்கிவருகிறது.

இராஜா முத்தையா அவர்கள் 1984-ஆம் ஆண்டு மே மாதம் மறைந்தார். எனினும், அவருடைய உயர் நோக்கங்களை விரிவாக்கி வளர்க்க அவருடைய மகன் டாக்டர் எம்.ஏ.எம். இராமசாமி அவர்கள் நிறுவன இணைவேந்தராக நியமனம் பெற்றார்.

**உடற்கூறு விஞ்ஞானம்**

பதவி ஏற்ற குறுகிய காலத்திலேயே மருத்துவக் கல்லூரியைப் பொது மருத்துவம், பல் மருத்துவம், செவிலியர் பயிற்சி முதலிய துறைகளில் பெரும் முன்னேற்றத்தைக் காணத் தக்க வழிவகைகளைச் செய்தார். இவற்றுள் முதுகலைப் பயிற்சியும் ஆராய்ச்சியும் சமுதாயத்தின் உடல்நல வளமும் ஆக்கம் பெறுதலை நாம் காணலாம். இங்கு உடற்கூறு விஞ்ஞானத்தை வளர்க்க ஒரு பெரிய கட்டடம் அமைக்கப் பெற்றது.

விடுதிகள் கட்டவும், இராஜா முத்தையா உடற்கூறு விஞ்ஞான நிறுவனம் அமைக்கவும் இணைவேந்தர் பெருங்கொடை வழங்கியுள்ளார். மேலும் - கணிப்பொறி அறிவியல், தொலைதூரக் கல்வி ஆகியவையும் நம் இந்தியப் பெருநாட்டில் தனித்தன்மையோடு விளங்க வழிவகுத்த இவரது பேராற்றல் போற்றத்தக்கது.

பல்கலைக்கழகத்தில் உடற்பயிற்சியையும் விளையாட்டுக்களையும் ஆதரிக்கும் பண்பால் உடல்வளக் கல்வியியல்துறை விரிவடைவதற்காகவும், டென்னிஸ் ஆடுகளம், ஜிம்னாசியம், விளையாட்டு ஆய்வுக்கூடம், விளையாட்டு உள் அரங்கம் (Indoor Stadium) ஆகியவை அமையவும் இவர் அயராமல் பாடுபட்டு வருகிறார்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் - தொடக்கத்தில் 7



பல்கலைக்கழக நிறுவனர்

துறைகளே தமது பணிகளைத் தொடங்கின. காலந்தோறும் வளர்ச்சியுற்று கடந்த 66 ஆண்டுக் காலத்தில் 58 துறைகளாகப் பல்கிப் பெருகி மக்கள் பலருக்குத் தொண்டாற்றும் ஆற்றல்மிகு நிறுவனமாக இன்று இப் பல்கலைக்கழகம் வளர்ந்துள்ளது.

**மத்திய-மாநில அரசு உதவிகள்**

பல துறைகளிலும் முனைவர் பட்டத்திற்கும் முதுமுனைவர் பட்டத்திற்கும் பயன்தரும் வகையில் ஆய்வுக்கூடங்களும் நூலகமும் இப்பல்கலைக்கழகவளாகத்தின்முன் அமைந்துள்ளன. பல துறைகளில் மக்களுக்குப் பயன்நல்கும் பல்வகை ஆராய்ச்சித் திட்டங்கள் மாநில மத்திய அரசுகளின் தாராள நிதி உதவியுடனும், பல்கலைக்கழக மானியக்குழு நிதி உதவியுடனும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஆராய்ச்சியும் பயிற்சித் திட்டங்களும் பெருமளவில் வளர இந்நிறுவனம் பல தொழிற்சாலைகளுடனும் சில நிறுவனங்களுடனும் தொடர்பு கொண்டு இப்போது மிக நல்லவண்ணம் இயங்கிவருகின்றது.

கல்வித்துறை, வேளாண்மை, பொறியியல், தொழில்நுட்பம், மருத்துவ இயல் ஆகியவற்றில் பெரிதும் விரிவாக்கம் செய்து மக்கள் பலருக்கும் பயன்கிட்டுமாறு செய்து முதியோர் உதவி மையங்களின் துணையோடு செயல்படுத்தப்படுகிறது.

சாஸ்திரி ஹால், சர்.சி.பி. இராமசாமி ஐயர் நூலகக் கட்டடம், பொறியியல் மற்றும் தொழில் நுட்பக் கட்டடங்கள், அரசர் முத்தையா பேரில் அமைந்துள்ள மருத்துவத் துறைக் கட்டடங்கள், வேளாண் துறைக் கட்டடங்கள், பொன்விழா நினைவுக் கட்டடம், உடற்பயிற்சித் துறையில் விளையாட்டு உள் அரங்கக் கட்டடம், மாணவர் பலருக்காக அமைந்த பல விடுதிகள், ஆசிரியர் அலுவலர் குடியிருப்புகள் ஆகியவை குறிப்பிடத்தக்கவைகளாகும். உயரிய நோக்கோடு நிறுவப்பட்ட இப்பல்கலைக்கழகத்திற்குப் பூங்காக்களும், நிழற்சாலைகளும் அணி சேர்க்கின்றன. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்குப் பெருமை சேர்க்கும் வளர்புலங்களின் எண்ணிக்கை 9 ஆகும். துறைகளின் எண்ணிக்கையோ 58. இவற்றுள் கடல்வாழ் உயிரினத்துறையும், மொழியியல் துறையும் மத்திய உயர் ஆய்வு மையங்களாகத் திகழ்கின்றன. பல்கலைக்கழகத்தின் இன்றைய வேந்தர் பொறுப்பில் இருப்பவர், மேதகு தமிழக ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்கள், இணைவேந்தர் டாக்டர் எம்.ஏ.எம். இராமசாமி அவர்கள், துணைவேந்தர் டாக்டர் எம்.ஜி. முத்துக்குமாரசாமி பதிவாளர் டாக்டர் பெரி. கற்பக கணபதி. இவர்கள் மட்டுமல்ல -ஆளவை(செனட்), கல்விக்குழு வளர்புலங்களின் உறுப்பினர்கள், பாடத்திட்டக்குழு உறுப்பினர்கள், நிர்வாகத்துறை அலுவலர்கள் ஆகிய அனைவருமே இதன் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டு வருகின்றனர். இங்குள்ள மாணவர்கள் தேசிய உணர்வு பெறவும், உடல்நல ஆக்கம் பெறவும் தேசிய மாணவர் படைப் பயிற்சியும், மாணவர் நாட்டுநலப் பணித்திட்டமும், சமூக சேவை இயக்கமும், இணைவேந்தர், துணைவேந்தர் ஆகியோரின் நல்லாதரவினைப் பெற்றுச் செம்மையுற இயங்கி வருகின்றன. பல்வேறு துறைகளில் நடைபெறும் கருத்தரங்குகளும், அறிஞர்களின் சொற்பொழிவுகளும் கல்வி வளர்ச்சிக்கும், ஆய்வு வளர்ச்சிக்கும் பெரிதும் துணைபுரிந்து வருவது குறிப்பிடத்தக்கது.

- பி.எல்.ஆர்.



# மகளிர் நலம் பெற...



இந்தியாவின் வளர்ச்சி, கிராமங்களின் முன்னேற்றத்தைப் பொறுத்து அமைகிறது. ஒரு வீட்டின் வளர்ச்சி பெண்களின் முன்னேற்றத்தைப் பொறுத்தது. ஒரு பெண் வளர்ந்தால் முன்னேற்றம் அடைந்தால் அந்தக் குடும்பமே வளர்கிறது. நமது இந்திய நாடு விவசாய நாடு ஆகும். எனவே பெண்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக மகளிர் மேம்பாட்டுத் திட்டம் தமிழக அரசால் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

பெண்களின் தரத்தை உயர்த்துவதற்குச் சிறந்த வழி அவர்களைச் சமூகத்திலும் பொருளாதாரத்திலும் உயர்ந்தவர்களாகச் செய்வதே ஆகும். தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம் தென்னார்க்காடு மாவட்டத்தில் 1991-92-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. ஒவ்வொரு ஊர்களிலும் வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள பெண்கள் 20 நபர்களைத் தேர்ந்தெடுத்து மகளிர் மன்றங்கள் அமைக்கப்படுகின்றன. எட்டாம் வகுப்பு வரை படித்த 18 முதல் 55 வயது வரை உள்ள மகளிர் மன்ற உறுப்பினர்களாக்கப்பட்டு அவர்களில் ஒருவர் மன்ற ஊக்குனராக அமர்த்தப்படுகிறார்.

மகளிர் தையல் பயிற்சி



பன்னாட்டு நிதி உதவியுடன் கூடிய வேளாண் அபிவிருத்தித் திட்ட நிதியைப் பெற்று வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள கிராமத்துப் பெண்களின் மூலம் விவசாய அபிவிருத்தியும், வளர்ச்சியும் அடைய இத்திட்டம் வழிவகை செய்கிறது. வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள சிறு மற்றும் குறு விவசாய மகளிர் மற்றும் விளைநிலங்கள் இல்லாத மகளிரையும் அரசு சார்பற்ற தொண்டு நிறுவனங்களின் மூலம் தெரிவு செய்து மகளிர் மன்றங்கள் அமைக்கப்படுகின்றன.

மன்றத்தில் அவர்களுக்குச் சமுதாய முன்னேற்றம் குறித்தும், விழிப்புணர்ச்சி, கல்வி, ஒற்றுமை, தன்னம்பிக்கை, சுற்றுச் சூழலுடன் சுகாதாரம், குழந்தை வளர்ப்பு, சிறுசேமிப்பு ஆகியவை குறித்தும் கற்றுக்கொடுக்கப்படுகின்றன.

இதில் அவர்கள் முன்னேற்றம் அடைந்தபிறகு அவர்களுக்கு அரசுத் துறை அலுவலர்கள் மூலம், துறையின் திட்டங்கள் பற்றி விளக்கி அவர்கள் தேவைப்படும் துறை சார்ந்த பணிக்குக் கடனுதவி அளிக்கப்படுகிறது; சிறு சேமிப்பு பற்றியும் கற்றுக் கொடுக்கப்படுகிறது. இதில் அவர்கள் முன்னேற்றம் அடைந்தபிறகு அவர்களுக்கு அரசாங்கத் துறை அலுவலர்கள் மூலம் துறையின் திட்டங்கள் பற்றி விளக்கி அவர்கள் தேவைப்படும் துறை சார்ந்த பணிக்கு கடனுதவி அளிக்கப்படுகிறது. சிறு விவசாயிக்கு 25 சதவிகிதம் குறு விவசாயிக்கு 33 சதவிகிதம் தாழ்த்தப்பட்ட ம்ற்றும் பழங்குடி மகளிருக்கு 50 சதவிகிதம் மானியம் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தால் அளிக்கப்படுகிறது. கடன் தொகையினை இந்தியன் வங்கியும், வள்ளலார் கிராம வங்கியும் அளிக்கின்றன. வறுமைக்கோட்டிலுள்ள அவர்களுக்கு நிரந்தர வருமானம் பெற்று உயர்த்திட வழிவகை செய்கின்றன.

மன்ற உறுப்பினர்களின் சிறுசேமிப்பிலிருந்து உறுப்பினர்களின் அவசரத் தேவைக்குச் சிறு கடன்பெற வழிவகை செய்கிறது. இத்திட்டத்தினால் பயனாளிகளின் வாங்கும் திறனும், தன்னிச்சையாக முடிவெடுக்கும் திறனும், எல்லா வகையான நேரங்களிலும் திறம்படச் செயல்படவும் முடிகிறது.

1991-92-ஆம் ஆண்டு "அசேபா" என்ற தொண்டு நிறுவனம் கள்ளக்குறிச்சி, சின்னசேலம், தியாகதுருகம், விருத்தாசலம் ஆகிய பகுதிகளில் 160 மகளிர் மன்றங்களைச் சார்ந்த 2,583 மகளிர்களுக்குப் பயிற்சி அளித்து, இவர்களுக்கு வேளாண்மைப் பொறியியல், வேளாண்மை,

ரெக்சின் ஆடம்பரப் பொருட்கள்



தென்னார்க்காடு மாவட்டச் சிறப்பு மலருக்கு வாழ்த்துக்கள்

**விழுப்புரம் தாலுக்கா பஸ் உரிமையாளர்கள் சங்கம்**
**விழுப்புரம் - பதிவு எண் 34/89**

**எம்.கே. ஷாகுல் அமீது, (எம்.கே.எல்.)**
**தலைவர்**
**போன்: 3323 3353 3373**

**பி. தொமினிக் சாவியோ**
**(ஜெ.ஆர்.பி.எல்.)**
**செயலாளர்**
**போன்: 3114**

**எம். இராமலிங்கம்**
**(பிரபு)**
**பொருளாளர்**
**போன் 3494**

**டாக்டர் ஆர் முருகையன்**
**(சுந்தரம்)**
**உதவி தலைவர்**

**ஏ. மூர்த்தி**
**(எஸ்.பி.டி.)**
**உதவி செயலாளர்**

**உறுப்பினர்கள்**

எஸ். பாத்திமா (எம்.கே.எஸ்)
ஏ. ராஜநாயகி (எஸ்பிடி)
கே. தாராபாய் (விபிஎஸ்)
க.பெ. லிபிஎஸ். குருநாதன்
கே. வசந்தா (விஎம்கே)
ஜி. சூரியகுமாரி (எஸ்ஜிஎல்பிஎஸ்)
டி. லலிதா (மனோன்மணி)
ஏ. குபேரன் (பிரபு)
வி.எம். கண்ணப்பன் (விஎம்கே)
ஏ. சீதாராமகவுண்டர் (எஸ்ஜெஎன்)
ஏ. அப்துல் சத்தார் (வசந்தம்)
வி. அப்பாவு ரெட்டியார் (சக்தி)
ஸ்ரீ ஜெயசக்தி பஸ் சர்வீஸ்
ஆர். கலியபெருமாள் (ஆர்கேஆர்)
நடனராணி பஸ் சர்வீஸ்
எஸ்.டி. பஸ் சர்வீஸ்
வி. கிருஷ்ணமூர்த்தி (ராகவேந்திரா)
ஸ்ரீ ஜெயவிலாஸ் பஸ் சர்வீஸ்
கே.வி. ராமகிருஷ்ணன் (கேவிஆர்)
டி. துரைராஜ் (பச்சையம்மாள்)
ஆர்.சி. கிருஷ்ணசாமி நாயுடு (ஆர்சிகே)
பி. கண்ணன் (பாரதி)
எம். ரவி (அமுதா)
எஸ். இப்ராகீம் (பிஸ்மில்லா)
எச். அமீர் ஜிவானிபாபா (எஸ்எம்எச்ஏ)
எம்.கே. ஜமால்மொய்தீன் (காசீம்)
மாணிக்கசாமி (எம்ஆர்டி)
ராதாகிருஷ்ணன் (எம்ஆர்வி)
ஜெயராம் பஸ் சர்வீஸ்
கிருஷ்ணன் (கேஆர்எஸ்)
கே. ஸ்ரீதர் (நாகம்மாள்)
ஜி. ராமுநாயுடு (எஸ்ஆர்கேடி)
ஜி. நடராஜன் (எஸ்ஆர்கேடி)
ஜி. பார்த்தசாரதி (எஸ்ஆர்கேடி)
வெங்கடேஸ்வரா பஸ் சர்வீஸ்



# ‘மக்கள் பணியே மகேசன் பணி’ என்ற கடமை உணர்வோடு பணியாற்றுவீர்!

## - தமிழ்நாடு கிராம நிர்வாக அலுவலர்கள் சங்கம் இரண்டாவது மாநில மாநாட்டில் மாண்புமிகு முதல்வர் உரை

**அ**ரசு நிர்வாகத்தின் அடிப்படை ஆதாரமாக இருந்து பணிபுரியும், கிராம நிர்வாக அலுவலர்கள் சங்கத்தின், இரண்டாம் மாநில மாநாட்டில் கலந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன். அரசு விழாக்களின் போதும், இயற்கையின் சீற்றத்தின் போதும், வளர்ச்சித் திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தும் போதும், அரசு சொத்துக்களைப் பாதுகாக்கும் போதும், கள்ளச்சாராயத்தைக் களைந்தெடுக்கும் போதும், மக்களின் நில உரிமைகளைப் பாதுகாக்கும் போதும், சட்டம் ஒழுங்குப் பிரச்சினைகள் ஏற்படும் போதும், கிராம நிர்வாக அலுவலர்கள் ஆற்றிவரும் அரிய பணிகளை, நான் நன்கு அறிவேன்.

குறிப்பாக, சென்ற ஆண்டு நான் சிதம்பரனார், திருநெல்வேலி-கட்டபொம்மன், கன்னியாகுமரி மாவட்டங்களுக்குச் சென்று, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்து, ஆறுதல் கூறியபோது, நீங்கள் ஆற்றி இருந்த சீரிய பணிகளை நேரில் கண்டேன். அப்படிப்பட்ட சூழ்நிலைகளில், இரவு பகல் என்று பாராமல், எதிர்பார்ப்புகளுக்கு மேல், எழுச்சியுடன் உழைப்பவர்கள் தான் வருவாய்த்துறையினர், என்பதை நான் உணர்ந்தேன். அந்த என் கணிப்பிற்கு அடிப்படைக் காரணமானவர்களே, நீங்கள் தான், என்பதையும் நான் அறிந்தேன். இப்படித் தமிழக மக்களுக்கும், அரசிற்கும், நேரடி இணைப்புப் பாலமாக இருக்கும் உங்களை இன்று சந்திப்பதில், பெருமகிழ்ச்சி அடைகிறேன். உங்கள் மாநாட்டு மலரினை வெளியிட்டதில் உவகை கொள்கிறேன்.

தமிழகத்தில் ஏறத்தாழ ஒரு நூற்றாண்டுக் காலமாக, வெள்ளையர்கள் காலந்தொட்டு இருந்து வந்த, முன்னாள் பகுதி நேர, வாரிசு அடிப்படையிலான கிராமக் கர்ணம், கிராம முன்சீப் முறையை மாற்றி, அரசு நிர்வாகத்தில் கிராம நிர்வாகத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து, அதில் படித்தவர்களும் இளைஞர்களும் இடம்பெற வேண்டும் என்ற அடிப்படையில், இதயதெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள் என்ற பதவியினை உருவாக்கி, அதில் உங்களையெல்லாம் பணி அமரச் செய்தார். இதனால் கிராம நிர்வாகம் புதுப்பொலிவுடன் மிளிரச் செய்தார். ‘பழையன கழிதலும் புதியன புகுதலும்’ என்னும் தொல்காப்பியத்தின் வழக்கிற்கிணங்கச் செயல்பட்ட, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் இந்த முடிவினை, சிலர் அரசியல் உள்நோக்கத்துடன் தீவிரமாக எதிர்த்தார்கள். எத்தனை எதிர்ப்புகள் வந்த போதிலும், தனது ஆட்சிக் காலம் முழுவதும், உங்களை அவர் பாதுகாத்தே வந்தார். அதன் பின் அரசியல் விபத்தின் காரணமாக ஆட்சிக்கு வந்தவர்கள், புரட்சித் தலைவரின் புகழையும், அவர் புரிந்த சாதனைகளையும், அழிக்கும் முயற்சியில் ஈடுபட்டார்கள். அந்த முயற்சியில் நீங்




**தமிழ்நாடு கிராம நிர்வாக அலுவலர்கள் சங்கத்தின் இரண்டாவது மாநில மாநாட்டில், மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களிடம், தமிழ்நாடு கிராம நிர்வாக அலுவலர்கள் சங்கத்தின் சார்பில் முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு ரூபாய் நான்கு இலட்சத்திற்கான காசோலை வழங்கப் பட்டது.**

களும் பல தாக்குதல்களுக்கு உள்ளாக்கப் பட்டீர்கள்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் நியமித்த உங்களை, பணியில் இருந்து நீக்க வேண்டும் என்று, முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி, முழு மூச்சாக நடவடிக்கைகள் எடுத்த தருணத்தில், நான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் என்ற முறையில், உங்களை ஆதரித்து, அரவணைத்து, உங்களைப் பணியிலிருந்து நீக்கக் கூடாது என்று வாதாடியதையும், போராடியதையும், நினைவுகூர விரும்புகின்றேன். அதனைத் தொடர்ந்து, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக் குழுக் கூட்டத்தில், எங்கள் கட்சி சார்பிலேயே இதற்காகப் போராடுவோம்; ஏன் - உச்ச நீதிமன்றம் வரை சென்று வாதாடுவோம், என்று தீர்மானம் நிறைவேற்றினோம், என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள்.

எனவே, எங்கள் கட்சியும், அரசும், உங்களை என்றென்றும் பாதுகாத்து, அரவணைத்து வரும் என்பதை, நான் சொல்லித்தான் நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும், என்ற நிலையில் நீங்கள் இல்லை. இன்று நாங்கள் ஆட்சிப் பொறுப்பில் இருக்கின்றோம். நீங்களும் உங்களுடைய நீண்ட நாளைய கோரிக்கைகளை, அரசின் முன் வைத்திருக்கின்றீர்கள்.

உங்களுடைய கோரிக்கைகள் அனைத்தையும், நான் நன்கு அறிவேன். இப்பொழுதே இங்கேயே அவற்றில் முக்கியமானவைகளுக்கு, நீங்கள் ஆவலுடன் எதிர்பார்ப்பவைகளுக்கு, நல்ல முடிவினைக் கூற வேண்டும் என்பது தான், என்னுடைய விருப்பம். ஆனால், தற்போது சட்டமன்றக் கூட்டத் தொடர் நடைபெற்றுக் கொண்டிருப்பதால் அரசு எடுக்க இருக்கின்ற கொள்கை முடிவுகளை, இங்கே தெரிவிக்க முடியாத சூழ் நிலையில் இருக்கின்றேன். இருப்பினும், கொள்கை முடிவாக இல்லாத உங்களின் கோரிக்கைகளுக்கு, இப்பொழுதே நல்ல முடிவுகளையும், கொள்கை முடிவாக உள்ள உங்களின் கோரிக்கைகளுக்கு, என்னுடைய கருத்துக்களை மட்டும் இங்கே தெரிவிக்க விழைகிறேன்.

1. உங்களுடைய கிராம நிர்வாக அலுவலர்கள் சங்கத்திற்கு, அரசு அங்கீகாரம் தர வேண்டும் என்பது, உங்களின் நீண்ட நாளைய கோரிக்கை. இது ஏற்றுக் கொள்ளக் கூடிய கோரிக்கை என்றே, நான் கருதுகின்றேன். தக்க முடிவுகள், விரைவில் அறிவிக்கப்படும்.

2. வருவாய்த் துறையின் அடிப்படைப் பணி, கிராம நிர்வாக பணியாக இருக்க வேண்டும், என்ற உங்களின் கோரிக்கையில் உள்ள, சாத்தியக் கூறுகளை ஆராய, அரசு ஓர் குழுவினை நியமிக்கும். அந்தக் குழு அளிக்கும் பரிந்துரைகளை ஆராய்ந்து, அரசு தக்க முடிவு எடுக்கும்.

3. ஜமாபந்தி முறையை ஒழித்து, ஆடிட் (Audit) முறையை ஏற்படுத்த வேண்டும் என்றும், பசலி தோறும் கணக்கு எழுதும் முறையை மாற்றி, எளிய முறையில், ஆண்டுக் கணக்குகளை முடிப்பது போல, கணக்குகள் திருத்தி அமைக்கப்படவேண்டும் என்று கேட்டு வருகிறீர்கள். கிராமக் கணக்குகளைத் தணிக்கை செய்ய வேண்டியது, மிக மிக அவசியப் பணி ஆகும். பொதுமக்களுக்குப் பயன்படும் வகையில், ஜமாபந்தியை விட, சிறந்த மாற்று முறையை ஏற்பாடு செய்யும்வரை, இம்முறை நீடிக்கும்.

4. பொதுமக்கள் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில், கிராமக் கணக்குகள் எளிதாக அமைந்திட, தற்போதுள்ள கிராமக் கணக்குகளை ஆராய்ந்து, அவற்றின் எண்ணிக்கையைக் குறைத்து, திருத்தி அமைத்து, செயல்படுத்த, அரசிற்குப் பரிந்துரைகளை வழங்க, அரசு அலுவலர் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்படும்.



5. அனைத்துக் கிராம நிர்வாக அலுவலர்களுக்கும், வீட்டு வாடகைப்படி வழங்க வேண்டும் என்ற கோரிக்கை, எங்கள் அரசால் ஏற்கப்பட்டு, 1.4.1993 முதல் செயல்படுத்தப்படுகிறது.

6. கிராம நிர்வாக அலுவலர்களுக்குப் பலன் தரும் பல ஆணைகள், உடனுக்குடன் செயல்படுத்தப்படுவதில்லை என்றும், அவற்றைக் குறிப்பிட்ட காலத்திற்குள் நிறைவேற்ற வேண்டும் என்றும், குறிப்பிட்டுள்ளீர்கள். அரசின் ஆணைகள், உடனுக்குடன் நிறைவேற்றப்பட வேண்டுமென்று, ஏற்கெனவே ஆணைகள் வெளியிடப்பட்டிருந்தாலும், மீண்டும் அதனை வலியுறுத்தி, தக்க அறிவுரைகள் வழங்கப்படும், என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

7. கிராம நிர்வாக அலுவலர்கள் அனைவரும், தேர்வாணைக் குழு மூலம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்; தற்காலிகமாகப் பணியமர்த்தப்பட்ட, கிராம நிர்வாக அலுவலர்களுக்கு, சிறப்புத் தேர்வு வைத்து அனைவரையும், நிரந்தரப்படுத்த வேண்டும், என்ற உங்களின் கோரிக்கைகள், அரசின் தீவிரக் கவனத்தில் உள்ளன. உங்களது நலனைக் கண் எனக் காத்து வரும் இந்த அரசு, இந்தக் கோரிக்கைகளைப் பரிவுடன் பரிசீலித்து, விரைவில் தக்க முடிவுகள் எடுக்கும்.

8. நீங்கள் கட்டியுள்ள பிணை வைப்புத் தொகை, நீண்ட கால ஈட்டு வைப்புத் தொகையாக மாற்றப்படும்.

9. அரசின் நிதி நிலைமைக்கேற்ப, உங்களுக்கு, மேசை, நாற்காலி, அலமாரி போன்றவை, படிப்படியாக அளிக்கப் படும்.

10. கிராமக் கணக்குகள் எழுதுவதற்குத் தேவையான படிவங்கள், தற்பொழுது மாற்றப்பட்டுள்ள கணக்கு முறைக்குத் தக்கவாறும், நல்ல தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்தியும், அச்சிட்டுத் தரப்படும். உங்களுக்குத் தேவையான வெள்ளைத் தாள், கார்பன் தாள், எழுது பென்சில், ரப்பர் போன்ற எழுது பொருட்களும், உரிய நேரத்தில் வழங்கப் படும்.

11. நிர்வாக வசதியை முன்னிட்டு, மாவட்டம், கோட்டம், வட்டம் ஆகியவற்றைப் பிரித்து, நிர்வாகத்தைச் செம்மைப்படுத்துவது போல், தேவைப் படுகின்ற இடங்களில், கிராமங்களையும் பிரித்து, புதிய கிராமங்கள் உருவாக்கப் படும்.



★ போற்ற வேண்டியவை உண்மை-உழைப்பு-உயர்வு; பின்பற்ற வேண்டியவை கனிவு-பணிவு-துணிவு; பேணப்பட வேண்டியவை கடமை-கண்ணியம்-கட்டுப்பாடு.

12. வரும் காலங்களில், ஏற்படும் காலியிடங்களைப் பூர்த்தி செய்யும் பொழுது, அரசு ஏற்கெனவே அறிவித்துள்ள கொள்கைக்கிணங்க, புதிய விகிதாச்சார அடிப்படையில், பெண்களும், பிற்படுத்தப்பட்டவர்களும், மிகப் பிற்படுத்தப்பட்டவர்களும், தாழ்த்தப் பட்டவர்களும், பழங்குடி மக்களும், கிராம நிர்வாக அலுவலர்களாக, நேரடிப் பணி நியமனம் செய்யப்படுவார்கள்.

13. கன்னியாகுமரி மாவட்டம், செங்கோட்டைப் பகுதியிலும், மற்றும் தமிழ்நாட்டில் உள்ள குறிப்பிட்ட சில இடங்களிலும், பணிபுரியும் சுமார் 35 கிராம நிர்வாக அலுவலர்கள், தற்போது 825 ரூபாய் அடிப்படை ஊதியத்தில் பணி புரிகிறார்கள். தமிழ்நாட்டில் பணிபுரிகின்ற, மற்ற கிராம நிர்வாக அலுவலர்களுக்கு உள்ள தகுதிகள் அனைத்தையும், இவர்கள் பெற்றிருந்தால், நம் மாநிலத்தில் பணிபுரியும், மற்ற கிராம நிர்வாக அலுவலர்களுக்கு வழங்குவதைப் போல், இவர்களுக்கும் அடிப்படை ஊதியம் 975 ரூபாய் வழங்கப் படும்.

14. 10 ஆண்டுகள் பணி முடிக்காத கிராம நிர்வாக அலுவலர்களுக்கு, ஓய்வூதியம் வழங்கப்படுவதில்லை. இதனைக் கருணை அடிப்படையில் தளர்த்தி, இதனால் பாதிக்கப்பட்டுள்ள 150 ஓய்வு பெற்ற கிராம நிர்வாக அலுவலர்கள், குறைந்த பட்ச ஓய்வூதியமாவது பெறும் வகையில், புதிய கிராம நிர்வாக அமைப்பு ஏற்படுத்திய நாள் முதல், அவர்கள் பணியினைக் கணக்கில் எடுத்துக் கொண்டு, அவ்வாறு 10 ஆண்டுகள் பணி முடித்திருப்பவர்களுக்கு, ஓய்வூதியம் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்தனை மகிழ்ச்சிகரமான செய்திகளை உங்களுக்குத் தெரிவித்ததைத் தொடர்ந்து, ஒரு சில அறிவுரைகளையும் நான் கூறக் கடமைப்பட்டுள்ளேன். நாட்டின் பொருளாதார வளர்ச்சித் திட்டங்கள், கிராமக் கணக்குகளின் அடிப்படையில் தான் தீட்டப்படுகின்றன. அரசின் கொள்கை முடிவுகள், கிராம நிர்வாகம் அளிக்கும் புள்ளி விவரங்களின் அடிப்படையில் தான், எடுக்கப்படுகின்றன. இத்தகைய முக்கியப் பொறுப்பில் நீங்கள் இருக்கின்றீர்கள்.

சமுதாயத்தின் அடித்தளத்தில், கடைநிலையில், வறுமைக்கோட்டுக்குக் கீழே வாழ்கின்ற, எண்ணற்ற மக்களின் வாழ்வினை உயர்த்த வேண்டும், என்ற உயரிய நோக்கத்தோடு செயல்படும் எங்கள் அரசிற்கு; உறுதுணையாக இருந்து, அவர்களின் வாழ்வினைத் தூக்கி நிமிர்த்தும் எங்கள் முயற்சிக்கு, நீங்கள் முழு மனதாக ஒத்துழைக்க வேண்டும். அரசின் நலத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில், ஆணிவேராகச் செயல்படுகின்ற பொறுப்பு, உங்கள் கையில் ஒப்படைக்கப்பட்டு இருக்கின்றது. மேலும், கள்ளச் சாராயத்தை ஒழிக்கும் பணியிலும், நீங்கள் முக்கியப் பொறுப்பு வகிக்கின்றீர்கள். உங்களது கடமைகளை நீங்கள் தவறாது ஆற்ற வேண்டும் என்று, அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

உங்களில் சிலர், தங்கள் பொறுப்புக் கிராமத்தில் குடியிருப்பதில்லை என்ற செய்தியும், என் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. மக்கள் உங்களை இரவு பகல் என்று பாராமல், எந்த நேரமும் அணுகி, தங்கள் குறைகளை எடுத்துக் கூற வசதியாக, நீங்கள் அனைவரும் தவறாது, அவரவர் கிராமத்திலேயே குடியிருக்க வேண்டும், என்பது தான் என் விருப்பம், இதனை ஓர் அன்புக் கட்டளையாக, நீங்கள் ஏற்பீர்கள் என்று நம்புகின்றேன்.

அரசிற்கு அவசியமான பணிகளையும், மக்களின் நலன் காக்கும் முக்கியப் பணிகளையும் செய்கின்ற நீங்கள், அரசியல், பணம், பலம், பகட்டு, மிரட்டல் போன்ற எதற்கும் ஆட்படாது, மக்கள் பணியே மகேசன் பணி, என்ற கடமை உணர்வோடு பணியாற்ற வேண்டும்.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, என்ற பேரறிஞர் அண்ணா அவர்களின் தாரக மந்திரத்தை, நெஞ்சில் நிறுத்தி, நீங்கள் பணிபுரிய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, எங்கள் கட்சியும், எங்கள் அரசும், என்றென்றும் உங்களுக்கு அரணாகத் திகழும், உங்கள் நலன் காக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

# செய்தியும் படமும்



மேதகு குடியரசுத் தலைவர் டாக்டர் சங்கர் தயாள் சர்மா அவர்களை மேதகு ஆளுநர் டாக்டர் பீஷ்ம நாராயண்சிங் அவர்களும், மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களும் சென்னை விமான நிலையத்தில் அன்புடன் வரவேற்றனர் (24.4.93).

இந்தியன் ரிசர்வ் வங்கியின் கவர்னர் திரு. சி.ரங்கராஜன் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைத் தலைமைச் செயலகத்தில் சந்தித்துப் பேசினார். அவ்வமயம் தலைமைச் செயலர் திரு. டி.வி. வெங்கட்டராமன், நிதித்துறைச் செயலர் திரு. என். நாராயணன் ஆகியோர் உடனிருந்தனர் (15.4.93).





விழுப்புரத்தைத் தலைமையிடமாகக் கொண்ட மாவட்டத்திற்கு, ''விழுப்புரம் ராமசாமி படையாட்சியார் மாவட்டம்'' எனப் பெயர் சூட்டியதற்காக, திரு. எஸ்.எஸ். ராமசாமி படையாட்சியார்அவர்களின் துணைவியார் திருமதி ஞானம்பாள் ராமசாமி படையாட்சி அவர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களைச் சந்தித்து நன்றி தெரிவித்தார் (22.4.93).

காவல்துறையினரால் மீட்கப்பட்ட களவு போன பொருட்களை, மாண்புமிகு முதல்வர் அவர்கள் சென்னை ராஜரத்னம் விளையாட்டரங்கில் பார்வையிட்டார் (19.4.93).



3. ஒப்பந்ததாரர்கள் கீழ்க்கண்ட இயந்திரங்கள்/உபகரணங்களைத் தங்கள் கைவசம் சொந்தமாக வைத்திருக்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| அ. | கான்கிரீட் கலவை இயந்திரம் | : மூன்று |
| ஆ. | கட்டுமானத் தூக்கி | : இரண்டு |
| இ. | வைப்ரேட்டர் | : நான்கு |
| ஈ. | எஃகு சாரத் தகடுகள் | : 1000 சதுர மீட்டர் |
| உ. | எடை அலகு | : ஒன்று |
| ஊ. | எஃகுக் குழாய் முட்டுகள் மற்றும் தேவையான பிடிகள் | : 2000 மீட்டர்கள் |

5. ஒப்பந்த வரையறை வேண்டுவோர், தலைமை உள்தணிக்கை அலுவலருக்கு (முதல் தளம், கே.ஆர்.ஆர். மாளிகை, தமிழ்நாடு மின்சார வாரியம், 800, அண்ணாசாலை, சென்னை-600 002) ஒப்பந்த வரையறைக்கான விலையைப் பணமாகவோ/பணவிடை வாயிலாகவோ, ஒப்பந்த வரையறை எண் குறிப்பிட்டுச் செலுத்தி பெறப்பட்ட ரசீதை இணைத்து, முழு முகவரியுடன் விண்ணப்பித்து மேற்பார்வைப் பொறியாளர்/பொதுவியல்/ அனல் மின்னாக்கம்-1 அலுவலகத்தில் 26.4.93 காலை 10.30 மணி முதல் 24.5.93 மாலை ஐந்து மணிவரை பெற்றுக்கொள்ளலாம். ஒப்பந்த வரையறை பெறுவதற்குச் செலுத்தப்பட்ட தொகை எக்காரணத்திற்காகவும் திருப்பித்தரப்பட மாட்டாது. அஞ்சல் வாயிலாக வேண்டுவோர் ஒவ்வொரு ஒப்பந்த வரையறைக்கும் ரூ.50 கூடுதலாகச் செலுத்த வேண்டும். அஞ்சலில் அனுப்பப்படும் ஒப்பந்த வரையறை தவறிப் போனாலும், காலதாமதம் ஆனாலும் மின்சார வாரியம் பொறுப்பு ஏற்காது. ஒப்பந்த வரையறை மாற்றத்தக்கதல்ல.

குறித்த காலத்திற்குப் பின்னர் வந்து சேரும் ஒப்பந்தங்கள் பிரிக்கப்படாமல் உடனடியாக அதற்குரிய ஒப்பந்ததாரர்களுக்குத் திருப்பி அனுப்பப்படும். பிணை வைப்புத் தொகையின்றி வந்து சேரும் ஒப்பந்தங்கள் ஏற்கப்படாமல் விடுவதற்கு ஏதுவாகும்.

6. குறைந்த மதிப்பீடு கொண்ட அல்லது மற்ற எந்த ஒரு ஒப்பந்தத்தையோ ஏற்றுக் கொள்வதற்குத் தமிழ்நாடு மின்சார வாரியம் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளாது. எக்காரணமும் தெரிவிக்காது எந்த ஒரு ஒப்பந்தத்தையும் அல்லது எல்லா ஒப்பந்தங்களையும் தள்ளுபடி செய்யும் முழு உரிமை இவ்வாரியத்துக்கு உண்டு. விற்பனை செய்யப்படும் எந்த ஒரு ஒப்பந்த வரையறையில் கண்டுள்ள எந்த ஒரு நிபந்தனையும் தேவை எனக் கருதும்போது தளர்த்தவும் கைவிடவும் உள்ள உரிமை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கே உரியது.

DIPR/626/MS/93

**தலைமைப் பொறியாளர்/பொது வடிவமைப்பு**

நல்வாழ்த்துக்களுடன்

## தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்

**புதுப்பேட்டை எண்ணெய் உற்பத்தியாளர் கூட்டுறவு குடிசைத் தொழிற்சங்கம் லிமிடெட் நெ.IND 61, புதுப்பேட்டை-607 108, தென்னார்க்காடு மாவட்டம்**

**தென்னார்க்காடு மாவட்டம்** **சங்கம் துவங்கிய நாள்: 25.3.1957**

எங்கள் கூட்டுறவுச் சங்கத்தில் விசைச்செக்கில் சுத்தமான முறையில் தரமான நல்லெண்ணெய் மற்றும் மணிலா எண்ணெய் உற்பத்தி செய்து சென்னை குறளகம் கதர் கைத்தொழில் அங்காடிக்கும், சென்னை காதி கிராமோத்யோக் பவனுக்கும் விற்பனை செய்யப்படுகிறது. மேலும் கீழ்க் காணும் நிறுவனங்கள் மூலம் விற்பனை செய்கிறோம்.

**சங்கத்தின் விற்பனைக் கிளைகள்:**

தலைமை அலுவலகம்: புதுப்பேட்டை போன் எண். 2257
முதற்கிளை : கடைவீதி, புதுப்பேட்டை.
2-வது கிளை : காந்தி வீதி, பண்ருட்டி.
3-வது கிளை : 25வது வட்டம் நெய்வேலி டவுன்ஷிப்.

எங்கள் சங்கத்தில் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படும் எண்ணெய், பிண்ணாக்கு விற்பனை வரி விலக்களிக்கப்பட்டுள்ளது.

"தங்களது தேவையைக் குறித்த காலத்தில் செய்து முடிப்பதே எங்களது நோக்கம்".

**தனி அலுவலர்**
புதுப்பேட்டை எண்ணெய் உற்பத்தியாளர்
கூட்டுறவுக் குடிசைத் தொழில் சங்கம் லிட்.





# சந்தனக் கடத்தல் வீரப்பனைப் பிடிக்க
## கர்நாடக அரசுடன் கூட்டு முயற்சி

சந்தனக் கடத்தல். வீரப்பனையும் அவனது குழுவினரையும் பிடிக்க, தமிழக அரசு சிறப்பு வன ரோந்துக்காவல் படை ஒன்றைக் காவல்துறை கண்காணிப்பாளர் திரு. கோபாலகிருஷ்ணன் தலைமையில் நியமித்தது. இப்படை இரவு பகல் பாராது அடர்ந்த காடு மலைப்பகுதிகளில் திரிந்து, வீரப்பனையும் அவனது குழுவினரையும் பிடிக்க அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகின்றது.

9.4.93 அன்று திரு. கோபால கிருஷ்ணன் 40 அதிரடிப்படையினருடனும், தமிழ்நாடு சிறப்புக் காவல் படையினருடனும் சென்றார். பகல் 12 மணி அளவில் மேட்டூர் அருகே பாலாறு பாலத்தைத் தாண்டி, சரக்க மடுவு என்ற இடம் அருகே இரண்டு வண்டிகளுகம் சென்று கொண்டிருந்தன. முதலில் சென்ற பேருந்தில் திரு. கோபால கிருஷ்ணனும் மற்ற காவல்துறையினரும் பயணம் செய்தனர். அப்போது சற்றும் எதிர்பாராத விதத்தில், காட்டுப் பாதையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கண்ணி வெடிகள் பயங்கரச் சத்தத்துடன் வெடித்தன. முதலில் சென்ற பேருந்து, இந்தக் கண்ணி வெடியில் சிக்கித் தூள் தூளாகச் சிதறியது. பேருந்தில் பயணம் செய்த போலீசாரும், அவர்களுக்கு உதவியாகச் சென்றவர்களும் தூக்கி எறியப்பட்டனர். அதே இடத்தில் 6 போலீசார் உட்பட 11 பேர் கொல்லப்பட்டனர். 16 பேர் படுகாயம் அடைந்தனர்.

அப்பகுதி முழுவதும் உடல்கள் தாறுமாறாகச் சிதறிக் கிடந்தன. சிலரது உடல் உறுப்புக்கள் மரத்தில் தொங்கிக் கொண்டிருந்தன.

காவல்துறைக் கண்காணிப்பாளர் திரு. கோபால கிருஷ்ணனின் இடது கால் முறிந்தது. அவருக்குத் தலையிலும் உடலிலும் காயங்கள் ஏற்பட்டன.

சம்பவம் நடந்தது பற்றித் தகவல் தெரிந்தவுடன், சேலத்திலிருந்து காவல்துறை இயக்குநர் திரு எஷ். ஸ்ரீபால் அவர்கள், சம்பவம் நடந்த இடத்திற்கு விரைந்தார். இறந்தவர்களின் உடலைத் தகுந்த மரியாதையுடன் மேட்டூருக்குக் கொண்டு செல்லவும், காயம் அடைந்தவர்களை மருத்துவமனையில் சேர்க்கவும் தக்க ஏற்பாடுகளைச் செய்தார். இச்சம்பவம் பற்றிய விரிவான தகவலை திரு ஸ்ரீபால் அவர்கள், மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களுக்குத் தெரிவித்தார்.

இத்துயரச் சம்பவத்தைக் கேள்வியுற்ற மாண்புமிகு முதல்வர் உடனடியாகச் சேலம் விரைந்தார். இச்சம்பவம் குறித்து அவர் வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் கூறியுள்ளதாவது:

"சந்தனக் கடத்தல் வீரப்பனைப் பிடிப்பதற்குத் தமிழக அரசால் நியமிக்கப்பட்டு உள்ள சிறப்புக் காவல் படையைச் சேர்ந்த 5 போலீசார், 2 வனத்துறை அதிகாரிகள் மற்றும் காவல்துறையினருக்கு உதவியாக இருந்த பொதுமக்கள் 15 பேர் கொடூரமான முறையில் கொல்லப்பட்ட செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சி அடைந்தேன்.

"வீரம்மிக்க அவர்கள் நயவஞ்சகமான முறையில் நிலத்தின் அடியில் புதைத்து

## பொது அறிவுத் தகவல்கள்

காந்தியாரின் சுயசரிதை நூல் எது?
சத்தியசோதனை

• • •

காந்தியாரை மகாத்மா என்று முதலில் குறிப்பிட்டவர் யார்?
கவியரசர் தாகூர்

• • •

இந்தியாவின் தேசிய மலர்ச் சின்னம் யாது?
தாமரை

• • •

ஜப்பானின் தேசிய மலர்ச் சின்னம் யாது?
செர்ரி மலர்

• • •

மனித உரிமை தினமாகக் கொண்டாடப் படும் நாள் எது?
டிசம்பர் மாதம் 10-ம் தேதி

• • •

திருவண்ணாமலையுடன் தொடர்புள்ள முருக பக்தர் யார்?
அருணகிரிநாதர்

• • •

அருணகிரிநாதர்பாடிய பாக்களின் பெயர்?
திருப்புகழ்

• • •

தேவாரத்தைத் தொகுப்பதில் இராஜ ராஜருக்கு உதவியவர் யார்?
நம்பியாண்டார் நம்பி

• • •

சீக்கிய சமயத்தை நிறுவியர் யார்?
குருநானக்

• • •

உலக எழுத்தறிவு ஆண்டாகக் கொண் டாடப்பட்டது எந்த ஆண்டு?
1990

• • •

• • •

ஐக்கிய நாடுகள் சபை எந்த ஆண்டு தொடங்கப்பட்டது?
1945-ஆம் ஆண்டு

• • •

ஐக்கிய நாடுகள் தலைமையகம் எங் குள்ளது?
நியூயார்க்கில்

• • •



சாவேந்தாப் பாவேந்தன்!

— கவிஞர் பல்லவன்

பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாள்: ஏப்ரல்-29

பாவேந்தன் பாட்டை-நம்
நாவேந்த வேண்டும்!
பல்லாண்டுக் காலம்-அவன்
புகழ்வாழ வேண்டும்!
—பாவேந்தன்

காவேந்தும் பூவேந்தன்! கனலேந்தும் விழிவேந்தன்
சாவேந்தாக் கவிவேந்தன்! சரித்திரம் புகழ்மாந்தன்!
—பாவேந்தன்

அய்யாவின் பாதையில் அறிவுநடை யிட்டான்!
அண்ணாவின் பரிசாலே அகல்வானைத் தொட்டான்!
பொய்ச்சாதி மதம்மீது புலிக்கோபம் கொண்டான்!
புதியதோர் உலகிற்குப் புதுப்பாதை கண்டான்!
—பாவேந்தன்

இருள்விலங்கை உடைத்தெறிந்த எழுகதிரின் தோற்றம்!
எழுத்தெல்லாம் சிங்க இடிக்குரலின் சீற்றம்!
கருஞ்சட்டைப் பெரியாரின் கருத்தேந்திக் காக்கும்!
காலங்கள் இவன்கவியைக் கல்வெட்டாய் ஏற்கும்!
—பாவேந்தன்

ஐக்கிய நாடுகள் சபையின் பலம் மிக்க உறுப்பு எது?
பாதுகாப்புச் சபை

• • •

உலகில் முதன் முதலில் வானொலி நிலையம் தோன்றிய நாடு எது?
இங்கிலாந்து - 1920

• • •

'மாணவர் பக்கம்' மாணவர்களுக்கு மட்டுமின்றி, மற்றவர்க்கும் பல அரிய செய்திகளைத் தரவல்லதாய் அமைந் துள்ளது.

அரிமா பூபாலம்
ப. முருகேச பாண்டியன்
கரப்பாடி, (கோவை)

அமெரிக்காவைச் சார்ந்த ஜான் 1840-ம் ஆண்டு சைக்கிளைக் கண்டு பிடித்தார்.

• • •



சாம்பர் ஏரி எங்குள்ளது - ராஜஸ்தானில்

• • •

உலகின் மிகப்பெரிய சுவர்க்கடிகாரம் எங்குள்ளது? - பிரான்சு நாட்டில் உள்ள பியூவைஸ் கதீட்ரலில் உள்ள அஸ்ட்ரானமிகல் கடிகாரம்.

• • •

ஒட்டகத்தின் ஆயுட்காலம்-20 ஆண்டுகள். யானையின் ஆயுட்காலம்-47.




# தமிழ்நாடு மின்சார வாரியம்
## வடசென்னை அனல்மின் திட்டம்
### ஒப்பந்த அறிக்கை

தமிழ்நாடு மின்சார வாரியத்திற்காக, வடசென்னை அனல்மின் திட்டம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பணிக்காக மூடி அரக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் (இரு பிரிவு ஒப்பந்தங்கள்) மூன்று நகல்களோடு மேற்பார்வைப் பொறியாளர்/ பொதுவியல்/அனல் மின்னாக்கம்-1, மூன்றாவது தளம், நடிப்பிசைப் புலவர், கே.ஆர். இராமசாமி மாளிகை, தமிழ்நாடு மின்சார வாரியம், 800, அண்ணா சாலை, சென்னை-2 என்ற முகவரியில் கீழே கையொப்பமிட்டவரால் வரவேற்கப் படுகின்றன.

| | | |
|---|---|---|
| 1. பணியின் பெயர் | : | வட சென்னை அனல் மின் திட்டம் - முதல் கட்டப் பணிக்கு நிர்வாகக் கட்டடம் மேல்நிலைக் கட்டுமானப் பணி. (வேறு ஒப்பந்ததாரரால் இறக்கப்படும் நீள்பதிக் கால்களில் மேல் கட்டப்பட வேண்டும்.) |
| 2. ஒப்பந்த வரையறை எண் | : | எஸ்.இ.சி.டி.1/என்.எம்.டி.பி.பி./25 (S.E.C.T.I/N.M.T.P.P./25) |
| 3. வேலையின் உத்தேச மதிப்பு | : | ரூ.1,25,00,000 (ரூபாய் ஒரு கோடியே இருபத்தைந்து இலட்சங்கள்) |
| 4. பிணை வைப்புத் தொகை | : | ரூ.1,00,000 (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) |
| 5. ஒப்பந்தங்கள் பெற்றுக் கொள்வதற்காக இறுதி நாளும், நேரமும் | : | மதியம் 2 மணி வரை - 26.5.93 புதன்கிழமை. |
| 6. தொழில்நுட்ப இனங்களுக்கான ஒப்பந்தங்கள் திறப்பதற்கான நாளும் நேரமும் | : | மதியம் 2 மணி 26.5.93 புதன்கிழமை. |

**2. ஒப்பந்த வரையறை ஒன்றின் விலை:**

| | | |
|---|---|---|
| தமிழ்நாட்டிற்கு | : | ரூ.500 (ரூபாய் ஐநூறு மட்டும் - ஒவ்வொன்றிற்கும்) |
| தமிழ்நாட்டிற்கு வெளியே | : | ரூ.550 (ரூபாய் ஐநூற்று ஐம்பது மட்டும்-ஒவ்வொன்றுக்கும்) |

அஞ்சல் வாயிலாக வேண்டுவோர் ஒவ்வொரு ஒப்பந்த வரையறைக்கும் ரூ.50 கூடுதலாகச் செலுத்த வேண்டும்.

**3. ஒப்பந்தத்தை அனுப்புதல்:**

இது இரு பிரிவு ஒப்பந்த அறிவிப்பு ஆகும். எனவே, ஒப்பந்தங்கள் ஒப்பந்த வரையறைப் பகுதி 'எ3' மற்றும் பகுதி 'இ' ஆகியவற்றில் குறிப்பிட்டுள்ளபடி அனுப்பப்பட வேண்டும். இந்தக் கூறுகளின்படி அனுப்பப்படாத ஒப்பந்தங்கள் ஏற்கப் படாமல் விடுவதற்கு ஏதுவாகும்.

**4. அடிப்படைத் தகுதித் தேவைகள்**

ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தங்களைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வதற்குக் கீழ்க்கண்ட அடிப்படைத் தகுதித் தேவை களை ஒப்பந்ததாரர்கள் பெற்றிருத்தல் வேண்டும். மேலும் அதற்கான சான்றுகளையும் சமர்ப்பிக்க வேண்டும்.

1. ஒப்பந்ததாரர்கள் முந்தைய மூன்று வருடங்களில் ஒப்பந்தங்களை இதையொத்த கட்டடங்களைக் கட்டியிருத்தல் வேண்டும். ஒன்றிலாவது ரூபாய் ஐம்பது இலட்சம் பெறுமானத்திற்கு மேற்பட்டு கட்டியிருக்க வேண்டும்.

2. ஒப்பந்ததாரர்கள் முந்தைய மூன்று வருடங்கள் ஒவ்வொன்றிலும், ரூபாய் நூறு இலட்சத்திற்குக் குறையாமல் வேலைகள் செய்திருத்தல் வேண்டும்.



வைக்கப்பட்டு இருந்த கண்ணி வெடிக் குண்டுகள் மூலம் கொல்லப்பட்டு உள்ளனர். அவர்களின் இறப்புக்கு எனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இறந்துபோன அவர்களுடைய குடும்பத்தினருக்கும் எனது வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் 5 போலீசாரும் அவர்களுக்கு உதவியாக இருந்த பொதுமக்கள் 2 பேரும் காயம் அடைந்துள்ளனர் என்பதை அறிந்து வருத்தம் அடைகிறேன்.

''சிறப்புக் காவல் படையின் காவல் துறைக் கண்காணிப்பாளரான கே. கோபாலகிருஷ்ணனும் குண்டு வெடித்ததில் காயம் அடைந்து உள்ளார். அதிகாரிகளும், காவலர்களும் இந்த தீரம்மிக்க செயலைச் செய்ததன் மூலம் பெருமை அடைகிறார்கள். எதிர்பாராவிதமான முறையில், அசாதாரணமாக நடந்துள்ள இந்தச் சம்பவத்தில் சிறப்புக் காவல் படையைச்சேர்ந்த 5பேர், தங்கள் உயிரை இழந்துள்ளனர்.

''இந்தத் தாக்குதலில் இறந்த காவலர்கள் மற்றும் வனக் காவலர்களின் குடும்பத்தினருக்கு முதல் அமைச்சரின் பொது நிவாரண நிதியில் இருந்து தலா ரூ.3 இலட்சம் உதவித்தொகை வழங்கப்படும். இத்துடன் குடும்பநல நிதியில் இருந்து ரூ.60 ஆயிரமும் வழங்கப்படும். ஆக மொத்தம் ரூ.3 இலட்சத்து 60 ஆயிரம் வீதம் ஒவ்வொரு குடும்பத்துக்கும் வழங்கப்படும். இதேபோல் காவலர்களுக்கு உதவியாக இருந்து மரணம் அடைந்தவர்களின் குடும்பத்தினருக்கு ரூ.1 இலட்சம் வழங்கப்படும்.

குண்டு வெடிப்புச் சம்பவத்தில் காயம் அடைந்த போலீசாருக்குத் தலா ரூ.50 ஆயிரமும், போலீசுக்கு உதவியாக இருந்தவர்களுக்கு ரூ.25 ஆயிரமும் வழங்கப்படும்.

வீரத்துக்குப் பெயர் பெற்ற தமிழகப் போலீசார் வீரப்பன் கும்பலின் அட்டகாசத்துக்கு விரைவில் முடிவு கட்டுவார்கள். வீரப்பனையும், அவனுடைய் கும்பலையும் விரைவில் பிடித்து விடுவோம்.

10.4.93 இன்று காலை மாண்புமிகு முதல்வர் அவர்கள் சென்னையிலிருந்து ஹெலிகாப்டர் மூலம் சேலம் விரைந்தார்.

இறந்த காவல்துறையினர் திருவாளர்கள், சாமிநாதன், பஞ்சலிங்கம், தயாளன், ரமேஷ், சுகுமார், வனக்காவலர்கள் சீரங்கன், சண்முகம் ஆகியோரது உடல்களுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் மலர் வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தினார். இரண்டு நிமிடம் சோக இசை ஒலிக்கப்பட்டது. காவல்துறையினர் துப்பாக்கியைத் தலைகீழாகப் பிடித்து அஞ்சலி செலுத்தினர்.

அதன்பிறகு, காயமடைந்த காவல் துறையினரை அரசு மருத்துவமனையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் சந்தித்து ஆறுதல் கூறினார். அவர்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சை பற்றி மருத்துவக் கல்லூரி முதல்வர் திரு. வீரபாகு அவர்களிடம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கேட்டறிந்தார். இறந்த காவல்துறையினர் குடும்பத்தினர் கண்ணீர் விட்டுக் கதறி அழுதபோது, முதல்வர் அவர்களுக்கு ஆறுதல் கூறினார். அவர்களுக்கு அனைத்து உதவிகளும் செய்யப்படும் என மாண்புமிகு முதல்வர் உறுதியளித்தார்.

கண்ணிவெடியில் சிக்கிபலத்த காயம் அடைந்து சிகிச்சை பெற்றுவரும் காவல் துறைக் கண்காணிப்பாளர் திரு. கோபால கிருஷ்ணனை மாண்புமிகு முதல்வர் அவர்கள் பார்த்தார். திரு. கோபால கிருஷ்ணனின் தாய் தந்தைக்கு ஆறுதல் கூறினார். அவரது வீரத்தையும் கடமையுணர்வினையும் வெகுவாகப் பாராட்டினார். அவருக்கு அளிக்கப்படும் சிகிச்சை விபரங்களை மாண்புமிகு முதல்வர் அவர்கள் மருத்துவர்களிடம் கேட்டறிந்தார்.



## கர்நாடக முதல்வருடன் கூட்டு நடவடிக்கை

வீரப்பனைப் பிடிக்கத் தமிழக அரசும், கர்நாடக அரசும் கூட்டாக நடவடிக்கை எடுப்பது குறித்து ஆலோசனை நடத்த சென்னை வருமாறு கர்நாடக மாநில முதல்வர் அவர்களுக்கு தமிழக முதல்வர் அவர்கள் விடுத்த அழைப்பினை ஏற்று மாண்புமிகு கர்நாடக முதல்வர் திரு. வீரப்ப மொய்லி அவர்கள் விமானம் மூலம் 11.4.93 காலை 10 மணிக்குச் சென்னை வந்தார். முதல்வர்கள் இருவரும் அதிகாரிகள் துணையுடன் ஆலோசனை நடத்தினார்கள்.





கூட்டத்தில் சந்தனக் கடத்தல் வீரப்பனையும், அவனது குழுவினரையும் விரைவில் பிடிக்க அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும் என முடிவு எடுக்கப்பட்டது. இம்முயற்சிகளில் தமிழ்நாடு, கர்நாடக அரசு காவல் துறையினர் ஒருங்கிணைந்து செயல்படுவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

மேலும், வீரப்பனைப் பிடித்துக் கொடுப்பவர்களுக்கு ரூ.40 இலட்சம் பரிசு வழங்குவது எனவும், இதற்காகத் தமிழ்நாடு அரசு ரூ.20 இலட்சமும், கர்நாடக அரசு ரூ.20 இலட்சமும் வழங்குவது எனவும் முடிவு செய்யப்பட்டது.

மேலும் 22.4.1993 அன்று காவல் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதங்களுக்குப் பதில் அளித்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசுகையில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டார்.

''புதிய குழுப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், சந்தனக் கடத்தல்காரன் வீரப்பனைப் பிடிக்கவிருக்கும் தமிழ்நாடு சிறப்பு அதிரடிப் படையினர் மற்றும் சில முக்கியப் பிரமுகர்களைப் பாதுகாக்கும் பணியில் இருக்கும் தனி பாதுகாப்புக் குழுவினர் ஆகியோர் கடமையாற்றும் போது இறந்தாலோ அல்லது நிரந்தரமாகப் பாதிக்கப்பட்டாலோ அவர்களுக்கு 10 இலட்சம் ரூபாய் வழங்கப்படும். எந்த அதிகாரி இறந்தாலும் ரூ. 10 இலட்சம் வழங்கப்படும்.

''சமீபத்தில் 9.4.1993 அன்று சந்தனக் கடத்தல்காரன் வீரப்பன் கும்பலால் கொல்லப்பட்ட சிறப்பு அதிரடிப் படையினராகிய பஞ்சலிங்கம், சுகுமாரன், தயாளன், ரமேஷ், சுவாமிநாதன் மற்றும் வனக் காவலர்கள் சண்முகம், ஸ்ரீரங்கன் ஆகிய 7 பேர்களின் குடும்பங்களுக்கும் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ள உதவிகளுக்கும் மேல் இத்திட்டத்தின் கீழும் தலா 10 இலட்சம் வழங்கப்படும்.

''சந்தனக் கடத்தல்காரன் வீரப்பனையும், அவனது கும்பலையும் பிடிக்கும் முயற்சியில் ஒரு அங்கமாக, புதிதாக வனப் புலனாய்வுப் பிரிவு ஒன்று உடனடியாகத் தொடங்கப்பட்டு, சிறப்பு அதிரடிப்படையின் கீழ் செயல்படும். இப்பிரிவு, வீரப்பன், அவனது கும்பல் ஆகியோரின் நடவடிக்கைகளைக் கண்காணித்து, அவர்களது நடமாட்டம் பற்றிய நுட்பமான செய்திகளையும், அவனது திட்டங்களையும் திரட்டித் தரும்.''

வீரப்பனையும் அவனைச் சேர்ந்த குழுவினரைப் பிடிப்பதில் புதிய அத்தியாயம் தொடங்கி உள்ளது... வெற்றி வெகு தொலைவில் இல்லை.

—என். இளங்கோ

ணங்கள்', 'அணுவின் கதை', 'விஞ்ஞானம் பேசுகிறார்', 'நீராவியின் கதை' ஆகியவை பெரியவர்கள் மட்டுமல்ல குழந்தைகளும் படிப்பதற்கேற்ற அற்புத நூல்கள். இவைபோன்று 25 நூல்களுக்கும் மேல் எழுதியவர் பெ.நா. அப்புஸ்வாமி. அவர் குழந்தைகளுக்காகப் பல பாடல்களையும் எழுதியுள்ளார். அவை பெரும்பாலும் ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்தவையாகும். அவை 'சித்திரப் பாடல்கள்' என்னும் தலைப்பில் வெளிவந்துள்ளன. இதேபோல, 'சித்திர வாசகம்' என்னும் பாடநூல் வரிசை குழந்தைகளை வெகுவாகக் கவர்ந்தன. ஒரு செய்தி, இப்படி எழுதிய பாடல்களில்கூட, அவர் அறிவியல் கருத்தைச் சொல்ல மறந்ததில்லை!

பெ.நா. அப்புஸ்வாமியை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த 'தமிழர் நேசன்' பத்திரிகையில் அவர் எழுதிய கட்டுரைகள் பெரும் வரவேற்புக்குள்ளாயின. பிறகு கலைமகள், கொழும்பில் வெளிவந்த வீரகேசரி ஆகியவற்றில் எழுதிய அறிவியல் கட்டுரைகள், தமிழுக்குக் கிடைத்த கலைச் செல்வங்களாகும்.

காலப்போக்கில் அவரது அரிய கட்டுரைகளைத் தாங்கி, தினமணி, கலைக்கதிர், இளம் விஞ்ஞானி ஆகிய இதழ்கள் வெளிவந்து, அறிவியல் தாகம் கொண்டோர்க்கு அரிய நெல்லிக்கனிகளாய் விளங்கின. இவைதவிர பாடநூல்கள், அறிவு நூல்கள் எனப் பலவற்றை எழுதிக் குவித்தவர் அவர்.

பெ.நா. அப்புஸ்வாமி அவர்கள் நினைத்ததை முடிக்கின்ற தன்மை கொண்டவர். தமது கருத்துக்களை மற்றவர்கள் ஏற்றுக் கொள்கிறார்களா, இல்லையா என்பதைப் பற்றியெல்லாம் அவர் கவலைப்பட்டது இல்லை. தமக்குச் சரி என்று தோன்றிய கருத்தைத் திட்டவட்டமாக எடுத்துக் கூறினார் அவர்.

பெ.நா. அப்புஸ்வாமி அவர்கள் எப்போதும் கோட்டும் சூட்டுமாகவே காட்சியளிப்பார். ஒல்லியான நெடிய உருவம். எண்பது வயதுக்குப் பிறகும்கூட அவர் கொஞ்சம் கூடத் தளராமல் எழுதிக் கொண்டே இருந்தார். அதில் அவர் சோர்வடையவே இல்லை. எண்பதிலும் இருபது வயது இளைஞராகவே காட்சியளித்தார். ஆழ்ந்த சிந்தனை, உழைப்பு, விடாமுயற்சி முதலான தன்மைகளை அவரிடமிருந்து இக்கால இளைஞர்கள் கற்றுக்கொள்ள வேண்டும்.

பெ.நா. அப்புஸ்வாமி அவர்கள் விளையாட்டுப் பிரியரும் கூட. கால்பந்து, டென்னிஸ், கிரிக்கெட், ஹாக்கி இவை இவருக்குப் பிடித்தமான விளையாட்டுகள். இவற்றில் இவர் பதக்கங்களும், கோப்பைகளும் வாங்கியிருக்கிறார்.

இவரது இலக்கியப் பணியைப் பாராட்டி, தமிழ் எழுத்தாளர் சங்கம், குழந்தை எழுத்தாளர் சங்கம் ஆகியவை வெள்ளிக் கேடயங்கள் வழங்கிப்பாராட்டியுள்ளன இவரது சிறந்த கட்டுரை ஒன்றுக்காக, தமிழ் எழுத்தாளர் சங்கம் இவருக்குத் தங்கப் பதக்கம் வழங்கியுள்ளது.

இவரது நூல்கள் சில, சென்னைப் பல்கலைக்கழகத்தின் பரிசுகளைப் பெற்றுள்ளன. 'வானத்தைப் பார்ப்போம்!, எனும் நூல் யுனெஸ்கோ பரிசை பெற்றுள்ளது. 'பயணத்தின் கதை' மத்திய அரசின் பரிசு பெற்றுள்ளது. மதுரை காமராஜ் பல்கலைக்கழகம் இவருக்குப் 'பேரவைச் செம்மல்' என்னும் பட்டத்தை வழங்கிச் சிறப்பித்தது.

1986-ஆம் ஆண்டு மே மாதம் 16-ந் தேதி!

பெ.நா. அப்புஸ்வாமி அவர்கள் கோடை வெயிலையும் பொருட்படுத்தாமல், தம் வீட்டிலிருந்து அடையாறு கஸ்தூரிபா அஞ்சலகத்திற்குச் செல்கிறார்.

பிறகு, அங்கிருந்து வீடு நோக்கி வருகிறார்.. சாலையில் நிலை தடுமாறி மயங்கி விழுகிறார்.

ஆம், விழுந்தவர் எழவே இல்லை; அந்நிலையிலேயே அவர் உயிர் பிரிந்து விடுகிறது.

காலமெல்லாம் எழுதி எழுதிக் குவித்தவர், 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்று தமிழுக்காகத் தளராமல் உழைத்தவர். 95 வயதிலும் தொண்டாற்றிச் சிறந்தவர். அவர் மறைந்தாலும், அறிவியல் உலகம் அவர் பெயரை என்றென்றும் நினைவில் வைத்திருக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை!

**பி.வி.கிரி**

---

## 'தமிழரசு' இதழில்...



மருத்துவ நிபுணர் வினா-விடைப்
பகுதியில் அடுத்ததாகக்
**'கண் மருத்துவம்'**
இடம் பெறுகிறது!

வாசகர்கள் கேட்கும் கேள்விகளுக்கு, அரசு கண் மருத்துவமனை இயக்குநரும் கண்காணிப்பாளருமான **டாக்டர் வி.எம். லோகநாதன்** அவர்கள் பதிலளிப்பார்.

கண் மருத்துவம் குறித்த வினாக்கள் அனுப்பப்பட வேண்டிய கடைசித் தேதி 16.5.1993

வினாக்களை அஞ்சலட்டையில் எழுதவும். எழுதும்போது தலைப்பில் 'மாதம் ஒரு மருத்துவர்' என்று குறிப்பிடவும்.


# எளிமையானவை! நேர்த்தியானவை!
# மேன்மை மிகுந்தவை!
# தோற்றம் அளிப்பவை!



தமிழ்நாடு கைத்தறி

- ★ பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
- ★ பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
- ★ பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
- ★ லுங்கிகள், துவாலைகள். வேட்டிகள்.
- ★ படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தை அணுகவும்.

# காது, மூக்கு, தொண்டை மருத்துவம்





டாக்டர்
கே.கே. இராமலிங்கம்
பதில்கள்

கே. சௌந்தரராஜன்
குஜிலியம்பாறை

**• என் அடித்தொண்டையில் எப்போதாவது அடைபோலக் கட்டி ஏற்படும்; வலிக்கும்; சிறிது நாளில் வற்றிவிடும். ஆனால் இப்போது கொஞ்சநாளாக அந்தக் கட்டி வற்றாமல் இருக்கிறது; இதற்கிடையில் எனக்கு அல்சர் வேறு- அதற்காக மருந்து சாப்பிடலாமா- நான் என்ன செய்யலாம் டாக்டர்?**

''அல்சருக்குத் தாராளமாக மருந்து சாப்பிடலாம்; அதே நேரத்தில் தொண்டைப் பாதிப்பையும் திறமையான ஒரு டாக்டரிடம் காட்டிச் சிகிச்சை பெறுவது நல்லது. ஏனெனில், இந்த இரு கோளாறுக்கும் தொடர்பு இருக்கவும் கூடும்''.

மு. முருகேசன்,
குள்ளிச்செட்டிப்பட்டி

**• அவ்வப்போது என் காதிலும் மூக்கிலும் மாறிமாறி இரத்தம் வருகிறது; கொஞ்சம் தேங்காய் எண்ணெய் விட்டால் சரியாகி விடுகிறது; எதனால் இப்படி ஏற்படுகிறது?**

''மூக்கில் இரத்தம் வருவது ஒரு வியாதி; காதில் இரத்தம் வருவது அதைவிட மோசமான வியாதி. இந்த நிலையில் உள்ள தாங்கள், காதைக் குடைவது கூடாது; எண்ணெய் விடுவதும் நல்லதல்ல. அப்படிச் செய்வதால் காதில் சீழ் பிடிக்கும்; பூஞ்சை (Fungus) வரவும் கூடும். நாளடைவில் காதே கேட்காமலும் போய்விடக் கூடும். ஏன் நீங்கள் இதற்காக ஒரு நல்ல டாக்டரிடம் காட்டி சிகிச்சை பெறக் கூடாது?''

சீனிவாஸ் பிரபு
சென்னை-90

**• 'கிளைமேட்' மாறும்போது சளி- காய்ச்சல் வரும் என்கிறோம்; அப்படி வராமலிருக்க என்ன செய்ய வேண்டும்?**

''கிளைமேட் மாறுவது மட்டுமல்ல; சளிக்கும் காய்ச்சலுக்கும் பல காரணங்கள் உண்டு. 'சி' வைட்டமின் சாப்பிடுவதோடு- சத்துள்ள உணவு, சுத்தமான காற்று, தூய்மையான சுற்றுப்புறம், உடல் பயிற்சி ஆகியவற்றின் மூலமும் நல்ல இரத்தம் பெறுவதன் வாயிலாக அதெல்லாம் வராமல் தடுக்கலாம்''.

எஸ். ஜாகிருதீன்
காதிகானா பள்ளி-தருமபுரி

**• ஐஸ், வாழைப்பழம், ஜுஸ்- இவற்றில் என்ன சாப்பிட்டாலும் எனக்குச் சிறிது நேரத்தில் சளி பிடித்து விடுகிறது டாக்டர்; என்ன மருந்து மாத்திரை சாப்பிட்டாலும் லேசில் சரியாவதில்லை; இது ஏன் டாக்டர்?**

''நீங்கள் சளி என்று கூறுவது ஒருவேளை அலர்ஜி அல்லது சைனஸ் ஆகவும் இருக்கக்கூடும்; ஆகையால் நீங்களே கண்ட மருந்துகளையும் வாங்கி உட்கொள்ளாமல்- டாக்டரிடம் உங்கள் உடலைப் பரிசோதித்துக் கொள்ளுங்கள்''.

எஸ். கிருஷ்ணமூர்த்தி
ஓரையூர்

**• எனக்கு வயது 77 ஆகிறது டாக்டர். சில நாட்களாக- என் வலது காதினுள் சிறிது நேரம் மணியடிப்பது போலிருக்கிறது; பிறகு நின்று விடுகிறது; ஆனால் வலி ஏதும் இல்லை. இதற்குக் காரணம் என்ன?**

''காதில் அப்படி ஒலி ஏற்படக் காரணம்- சாதாரணமாக, வயது காரணமாக உண்டாகும் நரம்புத் தளர்ச்சியால் இருக்கக்கூடும். நரம்பைப் பாதிக்கக்கூடிய மருந்துகளாலோ, வைரஸ் கிருமிகளாலோ ஒருவேளை அப்படி ஆகவும் கூடும். உள்காதில் கட்டி ஏற்படுவது- உள் காதுக்குத் தேவைப்படும் இரத்த ஓட்டம் குறைவது போன்றவைகளும் அதற்குக் காரணமாக இருக்கலாம்.''

வி. ராமசாமி மாரியாயி
சடையப்பபுரம்

**• காது வலி காரணமாகச் சில ஆண்டுகளுக்கு முன், என் மகள் காதில் நாட்டு வைத்தியர் ஆலோசனைப்படி ஒரு பச்சிலைச்சாறு ஊற்றினோம். அதிலிருந்து சரியாகக் காது கேட்பதில்லை. நகரத்து டாக்டரிடம் கொண்டுபோய்க் காட்டினோம். அந்தச் சாறு விட்டதால் ஜவ்வு கிழிந்து விட்டது; அதனால்தான் இரண்டு காதும் கேட்கவில்லை என்றார்கள். இதற்கு என்ன செய்வது டாக்டர்?**

''என்ன துன்பமானாலும் சரி; காதில் பச்சிலை சாறெல்லாம் விட்டால் ஆபத்துதான்; அதனால் பலவிதக் கேடுகள் ஏற்படும். பொதுவாக, ஒரு காதில் சாறு விட்டால் அடுத்த காதும் அதனால் பாதிக்கப்படச் சாத்தியம் இல்லை. ஜவ்வில் ஓட்டை விழுந்திருந்தால், அதற்கேற்ற அறுவைச் சிகிச்சை மூலம் குணமாக்கிவிடலாம்; அப்படிச் செய்தபோதிலும்கூட காது நரம்புகள் கெடாமல் இருந்தால்தான் உங்கள் மகளின் காது, கேட்கும் திறனைப் பெறும்.''





ஆர். ராஜராஜன்
ஆனைக்குப்பம்

**• ஒருவருக்கு இருவிதக் குரலோ, கீச்சுக் குரலோ ஏற்பட என்ன காரணம்?**

''எல்லோருக்கும் வயதுக்கேற்பக் குரலும் மாறும்; ஒரு சிலர் சிறு வயதிலிருந்து பெரியவராக மாறும் போது குரல் மாற்றம் முறைப்படி ஏற்படத் தவறி இரட்டைக் குரலில் பேச்சு வரும். முறையான பேச்சுப் பயிற்சி மூலம் (Speech Therophy) அதைச் சரிப்படுத்திவிடலாம்.

''சிலருக்கு மூக்கு அடைத்துக் கொள்கிறபோதோ- சளி, அழற்சி, சைனஸ் போன்ற காரணங்களாலோ- வாயினுள்ளே மேலன்னத்தில் பிளவு ஏற்படுவதனாலோ மூக்கால் பேசுவது போன்ற ஒலி பேதம் உண்டாகக் கூடும். அறுவைச் சிகிச்சை மூலம் இதைக் குணமாக்கி விடலாம்.''

எஸ். பெரியசாமி
கரூர்

**• என்னுடைய குரல் அடிக்கடி மாறிவிடுகிறது; இது எதனால் - இதற்கு நிவாரணம் என்ன?**

''நன்றாக வளர்ந்த ஒரு ஆணிடம் தொடர்ந்தாற்போல் 15 நாட்களுக்குமேல் குரல் மாற்றம் தெரிந்தால், தொண்டையில் அவருக்குப் புற்றுநோயாகக்கூட இருக்கலாம்; அதற்கேற்றபடி சிகிச்சை மேற்கொள்' என்று மருத்துவ நூல் கூறுகிறது.

''தொண்டையில் அழற்சி ஏற்பட்டுள்ள ஒருவர், உரத்த குரலில் அதிக நேரம் விடாமல் பேசிக் கொண்டே இருந்தாலும், இவ்வாறான குரல் மாற்றம் ஏற்படக் கூடும். நேரில் பார்க்காமல் உங்கள் குறைக்கு என்ன காரணம் என்று திட்டவட்டமாக என்னால் சொல்ல முடியாது.''

...... (பெயரில்லை)
நாகமங்கலம்

**• என் மருமகளுக்கு வயது 25. சின்ன வயதிலிருந்தே தொண்டை வலி இருந்து வருகிறது. திருமணம் செய்தால் சரியாகிவிடும் என்றார்கள். கல்யாணம் ஆன பிறகும் அப்படியே இருந்ததால் ஆபரேஷன் செய்யப்பட்டது. செய்தும் பயனில்லை. அடிக்கடி தொண்டை வலியால் என் மருமகள் துடிக்கிறாள். இதுபற்றி மேலான தங்கள் ஆலோசனையைத் தெரிவிக்கவும்!**

''தொண்டை வலிக்கிறது என்றால் அதற்குச் சதை வளர்ச்சி (Tonsil) போன்ற பல காரணங்கள் உண்டு. திருமணத்திற்கும் அதற்கும் எவ்வகையிலும் சம்பந்தம் இல்லை.

''அறுவைச் சிகிச்சை செய்தும் சரியாகவில்லை என்றால் - இன்னும் கை தேர்ந்த தொண்டை மருத்துவ நிபுணர் மூலம் Endoscopy செய்து பார்த்து, உண்மை நிலையை அறிந்து அதற்கு ஏற்றபடி சிகிச்சை பெறவேண்டும்; சரியாகிவிடும்.''

அந்தோணிமுத்து,
வாலிபாளையம்

**• எனது மகளுக்கு வயது 28. அடிக்கடி மூக்கு அடைப்பும், சளியுமாக இருக்கிறது. தும்மலும் இருக்கிறது. அலர்ஜி என்றார்கள் சிலர். என் மகள் சமயத்தில் மூச்சுவிடக்கூட திணறுகிறாள். என்ன மருந்து தரலாம் டாக்டர்?**

''நீங்கள் தரும் விவரத்தைக் கொண்டு பார்த்தால், தங்கள் மகளுக்கு ஒவ்வாமை (Allergy) உண்டு போல் தெரிகிறது. இதை நீக்க, நோயாளியின் தன்மை, நோயின் நிலை ஆகியவற்றுக்கு ஏற்பப் பல வகை சிகிச்சை முறைகள் இருக்கின்றன. ஆகவே, நோயாளியைப் பார்க்காமல் நீங்கள் எழுதுவதை வைத்துச் சரியான மருந்தைக் குறிப்பிட்டெழுத என்னால் இயலாது.''

எஸ்.பி. வேலுசாமி
கே.பி. சத்திரம்

**• எனக்கு அடிக்கடி தொண்டை கட்டிக் கொள்கிறது. காதும் மந்தமாகிவிடுகிறது. இதற்கு ஏற்ற சிகிச்சை முறை என்ன?**

''தொண்டை கட்டிக் கொள்ளுவதற்கும், காது கேளாமல் போவதற்கும் அவற்றின் இடையிலான இணைப்புப் பாதையில் ஏற்படும் அடைப்பே காரணமாகும். அந்த அடிப்படையின் தன்மை அல்லது இயல்பைப் பரிசோதனை மூலம் கண்டறிந்த பிறகே இதை மருந்தால் குணப்படுத்திவிடலாமா, அல்லது அறுவைச் சிகிச்சை செய்தே ஆகவேண்டுமா என்று தீர்மானிக்க முடியும்.

''இந்த இரண்டு முறையையும் தவிர - மூச்சைச் சிறிது நேரம் இழுத்துப் பிடித்து 'தம்' கட்டும் ஒருவகைப் பயிற்சி மூலமும் எளிதில் இதைச் சரிப்படுத்தலாம். என்ன முறை மேற்கொள்ளுவது என்பதை டாக்டரே தீர்மானிக்க வேண்டும்.''

தொகுப்பு: பி.எல். ராஜேந்திரன்
புகைப்படங்கள்: ஸ்ரீதரன்

-நிறைவு-






தமிழரசு
16-5-1993 ரூ.1






• சத்தியமாகிய பாறையின் மீது தான் நிலையான வெற்றிக்குரிய அடிப்படைகளை அமைக்க முடியும்.

• உண்மையான நம்பிக்கை மட்டுமே ஒருவனுக்கு இருக்குமானால், அந்த நம்பிக்கையை வைத்தே மலைகளைக் கூட அசைத்து விடலாம்.

# இந்த இதழில்...

| | |
|---|---|
| வீராணம் ஏரியிலிருந்து சென்னைக்குக் குடிநீர் — மாண்புமிகு முதல்வர் ஆய்வு ... | 2 |
| ரூ. 1 கோடி செலவில் மெரினா மேம்பாட்டுத் திட்டம் ... | 4 |
| களவாடப்பட்ட பொருட்கள் மீட்கப்பட்டு உரியவரிடம் ஒப்படைப்பு ... | 7 |
| பசுமைப் புரட்சியில் ஒரு மைல்கல்! ... | 8 |
| டேனிடா - மக்கள் நல்வாழ்வுத் திட்டம் ... | 9 |
| மீனவர் வாழ்வில் விழிப்புணர்ச்சி ... | 15 |
| நீரின்றி அமையாது... ... | 17 |
| தேசிங்கு ராஜன் ... | 24 |
| காவல் துறையின் கனிவான பணிகள் ... | 29 |
| தென்னார்க்காடு மாவட்டத்தில் வளரும் வேளாண்மை ... | 33 |
| கோட்டகம் ரோமானியப் பொற்காசுகள் ... | 37 |
| ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் ... | 39 |
| கோவை-ஊட்டி தினசரி சுற்றுலா ... | 42 |
| திருப்பூர் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் ... | 45 |
| தென்னார்க்காடு மாவட்டத்தில் கனிமச் செல்வங்கள் ... | 48 |


# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2024

வைகாசித் திங்கள் - 3

மலர்: 23 இதழ்: 22

16-5-1993



# வீராணம் ஏரியிலிருந்து சென்னைக்குக் குடிநீர்!

## மாண்புமிகு முதல்வர் அறிவிப்பு

நான் இன்று (10.5.93) தலைமைச் செயலகத்தில், சென்னை நகருக்குக் குடிநீர் விநியோகம் செய்வது குறித்து ஆய்வு செய்தேன். பொதுப்பணித்துறை அமைச்சர், உள்ளாட்சித் துறை அமைச்சர், போக்குவரத்துத் துறை அமைச்சர், கைத்தறித் துறை அமைச்சர் ஆகியோர் இந்த ஆய்வில் கலந்து கொண்டனர். தலைமைச் செயலர், சென்னைக் குடிநீர் வடிகால் வாரியத் தலைவர், தமிழ்நாடு குடிநீர் வாரியத் தலைவர், தமிழ்நாடு குடிநீர் வாரிய நிர்வாக இயக்குநர், பொறியாளர்கள், உள்ளாட்சித் துறைச் செயலர், முதல்வரின் செயலர் மற்றும் பல அதிகாரிகள் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

சென்னை மாநகரின் அனைத்துப் பகுதிகளுக்கு குறிப்பாக குடிநீர்ப் பற்றாக்குறை உள்ள பகுதிகளில், குடிநீர் விநியோகத்தை மேம்படுத்த தேவையான பல்வேறு நடவடிக்கைகளை எடுக்கும்படி சென்னைக் குடிநீர் வடிகால் வாரியத்திற்கும், தமிழ்நாடு குடிநீர் வாரியத்திற்கும் விரிவான அறிவுரைகளை வழங்கியுள்ளேன். ஏற்கெனவே சென்னைக் குடிநீர் வடிகால் வாரியம் குழாய்கள் மூலம் ஒரு நாள் விட்டு ஒரு நாள் 7 மில்லியன் காலன் தண்ணீரையும், 242 லாரிகள் மூலமும் 168 டிராக்டர்/டிராய்லர்கள் மூலமும் 7 மில்லியன் காலன் நீரையும் விநியோகம் செய்து வருகின்றது.

லாரி, டிராக்டர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தி நாளொன்றுக்கு 10 மில்லியன் டன் குடிநீரை விநியோகம் செய்யுமாறு கேட்டுக் கொண்டுள்ளேன். மேலும் ஆலந்தூர், மாங்காடு, நரவரிக்குப்பம், பல்லாவரம், திருநின்றவூர், கடம்பத்தூர், ஜகந்நாதபுரம், இரட்டை ஏரி ஆகிய பகுதிகளில் செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகளைக் கொண்டு, சென்னைக்குக் கூடுதலாக 4 மில்லியன் கேலன் நீர் விநியோகிக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டேன்.

இனிவரும் மாதங்களில் சென்னை நகரின் குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்க, நெய்வேலியிலிருந்து ரயில்கள் மூலம் குடிநீர் கொண்டுவருவதுடன், லாரிகளிலும், தண்ணீர் கொண்டு வர நடவடிக்கைகள் எடுக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளேன். நெய்வேலியிலிருந்து நீர் கொண்டுவர உடனடியாக 200 லாரிகள் பயன்படுத்தப்படும். இவ்வாறு நெய்வேலியிலிருந்து நீர் கொண்டு வருவது மே திங்கள் 20-ஆம் நாள் தொடங்கி தொடர்ந்து நடைபெறும். தேவைகளைப் பொறுத்து லாரிகளின் எண்ணிக்கை ஆயிரமாக உயர்த்தப்படும்.

குடிநீரைப் பொறுத்த மட்டில் சென்னை மாநகர மக்கள் தொடர்ந்து சந்தித்து வரும் இன்னல்களை நான் நன்கு அறிவேன். எனவே, கிருஷ்ணா நீர்த் திட்டத்தைத் தவிர, வேறு நீர் ஆதாரங்கள் இருக்கிறதாவென ஆராயும்படி அதிகாரிகளை கேட்டுள்ளேன். இது தொடர்பாக, வீராணம் ஏரியிலிருந்த நாளொன்றுக்கு 40 மில்லியன் காலன் குடிநீர் சென்னைக்குக் கிடைக்கும் என்று சுட்டிக் காட்டப்பட்டது. குடிநீர் இவ்வாறு இருப்பதையும், சென்னைக்குக் கூடுதலாக நீர் கிடைக்க நமக்குள்ள நீர் ஆதாரங்களைக் கருத்தில் கொண்டும், அதிகாரிகளின் . ஆலோசனையின் பேரில், சென்னைக்குக் கூடுதல் நீர் கிடைக்க வீராணம் நீர்த் திட்டம் நல்லதொரு நீர் ஆதாரம் என்பதை ஏற்றுக் கொண்டேன்.

எனினும், முன் வலுவூட்டப்பட்ட கான்கிரீட் குழாய்களும், அதன் பழைய தொழில் நுட்பமும் பயன்படுத்த மாட்டா. மிக நவீன தொழில் நுட்பத்தையும் சிறந்த மூலப் பொருட்கள் கொண்டு தயாரிக்கப்பட்ட குழாய்கள் மூலமும் புதிய வீராணம் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்ற அரசு முடிவு செய்துள்ளது.

இத்திட்டம் 12 மாதங்களுக்குள் நிறைவேற்றப்படும். மிக நவீன தொழில்நுட்பத்தின் அடிப்படையில் ஒரு திட்ட அறிக்கையையும், திட்டம் அமலாக்கத் தேவையான மிகக் குறுகிய காலத்தையும், அதற்குத் தேவையான நிதி ஆதாரங்களையும் ஒரு வாரத்துக்குள் தருமாறு அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டுள்ளேன். அதற்குப் பிறகு இத்திட்டத்தை ஒட்டுமொத்தமாக நிறைவேற்ற, உலக டெண்டர் கோரப்படும்.

இத்திட்ட அறிக்கையைத் தயார் செய்து ஒரு வாரத்திற்குள் எனக்குச் சமர்ப்பிக்கும்படி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தையும் சென்னைக் குடிநீர் வடிகால் வாரியத்தையும் கேட்டுள்ளேன். தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மேற்பார்வையில் இத்திட்டம் நிறைவேற்றப்படும். சென்னைக் குடிநீர் வாரியம் குடிநீர் விநியோகத்தை மேற்கொள்ளும்.

இப்புதிய வீராணம் குடிநீர்த் திட்டம் நவீன தொழில்நுட்பத்தின் அடிப்படையில் அமையும். சிறந்த தொழில்நுட்பத்துடன், பொருளாதார ரீதியில் சாத்தியமான தண்ணீர்க் குழாய்கள் இதற்குப் பயன்படுத்தப்படும்.

**(10.5.93 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் வெளியிட்ட அறிக்கை)**



## திரைப்படத் துறையில் சிறந்த சேவைக்கு ‘ஜெயலலிதா விருது’

தமிழ்த் திரைப்படத் துறையில் சிறந்த சேவை புரிந்த கலை விற்பன்னர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் அறிஞர் அண்ணா, பாவேந்தர் பாரதிதாசன், கலைவாணர், ராஜா சாண்டோ, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். பெயரால் கலை வித்தகர் விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த ஆண்டு முதல், மேற்சொன்ன விருதுகளுடன் சேர்த்து ஒரு சிறப்பு விருதாக, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பெயரால் ‘ஜெயலலிதா விருது’ வழங்கத் தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

தமிழ்த் திரைப்படத் துறையில் நடிப்பு, திரைப்பட இயக்கம், திரைக்கதை, தொழில்நுட்பம் இப்படி எந்தத் துறையிலும் மிக உன்னத அளவில் சாதனை படைத்த திரைப்படக் கலைஞருக்கு இந்தச் சிறப்பு விருதாகிய ‘ஜெயலலிதா விருது’ வழங்கப்படும்.

இந்த விருதுக்குரிய திரைப்படக் கலைஞர்களை மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களே தேர்வு செய்வார். இந்தச் சிறப்பு விருதாகிய ‘ஜெயலலிதா விருது’ இந்த ஆண்டு நடைபெற உள்ள மாநிலத் திரைப்பட விழாவில் வழங்கப்படும்.

## திரைப்பட விருது: தேர்வுக்குழு அறிவிப்பு

1992-ஆம் ஆண்டிற்கான தமிழக அரசின் திரைப்பட விருதுகளுக்குத் தகுதியுடைய திரைப் படங்கள், நடிகர்கள், நடிகைகள், மற்றும் தொழில் நுட்பக் கலைஞர்களைத் தேர்வு செய்து பரிந்துரைப்பதற்காக, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 14 பேர் கொண்ட குழுவை அறிவித்துள்ளார். இதன் தலைவராக மாண்புமிகு நீதிபதி திரு. எஸ். பிரதாப் சிங் அவர்கள் இருப்பார். கீழ்க்கண்டவர்கள் உறுப்பினர்களாக இருப்பார்கள்.

1. மாண்புமிகு நீதிபதி திரு எஸ். பிரதாப் சிங் .. தலைவர்
2. திரு கே.வி. மகாதேவன், இசையமைப்பாளர் .. உறுப்பினர்
3. திரு ஏ.சி. திருலோகசந்தர், இயக்குநர் .. உறுப்பினர்
4. திரு என். பாலகிருஷ்ணன், கேமராமேன் .. உறுப்பினர்
5. திரு எம்.என். நம்பியார், திரைப்பட நடிகர் .. உறுப்பினர்
6. திரு ஆர்.கே. இராமச்சந்திரன், ஓய்வுபெற்ற எடிட்டிங் பேராசிரியர், திரைப்படக் கல்லூரி, பூனா. .. உறுப்பினர்
7. திருமதி பண்டரிபாய், திரைப்பட நடிகை .. உறுப்பினர்
8. திருமதி வாணி ஜெயராம், பின்னணிப் பாடகி .. உறுப்பினர்
9. திரு முத்துராமலிங்கம், கவிஞர் .. உறுப்பினர்
10. திருமதி மஞ்சுளா ரமேஷ், பத்திரிகை ஆசிரியர் .. உறுப்பினர்
11. திரு ஏ.எஸ். பிரகாசம், திரைப்பட இயக்குநர் .. உறுப்பினர்
12. திரு வி. இராமமூர்த்தி, ஆசிரியர், சினிமா எக்ஸ்பிரஸ் .. உறுப்பினர்
13. இயக்குநர், செய்தி மற்றும் மக்கள் தொடர்புத்துறை .. உறுப்பினர்
14. தென்னிந்தியத் திரைப்படத் தொழிலாளர்கள் சம்மேளனத்தைச் சார்ந்த ஒருவர் .. உறுப்பினர்

## திரைப்படங்களுக்கு அரசு மானியம்!

குறைந்த செலவில் தயாரிக்கப்பட்ட தகுதியுடைய தரமான திரைப்படங்களுக்கு அரசு மானியம் வழங்கி வருகிறது. அரசு மானியத் தொகையை ரூபாய் 2 இலட்சத்திலிருந்து ரூபாய் 3 இலட்சமாக உயர்த்தி மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஏற்கெனவே உத்தரவு பிறப்பித்துள்ளார்.

1992-ஆம் ஆண்டு குறைந்த செலவில் தயாரிக்கப்பட்ட 50 தகுதியுடைய தரமான திரைப்படங்களைத் தேர்வு செய்து படம் ஒன்றுக்கு ரூபாய் 3 இலட்சம் வீதம் அரசு மானியமாக வழங்கப்படும். இப்படங்களைத் தேர்வு செய்து அரசுக்குப் பரிந்துரை செய்வதற்காக 8 பேர்கள் கொண்டு குழுவை மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் அறிவித்துள்ளார். இதன் தலைவராக மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் திரு.கே.பொன்னுசாமி அவர்கள் இருப்பார். இக்குழுவில் கீழ்க்கண்டவர்கள் உறுப்பினர்களாக இருப்பார்கள்.

1. திரு ஆர்.எஸ். மனோகர்
2. திரு பி.எஸ். வீரப்பா
3. கவியரசு திரு நா. காமராசன்
4. திருமதி சி.கே.கரியாலி, இ.ஆ.ப., செயலாளர், செய்தி மற்றும் சுற்றுலாத் துறை
5. இணை ஆணையர் (நிர்வாகம்) வணிகவரித் துறை, சென்னை-5.
6. அரசு துணைச் செயலாளர்/ இணைச் செயலாளர், உள்துறை(சினிமா), சென்னை-9.
7. முதல்வர் தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சிக் கல்லூரி, தரமணி, சென்னை-113.

![TNPSC]

**TNPSC**

விளம்பர எண்.18/1993

தமிழ்நாடு பொதுப்பணியில் சமூகநலத்துறையில் பார்வையற்றோர் காப்பக பட்டறையின் கண்காணிப்பாளர் (Superintendent. Sheltered Workshop for the Blind) பதவியில் ஒரு காலியிடத்திற்கு நேரடித் தேர்வின் மூலம் நியமனம் செய்யப்பட பெண் விண்ணப்பதாரர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் 31.5.93 அன்று மாலை 5.45 மணிவரை வரவேற்கப்படுகின்றன.

**சம்பளம்:** மாதம் ஒன்றுக்கு ரூபாய் 1,400-40- 1,600-50-2,300-60-2,600

(நியமன ஒதுக்கீட்டு விதி இத்தேர்விற்குப் பொருந்தாது)

**வயது:** 1.7.1993 அன்று 30-க்குக் குறைவாக.

**குறிப்பு:** ஆதிதிராவிட வகுப்பினர்/பழங்குடி வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர் மரபினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கு வயது வரம்பு இல்லை.

(சலுகைகள் பற்றிய மேலும் சில விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன)

**Qualifications as on 21.4.1993:**

(i) A degree.

(ii) B.Ed., Degree and Junior Diploma in teaching the Blind; and

(iii) Must have experience for a period of not less than three years in the field of education or training or rehabilitation of the Blind acquired from a school or Institution for the Blind.

**Notes:** (i) Destitute Widows who posses the prescribed qualifications and are found fit by getting the minimum marks for selection will be selected in preference to others who have secured even higher marks.

**Explanation:** "Destitute Widow" means a widow who have neither any means by hereself to live nor any dependent to protect her from starvation.

(2) Candidates who were holding temporary appointment as Superintendent, Scheltered Workshop for the Blind in the Social Welfare Department in the Tamil Nadu General Service on 24.7.1987 may also apply even if they do not satisfy the prescribed age-limit and qualifications.

ஆதரவற்ற விதவைகள், தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர், பிணைத் தொழிலாளர்கள், உடல் ஊனமுற்றோர், நாற்பது வயதிற்குக் குறைவாக உள்ள பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட மற்றும் பணியிலிருக்கின்ற தற்காலிக மாநில அரசுப் பணியாளர்கள் போன்றவர்களுக்கு வயது மற்றும்/அல்லது தகுதியிலிருந்து அளிக்கப்படும் சலுகைகள் தேர்வாணையத்தின் 'பணி வேட்பாளர்களுக்கான விதிமுறைகளில்' தரப்பட்டுள்ளன. ஆதிதிராவிட வகுப்பினர்/பழங்குடி வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர் ஆகியவர்களுக்கு அளிக்கப்படும் விண்ணப்பக் கட்டணச் சலுகைகள் தேர்வாணையத்தின் 'பணி வேட்பாளர்களுக்கான விதிமுறைகளில்' தரப்பட்டுள்ளன. (பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு அளிக்கப்படும் சலுகைகள் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினருக்கும் பொருந்தும்).

விண்ணப்பப் படிவமும், நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு எழுத்து மூலம் கோரி பெற்றுக் கொள்ளலாம். கோரிக்கைகள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ பதவியின் பெயர் மற்றும் விளம்பர எண் ஆகியவற்றைக் குறிப்பிட்டு எழுதப்பட்டு செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு வழங்கக்கூடிய 1.5.93 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10) சென்னை அண்ணா சாலை தபால் அலுவலகத்தில் செலுத்தத்தக்க கோடிட்ட அஞ்சல் ஆணை அல்லது பாரத ஸ்டேட் வங்கியில் (State Bank of India) ஏதாவதொரு கிளையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், செயலாளருக்கு வழங்கக்கூடிய 1.5.1993 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட சென்னை-600 006 ஆயிரம் விளக்கு பாரத ஸ்டேட் வங்கியில் செலுத்தத்தக்க பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10) 'கேட்புக் காசோலை' (Demand Draft)-யுடன் சுயவிலாசம் எழுதிய உறையுடனும் (26 x 12 செ.மீ.) அனுப்ப வேண்டும். கோரிக்கைகள் பிற மொழியில் இருக்குமாயின் அத்துடன் ஆங்கில மொழி பெயர்ப்பும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டா.

**DIPR/655/MS/93**



# களவாடப்பட்ட பொருட்கள் மீட்கப்பட்டு உரியவர்களிடம் ஒப்படைப்பு!



சென்னையில், கடந்த 3 மாதங்களில் கொள்ளையர்களிடமிருந்து காவல்துறையினரால் மீட்கப்பட்ட, ரூ.1 கோடியே 64 ஆயிரத்து 500 மதிப்புள்ள பொருட்களை, அதன் உரிமையாளர்களிடம், மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஒப்படைத்தார்.

களவுபோன பொருட்களில் 4 லாரிகள், 12 கார்கள், 8 ஆட்டோக்கள் 85 ஸ்கூட்டர்கள், 232 சைக்கிள்கள், 15 மூன்று சக்கர வண்டிகள், 959 பவுன் நகைகள், 31 கிலோ வெள்ளி மற்றும் டெலிவிஷன், வி.சி.ஆர்., பாத்திரங்கள் பட்டுச் சேலைகள், ரேடியோக்கள் ஆகியவை அடங்கும்.

இவை சென்னை, கே.கே. நகர், தியாகராயநகர், அடையாறு, கிண்டி, திருவல்லிக்கேணி, அண்ணாசாலை, அண்ணாநகர், இராயபுரம், பூக்கடை, கீழ்ப்பாக்கம், வேப்பேரி, அமிஞ்சிக்கரை, புரசைவாக்கம் ஆகிய பகுதிகளில் உள்ள 566 வீடுகளில் திருட்டுப் போனவையாகும்.

இது தொடர்பாக 134 பேர் கைது செய்யப்பட்டனர். இவர்களில் 62 பேர் பழைய குற்றவாளிகள்.

இவ்வாறு மீட்கப்பட்ட இந்தப் பொருட்களை அதன் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கும் நிகழ்ச்சி, சென்னை எழும்பூர் மார்ஷல் சாலையில் உள்ள ராஜரத்தினம் விளையாட்டு மைதானத்தில் 19.4.93 அன்று நடைபெற்றது. அன்று காலை மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ராஜரத்தினம் விளையாட்டு மைதானத்திற்கு வந்தார். அவரை, காவல் துறை குதிரைப்படை வீரர்கள் அணி வகுத்து அழைத்து வந்தனர். உள் துறைச் செயலாளர் திரு. மலைச்சாமி, காவல்துறை இயக்குநர் திரு. ஸ்ரீபால், காவல்துறை கூடுதல் இயக்குநர் திரு. தேவாரம், சென்னை மாநகரக் காவல்துறை ஆணையாளர் திரு. ராஜகோபாலன் ஆகியோர் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு பூச்செண்டு கொடுத்து வரவேற்றனர்.




அதன் பிறகு, துப்பு துலக்கிய துணை ஆணையாளர்கள் திரு. சண்முகநாதன், திரு. இளங்கோவன், உதவி ஆணையாளர்கள், காவல் துறை ஆணையாளர் ஆகியோரை முதல்வர் அவர்கள் வெகுவாகப் பாராட்டினார்.



## ரூபாய் 1 கோடி செலவில்

# மெரினா மேம்பாட்டுத் திட்டம்

**மா**ண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் அறிவித்த "எழில்மிகு சென்னை 2000" என்ற திட்டத்தில், மெரினா கடற்கரை மேம்பாட்டுத் திட்டம் ஒரு முக்கிய அம்சமாகும்.

இந்தக் கடற்கரை மேம்பாட்டுத் திட்டத்திற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ரூபாய் நூறு இலட்சம் ஒதுக்கியுள்ளார்.

இதில்- வாகனங்கள் நிறுத்தும் இடத்தை மேம்படுத்துதல், கடற்கரை சாலையில் புதிய நடைபாதை அமைத்தல், மூன்று உயர்ந்த மின் கம்பங்களில் அதிக மின்சக்தி கொண்ட விளக்குகள் பொருத்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும். இதற்காக அனுமதிக்கப்பட்ட தொகையில் 50 சதவீதத்தை மாநில அரசும், மீதி 50 சதவீதத்தை சென்னை மாநகராட்சியும் சமமாகப் பகிர்ந்து கொள்ளும்.

காமராசர் சாலையில் எழிலகத்திலிருந்து கலங்கரை விளக்கம் வரையிலான மெரினாவின் கிழக்குப் பகுதியில் சர்வதேசத் தரத்துக்கு ஏற்ற வகையில் நடைபாதை அமைக்கப்படும். இதன் மதிப்பு ரூ.50 இலட்சம் ஆகும்.

கடந்த 29.4.93 அன்று மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்க ள் இந்த நடைபாதையில் பதிக்கப்படவிருக்கும் பளிங்குக் கற்களின் மாதிரியைப் பார்வையிட்டார். இந்தக் கற்களின் நிறங்களில் சில மாற்றங்கள் செய்யுமாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆலோசனை வழங்கினார். அதன்படி கற்களில் தகுந்த மாறுதல் செய்யப்பட்டு முதல்வர் அவர்களுக்குக் காட்டப்பட்டது. மாறுதல் செய்யப்பட்ட கற்களின் வண்ணங்களுக்கு ஒப்புதல் அளித்து, பணிகளை மேற்கொண்டு தொடருமாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் சென்னை மாநகராட்சிக்கு ஆணையிட்டார்.



இந்தப் பணிகள் விரைவில் தொடங்கப்பட்டு சுமார் 10 மாதக் காலங்களில் முடிவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தப் பணிகள் முடிந்த பிறகு, மெரினா கடற்கரையின் இந்தக் கிழக்கு நடைபாதை சர்வதேசத் தரத்தில் இருக்கும். இந்த நவீன நடைபாதையை அமைக்கும் நிறுவனமே இதை இரண்டு ஆண்டுகளுக்குப் பராமரிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், ரூபாய் 25 இலட்சம் செலவில் விளம்பரம் செய்வதற்கான வசதிகளுடன் கூடிய அங்கீகரிக்கப்பட்ட வடிவமைப்புகள் கொண்ட அழகான கைப்பிடி வேலியை நடைபாதையை ஒட்டி அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தப் பணியை மேற்கொள்ள நன்கொடையாளர்களை அழைக்கவும் சென்னை மாநகராட்சி திட்டமிட்டுள்ளது. இவ்வாறு மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் அறிவுரையின்படி, மெரினா மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், கீழ்க்கண்ட பணிகளைச் சென்னை மாநகராட்சி எடுத்துக்கொண்டுள்ளது. இவற்றில் சில பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. மெரினா கடற்கரைக்குப் புதிய பொலிவை ஏற்படுத்தும் வகையில் மற்ற பணிகள் விரைவில் தொடங்கப்படும்.

- ரூபாய் 25 இலட்சம் செலவில் மூன்று உயர்ந்த கம்பங்களில் அதிக மின் சக்தி கொண்ட மின் விளக்குகள் பொருத்துதல்.
- ரூபாய் 49.18 இலட்சம் செலவில் நடைபாதையை மேம்படுத்துதல்.
- நடைபாதையையொட்டி ரூபாய் 25 இலட்சம் செலவில் கைப்பிடி வேலி அமைத்தல்.
- ரூபாய் 22.45 இலட்சம் செலவில் வாகனங்கள் நிறுத்தும் இடத்தை மேம்படுத்துதல்.

மேற்கண்டவாறு, மெரினா கடற்கரையை அழகுபடுத்த சென்னை மாநகராட்சி 1 கோடி ரூபாய்க்கு மேல் செலவிட இருக்கிறது.

# தமிழரசு

## வாசகர்களுக்கு

## ஒரு முக்கிய அறிவிப்பு!

'தமிழரசு' கடந்த 22 ஆண்டுகளாக, தமிழக மக்களின் நலனுக்காக நற்றொண்டாற்றி வருவதை வாசகர்கள் நன்கறிவார்கள்.

மக்கள் வாழ்க்கைத் தரம் உயரப் பல்வேறு துறைகளின் கீழ், அரசு ஆற்றிவரும் அரும் பணிகளை அறிவிக்கும் சாதனமாகத் தமிழரசு விளங்கி வருகிறது.

அரசுச் செய்திகளோடு, கலை, இலக்கியம், அறிவியல் குறித்த பல்சுவைப் பகுதிகளும் இணைந்து இன்சுவை இதழாக இலங்கி வரு கின்றது, 'தமிழரசு'.

படிக்கவும்-பயன்பெறவும்-பாதுகாக்கவும் வேண்டி, ஒவ்வொரு பக்கமும் மிக்க கவனத் துடன் தயாரிக்கப்படுகிறது. அந்த வகையில் ஒரு தரமான பத்திரிகையாக 'தமிழரசு' விளங்கி வருவதைப் பல்துறை அறிஞர் பெருமக்கள் மன தாரப் பாராட்டி வருகிறார்கள்.

அரசுச் செய்திகளை முழுமையாகத் தரும் ஒரே ஏடாக விளங்கும் 'தமிழரசு' மிகக் குறைந்த விலையிலேயே - அதாவது ஒரு ரூபாய் விலை யிலேயே இத்தனை ஆண்டுக் காலமும் வழங்கப் பட்டு வந்ததை வாசகர்கள நன்கு அறிவார்கள்.

வாசகர்களுக்கு ஒரு அன்பான வேண்டுகோள்:

வருகிற 1.6.1993-லிருந்து 'தமிழரசு' தனிப் பிரதியின் விலை ரூ.3 ஆக உயர்த்தப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். (ஆண்டுச் சந்தா ரூ.72, அரை ஆண்டுச் சந்தா ரூ.36) வழக்கம்போல் வாசகப் பெருமக்கள் நல்லாதரவு வழங்குவார்கள் என்று நம்புகிறோம்.

- ஆசிரியர்.

# பசுமைப்புரட்சியில் ஒரு மைல் கல்!

டாக்டர் அனுராதா கதி ராஜிவன், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித் தலைவர் புதுக்கோட்டை

புதுக்கோட்டை மாவட்டத்தில் வேளாண்மைக்குத் தண்ணீர் என்பது அரிதான பொருளாகிவிட்டது. பெரும்பாலும் மழையை நம்பியே 5,385 குளங்கள் இங்கு உள்ளன. 23,400 எக்டேர் நிலங்களுக்கு 55,400 கிணறுகள் மூலம் நீர்ப்பாசனம் கிடைக்கிறது. பருவ மழைகளை நம்பியே பயிர்கள் இருக்கின்றன. நிலத்தின் மேல் உள்ள நீர் ஆதாரங்கள் நிலையானதாக இல்லை.

சோதனை அடிப்படையில் நபார்டு, நிதியுதவி வங்கி ஆகியவைகளின் ஆலோசனையின் பேரில் 'புதுவெல்' (PUDUWELL) என்ற சிறப்புச் சமூக ஆழ்குழாய்க் கிணறுகள் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 7 பிளாக்குகளில் மிகுதியாக உள்ள நிலத்தடி நீரைப் பயன்படுத்திக் கொள்ள உதவும்.

இத்திட்டத்திற்கு அரசு வேளாண்மைத்துறை ஒப்புதல் அளித்து ரூ.100 இலட்சத்தை சிறு விவசாயிகளுக்கும், நடுத்தர விவசாயிகளுக்கும் மானியமாக வழங்கி உள்ளது. அந்தந்தப் பகுதிகளில் உள்ள தேசியமயமாக்கப்பட்ட, தனியார் வங்கிகளின் மூலம் கடன் வசதி செய்து தரப்பட்டுள்ளது. நில வரியையும் சமூக ஆழ்குழாய்க் கிணறுகளைப் பராமரிக்கும் செலவுகளையும் விவசாயிகளே செலுத்துவார்கள். இந்தப் 'புதுவெல்' (PUDUWELL) திட்டத்தின்கீழ் 150 முதல் 300 மீட்டர் ஆழத்திற்குக் கிணறு வெட்டி, அதற்கு 45 எச்.பி. திறன் கொண்ட மோட்டார் பொருத்தப்படுகிறது. புவியியல், நிலத்தடி நீர் ஆகியவற்றில் மாவட்ட அளவிலான நிபுணர்கள் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டு, ஆழ்குழாய்க் கிணறுகள் தோண்டுவதற்கான இடங்கள் கண்டறியப்பட்டிருக்கின்றன. இது தொடர்பாக சென்னை அண்ணா பல்கலைக் கழகத்தின் 'இன்ஸ்டியூட் ஆப் ரிமோட் சென்ஸிங்' (Institute of Remore Sensing)-லிருந்து நிபுணர்களின் கருத்துக்கள் கேட்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு சமுதாய ஆழ்குழாய்க் கிணற்றுக்கும் ஒரு விவசாயிகள் சங்கம் அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சுமார் 20-25 விவசாயிகள் ஒவ்வொரு சங்கத்திற்கும் உறுப்பினர்களாக இருப்பார்கள். ஒரு பெரிய விவசாயியின் நிலம், சிறு, நடுத்தர விவசாயிகளின் நிலங்களிடையே இருந்தால், அவரும் இந்தச் சங்கத்தின் உறுப்பினராகி இந்த வேளாண்மை ஆதாரங்களின் பலன்னகளை அனுபவிக்கலாம். ஆனால், அவருக்கு மானிய உதவி வழங்கப்படமாட்டாது. இதில் பங்கு பெறுவோர்களுக்கும் அமல்படுத்தும் அலுவலர்களுக்கும் ஒரு உயர்மட்டப் பயிற்சிக்கு 'நபார்டு' ஏற்பாடு செய்துள்ளது. பயிரிடும் முறை, ஆழ்குழாய்க் கிணறுகளைப் பராமரித்தல், ஒழுங்காகக் கடனைத் திருப்பிக் கட்டுதல் ஆகியவை இப்பயிற்சியின் அங்கமாகத் திகழும். வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டத்தின் (Drought Prone Area Programme) கீழ் தோண்டப்பட்ட வெற்றிகரமான ஆழ்குழாய்க் கிணறுகளை நேரில் சென்று பார்க்கவும் இந்தத் திட்டம் வழிவகை செய்கிறது.

தங்களுடைய ஆழ்குழாய்க் கிணறுகளைப் பராமரிக்கும் பொறுப்பு விவசாயிகள் சங்கத்தையே சாரும். இதனுடைய பராமரிப்புக்கென்று சங்கம் ஒரு நபரை நியமிக்கும். மோட்டாரின் குதிரை சக்தித் திறனுக்கேற்ப விதிக்கப்படும் நீர் வரியை வசூலிப்பது அரவது பொறுப்பாகும். அவ்வாறு வசூலிக்கப்பட்ட நீர்வரியில் குறிப்பிட்ட சதவிகிதம் அவருக்கு ஊதியமாக வழங்கப்படும். நிலத்தடி நீரின் தன்மையைப் பொறுத்து ஆழ்குழாய்க் கிணற்றின் ஆழம் 150 முதல் 300 மீட்டராக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இக்கிணற்றின் ஆழத்தைப் பொறுத்து இதற்கு ரூ.3.75 இலட்சத்திலிருந்து ரூ.4.87 இலட்சத்திற்குள் செலவாகும். இதற்காக வழங்கப்படும் கடன் தொகையை ஓர் ஆண்டு விடுமுறையுடன் கூடிய 9 ஆண்டுகளுக்குள் செலுத்த வேண்டும். தற்பொழுது இப்பகுதியில் வாழும் விவசாயிகள், ஓராண்டிற்கு மட்டுமே அறுவடை செய்து ரூ.3000 வருமானமாகப் பெறுகிறார்கள். இக்கிணறுகள் கட்டி முடிக்கப்பட்டவுடன் இவர்கள் ஓர் ஆண்டில் 2 முதல் 3 அறுவடைகள் செய்து ஆண்டொன்டிற்கு ரூ.15,000 வருமானமாகப் பெறுவார்கள். இத்திட்டம் பொருளாதார ரீதியில் வெற்றிகரமானதாகும். ஏனெனில், இவை கட்டி முடிக்கப்பட்ட பின்பும், நல்ல வருமானம் பெருக வழிபிறக்கும். ஒவ்வொரு கிணறும் 25 முதல் 40 ஏக்கர் வரை நிலங்களுக்குப் பயனளிக்கும். நெல், தானிய வகைகள், பருப்பு வகைகள் ஆகியவை பயிரிடப்படும். இப்பயிர்கள், குறைந்த நீரைப் பயன்படுத்திக் கொள்வதோடு குறுகிய காலத்தில் பயனளிப்பதாக உள்ளது.

தனி நபர்களின் விருப்பத்திற்கேற்ப இத்திட்டம் செயல்படுகிறது. இதன் நிபந்தனைக்கு உட்பட்ட, விருப்பமான விவசாயிகளே இதில் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுவர். இதற்கு இலக்கு நிர்ணயிக்கும் முறை தவிர்க்கப்படுகிறது.

இம்மாவட்டத்திலுள்ள 2000 சிறு, நடுத்தர விவசாயிகளின் வருமானத்தைப் பெருக்கி அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த இத்திட்டம் வழிவகுக்கிறது. இம்மாவட்டத்தின் பசுமைப் புரட்சியில், இத்திட்டம் ஒரு மைல் கல்லாகத் திகழும் என்பதில் ஐயமில்லை!



# டேனிடா மக்கள் நல்வாழ்வுத் திட்டம்

டாக்டர் ஜே.எஸ். சந்திரன்
திட்ட அலுவலர்
டேனிடா, கடலூர்

'தமிழ்நாடு அரசு டேனிடா திட்டம்' டென்மார்க் நிதி உதவியுடன், கிராமப்புற மக்களின் நல்வாழ்வினை மேம்படையச் செய்யும் சீரிய நோக்கத்தோடு, தமிழ் நாட்டில் தென்னார்க்காடு மற்றும் சேலம் மாவட்டங்களில் இயங்கி வருகிறது.

கிராமங்களில் நல்வாழ்வுப் பணிகளை, குறிப்பாக தாய் சேய் நலப்பணிகளை ஆற்றும் துணைச் சுகாதார நிலையங்களுக்குக் கட்டடம் கட்டித் தருதல், தேவையான தளவாடங்கள், மருந்துகள் வழங்குதல், ஆரம்பச் சுகாதார நிலையங்களை, துணைச் சுகாதார நிலையங்களுக்கு ஆதரவாகச் செயல்பட வளமைப் படுத்துதல், தேவையான பணியாளர்களை நியமித்தல், பயிற்சி அளித்தல், கல்வி செய்தித் தொடர்புப் பிரிவுகளுக்குக் கருவிகள் உபகரணங்கள் வழங்கி மேம்படுத்துதல், மருந்துக் கிடங்கு ஒன்று கட்டி மருந்துகளைப் பெற்று, சீராக வழங்கும் முறையை ஏற்படுத்துதல் போன்ற திட்டங்களைச் செயல்படுத்தும் வழியாகக் கிராமப்புற மக்களின் நல்வாழ்வுக்கு வழிவகுக்கும் முயற்சிகளை இது மேற்கொண்டுள்ளது.

இத்திட்டம், தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள கல்வராயன் மலையின் 40,000 மலைவாழ் மக்களுக்கு இது காறும் முழுமையாக்ச் சுகாதாரப் பணிகள் கிடைக்கப் பெறாமல் இருந்த நிலைமையை மாற்றி, மலைவாழ் மக்கள் நல்வாழ்வுத் திட்டம் ஒன்றினை நம் மாவட்டத்திற்கு எனச் சிறப்புத் திட்டமாகச் செயல்படுத்துகிறது.

டேனிடா திட்டம், தமிழ்நாட்டில் 1981-ஆம் ஆண்டு முதல், மூன்று கட்டங்களில் இயங்கி வருகிறது. முதல் கட்டம் 1981 முதல் 1987 வரையிலும் இடைக்காலக் கட்டம் 1987 முதல் 1989 வரையிலும் செயல்பட்டது. 1989 முதல் 1992 வரையில் திட்டமிடப்பட்டுச் செயல்பட்ட மூன்றாம் கட்டத்தினை 1990-இல் மதிப்பீடு செய்த பிறகு இடைக்கால ஆய்வுக் குழுவின் பரிந்துரையின்படி மேலும் 2 ஆண்டுக் காலத்திற்கு நீடிக்கப்பட்டது.

1981-1987 வரையிலான முதல் கட்டத்தில் சுமார் 8 கோடி ரூபாய் தென்னார்க்காடு மாவட்டத்திற்குச் செலவு செய்யப்பட்டுள்ளது. இரண்டாம் கட்டத்திற்காக மொத்தம் 23 கோடியில், தென்னார்க்காடு மாவட்டத்திற்கு மட்டும் ஏறத்தாழ 14 கோடி ரூபாய் நிதி தரப் பட்டுள்ளது. டென்மார்க் நாடு வழங்கும் 80 சதவிகித நிதி உதவித் தொகையாகத் தரப்படுகிறது. கடனாக அல்ல. மத்திய அரசு 5 சதவிகித நிதியினையும், தமிழக அரசு எஞ்சிய 15 சதவிகித நிதியினையும் தமது பங்காகச் செலுத்தி வருகின்றன.

இத்திட்டத்தினைச் செயல்படுத்த மாநில அளவில் தற்போது திருமதி ஸ்மிடா நாகராஜ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இயக்குநரகமும், வழி நடத்திட மேல்மட்டக் குழுக்களான இத்திட்டத்தின் தலைமைச் செயலாளரைத் தலைவராகக் கொண்ட மாநிலத் திட்ட ஒருங்கிணைப்புக் குழுவும், செயல்திறன் ஆணைக் குழுவும் மாநில அளவில் நிறுவப்பட்டுள்ளன. திட்டத்தின் பல்வேறு அம்சங்களைச் செயல்படுத்திட மாநில இயக்குநர் அலுவலகமும் இரு மாவட்டங்களில் இரு திட்ட அலுவலகங்களும் செயல்படுகின்றன. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் திட்டத்தின் மாவட்டத் திட்டக் கூர்ந்தாய்வுக் குழுத் தலைவராகச் செயல்பட்டு, பல்வேறு துறைகளின் ஒத்துழைப்பினை ஒருங்கிணைத்துத் திட்டம் வெற்றிபெறப் பணியாற்றுகிறார்.

டேனிடா திட்டம், நல்வாழ்வுத் துறையைச் சார்ந்த சுகாதாரத் துணை நிலையங்கள், ஆரம்பச் சுகாதார நிலையங்களை வளமைப்படுத்தி நல்வாழ்வுத் துறையின் முயற்சிகளுக்கு உறுதுணையாக ஒத்துழைப்புத் தந்துதவிப் பலப்படுத்துகிறதே தவிர, தனியாகவோ, அதற்கு மாற்றாகவோ செயல்படுவது இல்லை. நல்வாழ்வுப் பணிகள் ஆற்ற இந்திய அரசு நிர்ணயித்துள்ள அளவிற்குத் தேவையான சுகாதார நிலையங்களை நிறுவவும் பணியாளர்களை நியமிக்கவும், பணியாற்றத் தேவையான பயிற்சிகள், தளவாடங்கள் கருவிகள், உபகரணங்களை உடனடியாக வழங்குகிறது. அரசு இவற்றைத் தருவதற்கு ஆகும் கால கட்டத்திற்கு முன்னதாகவே உடனடியாக வழங்கி, எவ்விதம் செயல்படலாம் என்பதனையும் கண்டறியச் செய்கிறது. நல்வாழ்வுத் துறைக்குத் துணையாகவோ இணையாகவோ செயல்படுகிறதே தவிர, அத் துறைக்கு மாற்றாகவோ, மாறாகவோ செயல்படுவதில்லை என்பதை நன்கு உணர வேண்டும்.

தென்னார்க்காடு மாவட்டத்திற்கு டேனிடா தன் முதல் கட்டத்தில், கிராமச் சுகாதாரச் செவிலியர்கள், பகுதிச் செவிலியர்கள், களப்பணியாளர்கள், மேற்பார்வையாளர்கள், மருத்துவ அலுவலர்கள் தங்கிப்பணியாற்ற 285 துணைச் சுகாதார நிலைய மையக் கட்டடங்கள் 163 பெண் நல மேற்பார்வையாளர் குடியிருப்புகள், 20 மருத்துவ அலுவலர் குடியிருப்புகள் கட்டித் தந்துள்ளது. ஆரம்பச் சிகிச்சைகள் சரியாக நடைபெற 7 பொது மருந்தகங்கள் கட்டடங்கள், 20 வட்டார அளவிலான சுகாதார நிலையங்களுக்குச் சுற்றுச் சுவர்கள், 34 வட்டார அளவிலான சுகாதார நிலையங்களுக்குக் கட்டடங்கள், பயிற்சி நடத்தக் கட்டடங்கள் போன்றவற்றைக் கட்டிக் கொடுத்துள்ளது. மேலும் 14 வட்டாரச் சுகாதார நிலையங்களில் அறுவைச் சிகிச்சைகளுக்கான அரங்கு



அம்மக்கப்பட்டுள்ளன. கிராமத்தில் செல்வாக்கு உள்ள தலைவர்களையும் ஆரம்பச் சுகாதார நிலையக் களப்பணியாளர்களையும் கொண்ட இக் கிராமச் சுகாதாரக் குழுக்கள் துணைச் சுகாதார நிலையத்தைச் சார்ந்த பகுதியின் சுகாதாரப் பிரச்சினைகள் பற்றியும் விவாதித்து முடிவு செய்து செயல்படுகின்றன. கிராம மக்களின் ஈடுபாட்டோடு துணைச் சுகாதார நிலையக் கட்டடம் கட்டும் திட்டத்தில் கிராமச் சுகாதாரக் குழுக்கள் முக்கியப் பங்கு ஆற்றியுள்ளன. இது தவிர மக்கள் தொகைக் கல்விக்கருத்தரங்குகள், பிரச்சார (விளம்பரம்) நாடகங்கள், பொம்மலாட்டம் போன்ற கலை நிகழ்ச்சிகள் நடத்துவதற்கும் தேவையான நிதி திட்டத்தில் ஒதுக்கப்படுகிறது.

**மருந்துக் கிடங்கு**

சுகாதாரத் துணை நிலையங்களுக்கும், ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கும் மருந்துகள் பல திட்டங்களின் சார்பில் பல நோய்த் தடுப்புத் திட்டங்களின் கணக்கில் பல்வேறு கால கட்டங்களில், பல்வேறு தவணைகளில் பல வழிமுறைகளில் தரப்படுகின்றன. பல்வேறு துறைகளினின்று தரப்படும் மருந்துகளைக் கணக்காகப் பெற்றுப் பாதுகாப்பாக இருப்பில் வைத்து முறையாக முறைமைப் படுத்தப்பட்ட/சீரமைக்கப்பட்ட சுகாதார மையங்களுக்கு அனுப்பிடும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதற்காக ரூ.17 இலட்சத்திற்குக் கூடுதலான செலவில் மருந்துக் கிடங்கு ஒன்று கட்டப்பட்டு நிறைவுபெற உள்ளது.

**கல்வராயன் மலைவாழ் மக்கள் சிறப்பு நல்வாழ்வுத் திட்டம்**

கல்வராயன் மலைப்பகுதியில் 40,000 மலைவாழ் மக்கள் வாழ்கிறார்கள். அப்பகுதியின் நல்வாழ்வுக்கு எனச் சுகாதார நிலையத்தில் போதுமான அளவு இருந்தாலும் முறையாக அமைக்கப் பெறாததால், சேவைகள் முழுமையாகக் கிடைக்கப் பெறாமல் இருந்தன. போக்குவரத்து வசதியற்ற மலைப்பாங்கான 151 குடியிருப்பு வாழ்கிற மக்களுக்கு நல்வாழ்வு சேவைகள் சென்றடைய வசதியாக நல்வாழ்வு நிலையங்கள் ஏற்படுத்தப்படவும், சீரமைக்கவும் முறைப்படுத்தவும் திட்டங்கள் திட்டமிடப்பட்டுச் செயலாக்கப்படுகின்றன. 5 ஆரம்பச் சுகாதார நிலையங்களைக் கெண்ட 5 வட்டங்களாக மாற்றி அமலாக்கப்படும். இவ்வாறு சுகாதார நிலையத்தின் சேவை சென்றடையும் பகுதிகளை எல்லைப்படுத்தி மாற்றி அமைத்து, ஒரு ஆரம்பச் சுகாதார நிலையத்திற்கு 3 அல்லது 4 துணைச் சுகாதார நிலையங்கள் இணைக்கப்படும். நல்வாழ்வுச் சேவைகள் இனி ஒதுங்கியுள்ள மலைக் கிராமங்களுள் ஊடுருவிச் சென்றடைய மற்ற துறைகளின் ஒருங்கிணைந்த ஒத்துழைப்பு தேவை.

ஒவ்வொரு துணைச் சுகாதார நிலையத்திற்கு 2 அல்லது 3 அரசு மலைவாழ் உறைவிடப் பள்ளிகளும் 4 அல்லது 6 ஊட்டச்சத்து மையங்களும் சேர்த்திணைக்கப்படவும் இருக்கின்றன துணைச் சுகாதார நிலையம் அமைக்கப்பட்டுள்ள கிராமம் இணைப்புத் தலைமையிடமாக (Co-Terminus) ஆக்கப்பட்டு மற்ற துறைகளான வளர்ச்சி, வருவாய், கல்வித்துறை போன்ற பணியாளர்களாக இணைந்து செயலாற்ற வழிவகை காணப்பட்டுள்ளது.

சிறப்புத் திட்டத்தின்கீழ், உள்ள மற்றொரு சிறப்பு அம்சம் பற்றிக் குறிப்பிட்டாக வேண்டும். மலைவாழ் மக்களுக்கு நல்வாழ்வுக் கருத்துக்களைத் தகவல்களைத் தரவும் விழிப்புணர்வு, சுகாதார அறிவு, தக்க மனோநிலை, செயல்திறன், இவைகளைப் பெருக்கவும் தேவையான வசதிகளை ஏற்படுத்தி பழக்க வழக்கங்களில் தேவையானதொரு மாற்றத்தினைத் தோற்றுவிக்கச் சிறப்பு நலக் கல்வித் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இதுவரையில் நல்வாழ்வுத் துறையின் சேவை சென்றடையாத இப்பகுதியின் தனித் தன்மைகளையும், அதனால் உள்ள பிரச்சினைகளையும் கருத்திற் கொண்டு - பல பயிற்சிகள் விவாதக் குழுக் கூட்டங்கள் விளம்பர உட்பிரிவுகள், ஒலி, ஒளிபரப்புகள் சினிமாப் படங்கள், ஸ்லைடுகள், திட்டங்கள் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு அவற்றின் முடிவாகச் சிறப்பு நலக்கல்வித் திட்டம் 22 இலட்சம் ரூபாய் செலவில் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

அதன் முதற் கட்டத்தின் தொடக்கமான நலக்கல்வி விழிப்புணர்ச்சி முகாமினை கல்வராயன் மலை கோடை விழாவின்போது மாண்புமிகு வீட்டுவசதி அமைச்சர் திரு. டி.எம். செல்வகணபதி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு சு. முத்துசாமி ஆகியோர் தொடங்கி வைத்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

முடிவாக,டேனிடாத் திட்டத்தின் சீரிய பணியின் அடையாளமாக டேனிடா திட்டத்தின் சிறப்புச் சேவைகள் டேனிடாத் திட்டத்தின் நன்கொடையாகக் கை கொடுக்கும் பை, மாவட்ட பயிற்சிக் குழு அணுகு முறை போன்றவற்றைக் குறிப்பிட்டாலும் மலையில் திட்ட விளக்கமாகக் குன்றிலிட்ட விளக்காகக் குறிப்பிடப்பட வேண்டியது சமுதாய ஒத்துழைப்புடன் துணைச் சுகாதார நிலையங்கள் கட்டப்படும் திட்டமே ஆகும்.

வாடகைக் கட்டடங்களில் இயங்கி வந்த, இயங்கி வருகிற துணைச் சுகாதார நிலையங்களுக்குச் சொந்தக் கட்டடங்களைத் தரமான கட்டடங்களைக் கிராம மக்களே கட்டித் தரும் திட்டம் டேனிடாத் திட்டத்தின் மிகச் சீரிய திட்டமாகும்.

அரசின் பங்குத் தொகையான ரூ.90,000 மட்டும் டேனிடா திட்டம் வழங்குகிறது. கிராமச் சுகாதாரக் குழுத் தலைவரும் மருத்துவ அலுவலரும் இணைந்து செயல்பட்டு துணைச் சுகாதார நிலையக் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இம்மாவட்டத்தின் மொத்தமுள்ள 262 வாடகைத் துணைச் சுகாதார நிலையங்களில் 232 நிலையங்கள் இத் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. 52 துணைச் சுகாதார நிலையக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு விட்டன. மீதியுள்ள கட்டடங்கள் வேறு வேறு நிலையில் உள்ளன. அனைத்துக் கட்டடங்களும் அக்டோபர் 1993-க்குள் கட்டி முடிக்கப்படும். இது ஒரு பெரிய சவாலாக இருப்பினும், வெற்றி பெற்று விட்டால் இது மகத்தானதொரு சாதனையாக விளங்கும். இன்னும் எஞ்சியுள்ள 30 துணைச் சுகாதார நிலையங்களுக்கும் திட்டம் விரிவாக்கம் செயல்பட்டால் இம் மாவட்டத்தின் அனைத்துத் துணைச் சுகாதார நிலையங்களும் சொந்தக் கட்டடத்தில் இயங்கும் பெருமை தென்னார்க்காடு மாவட்டத்திற்குக் கிட்டும்.

இனி இத்திட்டமானது தஞ்சாவூர், நாகப்பட்டினம்-காயிதே மில்லத், தர்மபுரி மாவட்டங்களுக்கு விரிவாக்கப்படும் என்ற தகவல் நம் எல்லோருக்கும் மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகிறது.




TNSC BANK

**The Tamil Nadu State Apex Co-Operative Bank Ltd.,**

**233, N.S.C. Bose Road, Madras-600 001.**

**Rate of Interest on Deposits (Effective from 1.3.1993**

| Sl.No. | Type of Deposit | Rate of Interest per annum |
|---|---|---|
| 1. | Savings Bank Accounts | 6.25% w.e.f. 24.4.92 |
| 2. | Fixed Deposits : | |
| | For 46 DAYS and above but upto 270 days | 11.25% |
| | For 271 DAYS and above but upto 364 days | 11.00% |
| | For 1 YEAR and above | 11.25% |

**Interest on Fixed Deposit for 1 year and above will be paid Quarterly**

- NRO & NRE Accounts Facilities are available in 6 designated Branches.
- Interest rates are subject to RBI directives from time to time.

THE BANK AT YOUR SERVICE

**VIJAYA TALKIES**

Post Box No.9
Panruti, South Arcot District.

(An upto-date Cinema House equipped with R.C.A. Double Projectors, with wide angle projection, with H.I. ARC Lamps)

''முயற்சி திருவினையாக்கும்''
''ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு''

''நாடும் நன் மக்களும் நன்கு தழைத்து வாழ இறைவனை வேண்டுகின்றோம்''

K.S.R. சக்கரபாணி செட்டியார்
&
R.C. குப்புசாமி செட்டியார்

உரிமையாளர்: விஜயா டாக்கிஸ்
பண்ருட்டி, தென்னார்க்காடு மாவட்டம்.






# மீனவர் வாழ்வில் விழிப்புணர்ச்சி


இரா. கண்ணன்
இயக்குநர்
பள்ளிசாரா மற்றும் வயதுவந்தோர் கல்வி


தமிழ்நாடு பெற்றிருக்கும் சிறப்பு அம்சங்களில் ஒன்று அதன் கிழக்கு எல்லையில் வங்காள விரிகுடாவும், தெற்கு எல்லையில் இந்துமாக் கடலும் அமைந்திருப்பதாகும். கடல் தரும் செல்வங்களைத் துய்ப்பவர்களில் கடலோர மீனவர்கள் முக்கியப் பங்கினைப் பெறுகின்றனர். அவர்கள் வாழ்வில் மீன் பிடித்தலே முக்கியத் தொழிலாக அமைகின்றது.

மீனவர்களுக்கு மீன்பிடித் தொழில் மட்டும் தெரிந்திருந்தால் போதுமா? இவ்வினாவிற்குவிடையாக 'இல்லை' என்ற பதிலே அமைகின்றது. ஏறக்குறைய 442 கிராமங்களில் 15 வயது முதல் 35 வயது வரையில் சுமார் 90,000 பேர் எழுத்தறிவு இல்லாதவர்களாக இருக்கக்கூடிய நிலைமை இருந்துவருகிறது. அதிலும் குறிப்பாக, மீனவப் பெண்கள் அதிகமாகக் கல்வி அறிவு இல்லாதவர்களாகக் காணப்படுகின்றனர்.

கல்வி அறிவு இல்லாத காரணத்தினால் மீனவர்களில் பலர் அதிக உழைப்பாளர்களாக இருந்தும் கூட, அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொள்ள முடியாத நிலையில் உள்ளனர். இதற்குக் காரணம் எழுத்தறிவின்மையே ஆகும். சமூகத்தில் மற்றவர்களோடு தொடர்பு இல்லாமல் அவர்கள் வாழ்கின்றனர். சிலர் குடிப் ப்ழக்கம் போன்ற கெட்ட பழக்கம் உடையவர்களாகக் காணப்படுகின்றனர். சேமிக்கும் பழக்கம் இல்லாதவர்களாகவும் உள்ளனர்.

எனவே, மீனவர்களுடைய வாழ்வில் ஒரு முன்னேற்றத்தை ஏற்படுத்தியாக வேண்டும் என்ற நோக்கோடும், அவர்கள் சமூகத்தில் உள்ள மற்றவர்களோடு தொடர்பு கொண்டு வாழவும், தமிழக அரசு அவர்களுக்காக ஓர் எழுத்தறிவு இயக்கத்தை ஏற்படுத்தி உள்ளது. இதற்கு டென்மார்க் நாட்டு 'டானிடா' அமைப்பும் உதவி செய்வதன் வாயிலாக இத்திட்டம் சிறப்பாக அமைந்து வருகின்றது. இத்திட்டத்தின் மூலம்

- எழுத்தறிவு பெறவும் கடிதங்கள் எழுதவும், வாசிக்கவும், எளிய கணித முறைகளை அறிந்து தங்களது அன்றாட வாழ்க்கையில் பயன் பெறவும்,
- தங்கள் பிரச்சினை பற்றிக் கலந்து பேசி, கூட்டுறவு முறையில் அவைகளைத் தீர்க்கும் திறமைகளைப் பெறவும், சுயசார்புடையவராக இருக்கவும்,
- தங்கள் சமுதாயத்தினர்கள் படும் பல இன்னல்களைத் தங்களால் தீர்க்க இயலும் என்ற தன்னம்பிக்கை கொண்டவராகவும் செயல்படும் திறமைகளைப் பெறுகின்றனர்.

இந்தக் கடலோர மீனவர்களுக்கான வயதுவந்தோர் கல்வித் திட்டத்தின் முன்னோடித் திட்டம் (Pilot Phase) 1991-92-ஆம் ஆண்டு செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டது. இந்த முன்னோடித் திட்டத்தின்கீழ் கேளம்பாக்கம் மற்றும் திருவொற்றியூர் திட்ட அலுவலகங்களின் கீழ் 200 மையங்கள் ஓராண்டு செயல்பட்டன.

6,061 கற்போர் இந்த முன்னோடித் திட்டத்தின் கீழ் பயன் பெற்றனர். இதில் பெண்களின் ஆர்வமும், முன்னேற்றமும் குறிப்பிடும் வகையில் அமைந்திருந்தது. மீன் வளத்துறையும் இத்திட்டத்தின் வெற்றிக்குப் பெரிதும் உறுதுணையாக இருந்து வந்தது. கற்போர்களில் 68.4 சதவிகிதம் பேர் எதிர்பார்த்த பயனைத் திறம்படப் பெற்றுள்ளனர்.

நடப்பு ஆண்டில் (1992-93) 10 திட்டங்கள் துவக்கப்பட்டுள்ளன. அவை பின்வருமாறு:

| | |
|---|---|
| செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர்., சென்னை மாவட்டங்கள் | - 2 திட்டங்கள். |
| தென்னார்க்காடு | - 2 திட்டங்கள் |
| நாகப்பட்டினம்-காயிதே மில்லத் | - 2 திட்டங்கள் |
| தஞ்சாவூர் | - 1 திட்டம் |
| இராமநாதபுரம் | - 2 திட்டங்கள் |
| சிதம்பரனார் | - 1 திட்டம் |
| மொத்தம் | 10 திட்டங்கள் |

இத்திட்டங்கள் மீன் வளத்துறை, சுகாதாரக் குடும்பநலத்துறை, ஊரக வளர்ச்சித்துறை, கூட்டுறவுத் துறை, தொண்டு நிறுவனங்கள், அரசுத் துறை நிறுவனங்கள் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் செயல்படுத்தப்படுகின்றன. இதனால், மீனவர்கள் வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படும். கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவுவதன் மூலமும், பிடிக்கப்படும் மீன்களைக் கூட்டுறவு முறையில் விற்பனை செய்ய வழிவகை ஏற்படும். பெண்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பல்வேறு தொழில்களில் பயிற்சி அளிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. அரசின் வளர்ச்சித் துறைத் திட்டங்கள் மூலம் பெற வேண்டிய பயன்களை மீனவர்கள் பெற ஏற்பாடு செய்யப்படும். மீனவர்கள் குழந்தைகள் தொடர்ந்து பள்ளிப் படிப்பை விடாமல் தொடர்வதற்கும் உதவி செய்யப்படும்.

இவ்வாறு பல்வேறு திட்டங்களின் மூலம் மீனவர்கள் பயன்பெற டானிடா உதவியுடன் கூடிய கடலோர மீனவர்களுக்கான வயதுவந்தோர் கல்வித் திட்டம் செயல்படுத்தப்படும். இதன் மூலம் 30,000 மீனவர்கள் பயன்பெறுவர்.

களைச் சீரமைத்துத் தந்துள்ளது. ஆரம்பச் சுகாதார நிலையங்களிலிருந்து நோயாளிகள் மேல் சிகிச்சை பெற பரிந்துரை செய்து அனுப்பப்படுவதால் தாலுக்கா அளவிலான மருத்துவமனைகளில் குழந்தைகள் பிரிவுக் கட்டடமும், மற்றொன்றில் மகப்பேறு பிரிவுக் கட்டடமும் குளிர்ப்பதன வசதியோடு கூடிய அறுவைச் சிகிச்சை அரங்குகளும் கட்டி டேனிடா வழங்கியுள்ளது.

### குடிநீர் வசதி

குடிநீர் வசதி ஏற்படுத்துவதில், மற்ற திட்டங்களினின்று சற்று வேறுபட்ட நல்லதொரு முறையை டேனிடா திட்டம் கடைப்பிடிக்கிறது. சுகாதார நிலையங்களுக்குக் குடிநீர் வசதிகளைக் கிராம மக்களுக்கும் பயன்படும்படி அமைத்துத் தந்துள்ளதால், சுகாதார நிலையங்களுக்கும், கிராம மக்களுக்கும் சுமுகமான தொடர்பு ஏற்பட ஏதுவாகிறது.

அனைத்துச் சுகாதார துணை நிலைய வட்டார அளவிலான ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்குக் குடிநீர் வசதி அமைத்துத் தரப்பட்டுள்ளது.

### முன்தடுப்புப் பராமரிப்பு

ஏற்கெனவே கட்டிக் கொடுக்கப்பட்டுள்ள கட்டடங்கள், வழங்கப்பட்டுள்ள இருக்கை வசதிகள், கருவிகள், உபகரணங்கள் தொடர்ந்து பழுதில்லாமல் செயல்படவும், சிறு பழுது ஏற்பட்டால் உடனே அவற்றைச் சரி செய்து, பெரிய பழுது ஏற்படுவதையும், பயனின்றிப் போவதையும் தவிர்த்திடவும் பயனுள்ள முன்தடுப்புப் பராமரிப்பு முறையினை அறிமுகப்படுத்தியுள்ளது. கருவிகள் உபகரணங்கள் பராமரிப்புக்கென ரூ.2000 ஆண்டுதோறும் ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. பழுது ஏற்பட்டால் உடனடியாகச் சரி செய்து கொள்ள மருத்துவ அலுவலருக்கு நிதி வசதி செய்து தரப்பட்டுள்ளது.

கட்டடங்களுக்கும் இருக்கைகளுக்கும் ஏற்படும் பழுதுகளை நீக்க மருத்துவ அலுவலர்கள் மதிப்பிட்டு அனுப்பும் தேவைப் பட்டியலின் படி, நிதியினை மாவட்டத் திட்ட அலுவலர் வழங்கும் முறை வழக்கில் உள்ளது.

இந்த முன்தடுப்புப் பராமரிப்பு முறை திட்டக் காலத்திற்குப் பின், நல்வாழ்வுத் துறையின் ஒரு நிரந்தர அங்கமாக மாறித் தொடர்ந்து பலன் தரும் என எதிர்பார்க்கப்படுகிறது.







### ஆய்வகங்கள்

டேனிடா திட்டத்தினைச் செயல்படுத்தும் தென்னார்க்காடு, சேலம் மாவட்டங்களில் உள்ள வட்டார அளவிலான ஆரம்பச் சுகாதார நிலையங்களில் ஆய்வகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. நோய்களைக் கண்டறியத் தேவையான இரத்த, மல, சிறுநீர்ப் பரிசோதனைகளைச் செய்திட ஆய்வகங்கள் அமைக்கப்பட்டு ஆண்டுதோறும் ஆய்வுகளுக்கான இரசாயன மற்றும் மூலப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன. கர்ப்பிணிகள், தாய்மார்கள், குழந்தைகளுக்கு இந்த ஆய்வக வசதி பெரிதும் நன்மை பயக்கின்றது. இப்பரிசோதனைகளுக்காக, கிராம மக்கள் வெகுதூரம் சென்று அவதியுறும் நிலை தவிர்க்கப்படுகிறது.

### கை கொடுக்கும் பை

கிராமப்புறங்களில் பிரசவங்கள் நடத்தும் தாதியர்களுக்கு, நோய்க் கிருமிகளால் தாய்க்கும், சேய்க்கும் பாதிப்பு ஏற்படாதபடி, தூய்மையான முறையில் நடத்தப் பயிற்சி தரப்பட்டிருக்கிறது. இருப்பினும் பிரசவங்கள் வீட்டிலேயே நடைபெறுகிறபொழுதும், பயிற்சிபெற்ற தாதியரோ, பயிற்சி பெறாத தாதியரோ உறவினர்களில் மூத்த பெண் ஒருவரின் பிரசவம் நடத்துகிற பொழுது, சுத்தமான முறையில் பிரசவம் நடக்க ஏதுவாக ஒரு எளிய சாதனம் - பாலீதீன் பை ஒன்று வழங்கப்படுகிறது. அப்பையில், பிரசவம் நடத்துபவர்கள் கைகளைக் கழுவிக் கொள்ள சோப் துண்டு ஒன்றும், தொப்புள் கொடியை வெட்டிடக் கிருமிகள் படாத பிளேடு ஒன்றும், கொடியினை வெட்டிய பின் அதைக் கட்டக் கெட்டியான நூல் துண்டு ஒன்றும், ஒரு லிட்டர் தண்ணீர் கலந்து உபயோகிக்கும் திரவம் 10 மில்லியும், கட்டுப் போடத் தேவையான பஞ்சு, கார்ச்சீலை, துணி போன்ற பொருட்கள் தேவையான அளவிலும் உள்ளன.

கர்ப்பிணிப் பெண்களிடம் இது நேரிடையாகக் கடைசி இரண ஜன்னித் தடுப்பு ஊசி போடும்பொழுது தரப்படுகிறது. அவர்களிடம் இருப்பதால் யார் எந்த இடத்தில் எப்போது பிரசவம் நடத்தினாலும் நுண் கிருமிகள் தாக்காத வகையில் சுத்தமான முறையில் பிரசவம் பார்ப்பது உறுதி செய்யப்படுகிறது. இந்த எளிய சாதனத்தின் அடக்கம் ரூ.5 மட்டுமேயானாலும், அதனால் காப்பாற்றப்படும் உயிர்கள் விலை மதிப்பற்றவை அன்றோ!

### நல்வாழ்வுப் பணிகளுக்கான மனித வள மேம்பாட்டு நிறுவனம்

நல்வாழ்வுப் பணிகள் மக்களுக்கு உரிய நேரத்தில் (தேவையான தக்க அளவில் குறையாமல்) முறையாக, நல்ல தரத்தோடு ஆற்றப்படத் தேவையான பணியாளர்களை நியமித்து, அவர்களுடைய பணி ஊதியத்தினை அரசே ஏற்கும் காலகட்டம் வரை டேனிடா திட்டம் ஏற்றுக் கொண்டது.

### பயிற்சி

நல்வாழ்வுப் பணிப் பயிற்சியில் பெரிய மாறுதல்களைப் புரட்சிகரமாக்கிய பெருமையும் டேனிடாவிற்கு உண்டு. சுகாதாரக் களப்பணியாளர்கள், மேற்பார்வையாளர்களுக்குத் தேவையான பயிற்சியினைப் புதிய அணுகு முறையில் நடத்தியது. மருத்துவ அலுவலர், பொது சுகாதாரச் செவிலியர், சுகாதார மேற்பார்வையாளர் கொண்ட மாவட்டப் பயிற்சிக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டன.

இந்த அணுகுமுறையினால் வகுப்பு அறை விரிவுரைகள் தவிர்க்கப்பட்டு தேவையான திறமைக் கூர்மைப் பயிற்சி அதிகப்படுத்தப்பட்டது. இந்தப் புதிய முறையினால் பயிற்சியின் நன்மைகள் எண்ணிக்கையில் பெருகின. களப்பணியாளர்களுக்குச் செயல் திறன் கூடியதையும் கண்கூடாகக் காண முடிந்தது.

இந்தப் புதிய அணுகுமுறை நடுவண் அரசின் பயிற்சிக் கொள்கையில் இடம் பெற்றதோடு அல்லாமல், மற்ற மாநிலங்களில் மாவட்டப் பயிற்சிக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்று பெருமையோடு தெரிவிக்கலாம்.

மேலும், தென்னார்க்காடு மாவட்டத்தில் இயங்கி வந்த மூன்று மாவட்டப் பயிற்சிக் குழுக்களை ஒருங்கிணைத்து மனித வள மேம்பாட்டு நிலையம் ஒன்று விழுப்புரத்தில் நிறுவப்பட்டுள்ளது. அந்நிலையம் நல்வாழ்வுப் பணி ஆற்றுகிற அனைவர்க்கும் தாதியர் முதல் மருத்துவ அலுவலர் வரையில் அனைவர்க்கும் பணி இடைப் பயிற்சி தரும் பெரும் பொறுப்பினை ஆற்றி வருகின்றது.

இந்த மனிதவள மேம்பாட்டுப் பயிற்சி நிலையமும் இனி வரும் காலத்தில் மற்ற மாவட்டங்களுக்கு முன் மாதிரியாக ஆகும் வாய்ப்பு இருக்கிறது என்ற பெருமையும் இத்திட்டத்திற்கு உண்டு.

### சீரமைக்கப்பட்ட நல்வாழ்வுச் சேவைத் தகவல் முறை

மற்ற நல்வாழ்வுப் பணிகள் சீரமைத்துப் பரிசோதனை செய்வது போலவே, நல்வாழ்வுச் சேவைத் தகவல்களை எளிமையான முறையில் - முழுமையான தகவல்கள் சேகரிக்கும் முறை சீரமைக்கப்பட்டது. பதிவேடுகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டு எளிமை ஆக்கப்பட்டது. தாய் சேய் நலப்பணிக்கும் அட்டையில் சேவைத் தகவல்கள் பதிவு செய்யும் முறையும், மாதாந்தர அறிக்கைப் படிவங்களையும், அத்தகவல்கள் கணிப்பொறியில் (கம்ப்யூட்டரில்) தொகுக்கப்படும் புதிய தொகுப்பு முறையும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இந்தப் பரிசோதனைத் திட்டம் வெற்றி பெற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் இறுதி விளைவுகள் நம் மாநிலத்தின் நல்வாழ்வுத் துறைக்குப் பெரும் உதவியாக இருக்கக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதுவும் டேனிடாவின் சாதனைகளில் ஒன்றாகும்.

### கல்வித் தகவல் தொடர்புப் பிரிவு

நல்வாழ்வுப் பணிகள் மக்களிடையே நல்ல சுகாதாரப் பழக்கங்களை நடைமுறையில் கொண்ட வாழ்க்கை முறையை ஏற்படுத்த வேண்டும். அதற்கு நல்வாழ்வுச் சேவைகள் மட்டும் போதாது. மக்களுக்குத் தேவையான நல்வாழ்வுத் தகவல்களும், நல்வாழ்வுப் பழக்கங்களுக்குத் தேவையான கல்வியும் தரப்பட வேண்டும். நலக் கல்வியினைத் திறம்பட ஆற்றி சமுதாய மற்றும் வட்டார அளவிலான ஆரம்பச் சுகாதார நிலையங்களில், வட்டாரக் கல்வி, தகவல் தொடர்புப் பிரிவுகள் ஏற்பட்டுள்ளன.

தேவையான உடனடியாக கல்வித் தகவல் கொண்ட பட்டியல்கள் பொருட்கள் தயாரிக்கவும் மற்றும் சிறு பழுதுகள் நீக்கவும் ஆண்டுதோறும் ரூ.500 வழங்கப்பட்டுள்ளது.

200 துணைச் சுகாதார நிலையங்களில் கிராமச் சுகாதாரக் குழுக்கள்



குடிசை மாற்றுவாரியத் தலைவராகவும், தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவன மேலாண்மை இயக்குநராகவும், தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத் தலைவராகவும் திறம்படப் பணிபுரிந்தமைக்காகப் பெங்களூரில் (10.4.93) திருமதி ச.வெ.கி. சுலோசனா சம்பத் அவர்களுக்கு விஜய ரத்னா விருது வழங்கப்பட்டது.

## இதயங்கனிந்த நல்வாழ்த்துக்கள்!



விவசாயிகளே!

உங்கள் நிலை உயர வேண்டாமா?

உணவு உற்பத்தியைப் பெருக்கிடவும்,

உழவுத் தொழிலுக்கு உறுதுணையாகவும்,

மீன் வளர்ப்பினைத் தொடங்கி

நாட்டின் வளத்தைப் பெருக்கிடுவோம்!

மீன் உற்பத்தியைப் பெருக்கிடுவீர்!

அதிக லாபம் பெற்றிடுவீர்!

உணவுப் பற்றாக்குறையை நீக்க

மீன்வளர்ப்பை ஏற்றிடுவீர்!

புரதச்சத்துக் குறையைப் போக்க

மீன் அதிகம் உண்ணுங்கள்!

உணவிற்கு மீன்-

உல்லாசத்திற்கு மீன்-

உடல் வலிவிற்கு மீன்-

அதிக வருவாய்க்கு மீன்!

—மேலும் விவரங்கட்கு—

தென்னார்க்காடு மாவட்ட

மீன் வளர்ப்போர் வளர்ச்சி முகமை,

கடலூர்-607 003.

**வி.எஸ். இராதாகிருஷ்ணன்,**
தலைமை நிர்வாக அலுவலர்,
F.F.D.A. கடலூர்

**ஜி. இராமகிருஷ்ணன், இ.ஆ.ப.,**
பெருந்தலைவர்/மாவட்ட ஆட்சித் தலைவர்,
F.F.D.A., கடலூர்.





# நீரின்றி அமையாது...

தென்னார்க்காடு மாவட்டம் தமிழ் நாட்டின் வடகிழக்குப் பகுதியில் அமைந்துள்ள ஒரு கடற்கரை மாவட்டம் ஆகும். தமிழ்நாட்டின் பின் தங்கிய மாவட்டங்களுள் ஒன்றாக இம்மாவட்டமும் அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது. செஞ்சி மற்றும் கல்வராயன் மலைக்குன்றுகள் இம் மாவட்டத்தின் முக்கிய மலைப்பகுதிகளாகும். இவை நீங்கலாக மற்ற பகுதிகள் பெரும்பாலும் சமதளமாகவே உள்ளன. இம்மாவட்டத்தின் நிலப்பரப்பு தென் கிழக்கு அல்லது கிழக்கு நோக்கி மிகவும் நிதானமாகச் சரிந்துள்ளது.

இம்மாவட்டத்தின் வழியே செல்லும் முக்கிய நதிகள் தென் பெண்ணை, கோமுகி, மணிமுத்தாறு, வெள்ளாறு, கெடிலம், வராக நதி ஆகியவையாகும். கொள்ளிடமும், வெள்ளாறும் இம் மாவட்டத்தின் தெற்கு எல்லையாக அமைந்துள்ளன. இந்த ஆறுகள் அடுத்த மாநிலத்தில் அல்லது மாவட்டங்களில் உருவெடுத்து, ஓடி, இம்மாவட்டத்தில் முடிந்து கடலுடன் கலக்கின்றன. இந் நதிகள் உருவெடுத்து ஓடும் மாநிலங்கள் அல்லது மாவட்டங்களில் இந்நதிகளின் குறுக்கே கட்டப்பட்ட அணைகளாலும், தலைமை நீர்ப் பிடிப்பு இடங்களில் பெய்யும் குறைவான மழையாலும் இந்நதிகளில் போதிய அளவு நீர் வரத்து இருப்பதில்லை.

இம்மாவட்டத்தின் மொத்த நிலப் பரப்பில் பெரும்பகுதி மலையும், மலையைச் சார்ந்த பகுதியுமாகும். எஞ்சிய பகுதி கடலைச் சார்ந்த பகுதியாக இருக்கின்றது. மலையிலும், மலையைச் சார்ந்த பகுதிகளிலும் நிலத்தடி நீர் வளம் இல்லையென்றே கூறலாம். கடலைச் சார்ந்த பகுதியில் கிடைக்கும் நிலத்தடி நீரில் கடல் நீரும் கலந்து விடுவதால் அவை வீட்டு உபயோகத்திற்கு ஏற்றதாக இருப்பது இல்லை.

மேலும் பல ஆண்டுகளாக இம் மாவட்டத்தில் தொடர்ந்து நிலவும் வறட்சியின் கொடுமையால் நிலத்தடி நீரின் அளவு நாளுக்கு நாள் பெரிதும் குறைந்து வருகின்றது. இம்மாவட்டத்தில் உள்ள நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் நிலக்கரி எடுக்க நிலத்தடி நீரை மிக ஆழத்தில் இருந்து அதிக அளவில் வெளியேற்றுவது, விவசாயம் மற்றும் பெருகி வரும் தொழிலகங்களின் தேவைக்குச் சமீப காலங்களாக நிலத்தடி நீரையே அதிகம் பயன்படுத்துவது போன்ற செயல்கள் இம்மாவட்டத்தின் நிலத்தடி நீர் வளத்தைப் பெரிதும் பாதித்துள்ளன.

இத்துணை இடர்ப்பாடுகளுக்கு இடையேயும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தென்னார்க்காடு மாவட்டத்தில் மிகச் சிறந்த முறையில் பணியாற்றி., இங்குள்ள மக்களின் குடிநீர்த் தேவையை நிறைவு செய்து வருகிறது. பல ஆண்டுகளுக்கு முன் நரம்புச்சிலந்தி என்ற குடிநீரால் பரவும் கொடிய தொற்றுநோய் அதிகம் உள்ள மாவட்டங்களில் தென்னார்க்காடு மாவட்டமும் ஒன்று என்று அறிவிக்கப்பட்டிருந்தது. தற்பொழுது இம் மாவட்டத்தில் அந்நோய் முழுவதும் அழிக்கப்பட்டுள்ளதற்கு முக்கியக் காரணம் அப்பகுதிகளில் பாதுகாக்கப் பட்ட குடிநீர் அளிக்கப்பட்டதே ஆகும்.

**கோ. இராஜாங்கம்**
மேற்பார்வைப் பொறியாளர்
தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்
கடலூர்

**மக்கள் தொகையும் குடிநீர்த் தேவையும்**

இம்மாவட்டத்தில் மொத்தம் சுமார் 48,71,874 மக்கள் வசிக்கின்றார்கள். இவர்களில் கிராமங்களில் மட்டும் சுமார் 38,71,521 பேர் இருக்கின்றார்கள். மற்றவர்கள் நகரங்களில் உள்ளனர்.

நகரங்களில் உள்ள மக்கள் தங்களின் அன்றாட அனைத்து குடிநீர்த் தேவைக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீரையே எதிர் பார்க்கின்றார்கள். ஆனால் கிராமங்களில் வாழும் மக்களுக்கோ பருக மற்றும் சமைக்க மட்டுமே பாதுகாக்கப்பட்ட குடிநீர் அத்தியாவசியமாகத் தேவைப்படுகின்றது. நகரங்களில் வாழும் மக்களுக்கு நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு குறைந்தது 70 முதல் 90 லிட்டர் பாதுகாக்கப் பட்ட குடிநீரும், கிராமங்களில் வாழும் மக்களுக்கு நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு குறைந்தது 40 லிட்டர் பாதுகாக்கப்பட்ட குடிநீரும் வழங்கப்பட வேண்டி உள்ளது. இதன்படி கணக்கிட்டால் இம்மாவட்டத்தில் வாழும் அனைத்து மக்களின் முழுத் தேவையை நிறைவு செய்ய நாள் ஒன்றுக்கு 225 மில்லியன் லிட்டர் பாதுகாக்கப்பட்ட குடிநீர் தேவையாய் உள்ளது. இதில் தற்பொழுது 158 மில்லியன் லிட்டர் குடிநீரே வழங்கப்படுகிறது. எஞ்சிய குறையை நிறைவு செய்யத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தீவிர முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

**நகரங்களில் குடிநீர் நிலைமை**

இம்மாவட்டத்தில் நெய்வேலி நகரியம்

நீங்கலாக 7 நகராட்சிகளும் 7 நகரப் பேரூராட்சிகளும், மற்றும் 24 ஊரகப் பேரூராட்சிகளும் உள்ளன. இவற்றுள் இன்று அனைத்து நகராட்சிகள், நகரப் பேரூராட்சிகள் மற்றும் 22 ஊரகப் பேரூராட்சிகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி செய்து கொடுக்கப் பட்டுள்ளது. எஞ்சிய 2 ஊரகப் பேரூராட்சிகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி செய்து தர ஆவன மேற்கொள்ளப் பட்டுள்ளது.

நகரங்களில் உள்ள வசதிகளிலும், நாகரீகத்திலும், மோகம் கொண்டு அங்கு குடியேறும் மக்களாலும், நகரங்களில் வாழும் மக்கள் பாதுகாக்கப்பட்ட குடிநீரையே தங்களின் அன்றாட அனைத்து உபயோகத்திற்கும் பயன் படுத்துவதாலும், மக்கள் பெருக்கத்தாலும் குடிநீர் வசதி அளிக்கப்பட்ட பல நகரங் களில் தற்பொழுது குடிநீர்ப் பற்றாக்குறை அதிகரித்துக் கொண்டே இருக்கின்றது.

இம்மாவட்டத்தில் இவ்வாண்டு (1992-93) பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதியே இல்லாத அரகண்டநல்லூர், மரக்காணம், வடலூர் ஆகிய நகரங் களுக்கு ரூ.121.24 இலட்சங்கள் மதிப்பீட்டில் குடிநீர் வசதி செய்து கொடுக்கப்பட்டு அஃது சுமார் 36,000 மக்களுக்குப் பயன் அளிக்கின்றது. மேலும் விருத்தாசலம் (வட பகுதி-ஒன்று) திண்டிவனம் ஆகிய குடிநீர்ப் பற்றாக் குறை உள்ள நகரங்களுக்கு ரூ.206.41 இலட்சங்கள் மதிப்பீட்டில் குடிநீர் விரி வாக்கத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு அதன்மூலம் 78,600 மக்கள் பயன் பெறுகின்றனர்.

இவை நீங்கலாக இன்று வரை பாது காக்கப்பட்ட குடிநீர் வசதியே இல்லாமல் இருந்த செஞ்சி, அனந்தாபுரம், சேத்தியா தோப்பு, மேல்பட்டாம்பாக்கம், கங்கை கொண்டான், இலால்பேட்டை ஆகிய நகரங்களுக்கு ரூ.636.78 இலட்சங்கள் மதிப்பீட்டில் புதிய பாதுகாக்கப்பட்ட குடி நீர்த் திட்டங்களும், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி இருந்தும் அது பற்றாக் குறையாக இருந்த காட்டுமன்னார் கோயில் நகரத்திற்கும் ரூ.98.3 இலட் சங்கள் மதிப்பீட்டில் குடிநீர் விரிவாக்கத் திட்டமும் தற்பொழுது செயல்படுத்தப் படுகின்றன. இவை வரும் நிதியாண்டு களில் அரசு ஒதுக்கும் நிதி நிலைக்கு ஏற்ப விரைவுபடுத்தப்பட்டு மக்களின் பய னுக்குக் கொண்டுவரப்படும்.

இம்மாவட்டத்தில் எடுத்துக் கொள் ளப்படும் நகர குடிநீர்த் திட்டங்கள் பெரும்பாலும் ஆயுள் காப்பீட்டுக் கழக

***

**• தமிழ்நாட்டைப் பொறுத்தவரை முதன் முதல் ஆங்கிலேயர்களால் அமைக்கப்பட்ட மாவட்டம் தென்னார்க்காடு மாவட்டம்தான். ‘ஆர்க்காடு’ என்ற பெயரே அவர்களால் தான் சூட்டப்பட்டுள்ளது என்கிறது வரலாறு.**

***

நிதி உதவியுடன் மாநில அரசின் நிதி உதவியையும் சேர்த்து நிறைவேற்றப் படுகின்றன. இவை நீங்கலாக இம் மாவட்டத்தில் உள்ள கிள்ளை, பெண்ணாடம், வளவனூர், திட்டக்குடி, வடக்குநந்தல் ஆகிய ஊரகப் பேரூராட்சி களுக்கு உலக வங்கியின் நிதி உதவியுடன் குடிநீர்த் திட்டங்களும், பண்ணுருட்டி நகராட்சியில் பாதுகாக்கப்பட்ட குறைந்த செலவிலான துப்புரவுத் திட்டமும் (Low cost sanitation programme) நிறைவேற்றப் பட்டுள்ளன.

**குடிநீர் விரிவாக்கத் திட்டம்**

இவ்வாண்டு முதன் முறையாக கங்கைகொண்டான் நகரப் பேரூராட் சிக்கு ‘ஹட்கோ’ நிறுவனத்திடம் இருந்து கிடைக்கும் நிதி உதவியுடன் மாநில அரசின் நிதியுதவியையும் சேர்த்து அப் பேரூராட்சிக்குக் குடிநீர் விரிவாக்கத் திட்டம் செயல்படுத்தப்படுகின்றது.

இம்மாவட்டத்தில் நிறைவேற்றப்படும் நகர குடிநீர்த் திட்டங்களில் செஞ்சி அனந்தாபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் மிகவும் சிறப்புத்தன்மை மிக்கது. செஞ்சி, அனந்தாபுரம் நகரங்களிலும் அவைகளை அடுத்த பல சிற்றூர்களிலும் வாழும் மக்கள் பாதுகாக்கப்பட்ட குடிநீர் பெறு வதைத் தங்களின் பகற்கனவாகக் கருதி வந்தனர். அவர்களின் ஏக்கத்தைத் தீர்க்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தீவிர ஆய்வு செய்து சுமார் 50 கி.மீ. தொலைவில் உள்ள தென்பெண்ணை யாற்றில் இருந்து நீர் கொண்டு வந்து, இவ்விரு நகரங்களில் உள்ள மக்களுக் கும், மற்றும் நீர் கொண்டு வரும் வழி யோரங்களில் உள்ள 21 சிற்றூர் களுக்கும், ரூ.498 இலட்சங்கள் மதிப் பீட்டில் திட்டம் நிறைவேற்றப்படுகிறது. இத்திட்டம் இந்த ஆண்டு இறுதிக்குள் முடிவடைந்து அதனை ஆவலுடன் எதிர் பார்த்துள்ள அனைத்து மக்களுக்கும் அது பயனளிக்கும் என்று எதிர்பார்க்கப்படு கின்றது.

சிதம்பரம் நகராட்சி, கள்ளக்குறிச்சி, தியாகதுருகம் உளுந்தூர்ப்பேட்டை நகரப் பேரூராட்சிகள் மற்றும் சின்னசேலம் ஊரகப் பேரூராட்சி ஆகிய நகரங் களுக்குக் குடிநீர் வழங்கும் ரூ.1,306 இலட்சங்கள் மதிப்புள்ள திட்ட மதிப் பீடுகள் அரசின் அனுமதிக்காக அனுப்பப் பட்டுள்ளன.

இவற்றுள் சின்னசேலம், கள்ளக் குறிச்சி, தியாகதுருகம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த தாகும். இந்த நகரங்களுக்குப் போதிய பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப் பல





ஆண்டுகளாகக் கடும் முயற்சி எடுத்து, தற்பொழுது சுமார் 55 கி.மீ. தூரத்தில் உள்ள மணலூர்ப்பேட்டைஅருகே தென் பெண்ணையாற்றை நீராதாரமாகக் கொண்டு இந்நகரங்களுக்குக் குடிநீர் வழங்க ரூ.911.50 இலட்சங்கள் மதிப் பீட்டில் திட்டம் தயாரித்து அரசு அனு மதிக்கு அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டம் விரைந்து செயலாக்கப்பட்டு உடன் பயனுக்குக் கொண்டு வரப்பட்டால் இம்மூன்று நகரங்களில் வாழும் மக்க ளோடு, போதிய பாதுகாக்கப்பட்ட குடிநீரை அடைவதைத் தங்களின் பகற் கனவாக இந்நாள் வரை எண்ணியிருந்த 40 வழியோரச் சிற்றூர்களில் வாழும் அனைத்து மக்களின் தேவையும் நிறைவு அடையும்.

தற்பொழுது விழுப்புரம் மற்றும் பண்ணுருட்டி நகராட்சிகளில் குடிநீர்த் திட்ட விரிவாக்கம் ஆய்வு செய்யப்பட்டு, திட்ட மதிப்பீடு அரசின் அனுமதிக்கு இவ்வாண்டுக்குள் அனுப்பி வைக்கப்பட இருக்கின்றது. மேலும் கடலூர் நகராட்சி மற்றும் திருக்கோயிலூர் பேரூராட்சிக்குக் குடிநீர்த் திட்ட விரிவாக்கப்பணி ஆய்வில் உள்ளது. இவை நீங்கலாக விழுப்புரம் மற்றும் கடலூர் நகராட்சிப் பகுதியில் பாதுகாக்கப்பட்ட பாதாளச் சாக்கடை வசதி செய்ய ஆய்வுப் பணிகள் ஆரம் பிக்கப்பட்டுள்ளன.

**கிராமங்களில் குடிநீர் நிலைமை**

கிராமங்களில் வாழும் மக்களில் பெரும்பாலோர் குடிநீரால் பரவும் கொடிய தொற்று நோய்களால் அதிகம் பாதிக்கப்படுகின்றார்கள் என்பதை நன்கு உணர்ந்த மத்திய மற்றும் தமிழக அரசுகள் கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாகத் தீவிர முயற்சிகள் எடுத்துக் கிராமங்களில் வாழும் அனைத்து மக்களுக்கும் நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு குறைந்தது 40 லிட்டர் பாதுகாக்கப்பட்ட குடிநீரானது வழங்க வேண்டும் என்று பல திட்டங் களை அறிவித்து, செயல்படுத்தியும் வரு கின்றது. ஆண்டுதோறும் இப்பணிக்கு ஒதுக்கப்படும் நிதி ஆதாரமும் கடந்த 10 ஆண்டுகளில் பல மடங்கு பெருகி உள்ளது.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் இவ்வாய்ப்பை நன்கு பயன்படுத்தி, தனது சீரிய முயற்சியால், தன்னிடத்தே உள்ள சிறந்த பணியாளர்களால் பணியைத் தீவிரப்படுத்தி கிராம மக்களின் குடிநீர்த் தேவையை நிறைவு செய்வதில் இந்தியா வில் உள்ள அனைத்து மாநிலங்களிலும் தமிழ்நாட்டை முதன்மையான - மற்றும் முன்னோடி மாநிலமாகத் திகழச் செய் கிறது.

தென்னார்க்காடு மாவட்டத்தில் 35 ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 1,766 ஊராட்சிகளில் 5,335 ஊரக சிற்றூர்கள் உள்ளன. அனைத்துச் சிற்றூர்களிலும், ஒவ்வொரு சிற்றூரிலும் குறைந்தது ஒரு குடிநீர் ஆதாரமாவது உருவாக்கப்பட்டு, குடிநீர் ஆதாரமே உருவாக்கப்படாத சிற்றூர் இம்மாவட்டத் தில் எதுவுமே இல்லை என்ற பெருமை யைத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தேடித்தந்துள்ளது. இருப்பினும் சூழ்நிலை மாறுபாட்டினால் பாதிக்கப்பட்டு அவை அப்பகுதியில் வாழும் மக்களுக்கு முழுப் பயனை அளிக்கவில்லை.

இந்நிலையைக் கண்டறிந்து ஆவன செய்யத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை அனைத்துச் சிற்றூர்களையும் ஆய்வு செய்து அவ்வாய்வின் அடிப்படையில் குறைபாடுகளை நிறைவு செய்ய முயற்சிகள்

***

**• தென்னார்க்காடு மாவட்டத்தில் கிடைக்கும் கனிமச் செல்வங்களில் குறிப்பிடத்தக்கவை கண்ணாம்புக்கல், களிமண், தரமான சைனா களிமண், துத்தநாகம், ஈயம், செம்புப் படிவங்கள், பழுப்பு நிலக்கரி, கிரானைட் ஆகியவைகளாகும்.**

**• கடலூரில் உள்ள சரகவதி கானசபா மூலம் இசை, நாடகக் கலை வளர்ச்சி பெற்று வருகிறது.**

***

மேற்கொள்கின்றது. இதன்படி கடந்த 1990-ஆம் ஆண்டு நடத்திய ஆய்வின் அடிப்படையில் இம்மாவட்டத்தில் உள்ள அனைத்துச் சிற்றூர்களில், 1.4.92 நில வரப்படி, 2,223 சிற்றூர்கள் முழுமை யாகக் குடிநீர் வசதியைப் பெற்றுள்ளன என்று கண்டறியப்பட்டுள்ளது. எஞ்சிய 3,112 சிற்றூர்களில் குடிநீர் வசதிகள் இருந்தபோதிலும் அவை அங்குள்ள மக்களின் முழுத் தேவையை நிறைவு செய்யாததால் அவைகளில் குடிநீர் பற்றாக்குறை இருப்பதாகக் கணக்கிடப் பட்டுள்ளது.

குடிநீர்ப் பற்றாக்குறை உள்ள 3,112 சிற்றூர்களில் நிலவும் குடிநீர் பற்றாக் குறையை நிறைவு செய்ய ஆண்டுதோறும் பற்றாக்குறைத் தன்மையின் அடிப்படையில் முன்னுரிமை அளித்து, சிற்றூர்கள் தேர்வு செய்யப்பட்டு, [illegible] ஆண்டுகளில் முழு அளவு குடிநீர் வசதி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் படி. 1992-93-இல், 386 குடிநீர்ப் பற்றாக்குறை உள்ள சிற்றூர்களைத் தேர்வு செய்து குடிநீர்த் திட்டங்கள் செயலாக்கப்பட்டன. அவற்றுள் 228 சிற்றூர்கள் இவ்வாண்டிலேயே முழுப் பயனுக்குக் கொண்டு வரப்பட உள்ளன. எஞ்சிய சிற்றூர்களுக்கும் இந்த ஆண்டு இறுதிக்குள் (1993- 94 ) முழு அளவு குடிநீர் வசதி செய்து கொடுக்கப்படும். இத்துடன் வரும் நிதியாண்டில் (1993-94) மேலும் 237 குடிநீர்ப் பற்றாக்குறை உள்ள சிற்றூர்களில் குடிநீர்த் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப் பட்டு அவைகளில் 158 சிற்றூர்களுக்கு 1993-94-ஆம் ஆண்டு இறுதிக்குள்ளாக முழு அளவு குடிநீர் வசதி செய்து கொடுத்து அவை அம்மக்களின் முழு பய னுக்கும் கொண்டு வரப்படும்.

**சிறப்புத் திட்டங்கள்**

மாநில அரசு ஆண்டுதோறும் வரை யறுக்கும் வளர்ச்சிப் பணிகளுக்கான பயன் அனைத்து மக்களுக்கும் பகிர்ந் தளிக்கப்படவேண்டும் என்ற சீரிய நோக் கத்தோடு 1991- 92-ஆம் ஆண்டு அரசு நிர்ணயித்த வளர்ச்சிப் பணிகளுக்கான முழு ஒதுக்கீடும், அனைத்து ஒன்றியங் களுக்கும் சமமாகப் பகிர்ந்தளிக்கச் சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் (Special self sufficiency programme) ஒன்றை அறி வித்தது. இத்திட்டத்தின் கீழ் தென்னார்க் காடு மாவட்டத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளில் குடிநீர்த் திட்டங்களுக்காக ரூ.669.63 இலட்சங்களை ஒதுக்கி 426 சிற்றூர்களுக்குக் குடிநீர் வசதி செய்ய வகை செய்துள்ளது.

இவை நீங்கலாக இம்மாவட்டத்தில் டென்மார்க் நாட்டு அரசு உதவியுடன் பரங்கிப்பேட்டை மற்றும் மரக்காணம் ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள அனைத்து ஊரகச் சிற்றூர்களுக்கும் பாதுகாக்கப் பட்ட குடிநீர் வசதியும், குறைந்த செல விலான பாதுகாக்கப்பட்ட கழிப்பிடங் களும் அமைக்கும் திட்டங்கள் செயல் படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டத் தின் கீழ் இவ்விரு ஒன்றியங்களில் குடிநீர் வசதிக்கு மட்டும் சுமார் ரூ.300 இலட் சங்கள் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

மத்திய அரசு சில ஊரக கிராமங்கள் பாதுகாக்கப்பட்ட குடிநீரை அடைய வாய்ப்பே இல்லாமல் இருப்பதை உணர்ந்து, ராஜீவ் காந்தி தேசிய குடிநீர் இயக்கம் (Rajiv Gandhi National Drinking



# மனமாற்றம் முக்கியம்

சட்டங்களின் மூலம், அரசின் அதிகாரத்தைப் பயன்படுத்தி மதுவிலக்குக் கொள்கைகளை எவ்வளவு தீவிரமாகச் செயல்படுத்த முடியுமோ, அவ்வளவு தீவிரமான நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டுள்ளது. இருப்பினும் குடிப்பழக்கம் என்பது ஒரு தனிப்பட்ட நபரின் மனநிலையைப் பொறுத்துத்தான் அமைவது. அதனைச் சட்டங்களினால் மட்டுமே தடுத்து நிறுத்திவிட முடியாது. உண்மையில் ஒருவர் குடிப்பழக்கத்தை நிறுத்த வேண்டுமானால் அதற்கு மனமாற்றம் அவசியம். அந்த மனமாற்றம் ஏற்படுவதைத் தூண்டும் வகையில் அவர்களுக்கு உதவினால் நிச்சயமாகத் தாங்கள் கொண்டுள்ள தீய பழக்கத்தின் கொடுமைகளை உணர்ந்து, அவர்கள் அதனை நிரந்தரமாகக் கைவிட வாய்ப்புகள் ஏற்படும்.

Water Mission) என்ற ஒரு சிறப்புத் திட்டத்தைச் சில ஆண்டுகளுக்கு முன் அறிவித்து, அதில் தென்னார்க்காடு மாவட்டத்தையும் ஒன்றாக இணைத்துள்ளது. நீராதாரமற்ற கடினமான பகுதிகளில் பல மத்திய மாநில நிறுவனங்களின் கூட்டு முயற்சியால் ஆய்வு செய்து நீர் ஆதாரங்களை உருவாக்கி அதை அப்பகுதி மக்களின் நிரந்தர முழுப் பயனுக்குக் கொண்டு வருவதே இத்



திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின்கீழ் தென்னார்க்காடு மாவட்டத்திற்கு ரூ.231 இலட்சங்கள் மத்திய அரசு மானியமாகக் கொடுத்துள்ளது. அதில் 206 சிற்றூர்களுக்கு நீர் ஆதாரங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. உருவாக்கப்பட்ட அனைத்து நீர் ஆதாரங்களின் கொடு திறன் (Yield) மற்றும் தன்மை ஆகியவற்றை நன்கு ஆராய்ந்து அவற்றில் அதிகக் கொடு திறன் மற்றும் நல்ல தன்மையுடைய நீர் ஆதாரங்களைத் தேர்வு செய்து அவற்றைப் பயன்படுத்தி 100 சிற்றூர்களுக்குத் தெருக்களில் பொதுக் குழாய்கள் மூலம் குடிநீர் கிடைக்க வழி வகை செய்யப்பட்டுள்ளது. பாதுகாக்கப்பட்ட குடிநீர் உருவாக்க எந்தவித வசதியும் இல்லாத கடலோரச் சிற்றூர்களில் வாழும் மக்களின் அன்றாடக் குடிநீர்த் தேவையை நிறைவு செய்ய உவர்ப்பு நீரை நல்ல நீராக்கும் 9 இயந்திரங்களையும் (Desalination plant) ஒரு நடமாடும், உவர்ப்பு நீரை நல்ல நீராக்கும் இயந்திரத்தையும் (Mobile desalination plant) நிறுவி மத்திய அரசே தனது சொந்தச் செலவில் அவற்றைப் பராமரித்தும் வருகிறது.

கடந்த பல ஆண்டுகளாக இம்மாவட்டத்தில் உருவாக்கப்பட்ட பல திட்டங்களின் சில குடிநீர் ஆதாரங்கள் பொய்த்து விட்டதாலும் மற்றும் சில பழுதடைந்து உள்ளதாலும், அத்திட்டங்களைத் தக்க முறையில் பராமரிக்கப் போதிய நிதி வசதி இல்லாததால் அவை பயனற்றுப் பல மாதங்களாக, ஆண்டுகளாக இருந்தன. இக்குறையை நீக்க நீர் ஆதாரம் பொய்த்துவிட்ட திட்டங்களுக்கு இவ்வாண்டு 153 மாற்று ஆழ்துளைக் கிணறுகள் அமைத்துப் பயனுக்குக் கொண்டுவரப்பட உள்ளன.

மேலும், 63 திட்டங்கள் ரூ.36 இலட்சங்கள் மதிப்பீட்டில் பழுது நீக்கம் செய்யப்பட்டு மக்களின் உடனடிப் பயனுக்குக் கொண்டுவரப்பட உள்ளன.

மக்கள் தொகை பெருகி குடிநீர்த் தேவை அதிகரிக்கும் இன்றைய சூழ்நிலையில், புதிய தொழில் நுட்ப அணுகு முறைகள் மூலம் நீர் வளத்தைப் பாதுகாத்து, கிடைத்தற்கு மிகவும் அரிதாகிவிட்ட பாதுகாக்கப்பட்ட குடிநீரைச் சேகரித்து, இம்மாவட்டத்தின் அனைத்துப் பொதுமக்களின் தேவை அறிந்து, ஏற்ற நேரத்தில், தக்க இடத்தில் பகிர்ந்தளிக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் செயல் திட்டங்களைத் தீட்டியுள்ளது. வரும் ஒரு சில ஆண்டுகளுக்கு இம்மாவட்டத்தில் உள்ள அனைத்து மக்களுக்கும் முழு அளவு பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்க ஆவன செய்யப்படும்.



# தென்னார்க்காடு: சின்னச்சின்ன செய்திகள்

• கடலூரைத் தலைநகராகக் கொண்ட இந்த மாவட்டத்தின் பரப்பளவு 10,770 சதுர கிலோ மீட்டர் ஆகும்; கூடலூர் என்ற பெயரே நாளடைவில் கடலூர் ஆயிற்று எனப்படுகிறது.

• கடலூரில் அமைந்த செயின்ட் டேவிட் கோட்டையில் இருந்து கொண்டுதான், ஆங்கிலேயர் தமிழகத்தை அரசாண்டிருக்கிறார்கள்; பிரஞ்சுக்காரர்களால் அக்கோட்டை அழிக்கப்படாமல் இருந்திருக்குமானால், ஒருவேளை இன்றைக்குக் கடலூரே தமிழ்நாட்டின் தலைநகரம் என்ற தகுதியைப் பெற்றிருக்கக் கூடும்.

• தென்னார்க்காடு மாவட்டத்தில், ஆண்டுக்குச் சராசரி 1270 மில்லி மீட்டர் மழை பெய்கின்றது; கடலூர் வட்டத்தில் ஆண்டுக்குச் சராசரி 2000 மி.மீட்டர் மழை பெய்கிறது எனக் கணக்கிடப்பட்டுள்ளது. வடகிழக்குப் பருவக்காற்றே இந்த மாவட்டம் பெரிதும் மழைபெற உதவுகிறது. இம்மாவட்டத்தில் புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை ஆகிய மூன்று மாதங்களுமே மழைக்காலமாகும். மார்கழி, தை, மாசி, பங்குனி ஆகியவை பனி மாதங்கள்.

• தென்னார்க்காடு மாவட்டத்தில் மொத்தம் 6 வருவாய்க் கோட்டங்களும் 14 வட்டாட்சி அலுவலகங்களும், 5 வளர்ச்சிக் கோட்டங்களும், 35 ஊராட்சி ஒன்றியங்களும், 32 பேரூராட்சிகளும், 1,766 ஊராட்சிகளும் 2,389 உள் இடைக் கிராமங்களும், 2,391 கிராமங்களும் இருக்கின்றன. 7 நகராட்சிகள், 2 நகரியங்கள் இங்கு உண்டு.

• ஏறத்தாழ 370 கி.மீட்டர் தொலைவிற்குத் தென்னார்க்காடு மாவட்டத்தில் இருப்புப் பாதைகள் போடப்பட்டிருக்கின்றன; சென்னை-விழுப்புரம் (மெயின் லைன்), விழுப்புரம்-திருச்சிராப்பள்ளி, காட்பாடி-விழுப்புரம், விழுப்புரம்-புதுவை, கடலூர்-விருதாச்சலம், விருதாச்சலம்-சேலம் ஆகிய ஆறு இருப்புப்பாதைகளே அவை.

• இம்மாவட்டத்தில் தட்டுப்பாடின்றித் தண்ணீர் கிடைக்கச் செய்பவை - வீராணம் ஏரி, பெருமாள் ஏரி, முகலாறு ஏரி, புத்தனேந்தல் ஏரி, திருவதிகை ஏரி, வானமாதேவி ஏரி ஆகியவைகளும் - வெலிங்டன், வீடூர், திருவகீந்திரபுரம் நீர்த்தேக்கங்களுமேயாகும். கெடில நதி, பெண்ணையாறு, சங்கராபரணி, பரவனாறு, கொள்ளிடம், துரிஞ்சலாறு, செஞ்சியாறு போன்ற ஆறுகள் பலவும் இம்மாவட்டத்திற்கு வளஞ்சேர்க்கின்றன.

• கடலூர் முதுநகர்ப்பகுதியில் உள்ள துறைமுகம் மிகப் பழமையானது; இப்போது நடுத்தரத் துறைமுகம் என்ற அந்தஸ்துடன் செயல்படும் இதன் மூலம் இரும்புக் கனிகள், எரிபடிவங்கள் ஆகியவை முக்கிய ஏற்றுமதிப் பொருட்களாக இருக்கின்றன; கந்தகம், உரம், உணவு தானியங்கள் ஆகியவை முக்கிய இறக்குமதிப் பொருட்களாக இருக்கின்றன. பரங்கிப்பேட்டையிலும் ஒரு சாதாரணத் துறைமுகம் உண்டு.

# தேசிங்கு ராஜன்

செஞ்சிக்கோட்டையைப் பார்க்கும் நாம், அதிலிருந்து அரசாண்டவர்கள் வரலாற்றையும் அறிய உதவும் ஆய்வுக் கட்டுரை இது:

பொன். நடராசன்
தேர்வுநிலை வரலாற்று விரிவுரையாளர்
அ.அ. அரசினர் கலைக் கல்லூரி
விழுப்புரம்

தென்னிந்திய இடைக்கால வரலாற்றில் 12-ஆம் நூற்றாண்டில் தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள செஞ்சியை ஆனந்தக்கோன் என்பவர் ஆட்சி செய்தார். இவர் செஞ்சியின் முதல் அரசராவார். செஞ்சியின் வரலாறும் இவர் காலத்திலிருந்தே ஆரம்பமாகிறது.

இவருக்குப் பின் குரும்ப வம்சமும், 13-ஆம், 14-ஆம் நூற்றாண்டுகளில் ஹோசாலர்களும் செஞ்சியை ஆண்டனர். விஜய நகர அரசு தோன்றியவுடன் 15-ஆம் நூற்றாண்டு முதல் 17- ஆம் நூற்றாண்டு வரை செஞ்சி நாயக்கர்கள் விஜய நகரப் பேரரசின் கீழ் ஆண்டு வந்தனர். 1698-இல் செஞ்சியை அவுரங்கசீப்பின் மொகலாயப் படைகள் கைப்பற்றின(கி.பி. 1700- இல் அவுரங்கசீப் தாவூத்கான் என்பவரைக் கர்நாடக நவாப்பாக நியமித்தார்.

தாவூத்கான் கீழ் சொரூப்சிங் என்பவரை செஞ்சியின் நவாப்பாக நியமித்தார். இவர், 1700 முதல் 1714 வரை செஞ்சியை ஆட்சி செய்துவந்தார். அவருக்குப்பின் அவரது மகன் தேசிங்கு ராசன் என்பவர் 1714 சனவரியிலிருந்து அக்டோபர் வரை ஆட்சி புரிந்தார். ஆக மொத்தத்தில் தேசிங்குராசன் 10 மாதங்களே செஞ்சியை ஆட்சி புரிந்தார்.

**தேசிங்கின் இளமைப் பருவம்**

தேசிங்கின் இளமைப் பருவம் பற்றி பலவேறான கருத்துக்கள் கூறப்படுகின்றன. அவரது பெற்றோர், பிறப்பிடம், பெயர் பற்றி மாறுபட்ட கருத்துக்கள் உள்ளன.

புகழேந்திப் புலவரின் 'தேசிங்கு ராசன் கதை' என்ற நாட்டுப்புறப் பாடல் தேசிங்கின் தந்தை தேரணிராசன் என்றும் தாய் ராமாபாய் என்றும் கூறுகிறது. அதோடு தேரணிராசன் செஞ்சியின் அரசராக இருந்தபோது தேசிங்கு செஞ்சியில் பிறந்தார் என்றும் கூறுகிறது. ஆனால் 1714-1718-இல் இங்கிலாந்துக் கடிதம் தேசிங்கின் தகப்பனார் சொரூப்சிங் என்று கூறுகிறது. தேசிங்குராசன் தன்னுடைய தந்தையார் சொரூப்சிங் நோய்வாய்ப்பட்டு இறக்கும் தருவாயில் இருக்கும்போது வட இந்தியாவிலுள்ள பாண்டேல்கண்ட் என்ற தான் பிறந்த ஊரிலிருந்து முதன் முதலாக செஞ்சிக்கு வந்தார் என்று செஞ்சி வாசியான நாராயணப்பிள்ளை கூறுகின்றார். இவருடைய கருத்தே முதன்மைக் கருத்தாகக் கருதப்படுவதால் ஏற்புடையதாக உள்ளது.

தேசிங்கின் பெயர் பலவேறாக அழைக்கப்பட்டுள்ளது. மெக்கன்சி குறிப்புகள் செயசிங் என்றும், டெய்லர் என்பவர் தேசிங்கு என்றும், ராபர்ட் என்பவர் தேப்சிங் என்றும் குறிப்பிடுகின்றனர். ஆனால் பொதுவாக நாட்டுப்புறப் பாடல்களிலும், மற்றும் ஆங்கிலக் கடிதங்களிலும் தேசிங்கு என்றே அழைக்கப்படுகிறது. தேசிங்கின் பெற்றோர்கள் சொரூப்சிங்-ராமாபாய் என்று கூறப்படுகிறது. அவர் பிறந்த இடம் பண்டேல்கண்ட் என்றும் அவரது பெயர் தேசிங்கு என்றும் ராசபுத்திர வம்சத்தைச் சார்ந்தவர் என்றும் ஆதாரங்களின் அடிப்படையில் தெரிய வருகிறது.



கிருஷ்ணகிரி மலை



மலைமேலுள்ள சுப்பிரமணியசுவாமி கோயில்

தேசிங்கு 5 வயது இருக்கும்போது டெல்லி சென்று மொகலாயப் பேரரசிடமிருந்த அடக்க முடியாத பாராசாரிக் குதிரையை அடக்கி, குதிரையை அடக்க முடியாமல் சிறைப்பட்ட தன் தந்தையை மீட்டு வந்ததாக நாட்டுப் புறப்பாடல் கூறுகின்றது. ஆனால் நாராயணப் பிள்ளை தேசிங்குராசன் தன் தந்தை சொரூப்சிங் நோய்வாய்ப்பட்டு உடல் நலம் குன்றிவிட்டார் என்ற செய்திகேட்டு பாண்டேல்கண்டிலிருந்து ஒரு சிறிய படைத்துணையுடன் செஞ்சிக்குப் புறப்பட்டு வந்தார். வரும் வழியில் கர்நாடகத்திலுள்ள பிகானூரில் அந்நாட்டு அரசரைச் சந்தித்தார்.

தேசிங்கு தந்தை சொரூப்சிங் ஏற்கெனவே பிதானூர் அரசரிடம் செய்து கொண்டிருந்த உடன்படிக்கையின்படி அவருக்கிருந்த எதிரிகளை முறியடிக்க தேசிங்கு ஒத்துக்கொண்டார். பிதானூர் அரசரின் எதிரியான மராத்தியர்களோடு தேசிங்கு போரிட்டு வெற்றி அடைந்தார். தேசிங்கின் வீரத்தைப் பாராட்டி அவருக்கு ஒரு இலட்சம் பணமும், மிகச் சிறப்பு வாய்ந்த பாராசாரி என்ற ஒரு குதிரையும் கொடுக்கப்பட்டதாகக் கூறுகிறார்கள்.

நாட்டுப்புறப் பாடல்கள் தேசிங்கின் இளமைப் பருவச் செயல்களைத் தமக்கே உரித்தான முறையில் கதைப் பாடல் நாயகனை மிகைப்படுத்திக் கூறியுள்ளன. இவை ஏற்புடைத்தன்று.

**தேசிங்கின் ஆட்சிமுறை**

தேசிங்கு பிதானூரிலிருந்து செஞ்சிக்கு வந்து சேர்ந்த பின்னரே சொரூப்சிங் இறந்ததாக சீனுவாச சாஸ்திரி கூறுகின்றார். சொரூப்சிங் இறந்த பிறகு அவரது மகன் தேசிங்கு 1714 சனவரியில் ஆளுநராகப் பதவி ஏற்றார். பேரரசு மற்றும் ஆர்க்காடு நவாப்பின் அனுமதி பெறாமல் தேசிங்கு பதவியேற்றதை அவரது அமைச்சர்களும், மத்தியப் பேரரசும் விரும்பவில்லை.

எனவே ஆட்சியின் தொடக்கத்திலிருந்தே அரசுரிமை பற்றிய பிரச்சினை எழுந்தது. இதனால் ஆர்க்காடு நவாப் சதத்-உலா- கானுக்கும் தேசிங்குராசனுக்குமிடையே பகைமை தோன்றியது. செஞ்சி அமைச்சர்களும் தேசிங்கின் அரசுரிமையை ஏற்றுக்கொள்ள மறுத்தனர்.

மொகலாயப் பேரரசின் அதிகாரிகளும் அங்கீகாரம் செய்யவில்லை. தேசிங்கை அரசுரிமையைப் புதுப்பிக்க வேண்டினர். ஆனால் தேசிங்கு தன் தகப்பனார் சொரூப்சிங்கிற்கு அவுரங்கசீப் அரசுரிமை கொடுத்துள்ளார் என்றும் எனவே தான் யாரிடமும் உரிமை பெற வேண்டியதில்லை என்றும் கூறிவிட்டார். அக்காலத்தில் அரசுரிமையானது வாரிசு உரிமை பெற்றதாகும். தேசிங்கு பதவியேற்றபோது வழுதாவூர், திண்டிவனம், திருவாமாத்தூர், அரப்பூர், திருக்கோவிலூர், வேட்டவலம், கடலூர், திருப்பாப்புலியூர், மஞ்சகுப்பம் ஆகிய பகுதிகள் செஞ்சி அரசின் கீழ் இருந்தன.

பேரரசர் பகதூர்ஷா 1710-இல் சதத்-உலா-கான் என்பவரை ஆர்க்காடு நவாப்பாக நியமித்தார். அவர் தொடர்ந்து 1732 வரை ஆட்சியில் இருந்தார். சொரூப்சிங் 1710 முதல் 1714 வரை சதத்-உலா-கானின் கீழ் 4 ஆண்டு ஆட்சிபுரிந்துவந்தார். இச்சமயத்தில் கப்பப்பணம் நிலுவைத் தொகை செலுத்தாதது சம்பந்தமாக இருவருக்குமிடையே பிரச்சினை இருந்தது. இப்பிரச்சினையானது தேசிங்கு பதவியேற்றதும் மேலும் வளர்ந்தது. அச்சமயத்தில் டெல்லிப் பேரரசர் பரூக்ஷியார் நிலுவையிலுள்ள கப்பப்பணத்தை வசூலிக்குமாறு சதத்-உலா- கானுக்குச் செய்தி அனுப்பினார்.

பேரரசின் செய்தியைப் பின்பற்றி நவாப், தன்னுடைய செயலாளர் லாலா தோடர்மாலைக் கப்பப்பணம் குறித்தும் அரசுரிமை பற்றியும் அறிந்துவர செஞ்சிக்கு அனுப்பினார். தேசிங்கின் முரட்டுக் குணத்தை அறிந்திருந்த தோடர்மால் தயக்கத்துடனும் தக்க பாதுகாப்புடனும் சென்றார். செஞ்சியை அடைந்த தோடர்மால் நவாப்பின் ஆணைப்படி வந்திருப்பதா

***

**● தென்னார்க்காடு வட்டாரத்தில் வழக்கில் உள்ள நாட்டுப் பாடல்களில் ராஜா தேசிங்கு பற்றிய பாடல்கள் அதிகமாகும். அதையடுத்து வழக்கில் உள்ள கேள்வி-பதில் பாடல்களில் இதோ இரண்டு:**

*'என்ன ஊர்?*
*மயிலாப்பூர்*
*என்ன மயில்?*
*காட்டு மயில்*
*என்ன காடு?*
*ஆர்க்காடு*
*என்ன ஆறு?*
*பாலாறு*
*என்ன பால்?*
*கள்ளிப்பால்*
*என்ன கள்ளி?*
*இலைக் கள்ளி*
*என்ன இலை?*
*மா இலை*
*என்ன மா*
*அம்மா!'*

*'ஏன்டி குட்டி*
*என்னடி குட்டி*
*என்னடி செய்யிறே?*
*பாம்புக் குட்டிக்குப்*
*பல்லு வெளக்கறேன்*
*சும்மாவா கெடக்கறேன்!'*

***

கவும், கப்பத்தொகை பெறவும், மறுத்தால் செஞ்சியைக் கைப்பற்றப்போவதாகவும் அதிகாரிகளிடம் தெரிவித்தார்.

இச்செய்தியை அறிந்த தேசிங்கு தம் தந்தைக்கு அவுரங்கசீப் அரசுரிமை கொடுத்ததாகவும், தந்தையின் உரிமை, வாரிசான தனக்கு உண்டு என்றும்கூறினார். எனவே கோட்டையை விட்டுத் தர இயலாது என்றும் கூறினார். மத்திய அரசு அதிகாரி பையாராமகிருஷ்ணா தேசிங்கைச் சமாதானப்படுத்தி தோடர்மாலைச் சந்திக்குமாறு கூறினார். மேலச்சேரியிலிருந்து தோடர்மாலைச் சந்திக்க தேசிங்கு சென்றார். தேசிங்கு வரவைக் கண்ட தோடர்மால் கூடாரத்தைவிட்டு வெளியே வந்து வணக்கம் கூறினார்.

ஆனால் தேசிங்கு குதிரை மீதிருந்தே தோடர்மாலுக்கு வணக்கம் கூறினார். இதனால் அவமதிப்பிற்குள்ளான தோடர்மால் ஒன்றும் பேசாது கூடாரத்தினுள் சென்றுவிட்டார். தேசிங்கு கோட்டைக்குத் திரும்பிவிட்டார். மறுநாள் தோடர்மால் தேசிங்கின் அரசவைக்குச் சென்று பேரரசின் கடிதத்தையும், நவாப்பின் அறிக்கையையும் கொடுத்தார்.

கடிதத்தைப் படித்த தேசிங்கு கடும் கோபம் கொண்டார். கடிதத்தை வீசி எறிந்தார். தோடர்மால் சிதறிய கடிதத்தை ஒன்று சேர்த்து எடுத்துக்கொண்டு ஆர்க்காடு திரும்பினார். தேசிங்கை, அன்பினாலோ, சமாதானத்தின் மூலமோ அடக்கமுடியாதென்றும் வாள்முனையில் தான் அடக்கமுடியுமென்றும் நவாப்பிடம் தெரிவித்தார்.

தேசிங்கு நவாப்பிடையே போர்

நவாப் சதத்-உலா-கான் தம் பெரும் படையுடன் செஞ்சிக்குப் புறப்பட்டார். வழியில் தேசிங்கின் கோபத்தைத் தூண்டும் வகையில் செஞ்சிக்கு உட்பட்ட தேவனூரில் கொள்ளையிட்டனர். வீடுகளுக்குத் தீயிட்டனர். இச்சமயத்தில் தேசிங்கிடம் சிறிய படையே இருந்தது. 350 யானைப்படையும் 500 குதிரைப் படை வீரர்களுமே இருந்தனர். எனவே தனக்குக் கீழ் இருந்த வழுதாவூர் பாளையத்தைச் சேர்ந்த மகபத்கானை உதவிக்கு அழைத்தார். மகபத்கான் ஆற்காட்டு நவாபுடன் போர்புரிய செஞ்சிக்கு உதவி செய்தவரானவர். தேசிங்கிற்கு நெருங்கிய நண்பரானவர். தேசிங்கின் போர் அழைப்புச் செய்தியை அறிந்தார். அன்று அவருக்குத் திருமணம் நடைபெற்றுக்கொண்டிருந்தது. திருமணத்தை இடையிலேயே நிறுத்திவிட்டு 50 படை

***

★ இந்திய விடுதலைப் போராட்டக் கனல் மூண்ட காலத்தில்- 1927 செப்டம்பரில் தென்னார்க்காடு மாவட்டத்தில் சுற்றுப் பயணம் செய்து தீவிரப் பிரச்சாரம் செய்தார், மகாத்மா காந்தி அடிகள். 1935-ஆம் ஆண்டில் ஜவகர்லால் நேரு, அதே நோக்கின் அடிப்படையில் இம் மாவட்டத்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்டார்.

***

வீரர்களோடு உடனே மணக்கோலத்துடன் புறப்பட்டு செஞ்சி வந்து சேர்ந்தார்.

கடைசிப் போர்

22 வயதுடைய ராசாதேசிங்கு சிறந்த வீரமும், வலிமையும் உடையவராகத் திகழ்ந்தார். நவாப்பின் படையை எதிர்க்கத் தன் மனைவியிடம் விடை பெற்று மகபத்கானோடு போர்க்களம் நோக்கிச் சென்றார். படைகள் வராக நதிக் கரையை அடைந்தன. ஆற்றில் கரை புரண்டு ஓடிய வெள்ளத்தைப் பொருட்படுத்தாது தேசிங்கும் மகபத்கானும் கடந்து சென்றனர்.

நவாப்போ, தன் படைத்தலைவன் தவுலத்கானிடம் தேசிங்கைக் கொல்லாமல் உயிருடன் பிடித்து வரும்படி கூறியிருந்தார். தேசிங்கும் மகபத்கானும் வீரத்துடன் போராடி ஏராளமான எதிரிகளைக் கொன்றனர். இறுதியில் தன்னைப் பிடிக்க வந்த தவுலத்கானைத் தேசிங்கு ஈட்டியால் குத்திக் கொன்றார்.

இதற்கிடையில், வீரத்தோடு போராடிக் கொண்டிருந்த மகபத்கான், முகலாய வீரன் ஒருவனால் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டான். தளபதி தவுலத்கான் தேசிங்கால் கொல்லப்பட்ட நிலையிலுங் கூட தேசிங்கைக் கொல்லாமல் உயிருடன் பிடிக்க நவாப் ஆணையிட்டுக்கொண்டிருந்தார்.

போர் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது நவாப்பின் போர்வீரன் ஒருவன் தேசிங்கின் குதிரையின் முன்னங்கால்களை வெட்டினான். குதிரை கீழே விழுந்தது. பிறகு தேசிங்கு துணிவுடன் காலாட்படை வீரனாகப் போர் புரிந்தான். இச்சமயத்தில் நவாப், பங்காரு எச்சம நாயக்கனோடு தேசிங்கைப் பிடிப்பதற்கு மிக அருகில் வந்தார். ஆனால் தேசிங்கு, நவாப்பிற்குப் பாதுகாப்பாக முன் வந்த வீரனை ஈட்டியால் குத்த கை ஓங்கினான். அப்போது தங்களுக்கு நேர் இருந்த ஆபத்தை உணர்ந்த நாயக்கன் தேசிங்கைச் சுட உத்தரவிட்டார். தேசிங்கு சுடப்பட்டு இறந்தார்.

ஆனால் நாட்டுப்புறப்பாடலும், எம். அருணாசலம் என்பவரும் தேசிங்கு தன் நண்பன் மகபத்கான் இறந்ததாலும், தன் குதிரை பாராசாரி இறந்ததாலும் மனம் விரக்தி அடைந்து வாளை மேலே எறிந்து, அதனைத் தன் மார்பிலே தாங்கி,





தற்கொலை செய்துகொண்டு இறந்ததாகக் கூறுகிறார்கள். ஆனால் நாராயணப் பிள்ளை, சி.எஸ். சீனுவாச சாஸ்திரி ஆகிய அறிஞர்கள் தேசிங்கு சுட்டுக் கொல்லப்பட்டதாகக் கூறுகிறார்கள். முதன்மை ஆதார அடிப்படையில் சுட்டுக் கொல்லப்பட்டதே உண்மைச் செய்தியாகிறது.

தேசிங்கு 1714-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 3-ஆம் நாள் இறந்ததாகக் கூறப்படுகிறது. நாராயணப் பிள்ளை ஜெய வருடம் ஐப்பசி மாதம் 12-ஆம் நாள் இறந்ததாகக் குறிப்பிடுகின்றார்.

நவாப் பெற்ற வெற்றியைப் பாராட்டி பாண்டிச்சேரி பிரஞ்சுக்காரர்கள் 1200 பகோடா பரிசாகக் கொடுத்தார்கள். அதே போன்று நவாப்பின் வெற்றியைக் குறித்து சென்னை ஆங்கிலேயர்களும் பாராட்டுக் கடிதம் அனுப்பி இருந்தார்கள்.

தேசிங்குராசனின் இறுதிச் சடங்கு

தேசிங்கு இறந்தவுடன் நவாப் சதத்-உலா-கான் செஞ்சி கோட்டைக்குள் சென்று அரசின் கருவூலம் உள்ள கல்யாண மகாலைக் கைப்பற்றினார். தேசிங்கு இறப்புப் பற்றி அவர் மனைவி

கலயாண மகால



ராணிபாயிக்குத் தெரிவிக்கப்பட்டது. இச்செய்தியைக் கேட்ட ராணிபாய், தன் கணவர் இறந்த பிறகு தான் உயிரோடு வாழ விரும்பவில்லை என்றும், தன் கணவர் எரியூட்டில் உடன்கட்டை ஏறத் தன்னை அனுமதிக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

நவாப்பும் அதற்கு ஒத்துக்கொண்டார். மறுநாள் காலை கோட்டைக்கு அண்மையில் உள்ள ராமுச் செட்டி குளக்கரைக்கு அருகில் தகனமேடை அமைக்கப்பட்டது. தகன மேடையில் தேசிங்கு உடல் எரியூட்டப்பட்டது. அத்தீயில் ராணிபாய் ராசபுத்திர வழக்கப்படி உடன்கட்டை ஏறி உயிர் துறந்தார்.

தேசிங்கு இறந்த இடத்தில் ஒரு கோவில் கட்டப்பட்டது. அருகே அரச மரமும் வேப்பமரமும் நடப்பட்டன. அழகிய பூங்கா ஒன்றும் ஏற்படுத்தப்பட்டது. அதேபோல், இறந்த மகபத்கானுக்கும், பாராசாரி குதிரைக்கும் கூட நினைவுச் சின்னங்கள் அங்கே அமைக்கப்பட்டன. ராணிபாய் நினைவாக நவாப் ஆர்க்காட்டிற்கு அருகில் ராணிப்பேட்டை என்ற ஊரை ஏற்படுத்தினார்: பின்னர் நவாப் 1732 வரை செஞ்சியை ஆட்சி புரிந்தார்.

தேசிங்குராசன் வீரமும் வலிமையும ஒருங்கே பெற்றிருந்தவர்தான்; ஆனால் அவருக்கிருந்த முன்கோபமும், எதையும் சரியாகச் சிந்திக்காமல் எடுத்த முடிவுகளும், மக்கள் - அமைச்சர்கள் ஆகியோரின் முழு ஆதரவும் இல்லாமையுமே தோல்விக்குக் காரணமாகும் என்பது வரலாறு தெரிவிக்கும் உண்மையாகும்.●


வாழ்த்துக்கள்

**விருத்தாசலம் தச்சு, கருமார மற்றும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் லிட்**

**பதிவு எண்: KVI/CLE/40**

142, செராமிக் ஆலடி ரோடு
விருத்தாசலம், தென்னார்க்காடு மாவட்டம்

அலுவலகம்:
690-, ஜங்ஷன் ரோடு, விருத்தாசலம்,
தென்னார்க்காடு மாவட்டம்.

அரசு துறைகளுக்கும் ஊராட்சி ஒன்றியம் மற்றும் நகராட்சி அலுவலகங்களுக்குத் தேவையான அனைத்து நாற்காலி, மேசைகள், ரேக்குகள், புதிய கட்டடங்களுக்குத் தேவையான பர்னிச்சர்கள், மர மற்றும் இரும்பு அலமாரிகள், ஸ்டூல்கள், கட்டடங்களுக்கு டிரஸ் ஒர்க்ஸ், மருத்துவமனைக்குத் தேவையான கட்டில்கள், இதர தளவாடச் சாமான்கள் அனைத்தும் நியாயமா விலையில் உற்பத்தி செய்து சப்ளை செய்யப்படும். இது ஒரு அரசு நிறுவனமானதால், விலைப்புள்ளி கோராமலேயே நேரடியாகக் கொள்முதல் செய்யலாம்.

தனி அலுவலர்
விருத்தாசலம் தச்சு கருமார மற்றும்
பலநோக்குத் தொழில் கூட்டுறவுச் சங்கம்

With
Best
Compliments
From

# Bus Owners Association
## Cuddalore Taluk
## South Arcot District



## நூல்-நயம்

### 19-ஆம் நூற்றாண்டுத் தமிழ் இதழ்கள்

**ஆசிரியர்:** அ.மா. சாமி
**வெளியீடு:**
நவமணி பதிப்பகம்,
12, 2-வது பெருஞ்சாலை,
நகர வளர்ச்சிக் குடியிருப்பு,
சென்னை-4.

பக்கம்:304 விலை:ரூ.75/-

தமிழில் முழுமையான இதழியல் வரலாறு வெளிவந்துள்ளதா என்றால், இல்லை என்றே சொல்ல வேண்டும். அவ்வாறு எழுத முனைவோருக்கு, இந் நூல் வழிகாட்டியாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.

நூலாசிரியர் திரு. அ.மா. சாமி அவர்கள் ஏற்கெனவே 'தமிழ் இதழ்கள் தோற்றம்-வளர்ச்சி' என்னும் நூலை எழுதியவர். அதற்குப் பிறகு 19-ஆம் நூற்றாண்டில் வெளிவந்த தமிழ் இதழ்கள் குறித்த தகவல்களையெல்லாம் ஒன்று திரட்டி இந்நூலைப் படைத்திருக்கிறார்.

"உண்மையில் இந்திய இதழியல் வரலாறு, தமிழ்நாட்டில் இருந்து எழுதப் பட வேண்டும். அச்சு இதழ்கள் தோன்றி வளர அச்சகங்களே அடிப்படை. இந்திய மொழிகளில் முதன்முதல் அச்சு கண்ட மொழி தமிழே!" என்னும் கருத்து வர வேற்கத்தக்கது.

'மாசத் தினச் சரிதை' என்ற தமிழ் இதழ், 1812-ஆம் ஆண்டு வெளி வந்தது. இந்திய மொழியில் வந்த முதல் இதழ் இதுவே.

தமிழ் இதழியல் வரலாற்றுக்குப் பிள்ளையார் சுழி போட்டவர் ஜான் மர்டாக் (1819-1904) என்ற ஆங்கிலேயர். 1865-இல் அவர் தொகுத்த 'தமிழ் அச்சு நூல் பட்டியல்' என்ற நூலைத்தான் தமிழ் இதழியல் வரலாற்றின் திருமறையாக இன்றும் பலர் கருதுகிறார்கள்.

இவை போன்ற பல வரலாற்றுச் செய்திகளைத் தெரிந்து கொள்கிறோம்.

19-ஆம் நூற்றாண்டில் வெளிவந்த இதழ்களின் பட்டியலைக் கூறி, அந்த இதழ்களின் நோக்கும் போக்கும் பற்றி அலசியிருக்கிறார் ஆசிரியர். அத்துடன் அந்த இதழ்களால் தமிழ் வளர்ந்த விதத் தையும் விளக்கியிருக்கிறார் அவர்.

தமிழ் இதழியல் 190 ஆண்டு வரலாறு கொண்டது. ஆனால், முறை யாக வரலாறு தொகுக்கப்பட்டிருக்கும் சிறப்பினைப் பெற்றிருக்கிறது இந்நூல் என்றால் அது மிகையல்ல.

— மறைமலை

### படைப்பாளர்கள் பார்வையில் மானுடத்தின் காயங்கள்

**பதிப்பாசிரியர்:**
தி. தயானந்தன் பிரான்சிஸ்
**வெளியீடு:**
கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்,
பார்க் டவுன்,.
சென்னை-600 003.

பக்கம்:115 விலை:ரூ.30/-

கிறிஸ்தவ இலக்கியச் சங்கத்தின் சார்பில், நடந்துவரும் இலக்கிய நண்பர் வட்டக் கருத்தரங்கில், ஆய்வுப் பொரு ளைத் தழுவி வழங்கப்பட்ட கட்டுரை களின் தொகுப்பே இந்நூல்.

வித்வான் ஆர்.எஸ். ஜேக்கப், கவிஞர் இன்குலாப், டாக்டர் மா.வீ. சுதாகர், டாக்டர் எஸ். லாரன்ஸ், பி.வி.கிரி, டாக்டர் எஸ். குலசேகரன், மு. பரமசிவம், த. இயேசுதாஸ் ஆகியோர் வழங்கியுள்ள ஆய்வுக் கட்டுரைகள் சிந்தைக்கு விருந்தூட்டுவனவாக உள்ளன.

—மறைமலை

### பட்டு வளர்ப்பு

**ஆசிரியர்:** கிரிநாத்
**வெளியீடு:**
புத்தகப் பூங்கா
32, அய்யம்பெருமாள் தெரு,
இராயப்பேட்டை, சென்னை-14.

பக்கம்:128 விலை:ரூ.16/-

பட்டு வளர்ப்பு லாபம் தரும் தொழி லாகும். இதற்கு மத்திய-மாநில அரசுகள் உதவி வருகின்றன. சிறந்த குடிசைத் தொழிலான இதற்கு நிதி உதவியும் கிடைக்கின்றது. படித்து வேலையற்றோர் மற்றும் இதில் ஆர்வமுள்ளோர் சொந்தக் காலில் நிற்க இத்தொழிலைச் செய்ய முன்வரலாம். இத்தொழில் தொடர்பான நுணுக்கங்களையும், வழி முறைகளையும் விரிவாகக் கூறுகிறது இந்நூல்.

### தாய்மைக் கனவுகள்

**ஆசிரியர்:** கவிஞர் துளசிதாசன்
**வெளியீடு:**
இளந்தென்றல் பதிப்பகம்,
குளத்தூர்,
புதுக்கோட்டை.

பக்கம்:80 விலை:ரூ.10/-

புதுக் கவிதைகளின் தொகுப்பாக இது பூத்திருக்கிறது. நூலாசிரியர் சிந்தனை களின் சிதறல்கள் கவிதைகளாக உரு வெடுத்திருக்கின்றன. காதல், வீரம், சோகம் முதலான சமுதாயப் பிரச்சினை களை அலசுகிறார் கவிஞர். படித்து மகிழலாம்.

### தலைமுடி வளர அற்புத வழிகள்

**ஆசிரியர்:**
வைத்தியர் சீதாராம் சுப்ரமணியம்
**வெளியீடு:**
தமிழ்மணி பதிப்பகம்,
107-ஏ, பெரியார் பாதை (மேற்கு)
தூளைமேடு, சென்னை-600 094.

பக்கம்:80 விலை:ரூ.10/-

இன்று வளர்ந்துள்ள நாகரிகங்களில் தலைமுடி பராமரிப்பும் ஒன்றாகும். மற்ற விஷயங்களில் கவனம் செலுத்துவது போல, தலைமுடி பராமரிப்பிலும் போதிய கவனம் செலுத்தாததன் காரண மாக இளம் வயதிலேயே சிலருக்கு முடி உதிர்வது, வளர்ச்சி இல்லாமை, இள நரை போன்ற நோய்கள் வருகின்றன. இவற்றைப் போக்கக் கூடிய மருத்துவ முறைகளை விளக்குகிறது இந்நூல்.

பொதுவாக தலைமுடியைப் பாது காக்க முதலில் என்னென்ன வழிமுறை களைப் பின்பற்ற வேண்டுமென்பதை விளக்கமாக எடுத்துரைத்திருக்கிறார் ஆசிரியர். இது அனைவருக்கும் பயன் தரக் கூடியது.

பொதுவாக ஆண் பெண் இரு பாலரும் படித்துப் பயன்பெறத்தக்கது இந்நூல்.

- ஜே.சி.

### 'தலா ஒரு தோட்டா'

**ஆசிரியர்:** தேவிபாலா
**வெளியீடு:**
மயிலவன் பதிப்பகம்,
வடபழனி, சென்னை-600 026.

பக்கம்:196 விலை:ரூ.26/-

'அவனை அதிர்ச்சியுடன் பார்த் தான் பாலாஜி' என்று தொடங்குவதில் இருந்து, 'மஞ்சு பின் தொடர்ந்தான்...' என்று முடிக்கும் வரை இந்த நீண்ட கதையை மிகவும் விறுவிறுப்போடு கொண்டு சென்றிருக்கிறார் ஆசிரியர்.

வேலை தேடி அலையும் பட்டதாரி இளைஞன் தற்கொலைக்கு முயன்று சந்தர்ப்ப வசத்தால் சிக்கலில் மாட்டிக் கொண்டு, அதிலிருந்து விடுபடுவதுதான் கதை.

கதை வழக்கமானதுபோல் தோன்றி னாலும், அமைத்து எழுதப்பட்டிருக்கும் முறை நன்றாக உள்ளது. முடிவு மிகச் சிறப்பாகவும் எதிர்பார்க்க இயலாததாக வும் உள்ளது பாராட்டுக்குரியது.

—குமார்

போன்: 37928

வாழ்த்துக்கள்

குவாலிட்டி எண்டர்பிரைசஸ்
காமராஜ் சாலை, சாரம்
பாண்டிச்சேரி-605 013
விற்பனையாளர்:
ஜெயின் P.V.C. பைப்

வாழ்த்துக்கள்



சுபவள்ளி விலாஸ் ஜுவல்லரி
M.V.P. சுப்பராயச் செட்டியார் சன்ஸ்
39, சுப்புராயச் செட்டித் தெரு
கடலூர்-2.



தென்னார்க்காடு மாவட்டம்

# காவல் துறையின் கனிவான பணிகள்



எந்த ஒரு நாடும் - அந்த நாட்டின் சட்டம் அமைதி ஒழுங்கைப் பொறுத்தே மேம்பட முடியும்.

இந்த ஜனநாயக நியதிக்கு மதிப்பளிக்கும் வகையிலே சிறப்புற்றுத் திகழ்கிறது தென்னார்க்காடு மாவட்டக் காவல்துறை. அத்துறையின் அனைத்து விவரமும் அறியும் ஆவலில் மாவட்டக் காவல்துறை உயர் அதிகாரி (Superintendent of Police) திரு. ச.ரா. ஜாங்கிட், இ.கா.ப., அவர்களோடு தொடர்பு கொண்டோம்.

அவர் தெரிவித்தபடி மறுநாள் காலையில் சரியாக ஒன்பது மணிக்கெல்லாம் அவருடைய அலுவலத்திற்குப் போய்க் காத்திருந்தோம். தனது காரில் 9.10-க்கு வந்திறங்கிய அவர், தனது பத்து நிமிடத் தாமதத்திற்காக வருத்தம் தெரிவித்துக் கொண்டார் எங்களிடம்.

இதன்மூலம் அவரது கடமை உணர்வை எங்களால் புரிந்து கொள்ள முடிந்தது.

**மழலைத் தமிழ்**

அவருக்கு எதிரே இருந்த மாவட்டக் காவல்துறை உயர் அதிகாரிகள் பெயர் விவரம் குறித்த அறிவிப்புப் பலகையில் - திரு. எம். கோவிந்த நாயர் என்று தொடங்கி, 19-வது இடத்தில் திரு. ச.ரா. ஜாங்கிட் என்றிருந்தது. அதைப் பார்த்த நாம் "1925-இல் தான் இந்த மாவட்டம் துவங்கியதா என்ன?" என்றோம்.

"அப்படியில்லை; அது முதல் கிடைத்த விவரங்களை எழுதி வைத்திருக்கிறோம்; இன்னும் சேகரிக்கப்பட வேண்டியிருக்கிறது" என்று சிரித்தவாறே சொன்னார் அவர்; அவருடைய தாய்மொழி வேறானதால் - தமிழ், மழலையாக வெளிப்பட்டது.

**குற்றங்கள் கட்டுப்பாட்டில் உள்ளன**

திரு. ச.ரா. ஜாங்கிட் சொன்ன சில விவரங்கள் வருமாறு:

தென்னார்க்காடு மாவட்டக் காவல்துறையில் - ஆய்வாளர், துணை ஆய்வாளர், காவலர், போக்குவரத்துக் காவலர், பெண் காவலர் என எல்லோரையும் சேர்த்து 1,600 பேர் இருக்கிறார்கள். 43 காவல் நிலையங்கள் இருக்கின்றன.




சிதம்பரத்தில் ஒரு தனி துணைக் காவல்துறை அதிகாரி (D.S.P.) அலுவலகமும் உள்ளது.

கடலூரிலும், சிதம்பரத்திலும் மட்டும் மகளிர் காவல் நிலையங்கள் தனிப்பட இரண்டு உள்ளன.

இம்மாவட்டத்தில் எல்லா வகையான குற்றங்களும் பரவலாகக் காணப்பட்டாலும் - கடந்த இரண்டாண்டுகளாக எல்லாமே மிகவும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

**மீட்கப்பட்ட பெரும்பொருட்கள்**

கடந்த பத்தாண்டுக் காலத்தில் இம்மாவட்டத்தில் பலராலும் பறி கொடுக்கப்பட்ட ஐம்பத்தைந்து இலட்ச ரூபாய் பெறுமானமுள்ள பொருட்கள் காவல்துறையினரால் அரும்பாடுபட்டு அண்மைக் காலத்திலே மீட்கப்பட்டிருக்கின்றன.

சுமார் 1,200 பேர் பறி கொடுத்த அப்பொருட்களில், கோயில் அணிமணிகளும் அடங்கும்.

சில நாட்களுக்கு முன்னால் மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் திரு. ஆனந்தன் அவர்கள் தலைமையில் ஒரு விழா நடத்தப்பட்டு, அப்பொருட்கள் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன.

**வாகன வசதி**

தென்னார்க்காடு மாவட்டக் காவல்துறைக்குச் சொந்தமாக 5 பெரிய பஸ்களும், 12 ஜீப்புகளும், 42 மோட்டார் சைக்கிள்களும் உள்ளன.

எல்லாக் காவல் நிலையத்திற்கும் 'ஒயர்லஸ்' வசதி உண்டு.



'சோதனைச் சாவடிகள்' ஐந்து இருக்கின்றன.

80 கிலோமீட்டர் நீளமுள்ள கடலோரப் பாதுகாப்பிற்கெனத் தனிக் காவலர் படையொன்று அமைக்கப் பட்டுள்ளது; இதற்காக மூன்று விசைப்படகுகள் இருக்கின்றன. இதேபோல, பெண் காவலர் பிரிவிலும், நடமாடும் தனிப் படையொன்று இயங்குகிறது; இவர்கள் ஆங்காங்கே மகளிருக்குள் ஏற்படும் பிரச்னைகளுக்குக் காரணமானவர்களை அங்கேயே கண்டுபிடித்துத் தண்டிப்பார்கள், அல்லது தீர்த்து வைப்பார்கள்.

இக்குழுவில் ஒரு பெண் வழக்கறிஞரும், ஒரு வருவாய்த்துறைப் பெண் அதிகாரியும் இருப்பார்கள். இம்மாவட்டத்தில் மட்டுமே இவ்வாறான அமைப்பு உள்ளது.

**கள்ளச் சாராயம் ஒழிப்பு**

கடந்த இரண்டு மூன்றாண்டுகளில் மட்டும் இந்த மாவட்டத்தில் 25,500 கள்ளச் சாராயம் - சாராயக் கடத்தல் - காய்ச்சல் வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

இது தொடர்பாக 473 வாகனங்கள் கைப்பற்றப்பட்டிருக்கின்றன.

தென்னார்க்காடு மாவட்டத்திற்கு இந்தப் பக்கம் புதுச்சேரியும், அந்தப் பக்கம் காரைக்காலும் இருப்பதால் அங்கே போய் மலிவு விலை மது வாங்கி, மற்ற ஊர்களுக்குக் கடத்தும் தொழிலில் பல ஆண்களும் பெண்களும் ஈடுபட்டார்கள்; தரைவழியாக மட்டுமல்ல; படகு மூலம் கடல் வழியாகவும்கூட இந்தக் கடத்தல் நடக்கும்.

சென்ற மாதக் கடைசியில் - அவ்வாறே மதுப்புட்டிகளைக் கடத்திய ஒரு படகு, தேவனாம்பட்டினம் காவல்நிலையக் காவலர் இருவரால் விரட்டிப் பிடிக்கப்பட்டிருக்கிறது.

இத்தகைய குற்றங்களின் எண்ணிக்கை இப்போது பத்து சதவிகிதம் கட்டுப்படுத்தப்பட்டுவிட்டது.

கடல் வழியாகக் கடத்துவோரைப் பிடிப்பதில் புதுவை மாநிலக் காவலர்களும் போதுமான அளவுக்கு உதவியாக இருக்கிறார்கள்.

சென்ற ஆண்டில், அகில இந்திய அளவில் நடைபெற்ற துப்பாக்கி சுடும் போட்டியில் திரு. வால்டர் தேவாரம் முதல் பரிசு பெற்றாரென்றால் - தமிழ்நாட்டு அளவில் ரைஃபிள் போட்டியில் திரு. ச.ரா. ஜாங்கிட் முதல் பரிசு பெற்று மாண்புமிகு முதல்வரால் பாராட்டப்பட்டிருக்கிறார்.

**சட்டம் ஒழுங்கு**

சட்டம் ஒழுங்கைக் காத்து அமைதி நிலவச் செய்வதில் இம்மாவட்டத்தில் உள்ள போக்குவரத்துத் துறைக் காவலர்களும் பெரும்பங்கேற்றுப் பணியாற்றி வருகின்றார்கள்.

## 'ஜெ. ஜெயலலிதா மகளிர் குழந்தைகள் நலத்திட்டம்'

மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா மருத்துவ நலத் திட்டத்தின்கீழ் "புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா மகளிர் குழந்தைகள் நலத்திட்டம்" என்ற புதிய திட்டம் தொடங்கப்படவுள்ளது. இதன்மூலம் மருத்துவ வசதிகள் இல்லாத கிராமப்புறங்களில் வசதியற்ற மகளிர் மற்றும் குழந்தைகளுக்குச் சுகாதார நலப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

வறுமையில் வாடும் ஏழை நோயாளிகளுக்கான உயிர்காக்கும் அறுவைச் சிகிச்சைக்குத் தரப்பட்டு வந்த நிதியுதவியும் அதிகரிக்கப்பட்டு இதற்காக எப்போதும் இல்லாத வகையில் மேலும் ரூபாய் 47.30 இலட்சம் ஒதுக்கப்படும்.

மருத்துவம், குடும்பநலம் குறித்து சட்டப்பேரவையில் வழங்கப்பட்ட கொள்கை விளக்கக் குறிப்பில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. சு. முத்துசாமி அவர்கள் தெரிவித்துள்ளார் (22.3.'93).





கடலூரா துறைமுக உப்பங்கழியில் இக்கரையிலிருந்து அக்கரைக்கு மாணவ மாணவியர் படகுச் சவாரி.

## காவலருக்கு முதல்வர் உதவி

சென்னை, வண்ணாரப்பேட்டை போக்குவரத்துப் பிரிவுக் காவலர் திரு வீரமுத்துவை 3.4.93 அன்று, சில விஷமிகள் கத்தியால் தாக்கி சம்பளப் பணம் 1,748 ரூபாயையும், தங்க மோதிரத்தையும் பறித்துச் சென்றார்கள் என்ற தகவலை அறிந்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், தனது சொந்த நிதியிலிருந்து ரூபாய் ஐயாயிரத்தை மேற்படி காவலர் திரு. வீரமுத்துவிற்குத் தனி நபர் மூலமாக அனுப்பி வைத்தார்.

இழந்த சம்பளத்தையும் அடைந்த காயங்களுக்குச் சிகிச்சை பெறவும் இந்தத் தொகையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார். அவர்தம் குடும்பத்ினரும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குத் தங்களது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

கடந்த ஓராண்டில் அந்த வகைப் பிரச்சினை இந்த மாவட்டத்தில் ஏதுமில்லை.

**காவலருக்குச் சிலை**

மாவட்டக் காவல்துறை உயர் அதிகாரி அலுவலக வளாகத்தினுள், வெண்பளிங்குக் கல்லால் ஆன புத்தூர்க்காவலர் கே. இராசேந்திரனுக்கு ஒரு 'சிலை எடுத்திருக்கிறார்கள். அதை 26.5.92-இல், காவல்துறைத் தலைவர் திரு. தேவாரம் திறந்து வைத்திருக்கிறார்.

'மே 1991-இல் புத்தூர் காவல் நிலையத்தை நக்சலைட்டுகள் தாக்கியபோது, உயிர் நீத்தவராம் அந்தக் காவலர்.

அவர் குடும்பத்தாருக்கு அரசு தந்த பணம் போக - இம்மாவட்டக் காவல்துறையினரே நிதி வசூலித்துத் தனிப்பட ரூ.50,000 வழங்கியிருக்கிறார்கள்.

இதேபோலக் காடாம்புலியூர் காவல் நிலையத்திற்குப் பணிபுரியச் சென்ற வேறொரு காவலரான தென்னரசு என்பார் நோயுற்று இறந்தபோதும் நிதியுதவி செய்திருக்கிறார்கள்.

**திருமண மண்டபம்**

இதையெல்லாம் சொல்லிக் கொண்டே வந்த திரு. ச.ரா. ஜாங்கிட், உற்சாகமாக - "இங்கே நாங்களே வசூல்செய்து ஒரு பெரிய கல்யாண மண்டபம் கட்டிக் கொண்டிருக்கிறோம் தெரியுமோ?... அது கூடிய சீக்கிரம் முடிவடைந்துவிடும். போலீசாரெல்லாம் இதற்காக நாலு நாள் சம்பளம் கொடுத்தார்கள்; நான் பத்து நாள் சம்பளம் கொடுத்திருக்கிறேன்!... இது தொடர்பான நிதியை ஒரு தனிக் குழு நிர்வகித்து வருகிறது. வேறு எங்கேயும் காவல் துறையால் இப்படியொரு நல்ல காரியம் செய்யப்படுவதை நீங்கள் பார்த்திருக்க முடியாது!" - என்று கூறிப் பெருமிதத்தோடு தன் படர்ந்த மீசையை நீவிக்கொண்டார்.

காவலர் நிதியில் உருவாகும் கல்யாண மண்டபம்



அதிருக்கட்டும்; கட்டி முடிந்ததும் அதற்கு எப்படி வாடகை நிர்ணயிக்கப் போகிறீர்கள்?" என்றோம் நாங்கள்.

"போலீஸ் குடும்பக் கல்யாணம்னா வெறும் எரநூத்தம்பது ரூவாதான்; மத்தவங்கன்னா மூவாயிரத்தி ஐநூறுன்னு இப்போதைக்கு முடிவு பண்ணீருக்கம்!" என்றார் அவர்.

அந்த மண்டபத்தையொட்டியே ஒரு பூங்கா அமைக்கப்படுவதையும் - அங்கே சிறு குழந்தைகள் விளையாடும் இடமும் அமைவதையும் தெரிவித்த திரு. ச.ரா. ஜாங்கிட், "எல்லாம் இந்த ஆண்டுக்குள் முடிவடைந்துவிடும்" என்று மிகுந்த நம்பிக்கையோடு நம்மிடம் தெரிவித்தார்.

- 'ராஜு'

தென்னார்க்காடு மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை
சாரம்-604 307, திண்டிவனம் தாலுக்கா

தந்தி: 'NOOL'
திண்டிவனம்

தொலைபேசி:
ஆலை அலுவலகம்: 2157
நிர்வாக இயக்குநர் (இல்லம்): 2336

தயாரிக்கப்படும் தரமான நூல்:
10s, 20s, 34s, 40s, 50s, 60s, 80s கார்டடு, கோம்புடு காட்டன்
சிட்டம், ஈரெழை ரகங்கள்.

நவீன இயந்திரங்களின் உயர் ரகப் பஞ்சைப் பயன்படுத்தி மிகத் தரமான நூல் உற்பத்தி செய்து தமிழ்நாடு மற்றும் வெளி மாநிலங்களுக்கும் கைத்தறி மற்றும் விசைத் தறி உபயோகத் திற்கும் விற்பனை செய்யப்படுகிறது.

தேவைக்கு நிர்வாகியுடன் தொடர்பு கொள்ளவும்

நல்வாழ்த்துக்கள்

உரம் மற்றும் பூச்சி மருந்து வியாபாரிகள் சங்கம்
விழுப்புரம் - 605 602

ராம்கோ உர நிறுவனம்
விழுப்புரம்

கிரசன்ட் உர நிறுவனம்
விழுப்புரம்
தென்னார்க்காடு மாவட்டம்





# தென்னார்க்காடு மாவட்டத்தில் வளரும் வேளாண்மை

தமிழகத்தின் வேளாண்மை உற்பத்தியில் பெரும்பங்கு வகிக்கும் தென்னார்க்காடு மாவட்டம் 10,898 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் விரிந்துள்ளது. இவ்வாண்டு இம்மாவட்டத்தில் நெல் 2,51,553 எக்டேரிலும் சிறு தானியங்கள் 1,08,940 எக்டேரிலும், பயறு வகை 96,751 எக்டேரிலும், பருத்தி 12,054 எக்டேரிலும், கரும்பு 57,116 எக்டேரிலும் நிலக்கடலை 1,99,402 எக்டேரிலும், என் 35,387 எக்டேரிலும் பயிரிடப் பட்டது. மாவட்ட அரிசி உற்பத்தி 9 இலட்சம் மெட்ரிக் டன்னைத் தாண்டும் நிலையில் உள்ளது.

கடந்த ஆண்டு எக்டேர் அரிசி உற்பத்தி 3,650 கிலோவாக இருந்தது. இவ்வாண்டு இதுவரை 3,855 கிலோவாக அதிகரித்துள்ளது. இம்மாவட்டத்தின் இயல்பான மழையளவு 1,137 மி.மீ. ஆனால், இவ்வாண்டு 850 மி.மீ. மட்டுமே கிடைத்துள்ளது. எனினும், இம் மழை பரவலாகக் கிடைத்ததால் மேற் கூறப்பட்ட பரப்பளவினை அடைவு செய்ய முடிந்தது.

மேலும் இம்மாவட்டத்தில் 3,05,214 எக்டேர் பரப்பளவு பாசன வசதி பெறுகின்றது. அரசு·கால்வாய் மூலம் 78,348 எக்டேர்களும், ஏரி மற்றும் குளம் மூலம் 1,12,875 எக்டேரும், குழாய்க் கிணறு மூலம் 1,03,308 எக்டேரும் இதர வகையில் 10,683 எக்டேரும் பாசனம் பெறுகின்றன. இம்மாவட்டத்தில் பொதுப் பணித்துறை ஏரிகள் 495- பஞ்சாயத்து ஏரிகள் 2,235- உள்ளன.

இவ்வாண்டு பல்வேறு நலத் திட்டங்கள் வேளாண் துறையில் இம்மாவட்டத்தில் செயலாக்கப்பட்டு வருகின்றன. அவையாவன:

**ஒருங்கிணைந்த அரிசி உற்பத்திப் பெருக்குத் திட்டம்**

இத்திட்டத்தின்கீழ் நெல் பயிரிடும் விவசாயிகளுக்கு 2000 மெ.டன் சான்று பெற்ற நெல் விதையும், 45 மெ.டன் சிங்க்சல்பேட்டும், 300 மெ.டன் ஜிப்சமும், 9000 லிட்டர் களைக்கொல்லியும், 500 பயிர்ப் பாதுகாப்புக் கருவிகளும், 1600 வேளாண் கருவிகளும், 130 விசை உழுவைகளும், மானிய விலையில் விநியோகிக்கப்பட்டு இதுவரை ரூ.66 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

**உணவு தானிய உற்பத்திச் சிறப்புத் திட்டம்**

இத்திட்டத்தின்கீழ் இம்மாவட்டத்தில் 15 மெ.டன் ராகி விதை, ஒரு மெ.டன் சோளம் விதை, 150 பயிர்ப் பாதுகாப்புக் கருவிகள், 300 வேளாண் கருவிகள், 300 லிட்டர் களைக் கொல்லி ஆகியன மானிய விலையில் விநியோகிக்கப்பட்டு இதுவரை ரூ.3 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

**தேசிய பயிறு வகை உற்பத்திப் பெருக்கத் திட்டம்**

இவ்வாண்டு 1,500 மினிகிட்டுகளும், 25 பெரு விளக்கப் பண்ணைகளும், 76 மெ.டன் விதை விநியோகமும், 20 பயிர்ப் பாதுகாப்புக் கருவிகளும் 15,000 ரைசோபியம் பொட்டலமும் 15 தெளிப்பு நீர்ப் பாசனமும் அமைக்கப்பட்டு ரூ.6 இலட்சம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**சிறு தளைப் பைகள்**

குறு விவசாயிகள் தங்களுக்குத் தேவையான புதிய விதைகளைத் தாங்களே உற்பத்தி செய்து கொள்ளும் பொருட்டு, 200 நெல் மினிகிட்டுகளும், 300 சோளம் மினிகிட்டுகளும், 1000 பயறு வகை மினிகிட்டுகளும் விநியோகிக்கப் பட்டன.

**அனுசரணை ஆராய்ச்சித் தளைகள்**

வெளியிடப்படாத புதிய ரகங்களை விவசாயி வயல்களில் ஆய்விடும் நோக்கத்துடன் நெல், சிறு தானியங்கள், பயறு வகைகள், பருத்தி, எண்ணெய்வித்து ஆகிய பயிர்களின் அனுசரணை ஆராய்ச்சி வயல்களும், வயல் வழி ஆராய்ச்சித் தளைகளும் அமைக்கப்பட்டு வருகின்றன.

**சிறு டிராக்டர்கள்**

இவ்வாண்டு 2 சிறு டிராக்டர்கள் ரூ.60,000 மானியத்தில் வழங்கப் படுகிறது.

**சிறு விவசாயிகளுக்கு உதவிடும் திட்டம்**

சிறு குறு விவசாயிகளுக்குப் பயன் தரும் வகையில் மானிய விலையில் 300 டயர் வண்டிகளும், 1,500 விதை சேமிப்புக் களஞ்சியங்களும் தார்ப்பாய்களும் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

**விதைப் பெருக்குத் திட்டம்**

விதைப் பெருக்குத் திட்டத்தில் 2,730 மெ.டன் சான்று நெல் விதைகள் கொள்முதல் செய்யப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. அந்த வகையில் ரூ.1,20,45,000 செலவு செய்யப்பட்டது.

சிறு தானியங்களான கம்பு, ராகி,




NEYCER

Sanitaryware and floor tiles
for quiet sophistication and class
in a wide range of colours
a must for your prestigious buildings
and beautiful homes

NEYCER INDIA LIMITED

VADALUR-607 303,
SOUTH ARCOT DISTRICT
PHONE 388 (VADALUR 3 LINES)
STD 04148-598 TLX: 461241 NYCR IN
REGD OFFICE:

52, CHAMIERS ROAD, MADRAS-600 028.





# கோட்டகம் ரோமானியப் பொற்காசுகள்

சங்க காலத்தில் தமிழ் நாட்டிற்கும் ரோமாபுரிக்கும் வாணிபத் தொடர்புகள் நெருக்கமாக இருந்து வந்தது என்பதை வரலாறு நாம் அறிவோம். அதை இலக்கியங்களும், தொல்பொருள் ஆய்வுகளும் சிறபங்களும் உறுதி செய்வதோடு அவ்வப் பொழுது தமிழ்நாட்டில் புதையலாகக் கிடைக்கும் பொற்காசுகளும் உறுதி செய்கின்றன.

தென்னார்க்காடு மாவட்டம், திருக்கோவிலூர் வட்டத்தைச் சேர்ந்த கோட்டகம் என்ற ஊரில் கிடைத்த பொற்காசுப் புதையலில் இருந்து, இது மேலும் தெளிவாகின்றது. இந்தப் புதையலில்- கி.பி. முதலாம், இரண்டாம் நூற்றாண்டுகளில் ரோமாபுரியை அரசோச்சிய நீரோ, நீரோ சீசர், அன்டோனியஸ் பயஸ், அகஸ்டஸ் போன்ற மன்னர்களின் பொற்காசுகள் இருக்கின்றன.

கி.பி. 2-ஆம் நூற்றாண்டு வரையான அரும் பொருட்கள் கண்டுபிடிக்கப் பட்டு, கடலூர் அரசு அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப்படுகின்றன. அரிய மணி வகைகள், சிறபங்கள், மண்பாண்ட ஓடுகள், ஆயுதங்கள், அக்கால மக்கள் பயன்படுத்திய பொருட்கள் யாவும் அங்குள்ளன. இத்தனைச் சிறப்புமிக்க அந்த அருங்காட்சியகத்தின் காப்பாட்சியர் எழுதிய கட்டுரை இது:

**ம. காந்தி,**
காப்பாட்சியர்,
அரசு அருங்காட்சியகம்,
கடலூர், தெ.ஆ.மாவட்டம்

முதலில் அவைகள் செலாவணிக்காகப் பயன்பட்டுள்ளன. பின்னர் அணிகலன்களாகப் பயன்பட்டிருக்கின்றன. மக்கள் பொதுவாகப் பொன்னில் செய்த மாங்காய் மாலை, முத்துமாலை, மணிமாலை போன்றவற்றைத் தங்களுடைய கழுத்தில் அணிந்து அழகைக் கூட்டிக் கொண்டதுடன் வாழ்க்கை நிலையிலும் பொருளாதார நிலையிலும் தங்களை உயர்த்திக் கொண்டனர்.

பொற்காசுகளையே மாலையாகக் கோத்து மக்கள் கழுத்தில் அணிந்திருந்தனர் என்பதற்குச் சில புதையல் பொருள்கள் சான்றாகின்றன. ஏன்? இன்றும் பொன்னில் செய்த கால் காசுகளையும் கால் பௌன்களையும் கோத்து பெண்கள் தங்களுடைய கழுத்தில் அணிந்து கொள்ளுகின்றனர்.

கள்ளக்குறிச்சி வட்டம், கல்வராயன் மலையில் கிடைத்த புதையல் காசுகள், கழுத்து மாலையாகக்

சோளம் முதலியவைகளில் 80.5 மெ.டன் சான்று பெற்ற விதைகள் கொள்முதல் செய்து விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு ரூ.2,50,000 செலவு செய்யப்பட்டது. பயறு வகைப் பெருக்குத் திட்டத்தில், 220 மெ.டன்கள் (துவரை, உளுந்து, பச்சைப்பயறு, தட்டைப்பயறு) கொள்முதல் செய்யப்பட்டு விவசாயி களுக்கு விநியோகம் செய்யப்பட்டு ரூ.18,26,700 செலவு செய்யப்பட்டது.

விதைப் பெருக்கத் திட்டத்தில், வேளாண்மைப் பல்கலைக்கழகத்திடம் இருந்து பெறப்படும் மூல விதைகளைப் (Breeder seeds) பயன்படுத்தி, ஆதார விதைகள் அரசு விதைப் பண்ணை மூலம் உற்பத்தி செய்யப்பட்டு, அவ்விதையை ஆர்வமுள்ள விவசாயிகளிடம் சான்று விதைப் பண்ணைகள் அமைத்து அப் பண்ணை விதைச் சான்றுதுறை மூலம் ஆய்வு செய்து சான்று விதைகளாக உற்பத்தி செய்யப்பட்டு அவ்விதை வேளாண்மைத் துறை மூலம் கொள்முதல் செய்யப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப் படுகிறது.

### ஒருங்கிணைந்த மானாவாரி மேம்பாடு

1992-93-ஆம் ஆண்டு மானாவாரி நிலங்களு் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மானாவாரி நிலங்கள் 3,300 எக்டேர் தேர்வு செய்து அதில் கோடை உழவு, ஊட்டமேற்றிய தொழு உரம் உபயோகம், மேலும் இடுதல் பயிர்ப் பாதுகாப்பு இரு போகச் சாகுபடி மற்றும் பயிற்சிகளின் மூலம் மானாவாரி விளைச்சலை மேம் படுத்த ரூ.13.46 இலட்சம் செலவிடப் பட்டது.

### தரிசு நில மேம்பாடு

இத்திட்டத்தின்கீழ் ஓர் ஆண்டிற்கு மேல் தரிசாக உள்ள நிலங்களை 500 எக்டேர் தேர்வு செய்து இவற்றில் மரக் கன்றுகள் நட்டு வளர்க்கவும், ஊடு பயிர்ச் சாகுபடிக்கும் ரூ.7.5 இலட்சம் செல விடப்பட்டு 580 விவசாயிகள் இதனால் பயன் பெறுகிறார்கள்.

### வேளாண் காடுகள்

இத்திட்டத்தின்கீழ் 5,73,700 மரக் கன்றுகள் உற்பத்தி செய்து 4,600 சிறு/குறு விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்படுகிறது. மேலும், சென்ற ஆண்டு மற்றும் அதற்கு முந்தைய ஆண்டுகளுக்கு உயிருடன் உள்ள கன்று களுக்கு மானியம் வழங்குதல் திட்டத்தின் கீழ் ரூ.8 இலட்சம் மானியமாக வழங்கப் படுகிறது.

### மகளிர் மேம்பாட்டுத் திட்டம்

வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள சிறு-குறு விவசாய மகளிருக்கு நிரந்தர வருமானம் தரக்கூடிய வகையில் சொத் துக்கள் ஏற்படுத்தும் திட்டத்தின்கீழ் 130 விவசாய மகளிருக்கு 7.2 இலட்சம் வழங்கி அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த உள்ளது.

### எண்ணெய் வித்து உற்பத்தித் திட்டங்கள்

தென்னார்க்காடு மாவட்டத்தில் 1992-93-ஆம் ஆண்டு எண்ணெய்வித்து உற்பத்தியைப் பெருக்க வேளாண் துறை யின் மூலம் 1,900 மெ.டன் நிலக் கடலை, 25 மெ.டன் எள், 1.5 மெ.டன் ஆமணக்கு, 3 மெ.டன் சூரியகாந்தி, 10 மெ.டன் சோயாமொச்சை விதைகள் விநி யோகம் செய்யப்பட்டுள்ளன. எண்ணெய் வித்து உற்பத்தித் திட்டத்தின்கீழ் 200 நீர்த்தூவும் கருவிகள், 4,500 வேளாண் மைக் கருவிகள், 2,500 பயிர்ப் பாது காப்புக் கருவிகள், ஜிப்சம் 500 மெ. டன், 1,855 மினிகிட்டுகள், 1,950 மெ.டன் விதைக் கொள்முதல், 90,000 ரைசோபியம் பொட்டலங்கள் ஆகியன ரூ.141 இலட்சம் செலவில் மானியமாக வழங்கப்படுகிறது.

தேசிய எண்ணெய்வித்து மற்றும் தாவர எண்ணெய் மேம்பாட்டுத் திட்டத் தின்கீழ் 30,000 நெட்டூட ரகத் தென்னங் கன்றுகள் மானியமாக வழங்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு முதல்வர் அவர்களின் பள்ளி மாணவர்களுக்கு இலவசமாகத் தென்னங்கன்றுகள் வழங்கும் திட்டத்தின் கீழ், 4,840 நெட்டை-குட்டை தென்னங் கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன. எண் ணெய்வித்து பகுதி-2 திட்டத்தில் 150 மெ.டன் நிலக்கடலை விதைகள் ரூ.3,80,000 மானியத்தில் வழங்கப் பட்டுள்ளது.

### உர மாதிரி எடுத்தல்

இத்துறையில் உரக் கட்டுப்பாட்டுச் சட்டம் மிகவும் இன்றியமையாதது. இதனுடைய முக்கிய வேலை, உர மாதிரிகள் எடுத்து அவற்றினை ஆய்வு செய்து உரச்சத்தின் அளவு சரியாக இருக் கிறதா என்று சரிபார்த்து நடவடிக்கை எடுப்பதாகும். இவ்வாண்டு (1992-93) இதுவரை 1,074 உர மாதிரிகள் ஆய் வுக்கு அனுப்பப்பட்டது. அதில் 47 உர மாதிரிகள் உரச்சத்து, குறிப்பிட்ட பிரி வின்கீழ் குறைவாக உள்ளது எனக் கணக்கிடப்பட்டு நடவடிக்கை தொடரப் பட்டு வருகிறது.

சிறு-குறு விவசாயிகளுக்கு உரம் மானிய விலையில் வழங்கிட 'என் கோபெட்' நிறுவனம் மூலம் ரூ.167 இலட்சமும், 'தாய்' நிறுவனம் மூலம் ரூ.65 இலட்சமும், 'கூட்டுறவுத்துறை' மூலம் ரூ. 2 இலட்சமும் செலவிடப் பட்டுள்ளது.



### ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்புத் திட்டம்

1992-93-ஆம் ஆண்டில் ஒருங் கிணைந்த பயிர்ப் பாதுகாப்புத் திட்டத் தின்கீழ் 845 விவசாயிகளுக்குப் பயிர்ப் பாதுகாப்பு முறைகள் பற்றி பயிற்சி யளிக்கப்பட்டது. ஒவ்வொரு பயிற்சி யாளருக்கும் ரூ.100 ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது. இம்மாவட்டத்தில் 13 வேளாண்மைக் கோட்டங்களிலும் ரூ.84,500 ஊக்கத் தொகையாக வழங் கப்பட்டுள்ளது.

### துவரைக் காய்ப்புழு பயிர்ப் பாதுகாப்புத் திட்டம்

இம்மாவட்டத்தில் துவரைக் காய்ப் புழுப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் 1000 ஏக்கருக்கு ரூ.75,000 ஒதுக்கீடு செய்யப் பட்டது. இம்மாவட்டத்தில் விருத்தாசலம், திட்டக்குடி, கள்ளக்குறிச்சி, திருக் கோயிலூர், உளுந்தூர்ப்பேட்டை, திண்டிவனம் ஆகிய கோட்டங்களில் 1000 எக்டேரில் துவரை காய்ப்புழுத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. எக் டேருக்கு ரூ.75 வீதம் ரூ.75,000 மானியம் வழங்கப்பட்டுள்ளன.





### பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் வழங்குதல்

இம்மாவட்டத்தில் 1992-93-ஆம் ஆண்டு பல்வேறு பயிர்ப் பாதுகாப்புத் திட்டங்களுக்காக இதுவரை ரூ.82 இலட்சம் மதிப்புள்ள பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் வழங்கப்பட்டுள்ளது.

### சிறு/குறு விவசாயிகளுக்குப் பயிர்ப் பாதுகாப்பு மினிகிட்

இம்மாவட்டத்தில் 1992-93-ஆம் ஆண்டு புரட்சித்தலைவியின் இலவசப் பயிர்ப் பாதுகாப்பு மினிகிட் வழங்கும் திட்டத்தின்கீழ் 30,000 சிறு/குறு விவ சாயிகளுக்குத் தலா ரூ.150 மதிப்புள்ள பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

### கரும்பு ஒட்டுண்ணி உற்பத்தித் திட்டம்

கரும்புப் பயிரில், நுனிகுருத்துப்புழு, இடைக்கணுப்புழு தாக்குதலை ஒட்டுண்ணி மூலம் கட்டுப்படுத்தப்படுகிறது. இத் திட்டத்திற்காக, விருத்தாசலம், கள்ளக் குறிச்சி, விழுப்புரம், திண்டிவனம் ஆகிய இடங்களில் ஒட்டுண்ணி உற்பத்தி நிலையம் செயல்பட்டு வருகிறது. இது வரை 1,048 எக்டேருக்கு ஒட்டுண்ணி விடப்பட்டுள்ளது.

### தேசிய மானாவாரி நீர்ப்பிடிப்புப் பகுதி நில மேம்பாட்டுத் திட்டம்

மானாவாரி நிலங்களிலும் உணவு உற்பத்தியை அதிகரிக்கச் செய்வதுடன், வேளாண்மை சார்ந்த துணைத் தொழில் களான கால்நடைப் பராமரிப்பு, பழ மரங்கள் வளர்ப்பு, வேளாண் காடு வளர்ப்பு ஆகிய தொழில்கள் மூலம் ஆண்டு முழுவதும் வேலைவாய்ப்பினை அளிக்கவும் மானாவாரி நில விவ சாயிகள் பொருளாதார முன்னேற்றத்திற் காகத் தேசிய மானாவாரி நீர்ப்பிடிப்புப் பகுதி நில மேம்பாட்டுத் திட்டம் செயல் படுத்தப்பட்டு வருகிறது.

தேர்ந்தெடுக்கப்பட்ட நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் அக்கிராமத்தில் தேர்ந் தெடுத்த ஒரு உழவர் நண்பருக்கு வேளாண்மை, கால்நடைப் பராமரிப்பு, பழச் சாகுபடி, மரச் சாகுபடி, மண் வளம், நீர்வளப் பாதுகாப்பு முறைகள் பற்றிய தொழில் நுட்பப் பயிற்சி அளிக் கப்படுகிறது. பயிற்சி பெறும் உழவர் நண்பன் அந்தந்தக் கிராமங்களில் மற்ற விவசாயிகளுக்குப் பயிற்சி அளிப்பார்கள்.

தென்னார்க்காடு மாவட்டத்தில், பண்ணுருட்டி, வல்லம், மேல்மலையனூர் வட்டாரங்களில் இத்திட்டம் செயல்படுத் துப்படுகிறது. இது மத்திய அரசு உதவி யுடன் செயல்படுத்தப்படுகிறது. வெட்டி வேர் நடுதல், மரக்கன்றுகள் நடுதல், தடுப்பு தீவனப் பயிர்கள் சாகுபடி, ...

செய்தல், விவசாயிகளுக்குப் பயிற்சி செயல் விளக்கங்கள் ஆகிய பணிகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது.

பண்ணுருட்டி வட்டம் வேகாக்கொல்லைக் கிராமத்தில் 1,036 எக்டேர் பரப்பில் 1992-93-ஆம் ஆண்டிற்கு ரூ.1.63 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதில் 665 விவசாயக் குடும்பங்கள் பங்கு பெற்றுப் பலன் அடைகின்றனர்.

### டான்வா - பண்ணை மகளிர் திட்டம்

இத்திட்டம் டென்மார்க் நாட்டின் பண உதவியுடன் 1986-ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் ஏழாண்டுக் காலத் திட்டமாகத் தமிழகத்தில் ஆறு மாவட்டங் களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தென்னார்க்காடு மாவட்டத்தில் உழவர் பயிற்சி நிலையத்தின் மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

### நோக்கம்

1. பண்ணை மகளிருக்குப் புதிய தொழில் நுட்பங்களைத் தெரிவித்தல்.
2. செயல் விளக்கங்கள் மூலம் செய்து காட்டுதல்.
3. பயிற்சி பெற்றவர்கள் மற்றவர் களுக்கு எடுத்துக் கூறுதல்.

இதனால், வேளாண்மை உற்பத்தி யைப் பெருக்கவும், சமுதாயத்தில் வேளாண் மகளிரின் நிலையை உயர்த் தவும் முடிகிறது. இத்திட்டத்தில் பண்ணை மகளிருக்குப் பலவிதப் பயிற்சி களும் அளிக்கப்படுகின்றன.

## தமிழகப் போக்குவரத்துக்கழகப் பேருந்துகளில் 62 சதம் பயணிகள்



தமிழ்நாட்டிலுள்ள அரசு போக்கு வரத்துக் கழகங்களிலுள்ள பேருந்து களின் மொத்த எண்ணிக்கை 14,514. இந்தப் போக்குவரத்துக் கழகங்களில் மொத்தம் 1.10 இலட் சம் பணியாளர்கள் பணியாற்று கிறார்கள். சுமார் 2 கோடி நபர்கள் நாள்தோறும் அரசுப் போக்கு வரத்துக்கழகப் பேருந்துகளில் பயணம் செய்கிறார்கள். தமிழ்நாட்டின் மக்கட் தொகையில் 62 சதவிகிதம் அரசுப் பேருந்துகளில் பயணம் செய்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

-மேற்கண்ட தகவலை மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு.கே.ஏ.செங்கோட்டையன் அவர்கள் சட்டமன்றத்தில் தெரிவித்தார் (6.4.93).

தமிழ்நாட்டில் மொத்தம் 43,695 ஆட்டோ ரிக்ஷாக்கள் தற்சமயம் ஓடுகின்றன.

நோக்கப்பட்டதாகும். அந்த மாலையில் ஆங்கிலப் பேரரசர்களின் பொற்காசுகளும் இரண்டாம் நெப்போலியனின் பொற்காசும் சேர்ந்திருக்கின்றன.

கோட்டகம் புதையலோ ரோமானியர்களுடைய பொற்காசுகளாகும். இந்தப் புதையலில் பதினாறு காசுகள் குழாய் வைத்ததாகும். அதில் நான்கு காசுகளின் குழாய்கள் விழுந்துவிட்டன. இதிலிருந்து இந்துப் பொற்காசுகள் கழுத்தில் அணியும் மாலைக்குப் பயன்பட்டிருக்கின்றன என்பது புலனாகிறது.

இவற்றின் குழல்கள் பொன் தகட்டால் செய்யப்படாமல் பொன் கம்பியை ஒரு பெரிய கம்பியின் மீது நெருக்கமாகச் சுற்றி அதைப் போதுமான அளவிற்கு வெட்டி எடுத்து ஒவ்வொரு காசின் விளிம்பிலும் இணைத்துப் பயன்படுத்தி இருக்



கின்றனர். இதே போன்ற பாணியைக் காசுகளின் குழல்களில் தென்னார்க்காட்டில் பயன்படுத்துகின்றனர். கம்பி போன்று பொற்காசின் குழாயின் தகட்டில் கோடு கீரியுள்ளனர். இது பண்டைய கம்பி பாணியை நினைவுபடுத்துவதாகும்.

இவ்வாறு அல்லாமல் சில பொற்காசுகளின் விளிம்பின் உட்பகுதியில் [illegible] இட்டு அதனூடே நுலைக்கோத்து பதக்கமாக அணிந்திருக்கலாம் என எண்ண இடமேற்படுகின்றது. ஏனெனில் சில பொற்காசுகளின் விளிம்பில் இரண்டு துளைகள் காணப்படுகின்றன. இந்தப் புதையலுடன் ஒரு பொன் மோதிரமும் கிடைத்தது. இந்த மோதிரத்தைச் சுற்றிலும் பதின்மூன்று வெள்ளைக் கற்கள் அணிசெய்கின்றன.

கோட்டகம் புதையலில் கிடைத்த ரோமானியப் பொற்காசுகளின் முன் பக்கங்களில் பொதுவாக மன்னன் அல்லது அரசி இவர்களுடைய தலைகளும் பின் பக்கங்களில் தேவதைகளின் உருவங்களும் விலங்கினங்களும் பொறிக்கப்பட்டிருக்கின்றன. ஒரு பொற்காசின் முன் பக்கத்தில் அகஸ்டினா அகஸ்டா என்ற பொறிப்பும் மறுபக்கத்தில் ஒருவர் ஒரு குதிரை மீது சவாரி செய்வதாகவும் பொறிக்கப்பட்டிருக்கின்றது.

அகஸ்டஸின் நாணயத்தின் முன்பக்கத்தில் அவருடைய தலை மட்டும் உள்ளது; மறுபக்கத்தில், நான்கு குதிரைகள் பூட்டிய வண்டியில் ஒருவர் சவாரி செய்கின்றார்.

டெஸ்பாசினஸினுடைய காசின் மறுபக்கத்தில் இதேபோன்று பொறிப்புள்ளது. இந்த வண்டியின் கீழே விக்டோரியா என்ற பொறிப்பைக் காணலாம்.

நீரோ சீசருடைய பொற்காசின் மறுபக்கத்திலும் வேறு ஒரு மன்னனுடைய பொற்காசின் மறுபக்கத்திலும் ஐரோப்பாவிற்கே உரிய நீண்ட உடலையும் சிறிது கீழ் அழுந்திய முதுகையும் குட்டையான கொம்புகளையும் உடைய எருதின் உருவம் பொறித்துள்ளனர். மற்றொரு காசின் மறுபக்கத்தில் கருடன் இறக்கையை விரித்து நிற்கின்றது.

தியாபௌஸ்டினா என்ற பெண்ணரசியின் காசின் மறுபக்கத்தில் தோகையை விரிக்காத மயில் தன்னுடைய தலையைப் பின் பக்கமாகத் திருப்பிப் பார்க்கின்ற உருவம் பதிக்கப்பட்டிருக்கின்றது.

இவ்வாறு அன்றைய பொற்காசுகளில் விலங்கினங்கள் பொறிப்பையும் பொற் காசுகள் மாலையாகப் பயன்பட்டதையும் நாம் அறியலாம். ●

—— ●● ——

## தமிழ்நாடு வக்ஃப் வாரியத்துக்குப் புதிய உறுப்பினர்கள்

தமிழ்நாடு வக்ஃப் வாரியத்துக்கு மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 11 உறுப்பினர்களை நியமித்துள்ளார்.

வக்ஃப் வாரியத் தனி அதிகாரியின் பதவிக் காலம் முடிவதையடுத்து, இந்த நியமனத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார். இந்தப் புதிய உறுப்பினர்களின் பதவிக்காலம் 16.3.1993 முதல் 5 ஆண்டுகள் ஆகும்.

புதிய உறுப்பினர்களின் விவரம் வருமாறு:

1. ஆர்க்காடு இளவரசரும் சென்னை நகர முன்னாள் செரீப்பும் ஆன திரு. நவாப்ஜாதா முகமது அப்துல் அலி.
2. அரசின் தலைமைக் காஜி திரு. ஹாஜி சலாவுதீன் முகம்மது அயூப்.
3. ஷியா காஜி திரு. மௌலானா மௌலாவி குலாம் அஷ்காரி அலிகான்.
4. திரு. எல்.கே.எஸ். சையது அகமத்.
5. திரு. கே.வி.எம். அப்துல் கரீம்.
6. திரு. ஆளூர் ஜலீல்.
7. திரு. ஹாஜி பி.சி. அப்துல் காதர் மரக்காயர்.
8. திரு. ஜி.எஸ்.பி. சையத் மீரான் சாகிப்.
9. திரு. கரூர் சாகுல் அமீத்.
10. திரு. ஓ.எஸ். சையத் மசூத்.
11. திரு. எம்.கே. ஹாஜா நஜிமுதீன்.

—— ●● ——



# ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்

**வெ. இறையன்பு, இ.ஆ.ப.,**
கூடுதல் ஆட்சியர் (மேம்பாடு)
மாவட்ட ஊரக மேம்பாட்டு முகமை
கடலூர்

வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ள மக்களை மேம்படச் செய்வதே ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் நோக்கமாகும். இந்தத் திட்டத்தில் பயனடையும் பயனாளிகள் அனைவரும் கிராமப்புறத்தில் வசிப்பவராகவும், குடும்ப ஆண்டு வருமானம் ரூ.8,500-க்கு மிகாமலும் இருக்க வேண்டும். ஒவ்வொரு ஊராட்சிக்கும் தேர்வு செய்யப்பட்ட வேண்டிய பயனாளிகளின் எண்ணிக்கை அந்த ஊராட்சியின் மக்கட்தொகை அடிப்படையில் நிர்ணயம் செய்யப்படுகிறது.

இந்தத் திட்டத்தில் தேர்வு செய்யப்படும் பயனாளிகளில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு மொத்தக் கடனில் 50 சதவிகிதம் மானியமாக அளிக்கப்படும் மொத்த மானியம் ரூ.5000 வரை மட்டுமே மானியமாக வழங்கப்படும்.

பயனாளிகள் உடல் ஊனமுற்றவர்களாக இருப்பின், எந்த வகுப்பைச் சார்ந்தவராக இருப்பினும் மொத்தக் கடனில் 50 சதவிகிதம் மானியமாக அளிக்கப்படும் மொத்த மானியம் ரூ.5000 வரை வழங்கப்படும்.

இதர வகுப்பினருக்குச் சிறு விவசாயிகளுக்கு 25 சதவிகிதம் மானியமாகவும், குறுவிவசாயிகளுக்கு 33 1/3 சதவிகிதம் மானியமாகவும், மொத்த மானியம் ரூ.3000-க்கு மேற்படாமல் வழங்கப்படும். 1992-93-ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு மொத்த இலக்கு 11151. நிதித்திறன் 394.148.

இம்மாவட்டத்தில் இத்திட்டத்தின் கீழ் பிப்ரவரி 1993 முடிய 9123 பயனாளிகளுக்கு 313.70 இலட்சம் மானியமாகச் செலவிடப்பட்டுள்ளது. ரூ.418.39 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

### கிராமப்புற மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டம் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தில் ஒரு அங்கமாகும். சிறு தொழில் மற்றும் வியாபார ரீதியில் மகளிருக்கு ஊக்கமும் ஆக்கமும் தந்து பொருளாதார நிலையை உயர்த்த வகுக்கப்பட்ட ஒரு சிறந்த திட்டமாகும். குடும்பத்தில் வருவாய் ஈட்டக்கூடியவராகவும், சமூகத்தில் தன்னம்பிக்கையும், செயல் திறனும், இல்லத்தை மேம்படுத்தும் மகளிராகவும் விளங்க இத்திட்டம் உதவுகின்றது.

கிராமப்புற மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தில் 10 முதல் 15 மகளிர் சேர்த்து குழுவாக அமைத்து ஒன்றாக உழைத்து வருமானம் பெறக்கூடிய தொழில்களுடன் கூடிய வியாபாரம் செய்து அதன் மூலம் மகளிர் அனைவரும் தொடர் வேலை செய்யவும், உற்பத்தி செய்யப்படும் பொருட்களை விற்பனை செய்து கிடைக்கும் லாபத்தை அனைவரும் ஒன்றாகப் பகிர்ந்து குடும்ப வருவாய் பெருகிட பொருளாதார உயர்வு உண்டு பண்ணுவது இத்திட்டத்தின் முக்கியக் குறிக்கோளாகும்.

இத்திட்டத்தின் இதுநாள்வரை 513 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. தற்போது (1992-93) 40 குழுக்கள் அமைத்து ஆக மொத்தம் 543 குழுக்களில் 9845 மகளிர் அங்கத்தினர்களாக உள்ளனர். இக்குழு உறுப்பினர்கள் 33 வகையான தொழில்கள் செய்து வருகின்றனர். இவர்களுக்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தில் 50 சதவிகித மானியம் வழங்கப்படுகிறது.

### கிராமப்புற இளைஞர்களுக்கான சுயவேலை வாய்ப்புத் திட்டம்

இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் கிராமப்புறங்களில் உள்ள வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள இளைஞர்களுக்குப் போதிய திறமையும், தொழில் நுட்ப அறிவும் கிடைக்கும் வகையில் பயிற்சி அளித்து இவர்கள் சுயமாகத் தொழில் தொடங்க வழிவகை செய்வதாகும். தேர்ந்தெடுக்கப்பட்ட தொழில்களில் பயிற்சியளித்து அவர்கள் சிறு தொழில்கள் துவங்கவும், விவசாயம் மற்றும் சார்ந்த தொழில்களில் சுய தொழில் செய்யவும் இத்திட்டம் கிராமப்புற இளைஞர்களுக்கு வழிவகுக்கும்.

வயது வரம்பு: 18 முதல் 35 வரை, ஒதுக்கீடு: தாழ்த்தப்பட்ட வகுப்பினர் பழங்குடியினர் - 50 சதவிகிதம்,



# கோவை - ஊட்டி தினசரி சுற்றுலா!

தமிழக அரசு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், தமிழகத்தின் தொழில் நகர் கோவையில் இருந்து மலை அரசி ஊட்டிக்குக் கோடைக் கால தினசரிச் சுற்றுலாவை - 25.4.93 அன்று காலை, கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு சி.வி. சங்கர், இ.ஆ.ப., அவர்களால் பச்சைக்கொடி காட்டித் தொடங்கி வைக்கப்பட்டது.

கோடைக் காலத் தினசரிச் சுற்றுலாவின் முதல்கட்டமாக, குன்னூர் 'சிம்ஸ் பார்க்' என்ற பூவகைகளும், மர வகைகளும் நிரம்பிய புதுமையான பூங்காவைப் பார்க்கிறோம். ஐரோப்பிய சூழ்நிலையைப் படம்பிடித்து வைத்தது போன்று, அமைந்துள்ள இப்பூங்கா, 1874-ஆம் ஆண்டு ஆங்கிலேயர்களால் அமைக்கப்பட்டது. கடல் மட்ட உயரம் 1,780 மீட்டர். பூங்காவின் பரப்பளவு 12.14 எக்டேர். 85 தாவரக் குடும்பங்களும், 1000 தாவரங்களும் இங்கே வாழ்ந்து, வருவோர்க்கு வண்ணப் பசுமை விருந்தை வாரி வழங்கி வருகின்றது. இதனைக் கண்டு சுற்றுலா வந்தோர் தங்கள் உள்ளத்தைப் பறிகொடுத்து நின்றனர். அடுத்து, பேருந்து ஊட்டி சென்றது.

சுற்றுலாக் கழகத்தின் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் படகு வீட்டைப் (Boat House) பார்க்கிறோம். வீட்டில் வாழ்ந்து மண்வாசனை சுவாசித்து பழகியவர்கள், சில மணி நேரங்கள் தண்ணீர்சூழ் படகு வீட்டில் குடியிருந்து பரவசப்படுவதற்கு வாய்ப்புள்ள இடம் இது.

அகன்ற ஏரி - மிகுந்த நீர்ப் பரப்பு நீர்ப்பாப்பில் மலர்கள் - பறவை மற்றும் பல வடிவங்களில் சிறுசிறு தோணி! சுற்றுலாப் பயணிகளே இயக்குகின்ற படகும், அதற்குரிய ஓட்டுநர்கள் இயக்குகின்ற படகும் உண்டு. இயற்கை வனப்பைக் கண்டுகளிக்க சிறிய, சிங்கார இரயில் உண்டு. ஊர்ந்து செல்லும் இரயிலில் அமர்ந்து பயணிகள் இருபக்கமுள்ள இயற்கை அழகைப் பருகிவிட உரியதாக இருக்கும், புகைவண்டி இயக்கமும், சிறப்புக்குரியதான ஒன்று. பறவைகளும் அங்கங்கே பறந்து இன்பம் பயக்கின்றது. சின்ன இரயிலில் செல்லும் போது நாமும் சின்னவர்களாகின்றோம். சிறகடித்துப் பறக்கின்றோம்

ஊட்டியை அடுத்த தொட்டபெட்டா சிகரம் செல்கிறோம். அடர்ந்த பனியும், வளர்ந்த பச்சைப் புல்லினமும் அலங்கரிக்கும் சிகரங்கள், சிரசுகளைச் சிகரங்களில் இருந்து நேருக்கு நேர் தம்மைப் பார்க்க வைக்கும் இயற்கை விஞ்ஞானத்தின் விந்தையான படைப்புதான் தொட்டபெட்டா மலைச் சிகரம். மலை மீது நின்று மலை முடிகளைக் காணுகின்ற சுற்றுலாப் பயணிகள், மலைமகளின் உற்சாக ஊஞ்சலாகத் தொட்டபெட்டா திகழ்கின்றது என மனமாரப் புகழ்ந்தார்கள்.

பின்னர், ஊட்டி வந்து தாவரவியல் பூங்காவினைப் பார்த்தோம். பூக்களில் இத்தனை விதமா; இத்தனை நிறமா; இத்தனை இனமா; பசுமையில் இத்துணை வர்ண ஜாலங்களா என்று காணவரும் அனைவரின் சிந்தையைச் செயலற்றதாக்கி - பூக்களும் - தாவரங்களுமே சுற்றுலாப் பயணிகளின் உயிரோட்டத்தில் கலந்து விடுகிறது. கல்லாகிப் போன மரங்கள் காட்சி தருகின்றன. 5 அடி உயரம் நறுக்கப்பட்டு வளர்க்கப்பட்ட சவுக்கின் ஊசி இலைகளில் வடிக்கப்பட்ட மிருக வடிவங்கள இயற்கைக்கு எழில் கூட்டும் வகையில் மனிதனின் கைத்திறமும் உதவுகிறது என்பதைக் காண முடிகிறது. வெட்டப்பட்டு வளர்க்கப்படும் சவுக்கு வகைகளினால் மதில் சுவர்கள், கட்டப்படாமல் வளர்க்கப்படுகிறது. அந்தத் தட்பவெட்ப நிலைகளில் மட்டுமே தயாராகும் அந்தக் காட்சிகளை வேறு எங்கும் காண்பதற்கில்லை.

இயற்கை எழிலை ஆராதித்த மனநிறைவோடு சுற்றுலாப் பயணிகள், இரவு கோவை வந்தடைந்தனர். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சுற்றுலாவைத் திறம்பட அமைத்துள்ளதை, சுற்றுலாப் பயணிகள் பாராட்டினார்கள். கோவை-ஊட்டி தினசரிச் சுற்றுலா, பயணிகளுக்கு மலையரசியைக் காணும் பேறு என்றால் மிகையாகாது!

-எம். ராஜேந்திரன்
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கோயம்புத்தூர் மாவட்டம்



**அடுத்த இதழில்...**

அரசு கண் மருத்துவமனை இயக்குநரும், கண் காணிப்பாளருமான டாக்டர் வி.எம். லோகநாதன் அவர்கள் வழங்கும் வாசகர்களின் கேள்விகளுக் கான பதில்கள் இடம்பெறும்.



## TNPSC

விளம்பர எண்.19/93

கீழ்க்காணும் பதவிகளுக்கு நேரடித் தேர்வின் மூலம் நியமனம் செய்யப்பட விண்ணப்பங்கள் 7.6.1993 அன்று மாலை 5.45 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

**(1) தமிழ்நாடு மக்கள் நல்வாழ்வு மற்றும் காப்பு மருந்துப்பணியில் நல்வாழ்வு அலுவலர் (Health Officer)**

**சம்பளம்:** மாதம் ஒன்றுக்கு ரூபாய் 2500-75-3100-100-4200

**காலியிடங்கள்: 16**

ஆதிதிராவிட வகுப்பினர்:- 3 (ஒரு காலியிடம் பெண்களுக்கென ஒதுக்கப்பட்டது)

மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர்:- 3 (ஒரு காலியிடம் பெண்களுக்கென ஒதுக்கப்பட்டது)

பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்:- 4 (ஒரு காலியிடம் பெண்களுக்கென ஒதுக்கப்பட்டது)

பகிரங்கப் போட்டி: 6 (இரண்டு காலியிடங்கள் பெண்களுக்கென ஒதுக்கப்பட்டது)

**குறிப்பு:** தெரிவு செய்யப்பட, தேர்ச்சியும் தகுதியும் வாய்ந்த பெண் விண்ணப்பதாரர்கள் கிடைக்கப் பெறாவிடில் அக்காலியிடங்கள் ஆண் விண்ணப்பதாரர்களால் நிரப்பப்படும்.

**வயது:** 1.7.1993 அன்று 35 வயதிற்குக் குறைவாக.

**குறிப்பு:** (1) கல்வித்தகுதி சலுகை

**Degree** - No age limit for Scheduled Castes, Scheduled Tribes, Most Backward Classes/Denotified Communities, Backward Class and Destitute Widows of all Castes.

**Diploma** - No age limit for Scheduled Castes, Scheduled Tribes, Most Backward Classes/Denotified Communities, Backward Classes and Destitute Widows of all Castes if they have obtained the Diploma after passing Pre-Technical Course/PUC/H.S.C. The prescribed age limit will be increased by five years in respect of Scheduled Castes, Scheduled Tribes or in respect of Destitutes Widows of all Castes who have obtained the Diploma after passing S.S.L.C.

(Some more Concessions are given below)

(ii) The period of services rendered by a candidate as Short Services/Regular Commissioned Officer in the Army Medical Corps will subject to a maximum period of five years be excluded in computing his age.

**தகுதி:** 7.4.1993 அன்றுள்ளபடி (அடியிற் குறிப்பிட்டுள்ளவை அல்லது அவற்றின் இணையானவை).

(1) B.S.Sc. degree or the Diploma in Public Health of the University of Calcutta.

or

(2) A certificate of having undergone a special Course of training in Sanitary Science in the Medical College, Madras for a period of not less than one year and of having passed the examination for Licenceiate in Public Health held at the end of that courses.

or

(3) If fully qualified candidate are not available up to the number required application from candidates possessing the M.B.B.S. degree or from candidates possessing the Diploma in Medicine and Surgery or the Diploma of L.M.P. granted by the Board of Examiners, Medical College Madras will be considered for selection subject to certain conditions.

**(2) தமிழ்நாடு தொழிற்சாலைப் பணியில் உதவித் தொழிற்சாலை ஆய்வாளர்**
(Assistant Inspector of Factories)

பெண்கள் - 40 சதவிகிதம், உடல் ஊன முற்றோர் - 3 சதவிகிதம். 1992-93-இல் இத்திட்டத்தின் கீழ் இம்மாவட்டத்திற்கு 1,860 கிராமப்புற இளைஞர்களுக்குப் பயிற்சியளிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இதுநாள்வரை 1,860 நபர்கள் பயிற்சி பெற்று வருகிறார்கள். மேலும் 69 பயிற்சி நிறுவனங்களின் மூலம் பயிற்சி யளிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கான மொத்த நிதி ஒதுக்கீடு ரூ.42.18 இலட்சம், இதுவரை செலவு செய்தது ரூ.36.062 இலட்சம்.

**ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம்**

மத்திய அரசின் வேலை வாய்ப்புத் திட்டத்தையும், கிராம மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யச் சில சிறப்புத் திட்டங்களையும் இணைத்து மாநில அரசுசெயல்படுத்துவது இத்திட்டத்தின் சிறப்பு அம்சமாகும்.

இத்திட்டத்தினை நடப்பு ஆண்டில் நல்முறையில் செயல்படுத்த ஊரக வளர்ச்சி இயக்குநரால் தெளிவான வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கப்பட்டு, இதன்படி செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்திற்கான நடப்பு ஆண்டுக்கான மொத்த நிதி ஒதுக்கீடு - 2475.13 இலட்சம். இதுநாள் வரை 1966.21 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.



மேலும் இத்திட்டத்தில் கீழ்க்கண்ட இனங்களில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தொகுப்பு வீடுகள் - 3400, புதிய பள்ளிக் கட்டடங்கள் - 62, ஊராட்சி மன்றக் கட்டடங்கள் - 88, சத்துணவுக் கட்டடங்கள் - 62, மெட்டல் சாலைகள் - 200 கி.மீ., ஜீவன்தாரா கிணறுகள் (1991-92- ஆம் ஆண்டில் அனுமதித்தது) - 750, இதர வேலைகள் 80 சதவிகிதம், ஊராட்சி வேலைகள் - 700.

**சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டம்**

இயற்கையின் எழிலை வளப்படுத்தவும், சுற்றுப்புறச் சூழல் மாசைக் கட்டுப்படுத்தவும், கிராம மக்களுக்கு எரி பொருள் தேவையினைப் பூர்த்தி செய்யவும், கால்நடைகளுக்குத் தீவனம் கிடைக்கவும் 1981 முதல் இம்மாவட்டத்தில் சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வரப்படுகிறது.

இம்மாவட்டத்தில் சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின் கீழ் தொகுப்புத் தோட்டங்கள் 48,438 எக்டேரிலும், தீவனம் சாலையோரத் தோட்டங்கள் 1·035 எக்டேரிலும், இடைபடு காடுகள் தோட்டங்கள் 150 எக்டேரிலும் வளர்க்கப்பட்டு வருகின்றன. 1991-92-ஆம் ஆண்டில் சமூகக் காடுகளினால் கிடைக்கப்பட்ட வருவாயில் 34 ஊராட்சி ஒன்றியங்களுக்கு ரூ.75,52,300 வழங்கப்படவுள்ளது. இத்திட்டத்திற்கு நடப்பு நிதியாண்டில் ரூ.76.18 இலட்சம் ஒதுக்கப்பட்டு, இதுநாள் வரை 56.10 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.'

**சாண எரிவாயுக் கலன் அமைக்கும் திட்டம்**

சாணம் மற்றும் மக்கியப் பொருள்களிலிருந்து தயாரிக்கப்படும் எரிவாயு சாண எரிவாயு எனப்படுகிறது. இவ்வாயுவைத் தயாரிக்க மூன்றுவகைச் சாதனம் உள்ளது. டிரம் மாடல், டூம் மாடல், ரிங் மாடல்.

கலன் அமைக்க வங்கி மூலம் கடனும், மாவட்ட ஊரக மேம்பாட்டு முகமையின் மூலம் மானியமும் கீழ்க்கண்டுள்ளவாறு வழங்கப்படுகிறது. கலன் பழுதடைந்துவிட்டாலும் இதனைச் சரிசெய்ய ஈட்டுத் தொகை வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் நடப்பு ஆண்டில் 680 கலன்கள் அமைக்கக் குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதுவரை 103 கலன்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**தூளா அடுப்பு அமைக்கும் திட்டம்**

சமையல் செய்வதற்குத் தேவைப்படும் விறகுகளுக்கான மரங்களை அதிக அளவில் வெட்ட வேண்டிய சூழ்நிலையைத் தவிர்க்கும் பொருட்டு, மைய அரசினால் சூளா திட்டம் அமல்படுத்தப்படுகிறது. இதன்மூலம் அதிகமாக விறகுகளைப் பயன்படுத்தத் தேவையில்லை. இவ்வித அடுப்புகளைப் பயன்படுத்துவதால் வீட்டில் கரிப்பிடிக்காது. எரி பொருட்கள் செலவும் குறையும். இத்திட்டத்திற்கான மொத்தக் குறியீடு - 7000. இதுவரை 4359 சூளா அடுப்புகள் முடிக்கப்பட்டுள்ளன

மாண்புமிகு முதல்வர் அவர்களால் இச்சிறப்புமிகு திட்டம் தமிழகத்தில் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்துக்கும் ரூபாய் ஒரு கோடி எனத் திட்டமிடப்பட்டு இதுவரை வளர்ச்சியைக் காணாத ஊரகப்பகுதிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை அளிப்பதற்கான கால இலக்குடன் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டம் 1991-92 மற்றும் 1992-93 இவ்விரண்டு ஆண்டுக்கும் உரிய திட்டம். இச்சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் - சாலை மேம்பாட்டுப் பணிகள் (ஊரகச் சாலைகள் மற்றும் பேருந்துச் சாலைகள்), குடிநீர் விநியோகத் திட்டம், தெரு விளக்குகள் அமைத்தல், சிறு பாசனக் குளங்கள், கசிவு நீர்க்குட்டைகள் சீரமைத்தல், துவக்கப் பள்ளிகளுக்கான பள்ளிக் கட்டடங்கள், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுக் கூடங்கள், தொலைக்காட்சிப் பெட்டிகள் (வண்ணம்) அளித்தல் ஆகிய பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, அமல்படுத்தும் அரசுத் துறைகளுக்குக் கால இலக்கு நிர்ணயிக்கப்பட்டு முடித்திட உரிய வழிகாட்டு நெறிமுறைகள் அரசினால் அளிக்கப்பட்டுச் செவ்வனே நடைபெற்று வருகிறது.

தென்னார்க்காடு மாவட்டத்திற்கு 1·991-92-ஆம் ஆண்டுக்கு ரூ.1486.54 இலட்சம் பெறப்பட்டு ரூ.1302.83 இலட்சம் இதுவரை செலவிடப்பட்டு மேற்குறிப்பிட்ட அடிப்படை வசதிகள் கிராமப்புறங்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. 1992-93-ஆம் ஆண்டுக்கு ரூ.1071.013 இலட்சம் பெறப்பட்டு திட்டத்தினைச் செயல்படுத்தும் துறைகளுக்குப் பிரித்தளிக்கப்பட்டு காலக்கெடுவுக்குள் முடித்திட உரிய நெறிமுறைகள் வழங்கப்பட்டு, சிறப்புமிகு திட்டமான சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் சீரிய முறையில் இம்மாவட்டத்தில் நடைபெற்று வருகிறது.

## இந்தியாவிலேயே முதல் பெண் பேருந்து ஓட்டுநர்!

கன்னியாகுமரி மாவட்டம், கடம்பாவிளை
வீடு, ரீத்தாபுரத்தைச் சேர்ந்தவர் திருமதி
எம். வசந்தகுமாரி. இவர் நேசமணி போக்கு
வரத்துக் கழகத்தில் ஓட்டுநர் நேர்முகத் தேர்வுக்கு
அழைக்கப்பட்டார். ஆனால், நேர்முகத் தேர்வின்
போது இவருக்கு ஒட்டுநருக்கான உயரம் இல்லை
என இவரது மனு தள்ளுபடி செய்யப்பட்டது.
ஆனால் இவர் நேசமணி போக்குவரத்துக் கழகத்
தின் நிர்வாக இயக்குநருக்கு, தான் ஒரு சிறந்த
ஓட்டுநர் என்றும், தனது மனுவைத் தனி மனு
வாகக் கருதி தனக்கு ஓட்டுநர் பதவி அளிக்க
வேண்டும் என்றும்கேட்டுக் கொண்டிருந்தார்.

இவரது மனுவைத்தனி மனுவாகக் கருதி நேர்
முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டபோது, இவர்
ஆண் ஓட்டுநருக்கு நிகராகச் சிறந்த ஓட்டுநராக
இருந்ததைக் கண்டு இவரது தேர்வு நிலையைப்
பரிந்துரைத்து, மாண்புமிகு முதல்வர் டாக்டர்
ஜெ. ஜெயலலிதா அவர்களுக்குத் தெரிவிக்கப்
பட்டது.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்
இவரது தேர்வு நிலையைக் கனிவுடன் பரிசீலித்து,
திருமதி வசந்தகுமாரிக்கு ஓட்டுநர் பதவி வழங்
கலாம் என உத்தரவிட்டதன் பேரில், 30.3.93
அன்று தலைமைச் செயலகத்தில் கன்னியாகுமரி
மாவட்ட நேசமணி போக்குவரத்துக் கழகத்தில்
பேருந்து ஓட்டுநர் நியமன உத்தரவை, திருமதி
வசந்தகுமாரிக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள்
வழங்கினார்!

இந்தியாவிலேயே ஒரு பெண்மணி பேருந்து
ஓட்டுநராக நியமிக்கப்பட்டு இருப்பது, இதுவே
முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.





# தென்னார்க்காடு மாவட்டத்தில் கனி செல்வங்கள்

கல்வராயன் மலையைத் தவிர, தென்னார்க்காடு மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளும் சமவெளியாகவே காட்சியளிக்கிறது. இம்மாவட்டத்தில் கனிம வளங்கள் பரவலாக அமைந்துள்ளது. இங்கு , ஜல்லிக் கற்கள், கிரானைட், சிலிகா மணல், சுண்ணாம்பு போன்ற பல கனிமப் பொருட்கள் கிடைக்கின்றன.

இம்மாவட்டத்தில் ஓடும், தொண்டியாறு, பெண்ணையாறு, கடிலம், மணிமுக்தா, கோமுகி ஆகிய ஆற்றின் ஓரங்களில் ஏராளமான மணல் கிடைக்கின்றது. இங்கு 16 இடங்களில் மணல் தோண்டி எடுக்கப்படுகிறது. இதனால் அரசுக்குக் கணிசமான வருமானம் கிடைக்கிறது.

ஜல்லிக் கற்களைப் பொறுத்தவரையில் இம்மாவட்டத்தில் 45 இடங்களில் வெட்டி எடுக்கப்படுகின்றன.

செஞ்சி, திண்டிவனம், கள்ளக்குறிச்சி, விழுப்புரம் தாலுக்காக்களில் பல வண்ண கிரானைட் கற்கள் கிடைக்கின்றன.

இங்கே கிடைக்கும் கிரானைட் கற்கள் பெரும்பாலும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. திண்டிவனம், விழுப்புரம், கள்ளக்குறிச்சி தாலுக்காக்களில் கருப்பு கிரானைட் கற்கள் வெட்டியெடுக்கப்பட்டு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

தென்னார்க்காடு மாவட்டம் குன்னம் எனுமிடத்திலிருந்து வெட்டி யெடுக்கப்படும் கிரானைட் கற்கள் உலகப் பிரசித்தி பெற்றவை.

ஜப்பானில் வாழும் பெரும் செல்வந்தர்கள், "தங்களது கல்லறையை, குன்னம் கிரானைட் கற்கள் கொண்டு எழுப்ப வேண்டும்" என்று உயிலில் குறிப்பிடும் அளவிற்கு, குன்னம் கிரானைட் கற்கள் பிரசித்தி பெற்றவை ஆகும்.





இம்மாவட்டத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் கிரானைட் கற்களினால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு சுமார் ரூ.6 கோடி அந்நியச் செலாவணியாகக் கிடைக்கிறது.

திண்டிவனம் தாலுகா கடற்கரைப் பகுதிகளில் சிலிகா மணல் (Silica Sand) ஏராளமாகக் கிடைக்கின்றது.

இனி வருங்காலத்தில், இம்மாவட்டத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் கனிமப் பொருட்களின் மூலம் நம் நாட்டிற்கு ஏராளமான அந்நியச் செலாவணி கிடைக்கப்போவது திண்ணம்.

— என். இளங்கோ

ஆசிரியரும் வெளியிடுபவரும்: இரா. சம்பத், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி: தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002

எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள் வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தை அணுகவும்.

**சம்பளம்:** மாதம் ஒன்றுக்கு ரூபாய் 1640-60-2600-75-2900

காலியிடங்கள்: 2
பகிரங்கப் போட்டி: 1
ஆதிதிராவிட வகுப்பினர்: 1

**வயது:** 1.7.1993 அன்று 30 வயதிற்குக் குறைவாக.

**குறிப்பு:** ஆதிதிராவிட வகுப்பினர், பழங்குடி வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர் மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் எல்லா வகுப்பு ஆதரவற்ற விதவைகளுக்கும் வயது வரம்பு இல்லை.

(சலுகைகள் பற்றிய மேலும் சில விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன).

**தகுதி:** 27.4.1993 அன்றுள்ளபடி (கீழ்க்காண்பவை அல்லது அவற்றின் இணையானவை).

A Degree in Mechanical, Electrical or Chemical Engineering or Textile Technology.

(இரண்டு பதவிகளுக்கும் பொருந்தும்)

**குறிப்புகள்:** (1) இப்பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளைப் பெற்றிருந்து, குறைந்தபட்ச மதிப்பெண் களைப் பெறுவதன் மூலம் தெரிவுக்குத் தகுதியானவராகக் கருதப்படும் ஆதரவற்ற விதவைகள் அவர்களை விட அதிக மதிப்பெண்களைப் பெற்றிருப்பவர்களைக் காட்டிலும் முன்னுரிமை வழங்கப்பட்டு தெரிவு செய்யப்படுவார்கள்.

**விளக்கம்:** 'ஆதரவற்ற விதவை' என்பது, வாழ்வதற்குத் தனக்கென்று எந்தவொரு வழியும் இல்லாதவரும், பட்டினியிலிருந்து தன்னைக் காப்பாற்ற எந்தவொரு ஆதரவாளரும் இல்லாதவரும் ஆன விதவையைக் குறிப்பதாகும்.

(2) 19.9.89/4.9.90 நாளிட்ட தேர்வாணையத்தின் அறிவிக்கைக்கிணங்க நல்வாழ்வு அலுவலர் (Health Officer) உதவி தொழிற்சாலை ஆய்வாளர் (Assistant Inspector of Factories) பதவிக்கு நியமனம் செய்யப்பட ஏற்கெனவே விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரர்கள் மற்றபடி தகுதியானவர்களாயிருந்து அவர்கள் விரும்பினால் இந்த நியமனத்திற்கும் விண்ணப்பிக்கலாம்.

ஆதரவற்ற விதவைகள், தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர், நாற்பது வயதிற்குக் குறைவாக உள்ள பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட மற்றும் பணியிலிருக்கின்ற தற்காலிக மாநில அரசுப் பணியாளர் போன்றவர்களுக்கு வயது மற்றும்/அல்லது தகுதியிலிருந்து அளிக்கப்படும் சலுகைகள் தேர்வாணையத்தின் 'பணி வேட்பாளர்களுக்கான விதிமுறை'-களில் தரப்பட்டுள்ளன. ஆதி திராவிட வகுப்பினர்/பழங்குடி வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர், பிற்படுத்தப் பட்ட வகுப்பினர், தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர் போன்றவர் களுக்கு அளிக்கப்படும் விண்ணப்பக் கட்டணச் சலுகைகளும் தேர்வாணையத்தின் 'பணி வேட்பாளர்களுக் கான விதிமுறை'களில் தரப்பட்டுள்ளன. (பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு அளிக்கப்படும் சலுகைகள் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினருக்கும் பொருந்தும்).

விண்ணப்பப் படிவமும், நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு எழுத்து மூலம் கோரி பெற்றுக் கொள்ள லாம். கோரிக்கைகள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ பதவியின் பெயர் மற்றும் விளம்பர எண் இனத்தின் எண் ஆகியவற்றைக் குறிப்பிட்டு எழுதப்பட்டு செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு வழங்கக்கூடிய 1.5.93 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10) சென்னை அண்ணாசாலை தபால் அலுவலகத்தில் செலுத்தத் தக்க கோடிட்ட அஞ்சல் ஆணை அல்லது பாரத ஸ்டேட் வங்கியில் (State Bank of India) ஏதாவதொரு கிளையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வானைய செயலாளருக்கு வழங்கக்கூடிய 1.5.1993 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட சென்னை-600 006 ஆயிரம் விளக்கு பாரத ஸ்டேட் வங்கியில் செலுத்தத் தக்க பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10) 'கேட்புக் காசோலை' (Demand Draft)-யுடன் சுய விலாசம் எழுதிய உறையுடனும் (26 x 12 செ.மீ.) அனுப்ப வேண்டும். கோரிக்கைகள் பிற மொழியில் இருக்குமாயின் அத்துடன் ஆங்கில மொழி பெயர்ப்பும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டா.

**குறிப்பு:** ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியாக கோரிக்கைகள் அனுப்பவேண்டும். பத்து ரூபாய்க்கான அஞ்சல் ஆணை அல்லது கேட்புக் காசோலை ஒவ்வொரு கோரிக்கையுடனும் அனுப்ப வேண்டும்.

DIPR/710/MS/93



### திருப்பூர் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்:

# ஒரு வரப்பிரசாதம்

**கோவை** மாவட்டத்திலுள்ள திருப்பூர் நகரம் தமிழ்நாட்டில் ஒரு முக்கிய தொழில் மையமாக அமைந்து, அந்நியச் செலாவணி யாகச் சுமார் ரூபாய் 2000 கோடிக்கு மேல் ஆண்டொன்றுக்கு ஈட்டித்தருகிறது. கடந்த ஐந்து ஆறு ஆண்டுகளில் இந்நகரம் மிகப் பிரம்மாண்டமான அளவில் உரு வாகியிருக்கிறது. தொழில் சம்பந்த மாக திருப்பூர் நகருக்கு நாள் தோறும் ஆயிக்கணக்கான மக்கள் வருகை புரிகின்றனர். 1981-இல் 1.65 இலட்சம் மக்கள் தொகை கொண்ட இந்நகரம், 2011-ஆம் ஆண்டில் சுமார் 3 இலட்சம் மக்கள் தொகையை அடையும் என எதிர் பார்க்கப்படுகிறது.

நாளுக்குநாள் வளர்ந்துவரும் திருப்பூர் நகரின் குடிநீர்த் தேவை யைப் பூர்த்தி செய்யும் பொருட்டு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ரூ.20 கோடி செலவில் ஒரு மிகப் பெரிய திட்டத்தைத் தீட்டி முனைப் புடன் செயல்படுத்திவருகிறது. இந்தத் திட்டம் திருப்பூர் நகராட்சி மற்றும் வழியோரக் கிராமங்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

**தற்போதைய குடிநீர்த் திட்டம்**

முதன் முதலில் திருப்பூர் நகராட் சிக்குக் கோயில் வழியில் அமைக்கப் பட்ட நீர் உறிஞ்சும் கிணற்றை ஆதாரமாகக் கொண்டு ஒரு குடி நீர்த் திட்டம் நிறுவப்பட்டது. இத் திட்டத்தால் மக்களின் தேவையைப் பூர்த்தி செய்ய இயலாததால் 1963-இல் மேட்டுப்பாளையம் அருகில் பவானி ஆற்றின் நீரை ஆதாரமாகக் கொண்டு 400 மி.மீ. விட்டமுள்ள வார்ப்பு இரும்புக் குழாய்கள் மூலம் நீர் உந்தப்பட்டு, திருப்பூர் நகருக்கு 7.00 மில்லியன் லிட்டரும், வழியோரக் கிராமங் களுக்கு 1.62 மில்லியன் லிட்டரும் குடிநீர் வழங்கும் வகையில் ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமைக்கப் பட்டு, தற்போது நடைமுறையில் உள்ளது.

திருப்பூர் மக்கட் தொகை 2011-ஆம் ஆண்டில் 3 இலட் சத்தை அடையும் என்று எதிர் பார்க்கப்படுவதால், நாளொன்றுக்கு 33 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கும் முறையில் ஒரு மேம் பாட்டுத் திட்டம் அவசியமாயிற்று.

''நீரின்று அமையாது உலகு'' என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க, பட்டி தொட்டிகளிலெல்லாம் குடி நீர்த் தேவையை நிறைவேற்றி வரும் தமிழக அரசு, திருப்பூர் நகராட்சி, நான்கு பேரூராட்சிகள் மற்றும் 44 வழியோர ஊராட்சிகளில் 7 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ஒரு கூட்டுக் குடிநீர் வளர்ச்சித் திட்டத்தை ரூ.20.34 கோடி மதிப்பீட்டில், (ஆண்டு பராமரிப்புத் தொகை ரூ.0.65 கோடி) செயல்படுத்த தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்துக்கு அரசு ஆணை வழங்கியுள்ளது.

இத்திட்டம், திருப்பூர் நகராட் சிக்கு நாளொன்றுக்கு 26 மில்லியன் லிட்டரும் அன்னூர், அவினாசி, திருமுருகன் பூண்டி மற்றும் வேலம்பாளையம் ஆகிய 4 பேரு ராட்சிகளுக்கும், 44 வழியோர ஊராட்சிகளுக்கும் சேர்த்து மொத்தம் 18 மில்லியன் லிட்டரும் குடிநீர் வழங்கும் வகையில் அமைக்கப் பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கான குடிநீர், மேட்டுப்பாளையத்திற்கு அருகில் பவானி ஆற்றிலிருந்து ஒரு கிணறு மூலம் எடுக்கப்பட்டு, அருகில் நிறுவப் படும் 46 மில்லியன் லிட்டர் கொள் ளளவு கொண்ட நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் சுத்திகரிக்கப்படும்.

பவானி ஆற்றின் அருகே நிறுவப்பட்டுள்ள 23 மில்லியன் லிட்டர் கொள்ளளவு கொண்ட நீர்ச் சுத்திகரிப்பு நிலையம்.






# இந்த இதழில்...


| | |
|---|---|
| புதிய அமைச்சர்கள் பதவியேற்பு ... | 2 |
| மாண்புமிகு அமைச்சர்கள் பொறுப்பு வகிக்கும் துறைகள் விவரம் ... | 4 |
| மீன்வளம் பெருக.. மீனவர் வாழ்க்கைத் தரம் உயர ... | 11 |
| நாடும் வீடும் நலம்பெற நாளும் சேமிப்போம்! ... | 15 |
| தீண்டாமை வேண்டாமே! ... | 17 |
| பாவேந்தர் பாரதிதாசனின் உலகப் பார்வை ... | 19 |
| வாரிசுகள் வளரட்டும் (சிறுகதை) ... | 24 |
| சுகந்தரும் சுற்றுலாத் தலம் ... | 28 |
| சுவாமி சகஜானந்தா கல்விக் கழகம் ... | 31 |
| நினைவாற்றல் தரும் சுண்டைக்காய் ... | 33 |
| கண் மருத்துவம் - டாக்டர் பதில்கள் ... | 35 |
| ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன் ... | 39 |
| வேளாண் பொறியியல் துறையின் விரைவான பணிகள் ... | 45 |
| நூல் நயம் ... | 48 |


## அட்டைப்பட விளக்கம்

**முதல் அட்டை:**

21.5.93 அன்று சென்னைக்கு வருகை தந்த மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்களுடன், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், சென்னை விமான நிலையத்தில், தமிழ்நாட்டின் குடிநீர்த் திட்டங்கள் குறித்து விவாதித்தார்.

**நான்காம் அட்டை:**

உதகை ஏரியின் உள்ளங் கவர் காட்சி.


தமிழரசு
திருவள்ளுவர் ஆண்டு 2024
வைகாசித் திங்கள் - 19
மலர்:23 இதழ்:23
1-6-1993
விலை: ரூபாய் மூன்று

தமிழரசு
பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)PP-23

# அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

WITH COURAGE AND FAITH



## தொலைதூரக் கல்வி இயக்ககம் மற்றும் திறந்த முறைப் பல்கலைக்கழக அமைப்பு

இளங்கலை, முதுகலை மற்றும் பட்டயப் படிப்பு விபரங்களுக்கு: **தொடர்பு அதிகாரி,** அண்ணாமலைப் பல்கலைக்கழக **படிப்பு மையங்களுடன்** கீழ்க்கண்ட முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| 19, மார்ஷல் சாலை, எழும்பூர், சென்னை – 600 008. | 32–பி, 7வது குறுக்குத் தெரு, தில்லை நகர், திருச்சிராப்பள்ளி–620018 | 15, டாக்டர் சுப்பராயன் சாலை, பாலஸ் தியேட்டர் அருகில், சேலம் – 636 001. |
| 72, சரோஜினி தெரு, ராம்நகர், கோவை – 641 009 | 316 – இ, கே. பி. சாலை, நாகர்கோயில் – 629 001 | 176, வடக்கு வெளி வீதி, மதுரை – 625 001 |
| 4, திவாகரராஜபுரம், , லெக்ஷ்மி தியேட்டர் அருகில், வேலூர் – 632 001 | 49–சி, கைலாசபுரம் வடக்குத் தெரு, பாவா பில்டிங், 2வது மாடி, திருநெல்வேலி – 627 001 | 7 – 7வது வீதி, சுப்ரமணியபுரம், காரைக்குடி – 623 002 (14–4–1993 முதல்) |
| 127/10, மணிக்டாலா மெயின் ரோடு, கல்கத்தா – 700 054 (1–5–1993 முதல்) | F, 249, இரண்டாவது மாடி, ராமா மார்க்கட், முனிர்கா, புது டில்லி – 110 067 | தொலைதூரக் கல்வி இயக்ககம், அண்ணாமலைநகர் – 608 002. |



# புதிய அமைச்சர்கள் பதவியேற்ற காட்சி




மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு. இராம. வீரப்பன் அவர்கள்.




மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு. துரை. இராமசாமி அவர்கள்.




மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு. டி. ஜனார்த்தனன் அவர்கள்.




மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் திரு. வி. சத்தியமூர்த்தி அவர்கள்.




மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு. ம. சின்னசாமி அவர்கள்.




மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு. கு. லாரன்ஸ் அவர்கள்.






மாண்புமிகு செய்தி விளம்பரத்துறை அமைச்சர் திரு. மு. தென்னவன் அவர்கள்.




மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் பேராசிரியர் க. பொன்னுசாமி அவர்கள்.




மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. மேலூர் அ.மா. பரமசிவன் அவர்கள்.




மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. கா.ப. பட்டாபிராமன் அவர்கள்.




மாண்புமிகு இந்து அறநிலையத்துறை அமைச்சர் திரு. டி.வி. நடேசன் பால்ராஜ் அவர்கள்.



மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் திரு.பி. ஈசுவரமூர்த்தி அவர்கள்.

## மாண்புமிகு அமைச்சர்கள்

**முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா:**
பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணிகள், இந்திய காவல் பணிகள், இதர அகில இந்தியப் பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், காவல்துறை, லஞ்ச ஒழிப்பு, மதுவிலக்கு ஆயத்தீர்வை, எரிசாராயம், சிறு பான்மையினர், மின்னனுவியல்.

**நிதியமைச்சர்**
**டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:**
நிதி, திட்டம், தேர்தல்கள், சட்டமன்றம்.

**சட்டத்துறை அமைச்சர்**
**திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி:**
சட்டம், நீதிமன்றம், சிறைச்சாலை, எடை அளவுகள் பற்றிய சட்டம் இயற்றல், கடன் நிவாரணம், கடன் வழங்குதல், சீட்டு நிதிகள், கம்பெனிகள் பதிவு செய்தல் ஆகியவை பற்றி சட்டம் இயற்றுதல்.

**வருவாய்த்துறை அமைச்சர்**
**திரு. எஸ்.டி. சோமசுந்தரம்:**
வருவாய்த்துறை, மாவட்ட வருவாய் நிர்வாகம், துணை மாவட்ட ஆட்சித் தலைவர், பதிவு செய்தல், தபால்தலை சட்டம், எழுதுபொருள், அச்சு, அரசு அச்சகம், பூதான், கிராமதான், பாஸ்போர்ட்.

**உணவுத்துறை அமைச்சர்**
**திரு. இராம. வீரப்பன்:**
உணவு, நுகர்பொருள் வழங்கல்.

**மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்**
**திரு. எஸ். முத்துசாமி:**
மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி, குடும்பக் கட்டுப்பாடு, சுற்றுச்சூழல் மாசுக் கட்டுப்பாடு.

**போக்குவரத்துத்துறை அமைச்சர்**
**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:**
போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வாகன சட்டம், துறைமுகங்கள், சின்கோனா.

**கைத்தறி மற்றும் ஜவுளித்துறை அமைச்சர்**
**திரு. இ.மதுசூதனன்:**
கைத்தறி மற்றும் துணிநூல் துறை

**பொதுப்பணித்துறை அமைச்சர்**
**திரு.எஸ். கண்ணப்பன்:**
பொதுப்பணித்துறை, நீர்ப்பாசனம் (சிறிய நீர்பாசனம் உள்பட) நெடுஞ்சாலைகள், மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு, இரும்புக் கட்டுப்பாடு.

**வீட்டுவசதித்துறை அமைச்சர்**
**திரு. எஸ். ரகுபதி:**
வீட்டுவசதி, குடிசைப்பகுதி மாற்றுத்திட்டம், கிராமப்புற வீட்டுவசதி மேம்பாடு, வீட்டு வாடகைக் கட்டுப்பாடு, நகர்புறத் திட்டம், நகர்ப்புற வளர்ச்சித் திட்டம், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம்.

**ஊரகத்தொழில் அமைச்சர்**
**திரு. துரை ராமசாமி:**
சிறுதொழில், ஊரக தொழில்கள், குடிசைத் தொழில்கள்.

**வேளாண்மைத்துறை அமைச்சர்**
**திரு. கு.ப. கிருஷ்ணன்:**
வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண்மைச் சேவைக் கூட்டுறவு, தோட்டக் கலை, கரும்பு வரி, கரும்பு வளர்ச்சி.

**பால்வளத்துறை அமைச்சர்**
**திரு. டி. ஜனார்த்தனன்:**
பால், பால்வளம், கால்நடை.



முன்னாள் இந்தியப் பிரதமர் அமரர் திரு. ராஜீவ் காந்தி அவர்களின் நினைவு நாளையொட்டி, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தலைமைச் செயலகத்தில் 'கொடுஞ்செயல் எதிர்ப்பு நாள்' உறுதிமொழி எடுத்துக் கொண்டார். மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் அரசு அலுவலர்களும் உறுதிமொழி எடுத்துக் கொண்டார்கள் (21.5.'93).

## பொறுப்பு வகிக்கும் துறைகள் விவரம்:

**வணிகவரித்துறை அமைச்சர்**
**திரு. வி. சத்தியமூர்த்தி:**
வணிகவரிகள்.

**தொழில்துறை அமைச்சர்**
**திரு. எம். சின்னசாமி:**
தொழில்கள், கனிமச் சுரங்கங்கள், கனிமங்கள்.

**சமூகநலத்துறை அமைச்சர்**
**புலவர் திருமதி. இந்திரகுமாரி:**
சமூகநலம், ( மகளிர் குழந்தைகள் நலம் உள்பட) சத்துணவுத் திட்டம், பிச்சைக்காரர் விடுதிகள், அனாதை விடுதிகள், சீர்திருத்த நிர்வாகம்.

**வனத்துறை அமைச்சர்**
**திரு. கு. லாரன்ஸ்:**
காடுகள்.

**செய்தி விளம்பரத்துறை அமைச்சர்**
**திரு. மு. தென்னவன்:**
செய்தி மற்றும் விளம்பரத்துறை, திரைப்பட தொழில்நுட்பம், திரைப்படச் சட்டங்கள், செய்தித் தாள்கள் கட்டுப்பாடு.

**கல்வித்துறை அமைச்சர்**
**பேராசிரியர் க. பொன்னுசாமி:**
கல்வி, தொழில்நுட்பக் கல்வி, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம், விளையாட்டு மற்றும் இளைஞர் நலம், தொல்பொருள் ஆய்வு, தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ் பண்பாடு.

**தொழிலாளர் நலத்துறை அமைச்சர்**
**திரு. மேலூர் ஏ.எம். பரமசிவன்:**
தொழிலாளர் நலம், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர்ப்புற, கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டங்கள், மக்கள்தொகை கணக்கெடுப்பு.

**கூட்டுறவுத்துறை அமைச்சர்**
**திரு. கா.ப. பட்டாபிராமன்:**
கூட்டுறவு.

**உள்ளாட்சித்துறை அமைச்சர்**
**திரு. டி.எம். செல்வகணபதி:**
நகராட்சி நிர்வாகம், கிராமப்புற மேம்பாடு, பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், கிராமப்புறக் கடன்கள், நகர்ப்புற, கிராமப்புற நீர் விநியோகம்.

**ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்**
**திரு. எம். ஆனந்தன்:**
ஆதிதிராவிடர் நலம், மலைவாழ் மக்கள், கொத்தடிமைகள் ஒழிப்பு, முன்னாள் இராணுவத் தினர் நலன்.

**அறநிலையத்துறை அமைச்சர்**
**திரு. டி.வி. நடேசன் பால்ராஜ்:**
இந்து அறநிலையத்துறை.

**பிற்பட்டோர் நல, மீனளத்துறை**
**அமைச்சர் திரு. டி. ஜெயக்குமார்:**
பிற்பட்டோர், மிகவும் பிற்பட்டோர், கடல் கடந்து வாழும் இந்தியர் நலன், அகதிகள் மற்றும் மீனளம்.

**சுற்றுலாத்துறை அமைச்சர்**
**திரு. எஸ். நாகூர் மீரான்:**
வக்பு, சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

**கதர்த்துறை அமைச்சர்**
**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி:**
கதர் மற்றும் கிராமத் தொழில்.





தமிழகப் புதிய அமைச்சரவை (17.5.1993)

# புதிய அமைச்சர்கள் பதவி ஏற்பு விழா

பன்னிரண்டு புதிய அமைச்சர்கள் பதவி ஏற்கும் விழா, கிண்டியிலுள்ள ஆளுநர் மாளிகையில் 17.5.93 அன்று மாலை சிறப்பாக நடைபெற்றது.

ஆளுநர் மாளிகையில் உள்ள அழகிய புல் தரையில் இதற்காகத் தனி மேடையும், அலங்காரப் பந்தலும் அமைக்கப்பட்டிருந்தன. புதிதாகப் பதவி ஏற்க வந்திருந்த அமைச்சர்கள் மேடையில் அமர்ந்திருந்தனர்.

புதிய அமைச்சர்களை மேதகு ஆளுநர் அவர்களுக்கு, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் அறிமுகப்படுத்தி வைத்தார்.

தமிழ்த்தாய் வாழ்த்துடன் விழா தொடங்கியது. தலைமைச் செயலர் திரு. டி.வி. வெங்கட்ராமன், இ.ஆ.ப. அவர்கள் புதிதாக அமைச்சரவையில் இடம்பெறும் அமைச்சர்களுக்குப் பதவி ஏற்பு உறுதிமொழியினையும், ரகசியக்காப்பு உறுதிமொழியையும் செய்து வைக்குமாறு மேதகு ஆளுநர் அவர்களைக் கேட்டுக் கொண்டார்.

முதலில் திரு. ஆர்.எம். வீரப்பன் அவர்கள், உணவு அமைச்சராகப் பதவி ஏற்பு உறுதி மொழியையும், ரகசியக்காப்பு உறுதிமொழியையும் எடுத்துக் கொண்டார். அதைத் தொடர்ந்து திரு. துரை ராமசாமி அவர்கள் ஊரகத்தொழில் அமைச்சராகவும், திரு. டி. ஜனார்த்தனன் அவர்கள் பால்வளத்துறை அமைச்சராகவும், திரு. வி. சத்தியமூர்த்தி அவர்கள் வணிகவரித்துறை அமைச்சராகவும், திரு. மா. சின்னசாமி அவர்கள் தொழிலமைச்சராகவும், திரு, கு. லாரன்ஸ் அவர்கள் வனத்துறை அமைச்சராகவும், திரு. மு. தென்னவன் அவர்கள் செய்தி-மக்கள் தொடர்புத் துறை அமைச்சராகவும், பேராசிரியர் கே. பொன்னுசாமி அவர்கள் கல்வித்துறை அமைச்சராகவும், திரு. மேலூர் எம். பரமசிவம் அவர்கள் தொழிலாளர் நலத்துறை அமைச்சராகவும், திரு. கா. பட்டாபிராமன் அவர்கள் கூட்டுறவுத்துறை அமைச்சராகவும், திரு. டி.வி. நடேசன் பால்ராஜ் அவர்கள் இந்து அறநிலையத்துறை அமைச்சராகவும், திரு. பி. ஈசுவரமூர்த்தி அவர்கள் கதர்த்துறை அமைச்சராகவும் பதவியேற்றனர்.

பதவி ஏற்பு விழா 30 நிமிட நேரம் நடைபெற்றது. பின்பு, மேதகு ஆளுநர் அவர்கள் அனைவருக்கும் தேநீர் விருந்து அளித்தார். அதைத் தொடர்ந்து புதிய அமைச்சரவையுடன் மேதகு ஆளுநர் அவர்கள் புகைப்படம் எடுத்துக் கொண்டார்.

இந்த இனிய விழாவில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், அவர்களது குடும்பத்தினர், அரசு உயர் அதிகாரிகள், பத்திரிகையாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

—என். இளங்கோ

# குடிநீர்ப் பிரச்சினை: மாண்புமிகு பிரதமர், மாண்புமிகு முதல்வர் ஆலோசனை

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 'ராஜீவ் காந்தி தேசிய குடிநீர் முனைப்புத் திட்டம்' குறித்தும் அதனைத் தொடர்ந்து எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் மாண்புமிகு பிரதமர் அவர்களிடம் சென்னை விமான நிலையத்தில் 21.5.1993 அன்று ஒரு மனுவைச் சமர்ப்பித்தார்.

ராஜீவ் காந்தி தேசிய குடிநீர் முனைப்புத் திட்டத்தின் கீழ், இதுவரை ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து விரிவான விவாதங்கள் நடத்தப்பட்டன. தமிழ்நாட்டில் ராஜீவ் காந்தி தேசிய குடிநீர் முனைப்புத் திட்டத்தைப் பாராட்டத்தக்க அளவில் அமல்படுத்திய பின் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை மாண்புமிகு முதல்வர் விளக்கிக் கூறினார்.

வறட்சிப் பகுதியாகவும், மழையே இல்லாத பகுதியாகவும் (Rain shadow region) விளங்கும் தர்மபுரி மாவட்டத்தின் மிகக் கடுமையான குடிநீர்ப் பிரச்சினையை உடனடியாகத் தீர்க்க வேண்டியதன் அவசியத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வலியுறுத்தினார். ஒகேனக்கல் நீர்வீழ்ச்சியிலிருந்து குழாய்கள் மூலம் தண்ணீர் கொண்டு வருவது ஒன்றே தர்மபுரியின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க வழி என்பதை அவர் சுட்டிக் காட்டினார்.

இப்பகுதியில் வாழும் 18.5 இலட்சம் மக்களுக்கு நாளொன்றுக்கு 102 மில்லியன் லிட்டர் குடிநீர் கிடைக்க ரூ.400 கோடி செலவில் ஒரு விரிவான திட்டம் ஏற்கெனவே தயார் செய்யப்பட்டுள்ளது என்பதையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெரிவித்தார். ராஜீவ் காந்தி தேசிய குடிநீர் முனைப்புத் திட்டத்தின்கீழ், 'தீவிர கிராமக் குடி தண்ணீர் விநியோகத் திட்டத்தின்' நிதி உதவியுடன் செயல்படுத்த இது மிகவும் ஏற்ற திட்டமாகும். இத்திட்டத்தை அமல்படுத்த நிதி உதவி வழங்குமாறு மாண்புமிகு பிரதமர் அவர்களை மாண்புமிகு முதல்வர் அவர்கள் கேட்டார்.

சென்னை நகரில் ஏற்பட்டுள்ள தீவிர குடிநீர்ப் பஞ்சத்தைச் சமாளிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் விரிவாக எடுத்துக் கூறப்பட்டன. தண்ணீர்ப் பஞ்சத்தால் அவதியுறும் சென்னைக்கு கொண்டு வரும் குடிநீருக்கு இரயில்வே துறை, விதிக்கும் வரியிலிருந்து விலக்களிக்க வேண்டும் என்றும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கேட்டுக் கொண்டார். உடனடி நிவாரணமும் கண்டுபிடிக்கப்பட வேண்டும் என்ற உண்மையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வற்புறுத்தினார். புதிய வீராணம் திட்டத்தின் கீழ், வீராணம் ஏரியிலிருந்து (220 கி.மீ. தொலைவிலிருந்து) நாள்தோறும் 40 மில்லியன் காலன் நீரை சென்னைக்குக் கொண்டு வருவது ஒன்றே நடைமுறையில் சாத்தியமாகக் கூடிய நிவாரணம் ஆகும்.

பெரு நகரங்களுக்கு வழங்கப்படும் உதவிகளின் கீழ், இத்திட்டத்திற்குச் சிறப்பு நிதியுதவி வழங்க வேண்டுமென மாண்புமிகு முதல்வர் அவர்கள் கேட்டுக் கொண்டார். பல்வேறு நிறுவனங்களிலிருந்து நிதியுதவி பெறவும், தேவைப்பட்டால் கடனுதவியும் பெற்றுத்தர மாண்புமிகு பிரதமர் அவர்கள் தமது செல்வாக்கைப் பயன்படுத்தி உதவ வேண்டுமென மாண்புமிகு முதல்வர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

ரூ.75 கோடி செலவில், சென்னைக்கு நாளொன்றுக்கு 25 மில்லியன் லிட்டர் தண்ணீரைப் பெற, கடல்நீரை குடிநீராக்கும் திட்டத்திற்கு நிதியுதவி வேண்டுமெனவும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்தின் கீழ் ஒரு பெரிய தொழிற்சாலையையும், பல சிறிய தொழிற்சாலைகளையும் ரூ.57 கோடி செலவில் நிர்மாணிக்கும் முதல் கட்டப்பணிக்கு ராஜீவ் காந்தி தேசிய குடிநீர் முனைப்புத் திட்டத்தின் தொடர்ச்சியாக, நிதியுதவி ஒதுக்கி தரவேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். ராஜீவ் காந்தி தேசிய குடிநீர் முனைப்புத் திட்டத்தின் கீழும், தீவிர கிராமத் தண்ணீர் விநியோகத் திட்டத்தின் கீழும் இத்திட்டத்திற்கு நிதியுதவி அளிப்பதன் அவசியத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வலியுறுத்தினார்.

மாநிலத்தின் கடுமையான குடிநீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக முதல்வர் சமர்ப்பித்த திட்டத்தில் மாண்புமிகு பிரதமர் அவர்கள் தீவிரக் கவனம் செலுத்தினார். மேலும் கிருஷ்ணா நதி நீர்த் திட்டம் மூலம் சென்னைக்குக் குடிநீர் கொண்டுவர ஆந்திர அரசை மாண்புமிகு பிரதமர் அவர்கள் வலியுறுத்த வேண்டும் என்றும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் மனுவில் உள்ள விவரங்களைத் தீ சீலிப்பதாக மாண்புமிகு கூறினார்.

வாழ்த்துக்கள்

## திரு. வி.கே. பெரியசாமி

காண்டிராக்டர் (பொதுப்பணித்துறை)

மூலனூர்

பெரியார் மாவட்டம்

## திரு. ஆர். அய்யாவு

காண்டிராக்டர் (பொதுப்பணித்துறை)

சென்னிமலை

பெரியார் மாவட்டம்

## திரு. ஆர். லட்சுமணன்

காண்டிராக்டர் (பொதுப்பணித்துறை)

சென்னிமலை

பெரியார் மாவட்டம்



# மீன்வளம் பெருக... மீனவர் வாழ்க்கைத் தரம் உயர...



உள்நாட்டு நீர்நிலைகளில் மீன் வளர்ப்புப் பற்றிய நவீன முறைகளை மக்களிடையே பரவச் செய்வதுடன், மீன் உற்பத்தியை அதிகரித்து, மக்களுக்கு நியாயமான விலையில் புரதச்சத்து மிகுந்த மீன் கிடைக்கச் செய்வது, குளங்களை நீண்டகாலக் குத்தகைக்கு எடுத்தல்; மீன் வளர்ப்புக்கேற்ற குளங்களைப் புனரமைப்பு செய்ய வங்கியின் மூலம் கடன் பெற உதவுதல்; சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் கிராமப் புறங்களில் உள்ள படித்து வேலையற்ற இளைஞர்களுக்கு மீன் வளர்ப்பின் மூலம் வேலைவாய்ப்பு ஏற்படுத்தித் தருதல் - ஆகியவை, மீன் வளர்ப்போர் வளர்ச்சி முகமையின் முக்கிய நோக்கங்களாகும்.

தென்னார்க்காடு மாவட்ட மீன் வளர்ப்போர் வளர்ச்சி முகமை 1980-ஆம் ஆண்டு, தென்னார்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவரைப் பெருந்தலைவராகக் கொண்டு தொடங்கப்பட்டது. இம் முகமை தொடங்கப்படுவதற்கு முன், இம்மாவட்டத்தில் மீன் உற்பத்தி ஒரு எக்டேருக்கு 135 கிலோவாக இருந்தது. இம்முகமையின் மூலம் சிதம்பரம், காட்டுமன்னார்கோயில், விருத்தாசலம், பண்ணுருட்டி, உளுந்தூர்ப்பேட்டை, கடலூர் வட்டங்களிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலிருந்தும் மீன் வளர்ப்புக்கு ஏற்ற குளங்களை 10 ஆண்டு நீண்டகாலக் குத்தகைக்கு எடுத்துள்ளது.

கிராமப்புறத்திலுள்ள - படித்து வேலையில்லாத இளைஞர்கள் தேர்வு செய்யப்பட்டு, மீன் வளர்ப்புக்கு எடுத்த குளங்களுக்கு மீன் வளர்ப்போர்களாக நியமனம் செய்யப்படுகின்றனர். அவர்களுக்கு நவீன மீன் வளர்ப்பு முறைகள் பற்றி பயிற்சி அளிக்கப்படுகிறது. கடலூர் யுனைடெட் கமர்சியல் வங்கி மூலம் அவர்களுக்கு நிதி உதவி பெற்றுத் தருவதுடன், இம்முகமையின் மூலம் தொழில் நுட்ப முறைகளைக் குறித்த விளக்கமும் அளிக்கப்படுகிறது.

இம்முகமை ஆரம்பிக்கப்பட்டபோது, 18.5 எக்டேர் நீர்ப்பரப்பு இருந்தது. தற்போது சனவரி 1993 முடிய 396.8 எக்டேர் நீர்ப் பரப்பு உள்ள 568 குளங்கள் 588 மீன் வளர்ப்போர்களுக்கு ஒதுக்கப்பட்டு வேலைவாய்ப்பு அளிக்கப் பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் இயங்கிவரும் 13 மீன் வளர்ப்போர் வளர்ச்சி முகமைகளில் இம் முகமையே கடந்த மூன்றாண்டுகளாகத் தொடர்ந்து சிறந்த செயல்பாடுள்ள முகமைகளில் இரண்டாம் இடத்தை வகித்து வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

1991-ஆம் ஆண்டு நவம்பரில் இம் மாவட்டத்தில் பெய்த பெருமழை மற்றும் வெள்ளப்பெருக்கால் இம்முகமை மூலம் மீன் வளர்ப்பவர்களின் குளங்களில் 12.11.91 ஆம் தேதி வரை இருப்பு செய்யப்பட்ட மீன் குஞ்சுகள் மற்றும் நுண்மீன் குஞ்சுகள் வெள்ளத்தில் வெளியேறியதால் ஏற்பட்ட இழப்பினை ஈடு செய்யும் முகத்தான், முகமைப் பெருந் தலைவர்-மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் சீரிய முயற்சியால் ரூ.3.53 இலட்சம் வெள்ள நிவாரண நிதியாகப் பெறப்பட்டு அத்தொகை முழுவதும் அரசு ஆணைப்படி பாதிக்கப்பட்ட 248 மீன் வளர்ப்பவர்களின் நிலுவைகளுக்கு எதிராக வரவு வைக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் இயங்கி வரும் 13 மீன் வளர்ப்போர் வளர்ச்சி முகமைகளிலேயே இது போன்று நிவாரணநிதி பெறுவது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

1988-89-ஆம் ஆண்டில் இம்முகமை தான் முதன் முதலாக நுண் மீன் குஞ்சுகளை மிதவைக் கூடுகள் மற்றும் கச்சா நர்சரிகள் மூலம் விரலளவு மீன் குஞ்சுகளாக வளர்த்தெடுக்க மீன் வளர்ப்போர்களை ஈடுபடுத்தியது. இதன் மூலம் மீன் பிடிப்பு இல்லாத காலங்களில் மீன் வளர்ப்போர்களுக்குக் கூடுதல் வருமானம் கிடைத்ததுடன், வளர்த்தெடுத்த விரலளவு மீன் குஞ்சுகள் குளங்களில் உரிய காலத்தில் இருப்புச் செய்யவும் முடிந்தது. இம்முகமைக்கு மட்டுமன்றி, மீன் வளர்ப்போர்கள் வளர்த்த மீன் குஞ்சுகளைத் தனியார் மீன் பண்ணையில் மீன் வளர்ப்போருக்கு வழங்க ஏற்பாடு செய்யப் பட்டது. இதன் மூலம் இம்முகமையின் மீன் வளர்ப்போர்கள் நுண்மீன் குஞ்சுகளை விரலளவு மீன் குஞ்சுகளாக வளர்த்தெடுப்பதில் இம்மாநிலத்தில் முன்னோடிகளாக விளங்குவதுடன், மீன் வளர்ப்போருக்கு மீன் குஞ்சு வளர்ப்பு மூலம் லாபம் கிடைக்கச் செய்வதுடன், முகமையும் சொந்த மீன் பண்ணை செயல்படுத்தும்வரை மேற்படி மீன் வளர்ப்போரின் மூலமே முகமையின் மீன் குஞ்சுத் தேவையை ஈடுசெய்யவும் இயலுகிறது. 1992-93-ஆம் ஆண்டிற்கு முகமை மூலம் 42.5 இலட்சம் நுண்மீன் குஞ்சுகள் மீன் வளர்ப்பிற்கு அளிக்கப் பட்டுள்ளன.

கடந்த காலங்களில் கிராமக் குளங்களை நம்பியே மீன் வளர்ப்பினைத் தொடரவேண்டியிருந்தது. தற்போது தனியார் தங்கள் சொந்த நிலத்தில் மீன் வளர்ப்புக் குளங்கள் அமைத்து வெற்றிகரமாக மீன் வளர்ப்புச் செய்கின்றனர். இதற்கு மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை, திட்ட மதிப்பீடு அறிக்கை தயாரித்துக் கொடுக்கிறது. நீர் தேங்கக்கூடிய தாழ்வான - விவசாயத்திற்குப் பயன்படுத்த முடியாத நிலங்களை மீன் வளர்ப்பிற்குப் பயன்படுத்தலா

மென்ற நிலை இருந்தது. ஆனால், தற்போதுதான் இக்கருத்து மக்களிடையே விரிவடைந்து வருகிறது. இதைப் பயன்படுத்தி அரசும் புதிதாக வகுத்துள்ள கொள்கைப்படி குளம் அமைப்பதற்கான நிரந்தரச் செலவில் அதிகப்பட்சமாக ஒரு எக்டேருக்கு 20 சதவிகித மானியம் (ரூ.20,000 வரை) வழங்க ஆணை வழங்கி உள்ளது. ஒரு எக்டேர் பண்ணை அமைக்க ரூபாய் ஒரு இலட்சம் வரை செலவாகும். அதில் ரூ.20,000 அரசு மானியம் போக, பாக்கியை வங்கிகள் கடன் வசதி மூலம் பெறலாம். தேசிய விவசாய வங்கி முழுக் கடனையும் வங்கிகளுக்கு அளிக்கிறது. ஒரு எக்டேருக்குச் சராசரியாக ஆண்டு ஒன்றுக்கு ரூ.40,000 வரை வருமானமாகப் பெற வாய்ப்புள்ளது. இது மற்ற விவசாயம், கரும்பு போன்றவற்றின் மூலம் கிடைக்கும் வருவாயைவிட மிக அதிக வருவாய் கிடைக்கும் தொழிலாகும். முகமை தொழில் நுட்ப ஆலோசனை கொடுப்பதுடன் திட்ட மதிப்பீடு தயாரித்து வங்கிக்குப் பரிந்துரை செய்கிறது. குளம் அமைத்த பின் முகமையில் உறுப்பினராகச் சேர்த்து பயனடையலாம்.

**தென்னார்க்காடு மாவட்ட மீன் வளர்ப்போர் வளர்ச்சி முகமையின் சாதனைகள்**

முகமை ஆரம்பிக்கப்பட்ட நாள் - 1.12.1980, இம்மாவட்டத்தில் உள்ள மொத்த நீர்பரப்பு - 50,975 எக்டேர்; கிடைக்கப்பெறும் குட்டை மற்றும் குளங்களின் பரப்பு - 2,800 எக்டேர். முகமை ஆரம்பிப்பதற்கு முன்பு இருந்த சராசரி மீன் உற்பத்தி - 25 முதல் 130 கிலோ ஒரு எக்டேருக்கு. முகமை ஆரம்பித்த பின்பு சராசரி மீன் உற்பத்தி - 831 முதல் 1,459 கிலோ ஒரு எக்டேருக்கு. மீன் வளர்ப்போர்க்கு எடுக்கப்பட்ட குளங்கள் - 568, அவைகளின் பரப்பு - 396 8 எக்டேர். பயனடைந்த மீன் வளர்ப்போர் - 588, பயிற்சி அளிக்கப்பட்ட மீன் வளர்ப்போர் - 687.

1991-92-ஆம் ஆண்டில் இருப்பு செய்யப்பட்ட மீன்குஞ்சுகள் - 17,61,220. 1992-93-ஆம் ஆண்டில் இருப்பு செய்யப்பட்ட மீன்குஞ்சுகள் (இதுநாள் வரை) - 13,67,410. 1992-93-ஆம் ஆண்டில் பிடிக்கப்பட்ட மீன்களின் எடை - 246.124 டன்கள். யூ.கோ. வங்கி நிதியுதவியுடன் புனரமைப்பு செய்த குளங்கள் - 185, தேசிய ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் புனரமைப்பு செய்யப்பட்ட குளங்கள் - 72. இதுவரை வங்கியின் மூலம் புனரமைப்புக்கு வழங்கப்பட்ட கடன் தொகை - ரூ.10,76,644. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் வழங்கிய மானியம் - ரூ.74,128, இம்முகமையின் மூலம் வழங்கிய புனரமைப்புக் கடன் மானியம் - ரூ.2,06,735. புனரமைப்புக் கடன் வசூல் செய்தது மற்றும் வங்கியால் தள்ளுபடி செய்தது - ரூ.8,48,001.20. வங்கி மூலம் வழங்கிய இடுபொருள் கடன் - ரூ.26,81,045. இம்முகமையின் மூலம் வழங்கிய மானியம் - ரூ.1,99,758. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் வழங்கிய மானியம் - ரூ.1,77,464. இடுபொருள் கடன் வசூல் செய்தது - ரூ.24,56,118.

**மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் உதவி**

கடலூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் ஆர்வமுள்ள மீன் வளர்ப்பவர்களுக்கு, போக்குவரத்துக்காக மிதி வண்டிகள், நுண்மீன் குஞ்சுகளை 'விரலிகளாக்க மிதவைக்கூடுகள் மற்றும் மீன் குஞ்சு உற்பத்திக்கான சாதனங்கள் வாங்க மானியத்துடன் கடன் கோரி வழங்குவதால், மீன் வளர்ப்போர்களின் நிதி நிலை மற்றும் வாழ்க்கை உயர்த்தப்பட வாய்ப்பு ஏற்படுவதோடு, அதனால் இம்மாவட்டம் முழுவதற்கும் முகமை மீன் வளர்ப்போர்களால் வளர்க்கப்படும் மீன் குஞ்சுகளையே முழுமையான அளவில் பூர்த்தி செய்யும் நிலையும் ஏற்படும்.

உணவு உற்பத்தியில் தன்னிறைவு காண பசுமைப் புரட்சி உதவியதுபோல் ஊட்டச்சத்து மிகுந்த மீனின் உற்பத்தியைப் பெருக்கிட தென்னார்க்காடு மாவட்ட மீன் வளர்ப்போர் வளர்ச்சி முகமை பெரிதும் செயல்பட ஒளிமயமான வாய்ப்பு உள்ளது என்பதைக் குறிப்பிட வேண்டும்.


தமிழரசு
புதிய சந்தா விவரம்

'தமிழரசு' தமிழ் (மாதம் இருமுறை)
ஆண்டுச் சந்தா ... ரூ.72
அரையாண்டுச் சந்தா ... ரூ.36

'தமிழரசு' ஆங்கிலம் (மாதம் ஒருமுறை)
ஆண்டுச் சந்தா ... ரூ.36

சந்தாத் தொகையை - மணியார்டர்' அல்லது பாங்க் டிராப்ட் மூலம் அனுப்ப வேண்டிய முகவரி:

உதவி இயக்குநர்
'தமிழரசு'
அரசினர் தோட்டம்
சென்னை-600 002.

தமிழரசு
படிக்க — பயன்பெற — பாதுகாக்க








M/s. கிருஷ்ணா பார்மசி
1-பி, நேதாஜி சாலை
மஞ்சகுப்பம்
கடலூர்-1.

நல்வாழ்த்துக்கள்



எமது நிறுவனத்தின் பணிகள்
சமூகக் கல்வி இயக்கம்
பயிற்சி ஆதார மையம்
பெண்கள் முன்னேற்றத் திட்டம்

இப்படிக்கு

கல்வி கேந்திரா
(இது ஒரு கல்வி மற்றும் மேம்பாட்டு மையம்)
விழுப்புரம் - 605 602

## படமும் செய்தியும்



முன்னாள் இந்தியப் பிரதமர் அமரர் திரு. ராஜீவ் காந்தி அவர்களின் நினைவு நாளையொட்டி, ஸ்ரீபெரும்புதூருக்கு வருகை புரிந்து புதுடெல்லி திரும்பிய மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ், திருமதி. சோனியாகாந்தி, திரு. ராகுல், செல்வி. பிரியங்கா ஆகியோரை மேதகு ஆளுநர் டாக்டர் பீஷ்ம நாராயண் சிங், மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் ஆகியோர் சென்னை விமான நிலையத்தில் அன்புடன் வழியனுப்பி வைத்தார்கள் (21.5.'93).

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள், ஊட்டியில் 98-வது மலர்க்காட்சியினைக் குத்துவிளக்கு ஏற்றிவைத்துத் துவக்கி வைத்தார். மாண்புமிகு அமைச்சர்கள் திரு. இ. மதுசூதனன், திரு. கு.பா. கிருஷ்ணன், திரு. கு. லாரன்ஸ், திரு. வி. நடேசன் பால்ராஜ் மற்றும் செய்தி-சுற்றுலாத்துறைச் செயலாளர் திருமதி சி.கே. கரியாலி, இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித் தலைவர் லீனா நாயர், இ.ஆ.ப. ஆகியோர் உடன் உள்ளார்கள் (22.5.'93).



## இறந்துபோன வனத்துறை ஊழியர் குடும்பங்களுக்கு ரூ.20 இலட்சம் நிதி உதவி

கடந்த 9.4.1993 அன்று சந்தனமரக் கடத்தல் காரன் வீரப்பன் வைத்த கண்ணிவெடி சம்பவத்தில் இறந்துபோன இரண்டு வனத்துறை ஊழியர்களான திரு. வி. ஸ்ரீரங்கன், திரு. கே. சண்முகம் ஆகியோரது குடும்பங்கள் ஒவ்வொன்றிற்கும் அரசு உதவி தொகையாக ரூ. 10 இலட்சம் வீதம் மொத்தம் 20 இலட்சம் ரூபாய் வழங்க மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார். இக்குடும்பங்கள் ஒவ்வொன்றிற்கும் ஏற்கெனவே தலா 3 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுவிட்டது.

இறந்துபோன வனத்துறை ஊழியர் குடும்பங்கள் ஒவ்வொன்றிற்கும் ரூ.7 இலட்சம் வீதம் 14 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் மறைந்த வனத்துறை ஊழியர்களின் துணைவியார் திருமதி. சரஸ்வதி, திருமதி. ராதாமணி ஆகிய இருவருக்கும் 21.5.93 அன்று நேரில் வழங்கினார்.





வாழ்த்துக்கள்



## திரு. கே.எஸ். சின்னச்சாமி

காண்டிராக்டர் (பொதுப்பணித்துறை)

காங்கேயம்

பெரியார் மாவட்டம்

## திரு. எம்.ஆர். தங்கராஜ்

காண்டிராக்டர் (பொதுப்பணித்துறை)

பெருந்துறை

பெரியார் மாவட்டம்

## திரு. எம்.எஸ். குமாரசாமி

காண்டிராக்டர் (பொதுப்பணித்துறை)

மூடச்சூர் - கோபி

பெரியார் மாவட்டம்





# நாடும் வீடும் நலம்பெற நாளும் சேமிப்போம்!

**வி. ஸ்ரீகிருஷ்ணா**
உதவி இயக்குனர் (சிறுசேமிப்பு),
மாவட்ட ஆட்சியரகம் (ஊவ),
கடலூர்.

தென்னார்க்காடு மாவட்டத்திற்குத் தமிழக அரசு கடந்த நிதியாண்டிற்கு (1991-92) ரூ.20 கோடி நிகர வசூல் செய்திட இலக்கு நிர்ணயித்தது. ஆனால், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தலைமையின்கீழ் அரசு அலுவலர்களும், சிறுசேமிப்பு முகவர்களும், இலக்கிற்கு மேல் ரூ.4.75 கோடி திரட்டி, ரூ.24.75 கோடி நிகர வசூல் எய்தி சாதனை படைத்தார்கள்.

தமிழக அரசு இம்மாவட்டத்திற்கு நடப்பு நிதியாண்டிற்கு (1992-93) ரூ.25 கோடி எய்திட இலக்கு நிர்ணயித்துள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் சீரிய தலைமையின்கீழ் மாவட்ட நிர்வாகமும், சிறுசேமிப்பு முகவர்களும், முனைப்புடன் செயல்பட்டு ரூ.30 கோடி சாதனைபடைக்கச் செயல்பட்டு வருகிறார்கள்.

தென்னார்க்காடு மாவட்டம் கடந்த நிதியாண்டில் (1991-92) மட்டுமே, முதன்முறையாக இலக்கிற்கும் கூடுதலாக வசூலித்து சாதனை படைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

1991-92-இல் 60,000 புதிய ஆர்.டி. கணக்குகள் இம்மாவட்டத்தில் தொடங்கப்பட்டன. இந்த நிதியாண்டில் (1992-93)-இல் 1,00,000 புதிய ஆர்.டி. கணக்குகள் தொடங்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தப் புள்ளி விவரங்களால் இம்மாவட்டத்தில் மக்களிடையே சிறுசேமிப்புத் திட்டங்கள் பற்றி நல்ல விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு, பொதுமக்கள் தாங்களாகவே சிறுசேமிப்புத் திட்டங்களில் முதலீடு செலுத்தத் தொடங்கி உள்ளனர் என்பது தெரிகிறது.

**சிறுசேமிப்புப் பிரச்சாரப் பாதயாத்திரைகள்:**

சிறுசேமிப்புத் திட்டங்கள் மக்களிடையே நல்ல விளம்பரம் பெற வேண்டுமென்பதற்காகவும், அரசின் சிறப்புத் திட்டங்களை எடுத்துக்கூறி பொதுமக்களைச் சிறுசேமிப்புத் திட்டங்களில் ஈடுபடுத்த வேண்டுமென்ற நோக்கத்துடனும், மாவட்ட ஆட்சியர் அவர்கள் கடலூர், விழுப்புரம், சிதம்பரம், விருத்தாசலம், திருக்கோயிலூர், திண்டிவனம் ஆகிய நகரங்களில் 23.3.93 அன்று சிறுசேமிப்பு விழிப்புணர்வு ஊர்வலங்கள் நடத்த உத்தரவிட்டார். இந்தச் சிறப்பு இயக்கத்தினால், ஒரே நாளில் சிறுசேமிப்பு வசூல் வர்த்தகர்கள், சிறுதொழில் உரிமையாளர்கள், பொது மக்கள் இவர்களின் ஈடுபாட்டால் ரூ.30 இலட்சத்திற்கும் மேலாக குவிந்தது.

**இலவசப் பரிசுக் கூப்பன் திட்டம்:**

தமிழக அரசு மாவட்ட அளவில் இலவசப் பரிசுக் கூப்பன் திட்டத்தை 1990-91-ஆம் நிதியாண்டு முதல் செயல்படுத்தி வருகிறது. 1990-91-இல் தமிழக அரசு ஒவ்வொரு வரிசையிலும் மாருதி கார் உட்பட 262 பரிசுகளை வழங்கியது. இம்மாவட்டத்தில் 1990-91-இல் ஏ, பி, சி என்ற மூன்று வரிசைகளில் முதலீட்டுதாரர்கள் 3 இலட்சம் கூப்பன்களைப் பெற்றார்கள். 1991-92-இல் தமிழக அரசு இலவசப் பரிசுக் கூப்பன் திட்டத்தில் பரிசுகளை 352 ஆக உயர்த்தியது.

இந்த நிதியாண்டில், இம் மாவட்டத்தில் ஏஏ, ஏபி, ஏசி என்ற மூன்று வரிசைகளில் 3 இலட்சம் கூப்பன்களைப் பெற்றுப் பயனடைந்தார்கள். இந்த நிதியாண்டில் (1992-93)-இல் தமிழக அரசு இலவசப் பரிசுக் கூப்பன் திட்டத்தில் பரிசுகளை 536 ஆக உயர்த்தியது. இந்த நிதியாண்டில் ஏடி, பிஏ, பிபி மற்றும் பிசி என்ற நான்கு வரிசைகளில் 4 இலட்சம் கூப்பன்கள் பெற்றுப் பொது மக்கள் பயனடைந்துள்ளார்கள்.

இந்த நிதியாண்டில் அதிக அளவில் பொது மக்கள் பரிசுக் கூப்பன்களைப் பெற்றுள்ளதை நோக்கும்போது இத்திட்டம் பொது மக்களிடையே அமோகமாக வரவேற்பைப் பெற்றுள்ளது என்பதும் தெள்ளத் தெளிவாகிறது.

**மாவட்ட ஊக்கத் தொகை:**

மாவட்டங்கள் சிறுசேமிப்பில் எய்தும் சாதனைக்கு ஏற்றவாறு தமிழக அரசு ஆண்டுதோறும் சிறுசேமிப்பு வசூலில் ஒரு குறிப்பிட்ட தொகையை ஊக்கத்தொகையாக வளர்ச்சிப் பணிகளை நிறைவேற்ற மாவட்டங்களுக்கு வழங்கி வருகிறது. இதில் 1989-90-இல் எய்திய சாதனைக்கு ஏற்ப ரூ.8 இலட்சம், 1990-91-இல் எய்திய சாதனைக்கு ஏற்ப ரூ.20 இலட்சம், 1991-92-இல் எய்திய சாதனைக்கு ஏற்ப ரூ.33 இலட்சம் வளர்ச்சிப் பணிகளை நிறைவேற்ற இம்மாவட்டத்திற்குத் தமிழக அரசு வழங்கியது.

பள்ளிக் கட்டடம் கட்டுதல், குடிநீர் வசதி செய்து தருதல், சாலைகள் செப்பனிடுதல் போன்ற பணிகள் அவசரத் தேவைக்கு ஏற்ப மாவட்ட ஆட்சியர் அவர்களின் ஆணைப்படி நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இம் மாவட்டத்தில் பொதுமக்கள் சிறுசேமிப்பில் அதிக அளவில் ஈடுபாடு

# நினைவுச் சின்னம்

தமிழக அரசு கன்னியாகுமரியில் விவேகானந்தர் பாறைக்கு அருகில் உள்ள சிறிய மலைப் பாறையில் கிரானைட் கல்லால் ஆன 133 அடி உயர திருவள்ளுவர் சிலையை நிறுவ முடிவு செய்துள்ளது. சிலை செய்ய ரூ.3.60 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது. சிலை நிறுவப்பட உள்ள சிறிய பாறையைத் தயார் செய்ய சுமார் ரூ.84 இலட்சம் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக ரூ.1.605 கோடி இது வரை கொடுக்கப்பட்டுள்ளது. கல் வேலைக்காக இதுவரை ரூபாய் 48 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. இப்பணி இன்னும் 1½ வருடங்களில் நிறைவு பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தியாகி சங்கரலிங்கனார், தமிழ்த்தென்றல் திரு.வி.க., சுதந்திரப் போராட்ட வீரர் செண்பகராமன், சென்னை மாநகர முன்னாள் மேயர் சிவராஜ் ஆகியோரின் சிலைகள் நிறுவப்பட உள்ளன.

வள்ளுவர் கோட்டத்தின் மேம்பாட்டுப் பணிக்காகவும், செப்பனிடவும் தமிழக அரசு ரூ.26.61 இலட்சம் அனுமதி அளித்துள்ளது.

வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் பொன்விழா ஆண்டைச் சிறப்பிக்கும் வகையில் கிண்டி காந்தி மண்டபத்தில் ஒரு நினைவுத் தூண் நிறுவ அரசு முடிவு செய்துள்ளது.

கொள்ளும்போது அவ்வாறு வசூலிக்கப்பட்ட தொகையிலிருந்து அதிக அளவில் மாவட்டத்திற்கு ஊக்கத் தொகையாக வளர்ச்சிப் பணிகளுக்குத் திரும்பவும் கிடைக்கிறது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

**உள்ளாட்சி நிறுவனங்களுக்கு ஊக்கத் தொகை**

சிறு சேமிப்பில் சிறந்த சாதனை புரியும் இரண்டு ஊராட்சி ஒன்றியங்களுக்கு ரூ.50,000 வீதமும், சிறந்த நகராட்சிக்கு ரூ.50,000, ஐந்து சிறந்த கிராமப் பஞ்சாயத்திற்கு ரூ.10,000 வீதம் ஒவ்வொன்றுக்கும் வளர்ச்சிப் பணிகள் நிறைவேற்ற மாவட்ட ஆட்சியர் ஒதுக்குகிறார். இந்த அளவில் கடந்த நிதியாண்டிற்குக் க்டலூர் ஊராட்சி ஒன்றியத்திற்கும், கம்மாபுரம் ஊராட்சி ஒன்றியத்திற்கும், சிதம்பரம் நகராட்சிக்கும் ஒவ்வொன்றிற்கும் ரூ.50,000 வழங்கப்பட்டது.

**முதலீடுதாரர் ஊக்கத் தொகை**

சிறு சேமிப்புத் திட்டங்களில் முதலீடு செய்யும் முதலீடுதாரர்களை ஊக்குவிக்கும் பொருட்டு முதலீடுதாரர்களுக்கும் ஒரு சதவிகிதம் முதல் 3 சதவிகிதம் வரை அரசின் அறிவிப்புக்கு ஏற்றவாறு வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு மட்டும் ஏறக்குறைய 10,000 முதலீடுதாரர்களுக்கு ரூ.30 இலட்சம் ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

**முகவர் ஊக்கத் தொகை**

இம்மாவட்டத்தில், அஞ்சலக ஆர்.டி. திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக ஏறக்குறைய 300 மகளிர் முகவர்களும் MPKBY பி.பி.எப். (P.P.F.) திட்டத்தில் முதலீடு திரட்டுவதற்காக 50 முகவர்களும், என்.எஸ்.ஸி. கிசான் விகாஸ் பத்திரம் போன்ற ஏனைய திட்டங்களில் முதலீடு திரட்டுவதற்காக 250 நிலை முகவர்களும் (SAS) நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கும் தமிழக அரசு, மத்திய அரசு கழிவுத் தொகை (Commission) வழங்குவது போல, மாநில அரசும் ஊக்கத் தொகை வழங்கி வருகிறது. இந்த நிதியாண்டில் மட்டும் ரூ.15 இலட்சம் சிறு சேமிப்பு முகவர்களுக்கு ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

சிறு சேமிப்புத் திட்டங்களில் பெருமளவில் மக்களை ஈடுபடுத்தத் தமிழக அரசு பல்வேறு சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

வருமான வரி விலக்குப் பெற விரும்புவோர் தேசிய சேமிப்புப் பத்திரம், தேசிய சேமிப்புத் திட்டம், 15 ஆண்டு பொதுச் சேமநலநிதித் திட்டம் ஆகியவற்றில் சேர்ந்து ரூ.60,000 வரை வருமான வரிச் சட்டம் பிரிவு 88-இன் கீழ் வரி விலக்குப் பெறலாம்.

அதிக லாபம்-வட்டி பெற விரும்புவோர் இந்திரா விகாஸ் பத்திரம், கிசான் விகாஸ் பத்திரம் ஆகிய திட்டங்களில் சேர்ந்து 20 சதவிகிதம் வரை வட்டி பெற்று 5 ஆண்டுகளில் இரட்டிப்புப் பணம் பெறலாம்.

ஓய்வு பெற்றோர், வர்த்தகர்கள், நிலையான மாத வருமானம் பெற அஞ்சலக மாதாந்திர வருமானத் திட்டத்தில் முதலீடு செய்து 14 சதவிகித வட்டியும் ஆறு ஆண்டுகளுக்குப் பின்னர் 10 சதவிகித போனசும் பெறலாம்.

சிறுகச் சிறுகச் சேமித்துப் பெருந் தொகை பெற 5 ஆண்டு அஞ்சலக ரெக்கரிங் டெபாசிட் கணக்கும் தொடங்கலாம்.

பள்ளிச் சிறார்களுக்கு இளமைப் பருவத்திலேயே சேமிப்புப் பழக்கம் ஏற்படச் செய்வதற்காகப் பள்ளிகளிலேயே 'சஞ்சாயிகா சேமிப்புத் திட்டம்' தொடங்கப்பட்டுள்ளது. அதில் சேர்ந்து அவர்களும் பயன் பெறலாம். மாணவர்களை இத்திட்டத்தில் ஈடுபடுத்தி அதிக அளவில் வசூலித்துக் கொடுக்கும் ஒவ்வொரு பள்ளிக்கும் அரசு சலுகையாக ஒவ்வொரு ரூ.10,000-க்கும் ஒரு மின்விசிறி வழங்குகிறது. இதன் மூலம் பள்ளிகள் பயன்பெறுகின்றன.

சிறு சேமிப்புத் திட்டத்தினால், நாடும் வீடும் நலமும் வளமும் பெறுகின்றன என்றால் அது மிகையல்ல!





# தீண்டாமை வேண்டாமே!

தீண்டாமை என்கின்ற தீய எண்ணம்
தீராத புற்றுநோய் போன்ற தாகும்;
வேண்டாத விளைவுகள் விபரீ தங்கள்
வீணாக நமக்குள்ளே தோற்று விக்கும்;
ஏன்தானோ மானிடர்கள் உணரா துள்ளார்
எத்தனைபேர் அத்தீயில் கருகிச் சாவார்?
வீண்தானோ இப்பிறவி? எண்ணிப் பாரும்;
வேருடனே ஒழித்தாலே நன்மை சேரும்.

வேண்டாத பிரிவினைகள் சாதிப் பேரால்
விதவிதமாய் வகைவகையாய் அமைவ தாலே
தூண்டாமல் தோன்றுதய்யா கிளர்ச்சி கள்தாம்
துன்பங்கள் அளவின்றிப் பெருகு தய்யா;
மாண்டோர்கள் எண்ணிக்கை சொல்லப் போமோ
மற்றவர்கள் உயிரென்றால் வெல்லப் பாகோ?
தீண்டாமை எதற்குச் சொல், தீய தற்கே;
திருவற்று ஏழ்மையுற்ற எளியார்க் கல்ல!

பத்துமாதம் கருப்பைதான் சுமப்போ ருள்ளே
பல்வேறு வேற்றுமைகள் இருக்க லாமோ?
எத்தனைதான் உருவங்கள் மாறி னாலும்
எல்லார்க்கும் ரத்தம்செந் நிறந்தா னன்றோ?
இத்தரைத்தாய் பெற்றமக்கள் நாமெல் லாமாய்
இருக்கையிலே தீண்டாமை எண்ண லாமோ;
சத்தியவான் காந்திமகான் வெறுத்த தன்றோ;
சமுதாயம் சீர்குலையச் செய்வ தன்றோ!

எல்லாரும் ஓர்குலம் நம் இனமும் ஒன்றே;
எல்லாரும் இந்நாட்டு மன்ன ரென்றும்
எல்லாரும் ஓர்நிறையே இங்கே வாழும்
எல்லாரும் இந்தியா மக்க ளென்றும்
எல்லாரும் போற்றும் பாரதி சொன்னானே!
எல்லாரும் எந்நாளும் ஏற்க வேண்டும்;
'எல்லாரும் எல்லார்க்கும் சகோத ரர்கள்'
என்றாலே தீண்டாமைத் தீங்கு மாயும்!

கவிஞர் கலைப்பொழிலன்



நோக்கைப் புலப்படுத்தியுள்ளார்.

வால்மீகியின் இராம கதையை வழி நூலாகத் தமிழில் வடித்த கம்பரும்,

'உலகம் யாவையும் தாமுள வாக்கலும்'

என்னும் வரி வாயிலாகத் தமது வையக் கண்ணோட்டத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

சைவ சமயச் சான்றோர் தம் வாழ்க்கைக்குப் பாட்டு வடிவம் படைத்த சேக்கிழாரும்,

'உலகெலாம் உணர்ந்து ஓதற் கரியவன்'

- என்னும் வரியின் மூலமாகத் தாம் கொண்ட ஞாலப் பார்வையை அறிமுகம் செய்துள்ளார்.

பெண்பாற் புல்வர்களுள் அறநெறிகளையெல்லாம் அழகுற வடித்த அவ்வை மூதாட்டியும்,

'மேதினியில்...
இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்'

- என்று வெண்பாவைத் தீட்டி தமக்குள்ள விரிந்த உலகப் பார்வையை வெளிப்படுத்தியுள்ளார்.

இத்தகைய முற்காலப் புலவர்களைப் போன்றே இந்த இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய முதல் பகுத்தறிவுப் பாட்டுப் பகலவனாம் பாரதிதாசன் அவர்களும், தம்முடைய பலாச்சுளைக் கவிதைகள் பலவற்றில் ஒப்பற்ற எழிலோடு உலகப் பார்வையை உணர்த்தியுள்ளார்; உயர்த்தியுள்ளார்.

இச்சிறு கட்டுரையில் அவருடைய சிற்சில 'உலகப் பார்வை' வரிகளையாவது தொட்டுக்காட்டுவது படிப்பாளர்க்குப் பயனுள்ள விருந்தாகும் எனக் கருதுகிறோம்.

### உலகப் போர்களை ஒழிக்க...

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் எத்துணை உள்ளார்ந்த உலகப் பார்வைக்குத் தம்மை இளமையிலேயே ஈடுபடுத்திக் கொண்டார் என்பதனைத் தம்முடைய தனிப்பாடல்கள் சிலவற்றுக்கு அவர் தந்துள்ள தலைப்புகளில் இருந்தே தெளிவுறலாம்.

'உலக ஒற்றுமை' 'உலகப்பன் பாட்டு' 'உலகம் உன்னுடையது' 'புதிய உலகு செய்வோம்' 'தன்மான உலகு' 'கற்பனை உலகில்' 'துன்ப உலகிலும் தொண்டு' 'உலக அமைதியைக் கெடுக்காதே'.

-இவை யாவும் அவருடைய நான்கு தனிப்பாடல் தொகுதிகளிலும் காணப் பெறும் 'உலகு' என்னும் சொல் அமைந்த தலைப்புகள் ஆகும்.

மனித இனம் ஆட்சிகளை அமைத்துக் கொள்ளும் அரசியல் அறிவு பெற்ற பண்டைக் காலந்தொட்டு சண்டை நடைபெறாத நாடும் இல்லை; நாளும் இல்லை.

தனி மனிதரும் சரி, நாடுகளும் சரி, தங்களுக்குள் சண்டையடித்துக் கொண்டு சாவதற்கும் வீழ்வதற்கும் மூல நெருப்பாகக் கொழுந்து விடுவது தன்னல வெறியே!

இரண்டு உலகப் போர்களால் பேரழிவு ஏற்பட்டு, உலக அமைதியை நிலை நாட்ட அனைத்து நாடுகளும் இணைந்த ஐக்கிய நாடுகள் மன்றம் அமைந்த பிறகும் புவி முழுவதும் போர்கள் ஒழிந்தனவா என்றால்.... இல்லை! கொரியாவில் போர், வியட்நாமில் போர், லெபனானில் போர், பாலத்தீனத்தில் போர், ஈராக்கில் போர், இறுதியாக யுகோசுலாவியாவில் போர் - என்றெல்லாம் எண்ணத் தொலையாத போர்கள் நடந்துகொண்டே தான் இருக்கின்றன.

தன்னல வெறியைத் தகர்த்தால் அன்றி, தனி மனிதராயினும், உலக நாடுகளாயினும் அமைதித் தென்றலைத் தழுவவே முடியாது.

அதனால் தான் தன்னலக் கொடுமையைச் சாடியும் உலக அமைதிக் கொடியை உயர்த்திப் பிடித்தும் அழகு கொஞ்சும் அரிய பாடலைப் பாவேந்தர் பாரதிதாசன் இவ்வாறு தீட்டுகிறார்:

'தூய உள்ளம் அன்புள்ளம் பெரிய உள்ளம்
தொல்உலக மக்களெலாம் ஒன்றே என்னும்
தாயுள்ளம் தனிலன்றோ இன்பம்! ஆங்கே
சண்டையில்லை தன்னலந்தான் தீர்ந்த தாலே!''

- பாவேந்தரது பொது நல நோக்கைப் புலப்படுத்தும் 'உலகப் பார்வை' கொண்ட ஒப்பற்ற செந்தேன் வரிகள் அல்லவா இவை?

இன்று ஐ.நா. மன்றம் தனக்கு என்று அமைதிப் படைகளை உருவாக்கிக் கொண்டு, சண்டைகள் நடைபெறும் நாடுகளுக்கெல்லாம் அனுப்பிப் பகைமைத் தீயை அணைக்க முயல்வதைப் பார்க்கிறோம். அத்தகைய அமைதிப் படைகளே போர்ப் பரணியாகப் பாடிச் செல்லக் கூடிய பாடல் வரிகளையும் எத்துணை ஆண்மை தெறிக்கப் பாவேந்தர் இயற்றியிருக்கிறார் பாருங்கள் -

''புதியதோர் உலகம் செய்வோம் - கெட்ட
போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்!''



ஐ.நா. மன்ற அமைதிப் படை வீரர்களுக்கே தனியெழுச்சி தரத்தக்க உரம் செறிந்த பாடல் படைக் கலன்கள் தாமே இவை!

### சுயமரியாதைச் சூறாவளி

பகுத்தறிவுப் பகலவன் பெரியார், சாதிவெறி நாகத்தின் பற்களைப் பிடுங்கவும் மூட நம்பிக்கையின் முதுகெலும்பை முறிக்கவும் 'சுயமரியாதை இயக்கம்' என்னும் சமூகச் சீர்திருத்தத் தன்மான அமைப்பினைத் தோற்றுவித்தார். அவருடைய கனல் தெறிக்கும் கருத்துகளுக்கெல்லாம் கவிதை வடிவம் தந்து புனல் வெள்ளம்போல் அவற்றைப் பாய விட்டவர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்.

அவ்வாறு பெரியாருடைய சுயமரியாதைக் கொள்கைகளைச் சூறாவளிப் பாடல்களாகச் சுழலவிட்ட போதும் தமது உலகப் பார்வையை உதறிவிடவில்லை இந்தப் புதுவைப் பூங்குயில்.

### இதோ ஓர் எடுத்துக்காட்டு

''சாதிமத பேதங்கள் மூட வழக்கங்கள்
தாங்கிநடை பெற்றுவரும் சண்டை உலகிதனை
ஊதையினில் துரும்புபோல் அலைக்கழிப் போம்பின்னர்
ஒழித்திடுவோம் புதியதோர் உலகம் செய்வோம்!
பேதமிலா அறிவுடைய அவ்வுல கத்திற்குப்
பேசு 'சுயமரியாதை உலகு' எனப் பேர்வைப்போம்!
ஈதேகாண் சமூகமே யான்சொன்ன வழியில்
ஏறு நீ! ஏறு நீ! ஏறு நீ ஏறே!''

- 'முன்னேறு' என்னும் தலைப்பில் தீட்டப்பெற்றுள்ள இந்தப் பாடல், உலகிலே எந்த நாட்டிலே இழி பிறவியாய் ஒடுக்கப்படும் மனித இனத்துக்கும் தன்மான உணர்வினை ஊட்டும் உந்துவிசை தானே!

### சமய வெறிக்குச் சாட்டையடி!

இன்று இந்தியத் துணைக் கண்டத்தில் சமய வெறி, பல்லாயிரக் கணக்கான மக்களைப் பலி வாங்கித் தாண்டவம் ஆடுவதைப் பார்க்கிறோம். அதனுடைய அளப்பரிய பேரழிவுகளைப் பற்றிப் பல ஆண்டுகளுக்கு முன்னரே சிந்தித்துச் செயலாற்றுமாறு கவிதையிலேயே வினாக் கணைகளைத் தொடுத்துள்ளார் பாவேந்தர்.

''சாந்தியால் உலகம் தழைப்பது நன்றா?
சமய பேதம் வளர்த்தே தளர்வது நன்றா?
மாந்தரில் சாதி வகுப்பது சரியா?
மக்கள் ஒரே குலமாய் வாழ்வது சரியா?''

இந்தியாவில் மட்டும்தான் சமயவெறிச் சண்டைகள் நடைபெறுகின்றன என்பது இல்லை. லெபனான் என்னும் மேற்கு ஆசிய நாட்டில் இசுலாமிய சமயத்தவர்க்கும், கிறித்தவ சமயத்தவர்க்கும் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாகவே சண்டைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

எனவேதான் அந்த நாளிலேயே 'உலகப் பார்வை' தழுவ, சமய வெறியைச் சாடி. 'ஆய்ந்து பார்' என்னும் தலைப்பில் இந்தக் கவிதை முரசைக் கொட்டியிருக்கிறார் பாவேந்தர்.

### சமூக நீதிக்குப் போர்ப்பரணி

இந்த உலகத்தை இயங்கச் செய்யும் உயிர் மூச்சே உழவரும் தொழிலாளரும் அளிக்கின்ற உழைப்புதான். நெற்றி வேர்வை முத்துக்களால் நிலக்கோளத்துக்கு வாழ்வை வழங்கும் அந்த உழைப்பாளி இனமோ வற்றிய பீர்க்கங்காய்களாக வயிறு ஒட்டி வாடிக் கருகுகின்றனர். காலம் காலமாக உலகம் முழுவதும் ஊடுருவியுள்ள உழைப்புச் சுரண்டலை ஒழிக்கவும், பொருளியல் மேடு-பள்ளங்களை நிரவல் செய்யவும் வடிக்கப்பட்ட ஒரு சமூக நீதிக் கருவியே காரல் மார்க்சின் பொதுவுடைமைத் தத்துவம்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், அந்தச் சமனிலைப் பொருளியல் கோட்பாடே உருக்குலையும் உழைப்பாளி இனத்துக்கு வறுமைக் கடலிலிருந்து மீள்வதற்கேற்ற 'உயிர்ப் பட்கு' என உறுதியாக நம்புகிறார். எனவே இப்படி ஓர் எழுச்சிப் பரணி பாடுகிறார்.

''வாழ்வதிலும் நலம் சூழ்வதிலும் - புவி
மக்களெல்லாம் ஒப்புடையார்.
ஏழ்மையில் மக்களைத் தள்ளுவதோ? - இதை
இன்பம் எனச் சிலர் கொள்ளுவதோ?
கூழுக்குப் பற்பலர் வாடவும் சிற்சிலர்
கொள்ளையடிப்பதும் நீதியோ - புவி
வாழ்வதுதான் எந்தத் தேதியோ?''



ஒழுக்கத்தை அடியோடு அழிப்பது குடி.
—அண்ணல் காந்தியடிகள்



- சமாதானமும், சகிப்புத் தன்மையுமே நமது இலட்சியங்கள்.
- நம்மிடையே தீண்டாமையும், சாதியும் உள்ள வரை, சமதர்மமோ, ஜனநாயகமோ தழைக்க முடியாது.

**The Tamil Nadu State Apex Co-Operative Bank Ltd.,**

TNSC BANK

233, N.S.C. Bose Road, Madras-600 001.

**Rate of Interest on Deposits (Effective from 1.3.1993**

| Sl.No. | Type of Deposit | Rate of Interest |
|---|---|---|
| 1. | Savings Bank Accounts | 6.25% w.e.f. 24.4.92 |
| 2. | Fixed Deposits : | |
| | For 46 DAYS and above but upto 270 days | 11.25% |
| | For 271 DAYS and above but upto 364 days | 11.00% |
| | For 1 YEAR and above | 11.25% |

**Interest on Fixed Deposit for 1 year and above will be paid Quarterly**

- NRO & NRE Accounts Facilities are available in 6 designated Branches.
- Interest rates are subject to RBI directives from time to time.

THE BANK AT YOUR SERVICE






# பாவேந்தர் பாரதிதாசனின் உலகப்பார்வை

கவிஞர் அ. மறைமலையான்

தமிழ் மண்ணில் இந்த இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய முதல் பகுத்தறிவுப் பாவலர் - 'புரட்சிக் கவிஞர்' என்று பேரறிஞர் அண்ணா அவர்களால் போற்றப்பெற்ற பாரதிதாசன் அவர்களே!

அறியாமை இருளில் ஆழ்ந்து கிடந்த தமிழ் இனத்துக்குத் தமது கவிதைக் கதிரொளியால் விழிப்புணர்ச்சியைப் பாய்ச்சிய செந்தமிழ்ச் செங்கதிரோன் - பாவேந்தர் பாரதிதாசன்.

அவருடைய பாடல்களில் - அருவியும் ஆடி வரும்; அனற்பொறியும் ஓடி வரும்! நறுமண மலர் சிரிக்கும்; நடுங்க வைக்கும் வெடி வெடிக்கும்! இன்னிசைப் பண் தவழும்; விண் பிளக்கும் இடி முழங்கும்!

ஆண்டுதோறும் ஏப்ரல் திங்களில் அவரையும் அவர் தம் படைப்புகளையும் எண்ணி எண்ணித் தங்களுக்கு எழுச்சியூட்டிக் கொள்வது தமிழர் ஒவ்வொருவருடைய கடமையாகும். ஏனெனில் 1891 ஏப்ரல் 21-இல் அவர் மலர்ந்தார்; 1964 ஏப்ரல் 29-இல் அவர் உதிர்ந்தார்.

புதுவை மாநிலத்தில் திரு. கனகசபை, திருமதி இலக்குமி ஆகியோர்க்கு மகனாய்ப் பிறந்த அவரது இயற்பெயர்: கனக சுப்புரத்தினம். விடுதலைக் கவிஞர் சி. சுப்பிரமணிய பாரதியாரிடம் தமக்கு உண்டான ஆழ்ந்த பேரன்பால் 'பாரதிதாசன்' என்று தம் பெயரை அவர் மாற்றிக் கொண்டார்.

1908-இல் தமிழாசிரியராகப் பணியாற்றத் தொடங்கிய அவர் 37 ஆண்டுகளுக்குப் பின் 1946 நவம்பரில் ஓய்வு பெற்றார். பிரெஞ்சு அரசு அவருடைய புரட்சி நடவடிக்கைகளுக்காக 15 மாதச் சிறை வாழ்வைத் தந்தது.

**அண்ணா அளித்த பொற்கிழி**

பெரியார் அவர்களுடைய பத்தறிவுக் கருத்துக்களால் ஈர்க்கப்பெற்ற பாரதிதாசன், அந்தச் சீர்திருத்தச் சிற்பியால் வெளியிடப் பெற்ற 'குடியரசு' 'பகுத்தறிவு' ஏடுகளில் பாடல்கள் எழுதினார். இந்தியாவிலேயே முதன் முதல் குடும்பக் கட்டுப்பாடு பற்றிப் பாடல் தீட்டிய பெருமைக்குரியவர் அவர்.

பேரறிஞர் அண்ணா அவர்களது பெரு முயற்சியால் சென்னையில் 1946 ஜூலை 29-இல் நாவலர் சோமசுந்தர பாரதியார் தலைமையில் 'புரட்சிக் கவி' பட்டத்துடன் ரூபாய் இருபத்தையாயிரம் பொற்கிழி வழங்கப்பட்டது.

பாவேந்தர் இயற்றியுள்ள மொத்தப் படைப்புகள் 72. இவற்றில் கவிதை நூல்கள் 33; (கதைப் பாடல்) காவியங்கள் 17; நாடகங்கள் 12; சிறுகதைத் தொகுப்புகள் 2 - முதலானவை அடங்கும்.

இந்தியாவிலேயே முதன்முதல் கவிதையிலேயே இதழ் நடத்திய ஆசிரியர் பாவேந்தரே! சர்வோதயத் தலைவர் எஸ்.ஆர். சுப்பிரமணியன் அவர்களது உறுதுணையுடன் 'ஸ்ரீ சுப்பிரமணிய பாரதி கவிதா மண்டலம்' என்னும் திங்கள் இதழை அவர் வெளியிட்டு வந்தார். பின்னர் 'குயில்' கிழமை இதழ் நடத்தினார்.

புதுவை மாநிலச் சட்டமன்றத் தலைவராகவும் அவர் பெருமை பெற்றுள்ளார். தமிழ் வளர்ச்சிக்கும் தமிழின விழிப்புக்கும் பாடல் வெள்ளத்தைப் பாயவிட்ட பாவேந்தர் -'உலகப் பார்வை' மிகுந்தவராகவும் ஒளி வீசினார். அவரது அந்தப் பரந்த பொதுநோக்கை ஓரளவேனும் தொட்டுக்காட்டுவது இக்கட்டுரை நோக்கம்.

**தமிழ் இலக்கியங்களில் உலகம்**

உலகின் முதல் மொழியினராக - முதல் இனத்தவராகத் - தோன்றிய தமிழர், தொன்றுதொட்டே 'உலகப் பார்வை' உடையோராகவே வாழ்ந்தனர்; வளர்ந்துள்ளனர்.

பழந்தமிழ்ப் பாவலர் பலரும் தத்தம் பாடல்களில் 'உலகு' 'உலகம்' 'ஞாலம்' 'வையம்' 'பார்' 'புவி' முதலான சொற்களை ஆண்டு தங்கள் உலகப் பொதுப் பார்வையைச் சிறப்பாக உணர்த்தியுள்ளனர்.

சங்க காலப் புலவர்களுள் தலைசிறந்தவராகப் போற்றப்பெறும் கடியலூர் உருத்திரங்கண்ணனார், தமது பெரும்பாணாற்றுப் படை நூலில்-

'மலர்தலை உலகத்து மன்னுயிர் காக்கும் - முரசு முழங்கு தானை மூவர். என்று மூவேந்தர்களைப் போற்றும் பொழுதே 'உலகு' என்னும் சொல்லை ஆண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

திருவள்ளுவர் தமது முதல் திருக்குறளிலேயே 'உலகு' என்னும் சொல்லைப் பெய்து தமக்குள்ள பரந்த புவி

- 'சாய்ந்த தராசு' என்னும் தலைப்பில் எழுதப்பெற்ற பாடல் தான் இது. 'புவி' என்னும் தமது 'உலகப் பார்வை'யைப் பாவேந்தர் இதில் ஒளிரச் செய்கிறார்.

**'உலகம் உன்னுடையது'**

இத்துடன் அவர் நிற்கவில்லை. மனிதப் பிறவியாய்த் தோன்றிய ஒவ்வொருவருமே இந்த உலகை எவ்வாறு பார்க்க வேண்டும் - அதன் ஏற்றத்துக்குப் பொது நோக்கோடு எப்படியெல்லாம் பணியாற்ற வேண்டும் - என்பதையும் பரந்த உள்ளம் கொண்ட பாவேந்தர் தெளிந்த சிந்தையோடு இவ்வாறு அறிவுறுத்துகிறார்.

''எங்கும் பாரடா இப்புவி மக்களைப்
பாரடா உனது மானிடப் பரப்பை!
பாரடா உன்னுடன் பிறந்த பட்டாளம்
'என்குலம்' என்றுனைத் தன்னிடம் ஒட்டிய
மக்கட் பெருங்கடல் பார்த்து மகிழ்ச்சிகொள்!

''அறிவை விரிவுசெய்! அகண்ட மாக்கு!
விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை!
பிரிவிலை எங்கும் பேதம் இல்லை
உலகம் உண்ணஉண்! உடுத்த உடுப்பாய்!
புகல்வேன்: உடைமை மக்களுக்குப் பொது
புவியை நடத்து'' பொதுவில் நடத்து!
வானைப் போல் மக்களைத் தாவும்
வெள்ள அன்பால் இதனைக்
குள்ள மனிதர்க்கும் கூறடா தோழனே!''

- 'உலகம் உன்னுடையது' என்னும் தலைப்பிலேயே வையத்து மாந்தர் அனைவர்க்குமே இந்த வழிகாட்டிப் பெருவிளக்கைப் பாடலாகத் தருகிறார் பாவேந்தர்!

தமிழ் மண்ணில் பல்லாயிரம் ஆண்டுகளாகக் கோடிக் கணக்கான பாவலர்கள் தோன்றியிருக்கின்றனர். அவர்களுள் ஆண்டவனின் அருளைப் பற்றியோ, (நாட்டை) ஆண்டவர்களின் பரிசுகள் பற்றியோ கவலைப்படாமல் பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கையோடு - 'உலகப் பார்வை'யோடு - குமுகாய அறநெறிக்காகக் குரல் எழுப்பிய ஒரே பாட்டுக் குயில் - புரட்சிக் குயில் - பாவேந்தர் பாரதிதாசன் ஒருவரே! ●

## நாடக வளர்ச்சியை ஊக்குவிக்கும் புரட்சித் திட்டம்

### மாண்புமிகு முதல்வர் அறிவிப்பு

தமிழகத்தில் புதிய நாடகக் கலைஞர்களை ஊக்குவித்து, நாடக வளர்ச்சிக்கு உதவிடும் வகையில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் சிறந்த 10 புதிய நாடகங்களுக்கு 2 இலட்சம் ரூபாய் மானியம் வழங்கும் திட்டத்தை அறிவித்துள்ளார். ஒவ்வொரு நாடகத்திற்கும் ஏறத்தாழ 15 ஆயிரம் ரூபாயிலிருந்து 20 ஆயிரம் ரூபாய் வரை மானியம் வழங்கும் இந்தத் திட்டம் தமிழக நாடக வரலாற்றிலேயே முதல் தடவையாக, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள புதுமையான திட்டம் ஆகும்.

தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம், தமிழகத்திலுள்ள நாடகக் குழுக்களிடமிருந்து வரப்பெற்ற 41 நாடகங்களை, நாடக வல்லுநர் குழு ஒன்றின் மூலம் ஆய்வு செய்து சிறந்த 10 நாடகங்களைத் தேர்ந்தெடுத்துள்ளது. அவை வருமாறு:

1. ஒன்றே குலம் ஒருவனே தேவன் - காஞ்சி ரங்கமணி, அழகிரி நாடக மன்றம்
2. அன்பு வழி - குடியாத்தம் நாகராஜ்
3. வேலிகள் - லியோ பிரபு
4. இரண்டாம் சாணக்கியன் - கலாமந்திர் சாணக்கியன்
5. ஓ அந்தக் கவிதைக்கு விலை - அஞ்சலி கிரியேஷன்
6. இந்த மண் எனது கண் - மேட்டூர் எமராஜன்
7. ராஜ ரகசியம் - எஸ். பார்த்திபன் ராஜா
8. கோடை நிலவு - தோட்டக்கார விஸ்வநாதன்
9. அப்பா வருவாரா? - அக்கினி புத்திரன்
10. அன்பு இல்லம் - புதுவை வே. முகுந்தன்

மானியத்தொகை பெறும் இந்த 10 நாடகங்களுக்கும், சென்னையில் நடைபெறவுள்ள கோடை நாடக விழாவில் அரங்கேற்றப்படும்.





- 'சாய்ந்த தராசு' என்னும் தலைப்பில் எழுதப்பெற்ற பாடல் தான் இது. 'புவி' என்னும் தமது 'உலகப் பார்வை'யைப் பாவேந்தர் இதில் ஒளிரச் செய்கிறார்.

**'உலகம் உன்னுடையது'**

இத்துடன் அவர் நிற்கவில்லை. மனிதப் பிறவியாய்த் தோன்றிய ஒவ்வொருவருமே இந்த உலகை எவ்வாறு பார்க்க வேண்டும் - அதன் ஏற்றத்துக்குப் பொது நோக்கோடு எப்படியெல்லாம் பணியாற்ற வேண்டும் - என்பதையும் பரந்த உள்ளம் கொண்ட பாவேந்தர் தெளிந்த சிந்தையோடு இவ்வாறு அறிவுறுத்துகிறார்.

''எங்கும் பாரடா இப்புவி மக்களைப்
பாரடா உனது மானிடப் பரப்பை!
பாரடா உன்னுடன் பிறந்த பட்டாளம்
'என்குலம்' என்றுனைத் தன்னிடம் ஒட்டிய
மக்கட் பெருங்கடல் பார்த்து மகிழ்ச்சிகொள்!

''அறிவை விரிவுசெய்! அகண்ட மாக்கு!
விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை!
பிரிவிலை எங்கும் பேதம் இல்லை
உலகம் உண்ண உண்! உடுத்த உடுப்பாய்!
புகல்வேன்: உடைமை மக்களுக்குப் பொது
புவியை நடத்து'' பொதுவில் நடத்து!
வானைப் போல் மக்களைத் தாவும்
வெள்ள அன்பால் இதனைக்
குள்ள' மனிதர்க்கும் கூறடா தோழனே!''

- 'உலகம் உன்னுடையது' என்னும் தலைப்பிலேயே வையத்து மாந்தர் அனைவர்க்குமே இந்த வழிகாட்டிப் பெருவிளக்கைப் பாடலாகத் தருகிறார் பாவேந்தர்!

தமிழ் மண்ணில் பல்லாயிரம் ஆண்டுகளாகக் கோடிக் கணக்கான பாவலர்கள் தோன்றியிருக்கின்றனர். அவர்களுள் ஆண்டவனின் அருளைப் பற்றியோ, (நாட்டை) ஆண்டவர்களின் பரிசுகள் பற்றியோ கவலைப்படாமல் பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கையோடு - 'உலகப் பார்வை'யோடு - குமுகாய அறநெறிக்காகக் குரல் எழுப்பிய ஒரே பாட்டுக் குயில் - புரட்சிக் குயில் - பாவேந்தர் பாரதிதாசன் ஒருவரே! ●

## நாடக வளர்ச்சியை ஊக்குவிக்கும் புரட்சித் திட்டம்

### மாண்புமிகு முதல்வர் அறிவிப்பு

தமிழகத்தில் புதிய நாடகக் கலைஞர்களை ஊக்குவித்து, நாடக வளர்ச்சிக்கு உதவிடும் வகையில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் சிறந்த 10 புதிய நாடகங்களுக்கு 2 இலட்சம் ரூபாய் மானியம் வழங்கும் திட்டத்தை அறிவித்துள்ளார். ஒவ்வொரு நாடகத்திற்கும் ஏறத்தாழ 15 ஆயிரம் ரூபாயிலிருந்து 20 ஆயிரம் ரூபாய் வரை மானியம் வழங்கும் இந்தத் திட்டம் தமிழக நாடக வரலாற்றிலேயே முதல் தடவையாக, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள புதுமையான திட்டம் ஆகும்.

தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம், தமிழகத்திலுள்ள நாடகக் குழுக்களிடமிருந்து வரப்பெற்ற 41 நாடகங்களை, நாடக வல்லுநர் குழு ஒன்றின் மூலம் ஆய்வு செய்து சிறந்த 10 நாடகங்களைத் தேர்ந்தெடுத்துள்ளது. அவை வருமாறு:

1. ஒன்றே குலம் ஒருவனே தேவன் - காஞ்சி ரங்கமணி, அழகிரி நாடக மன்றம்
2. அன்பு வழி - குடியாத்தம் நாகராஜ்
3. வேலிகள் - லியோ பிரபு
4. இரண்டாம் சாணக்கியன் - கலாமந்திர் சாணக்கியன்
5. ஓ அந்தக் கவிதைக்கு விலை - அஞ்சலி கிரியேஷன்
6. இந்த மண் எனது கண் - மேட்டூர் எமராஜன்
7. ராஜ ரகசியம் - எஸ். பார்த்திபன் ராஜா
8. கோடை நிலவு - தோட்டக்கார விஸ்வநாதன்
9. அப்பா வருவாரா? - அக்கினி புத்திரன்
10. அன்பு இல்லம் - புதுவை வே. முகுந்தன்

மானியத்தொகை பெறும் இந்த 10 நாடகங்களுக்கும், சென்னையில் நடைபெறவுள்ள கோடை நாடக விழாவில் அரங்கேற்றப்படும்.




# இந்தியன் வங்கியின் பிக்சட் டெபாசிட் திட்டம்.

## உங்கள் வளமைக்கு வழிகாட்டி

பாதுகாப்பு
உடனடி பணம் பெறும் வசதி
அதிக வருமானம்

இந்தியன் வங்கியின் பிக்சட் டெபாசிட் திட்டத்தின் கீழ் உங்கள் டெபாசிட்டின் மீது உங்களுக்கு மூன்று மாதத்திற்கொருமுறை வட்டி கிடைக்கிறது. மாத வட்டியும் பெறலாம் — ஆனால் சற்று குறைந்த விகிதத்தில்.

உங்கள் பணம் பத்திரமாக இருக்கும். மேலும், டெபாசிட் முதிர்ச்சி அடையும் காலத்திற்கு முன்பே பணம் தேவைப்பட்டால், விதிகளின்படி கணக்கிடப்பட்ட வட்டியுடன் டெபாசிட் தொகையைப் பெறலாம். 75% வரை கடனாகவும் பெறலாம்.

தனிப்பட்ட கவனம் மற்றும் சிறப்பான சேவையில் புகழ்பெற்ற இந்தியன் வங்கி, வளமைக்கு வழிகாட்டி வாழ்வுக்கு ஒளியூட்டுகிறது.

**இந்தியன் வங்கி**
உங்கள் செல்வச் செழுமைக்கு உதவும் வங்கி
31, இராஜாஜி சாலை, சென்னை - 600 001.

# வாரிசுகள் வளரட்டும்

பின்னலூர் மு. விவேகானந்தன்

''எலே, கருப்பா, அங்க கீழ வெளி நாத்தங்காலு ஒரமா நெல்லு கட்டு சொமந்துகிட்டு போறானே, பாத்தா நம்ம ராசுமவ ரத்னம் மாதிரி இல்ல'' என்று களத்து மேட்டு வைக்கோல்போர் மேல் குடைபிடித்து அமர்ந்தபடியே விசாரணை செய்து கொண்டிருந்தார் கணக்கப்பிள்ளை.

''ஆமாங்க, சாமி!... அவனே தான்'' கையிலிருந்த வைக்கோல் கட்டை உதறி, களத்தில் காய வைத்துக் கொண்டே பதில் சொன்னான் பண்ணையாள் கருப்பன்.

''அவன் நம்ம தாலுக்கா ஆபீஸ்ல கிளார்க்கால்ல... இருந்தான்?''

''ஆமாங்க, ஆனா இப்ப வேல காலியில்ல'ன்னு வேலயவுட்டு எடுத்துட்டாங்களாம்'' அனுதாபத்தோடு கருப்பன் கூறினான்.

''வேல இல்ல'ன்னு எடுத்தாங்களா இல்ல... தப்பு தண்டா ஏதாவது பண்ணிட்டு...'' கணக்கப்பிள்ளை கூறிமுடிப்பதற்குள் கருப்பன் குறுக்கிட்டு, ''அப்படி ஏதுமில்லீங்க, ரத்னம் நல்ல புள்ளங்க'' என்று நற்சான்றளித்தான்.

''ஹூம், படிச்சவனுங்க வேல வெட்டியில்லாம ஊருல இருந்தா அது ஊருக்குதான் ஆபத்து. தாலுக்கா ஆபீசில இருந்தப்பவே தலைகாலு புரியாம நின்னான்னு கேள்விப்பட்டேன். ஏய், அவனை சித்த கூப்பிடு'' என்று கட்டளையிட்டார் கணக்கப்பிள்ளை.

''ஏ... ரத்னம்... கொஞ்சம் களத் தண்ட வந்துட்டுப் போயேன்.. கணக்கப்புள்ள ஐயா கூப்புடுறாங்க'' என்று கூவி அழைக்கவே, ரத்தினம் அங்கு வந்து சேர்ந்தான்.

''கணக்கப்புள்ள ஐயா, வரச் சொன்னீங்களா?'' என்று பணிவோடு கேட்டவனிடம், ''ஆமாண்டாப்பா, ரத்னம்!... தாலுக்கா ஆபிசில வேல செஞ்சியே, என்னாச்சு திடீர்னு இங்க வந்து வயல் காட்டுல...'' என்று ஏகடியம் செய்தவர் மூஞ்சில் அடிச்சாற்போல, ''அதெல்லாம் என் சொந்த விஷயமுங்க..., இங்க ஆக வேண்டிய வேலையிருந்தா சொல்லுங்க'' என்றான் ரத்னம்.

''இந்தத் திமிர் பேச்சுக்கு ஒண்ணும் கொறைச்சல் இல்ல, போ, போ,... உன் வேலயப் பாரு?...'' என்று அதட்டலாகக் கூறினார் கணக்கப்பிள்ளை.

''வேல போயிட்டுதேன்னு அந்தத் தம்பியே நொந்து போயிருக்கு, நீங்க வேற இன்னும் நோகடிக்காதீங்க,... நாலு எழுத்து படிக்காம ஊர்சுத்தற பசங்களே பேண்ட்ட எடுத்து மாட்டிக்கிட்டா வயக்காட்டு பக்கம் வரவே வெக்கப்படுறானுங்க. அப்படியிருக்க, படிச்சபுள்ள வந்து வயலை மறக்காம உழைக்குதேன்னு' பெருமைப்படுங்க சாமி'' என்றான் கருப்பன்.

''வயித்துப் பொழப்புக்கு வேற வேல கெடைக்கில, அதனாலதான் கிளார்க்கு கட்டு சுமக்குறாரு...'' என்று இடக்காகப் பேசினார் கணக்கப்பிள்ளை.

''அப்படியெல்லாம் நம்ம உழைப்ப நாமே கேவலப்படுத்தக் கூடாதுங்க, வெள்ளாமை நமக்கு மட்டுமில்ல, நம்ம தேசத்துக்கே உயிர் நாடிங்க, புள்ள சேதி தெரியுங்களா, அந்தத் தம்பிக்கு பேங்கில வேல கெடைச்சிருக்காம். இன்னும் பத்து நாள்ள பட்டணம் போவப் போவுது தெரியுங்களா?'' என்று கருப்பன் கூறக் கேட்டதும், 'சரி, சரி, உன் பிரசங்கத்தை நிறுத்திட்டு வேலயப் பாரு!...'' என்று உத்தரவிட்டார்.

அன்று மாலை ரத்தினத்தைத் தேடி வீட்டிற்குவந்த கருப்பனிடம், ''என்னப்பா, என் புள்ள இப்ப உத்யோகத்தில இல்லியே, அவனால என்ன காரியம் ஆவணும்?'' என்று விசாரித்துக்கொண்டே அவன் தாயார் வாயிலருகே வந்தார்.

''அம்மா, ரத்னம் வேலையில இருந்தாலும் ஒண்ணுதான், இல்லண்ணாலும் ஒண்ணுதான். வேலையில இருக்கிறவங்க எல்லாம் உதவி செய்வாங்க, காரியம் சாதிச்சுக் கொடுங்பாங்க'ன்னு சொல்லிட முடியாதும்மா, அதே போல வேலயில இல்லாதவங்க எல்லாம் உதவாக்கரை'ன்னு ஒதுக்கிடவும் முடியாது. தம்பியை ஊரு சாவடிக்கு அழைச்சிக்கிட்டுப் போகவந்தேன்''.

''ஊர்ச் சாவடிக்கா?''

''ஆமாம்மா...''

''எதுக்கு?...''

''எனக்கே தெரியாது. எல்லாம் நல்லத்துக்கா'தான் இருக்கும் என்றான் வெகுளியாக.

''தோட்டத்துல மாட்டுக்குத் தீனி வைச்சிக்கிட்டிருக்கான். இதோ கூப்பிடுறேன்...'' என்று கூறிக்கொண்டிருக்கும்போதே, 'அடடே, வாங் கண்ணே வாங்க,... கொஞ்சம் பொறுங்க இதோ நொடியில

''தம்பி உங்க ஏற்பாடு படியே ஒரு பத்து பதினைஞ்சு பேரை ஊர்ச் சாவடியில கூட்டியாந்துட்டேன். எதுக்கு, என்னத்துக்கு'ங்கிற விவரம் தெரிஞ்சிக்கணுமாம். எனக்குக் கூட தெரிஞ்சிக்க ஆசையா இருக்கு'' என்று கருப்பன் கேட்டபோது, ''பொறப்படுங்க, பேசிக்கிட்டே போவலாம்'' என்று கூறி புறப்பட்டான். ''போயிட்டு வரோம்மா'' என்று இருவரும் ஒரே சமயத்தில் கூறி விடைபெற்றபோது, 'என்ன மோப்பா, ஊரு வம்பை விலைக்கு வாங்காம வந்தா சரிதான்' என்று கவலையோடு எச்சரித்தாள் தாயார்.

சாவடியில் கூடியிருந்தவர்கள் எல்லோருக்கும் தன் வணக்கத்தைத் தெரிவித்துவிட்டு, ''நம்ம ஊர்ல ஒரு நல்ல காரியம் தொடங்கணும்'னு நெனைக்கிறேன். அதுக்கு உங்க ஆதரவைக் கேட்கத்தான்...,'' என்று ரத்னம் சொல்லி முடிப்பதற்குள்,

''தம்பி, எனக்கே விஷயம் புரியல, கொஞ்சம் விவரமாதான் சொல்லேன், அப்படி என்ன நல்ல காரியம்?'' என்று ஆவலோடு கருப்பன் கேட்டான்.

''அண்ணே, நேத்து உங்களுக்கு ஒரு லெட்டர் வந்துதே தெரியுமா?''



சிட்லூர் மின்பகிர்மான வட்டத்தில் 1992-93-இல் நிறைவேற்றப்பட்டுள்ள விரிவாக்கத் திட்டங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

ரூ.101.63 இலட்சம் செலவில் காட்டுமன்னார் கோவிலில் 33 கி.வோ. திறன் கொண்ட துணை மின் நிலையம் அமைக்கப்பட்டது.

ரூ.0.57 இலட்சம் செலவில் எறையூர் மின்விசை ஊக்கி (பூஸ்டர்) அமைக்கப்பட்டது. ரூ.10 இலட்சம் செலவில் புவனகிரி 'லைன் டைப்' துணை மின் நிலையமும், ரூ.12 இலட்சம் செலவில் டி.வி. புத்தூர் 'லைன் டைப்' துணை மின் நிலையமும், ரூ.24.07 இலட்சம் செலவில் கண்டமங்கலம் துணை மின் நிலையத்தில் 'கெப்பாசிடர் பேசும்' அமைக்கப்பட்டன.

'93-94-ஆம் ஆண்டில் மூன்று திட்டங்கள் நிறைவேற்றப்பட உள்ளன. ரூ.406.083 இலட்சம் மதிப்பீட்டில் கோ. பூவனூரில் 110 கி.வோ திறன் கொண்ட துணை மின் நிலையம் அமைக்கப்படவுள்ளது. ரூ.721•308 இலட்சம் மதிப்பீட்டில் பி.முட்லூரில் 110/33/11 கி.வோ திறன் கொண்ட துணை மின் நிலையமும் ரூ.1760 இலட்சம் மதிப்பீட்டில் கடலூரில் 230/110 கி.வோ திறன் கொண்ட துணை மின் நிலையமும் அமைக்கப்பட உள்ளன. இம்மூன்று திட்டங்களுக்காக மொத்தம் ரூ.2887.391 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

என்று ரத்னம் கேட்க, "ஆமாம், வயல்காட்டில இருக்கச்சே என் பொண்ணு கஞ்சி கொண்டாந்துப்ப கொடுத்தது?" என்று பதில் கூறினான் கருப்பன்.

"அது சரி, உங்க பொண்ணுக்கு என்ன வயசு?" என்று ரத்னம் வினவ, வியப்பால் நெற்றிப் புருவம் உயர அங்கிருந்த அனைவரும் அவனைக் கூர்ந்து கவனித்தனர். அதில் ஒருவர் குறுக்கிட்டு, "ஏம்பா, இதெல்லாம் என்ன கேள்வி, விஷயத்துக்கு வா!" என்றார். ஆனா கருப்பனோ அதைச் சிறிதும் சட்டை செய்யாமல், "பதினஞ்சு வயசு ஆவுது தம்பி" என்றான்.

"லெட்டரைக் கொடுத்துட்டு என்ன சொல்லுச்சு?"

"நம்ம, ஊரு தபால்காரர் கிட்டே லெட்டரைப் படிக்கக்காட்டச் சொல்லிச்சாம். 'அவர் கூட்டுறவு சொஸைட்டியில பணம் கட்டச் சொல்லி டவுன்லேயிருந்து நோட்டீசு வந்திருக்கிறதாவும் பணத்துக்கு ஏற்பாடு பண்ணச் சொல்லச் சொன்னாரு'ன்னு தகவல் சொல்லுச்சு?" என்றான் கருப்பன்.

"ஏண்ணே, ஒரு கடுதாசியைப் படிக்கணும்'னாலே தபால் காரரையும், வாத்தியாரையும் நம்பிக்கிட்டு எவ்வளவு நாளைக்கு இருக்கறது?" என்று ரத்னம் வினவ, அருகிலிருந்த ஒருவர் -

"அதுக்கு நாம என்ன தம்பி பண்ண முடியும். நம்ம தலையெழுத்து அப்படி?... நம்ம புள்ளைங்களுக்குப் படிப்பு வருமா?" என்று தலைவிதியை நொந்துகொண்டார்.

"அதுதான் தப்பு. தலையெழுத்து, தலையெழுத்து'ன்னு சொல்லி சோம்பேறித் தனத்தைத் தான் வளர்த்துக்கிட்டோம். கல்விச் செலவுக்காக அரசாங்கம் கோடி கோடியா பணம் ஒதுக்குது. ஆனா படிக்காம நாமதான் பதுங்கிகிட்டு இருக்கோம்?" என்று பளிச்செனப் பதில் சொன்னான் ரத்னம்.

"தம்பி, அதுக்கென பண்றது? நாங்க படிக்க வைக்கலாம்'னு ஆசைப் பட்டாலும் அதுக்கு நம்ம ஊர்ல ஒரு பள்ளிக்கூடம் இல்லியே?" என்று ஆதங்கப்பட்டுக் கொண்டார் மற்றொருவர்.

"அதைத்தான் சொல்ல வர்றேன். நம்ம ஊர்ல பள்ளிக்கூடம் இல்லங்கறது வாஸ்தவம்தான். அதுக்காக நாம படிக்கக் கூடாது'ன்னு இல்ல. சினிமா கொட்டகை வைத்தேடி பக்கத்து ஊருக்கு சினிமா பார்க்கப்போவனும்'னு தோணுற அளவுக்கு பக்கத்து ஊரு பள்ளிக் கூடத்துக்கு அனுப்பி நம்ம புள்ளைங்கள படிக்க வைக்கணும்கற எண்ணம் ஏன் வரமாட்டங்குது?" என்று அவர்களுக்குத் தெரிந்த விஷயத்தின் மூலம் சிந்தனையைக் கிளறினான்.

"தம்பி, ஆவுற கதைய சொல்லுங்க?..." என்றார் மற்றொருவர்.

"ஆவுற கதையைச் சொல்லத் தான் உங்களையெல்லாம் இங்க வரச் சொல்லியிருக்கேன். அய்யா, நம்ம ஊர்ல பள்ளிக்கூடம் இல்லன்னு வருத்தப்பட்டீங்க இல்லையா!... அந்தக் குறையைப் போக்க ஒரு புதுத் திட்டம் சொல்லப் போறேன். அதாவது தினமும் சாயங்காலம் ஏழு மணியிலிருந்து எட்டு மணி வரை இந்த ஊர்ச் சாவடி 'இரவுப் பள்ளிக்கூடமா' மாறப் போவது?" என்று ரத்னம் குறிப்பிட்டபோது கருப்பன் குறுக்கிட்டு, அப்படின்னா வாத்தியாரு?" என்றொரு கேள்வியைக் கேட்டான்.

"அண்ணே, கொஞ்சம் பொறுமையா கேளுங்க. புத்தகம், சிலேட்டு பலகையெல்லாம் சேகரம் பண்ணிக்கிட்டு நானே பாடம் சொல்லிக் கொடுக்கலாம்'னு முடிவு பண்ணியிருக்கேன்."

"தம்பி, ரத்னம். எங்களுக்குக் கூட படிக்கணும்னு ஆசைதான். ஆனா, வழி தெரியாம தவிச்சிக்கிட்டு இருந்தோம். இப்ப படிக்கற வயது எங்களுக்கு இல்ல, இருந்தாலும் உன் மூலமா எங்க வாரிசுகளாவது படிச்சவங்களா மாறினா சரிதான்... அது சரி,... நீ தான் இன்னும் ஒரு வாரத்தில பட்டணத்துக்கு வேல பார்க்கப்போறதா கேள்விப்பட்டோம். [illegible] இப்படியிருக்க இது சாத்தியப்படுமா?" என்று தன் சந்தேக முடிச்சை அவிழ்த்தார்.

"நான் பட்டணத்துக்குப் போகப் போறதில்லைங்க?..." ரத்தினத்தின் இந்த வார்த்தை எல்லோரையும் திகைப்பில் ஆழ்த்தியது.



# சரியான தமிழ்ச் சொற்கள்

| | |
|---|---|
| Buffet | - பரப்புணவு |
| Buzzer | - இமிரி |
| Booster | - ஊக்கியம் |
| Bureau | - நிலையகம் |
| Cabinet maker | - கலைக்கலன் செய்பவர் |
| (Furniture maker | - அறைகலன் செய்பவர்) |
| Cancel | - களை |
| (Cancellation | - களைவு) |
| Canopy | - மேலாப்பு |
| Canteen | - அலுவலக உணவகம் |
| Cartoonist | - பகடிப்படம் வரையுநர் |
| Cassette | - ஒலிப்பேழை |
| Cell | - சிற்றம் |
| Championship | - வாகையம் |
| (Champion | - வாகையன்) |
| Circus | - அருந்திறல் அரங்கு |
| Clinic | - மருத்துவக் கூடம் |
| Clue | - சுவடு |
| Co-brother | - உடன் மருகர் |
| Command words | - கட்டளைச் சொற்கள் |
| Complex | - இணைவம் |
| (Federation | - இணையம்) |
| Confirmation | - நிலைப்பாடு |
| Consulting Room | - மருத்துவக் காண்பகம் |
| Co-option | - தேர்விணைப்பு |
| Counter | - கவிப்பு, முகப்பிடம் |

—நன்றி: 'ஆட்சி மொழி அருஞ்சொற்கள்'
திரு கோ. முத்துப்பிள்ளை

"என்ன? நெசமாவா?..." ஒருவர் கேட்க, "ஏன் தம்பி உனக்கென்ன பைத்தியமா? அவனவன் வேலைக்குப் பேயா அலையறான்... நீ என்னமோ சர்வ சாதாரணமா..." என்று கருப்பன் வேதனையோடு கேட்டான்.

"இருட்ல மூழ்கிகிட்டு கெடக்கிற நம்ம கிராமத்தை விட்டுவிட்டு வெளிச்ச வெள்ளத்தில மிதக்கிற நகரத்தில போய் தீவட்டி பிடிக்கறதனால பிரயோசனம் இல்லீங்க... நான் நம்ம கிராமத்திலேயே தங்கிடறா முடிவு பண்ணிட்டேன்" என்று திட்டவட்டமாகக் கூறினான் ரத்னம்.

"இவ்வளவு தூரம் வாயைக் கட்டி, வயித்தக்கட்டி உன்னை கஷ்டப்பட்டு படிக்க வைச்சு. நீ படிச்ச அந்தப் படிப்பெல்லாம் பாழா போயிடுமேப்பா" என்று கவலைப்பட்டார் ஒரு பெரியவர்.

"ஏன்யா, காந்தி, நேரு, வ.உ.சி., அண்ணா இவங்களப் பத்தி என்ன நெனக்கறீங்க?", என்று ரத்னம் வினவ, உடனே, அதற்கு, "அவங்களெல்லாம் பெரிய மேதைங்க" என்று அவர் பதில் கூறினார்.

"அதைவிட ரொம்ப முக்கியமான விஷயம் என்ன'ன்னா அவங்க வெட்டியா பேசி பொழுதைக் கழிக்கல, செயல்ல செஞ்சுக்காட்டி வரலாற்றை உண்டாக்கினாங்க! அப்படிப்பட்ட அவங்க எல்லாம் பெரிய படிப்பு படிச்சவங்க, அதாவது உங்களுக்குத் தெரியுமா?"

"தம்பி, அவங்க மலை, நாம மடுவு..."

"இல்லங்கையா, மடுவாயிருந்து தங்கள் பட்டத்தையும் சுகத்தையும் தியாகம் பண்ணினதால மலையா உயர்ந்துட்டாங்க. அவங்க படிச்ச படிப்புக்குப் பெரிய ஜட்ஜாவோ, கலைக்டராவோ ஆகியிருக்கலாம்... ஆனா, அவங்க அப்படி சுயநலவாதிகளா வாழ விரும்புல..." என்று விளக்கமளித்த ரத்னத்தைப் பார்த்து, "ஏம்பா, உன் வாழ்க்கையை பாழடிச்சிக்கிற!" என்று நா தழுதழுக்கக் கேட்டான் கருப்பன்,

"அண்ணே! கடை கடையா ஏறி இறங்கி நல்லதா, சொத்தை இல்லாததா பார்த்து காய்கறி வாங்கிட்டு வந்தாலும் அதை சரியா சமைக்கலன்னா எப்படி உபயோகமில்லாம போயிடுதோ அது போல அரசாங்கம் எப்படி எப்படி நல்ல திட்டங்களைப் போட்டாலும் அதைப் பயன்படுத்துற பொது மக்களுக்குப் போதிய அறிவில்லேன்னா திட்டம் முழுமையா வெற்றி பெறுவது சிரமம். அதைப் பயனுள்ளதா செய்யனும்'னா முதல்ல நமக்கு எழுத்தறிவோடு கூடிய தியாக உணர்வும் வரணும்..."

"அய்யா, நீங்களே சொல்லுங்க, நான் வேலைக்குப் போனா என் குடும்பம் மட்டும்தான் முன்னேற முடியும். பேங்க் உத்யோகத்தில கொஞ்சம் கொஞ்சம் கூடுதலா சம்பளம் கிடைக்கும் அவ்வளவுதான். ஆனா நான் இங்க இருந்தா நம்ம ஊரையும் முன்றேற்ற முடியும், அதிக ஊக்கத்தோட செயல்பட முடியும்?..."

"தம்பி, உன் முடிவு சரியோ, தப்போ! அதை எங்களால தீர்மானிக்க முடியல, ஆனா காந்தியை மறந்து போனவங்களுக்கு அவர் கண்ட கிராம சுயராஜ்யத்தை உருவாக்க இப்படியொரு புள்ள ஒவ்வொரு ஊருக்கும் இப்ப தேவைப் படுதுப்பா!"

"நாங்க என்ன செய்யணும், அதையும் தான் சொல்லேன்"? என்று ஆர்வமுடன் சிலர் கேட்டனர். அவர்களின் நம்பிக்கைக்கு உயிரூட்டம் அளிக்கும் வகையில், "மொதல்ல, உங்க வீடுகள்'ல படிக்கணும்'னு ஆர்வமுள்ள குழந்தைகள தினமும் காலையில ஆறுமணிக்கு என் வீட்டுக்கு அனுப்பி வையுங்க, அதே மாதிரி சாயந்திர நேரத்தில இந்த ஊர்ச்சாவடியில உங்கள மாதிரி பெரியவங்களுக்கும் சேர்த்துப் பாடம் சொல்லிக் கொடுக்கலாம்'னு நெனைக்கிறேன். நீங்க என்ன சொல்றீங்க?" என்று ரத்னம் கேட்டபோது ஏறக்குறைய எல்லோருமே ஒருமித்த குரலில் அவன் திட்டத்தை ஆமோதித்தார்கள். ●

# சுகந்தரும் சுற்றுலாத் தலம்



தருமபுரி மாவட்டத்தில், சுற்றுலாப் பயணிகளைக் கவரும் இடங்கள் நிறைய உண்டு.

அதியமான் கோட்டைப் பகுதியில் உள்ள சென்றாய பெருமாள் கோயில், கிருஷ்ணகிரி நீர்த்தேக்கம், ஒசூர் கோட்டை மாரியம்மன் கோயில், சந்திரசூடேஸ்வரர் கோயில், தீர்த்த மலையில் உள்ள தீர்த்தகிரீஸ்வரர் கோயில், 'சின்ன இங்கிலாந்து' என்று போற்றப்படும் தளி, ஒசூர் போன்ற பல இடங்கள் இம்மாவட்டத்திற்குச் சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திழுக்கக் கூடியவைகளாக இருக்கின்றன.

ஆனால் - இவற்றுக்கெல்லாம் மகுடம் வைத்ததுபோல விளங்குவது ஒன்று உண்டென்றால் - அது, ஒகேனக்கல் நீர்வீழ்ச்சியேயாகும்!

காடும் மலையும் கவினுறக் காட்சி தரும் இவ்விடத்தில் தவழும்- காவிரியை - நீர்த்திவலை புகைபோல் எழ மலை மீதிருந்து துள்ளி வீழும் காவிரியை நாம் கண்டு மகிழலாம். இதயம் பூரிக்க இந்த அருவியிலே சுற்றுலாப் பயணிகள் குளித்து மகிழலாம். வட்டப் பரிசலில் வகையுற அமர்ந்து நீரோட்டத்தில் உலா வரலாம்.

பொதுமக்கள் வசதிக்கென நவீன கழிப்பறைகள், ஆண்-பெண் உடை மாற்று அறைகளெல்லாம் தனித்தனியே இங்கே கட்டிவிடப்பட்டுள்ளன.

காவிரியாற்றின் அழகைத் தொங்கு பாலத்தில் நின்றும் நடந்தும் பயணிகள் மிக உயரத்திலிருந்தே கண்டு களிக்கும் நாள் விரைவிலேயே வரவிருக்கிறது.

ஆம். அதற்காகச் சுற்றுலாத்துறை மூலம் ரூ.7.50 இலட்சம் செலவில் தொங்கு பாலம் அமைக்கும் பணி தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டுக்குள்ளேயே ஒகேனக்கல்லுக்குச் சுற்றுலா வருவோர்க்கு உவப்பூட்டும் இந்த உன்னதப் பணி நிறைவேறிவிடும்.

இங்கு வரும் பயணிகள் தங்குவதற்காக, மாவட்ட ஆட்சியாளரைத் தலைவராகக் கொண்ட - தருமபுரி மாவட்ட சுற்றுலா வளர்ச்சிக் கழகம் இங்கே ஒரு விடுதி கட்டிவிட்டிருக்கிறது. இது தவிர, வனத்துறை, நெடுஞ்சாலைத் துறை, ஊராட்சி ஒன்றியம் ஆகியவைகளுக்கும் இங்கே தனித்தனி ஓய்வில்லங்கள் கட்டிவிடப்பட்டுள்ளன.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக உணவு மற்றும் ஓய்வு விடுதி ஒன்றும் இங்குள்ளது. திரு. வி. சந்திரசேகரன் மேலாளராக உள்ள இதில் 31 தங்கும் அறைகள் உள்ளன; குளிர்பதன வசதி செய்யப்பட்ட அறைகள் இரண்டு இருக்கின்றன.

சுமார் 14 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள இதில், 45 படுக்கை வசதி உடைய இளைஞர் விடுதியும் இருக்கிறது.

ஒகேனக்கல்லுக்கு வருவோரில், தமிழ்நாட்டைத் தவிர, கர்நாடகம், ஆந்திரம், கேரளம் போன்ற பிற மாநிலங்களிலிருந்தும் ஏராளமானவர்கள் வந்து போகிறார்கள் என்றார் இந்த இளம் மேலாளர்.

காவிரித்தாய், தமிழ்நாட்டினுள் பூவிரித்துப் புகும் பகுதியான ஒகேனக்கல்லில் 146 மான்கள் துள்ளிவிளையாடும் மான் பூங்கா ஒன்றும் - 205 முதலைகள் மொழுமொழுவென்று வளரும் முதலைப் பண்ணை ஒன்றும் - இவை தவிர - மயில், மலைப்பாம்புகள், வண்ணப் பறவைகள் வசிக்கும் வசீகரமான காட்சி சாலைகளும் இருக்கின்றன.



பென்னாகரம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கூத்தப்பாடி ஊராட்சியிலிருக்கும் ஒகேனக்கல் பற்றி மேலும் விவரமறிய - அவ்வூர் கிராம நிர்வாக அதிகாரியாக இருக்கின்ற திரு. ஆர். அம்சராஜ் நமக்குக் கிடைத்தார். விசாரித்தோம், ஒகேனக்கல் பற்றி அவர் தெரிவித்த கருத்துக்கள் இவை: ''ஒகேனக்கல்லுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க

## மறைந்த சிறுத்தை

ஆண்டு முழுவதும் பனி மூடிய சிகரங்களும், வறண்டு கிடக்கும் பாலை வனமும் உண்டு; அடர்ந்த காடுகளும் உண்டு, அலை தழுவும் தீவுகளும் உண்டு. இதுதான் நமது தாய்நாடு. மலை, பீட பூமி, பள்ளத் தாக்குத் தீவுகள் எனப் புவியியலில் எத்துணை வகை நிலப்பாகு பாடுகள் உண்டோ அத்துணையும் இங்கு உண்டு.

75,000 வகை உயிரினங்கள் இங்குக் காணப்படுகின்றன. பாலூட்டிகள் - 500, பறவையினம் - 2,000- ஊர்வன - 420, மீன் வகை - 2,000, பூச்சிகள் - 50,000 மற்றும் எண்ணற்ற முதுகெலும் பற்ற உயிர் வகைகள்.

இத்தகைய அபூர்வ இந்திய மண்ணில் வாழ்வதற்கு மனிதர்களுக்கு மட்டுந்தானா உரிமை? மற்ற உயிரினங்களைக் காக்கும் கடமையும் இருக்கிறது என்பதை நாம் மறந்ததால், இந்த நூற்றாண்டிலேயே சில அரிய இனங்களை நாம் இழக்க வேண் டியதாயிற்று. சிறுத்தை, வெளிர் சிவப்பு வண்ணத் தலையுடைய வாத்து, மலைக் காடை ஆகியவை நம் மண்ணிலிருந்து முற்றிலுமாக மறைந்துவிட்டன.

மெத்தனமாய் இருந்தால் மொத்தமும் அழிந்து விடும்!



● ஒசூர் தொழிற்பேட்டையில் உள்ள 'டைட்டான்' கைக்கடிகார நிறுவனத்தில்- உதிரிபாகங்களைச் சரி வரப் பொருத்திக் கடிகாரம் உருவாக்கப்படும் பிரிவின் உட்புறப் பகுதி.



இவர் சிவப்பிரகாச சுவாமிகள் மடத்தில் - அவரது மாணாக்கராக இருந்து தமிழிலும் சமஸ்கிருதத்திலும் பாண்டித்யம் பெற்றார். பிறகே, ஆன்மீக உணர்வு மேம்பட்ட முனுசாமியாக இருந்த இவர் 'சகஜானந்தம்' எனப் பெயர் சூட்டப்பட்டார்.

பாரதியார், வ.உ.சிதம்பரனார் ஆகியோர் இவருக்குச் சமகாலத்தவர் ஆவர்; அவர்களோடும் இவருக்குத் தொடர்பு இருந்தது எனப்படுகிறது.

ஆன்மீகத்துறையில் - பரஞ்சோதி சுவாமிகள், பாம்பன் சுவாமிகள், மௌன குரு சுவாமிகள் ஆகியோருடன் இவர் மிகப் பணிவான நட்புடன் பழகிவந்தார்.

### நல்வழிப்படுத்துதல்

நாளடைவில், ஆதிதிராவிட மக்களையெல்லாம் நல்வழிப்படுத்தும் நோக்கோடு, ஓமகுளம் தென் கரையில், அரசூர் ஆறுமுக சுவாமிகளுடன் தனது சமுதாய சீர்திருத்தப் பணியினைத் தொடங்கினார் சுவாமி சகஜானந்தர்.

திரு மாரிமுத்து போன்றோர்களின் உதவியோடு முதலில் பத்துப் பதினைந்து ஆதிதிராவிட மாணவ மாணவிகளுக்குக் கல்விக் கண் திறக்கும் முயற்சியில் ஈடுபட்டார். நாளடைவில் அதுவே 50-க்கும் மேலானோர் கல்வி பயிலும் உறைவிடப் பள்ளி ஆகியது.

இதுவே 'ஸ்ரீநந்தனார் கல்விக் கழகம்' என்று பின்னாளில் எல்லோராலும் சிறப்புறக் குறிப்பிடப் படுவதாயிற்று.

### சட்டமன்றத் தந்தை

தன்னை வளர்த்து ஆளாக்கிய மாசிலாமணி-அமிர்தம்பாள் தம்பதியரை இக்கல்விக் கழகத்தின் நிர்வாகிகளாக்கினார் சகஜானந்தா. தானே அவ்வமைப்பின் பொதுச் செயலாளராகவும் இருந்தார். செட்டி நாட்டரசர் ராஜா சர் அண்ணாமலை செட்டியார், அதன் அமைப்பாளராகப் பொறுப்பேற்றார்.

சகஜானந்தா, சிதம்பரம் ஓமகுளத்தில் சிவலோக ஆலயம் ஒன்றையும் பொது நிதி மூலம் கட்டினார். அதில், சைவ-வைணவத் தெய்வங்கள் இரண்டுமே இடம் பெற்றன.

இவரும் தனது நெற்றியில் திருநீறும், திருமண் நாமமும் இட்டுக் கொண்டார்; 'எம்மதமும் சம்மதமே' என்ற கருத்தைப் பரப்பினார்.

சிதம்பரம் நகரமன்ற உறுப்பினராகவும், நகரமன்றத் தலைவராகவும், தமிழகச் சட்ட மேலவை-பேரவை உறுப்பினராகவும் இருந்து முப்பதாண்டுகளுக்கு மேல் சிறப்புறப் பணியாற்றியிருக்கிறார் சுவாமி சகஜானந்தா.

இதனாலேயே இவருக்குச் 'சட்ட மன்றத் தந்தை' என்ற புகழ்ப் பெயரும் அந்நாளில் சூட்டப்பட்டது உண்டு.

இவருடைய நோக்கம், இறுதி மூச்சுவரையில் ஆதிதிராவிட மக்கள் அடிமைத் தனம் நீங்கிக் கல்வி பெறவும் - எழுச்சியுறவும் - மேன்மை பெறவும் வேண்டும். என்பதற்காகவே இருந்திருக்கிறது.

### மூதறிஞர் உதவி

மூதறிஞர் ராஜாஜி அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில், சுவாமி சகஜானந்தா வேண்டுகோளின் படி 'ஸ்ரீநந்தனார் கல்விக் கழகம்' அரசு அங்கீகாரம் பெற்றது.

இந்தக் கல்விக் கழகமானது - பண்டிதநேரு, சுபாஷ் சந்திரபோஸ், மேயர் சிவராஜ், மூதறிஞர் ராஜாஜி, காமராசர், கக்கன், இராசேந்திரப் பிரசாத் போன்றோரெல்லாம் வந்து சென்ற பெருமையும் உடையதாகும்.

சிதம்பரம் அண்ணாமலை நகரில் உள்ள அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கும், ஸ்ரீநந்தனார் கல்விக் கழகத்திற்கும் அந்நாளிலேயே ஓர் உடன்பாடு ஏற்படுத்தப்பட்டது. அந்த உடன்பாட்டின்படி சுவாமி சகஜானந்தா அவர்கள் 1959-ஆம் ஆண்டு வரை அண்ணாமலைப் பல்கலைக் கழக செனட் உறுப்பினராக இருந்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

அந்த உடன்பாட்டின் அடிப்படையில் இவருக்குப் பின் திரு எல். இளையபெருமாள் அந்தப் பொறுப்பை வகித்தார். அவரை அடுத்து இப்போது திரு கே.எஸ். மாணிக்கம் என்பார் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் செனட் உறுப்பினராகவும், ஸ்ரீநந்தனார் கல்விக் கழகத்தின் செயலாளராகவும் இருந்து சீரிய முறையிலே செயல்பட்டு வருகிறார்

### சிலைத் திறப்பு

29 உறுப்பினர்களால், இக் கல்விக் கழகமும், 7 உறுப்பினர்களால் அவர் உருவாக்கிய மடமும் இப்போது செவ்வனே பராமரிக்கப் பட்டு வருகின்றன.

1.5.1959-இல் மறைந்த சுவாமி சகஜானந்தரின் ஆதிதிராவிடர் நலப் பணிகளைப் போற்றும் வகையில் அன்னாரின் திருவுருவச் சிலையொன்றும் அக்கல்விக் கழகத்திலே நிறுவப்பட்டுள்ளது. இரண்டாண்டுகளின் முன், அவரது நூற்றாண்டு விழாவும் அரசால் கொண்டாடப் பட்டது.

இப்போது, தென்னார்க்காடு மாவட்டத்திற்குப் பெருமை சேர்க்கும் அந்தக் கல்விக் கழகத்தில் 2,500 ஆதிதிராவிட வகுப்பைச் சார்ந்த மாணவிகளும், 4,000 மாணவர்களும் படித்துப் பயன் பெற்று வருகின்றனர்.

மாணவர் விடுதியிலோ 1,500 ஆதிதிராவிட வகுப்பு மாணவர்கள் தங்கிப் படித்து வருகின்றனர்.

- பி.எல்.ஆர்.

## பொருட்காட்சிகள்

**செய்தி மக்கள் தொடர்புத் துறையின் பொருட்காட்சிப் பிரிவு இதுவரை 66 பொருட்காட்சிகளை நடத்தியுள்ளது. இப்பொருட்காட்சிகள் பொதுமக்களின் நல்ல வரவேற்பைப் பெற்றுத் திகழ்வதுடன், இதுவரை ரூ.3.9 கோடி வருவாயையும் அரசுக்கு ஈட்டித் தந்துள்ளன.**

**மதுரை, கோயம்புத்தூர், சேலம் போன்ற இடங்களில் பொருட்காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. பொருட்காட்சிகள் பொழுது போக்கு அம்சமாக மட்டுமல்லாது செய்திகளைத் தெரிவிக்கும் சாதனமாகவும் இருப்பதால் இந்த ஆண்டு மதுரை, கோயம்புத்தூர், சேலம் ஆகிய நகரங்களுடன் கூடுதலாக திருச்சி, திருநெல்வேலி போன்ற இடங்களில் பொருட்காட்சிகள் நடத்தப்படும்.**



# நினைவாற்றல் தரும் சுண்டைக்காய்

- டாக்டர் ஏ.ஆர்.என். துரைராஜ்

சுண்டைக்காய், பெரும்பாலும் மலைகளில் பயிராகும் செடி. பொதுவாகவே, சுண்டைக்காய் பற்றித் தெரியாதவர்கள் இருக்க முடியாது. மூதாதையர்கள் தங்கள் இல்லங்களில் சுண்டைக்காயை மோரில் கலந்து உலர்த்திப் பதம் பண்ணிப் பானையில் சேகரித்து வைப்பதுண்டு. உடலுக்கு நலம் தருவதுடன், நல்ல மருந்தாகவும் இது பயன்படுகிறது.

இந்த நவநாகரீகமான காலத்தில் சுண்டைக்காயை மக்கள் மறந்து விட்டார்கள் போலும்! சுண்டைக்காய் என்றால் என்ன என்று கேள்வி கேட்கும் அளவுக்கு நாகரீகம் முற்றிவிட்டது. நோயும் முற்றி விட்டது! இயற்கை நமக்கு அளித்த இந்தச் சுண்டைக்காய், பிணியிலிருந்து நம்மை விடுவிக்கும் சஞ்சீவி ஆகும்.

### தீரும் நோய்கள்

வயிற்றுவலி, வயிற்றுப்பொருமல், வயிற்றில் பூச்சிகள், மார்ச்சளி, ஆஸ்துமா, தீக்குற்றத்தாலுண்டான ஏப்பம், காசநோய், செரியாமை, செரியாக்கழிச்சல், பெருமூச்சு, தலைசுற்றல், பித்தம், வாந்தி, அஜீரணபேதி, மூலநோய், நல்ல பசி, குடல் கிருமிகள், சீதக்கட்டு, சுவையின்மை மற்றும் பல.

### பயன்முறை

மார்புச் சளி உள்ளவர்கள் சுண்டைக்காயை உணவில் வற்றலாகச் சமைத்துச் சாப்பிட, நாளடைவில் மார்புச் சளி, மூலநோய் நீங்கும்!

சுண்டைக்காயைப் பச்சையாகப் பக்குவப்படுத்திச் சாப்பிடும்போது சளி, வயிற்றுப் பூச்சி போன்றவைகளை அகற்றும். வற்றலைக் குழம்பு வைத்துச் சாப்பிட்டால் சீதக்கட்டு, குடல் கிருமிகள், சுவையின்மை, மார்புச் சளி, அஜீரண பேதி, மூல நோய் ஆகிய பிணிகளை அகற்றும், நல்ல பசியை உண்டாக்கும்.

பித்தக் கிறுகிறுப்பைப் போக்கும், மயக்கம், தலைவலி இவைகளைக் குணப்படுத்தும், கபத்தை வெளியேற்றும், ஜீரண சக்தியை உண்டாக்கும். மூளை பலம் ஏற்படும். ஞாபக சக்தி பெருகும், தோல் வழவழப்பாகும். பற்கள் உறுதியாகும். இரத்தத்திலுள்ள தொற்று நோய்க் கிருமிகளை அழிக்கும். நரம்புகள் வலிமை பெறும்.

சுண்டைக்காயை வதக்கிச் சாப்பிட பசி ஏற்படும். சுண்டைக்காயை மோரில் ஊறவைத்து, காய வைத்து, வறுத்து உணவோடு சாப்பிட நெஞ்சு சளி, ஆஸ்துமா, காசநோய் குணமாகும்.

சுண்டைக்காயைச் சிற்றாமணக்கெண்ணெய் இட்டு வறுத்த பிறகு, சீரகம், வெந்தயம், உப்பு, கறிவேப்பிலை ஆகியவற்றையும் சிறிது வறுத்துக் கூட்டிப் பொடித்துச் சாதத்துடன் கலந்து உண்ணின் மந்தம், மூலம், செரியாமை நீங்கும்.

சுண்டைவேர், தும்பைவேர், இலுப்பைப் பிண்ணாக்கு இம் மூன்றையும் சம எடையாக எடுத்துப் பொடி செய்து வைத்துக் கொண்டு இப்பொடியை நுகர, முப்பிணி நீங்கும். (முப்பிணி என்பது வாதம், பித்த, சிலேட்டுமம்).

இதன் வேரைக் குடிநீரில் கலந்து வைத்திருந்து வலி, ஜுரத்திற்கு மூதாதையர்கள் கொடுப்பதுண்டு.

சுண்டைக்காயைப் பாதியாக நறுக்கிப் பசு மோரில் ஊறப் போட்டு உலர்த்தி எடுத்துக் கொள்ள வேண்டும். பிறகு சிறிது நேரம் உலர்ந்த பின் மீண்டும் மோரில் ஊறவைத்து உலர்ந்த பின் இவ்விதமாக 5 அல்லது 6 தடவையாவது செய்யும் பட்சத்தில் நன்றாக இருக்கும்.

இச் சுண்டைக்காயை நல்லெண்ணெய்யில் வறுத்து இரவு சாப்பாட்டில் சாப்பிடலாம். தவிர, சுண்டை வற்றல் குழம்பு உடலுக்கு ஆரோக்கியம் தர வல்லது. மேலும், சுண்டைக்காயைத் தொடர்ந்து சமையலில் உபயோகித்துவரின் காசம், மார்புச் சளி, பெருமூச்சு, தலைச் சுற்றல், ஆஸ்துமா ஆகியவை நீங்கும்.

வாரத்திற்கு இரண்டு நாட்கள், சுண்டை வற்றல் குழம்பும், மற்ற நாட்களில் தங்கள் சூழ்நிலைக்கு ஏற்ப எண்ணெய்யில் பொரித்த சுண்டைக்காயும் சாப்பிட்டு வந்தால், உடல் நலமாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.





வேண்டுமானால், ஒய்வில்லங்களின் வாடகை குறைக்கப்பட வேண்டுவது முக்கியம். இந்தச் சுற்றுலாப் பகுதியும் மாஸ்டர் பிளானில் சேர்க்கப்படவேண்டும். உணவு விடுதி போன்ற கடைகள் வைக்கப்போதுமான இடத்தை அரசே இங்கு ஒதுக்கித் தந்தால் - கண்டவர்களும் வந்து கண்ட இடத்தில், கண்டபடி கடைவைத்து அழகான இப்பகுதியை அசிங்கப்படுத்தும் நிலைமையைத் தவிர்க்கலாம்.

"காடும் மலைகளும் மலிந்துள்ள இவ்விடத்தில் விஷப் பாம்புகளின் தொல்லை அதிகம்; இதற்கேற்ப இங்கே ஒரு மருத்துவமனை கட்டப்பட வேண்டும்; சில உரிமம் பெறாத பரிசலோட்டிகளால், எதிர்பாராமல் ஒகேனக்கல் அருவியில் மூழ்கிவிடுவோரின் உயிரைக் காக்கவும் அது வசதியாக இருக்கும். சுத்திகரிக்கப்பட்ட குடிநீரும், நிரந்தர பஸ் ஸ்டாண்டும் இங்கு இல்லை என்ற நிலைமைகள் நீக்கப்படவேண்டும்.

"ஒகேனக்கல்லிலிருந்து சிறிது தொலைவில் உள்ள பெலிகுண்டு கிராமத்தினருகே ராசி மணல் என்ற இடத்தில்தான் கர்நாடகத்திலிருந்து காவிரியாறு தமிழ்நாட்டினுள் நுழைகிறது. அதற்குக் கொஞ்ச தூரத்தில் பஞ்சலிங்கமும் இருக்கிற தேச நாதஸ்வரர் கோயில் இருக்கிறது; அகஸ்திய மாமுனிவரே இதைப் பிரதிஷ்டை செய்ததாகச் சொல்லப்படுகிறது; அதையும், சாது சாணி சாமியார் என்ற ஞானதேசிகாசாரியார் சமாதியுள்ள இயற்கை எழில்மிக்க இடத்தையும்கூட சுற்றுலாத் தலமாக்கலாம். மைசூர், தலைச் சீரங்கம் எனப்படுகிறது; இங்கிருந்து சிறிது தூரத்திலிருக்கும் ஆலம்பாடிதான் கடைச் சீரங்கம்; அதையும் சுற்றுலாத் தலமாக்கலாம்.

"தருமபுரி மாவட்டத்திலேயே அதிக வருமானம் எங்கள் ஊராட்சி மூலம்தான் கிடைக்கிறது; இப்பகுதியில் அதே அளவுக்குச் செலவும் செய்யப்பட்டால் அரசுக்குச் சுற்றுலாப் பயணிகளால் இன்னும் வருமானமும் அதிகரிக்கும்; இந்தப் பகுதியை டவுன்சிப்பாக ஆக்கினால்கூட நன்றாயிருக்கும் என்பது என் கருத்து..."

- என்றெல்லாம் நம்மிடம் தமது கருத்தைத் தெரிவித்தார், கிராம நிர்வாக அதிகாரியான திரு. ஆர். அம்சராஜ்.

மகிழ்வோடு எப்போதும் 'ஜே,ஜே' என்று சுற்றுலாப் பயணிகள் வந்து போகும் ஒகேனக்கல்லில், ஆடிப்பெருக்கு என்றால் அலாதி விசேஷமாம்; சொன்னார்கள்.

- 'கங்கைகொண்டான்'

# சந்தூர் ஒட்டு மா!

இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவர் இராசேந்திர பிரசாத் என்பது நமக்குத் தெரியும்; தருமபுரி மாவட்டத்தில் உள்ள சந்தூருக்குச் செல்லுவோமானால் அவரது வகையறாவைச் சேர்ந்த 15 குடும்பத்தார் அங்கே வாழ்ந்து வருவதையும்நாம்தெரிந்துகொள்ளலாம்!

மூன்று தலைமுறையாக இங்கே வாழ்ந்துவரும் அவர்கள் தொழில் என்ன தெரியுமோ? புதுரக ஒட்டு மாஞ்செடி உருவாக்குவதுதான்!

தமிழ்நாட்டில் மட்டுமல்ல; சந்தூர் ஒட்டு மாம்பழத்திற்கு இந்தியா முழுவதுமே நல்ல கிராக்கி! அந்த வம்சா வழியினரால், சந்தூரில் மற்றவகை மா இனங்களும் மிகுந்த அக்கறையோடு வளர்க்கப்படுகின்றன.

- இரா. ஜெயக்குமார்.



## தென்னார்க்காடு மாவட்டம்

# சுவாமி சகஜானந்தா கல்விக் கழகம்



"தமிழகத்தில் உள்ள மாவட்டங்களில், தென்னார்க்காடு மாவட்டமே ஆதிதிராவிட மக்கள் அதிக அளவில் வாழும் மாவட்டமாகும். அங்கே அவர்கள் கல்வி வசதி பெறப் பாடுபட்ட ஒருவரின் சாதனைச் சரித்திரம் இது:"

சிதம்பரத்திற்கும் சீர்காழிக்கும் இடையே உள்ள ஓமகுளத்தில் இருக்கிறது 'ஸ்ரீநந்தனார் கல்விக் கழகம்'; இது 'தென்னார்க்காடு மாவட்டத்தின் குறிப்பிடத்தக்க கல்வி நிறுவனமாக விளங்குவதாகும். ஆதிதிராவிடப் பெருமக்களின் கல்விக்கண் திறக்கவென்றே அரும் பணி ஆற்றிவருகின்ற அரியதோர் அமைப்பு இது.

**நந்தனார்**

அதன் நிறுவனர், சுவாமி சகஜானந்தா என்பவர் ஆவார். அவரைப் பற்றி அறியுமுன், அவ்வமைப்பின் பெயருக்கு உரியவரான நந்தனார் குறித்தும் சிறிது தெரிந்துகொள்ளுவது நல்லது.

சிதம்பரத்திற்கு அண்மையில் உள்ள ஆத்தூரில், ஆதிதிராவிடர் குலத்தில் பிறந்தவர் நந்தனார். இவர், திருப்புங்கூரில் ஒரு திருக்குளம் அமைத்தார். அவ்வூர்க் கோயிலில் இறைவனைத் தரிசிக்க இவர் உள்ளே செல்வது மறுக்கப்படவே, வெளியே நின்று வணங்கிட முற்பட்டார். அப்போது முன்னாலிருந்த நந்தி மறைத்தது. 'சற்றே விலகியிரும் பிள்ளாய் சந்நிதானம் மறைக்குது' என்றார், நந்தனார்; இதைக் கேட்ட இறைவனே நந்தியை விலகியிருக்கச் செய்து அவருக்குத் தரிசனம் கொடுத்தான் என்கிறது புராணம்.

'தில்லைக் கூத்தனைத் தரிசிக்க சிதம்பரத்திற்கு நாளை போவேன்... நாளை போவேன்' என்று சொல்லிக்கொண்டே இருந்தவராதலால் 'திருநாளைப் போவார் நாயனார்' என்ற புராணப் புகழும் பெற்றார் நந்தனார்.

முடிவாகத் தில்லைக்குச் சென்று தீப்பாய்ந்து இறைவனைத் தரிசித்து அவனடி சேர்ந்தார் அவர் என்பார்கள்.

இவரைப்பற்றிப் பிற்காலத்தே கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் நடத்திய 'நந்தனார்கிந்தனார் கலாட்சேபமும் இங்கு நினைவு கூரலாம்.

**நந்தனார் கல்விக் கழகம்**

அத்தனைப் புகழ் பெற்ற நந்தனார் பெயரில் - சிதம்பரத்திற்கு அருகே உள்ள ஓமக்குளத்தில் சுவாமி சகஜானந்தா அவர்களால் நிறுவப் பெற்றதுதான் 'ஸ்ரீநந்தனார் கல்விக் கழகம்'.

ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கும் மாணவிகளுக்கும் இங்கே தனித்தனி மேனிலைப்பள்ளிகள் மிகச் சிறப்பாக நடத்தப்பட்டு வருகின்றன.

21.1.1890-இல், ஆரணி வட்டத்திலுள்ள ராயபுதுப்பாக்கத்தில் பிறந்தவர் சுவாமி சகஜானந்தா. இவரது இயற்பெயர் முனுசாமி. பெற்றோர் பெயர் அண்ணாமலை-அலமேலு அம்மையார்.

1906-ஆம் ஆண்டு முதல் 1910 வரை, சென்னைக்குச் சென்ற

இல்லை; அதற்காகப் பயப்படத் தேவையும் இல்லை''

பி.பி. மகாதேவன்
ராசிபுரம்

• **எனக்குச் சர்க்கரை வியாதி இருக்கிறது. இதனால் பார்வை போய் விடும் என்பது உண்மையா டாக்டர்?**

''நீங்கள் கேட்பது ரொம்பவும் உண்மை. சர்க்கரை வியாதி கண்ட மூன்று ஆண்டிலிருந்து ஐந்தாண்டுக்கு ஒருவருக்குப் பார்வைக் கோளாறு ஏற்படும். சர்க்கரை வியாதி கண்ட ஆரம்பத்திலேயே தகுந்த டாக்டரிடம் ஆண்டுக்கு ஒருமுறை பரிசோதித்துக் கொள்வது நல்லது. அதிகப் பார்வை பாதிப்பு இருக்கும் பட்சத்தில் லேசர் சிகிச்சை மூலம் அதைக் குணப்படுத்தி விட முடியும்.

''ஆனால் ஒன்று - பார்வை அடியோடு போய்விட்ட பிறகு அதைக் குணப்படுத்துவது மிகவும் கடினம்''.

'மாங்கனி செல்வம்
கல்லாவி-தருமபுரி

• **தொடர்ந்து எழுதினால் கண்ணில் நீர் வருகிறது; பார்வை மங்குவது போலிருக்கிறது; தலைச்சுற்றலும் இருக்கிறது; என்ன செய்வது?**

''நீங்கள் உங்கள் வயதைச் சொல்லவில்லையே? உங்களுக்கு வயது நாற்பதுக்கு மேலாகியிருந்தால் பரிசோதித்துக் கண்ணாடி போட்டுக் கொள்ளுங்கள். சரியாகிவிடும். குறைந்த வயதுள்ளவராக இருந்தால், கண்களைத் தகுந்த டாக்டரிடம் காட்டிப் பரிசோதனை செய்து கொள்ளுங்கள்.

ம.ந.வ. வேலு
ஈரோடு

• **சிறுவயது முதலே என் கண்களில் செவ்வரி படர்ந்தது போல் இருக்கிறது; இதனால் பாதிப்பு உண்டா?**

''இதற்குப் பல காரணங்கள் உண்டு; நேரில் பார்க்காமல் பதில் சொல்ல இயலாது.''

• **கண்களின் சராசரி ஆயுட்காலம் எவ்வளவு?**

''அப்படி எந்தவிதமான கணக்கும் கிடையாது''.



• **சிறு குழந்தைகளின் கண்களைப் பெரியவர்களுக்குப் பொருத்த முடியுமா?**

''தாராளமாகப் பொருத்தலாம்; கண்ணைப் பொறுத்துவது என்றால், அப்படியே விழிகளை எடுத்துப் பொருத்துவது என்று அர்த்தமில்லை; கண்ணிலுள்ள கருவிழியை மட்டும்தான் எடுத்துப் பொருத்துவோம் - இப்போது புரிகிறதா?''

எம்.பி. சுப்பிரமணியம்
நெடுங்குணம்

• **என் மகள் விழிகளில் ஆர்.பி. நோய் என்று டாக்டர்கள் சொன்னார்கள்; இதற்கு மருந்தே இல்லையாமே - உண்மையா?**

''ஆம். 'Retintis Pigmentosa' என்று கூறப்படும் இந்த மாலைக் கண் நோய்க்கு இதுவரையில் எவ்வித மருந்தும் கண்டுபிடிக்கப்படவில்லை; மருத்துவ ஆராய்ச்சி நடந்து கொண்டிருக்கிறது''.

சி. பிரின்ஸ்
வாலிபாளையம்

• **விழிகளில் கண்ணீர் சுரக்கும் பகுதி எது? வெங்காயம் உரித்தால் கண்ணீர் வருவது ஏன்?**

''விழி நீர் உற்பத்தி செய்யும் நாளங்கள் கண்களின் மேலே வலது உட்புறம் உள்ளது. சிறிய நாளங்களின் வழியே கண்ணுக்கு நீர் வருகிறது; அதுவே கண்களைச் சுத்தப்படுத்துகிறது. இமையினுள் உள்ள சிறு துவாரத்தின் மூலம் கசிகிற கண்ணீர் விழிகளை ஈரமாக இருக்கச் செய்கிறது. அப்படி வரும் கண்ணீர், இமைகளை மூடும்போது வெளியே வழிகிறது. வெங்காயம் உரிக்கையில் காரம் மிக்க அந்தச் சாறானது விழியின் வெண்படலத்திலோ, கருவிழியிலோ பட்டால், உறுத்தல் ஏற்படும்; இதனால் கண்ணீர் வரும் அளவு அதிகரிக்கும்.

ச. பொன்னுசாமி
கு. அய்யம்பாளையம்

• **கண்களில் அடிக்கடி 'பூளை' கட்டிக் கொள்ளக் காரணம் என்ன?**

''இதற்குப் பல காரணங்கள் உண்டு. இப்படி எல்லோருக்குமே வருவதும் இல்லை; அவரவர் பார்க்கிற வேலைக்கு ஏற்பவே இதுபோல் ஏற்படும். சாதாரணமாகக் கண்களில் விழி வெண்படலத்தில் பாக்டீரியாக்கள் மற்றும் வைரஸ்கள் தாக்குவதால் கண் சிவக்கும்; பிறகு அப்படி அழுக்கு (கண்பூளை) வெளிப்படும். இதற்கு 'Antibiotics' கலந்த சொட்டு மருந்து போட்டால் சரியாகிவிடும். அப்படி அதை ஒரு நாளைக்கு இரண்டு மூன்று முறை விழிகளில் இட்டுக்கொண்டாலும் ஒரு பாதிப்பும் ஏற்படாது.''

ப. சண்முகம்
அனந்தகோபாலபுரம்

• **ஆசிரியர் தொழில் புரியும் எனக்கு 40 வயதாகிறது; என்னால் சிறிய எழுத்துக்களைப் படிப்பது சிரமமாக இருக்கிறது; படித்தால் கண் எரிச்சல் எடுக்கிறது; என்ன செய்யலாம்?**

''40 வயதானதும், சிறிய எழுத்துக்களைப் படிக்க முடியாததற்குக் காரணம் விழி லென்ஸானது கிட்டப் பார்வையைக் கொஞ்சம் கொஞ்சமாக இழக்க ஆரம்பிக்கும் (Loss of Accommodation) இதனால் சிறு எழுத்துக்களைப் படிப்பது சிரமமாக இருக்கும்; ஆகவே, நீங்கள் கண்ணாடி அணிவதைத் தவிர்க்க முடியாது; கண்களைப் பரிசோதித்துக் கண்ணாடி போட்டுக்கொண்டே ஆகவேண்டும்; இல்லாவிட்டால் கண்களைச் சுருக்கிப் படிக்க நேரிடும்; அதனால் கண்வலி ஏற்படும்.

ப. சிவராம கிருஷ்ணன்
விருதுநகர்

• **சில மாதங்களாக என் கண் ஓரங்களில் இரத்தம் கட்டியிருப்பது போலிருக்கிறது; இதற்கு என்ன செய்யலாம்?**

''இதற்குப் பல காரணங்கள் உண்டு; ஒருவகைக் கண் வலியாகவும் இது இருக்கலாம். அல்லது கண்களோடு தொடர்பில்லாத வேறு நோய்களாலும் இப்படி ஏற்படலாம். தகுந்த கண்டாக்டரிடம் காட்டவும்.

எஸ். சுந்தரவடிவேலு
இராப்பூசல்

• **கண்களில் தூசி விழுந்துவிட்டால் எங்கள் ஊர்ப் பக்கம் ஒருவர் அதை நாக்கால் துழாவி எடுக்கிறார்; நிறையத் தூசியும் மண்ணுமாக வருகிறது இந்த முறை மருத்துவம் பற்றித் தங்கள் கருத்து என்ன?**

''மிகவும் ஆபத்தான முறை இது; கூடவே கூடாது. டாக்டர்களாகிய நாங்கள் கைகளை நன்றாகக் கழுவிவிட்டு அல்லது கையுறையெல்லாம் அணிந்து கொண்டுதான் கண் பாதிக்கப்பட்டவரின் கண்களைத் தொடுகிறோம்; பரிசோதிக்கிறோம்; இதுதான் முறை. அப்படியின்றிக் கண்களை நாவால் ஒருவர் துழாவினால் அவருக்குள்ள ஏதாவது நோய் உங்களுக்கும் வரக்கூடும். இத்தகைய கோரமான செயலால் கண்பார்வையே போய்விடக்கூடிய அபாயமும் இருக்கிறது. ஜாக்கிரதை.''

ஆர்.வி.என். ரமேஷ்
முதுகுளத்தூர்

• **75 வயதான ஒருவருக்குக் கண் காசப்படலம் வளர்ந்துள்ளது; எப்போதும் கண் உறுத்தல் - அரிப்பு இருக்கிறதாம்; பார்வைத் தெளிவும் இல்லை. இதைக் குணப்படுத்த முடியாதா டாக்டர்?**

''ஏன் முடியாது? முடியும். கேடராக்ட் அறுவைச் சிகிச்சை மூலம் குணப்படுத்திவிடலாம் வேறு வழியில்லை. நல்ல பார்வையையும் பிறகு அவர் பெற்றுவிடலாம்.

ரா. கிருஷ்ணமூப்பனார்
ஊர்க்காடு

• **எனக்கு 63 வயதாகிறது; இப்போது கண்ணாடி போடாமல் படிக்க முடியும்; ஆனால், சமயத்தில் கண் எரிச்சல் ஏற்படுகிறதே - எப்படி இதை நீக்கலாம்?**

''தங்களுக்கு 'கேடராக்ட்' நோய் ஆரம்பக் கட்டமாக இருக்கும் போலிருக்கிறது. சில காலம் தான் இப்படி உங்களால் படிக்கமுடியும்; பிறகு அறுவைச் சிகிச்சை செய்யும்படி ஆகிவிடும். இப்போதே தகுந்த டாக்டரிடம் காட்டி கண்ணாடி போட்டுக் கொள்ளுங்கள் - நல்லது''- தொகுப்பு: பி.எல்.ஆர்.

—இன்னும் வரும்...


தமிழரசு

16.6.93 இதழ்

திருநெல்வேலி

கட்டபொம்மன்

மாவட்டச் சிறப்பிதழாக

மலர்கிறது!



• வரலாற்றுக் குறிப்புகள்

• வளர்ச்சிப் பணிகளின் சிறப்புகள்

• திருப்பும் பக்கமெல்லாம் தேன்சிந்தும் செய்திச் சுதம்பம்!

• மண்வாசனை மணக்கும் சிறுகதை... மற்றும் கவிதை!

• மாவட்டம் குறித்து முழுமையாகத் தெரிந்து கொள்ள முத்தான வாய்ப்பு!

தமிழரசு

படிக்க — பயன்பெற — பாதுகாக்க

## எஸ்.கே.எம்.

## அருவி போல் பால் தரும் கறவைகளின் தீவனம்

கறவையினங்களின் பயனை நீங்கள் முழுவதும் அடைய உதவுகிறது எஸ்.கே.எம். மாட்டுத் தீவனம் பயன்படுத்துவதால் உங்கள் கறவையின் பால் வளம் பெருகுவதோடு, கறவையினங்களும் ஆரோக்கியமாக வளர்கிறது. நோயெதிர்ப்புச் சக்தியால் கறவைகளின் ஆயுளும் அதிகரிக்கிறது.

எஸ்.கே.எம். மாட்டுத் தீவனங்கள் பால் கொடுக்கும் கால்நடைக்குப் பலன் கொடுக்கும் தீவனம்.

தயாரிப்பாளர்கள்

எஸ்.கே.எம். அனிமல் ஃபீட்ஸ்
அண்டு புட்ஸ் (இந்தியா) லிமிடெட்
180, காந்தி ரோடு, ஈரோடு-638 002
போன்: 75213-17 EPBAX
தந்தி பவுல்டரி ஈரோடு டெலக்ஸ்
0856, 226 SKMIN






# கண் மருத்துவம்


டாக்டர் வி.எம். லோகநாதன்
(இயக்குநர்-கண்காணிப்பாளர்-
அரசு கண் மருத்துவமனை),
சென்னை.


## பதில்கள்!

ம.ந. வடிவேலு
ஆவத்திபாளையம்

● 'மெட்ராஸ்-ஐ' என்பது என்ன டாக்டர்? அதற்கு ஏன் அந்தப் பெயர் வந்தது?

''இது ஒருவகை வைரஸ் கிருமிகளால் ஏற்படும் கண் நோய்தான். காற்றினாலும், தண்ணீர் மூலமும் அடுத்தவர்களுக்கு வேகமாகப் பரவக் கூடியது; கண்களைச் சுத்தமாக வைத்துக் கொண்டாலே இவ்வகை நோய் வராமல் தவிர்க்கலாம். இந்த நோயினால் விழிகளுக்கு எந்தவித ஆபத்தும் இல்லை.

''இந்த நோய்க்கு மூலகாரணமான அடினோ வைரஸ் என்ற நோய்க் கிருமி உலகிலேயே - சென்னை - எழும்பூரில் உள்ள அரசு கண் மருத்துவ மனையில்தான் 1918-இல் கண்டுபிடிக்கப்பட்டது. அதனால்தான் இதற்கு (Madras-eye) அந்தப் பெயர் வந்தது.''

சீனிவாஸ் பிரபு
சென்னை-90.

● தொலைக்காட்சியோ, திரைப் படமோ பார்க்கும்போது கண்ணீர் வருகிறது. இதைத் தடுப்பது எப்படி?

''கண்ணைப் பரிசோதித்துக் கண்ணாடி போட்டுக் கொள்ளுங்கள்; கண்ணீர் வராது. வைட்டமின் 'பி' சத்துக் குறைவால் கூட இப்படி வரலாம்; எதற்கும் கண் டாக்டரிடம் சோதித்துக் கொள்ளுங்கள்.''

● கண்களைப் பாதுகாக்க எவ்வாறான உணவு வகைகளை உட்கொள்ளலாம்?

''பச்சைக் காய்கறிகள், மீன், முட்டை, கீரை வகைகள் ஆகியவற்றைத் தொடர்ந்து சாப்பிட்டால் விழிகளுக்கு எவ்விதக் கோளாறும் லேசில் வராது.''

"Cataract" என்றால் என்ன டாக்டர்? அது ஏன் வருகிறது?

''கண்புரை நோய் என்பதே அது; இந்நோய் கண்டவர்களுக்கு, எப்போதும் நீர்வீழ்ச்சியைப் பார்ப்பது போலவே பார்வை இருக்கும்; இதை முறையான அறுவைச் சிகிச்சை மூலம் நீக்கிவிடலாம்.''

எம். சீரங்கன்
தே. சித்தப்பட்டி

● எனது கண்ணின் வெண்படலத்தில் ஒரு மச்சம் இருக்கிறது; இது அதிர்ஷ்டமா? இதனால் ஆபத்து ஏதும் உண்டா?

''அதனால் கண்ணுக்கு எவ்வித ஆபத்தும் இல்லை; அதிர்ஷ்டமும்



# கிராமப்புறப் பெண்கள் சுய வேலைவாய்ப்புப் பெற...

திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் டோக்ரா திட்டம், அதாவது மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், 14 ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து 50 டோக்ரா சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுத் தொடங்கப்பட்டுள்ளன

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், செயற்கை வைரம் பட்டை தீட்டுதல், காளான் வளர்ப்பு, ஆயத்த ஆடைகள் தயாரிப்பு, காய்கறி வியாபாரம் போன்ற தொழில் தொடங்க, இம்மாவட்டத்தில் உள்ள 50 சங்கங்களின் மூலம், தலா ரூ.15 ஆயிரம் வீதம் ரூ.7.5 இலட்சம் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

டோக்ரா திட்டத்தின்கீழ் பயன்பெறவுள்ள சங்கங்களின் தலைவி, உறுப்பினர்கள், செயலாளர்கள், பொருளாளர்கள், கிராம நல ஊழியர், கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் போன்றவர்களுக்குப் பயிற்சி முகாம் நடத்தப்பட்டது. திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் உள்ள கிராமப்புறப் பெண்கள் முன்னேற்றத்திற்காக, மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம் தொடங்கப்பட்டுச் செயல்படுகிறது. இத்திட்டத்தில் 50 சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இச்சங்கங்களின் மூலம் செயற்கை வைரம் பட்டைத் தீட்டுதல், காளான் வளர்ப்பு, ஆயத்த ஆடை தயாரித்தல், காய்கறி விற்பனை செய்தல், கவரிங் பூச்சுத் தொழில், சாம்பார் பொடி தயாரித்தல், கறவை மாடு வளர்ப்பு, போன்ற தொழில்களுக்குக் கடன் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தினால் கிராமப்புறங்களில் பெண்கள் சுய வேலைவாய்ப்புப் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இப்பயிற்சி முகாமில், திருச்சி ஜெம் பார்க் அலுவலர் செல்வி உஷா, கனரா வங்கியின் முதன்மை வங்கி அலுவலர் திரு. ஜஹுருதீன், மத்தியக் கூட்டுறவு வங்கி அலுவலர் திரு. அம்மானுலா, மாவட்டத் தொழில் மையப் பொது மேலாளர் திரு ரெங்கநாதன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் திரு. கலியபெருமாள், உதவித் திட்ட அலுவலர் (கால்நடை) டாக்டர் ராஜ்குமார், செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர் திரு. கே.பி. நல்லதம்பி ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர்.

இலக்கு நிர்ணயித்துச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### இலவசச் சீருடைகள்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இன 61,848 மாணவ, மாணவியர்களுக்கு இலவசச் சீருடைகள் வழங்க ரூ.29.59 இலட்சம் இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில் 61,848 மாணவ, மாணவியர்களுக்குச் சீருடைகள் வழங்கப்பட்டு இலக்கீடு அடையப்பட்டுள்ளது.

### விடுதிகள் பராமரிப்பு

இம்மாவட்டத்தில், அரசு ஆதிதிராவிடர் மாணவ, மாணவியர் விடுதிகள் பழையன 66-ம், புதியன 40-ம் உள்ளன. இதில் மூன்று அரசு தொழிற் பயிற்சி மைய விடுதியும் உள்ளன. நடப்பாண்டில் இவையல்லாமல் 9 புதிய விடுதிகளும் திறக்கப்பட்டுள்ளன, இவைகளில் 8,700 ஆண் மற்றும் 2,150 பெண் மாணவர்கள் தங்கியுள்ளனர். இவைகளின் பராமரிப்புச் செலவுக்காக ரூ.1.37 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, ஒதுக்கீட்டுத் தொகை அனைத்தும் செலவிடப்பட்டுள்ளது.

### வீட்டுமனைப் பட்டா

அடிப்படைத் தேவைகளில் ஒன்றான வீட்டு வசதிக்கெனவும் மற்றும் சுடுகாடு, பாதை வசதி போன்ற அடிப்படை வசதிகளுக்காகவும் ரூ.75 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, வீடற்ற 10 ஆயிரம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இனக் குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனைப்பட்டா வழங்க நிலங்களைக் கையகப்படுத்த இதுவரை ரூ.65 இலட்சம் செலவிடப்பட்டு 7,340 வீடற்றவர்கள் பயனடைந்துள்ளனர்.

### உழவுமாடு மானியம் தொழிற் கருவிகள்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இன விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் வகையில் வங்கிகள் மூலம் உழவுமாடு வாங்குபவர்களுக்கு நபர் ஒருவருக்கு ரூ.1,500 கடன் வழங்கப்படுவதின் பேரில், இத்துறை மூலம் நபர் ஒருவருக்கு ரூ.1,500 வீதம் மானியம் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கென ரூ.2.17 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 181 பயனாளிகள் பயனடைய இலக்கீடு நிர்ணயிக்கப்பட்டதில் 181 பயனாளிகள் இதுவரை பயனடைந்துள்ளனர்.

தொழில் புரிபவர்களுக்குத் தச்சுக் கருவிகள், கருமாரக் கருவிகள், சலவைப்பெட்டி, காலணி தொழிற் கருவிகள், தையல் இயந்திரங்கள் போன்ற தொழிற் கருவிகள் இதுவரை 348 நபர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

### குடிதண்ணீர் வசதி

பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வழங்கும் பொருட்டு 30 புதிய குடிதண்ணீர்க் கிணறுகள் தோண்ட ரூ.2.03 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதற்கு இதுவரை 36 கிணறுகள் தோண்டப்பட்டு இலக்கீடு அடையப்பட்டுள்ளது.

இவையல்லாமல், தூய்மையாக வைக்கப்படும் ஆதிதிராவிடர் குடியிருப்புக்கு வானொலிப் பெட்டியும், தீண்டாமை ஒழிப்பில் சாதனை படைத்த கிராமங்கட்கு வானொலிப் பெட்டியும் வழங்கப்பட்டு வருகிறது.

### கொத்தடிமை மறுவாழ்வு

1990-ஆம் ஆண்டு மத்தியப் பிரதேசம், ராஜ் நகரிலிருந்து விடுவிக்கப்பட்ட 12 குடும்பங்களுக்கு நிவாரணத் தொகையாக ரூ.69,500, 1992-93-ஆம் ஆண்டில் வழங்கப்பட்டது.

மாவட்ட ஆட்சித் தலைவரின் நேரடி கண்காணிப்பில் 20 அம்சத் திட்டத்தின் கீழ் அம்சம் 6, 11 ஏ, 11 பி மற்றும் 14 ஏ-இல் அனைத்திலும் முழுமையான அளவில் முறைப்படி குறியீடு எட்டப்பட்டிருக்கிறது. ●



With Best Compliments From:

**Tirukoilur Groundnut & Paddy Merchants Association**

**Registered No.19/74**

**146, Kamaraj Road, Arakandanallur-605 752**

President:
S.V. KANNABRAN

Secretary:
R. KASIVISWANATHAN

Vice-President:
A.R. ARUNACHALAGANI

Assistant Secretary:
M.K. SHAMSUDEEUN

Treasurer:
P.M.Y. BHASHEER AHAMED

With the best compliments from

# TVL. PALLAVA GRANITE INDUSTRIES

(Black Granite Exporters)

10, Sriram Nagar (North Street)
Alwarpet, Madras - 600 018.



## தென்னார்க்காடு மாவட்டம்:

# ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன்

- சா. குமரப்பா
மாவட்ட வருவாய் அலுவலர்
கடலூர்



அன்னை காவேரியின் கடைக் கண் பார்வையினால் பூரித்து நிற்கும் மருத நில நஞ்சை வயல்களுடன் குறிஞ்சி, முல்லை, நெய்தல் மற்றும் பாலை ஆகிய ஐவகை நிலங்களையும் தன்னுள்ளே கொண்ட தென்னார்க்காடு மாவட்டம், தமிழகத்திலேயே ஆதிதிராவிடர்கள் அதிகமாக வாழும் மாவட்டமாகும்.

அண்ணல் காந்தியடிகளின் கனவை நனவாக்கும் வகையில் பட்டி தொட்டிகளில் வாழ்கின்ற ஆதிதிராவிடர்களுக்கும், மலைப் பகுதியில் வாழ்கின்ற பழங்குடியினர்களுக்கும் அவர்களது வாழ்க்கை மேம்பாட்டிற்கெனத் தமிழக அரசு பல்வேறு துறைகளின் மூலம் பல்வேறு நலப் பணிகளைச் செய்து வருகிறது. இதில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் மூலம் ஏழை எளிய ஆதிதிராவிட மாணவர்களுக்கு உண்ண உணவு, உடுக்க உடை, தங்க மாணவ, மாணவியர் விடுதிகள், கல்வி உதவித் தொகை. ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள், இலவச தொழிற் கருவிகள், விவசாயத்திற்கு உழவு மாடுகள் ஆகியவற்றை வழங்கி ஆதிதிராவிடர்களுடைய நலனைக் காத்து வருகிறது.

### கல்வி உதவித் தொகை

புத்தியே சகல சக்தியும் என்பதற்கிணங்கக் கல்வியின் மூலம் அறிவை வளர்த்து அதனால் கீழ்நிலை மக்களின் பொருளாதார- சமூக நிலையை உயர்த்த அரசு அவர்களின் நலத்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியினால் பாதிக்கும் மேலான தொகையினை, அவர்களின் கல்வி வளர்ச்சிக்கென நலத் துறையின் கீழுள்ள பள்ளிகள், விடுதிகள், தொழிற் பயிற்சிக் கூடம் ஆசிரியர் பயிற்சி, சிறுதொழிற் பயிற்சி, தட்டச்சு, சுருக்கெழுத்துப் பயிற்சி போன்றவைகளை ஏற்படுத்தி, அதில் பயிலும் மாணவர்களுக்கு உணவு, உடை, பாடநூல், குறிப்பேடுகள், காலணிகள் போன்றவைகள் வழங்கச் செலவிடுகிறது.

இலவசக் கல்வி உதவித்தொகை, கடன் மூலம் கல்வி உதவித்தொகை, சிறப்புக் கல்வி உதவித்தொகை (Merit Scholarship) போன்றவைகளின் மூலம் சுமார் 69,300 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ, மாணவியர்களுக்கு ரூ.77,71,000 செலவு செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இதில் அனைத்துத் தொகையும் செலவிடப்பட்டு, 76,301 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

### இலவசப் பாடப்புத்தகங்கள் குறிப்பேடுகள் வழங்குதல்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் இயங்கி வரும் பள்ளிகளில் கல்வி பயிலும் 39,249 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.17 இலட்சம் அளவில் பாடப்புத்தகங்கள் வழங்க இலக்கு நிர்ணயித்தது. இதில் 39,249 மாணவர்களுக்கு ரூ.19.97 இலட்சம் அளவில் பாடப்புத்தகங்களை இத்துறையின் கீழ்ப்பணிபுரியும்வட்டாட்சியர்கள், உதவிக் கல்வி அலுவலர் மற்றும் பள்ளித் துணை ஆய்வர் ஆகியோரின் செயல் திறன்களினால் உரிய காலத்தில் வழங்கப்பட்டன.

மேலும், இத்துறையின் கீழ் இயங்கும் பள்ளிகள் மற்றும் பொதுப் பள்ளிகளில் பயிலும் 1,50,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ, மாணவியர்களுக்கு ரூ.20 இலட்சம் மதிப்புள்ள குறிப்பேடுகள் இலவசமாக வழங்க



# தமிழ்நாட்டில் சுற்றுலாப் பயணிகள் அதிகரிப்பு

1992-ஆம் ஆண்டில் 4,18,424 வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் தமிழ்நாட்டுக்கு வந்தனர். 1991-இல் 3,33,877 வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் தமிழ்நாட்டுக்கு வருகை தந்தனர். அதாவது 1992-இல் 25.3 சதவிகிதம் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வந்துள்ளனர். 1992-இல் 1,31,09,863 உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகள் தமிழ்நாட்டிற்கு வருகை தந்தனர்.

தமிழ்நாட்டில் சுற்றுலாப் பயணிகள் வருவது அதிகரித்துள்ளது என்பது இதிலிருந்து தெரிகிறது. மத்திய அரசும், மாநில அரசும் மேற்கொண்ட ஊக்க நடவடிக்கைகளும், நாட்டின் இப்பகுதியில் நிலவும் அமைதியான சூழ்நிலையும் இதற்கு ஓரளவு காரணமாகும்.

**மாவட்டச் சுற்றுலா மையங்கள்**

உள்ளூர் மக்களிடையே சுற்றுலா பற்றிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தவும், அவர்களிடையே சுற்றுலாப் பயணத்தை ஊக்குவிக்கவும், ஒவ்வொரு மாவட்டத்திலும் 'மாவட்டச் சுற்றுலா மையம்' அமைக்கும் திட்டத்தை அரசு ஏற்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் கீழ், 'மாவட்டச் சுற்றுலா மையமாக' மேம்படுத்துவதற்காக, ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள அணைக்கட்டுப் பகுதிகள், அருவிகள் போன்ற இடங்கள் தெரிந்தெடுக்கப்படுகின்றன.




இம்மையங்களில், குடிநீர், கழிவறைகள், உடை மாற்றும் அறைகள், பேருந்து நிறுத்துவதற்கான இடவசதி, பொழுதுபோக்குப் பூங்காக்கள், உணவகங்கள் போன்ற வசதிகள் அளிக்கப்படும். இதன் பொருட்டு, அரசு அனைத்து மாவட்டங்களிலும் 42 மையங்களைத் தெரிந்தெடுத்துள்ளது.



**நீலகிரியில் வட்டார உணவக நிறுவனம்**

மத்திய அரசின் ஒத்துழைப்புடன், நீலகிரியில் வட்டார உணவக நிறுவனம் ஒன்றை அமைப்பது குறித்துப் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

**செலவு ஏற்கும் விருந்தினர் திட்டம்**

முக்கியமான சுற்றுலா மையங்களில், சுற்றுலாப் பயணிகளுக்கு இடவசதி கிடைப்பதைப் பெருக்கும் நோக்கத்துடன், செலவு ஏற்கும் விருந்தினர் திட்டமொன்றைக் கொண்டுவர தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது.

ஒவ்வொரு சுற்றுலா மையத்திலும் செலவு ஏற்கும் விருந்தினர் தங்குவதற்கான இடவசதி கிடைக்கும் விவரக் குறிப்புப் புத்தகம் ஒன்று வெளியிடப்படும்.



அண்ணா பூங்கா



## தமிழ்நாட்டிற்குச் சொகுசு இரயில் போக்குவரத்து

ஒரு வட்டாரத்தில் சுற்றுலா வளர்ச்சியில் இரயில்வே முக்கியப் பங்காற்றுகிறது. குறிப்பாக, உள்நாட்டுச் சுற்றுலா மேம்பாட்டில் இரயில்வே தலையாய பங்கு வகிக்கிறது. இதன் மூலம் தேசிய ஒருமைப்பாட்டிற்கு அதன் பங்கை ஆற்றுகிறது. இரயில்வேயின் பல சுற்றுலா மேம்பாட்டுத் திட்டங்களில் இராஜஸ்தானில் செயல்படுத்தப்பட்டு வரும் 'இரயிலிலேயே சென்று சுற்றுலா இடங்களைப் பார்வையிடும் திட்டம்' (Palace on Wheels Project) வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. பல்வகைச் சிறப்புச் சுற்றுலா இடங்களைக் கொண்ட தமிழகம் இத்தகைய சிறப்பு இரயிலை விடுவதற்கான வாய்ப்பு வளத்தைக் கொண்டுள்ளது. இக்கருத்தினை தமிழ்நாடு அரசு, மத்திய அரசின் சுற்றுலாத்துறை அமைச்சகத்துக்கும், இரயில்வே அமைச்சகத்துக்கும் தெரிவித்தது. மத்திய அரசின் சுற்றுலா அமைச்சகம் ரூ.48 இலட்சம் வழங்க ஒப்புக் கொண்டுள்ளது. இரயிலுக்குத் தேவையான இணைப்புப் பெட்டிகளை வழங்க இரயில்வே நிருவாகம் ஒப்புக் கொண்டுள்ளது. 'தென்னிந்தியா ரோவர் சிறப்பு இரயில்' (South India Rover Special Train) 1993 இறுதியில் இயக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**'குடை ஆன்டினா'**

1993-94-ஆம் ஆண்டில் கோயம்புத்தூர், உதகமண்டலம், கொடைக்கானல், மதுரை ஆகிய இடங்களிலுள்ள முக்கியமான ஒட்டல்களில் 'குடை ஆன்டினா' பொருத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வசதிகளை அளிப்பதற்காக இந்த ஒட்டல்களில் ரூ.20 இலட்சம் செலவில் 100 தொலைக் காட்சிப் பெட்டிகள் வாங்கி வைக்கப்பட்டுள்ளன.

ஆண்டு முழுவதும் சுற்றுலாப் பயணிகள் தொடர்ந்து வரும் பொருட்டு, மொரிஷியஸ், தென்னாப்பிரிக்கா ஆகிய நாடுகளிலுள்ள சுற்றுலா முகவரமைப்புகளுடன் சுற்றுலாத் தொடர்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இச்சுற்றுலாப் பயணிகளின் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஒட்டல்களின் தரம் உயர்த்தப்பட்டு வருகிறது.

மேல்மலையனூர், ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

**மகளிர் மேம்பாட்டுத் திட்டப்பணி**

பெண் விவசாயிகளின் பொருளாதார நிலையினை மேம்படுத்துவதன் மூலம் சமுதாயத்தில் அவர்களின் நிலையினை மேம்படுத்த இத்திட்டம் சின்ன சேலம், கள்ளக்குறிச்சி, தியாகதுருகம், விருத்தாசலம் ஆகிய ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் செயல்படுத்தப்படுகின்றன.

1. நிலம் சமன் செய்தல், 2. குழாய்ப் பணி, 3. கிணற்றில் குழாய்க் கிணறு அமைக்கும் பணி, 4. கிணறு புத்துயிருட்டல், 5. கிணற்றில் சுற்றுச் சுவர் அமைத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப் படுகின்றன. இதுவரை ரூ.33.22 இலட்சம் செலவில் 564 பெண் விவசாயிகளின் நிலங்களில் திட்டப் பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

**ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம்**

இத்திட்டத்தின் கீழ் நிலத்தடி நீர் வளத்தினைப் பெருக்கவும் வேலையின்றி வாடும் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்தித் தரவும், கிராம மக்கள் மற்றும் கால்நடைகளுக்கும் பயன் தரும் விகிதத்தில் 325,18 இலட்சம் செலவில் 348 கசிவு



நீர்க் குட்டைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 8 சிறு பாசன ஏரிகள் 13 இலட்சம் செலவில் நிலைப்படுத்தப்பட்டுள்ளன.

**சொட்டு மற்றும் தெளிப்பு நீர்ப் பாசனம்**

பாசன நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதில் சொட்டு மற்றும் தெளிப்பு நீர்ச் சாதனங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன. இத்திட்டத்தில் சொட்டு நீர்ப் பாசனம் அமைக்கும் செலவில் 50 சதவிகிதம் அதிகப்பட்சம் ரூ.50,000 (அதிகப்பட்ச நிலப்பரப்பு - 4 எக்டேர்) மானியம் வழங்கப்படுகிறது. தெளிப்பு நீர்ப் பாசனம் அமைக்கும் செலவில் முதல் எக்டேருக்கு ரூ.12,500, 2-வது எக்டேருக்கு ரூ.10,000, மூன்றாவது எக்டேருக்கு ரூ.7,500 அதிகப்பட்சம் ரூ.30,000 மானியம் வழங்கப்படுகிறது.

இவ்வாண்டில் ரூ.6.32 இலட்சம் மானியம் வழங்கப்பட்டு 36 விவசாயிகளுக்கு பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

**வெள்ள நிவாரணப் பணிகள்**

இயற்கை இடர்ப்பாடுகளினால் உண்டாகும் வெள்ளப் பெருக்கினால் விளை நிலங்களில் மணல் படிந்து விவசாயம் மேற்கொள்ள இயலாத நிலை சில சமயங்களில் ஏற்படுகின்றது. அத்தகையத் தருணங்களில் இத்துறை தம் வசமுள்ள புல்டோசர்களைப் பயன்படுத்தி நிலத்தில் படிந்துள்ள மணலை அகற்றி விவசாயத்திற்கு ஏற்றதாக மாற்றுகின்றது. இதுவரை 1972, 1977, 1985 மற்றும் 1992-இல் இம்மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ளச் சேதத்தின்போது, இத்துறை அரசு அளிக்கும் மானிய உதவியுடன், நிவாரணப் பணிகளைப் போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டு விவசாயிகளுக்குப் பெரிதும் உதவியுள்ளது.

கடந்த நவம்பர்த் திங்களில், கள்ளக்குறிச்சி வட்டத்தில் ஏற்பட்ட வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 75.70.5 எக்டேர் நிலம் ரூ.5.88 இலட்சம் செலவில் சீரமைக்கப்பட்டுள்ளது.


நல்வாழ்த்துக்கள்



கிருஷ்ணா ஆட்டோ ஸ்பேர்ஸ்

போன்:

சிதம்பரம்: 2343
கடலூர்: 20919
சேத்தியாதோப்பு: 64





With Best Compliments From:

VANAVIL DYES AND CHEMICALS LIMITED

Manufacturers of:
DYES AND DYE INTERMEDIATES
REGISTERED OFFICE and FACTORY:

Kudikadu - P.O.
Cuddalore - 607 005
South Arcot District
Tamil Nadu

Phones: 22059, 22297, 22462, 22483
Telex: 0462 - 209 VDCL IN
Fax: 041428 - 218
Grams: VANAVIL

MADRAS OFFICE:

20, South Leith Castle Road
Santhome
Madras-600 028

Phone: 75045, 75054
Telex: 041 - 8230 VDCL IN
Fax: 044 - 74722
Grams: VANTHOL

BOMBAY OFFICE:
4th Floor, Cambata Building
(Above Eros Theatre)
42, Maharshi Karve Road
Churchgate,
Bombay 400 020

Phone: 2041474
Telex: 011 - 82955 CCLC IN

DELHI OFFICE:

905, New Delhi House
27, Barakhamba Road
New Delhi 110 001

Phones: 3312889/3310382
Telex: 031-65398 CCL IN

AHMEDABAD OFFICE:
H.K. House
3rd Floor, Ashram Road
Ahmedabad 380 009

Phones: 449270/445175
Telex: 0121-6939 ACCL IN

புதியதோர் உலகம் செய்வோம்!

சமூக பொருளாதாரக் கல்வி முன்னேற்ற அறக்கட்டளை
(SEED TRUST)

தலைமை அலுவலகம்
அசோக் நகர், சென்னை-83.

கிளை அலுவலகம்
இறையூர், உளுந்தூர்ப்பேட்டை, விழுப்புரம்,
தென்னார்க்காடு மாவட்டம்.

சமூகத்தில் நலிந்த மக்களின்
ஒட்டு மொத்தமான முன்னேற்றத்திற்காகப்
பாடுபடும் எம் நிறுவனம்.

எங்கள் இதயங்கனிந்த நல்வாழ்த்துக்கள்!

P. ரமேஷ் கந்தன் பிரபு, M.Com., M.B.A.,
S/o. T.K.K. பழனிச்சாமி செட்டியார்

உரிமையாளர்:
ஸ்ரீபுவனேஸ்வரி டாக்கீஸ்
பண்ருட்டி, தென்னார்க்காடு மாவட்டம்

போன்: 2068



## வளரும் வேளாண்மை

# வேளாண் பொறியியல் துறையின் விரைவான பணிகள்!

வேளாண்மை வளர்ச்சிக்கு, வேளாண்மைப் பொறியியல் துறைக்கும் பெரும் பங்குண்டு. தென்னார்க்காடு மாவட்டத்தில் 10 புல்டோசர்களும், 10 டிராக்டர்களும் உள்ளன. நிலம் சமன் படுத்த புல்டோசரும், இயந்திரச் சாகுபடிப் பணிகள் மேற்கொள்ள டிராக்டரும், விவசாயிகளுக்கு வாடகைக்கு வழங்குவதன் மூலம், பணிகளைத் துறை நிறைவேற்றி வருகின்றது. புல்டோசர்கள் ஆண்டுதோறும் 14,000 மணி நேரம் பணிபுரிந்து, சுமார் 560 எக்டேர் நிலத்தைச் சமன்படுத்துகின்றன. டிராக்டர்கள் 5,800 மணி நேரம் பணிபுரிந்து 1,160 எக்டேர் நிலத்தில் உழவுப் பணிகளை நிறைவேற்றுகின்றன.

16, பர்குசன் துளைக் கருவி, 15 ரோட்டரி துளைக் கருவி, 3 இன்வெல் துளைக் கருவி, 8 பாறை வெடிக் கருவி, 1 நீர்த்துளைக் கருவி, 110 கைத்துளைக் கருவி, 2 காற்றழுத்தக் கருவி, 1 மின்சார வாகிங் கருவி, 2 ரெசின்டிவிடி மீட்டர் ஆகிய இயந்திரங்கள் உள்ளன. இவை புதிய நீர்வளமுள்ள இடங்களைத் தேர்வு செய்யவும், குழாய்க் கிணறுகள் அமைக்கவும், வறண்ட கிணறுகளை ஆழப்படுத்தவும், பக்கவாட்டில் துளையிடவும், வாடகை முறையில் உழவர்களுக்கு வழங்கிப் பணிகளை நிறைவேற்றி வருகிறது. ஆண்டுதோறும் 1,700 புதிய குழாய்க்கிணறுகள் அமைக்கப்படுகின்றன. 500 கிணறுகள் புத்துயிர் ஊட்டப்படுகின்றன. இதன் வாயிலாக 6,800 எக்டேர்கள் பாசன வசதி பெறுகின்றன.

### மண்வளப் பாதுகாப்புத் திட்டம்

மழை நீரை மண்ணுக்குள் ஈர்த்து மண்ணின் ஈரம் காத்திடவும், மண்ணரிப்பைத் தடுக்கவும், வழிந்தோடும் மழை நீரைத்தகுந்த இடங்களில்தேக்கி வைத்துப் பலன் பெறவும், நிலத்தின் தன்மைக்கேற்ப அதன் உபயோக முறையினை மாற்றியமைக்கவும், மண்வளப் பாதுகாப்புத் திட்டங்கள் மூலம் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. சமவெளிப் பகுதியில் சமஉயர வரப்பிடல், தடுப்பணைகள் அமைத்தல், ஆழ உழவு, மரம் வளர்த்தல், நிலச்சமன் செய்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

1957 முதல் இம்மாவட்டத்தில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகின்றது. இதுவரை சுமார் 360 இலட்சம் செலவில் 125 ஆயிரம் எக்டேரில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### சிறப்பு உணவு தானிய உற்பத்தித் திட்டம்

இத்திட்டத்தின் சிறு மற்றும் குறு விவசாயிகள் புதிய குழாய்க் கிணறு அமைத்தல்/கிணற்றை ஆழப்படுத்துதல் போன்ற பணிகளுக்கு ஆகும் செலவில் 50 சதவிகிதம் அல்லது அதிகபட்சம் ரூ.5,000 மானியமாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் 30.3.92 முடிய ரூ.60.52 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டு 2717 சிறு/குறு விவசாயிகள் பயன் அடைந்துள்ளனர். இவ்வாண்டில் (1992-93) இதுவரை ரூ.34 இலட்சம் மானியம் வழங்கப்பட்டு 680 சிறு/குறு விவசாயிகள் பயன் அடைந்துள்ளனர்.

### சிறப்புத் திட்டங்கள்

இந்து ஆதிதிராவிட விவசாயிகளின் வேளாண் உற்பத்தியைப் பெருக்கவும், நிலையான வருவாய்க்கு வழி வகுக்கவும் ஏதுவாகக் குழாய்க் கிணறு மற்றும் கிணறு ஆழப்படுத்தும் பணி இவைகளுக்கு ஆகும் செலவில் (ஒன்பது இடு பொருள்களுக்கு) 50 சதவிகிதம் (அதிகபட்ச வரையறை ஏதுமின்றி) மானியம் வழங்கப்படுகிறது.

### ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டம்

மலைவாழ் மக்களின் மேம்பாட்டிற்காக, மண்வளப் பாதுகாப்புப் பணிகள், கல்வராயன் மலைப்பகுதியில் மேற்கொள்ளப்படுகின்றன. நிலம் சமன் செய்தல், மலைப்பகுதிகளில் சம உயர கற்சுவர், தடுப்பணைகள், ஆழ உழவு, கிணற்றில் சுற்று சுவர் கட்டுதல் போன்ற பணிகள் 100 சதவிகித மானியத்தில் மேற்கொள்ளப்படுகின்றன. இதுவரை, 972 எக்டேருக்கு ரூ.30.2 இலட்சம் செலவில் மண்வளப் பாதுகாப்புத் திட்டப் பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

### தேசிய நீர்ப் பிடிப்புப் பகுதி மானாவாரி நில மேம்பாட்டுத் திட்டம்

மானாவாரி நிலங்களில், சாகுபடியை மேம்படுத்தும் நோக்கத்தில் மண் அரிப்பைத்தடுத்துஓடைகளை நிலப்படுத்த தடுப்பணைகள் கட்டும் பணி மற்றும், நீரோடை மேம்பாட்டுப்பணி (Run off Management) முதலியவை 100 சதவிகித மானியத்தில் செயல்படுத்தப்படுகின்றன. இதுவரை ரூ.2.60 இலட்சம் செலவில் 45 தடுப்பணைகள் பண்ருட்டி, வல்லம்,




இலட்சிய நோக்கம் - தீர்க்க தரிசனம்
அற்புதச் செயல்திறம்!
புரட்சித்தலைவியின்
இரண்டுப் பொற்கால ஆட்சியில்
மக்கள் போற்றும்
மகத்தான சாதனைகள்
தமிழரசு
16.6.1993




## இராமாயணத்தில் நக்கீரன்

**ஆசிரியர்:** கொடைக்கானல் காந்தி
**வெளியீடு:**
இளைஞர் வெளியீடு,
7, சின்னப்ப ராவுத்தர் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை-5.

பக்கம்: 220 விலை: ரூ.30/-

வேறுபட்ட நடையில் மாறுபட்ட கோணத்தில் வாலியை நக்கீரனாகக் காட்ட எடுக்கப்பட்ட வசன முயற்சி இது. 26 தலைப்புகள் 26 கவிதை வரிகளாய் அமைந்துள்ளன. நூலின் ஒவ்வொரு வரியும் ஒரு கவித்துவ வீச்சோடு வந்து உரைநடையின் ஆழத்தை அதிகப்படுத்துகிறது.

வாலியைப் பற்றி வந்துள்ள கருத்துரைகள், தீர்ப்புரைகள் எல்லாம் மறுபடி உரைகல்லில் உரைத்துப் பார்க்கப்படுகின்றன. திறனாய்வைப் படைப்பிலக்கியத்துக்கு உயர்த்தலாம் என்பதை உணர்த்துகின்ற நூல் இந்த நூல்.

ஆசிரியரின் பரந்த கல்வியும், விரிந்த கேள்வியும், செறிந்த அறிவும் நமது பார்வையை விசாலப்படுத்துகின்றன. சிறந்த திறனாய்வு நூலாகிய இந்த நூலில் அடிக்கடி தலைநீட்டும் அச்சுப் பிழைகள் அடுத்த பதிப்பிலாவது களையப்பட வேண்டும். திறனாய்வாளருக்குத் திகட்டாத நூல் இந்த நூல்.

—இளந்தேவன்

## டாக்டர் தயாவின் இலக்கிய இறையியல் படைப்புகள்

**பதிப்பாசிரியர்:** ம.வி. சுதாகர்
**வெளியீடு:**
கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்,
பார்க் டவுன், சென்னை-600 003.

பக்கம்: 145 விலை: ரூ.50/-

அருள்திரு டாக்டர் தி. தயானந்தன் பிரான்சிஸ், மிகச்சிறந்த எழுத்தாளர், கவிஞர், நாடகாசிரியர். இலக்கிய இறையியல் படைப்புகள் பலவற்றைப் படைத்தவர். அன்னாரின் மணிவிழா ஆய்வரங்கத்தில் படிக்கப்பட்ட- படைக்கப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பே இந்நூல். ஒவ்வொரு கோணத்தில் எழுதப் பெற்ற ஒவ்வொரு கட்டுரையும் டாக்டர் தயாவின் எழுத்தாற்றலை வெளிப்படுத்துகின்றது.

## புகழ்பெற்ற பேரூர்கள்

**ஆசிரியர்:** தங்கவயல் லோகிதாசன்
**வெளியீடு:**
அம்பிகா பதிப்பகம்,
9/10, ராணி அண்ணா நகர்,
சென்னை-78.

பக்கம்: 20 விலை: ரூ.25/-

இந்தியா என்கிற மகுடத்தில், ஒவ்வொரு மாநிலமும் ஒரு வைரக்கல்லாக ஒளி வீசிக் கொண்டிருக்கின்றது. அவற்றில் காணத்தக்க அரிய இடங்களும் உள்ளன. அந்த வகையில் இந்த நூலில் இந்தியாவின் பல மாநிலங்களைப் பற்றியும், அங்குள்ள முக்கியத் தலங்கள் பற்றியும் தகவல்கள் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன.

காஷ்மீர், ரிசிகேசம், குருச்சேத்திரம், டில்லி, தட்சசீலம், பிருந்தாவனம், ஜெய்ப்பூர், ஹரியானா, பம்பாய், கோவா, துளு நாடு, யஜபூர், ஐதராபாத், சென்னை, மயிலை, திருவொற்றியூர், திருச்சிராப்பள்ளி ஆகிய நகரங்களைப் பற்றிய சுவையான தகவல்கள் நிறைந்துள்ள நூல். அனைவரும் படித்து மகிழலாம்.

- மறைமலை.

## வெற்றி தரும் எண்ணங்கள்

**ஆசிரியர்:** மானோஸ்
**வெளியீடு:**
பூங்கொடி பதிப்பகம்,
14, சித்திரைக் குளம் மேற்கு வீதி,
சென்னை-600 004.

பக்கம்: 200 விலை: ரூ.25/-

எண்ணங்களைப் பற்றி அறிவியல் பூர்வமாக விளக்கிக் காட்டும் ஆசிரியரின் திறன் அறிந்து எண்ணி எண்ணி மகிழலாம்.

'வெற்றியின் கட்டடமே, நல்லெண்ணங்கள் என்ற அஸ்திவாரத்தின் மீதுதான் நிலைத்திருக்கின்றது என்ற உண்மையை அறிந்து கொள்ளுங்கள்'' என்கிறார் ஆசிரியர். எனவே எண்ணங்களைப் பற்றி ஆராயும் ஆசிரியர், மனம் என்பது என்ன? என்று ஒரு வினாவை எழுப்பி, அதற்கு விளக்கம் தரும் பாங்கை, 'உடலே மனம்' என்னும் கட்டுரையில் பார்க்கிறோம்.

பொதுவாக, சிந்தனையைத் தூண்டும் ஒரு அரிய நூலாகத் திகழ்கிறது இது.

## என் பக்கம்

**ஆசிரியர்:**
ஏர்வாடி எஸ். இராதாகிருஷ்ணன்
**வெளியீடு:**
சுதா பதிப்பகம்,
4, முத்து முதலித் தெரு,
சென்னை-600 007.

பக்கம்: 112 விலை: ரூ.15/-

பல்வேறு சந்தர்ப்பங்களில், பலருடன் பழகுகிற வாய்ப்புகளை, அனுபவ மொழிகளாக உதிர்த்திருக்கிறார் ஆசிரியர். 'கவிதை உறவு' இதழில் கடைசிப் பக்கக் கட்டுரையாக எழுதிவந்த தொகுப்புதான் இது.

ஆசிரியரின் அனுபவங்கள், அணுகுமுறைகள், ஆலோசனைகள், அறிவுரைகள் எல்லாம் இந்தக் கட்டுரைகளில் விரவியுள்ளன. படித்து மகிழவும் பயன் பெறவும் உதவும் நூல்.

—பி.வி.ஜி.

## "நெருப்பிலே வாழுகின்ற மலர்கள்"

**ஆசிரியர்:** நெல்லை செல்வம்
**வெளியீடு:**
செல்லப் பாப்பா பதிப்பகம்,
எண்.6, கஸ்தூரிபாய் நகர்,
4-வது தெரு, அனகாபுத்தூர்,
சென்னை-600 070.

பக்கம்: 96 விலை: ரூ.12/-

வரதட்சிணைக் கொடுமை, தொண்டு, சாதிச் சண்டை, மென்மையான காதல் உணர்வு, இரக்கமற்ற மனிதர்கள் எனப் பல விஷயங்கள் இக்கதைகளில் கருவாகி இருக்கின்றன.

எதையும், விரைவாய், அழுத்தமாய்ச் சொல்லிவிட வேண்டுமென்ற வேகம் எழுத்தில் தெறிக்கிறது. மகாத்மாக்கள், இதயமற்ற மனிதர்கள் போன்ற கதைகள் சிறப்பாக உள்ளன.

—குமார்

முகவரி தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568026, 568027


எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

- ★ பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
- ★ பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
- ★ பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
- ★ லுங்கிகள், துவாலைகள். வேட்டிகள்.
- ★ படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தை அணுகவும்.




DIPR/273/Dis/MS/93

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
குறளகம், சென்னை - 600 108



# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2024
ஆனித் திங்கள் - 2, 17
மலர்:24 இதழ்: 1,
16-6-1993 இதழும் 1.7.93
இதழும் இணைந்தது
விலை: ரூபாய் ஆறு




## 24-வது ஆண்டில் 'தமிழரசு'

'தமிழரசு 24-வது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது. அரசின் அறிவிப்புகள், ஆக்கப்பணிகள், சாதனைகள் குறித்த செய்திகள், தமிழ்ச் சான்றோர்கள், தேசத் தலைவர்கள் ஆகியோரின் வாழ்க்கை வரலாறுகள், அறிவியல் புதுமைகள், கவிதை மாலைகள், மாணவர்க்குரிய கட்டுரை, கவிதைகள் என இப்படிப் பல்வேறு பயனுள்ள எழுத்தோவியங்களை வழங்கித் தொண்டாற்றி வருகிறது 'தமிழரசு'.

அரசின் சார்பில் நடத்தப் பெறும் ஏடு என்ற போதிலும், பொதுமக்கள் விரும்பிப் படிக்கும் பொலிவு மிக்க ஏடாகத் தமிழரசு விளங்கி வருகிறது. ஆம். படிக்க-பயன்பெற- பாதுகாக்கத் தக்க வகையிலே மிக்க கவனத்துடன் தயாரிக்கப்படுகிறது.

'தமிழரசு' இதழுக்குத் தொடர்ந்து ஆதரவு அளித்துவரும் வாசகர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள், சந்தாதாரர்கள், முகவர்கள், விளம்பரதாரர்கள் அனைவருக்கும் எங்களது மனம் கனிந்த நன்றியைக் காணிக்கை ஆக்குகிறோம்.

- ஆசிரியர்.

தமிழ்நாடு அரசின் ஈராண்டுச் சாதனைகளை விளக்கும் சிறப்புக் கட்டுரைகள்- செய்திகள்...



## பொற்கால வரலாறு உருவாக்குவோம்!

தமிழகச் சரித்திரத்தில்
புரட்சித் தலைவர் வழியில்
ஒரு நல்லரசு,
பொற்கால வரலாறு ஒன்றை உருவாக்கியது
என, நிகழ்காலத்தில் மட்டுமல்ல;
வருங்காலத்திலும் வரலாறு நமக்கு
வாழ்த்துப்பா பாடிடும் அளவுக்கு
நமது இலக்கினை அடையத்
தொடர்ந்து பணிபுரிவோம்!

'அகிலும் தேக்கும் அழியாக் குன்றம்
அழகாய் முத்துக் குவியும் கடல்கள்
முகிலும், செந்நெல்லும் முழங்கு நஞ்செய்
முல்லைக் காடு மணக்கும் நாடு'
எனப் பாவேந்தர் விரும்பிய நல்ல நாடாகத்
தமிழகத்தைத் திகழ்ந்திடச் செய்வோம்!

அச்சீர்மிகு திசைநோக்கி,
தமிழகத்தை அழைத்துச் செல்ல
தமிழகம் முழுவதும் உள்ள
சான்றோர்கள், ஆன்றோர்கள்
அனைவரது நல்லாதரவையும்
வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.



# நிதி நிர்வாகம் நிறைவேற்றிய திறன்மிகு சாதனை



மாண்புமிகு நிதியமைச்சர்
**டாக்டர் நாவலர்
இரா. நெடுஞ்செழியன்**

***1992-93-ஆம் ஆண்டு திட்டச் செலவுகளுக்கு ரூ.1,751 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தபோதிலும், திட்டச் சாதனையாக ரூ.1,900 கோடி அளவுக்கு எட்டியது. இது, ஒப்புதல் அளிக்கப்பட்டத் தொகையைவிட ரூ.149 கோடி கூடுதலான சாதனையாகும்.***



**1991**-ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் பொதுமக்களின் அன்பையும், ஆதரவையும், நம்பிக்கையும், நன்மதிப்பையும் பெற்று, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், மாபெரும் வெற்றியை ஈட்டியது. அதன் காரணமாக, அது ஆளும் கட்சியாகும் தகுதியைப் பெற்றது. அதனையொட்டி, 1991, ஜூன் 24-ஆம் நாள், மாண்புமிகு புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தமிழக ஆட்சிப் பொறுப்பை மிகச் சிறப்பாக ஏற்றார்கள். 1993, ஜூன் 24-ஆம் நாளோடு, மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்களின் ஆட்சி ஏற்பட்டு இரண்டு ஆண்டுக்காலம் வெற்றிகரமாக ஓடி விட்டது. இந்த இரண்டு ஆண்டுக் காலத்தில் மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்களின் ஆட்சி செய்த சாதனைகள் அளப்பரியனவாகும்.

ஆட்சிப் பொறுப்பேற்றுக்கொண்டபோது, ஏற்பட்டிருந்த பல்வேறு நெருக்கடிகளைச் சமாளிக்க வேண்டிய அவசியம், மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்களுக்கு ஏற்பட்டது. அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்கும்போது, சுமார் ரூ.900 கோடி அளவுக்கு நிதி நெருக்கடி நிலைமை நிலவி வந்தது. மதுவிலக்குக் காரணமாக ரூ.320 கோடி இழப்பினை ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியமும் ஏற்பட்டது. இவற்றின் காரணமாக மொத்தப் பற்றாக்குறை ரூ1220 கோடி அளவுக்கு ஏற்பட்டிருந்தது. அதனைச் சமாளித்து, 1991-92-ஆம் ஆண்டு, பற்றாக்குறையைச் சுமார் ரூ.600 கோடி அளவுக்குக் கொண்டுவந்து நிறுத்திய பெருமை மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்களின் அரசைச் சார்ந்ததாகும்.

மிக நெருக்கடியான நிதிநிலை இருந்த போதிலும், அதனை அரசு சமாளிக்குமா? என்ற ஐயப்பாடு ஏற்பட்டபோதிலும், அரசு திட்டச் செலவுகளுக்கு, ரூ.1,605 கோடி ஒதுக்கியது. கடுமையான நிதி நெருக்கடி நிலைமை இருந்தபோதிலும், 1991- 92-ஆம் ஆண்டு திட்டச் சாதனை, ரூ.1,725 கோடி அளவுக்கு எட்டியது. இது ரூ.420 கோடி அளவுக்குக் கூடுதலான சாதனை

யாகும். 1992-93-ஆம் ஆண்டு திட்ட செலவுகளுக்கு ரூ.1,751 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தபோதிலும், திட்டச் சாதனையாக ரூ.1,900 கோடி அளவுக்கு எட்டியது. இது ஒப்புதல் அளிக்கப்பட்டத் தொகையைவிட ரூ.149 கோடி கூடுதலான சாதனையாகும்.

இந்தியாவில் ஒப்புதல் அளிக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டைக் காட்டிலும் அதிகமாக திட்டச் சாதனையைப் புரிந்துள்ள ஒரு சில மாநிலங்களில் தமிழ்நாடு முன்னோடியாக இருந்து வருகிறது. அதேபோல, ஏழை எளிய மக்களின் நலன்களுக்கான, திட்ட நிதி ஒதுக்கீட்டில் எவ்விதக் குறையும் ஏற்படாமல் பாதுகாப்பதில், இந்த அரசு கண்ணும் கருத்துமாக இருந்து சிறப்பான வெற்றியைப் பெற்றுள்ளது. இந்த அரசு ஏழை எளிய மக்களுக்கான சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை விரைவான முறையிலும், சிறப்பான வகையிலும், செம்மையாகச் செயல்படுத்தி வந்துள்ளது.

மாண்புமிகு புரட்சித்தலைவியின் அரசு பொறுப்பேற்றுக் கொள்வதற்கு முன்னால் இருந்து வந்த நிலையைக் காட்டிலும், இந்த இரண்டாண்டுக் காலத்தில், எல்லாத் துறைகளிலும் முன்னேற்றச் சாதனைகள் பலவற்றைச் செய்திருக்கிறது.

கல்வித் துறை செலவினங்களை ரூ.1,284 கோடியிலிருந்து, ரூ.1,820 கோடிக்கும், மருத்துவம், சுகாதாரம் பற்றிய பணிகளுக்கு ரூ.379 கோடியிலிருந்து, ரூ.557 கோடிக்கும், குடிநீர் வழங்கல் பணிகளைப் பொறுத்து ரூ.139 கோடியிலிருந்து, ரூ.205 கோடிக்கும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியிர் பணிகளைப் பொறுத்து ரூ.132 கோடியிலிருந்து, ரூ.183 கோடிக்கும், சமூகப் பாதுகாப்பு நலனைப் பொறுத்து ரூ.139 கோடியிலிருந்து, ரூ.440 கோடிக்கும், சத்துணவு திட்டப் பணிகளைப் பொறுத்து ரூ.235 கோடியிலிருந்து, ரூ.312 கோடிக்கும், ஏனைய சமூகப் பணிகளைப் பொறுத்து ரூ.263 கோடியிலிருந்து, ரூ.440 கோடிக்கும், வேளாண்மைத் துறையைப் பொறுத்து ரூ.339 கோடியிலிருந்து, ரூ.637 கோடிக்கும், சாலைகள், பாலங்கள் பொறுத்து, ரூ.139 கோடியிலிருந்து, ரூ.236 கோடிக்கும், நுகர்பொருள் வழங்கத் துறையைப் பொறுத்து ரூ.270 கோடியிலிருந்து, ரூ.527 கோடிக்கும், இப்படியாக எல்லாத் துறைகளிலும் சாதனைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

பெரும் நிதிப் பற்றாக்குறையை எதிர்நோக்கும் தமிழ்நாடு, கடந்த இரண்டாண்டுகளில் நிதி ஆதாரங்களைத் திரட்டுவதில் பெரும் சாதனைகளைப் புரிந்துள்ளது. 1991-92-ஆம் ஆண்டில் சிறு சேமிப்புத் துறையைப் பொறுத்து, ரூ.581 கோடி, முன்பெல்லாம் எப்போதும் இல்லாத வகையில் திரட்டப்பட்டுள்ளது. மத்திய அரசு வருமான வரிச் சலுகைகளைத் திரும்பப் பெற்ற போதிலும், சிறுசேமிப்பில், நடவடிக்கைகளை மிகத் திறமையாக மேற்கொண்டதன் காரணத்தினால் 1992-93-ஆம் ஆண்டில் ரூ.551 கோடி வசூல் செய்துள்ளது.



கடந்த இரண்டாண்டுகளில், மிகப் பெரிய அளவில் வரிச் சீரமைப்புகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. 1993-ஆம் ஆண்டு விற்பனை வரிச் சீரமைப்பு, 1959-ஆம் ஆண்டுகளுக்குப் பிறகு, செய்யப்பட்ட, மிகவும் நுணுக்கமான, விரிவான சீரமைப்பாகும்.

வணிக வங்கிகளோடு மிகத் திறமையாகத் தொடர்பு கொண்டு செயலாற்றியதன் பயனாக 1991-92-ஆம் ஆண்டில் முன்னுரிமைத் துறைகளுக்கு முன்பு எப்போதும் இல்லாத அளவுக்கு ரூ.2,070 கோடியும், 1992-93-ஆம் ஆண்டில் ரூ.2,250 கோடியும் கடன்களாக வழங்கப் பட்டுள்ளன.

மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் சீரிய தலைமையின் கீழ் இயங்கிவரும் தமிழக அரசு பாராட்டத்தக்க வகையிலும், போற்றத் தக்க வகையிலும், நிதி நிருவாகத்தை மிகத் திறம்பட நிறைவேற்றி வருவது என்பது மகிழ்ச்சிக்கும், பாராட்டுதலுக்கும் உரிய செய்தியாகும்.



# நீதி பரிபாலனத்தில் புதிய சகாப்தம்

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்

**திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி**

**டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் பொறுப்பேற்ற இந்த இரண்டு ஆண்டுகளில் 27 புதிய நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன.**

**நலிந்த பிரிவினர் - தாய்மார்கள் - ஏழை எளிய மக்களுக்கு விரைவாக - சிக்கனமாக எளியமுறையில் நீதி கிடைக்க வேண்டும் என்பதே டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய வழிகாட்டும் நெறி.**

"சட்டம் என்பது நாகரிக சமூகத்தின் அடையாளம். மக்கள் தங்களைத் தாங்களே ஆண்டு கொள்ள உருவாக்கியிருக்கும் ஏற்பாடு தான் சட்டம்" என்று பேரறிஞர் அண்ணா கூறினார்கள்.

சட்டம் என்பது மனித சமூகத்தை ஒழுங்குபடுத்தும் கருவி. முறைப்படி எல்லாம் நடக்கவேண்டும் என்பதற்கான வழிவகைகளைச் சட்டம் தருகிறது.

எனவே, சட்டத்தின் ஆட்சி என்றுதான் நவீன கால ஆட்சி முறையைக் கூறுகிறோம்.

சட்டம் வகுத்துக் கொடுத்துள்ள வழியில் சமூகம் நடைபோடுகிறதா என்பதைக் கண்காணிக்கவும், சட்டத்துக்கு மாறாகவும் எதிராகவும் நடந்து சமூகத்திற்குக் கேடு ஏற்படுத்துவோரைக் கண்டிக்கவும் தண்டிக்கவும் ஆன கடமையைப் புரிவதே நீதித் துறையின் பொறுப்பு.

ஆக, ஜனநாயகத்தின் மிக முக்கியமான பொறுப்பு சட்டத்துறையிடமும்—நீதித்துறையிடமும் விடப் பட்டுள்ளது.



இந்தப் பொறுப்பினை உணர்ந்து செயல்பட வேண்டிய இத்துறைகள் சமூக நீதிக்கும் இடம் தரவேண்டும். குற்றமிழைப்போர் திருந்திடவும் தண்டனை பெறுவோர் மறுவாழ்வு பெறவும் சீரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

மேலே கூறப்பட்ட சீரிய குறிக்கோள்களைக் கொண்டு சட்டம் நீதித்துறைகளின் செயல்பாடுகளை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுடைய அரசு நடத்தி வருகிறது.

"நீதி கிடைக்கவேண்டும், அதுவும் தாமதமின்றி - விரைவாக வழங்கப்பட வேண்டும். செலவின்றி எளிய முறையில் ஏழைகளும் பெறுகின்ற வகையில் நீதி வழங்கப்பட வேண்டும்".

-என்பதே மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுடைய அரசின் குறிக்கோள் ஆகும்.

அவ்வகையில் சட்டம், நீதி ஆகிய துறைகளின் நிர்வாகத்தில் - புதிய பெரிய சாதனைகளை டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுடைய அரசு நிகழ்த்திக் காட்டியிருக்கிறது.

இந்தக் குறிக்கோளுக்கு ஏற்ப நீதி மன்றங்களுக்கான வசதிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

நீதித்துறைக்கான நிதி ஒதுக்கீடு கூடுதல் ஆக்கப்பட்டுள்ளது. நீதிபதிகளின் எண்ணிக்கை அதிகரிக்கப் பட்டுள்ளது.

சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையை 28-லிருந்து 32 ஆக உயர்த்திட மத்திய அரசிடம் வாதாடி ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

மேலும், நீதிமன்றங்களில் உள்ள காலியிடங்களை நிரப்ப உயர் நீதி மன்றமும் அரசும் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன. பல்வேறு மட்டங்களில் புதிய நியமனங்களும், பதவி உயர்வுகளும் அறிவிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள்

TNPSC

**விளம்பர எண். 22/93**

தமிழ்நாடு வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி சார்நிலைப் பணியில் வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையில் பயிற்சிப் பிரிவில் உதவிப் பயிற்சி அலுவலர் (சுருக்கெழுத்து- ஆங்கிலம்) பதவியில் இரண்டு காலியிடங்களுக்கு நேரடித் தேர்வின் மூலம் நியமனம் செய்யப்பட ஆதிதிராவிட வகுப்பினர்/பழங்குடி வகுப்பினரிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் 12.7.1993 அன்று மாலை 5.45 மணி வரையில் வரவேற்கப் படுகின்றன. (இந்த இரண்டு காலியிடங்களும் முன் தெரிவுகளில் நிரப்பப்படாத காலியிடங்களாகும்)

**சம்பளம்:** மாதம் ஒன்றுக்கு ரூ.1600-50-2300-60-2660

**குறிப்பு:** இப்பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளைப் பெற்றிருந்து, குறைந்தபட்ச மதிப்பெண்களைப் பெறுவதன் மூலம் தெரிவுக்குத் தகுதியானவராகக் கருதப்படும் ஆதரவற்ற விதவைகள் அவர்களைவிட அதிக மதிப்பெண்களைப் பெற்றிருப்பவர்களைக் காட்டிலும் முன்னுரிமை வழங்கப்பட்டுத் தெரிவு செய்யப் படுவார்கள்.

**விளக்கம்:** 'ஆதரவற்ற விதவை' என்பது, வாழ்வதற்குத் தனக்கென்று எந்தவொரு வழியும் இல்லாதவரும், பட்டினியிலிருந்து தன்னைக் காப்பாற்ற எந்தவொரு ஆதரவாளரும் இல்லாதவரும் ஆன விதவையைக் குறிப்பதாகும்.

**வயது:** 1.7.1993 அன்று 35 வயதிற்குக் குறைவாக. பட்டம்/புகுமுக வகுப்பு/மேல்நிலை வகுப்பு ஆகிய வற்றில் எந்தக் கல்வித் தகுதியேனும் பெற்றிருந்தால் அவர்களுக்கு வயது வரம்பு இல்லை. குறைந்தபட்ச பொதுக்கல்வித் தகுதியைக் காட்டிலும் மேற்பட்ட பொதுக் கல்வித்தகுதியைப் பெற்றிருக்காத விண்ணப்ப தாரர்களின் வயது வரம்பு ஐந்து ஆண்டுகள் உயர்த்தப்படும். (சலுகைகள் பற்றிய மேலும் சில விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.)

**தகுதி:** (3.6.1993 அன்றுள்ளபடி): கீழ்க் காண்பவை அல்லது அவைகளுக்கு இணையானவை.

1. Must have been declared eligible for admission to the College Course of study under the old 11 year schooling or must have been declared eligible for admission to the Higher Secondary course under the present 10 year schooling.

and

2. Must have passed the Government Technical Examination in Typewriting by the Higher Grade (English) and in Shorthand by the Higher Grade (English).

and

3. Must have passed the Government Technical Examination in Typewriting by the Lower Grade (Tamil) and in Shorthand by the Lower Grade (Tamil).

and

4. Must have experience as Stenographer in English for a period not less than two years.

Notes: (i) Other things being equalpreference will be given to candidates who posses teaching experience for a period of not less than one year.

(ii) Other things being equal preference will be given to candidates who have completed one year of Apprenticeship under the Government of India Scheme or one year training under the State Government Apprenticeship Scheme.

ஆதிதிராவிட வகுப்பினர்/பழங்குடி வகுப்பினரைச் சார்ந்த ஆதரவற்ற விதவைகள், தாயகம் திரும்பிய வர்கள், முன்னாள் இராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர், பிணைத் தொழிலாளர்கள், நாற்பது வயதிற்குக் குறைவாக உள்ள பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட மற்றும் பணியிலிருக்கின்ற தற்காலிக மாநில அரசுப் பணியாளர்கள் போன்றவர்களுக்கு வயது மற்றும்/அல்லது தகுதியிலிருந்து அளிக்கப்படும் சலுகைகள் தேர் வாணையத்தின் 'பணி வேட்பாளர்களுக்கான விதிமுறைகளில்' தரப்பட்டுள்ளன.

விண்ணப்பப் படிவமும், நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு எழுத்து மூலம் கோரிப் பெற்றுக் கொள்ள லாம். கோரிக்கைகள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ பதவியின் பெயர் மற்றும் விளம்பர எண் ஆகியவற்றைக் குறிப்பிட்டு எழுதப்பட்டு செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு வழங்கக்கூடிய 1.6.1993 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10) சென்னை அண்ணா சாலை தபால் அலுவலகத்தில் செலுத்தத்தக்க கோடிட்ட அஞ்சல் ஆணை அல்லது பாரத ஸ்டேட் வங்கியின் (State Bank of India) ஏதாவதொரு கிளையில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையச் செயலாளருக்கு வழங்கக்கூடிய 1.6.1993 அன்றோ அல்லது அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட சென்னை-600 006 ஆயிரம் விளக்கு, பாரத ஸ்டேட் வங்கியில் செலுத்தத்தக்க பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10) 'கேட்புக் காசோலை' (Demand Draft)-யுடன் சுய விலாசம் எழுதிய உறையுடனும் (26 x 12 செ.மீ.) அனுப்ப வேண்டும். கோரிக்கைகள் பிற மொழியில் இருக்குமாயின் அத்துடன் ஆங்கில மொழிபெயர்ப்பும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டா.



DIPR/929/MS/93

# வருவாய்த்துறையின் வளமான பணிகள்

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்

## திரு எஸ்.டி. சோமசுந்தரம்

அரசு ஊழியர்களுக்கு வழங்குவது போலவே, பணியில் இருக்கும்போதே இறந்த கிராம உதவியாளர் குடும்பங் களுக்குக் குடும்ப நல நிதி வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. ஏழை எளிய வர்களுக்கு, இலவசப் புடவை, வேட்டி வழங்கும் திட்டம், தமிழ்நாட்டில் முதன் முதலாக 1992-ஆம் ஆண்டு தொடங் கப்பட்டு, 60 இலட்சம் பெண்களும், 60 இலட்சம் ஆண்களும் பயன்பெற்றனர்.

புயல் வெள்ளம் மற்றும் வறட்சி நிவாரணப் பணிகள் செம்மையாக நடைபெற வழிவகை செய்யப்பட்டுள் ளது. நில ஆக்கிரமிப்புகளும் உடனுக் குடன் அகற்றப்பட்டு வருகின்றன...



**மா**ண்புமிகு புரட்சித்தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற இரண்டாண்டுக் காலங்களில், தமிழகம் பல்வேறு துறைகளில் முன்னேறி வருவதைப் பலரும் பாராட்டி வருகிறார்கள்.

குறிப்பாக, வருவாய்த்துறையின் அங்கங்களான வருவாய் நிர்வாகத் துறை, நில நிருவாகத் துறை, நிலச் சீர்திருத்தத் துறை, நில அளவை மற்றும் பதிவுருக்கள் துறை முதலானவை மக்கள் பணியில் முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு சிறப்பாகச் செயலாற்றி வருகிறது என்பதைப் பெருமையோடு குறிப்பிட வேண்டும்.

### வருவாய் நிர்வாகத்துறை

அரசு ஊழியர்களுக்கு வழங்குவது போலவே, பணியில் இருக்கும்போதே இறந்த கிராம உதவியாளர் குடும்பங்களுக்குக் குடும்ப நல நிதி ரூ.60,000 வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. கிராம ஊழியர்கள் இறந்த அன்றே அவர்களது ஈமக்கிரியைக்காக ரூ.2000 வழங்க வட்டாட்சியருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. கிராம உதவியாளர் பணிக்குப் பெண்களையும் நியமனம் செய்ய லாம் என அரசு ஆணையிட்டுள்ளது. கிராம உதவியாளர் களுக்குப் பண்டிகை முன்பணம் ரூ.200-லிருந்து ரூ.300-ஆக உயர்த்தப்பட்டுள்ளது.



கிராம உதவியாளர்களுக்குத் தற்போது வழங்கப்படும் ரூ.612 தொகுப்பூதியத்தை 1.7.92 முதல் 712 எனவும் 1.1.93 முதல் 745 மற்றும் அகவிலைப்படியாக ரூ.80-ஆக மொத்தம் ரூ.825 எனவும் உயர்த்தி வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

### வருவாய்த்துறை கட்டடங்கள்

நான்கு வட்டாட்சியர் அலுவலகங்களுக்குக் கூடுதல் கட்டடம் கட்ட ரூ.8 இலட்சத்திற்கு, நிர்வாக ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. அவை:

காங்கேயம் வட்டம் .. (பெரியார் மாவட்டம்)
பென்னகரம் வட்டம் .. (தர்மபுரி மாவட்டம்),
கந்தர்வகோட்டை .. (புதுக்கோட்டை மாவட்டம்),
ஏர்க்காடு .. (சேலம் மாவட்டம்).

இரண்டு வட்டாட்சியர் அலுவலகங்கள் கட்ட ரூ.85 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. அவை:

பொறுப்பேற்ற இந்த இரண்டு ஆண்டுளில் 27 புதிய நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

குறிப்பாகத் தென் மாவட்டங்களில் இருக்கும் மக்கள், மாவட்ட நீதிமன்றங்களை நாட மதுரைக்கு வரவேண்டிய நிலைமை நீண்ட நெடுங்காலமாக இருந்தது. அந்த நிலையை மாற்றி தூத்துக்குடி, நெல்லை, ஸ்ரீவில்லிபுத்தூர், இராமநாதபுரம் உள்ளிட்ட பல இடங்களில் மாவட்ட நீதிமன்றங்களை அமைத்தது டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசின் தனிப்பெரும் சாதனையாகும்.

மேலும் பல இடங்களில் சப் கோர்ட்டுகள் அமைத்து, மக்களுக்கு அதிக சிரமம் இன்றி நீதி கிடைக்கச் செய்திருப்பதும் இந்த அரசுதான்.

அதுமட்டுமன்றி தொழில் தகராறுகளை விசாரிக்க ஐந்து தொழிலாளர் நீதிமன்றங்களை சேலம், நெல்லை, திருச்சி, கடலூர், வேலூர் ஆகிய இடங்களில் இந்த அரசு நிறுவியுள்ளது.

நவீன சமூகத்தில், குடும்பங்களில் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்க்கும் குடும்ப நீதிமன்றத்தைச் சென்னைக்கு அடுத்தபடியாக மதுரையிலும் இந்த அரசு ஏற்படுத்தியுள்ளது.

மலைவாசிகள் பழங்குடி மக்கள் பயன்பெற்றிட கொடைக்கானல், கோத்தகிரி ஆகிய இரு நகரங்களிலும் இரண்டு நீதிமன்றங்களை இவ்வரசு அமைத்துள்ளது.

இவை தவிர சந்தனக்கட்டை கடத்தல் வழக்குகளை விசாரிக்க வட ஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டம் திருப்பத்தூரில் ஒரு நீதிமன்றம் அமைக்கப்பட்டது. இதேபோன்று சேலத்தில் ஒரு நீதிமன்றம் அமைக்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் பாதுகாப்புக்கு எதிரான குற்றங்கள் மற்றும் பயங்கரவாத நடவடிக்கைகளை விசாரிக்கவும் இத்தகைய செயல்களில் ஈடுபடுவோரை அடைத்து வைக்கவும் தமிழக அரசு பல முக்கிய நடவடிக்கைகளை மிகக் கருத்தோடும் கவனத்தோடும் செயல்படுத்தி வருகிறது.

செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம் பூவிருந்தவல்லியில் ஒரு தனித்தன்மை வாய்ந்த நீதிமன்ற வளாகம்-விசேட சிறை - இவை ரூ.49 இலட்சம் செலவில் மிகக் குறுகிய காலத்தில் கட்டப்பட்டு செயல்பட்டு வருகிறது.

பயங்கரவாதக் குற்றங்களை விசாரிக்கவும் தனித்தன்மை வாய்ந்த நீதி அமைப்புகளைத் தமிழக அரசு நிறுவியிருக்கிறது.

இதேபோல சென்னை உயர்நீதி மன்றம் தொடங்கி பல்வேறு மாவட்டங்களில் உள்ள நீதிமன்றங்கள் வரை பல இடங்களில் புதிய கட்டடங்கள் தொடர்ந்து கட்டப்பட்டு வருகின்றன.

சட்டத்தின் பயன் ஏழைகளுக்கு, நலிந்த மக்களுக்கு, ஏழைத்தாய்மார்



களுக்கு எளிதில் கிடைக்கச் செய்ய வேண்டும் என்பதில் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் அரசு மிகுந்த முனைப்புடன் செயல்பட்டு வருவதற்கு ஏராள சான்றுகள் உள்ளன.

அவற்றில் ஒன்றுதான் முற்றிலும் பெண்களைக் கொண்டு இயங்கும் காவல் நிலையங்களை அமைத்திருப்பது ஆகும். சென்னையில் ஆயிரம் விளக்கில் அமைந்துள்ள மகளிர் காவல் நிலையம்-தாய்மார்களுடைய குறைகளைத் தீர்ப்பதிலும் - பெண்களுக்குப் பாதுகாப்பு நம்பிக்கை இவற்றை அளிப்பதிலும் வழிகாட்டியாக, முன்னோடியாகத் திகழ்கிறது.

இதேபோன்று மாவட்டத் தலை நகரங்களில் முழுவதும் பெண் காவலர்களைக் கொண்ட காவல் நிலையங்களை அமைத்திட மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

இதன்வாயிலாக - நலிந்த பிரிவினருக்கு, குறிப்பாக ஏழைத் தாய்மார்களுக்கு உடனடித் தீர்வுகள் கிடைக்க வழி ஏற்படும்.

டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுடைய சிறப்புமிக்க ஆட்சியின் மற்றுமொரு முனைப்புத் திட்டம் நீதித்துறையில் பணியாற்றுகிறவர்களுக்குப் பயிற்சி வழங்கும் திட்டமாகும்.

மக்கள் தொகைப் பெருக்கத்தினாலும் பல்வேறு நிலவரங்கள் சூழ்நிலைகள் காரணமாகவும் கிரிமினல் குற்றங்களின் விசாரணைகள் மிகுந்த முக்கியத்துவம் பெற்றுவிட்டன. எதேச்சையான செயல்கள் நடவடிக்கைகள் எடுக்கப்படும்போது-எவரும் விரும்பாத வகையில் குற்றவாளிகள் தப்பிவிட நேரலாம்.

இந்த நிலையைத் தடுக்க - சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு உரிய பயிற்சி அளிக்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

குற்றங்களைப் பதிவு செய்யும் காவல்துறையினர் - வழக்குகளை நடத்தும் அரசுத் தரப்பு வழக்கறிஞர்கள் - வழக்குகளை விசாரிக்கும் பல்வேறுமட்ட நீதிபதிகள் ஆகியோருக்குப் பல நடைமுறைகள், இப்பயிற்சியின் வாயிலாக விளக்கப்படுகின்றன.

சட்டத்தின் தன்மை - சட்டத்தின் வரம்பு - தண்டனைகளின் விவரம் நீதிமன்ற வரம்புகள் இவைபற்றி முழு அளவு தகவல் தெரிந்துகொண்டால் வழக்குகளைப் பதிவு செய்வது, விசாரிப்பது,

வழக்குத் தொடுப்பது
வாதாடுவது
தீர்ப்புக் கூறுவது

ஆகிய பல நிலைகளில் விவரமான முறையில் - செம்மையாகவும் சிறப்பாகவும் செயல்பட முடியும். வழக்குகள் தள்ளுபடி என்ற நிலையோ - சட்டத்தின் சந்துபொந்துகளைப் பயன்படுத்திக் கொண்டு குற்றவாளிகள் தப்பிக்கும் நிலையோ ஏற்படக்கூடாது என்பதில் இன்றைய தமிழக அரசு மிகத் தீவிரமான கவனம் செலுத்திவருகிறது.

அடுத்து நீதித்துறையின் செலவுகளுக்கான நிதி ஒதுக்கீடு இதுவரை திட்டமில்லாத செலவாகக் கணக்கிடப்பட்டு வந்தது.

மக்களின் அன்றாடத் தேவைகள் மற்றும் ஆதாரத் தேவைகள் போல நீதி பரிபாலனமும் ஒரு இன்றியமையாத துறை; எனவே, இதற்கான நிதி ஒதுக்கீட்டையும் திட்டம் சார்ந்த செலவாகவே கணக்கிட வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் தொடர்ந்து வாதாடி வலியுறுத்தினார்கள். இதன் பயனாக நீதித்துறைக்கான நிதி ஒதுக்கீடும் திட்டம் சார்ந்த செலவாக இன்று ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. இது டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுடைய அரசின் பெரும் வெற்றியாகும்.

இந்த வெற்றியின் அடிப்படையில் 8-வது ஐந்தாண்டுத்திட்டத்தின் எஞ்சியுள்ள 4 ஆண்டுகளுக்கு என ஒரு திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மைய அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. நீதிமன்றங்களின் மேம்பாட்டுக்கென ரூ.123 கோடிக்கான திட்டங்கள் தீட்டப்பட்டு மைய அரசிடமிருந்து 50 சதவிகித உதவித் தொகை பெறவாய்ப்பாக இந்த முயற்சி அமையும்.

அப்படி அமையும்போது நீதிமன்றத்துக்குத் தேவைப்படுகிற அனைத்து வசதிகளையும் செய்ய இயலும் - நீதிமன்றத் துறையில் ஒரு புதிய சகாப்தம் எழுந்திடும்.



> சட்டத்தில் பெண்களுக்குப் போதிய பாதுகாப்பு வழங்கப்பட்டு இருந்தபோதிலும், தனிப்பட்ட தங்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண, அவர்கள் காவல் நிலையத்தை அணுகுவது-அரிது. ஏனெனில், ஆண்களே பெரும்பாலும் பணிபுரியும் காவல் நிலையங்களில், தங்களது சோகக் கதையை, வெளிப்படையாக ஒளிவு மறைவின்றி எடுத்துச் சொல்லத் தயங்குகிறார்கள். எனவே, அங்கு செல்வதையே தவிர்க்கிறார்கள். எனவே, தலைவிதி இதுதான் என்று நொந்து, தங்கள் வாழ்க்கையைத் தொடர்கிறார்கள். இந்த அவல நிலையைப் போக்க வேண்டுமென்று எங்கள் அரசு கொண்டுள்ள எண்ணத்தின் வெளிப்பாடாகத்தான் 'மகளிர் காவல் நிலையங்கள்' உருவாக்கப்பட்டுள்ளன.

சிறைத்துறை நிர்வாகத்தைப் பொறுத்தவரை - கைதிகளாகச் சிறைக்குள் வருகின்றவர்கள் - தண்டனை முடிந்து வெளியேறிய பிறகு திருந்தி வாழ வாய்ப்புத் தரவேண்டும் என்பதே டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுடைய ஆட்சியின் கொள்கை.

சிறைகளை நவீன மயமாக்கல், கண்காணிப்புகளைப் பலப்படுத்துதல்-சிறை அலுவலர், ஊழியர் பணிகளைச் செம்மைப்படுத்துதல் - கைதிகளின் தேவைகளை மனிதாபிமானக் கண்ணோட்டத்தில் கவனித்தல் இவையெல்லாம் இந்த அரசின் சீரிய செயல்பாட்டுத் திட்டங்கள் ஆகும்.

பல்வேறு அடிப்படைகளைப் பரிசீலனை செய்த பிறகு - தண்டனைக் காலம் - குற்றங்களின் தன்மை - சிறையில் நன்னடத்தை - போன்ற பல அம்சங்களைச் சீர்தூக்கிப் பார்த்த பிறகு கைதிகளுக்குப் பொது மன்னிப்பு வழங்கப்பட்டு (மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பிறந்த நாள் விழாவை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டு) விடுவிக்கப்படுகிறார்கள். இது ஒரு குறிப்பிடத்தக்க மனிதாபிமான நடவடிக்கையோடு மட்டுமின்றி, சிறைவாசம் என்கிற பெயரில் ஒரு தீயநிழல் கைதிகளின் வாழ்வில் படிந்துவிடக் கூடாது என்கிற நல்லெண்ண வெளியீடு ஆகும்.

சிறையில் இருந்து வெளியேறும் கைதிகளுக்குத் தொழில் செய்யக் கருவிகள் வழங்குவதற்கான நிதி ஒதுக்கீடும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதேபோலக் கைதிகளின் மறுவாழ்வுக்கு இந்த அரசு ரூபாய் பத்து இலட்சம் ஒதுக்கி சாதனை புரிந்துள்ளது.

இப்படி நீதிபரிபாலனம் சட்ட அமல் - சிறை போன்ற - பல்வேறு துறைகள் சமூக நீதி - மனிதாபிமானம் ஆகிய குறிக்கோள்களுடன் செயல்பட்டு வருகிறது.

நலிந்த பிரிவினர்-தாய்மார்கள்-ஏழை எளிய மக்களுக்கு விரைவாக-சிக்கனமாக எளிய முறையில் நீதி கிடைக்க வேண்டும் என்பதே டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுடைய வழிகாட்டும் நெறி.

அந்த நெறியினைப் பேணிடும் வண்ணம் கடந்த இரண்டு ஆண்டுகளில் நீதிபரிபாலனத்துறை, சட்டத்துறை, சிறைத்துறை இவற்றின் செயல்பாடுகள் சமூக நீதிக் கண்ணோட்டத்துடன் இயங்கி வருவது தமிழகமே பெருமைப்படக்கூடிய ஒன்றாகும். டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய சீரிய தலைமையில் சட்டம் மற்றும் நீதிபரிபாலனத்துறையும் அகில இந்தியாவுக்கும் வழிகாட்டத்தக்க வகையில் வெற்றிகளைக் குவித்து புதிய சகாப்தத்தைப் படைத்து வருகிறது.

பரமத்தி வேலூர் .. (சேலம் மாவட்டம்), ராதாபுரம் (திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம்)

பரமக்குடி வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகம் (இராமநாதபுரம் மாவட்டம்) ரூ.33 இலட்சம் செலவில் கட்டுவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## வருவாய்த்துறை

தென்னார்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவருக்குக் குடியிருப்பு மாளிகை முகாம் அலுவலகம் கட்ட ரூ.22.39 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்பளிப்பு வழங்கப்பட்டு உள்ளது. வருவாய் ஆய்வாளர்களுக்குக் குடியிருப்பு வீடுகள் கட்ட நிர்வாக ஒப்பளிப்பு அளிக்கப்பட்டுள்ளது.

ஐந்து வட்டாட்சியர் அலுவலகங்களுக்குக் கூடுதல் கட்டடங்கள் கட்ட நிர்வாக ஒப்பளிப்பு வழங்கப்பட்டு உள்ளது.

இரண்டு வட்ட அலுவலகங்களுக்குப் புதிய அலுவலகக் கட்டடங்கள் ஒவ்வொன்றும் ரூ.46 இலட்சம் செலவில் கட்டுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டது.

கொடைக்கானல் கோட்டாட்சியருக்கும், பரமத்தி வேலூர் வட்டாட்சியருக்கும் குடியிருப்புகள் கட்ட ரூ.8.27 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்பளிப்பு வழங்கப் பட்டு உள்ளது.

திண்டுக்கல்லில் அரசு விருந்தினர் மாளிகை கட்ட அனுமதி வழங்கப்பட்டு உள்ளது.

திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகப் பெருந்திட்ட வளாகம் அமைக்கும் பணிக்குச் சுமார் 30.34 ஏக்கர் புறம்போக்கு நிலத்தைப் பயன்படுத்திக் கொள்ள அரசு அனுமதி வழங்கப்பட்டு உள்ளது.

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்ட ஆட்சித் தலைவர் பெருந்திட்ட வளாகம் அமைக்கும் பணிக்கு சுமார் 137 ஏக்கர் பட்டா நிலம் 33 நாகூர் கிராமத்தில் கையகப்படுத்த நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## 1993-94-ஆம் ஆண்டுக்கான புதிய திட்டப் பணிகள் விவரம்

திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குக் கூடுதல் கட்டடம் கட்ட ரூ.60 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்பளிப்பு வழங்கி உள்ளது.

தருமபுரி மாவட்டத்தில் ஊத்தங்கரை மற்றும் அரூர், நீலகிரி மாவட்டத்தில் கூடலூர், கன்னியாகுமரி மாவட்டத்தில் விளவங்கோடு ஆகிய இடங்களில் வட்ட அலுகலகங்களுக்குக் கட்டடங்கள் கட்டுவதற்கு ரூ.9.20 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்பளிப்பு வழங்கி உள்ளது.

கோயம்புத்தூர் (வடக்கு), கன்னியாகுமரி மாவட்டத்தில் தோவாளை, இராமநாதபுரம் மாவட்டத்தில் முதுகுளத்தூர் ஆகிய இடங்களில் புதிய வட்ட அலுகலகங்கள் கட்ட ரூ.168 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்பளிப்பு வழங்கி உள்ளது.

மலைப் பகுதிகளில் உள்ள கிராம நிருவாக அலுவலர்களுக்கு 25 குடியிருப்பு இல்லங்கள் கட்டுவதற்கு ரூ.50 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்பளிப்பு வழங்கி உள்ளது.





★ கடமைகளை இன்முகத்துடன் ஆற்றி உரிமைகளைப் பெற்றிடுவோம்! அமைதியும், ஒற்றுமையும் காத்து வளர்ச்சிக்கு வழி வகுப்போம்! புதிய சமத்துவ சமதர்ம அமைப்புக்காகத் தொடர்ந்து பாடுபடுவோம்!

குறிப்பாகப் பெண் அலுவலர்கள் பயன்படுத்துவதற்காக அனைத்து வட்ட அலுகலகங்களிலும் கழிவறைகளைக் கட்டுவதற்காக ரூ.23 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்பளிப்பு வழங்கி உள்ளது.

## மாவட்டப் பிரிவினை

அரசின் நலத் திட்டங்களின் பலன்கள் மக்களுக்கு விரைவில் கிடைத்திடவும், மக்கள் மாவட்ட ஆட்சியர் மற்றும் இதர அதிகாரிகளை நேரில் சந்தித்து, தங்கள் குறைகளைத் தெரிவிக்க அதிகதூரம் சென்று நேரத்தை வீணாக்குவதைத் தவிர்க்கவும் பெரிய அளவிலுள்ள மாவட்டங்களை அதன் அளவைப் பொறுத்து இரண்டு அல்லது மூன்றாகப் பிரிக்கப்பட்டு வருகிறது.

தமிழகத்திலுள்ள பெரிய மாவட்டங்களில் ஒன்று தென்னார்க்காடு மாவட்டம் ஆகும். மாண்புமிகு புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்ற பிறகு, தென்னார்க்காடு மாவட்டத்தினை இரண்டாகப் பிரிவினை செய்து ஆணை பிறப்பித்துள்ளார். தென்னார்க்காடு மாவட்டத்தினைக் கீழ்க்கண்ட பெயர்களில் இரு மாவட்டங்களாகப் பிரிக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

1. தென்னார்க்காடு-வள்ளலார் மாவட்டம் (இருப்பு) கடலூர்.

2. விழுப்புரம்-இராமசாமி படையாட்சியார் மாவட்டம் (இருப்பு) விழுப்புரம்.

## இலவசப் புடவை வேட்டி வழங்கும் திட்டம்

தமிழ்நாட்டில் முதன் முதலாக 1992-ஆம் ஆண்டுதான் பொங்கல் பண்டிகைக்கு நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள குடிசைவாசிகளுக்கு இலவசமாகப் புடவை வேட்டி வழங்கும் திட்டம் கொண்டுவரப்பட்டது. இத்திட்டத்தில் 60 இலட்சம் பெண்களும், 60 இலட்சம் ஆண்களும் பயன்பெற்றனர். 1993-ஆம் ஆண்டும் 60 இலட்சம் புடவைகள், 60 இலட்சம் வேட்டிகள் வழங்கப் பட்டன.

## வருவாய் நிருவாகத்துறை

## புயல் மற்றும் வெள்ள நிவாரணப் பணிகள்

1991-92-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் ஏற்பட்ட புயல் மற்றும் வெள்ள நிவாரணத்திற்காக ரூ.36.05 கோடி நிதி ஒதுக்கீடு செய்து செலவழிக்கப்பட்டது. 1992-93-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் ஏற்பட்ட புயல் மற்றும் வெள்ள நிவாரணத்திற்காக ரூ.106.42 கோடி நிதி ஒதுக்கீடு செய்து செலவழிக்கப்பட்டது.

## வறட்சி நிவாரணப் பணிகள்

1991-92-ஆம் ஆண்டில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் குடிநீர்ப் பஞ்சத்தை போக்க ரூ.8.69 கோடி நிதி ஒதுக்கீடு செய்து செலவழிக்கப்பட்டது.

1992-93-ஆம் ஆண்டு வறட்சி நிவாரணப் பணிகளுக்காக ரூ.14.02 கோடி நிதி ஒதுக்கீடு செய்து செலவழிக்கப்பட்டது.

1993-94-ஆம் ஆண்டு வறட்சி நிவாரணப் பணிகளுக்காக ரூ.7 கோடி இதுவரை ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

## ஆக்கிரமிப்பு அகற்றல்

நீர் நிலை புறம்போக்கு நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்பு அறவே தடை செய்யப்பட வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு மாவட்ட ஆட்சியர்களால் ஆயக்கட்டுதாரர்களின் உரிமைகளைப் பாதுகாத்து விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கும், நீர் வளத்தைப் பேணிப் பாதுகாக்கவும் ஆக்கிரமிப்பு உடனுக்குடன் அகற்றப்பட்டு வருகின்றன.

ஆட்சேபணையற்ற ஆக்கிரமிப்புகளை வரன்முறைப் படுத்தவும், ஆட்சேபணையுள்ள ஆக்கிரமிப்புகள் உடனுக்குடன் அகற்றவும்படுகின்றன.

1992-93-ஆம் ஆண்டில் மாநில அளவில் 40,460 ஆட்சேபணையுள்ள பல்வேறு ஆக்கிரமிப்புகள் அகற்றப் பட்டு 18,000 ஏக்கர் நிலம் அரசால் மீள அகற்றப்பட்டது.

### மூன்று ஆண்டுகளில் வீட்டுமனை பெற்றவர்கள் விவரம்

தமிழக அரசு மாநிலத்தில் உள்ள அனைத்து வீட்டு மனையற்ற ஏழை எளியவர்களுக்கு மூன்று ஆண்டுகளுக்குள் மனை வழங்க முடிவெடுத்துள்ளது. அதன் அடிப்படையில் அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும் மாவட்டங்களில் வீட்டுமனையற்றவர்களின் விவரங்கள் சேகரிக்கக் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

அதன் அடிப்படையில் இவ்வாண்டு சுமார் 30 சதவிகிதத்தினருக்கு வீட்டுமனைப்பட்டா வழங்க மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். 1993-94-ஆம் ஆண்டு, 1.75 இலட்சம் வீட்டுமனை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.



★ சேவை என்பது மற்றவர்கள் நன்மை அடைவதைப் பார்த்து மகிழ்ச்சியும், திருப்தியும் அடைவதற்காகவே செய்யப்படும் காரியம்.

### கடந்த இரண்டு ஆண்டுகளில் (1991-92 மற்றும் 1992-93) ஏழை எளிய மக்களுக்கு வழங்கப்பட்ட வீட்டுமனைப் பட்டா குறித்த விவரம்

1991-92-ஆம் ஆண்டின் குறியீடு 4,56,000 - சாதனை அளவு 4,60,000.

1992-93-ஆம் ஆண்டின் குறியீடு 2,75,000 - சாதனை அளவு 3,06,000

மொத்தக் குறியீடு 7,31,000 - சாதனையளவு 7,66,000.

### சாகுபடி செய்ய வழங்கப்பட்ட நிலப்பட்டா குறித்த விவரம்.

1991-92-ஆம் ஆண்டின் குறியீடு 5,500 (ஏக்கர்) - சாதனை அளவு 7,017

1992-93-ஆம் ஆண்டின் குறியீடு 5,500 - சாதனை அளவு 6,898

மொத்தக் குறியீடு 11,000 - சாதனையளவு 13,915.

### சாகுபடி செய்ய வழங்கப்பட்ட நிலப்பட்டா குறித்த விவரம்.

**நிலச்சீர்திருத்தத் துறை**

**மிகை நிலமாக அறிவிக்கப்பட்ட பரப்பு**

1991-92-ஆம் ஆண்டில் 3,720 ஏக்கர்; 1992-93-ஆம் ஆண்டில் 2,259 ஏக்கர்; 1993-94 (மே திங்கள் 1993 முடிய) 189 ஏக்கர். ஆக மொத்தம் 6,168 ஏக்கர்.

**மிகைநில ஒப்படைப்பு**

1991-92-இல் 2,500 ஏக்கர் குறியீடு. இதில் 4,524 ஏக்கர் சாதனைபடைக்கப்பட்டுள்ளது.

1992-93-இல் 2,500 ஏக்கர் குறியீடு. 3,444 ஏக்கர் சாதனைபடைக்கப்பட்டுள்ளது.

1993-94 (1993 மே திங்கள் முடிய) 2,500 ஏக்கர் குறியீடு; இதில் 265 ஏக்கர் சாதனை படைக்கப் பட்டுள்ளது.

மொத்தம் 8,233 ஏக்கர் சாதனை படைக்கப் பட்டுள்ளது.

**பயனடைந்தோர் விவரம்**

| ஆண்டு | பயனடைந்தோர் வகையினர் | பயனடைந்தோர் எண்ணிக்கை | ஒப்படை செய்யப்பட்ட பரப்பு (ஏக்கரில்) |
|---|---|---|---|
| 1991-92 | ஆதிதிராவிடர் | 1652 | 1455 |
| | ஏனையோர் | 2545 | 3069 |
| | | 4197 | 4524 |
| 1992-93 | ஆதிதிராவிடர் | 1246 | 1157 |
| | பழங்குடியினர் | 81 | 85 |
| | ஏனையோர் | 1872 | 2202 |
| | | 3199 | 3444 |



ஏழைகளைக் கண்ணால் பார்ப்பதை விட, இதயத்தால் பார்க்க வேண்டும்', என்ற புரட்சித் தலைவரின் கொள்கைப்படி உதயமானது தான், நாங்கள் இன்றைக்கு நிறை வேற்றியுள்ள, ஒரு கோடியே 20 இலட்சம் நிலமற்ற ஏழை எளியோருக்கான இலவச வேட்டி-சேலைத் திட்டமாகும்.

| | | | |
|---|---|---|---|
| 1993-94 | ஆதிதிராவிடர் | 37 | 51 |
| | ஏனையோர் | 137 | 214 |
| | மொத்தம் | 174 | 265 |

**மிகைநில ஒப்படைப்பில் சுவாதீனம் பெற்றவர்கள்**

| ஆண்டு | ஏக்கரில் |
|---|---|
| 1991-92 | 12,291 |
| 1992-93 | 6,554 |
| 1993-94 (1993 மே திங்கள் முடிய) | 320 |
| | 19,165 |

மிகைநில ஒப்படை பெற்றவர்களின் முன்னேற்றத்திற்காக நிதி உதவி செய்யப்படுகின்றது.

இத்தொகை மத்திய மற்றும் மாநில அரசுகளால் சரிசமமாக ஒதுக்கீடு செய்யப்படுகின்றது.

**1991-92 மற்றும் 1992-93-இல் பயனடைந்தோர் விவரம் வருமாறு:**

1991-92-ஆம் ஆண்டில் மொத்த முதலீடு-34, செலவு-34, ஆதிதிராவிடர்-1478, மற்றவர்கள்-1851, மொத்தம்-3329, பயனடைந்தோர் அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்ட பரப்பளவு-3400.

1992-93-ஆம் ஆண்டில் மொத்த முதலீடு-24, செலவு-24-04, ஆதிதிராவிடர்-986, பழங்குடியினர்-30, மற்றவர்கள்-1310, மொத்தம்-2326, பயனடைந்தோர் அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்ட பரப்பளவு-2404.

### நில அளவை மற்றும் பதிவுருக்கள் துறையின் கடந்த இரண்டு ஆண்டு சாதனைகள்

தமிழ்நாட்டில், நில அளவைப் பதிவுருக்கள் கட்டுமானம், 1923- ஆம் ஆண்டு தமிழ்நாடு நில அளவை மற்றும் எல்லைச் சட்டம் 8 என்ற தனிச் சட்டத்தின்கீழ் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

சந்தேகத்திற்கோ, குழப்பத்திற்கோ இடமற்ற வகையில் நில உடமைகள் புலத்தின் அடையாளம் காணப்பட்டு, புலத்தின் சரியான இலக்கும் அதன் பரப்பளவும் வரையறுக்கப்படுகின்றன.

விற்பனை, பாகப்பிரிவினை, உரிமை வழி மாற்றம் மூலம் அன்றாடம் ஏற்பட்டு வரும் பதிவு மாற்றங்களைக் கிராம ஆவணங்களில் மேற்கொண்டும், நில அளவைக் கட்டுமானத்தைப் பராமரித்தும் வருவதுடன், தேவைக்கேற்ப, விவசாய நிலங்கள் மற்றும் நகர்ப்புறங்களிலும் நில அளவைப் பணி மேற்கொள்கிறது.



நிலச்சீர்திருத்தத்திற்கும், விவசாய, பொருளாதார வளர்ச்சிக்கும் நில உடமைகள் மேம்பாடு ஓர் அடிப்படைத் தேவையாகும். இதனைக் குறிக்கோளாகக் கொண்டு பின்வரும் திட்டங்கள் இம்மாநிலத்தில் அமல் செய்யப்பட்டு வருகின்றன.

நத்தம் நில அளவை மற்றும் விவசாயத்திற்குப் பயன்படுத்தாது பிற இனங்களில் உபயோகப்படுத்தப்படும் விவசாய நிலங்களை அளத்தல்:

**நகரியம், நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் நகர அளவை செய்தல்:**

மலைக் கிராமங்கள் அளவை செய்தல்.
நத்தம் அளவை:

இத்திட்டப்பணி சென்னை மற்றும் நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக, மாநிலத்தின் இதர மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தினால் பயனடைந்தோர் தமது குடியிருப்பு உரிமைகளைப் பெறுவதோடன்றி, வங்கிக் கடன் போன்ற சலுகைகளையும் பெற வாய்ப்புள்ளது.

இப்பணி இம்மாநிலத்தில் 163 வட்டங்களில் 16,800 கிராமங்களில் மேற்கொள்ளப்படவுள்ளது. இதுவரை 156 வட்டங்களில் 16,246 கிராமங்களை 3,972 ச.கி.மீ. பரப்பில் பணி எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இதுவரை மொத்தம் 3,890 ச.கி.மீ. பரப்பில் அளவைப் பணி முடிக்கப்பட்டுள்ளது.

### நகர அளவை

3 மாநகராட்சி மற்றும் 106 நகராட்சிகளையும் உள்ளடக்கி சுமார் 2,300 ச.கி.மீ. பரப்பில் பணி மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இதுவரை 1,100 ச.கி.மீ. பரப்பை உள்ளடக்கி 3 மாநகராட்சி மற்றும் 61 நகராட்சிகளில் பணி இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனில் மொத்தம் 729 ச.கி.மீ. பரப்பு அளவைப் பணி இதுவரை முடிக்கப்பட்டுள்ளது.

தனி அலுவலர் இறுதித் தணிக்கைப்பணி 8 நகரங்களில் முன்னேற்றத்தில் உள்ளது.

### மலைக் கிராம அளவைப் பணி

பின்தங்கிய பகுதி மக்களாகிய ஆதிவாசிகள் நல வாழ்வு திட்டமாக மலைக்கிராம அளவைப்பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்மூலம் சமன் பகுதிகளில் உள்ள நில உடைமைகளுக்கு இணையாக மலைப் பகுதிகளில் உள்ள நில உடைமையாளர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட நில உடைமைகள் நாளது வரை கொணரப்பட்டுள்ளது.

அதனுடன் சட்ட விரோதமான ஆக்கிரமிப்புகள் தவிர்க்கப்படுகிறது. மேலும், மலைவாழ் மக்களால் இதுகாறும் செய்து வந்த சிவஜமா சாகுபடியினை ஒழுங்கு படுத்த வகை செய்கிறது.

இப்பணி ஏலகிரி மலை, ஜவ்வாது மலை, கொல்லி மலை, அரநூத்து மலை, பச்சை மலை மற்றும் ஆனை மலை ஆகிய ஆறு மலைகளில் 904 ச.கி.மீ. பரப்பை



உள்ளடக்கி 66 கிராமங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதுவரை 767 ச.கி.மீ. பரப்பில் அளவைப் பணி முடிக்கப்பட்டுள்ளது.

மேலும் நீலகிரி மாவட்டம் உதகமண்டலம் நகரத்தில் வருவாய்ப்பின் தொடர்பணி மேற்கொள்ளப்பட்டு 30 ச.கி.மீ. பரப்பில் பணி முடிக்கப்பட்டுள்ளது. இதன்கீழ் 8,502 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

### பட்டா பதிவுப் புத்தகத் திட்டம்

பட்டா பதிவுப் புத்தகத் திட்டம் முதல் கட்டமாக 1.4.93 முதல் இம்மாநிலத்தில், ஆறு மாவட்டங்களில் (வடஆர்க்காடு- அம்பேத்கர், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், மதுரை மற்றும் சிதம்பரனார் மாவட்டங்கள்) செயல்படுத்தப்படுகிறது.

இப்புத்தகம் எவர் பெயரில் வழங்கப்பட்டுள்ளதோ, அவர் பெயருக்கு அந்நிலத்தின் உரிமைக்கு ஒரு சான்றாகவும், அவருக்குச் சொந்தமான நிலத்தின் விவரங்களுடன் அதனில் குறிக்கப்பட்ட வில்லங்கள் சான்று ஆவணமாகவும் பயன்படுகிறது. இது வருவாய் நிர்வாகத்திற்கு ஒரு அடிப்படை ஆதார ஆவணமாகவும், பலவகை அபிவிருத்திச் செயல்பாடுகளுக்கு முதுகெலும்பாகவும் உள்ளது.

இத்திட்டத்தின் கீழ் பட்டாப் பதிவுப்புத்தகம் ஒவ்வொரு பட்டாதாரருக்கும், அவ்வட்டத்தில் அவருக்குச் சொந்தமான நிலங்கள் அனைத்தின் விவரங்களுடன் வழங்கப்படுகிறது.

### நிலப்பதிவுருக்கள் கணினிமயமாக்குதல்

நிலப்பதிவுருக்கள் மேம்படுத்துதல் மூலம் மாவட்ட நிர்வாகத்தை நவீனமாக்கும் தொடர் திட்டத்தின் ஒரு பகுதியாகச் சேலம் மாவட்டத்தில் நிலப்பதிவுருக்களை கணினிமயமாக்கும் ஒரு முன்னோடித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இதற்கென 20 கணினிபொறிகள் ரூ.25 இலட்சம் மதிப்பில் வாங்கப்பட்டுள்ளன. குறிப்பிட்ட 9 கிராம கணக்குகளுக்கும் மற்றும் 15 வட்டப் பதிவேடுகளும் கணினிமயமாக்கப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

TNPSC

விளம்பர எண்.23/93

கீழ்க்காணும் பதவிகளுக்கு நேரடித் தேர்வின் மூலம் நியமனம் செய்யப்பட ஆதிதிராவிட வகுப்பினர்/பழங்குடி வகுப்பினர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் 19.7.1993 அன்று மாலை 5.45 மணி வரை வரவேற்கப்படுகின்றன. (இக்காலியிடங்கள் ஆதிதிராவிட வகுப்பினர்/பழங்குடி வகுப்பினர்களுக்கான நிலுவையில் உள்ள காலியிடங்களாகும்).

1. தமிழ்நாடு மாநில கருவூல மற்றும் கணக்குகள் பணியில் மூன்றாவது நிலை பதவி (அதாவது கணக்கு அலுவலர்கள் முதலியன)
(Class III Posts Viz. Accounts Officers etc.)

**சம்பளம்:** மாதம் ஒன்றுக்கு ரூ.2,200-75-2,800-100-4,000.

**காலியிடங்கள்:** 4

**வயது:** வயது வரம்பு இல்லை.

**தகுதி:** 3.6.1993 அன்றுள்ளபடி கீழ்க்காண்பவை அல்லது அவைகளுக்கு இணையானவை:

A Pass in the final examination conducted by the Institute of Charted Accountants/Cost Accountants.

2. தமிழ்நாடு வேளாண் விரிவாக்கப் பணியில் வேளாண் அலுவலர் (விரிவாக்கம்).
(Agricultural Officer (Extension)

**சம்பளம்:** மாதம் ஒன்றுக்கு ரூ.1,640-60-2,600-75-2,900.

**காலியிடங்கள்:** 21

**வயது:** வயது வரம்பு இல்லை.

**தகுதி:** 3.6.1993 அன்றுள்ளபடி கீழ்காண்பவை அல்லது அவைகளுக்கு இணையானவை.

i) A Bachalors degree in Agriculture; and
ii) Must possess adequate knowledge of Tamil.

**Explanation:** For this purpose, a person will be deemed to possess and aequate knowledge of Tamil, if he has passed the SSLC Public Eamination or its equivalant examination with Tamil as one of the languages or studied the High School Course in Tamil Medium and passed the SSLC Public Examination in Tamil Medium or passed the second class language test in Tamil conducted by the Tamil Nadu Public Service Commission.

(Note: under para 7 of the Commission's 'Instruction etc. to Candidates' will not apply to this recreuitment.)

**Common to both posts:**

**Note:** 'Destitute Widows' who possess the prescribed qualification and are found fit by getting the minimum for selection will be selected in preference to otheres who have secured even higher marks.

**Explanation:** 'Destitute Widow' means a widow who has neither any means by herself to live nor any dependent to protect her from starvation.

ஆதிதிராவிட வகுப்பினர்/பழங்குடி வகுப்பினர்களைச் சேர்ந்த தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர், போன்றவர்களுக்கு தகுதியிலிருந்து அளிக்கப்படும் சலுகைகள் தேர்வாணையத்தின் 'பணி வேட்பாளர்களுக்கான விதிமுறை'களில் தரப்பட்டுள்ளன.

விண்ணப்பப் படிவமும், நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு எழுத்து மூலம் கோரிப் பெற்றுக் கொள்ளலாம். கோரிக்கைகள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ பதவியின் பெயர், விளம்பர எண் மற்றும் இனத்தின் எண் ஆகியவற்றைக் குறிப்பிட்டு எழுதப்பட்டு செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு வழங்கக்கூடிய 1.6.1993 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10) சென்னை அண்ணாசாலை தபால் அலுவலகத்தில் செலுத்தத்தக்க கோடிட்ட அஞ்சல் ஆணை அல்லது பாரத ஸ்டேட் வங்கியில் (State Bank of India) ஏதாவதொரு கிளையில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையச் செயலாளருக்கு வழங்கக்கூடிய 1.6.1993 அன்றோ அல்லது அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட சென்னை-600 006 ஆயிரம் விளக்கு, பாரத ஸ்டேட் வங்கியில் செலுத்தத்தக்க பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10) 'கேட்புக் காசோலை' (Demand Draft)-யுடன் சுயவிலாசம் எழுதிய உறையுடனும் (26 x 12 செ.மீ.) அனுப்ப வேண்டும். கோரிக்கைகள் பிற மொழியில் இருக்குமாயின் அத்துடன் ஆங்கில மொழிபெயர்ப்பும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டா.

**குறிப்பு:** ஒவ்வொரு பதவிக்கும் பத்து ரூபாய்க்கான அஞ்சல் ஆணை அல்லது கேட்புக் காசோலையுடன் தனித்தனியாக கோரிக்கைகள் அனுப்பவேண்டும்.

DIPR/929/MS/93



# புரட்சித்தலைவியின் ஆட்சியில் நுகர் பொருள் வழங்குவதில் தமிழ்நாடு முன்னிலை!

மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர்

## திரு. இராம வீரப்பன்

- இந்தியாவிலேயே ரேஷன் அரிசி, தமிழ்நாட்டில்தான் குறைந்த விலையில் வழங்கப்படுகிறது.
- 1992-93-க்கு நிர்ணயிக்கப்பட்ட குறியீட்டை விஞ்சி 18.36 இலட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல்.
- இரண்டாண்டுகளில் 7 இலட்சத்து 35 ஆயிரம் போலி குடும்ப அட்டைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.
- ஒன்றேகால் கோடி குடும்ப அட்டைகள் குறித்த காலத்தில் புதுப்பிக்கப்பட்டிருக்கின்றன.



புகழின் புகழாக, பொன் மனச் செம்மலின் புகழ் மிக்க வாரிசாக விளங்கும் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள், நாடு போற்ற நடத்தி வரும் பொற்கால ஆட்சியின் ஈராண்டு நிறையும் திருநாள் இப் பொன்னாள்.

இந்த இரண்டாண்டுகளில் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் படைத்துக் குவித்திருக்கும் சீர்மிகு சாதனைகள் எத்தனை எத்தனை என்பதை எண்ணிப் பார்த்தால் அவை கணக்கில் அடங்கா!

உணவுத் துறையைப் பொறுத்த மட்டில், தமிழ்நாட்டிலுள்ள அனைத்துக் குடும்பங்களுக்கும் சுமார் ஒரு கோடியே 25 இலட்சம் குடும்ப உணவுப் பொருள் வழங்கல் அட்டைகளைப் புதுப்பித்து வழங்கி, தமிழகத்திலுள்ள 21,985 நியாய விலைக்கடைகள் மூலம் மக்களுக்குத் தேவையான அரிசி, கோதுமை, சர்க்கரை, மண்ணெண்ணெய் போன்ற இன்றியமையாப் பொருட்களைப் புரட்சித்தலைவியின் அரசு முறையாக வழங்கி வருகிறது.

மைய அரசு சராசரியாக மாதந்தோறும் 70,000 டன் அரிசி ஒதுக்கீடு செய்து வருகிறது. பொது விநியோகத் திட்டத்தின் கீழ் மக்களுக்கு வழங்கத் தேவைப்படும் அரிசியின் அளவு 1.45 இலட்சம் டன் ஆகும். எனவே, மைய அரசு நிர்ணயித்துள்ள கொள்முதல் விலையைவிட அதிகமாக குவிண்டாலுக்கு ரூ.35 வீதம் விவசாயிகளுக்கு ஊக்கத் தொகை அளித்து, தமிழக அரசு நெல் கொள்முதல் செய்து வருகிறது. புரட்சித்தலைவியின் அரசு அளிக்கும் இந்த ஊக்கத்தின் காரணமாக, நிர்ணயிக்கப்பட்ட இலக்கையும் விஞ்சி, இவ்வாண்டு ரூ.528.31 கோடி மதிப்புள்ள 18.36 இலட்சம் டன் நெல் கொள்முதல் செய்து சாதனை படைக்கப்பட்டுள்ளது.

மேலும், வர்த்தகர்களிடமிருந்து பெறப்பட்ட லெவியும், மாவட்டங்களுக்கிடையேயான நெல், அரிசிப் போக்குவரத்தில் இருந்த தடையும் துணிச்சலுடன் விலக்கிக் கொள்ளப்பட்டு, வெளி அங்காடியில் அரிசி விலை உயராமல் தடுக்கப்பட்டு, பற்றாக்குறை மாவட்டங்களான தென் மாவட்டங்களிலும் அரிசி



புரட்சித்தலைவி அவர்களின் ஆலோசனை பேரில் தொடங்கப் பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தில் முக்கியக் குறிக்கோள் கிராமப் பகுதிகளில் மருத்துவச் சிகிச்சை வசதிகள் செய்து தருவதாகும்.

இந்த நடமாடும் ரயில் மருத்துவ மனைப் பெட்டியில் எல்லா வசதி களும் செய்யப்பட்டுள்ளன. இத் திட்டத்தில் இளம்பிள்ளைவாத முடம் நீக்கி அறுவைச் சிகிச்சை, கண் புரை நீக்கும் அறுவைச் சிகிச்சை, காது-மூக்கு-தொண்டை அறுவைச் சிகிச்சை போன்ற சிகிச்சை முறைகள் செய்யப்படு கின்றன.

இந்தத்திட்டம் ஒரு மாதம் வரை செயல்படும். இதில் சிகிச்சை பெறு கின்றவர்கள் சிகிச்சை மேற்கொண்டு தேவைப்படுமானால் அருகில் உள்ள அரசு மருத்துவமனைகளில் சிகிச்சை அளிக்கப்படும். இதனால் செங்கல் பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம், வட ஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டம், தர்மபுரி, திருவண்ணாமலை-சம்பு வராயர் மாவட்டங்களைச் சேர்ந்த கிராமப்பகுதி மக்கள் பயன்பெறு வார்கள்.

மாநிலத்தில் அரசு மருத்துவ நிலையங்களுக்கு மருத்துவப் பொருட்கள் கொள்முதல் செய்து வினியோகிப்பதில் சிக்கல் மற்றும் சிரமங்களும் இருந்தது. இதை நீக்கும் பொருட்டு சென்னையைத் தலைமை யிடமாகக் கொண்டு 'தமிழ்நாடு மருத்துவப் பணிக்கழகம்' ஒன்று நிறுவ அரசு ஆணை வழங்கியுள்ளது

மருந்துகளுக்காக 1990-91-இல் ரூ.38.78 கோடியாக இருந்ததை, 1993- 94-இல் ரூ.75 கோடியாக இரண்டு மடங்காக உயர்த்தி உள்ளது டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் அரசு.

பாதிக்கப்பட்ட நோயாளிகளுக் குச் சரியான முறையில் சிகிச்சை அளிக்க சென்னை அரசுப் பொது மருத்துவமனை மற்றும் தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ஆகியவற்றிற்குத் தலா ஒரு முழு உடல் படம் பிடிக்கும் 'ஸ்கேன்னர்' வாங்கப்பட்டுள்ளது.

ஏழை புற்று நோயாளிகள் சிகிச்சை பெறுவதற்கு ஏதுவாகச் சென்னையிலுள்ள அரசுப் பொது மருத்துவமனை மற்றும் காஞ்சிபுரம் காரப்பேட்டை அறிஞர் அண்ணா நினைவுப் புற்று நோய் மருத்துவ மனை ஆகியவற்றிற்குத் தலா ஒரு கோபால்ட் டெலிதெரபி இயந்திரம் வாங்கி நிறுவப்பட்டுள்ளது.

குடும்ப நலத்திட்டத்தை ஏற் போருக்குக் குலுக்கல் முறையில் தங்கப்பதக்கம் வழங்கவும் ஆணை யிடப்பட்டுள்ளது.

50-க்கு மேலும் படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவமனை களுக்கு இரண்டு ஊர்திகள் (ஆம்பு லன்ஸ்) வசதி அளிக்க அரசு முடிவெடுத்துள்ளது. இதன்படி 1991-92-இல் 28 ஊர்திகள் வாங் கப்பட்டு மருத்துவமனைக்கு அளிக் கப்பட்டன. 1992-93-இல் மேலும் 14 ஊர்திகள் வாங்க ஆணையிடப் பட்டுள்ளது.

இதுபோன்று பல்வேறு சாதனை களை டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் அரசு மக்கள் நல்வாழ் விற்கு ஆட்சிப் பொறுப்பேற்ற இரண்டு ஆண்டுகளில் செய்து கொடுத்துள்ளது. இதுபோன்று இன்னும் பல்வேறு சாதனைகளை மருத்துவத்துறையில் செய்து தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் ஆட்சிக்குப் பெருமை சேர்ப்போம்!



**மக்களின் நலன் காக்கவே இந்த அரசு பொறுப்பேற்றுள்ளது. சமுதாயத்தில் ஒதுக்கப்பட்ட - புறக்கணிக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட - பிற்படுத்தப்பட்ட மக்களின் உயர்வுக்கும், மாநிலத்தின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கும் அடிகோலும் எங்கள் அரசு,**



# போக்குவரத்துத் துறையில் புதிய பொலிவு

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்

## திரு. கே.ஏ. செங்கோட்டையன்

- **1000 மக்கள் தொகை கொண்ட ஒவ்வொரு கிராமத்திற்கும் போக்குவரத்து வசதி.**
- **டாக்டர் ஜெ. ஜெயலலிதா போக்கு வரத்துக் கழகம், டாக்டர் அம்பேத்கர் போக்குவரத்துக் கழகம், மகாகவி பாரதியார் போக்குவரத்துக் கழகம் ஆகிய புதிய போக்குவரத்துக் கழ கங்கள் உருவாக்கம்.**
- **மாநிலப் போக்குவரத்துக் கழகங்களில் 1,10,000 தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில் புதிய ஓய்வூதியத் திட்டம்.**



இருண்ட தமிழகத்திற்கு ஒளி விளக்காகவும், தமிழகத் தின் நல்ல திட்டங்களுக்குக் கலங்கரை விளக்காகவும் போக்குவரத்துத் துறையின் சிறப்புக்கும், புகழுக்கும் தூண்டுகோலாகவும்; சாதனைச் சரித்திரம் படைத்துவரும் நம் இதயதெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி ஆட்சியில் -

'எங்கெங்கு நோக்கிலும் வளர்ச்சியடா' என்று குதூ கலிக்கும் அளவுக்குத் தேங்கிக் கிடந்த துறைகளெல்லாம் புத்துயிர் பெற்று பீடுநடைபோட்டுப் பெருமைமிகு வளர்ச்சியை ஈட்டியதும் பொற்புடை நாயகியாம் டாக்டர் புரட்சித்தலைவியின் ஆட்சியிலே தான்.

அன்னை அரியணை ஏறி இருபத்தி நான்கு மாதங் களில் (2 ஆண்டுகளில்) போக்குவரத்துத் துறையில் ஏற் பட்ட வளர்ச்சிகளையும், வழங்கியுள்ள திட்டங்களையும் ஒரு கணம் சிந்தித்துப் பார்க்கிறேன். இதுவரை தமிழகம் கண்டறியாத திட்டங்கள்! இயலுமா? முடியுமா? என்று வினாக்குறிகளாகவே இதுவரை இருந்த திட்டங்களெல் லாம் அன்னையின் ஆட்சியில் அமல்படுத்தப்பட்டு வினாக்குறியெல்லாம் வியப்புக் குறிகளாக ஆக்கிக் காட்டிய வித்தகத் தலைவி நமது முத்தமிழ்த் தலைவி.

அந்த வகையில், அவரது ஆணைப்படி போக்கு வரத்துத் துறையில் ஏற்பட்ட வளர்ச்சிகளை இங்கே தொகுத்துக் கூறுவதில் நான் பெருமை அடைகிறேன்.

பொதுவாகவே தமிழகத்தின் போக்குவரத்துத் துறை இந்தியத் துணைக் கண்டத்திலேயே சிறப்பான இடத்தைப் பிடித்திருந்தாலும், அழகுக்கும் அழகு செய்யும் கைவண் ணமும் கனிவுள்ளமும் கொண்ட காவியத்தலைவி கடந்த 2 ஆண்டுகளில் படைத்த சாதனைகள் பலப்பல.

அவற்றில் சிலவற்றை மட்டுமே இங்கே படைக்க விரும்புகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக் கட்டிலிலிருந்து அகற்றப்பட்டபோது (1991 ஜனவரி 31-ஆம் தேதி இருந்தவாறு) தமிழகப் போக்குவரத்துக் கழகங்கள் 15-ம் இயக்கி வந்த பேருந்துகளின் எண்ணிக்கை 13,594. இவற்றில் சுமார் 1000-க்கும் மேற்பட்ட பேருந்துகள் வளைகுடாப் போரையொட்டி ஏற்பட்ட டீசல் தட்டுப் பாட்டைக் காரணம் காட்டி நிறுத்தப்பட்டிருந்தன.

அன்னையின் ஆட்சி தொடங்கியதும், நிறுத்தப்பட்ட அனைத்துப் பேருந்துகளையும் உடனடியாக இயக்கி அல்லற்பட்ட தமிழக மக்களுக்கு ஆறுதல் அளிக்கும் நடவடிக்கையை மேற்கொள்ள ஆணையிட்டார். அதனை யொட்டி குறுகிய காலத்திலேயே ஏறத்தாழ 37 பேருந்து களைத் தவிர பிற பேருந்துகள் அனைத்தும் மீண்டும் பழையபடியே இயக்கப்பட்டன. இந்த 37 பாதைகளும் பாலங்களும் பழுதுபட்ட காரணத்தால் இயக்க முடியாமல் போனவையாகும்.

20.4.1990 அன்று தி.மு.க. அரசின் போக்கு வரத்துத் துறை அமைச்சர் பணிக்காலத்தில் இறந்துவிடும்



விலை குறைவாக உள்ளது ·குறிப் பிடத்தக்க சாதனையாகும்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், பொதுவிநியோகத் திட்டத் தின் கீழ் சுமார் ரூ.1,300 கோடி மதிப்புள்ள இன்றியமையாப் பொருட்களைக் கொள்முதல் செய்து வழங்கி, அகில இந்திய அளவில் முதன்மையாக விளங்கி, சாதனை படைத்துவருகிறது. மேலும் 'புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்' கீழ் தமிழகம் முழுவது முள்ள சத்துணவு மையங்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களைத் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகமே கொள் முதல் செய்து விநியோகித்து வரு கிறது. இதனால் வாணிபக் கழகத் திற்கு ஓராண்டில் ஏற்படும் ரூ.120 கோடி இழப்பினைத் தமிழக அரசு ஏற்று வருகிறது.

இதுதவிர, பொதுவிநியோகத் திட்டத்தின் கீழ் தற்போது, இந்தியா விலேயே குறைந்த விலையாக, அரிசியின் விலை கிலோ ஒன்றுக்குச் சாதா ரகம் ரூ.2.50, சன்ன ரகம் மற்றும் மிகச் சன்ன ரகம் ரூ.3.50 வீதம் வழங்கப்பட்டு வருவதால், வாணிபக் கழகத்திற்குக் கடந்த ஆண்டில் ஏற்பட்ட இழப்புத் தொகையான ரூ.360.65 கோடியை தமிழக அரசு மானியமாக வழங்கி யுள்ளது.

புரட்சித்தலைவியின் அரசு, கடந்த இரண்டு ஆண்டுகளில் சுமார் 7,35,000 போலிக் குடும்ப அட்டை களைக் கண்டுபிடித்து பறிமுதல் செய்துள்ளது. இதனால் ஆண்டுக்கு ரூ.7.30 இலட்சம் மதிப்புள்ள உணவுப் பொருட்கள் தவறான முறையில் வழங்கப்பட்டு வந்ததைத் தடுத்து, சாதனை நிகழ்த்தப்பட்டுள் ளது. மேலும், குடும்ப அட்டைகள் தவறான முறையில் பயன்படுத்தப் படுவதைத் தவிர்க்கும் வகையில் முதற்கட்டமாக, சென்னை மாநகரத் தில் உள்ள 10 உணவுப் பொருள் வழங்கல் மண்டலங்களில் உள்ள குடும்ப அட்டை வழங்குதல் மற்றும் பராமரித்தல் சம்பந்தப்பட்ட பணிகள் 'கணிப்பொறி' அமைப்பின்கீழ் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

நுகர்வோர் நலன் கருதி, மாவட்ட அளவிலான நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றங்களும், மாநில அளவில் முறையீடுகளை விசாரணை செய்ய மாநில நுகர்வோர் குறை தீர்க்கும் ஆணையமும் அமைக்கப் பட்டுச்செவ்வனே செயல்பட்டு வரு கின்றன.

மலை குலைந்தாலும் மனங்குலை யாத ஒரே மக்கள் தலைவி நம் டாக்டர் புரட்சித்தலைவி தான் என்பது கோடானுகோடி மக்களின் குரல். இன்று மட்டுமல்ல-என்றுமே நம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் புகழ் மிக்க ஆட்சியே தமிழகத்தில் தழைக் கும்; நிலைக்கும். வான்கருணை கொண்ட அவர்தம் வள்ளல் கரங் களே தமிழகத்தின் பொற்காலச் சரித்திரத்தை எழுதும்... தொடர்ந்து முத்திரை பதிக்கும்.



வாழ்க்கையில் நாம் உயர்ந்த பொருட்களைப் பெற வேண்டு மானால், சலியாத உழைப்பும், தளராத ஊக்கமும், விடாமுயற்சி யும் மிகமிக அவசியமாகும்.

- பேரறிஞர் அண்ணா



# தமிழகத்தில் அனைவருக்கும் மருத்துவ வசதி

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்

**திரு. எஸ். முத்துசாமி**

- **'புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா மருத்துவ நலத்திட்டம்' - ஆரம்பச் சுகாதார நிலையங்களில் 1000 மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு ஒரு கோடி மக்கள் பயன்பெற்றனர்.**
- **எங்கோ ஒரு மூலையில் இருக்கும் ஏழைக்கும் பணிபுரிய 'ரயில் மருத்துவமனை'.**
- **குழந்தை நலம் மற்றும் சிறந்த தாய்மையைப் பலப்படுத்த விசேட மருத்துவ முகாம்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்காக நடத்தப்படுகின்றன.**

இதயதெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் தலைமையில் ஆட்சிப் பொறுப் பேற்ற இந்த இரண்டு ஆண்டுகளில், மருத்துவத்துறையில் நாட்டில் அனைத்து மாநிலங்களைக் காட்டி லும் தமிழகம் முன்னோடியாகத் திகழ்கிறது.

மாநிலம் முழுவதும் சீராகச் செயல்பட்டு வருகின்ற சுகாதார மற்றும் மருத்துவ நிறுவனங்கள் மக்களின் தேவைகளை நிறைவு செய்யும் பணிகளைச் சிறப்பாக ஆற்றி வருகின்றன. நவீன முறையில் நோய்களைக் கண்டறிந்து தக்க மருத்துவம் அளிப்பதற்கு வசதியாக நவீனக் கருவிகள் வாங்கப்பட்டு மருத்துவச் சிகிச்சை அளிப்பதில் டாக்டர் புரட்சித்தலைவி அரசு முன்னேற்றம் கண்டுள்ளது.



டாக்டர் புரட்சித்தலைவி அரசு பொறுப்பேற்ற பிறகு 1991-92-ஆம் ஆண்டு வரவு-செலவு மதிப்பீட்டில் மருத்துவ மற்றும் பொதுச் சுகா தாரத்திற்கு ரூ.411 கோடி ஒதுக்கீடு செய்தது. 1992-93-ஆம் ஆண்டில் இந்த நிதி ரூ.469 கோடியாகவும், 1993-94-ஆம் ஆண்டில் ரூ.557 கோடியாகவும் உயர்த்தப்பட்டு மருத்துவ வசதி அனைத்து மக்களுக் குக் கிடைக்கும் வகையில் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் மருத் துவத்துறைக்கு முக்கியத்துவம் அளித் துள்ளார்.

கடந்த ஆண்டு டாக்டர் புரட்சித் தலைவி மருத்துவ நலத்திட்டத்தின் கீழ் 10,000 மருத்துவ முகாம்களை நடத்தி மாபெரும் சாதனை படைத் தது. இதனால் ஒரு கோடி மக்கள் பயன்பெற்றனர்.

இந்த வெற்றித் திட்டத்தினைத் தொடர்ந்து டாக்டர் புரட்சித்தலைவி மகளிர் மற்றும் குழந்தைகள் நலத் திட்டம் என்று அழைக்கப்படும் இரண்டாவது சுற்று மருத்துவ முகாம்களை நடத்தி மகளிர் மற்றும் குழந்தைகளுக்கு வரக்கூடிய நோய் களைக் கண்டறிந்து சிகிச்சை அளிக்க டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் அரசு மேற்கொண் டுள்ளது.

பொது நிறுவனமாகிய 'இன் பெக்ட்' இந்திய நிறுவனம் மற்றும் இந்திய இரயில்வே கூட்டு முயற்சி யுடன் தமிழ்நாடு அரசு நடமாடும் இரயில் மருத்துவமனை என்று அழைக்கப்படுகின்ற ஒரு புதிய திட் டம் தமிழக முதல்வர் டாக்டர்

3

போக்குவரத்துத் தொழிலாளியின் குடும்பங்களுக்கு வழங்கப்படும் உதவித்தொகை ரூ.20,000-லிருந்து ரூ.40,000 ஆக உயர்த்தி அளிக்கப்படும் என்று சட்டப் பேரவையிலேயே அறிவித்தார். ஆனால், அந்த அறிவிப்பு வெறும் அறிவிப்பாகவே இருந்துவிட்டதால் வேதனையிலேயே உழன்று வந்த தொழிலாளர்களின் வாழ்வில் விடிவெள்ளியாக வந்த இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நிறைவேற்றப்படாமல் விடுபட்டுப் போன திமுக அரசின் வாக்குறுதியை நிறைவு செய்யும் வகையில் அத்தொகையை ரூ.40,000 ஆக உயர்த்தியதோடு அல்லாமல் 1.8.1991 முதல் அந்த உதவித் தொகையை ரூ.60,000 ஆக உயர்த்தி வரலாறு படைத்தார்.

நான் ஏற்கெனவே குறிப்பிட்டபடி தமிழகத்தில் அன்னையின் ஆட்சி மலருவதற்கு முன்பு சுமார் 13,594 பேருந்துகளே இயக்கப்பட்டு வந்த நிலைமையை மாற்றி,




கடந்த இரண்டாண்டுகளில் இதன் எண்ணிக்கையை 14,536 ஆக உயர்த்தியுள்ளார். 687 கிராமங்களில் புதிதாக 6.74 இலட்சம் மக்கள் பயனடையும் வகையில் 1000 பேர் வாழும் கிராமங்களுக்கெல்லாம் பேருந்து வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. இரண்டாண்டுக் காலத்தில் புதிதாக 735 வழித்தடங்கள் உருவாக்கப் பட்டுள்ளன. 16 போக்குவரத்துக் கழகங்களின் மூலம் புதிதாக 4,007 பேருந்துகள் வாங்கப்பட்டு, பொது மக்களின் பயனுக்காக இயக்கப்பட்டன.

அதுமட்டுமல்ல, இரண்டாண்டுக் காலத்தில் போக்குவரத்துக் கழகங்களில் 2,428 பணியிடங்கள் உருவாக்கப் பட்டு பணியாளர்கள் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் வகுத்தளித்த நாட்டுடைமையாக்கும் கொள்கையிலிருந்து ஒரு துளியும் பிறழாமல் செயல்பட்டு, தனியாருக்கு வந்த வகையிலும் புதிதாக உரிமங்கள் வழங்காமல் பாதுகாத்துள்ளதும் இந்த அரசு மட்டும்தான். பொதுவுடைமைக் கட்சியின் ஆட்சியில் தொடர்ந்து 15 ஆண்டுக் காலமாக உள்ள மேற்கு வங்கத்தில்கூட மொத்தம் 2,078 பேருந்துகளே அரசுப் போக்குவரத்துக் கழகங்களால் இயக்கப்படுகின்ற நிலையில், அதைப்போலவே பொதுவுடைமை ஆட்சியின் திட்டுப் பகுதியாக விளங்கி வந்த கேரளத்திலும் 3,534 பேருந்துகள் மட்டுமே அரசுப் போக்குவரத்துக் கழகங்களால் இயக்கப்படுகின்ற நிலையில் தமிழகத்தில் மட்டுமே 14,536 பேருந்துகள் அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களாலும் இயக்கப்படுகிற பெருமையை உருவாக்கியவர் நமது இதயதெய்வம், 20-ஆம் நூற்றாண்டின் இணையற்ற முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள்.

இரண்டாண்டுக் கால ஆட்சியில் புதிதாக 4 போக்குவரத்துக் கழகங்கள்! ஆம் 1.4.1992 முதல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். போக்குவரத்துக் கழகம் காஞ்சிப் பெருநகரைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருவதும், விரைவிலேயே சென்னை நகரில் இயங்கும் பல்லவன் பிரிக்கப்பட்டு புதிதாக 'டாக்டர் அம்பேத்கர் போக்குவரத்துக் கழகமும்', திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்திலிருந்து அண்டை மாநிலங்களுக்குச் செல்லும் பேருந்துகள் பிரிக்கப்பட்டு புதிதாக 'டாக்டர் ஜெ. ஜெயலலிதா போக்குவரத்துக் கழகமும்' அதைப்போலவே சேரன் போக்குவரத்துக் கழகத்திலிருந்து மலைப்பகுதிகளில் இயங்கும் பேருந்துகள் பிரிக்கப்பட்டு, உதகமண்டலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு 'மகாகவி பாரதியார் போக்குவரத்துக் கழகமும்' செயல்பட இருப்பதும் அன்னை ஆட்சிக்கு அணி சேர்க்கும் வளர்ச்சிகள்!

நாளொன்றுக்கு 1½ கோடி மக்களைச் சுமந்து சென்று நாட்டின் போக்குவரத்தில் பெருமைமிக்க இடத்தைப் பெற்ற தமிழகப் போக்குவரத்துத் துறை கடந்த இரண்டாண்டுகளில் அதன் செயல் திறன், டீசல் சிக்கனம், இயக்க தூரம், டீசல் பயன்பாடு, பாதுகாப்பு, பராமரிப்பு போன்றவைகளுக்காக அகில இந்திய



அளவில் பாராட்டப்பட்டு ஏறத்தாழ 13 சிறப்பு விருதுகளைப் பெற்றதே தமிழகப் போக்குவரத்துத் துறையின் செயல்பாட்டிற்குக் கட்டியங்கூறும் நிகழ்ச்சிகளாகும்.

அதுமட்டுமல்ல - போக்குவரத்துத் துறையில் புகுத்தப்பட்ட கணினி முறை மூலம் முன்கூட்டிய பயணப் பதிவு-தொலைத் தொடர்பு முறை மூலம் பாதுகாப்பும் பழுது நீக்குவதில் முன்னேற்றமும் உறுதி செய்யும் செயல்பாடு - சென்னை போன்ற பெருநகரங்களில் நெரிசலைத் தவிர்க்க திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் புறப்படும் இடமும் வந்து சேரும் இடமும் தனித் தனியாக அமைந்திருத்தல் - மாதாந்திர, வாராந்திரப் பயணச் சீட்டில் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் புதிய வசதிகள் - தூய்மையை உறுதி செய்ய டீசலுக்குப் பதிலாக இயற்கை எரிவாயுவைப் பயன்படுத்தி பேருந்து இயக்கம் - பேட்டரி - மின்கலங்கள் மூலம் பேருந்துகள் இயக்கம் - 8-ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு இலவசப் பயணம், 8-ஆம் வகுப்புக்கு மேல் பயிலும் மாணவர்களுக்கு 50 சதவிகித சலுகை அடிப்படையில் பயணச் சீட்டு - ஊனமுற்றோருக்குப் பயணச் சலுகை - விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும் மொழிப்போர் வீரர்களுக்கும் - இயல் இசை நாடகக் கலைஞர்களுக்கு 50 சதவிகித சலுகைப் பயண முறை - ஊழியர் நலன் காக்க பல்வேறு நடவடிக்கைகள் - அவர்தம் குழந்தைகளின் கல்வி வசதிக்காகப் போக்குவரத்துக் கழகங்களால் நடத்தப்படும் பொறியியல் கல்லூரியில் மாணவர் சேர்க்கையை 180-லிருந்து 210-ஆக உயர்த்தியது - பெருந்துறை மருத்துவக் கல்லூரியில் போக்குவரத்துத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு 50 சதவிகித இட ஒதுக்கீடு ஆகியவைகளையெல்லாம் விவரித்தால் பக்கங்கள் மிகுதியாகும்.

இருப்பினும் கடந்த சில மாதங்களுக்கு முன்பு அன்னையின் ஆணையில் ஏற்பட்ட சாதனைகளை இங்கே தெரிவிக்காமல் இருக்க முடியாது.

இந்தியத் துணைக் கண்டத்திலேயே மிகக் குறைந்த கட்டணத்தில் மிகச் சிறந்த முறையில் பேருந்துகளை இயக்கும் பெருமை தமிழக அரசுப் போக்குவரத்துக் கழகங்களையே சாரும். அதற்குக் காரணமாக இருந்து வரும் போக்குவரத்துத் தொழிலாளர்களின் நீண்ட நாள் கோரிக்கை, பணியிலிருந்து ஓய்வுபெறும்போது 'ஓய்வூதியம்' அளிக்கப்பட வேண்டும் என்பதாகும். ஏற்கெனவே கிராச்சுவிட்டி சலுகைகளையும் பிராவிடெண்ட் பண்டு சலுகையையும் பெறும் இத்தகைய தொழிலாளர்களுக்கு மூன்றாவது சலுகையாக ஓய்வூதியம் வழங்குவது என்பது நினைத்துப் பார்க்க முடியாது - விரும்பினாலும் செயல்படுத்த முடியாது திட்டமாக - கருவிலேயே உருவிழக்கும் நிலை பலமுறை ஏற்பட்டது.

நெப்போலியனின் இயல்புகளை தன்னிடத்தே வரித்துக்கொண்டு அரசியலிலும் ஆட்சியிலும் தனி வரலாறு படைக்கும் இதயதெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் இதனை ஒரு சவாலாகவே ஏற்று எந்த வகையிலேனும் போக்குவரத்துத் தொழிலாளர்கள் ஓய்வு பெறும்போது 'ஓய்வுகாலச் சேமநிதி' ஒன்று வழங்கப்பட வேண்டுமென்று ஒரு திட்டத்தைத் தீட்டி, கடந்த செப்டம்பர் 1, 1992 முதல் அது



செயலுக்கு வரும் என்று அறிவித்தார்கள். இதுவரை எட்டாக் கனியாக இருந்தது, கற்பனையில் மட்டுமே இருந்தது அவரது கைவண்ணத்தால் கவன்மிகு வடிவம் பெற்று கடந்த 9 மாதங்களாக, பணியிலிருந்து ஓய்வு பெறும் தொழிலாளர்கள் தங்கள் பணிக்காலத்தில் மாதம் 50 ரூபாய் மட்டுமே அளிப்பதன் மூலம் மாதம் குறைந்த பட்சமாக ரூ.300 பெறும் வகையில் 'ஓய்வுகாலச் சேமநல நிதியுதவித் திட்டம்' என்னும் அற்புதத் திட்டத்தை அறிவித்துள்ளார்.

இத்திட்டத்தின் மூலம் பணியிலிருக்கும் ஒவ்வொரு தொழிலாளியும் மாதம் ரூ.50 தனது பங்குத் தொகையாகச் செலுத்துவதன் மூலமும், போக்குவரத்துக் கழகம் ஒவ்வொரு தொழிலாளிக்காகவும் தவணை முறையில் ரூ.1,000 அளிப்பதன் மூலமும் ஒவ்வொரு தொழிலாளியும் அவர் ஓய்வு பெறும் நாளிலிருந்து இறக்கும் வரை கீழ்க்கண்டவாறு ஓய்வுக் காலச் சேமநல நிதியுதவி பெற வழி செய்துள்ளார்.

1.9.92 முதல் 31.8.1997 வரை ஓய்வு பெறுவோர் - மாதம் ரூ.300
1.9.97 முதல் 31.8.2002 வரை ஓய்வு பெறுவோர் - மாதம் ரூ.450
1.9.2002 முதல் 31.8.2007 வரை ஓய்வு பெறுவோர் - மாதம் ரூ.600
1.9.2007 முதல் 31.8.2012 வரை ஓய்வு பெறுவோர் - மாதம் ரூ.750
1.9.2012 முதல் 31.8.2017 வரை ஓய்வு பெறுவோர் - மாதம் ரூ.1000
1.9.2017 முதல் மற்றும் அதற்கு மேல் - ஓய்வு பெறுவோர் - மாதம் ரூ.1250

அதைப்போலவே பணி மூப்பு ஓய்வுபெற்ற 15 ஆண்டுக்குள் ஒரு தொழிலாளி இறந்துவிட்டால், அவருடைய வாரிசுதாரர் அவர் ஓய்வுபெற்ற நாளிலிருந்து 15 ஆண்டுகளில் எஞ்சியுள்ள ஆண்டுக்கு நிதி உதவி பெறவும் வகை செய்துள்ளார்.

அதுமட்டுமல்ல, 1.9.1992 அன்று முதல் அமலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ள புதிய ஒப்பந்தத்தின் மூலம் தொழிலாளர்களுக்கு ஏறத்தாழ ஆண்டுக்கு ரூ.52 கோடி அளவுக்கு ஊதிய உயர்வும் பிற சலுகைகளும் அளிக்கப் பட்டுள்ளன. போக்குவரத்துத் தொழிலாளர்களின் வரலாற்றிலேயே இந்த அளவு ஊதிய உயர்வும் சலுகை

களும் இதுவரை வழங்கப்பட்டதில்லை என்பது வரலாற்று உண்மையாகும்.

தொழிலாளர்களின் குழந்தைகளைத் தரமான கல்வியை மிகுதியான அளவுக்குப் பெற்றிடும் வகையில் மிகுந்த தொலை நோக்கோடு அன்னையின் ஆணைப்படி தமிழகத்தில் 3 பாலிடெக்னிக்குகள் போக்குவரத்துத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்காகவே ஏற்படுத்தப் பட்டுள்ளன. சென்னையிலுள்ள குரோம்பேட்டையிலும், தர்மபுரி மாவட்டத்திலுள்ள பர்கூரிலும், நெல்லை மாவட்டத்திலுள்ள பாளையங்கோட்டையிலும் தற்போது செயல்படும் இந்த மூன்று பாலிடெக்னிக்குகளும் தொழிலாளர்களுக்குக் கிடைத்த வரப்பிரசாதங்களாகும்.

நிலைமைகள் இவ்வாறு இருக்க அரசியல் காழ்ப் புணர்ச்சி காரணமாகவும் சில தொழிற்சங்கங்களின் தலைவர்களின் சுயலாபம் காரணமாகவும் கடந்த 5.6.1993 அன்று தமிழகத்தில் போக்குவரத்துத் துறையில் வேலை நிறுத்தம் ஒன்றை ஆர்ப்பாட்டமான முறையில் சிலர் அறிவித்தனர். போக்குவரத்துத் துறையைத் தனியாருக்குத் தாரை வார்ப்பதாகவும் போக்குவரத்துக் கழகங்களைப் பிரிப்பது அதற்கு முன்னோடியாக அமையும் என்றும் இல்லாத காரணங்களைக் - கற்பனையில் உதித்தவைகளை விற்பனை செய்வதற்கு முயற்சித்தார்கள். ஆனால், 5.6.1993 அன்று தமிழகத்தில் வழக்கமாக ஓட வேண்டிய பேருந்துகளைக் காட்டிலும், அதிகமான பேருந்துகளைப் போக்குவரத்துத் தொழிலாளப் பெருமக்கள் இயக்கி தாங்கள் புரட்சித்தலைவியின் பக்கமே நிற்பதாகவும், போலிக்காரணங்களைக் கூறி அரசியல் லாபம் தேட முயன்ற தலைவர்களைத் தாங்கள் நம்பத் தயாராக இல்லை என்றும் எடுத்துக் கூறும் வகையில், எந்த விதச் சிறு அசம்பாவிதங்களும் தமிழகத்தின் எந்த ஒரு பகுதியிலும் இல்லாத வகையில் இயக்கிக் காட்டியது அன்னையின் ஆட்சிக்குச் சேர்க்கப்பட்ட பெருமைகளில் தலையாயதாகும்.

இப்படி, சாதனைகளையெல்லாம் தொகுத்து அடுக்கிக் கொண்டே போனால் இதற்கென்றே ஒரு மலர் தயாரிக்க வேண்டி வரும் என்பதால் இந்த அளவோடு நிறுத்திக் கொள்கிறேன்.

போக்குவரத்துத் துறையோடு தொடர்புடைய பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் சாதனையையும் இங்கே குறிப்பிடுவது சரியாக இருக்கும் என்று கருதுகிறேன்.




தமிழகத்தின் அனல் மின் நிலையங்களுக்குத் தேவையான நிலக்கரியைக் கொண்டு வரும் பணியை தமிழக மின்வாரியத்தின் சார்பில் செயல்படுத்தும் இந்நிறுவனம் 1989-90- ல் 63.5 இலட்சம் டன் நிலக்கரியை மட்டுமே தமிழகத்திற்குக் கொண்டு வந்த நிலை மாறி கடந்த ஆண்டில் 69.83 டன் அளவுக்கு ஏற்றி வந்து சாதனை படைத்துள்ளது. இக்கழகம் கடந்த 2 ஆண்டுகிகளில் ஏறத்தாழ முறையே 8 கோடி ரூபாய் லாபமும் ரூ.10 கோடி லாபமும் பெற்றுள்ளது. அதைப்போலவே கடந்த ஆண்டில் இக்கழகம் கன்னியாகுமரிக்கும் கடலில் உள்ள விவேகானந்தர் நினைவுப் பாறைக்கும் 3 விசைப்படகுகள் மூலம் 15 இலட்சம் பயணிகளை ஏற்றிச் சென்று வந்துள்ளதும் ஒரு சாதனைப்படைப்பாகும்.

அதைப்போலவே தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் கடந்த ஆண்டில் அதன் வைப்பு நிதியாக ரூ.205 கோடியை எட்டிப்பிடித்தது வரலாற்றுச் சாதனையாகும். இக்கழகம் கடந்த ஆண்டு மட்டும் பல்வேறு போக்குவரத்துக் கழகங்களுக்கும் ரூ.123.84 கோடி அளவுக்குக் கடனுதவி அளித்திருப்பதும் ஒரு சாதனையாகும்.

இந்நிறுவனத்தின் மூலம் மேலும் வைப்பு நிதிகளைப் பெறும் வகையில் திருச்சி, மதுரை மற்றும் ஈரோட்டில் கிளைகள் தொடங்கப்பட உள்ளன.

பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக்குழு என்னும் அமைப்பும் சாலைப் போக்குவரத்துத் துறையிலும் கணினித் துறையிலும் சிறப்புமிக்க ஆலோசனைகளை வழங்கி சிறந்த, நம்பகமான நிறுவனம் என்று பெயரை ஈட்டியுள்ளது.

அதைப் போலவே சாலைப் போக்குவரத்து நிறுவனமும் பணியகப் பயிற்சித் திட்டங்கள், கணிணி பயிற்சித் திட்டங்கள், ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகள் ஆகிய வகுப்புகளை நடத்தி வருவதுடன் ஒரு சிறப்பான ஆய்வு நிறுவனமாகவும் இயங்கி வருகிறது.

கும்மிடிப்பூண்டியில் செயல்பட்டு வரும் இந்நிறுவனத்தின் ஓட்டுநர் பயிற்சிப் பள்ளியில் கனரக ஓட்டுநர் பயிற்சி பெற ஆண்டுதோறும் 1200 பேர் அனுமதிக்கப்பட்டு பயிற்சி அளிக்கப்படுகின்றனர். இதன்மூலம் தரமான ஓட்டுநர்களை உருவாக்கி தமிழகத்தில் விபத்துக்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கு சிறந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதும் கடந்த 2 ஆண்டுகளில் அடைந்த முன்னேற்றங்களாகும்.

இவ்வாறு நாளொரு முன்னேற்றமும், பொழுதொரு சாதனையையும் படைத்து வரும் தமிழக போக்குவரத்துத் துறை, தனது தொழிலாளர்களுக்கும் பொதுமக்களுக்கும் இன்னும் சிறந்த முறையில் பணியாற்றிட மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் தலைமையில் உறுதி பூண்டிருக்கிறது. கடந்த 2 ஆண்டுகளில் இத்துறைக்கு அனைத்துப் பிரிவு மக்களும் அளித்த ஆதரவைத், தொடர்ந்து அளிப்பதன் மூலம் அன்னையின் ஆட்சிக்கு வலிவூட்டவும் ஒளியூட்டவும் விரும்பி வேண்டிக் கேட்டு முடிக்கிறேன்.

# கைத்தறித் துறையில்

# இரண்டாண்டுச் சாதனைகள்

மாண்புமிகு கைத்தறி மற்றும் ஜவுளித்துறை அமைச்சர்

**திரு. இ. மதுசூதனன்**

**கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுத் துறையின் கீழ் கொண்டுவரப்பட்டதன் பலனாக, இரண்டாண்டுக்கு முன்பு 220 கோடி ரூபாயாக இருந்த கைத்தறித் துணியின் உற்பத்தி, படிப்படியாக உயர்ந்து இந்த ஆண்டு (1992-93) 341 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது சாதனைக்குரியதாகும்.**

'சின்ன சின்ன இழை
பின்னிப்பின்னி வரும்
சித்திரக் கைத்தறிச் சேலையடி'

என்பார்கள். அத்தகைய கைத்தறிச் சேலைகளை உருவாக்கி எல்லாத் தரப்பு மக்களிடையே மகிழ்ச்சியை உண்டாக்கிப் பாராட்டைப் பெற்று வரும் தமிழகக் கைத்தறித் துறை மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில் சீரோடும் சிறப்போடும் வளர்ந்து நெசவாளர் வாழ்வில் நல்லதொரு விடியலை ஏற்படுத்தியுள்ளது.

மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்கும் முன்பாகக் கூட்டுறவுத் துறையின் கீழ் 3 இலட்சத்து 25 ஆயிரம் நெசவாளர் மட்டுமே பதிவு பெற்று இருந்தனர். இரண்டாண்டுக் காலத்தில் இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் அரசு எடுத்த முயற்சியால் இன்றைக்குக் கூடுதலாக 54 ஆயிரம் நெசவாளர்கள், கூட்டுறவுத்



துறையின் கீழ் கொண்டுவரப்பட்டு, தற்போது 3 இலட்சத்து 79 ஆயிரம் நபர்களாக உயர்த்தப்பட்டுள்ளது.

கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுத் துறையின் கீழ் கொண்டுவரப்பட்டதன் பலனாக, இரண்டாண்டுக்கு முன்பு 220 கோடி ரூபாயாக இருந்த கைத்தறித் துணியின் உற்பத்தி, படிப்படியாக உயர்ந்து இந்த ஆண்டு (1992-93) 341 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது சாதனைக்குரியதாகும்.

உற்பத்தி அதிகரித்துவிட்டால் மட்டும் போதுமா? விற்பனையும் அதிகரிக்க வேண்டாமா? என்ற கேள்வி எழுவது இயற்கை தானே! பிரதம நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் 1991-ஆம் ஆண்டு 247 கோடி ரூபாய் அளவுக்கு இருந்த விற்பனை மதிப்பு இரண்டாண்டுக் காலத்தில் 348 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது. நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை 734-இல் இருந்து 876 ஆக உயர்ந்துள்ளது. சுமார் 60 சதவிகித நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் லாபம் ஈட்டும் திறனை அடைந்துள்ளன. இதற்கெல்லாம் காரணம், மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் இத்துறைக்கு அளித்த ஊக்கமும், ஆக்கமும் தான். அவரது ஆலோசனையின் கீழ் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் செயல்பாடுகளைச் சீரமைத்து மேற்பார்வை செய்ததால், கைத்தறி நெசவாளர் வாழ்வு வளம் பெற்றுள்ளது.

மக்களுக்குத் தரமானதுணிகளைத் தரும் சேவை அடிப்படையிலும், நெசவாளர்ககளின் வாழ்க்கை



உத்தரவாதத்திற்கும் பணியாற்றும் கோ-ஆப்டெக்ஸ்' நிறுவனம் 1991-ஆம் ஆண்டு 138 கோடி ரூபாய் விற்பனை செய்தது. இரண்டாண்டுக் காலத்தில் படிப்படியாக (1992-93) 193 கோடி ரூபாய் விற்பனை அளவு எட்டியுள்ளது.

உள்ளூர் விற்பனை மட்டுமன்றி இரண்டாண்டுகளில் 3 கோடியே 59 இலட்ச ரூபாய் மதிப்புள்ள கைத்தறித் துணிகளை கோ-ஆப்டெக்ஸ் ஏற்றுமதி செய்துள்ளது என்பது இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அரசின் சாதனையாகும்.

நெசவாளர் வாழ்வு வளம் பெற, கூட்டுறவுச் சங்கங்களின் விற்பனையினை மேம்படுத்தி அதன் மூலம் நெசவாளர் சங்க உறுப்பினர்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சேரவேண்டிய தள்ளுபடிக் கால நிலுவைத் தொகையை அளிப்பதில் மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு மிக அதிமுக்கியத்துவம் அளித்து வருகிறது.

1990-91-ஆம் ஆண்டில் 33 கோடியே 4 இலட்சம் ரூபாய் மட்டுமே அனுமதிக்கப்பட்ட தள்ளுபடி தொகை, இந்த அரசில் 1991-92-ஆம் ஆண்டு 42 கோடியே 2 இலட்ச ரூபாயாகவும், 1992-93-ஆம் ஆண்டில் 40 கோடியே 86 இலட்ச ரூபாயாகவும் உயர்த்தி அளிக்கப்பட்டுள்ளது.

வள்ளுவர் காலத்துக் கைத்தறியை நவீனப்படுத்தி அதன் மூலம் நெசவாளர்ககளின் வேலைப்பளுவினைக் குறைத்து, உற்பத்தித் திறனை அதிகப்படுத்தவும், மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் அதிமுக்கியத்துவம் அளித்து வருகிறார். அதன்படி 1991-92-ஆம் ஆண்டில் 10 ஆயிரத்து 338 தறிகள், 88 இலட்சத்து 12 ஆயிரம் ரூபாய் செலவில் நவீனப்படுத்தப்பட்டுள்ளன. அதேபோல், 1992-93-ஆம் ஆண்டில் 8582 தறிகள் 99 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் நவீனப்படுத்தப்பட்டுள்ளன.

உலக நாடுகளில் காஞ்சிப் பட்டுக்கென ஒரு தனி இடம் உண்டு. அத்தகைய தரம் மிக்க பட்டுச்சேலைகளைத் தயாரிக்கும் காஞ்சி மாநகரில் பட்டு வகைத் துணிகளுக்கென தனி விற்பனை வளாகமும், ஈரோடு நகரில் பருத்தி வகைத் துணிகளுக்கென்றே விற்பனை . வளாகம் ஒன்றும் அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

பருத்தி வகைத் துணி விற்பனை வளாகத்தில் 52 பிரதம நெசவாளர் சங்கங்களும் விற்பனை நிலையங்களை அமைக்கும். இத்தகைய ஏற்பாடு மாறுபட்ட விருப்பம் கொண்ட மக்களுக்கு ஒரே கூரையின் கீழ் சேவை செய்ய இயலும்.

இதைப்போன்றே காஞ்சிபுரத்தில் அமைய இருக்கும் பட்டுத் துணி விற்பனை வளாகத்தில் காஞ்சிபுரம், கும்பகோணம், ஆரணி, சேலம் மற்றும் தமிழகம் முழுவதும் உள்ள இதரப் பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும் பங்குகொள்ளும்.

கைத்தறி நெசவாளர்களுக்குத் தேவையான நூலை உற்பத்தி செய்து வழங்குவதில் கூட்டுறவு நூற்பாலைகள் பெரும் பங்கு வகிக்கின்றன. 1991-ஆம் ஆண்டு 161 கோடியே 63 இலட்சம் ரூபாயாக இருந்த உற்பத்தி இரண்டாண்டுக் காலத்தில் 208 கோடியே 18 இலட்ச ரூபாயாக உயர்ந்துள்ளது. இதைப்போலவே, விற்பனையும் •157 கோடியே 77 இலட்ச ரூபாயாக இருந்தது, 199 கோடி 50 இலட்ச ரூபாயாக அதிகரித்துள்ளது. கூட்டுறவு நூற்பாலைகளுக்கு வழங்கப்பட்ட நடைமுறை மூலதனத்தின் அளவு 24 கோடியே 48 இலட்ச ரூபாயில் இருந்து, 32 கோடி 35 இலட்ச ரூபாயாக அதிகரித்துள்ளது.

கடந்த 30 ஆண்டுகளாக இயங்கி வரும் கூட்டுறவு நூற்பாலைகளை நவீனப்படுத்துவதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் அரசு புதிய ஊக்கத்தை அளித்துள்ளது.

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சலுகை விலையில் சிட்ட நூலை வினியோகிப்பதில் விற்பனை இடர்ப்பாடுகள் இருந்த போதிலும், தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவு நூற்பாலைகள் மட்டுமே சிட்டநூல் தேவையைப் பூர்த்தி செய்து வருவது குறிப்பிடத்தக்க அம்சமாகும். கூட்டுறவு நூற்பாலைகளின் இந்த முக்கியப் பங்கினைக் கருத்தில் கொண்டு, கூட்டுறவு நூற்பாலைகளை நவீனப்படுத்த மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் அரசு திட்டமிட்டுள்ளது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் காஞ்சிபுரம், தென்னார்க்காடு, வடார்க்காடு, தஞ்சாவூர், மதுரை, ஸ்ரீவில்லிபுத்தூர், திருச்சி, திருச்செந்தூர் ஆகிய 8 நலிந்த கூட்டுறவு நூற்பாலைகளுக்கு 16 கோடியே 25 இலட்ச ரூபாய் செலவில் புதிய அளவு நவீனப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டது.

இருக்க இடம், உடுக்க உடை, உண்ண உணவு என்ற பேரறிஞர் அண்ணாவின் இலட்சியங்களை நிறைவேற்ற அரசோச்சும் இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள், அடித்தட்டு மக்களான நிலமற்ற விவசாயிகள், நகர்ப்புற ஏழைகளுக்கு இலவச சேலை, வேட்டி வழங்கும் சிறப்புத் திட்டத்தைக் கொண்டு வந்தார். இதனால், ஏழை மக்களும் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும் பயன்பெறும் இரண்டு இலக்கச் சமூக நலத்திட்டத்தை நிறைவேற்ற ஆண்டுக்கு 45 கோடி ரூபாயைச் செலவழித்து வருகிறார். இத்திட்டத்திற்காக சுமார் இருபது முதல் இருபத்தைந்தாயிரம் தறிகள் ஜனதா ரகத் துணிகளைத் தயாரித்து வருகின்றன. கைத்தறி நெசவாளர்கள் இதனால் தொடர்ச்சியாக வேலை வாய்ப்புப் பெற்று வருகின்றனர்.

சத்துணவுத் திட்டத்தின் கீழ் கல்விபெறும் 1 முதல் 8-வது வகுப்பு வரை பயிலும் 65 இலட்சம் மாணவ மாணவிகளுக்கு இலவசச் சீருடை வழங்குவதற்காக 121 கோடியே 2 இலட்சம் மீட்டர் துணி ரகங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்தத் துணிகளின் மதிப்பு 21 கோடியே 82 இலட்ச ரூபாயாகும்.

தமிழ்நாடு கூட்டுறவுக் கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்திற்காக, நெசவாளர்கள் பெறும் ஊதியத்தில் 12 காசு பங்குத் தொகையை 16 காசாக உயர்த்தியுள்ளது இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் அரசு. இதனால் நெசவாளர்கள் ஓய்வுபெறும் போது அடைகிற பயன் கணிசமான அளவு அதிகரித்துள்ளது. இத்திட்டத்தினால் ஒரு இலட்சத்து 13 ஆயிரம் கைத்தறி நெசவாளர்கள் பயன்பெறுகிறார்கள். இத்திட்டத்தில் சேர்ந்துள்ள நெசவாளர்களுக்கு ஆயுள் காப்பீட்டுத் தொகை 1991-இல் 12 ஆயிரம் ரூபாயாக இருந்ததை, இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் அரசு 18 ஆயிரம் ரூபாயாக உயர்த்தியுள்ளது. இதனால், நெசவாளரை இழந்து தவிக்கும் குடும்பங்கள் கூடுதலாகப் பயன் பெறும்.

வீடில்லாத நெசவாளர்களுக்குத் தறிக்கூடத்துடன் இணைந்த 2,100 வீடுகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், அதிக அளவில் வீடுகள்





கட்டி வழங்க மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் அரசு செயல்பட்டு வருகிறது.

கைத்தறி நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டம் கடந்த 1.1.92 முதல் அமல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் உறுப்பினராக உள்ள கைத்தறி நெசவாளர்கள் 58 வயதுக்கு முன் இயற்கை எய்தினால், அவரது வாரிசுதாரர்கள் 10 ஆண்டுகளுக்கு மாதம் 250 வீதம் குடும்ப ஓய்வூதியமாகப் பெறுவார்கள்.

கிராமப்புறத்தில் உள்ள கைத்தறி நெசவாளர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டு ஒருங்கிணைந்த கைத்தறி கிராம அபிவிருத்தித் திட்டம் 37 இலட்சத்து 97 ஆயிரம் ரூபாய் செலவில் செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் உள்ள விளாகம் என்னும் கிராமத்தில் 1991-92-ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்டது. இதைப்போன்று, தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள புதுப்பேட்டைக் கிராமம் தேர்வு செய்யப்பட்டு, அங்கு 62 இலட்சத்து 52 ஆயிரம் ரூபாய் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

விசைத்தறி மற்றும் விசைத்தறியில் உற்பத்தி செய்யப்படும் துணிகள், தமிழகத்தில் துணி நூல் தொழிலை மேம்பாடு அடையச் செய்கின்றன. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் 2 இலட்சமாக இருந்து விசைத்தறிகளின் எண்ணிக்கை தற்போது 2 இலட்சத்து 27 ஆயிரமாக அதிகரித்துள்து. விசைத்தறி உற்பத்தி அதிகரித்துள்ளதால், தற்போது விசைத்தறித் தொழிலில் வேலைவாய்ப்பு அதிகரித்துள்ளது. இதுவரையிலும், 5,032 விசைத்தறிகள், 56 விசைத்தறி நெசவாளர் சங்கங்களின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

பட்டுச் சேலைகள் மதிப்பினை உயர்த்திடும் சரிகையைத் தமிழ்நாடு சரிகை ஆலை உற்பத்தி செய்து வருகிறது. கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சரிகைத் தேவையில் பத்து சதவிகிதத்தை, காஞ்சிபுரத்தில் உள்ள தமிழ்நாடு சரிகை ஆலை பூர்த்தி செய்து வருகிறது. சரிகை ஆலையின் உற்பத்தித் திறனை மேலும் விரிவாக்கத் திட்டப் பணி செயலாக்கப்பட்டு வருகிறது. இதனால், இந்த நிறுவனத்தின் உற்பத்தித் திறன் மேலும் 40 சதவிகிதம் அதிகரிக்கும், 1992-93-ல் தமிழ்நாடு சரிகை நிறுவனம் 22 ஆயிரம் மார்க்குகள் உற்பத்தி செய்து, தமிழகத்திலுள்ள பட்டுக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விற்பனை செய்துள்ளது.

தென்னிந்தியாவின் மான்செஸ்டர் கோவை மாவட்டத்தில் உள்ள திருப்பூர் நகரம் பின்னலாடைத் (பனியன்) தொழிலுக்குப் புகழ்பெற்ற நகரமாகும். பின்னலாடைத் துணிகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் சுமார் 1,200 கோடி ரூபாயளவில் நமது நாட்டுக்கு அன்னியச் செலாவணி ஈட்டப்படுகிறது. இத்தொழிலில் சுமார் 50 ஆயிரம் தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர். திருப்பூர் நகருக்குத் தேவைப்படும் உள்ளமைப்பு வசதிகளைச் செய்து கொடுக்கும் 'மாஸ்டர் பிளான்' ஒன்றை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் அரசு தயாரித்து, மத்திய அரசுக்கு அனுப்பியுள்ளது. திருப்பூர் நகரில் சாயம் மற்றும் பின்னலாடைத் தொழில் வளர்ச்சி அடைய ஒரு பெரிய தண்ணீர் மற்றும் கழிவு நீர் அகற்றும் திட்டம் வரையப்பட்டு, செயல்படுத்தப்படவுள்ளது.

இந்திய நாட்டின் இரு கண்களில் ஒன்றாக விளங்கும் நெசவாளர்களின் துயர்துடைக்கும் எங்களின் தாய், இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் அரசின் சாதனைகள் அளப்பரியன. நெசவாளர்களின் வேதனை தீர்த்திடும் இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் மலரடி போற்றுவோம்!



# இதயதெய்வம் புரட்சித்தலைவி ஆட்சியில் பொலிவுபெறும் பொதுப்பணித்துறை

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்

## திரு எஸ். கண்ணப்பன்

***1991-92-ஆம் ஆண்டில், வரலாறு படைக்கும் அளவில் 41 புதிய துணை மின் நிலையங்கள் நிறுவப்பட்டன. 419.9 கி.மீ. நீளப் புதிய வெகு உயர் அழுத்த மின் பாதைகள் மின்விசையூட்டப்பட்டன. 1992- 93-ஆம் ஆண்டில் 30 புதிய துணை மின் நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. 481.83 கி.மீ. நீளப் புதிய வெகு உயர் அழுத்த மின் பாதைகள் மின்விசையூட்டப்பட்டன.***



பொதுப்பணித்துறை என்பது நாட்டின் ஜீவாதாரமான பணிகளைக் கவனிக்கின்ற துறையாகும். பாசனத் திட்டங்கள், அணைகள், கட்டடப் பணிகள், சாலைகள், நெடுஞ்சாலைகள், மின்சார வாரியம் இவை அனைத்தும் பொதுப்பணித்துறையின் பொறுப்பில் வருகின்றன.

மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுடைய சீரிய ஆட்சியில் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் இடுகின்ற ஆணைகளை நிறைவேற்றி நலன் குவிக்கும் துறையாகப் பொதுப்பணித்துறை விளங்குகிறது.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுடைய சீரிய வழிகாட்டுதலில் தமிழ்நாடு அரசின் பொதுப்பணித்துறை சு!_ந்த இரண்டு ஆண்டுகளில் சாதித்த சாதனைகள் மகத்தானவை ஆகும். இந்த மேலான கண்ணோட்டத்தில் மின்வாரியத்தின் இரண்டு ஆண்டுச் சாதனைகளைக் காண்போம்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு உயர் அழுத்தத் தொழிற்சாலைகளுக்கு மின்வெட்டு உச்சத் தேவையில் 30 சதவிகிதமும், மின் சக்தியில் 25 சதவிகிதமும் இருந்தது. இந்த அரசு எடுத்த பல்வேறு நடவடிக்கைகளின் காரணமாக மின்வெட்டு படிப்படியாகக் குறைக்கப்பட்டு 26.3.92 முதல் மின்வெட்டு முழுவதுமாக விலக்கப்பட்டது. தமிழ்நாடு, ஏனைய எல்லா மாநிலங்களுடனும் ஒப்பிடுகையில் மின்வெட்டிலிருந்து அறவே விடுபட்ட மாநிலமாகத் திகழ்கிறது.

மின் உச்சத் தேவை மற்றும் நாள் ஒன்றிற்கு உபயோகப்படுத்தப்படும் மின் சக்தியின் அளவு 3717 மெகாவாட் ஆகவும் 80.65 மில்லியன் யூனிட்டுகளாகவும் 1.4.93 அன்று எட்டி உள்ளது குறிப்பிடத்தக்கதாகும். இது எப்போதும் இல்லாத நிலவரம் ஆகும்.

### மின் நிலையங்களின் நிறுவுதிறன் அதிகரிப்பு

பல்வேறு மின்நிலையங்கள் வாயிலாகப் புதியதாக 226.02 மெகாவாட் அளவு நிறுவுதிறன் கூடுதலாக்கப்பட்டது. இதைத் தவிர தனியார் துறை காற்றாலைகள் 11.75 மெ.வா. திறனில் நிறுவப்பட்டுள்ளன.

### மின் அனுப்புகை மின் பகிர்வில் சாதனைகள்

1991-92-ஆம் ஆண்டில் வரலாறு படைக்கும் அளவில் 41 புதிய துணை மின் நிலையங்கள் நிறுவப்பட்டன. 419.9 கிலோ மீட்டர் நீள புதிய வெகு உயர் அழுத்த மின் பாதைகள் மின் விசையூட்டப்பட்டன. 1992-93-இல் 30 புதிய துணை மின் நிலையங்கள் நிறுவப்பட்டன. 481.83 கி.மீ. நீள புதிய வெகு உயர் அழுத்த மின் பாதைகள் மின் விசையூட்டப்பட்டன.

### புதிய மின் இணைப்புகள்

இந்த அரசில் கடந்த 1992 ஜூலை முதல் ஏப்ரல் 1993 முடிய 7,48,480 புதிய மின் இணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் 26,146 உயர் அழுத்தத் தாழ் மின் அழுத்தத் தொழிற்சாலைகளுக்குப் புதிய மின் இணைப்பு கொடுத்ததும் அடங்கும்.

### புதிய மின் உற்பத்தித் திட்டங்கள்

எட்டாவது ஐந்தாண்டுத் திட்டக்கால இறுதிக்குள் கீழ்க்கண்ட மின் உற்பத்தித் திட்டங்கள் முடிவுற அனைத்துப் பணிகளும் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

1. வட சென்னை அனல் மின் திட்டம் முதல் கட்டம் 630 மெ.வா.

2. பேசின்பாலம் எரிவாயுச் சுழலி மின் திட்டம் 120 மெ.வா.

3. சாத்தனூர் புனல் மின் திட்டம் 7.5 மெ.வா.

4. கீழ் பவானி வடகரைக் கால்வாய் புனல் மின் திட்டம் 8 மெ.வா.

5. காற்றாலைகள் (தனியார் துறை) 100 மெ.வா.

மொத்தம் 865.5 மெ.வா.

இவற்றைத் தவிர மேலும் கீழ்க் குறிப்பிட்டுள்ள இரண்டு புனல் மின் திட்டங்களின் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பைக்காரா இறுதி நிலை புனல் மின் திட்டம் 150 மெ.வா., பார்சன் பள்ளத்தாக்குப் புனல் மின் திட்டம் 30 மெ.வா., மொத்தம் 180 மெ.வா.



ஏழை எளியோர் மற்றும் சாதாரண மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான எங்கள் அரசின் இலக்கும், அவர்களது நியாயமான வாழ்க்கைக்கு உத்தரவாதம் தர எந்தத் தியாகத்தையும் செய்யத் தயாராய் இருக்கிறது.



### விவசாயிகளுக்கான சிறப்புச் சுயநிதித் திட்டம்

ஒவ்வொரு ஆண்டும் கிடைக்கும் கட்டுப்பாடான நிதி நிலையைக் கருத்திற் கொண்டு 40,000 வேளாண்மைப் பம்புசெட்டுகளுக்குப் புதிதாக மின் இணைப்பு வழங்கப்பட்டு வருகிறது. மின்சார வாரியத்தின் நிதி நிலைமைகளைக் கருதி, சென்ற ஆண்டு தொடங்கப்பட்ட சுயநிதித் திட்டம் இந்த ஆண்டும் தொடரப்படுகிறது.

### தெரு விளக்குகளுக்கான சிறப்புச் சுய தன்னிறைவுத் திட்டம்

சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாக 1993-ஆம் ஆண்டு மே வரை 51,219 தெரு விளக்குகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும் 86,061 தெருவிளக்குகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட உள்ளது.

மின் உற்பத்தியில் தனியார் துறை முதலீட்டை ஊக்குவிக்கும் வண்ணம் ரூ.12,600 கோடி அளவில் 3300 மெ.வா. மின் உற்பத்தித் திறன் கொண்ட புதிய திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டள்ளது. கூட்டுத் துறையில் ரூ.7000 கோடி முதலீட்டுடன் 1500 மெ.வா. உற்பத்தித் திறன் கொண்ட ஜெயங்கொண்ட சோழபுரம் பழுப்பு நிலக்கரிச் சுரங்கம் மின் உற்பத்தித் திட்டம், தனியார் துறையில் ரூ.3000 கோடி முதலீட்டுடன் 1000 மெ.வா. உற்பத்தித் திறன் கொண்ட கடலூர் அனல் மின் நிலையம், ரூ.1000 கோடி முதலீட்டுடன் 300 மெ.வா. பிள்ளைபெருமாள் நல்லூர் வாயுச் சுழலித் திட்டம், நெய்வேலி பழுப்பு நிலக்கரியைப் பயன்படுத்தி ரூ.1600 கோடி செலவில் ஒவ்வொன்றும் 250 மெ.வா. மின் உற்பத்தி செய்யும் 2 அனல் மின் நிலையங்கள் ஆகியவை அப்புதிய திட்டங்களாகும். மேலும் ரூ.3000 கோடி அளவில் வட சென்னை அனல் மின் நிலைய 1000 மெ.வா. உற்பத்தித் திறன் கொண்ட 3-ஆம் நிலை விரிவாக்கத் திட்டம், தூத்துக்குடியில் ரூ.1500 கோடி அளவில் 500 மெ.வா. உற்பத்தித் திறன் கொண்ட 4-ஆம் நிலை விரிவாக்கத் திட்டம், தனியார் துறையிடம் ஒப்படைக்க அரசின் பரிசீலனையில் உள்ளன.

### தொழில் நிறுவனங்களுக்குச் சலுகைகள்

மாண்புமிகு முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் அறிவித்துள்ள புதிய தொழில் கொள்கையின்படி உயர் அழுத்தத் தொழிற்சாலைகளுக்கு மின் கட்டணத்தில் பல்வேறு சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.

இதயதெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் வகுத்து அளித்துள்ள இலக்குகளை எய்திட, அயராது பாடுபடுகின்ற வகையில் பொதுப்பணித்துறையின் அங்கங்களான நெடுஞ்சாலைத்துறை, பாசனத் துறை ஆகியவை சிறப்பாகப் பணிபுரிந்து வருகின்றன.



★ நம்பிக்கை எதன்மீது ஏற்பட்டாலும் சரிதான்; அது உண்மையில் நம்பிக்கைக்கு உரியதாக இருக்கவேண்டும்; அப்போதுதான் வெற்றி கிட்டும்.

### காவிரி நீர்

பாசனத்துறையைப் பொறுத்தவரை டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுடைய பொற்கால ஆட்சியில், மேட்டூர் அணையில் இருந்து காவிரி நீர்ப் பாசனத்திற்கு இரண்டாவது முறையாக ஜூன் 12-ந் தேதியே திறந்துவிடப்பட்டது. இது வரலாறு காணாத சாதனையாகும். பல்வேறு மாறுபட்ட சூழ்நிலைகளையும் வென்றுகாட்டி டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுடைய ஆட்சி இந்த மாபெரும் செயலைச் சாதித்துள்ளது.

அதேபோல உச்ச நீதிமன்ற தீர்ப்பினையொட்டி, தமிழகத்தின் காவிரி நீர்ப் பாசன உரிமைகளைக் காத்திட அயராது போராடி வருகிறது.

சென்னைக்குக் குடிநீர் வழங்கும் கிருஷ்ணா நதி நீர்த் திட்டத்தை விரைவுபடுத்தவும், டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுடைய அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது.

### பாசனத்துறை

டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுடைய சீரிய இரண்டு ஆண்டுக்கால ஆட்சியில் ரூ.251 கோடி செலவில் 17 பாசனத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

இவை தவிர ரூ.66.32 கோடி மதிப்புள்ள 4 புதிய பிரதானப் பாசனத் திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### வீராணம் திட்டம்

புதிய வீராணம் திட்டத்தின் அடிப்படையில் வீராணம் ஏரியையும் அதன் நீர் வரத்துக் கால் வாய்களையும் மேம்படுத்த ரூ.60 கோடிக்கான திட்டம் தீட்டப்பட்டு வருகிறது. ரூ.22.50 கோடி செலவில் வடக்கு-பச்சையாறு திட்டமும் தயாராகி வருகின்றது. உலக வங்கியின் உதவியுடன் ரூ.804 கோடி செலவில் பாசன நீர் ஆதாரச் செம்மைக்கான திட்டம் தயார் ஆகி வருகிறது.

### அணைகள் பாதுகாப்பு

உலக வங்கி உதவியுடன் அணைகளைப் பாதுகாக்கவும் மேம்படுத்தவும் ரூ.42 கோடிக்கான திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. கடல் அரிப்பினால் நெடுஞ்சாலைகளையும் மக்களின் வீடுகளையும் பாதுகாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வடசென்னையில் எண்ணூர் நெடுஞ்சாலையைப் பாதுகாக்க ரூ.4.24 கோடியில் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படும். இவை தவிர ஏராளமான மேம்பாட்டுப் பணிகளும் சிறு திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மேலும், பாசன வசதிகளை விரிவுபடுத்தவும் மேம்படுத்தவும் ஏராளமான திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. பல்வேறு நீர்ப் பாசன ஏற்பாட்டு அமைப்புகளின் கீழ் மொத்தம் 1,52,942 எக்டேர் ஆயக்கட்டுப் பகுதிக்குப் பாசன வசதி அளிக்க ஒட்டு மொத்தமாக ரூ.52.70 கோடிக்குத் தமிழ்நாடு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

மேலும் இத் திட்டங்களின் திருத்தப்பட்ட மதிப்பீடு ரூ.74 கோடியாகக் கணக்கிடப்பட்டு தமிழக அரசின் மறுநிர்வாக ஒப்புதலும் பெறப்பட்டுள்ளது.

### நெடுஞ்சாலை ஊரகப்பணித்துறை

கடந்த இரண்டு ஆண்டுகளில் 52,100 கி.மீ. நீளமுள்ள அரசுச் சாலைகள் பராமரிக்கப்பட்டுள்ளன. இதற்கு முன்பிருந்த ஆட்சியில் ஒவ்வொரு ஆண்டும் 3000 கி.மீ. நீளமுள்ள அரசுச் சாலைகள் மட்டுமே புதுப்பிக்கப்பட்டன. ஆனால், டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுடைய ஆட்சியில் 9,122 கி.மீ. நீளமுள்ள சாலைகள் புதுப்பிக்கப்பட்டன. சுமார் 8000 கி.மீ. நீளமுள்ள மோசமான நிலையில் உள்ள அரசுச் சாலைப் பகுதிகளை ரூ.150 கோடி மூலதனத்தில் ஐந்து ஆண்டுகளில் புனரமைத்திட ஓர் புதிய சிறப்புச் சீரமைப்புத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுடைய இரண்டாண்டு ஆட்சியில் 174 பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டன. 282 கி.மீ. நீளமுள்ள சாலைகள் மேம்பாடு செய்யப்பட்டன.

### கிழக்குக் கடற்கரைச் சாலை மேம்பாடு

சென்னையிலிருந்து கன்னியாகுமரி வரை 737 கி.மீ. நீளமுள்ள கிழக்குக் கடற்சரைச் சாலையில் முதல் கட்டமாக சென்னை முதல் கடலூர் வரை கி.மீ. 11/8 முதல் 178/4 வரை ரூபாய் 75 கோடி செலவில் தேசீய நெடுஞ்சாலைத் தரத்திற்கு மேம்பாடு பணி ஆசிய வளர்ச்சி வங்கிக் கடன் உதவியுடன் தொடங்கிச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இச்சாலையில் 249 சிறுபாலங்களைத் திருப்பிக் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கடந்த இரண்டு ஆண்டுகளில் பல சாதனைகள் நிகழ்ந்துள்ளன. தற்போது உள்ள டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுடைய ஆட்சியானது நெடுஞ்சாலைத் திட்டப் பணிகளைக் கருத்தில்

கொண்டு திட்ட மதிப்பை ரூ.150 கோடியாக உயர்த்தி உள்ளது.

மொத்தம் ரூ.5057 இலட்சங்கள் மதிப்பிலான 15 பணிகளுக்கு அரசு நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது. சென்னை, மதுரை, கோயம்புத்தூர், தூத்துக்குடி, ஈரோடு, சேலம், வேலூர் ஆகிய நகரங்களில் கட்டப்படவுள்ள ஐந்து பாலப் பணிகளும் எட்டுச் சாலை மேம்பாட்டுப் பணிகளும், ஒரு சாலை மேம்பாட்டுப் பணியும் இவற்றுள் அடங்கும்.

ஜூன் 1991 முதல் ஜூன் 1993 வரையிலான கால கட்டத்தில் தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சென்னை மற்றும் தூத்துக்குடியில் தலா ஒரு பணியும், மதுரையில் இரண்டு பணிகளும் ரூ.15.70 கோடி செலவில் செய்து முடிக்கப்பட்டன.

கடந்த இரண்டு ஆண்டுகளில் இத்திட்டத்திற்காக ரூ.36.50 கோடி செலவிடப்பட்டுள்ளது. நடப்பு 1993-94-ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு ரூ.24.30 கோடியாகும்.

தேசிய நெடுஞ்சாலைத் துறையில் கடந்த இரண்டு ஆண்டுக் காலத்தில் தாம்பரம்-விழுப்புரம் சாலை மேம்பாட்டுப் பணி ரூ.72 கோடியில் மேற்கொள்ளப்பட்டது. 74 சிறுபாலங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இவை தவிர சென்னை-திருச்சி-திண்டுக்கல் தேசீய நெடுஞ்சாலையிலும் பல மேம்பாட்டுத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

மேலும், கடந்த இரண்டு ஆண்டுக்கால ஆட்சியில் தமிழகத்தில் பல்வேறு தேசிய நெடுஞ்சாலைகளில் 5 பாலங்கள், 22 சிறிய பாலங்கள், கட்டி முடிக்கப்பட்டன. மேலும் 10 சாலைச் சந்திப்புகளில் மேம்பாட்டுப் பணிகள் செய்து முடிக்கப்பட்டன.

இவ்வாறு தமிழ்நாடு அரசு பொதுப்பணித் துறையானது இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சுட்டிக் காட்டுகின்ற திசை வழியில் நடந்து இலக்குகளை நிறைவேற்றி சாதனையை நடத்தி வருகிறது. மக்கள் பணியில் மேலும் முனைப்போடு செயலாற்றிடப் பொதுப் பணித்துறை உறுதி ஏற்கிறது.






நல்வாழ்த்துக்கள்



1. எஸ். கண்ணன்
சகுந்தலா அண்ட் கோ
மண்ணெண்ணெய் மொத்த வணிகர்
கள்ளக்குறிச்சி

2. கே.பி. ராமையா அண்டு சன்ஸ்
மண்ணெண்ணெய் மொத்த வணிகர்
கள்ளக்குறிச்சி



3. தங்கவேல் ஃப்யூல் சர்வீஸ்
மண்ணெண்ணெய் மொத்த வணிகர்
சின்னசேலம்

## தென்னார்க்காடு மாவட்டத்தில்
## கூட்டுறவு நகர வங்கிகளின் சேவைகள்

இனிய வரவேற்பு! இன்முகத்துடன் துரித சேவை!!

**வாடிக்கையாளர்களின் திருப்தியே**
**எங்கள் முதலீடு!**

**எங்கள் கூட்டுறவு நகர வங்கிகளின் சிறப்புச் சேவைகள்**

**உங்கள் முதலீடுகளுக்குக் கவர்ச்சியான வட்டி விகிதங்கள்**

**பிக்சட் டெபாசிட் 46 நாட்களுக்கும், அதற்கு மேலும் 11½%**
**சேமிப்புக் கணக்கு 7%**

**சிறப்புப் பணிகள்**

- உங்கள் முதலீடுகளுக்குத் தேசிய மற்றும் வர்த்தக வங்கிகளைவிட ½ சதவிகிதம் கூடுதல் வட்டி அளிக்கிறது.
- சிறந்த பாதுகாப்புப் பெட்டக வசதிகள்
- அனைத்து டெபாசிட்டுகளுக்கும் இன்சூரன்ஸ் அளிக்கப்படுகிறது.
- செக், டிராப்ட், பில்ஸ் குறைந்த செலவில் அதிவிரைவில் வசூலித்துத் தரப்படுகிறது.
- இந்தியா முழுவதும் உள்ள முக்கிய நகரங்களுக்குக் குறைந்த கமிஷனில் டிராப்டுகளை வழங்குகிறது.
- சிறுதொழில் கடன்கள், சுயவேலை வாய்ப்புக் கடன், வாகனக் கடன்கள், பிற்படுத்தப்பட்ட நலிந்த சமுதாயத்தவர் முதலானவர்களுக்கும் நிதி உதவி செய்து வருகிறது.
- ரிசர்வ் வங்கியின் உரிமம் பெற்றது.

இன்னும் பல புதுமையான கவர்ச்சியான பிக்சட் டெபாசிட் திட்டங்கள்,
ரெக்கரிங் டெபாசிட் திட்டங்கள், ரொக்கச். சான்றிதழ்த் திட்டங்கள்

உங்கள் வருங்காலக் கனவுகள் நனவாக இன்றே உங்கள்
அருகாமையிலுள்ள கூட்டுறவு நகர வங்கிகளை அணுகுவீர்!

1. விழுப்புரம் கூட்டுறவு நகர வங்கி
   149, திரு.வி.க. ரோடு, விழுப்புரம்
   தொலைபேசி எண்: 2539
2. சிதம்பரம் கூட்டுறவு நகர வங்கி
   101, வடக்கு வீதி, சிதம்பரம்
   தொலைபேசி எண்: 2380
3. திருக்கோயிலூர் கூட்டுறவு நகர வங்கி
   9, மார்க்கட் தெரு, திருக்கோயிலூர்
   தொலைபேசி எண்: 332
4. விருத்தாசலம் கூட்டுறவு நகர வங்கி
   64, தென் கோட்டை வீதி, விருத்தாசலம்
   தொலைபேசி எண்: 534
5. திண்டிவனம் கூட்டுறவு நகர வங்கி
   நகராட்சி அலுவலகம் எதிரில், திண்டிவனம்
   தொலைபேசி எண்: 2130






# குடும்பத்திற்கு ஒரு வீடு

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும்
நகர்ப்புற வளர்ச்சி அமைச்சர்
**திரு சே. ரகுபதி**

**தங்குவதற்கு வீடு இல்லாதவர் தமிழகத்தில் இல்லை என்று சொல்லும் வண்ணம் 'குடும்பத்திற்கு ஒரு வீடு' வழங்குவதை அரசு, குறிக்கோளாகச் செயல்படுத்தி வருகின்றது.**



உலகின் உன்னதத் தலைவி மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் தமிழகத்தின் அரியாசனத்தை அலங்கரித்து இரண்டாண்டுகள் ஆகிவிட்டன. ஆண்டுகள் இரண்டேயெனினும் அவர்கள் நிகழ்த்திய அற்புதங்கள் எண்ணிலடங்காதவை. இந்தியத் துணைக் கண்டத்தின் மற்ற மாநிலங்களை ஆள்வோரைக் காட்டிலும் விரைந்து செயல்படும் ஆற்றலும், எண்ணியதை முடிக்கும் நெஞ்சுரமும் நம்முடைய இதயதெய்வத்திற்கு இருப்பதால்தான் சாதனைப் பாதையிலே தமிழகம் முந்தி நிற்கிறது.

எத்தனையோ ஆண்டுகளில் சாதிக்க வேண்டிய மகத்தான சாதனைகளையெல்லாம் இரண்டே ஆண்டுகளுக்குள் சாதித்துப் புதிய சரித்திரம் படைத்திருக்கும் நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வரின் ஆட்சித் திறனையும், நிர்வாக நேர்மையையும் பாராட்டாதவர்கள் பாரில் இருக்க முடியாது.

ஈராண்டுச் சாதனைகளை இனிதாக முடித்து, மூன்றாம் ஆண்டு சாதனைக் காப்பியத்திற்கு முகவுரை எழுதத் தொடங்கியிருக்கும் நாம் சென்ற ஈராண்டுகளைத் திரும்பிப் பார்க்கிறோம், சிந்தையிலே மகிழ்ச்சி மலர்கள் பூத்துக் குலுங்குகின்றன. அப்படிப்பட்ட சாதனைகளைத்தான் புரட்சித்தலைவியின் புனித அரசின் எல்லாத் துறைகளும் இனிதாக ஆற்றியிருக்கின்றன. அதிலே வீட்டு வசதித் துறை நாட்டிற்கு ஆற்றிய நற்பணிகளை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

கல்லாதவர் நாட்டில் இல்லாதவர் என்று இனிய இலட்சியத்தோடு எல்லாருக்கும் கல்வி தரும் இந்த இனிய அரசு, தங்குவதற்கு வீடு இல்லாதவர் தமிழகத்தில் இல்லை என்று சொல்லும் வண்ணம் "குடும்பத்திற்கு ஒரு வீடு" வழங்குவதைக் குறிக்கோளாகச் செயல்படுத்தி வருகின்றது.

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை என்ற பேராறு,

1. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்,
2. தமிழ்நாடு குடிசைப்பகுதி வாரியம்
3. வீட்டுவசதி கூட்டுறவுச் சங்கங்கள்

என்ற மூன்று கிளை நதிகளாகப் பிரிந்து மக்களுக்கு மகத்தான சாதனைப் படைத்து வருகின்றது.

சென்னை மாநகரில் நகர மேம்பாட்டுத் திட்டப்பணி சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இம்மாநிலத்தின் இதரப் பகுதிகள் நகர் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் நகர் ஊரமைப்பு இயக்கத்தால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

1991-92-ஆம் ஆண்டில் ரூ.245.01 கோடி செலவில் 81,828 ஏற்றமிகு வீடுகள் மேற்கூறிய முகமைகளால் கட்டப்பட்டு மேம்படுத்தப்பட்டுள்ளன. 1992-93-ஆம் ஆண்டில் 255.02 கோடி செலவில் 82,992 எழில்மிகு வீடுகள் அந்த முகமைகளால் கட்டப்பட்டு மேம்படுத்தப்பட்டுள்ளன.

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற முகமைகளால் ஆற்றப்பட்டுள்ள அரும்பணிகள் பற்றியும் அவற்றிக்குச் செலவிடப்பட்ட நிதி விவரம்

# ஓங்கி வளரும் ஊரகத் தொழில்கள்!

மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர்

**திரு. துரை ராமசாமி**

**1991-92-ஆம் ஆண்டிலிருந்து அடுத்த ஐந்தாண்டுகளில் ஒரு இலட்சம் சிறு தொழில்கள் அமைத்திட வேண்டுமென நிர்ணயித்துள்ள இலக்கின் அடிப்படையில் கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் 40,999 நிரந்தரச் சிறு தொழில் பதிவுச் சான்றிதழ்கள் வழங்கப் பட்டுள்ளன.**

நாட்டின் தொழில் முன்னேற்றத்தில் தமிழகம் ஒரு முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. 2000 பெரும் தொழில்களையும் 1.5 இலட்சம் பதிவு செய்யப்பட்ட சிறிய தொழில்களையும் கொண்டு நாட்டின் தேவைகளைத் தன்னிறைவு செய்திடும் பணியில் சிறப்புப் பெற்றுள்ளது.

பதப்படுத்தப்பட்ட தோல், பின்னலாடைகள், பருத்தித் துணிகள், பொறியியல் சாதனங்கள், சர்க்கரை, எரிசாராயம் ஆகியவற்றின் உற்பத்தியில் தமிழகம் முக்கியப் பங்கினை ஏற்றுள்ளது. நாட்டின் மொத்த ஏற்றுமதியில் 12.5 சதவிகிதம் தமிழ்நாட்டில் இருந்து ஏற்றுமதி செய்யப்படுகிறது. தோல், தோல் பொருட்கள், பருத்தித் துணிகள், கிரானைட் பாறைகள், கடற்பொருட்கள், ஆயத்த ஆடைகள் ஏற்றுமதியில் முன்னணியில் உள்ளன.

நமது மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெயலலிதா அவர்களின் தலைமையின்கீழ், தமிழ்நாடு நாட்டின் தொழில் துறையில் முன்னணி வகிக்கும் வகையிலும் மற்றும் தொழில் முன்னேற்றத்திலும் முக்கிய அம்சம் வகிக்கிறது.

நமது புரட்சித்தலைவி அவர்கள் பல்வேறு துறைகளைச் சார்ந்த தொழில் அதிபர்களுடன் ஆலோசனை நடத்தி அவர்களது பிரச்சினைகளைக் கேட்டறிந்து அவற்றைக் களைவதிலும், முன்னேற்றத்தை ஊக்குவிப்பதிலும் அதற்குத் தேவையான நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஜனவரி, 1992-இல் புதிய தொழில் கொள்கையை அறிவித்துள்ளார்.

கீழ்க்காணும் தொழில்கள் வளர்ச்சிக்குரிய சிறப்புத் தொழில்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.



தோல், துணிகள் மற்றும் பின்னலாடைகள், மின்னணுப் பொருள் மற்றும் சாப்ட்வேர், இயந்திரப் பாகங்கள், மருந்து மற்றும் மருந்துப் பொருள்கள், பெட்ரோலிய இரசாயனங்கள் - மணலி மற்றும் தஞ்சாவூரில் செயல்படும் திட்டங்கள், தொழில் உபயோகத்திற்கான எரிசாராயம், விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட தொழில்கள், உப்பு மற்றும் கடல் சார்ந்த தொழில்கள், நகைகள் மற்றும் செயற்கை வைரங்கள், பொறியியல் பொருட்கள், கடல் உணவுப் பண்டப் பொருட்கள், ஏற்றுமதிக்கான பொருட்கள் உற்பத்தி செய்யும் தொழிலகங்கள்.

வேகமான தொழில் முன்னேற்றத்திற்கான அடிப்படை வசதிகள் ஏற்படுத்துவதைக் குறித்தும் மற்றும் தொழில்மயம் ஆக்குவதற்கான நடவடிக்கைகள் குறித்தும் கொள்கை விளக்கக் குறிப்பில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. மின் வசதியினை முன்னேற்றம் செய்யும் வகையிலும் மின் உற்பத்தியில் தனியார் துறையினர் ஈடுபடுத்துவதற்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

### புதிய செயல்நோக்கம்

மாநிலத்தில் கடுமையான நிதிப் பற்றாக்குறை இருந்த போதிலும், வளர்ச்சிக்கு மேலும் என்ன முயற்சிகள் மேற்கொள்ளவேண்டும் என்ற அரசின் செயல் வேகத்தை இது பாதிக்கவில்லை. புதிய தொழில் ஊக்குவிப்புத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. உதாரணமாக, புதிய மற்றும் விரிவாக்கத் தொழிலுக்கான 15 சதவிகித மூலதன ஊக்கத்தொகை அளிக்கப்படுகின்ற பிற்பட்ட வட்டங்களின் எண்ணிக்கை 76-விருந்து 82-ஆக உயர்ந்துள்ளது.

இந்த 82 பிற்பட்ட வட்டங்கள் தவிர, எல்லாத் தொழில் மேம்பாட்டுப் பகுதிகளிலும் மற்றும் அரசினால் மேம்படுத்தப்படும் கூட்டுறவுத் தொழில் பேட்டைகளுக்கு மற்றும் திருப்பூர் அருகிலுள்ள முதலிபாளையம் பின்னலாடைத் தொழிற்கூடங்களுக்கும் 15 சதவிகித மாநில மூலதன ஊக்கத்தொகை கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும் இந்த ஊக்கத்தொகை மதுரை மாவட்டம் வேடத்துக்குளம் பகுதியில் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சிக் கழகத்தினால் நிறுவப்படும் பின்னலாடைத் தொழிற்பேட்டைக்கும் இந்த ஊக்குவிப்புத் தொகை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

மிகவும் பிற்படுத்தப்பட்ட 31 வட்டங்களுக்கு மூலதன ஊக்குவிப்புத் தொகை 20 சதவிகிதத்திலிருந்து உயர்த்தப்பட்டுள்ளது. இந்த ஊக்குவிப்புத்தொகை ரூ.20 இலட்சத்திற்கு மிகாமல் இருக்கும். சிறு தொழிலுக்கான மூலதன ஊக்குவிப்புத் தொகை, பகுதி பகுதியாகத் தொழில் முனைவோருக்கு உதவும் வகையில் அளிக்கப்படுகிறது.

### குறைந்த மின் அழுத்த இணைப்பிற்கான மின்சார மானியம் உயர்வு

குறைந்த மின் அழுத்த இணைப்பிற்கான மின்சார மானியம் முதல் ஆண்டில் 10 சதவிகிதத்திலிருந்து 20 சதவிகிதமாகவும், இரண்டாவது ஆண்டில் 20 சதவிகிதத்திலிருந்து 30 சதவிகிதமாகவும், மூன்றாவது ஆண்டில் 30 சதவிகிதத்திலிருந்து 40 சதவிகிதமாகவும் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.

### தெரிவு செய்யப்பட்ட மின்னணு தொழிற்பேட்டைக்கான விற்பனை வரி தள்ளுபடித் திட்டம்

மிகவும் பிற்படுத்தப்பட்ட 31 வட்டங்களில் நிறுவப்படும் புதிய தொழிலகங்கள் அல்லது விரிவாக்கத்தில் ஈடுபட்டுள்ள தொழிலகங்கள் மற்றும் கடலூர், புதுக்கோட்டை, மானாமதுரையில் உள்ள சிப்காட் தொழில் மையங்களுக்கு முதல் ஐந்தாண்டுகளுக்கு மூலதனம் செய்யப்பட்டுள்ள தொகையில் 100 சதவிகித விற்பனை வரி தள்ளுபடித்திட்டத்திற்குத் தகுதியுடையதாகிறது. இந்தச் சலுகை சோளிங்கநல்லூரிலுள்ள மின்னணு நகரத்திற்கும், டாக்டர் விக்ரம் சாராபாய் மின்னணுத் தொழிற்பேட்டைக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

### தொழில் துறையில் மகளிருக்கென வேலைவாய்ப்பினை ஏற்படுத்த சிறப்பு நடவடிக்கைகள்

மகளிருக்கென வேலைவாய்ப்பினை அதிகப்படுத்த, சிறப்பு ஊக்குவிப்புத் தொகை புதிய தொழிலகங்களுக்கு அளிக்கப்படுகிறது. மேலும் இந்தத் தொழிலகங்களுக்கு 5 சதவிகித மூலதன ஊக்குவிப்புத்தொகை அதிகபட்சம் ரூ.5 இலட்சம் வரை 19.9.91 முதல் அளிக்கப்பட்டு வருகிறது. புதிய தொழிற்பேட்டை தொழில் மையங்களில் 30 சதவிகித தொழிற்கூடங்களும்/மனைகளும் மகளிர் தொழில் முனைவோர்களுக்காக ஒதுக்கப் பட்டுள்ளது.

சிறப்புத் தொழில் முனைவோருக்கான மேம்பாட்டுத் திட்டம், மதுரை-காமராசர் பல்கலைக்கழகம், அன்னை தெரசா பல்கலைக்கழகம், தொழில் மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைக் கழகம் ஆகிய நிறுவனங்களின் தீவிர ஈடுபாட்டுடன் செயல்படுத்தப்படுகிறது. 1991-92 மற்றும் 1992-93-ஆம் ஆண்டுகளில் ஒவ்வொரு ஆண்டும் 800 மகளிர் தொழில் முனைவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

சிறு மற்றும் மிகச்சிறிய தொழில்களுக்கெனப் பல சிறப்புக் கொள்கை நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டிருக்கிறோம். தொழில்களுக்குத் தேவைப்படும் பல்வேறு சட்ட ரீதியான உரிமங்கள் அனைத்தையும் ஒரே இடத்தில் வழங்கிட ஒருமுனைத் திட்ட அமைப்பினை ஏற்படுத்திடவும் உத்தேசித்துள்ளோம். சிறு தொழில்கள் நலிவுறுவதற்குரிய பல்வேறு காரணங்களில் அவற்றிடமிருந்த பொதுத் துறை நிறுவனங்கள் பெற்றுக் கொள்ளும் வசதிகளுக்கு வழங்க வேண்டிய கட்டணத் தொகைகள் செலத்துவதில் ஏற்படும் தாமதங்கள் மிகவும் முக்கியமான ஒன்று என்பதைக் கண்டறிந்தவுடன் தொழிற் துறையின் அரசு முதன்மைச் செயலரின் தலைமையின் கீழ் ஒரு உயர்மட்டக் குழுவினை ஏற்படுத்தி சிறு தொழில்களுக்குச் சேரவேண்டிய கட்டணத்தொகைகளைத் தாமதமின்றிச் செலுத்தப்படுவதனைக் கண்காணித்திட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.



மிகச் சிறிய தொழில்களுக்குத் தேவைப்படும் நிதி ஆதாரங்கள் அவற்றிற்குத் தாமதமின்றிக் கிடைத்திடுவதை உறுதிப்படுத்திட ஒரு சிறப்புக் குழுவையும் அமைத்திருக்கிறோம். தொழிற்கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவைப்படும் நிதி வசதியை அளிப்பதோடு மிகச் சிறு தொழில் துறை முழுவதற்கும் தேவைப்படும் நிதி வசதியையும் அளித்திடும் ஒரு ஆதார அமைப்பாகத் 'தாய்கோ' வங்கியை மாற்றியமைத்திடவும் எண்ணியிருக்கிறோம். சிறு தொழில்களுக்குச் சான்றிதழ் வழங்குமுறையினை எளிதாக்கிட அரசு சிறப்புக் கவனம் செலுத்தி சிறு தொழில்களுக்குத் தற்காலிக மற்றும் நிரந்தரப் பதிவுச் சான்றுகள் உடனுக்குடன் வழங்கிடும் வகையில் சீரமைக்கப் பட்டுள்ளது.

### குறிப்பிடத்தக்க முன்னேற்றம்

கடந்த இரண்டு ஆண்டுக்காலமாக மேற்கொள்ளப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளின் விளைவாக மாநிலத்தில் சிறு தொழில்களின் வளர்ச்சியில் புதிய வேகம் ஏற்பட்டுள்ளது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் 1991-92-லிருந்து அடுத்த ஐந்தாண்டுகளில் ஒரு இலட்சம் சிறு தொழில்கள் அமைத்திட வேண்டுமென நிர்ணயித்துள்ள இலக்கின் அடிப்படையில் கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் 40,999 நிரந்தரச்சிறு தொழில் பதிவுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. 1991-92, 1992-93-ஆம் ஆண்டுகளில் மகளிர் தொழில் முனைவர் பயிற்சித் திட்டத்தின் கீழ் பயிற்சி அளிக்கப்பட்ட 1500 மகளிரில் 225 மகளிர் தமது சொந்தத் தொழிற்கூடங்களை அமைத்துள்ளனர். மேலும் 686 மகளிர் அதுபோன்ற சொந்தத் தொழிற்கூடங்கள் அமைத்திட ஆரம்பக் கட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

### தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள்

நலிவடைந்த பிரிவினர் மற்றும் கிராமப்புறக் கைவினைஞர்களின் மேம்பாட்டிற்காகவும் தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் பெரும்பங்காற்றி வருகின்றன. கிராமப்புறக் கைவினைஞர்களுக்கென அமைப்பு ரீதியிலான ஏற்பாடு ஏதும் இல்லாமல் இருக்கிறது. இதுபோன்ற நலி

வுற்ற கைவினைஞர்களின் தனித் திறமையை ஊக்குவித்திட தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் ஒரு நல்ல அமைப் பாக அமைந்துள்ளன.

தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள், தேயிலை, தீப்பெட்டி, கயிறு, சவ்வரிசி, தோல் பதனிடுதல், உலோகத்தகடுகள் பொறியியல், கைத்தொழில், தையல், பாலிதீன் போன்ற பல்வேறு தொழில் களை உள்ளடக்கியுள்ளன. 1993 மார்ச் திங்கள் இறுதியில் செயல்பட்டு வந்த 386 தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் ரூ.142.93 கோடி அளவிற்கு உற்பத்தி செய்து ரூ.169.53 கோடி அளவிற்கு விற்பனை செய்துள்ளன.

கூட்டுறவு முறையில் அமைக்கப்பட்ட தொழிற்பேட்டைகள், சிறு மற்றும் மிகச் சிறிய தொழில்களுக்குத் தேவைப்படும் தொழிற்கூடங்கள், செப்பனிட்டமனைகள், நீர்வசதி மற்றும் இதர அடிப்படைத் தேவைகளைச் சகாயமாகக் கிடைத்திடச் செய்வதன் மூலம் அவற்றின் வளர்ச்சிக் கும் மேம்பாட்டிற்கும் உதவிடுகின்றன.

தமிழ்நாடு அரசும், ஆயுள் காப்பீட்டுக் கழகமும் கூட்டுறவுத் தொழிற்பேட்டைகள் அமைப்பதற்குத் தேவைப்படும் நிதி வசதியை மிகக் குறைந்த வட்டி வீதத்தில் வழங்கியுள்ளன. தொழிற்கூடங்களையும், செப்பனிட்ட மனைகளையும் கூட்டுறவுத் தொழிற்பேட்டைகளின் உறுப்பினர்களா கவுள்ள தொழில் முனைவர்களுக்குத் தவணைகள் அடிப்படையில் அளிக்கப் பட்டுள்ளன.

இதுவரை 10 கூட்டுறவுத் தொழிற் பேட்டைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றில் 5 இயங்கி வருகின்றன. இதரத் தொழிற்பேட்டைகள் நிறுவப்பட்டு வரு கின்றன.

### தமிழ்நாடு தொழிற்கூட்டுறவு வங்கி

தொழிற்கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதியுதவி வழங்குவதற்கென்றே 1961-ஆம் ஆண்டில் தமிழ்நாடு தொழிற்கூட்டுறவு வங்கி பதிவு செய்யப்பட்டது. இவ்வங்கி, தற்பொழுது 13 கிளைகளுடன் செயல் பட்டு வருகிறது. 1970-ஆம் ஆண்டில் ரூ.0.36 கோடியாக இருந்த, இதன் வைப்புத் தொகை, 1993-ஆம் ஆண்டில் ரூ.10.49 கோடியாக அதிகரித்துள்ளது. இது, ஒவ்வொரு ஆண்டும் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ.14 கோடி கடனுதவி அளிக்கின்றது. சின்னஞ்சிறு தொழில்களுக்கு நடைமுறை மூலதனம் மற்றும் தவணைக் கடன் வழங்கும் பொருட்டு, 'தாய்கோ' வங்கியின் அமைப்பு முறை மாற்றியமைக்கப்பட்டு வருகிறது.

### தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் பங்கு

தமிழ்நாட்டில் சிறு தொழில்களின் வளர்ச்சிக்கு, சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ) கீழ்க்கண்ட உதவி களை அளித்து வருகிறது.

1. புதிய தொழிற்பேட்டைகளை ஏற் படுத்துவது

2. சிறு தொழில் நிலையங்களுக்குக் கிடைத்தற்கரிய மூலப்பொருள்களை வழங்குவது.

3. சிறு தொழில்களின் உற்பத்திப் பொருள்களுக்கு விற்பனை வசதியனை ஏற்படுத்தித் தருவது.

கடந்த இரண்டாண்டுகளில், சிட்கோ, திருப்பூருக்கருகில் முதலிபாளையம், ஊரப்புளி இராமநாதபுரம், ஆண்டிப் பட்டி, கணபதிபாளையம், வீரபாண்டி, கரூர், குடிமங்களம், பல்லடம், மானா மதுரை, பரமக்குடி, வி.காங்கேயன் பாளையம், மதுரை, நாமக்கல் ஆகிய இடங்களில் 12 புதிய தொழிற்பேட்டை களை அமைத்துள்ளது. தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளில் 282 தொழிற் கூடங்கள் கட்டப்பட்டுள்ளன. சிட்கோ, இதுவரை மாநிலத்தில் மொத்தம் 5,050 ஏக்கர் பரப்பளவில் 58 தொழிற்பேட்டை களை அமைத்து ரூ.140 கோடி மொத்த மதிப்பில் 3,440 தொழிற்கூடங்களைக் கட்டியுள்ளது.

தொழில் முனைவர்களுக்குத் தொழிற் கூடங்கள் தவணைக் கொள்முதல் அடிப் படையிலும், ஒட்டு மொத்த கொள்முதல் அடிப்படையிலும் ஒதுக்கப்படுகின்றன. இதுவரை, 2,200 தொழிற்கூடங்கள் ஒட்டு மொத்த கொள்முதல் அடிப்படை யின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ளன. 1,200 தொழிற்கூடங்கள் தவணைக் கொள்முதல் முறையின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ளன. மேலும் 50 தொழிற்கூடங்கள் விரைவில் அம்பத்தூரில் வர இருக்கின்றன.

சென்னையிலிருந்து 17 கி.மீ. தூரத்திலுள்ள திருமுடிவாக்கத்தில் 400 ஏக்கரில் தோல் தொழில் வளாகம் ஒன்றும், கிண்டி தொழிற்பேட்டையில் மின்னணுத் தொழில் வளாகம் ஒன்றும் அமைக்கப்பட உள்ளன.

இரும்பு மற்றும் எஃகு நிலக்கரி, தீக்குச்சி மெழுகு, பாரபின் மெழுகு பொட்டாசியம் குளோரேட், துத்தநாகம் மற்றும் கொழுப்பு அமிலம் முதலிய கிடைத்தற்கரிய மூலப்பொருள்களைச் சிறு தொழில்களுக்கு சிட்கோ வழங்கு கிறது. தமிழ்நாட்டில் 1991-92-இல் ரூ.95 கோடி மதிப்பில் மூலப்பொருள் களும், 1992-93-ஆம் ஆண்டில் ரூ.76 கோடி மதிப்பில் மூலப்பொருள்களும் சிறு தொழில்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

சிட்கோ நிறுவனம், சிறு தொழில் நிலையங்களின் உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்வதற்கு உதவியளித்து வரு கிறது. சிறு தொழில் நிலையங்களுக்காக 1991-92-ஆம் ஆண்டில் ரூ5.5 கோடி மதிப்புள்ள பொருள்களும், 1992-93-ஆம் ஆண்டில் 25.5. கோடி மதிப்புள்ள பொருள்களும் விற்பனை செய்வதற்கு ஆணைகள் பெற்றுத் தரப்பட்டன.

கடந்த ஆண்டில், ஜப்பானிய நாட்டு உதவியுடன் சிட்கோ நிறுவனம் அதி நுட்பத் தனித் தொழிற்பேட்டைகளைத் துவக்கி செயல்படுத்தி வருகிறது. இத் திட்டத்தின்கீழ், சிட்கோ நிறுவனம், சிறுதொழில் துறையின் தொழில் நுட்ப வியலை மேம்படுத்தி 3 அதிநுட்பத்தனித் தொழிற்பேட்டைகளை அமைத்து வருகிறது. இத்தொழிற்பேட்டைகளில் அமைக்கப்படும் தொழில் நிலையங்களின் நலனுக்கெனப் பொதுப்பணி வசதிகளும் அளிக்கப்படும். தவணைக் கொள்முதல் மற்றும் குத்தகைத் திட்டத்தின்கீழ், இயந்திரச் சாதனங்கள் வாங்குவதற்குத் தமிழ்நாட்டிலுள்ள சிறு தொழில்களுக்குப் புதிய சலுகைத் திட்டத்தினை சிட்கோ வகுத்துள்ளது.

தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் இதுவரை எந்த ஆண் டிலும் இல்லாத அளவிற்கு 1991-92 மற்றும் 1992- 93-ஆம் ஆண்டுகளில் முறையே ரூ.20 மற்றும் ரூ.30 இலட் சங்கள் இலாபம் ஈட்டியுள்ளது. மேலும் ஏற்றுமதி செய்ய வாய்ப்புள்ளதா என் பதைப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

தமிழ்நாடு தோல் நிறுவனம் நட்டத் தில் இயங்கிக் கொண்டிருந்தது. இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொறுப் பேற்ற பிறகு இரண்டு ஆண்டுகளில் சுமார் ரூ.87 இலட்சம் இலாபம் ஈட்டி யுள்ளது.

எனவே, ஆர்வமுள்ள தொழில் முனைவர்கள், மாநிலத்தில் முதலீடு செய்வதற்குத் தமிழ்நாடு நல்ல வாய்ப் பைப் பெற்றுள்ளது என்பது தெளி வாகிறது.

நல்ல தொழிலியல் அடிப்படைப் பயிற்சி பெற்ற மனித சக்தி, நல்ல அத்தியாவசிய வசதிகள், கட்டுப்பாட்டுக் குட்பட்ட தொழிலாளர்கள் இவற்றால் தொழில் வளர்ச்சிக்கு மிகவும் உகந்த மாநிலமாகத் தமிழகம் திகழ்கிறது.



# ஈராண்டுகளில் இருபதாண்டுச் சாதனைகள்

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்
**திரு. கு.ப. கிருஷ்ணன்**

'பாட்டுடைத் தலைவியாம் புரட்சித் தலைவியின் ஆட்சியில் சாதிமத உணர் வுகள் ஒருசேரக் கைகோத்து நடந்தன; வேளாண்மைத் துறையில் பசுமைப் புரட்சி பார்போற்ற நடக்கிறது; ஈராண்டு களில் இருபதாண்டுச் சாதனைகள் படைக்கப்பட்டுள்ளன...'



பரந்த சமவெளியும், பாய்ந்து வரும் ஆறுகளும்,
காற்றைக் கிழித்துப் புள்ளினங்கள்
கடக்க முடியாத ஏரிகளும்,
ஊர்தோறும் ஊருணிகளும்
கணக்கில்லாமல் பெற்றிருந்தும்,
காடுகள் விளையவில்லை,
கழனிகள் செழிக்கவில்லை,
ஆதிக்க வெறியரிடமிருந்து அடிமைத் தளைதனை நீக்கி
அனைவரும் சுதந்திரத்தை அனுபவிக்கச் செய்துவிட்டு,
தடியை மட்டுமே தன் கையில் கொண்டிருக்கும்
கஸ்தூரிபாய் கணவனைப் போல்,
நாட்டில் அனைவருக்கும் உய்ய உணவளித்து,
பிறஉயிரைத் தம்முயிர் போல் எண்ணும் பேதை மகன்,
ஏர் மோழியை மட்டும் தன் தோளில் சுமந்தவன்
வாழ்வும் வதங்கிக் கொண்டிருக்க,
ஆலைகள் மூட, அற நிலையங்கள் வெறிச்சோட,
'பேயரசு செய்தால் பிணம் தின்னும் சாத்திரங்கள்' என்னும்
பாரதியின் அக்கினி வரிகள் அரங்கேறிக்கொண்டிருக்க,
அல்லலுற்ற மக்கள்,
''இவர்கள் ஆண்டதும் போதும்,
மக்கள் மாண்டதும் போதும்'' 'என்று,
பஞ்சையாய்ப் பராரியாய் வாழ்வதற்கு
முற்றுப்புள்ளி வைக்க முடிவு தேடியலைந்தார்கள்,
புதுவாழ்வு பிறக்க
புரட்சிப் பூவாய்,
புதியதோர் புறநானூற்றுப் பாடலாய்,
மக்கள் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் மனம் கவர்ந்த தலைவி
மக்களைப் புரிந்துகொண்ட தலைவி
புவியாள வந்தாலொழிய
புலராது பொழுது என ஏங்கி நிற்க,
கொடுங்கோலராட்சி கோட்டையில் இருந்து சரிந்தது,





பற்றியும் கீழே காணலாம்.

**1. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்:**

1991-93-ஆம் ஆண்டுகளில், குறைந்த வருவாய், நடுத்தர வருவாய் மற்றும் உயர் வருவாய்ப் பிரிவினர்களுக்கு ரூ.167.61 கோடி செலவில் 13,867 வீடுகள் இவ் வாரியத்தால் கட்டப்பட்டுள்ளன.

சிறிய மற்றும் நடுத்தர நகரங்களில் வீட்டுவசதியை ஊக்குவிக்கும் பொருட்டு, 1991-ஆம் ஆண்டு முதல் நடப்பு ஐந்தாண்டுகளில் ஒரு இலட்சம் வீடுகள் கட்டும் உன்னதத் திட்டத்தை இந்த அரசு ஏற்படுத்தியுள்ளது. 1991-93-ஆம் ஆண்டுகளில், இத்திட்டத்தின்கீழ் 26 சிறிய மற்றும் நடுத்தர நகரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, ரூ.62 கோடி செலவில் 6,548 வீடுகள் கட்டுவதற்கும் மற்றும் 2,729 மனைகள் மேம்படுத்துவதற்கும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

இத்திட்டம், சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கும் வீடுகள் வழங்கப்படும் வகையில் அமைக்கப்படும் ஒரு உயரிய திட்டமாகும். இரண்டாவது கட்டமாக அடுத்த இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளில் 10,361 வீடுகளை ரூ.43 கோடி செலவில் மேலும் 31 நகரங்களில் இத்திட்டம் உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ், 1991-93-ஆம் ஆண்டுகளில், 29,000 வீட்டு மனைகள் ரூ.70 கோடி செலவில் உருவாக்கப்பட்டுள்ளன. நலிவுற்றோர் வாழ்வை மேம்படுத்த முற்படும் இவ்வரவு இதில் 50 விழுக்காடு பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன.

மாநில அரசு ஊழியர்களுக்கு வீடுகள் வழங்குவதை முக்கியக் கருத்தில் கொண்டு, 1991-93-ஆம் ஆண்டுகளில் ரூ.10 கோடி செலவில் 970 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

**2. தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்:**

குடிசைவாழ் மக்களின் நலத்தினைக் கருத்தில் கொள்ளுவதே இந்த அரசின் சிறப்புக் கொள்கையாகும். 1991-93-ஆம் ஆண்டுகளில் எல்லாவித இயற்கைச் சீற்றங்களினால் ஏற்படும் இன்னல்களையும் தாங்கும் விதத்தில், ரூ.23.60 கோடி செலவில் குடிசைவாழ் மக்கள் பயன்பெறும் வகையில் 8,473 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. இது தவிர, 1991-93-ஆம் ஆண்டுகளில், தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ், குடிசைப்பகுதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டு, 59,000 குடும்பங்கள் பயன்பெறும் வகையில் ரூ.6.56 கோடி செலவிடப்பட்டுள்ளது.

விரைவுபடுத்தப்பட்ட குடிசை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், குடிசைவாழ் மக்களுக்கு அடிப்படை வசதிகள் அளிக்கப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ், 1991-93-ஆம் ஆண்டுகளில், ரூ.3 கோடி செலவிடப்பட்டு, 20,000 குடும்பங்கள் இத்திட்டத்தால் பயனடைந்துள்ளன.

நடைபாதைவாசிகளுக்கு மறுவாழ்வு அளிக்கும் வகையில், ரூ.1.78 கோடி செலவிடப்பட்டு 1996 நடைபாதைவாசிகளுக்கு வீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்கான திட்டத்தின்கீழ், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் ரூ.8.52 கோடி செலவில் 7,108 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன.

**3. வீட்டுவசதிக் கூட்டுறவுச் சங்கங்கள்:**

தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம், கூட்டுறவு வீட்டுவசதிப் பிரிவின் கீழ் வீடுகட்டும் பணியில் இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலக் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களிலும் முதன்மை நிறுவனமாக இயங்கி வருகின்றது. தமிழக அரசின் நிர்வாகத்திறன் இந்தியாவிலேயே சிறந்து விளங்குவதற்கு இது ஓர் இனிய எடுத்துக்காட்டு.

1991-93-ஆம் ஆண்டுகளில் இந்த இணையம், கிராமப்புற மற்றும் நகர்ப்புற வீட்டுவசதித் திட்டங்களின் கீழ் வீடுகள் கட்டுவதற்கு ரூ.239 கோடி கடனாக வழங்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. 1959-ஆம் ஆண்டு முதல் 1991-ஆம் ஆண்டு வரை இந்த இணையத்தால் வழங்கப்பட்ட கடன் தொகை ரூ.594 கோடியாகும். எனவே, கடந்த 1991-93-ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட கடனுதவியானது, கடந்த 32 ஆண்டுகளில், அதாவது 1959-ஆம் ஆண்டு முதல் 1991-ஆம் ஆண்டு வரை இவ்விணையத்தால் வழங்கப்பட்ட கடன் தொகையில் 40 விழுக்காடு ஆகும் என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

இந்த அரசு, இந்தியாவிலேயே முதன்முறையாக, கிராமப்புறங்களில் வீட்டுவசதியை மேம்படுத்துவதற்கு ஒரு திட்டத்தை ஏற்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின்கீழ், 1991-93-ஆம் ஆண்டுகளில் ரூ.10 கோடி செலவில் 40,000 குடும்பங்கள் பயனடைந்துள்ளன.



1991-92-ஆம் ஆண்டில், கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில், ரூ.111.38 கோடி செலவில் 42,350 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. இதைப் போன்று, 1992-93-ஆம் ஆண்டில் இத்திட்டங்களின் கீழ் ரூ.117.02 கோடி செலவில் 43,016 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

**4. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்:**

சென்னை மாநகரின் சீரான வளர்ச்சிக்கு ரூ.54 கோடி செலவில் கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி ரூ.6 கோடி செலவில் மாதவரம் சரக்கு மற்றும் பேருந்து நிலையம், ரூ.17 கோடி செலவில் சாத்தங்காடு இரும்பு மற்றும் எஃகு அங்காடி ஆகிய நெரிசலைக் குறைக்கும் திட்டங்களைச் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சிறப்பங்காடி தொடங்கிச் செயல்படுத்தி வருகிறது.

இந்த அரசு சுமார் ரூ.400 கோடி செலவில் திட்டமிடப்பட்டுள்ள லஸ் முதல் தரமணி வரையில் துரித இரயில் போக்குவரத்துத் திட்டத்தினைச் செயல்படுத்த தனியாகக் கூட்டுமுயற்சி மூலம் வாரியம் ஒன்றினை அமைக்கும் மாபெரும் முடிவினை எடுத்துள்ளது. தற்பொழுது சென்னை பீச் முதல் லஸ் வரையிலான பகுதி- துரித இரயில் திட்டத்தினை மத்திய அரசின் இரயில்வே துறை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம் தரமணி வரை நீடிப்பதில் மத்திய அரசு ஆர்வம் இல்லாததால், இந்த அரசு இத்திட்டத்தினை லஸ் முனையிலிருந்து தரமணி வரை நீடிக்கும் முடிவினை எடுத்துள்ளது.

1991-93-ஆம் ஆண்டுகளில் கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி மாதவரம் சரக்கு மற்றும் பேருந்து நிலையம் சாத்தங்காடு இரும்பு மற்றும் எஃகு அங்காடி ஆகிய திட்டங்களுக்காக ரூ.21.57 கோடி செலவிடப்பட்டுள்ளது.



★ நமது சமுதாயத்தின் அனைத்துப் பகுதி மக்களும் நல்லிணக்கமான முறையில் சீரான முன்னேற்றம் பெற உத்தரவாதம் தரப்பட வேண்டும்; சமநிலைக்குப் பங்கம் ஏற்படாத வகையில் வளர்ச்சிகள் அமைய வேண்டும்.

**5. நகர் ஊரமைப்பு இயக்ககம்:**

பேருந்து நிலையம், தினச்சந்தை, வடிகால் வசதி ஆகிய நகர அடிப்படை வசதிகளை மேம்படுத்த நகராட்சி மற்றும் பேரூராட்சிகளுக்கு உதவும் வகையில் சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான ஒருங்கிணைந்த அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், ரூ.11.67 கோடி செலவில் 12 நகரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

மாநில அரசு முதன்முறையாக ரூ.33 கோடி முதலீட்டில் நகர் ஊரமைப்பு நிதி ஒன்றினை ஏற்படுத்தியுள்ளது. இதன் மூலம் உள்ளாட்சி நிறுவனங்கள், வணிக வளாகம் மற்றும் நகர அடிப்படை வசதித் திட்டங்களுக்கு நிதி உதவி அளிக்க இயலும்.

இந்த இனிய திட்டங்களெல்லாம் செவ்வனே செயல்படுத்த, ரூ.5.76 கோடி, முதல் தவணையாக மத்திய அரசிடமிருந்து நிதி உதவி பெறப்பட்டுள்ளது. திட்டப் பணிகளை நிறைவேற்ற சம்பந்தப்பட்ட உள்ளாட்சிகளுக்கு ரூ.1.79 கோடி நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.

1991-92-ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களை நிறைவேற்ற ரூ.4.66 கோடி உள்ளாட்சிக்கு விடுவிக்கப்பட்டுள்ளது. மேலும், புதிய 16 உள்ளாட்சிகளுக்கு வருவாய் பெருக்கும் திட்டங்களை மேற்கொள்வதற்கான ரூ 2.85 கோடி முதலீட்டில் திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

1991-92-ஆம் ஆண்டில், 42 திட்டங்கள் முடிக்கப்பட வேண்டும் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, அவற்றில் 39 திட்டங்கள் முடிக்கப்பட்டுப் பயனுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

1992-93-ஆம் ஆண்டில் பெரம்பலூர் பேரூராட்சி, அத்திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்டு, முதல் கட்டமாக ரூ.40 இலட்சம் மத்திய அரசிடமிருந்து நிதி உதவி பெறப்பட்டுள்ளது. இத்தொகை பேரூராட்சியில் பேருந்து நிலையம் மற்றும் வணிக வளாகம் கட்டப் பயன்படுத்தப்படும். பேருந்து நிலைய முதற் கட்டப் பணிக்காக ரூ.30 இலட்சம் மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டு ரூ.15 இலட்சம் விடுவிக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும் ரூ.3.64 முதலீட்டில் பர்கூர் பேரூராட்சியில் திட்டப் பணிகளை அங்கீகரிக்க கருத்துக்கள் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு, அவை பரிசீலனையில் உள்ளன.

1992-93-ஆம் ஆண்டில் சிறிய மற்றும் நடுத்தர நகரங்களில் ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 39 திட்டங்கள் முடிப்பதற்காக இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதுவரை, இத்திட்டங்களுக்கு ரூ.1.61 கோடி நிதி விடுவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டங்கள் அனைத்தும் நிர்ணயிக்கப்பட்டபடி நிச்சயம் நிறைவேற்றப்படும் என்பது உறுதி.

மக்கள் சேவையே மகேசன் சேவையெனச் செயல்படும் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியின் அரசு எல்லோரும் இனிதாக மகிழ்ந்து வாழும் விதத்தில், ஏற்ற குடியிருப்புக்களை உருவாக்கித்தரும் என்ற இனிய உணர்வோடு, மூன்றாம் ஆண்டில் முக மலர்ச்சியோடு அடிவைப்போம்!

பூத்தது தேர்தல்,
பொழிந்தன வெற்றிப்பூக்கள்
வாழ்த்தொலிகள் விண்ணைப் பிளக்க,
தமிழர் இல்லமெல்லாம்
மாவிலையும் தோரணமும்
மாக்கோலமும் பூண்டிருக்க,
நெஞ்சமெலாம் நெகிழ்ந்துருக,
கோடியிலே வாழ்பவர்களின் குணங்களை அறிந்தவரும்,
குன்றாக நெஞ்சுறுதி, குலையாத கொள்கை உள்ளம்,
மாறாத - மாற்ற முடியாத,
மனப்பக்குவம் பெற்றவரும்,
மக்கள் சக்தியாய், மாதர்களின் குலவிளக்காய்,
ஏழை எளியோரின் எதிரொலியாய்,
பாட்டாளி மக்களின் பாதுகாப்பு அரணாய்,
உழைக்கும் வர்க்கத்தின் உரிமைக் குரலாய்,
இளைஞர்களின் கலங்கரை விளக்காய்,
புவியே போற்றும் பூபாளமாய்,
பொதிகையில் இருந்து புறப்பட்ட சந்தனத் தென்றலாய்,
தந்தை பெரியாரின் தவமாய்,
அண்ணாவின் பேரறிவாய்,
புரட்சித்தலைவரின் பொன்மனமாய்,
புவியாள
எங்கள் புரட்சித்தலைவி அவர்கள் தம் படைசூழ
ஆட்சிப் பொறுப்பினை ஏற்றார்கள்
ஜூன் திங்கள் 24-ஆம் நாள் - அந்நாள்
இந்நாள்!
முத்தமிழும் பூரிக்கும் வண்ணம் தம்
மூன்றாவது ஆண்டின் முதற்படியில்
அடியெடுத்து வைக்கிறார்கள்,
அன்று அலங்கோலமாய்க் காட்சி தந்த ஆட்சித் தேர்,
கயமைத் தனத்தால் தலைகவிழ்ந்த செங்கோல்,
நிதியென்னும் நீருற்று வற்றிய பொய்கையாய்,
சட்டம் ஒழுங்கு தறிகெட்டு ஓடிய காளையாய்,
சாதிமதப் பிணக்குகள் மத யானையாய்
பிரிவினை வாதமும் துப்பாக்கிக் கலாசாரமும்
தலைவிரித்தாடிய வேளையில்
எம் அன்னை ஆட்சிப் பொறுப்பினை ஏற்றார்கள்.
இத்துணைச் சீர்கேடுகளையும் இவரால் சீர்படுத்த முடியுமா?
இவருக்குப்போதிய அளவு சிந்தையில் தெளிவுள்ளதா?
அங்குசத்தைக் கையிலெடுத்து அடக்கும் வல்லமை
கைவரப் பெற்றவரா? என
எக்காளமிட்ட எதிர்க்கட்சி நுவளைகளும் வாயடைத்துப் போக,
வசை பாடியே வாழ்க்கை ஓட்டியோர் மூர்ச்சையாகிச் சாக,
ஆளும் திறமை அனைத்தும் தமக்கே உரியதென
தற்பெருமைக் கொண்டவர்கள் தலை கவிழ,
ஆட்சித் தேர் சீர் செய்யப்பட்டது.
நிதியென்னும் நீருற்று தூர் வாரப்பட்டது.
மாசுபடிந்த செங்கோல் புதுமாட்சிமை பூண்டது.
சட்டம் ஒழுங்கு சாட்டைக்கு அடங்கிய சிறுத்தையாய்
கட்டுப்பாட்டிற்கடங்கியது.
சாதி, மத உணர்வுகள்,
ஒருசேர கைகோத்து நடந்தன.
எம்மதமும் தம் மதமாக அரவணைக்கப்பட்டது.
ஈராண்டுகளில் இருபது ஆண்டுச் சாதனைகள் படைத்தது கண்டு
பாரே போற்றி மகிழ்கிறது.
வேளாண்மைத் துறையில் பசுமைப் புரட்சி கண்டது,
நம் பாட்டுடைத் தலைவியாம் புரட்சித்தலைவியின் ஆட்சியிலே!









தொலைநோக்குத் திட்டங்களும்,
தொய்வில்லா நடவடிக்கையும்,
அள்ள அள்ளக்குறையாத மானியச் சலுகைகளும்,
மதிநுட்பத் தொழிற்பயிற்சியும்
நம் உழவர் மக்களுக்குத் தொகை தொகையாய் வழங்கப்பட்டது.
மக்களின் சக்தி மட்டுமே மகத்துவமாய்
நம் தலைவிக்கு அமைந்தது போல்
வான்மகளும் தன் பங்கை வற்றாது வழங்கினாள்.
வறண்ட ஆறுகள் அனைத்தும் பொங்கும் புதுப்புனலாய்ச்
சுற்றி எங்கும் வலம் வந்தன.
வறண்ட ஏரிகளின் கண்மாய்கள் திறந்தன,
ஊருணிகள் யாவும் கடைவழியே ஓடின.
காடுகள் எல்லாம் களித்துச் செழித்தன.
கழனிகள் யாவும் பட்டாடை பூண்டு
செந்நெல் சிரிக்க தங்க நிறம் பரப்பின.
காலியான களஞ்சியங்கள் கழுத்து வரை நிறைந்தன.
இருப்பு வைக்க இடமின்றித் தடுக்கப்பட்டிருந்த
சோதனைச் சாவடிகள் தளர்த்தப்பட்டன.
செல்விருந்தோம்பி வருவிருந்துக்காகக் காத்திருக்கும்
காலம் கனிந்தது.

★ கனிந்திடத் தலைவி
கணித்திட்ட திட்டங்கள் பல.
ஆறாம் வகுப்புபயிலும்
அனைத்து மாணவர்க்கும்
உயர் ரகத் தென்னங்கன்றுகள்-இலவசமாய்
உவப்புடன் வழங்கும்
டாக்டர் புரட்சித் தலைவி தென்னை வளர்ப்புத் திட்டம்.
ஆண்டுக்கு ஐந்து இலட்சம் கன்றுகள் நட்டு
இதனால் ஆண்டுதோறும்
நாட்டுக்கு ஐந்து கோடித் தேங்காய்கள் கிட்டும்.
பாமர மக்கள் துய்க்கும்
பாமாயில் எண்ணெய் நாட்டில்
தாராளமாய்க் கிடைக்கச் செய்ய,
தரணிக்குத் தந்த திட்டம்
செம்பனை வளர்ப்புத் திட்டம்.
காவிரிப் படுகை எங்கும்
கோஸ்டாரிக்கா நாற்று கொண்டு
ஈராயிரம் எக்டர் பரப்பில்
ஈடேறும் இந்தப்புதுமைத் திட்டம்.
சிறு குறு விவசாயிகளின்
சிறப்பான வேளாண்பணிக்கு
ரூபாய் 12,000 மான்யத்தில்
ஈராயிரம் பவர் டில்லர் வழங்கும் திட்டம்
உயர்விளைச்சல் காண்போருக்கு
ஊக்கம் அளிக்கும் வகை
பயிர் விளைச்சல் போட்டி வைத்து
பணப்பரிசு வழங்கும் திட்டம்.
பரிசு வழங்கினால் மட்டும் போதாது-
உழவர்தம்
பரிகாச வாழ்வும் மாறவேண்டும்
அவர்கள்
பொருளீட்டிப்பெருவாழ்வு வாழவேண்டும்-என
ஜெ.ஜெ.92. வாசனைநெல் உற்பத்தி செய்து
ஏற்றுமதி வாய்ப்புகளைப் பெருக்கும் திட்டம்.
ஆலயம் செல்வோர் மனம்
அமைதியில் திளைத்திடப்
பெரும் கோயில்கள் எங்கும் - நல்







நந்தவனம் அமைக்கும் திட்டம்.
★ சுதந்திரக் காற்றைச் சுவாசித்த பின்
முதன்முறையாய்த் தமிழகத்தில்
அகில இந்திய அளவில்
வாழை ஆராய்ச்சி மையம்
வகையாய்க் கொணர்ந்த திட்டம்.
★ தரமான பொருள்களையே
தமிழக உழவர்பெற
தரக்கட்டுப்பாட்டுக்கெனத்
தனி இயக்ககம் அமைக்கும் திட்டம்.
★ உழவர்க்குத் தொழில் நுட்பமது
உடனுக்குடன் சென்றடைய-
வேளாண் அலுவலர்க்கு
ஊக்கம் தரும் பரிசுத் திட்டம்.
★ விளைநிலத்தின் நலன் காத்து
விவசாயிகளின் நிலை உயர்த்த வழிகாணும்
விஞ்ஞானிக்குப் பரிசுத் திட்டம்.
★ விளை நிலங்கள் விலை நிலமாகி
வீடு, மனை, நகரங்களாகி - மக்கள்
உணவுக்குப் பெரும் பஞ்சம்
உருவாகும் நிலை தவிர்க்க
விளைநிலத்தில் வீட்டுமனைத் தடுப்புத்திட்டம்.
★ காளைகளின் துயர் நீக்கி
சாலைகளின்நிலை காக்க
பாட்டாளி மக்கள் பயனடைய
புத்தம் புது டயர் வண்டி
மான்யத்தில் வழங்கும்
டாக்டர் புரட்சித் தலைவி டயர்வண்டி வழங்கும் திட்டம்.
தீட்டிய திட்டங்கள் யாவுக்கும்
சட்டங்கள் உடன் செய்து
படைத்த சாதனைக்கோர் சான்று
இரண்டு ஆண்டுகளில் இணையற்ற உணவு உற்பத்தி
முதலாண்டில் அரிசி உற்பத்தி 70.4 இலட்சம் மெட்ரிக் டன்.
இரண்டாம் ஆண்டில்
அரிசி உற்பத்தி 76.0 இலட்சம் மெட்ரிக் டன்.
முதலாண்டின் மொத்த அளவு உற்பத்தி 94
இலட்சம் மெட்ரிக் டன்.
இரண்டாம் ஆண்டின் மொத்த
உணவு உற்பத்தி 101 இலட்சம் மெட்ரிக் டன்.
''தனியொரு மனிதனுக்கு உணவில்லையெனில்
ஜெகத்தினை அழித்திடுவோம்'' என்றான்
பாட்டுத் தீ பாரதி
சாதனைச் சரித்திரங்கள்
சளைக்காமல் தான் எழுதி
ஜெகம் வாழ வழியமைக்கும்
எங்கள் அன்னை
ஜெ. ஜெயலலிதா ஆட்சி வாழ்கவே!












# தமிழகத்தில் கால்நடை வளமும் பால் வளமும்


மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர்

**திரு தே. ஜனார்த்தனன்**


**சிறு, மிகச் சிறு விவசாயிகள் மற்றும் விவசாயக் கூலிகள் நலனுக்கெனச் சிறப்புக் கால்நடைப் பெருக்குத் திட்டத்தின்கீழ், 4,575 குடும்பங் களுக்கு, ரூ.225 செலவில், 1,050 ஆட்டு அலகுகளும், 3,500 கன்று வளர்ப்பு அலகுகளும், 25 பன்றி அலகுகளும் வழங்கப்பட்டுள்ளன.**



'ஊருக்கு நல்லது சொல்வேன் - எனக்கு
உண்மை தெரிந்தது சொல்வேன்.'

என்ற பாரதியார் வரிகளுக் கிணங்கவும்,

'எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே.'

என்ற தாயுமானவரின் வரிகளுக்கிணங்கவும், தமிழக அரசு தனிமனிதனை முன்னிலைப்படுத்தியே நற்காரியங்களைச் செய்து வருகிறது. ஏனெனில் தனிமனிதனுடைய விரிவே சமூகம். தனிமனிதனில்லாத சமூகமும், சமூகத்தில் ஒட்டாத தனிமனிதனும் கிடையாது, என்றாலும் சமூகமாக வியாபித்து வருகின்ற தன்மை எல்லாத் தனி மனிதர்களிடமும் கிடையாது. டாக்டர் புரட்சித் தலைவி போன்ற தனிமனிதர்கள் மனித ஜாதி முழுவதுக்குமே எண்ணிச் செயல் புரிந்து வாழ் கிறார்கள்.

இரண்டாண்டு இருண்ட காலத்திற்குப்பின் உதித்த புரட்சித்தலைவியின் ஆட்சி தமிழர்கள் தினம் தாம் உச்சரிக்கும் வார்த்தைகளில் ஒன்றாய் மாறிவிட்டது.

எனது துறையில் இவ்வரசு எண்ணற்ற சாதனைகள் செய்திருந்தாலும், ஒரு சிலவற்றைப் பற்றி மட்டுமே இங்கே விவரித்துள்ளேன்.

**கால்நடைப் பராமரிப்பு**

நம் மாநிலத்தில் உள்ள கால்நடைகள் மற்றும் கோழிகளுக்குத் தேவையான மருத்துவ வசதிகளும், நோய் பாதுகாப்பு வசதிகளும், தரமான மேனாட்டுப் பொலிகாளைகளின் விந்தினைக் கொண்டு செயற்கை முறை கருத்தரிப்பு மூலம் கால்நடைகள் இனப்பெருக்கமும், விவசாயிகளின் நன்மைக்கென இவ்வரசால் செயல்படுத்தப்படுகின்றன. தேசிய வேளாண்மைக் குழுவின் பரிந்துரைகளின்படி இவ்வரசு கால்நடை மருத்துவ நிலையங்களையும் மருந்தகங்களையும் 930-லிருந்து அதிகரிக்க ஆவன செய்து வருகிறது. இதன் முதற்கட்டமாக 400 கால்நடை மருந்தகங்களைத் திறக்கச் சென்ற ஆண்டு ஆணையிட்டது. வெறிநாய்க் கடியின் கொடுமையிலிருந்து தீர்வு காண மதுரை, சென்னை, கோவை போன்ற இடங்களில் வெறி நாய்க்கடி நோய்க் கட்டுப்பாடு மையங்கள் அமைக் கப்பட்டுள்ளன.

இம்மாநிலத்தில் கால்நடைத் துறையின் செயல் பாட்டினை அறிந்த உலக வங்கி வெவ்வேறு திட்டங்கள் செயலாக்கத்திற்கு ரூ.46 கோடி கடன் வழங்க முன்வந்துள்ளது. இக்கடன் உதவியால் கீழ்க்கண்ட திட்டங்கள் அமலில் உள்ளன.



அ) மதுரை, வேலூர், கோவை, திருச்சி, தஞ்சை, திருநெல்வேலி, தர்மபுரி நகரங்களில் உறைவிந்து வங்கிகள் நிறுவுதல்.

ஆ) மதுரை, கோவை, திருச்சி, வேலூர் நகரங்களில் வட்டார நோய்ப் புலனாய்வு ஆய்வகங்கள் நிறுவுதல்.

இ) தீவன உற்பத்திக்கான மூலப் பொருட்கள் இலவசமாக விநியோகித்தல்.

இத்திட்டங்களின் செயல்பாட்டினால் மாநிலத்தில் கால்நடைகள் மற்றும் கோழிகளுக்குத் தேவையான மருத்துவச வசதிகளும் நோய்ப் பாதுகாப்பு வசதிகளும் உரிய நேரத்தில் கிடைக்கின்றன. சிறு/மிக சிறு விவசாயிகள் மற்றும் விவசாயக் கூலிகள் நலனுக்கெனச் சிறப்புக் கால்நடைப் பெருக்குத் திட்டத்தால் 4,575 குடும்பங்களுக்கு ரூ.225 இலட்சம் செலவில் 1,050 ஆட்டு அலகுகளும், 3,500 கன்று வளர்ப்பு அலகுகளும், 25 பன்றி அலகுகளும் வழங்கப்பட்டுள்ளன.

5,000 இந்து ஆதிதிராவிடக் குடும்பங்கள் பயன்பெறும் விதத்தில் சுமார் 144.18 இலட்சம் செலவில் 3,450 ஆட்டு அலகுகள் சிறப்பு மத்திய உதவித் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனத்தைப் பொறுத்தவரையில், காமராசர் மாவட்டம் அனுப்பங்குளத்தில் ஆண்டொன்றுக்கு 5 இலட்சம் குஞ்சுகள் பொரிக்க வைப்பதற்காகக் குஞ்சு பொரிப்பகம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அரசூரிலுள்ள குஞ்சு பொரிப்பகத்தை மேலும் திறம்படச் செய்து ஆண்டொன்றுக்கு 9 இலட்சம் கறிக் கோழிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.



**பால் வளம்**

பால் உற்பத்தியினைக் கருத்தில் கொண்டு இவ்வரசு சென்ற இரண்டாண்டுகளில் 1,165 புதிய பால் உற்பத்தியாளர் சங்கங்கள் அமைக்கப்பட்டு ஒன்றிய அளவில் ஆன பால் கொள்முதல் நாள் ஒன்றுக்குச் சுமார் 11.83 இலட்சம் லிட்டராக உயர்த்தப்பட்டுள்ளது. இத்துறையின் மூலம் ஆதிதிராவிட மக்களின் வாழ்க்கைத் தர முன்னேற்றத்தில் மிகவும் தனிக் கவனம் செலுத்துவதால் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் தலைமையிலமைந்த அரசு கடந்த இரண்டு ஆண்டுகளில் 34,516 ஆதிதிராவிடர்கள் பயன்பெறும் வகையில் கறவை மாடுகள் வழங்கியுள்ளது.

அ) சென்னையை அடுத்த சோழிங்கநல்லூரில் 4 இலட்சம் லிட்டர் கொள்திறன் கொண்ட பால்பண்ணை ரூ.21 கோடி செலவிலும்,

ஆ) திருச்சியில் 1,50,000 லிட்டர் கொள்திறன் கொண்ட புதிய பால்பண்ணை ரூ.6 கோடி செலவிலும்,

இ) தென்னார்க்காடு மாவட்டம் விழுப்புரத்தில் ஒரு இலட்சம் லிட்டர் கொள்திறன் கொண்ட பால்பண்ணை ரூ2.90 கோடி செலவிலும்,

ஈ) திருவண்ணாமலையில் உள்ள பால் குளிரூட்டும் நிலையம் 30,000 லிட்டர் கொள்திறனிலிருந்து ஒரு இலட்சம் லிட்டர் கொள்திறன் கொண்டதாக மாற்றியும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஒருங்கிணைந்த பால்பண்ணை வளர்ச்சித் திட்டத்தின்கீழ், திருநெல்வேலி-கட்டபொம்மன், சிதம்பரனார், காமராசர் மாவட்டங்களில் புதிய பால்பண்ணைகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

**தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்**

'மண்மீதுள்ள மக்கள் பறவைகள்
விலங்குகள் பூச்சிகள் புற்பூண்டு மரங்கள்
யாவும் என் வினையால் இடும்பை தீர்ந்தே
இன்ப முற்றன்புடன் இணங்கி வாழ்ந்திடவே
செய்தல் வேண்டும் தேவ தேவா.'

என்ற பாரதியின் கூற்றினைப்போல் மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவியின் அரசு விலங்கின சுகத்தைக் கருத்தில்கொண்டு இப்பல்கலைக்கழகத்தின் மூலம் விலங்கின மேம்பாட்டிற்குத் தேவையான அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்துள்ளது.

இவ்வரசின் தீவிர விடா முயற்சியின் பயனாக, 1992-ஆம் ஆண்டில், இந்தப் பல்கலைக்கழகத்தை, இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகமும், பல்கலைக்கழக மானியக் குழுவும் அங்கீகரித்துள்ளன.

உலக அளவில் இந்தப் பல்கலைக்கழகம், பல்வேறு ஆராய்ச்சி நிறுவனங்களுடன் இணைந்து ஆராய்ச்சிகளை நடத்தி வருகின்றது. அவை வெப்ப மண்டலக் கால்நடை மருத்துவ மையம், கடல் கடந்த வளர்ச்சி முகமை, குயின்ஸ் பல்கலைக்கழகம், இயற்கை வளவாய்ப்பு நிறுவனம், மைய கால்நடை மருத்துவ ஆய்வுக்கூடம், இங்கிலாந்து, ரிஷ்க் கால்நடை மருத்துவ நிறுவனம், நெதர்லாந்து, கால்நடை மருத்துவக் கலைப்புலம், அமெரிக்கா, ஜாக்ராப் பல்கலைக்கழகம், யுகோஸ்லாவியா, ஆசிய மீன்வளக்கழகம், மணிலா தேசியப் பல்கலைக்கழகம், சிங்கப்பூர் மற்றும் அமெரிக்க வேளாண்மை வளர்ச்சி நிறுவனம் ஆகியவை ஆகும்.

சென்ற ஆண்டு, பட்ட மேற்படிப்புப் படிப்பதற்காக, சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் படித்த 14 மாணவர்களும், நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் படித்த 7 மாணவர்களும், தூத்துக்குடி மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் படித்த 4 மாணவர்களும் இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தில் இளநிலை ஆராய்ச்சி உதவித் தொகைக்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் மருத்துவமனை, பிரிய மற்றும் செல்லப் பிராணிகளுக்குச் சிறந்த முறையில் சிகிச்சை அளிப்பதன் மூலம் நற்பெயர் பெற்றுள்ளது.





கால்நடை வளர்ப்பிலும், கோழி வளர்ப்பிலும், ஆடவர், மகளிர் உட்பட, 6,534 உழவர் பெருமக்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இது தவிர, கால்நடை மற்றும் மீன் உற்பத்தியை அதிகரிக்கவும், வேளாண் காடு வளர்ப்பில் உழவர்களுக்குப் பயிற்சி அளிக்கவும், தேசிய தரிசுநில மேம்பாட்டுக் கழகத்தின் நிதி உதவியுடன் இப்பல்கலைக்கழகம், 'முன் மாதிரி வேளாண் காடுகளை' உருவாக்கியுள்ளது. ஐ.ஆர்.டி.பி. - ட்ரைசம் திட்டத்தின்கீழ், கடலோர மீன்வளர்ப்பு, மீன்பிடிப்பு, மீன் பதனம் செய்தல் போன்றவற்றில் மீனவர் மற்றும் மீனவ மகளிர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

பசுக்களில் கருமாற்றம் செய்து 6-க்கும் மேற்பட்ட கன்றுகளைப் பெறும் முறையும், செம்மறி ஆட்டு விந்துவை உறைய வைத்து, செயற்கை முறைக் கருவூட்டலில் வெற்றியும் காணப்பட்டுள்ளன.

இவ்வாறு நிமிர்ந்த நன்னடையும் நேர்கொண்ட பார்வையும் நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும் கொண்டு, கொண்ட கொள்கையில் இம்மி அளவும் பிறழாது டாக்டர் புரட்சித்தலைவியின் சீரிய தலைமையில் அமைந்துள்ள இவ்வரசு, இன்னும் பல அரிய திட்டங்களைச் செயல்படுத்த திட்டம் தீட்டி உள்ளது.

# வணிகவரித் துறையில் வளம் சேர்க்கும் சாதனைகள்

மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர்
**திரு வி. சத்தியமூர்த்தி**

- **சாமான்ய மக்கள் பயன்படுத்தும் பெரும்பான்மைப் பொருட்களுக்கு வரிக்குறைப்பு.**
- **ஒரு இலட்சம் ரூபாய்க்கு மேல் விற்பனைத் தொகை இல்லாத எல்லா வணிகர்களுக்கும் வரிவிலக்கு.**

இரண்டு ஆண்டுச் சாதனைகளை உற்று நோக்கும்போது டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் தன் பெயரில் ஜெயத்தைப் பெற்றிருப்பதுபோல் முதல்வர் என்ற நிலையில் அனைத்துத் துறையிலும் ஜெயத்தைப் பெற்றிருக்கின்றார் என்பதைக் காணலாம். முதல்வர் ஆனதால் தன் பெயருக்கு முன்பு மாண்பைப் பெற்றதுபோல், தமிழ் நாட்டிற்கும் மாண்மைப் தேடித் தந்துள்ளார். இரண்டு ஆண்டுக் காலத்தில் ஏனைய எந்த மாநிலத்தையும் விட, தமிழ் மாநிலம் அனைத்துத் துறையிலும் வெற்றி நடை போட்டுள்ளது என்பதை யாராலும் மறுக்க முடியாது.

ஆட்சிப் பொறுப்பேற்கும்போது 1000 கோடிக்கு மேல் பற்றாக்குறை. பற்றாக்குறைக்கு மலிவு விஜல மது ஒழிப்பால் நிதி இழப்பு வேறு. அந்நிலையில் நடைமுறை வளர்ச்சித் திட்டங்கள், நலத் திட்டங்கள் ஏதும் கைவிடப் படாமல், சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்திற்கு 365 கோடி ஒதுக்கியதோடு வெற்றிகரமாகச் செயல்படுத்திக் காட்டிய பெருமை புரட்சித்தலைவி ஒருவரையே சாரும்.

பல்வேறு துறைகளில் முன்னேற்றம் கண்டு மக்கள் பாராட்டைப் பெற்றுள்ள புரட்சித்தலைவி அவர்கள், வணிகவரித் துறையிலும் தன் நிர்வாகத் திறமையைப் பதித்துள்ளார்கள். மூடிக்கிடந்த பல தொழிற்சாலைகளின் கடந்த கால வரிச்சுமையை நிறுத்தி வைத்து, தொழில் தொடங்க செய்ததன் மூலம் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் இழந்த வேலையைப் பெற்றுள்ளனர்.



### 1991-92-ஆம் ஆண்டுச் சாதனைகள்

1991-92-இல் வரிவிலக்கு பல்வேறு பொருட்களுக்கு அளிக்கப்பட்டது. உதாரணமாக, சில உயிர்க்காப்பு மருந்து வகைகள், பார்லி, மாட்டு வண்டி, சைக்கிள் ரிக்ஷா (மோட்டார் இன்றி), மந்தார இலை, முயல் தீவனம், குரங்குத் தீவனம், பன்றித் தீவனம் மனிதமுடி (விக்குகள்), கடல் கிளிஞ்சல்களால் செய்யப்பட்ட பொருட்கள் போன்றவைகட்கு வரிவிலக்கு அளிக்கப் பட்டது.

### 1992-93-ஆம் ஆண்டுச் சாதனைகள்

1992-93-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், குங்குமம், கண்மை, கோதுமை, கணிப்பொறி சாஃப்ட்வேர், தங்கத்தாலி (இணைப்புகளுடன் எட்டு கிராமிற்கு மிகாமல்) போன்ற பொருட்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டது. மேலும், அதே நிதியாண்டில், கீழ்க்கண்ட பொருட்களுக்கு வரிக்குறைப்புச் செய்யப் பட்டதும் குறிப்பிடத்தக்கது.

நெய் மற்றும் பால் பொருட்கள் (வாணிபக் குறியீட்டுச் சட்டத்தின்கீழ் பதிவு இடாதது). குச்சிக்கிழங்கு, சிப்சுகள், மாவு, சேமியா, போலி நகைகள், லேமினேட் செய்யப்பட்ட சாக்குப் பைகள், சில மளிகைப் பொருட்கள், வாடகைச் சீருந்து, பதனிடப்பட்ட தோல் உரிவைகள், வெந்தயம், கிராம்பு முதலியன. தமிழ்நாடு ஜாரி நிறுவனத்திலிருந்து விற்கப்படும் ஜாரிகளுக்குக் கொள்முதல் வரிநீக்கமும் செய்யப் பட்டுள்ளது.

### 1992-93-இல் அனுமதிக்கப்பட்டு, நிறைவேற்றப்பட்ட திட்டங்கள்

விருதுநகர் வணிகவரி மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, புதிதாக சிவகாசியைத் தலைமையிடமாகக் கொண்டு உதவி ஆணையரின் தலைமையில் சிவகாசி வணிகவரி மாவட்டம் தோற்றுவிக்கப்பட்டது.

சென்னை செயலாக்கப் பிரிவில் சுற்றும் படைகளைப் பலப்படுத்தும் நோக்குடன் இரண்டு புதிய துணை வணிகவரி அலுவலர் பணியிடங்களும், ஐந்து புதிய உதவி வணிகவரி அலுவலர் பணியிடங்களும் தோற்றுவிக்கப்பட்டன.

கோவை (தெற்கு) மற்றும் கோவை (வடக்கு) வணிகவரி மாவட்டங்கள் பிரிக்கப்பட்டு, புதியதாக உதவி ஆணையரின் தலைமையில் ஒரு வணிகவரி மாவட்டம் தோற்றுவிக்கப்பட்டது. வணிகவரி மாவட்டங்கள் கோவை சரகம் 1 (தெற்கு), கோவை சரகம் 2 (வடக்கு), கோவை 3 (புதியது) எனப் பெயரிடப் பட்டது.

வரிவிதிப்பு வட்ட அலுவலகங்களைப் பலப்படுத்தும் நோக்குடன் துணை வணிகவரி அலுவலர்களைத் . தலைவராகக் கொண்டு செயல்பட்டு வந்த பத்து வரிவிதிப்பு வட்ட அலுவலகங்களுக்கு, பத்து வணிகவரி அலுவலர் பணியிடங்கள் வழங்கப்பட்டு அவைகள் வணிகவரி அலுவலர் அலுவலகங்களாக உயர்த்தப்பட்டன.

மேல்முறையீட்டு உதவி ஆணையர் அலுவலகங்களில் பணிப்பதிவை சீர் படுத்தி, மேல்முறையீடுகளை விரைந்து முடிக்கும் நோக்குடன் சென்னையில் கூடுதலாக ஒரு மேல்முறையீட்டு உதவி ஆணையர் பணியிடம் தோற்றுவிக்கப் பட்டது.

### 1993-94-ஆம் ஆண்டுச் சாதனைகள்

1993-94-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை 12.3.1993 அன்று தாக்கல் செய்யப்பட்டதில், விற்பனை வரிவிதிப்பில் கீழ்க்கண்ட வரிக் குறைப்பு/சலுகைகளை அரசு அறிவித்துள்ளது.

முன்னர் அமலில் இருந்த 17 வரிவிகிதங்கள், 9 வரிவிகிதங்களாகக் குறைக்கப்பட்டுள்ளன. பெரும்பாலான பொருட்கள் 5 வரிவிகிதங்களில் கொண்டு வரப்பட்டன. வரிவிகித வாரியாகப் பொருட்கள் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பகுதியின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

சாமான்ய மக்களால் பயன்படுத்தப் படும் பெரும்பான்மையான பொருட்களின் மீதான வரிவிகிதம் குறைக்கப் பட்டுள்ளது. உதாரணமாக, காப்பிக் கொட்டை, மண்ணெண்ணெய், தாவர எண்ணெய்கள், மஞ்சள், [illegible]காய், தனியா, சிகைக்காய், [illegible] வெல்லம், கோதுமைப் பொருட்கள், கையினால் தயாரிக்கப்பட்ட சோப்புகள் ஆகியவற்றின் மீதான வரிவிகிதம் குறைக் கப்பட்டுள்ளன.

இதேபோன்று மருந்துவகைகள், பிளாஸ்டிக் பொருட்கள், அலுமினியப் பாத்திரங்கள், உலர் மின்கலங்கள் ஆகிய உபயோகப் பொருட்களின் மீதான வரி விகிதம் குறைக்கப்பட்டுள்ளன.

தொழில்துறை பொருட்கள், இயந்திரங்கள், உபகரணங்கள் கச்சா திரைப் படச்சுருள், எலக்ட்ரோட்ஸ், மற்றும் உருளைகள் மீதான விற்பனை வரிவிகிதம் குறைக்கப்பட்டுள்ளன.

ஒரு இலட்சம் ரூபாய்க்குமேல் விற்பனைத் தொகை இல்லாத அனைத்து வணிகர்களுக்கும் வரிவிலக்கு அளிக்கப் பட்டுள்ளது. இதனால் 60,000 வணிகர்களுக்கும் மேலாகப் பயன்பெறுகின்றனர்.

பொதுவாக, ஒருசில தனியே குறிப்பிட்ட இனங்களைத் தவிர துணைப் பொருட்கள், உதிரிகள், கூட்டு உறுப்புகள் ஆகியவற்றின் மீதான வரிவிகிதமும், அவற்றின் மூலப் பொருட்களுக்கான வரி விகிதத்திற்கு இணையாக அமைத்திட வழி வகை செய்யப்பட்டுள்ளது.

இம்மாநிலத்தில் தயாரிக்கப்படும் பொருட்களுக்கான உற்பத்திச் செலவை மேலும் குறைக்கும் வகையில் ஒருசில பெட்ரோலியம் சம்பந்தப்பட்ட பொருட்கள் தவிர (எரிசாராயம், நாப்தா, மினரல் ஆயில், மசகு எண்ணெய், கிரீஸ்) அனைத்து வாயு (கேஸ்) உற்பத்தி நிறுவனங்களுக்குத் தேவைப்பட்ட அனைத்து மூலப் பொருட்களுக்கும் பிரிவு 3(3)-ன் கீழ் விதிக்கப்படும் 3 சதவிகித சலுகை வரி, விற்பனைப் பொருட்களுக்கான பேக்கிங் பொருட்கள், பெயர் வில்லைகள் மற்றும் பயன்படு பொருட்கள் ஆகியவற்றிற்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

பணி ஒப்பந்தங்கள் மற்றும் குத்தகை மீதான வரிவிதிப்பு தொடர்பாக உச்ச நீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றம் தீர்ப்புக்கிணங்க வரிவிதிக்கும் முறை மாற்றியமைக்கப்படுகிறது. ஏற்கெனவே, வரிவிதிக்கப்பட்ட பொருட்கள் மீது மீண்டும் வரிவிதிக்கப்படமாட்டாது. மேலும், கட்டடப்பணி ஒப்பந்ததாரர்களுக்கு இணக்க முறையில் இரண்டு சதவிகித வரி செலுத்தும் முறை அமலாக்கப் பட்டுள்ளது.

சுயவரிவிதிப்புமுறை 68,000 வணிகர்கள் பயன்பெறும் வகையில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

ரூபாய் 75,000 வரை விற்பனைத் தொகையுள்ள அனைத்து வணிகர்களுக்கும், 'வணிகராகப் பதிவு செய்து கொள்வதிலிருந்து விலக்கு அளிக்கப் பட்டுள்ளது.

1993-94-ஆம் ஆண்டில் கீழ்வரும், திட்டங்களுக்கு அரசு ஒப்புதல் அளிக்கப் பட்டுள்ளது.

சேலம், கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் வேலைப்பளு அதிகமாக உள்ள வரிவிதிப்பு வட்டங்களைப் பிரித்து

**மருந்துப் பொருட்கள், பிளாஸ்டிக் பொருட்கள், அலுமினியப் பாத்திரங்கள் போன்ற அன்றாடம் பயன் படுத்தப்படும் பொருட்களின் மீதான வரி குறைக்கப் பட்டுள்ளது.**



இரண்டு புதிய வரிவிதிப்பு வட்டங்களை உருவாக்குதல்.

சென்னையில் சரகம்-4 மற்றும் சரகம்-6 இரண்டையும் பிரித்து, புதிதாக உதவி ஆணையர் சரகம்-11 ஏற்படுத்துதல்.

திருவள்ளூர், பூந்தமல்லி, செங்கல்பட்டு ஆகிய இடங்களில் சுற்றும் படைகள் ஏற்படுத்தவும், காரைக்குடி மற்றும் நாகர்கோவிலிலுள்ள சுற்றும் படைகளை வலுப்படுத்தவும், 5 துணை வணிகவரி அலுவலர்கள், 5 உதவி வணிகவரி அலுவலர்கள் மற்றும் 3 ஓட்டுநர் பதவிகள் அனுமதித்தல்.

கணியூர் வணிகவரி சோதனைச் சாவடியில் வெளியே செல்லும் வாகனங்களைத் தணிக்கை செய்யச் சோதனைச் சாவடி ஏற்படுத்துதல்.

வணிகவரி கணிமப்பொறி மையத்தில் தற்போதுள்ள பொறியின் நிலை உயர்த்துதல்.

கோயம்புத்தூர் செயலாக்கக் கோட்ட பன்னாரி சோதனைச் சாவடிக்குக் கட்டடம் கட்டுதல்.

வாணியம்பாடி மற்றும் ஆரணியில் அலுவலகக் கட்டடங்கள் கட்டுதல்.

மேற்கண்ட திட்டங்களுக்குச் செலவினத் தொகையாக ரூபாய் 90.09 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இவைகளைத் தவிர, கீழ்க்கண்ட திட்டங்களை அனுமதிப்பது குறித்து அரசு தீவிரமாகப் பரிசீலித்து வருகிறது.

பழைய ஈப்பு வாகனங்களைக் கழிவு செய்து, 29 புதிய ஈப்பு வாகனங்களைச் செயலாக்கப் பிரிவிலுள்ள சுற்றுப்படைகளின் உபயோகத்திற்கு வழங்குதல்.




**ஏழை எளிய மக்களால் பெரிதும் பயன்படுத்தப்படும் காப்பிக்கொட்டை, மண்ணெண்ணெய், புளி, மிளகு, கோதுமைப் பொருட்கள், கையினால் தயாரிக்கப்படும் சோப்பு முதலியனவற்றிற்கு வரி குறைக்கப்பட்டுள்ளன.**

கோயம்புத்தூர் செயலாக்கப் பிரிவிற்கு உட்பட்ட பள்ளிபாளையத்தில் ஒரு சோதனைச் சாவடி ஏற்படுத்துதல்.

சென்னை புறநகரைச் சுற்றி நான்கு புதிய சோதனைச் சாவடிகளும், பாண்டிச்சேரி மற்றும் காரைக்கால் எல்லைப் பகுதிகளில் 11 புதிய சோதனைச் சாவடிகளும் ஏற்படுத்துதல்.

பொதுவாக அரசு செயல்படுத்தும் நல்ல பல வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் சமுதாய நலத்திட்டங்களுக்கு வணிகவரித் துறை நிதி ஆதாரம் ஈட்டித் தருகிறது. 1990-91-இல் வணிகவரித்துறையின் வருவாய் ரூ.2,167 கோடியிலிருந்து 1992-93-இல் ரூ.3,017 கோடியாக, அதாவது 39.2 சதவிகிதமாக உயர்ந்துள்ளது. இதைப் பயன்படுத்தி அரசு மேலும் பல வளர்ச்சித் திட்டங்களையும், சமுதாய நலத்திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது.

இந்த வகையில், எல்லோருக்கும் தொல்லை இல்லாத அரசு, யாருக்கும் இல்லை எனா அரசு, வளர்ச்சிக்கு வழி காட்டும் அரசு, வறியவர்க்கு வாரி வழங்கும் பாரி வள்ளல் அரசு, மனித நெறி காக்கும் புனித அரசு, இன பேதமில்லா சமநீதி காக்கும் அரசு, நாளைய நாகரீக உலகை நோக்கி நடைபோடும் அரசு, தமிழ் காக்கும் அரசு, தமிழர்தம் உரிமை காக்கும் அரசு, மதியுடன் நீதி தவறாமல் நிதி காக்கும் அரசு, தேச நேசம் கொண்ட அரசு, நாட்டின் அமைதி காத்த அரசு, புல்லுருவிகள் கருவறுத்த அரசு, வீரமும், விவேகமும் உள்ள தலைமையைக் கொண்ட அரசு, இன்றும் என்றும் நிலைத்து நிற்கும் அரசு, புரட்சித்தலைவியின் அரசே!

**வணிகவரித் துறையில் தற்பொழுது கணக்குகள் பராமரிப்பதில் கணிப்பொறி இயந்திரங்கள் (Computer) பெருமளவில் பயன்படுத்தப் படுகின்றன இதன் காரணமாக வணிகவரித்துறை அலுவலர்கள் கணிப்பொறி இயந்திரங்களின் பயன்பற்றி அதிகம் தெரிந்துகொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதைக் கருத்தில் கொண்டு வணிகவரித் துறை பயிற்சி நிலையத்தில் அலுவலர்களுக்குப் பயிற்சி அளிக்க ரூ.5 இலட்சம் செலவில் ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன. உதவி ஆணையர்கள், வணிகவரி அலுவலர்கள், துணை வணிகவரி அலுவலர்கள் ஆகியோருக்குக் கணிப்பொறி மூலம் கணக்குகளைப் பராமரிப்பது சம்பந்தமான பயிற்சிகள் அளிக்கப்படும்.**





# தமிழகத்தில் தொழிற்புரட்சி

மாண்புமிகு தொழில்துறை அமைச்சர்
**திரு ம. சின்னசாமி**

- **ரூ.20,000 கோடி முதலீட்டில் புதிய தொழில்களுக்கு உடனடி அனுமதி.**
- **ரூ.2000 கோடி முதலீட்டில் சென்னைக்கருகே ஆரோமெடிக் தொழிற்சாலை துவக்கம்.**
- **ஜெயங்கொண்ட சோழபுரத்தில் ரூ.7,000 கோடியில் நிலக்கரிச் சுரங்கம்–1500 மெகாவாட் மின் உற்பத்தித் திட்டம்.**

"எங்கும் தமிழ், எதிலும் தமிழ்" என்பது தமிழக அரசின் கொள்கை.

"தமிழகம் எங்கும் தொழில் மயம்" என்பது நமது மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் வேட்கை.

தாம் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற நன்னாளிலிருந்து இந்நாள் வரையிலும் தமிழகத்தைத் தொழில் வளம் நிறைந்த பொன்னாடாக மாற்றுவதில் மிகுந்த முனைப்புடன் செயல்பட்டு வருகிறார் நமது புரட்சித்தலைவி அவர்கள். இதன் காரணமாகத் தமிழகத் தொழில் அதிபர்களின் கூட்டமைப்புகளை இரண்டு முறை நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூட்டினார்.

கடந்த 23.6.1993 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்களால் கூட்டப்பட்ட 'தமிழகத்தில் தொழில் வாய்ப்புகள்' குறித்த கருத்தரங்கில் தொழில் துறையில் சாதனைகள் புரிந்த சிறந்த தொழிலதிபர்களுக்குப் பரிசுகள் வழங்கிச் சிறப்பித்தார்கள்.

### புதிய தொழில் கொள்கை

1992 ஜனவரியில் புதிய தொழில் கொள்கை ஒன்று அறிவிக்கப்பட்டது. இக்கொள்கையின் ஒரு பகுதியாக, புதிதாகத் தொடங்கப்படும் தொழில்களுக்கும் ஏற்கெனவே தொடங்கி நடைபெற்று வருகின்ற தொழில்களை விரிவுபடுத்துவதற்கும் பல கவர்ச்சிகரமான ஊக்க உதவிச் சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன. மாநிலப் பொருளாதார வளர்ச்சிக்குப் பெரிதும் தேவைப்படுகிற பன்மடங்குப் பலனை உருவாக்குமென எதிர்பார்க்கப்படுகிற இப்புதிய தொழில் கொள்கையைச் செயல்படுத்துவதற்கு அரசு தேவையான நடவடிக்கைகளை எடுத்துவருகிறது.



### புதிய தொழில் திட்டங்களுக்கு அனுமதி

கூட்டு/இணை/வழிகாட்டுத் துறையிலும், தனியார் துறையிலும் தொடங்கப்படக்கூடிய புதிய தொழில் திட்டங்களிலும் மின் உற்பத்தித் திட்டங்களிலும் ரூ.20,000 கோடி முதலீடு செய்வதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

### தொழில் அடிப்படை வசதி மேம்பாடு

தொழில் அடிப்படை வசதி மேம்பாட்டில் கவனம் செலுத்துவதற்காகத் தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகம் என்கிற புதிய கழகம் அமைக்கப்பட்டுள்ளது. இக்கழகம், கங்கைகொண்டான் (திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம்), பெருந்துறை (பெரியார் மாவட்டம்), பர்கூர் (தர்மபுரி மாவட்டம்), நிலக்கோட்டை (திண்டுக்கல்-அண்ணா மாவட்டம்) ஆகிய இடங்களில் 4 தொழில் வளர்ச்சி மையங்களை அமைப்பதில் தற்பொழுது



மும்முரமாக உள்ளது. காவிரி டெல்டா மாவட்டம் நாகப்பட்டினத்திலும் ஒரு தொழில் வளர்ச்சி மையம் அமைக்கப்பட உள்ளது.

**மேகா முதலீடுகள்**

மாண்புமிகு முதலமைச்சரின் சோர்வுறா முயற்சிகளின் பயனாக, சென்னை சுத்திகரிப்பு நிறுவனம், சதர்ன் பெட்ரோ கெமிக்கல் இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் லிமிடெட் ஆகிய நிறுவனங்களின் கூட்டு முயற்சியுடன் ரூ.2000 கோடி செலவில் 'ஆரோகெம்' என்ற நறுமணப் பொருள் தயாரிப்புத் தொழிற்சாலை அமைப்பதற்கு மத்திய அரசின் ஒப்புதல் பெறப் பட்டுள்ளது. துணைப் பொருள் தயாரிக்கும் பல தொழில்களை மேம்படுத்துவதற்கு அடிப்படையாகவும் சுமார் 70,000 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கவும் இத்திட்டம் வகை செய்யும்.

ஜெயங்கொண்டசோழபுரத்தில், கூட்டுத்துறையில் ரூ.7,000 கோடியில் மிகப் பெரிய அளவிலான நிலக்கரி வெட்டும் பணியும் மற்றும் மின் உற்பத்தித் திட்டங்களும் வகுக்கப்பட்டுள்ளன. இங்கு கிடைக்கும் நிலக்கரி, தமிழ்நாட்டில் பயன்படுத்தப்பட்டு முடிவில், 1500 மெ.வா. மின் உற்பத்திக்கு வகை செய்யும். கூட்டுத்துறையில் நிலக்கரிச் சுரங்கம் வெட்டும் பணிக்கான அனுமதியைப் பெற மத்திய அரசிடம் கேட்கப் பட்டுள்ளது.

இந்திய-சிங்கப்பூர் வர்த்தக மையம் அமைப்பதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப் பட்டுள்ளன. சென்னைக்கு அருகே சோளிங்கநல்லூரில் வர்த்தக மையம் அமைக்க சுமார் 700 எக்டேர் நிலப்பரப்பு தெரிந்தெடுக்கப்பட்டுள்ளது. தொடக்க சாத்தியக் கூறு ஆய்வுகள் நடந்தேறி வருகின்றன. மத்திய அரசு அறிவித்துள்ள திட்டத்தின் கீழ் மின்னணுப் பொருள் தொழில் நுட்ப மையம் அமைக்கவும் கருதப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு மத்திய அரசின் தற்காலிக ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

**புதிய முதலீடுகளை ஊக்குவித்தல்**

இந்த அரசு பொறுப்பேற்ற நாளிலிருந்து இன்றுவரை தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம், இணை/கூட்டுத் துறைகளில் ரூ.9111.53 கோடி மொத்த முதலீட்டுடன் 26 புதிய தொழிற்சாலைகளைத் தொடங்குவதற்கு அனுமதியளித்துள்ளது.

தமிழ்நாடு மின்னணுவியல் கழகம் கூட்டுத்துறையில் ரூ.99.25 கோடி முதலீட்டுடன் 9 புதிய திட்டங்களைத் தொடங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. உலக வங்கியின் நிதியுதவியுடன் ரூ.525 கோடி செலவில் தமிழ்நாடு செய்தித்தாள்

'இன்றுள்ள பொருளாதார நெருக்கடியில் புதிய திட்டங்கள் எதனையும், எந்த மாநில அரசும் தொடங்க முடியாத ஓர் இக்கட்டான நிலை உள்ளதை அவர்களும் நன்கு அறிவார்கள். அத்தகைய இக்கட்டான அவல நிலை சூழ்ந்துள்ள நேரத்தில்தான் தமிழகத்தைத் தொழில் துறையில் முதல் மாநிலமாக்கும் எங்கள் இலக்கு நோக்கி நாங்கள் விரைந்து பணியாற்றி வருகிறோம்.







காகித நிறுவனம் விரிவாக்கத் திட்டமொன்றைச் செயல்படுத்துகிறது.

இம்மாநிலத்தின் தொழில் வளர்ச்சியை ஊக்குவித்து, ஏற்றுமதியை மேம்படுத்தும் நோக்குடன், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகம் என்ற புதிய அமைப்பு ஏற்படுத்தப் பட்டுள்ளது.

**நலிவுற்ற தொழில்பிரிவுகளைப் புதுப்பித்தல்**

நீண்ட காலமாக மூடப்பட்டிருந்த 'பின்னி நிறுவனம்' மற்றும் 'ஸ்டாண்டர்டு மோட்டார் நிறுவனம்' மீண்டும் திறக்கப்பட்டுள்ளன. நலிந்த தொழிற்சாலைகளைச் சீரமைப்பதற்குத் தொழில்-நிதி மறுசீரமைப்பு வாரியம் எடுத்துக் கொண்ட குறிப்பிட்ட சில தொழில் பிரிவுகளுக்கு விற்பனை வரி தள்ளி வைக்கும் கால அளவை 3 ஆண்டிலிருந்து 5 ஆண்டுகளுக்கு அரசு நீட்டித்துள்ளது.

**சிறு தொழில்கள்**

சிறு தொழில்களுக்கு முதன்மைத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. தொழில் பிரிவுகளுக்குத் தற்காலிக, நிலையான பதிவுச் சான்றிதழ்களைப் பெற விண்ணப்பிப்பதற்குத் திருத்தப் படிவம் ஒன்றை வரையறுத்து 1992 அக்டோபரில் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

1991-92-ஆம் ஆண்டிலிருந்து தொடங்கி ஐந்தாண்டுகளில் ஓர் இலட்சம் சிறு தொழில்களைத் தொடங்கவேண்டுமென்று அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. 31.3.93 வரை 40,999 நிலையான பதிவுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

தொழில் பிரிவுகளுக்கு அனுமதி அளிக்கும் நடைமுறையை மேலும் சீரமைக்கும் பொருட்டு மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையின் கீழ் அனைத்து வசதிகளையும் ஒரே இடத்தில் அளிக்கும் அதிகார அமைப்பு ஒன்றை அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

**சுரங்கங்களும் கனிமங்களும்**

மாண்புமிகு முதல்வர் அவர்கள் 21.8.1992-ஆம் நாளன்று தருமபுரி மாவட்டம், பர்கூர், மதப்பள்ளி கிராமத்தில், தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் 'கிரானைட் வளாகத்திற்கு' அடிக்கல் நாட்டினார்.

கிரானைட் வளாகம் கீழ்க் காணும் மூன்று திட்டங்களைக் கொண்டது.

1. கிரானைட் ஒடு தயாரிப்புத் திட்டம்.

2. கிரானைட் வெட்டுதல் மற்றும் மெருகூட்டும் திட்டம்.

3. பாவு கற்கள் தயாரிப்புத் திட்டம்.

இத்திட்டத்திற்கான மதிப்பீடு ரூ.1,500 இலட்சம் ஆகும். எந்திரம், கட்டுமானம், தற்காலிக மற்றும் நிலையான மின் இணைப்புப் பெறுதல், பல்வகைப் பணிகள் ஆகியவை தொடர்பான செலவு வகையில் 31.3.93 வரையிலான கால அளவில் ஏற்பட்ட மொத்தச் செலவு ரூ.382.25 இலட்சம் ஆகும்.

**சிவகங்கை கிராபைட் திட்டம்**

மாண்புமிகு முதல்வர் அவர்கள் 21.10.92-ஆம் நாளன்று சிவகங்கையில் கிராபைட் வெட்டியெடுக்கும் திட்டத்தைத் தொடங்கி வைத்தார். இத்தொழிற்சாலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இத் தொழிற்சாலை 1994 மத்தியில் உற்பத்தியைத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது 500 பேர்களுக்கு நேரடியாக வேலை வாய்ப்பு வசதிகளை அளிக்கும்.

# சமூக நலத்துறையின் சரித்திரச் சாதனைகள்

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்

## புலவர் திருமதி இந்திரகுமாரி

**சமூக நலத்திட்டங்களில் - புதிய நோக்கு.**

- **'புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்' - பெண் குழந்தைகளுக்குக் கல்வி அளிக்கவும், திருமணத்திற்கு உதவவும் ஓர் ஒப்பற்ற திட்டம்.**
- **'தொட்டில் குழந்தைத் திட்டம்' பெண் சிசுவதைத் தவிர்க்க, டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் விடைகண்ட கற்பனைக்கெட்டா அற்புதத் திட்டம்.**

### புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்



பெண் குழந்தைகளின் நலனைப் பாதுகாக்கும் பொருட்டு அரசு 'புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்' ஒன்றைத் தொடங்கியுள்ளது. இத்திட்டத்தின்படி கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட பெற்றோரின் முதலாவது அல்லது இரண்டாவது பெண் குழந்தையின் பெயரில் பொதுக் கணக்கில் 2000 ரூபாய் வைப்பீடு செய்யப்படும். இத்திட்டம் 1.10.1992-ஆம் நாளிலிருந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது.

### பெண் சிசுவதைத் தடுப்பு

பெண் குழந்தைகள் பிறந்த உடனேயே கொல்லப்படுகின்ற கொடுமையிலிருந்து அவர்களைக் காக்க, பெண் குழந்தைகளைத் தாய்மார்களே வேண்டாமென்று விட்டுச் செல்கின்ற பகுதிகளில் அரசுத் தொட்டில்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதுவரை 54 பெண் குழந்தைகள் இத்தொட்டில்களிலிருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளன.

சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட இயக்குநர், குழந்தை ஒப்படைக்கப்பட்டுள்ள நிறுவனத்தின் தலைவர் ஆகியோரின் பெயர்களில் கணக்கு ஒன்றைத் தொடங்கி, மீட்கப்பட்ட ஒவ்வொரு குழந்தைக்கும் ரூ.5,000 வைப்பீடு செய்ய ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. குழந்தை ஒப்படைக்கப்பட்டுள்ள நிறுவனத்திற்கு 6 திங்களுக்கொரு முறை வட்டித் தொகையை வழங்க, சமூகநல இயக்குநருக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. நிறுனத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ள குழந்தை, தத்தெடுக்கும் முறையின்கீழ் ஒருவரிடம் ஒப்படைக்கப்பட்டால் அக்குழந்தைக்காக வைப்பீடு செய்யப்படும் தொகை வட்டித் தொகையுடன் சேர்ந்து வளர அனுமதிக்கப்பட்டு, அந்தக் குழந்தை 21 வயதடையும் போது அந்தப் பெண்ணிடம் வழங்கப்படும்.

### மகளிர் மேம்பாட்டு ஒருங்கிணைந்த திட்டத்தின் கீழ் ஒரு இலட்சம் மகளிருக்கு சுய வேலை வாய்ப்பு

மகளிர் பொருளாதார நடவடிக்கைகளை சமூக நலம், ஊரக வளர்ச்சி, சுகாதாரம், கல்வித்துறையினருடன் ஒருங்கிணைந்து, மகளிர் மேம்பாட்டு ஒருங்கிணைந்த திட்டத்தின் கீழ் ஒரு இலட்சம் மகளிருக்குச் சுய வேலை வாய்ப்பு வசதியினை ஏற்படுத்த ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

### தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டம் விரிவுபடுத்துதல்

வேளாண் வளர்ச்சிக்கான பன்னாட்டு நிதி உதவி பெறும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தை, மதுரை இராமநாதபுரம் மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தி ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் ஒவ்வொரு மாவட்டத்திலும் 10,000 மகளிர் வீதம் மொத்தம் 20,000 மகளிர் சுய வேலை வாய்ப்பு வசதியினைப் பெறுவர்.

### ஆதரவற்ற பெண்களுக்குத் திருமண உதவித் தொகை உயர்வு

ஆதரவற்ற பெண்கள் திருமணத்திற்காக வழங்கப்படும் உதவித் தொகையை 1992-93-ஆம் ஆண்டிலிருந்து 1000 ரூபாயிலிருந்து 2000 ரூபாயாக உயர்த்தி ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

### சத்துணவுத் திட்டப் பணியாளர்களின் நலன்

ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம், தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம் மற்றும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் ஆகியவற்றில் பணிபுரியும் பணியாளர்களுக்குக் கொடுக்கப்படும் மதிப்பூதியத் தொகையை முதன் முறையாக 1992-ஆம் ஆண்டில் உயர்த்தியுள்ளது. 150 ரூபாயும் அதற்கு மேற்பட்டும் மதிப்பூதியம் பெறுகின்ற பணியாளர்களுக்கு 20 ரூபாயும் 150 ரூபாய்க்கு குறைவாக மதிப்பூதியம் பெற்று வந்த பணியாளர்களுக்கு 10 ரூபாயும் 1.4.92-ஆம் நாளிலிருந்து உயர்த்தப்பட்டது. இதேபோன்ற மதிப்பூதிய உயர்வு, மீண்டும் 1.7.92-ஆம் நாளன்று வழங்கப்பட்டது. பின்னர் 1.12.92-ஆம் நாளிலிருந்து அனைத்துத் திட்டங்களையும் சேர்ந்த பணியாளரின் மதிப்பூதியங்கள் மாதமொன்றுக்கு 85 ரூபாய் வரையில் உயர்த்தித் திருத்தியமைக்கப்பட்டுள்ளன. ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணியாளர்களுக்கு மட்டும் மத்திய அரசு பரிந்துரைத்தபடி சம்பள வீதங்களைச் செயல்படுத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

### மகளிருக்கான ஏனைய பலன்கள்

சத்துணவுத் திட்ட அமைப்பாளர் பதவிக்கும், உதவியாளர் பதவிக்கும் மகளிரை மட்டுமே நியமிப்பதென்று அரசு முடிவு செய்துள்ளது.

அரசிடமிருந்து திருமண நிதி உதவி பெற வேண்டுமெனில், திருமணத்தைப் பதிவு செய்ய வேண்டுமென்பதை அரசு கட்டாயமாக்கியுள்ளது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம் என்கிற அமைப்பிற்கு அரசு 'மகம்' என்கிற சுருக்கப் பெயரைச் சூட்டியுள்ளது.



### சத்துணவுத் திட்டத்திற்குத் தனித்துறைத் தலைவரை நியமித்தல்

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் செயல்படுத்தப்படுவதைக் கவனிக்க, தனித்துறைத் தலைவர் பதவியை ஏற்படுத்துவது குறித்த அப்பணியாளர்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவு செய்யும் பொருட்டு, ஊரக வளர்ச்சித் துறை இயக்குநரின் கட்டுப்பாட்டில் பணிபுரிந்த மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் (சத்துணவுத் திட்டம்), சமூக நலத்துறை இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளார்கள். சமூக நலத்துறை இயக்குநர் பதவியும் 'சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்ட இயக்குநர்' என மாற்றிப் பெயரிடப்பட்டுள்ளது.

### சத்துணவு மையங்களைப் பழுதுபார்த்தல் - புதுப்பித்தல்

சத்துணவு மையங்களைப் பழுது பார்க்க - புதுப்பிப்பதற்கான செலவை மேற்கொள்ள புகழ்பெற்ற தொழில் அதிபர்கள், கொடையாளிகள் ஆகியோரின் ஒத்துழைப்பைப் பெறுமாறு அரசு, மாவட்ட ஆட்சியாளர்களைக் கேட்டுக்கொண்டது. மாவட்ட ஆட்சியாளர்கள் இவ்விஷயத்தில் குறிப்பிடத்தக்க அளவுக்கு முன்னேற்றம் கண்டுள்ளனர். ரூ.1.50 கோடி செலவில் 2500-க்கு மேற்பட்ட மையங்களுக்குப் புதுப்



பொலிவு அளிக்கப்பட்டுள்ளது.

**சத்துணவுத் திட்ட மையங்களைப் பழுதுபார்ப்பதற்கு - புதுப்பிப்பதற்கு நிதி வழங்குதல்**

மாவட்டங்களில் நகர்ப் பகுதிகளில் அமைந்திருக்கும் சத்துணவுத் திட்ட மையங்களைப் பழுதுபார்ப்பதற்கு - புதுப்பிப்பதற்கு ரூபாய் ஒரு கோடி நிதி ஒதுக்கீடு செய்து அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது. அனைத்து மாவட்டங்களில் ஊரகப் பகுதிகளில் அமைந்திருக்கும் சத்துணவு மையங்களைப் பழுது பார்க்க- புதுப்பிக்க ரூ.73 இலட்சம் வரையில்தமிழ்நாடு ஊரக சீரமைப்பு முகவரமைப்பு (TARRA) (முதலமைச்சர் சத்துணவுத் திட்டம்) நிதியிலிருந்து நிதி ஒதுக்கீட்டிற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**குழந்தைகளுக்கான பொழுதுபோக்கு - கல்வி வசதி வளாகத்தை ஏற்படுத்துதல்**

கோயம்புத்தூரில் அன்னை சந்தியா குழந்தைகள் உலகத்தை ஏற்படுத்த ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. அங்கு குழந்தைகளுக்கான அனைத்துப் பொழுதுபோக்குக் கல்வி வசதி வளாகம் ஒன்று ஏற்படுத்தப்படும். தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் (TNCDW Ltd) ஒத்துழைப்புடன் கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் இதற்கான முன்னேற்பாடுகளை ஏற்கெனவே தொடங்கிவைத்துள்ளார்.

**அனாதைகளுக்கும், ஆதரவற்றவர்களுக்கும் சலுகைகள் வழங்குதல்**

அனாதைக் குழந்தைகளும், ஆதரவற்ற குழந்தைகளும், கல்வி மற்றும் வேலை வாய்ப்புச் சலுகைகளைப் பெறுவதற்காகப் பிறபடுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினராக வகைப்படுத்தப்பட்டுள்ளனர்.

அரசினர் அனாதை இல்லங்களிலும் பணி இல்லங்களிலும் தங்கியிருப்போருக்கான சீருடைப்படி முறையே ரூ.60-யிலிருந்து ரூ.100 ஆகவும்,ரூ.100-லிருந்து ரூ.150 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

அரசினர் அனாதை இல்லங்களில் தங்கியிருப்போருக்கு 18 வயது முடிவடைந்த பின்னரும் கூட அவர்களை இல்லங்களிலே தங்க வைத்து அவர்களுக்குத் திருமணத்திற்கு உதவி செய்யவும், வேலை வாய்ப்பளிக்கவும் அரசு ஏற்பாடு செய்துள்ளது.

சத்துணவுத் திட்ட மையங்களிலும், அரசினர் அனாதை இல்லங்களிலுமுள்ள குழந்தைகளுக்குக் கம்பளி 'ஸ்வெட்டர்கள்' வழங்க வகை செய்யப்பட்டுள்ளது.

உணவுக் கட்டணங்கள் மாதமொன்றுக்கு ரூ.90-லிருந்து ரூ.120 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

**உடல் ஊனமுற்றோர் நலம் புதிய இயக்ககம் ஏற்படுத்துதல்**

அரசு, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின் 15.3.1993-ஆம் நாளிட்ட 69-ஆம் எண் அரசாணையில் உடல் ஊனமுற்றோர் புதுவாழ்வு இயக்கத்தைப் புதிதாக ஏற்படுத்துவதற்கு ஆணை பிறப்பித்தது. உடல் ஊனமுற்றோர் புதுவாழ்வுத் திட்டங்களைச் சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்ட இயக்குநரின் நிருவாகக் கட்டுப்பாட்டிலிருந்து உடல் ஊனமுற்றோர் புதுவாழ்வுத் துறை இயக்குநரின் நிருவாகக் கட்டுப்பாட்டுக்குப் பணியாளர்களுடனும் ஒப்பதலளிக்கப்பட்ட கூடுதல் பணியாளர்களுடனும் செலவுக்குரிய தொகையுடனும் மாற்ற அரசு ஆணை பிறப்பித்தது.

**மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெயலலிதா பெயரிலான பரிசு**

நடப்பாண்டில், உடல் ஊனமுற்றவர்களில் அதிகம் பேருக்கு வேலை வாய்ப்பளித்துள்ள தொழிலதிபர்களை ஊக்குவிக்க மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெயலலிதா பெயரிலான சிறப்புப் பரிசை ஏற்படுத்தி அரசு உத்தரவிட்டுள்ளது. இப்பரிசினை, மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒவ்வொரு குடியரசு தினத்தன்றும் வழங்குவார்கள்.

**பயணக் கட்டணச் சலுகை நீட்டிப்பு**

மூளை வளர்ச்சி குன்றியவர்களுக்கும், பார்வையற்றோருக்கும், அவர்களுடைய வயது வரம்பைப் பாராமல் அனைவருக்கும் இலவசச் சலுகைப் பயணச் சீட்டு வழங்கப்படுகிறது. இவர்கள் நீங்கலாக உடல் ஊனமுற்ற ஏனையோருக்கு 20 வயது வரையில் 50 சதவிகித ஊனமுற்றவர்களுக்கும் இலவசப் பயணச் சீட்டு வழங்கப்பட்டு வந்தது. அரசு, தற்போது, பார்வையற்றோர், மூளை வளர்ச்சி குன்றியவர்கள் தவிர ஏனைய உடல் ஊனமுற்றோருக்கும் வயது வரம்பின்றி 50 சதவிகித உடல் ஊனமுற்றோருக்கும் சலுகை கட்டணத்தில் இலவசப் பயணச் சலுகை அளிக்க அனுமதித்துள்ளது.

**அரசுப் பணிகளில் இட ஒதுக்கீட்டை உயர்த்துதல்**

ஊனமுற்றோருக்கு அரசு மற்றும் அரசுத்துறை நிறுவனங்களிலும் அளிக்கப்படும் இட ஒதுக்கீடு, 3 சதவிகிதத்திலிருந்து 5 சதவிகிதமாச உயர்த்தப்பட்டுள்ளது. இந்த ஒதுக்கீடு பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் ஆதி திராவிட/பழங்குடியினர் ஆகியோருக்கான இட ஒதுக்கீட்டு விகிதாச்சாரத்தைப் பாதிக்காவண்ணம் உயர்த்தப்பட்டுள்ளது. அரசு மற்றும் அரசுத்துறை நிறுவனங்களிலும் பணிபுரியும் ஊனமுற்றோர்களை அவர்களின் இசைவின்றி வேறு இடங்களுக்கு மாற்றம் செய்வதைத் தடை செய்து அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

**முதலமைச்சர் விருது**

உடல் ஊனமுற்றோர் மற்றும் மகளிரின் நலனுக்காகப் பாராட்டத் தக்க வகையில் பணிபுரிவோருக்கான முதலமைச்சரின் விருது ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பெண் குழந்தைகளின் நலனைப் பாதுகாக்கும் பொருட்டு அரசு, 'புரட்சித் தலைவி டாக்டர் ஜெயலலிதா பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்' தொடங்கியுள்ளது.

பெண் சிசுவதைத் தடுப்பு, ஒரு இலட்சம் மகளிருக்கு வேலை வாய்ப்பு, சத்துணவுத் திட்டப் பணியாளர்களின் நலன், உடல் ஊனமுற்றோர் நலன் முதலான பணிகள் தொடர்ந்து நடைபெறுகின்றன.



# நல்வாழ்த்துக்கள்

## சமூக நலத்துறைக் கட்டுப்பாட்டில் உள்ள பெண்கள் மேம்பாட்டுத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்

1. ராஜவல்லிபுரம் இணை உணவு உற்பத்தி பெண்கள் மேம்பாட்டுத் தொழிற் கூட்டுறவுச் சங்கம் லிட். ச.ந.எண்.64, ராஜவல்லிபுரம்.
2. சுத்தமல்லி பராசக்தி ஊட்டச் சத்து உணவுத் தயாரிக்கும் மகளிர் மேம்பாட்டுத் தொழிற் கூட்டுறவுச் சங்கம், லிட். ச.ந.எண்.63, சுத்தமல்லி.
3. அன்னை இந்திராகாந்தி சாக்குக்கட்டி உற்பத்தியாளர் பெண்கள் மேம்பாட்டுத் தொழிற் கூட்டுறவுச் சங்கம் லிட். ச.ந.எண்.62, கூனியூர், சேர்மாதேவி (வழி)
4. திருநெல்வேலி அண்ணா மகளிர் காகித அட்டை மற்றும் எழுது பொருள் தொழிலாளர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கம் இண்ட். எண்.1192 திருநெல்வேலி-7.
5. திருநெல்வேலி மகளிர் தையற் தொழிலாளர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கம் லிட். இண்ட் எண்.1704/26, புதுப்பேட்டை நடுத்தெரு, பாளையங்கோட்டை, திருநெல்வேலி-2.
6. வள்ளியூர் யூனியன் தையற் தொழிலாளர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கம், லிட், இண்ட். எண்.1631 பெருமாள்கோவில் தெரு, வள்ளியூர், நாங்குநேரி தாலுகா.
7. குருக்கள் பட்டி காலணி தயாரிக்கும் பெண்கள் மேம்பாட்டுக் குடிசைக் கூட்டுறவுச் சங்கம் லிட். ச.ந.எண்.6, குருக்கள்பட்டி, சங்கரன்கோவில் தாலுகா.
8. வாசுதேவநல்லூர் காலணி தயாரிக்கும் பெண்கள் மேம்பாட்டுக் குடிசைக் கூட்டுறவுச் சங்கம் லிட். ச.ந.எண்.7 வாசுதேவநல்லூர், சிவகிரி தாலுகா.

Gram: ASSEFA-MADRAS
Phone: 044 - 475 843
044 - 475763

எங்கள் இனிய நல்வாழ்த்துக்கள்



பண்ருட்டி தாலுக்கா விவசாய இடுபொருள்
வியாபாரிகள் சங்கம்
பண்ருட்டி



மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்



தேவிரத்னா ஏசி தியேட்டர்
ராஜாஜி சாலை
பிளாக் - 12
நெய்வேலி - 3.




# வனத்துறை வளர்ச்சியில் வானுயரச் சாதனை

மாண்புமிகு வனத்துறை அமைச்சர்

**திரு கு. லாரன்ஸ்**

**வனத்துறை, ஏழாவது திட்டக்காலச் சாதனை அளவான ரூ.138.77 கோடிக்கெதிராக, எட்டாவது ஐந்தாண்டுக் காலத்திற்கென (1992-97) ரூ.222 கோடி ஒதுக்கீடு பெற்றது மற்றொரு சாதனையாகும். இதில் மாநில-மத்திய அரசு உதவி பெறும் திட்டங்கள் மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டங்களும் அடங்கும்.**

இதயதெய்வம் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற இரண்டாண்டுக் காலத்தில், வனத்துறை வளமான பணிகள் பலவற்றைச் செய்து வந்திருக்கின்றது. அவற்றைக் கோடிட்டுக் காட்டுவதன் மூலம், வனத்துறையின் வளர்ச்சி தெற்றெனப் புலப்படும்.

85,350 எக்டேர் பரப்பளவில் தோட்டங்கள் எழுப்புதல் என்ற குறியீட்டினை, 54,660 எக்டேர் பரப்பளவில் தோட்டங்கள் அமைத்தலாலும் 37,100 எக்டேர் பரப்பில் சமூகக் காடுகள் வளர்த்தல் மூலமும் அடைந்தது.



பதினொன்று வனக் கோட்டங்களிலுள்ள தரந்தாழ்ந்த வனப் பகுதிகளில் 36,500 எக்டேர் நிலப்பரப்பில் வான் வழி மூலம் விதை தெளித்துத் தோட்டம் அமைத்தல் செய்யப்பட்டது.

இருபது அம்சத் திட்டத்தில் அம்சம் 16-இல் கருதப்பட்டவாறு பொதுமக்களின் தீவிர ஈடுபாட்டுடன் மிகுந்த அளவில் மரங்கள் வளர்த்து, காடுகளை உருவாக்கும் திட்டத்தின்கீழ் நிர்ணயிக்கப்பட்ட இலக்கு 1,675 இலட்சம் மரக் கன்றுகள் மற்றும் 1,19,000 எக்டேர் பரப்பளவில் மரம் நடுவதற்கு எதிராக, 2051.18 இலட்சம் கன்றுகள் வளர்க்கப்பட்டன. 1,81,690 எக்டேரில் மரங்கள் நடப்பட்டன.

காடுகளைச் செம்மையான முறையில் பாதுகாப்பதற்காக ரூ.140 இலட்சம் செலவில் சிறந்த தகவல் தொடர்புச் சாதனங்கள் நவீன ஆயுதங்கள், ஆகியவற்றை வாங்க அனுமதிக்கப்பட்டு செலவிடப்பட்டன. இந்த இரண்டாண்டுகளில் 117 வாகனங்கள் வாங்கப்பட்டன.

சந்தன மரக்குற்றங்கள் பிடித்ததற்கும், கடத்தலுக்குப் பயன்படுத்திய வண்டிகளைப் பறிமுதல் செய்ததற்கும் பல்வேறு வன அலுவலர்களுக்கு மொத்தம் ரூ.25.25 இலட்சம் பரிசுத் தொகையாக வழங்கப்பட்டுள்ளன. வனத் திருட்டுச் சம்பந்தமான தகவல் கொடுத்தவர்களுக்கும், அலுவலர்களுக்கும் ரூ.5 இலட்சம் பரிசுத் தொகை வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டு செலவிடப்பட்டது.

இயற்கைக் காடுகளின் மீதான சுமையைக் குறைக்கும் நோக்குடன் காப்புக் காடுகளில் கள்ளத்தனமாக விறகு சேகரிப்பதும், மரங்களை வெட்டுவதும் திறமையான முறையில் கட்டுப்படுத்த நீலகிரி மாவட்டத்தில் எட்டு இடங்களில் விறகு விற்பனை நிலையங்கள் அமைக்கப்பட்டன. மேலும் 1991-92-இல்

# செய்தித் துறையின் சிறப்புமிகு சாதனைகள்

மாண்புமிகு செய்தி-விளம்பரத்துறை அமைச்சர்
**திரு. மு. தென்னவன்**

- **புரட்சித்தலைவியின் சிந்தனையில் உதித்த திரைப்பட நகரம் ரூ.14.93 கோடி திட்ட மதிப்பீட்டில் உருவாக்கம்.**
- **திரைப்பட விருது வழங்குவதில், டாக்டர் புரட்சித்தலைவியின் பெயரால் 'ஜெ. ஜெயலலிதா விருது' வழங்கப் படும்.**
- **பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். - வாழ்க்கை வரலாறு பற்றி ஒளி-ஒலிக்காட்சி நடத் தப்படும்.**



**ம**க்கள் தொடர்புச் சாதனங்களைச் சிறப் பாகப் பயன்படுத்தி அரசின் கொள்கைகளையும், சாதனைகளையும் மக்களுக்கு விளக்கி, அரசின் வளர்ச்சிப் பணிகளில் மக்களை ஈடுபடுத்துவதிலும், ஒவ்வொரு நாளும் சாதனைச் சரித்திரம் படைக் கும் மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில் தொடர்ந்து முன்னேறி வரும் அனைத்துத் துறைகளைப் பற்றி மக்களி டையே ஒரு விழிப்புணர்ச்சி ஏற்படுத்துவதிலும், செய்தி விளம்பரத்துறை பெரும் வெற்றி பெற் றுள்ளது. மக்களையும், அரசையும் இணைக்கும் சிறந்த தொடர்புச் சங்கிலியாக இத்துறை பணி யாற்றி வருகிறது. செய்தி மக்கள் தொடர்புத் துறையானது, திட்டங்களைச் செயல்படுத்துகின்ற அரசுக்கும் அவற்றின் பயன்களைப் பெறுகின்ற மக்களுக்கும் இடையே அமைந்துள்ள ஜனநாயகப் பாலமாக இயங்க வேண்டும் என்ற மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் செம்மை யான வழிகாட்டுதலில் இயங்கி வருகின்ற வலு வான அரசுத் துறையாகும். ''அரசின் எண்ணங் களையும் திட்டங்களையும் செயல்பாடுகளையும் பிரதிபலிக்கின்ற சக்தி வாய்ந்த துறையாகும்'', என மாண்புமிகு முதல்வர் அவர்கள் சட்டப் பேரவையில் குறிப்பிட்டதற்கிணங்க, செய்தி மக்கள் தொடர்புத் துறை தொடர்ந்து சாதனை களைப் படைத்து வருகிறது.

**நினைவகங்கள்:**

நாட்டுக்கு உழைத்த நல்லோரின் நினைவு களைப் போற்றி தகுந்த மரியாதை செலுத்துவதில் புரட்சித்தலைவியின் அரசு மிகுந்த அக்கறை செலுத்தி வருகிறது.

**பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவகம்:**

மாண்புமிகு முதல்வர் அவர்களால் ஏற் கெனவே அறிவிக்கப்பட்டபடி, பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவகம் ரூ. 1.965 கோடி செலவில் மாற்றியமைக்கப்பட்டு மாண்புமிகு முதல்வர் அவர்களால் 24.12.92 அன்று திறந்து வைக்கப்பட்டது. மாண்புமிகு முதல்வர் அவர் களும், அமைச்சர் பெருமக்களும் இலட்சக்கணக் கான பொதுமக்களும் பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நினைவு நாளான 24.12.92 அன்று அங்கு சென்று அஞ்சலி செலுத்தினர்.

**மகாகவி பாரதியார் இல்லம்:**

திருவல்லிக்கேணியில் பாரதியார் வாழ்ந்த வீட்டை ரூ.5.7 இலட்சம் செலவில் அரசு விலைக்கு வாங்கியுள்ளது. அவசியமான பழுது பார்ப்புப் பணிகளும் மேம்பாட்டுப் பணிகளும் முடிவு பெற்றுத் திறக்கப்படத் தயாராக உள்ளது.

**கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை:**

தமிழக அரசு கன்னியாகுமரியில் விவேகானந்தர் பாறைக்கு அருகில் உள்ள சிறிய மலைப்பாறையில் கிரானைட் கல்லால் ஆன 133 அடி திருவள்ளுவர் சிலையை நிறுவ முடிவு செய்துள்ளது. சிலை செய்ய ரூ.3.60 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது. சிலை நிறுவப்பட உள்ள சிறிய பாறையைத் தயார் செய்ய சுமார் ரூ.84 இலட்சம் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக ரூ.1.605 கோடி இதுவரை கொடுக்கப்பட்டுள் ளது. கல் வேலைக்காக இதுவரை ரூ.48 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. இப்பணி இன்னும் 1½ ஆண்டுகளில் நிறைவு பெறும் என எதிர் பார்க்கப்படுகிறது.

**சென்னை மாநகர முன்னாள் மேயர் சிவராஜ் சிலை:**

சென்னை மாநகரத்தின் முன்னாள் மேயர் திரு. சிவராஜ் அவர்களுக்குச் சிலை அமைக்க அரசு முடிவு செய்து அதற்காக ரூ.2.02 இலட்சம் அனுமதித்துள்ளது.

**வெள்ளையனே வெளியேறு இயக்கத்தை சிறப்பிக்கும் வகையில் ஒரு நினைவுத்தூண் நிறுவுதல்:**

வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் பொன்விழா ஆண்டைச் சிறப்பிக்கும் வகையில் கிண்டி காந்தி மண்டபத்தில் ரூ.3 இலட்சம் செலவில் ஒரு நினைவுத்தூண் நிறுவ அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**நாமக்கல் கவிஞர் இல்லத்தை அரசுடைமையாக்குதல்:**

''கத்தியின்றி ரத்தமின்றி யுத்தம் ஒன்று வருகுது'', என சுதந்திர கீதத்தை முழங்கிய நாமக்கல் கவிஞர் திரு. வெ. இராமலிங்கம் பிள்ளை அவர்களின் நினைவையும், நாடு விடுதலை அடையப் பாடிய அவர்களைப் போற்றும் வகையிலும் நாமக்கல் நகரில் அவர் வாழ்ந்த இல்லத்தினை அரசுடைமையாக்கி நினை வகம் ஆக்க அரசு முடிவு செய்துள்ளது.

**சர்.பிட்டி தியாகராயர் நினைவிடத்தை அரசு ஏற்றல்:**

திராவிட இயக்கத்தின் வரலாற்றில் முக்கியத் தலைவர்களில் ஒருவராக விளங்கியவரும், நீதிக் கட்சியில் முக்கிய அங்கம் வகித்தவருமான சர். பிட்டி தியாகராயர் அவர்களின் நினைவிடம் சென்னை வண்ணாரப்பேட்டையில் அமைந் துள்ளது. அந்த நினைவிடத்தை அரசு ஏற்றுக் கொண்டு, அதைப் புதுப்பித்து, அரசு நினைவிட மாக ஆக்க முடிவு செய்துள்ளது.



**பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களைப் பற்றிய ஒலி-ஒளிக் காட்சி:**

தந்தை பெரியார் அவர்களின் வாழ்க்கை மற்றும் அறிவுரைகளை விளக்கும் விதமாக நடத் தப்பட்ட ஒலி-ஒளி காட்சி நிகழ்ச்சியைப் போன்று பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் வாழ்க்கை மற்றும் சாதனைகளை விளக்கும் வகை யில் ஒலி-ஒளிக் காட்சி நடத்திட அரசு முடிவு செய்துள்ளது.

**கவியரசு கண்ணதாசன் பிறந்த நாள் விழா:**

''புரட்சித் தலைவர் பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களது ஆட்சிக் காலத்தில் அரசவைக் கவிஞராகச் சிறப்பிக்கப்பட்ட கவியரசு கண்ணதாசன் அவர்களுக்கு மேலும் சிறப்பு சேர்க்கும் வகையில் அவர்களது பிறந்த நாள் விழா அரசு விழாவாக இந்த ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடப்படும்'' என மாண்புமிகு முதல்வர் அவர்கள் சட்டப் பேரவையில் அறி வித்தார்கள். அதன்படி கவியரசரின் பிறந்த நாள் விழா அரசு சார்பில் காரைக்குடியில் நடத்தப் பட்டது.

**பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் மணிமண்டபம்:**

மறைந்த மாபெரும் கவிஞர் திரு. பட்டுக் கோட்டை கல்யாணசுந்தரம் அவர்களின் நினை வாக, பட்டுக்கோட்டையில் ஒரு மணிமண்டபம் கட்ட புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டுள் ளார்கள்

**திரைப்பட நகரம்:**

இந்த அரசு ரூ.14.93 கோடி செலவில் தரமணியில் தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பற்றிய நிலைய வளாகத்தில் ஒரு திரைப்பட நகரை உருவாக்கி வருகிறது.

இத்திரைப்பட நகர் திரைப்படம் எடுக்கத் தேவையான கிராமியச் சூழல், நகர்ப்புறம், கோவில், மசூதி, தேவாலயம், பள்ளி, இரயில் நிலையம், பூங்கா போன்ற பல்வேறு இடங்களை உருவாக்கி ஒரே இடத்தில் செய்தித் துறையின்கீழ் இயங்கும் தமிழ்நாடு திரைப்பட வளர்ச்சிக் கழகம் இத்திரைப்பட நகர்த் திட்டத்தை நிறைவேற்ற ஓர் ஒருங்கிணைப்பு மையமாகத் திகழும்.

இத்திட்டம் முழுமையாக நிறைவேறும்போது, இந்த அரசால் உருவாக்கப்படுகிற திரைப்பட நகர் இந்தியாவிலேயே சிறந்ததாகவும், சர்வதேசத் தரத்தில் உள்ள பிற எந்தத் திரைப்பட நகருக்கும் ஈடுகொடுக்கத் தக்கதாகவும் அமையும்.

பல்வேறு திறந்தவெளிப் படப்பிடிப்புத் தளங்கள் மட்டுமில்லாது படப்பிடிப்பு நிலையம், ஒலிப்பதிவு அரங்கம், மறு ஒலிப்பதிவு அரங்கம், ஒளிநாடா படப்பிடிப்பு நிலையம் போன்றவற்றுடன் படப்பிடிப்பு முடிந்த பிறகும் பயன்படக்கூடிய பல்வேறு அமைப்புகளும், சாதனங்களும் இங்கே சர்வதேசத் தரத்திற்கேற்ப அமைக்கப்படும். திரைப்படத் தயாரிப்பாளர்கள், ஒளிநாடாத் தயாரிப்பாளர்கள், திரைப்படத் தொலைக்காட்சிப் பயிற்சி மாணவர்கள் ஆகிய அனைவரும் ஒரே இடத்தில் படங்களைத் தயாரிப்பதற்கு இத்திரைப்பட நகர் உதவும்.

**பொருட்காட்சிகள்:**

அரசுக்கு அதிக அளவில் வருவாயை ஈட்டித் தரும் அரசுப் பொருட்காட்சிகள் தற்போது கோயம்புத்தூர், மதுரை மற்றும் சேலம் ஆகிய இடங்களில் நடத்தப்பட்டு வருகின்றன. அவை மூலமாக 1991-92-ஆம் ஆண்டில் 27.40 இலட்சம் ரூபாயும், 1992-93-ஆம் ஆண்டில் 46.11 இலட்சம் ரூபாயும் இலாபமாக அரசுக்கு கிடைத்துள்ளது. "மேலும் அரசு பொருட்காட்சிகளைப் பல்வேறு தரப்பட்ட மக்களும் விரும்பிப் பார்த்துப் பயன்பெறும் காரணத்தினால் இந்த ஆண்டு அரசு பொருட்காட்சிகள் திருச்சி மற்றும் திருநெல்வேலி நகரங்களிலே நடத்தப்படும்" என மாண்புமிகு முதல்வர் அவர்கள் சட்டப்பேரவையில் மானியக் கோரிக்கையின்போது அறிவித்தபடி அரசு முடிவு செய்துள்ளது.

**புதுடெல்லியில் செய்தி நிலையம்:**

மாண்புமிகு முதல்வர் அவர்கள் முன்னதாக வெளியிட்ட அறிவிப்பினைத் தொடர்ந்து, தமிழ்நாடு அரசின் சார்பில் புதுடெல்லியில் செய்தி நிலையம் ஒன்று உருவாக்கப்பட்டு வருகிறது. செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் கீழ் ஏற்கெனவே, சென்னை, மதுரை, தஞ்சாவூர், திருச்சி, கோவை ஆகிய ஐந்து நகரங்களில் செய்தி

**தமிழ் வளர வேண்டுமென்றால், முத்தமிழ்க் கலைகள் உயர வேண்டுமென்றால், மலர்ந்து வரும் தமிழ் அறிஞர்களும், கலை மேதைகளும் போற்றப்பட வேண்டும். போற்றுதலும், போற்றப்படுதலும்தான், மனித சமுதாயத்தின் உயர்வுக்குக் காரணமான இரு முக்கிய உந்து சக்திகள் என்பது உலகியல் உண்மை.**



நிலையங்கள் நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன.

புதுடெல்லியில் நிறுவப்படும் இச்செய்தி நிலையம் டெல்லியில் உள்ள செய்தித் தாள்கள் வாயிலாகவும், மற்ற மக்கள் தொடர்புச் சாதனங்கள் மூலமாகவும், தமிழ்நாடு அரசின் நலத் திட்டங்கள் மற்றும் வளர்ச்சிப் பணிகளை வெளிப்படுத்த மிகவும் உதவியாக இருக்கும்.

மேலும், இச்செய்தி நிலையமானது, தமிழ்நாட்டிலுள்ள கலை, பண்பாடு மற்றும் சுற்றுலா மையங்கள், விடுமுறைக் கால ஓய்விடங்கள் ஆகியவைகளைப் பற்றிய தகவல்களை முழுமையாக வழங்குவதன் மூலமாகவும் டெல்லியில் தமிழ் மாநிலத்தைப் பற்றி செவ்வனே அறிந்து கொண்டு நல்லதொரு கணிப்பை ஏற்படுத்த ஏதுவாகவும் இருக்கும். தவிரவும், தமிழ்நாடு பற்றிய முக்கிய செய்திகளை டெல்லியிலுள்ள செய்தியாளர்களுக்கு இச்செய்திகளை வேறு வழிகளில் பெற ஏற்படுகின்ற காலதாமதத்தைத் தவிர்க்கின்ற வகையில், இச்செய்தி நிலையம் உடனுக்குடன் செய்திகளை நேரடியாக வழங்குகின்ற மையமாகவும் விளங்கும்.

**சிறந்த தமிழ்ப்படங்கள், கலைஞர்களுக்கு விருது வழங்கும் திட்டம்:**

1990 மற்றும் 91-ஆம் ஆண்டுகளிலிருந்து சிறந்த திரைப்படங்களுக்கான பரிசுத் தொகையை மாண்புமிகு புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பின்வருமாறு உயர்த்தி வழங்கிட ஆணை பிறப்பித்துள்ளார்கள்.

அதனடிப்படையில் முதல் பரிசு ரூ.1 இலட்சத்திலிருந்து ரூ.1.25 இலட்சமாகவும், 2-ஆம் பரிசு ரூ.50 ஆயிரத்திலிருந்து ரூ.75 ஆயிரமாகவும், 3-ஆம் பரிசு ரூ.25 ஆயிரத்திலிருந்து ரூ.50 ஆயிரமாகவும், சிறப்புப் பரிசு ரூ.25 ஆயிரத்திலிருந்து ரூ.50 ஆயிரமாகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது.

1990 மற்றும் 1991-ஆம் ஆண்டுகளுக்கான திரைப்பட விருது வழங்கும் விழா 21.1.93 அன்று சென்னையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. அவ்விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கலந்துகொண்டு விருது பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கினார்.

செய்தி மக்கள் தொடர்புத் துறை முதன் முறையாக அரசின் இவ்விருது வழங்கு விழாவினை விளம்பர நிறுவனங்கள் மூலம் சென்னை தொலைக்காட்சியில் ஒளிபரப்பியது. இதன் மூலம் செலவுகள் போக ரூ.3 இலட்சம் அரசுக்கு வருவாய் கிட்டியது. இனி வருங்காலத்தில் முக்கிய நிகழ்ச்சிகளை விளம்பர நிறுவனங்கள் மூலம் தொலைக்காட்சியில் ஒளிபரப்பச் செய்து, தமிழ்நாடு திரைப்படப்பிரிவு வர்த்தக நிறுவனமாகவும் செயல்படவுள்ளது. 1992-ஆம் ஆண்டுக்கான சிறந்த திரைப்படங்கள், கலைஞர்கள் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்களைத் தேர்வு செய்ய ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது.

**ஜெ. ஜெயலலிதா விருது**

மேலும், சிறந்த திரைப்படங்களுக்கும், நடிக நடிகையருக்கும், இயக்குநர் மற்றும் தொழில் நுட்பக் கலைஞர்களுக்கும் முன்பு வழங்கப்பட்டு வந்த மூன்று சவரன்-ஐந்து சவர[ன்] என்பவற்றை மாற்றி, பாகுபாடின்றி அனைவரும் ஐந்து சவரன் தங்கப்பதக்கம் பெறும் வகையில் உயர்த்தி வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

மேலும் - சிறந்த கலை வித்தகர்களுக்காக அறிஞர் அண்ணா, பாவேந்தர், இராஜா சாண்டோ, கலைவாணர், எம்.ஜி.ஆர். ஆகியோர்களின் பெயரால் வழங்கப்பட்ட விருதுகளுடன் 1992 முதல் மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் பெயரால் 'ஜெ. ஜெயலலிதா விருது'ம் சேர்த்து, கலைவித்தகர்களுக்கு வழங்கப்படும்.

**குறைந்த செலவில் தயாரிக்கும் தமிழ்ப்படங்களுக்கு உதவித் தொகை அதிகரிப்பு:**

குறைந்த செலவில் நல்ல தரமான தமிழ்த் திரைப்படங்கள் தயாரிக்கப்படுவதை ஊக்குவிக்கும் நோக்கத்துடன், அத்தகைய தமிழ்த் திரைப் படங்களுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டத்தை மாண்புமிகு புரட்சித் தலைவியின் அரசு செயல் படுத்தி வருகிறது. இந்த உதவித் தொகையை ரூ.2 இலட்சத்திலிருந்து ரூ.3 இலட்சமாக உயர்த்தி 50 படங்களுக்கு 1992-ஆம் ஆண்டிலிருந்து வழங்க அரசு முடிவு செய்தது. குறைந்த செலவில் தயாரிக் கப்பட்டு 12 முதல் 30 பிரதிகள் வரை எடுக்கப் படும் தமிழ்த் திரைப்படங்கள் இந்த உதவித் தொகை பெறத் தகுதியுடையனவாகும் என மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்கள் அறிவித் திருந்தார்கள். இதற்கென ரூ.1.50 கோடியை அரசு ஏற்கெனவே ஒதுக்கியிருக்கிறது. சமீபத்தில் திரையுலகில் ஏற்பட்டிருந்த சிக்கலைத் தீர்க்க 21.6.93 அன்று தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் கலைத்துறையினரோடு கலந்து பேசி அனைவரும் வியந்து பாராட்டத்தக்க நல்லதொரு சுமுகமான முடிவினை அறிவித்தார்கள். அதன்படி இதுவரை குறைந்த செலவில் தயாரிக்கப்பட்ட 50 தமிழ்த் திரைப்படங்களுக்கு மட்டும் அரசு மானியமாக ரூ.3 இலட்சம் வழங்கப்பட ஆணை பிறப்பிக்கப் பட்டது. இந்த ஆண்டு முதல், மானியத்தொகை பெறும் படங்களின் எண்ணிக்கை 75 ஆக உயர்த்தப்படுகிறது.

இதற்காக 2 கோடியே 25 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்படுகிறது.

இனிமேல், குறைந்தது 6 பிரதிகள் எடுக்கப்படும் படங்களுக்கு இந்த உதவித்தொகை வழங்கப்படும் என மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார். இந்த அறிவிப்பு, திரையுலகினரின் ஒருமித்த பாராட்டுதலைப் பெற்றது.

மேலும், தமிழ்த்திரைப்படங்களில் நடக்கும் வீடியோ, கேபிள் டி.வி. திருட்டுச் செயல்களை, தீவிரமாகத் தடுத்து நிறுத்த, இதற்கென ஒரு தனிக் காவல்படை உருவாக்கப்பட்டு, கேபிள் டி.வி. திருட்டுகள் தடுக்கப்படும் என மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

**வீடியோ வாகனம்:**

செய்தி-மக்கள் தொடர்புத் துறையில், தலைநகரிலும் மாவட்டங்களிலும் களவிளம்பரப் பணிக்காக, 10 வீடியோ வாகனங்கள் சமீபத்தில் வாங்கப்பட்டுள்ளன. அரசின் சாதனைகள், திட்டங்கள், வளர்ச்சிப் பணிகள் மற்றும் நலப்பணிகள் குறித்த வீடியோ படங்கள் காண்பிப்பதற்காக, இந்த வாகனங்கள் ஆண்டு முழுவதும் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. வீடியோ வாகனம் மூலமாக நடத்தப்படும் களவிளம்பரப் பணி மக்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்று வருகிறது. இந்தப் பணிக்காக மேலும் 10 வாகனங்கள் இந்த நடப்பாண்டில் வாங்கப்படும்.

**மேற்கோள் பிரிவு:**

உடனடி மேற்கோளுக்காகச் செய்தித்தாள்களைத் தொகுத்து அட்டையிட்டுக் காக்கின்ற முறை இக்காலத்திற்கு ஒவ்வாததாகவும், அதிக கால விரயத்தை ஏற்படுத்துவதாகவும் இருப்பதால், செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் இப்பிரிவை நவீனப்படுத்துவதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்காக 16.50 இலட்சம் ரூபாய் செலவில் கேமரா பிராசசர் மற்றும் ரீடர் பிரிண்டர் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு முழுமையான மைக்ரோ பிலிம் சாதனத்தை விலைக்கு வாங்கி, பல்வேறு செய்தித்தாள் கவடிகள், பருவ இதழ்கள் மற்றும் பிற முக்கிய செய்திக் குறிப்புகள் நுண்படம் எடுக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.

அரசின் வளர்ச்சிப் பணிகள் - அவற்றால் மக்களுக்குக் கிடைக்கும் நன்மைகள் ஆகியவற்றையும், அரசின் சாதனைகளையும் மக்கள் அறியவும், அதன் பயனைத் துய்க்கவும், பல்வேறு மக்கள் தொடர்புச் சாதனங்கள் துணையுடன் செயல்படுத்துவது அரசு நலத்திட்ட விளக்க முகாமின் நோக்கமாகும்.

மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி அரசின் கொள்கைகளையும் குறிக்கோள்களையும் பொது மக்களுக்குக் கொண்டு செல்லுகின்ற சீரிய பணிகளைச் செய்தி விளம்பரத்துறை தொடர்ந்து நிறைவேற்றும்.

மூன்று விற்பனை நிலையங்கள் பெரியகுளம், மேட்டுப்பாளையம் துடியலூர் ஆகிய இடங்களிலும் புதிதாக அமைக்கப்பட்டன.

வண்டலூரில் தமிழ்நாடு வன ஆராய்ச்சி நிலையத்தை உருவாக்க ரூ.17.50 இலட்சம் அனுமதிக்கப்பட்டு அதில் 16.70 இலட்சம் செலவிடப்பட்டது.

தமிழ்நாடு வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தைச் செயல்படுத்த 1991-92-ஆம் ஆண்டில் ஐந்து புதிய தோட்டங்களும் மூன்று ஆராய்ச்சித் தோட்டங்களும் ஏற்படுத்தப்பட்டன.

தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தில் ரூ.60 கோடி செலவில் 3,200 எக்டேர் பரப்பளவில் தேயிலைத் தோட்டம் உருவாக்கத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. 1991-92-ஆம் ஆண்டில் 130 எக்டேர் பரப்பளவில் தேயிலைத் தோட்டம் உருவாக்கப்பட்டது.

தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்தில் 6 ஆண்டுகளில் ரூ.85 கோடி அளவில் 30,000 எக்டேர் பரப்பளவில் கூழ் மரத்தோட்டம் வளர்க்கும் ஒரு பெருந்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. 1991-92-ஆம் ஆண்டு 5,150 எக்டேர் பரப்பளவில் தோட்டம் எழுப்பப்பட்டது.

ரூ.2347 இலட்சம் மதிப்புள்ள 1351.5 டன் சந்தன மரங்கள் சம்பந்தப்பட்ட 4054 வனக்குற்றங்கள் ஏப்ரல் 1991 முதல் மே 1993 முடிய கண்டுபிடிக்கப்பட்டதுடன் 1,176 வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தன மரக்கட்டைகளைக் கடத்து தலைத் தொழிலாகக் கொண்டுள்ள 128 சந்தன மரக் கடத்தல்காரர்கள் 1991-92-ஆம் ஆண்டிலும், 194 சந்தன மரக் கடத்தல்காரர்கள் 1992-93-ஆம் ஆண்டிலும், 9 சந்தன மரக் கடத்தல்காரர்கள் 1993-ஆம் ஆண்டு மே மாதம் 1993 வரை குண்டர்கள் தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர்.



வனக் குற்றங்கள் மட்டும் நடத்த தனி நீதிமன்றம் ஒன்று வடார்க்காடு-அம்பேத்கர் மாவட்டத்திலுள்ள திருப்பத்தூரில் 21.3.93 முதல் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

1992-93-ஆம் ஆண்டில் பல்வேறு திட்டங்களுக்கும் ரூ.5,045 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டது. வனத்துறையின் 130 ஆண்டுக்கால வரலாற்றில் வளர்ச்சித் திட்டங்களுக்கென ரூ.50 கோடிக்கும் மிகுதியாக நிதி ஒதுக்கீடு பெற்றுள்ளது ஒரு சிறந்த சாதனையாகும்.

வனத்துறை, ஏழாவது திட்டகாலச் சாதனை அளவான ரூ.138.77 கோடிக்கெதிராக, எட்டாவது ஐந்தாண்டுக் காலத்திற்கென (1992-97) ரூ.222 கோடி ஒதுக்கீடு பெற்றது மற்றொரு சாதனையாகும் இதில் மாநில-மத்திய அரசு உதவி பெறும் திட்டங்கள் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், மேற்கு மலைத் தொடர் அபிவிருத்தித் திட்டங்களும் அடங்கும்.

இதைப் போலவே காடு வளர்க்கும் பணியில் ஏழாவது திட்டக் காலச் சாதனை 1,80,000 எக்டேருக்கு எதிராக எட்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்கு இலக்கு 2,20,000 எக்டேராக உயர்த்தப்பட்டுள்ளது.

1991-92 மற்றும் 1992-93-ஆம் ஆண்டுகளில் இலக்கு ரூ.93.48 கோடிக்கு எதிராக ரூ.93.63 கோடி செலவிடப்பட்டது.

1991-92-ஆம் ஆண்டில் ரூ.50.45 இலட்சம் நிதி அளவில் பத்துப் பகுதி- 2 திட்டங்களும், 1992-93-ஆம் ஆண்டில் ரூ.83.51 இலட்சம் நிதி அளவில் எட்டுப் பகுதி-2 திட்டங்களும் ஒப்புதலளிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டன.

★ மதம் பகுத்தறிவுக்கு மேலானதாக மதிக்கப்படும் மனப்பான்மை ஒழிந்து, பகுத்தறிவை மதத்துக்கு மேலானதாக மதிக்கும் மனப்பான்மை எல்லோருக்கும் தோன்றவேண்டும்.





முப்பது ஆண்டுகளுக்குப் பிறகு கையினால் விதை தெளிக்கும் முறையில் காடு வளர்ப்புப் பணி 1992-93-இல் மீண்டும் மேற்கொள்ளப்பட்டு, 4,000 எக்டேர் பரப்பளவில் செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர்., வடார்க்காடு-அம்பேத்கர், திருவண்ணாமலை- சம்புவராயர், தென்னார்க்காடு, சேலம் மற்றும் பெரியார் மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டது.

வனக் காவலர், வனக்காப்பாளர், வனவர் மற்றும் வனச் சரகர்களுக்கு மாதம் ரூ.20 வீதம் இன்னல் ஈட்டுப்படி (Risk allowance) வழங்கப்பட்டு வருகின்றது.

தமிழ்நாடு வனப் பாதுகாப்புச் சட்டம் 1882-ஐ செவ்வனே நடைமுறைப்படுத்த, திருத்தச் சட்டம் 44/1992 இயற்றப்பட்டு, சந்தன மரம் மற்றும் அட்டவணை மரங்கள் கடத்தலில் ஈடுபடும் வாகனங்களைக் கையகப்படுத்த வனத்துறை அலுவலர்கள் நியமிக்கப்பட்ட அதிகாரிகள் செயல்பட அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இச்சட்டத் திருத்தம் 1.10.92 முதல் அமலில் உள்ளது.

வடார்க்காடு-அம்பேத்கர் மாவட்டம் ஜமுனாமாத்தூரில் உள்ள பழங்குடியினர் உயர்நிலை மற்றும் மேல்நிலை பள்ளித் தேர்வுகளில் ஊக்கம் தரும் சாதனை பெற்றுள்ளன.

நமது அரசு பொறுப்பேற்கும் போது, இத்துறையில் 309 வாகனங்கள் இருந்தன. தற்போது துறையில் 489 வாகனங்கள் உள்ளன. அதைப்போலவே 286 பல்வேறு ஆயுதங்கள் இருந்தன. துறையில் தற்போது 384 ஆயுதங்கள் உள்ளன. ரூ.27 இலட்சம் நிதியளவில் 177 ஆயுதங்கள் வாங்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதில் 91 ஆயுதங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. சேலம், சென்னை, வேலூர் ஆகிய இடங்களில் நாய்ப்படை அமைக்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வனத்துறை வரலாற்றில் இடம்பெறத்தக்க வகையிலே, தம் பணியைத் தொடர்கின்றது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

## இந்தியாவிலேயே முதன் முறையாக

## கட்டடத் தொழிலாளர்க்கான சிறப்புத் திட்டம்

இந்தியாவிலேயே முதன் முறையாக, கட்டடத் தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில் ஒரு சிறப்புத் திட்டத்தைத் தமிழ்நாட்டில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் அறிமுகம் செய்ய உத்தரவிட்டு, அதன்படி ''தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர் - வேலை மற்றும் பணி நிலைமைகளை முறைப்படுத்தும் சட்டத்திற்கு'' ஒரு சட்டத் திருத்தம் மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் ஆலோசனைப்படி கொண்டு வரப்பட்டது.

முதல் கட்டமாக இப்புதிய சட்டம் சென்னை, மதுரை, கோவை மாநகராட்சி எல்லைகளுக்குள் பணிசெய்யும் கட்டடத் தொழிலாளர்க்குப் பொருந்தும். இதன்படி ஒரு கட்டடமோ அல்லது கட்டுமானப் பணியோ அதாவது கட்டடம் அல்லாத சாலை வேலை, பாலங்கள் அமைப்பதற்கான வேலைகளின் திட்டமதிப்பீட்டில் 1 சதவீதத்திற்கு மிகைப் படாத தொகை 'உடல் உழைப்புத் தொழிலாளர் நல வாரியத்திற்குச்' செலுத்தப்படுதல் வேண்டும்.

அரசு வேலையாக இருந்தாலும் அல்லது தனியார் வேலையாக இருந்தாலும் உள்ளாட்சி நகரமைப்புகளுக்குக்கீழ் அந்தக் கட்டடத் திட்டத்திற்கோ அல்லது சாலை போடும் வேலைக்கோ அல்லது பாலங்கள் மற்றும் பிற கட்டடங்கள் கட்டும் வேலைக்கோ அனுமதி கோரும்போது அந்தத் திட்ட மதிப்பீட்டில் ஒரு சதவீதத்திற்கு மிகாமல் ஒரு தொகையினைத் தொழிலாளர் நல வாரியத்திற்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

தொழிலாளர் நல வாரியம் தொகையினை அடிப்படையாகக் கொண்டு அனைத்துக் கட்டடத் தொழிலாளர்களின் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை அமல்படுத்தும். அதன்படி அந்தக் கட்டடத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம், பணிக்கொடை, இ.எஸ்.ஐ. வருங்கால வைப்பு நிதி (பிஎஃப்) முதலான சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை நிறைவேற்றிக் கொடுக்கும்.

இதுவரை கொண்டுவரப்பட்ட திட்டங்கள் அனைத்தும், அமைப்பு ரீதியான தொழிலாளர்களுக்கு (Organised Labour Force) மட்டும்தான் உதவி புரிந்தன. இப்புதிய திட்டத்தின்படி, இப்பொழுதுதான் இந்தியாவிலேயே முதன் முறையாக, தமிழ்நாட்டில்தான் எந்தவித அமைப்பிலும் சாராத தொழிலாளர்களுக்கு (Unorganised Labour Force) பயன்படும் வகையில் இத்திட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தப் புதிய சட்டம் தமிழ்நாட்டிலுள்ள பல்லாயிரக்கணக்கான கட்டடத் தொழிலாளர்களுக்கு மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் 'மேதினப் பரிசாக' வழங்கப்படுகிறது.

# கல்வியெனும் கலங்கரை விளக்கம்



மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர்
**பேராசிரியர் க. பொன்னுசாமி**

- **'ஐநூறு மக்கள் தொகை கொண்ட ஒவ்வொரு குக்கிராமத்திற்கும் ஒரு கல்விக்கூடம்' எனும் புரட்சித்தலைவியின் நாளும் தொடரும் கல்விச் சாதனை.**
- **'தமிழகத்தில் கட்டாய ஆரம்பக்கல்வி' இந்தியா முழுமைக்கே எடுத்துக்காட்டாக விளங்கும் முதல் திட்டம்.**
- **உலக வங்கி நிதியுதவியுடன் ரூ.76 கோடியில் 55 தொழில்நுட்பப் பள்ளிகளை நவீனமயமாக்குதல்.**
- **அனைத்துலகத் தரத்தினை விஞ்சிடும் வகையில் ரூ.40 கோடி செலவில் நேரு விளையாட்டரங்கம்.**

மனிதனை முழு மனிதாக்குவது கல்வியறிவு ஒன்றே. அறிவுடையார் எல்லாம் உடையார். வாழ்க்கையில் எத்தகைய சூழ்நிலைகளையும் அறைகூவலையும் எதிர் கொண்டு போராடி வெற்றிபெற உதவுவது கல்வியே.

கல்விக்குச் செலவிடப்படும் தொகை, நாட்டின் எதிர் கால வளத்துக்கு, ஆற்றலுக்குச் செய்யப்படும் முதலீடு. இந்த உண்மையை நன்கு உணர்ந்துள்ள காரணத்தினால், கன்னித் தமிழகத்திற்குக் கல்விக்கண் கொடுக்கும் கடமைப் பொறுப்பை மிகுந்த அக்கறையுடன் நிறைவேற்றி வரும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள், கல்விக்காகச் செலவிடப்படும் தொகையை ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வந்துள்ளார்கள்.

மழலைக் குழந்தைகளிலிருந்து, தொழிலியல் ஆற்றல் பயிலும் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் வரை எந்த இடர்ப் பாடும் இன்றித் தொய்வின்றித் தொடர்ந்து கல்வி பயின்றுவர எல்லா ஏற்பாடுகளையும் செவ்வனே செய்து வருகிறார்கள்.

கடந்த மூன்று ஆண்டுகளில் கல்வித் துறைக்கு அளிக்கப்பட்ட நிதி விவரம் இந்த உண்மையினை நன்கு புலப்படுத்தும்.

*1991-92-ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு ரூ.1299 கோடி*
*1992-93-ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு ரூ.1517.78 கோடி*
*1993-94-ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு ரூ.1820.32 கோடி*

### அரும்புகளுக்கு வரப்பிரசாதம்

அறச் செல்வியின் ஆட்சியில் அனைவருக்கும் கல்வி யளித்தல் ஓர் அறக்கடமையாக நிறைவேற்றப்பட்டு



வருவதில் ஆச்சரியம் இல்லைதான். 14-வயது வரை யிலான குழந்தைகள் பழுதின்றிக் கல்வி பயிலவும், இடையில் நின்றுவிடுவதைத் தவிர்க்கவும், புதுப்பள்ளிகள் துவக்கவும் உதவும் வகையில் கடந்த இரண்டாண்டுகளில் 2,478 இடைநிலை ஆசிரியர் பதவிகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

மகளிர் மேம்பாட்டுக்கு உதவும் வகையில் தொடக்கப் பள்ளிகளில் அனைத்து ஆசிரியர் பணியிடங்களுக்கும் மகளிர் மட்டுமே நியமிக்கப்படுகின்றனர்.

கடந்த இரண்டாண்டுகளில் 464 புதிய ஆரம்பப் பள்ளிகள் துவக்கப்பட்டன. 44 ஆரம்பப் பள்ளிகள் நடு நிலைப் பள்ளிகளாகவும், 67 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 59 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் உயர்த்தப் பட்டன. புரட்சித்தலைவி அவர்கள் மேற்கொண்ட இந்த



முயற்சிகளின் பயனாக இன்று, தமிழகத்தில் 500 மக்கள் தொகையுள்ள கிராமம் எதிலும் பள்ளி இல்லாத நிலை இல்லை. அதுமட்டுமல்லாமல், எந்த மாணவனும் தான் படிப்பதற்காக, அதிகப்பட்சம் ஒரு கிலோமீட்டர் தூரத் திற்குமேல் போக வேண்டியதில்லை. அன்னையின் அருளாட்சியில் அரும்புகளுக்கு இது ஓர் வரப்பிரசாதம் அல்லவா?

ஒப்பந்த முறையில் ஆசிரியர் நியமிக்கப்பட்டு, குறிப் பிட்ட அளவு ஊதியம் அளிக்கும் முறை நீக்கப்பட்டு, அனைத்து ஆசிரியர்களும் தற்பொழுது காலமுறை ஊதிய முறையில் முறையாக நியமிக்கப்படுகின்றனர். பாடம் போதிக்கும் ஆசிரியர் பெருமக்களின் வயிற்றில் புரட்சித் தலைவி அவர்கள், பால் வார்த்துள்ளதாகவே இதைத் தமிழ்ப் பெருமக்கள் கருதுகிறார்கள்.

### கிராமப்புற மாணவர் மேம்பாடு

தமிழ்நாடு கிராமப்பகுதி மாணவர்களின் அறிவுத் திறன் திட்டம் என்ற புதிய திட்டம் 1991-92-ஆம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்டு, அதன்கீழ் ஒவ் வொரு வருவாய் மாவட்டத்திலும் 100 மாணவ மாணவிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்கு ஆண் டொன்றுக்கு ரூ.1000 வீதம் 9-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு முடிய 4 ஆண்டுகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. ஏழை எளிய கிராமப்புற மாணவர்களின் அறிவுத்திறன் செழுமை பெற இத்திட்டம் உதவியாக வுள்ளது.

மகளிர் கல்வி மேம்பாட்டுக்காக, 1992-93-இல் மகளிருக்கென 100 அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளிகளில் 'இடைநிலை ஆசிரியர் பயிற்சி வகுப்பு' தொடங்கப்பட்டுள்ளது.

ஆசிரியர் பயிற்சிக் கல்வியின் நிலையையும் மேம் படுத்தும் நோக்கத்துடன் ரூ.7.76 கோடி செலவில் 14 அரசினர் ஆசிரியப் பயிற்சி நிறுவனங்களை மாவட்ட ஆசிரியப் பயிற்சி மையங்களாக அரசு உயர்த்தியுள்ளது. மேலும் 7 புதிய மாவட்ட ஆசிரியப் பயிற்சி மையங் களைத் திறக்க அரசு ஒப்பளித்துள்ளது.

1993-94-ஆம் ஆண்டிலிருந்து கிராமப்புறங்களி லுள்ள திறமையான மாணவர்களுக்கென மூன்று குடி யிருப்புப் பள்ளிகளைத் திறக்கவும் அரசு தீர்மானித் துள்ளது.

### தொழில்நுட்பக் கல்வி செழிக்க

அரசு மற்றும் தனியார் துறைகளின் கீழ் இயங்கும் 55 தொழில்நுட்ப பயிலகங்களை நவீனப்படுத்தும் நோக் குடன், 5 ஆண்டுகளுக்குள் செயல்படுத்தப்படுவதற்கான உலக வங்கி உதவித் திட்டம் ஒன்றை ரூ.76 கோடி செலவில் அரசு ஆரம்பித்துள்ளது. இதற்காக 1991-92-ஆம் ஆண்டில் ரூ.2 கோடியும், 1992-93-ஆம் ஆண்டில் ரூ.10 கோடியும் ஒதுக்கப்பட்டது.

தொழில் நுட்ப பயிலகங்களில் தாழ்த்தப்பட்ட இனத் தைச் சேர்ந்த மாணவர்கள் சேர்வதற்கான வயது வரம்பை 22 வயதிலிருந்து 25 ஆகவும், பிற இனத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு 20-லிருந்து 22-ஆகவும் அரசு உயர்த்தி யுள்ளது.

தமிழ்நாட்டிலுள்ள அனைத்துச் சுயநிதி தொழில்



நுட்பப் பயிலகங்கள் மற்றும் பொறியியல் கல்லூரி மாணவர்கள் அவர்களின் இருப்பிடங்களிலிருந்து கல்லூரி களுக்குச் சென்றுவர அரசுப் போக்குவரத்துப் பேருந்து களில 50 சதவிகிதக் கட்டணச் சலுகையை அரசு அளித் துள்ளது.

### அறிவொளி இயக்கம் - ஓர் அற்புதச் சாதனை

'கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்'

என்பது பொய்யாமொழி. கல்வி' என்ற அகக்கண் ணைத்தான் உண்மையில் கண்ணாகக் கருதினார் திருவள்ளுவப் பெருந்தகை.

'கல்வி கல்லாதவர்களே இல்லை கன்னித் தமிழ் நாட்டில்' என்ற பெருமையை நிலைநாட்டிடப் புரட்சித் தலைவி அவர்களின் வழிகாட்டலின் கீழ்த் தமிழகக் கல்வித் துறை 'அறிவொளி இயக்கம்' கண்டு அயராது உழைத்து வருவது அனைவரும் அறிந்த ஒன்றே. கல்லாத வர்கள் கற்கவும்' கற்றவர்கள் அத்துடன் நின்றுவிடாமல், தாம்பெற்ற கல்விச் செல்வத்தை மற்றவர்களுக்கு வாரி வழங்கிட வழிவகை செய்து தரவும் உருவாக்கப்பட்ட திட்டமே 'அறிவொளி இயக்கம்'.

'இன்னறுங்கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த் தண்சுனைகள் இயற்றல்
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர்விளங்கி ஒளிர நிறுத்தல்
அன்னயாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்'

-என்ற மகாகவி பாரதி முழங்கிய புண்ணிய அறத்தை, மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி அவர்கள் முழு மனத்துடன் நிறைவேற்ற உத்தரவிட்டதன் பலனாக, கல்விப் புரட்சியில் இன்று தமிழகம் பெருமைமிகு பீடு நடை போடுவதைக் காண்கிறோம்.

தமிழகத்தை முழுமையான எழுத்தறிவு பெற்ற மாநிலமாக மாற்ற அரசு மூன்று கட்டங்களில் எழுத்தறிவுத் திட்டமொன்றை நிறைவேற்றி வருகிறது. அதன்படி, 1991-92, 1992-93 ஆகிய இரண்டாண்டுகளில் 7 மாவட்டங்கள் அறிவொளி இயக்கத்தில் ஈடுபடுத்தப் பட்டன.

இரண்டாவது கட்டமாக, 10 மாவட்டங்களில் 45 இலட்சம் பேர் கல்வியறிவு பெறும் வண்ணம் செய்யப் பட்டது. எனவே, தமிழகத்தில் எஞ்சியுள்ள 5 மாவட்டங் களில் 1993-94-இல் அறிவொளி இயக்கம் அமலாக்கப் படும்.

இதுவரை புதுக்கோட்டை, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், காமராசர் மாவட்டம் ஆகிய மூன்று மாவட்டங்கள் முழுமையான கல்வியறிவு பெற்ற மாவட்டங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. இது மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் சாதனை மகுடத்தில் மற்றுமொரு மாணிக்கக் கல்லாக ஒளி வீசுகிறது.

### இளைஞர்களின் விளையாட்டுத் திறன் வளர

இளைஞர்களின் விளையாட்டு ஆர்வத்தினை வழிமுறைப்படுத்தவும் விளையாட்டு வளர்ச்சிக்கு முக்கியத் துவத்தினை அளிக்கவும் அரசு ஜூலை 1992-இல் 'விளையாட்டு வளர்ச்சி நிறுவனத்தினை' ஏற்படுத்தி உள்ளது.

இவ்வாண்டு விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளும் பெண்களை ஊக்கப்படுத்தும் வகையில் தர்மபுரியில் பெண்களுக்கென தனியாக ஒரு விளையாட்டு விடுதி கட்டப்பட்டு சிறப்புப் பயிற்சி அளிக்கப் படுகிறது. தமிழ்நாடு மாநில விளையாட்டு வளர்ச்சி நிறுவனத்தால் தேர்ந்தெடுத்து அனுப்பப்பட்ட தமிழக விளையாட்டு பெண்கள் அணி தேசிய விளையாட்டு விழாக்களில் தங்கம் மற்றும் வெள்ளிப் பதக்கங்களைப் பெற்றுள்ளது.

22.1.1992-அன்று மாண்புமிகு முதல்வர் அவர்களால் ஈரோட்டில் ரூபாய் 62 இலட்சம் செலவில் ஒரு பல்நோக்கு பயனுடைய விளையாட்டரங்கு திறந்து வைக்கப்பட்டது. தூத்துக்குடியில் தருவை மைதானத்தில் ஒரு பன்நோக்கு பயனுடைய விளையாட்டரங்கு ரூ.54.65 இலட்ச மதிப்பில் கட்டி முடிவடையும் தருவாயில் உள்ளது. ரூபாய் 32 இலட்சம் செலவில் உதகமண்டலத்தில் திறந்தவெளி விளையாட்டரங்கம் ஒன்று கட்டப்பட்டது.

10-வது நேரு தங்கக் கோப்பைக்கான அகில உலக கால்பந்தாட்டப் போட்டியினை ஜனவரி 1993-இல் நடத்தும் சிறப்புமிக்க வாய்ப்பினைத் தமிழ்நாடு பெற்றது. இந்தப் போட்டியானது சென்னை நேரு விளையாட்டரங் கில் நடைபெற்றது. நேரு விளையாட்டரங்கு அகில உலக அளவில் ரூ.40 கோடி செலவில் திருத்தி கட்டப்பட்டது.

1993-94 முதல் ஓர் புதிய விளையாட்டுக் கொள்கையினைச்செயல்படுத்த அரசு உத்தேசித்துள்ளது. அதன்படி சிறந்த விளையாட்டு வீரர்கள்/வீராங்கனைகள் ஆகியோருக்கு ஊக்குவிப்புத் திட்டங்கள் ஏற்படுத்தப்படும்.

அரசு அங்கீகாரம் பெற்ற, தனியார் நடத்திவரும் உடல் ஊனமுற்றோர் பள்ளிகளில் பயின்றுவரும் குழந்தைகளுக்கு ஒவ்வொரு மாதமும் உணவுச் செலவுக்காக மானியமாக ரூ.30 மட்டுமே வழங்கப்பட்டு வந்தது. இத்தொகை மிகவும் குறைவாக இருப்பதாகவும், உயர்த்தித் தர வேண்டும் என்றும் கோரிக்கைகள் வைக்கப் பட்டன. அதன் நியாயத்தை உணர்ந்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் மிகுந்த தாயுள்ளத்தோடும், பரிவோடும் இந்த மானியத் தொகையை ரூ.30-லிருந்து ரூ.90-ஆக மும்மடங்கு உயர்த்தி உத்தரவிட்டார்கள். இதன்மூலம் 1.8.1992-முதல் 1,200 ஊனமுற்ற குழந்தைகள் பயனடைந்து வருகின்றனர்.

அறிஞர்களின் அனுபவப் பெட்டகமாகவும், சான்றோர்களின் தோன்றாத் துணைவனாகவும், விளங்கும் நூலகங்களின் வளர்ச்சியிலும் கல்வித் துறை தனிக்கவனம் செலுத்தி வருகிறது. 1992-93 நிதியாண்டில் 17 இலட்சம் ரூபாய் செலவில் 130 கிளை நூலகங்கள் திறக்கப்பட்டன. மாநிலத்திலுள்ள நூலகங்களில் மக்கள் படித்துப் பயன்பெற பல்வேறு வகைப்பட்ட 1890 நூல்கள் ரூ.148 இலட்சம் செலவில் வாங்கப்படவும், 300 பகுதிநேர நூலகங்கள் திறக்கப்படவும் உள்ளன.

சுருங்கச் சொன்னால், தமிழக மக்களின் காவல் தெய்வமாக விளங்கும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில், கல்வித் துறை ஒரு கலங்கரை விளக்கமாக அமைந்து, தனி நபர்களுக்கும், மாணவர், ஆசிரியர், இளைஞர், முதியோர் போன்ற பல்வேறு பகுதியினருக்கும் மொத்தத்தில் மக்கள் அனைவருக்கும் ஒளிமிக்க எதிர்காலத்திற்கு நல் வழி காட்டி வருகிறது.





# தொழிலாளர் நலம்

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்

**திரு. மேலூர் அ.மா. பரமசிவன்**

**மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் பதவி ஏற்ற பிறகு, தொழில் உறவில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்க தாகும். 1991-ஆம் ஆண்டில் வீணான மனித உழைப்பு நாட்கள் 72,78,969 ஆகும். 1992-இல் இது 28,68,472 ஆகக் குறைந்தது.**

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் தமிழ்நாட்டின் ஆட்சி பொறுப் பேற்ற பிறகு, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையில் நிகழ்ந்த சாதனைப் பட்டியலைத் தமிழக மக்களின் கவனத்திற்குக் கொண்டு வருவதில் நான் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

### தொழில் உறவு

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் பதவி ஏற்ற பிறகு, தொழில் உறவில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். 1991-ஆம் ஆண்டில் வீணான மனித உழைப்பு நாட்கள் 72,78,969 ஆகும்., 1992-இல் இது 28,68,472 ஆகக் குறைந்தது. இதனால் தொழிலாளர்கள் பயனடைவதுமல்லாமல், தொழில் மேம்பாடு ஏற்பட்டு தமிழ்நாடு முன்னேற வழிவகை செய்கிறது என்பதை இங்கு தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைய தினம் பல்லாயிரம் தொழிற்சாலைகள் இயங்கும் வேலையில் 12 தொழிற்சாலைகளில் மட்டும் கதவடைப்பு அல்லது வேலை நிறுத்தத்தால் வேலை பாதிக்கப்பட்டுள்ளது. இதனையும் தீர்க்க இந்த அரசு முயற்சித்து வருகிறது.



1992-ஆம் ஆண்டில் 11,856 தொழிற் தகராறுகள் எழுப்பப்பட்டதில் தொழிலாளர் துறை அதிகாரிகள் 10,113 தகராறுகளைத் தீர்த்து வைத்துள்ளனர்.

### இவற்றில் குறிப்பிடத்தக்கவை

பின்னி ஆலை திறக்கப்பட்டு 8,000 தொழிலாளர்கள் நன்மையடைந்தனர். 30.9.92 அன்று ஏற்பட்ட உடன்பாட்டின்படி தமிழ்நாடு மாநிலப் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்கள் ஓய்வூதியத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதனால் 1.05 இலட்சம் தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

2 இலட்சம் பீடித் தொழிலாளர்கள் ஊதிய உயர்வு மற்றும் போனஸ் கிடைக்க வகை செய்யப் பட்டுள்ளது.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் ஆலோசனையின் பேரில் எனது முன்னிலையில் சென்னை, ஸ்டாண்டர்ட் மோட்டார் புராடக்ட்ஸ் ஆப் இந்தியா லிமிடெட் எனும் நிறுவனத்தின் தொழிலாளர்களுக்கு, தன்னிச்சை ஓய்வு திட்டத்தின்கீழ் வழங்க வேண்டிய நிலுவைத் தொகை, சம்பளம் மற்றும் நிலுவைத் தொகைகள், அதிக வேலை அளிப்பது மற்றும் உற்பத்தி ஆகியவை பற்றி நிர்வாகம் மற்றும் தொழிற் சங்கப் பிரதிநிதிகளுடன் 10.6.93 மற்றும் 16.6.93 ஆகிய நாட்களில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. அதன் அடிப்படையில், தொழிலாளர்களுக்கு 8 நாட்களிலிருந்து 12 நாட்கள் வரை வேலை அளிப்பதற்கும், நிலுவைத் தொகை மாதம் ஒன்றிற்கு ரூ.200 வீதம் 2 ஆண்டுகளில் முழுமையாகத் தொழிலாளர்களுக்கு வழங்கவும், ஓய்வு பெற்றவர்களுக்கு அளிக்கப்படவேண்டிய நிலுவைத் தொகையான ரூ.2 கோடியை 30.9.93, 31.12.93, 31.3.94 மற்றும் 30.6.94 ஆகிய



தேதிகளில் ரூ.50 இலட்சம் வீதம் நான்கு தவணைகளில் அளிக்கவும், உற்பத்தியை ஒரு ஷிப்டிற்கு 12 வண்டிகள் வீதம் பெருக்கவும் இரு தரப்பினரும் ஏற்றுக் கொண்டு அதன்படி செயல்பட்டு வருகின்றனர். இது மாபெரும் சாதனையாகும்.

**நலத் திட்டங்கள்**

தொழிலாளர்களுக்கு அளிக்கப்படும் குறைந்தபட்ச ஊதிய விகிதங்கள் ஒரு நாளைக்கு ரூ.20-க்குக் குறையாமல் இருக்க வேண்டுமென்றும், ஊதியம் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை திருத்தி அமைக்க வேண்டியும் அரசு கொள்கை முடிவெடுத்தது. இதனால் அமைப்பு ரீதி அல்லாத தொழில்களில் பணிபுரியும் நலிந்த தொழிலாளர்கள் பயனடைகிறார்கள்.

பீடித் தொழிலாளர்களுக்கு ரூ.22,000 செலவில் 1000 வீடுகள் கட்ட மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அரசு அனுமதி வழங்கியுள்ளது என்பதைப் பெருமையோடு இங்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

கட்டடத் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்கும், அவர்கள் வேலையின் காரணமாக விபத்திற்குட்பட்டால் அவர்களுக்கு நஷ்டஈடு அளிப்பதற்கும் 30.4.93 அன்று சட்டம் நிறைவேற்றப்பட்டது.

5 ஆண்டுகளில் குழந்தைத் தொழிலாளர்களைப் பணியில் அமர்த்துவதைத் தவிர்க்கப்படும் என்று முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

**வேலை வாய்ப்பு**

மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அரசின் வேலை வாய்ப்பு அலுவலகங்களில் கம்ப்யூட்டர் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. இதனால் வேலைக்காகக் காத்திருப்போர் முறையாகப் பயன்பெற்று வருகிறார்கள்.

பணியிலிருக்கும்போது உயிர் விட்ட அரசு ஊழியர்களின் வாரிசுகளுக்கு உடனடியாக வேலை அளிக்க வேண்டி புதியதாக 500 பதவிகள் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அரசில் ஏற்படுத்த ஆணை வழங்கப்பட்டுள்ளது என்பதையும் பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**பயிற்சி**

மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அரசில் பெண்களுக்காகப் புதியதாக இரண்டு தொழிற்பயிற்சிப் பள்ளிகள் திறக்கப்பட்டுள்ளன. கோவையில் புதிய கட்டடம் கட்டப்பட்டு, 17.6.93 அன்று திறக்கப்பட்டுள்ளது, என்பதையும் இங்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**அயல்நாட்டில் வேலை வாய்ப்பு**

அயல்நாட்டில் வேலை வாய்ப்பு ஏற்படத்திக் கொடுக்க அமைக்கப்பட்ட நிறுவனம் இதுவரை இலாபம் இல்லாமல் இருந்து வந்தது. மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி பதவி ஏற்ற இந்த இரண்டு ஆண்டுகளில் முதன்முறையாக இலாபம் ஈட்டியுள்ளது என்பதையும், சுமார் 500 நபர்களுக்கு அயல்நாட்டில் வேலைத் தரப்பட்டுள்து என்பதையு பெருமையோடு இங்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.



# புரட்சித்தலைவியின் ஆட்சியில் கூட்டுறவுத் துறையின் பொற்காலம்

மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர்

**திரு. க.ப. பட்டாபிராமன்**

**கடந்த இரண்டாண்டுகளில் 2,16,000 பச்சை வண்ண அட்டை பெற்ற விவசாயிகளுக்கு ரூ.66.92 கோடி அளவிற்குக் குறுகிய கால வேளாண்மைக் கடன்கள் வழங்கப்பட்டு ஒரு மாபெரும் சாதனையைப் புரட்சித்தலைவியின் ஆட்சி உருவாக்கியிருக்கிறது.**

தமிழகத்து மக்களால் நாள் தோறும் நாமணக்கப் புரட்சித் தலைவி என்று புகழ்பாடும் கீதங்கள் தொடர்ந்து ஒலித்துக்கொண்டு இருக்கின்றன. தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் வழி நின்று புனித ஆட்சியைப் புகழ் மணக்க இந்நாட்டில் நடத்திவரும் புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்தின் தனிப்பெரும் முதல் அமைச்சராய் பெரும்பான்மை மக்களின் ஒருமித்த ஆதரவினைப் பெற்று ஜூன் 24, 1991 அன்று பொறுப்பேற்று, அரிய பல திட்டங்களை இந்நாட்டிற்கே தந்து, அளப்பரிய சாதனைகளைப் படைத்து உலக அரங்கிற்கே வழி காட்டியாய்த் திகழ்கின்றார்.



இந்நாட்டின் வளத்தைப் பெருக்குதற்கும், தொழில் வளத்தைப் பெருக்குதற்கும், ஏழை எளியோர் வாழ்வில் மகிழ்ச்சி வெள்ளம் கரை புரண்டு ஓடச்செய்யவும், புரட்சித் தலைவி அவர்களின் அயராத உழைப்பு, தமிழகத்திற்கே அரிய படைப்பாய் கடந்த இரண்டாண்டாய்க்கிடைப்பதைப் பாராட்டாதார் யார் உளர்? அவர் எடுக்கின்ற திட்டங்கள் அனைத்தும் தமிழகத்தின் மக்களுக்கு என்றென்றும் வாழ்வளிக்கும் வகையிலும், வறுமையை விரட்டி, வளமான வாழ்வை உருவாக்கி, இந்திய உப கண்டத்திற்கே வழிகாட்டியாகவும், திகழ்தல் காணலாம்.

'மக்கள் ஒருமைப்பாட்டின் மறு உருவம் ஆக விளங்குவது கூட்டுறவு. மக்கள் ஆட்சி மலர்ச்சி அடையும் போது கூட்டுறவு உணர்வும் மலர்ச்சி அடைகிறது. வேளாண்மையில் முனைப்பாக ஈடுபட்டுள்ள நேரத்தில் கூட்டுறவு இயக்கப்பணிகளும் விரிவடைய வேண்டும்' எனப் பேரறிஞர் அண்ணா அவர்கள் சுட்டிக்காட்டிய்தையும் நினைவில் நிறுத்தி, கூட்டுறவியக்கத்தின் மேன்மையைப் பாராட்டி, போற்றி, இவ்வியக்கத்தின் மூலம் தமிழ்நாட்டு மக்களெல்லாம் அனைத்து வசதிகளையும் வாய்ப்புகளையும் பெறுவதற்குப் புரட்சித்தலைவியின் கடந்த இரண்டு ஆண்டு ஆட்சி வழிகோலி நிற்கிறது.

கடன் வழங்கும் முறையை எளிதாக்கியும், கடன் தவணை தவறிய உறுப்பினர்களக்கு பயிர்க் கடன்களைத் துரிதமாக வழங்கி உறுதிப்படுத்தியும், தேர்ந்தெடுக்கப்பட்ட சில தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் உடனடியாகக் கடன் வழங்கும் திட்டம் புரட்சித் தலைவியின் ஆட்சியில் அறிவிக்கப்பட்டது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் 2,16,000 பச்சை வண்ண அட்டை உடைய விவசாயிகளுக்கு ரூ.66.92 கோடி அளவிற்குக் குறுகியகால வேளாண்மைக் கடன்கள் வழங்கப்பட்டு, ஒரு மாபெரும் சாதனையைப்









புரட்சித்தலைவியின் ஆட்சி உருவாக்கியிருக்கிறது.

1.7.91 அன்றுள்ள குறுகிய கால மற்றும் நடுத்தரக் காலக் கடன்களின் தவணை நிலுவையினை 30.2.92-க்குள் திருப்பிச் செலுத்திய விவசாயிகளுக்கு அபராத வட்டிக்குச் சமமான தொகையை அரசே வழங்குவதெனத் தமிழகத்தின் முதலமைச்சர் புரட்சித்தலைவி அவர்கள் அறிவித்து சீறத்தாழ 4,48,327 விவசாயிகள் பயன் அடையும் விதத்தில் ரூ.55.73 கோடி ரூபாயினை அரசு போனசாக வழங்கியிருக்கிறது என்றால், அந்த அளவிற்குப் புரட்சித்தலைவி அவர்கள் இந்த நாட்டு மக்களின் மீது, விவசாயப் பெருங்குடிமக்கள் மீது ஆர்வமும், அக்கறையும் கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு இது ஒரு அடையாளச் சின்னமாகும்.

தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் வழிமுறைகளின்படி வழங்கப்படுகின்ற மொத்தக் குறுகிய காலக் கடன்களில் 20 சதவிகிதம் நலிந்த பிரிவினரான சிறு விவசாயிகளுக்கு - அதாவது 5 ஏக்கர் அல்லது அதற்குக் குறைந்த நஞ்சை அல்லது புஞ்சை நிலத்தைச் சொந்தமாக வைத்திருப்பவர்களுக்குக் கூட்டுறவுச் சங்கங்களால் கடன் வழங்கப்பட வேண்டும், என்கிற அரிய திட்டத்தை இந்த நாட்டிற்கு அறிவித்து தமிழக முதலமைச்சர் அவர்கள் வாழ்வில் நலிவுற்றவர்களுக்கெல்லாம் வாழ்வு அளிக்கிறார்கள். அந்த வகையில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளால் தமிழகத்திலுள்ள நலிந்த பிரிவினர்களுக்கு, குறுகிய காலக் கடனாக ரூ.210.27 கோடி 1992-93-ஆம் ஆண்டில் வழங்கப்படுகின்றது.

ஆதிதிராவிடப் பெருங்குடி மக்களுக்கு மாத்திரம் குறுகிய காலக் கடன் ரூ.10.1 கோடியும், மத்தியக் காலக் கடனாக ரூ24.8 கோடியும் வழங்கப்பட்டு, ஆதிதிராவிடப் பெருங்குடி மக்கள் பெரும் பயன் அடைந்திருக்கிறார்கள்.

ஆதிதிராவிட வகுப்பினரின் குடும்பத்தில் ஒருவரைத்' தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் உறுப்பினர்களாக ஆக்கும் நோக்கத்துடன் புரட்சித்தலைவியின் அரசு 1991-92-ஆம் ஆண்டிலிருந்து ஆதிதிராவிட விவசாயிகளை அதிக அளவில் கூட்டுறவில் சேர்க்கும் திட்டம் தீட்டி, ஒவ்வொரு ஆதிதிராவிட வகுப்பைச் சார்ந்த நபர் ஒருவர் சங்கத்தில் உறுப்பினராகச் சேர்வதற்குப் பங்குத்தொகை ரூ.100-ஐ அரசு மானியமாக வழங்கி வருகிறது. இதுவரை இத்தகைய புரட்சிகரமான திட்டத்தில் தமிழகத்தில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் 1,10,000 ஆதிதிராவிடப் பெருங்குடி மக்கள் உறுப்பினராகச் சேர்ந்து இருக்கிறார்கள். இந்த வகையில் ரூ.110 இலட்சம் புரட்சித்தலைவியின் அரசு மானியத் தொகையாக வழங்கியிருக்கிறது.

சிறு வியாபாரங்களில் ஈடுபட்டுள்ள மகளிருக்கு உதவி புரிய அதிகபட்சமாக ரூ.500 வரை தேவையின் அடிப்படையில் ஒரு பெண்ணிற்குச் சிறு கடன் வழங்கிட மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் அறிவுரை வழங்கினார்கள். இதன்படி மத்தியக் கூட்டுறவு வங்கியிலும் ரு மகளிர் பிரிவு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. 1992-93-ஆம் ஆண்டில் மட்டும் 3,200 பெண்மணிகளுக்கு ரூ.14,93,000 கடனாக வழங்கப்பட்டிருக்கிறது.

பெண்கட்கு முக்கியத்துவம் கொடுத்து, மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியில் ஒரு கிளையும் 9 மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் 9 கிளைகளும் தற்பொழுது பெண்களால் நடத்தப்பட்டு வருகிறது. 1993-94-ஆம் ஆண்டில் 7 மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் பெண்களால் நடத்தப்படும் கிளைகள் மாண்புமிகு புரட்சித்தலைவியின் ஆணைக்கேற்பத் திறக்கப்பட இருக்கின்றன.



பண்ணை சாராத் தொழில்கள், கூட்டுறவு வங்கிகளிடம் கடன் பெற்று, தொடங்குகின்ற வகையில் தேவையான அறிவுரைகள் வழங்கிட கோயம்புத்தூர், சேலம், வேலூர், தஞ்சாவூர், திருநெல்வேலி, சென்னை ஆகிய இடங்களில் தலா ஒரு தொழில் நுட்பக்குழு ஏற்படுத்துவதற்கான கொள்கை முடிவு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவியின் அறிவுரைக்கேற்ப எடுக்கப்பட்டிருக்கிறது.

நியாயவிலைக் கடைகளில் பணி புரியும் பணியாளர்களுக்குக் குறைவான சம்பளம் தருவதால் தவறுகள் மலிந்துவிடுகின்றன என்கிற நிலையைப் புரட்சித்தலைவியின் அரசு தீர்க்கமாக ஆய்ந்து 1.3.92 முதல் ரூ.350-லிருந்து ரூ.500 ஆக உயர்த்தியும் 1993 முதல் மேலும் ரூ.100 உயர்த்தி ஒவ்வொருவருக்கும் ரூ.600 சம்பளம் கொடுக்கப்பட்டு வருகிறது.

விழாக் காலங்களில் நுகர்வோரின் 27 பொருட்களின் விலை ஏற்றத்தைத் தடுக்கின்ற வகையில் விழாக் காலக் குறைவு விலைக் கடைகளைத் திறப்பது என்ற முடிவு எடுத்து ஆயிரம் இடங்களில் விழாக் காலக் குறைவு விலைக் கடைகள் திறக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்குகளிலிருந்து நியாய விலைக் கடைகளுக்குச் செம்மையான சரியான முறையில் எடைக் குறைவு இல்லாமல் கட்டுப்பாட்டுப் பொருள்கள் வழங்குவதை உன்னிப்பாகக் கண்காணிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி அவர்கள் அறிவுரை வழங்கியதற்கேற்ப வட்டாரக் குழுக்கள் அமைக்கப்பட்டன. வட்டார அளவில் பொது விநியோகத் திட்டத்தை மேலும் சிறந்த முறையில் கண்காணிப்பதற்குக் கூட்டுறவு இளநிலை ஆய்வாளர் நியமிக்கப்பட வேண்டும் என்ற கொள்கை முடிவினை எடுத்து அதற்காக 693 கூட்டுறவு இளநிலை ஆய்வாளர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழக 3-வது திட்டத்தின்கீழ் மாதாவரத்தில் ரூ.2.22 கோடி செலவில் ஒரு வேளாண்மைக் கூட்டுறவுப் பயிற்சி நிலையம் நிறுவப்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவியின் ஆணைக்குட்பட்டு இது ஓராண்டுக் காலத்தில் முடிக்கப்பட்டுள்ளது, குறிப்பிடத்தக்கதாகும். இந்தப் பயிற்சி நிலையம் தற்போது தொடங்கி வைக்கப்பட்டு நடத்தப்படுகின்றது.



• ஒரு கை தட்டினால் ஓசை எழாது. இரு கைகளும் இணைந்தால்தான், ஒலி எழும்பும். அரசு ஒரு கை; மக்கள் மறு கை. ஆகவே, அரசோடு மக்கள் ஒத்துழைத்தால்தான், மக்களின் நல்வாழ்விற்குரிய நல்ல பல திட்டங்கள் காலத்தோடு செயல்படுத்தப்பட்டு அதன் பலன் மக்களைச் சென்றடையும். எந்த காரணத்திற்காகத் திட்டங்கள் தொடங்கப்படுகின்றனவோ, அதனை நாம் நிறைவு செய்ய இயலும்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்களுடைய ஆணைக்கேற்ப தர்மபுரி மாவட்டத்தில் பர்கூர், தஞ்சாவூர் மாவட்டத்தில் பட்டுக்கோட்டை ஆகிய இடங்களில் இரண்டு தொழில் பயிற்சி நிலையங்களில் துணிவெட்டுதல் மற்றும் தையற்கலை ஆடை தயாரிக்கும் கலை, கணிப்பொறிப் பயிற்சி ஆகிய பயிற்சிகள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன.

இப்பயிற்சி நிலையங்களில் பயிலுகின்ற மாணவர்களுக்கு இலவசமாகத் தங்கும் வசதியும் இலவசமாகப் பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகின்றன. இந்த மூன்று பயிற்சி வகுப்புகளிலும் பட்டுக்கோட்டையில் 88 மாணவர்களும் பர்கூரில் 88 மாணவர்களும் கடந்த ஆண்டில் சேர்க்கப்பட்டுள்ளார்கள். நடப்பாண்டில் இதே முறையில் பயிற்சி நடைபெறவிருக்கிறது. இந்தப் பயிற்சிக் கேந்திரங்களை நடத்துவதற்குக் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து ரூ.150 இலட்சம் வழங்கிட தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்திற்குப் புரட்சித்தலைவி அவர்கள் அனுமதி அளித்துள்ளார். இதற்கான செலவினங்களுக்கான ரூ.125 இலட்சத்திற்குக் குவிப்பு நிதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

இந்தத் தொகைகளை முதலீடு செய்யும் வகையில் கிடைக்கின்ற வட்டித் தொகையினைக் கொண்டு இரண்டு தொழில் பயிற்சி நிலையங்களும் நடத்தப்பெற்று வருகின்றன. பர்கூரில் உருவாக்கப்பட்டுள்ள பயிற்சி நிலையத்திற்கு 5 ஏக்கர் நிலம் கையகப்படுத்தி, ரூ.70 இலட்சம் செலவில் கட்டடங்கள் கட்டுகின்ற பணியும் தொடங்கப்பட்டு விட்டது.



எங்களை வழிநடத்திச் செல்வது - எங்களை இத்தகைய உணர்வுக்கு ஆளாக்கியுள்ள ஏழை, எளிய பின்தங்கிய, தாழ்த்தப்பட்டவர்களாக உள்ள மனித தெய்வங்கள் எங்கள் மீது கொண்டுள்ள நம்பிக்கையும் - மாமனிதர்களாக வாழ்ந்து மறைந்த, பேரறிஞர் பெருந்தகை அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆகியோரின் நல்ல தத்துவங்களும் தான் ஆகும்.

> சமுதாயத்தின் நலிந்த மற்றும் பின்தங்கிய தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவரும் நல்வாழ்வு பெற உரிய பல நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளோம்.
>
> - மாண்புமிகு முதல்வர்

ஆகிய நகரங்களில் மாநகராட்சிகளை அமைப்பதற்கான நடவடிக்கைகள் தொடங் கப்பட்டுள்ளன.

நிதி வசதி குறைந்த நகராட்சிகளுக்கு அரசு நிதிநிலை இடம்தரும் அளவுக்கு அரசு மானிய உதவி வழங்கிவருகிறது. 1992- 93-இல் நிதி வசதி குறைந்த 70 நகராட்சிகளுக்குத் தெரு விளக்குகள் (குறிப்பாக விரிவாக்கப்பட்ட பகுதி களில்) போடுவதற்காக ரூபாய் ஒரு கோடி மானியம் தரப்பட்டது.

1993-94-இல் நிதி வசதி குறைந்த நகராட்சிகளுக்கு, சாலைப்பணிகளுக்காக ரூ.3 கோடி மானியம் வழங்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## நகராட்சிகள் செயல்படுத்தும் முக்கியமான வளர்ச்சிப் பணித் திட்டங்கள்

ஹட்கோ கடன், மைய அரசு மானியம், நகராட்சிகள் பங்குத்தொகை ஆகிய ஆதாரங்களைக் கொண்டு 1991 மார்ச் முதல் இம்மாநிலத்தில் செயல் படுத்தப்பட்டு வரும் 'குறைந்த செல விலான கழிப்பறை கட்டும் திட்டத்தின்கீழ் இதுவரை ரூ.13.78 கோடி செலவில் 49,700 தனியார் கழிப்பிடங்கள் கட்டப் பட்டுள்ளன. வரும் 1993-94-ஆம் ஆண்டில் ரூ.27 கோடி செலவில் 80,000 தனியார் கழிப்பிடங்கள் கட்டப் படும். 1994-95- ஆம் ஆண்டிற்குள் நகராட்சிகளின் உலர் கழிப்பிடங்கள் அறவே அகற்றப்படும்.

மனிதக் கழிவை அகற்றும் பணி யிலிருந்து துப்புரவுப் பணியாளர்கள் விடுவிக்கப்பட்டு அவரவர் வேலை செய்யும் நகராட்சியிலேயே மாற்றுப் பணியில் அமர்த்தப்படுவர்.

## நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்

உலக வங்கி நிதியுதவியுடன் செயல் படுத்தப்படும் நகர்ப்புற வளர்ச்சி நிதி யிலிருந்து உதவிபெற்று 44 நகராட்சி களும், 3 மாநகராட்சிகளும் மொத்தம் ரூ.96.35 கோடி அளவிலான வருவாய் தரத்தக்க மற்றும் பல்வேறு திட்டங்களைச் செயற்பாட்டுக்கு எடுத்துக்கொண்டுள் ளன. இதன்கீழ் 8 நகராட்சிகளில் திருமண மண்டபங்கள்/சமுதாயக் கூடங்கள் கட்டும் பணியும் நடத்தி வருகிறது. 1993-94-இல் மேலும் ரூ.40 கோடி அளவுக்குப் பதிய திட்டங்கள் உருவாக்கப்படவிருக்கின்றன.

## நகர்ப்புற ஏழை மக்களுக்கு அடிப்படை வசதிகள் செய்வதற்கான திட்டம்

'நகர்ப்புற ஏழை மக்களுக்கு அடிப் படை வசதிகள் செய்வதற்கான திட்டம்' 1992 செப்டம்பர் முதல் 15 நகராட்சி களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வரும் 1993-94- ஆம் ஆண்டில் ரூ.3 கோடி செலவில் இத்திட்டத்தின்கீழ் குடிசைப் பகுதிவாழ் மக்கள் 5,50,000 பேர் பயனடைவர்.

## நகராட்சிப் பணியாளர் நலன்

பணிக் காலத்தில் இறந்துவிடும் நகராட்சி ஊழியர்களின் வாரிசுக்குக் கருணை அடிப்படை நியமனம் காலந் தாழ்வின்றிக் கிடைக்கச் செய்யும் வகை யில் நடைமுறைகள் சீரமைக்கப்பட்டுள் ளன. நகராட்சிப் பணியிலிருந்து ஓய்வு பெறுபவர்களுக்கு ஓய்வூதியப் பயன்கள் உடனுக்குடன் தரப்படுவதற்கும் நடவடிக் கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

உள்ளாட்சி மன்றப் பணியாளர்கள் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னைப் பெருநகர் வழங் கும் வாரியம் ஆகியவற்றின் பணி யாளர்கள் ஆகியோரின் குழந்தைகள் பயன்பெறுவதற்காக-

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்தில் ஒரு மருத்துவக் கல்லூரி

இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு பொறியியற் கல்லூரி

தருமபுரி மாவட்டம் பர்கூரில் ஒரு வேளாண்மைக் கல்லூரி

ஆகியவற்றைத் தொடங்குவதற்கான முடிவை அரசு அறிவித்துள்ளது. அக் கல்லூரிகள் உள்ளாட்சி மன்றப் பணி யாளர்கள், மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கும் வாரியம் ஆகியவற்றின் பணியாளர்கள் ஆகியோர் மனமுவந்து நன்கொடைத் தொகைகளைக் கொண்டு தொடங்கி நடத்தப்படும்.

## தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

ஊரகப் பகுதிகளைப் பொறுத்தவரை கடந்த இரண்டு ஆண்டுகளில் 7928 ஊரகக் குடியிருப்புகளுக்கு மொத்தம் ரூ.145.99 இலட்சம் செலவில் குடிநீர் வசதி செய்யப்பட்டது. இதனால், 40 இலட்சம் மக்கள் பயன்பெற்றனர். இதுவரை குடிநீர் வசதி ஒன்றுகூட பெறாத ஊரகக் குடியிருப்புகளுக்குக் குடி நீர் வசதி உடனடியாகச் செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட 'மாண்புமிகு முதலமைச்சரின் மிகுவிரைவுத் திட்டத்தின்' கீழ் குடிநீர் வசதி செய்துதரப்பட்ட 2483 குடியிருப்புகள் மற்றும் அவ்வாறு குடிநீர் வசதி செய்து தரப்பட்ட ஆதிதிராவிடர், பழங்குடியினர் குடியிருப்புகள் 1358 ஆகியவையும் இதில் அடங்கும். டாக்டர் அம்பேத்கர் நூற்றாண்டு விழா திட்டத் தின்கீழ் மைய அரசு நிதி உதவியுடன் ஆதிதிராவிடர், பழங்குடியினர் குடியிருப் புகள் 358-க்குக் குடிநீர் வசதி செய்து தரப்பட்டது.

நகர்ப் பகுதிகளுக்குக் குடிநீர் வழங்கும் திட்டங்களின்கீழ் கடந்த இரண்டு ஆண்டு களில் மொத்தம் ரூ.35.31 கோடி செல வில் 20 நகரங்களுக்குக் குடிநீர் வசதி செய்யப்பட்டது. பயன்பெற்றவர்கள் எண்ணிக்கை 8 இலட்சமாகும். இது போக மேலும் பத்து நகரங்களுக்கு மொத்தம் 4 இலட்சம் பேர் பயன்பெறும் வகையில் ரூ.47.36 கோடி செலவில் குடிநீர் வழங்குவதற்கான திட்டங்களுக்கும் அரசு புதிதாக ஏற்பளித்துள்ளது.

உலக வங்கி உதவியுடன் திருத்திய மதிப்பீடு ரூ.321.86 கோடி செலவில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஒரு மாபெரும் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. இதன்கீழ் பெருநகரங்கள் 3-இல் குடிநீர் வழங்கு நிலை அபிவிருத்தி செய்யப்படும். நடுத்தர மற்றும் சிறு நகரங்கள் 85, ஊரகக் குடியிருப்புகள் 955 ஆகியவற்றுக்குப் புதிய குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்படும். மேலும் நடுத்தர/சிறிய நகரங்கள் 14-இல் குறைந்த செலவில் கழிப்பிடத் திட்டம் நிறைவேற்றப்படும். இதுவரை இத்திட்டத் தின்கீழ் மொத்தம் ரூ.233 கோடி செலவில் 44 நகரங்களுக்குக் குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளதுடன் 14 நகரங் களுக்குக் குறைந்த செலவிலான வசதி களும் செய்து முடிக்கப்பட்டுள்ளன. இவ்வாண்டில் மணப்பாறை, பொள்ளாச்சி, காஞ்சிபுரம் ஆகிய நகரங்களுக்கான






குடிநீர் வழங்கு திட்டங்கள் நிறைவேற்றி முடிக்கப்படும்.

தர்மபுரி மாவட்டத்தில் ஒகேனக்கல்லி லிருந்து குடிநீர் கொண்டுசென்று நகராட்சிகள் 2, நகர பஞ்சாயத்துக்கள் 14, ஊரகக் குடியிருப்புகள் 4152 ஆகியவற்றுக்குக் குடிநீர் வழங்குவதற் கான பெரும் திட்டம் ஒன்று ரூ.400 கோடி மதிப்பீட்டில் வகுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 26.04 இலட்சம் மக்கள் பயன்பெறுவர்.

1991-92-ஆம் ஆண்டில் திருச்சிராப் பள்ளி வடிகால் திட்டம் ரூ.6.76 கோடி செலவில், ஆறு இலட்சம் மக்கள் பயன் பெறும் வகையில் நிறைவேற்றப்பட்டது. கோயம்புத்தூர் வடிகால் திட்டம் விரைந்து நிறைவேற்றப்பட்டு வருகிறது.

## கிருஷ்ணா குடிநீர்த் திட்டத்தின்கீழ், சென்னைக் குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதாரத்திற்கான இரண்டாவது திட்டம்:

கிருஷ்ணா நீர் மூலம் பயன்பெறும் மாநிலங்களுக்கிடையே 1976- இல் ஏற்பட்ட ஒப்பந்தத்தின்கீழ் கிருஷ்ணா குடிநீர் வழங்கல் திட்டத்தில் சென்னைக்குக் குடிநீர் வசதிக்காக 15 டி.எம்.சி. குடிநீர் வழங்க இசைவு தரப் பட்டது. சென்னை நகரத்திற்குக் கிருஷ்ணா குடிநீர் 1995-ஜூன் முதல் வழங்கத் தொடங்க வேண்டும் என்ற காலவரை யறையைத் தமிழ்நாடு மற்றும் ஆந்திர மாநில முதலமைச்சர்கள் ஏற்றுள்ளனர். உலக வங்கி உதவியுடன் 'சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் நிறைவேற்ற இருக் கிறது. கிருஷ்ணா குடிநீர் சென்னைக்கு வரத்தொடங்கியதும் அதை நகர் முழு வதும் விநியோகிப்பதற்கு ஏற்ற வகையில் சென்னை நகரத்தில் குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வசதிகளை வலுப் படுத்தி விரிவாக்குவதற்கானது இத் திட்டம். குடிநீர் வழங்கும் வசதிகளை மேம்படுத்துவதற்கான பணிகள் 1991-92-இல் தொடங்கப்பட்டு நல்ல முன்னேற்றம் நிகழ்ந்துள்ளது. இதுவரை ரூ.13.13 கோடி செலவிடப்பட்டுள்ளது.

## சென்னை நகரத்துக்குக் குடிநீர் வழங்குதல்

1992-இல் பருவமழை கணிசமான அளவு இல்லாததால் சென்னையில் குடி நீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக அரசு ரூ.23.22 கோடி மதிப்பீட்டில் உடனடித் திட்டம் ஒன்றை வகுத்துள்ளது. சென்னை வாழ் மக்களுக்குக் குடிநீர் வசதிகளை வழங்க அரசு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் வாரியத்திற்கு ரூ.12.32 கோடி தந்துள்ளது. லாரிகள் மூலம் தண்ணீர் வழங்குதல், இந்தியா மார்க் II இறைப்பான்களை அமைத்தல், நெய்வேலி, ஈரோடு போன்ற இடங்களிலிருந்து இரயில் மூலம் குடிநீர் கொணர்ந்து வழங் குதல் ஆகியவற்றின் மூலம் சென்னை மாநகரத்திற்குக் குடிநீர் வழங்கும் பிரச் சினை சமாளிக்கப்பட்டு வருகிறது.

நகராட்சி நிர்வாகம் செம்மையுறவும், குடிநீர் வடிகால் வாரியத்தின் பணிகள் விரைந்து செயல்பட்டு மக்களின் தேவைகள் முழுமையுறவும் புரட்சித் தலைவி அவர்கள் அறிவுரை நல்கி ஆக்கம் அளித்து வருகின்றார்கள். சென்னை மாநகர மக்களின் குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்கிட அனைத்து நடவடிக்கைகளையும் விரைந்து மேற் கொண்டு ஆவன செய்திட ஆணையிட் டுள்ளார்கள். புரட்சித்தலைவி அவர் களின் சீரிய முயற்சியாலும் நல்லுரை களாலும் இத்துறைகளின் பணிகள் மேலும் ஏற்றம்பெற்று உயர்ந்திடும் என்ப தில் ஐயமில்லை.

இத்திட்டம் காமராசர் மற்றும் நீலகிரி மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

### ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம்

ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம் 1.4.89 முதல் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் 1991-92 மற்றும் 1992-93-ஆம் ஆண்டுகளில் தீவிரமாகத் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. கிராமப்புறங்களில் வாழும் வேலைவாய்ப்பற்ற அல்லது போதிய வேலைவாய்ப்பற்ற ஆண்களுக்கும் பெண்களுக்கும் இலாபகரமான கூடுதல் வேலைவாய்ப்புகளை உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள உழைக்கும் ஆர்வமுடைய மக்களே இத்திட்டத்தின் மூலம் பயன்பெறத் தகுதியுடையவர்கள் ஆவர். இத்திட்டத்தின்கீழ் வேலைவாய்ப்பில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் உருவாக்கப்படும் மொத்த வேலைவாய்ப்பில் குறைந்தபட்சம் 30 சதவிகித வேலைவாய்ப்பு பெண்களுக்கு வழங்கப்படுகிறது.

1991-92 மற்றும் 1992-93-ஆம் ஆண்டுகளில் பல சமுதாயச் சொத்துக்களாகத் தொகுப்பு வீடுகள் 55,171 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பள்ளிக் கட்டடங்கள் 2,073, ஊராட்சி அலுவலகக் கட்டடங்கள் 1,135, கசிவு நீர்க்குட்டைகள் 1,724 உருவாக்கப்பட்டன.

ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டப் பணிகளில் ஈடுபடும் ஆண்களுக்கும், பெண்களுக்கும் தினக் கூலி ரூ.20 வீதம் வழங்கப்படுகிறது. தினக் கூலியாது 2 கிலோ அரிசி மற்றும் பணமாக ஆக மொத்தம் ரூ.20 வழங்கப்பட்டு வருகிறது.

### சிறப்புத் தன்னிறைவுத் திட்டம்

கிராமங்களில் அடிப்படை வசதிகளை அளித்திட ரூ.386 கோடி ஒதுக்கீட்டில் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு கோடி வீதம் வழங்க சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் 1991-92 மற்றும் 1992- 93 நிதியாண்டுகளில் அரசால் செயல்படுத்தப்பட்டு, மார்ச் 1993-க்குள் முழுமைப்படுத்தப்படும்.

### தேசிய கரிமவாயுத் திட்டம்

இத்திட்டம் மத்திய அரசின் முழு நிதி உதவியுடன் 1991-92-ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் ஊரக வளர்ச்சித் துறையால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் மாற்று எரிசக்தியின் முக்கியப் பங்கு வகிப்பதால் இது 20 அம்சத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

1991-92-ஆம் ஆண்டில் மத்திய அரசு நிர்ணயித்த 8,000 கலன்கள் இலக்குக்கு 8,015 கரிமவாயுக் கலன்கள் நிறுவப்பட்டுள்ளன. இவற்றை அமைக்க ரூ.217,90,550 செலவிடப்பட்டுள்ளது. மேலே குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்கு, உபயோகிக்கப்பட்டதற்கான சான்றிதழ் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

1992-93-ஆம் ஆண்டில் மத்திய அரசு நிர்ணயித்த 7,500 கலன்கள் இலக்குக்கு 8,112 கரிம வாயுக் கலன்கள் நிறுவப்பட்டுள்ளன. இவற்றை அமைக்க ரூ.2,43,36,000 செலவிடப்பட்டுள்ளது. மேலே குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்கு, உபயோகிக்கப்பட்டதற்கான சான்றிதழ் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### வேலைவாய்ப்பு உறுதித் திட்டம்

வேலைவாய்ப்பு உறுதித் திட்டம், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 1992-ஆம் ஆண்டு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான பதிலுரையின்போது அறிவிக்கப்பட்டது. இத்திட்டம் வறட்சிக்கு இலக்காகும் மாவட்டங்களான புதுக்கோட்டை, இராமநாதபுரம், தர்மபுரி, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டங்களில் 1992-93- ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

1992-93-ஆம் ஆண்டில் இத்திட்டத்தைச் செயல்படுத்த ரூ.9.72 கோடி 4 மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் 1993-94-ஆம் ஆண்டில் திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்திலும் செயல்படுத்தப்படும்.



பெண்களானாலும், ஆண்களானாலும், தங்களது சொந்தக் காலில் நின்றால்தான் எந்தத் துயரமும் வராது. எவருக்கும் பாரமாக இருக்கும் நிலை உருவாகாது என்பது உலக நடப்பு!

1993-94-ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ.15.81 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1991-92-ஆம் ஆண்டில் மத்திய அரசு நிர்ணயித்த 1,20,000 இலக்குக்கு 1,29,106 அடுப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றை அமைக்க ரூ.98,67,183.50 செலவிடப்பட்டுள்ளது. மேலே குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்கு, உபயோகிக்கப்பட்டதற்கான சான்றிதழ் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

1992-93-ஆம் ஆண்டில் மத்திய அரசு நிர்ணயித்த 1,50,000 இலக்குக்கு 1,50,105 அடுப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றை அமைக்க ரூ.15,76,420 செலவிடப்பட்டுள்ளது. மேலே குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்கு, உபயோகிக்கப்பட்டதற்கான சான்றிதழ் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### குடிநீர் விநியோகம்

உலக வங்கி உதவியுடன் தமிழ்நாடு விவசாய வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 1991-92-ஆம் ஆண்டில் சுமார் 202 இலட்சம் ரூபாய்க்கு 500 ஆழ்குழாய்கள் போடுவதற்கும், கைப்பம்புகள் பராமரிப்பதற்கும் திட்டம் வகுக்கப்பட்டு இவ்வாண்டிலேயே நிறைவேற்றப்பட்டது. 1992-93-ஆம் ஆண்டில் 911 இலட்சம் மதிப்பீட்டில் 3000 ஆழ்குழாய்க் கிணறுகள் (இந்தியன் மார்க் II) போடுவதற்கும், ரூபாய் 157 இலட்சம் மதிப்பீட்டில் 500 (இந்தியன் மார்க் III) ஆழ்குழாய்க் கிணறுகள் போடுவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு துரிதமாக நடைபெற்று வருகிறது.

அரசு நிதியுதவியுடன் 1992-93-ஆம் ஆண்டு சுமார் 74 இலட்சம் ரூபாய் செலவில் 493 ஆழ்குழாய் கிணறுகள் திட்டமிடப்பட்டு செயலாக்கம் பெற்றுக் கொண்டு இருக்கிறது.

### ஒருங்கிணைந்த சுகாதாரத் திட்டம்

ஊரகப் பகுதி மக்களில் 25 சதவிகித மக்களுக்குத் துப்புரவு வசதிகள் அளிப்பது 7-வது மற்றும் 8-வது ஐந்தாண்டுத் திட்டங்களின் ஒரு நோக்கமாகும். ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதி அளிப்புத் திட்டம், தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் ஆகியவற்றின் கீழ் துப்புரவுக் கழிவறைகளை ஊரகப் பகுதிகளில் கட்டுகின்ற ஒருங்கிணைந்த திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்மூலம் 1991-92-ஆம் ஆண்டு 4,889 துப்புரவுக் கழிவறைகள் ரூ.21,51,160 செலவிலும், 1992-93-ஆம் ஆண்டில் 5,000 துப்புரவுக் கழிவறைகள் ரூ.80,00,000 செலவிலும் பெரியார் மாவட்டத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. 1993-94-ஆம் ஆண்டில் பெரியார் மாவட்டத்தில் மேலும் 5,000 துப்புரவுக் கழிவறைகள் ரூபாய் ஒரு கோடி திட்டத்திலும், மற்ற மாவட்டங்களில் 50,000 துப்புரவுக் கழிவறைகளும் கட்டி முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**மாண்புமிகு முதல்வர் தமிழகம் முழுவதும் உள்ள கிராமங்கள் அனைத்தும் நல்ல சாலை வசதியும், சுகாதாரம், குடிநீர், தெரு விளக்குகள் போன்ற அடிப்படைத் தேவைகளையும் பெற்றிடும் வகையில், தேர்தல் வாக்குறுதியில் சொன்னபடி ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளன.**

### பேரூராட்சித் துறையின் சாதனைகள்

தமிழ்நாட்டில் 646 பேரூராட்சிகள் உள்ளன. கடந்த 1991-92 மற்றும் 1992-93-ஆம் ஆண்டுகளில் பேரூராட்சிகளில் வாழும் மக்களுக்கு அடிப்படை வசதிகள் மற்றும் சிறந்த வாழ்க்கைத்தரம் அளிப்பதற்காகப் பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும் சிறப்புத் திட்டங்களைப் பயன்படுத்த தாராளமாக மானியங்கள் வழங்கப்பட்டுள்ளது.

1991-92 மற்றும் 1992-93-ஆம் ஆண்டுகளில், சாலை வசதி, தார்ச் சாலை போட, வடிகால் வசதி, சிறு குடிநீர்த் திட்டம், தெருவிளக்குகளைப் பராமரித்தல் முதலான திட்டங்களுக்கு வழங்கப்பட்ட மானியம் ரூ.521.55 இலட்சம் என்பது குறிப்பிடத்தக்கது.

### ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்

பேரூராட்சிகளின் நிதி ஆதாரத்தைப் பெருக்குவதற்காகவும், பேருந்து நிலையம், பேரூராட்சிக்கு வருமானம் தரக்கூடிய வணிக வளாகம் மற்றும் சந்தைகள் ஏற்படுத்துவதற்காகவும் ரூ.1822.90 இலட்சம் மதிப்பீட்டில் 125 பேரூராட்சிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டம்

இந்தத் திட்டத்தின்கீழ் 1991-92-ஆம் ஆண்டில் பேருந்து நிலையம் கட்டுதல் வணிக வளாகம் கட்டுதல், ஓய்வு இல்லங்கள் கட்டுதல் போன்ற பணிகள் ரூ.628 இலட்சம் செலவில் எடுத்துக் கொள்ளப்பட்டன. அதுபோன்ற பணிகள் ரூ.732.41 இலட்சம் செலவில் 8 பேரூராட்சிகளில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

### சிறப்புச் சுகாதாரத் திட்டங்கள்

மனித மலத்தைச் சுமக்கும் வேலையிலிருந்து துப்புரவுப் பணியாளர்கள் விடுதலை பெறவும், அவர்கள் சமுதாயத்தில் உரிய கண்ணியம் பெறவும் 1991-92-இல் 10 பேரூராட்சிகளில் 2534 உலர் கழிப்பறைகள் நவீன நீரடிக் கழிப்பறைகளாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. சுகாதாரப் பணியாளர்களுக்கு 5,137 மழைக்கான மேலாடைகள் வழங்க 50 சதவிகித மானியத்துடன் ரூ.5.14 இலட்சம் பேரூராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

### சிறப்புத் தன்னிறைவுத் திட்டம்

பேரூராட்சிகளில் வாழும் மக்களின் அவசர மற்றும் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற 1992-93-இல் இத்திட்டம் 221 பேரூராட்சிகளில் ரூ.50 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இந்தத் தொகையில் ரூ.4 கோடி அரசு மானியமாகவும் 17 கோடி ரூபாய் மற்ற திட்டத்தின்கீழ் மானியமாகவும் வாங்கப்பட்டுள்ளது. மீதித் தொகை, பேரூராட்சிகளிலிருந்தும் நிறுவன நிதியிலிருந்தும் வழங்கப்படவேண்டும்.

1991-92-இல், 92 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளும், 1992-93-இல் 142 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளும் அரசு செலவில் பேரூராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. தொழில்வரியை ஈடுசெய்வதற்காக ரூ.762.26 இலட்சம் பேரூராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

### நகராட்சி நிர்வாகமும் குடிநீர்த் திட்டங்களும்

இந்த இரண்டு ஆண்டுகளில் தமிழகத்தின் தன்மானத்தை உயர்த்தி, இந்திய அளவில் எல்லாத் துறைகளிலும் ஏற்றம் காணச் செய்துள்ளார், நமது இதய தெய்வம் புரட்சித்தலைவி அவர்கள்.

அரசியல் சாதுரியமும், தொலைநோக்குப் பார்வையும் மக்களின் நலனே கருத்தாகக் கொண்ட பொதுநல நோக்கமும் கொண்ட புரட்சித்தலைவி அவர்களின் ஒப்பற்ற தலைமையின்கீழ் இயங்கும் தமிழக அரசு, இந்த இரண்டாண்டுகளில் ஆற்றிய அளப்பரிய சாதனைகளை எண்ணிப் பெருமிதம் கொள்ள இயலும். பல்வேறு துறைகளில் வியத்தகு முன்னேற்றம் எய்தியுள்ளது போன்று நகராட்சி நிர்வாகத்திலும் குடிநீர் வழங்கு துறையிலும் எழுச்சிமிகு சாதனை படைக்கப்பட்டுள்ளது.

நாடே வியக்கும்வண்ணம் சென்னை மாநகரை அழகும், தூய்மையும் கொண்ட பசுமை மிளிரும் நகராக ஆக்கிட புரட்சித்தலைவி அவர்கள் அரிய திட்டத்தை வகுத்துள்ளார்கள்.

### எழில்மிகு சென்னை '2000'

சென்னை மாநகரத்தில் திட்டமிட்ட மேம்பாட்டுப் பணிகளுக்காக ஐந்து ஆண்டுகளில் ரூ.1,100 கோடி செலவில் அமல்படுத்துவதற்கான 'எழில்மிகு சென்னை 2000' என்னும் பெரும் திட்டம் செயல்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. முதலில் இத்திட்டத்தின்கீழ் சென்னை மாநகராட்சி செய்யும் செலவு 240 கோடியாக இருக்கும் என மதிப்பிடப்பட்டது. எனினும் மாநகராட்சி நிதி வருவாய்கள் கடந்த இரண்டாண்டுகளில் அதிகரித்துள்ளபடியால் 'எழில்மிகு சென்னை 2000' திட்டத்தின்கீழ் சென்னை மாநகராட்சி செய்யும் செலவு 435 கோடி அளவில் இருக்கும் என இப்பொழுது மதிப்பிடப்படுகிறது.

### மதுரை மாநகராட்சி

மதுரை மாநகராட்சியின் வருமானம் 1990-91-இல் ரூ.28 கோடியாக இருந்தது. 1992-93-இல் ரூ.37 கோடியாக அதிகரித்துள்ளது. இதற்கேற்ப மாநகராட்சியின் பணிகளும் விரிவடைந்துள்ளன. மதுரை நகரை அழகுபடுத்தும் திட்டம் என்னும் புதிய திட்டத்தின்கீழ் மொத்தம் ரூ.10 கோடி செலவில் மதுரை மாநகரின் பூங்காக்களை மேம்படுத்துதல், மரம் நடுதல், சாலை சீரமைப்புப் பணி, தெரு விளக்குகள், நீரூற்றுகள் அமைத்தல் போன்ற பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்படும்.

### புதிய நகராட்சிகள்

ஓசூர், திருத்துறைப்பூண்டி ஆகிய நகரப் பஞ்சாயத்துக்கள் இரண்டும் 15.1.92 மற்றும் 1.4.92-லிருந்து நகராட்சிகளாக அமைக்கப்பட்டுள்ளன. திருச்சிராப்பள்ளி, சேலம், திருநெல்வேலி



வழங்கப்படும்.

**குறியீடுகள்:**

1991-92 மற்றும் 1992-93-இல் 1,35,000 குடும்பங்கள் பயன்பெறத்தக்க வகையில் உதவிகள் வழங்கப்பட வேண்டும்.

10,000 ஆதிதிராவிட விவசாயக் குடும்பங்களுக்குப் பாசனக் கிணறுகள் வெட்டிக் கொடுத்தல்.

தனிநபர் தொழில் முனைவோர் திட்டத்தின்கீழ் வரும் 5 ஆண்டுகளில் 5 ஆயிரம் பேர்களுக்குத் தொழில் தொடங்க நிதியுதவி செய்யப்படும்.

ஐ.டி.ஐ. பயிற்சி பெற்ற 5000 ஆதிதிராவிட இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கிக் கொடுத்தல்.

5 ஆண்டுக் காலத்தில் 4 இலட்சம் இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் ஆதிதிராவிட மக்களுக்கு வழங்கப்படும்.

5 ஆண்டுக் காலத்தில் 3 இலட்சம் கான்கிரீட் வீடுகள் ஆதிதிராவிட மக்களுக்குக் கட்டித்தரப்படும்.

குடிநீர் ஆதாரமற்ற 3776 ஆதிதிராவிடக் குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கப்படும்.

1063 ஆதிதிராவிட குடியிருப்புகளுக்கு இணைப்புச் சாலைகள் அமைத்தல், 1991-92 மற்றும் 1992-93-ஆம் ஆண்டுகளில் 1063 குடியிருப்புகளுக்கு இணைப்புச் சாலைகள் ஏற்படுத்தப்படும்.

அனைத்து ஆதிதிராவிடக் குடியிருப்புகளுக்கும் தெரு விளக்குகள் அமைத்துக் கொடுக்கப்படும்.

வருகின்ற 5 ஆண்டுகளில் 1.5 இலட்ச ஆதிதிராவிடக் குடியிருப்புகளுக்கு இலவச மின் விளக்கு வசதி செய்து தரப்படும். 1991-92 மற்றும் 1992-93-ஆம் ஆண்டுகளில், 60,000 குடிசைகளுக்கு இலவச மின் வசதி அமைத்துத் தரப்படும்.

**சாதனைகள்**

31.3.1993 வரை 1,37,598 குடும்பங்கள் பயனடைந்துள்ளனர்.

31.3.1993 வரை 10,034 கிணறுகள் வெட்டி முடிக்கப்பட்டுள்ளன.

1991-92 மற்றும் 1992-93-ஆம் ஆண்டுகளில், 1727 ஆதிதிராவிடத் தொழில் முனைவோர் உருவாக்கப்பட்டுள்ளனர். 1993-94-ஆம் ஆண்டில் 1500 தொழில் முனைவோரை உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 19.6.92 அன்று மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தை அம்பத்தூர் தொழில் பேட்டையில் தொடங்கி வைத்துள்ளார்கள்.

1991-92 மற்றும் 1992-93-ஆம் ஆண்டுகளில் 3,86,000 பேர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டன.

31.3.93 வரை 49,409 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

31.3.93 வரை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் 3024 ஆதிதிராவிடக் குடியிருப்புகள் ஒவ்வொன்றுக்கும், குறைந்தபட்சம் ஒரு குடிநீர் ஆதாரத்தையாவது உருவாக்கியுள்ளது.

இதுவரை 790 குடியிருப்புகளுக்கு, 418 கி.மீ. தூரமுள்ள இணைப்புச் சாலைகள் அமைக்கும் பணி செய்து முடிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய பணிகளும் விரைவில் முடிக்கப்படும்.

1991-92-ஆம் ஆண்டில் 357 குடியிருப்புகளுக்குத் தெரு விளக்குகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. 1992-93-ஆம் ஆண்டிலிருந்து, தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் இத்திட்டம் செயல்பட்டு வருகிறது.

31.3.93 வரை 60,242 குடிசைகளுக்கு இலவச மின்வசதி செய்து தரப்பட்டுள்ளது.

இருபது அம்சத் திட்டத்தின்கீழ் இத்துறையால் செயல்படுத்தப்படுகின்ற மூன்று திட்டங்கள் 1991-92 மற்றும் 1992-93- ஆம் ஆண்டுகளில் செயல்படுத்தப்பட்ட விவரங்கள் வருமாறு:-

**திட்ட எண்.6**

கொத்தடிமைகள் மறுவாழ்வுத் திட்டம்

**இலக்கு - 816 சாதனை - 976**

**திட்ட எண்.11(எ)**

ஆதிதிராவிடர் பயன்பெறும் குடும்பங்கள்

**இலக்கு - 5 இலட்சம் சாதனை - 5,11,415**

திட்ட எண்.11 (பி)

**பழங்குடியினர் பயன்பெறும் குடும்பங்கள்**

இலக்கு 18,000 சாதனை - 17,209

தேசியத் தாழ்த்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் (என்.எஸ்.எப்.டி.சி.) தான் வழங்கும் நிதி உதவிகளுக்கு உரிய அளவில் அத்தொகை திருப்பித் தருதல் பற்றி மாநில அரசின் உத்தரவாதம் (Guarantee) தேவையென வலியுறுத்தியதை ஒட்டி இந்த ஒவ்வொரு தொழில் தொடங்கும்போதும், மாநில அரசை அணுகி உத்தரவாதம் பெற வேண்டிய சூழ்நிலை எழாதிருக்க வேண்டும் என்பதற்காகவும், அதற்கு உத்தரவாதம் பெறுவதில் எழக்கூடிய தாமதங்களைத் தவிர்ப்பதற்காகவும், ஆதிதிராவிட மக்களின் நலனில் அக்கறை கொண்டுள்ள நமது மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ரூ.10 கோடிக்கு ஒட்டுமொத்த (Block Guarantee) உத்தரவாதம் வழங்கி உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். இது பெரிய அளவில் தொழில் தொடங்க முன் வரும் ஆதிதிராவிடர்களுக்கு ஒரு பெரிய வரப்பிரசாதமாகும்.

ரூ.8.795 இலட்சம் செலவில் இராமநாதபுரும் மாவட்டத்தில் 99 ஆதிதிராவிட விவசாயிகள் பயன்பெறும் வகையில் 16 சமுதாயக் கிணறுகள் முழு மானியமாக வழங்கப்பட்டுள்ளன.

7.42 கோடி மானியத்துடன் 42,211 கறவை மாடுகள் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது.

240 ஆதிதிராவிடர்களுக்கு ஓட்டுநர் பயிற்சி அளித்து வேலைவாய்ப்பு அளிக்க ரூ.9,60,000 போக்குவரத்துக் கழகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் அரசு பொறுப்பேற்ற பின்பு மிகவும் பின்தங்கிய பகுதியான தர்மபுரி மாவட்டம், பர்கூரில் இருளர் என்ற பண்டைய பழங்குடியின மக்களுக்கு 63 வீடுகள் கட்டுவதற்கு ரூ.9.30 இலட்சம் செலவில் கட்டித்தர முடிவெடுக்கப்பட்டு அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1991-92 மற்றும் 1992-93-இல் ரூ.4 கோடி செலவில், காலணி செய்யும் தொழிலில் ஈடுபட்டுள்ள ஆதிதிராவிடர்களுக்கு 4000 ஸ்டீல் பங்க்ஸ் (Steel Bunks) மற்றும் தோல் தையல் மிஷின்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையில் 1990-91 வரை 862 மாணவ-மாணவியர் விடுதிகள் இயங்கி வந்தன. 1991-92 மற்றும் 1992-93-ஆம் ஆண்டுகளில் புதிதாக 70 விடுதிகள் தொடங்கப்பட்டன. இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு மொத்தமுள்ள 932 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான விடுதிகளில் ரூ.12.33 இலட்சம் செலவில் நூலகங்கள் அமைத்துத் தரப்பட்டுள்ளன. அதேபோல, 1993-94-ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் இயங்கும் 1223 பள்ளிகளிலும், நூலகங்கள் திறக்கப்பட உள்ளன.

1991-92-ஆம் ஆண்டில் நலப் பள்ளியில் பயிலுகின்ற 10-ஆம் வகுப்பு மற்றும் 12-ஆம் வகுப்பு மாணவ-மாணவியர்களுக்கு, முக்கிய வினா-விடைகள் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டன. அதேபோல் நலப்பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு விடுதிகளில் தங்கிப் படிக்கின்ற 10-ஆம் வகுப்பு மற்றும் 12-ஆம் வகுப்பு மாணவ-மாணவியர்க்கும் 1992-93-ஆம் ஆண்டு முக்கிய வினா-விடை ஏடுகள் வழங்கப்பட்டன.

ஆசிரியர்களுக்குப் புத்தறிவுப் பயிற்சி அளித்து அவர்களுடைய திறனை வளர்க்க வேண்டும் என்பதற்காக 1991-92-ஆம் ஆண்டு செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர்., தென்னார்க்காடு, திருச்சி ஆகிய மூன்று மாவட்டங்களில் இத்தகைய பயிற்சி மையங்கள் நடத்தப்பட்டன. வருகின்ற ஆண்டுகளில் இத்தகைய பயிற்சி மையங்கள் பிற மாவட்டங்களிலும் நடத்தப்படும். மேலும் பொதுத் தேர்வுகளில் 75 சதவிகிதம், அதற்கு மேலும் மாணவர்களை வெற்றி பெறச் செய்கின்ற மேல்நிலை மற்றும் உயர்நிலை தலைமை ஆசிரியர்களுக்குத் தலா ரூ.1500-ம் 60 சதவிகிதம் முதல் 74 சதவிகிதம் வரை வெற்றி பெறச் செய்வோருக்கு தலா ரூ.1000-ம் தங்களது பாடங்களில் 100-க்கு 100 வெற்றி எய்திட வைக்கும் பாட ஆசிரியர்களுக்குத் தலா ரூ.750- ம் ஊக்கத் தொகையாக வழங்கவும் மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் அரசு ஆணையிட்டுள்ளது.

இதன் பயனாக 12-ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் நலத்துறைப் பள்ளிகளில், தேர்ச்சி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை 1990- 91-ஆம் ஆண்டில் 33.6 சதவிகிதமாக இருந்தது, 1991-92-ஆம் ஆண்டில் 59 சதவிகிதமாகவும், 1992-93-ஆம் ஆண்டில் 62 சதவிகிதமாகவும் உயர்ந்துள்ளது.

ஏற்கெனவே இயங்கி வருகின்ற விடுதிகளில், 1991-92 மற்றும் 1992- 93-ஆம் ஆண்டுகளில் 2000 மாணவ, மாணவியர்கள் புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். 1993-94-ஆம் ஆண்டில் புதிதாக 20 நல விடுதிகள் திறக்கப்பட உள்ளன. அத்தோடு ஏற்கெனவே இயங்கி வரும் விடுதிகளிலும் 100 மாணவர்கள் கூடுதலாகச் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

பழங்குடியின மக்கள் கல்விமேம்பாட்டிற்காகத் தமிழ்நாட்டில் 217 உண்டு-உறைவிடப் பள்ளிகள் நடைபெற்று வருகின்றன. இத்தகைய உண்டு-உறைவிடப் பள்ளிகளில் கல்வித் தரத்தை மேம்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு திருச்சி மாவட்டம் பச்சைமலைப் பகுதியில், உள்ள பலவேறு உண்டு- உறைவிடப் பள்ளிகளை இணைத்து 'டாப்செங்காட்டுப்பட்டி' என்ற இடத்தில் பெரிய அளவில் ஒரு மேல்நிலைப் பள்ளியை உருவாக்க வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்



★ தீண்டாமையைத் தாக்குவது உயர்வு தாழ்வு வேற்றுமையைத் தாக்குவதாகும். தீண்டாமை ஒழிந்தால், அதே விநாடியில் சாதிமுறை பரிசுத்தமாகி விடும்.

# ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்

மாண்புமிகு ஆதிதிராவிடர் நல அமைச்சர்

**திரு எம். ஆனந்தன்**

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் வளம்பெற புரட்சித்தலைவியின் புதிய 10 அம்சத் திட்டம்.**

- ஐ.ஆர்.டி.பி. மற்றும் இதர திட்டங்களின் மூலம் 1,37,598 குடும்பங்களுக்கு உதவி.
- 7,162 புதிய கிணறுகள் வெட்டி முடிக்கப்பட்டுள்ளன.
- 3,86,000 வீட்டு மனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.
- ஓலைக்குடிசைகளுக்குப் பதிலாக 49,909 கான்கிரீட் வீடுகள் கட்டிமுடிக்கப்பட்டுள்ளன.
- 790 ஆதிதிராவிடர் குடியிருப்புகள் பயன்பெறும் வகையில் 419 கி.மீ. நீளத்திற்கு இணைப்புச் சாலைகள் போடப்பட்டுள்ளன.



தமிழகத்தில் ஐந்தரைக் கோடி மக்கள் தொகையில் ஐந்தில் ஒரு பங்கிற்குச் சற்று கூடுதலாக உள்ள ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் வாழ்க்கைத் தரம் உயரவும், அவர்களுக்கு அடிப்படை வசதிகளை உருவாக்கித்தரவும் பல்வேறு நலத் திட்டங்கள் இத்துறையின் மூலம் சிறப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

ஆதிதிராவிட மக்களின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டுள்ள இந்த அரசு, அம்மக்கள் பிற இன மக்களுக்கு இணையாகப் பொருளாதாரத்திலும், கல்வி மற்றும் சமூக அந்தஸ்திலும் முன்னேற்றம் அடைய வேண்டும் என்பதற்காகப் பல்வேறு திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகின்றது. குறிப்பாக, இந்திய வரலாறு காணாத அளவு ஆதிதிராவிடர்களுக்கு என்றே இரண்டு பின்னலாடை சார்ந்த தொழிற்பேட்டைகளை அமைக்க முடிவு செய்து, அதற்கான அனைத்துப் பூர்வாங்க வேலைகளும் நிறைவு செய்யப்பட்டுள்ளன. மிக விரைவில் ஆதிதிராவிட மக்களிடையே இருந்து 200 தொழில் முனைவோர்களைத் தேர்ந்து எடுப்பதற்கான நேர்காணல் தேர்வுகள் நடைபெற இருக்கின்றன.

குறிப்பாக, இந்தத் தொழிற்பேட்டைகள் ஒவ்வொன்றிலும், 100 தொழிற்கூடங்கள் ஏற்படுத்தப்பட இருக்கின்றன. ஒவ்வொரு தொழிற்கூடமும் குறைந்தபட்சம் ரூ.40 இலட்சம் முதல் ரூ.150 இலட்சம் வரை முதலீட்டுடன் தொடங்கப்படும். இதற்காக அரசு ரூ.15 இலட்சமோ அல்லது முதலீட்டின் 15 சதவிகிதமோ, அதில் எது குறைவாக உள்ளதோ, அதை ஒவ்வொரு தொழில் முனைவோருக்கும் மானியமாக வழங்கும்.

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் மொத்த முதலீட்டில் 55 முதல் 65 சதவிகிதம் வரை கடனாக (Term Loan) வழங்கும். தாட்கோ நிறுவனம்/தேசியத் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் (NSFDC) முதலீட்டில் 20 சதவிகிதம் வரை விளிம்புத் தொகை (Margin Money), (Seed Capital) ஆக வழங்கும். எஞ்சியுள்ள 5 சதவிகிதத் தொகை பயனாளிகளிடமிருந்து பெறப்படும்.

இதுவரை தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் இந்தத் தொழில் பேட்டைகளில் பங்குகொண்டு தொழில் முனைவோர்களாக ஆகவேண்டும என்பதற்காக 1784 ஆதிதிராவிடர்களிடமிருந்து மனுக்கள் பெறப்பட்டுள்ளன. இவர்களை நேர்காணல் தேர்விற்கு அழைப்பதற்கு முன்னால் இந்தப் பின்னலாடைத் தொழில் பற்றி அவர்கள் ஓரளவேனும் தெரிந்து கொள்வதற்காக அவர்கள் அத்தனைப் பேர்களுக்கும் திருப்பூரில், தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னலாடைத் தொழிற்கூடங்களில், பயிற்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டு அந்தப் பயனாளிகள் அனைவரும் கடந்த 17.5.93 முதல் 4.6.93 அன்று வரை பயிற்சி பெற்றனர். நேர்காணல் தேர்வு முடிந்த பின்னர் அவர்களுக்கு இன்னும் ஆழ்ந்த பயிற்சிகள் வழங்கப் பட இருக்கின்றன.

அனைத்துப் பணிகளும் முடிவு பெற்று டிசம்பர் 1994 அன்று இந்தத் தொழிற்கூடங்களில் முழு அளவில் உற்பத்தி தொடங்குவதற்காகத் திட்டமிடப்பட்டுள்ளது. அந்தக் குறிக்கோளை அடைவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

## இறால் வளர்ப்பு

இறால் வளர்ப்பு மிகுந்த இலாபம் ஈட்டித்தரக்கூடிய தொழிலாக இருப்பதாலும், கணிசமான அன்னியச் செலாவணியை ஈட்டித்தருவதாக இருப்பதாலும், ஆதி திராவிட மக்களையும் இதில் ஈடுபடுத்தி அதன் பயன்களை அவர்களும் அடைய வேண்டும் என்று இவ்வரசு விரும்புகிறது.

இதைச் செயல்படுத்துவதற்காகத் தமிழ்நாட்டில் கடற்கரை ஓரங்களில் உள்ள 8 மாவட்டங்களில் தகுதி வாய்ந்த 1000 எக்டேர் நிலங்களை விலைக்கு வாங்கித் தேர்ந்தெடுக்கப்படுகிற ஒரு ஆதிதிராவிடர் குடும்பத்திற்கு ஒரு எக்டேர் என்ற அளவில் விநியோகிக்கத் திட்டமிடப் பட்டுள்ளது.

இதன் மூலம் இத்தொழிலில் ஈடுபட இருக்கும் குடும்பங்கள் ஒவ்வொன்றும் ஆண்டொன்றுக்குக் குறைந்தது ரூ.2 இலட்சம் முதல் ரூ.3 இலட்சம் வரை நிகர லாபம் பெற வாய்ப்புள்ளது.

நடப்பு நிதியாண்டில் 500 ஆதிதிராவிடர்கள் பயனடைவர். எஞ்சியுள்ள 500 ஆதிதிராவிடர்கள் 1994-95-ஆம் ஆண்டில் பயனடைவர்.

- ஒரு குடிசைக்கு ஒரு விளக்கு என்ற திட்டத்தில் கீழ் 60,242 குடிசைகளுக்கு இலவச மின் விளக்கு.
- ஆதிதிராவிடர் தொழில் முனைவோர்க்கென்றே பிரத்யேகமான 2 தொழிற்பேட்டைகள்.
- கடற்கரை மாவட்டங்களில் ஆதிதிராவிடர்களுக்கென பிரத்யேகமாக இறால் வளர்ப்புப் பண்ணைக்காக 1000 எக்டேர் இலவச நில ஒதுக்கீடு.
- பட்டு அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் 10,000 ஆதிதிராவிடர் குடும்பங்கள் பயனடையும் வகையில் மானியம் மற்றும் இலவச நில ஒதுக்கீடு.

## பட்டுப்புழு வளர்ப்பு

நீர்ப்பாசன வசதியுடன் கூடிய நிலத்தில் மல்பெரி சாகுபடி செய்து பட்டுப்புழு வளர்ப்பதன் மூலம் ஒரு ஆண்டில் சுமார் ரூ.30,000 வரை இலாபம் அடை இயலும். இத்திட்டத்தில் ஏழை ஆதிதிராவிட மக்கள் பங்குகொள்ள வேண்டும் என்ற நோக்கத்தோடு அரசு கீழ்க்கண்ட திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது.

தமிழ்நாட்டில், சென்னை, கன்னியாகுமரி, நீலகிரி ஆகிய மாவட்டங்கள் நீங்கலாக எஞ்சியுள்ள மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் இரண்டு பஞ்சாயத்து ஒன்றியங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஒவ்வொரு பஞ்சாயத்து ஒன்றியத்திலும் 100 நிலமற்ற வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழுகின்ற ஆதிதிராவிட மக்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, மொத்தம் 4000 பயனாளிகள் பயன்பெறுகின்ற வகையில் ஒரு திட்டமும், ஏற்கெனவே பாசன வசதியுடன் கூடிய நிலம் சொந்தமாக வைத்திருக்கின்ற 6000 ஆதி திராவிட மக்கள் பயன்பெறுகின்ற வகையில் இன்னொரு திட்டமுமாக இந்தப் பட்டுப்புழு வளர்ப்புத் திட்டத்தை அரசு செயல்படுத்தி வருகின்றது. ஏற்கெனவே நிலமுள்ள ஆதிதிராவிடப் பயனாளிகளும் மேற்கூறியவாறு ஒவ்வொரு மாவட்டத்திலும் இரண்டு ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுவர்.

ஏற்கெனவே 400 ஏக்கருக்கு மேல் மல்பெரிச் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. 1993-94-ஆம் ஆண்டில் 6000 ஏக்கரில் மல்பெரிச் சாகுபடி செய்யத் திட்டமிடப் பட்டுள்ளது. அதற்காக வருகின்ற ஆண்டில் நிலம் வைத்திருக்கின்ற 4000 பேர்களும், நிலமற்ற ஏழை ஆதி திராவிட மக்கள் 2000 பேர்களும் பயன்பெறுகின்ற வகையில் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

நிலமற்ற ஏழைப் பயனாளிகள் பயன்பெறுகின்ற வகையில் ஒவ்வொரு பயனாளிக்கும் சுமார் ரூ.87,000 வரை செலவு செய்து தகுதி வாய்ந்த ஒரு ஏக்கர் நிலம் வாங்கி அதிலே பட்டுப்புழு வளர்ப்பதற்குத் தேவையான கூடங்கள், குடும்பத்தினர் தங்கத் தேவையான வீட்டு வசதி, மற்றும் பட்டுப்புழு வளர்க்கத் தேவையான ஏனங்கள், இதற்கான பயிற்சி ஆகியவற்றிற்காக ஏற்பாடு செய்யப்படும். தகுதி வாய்ந்த நிலங்கள் தேர்வு செய்யப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின் மூலம் 10,000 ஆதிதிராவிடர் குடும்பங்கள் பயன்பெறுவதோடு சுமார் 50,000 ஆதி திராவிட மக்கள் ஆண்டு முழுவதும் வேலைவாய்ப்புப் பெறுவதற்கான வாய்ப்பும் ஏற்படும்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் பிற சமுதாயத்தினருக்கு இணையாக அனைத்து அடிப்படை வசதிகளையும், விரைவாகப் பெற வேண்டும் என்ற நோக்கத்தோடும், பொருளாதாரத்தில் அவர்கள் முன்னேற வேண்டும் என்ற நோக்கத்தோடும், நமது முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப் பேற்ற உடனேயே 10 அம்ச திட்டமொன்றை அறிவித்தார்கள்.

இத்திட்டத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் வருமாறு:-

5 ஆண்டுகளில் 3.5 இலட்சம் ஆதிதிராவிடக் குடும்பங்களுக்கு பொருளாதார மேம்பாடு உதவிகள்




தலைவி அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். அதற்கேற்ப நிடுநிலைப் பள்ளியாக இருந்த மேற்படி பள்ளி 1992-93-ஆம் ஆண்டில் உயர்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்தப்பட்டுள்ளது. இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்த உரிய நேரத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். இப்பள்ளியின் செயல்பாட்டைப் பார்த்த பின்னர், பழங்குடியினர் மிகுதியாக வாழும் பகுதிகளில் உள்ள உண்டு-உறைவிடப் பள்ளிகளும் அவற்றின் தகுதிக்கேற்ப உயர்நிலைப் பள்ளிகளாகவோ, மேல் நிலைப் பள்ளிகளாகவோ உரிய காலத்தில் நிலை உயர்த் தப்படும்.

மற்றும் 1991-92-ஆம் ஆண்டில் ரூ.18 இலட்சம் செலவில் எட்டு உண்டு- உறைவிடப் பள்ளிக்கூடங்கள் கட்ட உத்தரவிடப்பட்டு, அதற்கான பணிகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. மேலும் 1991-92-இல் பழங் குடியினர் நலத்திட்டப் பகுதிகளில் 8 புதிய பள்ளிகள் திறப்பதற்கு அடிப்படைத் தேவையான கட்டடங்கள் கட்ட ரூ.40 இலட்சமும், 1992-93-ஆம் ஆண்டில் 7 பள்ளிகள் திறப்பதற்காக ரூ.49 இலட்சமும் அனுமதிக்கப் பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இத்துறையில் இயங்குகின்ற மாணவ-மாணவியர்கள் விடுதிகளுக்குப் படிப்படியாக சொந்தக் கட்டடம் கட்ட வேண்டுமென்ற திட்டத்தின் கீழ் இந்த அரசு பொறுப் பேற்ற பிறகு 1991-92-ஆம் ஆண்டில் ரூ.2.3 கோடி செலவில் புதிய 7 (2 மாணவர் 5 மாணவியர்) விடுதிக் கட்டடங்கள் கட்ட உத்தரவிடப்பட்டு, கட்டுமானப் பணிகள் நடந்து வருகின்றன. 1992-93-ஆம் ஆண்டில் ரூ.300 இலட்சம் செலவில் 12 மாணவர் விடுதிக் கட்டடங்கள் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்கள் அரசு பொறுப் பேற்ற பிறகு ரூ.3.26 கோடி செலவில் 19 புதிய பள்ளிக் கட்டடங்கள் கட்டுவதற்கு ஆணை இடப்பட்டு பணிகள் நடந்து வருகின்றன.

கல்வித்துறையின் கீழ் இயங்கி வருகின்ற நிறுவனங் களில் பயிலும் ஆதிதிராவிட மாணவ-மாணவியர்களுக்கு 1991-92 நிதியாண்டில் ரூ.14 கோடியும், 1992-93-ஆம் ஆண்டில் ரூ.15.31 கோடியும் உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. 1990-91-ஆம் ஆண்டு வழங்கப்பட்டதைவிட சுமார் ரூ.2 கோடியும் மற்றும் 1991-92-இல் வழங்கப்பட்டதைவிட 1992-93-இல் ரூ.1.31 கோடியும் அதிகம் வழங்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின்கீழ் 7 இலட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் பயன்பெறுகின்றனர்.





# இந்து சமய அறநிலையத் துறையின் இணையிலாப் பணிகள்

மாண்புமிகு இந்து அறநிலையத் துறை அமைச்சர்
திரு வெ. நடேசன் பால்ராஜ்

**ஆலயப்பணிக்கோர் அற்புதத் திட்டம்- இதர மாநிலங்களும் பின்பற்றும் வகையில் ஆலய சீரமைப்புத் திட்டம்.**

- சிதைந்த கோயில்களைச் சீர்படுத்த முதலமைச்சரின் கோயில் திருப்பணி மற்றும் பராமரிப்புத் திட்டம் - டாக்டர் புரட்சித்தலைவியின் தூய புனிதத் திட்டம் - மக்களின் நெடுஞ்காலத் தேவையைப் பூர்த்தி செய்யும் திட்டமாகும். ஆலயங்களில் உள்ள விலை மதிப்பற்ற சொத்துக்களைப் பாதுகாக்க ஆலய பாதுகாப்பிற்குத் தனிப்படை.



மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் அரசு பொறுப்பேற்ற இரண்டாண்டுகளில் இந்து சமய அறநிலையத் துறையில் ஏற்பட்டுள்ள சாதனைகள் பலப்பல.

தேர்தலில் அளித்த வாக்குறுதிகளின்படி தமிழ்நாடு திருக்கோயில்களின் நிர்வாக மேம்பாட்டைக் கருதி திருக்கோயில் நிர்வாக வாரியம் அமைக்கப்பட்டது. மேற்படி நிர்வாக வாரியத்தால், 19 மாவட்டங்களிலும், மாவட்டக் குழுக்கள் நியமிக்கப்பட்டன.

20 ஆண்டுகளுக்கு முன்பாக களவுபோன புகழ் பெற்ற, பத்தூர், அருள்மிகு நடராசர் திருவுருவச் சிலை தமிழ்நாட்டிற்குத் திரும்பக் கொண்டு வரப்பட்டது. மேற் படி திருக்கோயிலை ரூ.7 இலட்சம் செலவில் புதுப்பித்து, குடமுழுக்கு விழா நடத்த ஏற்பாடுகள் மற்றும் நித்திய பூசை நடத்த ரூ.1.60 இலட்சம் வைப்பு நிதி ஏற்படுத்தி, அதன் வட்டியினைக் கொண்டு நித்ய பூசைகள் செய்யும் ஏற்பாடு செய்யப்பட்டது.

திருவாரூரில் உள்ள, உலோகத் திருமேனிகள் பாது காப்பு மையம் ரூ.9 இலட்சம் செலவில் குளிர்சாதன வசதி செய்யப்பட்டது. மேலும், ரூ.5 இலட்சம் செலவில் ஜெனரேட்டர் ஒன்றும் அமைக்க அனுமதிக்கப்பட்டது.

திருக்கோயில் பணியாளர்களின் குடும்பநல நிதி உதவி ரூ.10,000 என இருந்ததை, ரூ.20,000 ஆக உயர்த்தி வழங்கவும், அதன்பின்னர் ரூ.20,000-லிருந்து ரூ.30,000 ஆக உயர்த்தி வழங்கவும் ஆணையிடப்பட்டது. இந்த அரசுப் பொறுப்பேற்றபின், 125 குடும்பங்களுக்கு இத் திட்டத்தின்கீழ் நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது.

பல திருக்கோயில்களில், பணியாளர்கள் சம்பளம்கூட கொடுக்க வசதியில்லாமல், இருப்பதைத் தொடர்ந்து, மேற்படி பணியாளர்களுக்குச் சம்பளப் பாக்கிகளைக் கொடுக்க ஒரு நிதி ஏற்படுத்தப்பட்டது. மேற்படி நிதி யிலிருந்து கிடைக்கும் வட்டியிலிருந்து, கடந்த 2 ஆண்டு களில், திருக்கோயில் பணியாளர்களின் சம்பளப் பாக்கி வழங்கும் திட்டத்தின்கீழ், 2,533 பணியாளர்களுக்கு 34.66 இலட்சம் ரூபாய் சம்பளம் வழங்கப்பட்டது.

தமிழகத்தில் முதன் முறையாக, வேத ஆகமங்களைக் கற்றுச் சிறப்புறும்பொருட்டு வேத ஆகமக் கல்லூரி நிறுவிட அறிவிக்கப்பட்டது. அர்ச்சகர்களுக்கு, புத் தொளிப் பயிற்சித் திட்டம் அறிவிக்கப்பட்டது. உபரி நிதி உள்ள திருக்கோயில்களிலிருந்து, நிதிமாற்றம் செய்து, ரூ.8 இலட்சம் நிதி ஏற்படுத்தி, மாநிலத்தில், 10 இடங் களில் அர்ச்சகர்களுக்குப் புத்தொளி பயிற்சித் திட்டம்

வழங்கும் திட்டம் நடை பெற்று வருகிறது. இத்திட்டத்தில் 346 அர்ச்சகர்கள் பயன்பெற்றுள்ளனர்.

ஓதுவார்களுக்கு, ஏற்கெனவே, வழங்கிவரப்படும் ஓய்வூதியத்தினை 250-லிருந்து ரூ.300 ஆக உயர்த்தி வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டது.

வேத பாராயணம், நாலாயிரத் திவ்வியப்பிரபந்தம் பாடுவோர் மற்றும் அறையர்சேவை செய்வோர்களுக்கு 100 பேர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் புதிய திட்டம், உத்தரவிடப்பட்டு, ஓய்வூதியம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. திருக்கோயில்களில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற தகுதிவாய்ந்த 500 அர்ச்சகர்களுக்கு ஓய்வூதியத் திட்டம் மாத ஓய்வூதியம் ரூ.300 என்று வழங்க அரசாணைப்படி உத்தரவு வழங்கப்பட்டு ஓய்வூதியம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கன்னியாகுமரி தேவஸ்தானம் போர்டுக்கு ஆண்டுதோறும் ரூ.13.70 இலட்சம் அரசு மானியம் வழங்கப்பட்டு வந்தது. நிதிப்பற்றாக்குறை காரணமாக, இந்த மானியத்தை உயர்த்த வேண்டும் எனக் கேட்கப்பட்டதன் அடிப்படையில், முதலமைச்சர் திருக்கோயில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதியிலிருந்து ரூ. ஒரு கோடி முதலீடு செய்து, அதன் வட்டியிலிருந்து ஆண்டுக்கு ரூ.10 இலட்சம் மேற்படி போர்டுக்கு வழங்க ஆணையிடப்பட்டது. மேலும், ஆண்டுதோறும் கூடுதலாக ரூ.4 இலட்சம் ஆகக் கூடுதல் ரூ.14 இலட்சம் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. இதுவரை ரூ.10 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

ஒரு காலப் பூசை நடைபெறவும் வசதியில்லாத திருக்கோயில்களில், ஒரு காலப் பூசை நடைபெற நிரந்தரவைப்பு நிதி ஏற்படுத்த திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இத்திட்டத்தின்படி, திருக்கோயில் சார்பில் ரூ.6,250 நிதி திரட்டப்பட்டதால், பாக்கி ரூ.18,750 முதல்வர் திருக்கோயில் பாதுகாப்பு நிவாரண நிதியிலிருந்து அளித்து, மொத்தம் ரூ.25,000 நிரந்தர வைப்பு நிதி ஏற்படுத்தப்படும் என்ற திட்டம் மாற்றி அமைக்கப்பட்டுச்செயல்படுத்தப்பட உள்ளது.

திருக்கோயில்களில் நடைபெறும் திருட்டு, மற்றும் சிலை உடைப்பைத் தடுக்கும் பொருட்டு, 1000 இரண்டாம் நிலைக் காவலர்கள், மற்றும் 3000 முன்னாள் இராணுவத்தினர் கொண்ட ஒரு திருக்கோயில் பாதுகாப்புப் படை ஏற்படுத்தப்பட்டது. இப்படையில், இதுவரையில், 2,016 திருக்கோயில்களில் காவலர்கள் மற்றும் முன்னாள் படைவீரர்கள், நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

திருக்கோயில்களில் நடைபெறும், திருட்டினைத் தவிர்க்கும் பொருட்டு, எச்சரிக்கை மணி பொறுத்தும் திட்டம் அறிவிக்கப்பட்டு, திருக்கோயில் நிர்வாக வாரியத்தினால் 337 திருக்கோயில்களில் எச்சரிக்கை மணி பொறுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த ஆட்சி ஏற்பட்டபின், திருக்கோயில்களுக்கு வரவேண்டிய குத்தகைப் பாக்கிகளை வசூலிக்க வருவாய் நீதிமன்றங்களில், 10,927 வழக்குகள் ரூ.765 இலட்சங்களுக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதுவரை, 2,119 வழக்குகள் முடிக்கப்பட்டு, ரூ.2.5 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே, 5 இடங்களில் வருவாய்



நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டிருந்தது. 1992-93-இல் மேலும், ஆறு வருவாய் நீதிமன்றங்கள் அமைக்க இந்த அரசினால் ஆணையிடப்பட்டுள்ளது. தற்போது 11 இடங்களில் வருவாய் நீதிமன்றங்கள் உள்ளன.

தமிழ்நாடு திருக்கோயில் நிர்வாக வாரியத்தினால் 291 திருக்கோயில்களுக்கு, ரூ.48.86 கோடி மதிப்பிற்கு வரவு செலவுத் திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு திருக்கோயில் நிர்வாக வாரியத்தினால், திருக்கோயில்களில் உள்ள, தணிக்கை ஆட்சேபணைகளில் 770 பத்திகள் சம்பந்தப்பட்ட ஆட்சேபணைகள் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. ரூ.7 கோடி திட்டத்தின்கீழ், ஒருகாலப் பூசைக்காகத் திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.2,500 வழங்கப்பட்டு வந்ததை ரூ.3,500 ஆக உயர்த்தி வழங்க ஆணையிடப்பட்டது.

திருக்கோயில்களில் நடைபெறும், இலவசத் திருமணங்களுக்குச் செலவிடப்பட்டு வந்த ரூ.1,250-ஐ ரூ.1,500 ஆக உயர்த்தி வழங்க ஆணையிடப்பட்டது.

பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் நிர்வாகத்திற்கு ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி நியமிக்கப்பட்டார். சிவகங்கை மற்றும் வேலூர் ஆகிய இரண்டு கோட்டங்களில் இரண்டு துணை ஆணையர் அலுவலகம் ஏற்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளது. தூத்துக்குடி மற்றும் திருவண்ணாமலையைத் தலைமையிடமாகக் கொண்டு இரண்டு உதவி ஆணையர் அலுவலகம் ஏற்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளது. தலைமையிடத்தில், வழக்குகளைக் கவனிக்க உதவி ஆணையர் ஒருவர் நியமிக்கப்பட்டார்.

திருக்கோயில் நிர்வாக வாரியத்தால், 203 திருக்கோயில்களுக்கு அறங்காவலர்கள் நியமிக்கப்பட்டனர் மாவட்டக் குழுக்களால் 2,632 திருக்கோயில்களுக்கு அறங்காவலர்கள் நியமிக்கப்பட்டனர் சமயபுரம் மற்றும் திருவேற்காடு திருக்கோயில்கள் துணை ஆணையர் நிலையிலிருந்து, இணை ஆணையர் நிலைக்கு உயர்த்தப்பட்டன. அதேபோல், கள்ளழகர் திருக்கோயில் உதவி ஆணையர் நிலையிலிருந்து, துணை ஆணையர் நிலைக்கு உயர்த்தப்பட்டது. ஆலய மேம்பாட்டுத் திட்டம் ரூ.5 கோடி வைப்பு நிதி வட்டியிலிருந்து வசதி இல்லாத திருக்கோயில்களின் ஒருகாலப் பூசை நடைபெற 1991-92-இல் 547 திருக்கோயில்களுக்கு ரூ.13.67 இலட்சமும், 1992-93-ஆம் ஆண்டில் 265 திருக்கோயில்களுக்கு ரூ.9.27 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது. ஆலய மேம்பாட்டுத் திட்டம் கிராமப்புறத் திருக்கோயில்கள் திருப்பணிக்கான ரூபாய் ஒரு கோடி வைப்பு நிதி வட்டியிலிருந்து திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.25,000 வீதம் 1991-92-ஆம் ஆண்டில் 66 திருக்கோயில்களுக்கு ரூ.16.50 இலட்சமும், 1992-93-ஆம் ஆண்டில் 95 திருக்கோயில்களுக்கு ரூ.23.15 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது.

ஆலயங்களின் திருப்பணி மற்றும் பராமரிப்புக்காக ஆண்டுதோறும் ரூ.45 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டு வருகிறது. 1991-ஆம் ஆண்டில், 1991-92-க்கு, கும்பகோணத்தில், நடைபெற்ற மகாமகத் திருவிழா 8 ஆலயங்களின் திருப்பணிக்காக ரூ.12.50 இலட்சம் அரசு மானியமாக வழங்கப்பட்டது. மேலும், காமராசர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர், அருள்மிகு நாச்சியார் திருக்கோயில், இராஜகோபுரத் திருப்பணிக்காக ரூ.11 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. எனவே, மொத்தத்தில் ரூ.72.50 இலட்சம் அரசு மானியமாக வழங்கப்பட்டுள்ளது. இது கடந்த ஐந்தாறு ஆண்டுகளில் எப்போதுமே இந்த அளவிற்குக் கொடுக்கப்படவில்லை. 1991-ஆம் ஆண்டில் பொது நல நிதியிலிருந்து திருக்கோயில் திருப்பணிக்காக ரூ.17.01 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. 1992-ஆம் ஆண்டில் 34 திருக்கோயில்களில் திருப்பணிக்காக ரூ.19.39 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

முதன்முதலாகத் தமிழ்நாடு திருக்கோயில் நிர்வாக வாரியம் அமைக்கப்பட்ட பிறகும், அதற்கு முன்பாகவும், 1991-ஆம் ஆண்டில் 611 திருக்கோயில் திருப்பணி வேலைகள் ரூ.10.35 கோடியில் நடைபெற்று வந்துள்ளது. 1992-ஆம் ஆண்டில் முடிக்கப்பட்ட பணிகள்: திருப்பணிகள்: 257, மதிப்பீடுத்தொகை ரூ.190.74 இலட்சம், கட்டுமானப் பணிகள்: 110, மதிப்பீடுத் தொகை: ரூ.226.83 இலட்சம். மேலும் 103 வேலைகளுக்கு ரூ.3.82 கோடிக்கு அங்கீகரிக்கப்பட்டதில், 44 பணிகள் ரூ.220.96 இலட்சத்தில் தொடங்கப்பட்டுள்ளது.

கும்பகோணத்தில், நடைபெற்று முடிந்துள்ள மகாமகத் திருவிழாவினை ஒட்டி, 19 திருக்கோயில்களில், 11 திருக்கோயில்களுக்குத் திருப்பணி செய்யப்பட்டு குடமுழுக்கு விழா நடைபெற்றுள்ளது. அதற்காக அரசு மானியமாக ரூ.12.50 இலட்சமும், ஆலய மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.10 இலட்சமும், திருக்கோயில்கள் உபரிநிதியிலிருந்து ரூ.12 இலட்சமும், முதலமைச்சர் திருக்கோயில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதியிலிருந்து ரூ.5.77 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது.

புராதன வரலாற்றுச் சிறப்புமிக்க ஆழ்வார்கள் மற்றும் நாயன்மார்களால் பாடப்பெற்ற 19 சைவத் திருக்கோயில்களுக்கும், 16 வைணவத் திருக்கோயில்களுக்கும் திருப்பணிக்காக முதலமைச்சர் திருக்கோயில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதியிலிருந்து ரூ.50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

சென்னை, மயிலாப்பூர், அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயிலில் 1988-ஆம் ஆண்டிலிருந்து போதிய நீர் இன்மையால், நடத்த இயலாமலிருந்த தெப்பத் திருவிழாவினை நடத்துவதற்கு இந்த அரசு திட்டம் தீட்டி, ரூ.35 இலட்சம் செலவில் திருக்குளத் திருப்பணி வேலைகள் செய்து, குளத்திற்குள் தண்ணீர் தேக்கி 1993-ஆம் ஆண்டில் தெப்பத்திருவிழா நடத்தப்பட்டுள்ளது.

உத்தரகோசமங்கை, அருள்மிகு மங்களநாத சுவாமி திருக்கோயில் திருப்பணிக்காக முதலமைச்சர் திருக்கோயில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதியிலிருந்து ரூ.10 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது திருப்புடைமருதூர், அருள்மிகு நாறும்பூநாதசுவாமி திருக்கோயில் திருப்பணிக்காக பொதுநல நிதி மற்றும் ரூ.5 கோடி வைப்பு நிதி வட்டியிலிருந்தும் ரூ.7 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

மதுராந்தகம், அருள்மிகு கோதண்டராமசுவாமி திருக்கோயில், திருப்பணிக்காக முதலமைச்சர் திருக்கோயில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதியிலிருந்து ரூ. 5 இலட்சம் வழங்கப்பட்டு குடமுழுக்கு விழா நடைபெற்றுள்ளது. கும்பகோணம், நாதன்கோவில், அருள்மிகு ஜகந்நாதப் பெருமாள் திருக்கோயில் திருப்பணிக்காக முதலமைச்சர் திருக்கோயில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதியிலிருந்து ரூ.2 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

கோவை மாவட்டம் அருள்மிகு அவிநாசிலிங்கேஸ்வரர் திருக்கோயிலுக்கு ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு புதிய தேர் செய்து முடிக்கப்பட்டு தேர்த்திருவிழா நடை பெற்றது. இத்தேர்த் திருப்பணிக்காக ரூ.5 கோடி வைப்பு நிதி வட்டியிலிருந்து ரூ.5 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டம், சித்தன்னவாசல் (?) அருள்மிகு நாச்சியார் திருக்கோயிலுக்கு ரூ.4 இலட்சத்திற்கு உபயமாகத் தேர் செய்து முடிக்கப்பட்டுள்ளது. காஞ்சிபுரம் வட்டம், இளையனார் வேலூர் அருள்மிகு பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்குப் புதிய தேர் ரூ.4.15 இலட்சத்தில் செய்யப்பட உள்ளது.

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் திருமகனார் மாவட்டம், சிவகங்கை தேவஸ்தானத்தைச் சேர்ந்த எழுவன்கோட்டை, அருள்மிகு விஸ்வநாத சுவாமி திருக்கோயில் திருப்பணி ரூ.7.40 இலட்சத்தில் நடைபெற்று வருகிறது.

திருக்கழுக்குன்றம், அருள்மிகு வேதகிரீஸ்வரர் திருக்கோயில் சங்குதீர்த்த குளம் தெப்பத் திருவிழாவினை முன்னிட்டு, ரூ.1.07 இலட்சம் செலவில் திருப்பணி நடைபெற்றுள்ளது.

பட்டுக்கோட்டை, நாடியம்மன் திருக்கோயில் இராஜகோபுரத் திருப்பணிக்காக ரூ.3 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. தென்திருப்பேரை அருள்மிகு மகரநெடுங்குழைநாதர் திருக்கோயில் திருப்பணிக்காக

மண்வளம், நீர்வளம் ஆகியவற்றை அறிந்து மா, தென்னை, சவுக்கு, முந்திரி, தேக்கு போன்ற பயன்தரும் மரங்களை வனத்துறை, ஊரக வளர்ச்சித்துறை உதவியைக் கொண்டு பயிர் செய்யவும், அத்தகைய நிலங்களிலிருந்து பெறப்படும் பலன்களைப் பயிர்செய்யும் துறையும், திருக்கோயிலும் சம அளவில் பங்கிட்டுக் கொள்ளும் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

இந்து சமய அறநிலையத் துறையின் மண்டல மற்றும் கோட்ட அலுவலர்கள் தங்களது சொந்தக் கட்டடங்களில் இயங்க வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில், தஞ்சாவூர், துணை ஆணையர் அலுவலகம் ரூ.20 இலட்சத்தில் கட்டப்படவுள்ளது. இந்த நிதியாண்டில் ரூ.10 இலட்சம் ஒதுக்கீ் செலவிடப்பட்டுள்ளது.

இந்தியாவிலுள்ள எல்லா மாநிலங்களிலிருந்தும் பக்தர்கள் வந்து புண்ணிய நீராடி வழிபாட்டினை மேற்கொள்ளும் புகழ்பெற்ற இராமேஸ்வரம், அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில் அமைந்துள்ள தீவினை அழகுபடுத்தவும், வருகை தரும் பக்தர்களுக்கு அனைத்து வசதிகளை ஏற்படுத்தித்தரவும் ஒருங்கிணைந்த திட்டம் ஒன்று செயல்படுத்தப்படவுள்ளது.

பழநி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழநி குன்றின்மீது அமைந்துள்ளது. இத் திருக்கோயிலைச் சுற்றி அமைந்துள்ள மலைப்பகுதி, மலை அடிவாரம் மற்றும் அதன் சுற்றுப்புறங்கள் ஆகியவற்றை அழகுபடுத்தவும், அங்கு வருகை தரும் பக்தர்களுக்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்தவும், ஒருங்கிணைந்த திட்டம் ஒன்று செயல்படுத்தப்படவுள்ளது.

திருக்கோயில் சம்பந்தப்பட்ட கலைகளை விளக்கிக் காட்டும் பழம் பொருட்களையும், இந்து சமயத்தினை விளக்கிக் காட்டும் படங்களையும், உலோகத்திருமேனிகளையும், பழங்காலத்து நகைகள், புகைப்படங்கள், வாகனங்கள் ஆகியவைகளின் எழில்களைச் சுற்றுலாப் பயணிகள் கண்டுகளிக்கும் வகையில் திருக்கோயில் கலைக்கூடம் ஒன்றினை மகாபலிபுரம் சாலையில் ரூ.30 இலட்சம் செலவில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழகத்தில் உள்ள அனைத்து முக்கியத் திருக்கோயில்களில் பக்தர்களின் வசதிக்காக ஒருங்கிணைந்த பயணிகள் தங்கும் விடுதிகள் ஒன்றினைத் திருக்கோயில் அருகாமையிலேயே அமைக்கும் திட்டம் ஒன்று இடப்பட்டுள்ளது.

இந்த அரசு பொறுப்பேற்றது முதல் 30.5.93 வரை 190 திருக்கோயில்களில் குடமுழுக்கு விழாக்கள் நடைபெற்றுள்ளன. சென்னை, மயிலாப்பூர் அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில் மற்றும் கோவை, மருதமலை அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் ஆகிய இரண்டு திருக்கோயில்களிலும் தங்கரதத் திருப்பணி வேலை செய்யப்பட்டு வருகிறது.


தமிழரசு
புதிய சந்தா விவரம்

'தமிழரசு' தமிழ் (மாதம் இருமுறை)
ஆண்டுச் சந்தா ... ரூ.72
அரையாண்டுச் சந்தா ... ரூ.36

'தமிழரசு' ஆங்கிலம் (மாதம் ஒருமுறை)
ஆண்டுச் சந்தா ... ரூ.36

சந்தாத் தொகையை - மணியார்டர் அல்லது பாங்க் டிராப்ட் மூலம் அனுப்ப வேண்டிய முகவரி:

உதவி இயக்குநர்
'தமிழரசு'
அரசினர் தோட்டம்
சென்னை-600 002.

தமிழரசு
படிக்க — பயன்பெற — பாதுகாக்க




# மீனவர் மேன்மையுற... பிற்பட்டோர் நலம் பெற...

## - அரசு ஆற்றும் அரும்பணிகள்


மாண்புமிகு பிற்பட்டோர் நல, மீனளத்துறை அமைச்சர்

**திரு டி. ஜெயக்குமார்**


**ஒவ்வொரு ஆண்டும் 1000 நபர்களுக்கு இலவசமாகத் தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்துப் பயிற்சி தரப்படுகிறது. இதற்காகும் செலவை அரசே ஏற்கிறது.**

**ரூ.228 கோடி மதிப்புள்ள கடல் பொருள் ஏற்றுமதி செய்து தமிழகம் இரண்டாவது இடத்தை வகிக்கிறது.**



நல்ல ஆட்சி என்பது அன்பு, ஆதரவு, பற்றுதல், பதவி, வலிவு, வளம் போன்றவற்றின் காரணமாக யாரொருவர் பக்கமும் சாராமல் அதே நேரத்தில் மக்கள் மீது அன்பும் ஆதரவும் ஈகைத் தன்மையும் காட்டி ஆட்சியைச் செம்மையாக நடத்துவதேயாகும். இதுபோன்ற ஆட்சியை மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் கோலோச்சி வருவதால்தான் தமிழகத்தில் நல்லாட்சி மலர்ந்து, மக்களாட்சியாக, ஏழை எளிய மக்களின் முகங்களில் புன்னகை மலரும் நம்பிக்கையான ஆட்சியாகத் திகழ்ந்து வருகிறது.

பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் மக்கள் அனைத்து வகையிலும் மேம்பாடு அடைந்துள்ளனர். மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் அரசில் எய்தியுள்ள சாதனைகளின் விவரங்களில் முக்கியமான சிலவற்றினை மட்டும் இங்குக் குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆணைக்கிணங்க அனைத்து விடுதிகளிலும் அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. ஏற்கெனவே உள்ள விடுதிகளைத் தவிர ரூ.77.68 இலட்சம் செலவில் மாணவ மாணவியருக்கென 38 தங்கும் விடுதிகள் புதிதாகத் திறக்கப்பட்டு உள்ளன. இந்த ஆண்டும் 20 புதிய விடுதிகள் திறக்கப்படவிருக்கின்றன. வாடகைக் கட்டடங்களில் இயங்கும் விடுதிகள் சொந்தக் கட்டடங்களில் இயங்க ரூ.123.69 இலட்சம் செலவில் 13 விடுதிகளுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டும் 11 விடுதிகளுக்கு அனுமதி வழங்கப்படவிருக்கின்றது.

மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ மாணவியருக்கு அளிக்கப்படும் சலுகைபோன்று, பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த மாணவ மாணவியருக்கும் இவ்வரசால்தான் இலவசத் தொழிற்படிப்பு வசதிகள் செய்துதரப்பட்டுள்ளன. அகில இந்தியப் பணிகளுக்கான தனிப்பயிற்சி நிலையத்தில் அனுமதி பெற இருந்த பெற்றோர் வருமான வரம்பு விலக்கப்பட்டுவிட்டது. மாணவ மாணவியரின் பொது அறிவை வளர்க்கும் பொருட்டு துறையின் அனைத்து விடுதிகளிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும் ஆங்கிலம் மற்றும் தமிழ் நாளேடுகள் வழங்கும் புதுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. எல்லா மாணவ மாணவியர் விடுதிகளிலும் ரூ.15 இலட்சம் செலவில் சிறிய நூலகம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மண்பாண்டங்கள் செய்ய, வலுவிழந்த கையினால் சுற்றிச் சுற்றி வாடும் குயவர்களுக்கு மின்விசையால் இயங்கும் சக்கரம் ரூ.5 இலட்சம் செலவில் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

10 நடுநிலைப் பள்ளிகள் ரூ.11.19 இலட்சம் செலவில் உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி இலவசமாக அளிக்கப்படுகிறது. இதற்காகும் செலவை அரசே ஏற்கிறது. 50 நபர்களுக்கு ரூ.4.34 இலட்சம் செலவில் 'மரைன் ரேடியோ' பயிற்சி தர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



ரூ.5 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

பலநோக்கு பலமாடிக் கட்டடங்கள், அங்காடிகள் மற்றும் திருமண மண்டபங்கள் திருக்கோயில் வருமானங்களில் இருந்தும் கடன் வாங்கியும், கட்டப்பட்டு வருகின்றன. இவைகளின் மூலம், திருக்கோயில்களுக்கு நல்ல வருவாயினை ஈட்டித்தர வழி செய்யப்பட்டுள்ளது. சென்னை, இராயப்பேட்டை, அருள்மிகு சித்திபுத்தி விநாயகர் திருக்கோயிலுக்குச் சொந்தமான டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலையில் உள்ள இடத்தில் பலநோக்கு வர்த்தக அங்காடி கட்டுமானப் பணி முதல்கட்டமாக ரூ.50 இலட்சத்தில் கட்டிமுடிக்கப்பட்டுள்ளது. இரண்டாவது கட்டமாக, கட்டுமானப் பணி ரூ.100 இலட்சத்தில் மேற்கொள்ளப்படவுள்ளது.

மயிலை, அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயில் சார்பில், கிரீன்வேஸ் சாலையில், ரூ.90 இலட்சம் மதிப்பீட்டிலும், திருவான்மியூர், அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயில் சார்பில் ரூபாய் ஒரு கோடி மதிப்பீட்டிலும், அழகர் கோயிலுக்குச் சொந்தமான இடத்தில், மதுரை நகரில் ரூ.35 இலட்சம் மதிப்பீட்டிலும், திருச்சி மலைக்கோட்டை தாயுமான சுவாமி திருக்கோயில் சார்பில் இரண்டு வணிக வளாகங்கள் ரூ.55 இலட்சம் மதிப்பிலும், கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இருக்கன்குடி, அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் வளாகத்தில், 72 அங்காடிகள் ரூ.10 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மேலும், 96 கடைகள் ரூ.20 இலட்சம் செலவில் கட்ட மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

திருவான்மியூர், அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயிலின் சார்பில் இரண்டு கல்யாண மண்டபங்கள் ரூ.48.50 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. வடபழநி, அருள்மிகு வடபழநி ஆண்டவர் திருக்கோயிலின் சார்பாக ரூ.47.50 இலட்சம் செலவில் 2 திருமண மண்டபங்களும், திண்டுக்கல் மற்றும் காரைக்குடி ஆகிய இடங்களிலும் ரூ.16.50 இலட்சம் செலவில் திருமண மண்டபங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. திருவிடந்தை, அருள்மிகு நித்தியகல்யாண சுவாமி திருக்கோயில் சார்பில், ரூ.6 இலட்சம் செலவிலும் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. கடலூர், அருள்மிகு பாடலீஸ்வரர் திருக்கோயில் சார்பில் ரூ.12 இலட்சம் செலவிலும், உப்பிலியப்பன்கோவில், அருள்மிகு வெங்கடாசலபதி சுவாமி திருக்கோயில் சார்பில் ரூ.6 இலட்சம் செலவிலும் கல்யாண மண்டங்கள் கட்டப்படவுள்ளன.

புதுக்கோட்டை சமஸ்தான திருக்கோயில் பராமரிப்பிற்காக ஏற்கெனவே வழங்கப்பட்டு வந்த அரசு உதவித் தொகை ரூ.5.30 இலட்சம் இந்த அரசு பதவி ஏற்றவுடன் ரூ.9.30 இலட்சமாக உயர்த்தி ஆணையிடப்பட்டு வழங்கியது.

திருக்கோயில்களுக்குச் சொந்தமான நகர்ப்புறங்களில் உள்ள கட்டடங்களுக்கு நியாயமான வாடகை நிர்ணயம் செய்வதற்கு நியாய வாடகைக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

மண்டைக்காடு, அருள்மிகு பகவதியம்மன் திருக்கோயில் கன்னியாகுமரி மாவட்டம், திருவிழா இலட்சக் கணக்கான மக்கள் குழுமி, பொங்கல் வைத்து வழிபடும் திருக்கோயிலாகும். பொதுநல வசதிக்காக திருக்கோயில் மதிற்சுவரை ஒட்டி மூன்று புறமும், பொங்கல் மண்டபம் ரூ.2,40,000 செலவில் அமைக்கவும், ஐந்து அறைகள் கொண்ட தங்குமிடம் ரூ.2,20,000 செலவில் கட்டுமானம் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு பணிகள் தொடங்கும் நிலையில் உள்ளன.

மேலும், மயிலை, அருள்மிகு மாதவப் பெருமாள் திருக்கோயில் திருக்குளமும், திருப்பணி செய்யப்பட்டு, இவ்வாண்டு தெப்பத் திருவிழாவும் மீண்டும் தொடங்கப் பட்டுள்ளது.

**அருள்மிகு சுப்ரமணியசுவாமி திருக்கோயில், மருதமலை.**

திருக்கோயிலின் கருவறை, முகமண்டபம் மற்றும் மகாமண்டபம் ஆகியவைகளை கருங்கல் திருப்பணியாகப் புதியதாக உரிய சிற்ப சாத்திர விதிகள்படி, மாற்றியமைக்க ரூ.37 இலட்சம் அளவில் மதிப்பீடு செய்யப்பட்டு பணிகள் தமிழ்நாடு கட்டுமானக் கழகத்தினரால் செய்யப் பட்டு வருகின்றது. மேலும், பல திருப்பணிக்காகப் புதிய ராஜகோபுரம் கட்டுதல், புதிய படிக்கட்டுகள் அமைத்தல், போதிய அங்காடிகள், அலுவலக அறைகள், பக்தர்கள் குடிநீர் வசதி செய்தல், திருமதில் அமைத்தல் மற்றும் உயர்நிலைப் பள்ளி கட்டடம் கட்டுதல் ஆகியவை உள்ளடக்கி ரூ.6 கோடி மதிப்பில் பணிகள் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், பண்ணாரி. சுற்றுப்பிரகார மண்டபம் ரூ.23 இலட்சம் மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகிறது. மேலும், தங்கும் அறைகள், தண்ணீர் வசதி, குடில்கள், போதிய சாலை வசதிகள், இவைகளை அமைக்கத் திட்டமிடப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

அருள்மிகு பவானியம்மன் திருக்கோயில், பெரிய பாளையம். சென்னைக்கு அருகில் அமைந்துள்ள இத் திருக்கோயில் சிற்ப சாத்திர, முறைப்படி திருத்தி அமைக்கவும், நான்குபுறமும், மதிற்சுவர் மற்றும் கோபுரங்கள்



கொண்டதும், புதிய மகாமண்டபம், சபாமண்டபம் இவைகளுடன் கூடியதாகவும் அமைக்க ரூ.70 இலட்சம் மதிப்பில் பெருந்திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது. முதற்கட்ட பணிகள் சுமார் 20 இலட்சத்திற்கு மேற் கொள்ளப்பட்டு தமிழ்நாடு கட்டுமானக் கழகத்திடம் ஒப் படைக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

அருள்மிகு வடபத்ரசயனர் திருக்கோயில், ஸ்ரீவில்லி புத்தூர். தமிழக அரசின் சின்னமாக குறிக்கப்பட்ட பெருமை வாய்ந்த திருக்கோயில் ராஜகோபுரம் வலு விழந்து இருந்ததை, புதுப்பிக்க வல்லுநர்குழு தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையில், முதற்கட்டமாக ரூ.49 இலட்சம் மதிப்பில் கல்சாரம் மற்றும் இராச கோபுரம் வலுவூட்டும் பணிகள் தமிழ்நாடு கட்டுமானக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டு முடிவடையும் தறுவாயில் உள்ளது. இரண்டாவது கட்டமாக, கோபுரத்தினைப் புதுப்பித்தும், வண்ணம் வைக்க உத்தேசமாக ரூ.45 இலட்சம் அள விற்குத் தேவைப்படலாம். இரண்டாவது கட்டப் பணி களுக்கான விலைப்புள்ளிகள் தமிழ்நாடு கட்டுமானக் கழகத்திடம் இருந்து பெறப்பட்டுள்ளது.

மேலும், குறிப்பிடத்தக்க முக்கியத் திருப்பணிகள் நடைபெற்றுள்ள திருக்கோயில்கள் விவரம்:

1. அருள்மிகு மீனாட்சிசுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை தெற்கு மற்றும் மேற்கு கோபுரத் திருப்பணிகள் .. ரூ.16 இலட்சம்.

2. அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில், இராமேஸ்வரம்-இரண்டாம் பிரகார கல் திருப்பணி .. ரூ.16 இலட்சம்.

3. அருள்மிகு காமாட்சியம்மன் திருக்கோயில், மாங்காடு, சென்னை .. ரூ.60 இலட்சம்.

4. அருள்மிகு கோட்டைமாரியம்மன் திருக்கோயில், சேலம் - இராசகோபுரம் .. ரூ.10 இலட்சம்.

5. அருள்மிகு சுப்ரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர் - தியான மண்டபம் கட்டுதல் .. ரூ.10 இலட்சம்.

6. அருள்மிகு வெக்காளியம்மன் திருக்கோயில், உறையூர் - பிரகார மண்டபம் கட்டுதல் .. ரூ.10 இலட்சம்.

மேற்கண்ட திருப்பணிகள் மட்டுமன்றி, பொதுநல வசதினை அளித்து திருக்கோயில் வருவாயினைப் பெருக்கு வதற்காகத் திருமண மண்டபங்கள் கட்டுமானம் மேற் கொள்ளப்பட்டு முடிவடைந்துள்ளன.

திருக்கோயில்களின் சார்பில் இடங்களில் கல்யாண மண்டபம் கட்டும் பணிகளுக்கு உபரி நிதியுள்ள திருக் கோயில்களில் நிதி உதவி பெற்றோ, அல்லது கடனாகப் பெற்றோ கல்யாண மண்டபங்கள் கட்டப்படும் என்று ஒரு திட்டம் அறிவிக்கப்பட்டு, 20 இடங்களில் திருமண மண்டபங்கள் இத்திட்டத்தின்கீழ் அமைக்கப்பட உள்ளது. இந்த அரசு பொறுப்பேற்றபின், திருக்கோயில்களில் 1991-இல் நடைபெற்ற குற்றங்களின் எண்ணிக்கை 404 ஆக இருந்தது. இந்த அரசு எடுத்த நடவடிக்கையினால் 1992-இல் 208-ஆகக் குறைந்துள்ளது.

திருக்கோயில்களில், காலங்காலமாகப் பயன்படுத்துப் பட்டு வந்த பழங்காலத்து இசைக் கருவிகள் தற்போது வழக்கொழிந்து வருவதைத் தடுக்க வேண்டும் என்றும், இவைகள் மீண்டும் திருக்கோயில்களில் பாதுகாத்துப் பயன்படுத்துப்படவேண்டும் என்ற நோக்கத்திலும், பஞ்ச முக வாத்தியம், எக்காளம், பாரிநாயனம், உடுக்கை, ஜெயகண்டி, பேரி, மத்தளம் மற்றும் யாழ் ஆகிய இசைக் கருவிகளை வாசிக்கும் திறமை வாய்ந்த இசைக் கலைஞர் களை இசைவித்து, அவர்கள் மூலம் பயிற்சி அளிக்கும் திட்டம் செயல்படுத்துப்படவுள்ளது.

திருக்கோயில்களில் பொதுவாகப் பயன்படுத்துப்படும் நாதஸ்வரம் மற்றும் தவில் ஆகியவற்றைப் பயிற்றுவிக்கும் பள்ளி ஒன்று பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் நடந்து வருகிறது. இந்தப் பள்ளியில் திருக்கோயில்களில் பயன்படுத்தக் கூடிய இதர இசைக் கருவிகளை- குறிப்பாக, பழங்கால இசைக் கருவி களை இசைக்கப் பயிற்சி அளிக்க நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது.

பழங்காலத்து இசைக் கருவிகளைத் திருக்கோயில் களில் வாசித்து வந்து தற்போது வயது முதிர்வினால் ஓய்வுபெற்று வறுமையில் வாழும் இசைக் கலைஞர்களில் 100 நபர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.300 வீதம் ஓய்வூதியம் அரசு நிதியிலிருந்து வழங்கப்படவுள்ளது.

மதுரை, மீனாட்சியம்மன் திருக்கோயில் ஆயிரங்கால் மண்டபத்தில் 1962-அம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்ட கலைக்கூடம் தற்போது பழுதடைந்துள்ளது. இந்தக் கலைக்கூடத்தினை ரூ.10 இலட்சம் செலவில் புதுப்பித்து திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களும், சுற்றுலாப் பயணிகளும் கண்டுகளிக்கும் வகையில் புதுப்பிக்கப் பட உள்ளது.

பெரியார் மாவட்டம், சத்தியமங்கலம், பண்ணாரியில் அமைந்துள்ள அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் சார்பில் மேற்படி பகுதியில் வாழும் மலைவாழ் மக்கள், பின்தங்கிய வகுப்பினர் ஆகிய வகுப்பைச் சேர்ந்த பெண்கள், பயன்பெறும் வகையில் பெண்களுக்கான பாலிடெக்னிக் ஒன்று திருக்கோயில் உபரிநிதியிலிருந்து தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

திருக்கோயில் பணியாளர்களுக்கு ஒரு சிறப்பு சேமநல நிதித் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது. இந்தத் திட்டத் தினால், பணியிலிருந்து ஓய்வு பெறும் பணியாளர்களுக்கு அவர்களால் செலுத்தப்படும் தொகையுடன் ரூ.500 சேர்த்து வழங்கப்படும் என்ற திட்டம் ஏற்படுத்தப்பட வுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 8,000 பணியாளர்கள் பயன்பெறுவார்கள்.

உதவி ஆணையர் மற்றும் அதற்குமேல் நிலையிலுள்ள செயல் அலுவலர்கள் பணிபுரியும் திருக்கோயில்களில் பணிபுரிந்து வரும் பணியாளர்கள், 15 ஆண்டுக் காலத்திற்கு மேலாகப் பதவி உயர்வு ஏதுமின்றி, இருந்து வரும் பணியாளர்களுக்குத் தேர்வுநிலை ஊதியம் வழங்கும் திட்டம் இடப்பட்டுள்ளது. இதனால், ஓராயிரம் திருக்கோயில் பணியாளர்கள் பயன்பெறுவார்கள்.

திருக்கோயில்களுக்குச் சொந்தமான தரிசு நிலங்களை

ஒவ்வொரு ஆண்டும் 1000 நபர்களுக்கு இலவசமாகத் தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்துப் பயற்சி தரப்படுகிறது. இதற்காகும் செலவை அரசே ஏற்கிறது. 500 மாணவ மாணவியருக்கு இலவசமாக அரசின் செலவில் கணிப்பொறி பயிற்சி அளிக்கப்படுகிறது. மாணவ மாணவியருக்கு வழங்கும் உணவுக் கட்டணம் ரூ.180, ரூ.160, ரூ.120 என்ற விகிதங்களில் உயர்த்தப்பட்டு தொழிற்பயிற்சி, கல்லூரி மற்றும் பள்ளி மாணவ மாணவியருக்கு வழங்கப்படுகின்றன.

மதுரை மாவட்டத்தில் செக்கானூரணி, நாட்டார்மங்கலம், இராஜதானி ஆகிய மூன்று இடங்களில் இடைநிலை ஆசிரியர் பயிற்சி வகுப்புகள் தொடங்கப்பட்டு உள்ளன. மாநில அளவில் விடுதிகளில் கூடுதலாக 500 மாணவ மாணவியரைச் சேர்த்துக் கொள்ள ஆணையிடப்பட்டுள்ளது. இதனால் அரசுக்கு கூடுதலாக ரூ.6.85 இலட்சம் தொடர் செலவினம் ஏற்படும். பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மேம்பாடு பெற, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்துக்குக் கடன் அளிக்க வசதியாகச் சமவிகிதப் பங்குத்தொகையாக ரூபாய் ஒரு கோடி வழங்கப்பட்டுள்ளது.

பெண்களுக்கென்று 25 தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டு, கைவினைப் பொருட்கள், ஊறுகாய், ஜாம் போன்றவற்றைத் தயாரிக்கப் பயிற்சி அளிக்கவும், இதனால் பெண்களின் வாழ்க்கைத்தரம் உயரவும், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் 20 சதவிகித விளிம்புத் தொகை வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள 80 சதவிகிதத் தொகையை வங்கிகள் கடனாக வழங்கும்.

மாணவ மாணவியர் துறையின் இலவச உதவிகளைப் பெற பெற்றோரின் வருமான வரம்பு ரூ.12,000-லிருந்து ரூ.15,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. ரூ.15.30 இலட்சம் செலவில் சீர்மரபினர் பள்ளிகளில் கூடுதலாக நான்கு வகுப்பறைகள் கட்டப்படவுள்ளன.

வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ள மிகப்பிற்படுத்தப்பட்டோருக்கு இலவச வீட்டுமனைகள் வழங்கும் திட்டத்தில் நில எடுப்பில் உள்ள பிரச்சினைகளைத் தீர்த்து விரைவாகப் பயனாளிகள் வீட்டு மனைகளைப் பெறத் தனியாருடன் பேசித் தீர்த்தல் முறையில் எடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வழக்கறிஞர் பயிற்சி பெற உதவித்தொகையை ரூ.500-லிருந்து ரூ.750 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. அகில இந்தியப் பணிகளுக்கான தனிப்பயிற்சி மையம் சொந்தக் கட்டடத்தில் இயங்க சாலிக்கிராமத்தில் அரசு நிலம் பெறப்பட்டு ரூ.35 இலட்சம் செலவில் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதிக மதிப்பெண்கள் பெறும் மாணவ மாணவியருக்கு ஊக்கமளிக்கும் வகையில் பரிசுகள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவ மாணவியருக்கு ஊக்கமளிக்கும் வகையில் பரிசுகள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. விடுதிகளில் தங்கிப்படிக்கும் மாணவ மாணவியருக்கு ரூ.61.92 இலட்சம் செலவில் ஆண்டில் இரண்டு முறை சீருடைகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஆண்டுதோறும் மாணவ மாணவியருக்கு இலவசப் புத்தகங்கள், எழுது பலகைகள் ரூ.24.92 இலட்சம் செலவில் வழங்கப்படுகின்றன. முடித்திருத்தகம், சலவையகம், நடமாடும் சலவையகம், அமைக்க உதவி செய்யப்பட்டு வருகிறது. சலவையாளர்களுக்கும், முடித்திருத்துவோர்க்கும், கல்லுடைப்போருக்கும் இலவசத் தொழிற் கருவிகள் வழங்கப்படுகின்றன.

வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள மிகப் பிற்படுத்தப்பட்டோர் அனைவருக்கும் குடும்பம் ஒன்றுக்கு இலவசமாக 3 சென்ட் வீட்டுமனை வழங்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் இதற்கென ரூபாய் ஒரு கோடி செலவு செய்யப்படுகிறது.

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டு நிறுவனம், வடிமுனையுடன் கூடிய ஆழ்துளைக் கிணறு, சென்டிரிபியூகல் டீசல் பம்பு செட், சென்டிரிபியூகல் மின்சார பம்பு செட், மின்தெளிப்பான் மற்றும் மிதி வண்டி, ஒரு இணை காளை மாட்டுடன் மாட்டு வண்டி, ஒரு இணை காளை மாட்டுடன் டயர் பொருத்திய மாட்டு வண்டி, ஒரு இணை உழவு மாடு, கிணறு ஆழப்படுத்துதல், செயற்கை வைரம் வெட்டி மெருகேற்றுதல், இறால் வளர்ப்புப் பண்ணை ஆகிய திட்டங்களைத் தமிழ்நாட்டிலுள்ள பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டிற்கெனச் செயல்முறைப்படுத்த மொத்தம் ரூ.4.89 கோடி தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சி நிறுவனத்திடம் கடனாகக் கோரி இதுவரை ரூ.1.54 கோடி பெறப்பட்டுள்ளது. இதுபோன்ற திட்டங்களுக்கு நிதி உதவி வேண்டுவோர் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டு நிறுவனத்தை அணுகலாம்.

# தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையம்

**தமிழக அரசால் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையம் 26.3.93 முதல் இயங்கத் தொடங்கிவிட்டது. இவ்வாணையம் தன்னுடைய நடைமுறை விதிகளை வரைவு செய்யும் பணியில் தற்பொழுது ஈடுபட்டுள்ளது.**

**இவ்வாணையத்திற்குக் கொடுக்க வேண்டிய மனுக்களை வட்டாட்சியர் அலுவலகங்களிலோ அல்லது மாவட்டாட்சியர் அலுவலகங்களிலோ கொடுக்கலாம். அல்லது அவ்வலுவலகங்களில் வைக்கப்பட்டுள்ள பெட்டிகளில் போடலாம். மேலும், மனுக்களை, சென்னையிலுள்ள இவ்வாணையத்தின் அலுவலகத்திற்குக் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்:-**

**உறுப்பினர் செயலர்,**
**தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையம்,**
**தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழக அலுவலகம்,**
**807, அண்ணாசாலை, 5-வது மாடி,**
**சென்னை-600 002.**

மீன்வளத் துறையில் மாண்புமிகு இதயதெய்வம் அவர்களின் அரசால் எய்தியுள்ள சாதனைகளின் விவரங்களைச் சுருக்கமாக இங்குக் குறிப்பிட விரும்புகிறேன். கீழ்க்காணும் திட்டங்களின் வாயிலாக, மீனவ மக்களின் கண்ணீர் துடைக்கப்பட்டு, நலங்கள் பல பெருகியுள்ளன.



இலங்கைக் கடற்படையினரால் இன்னலுறும் பாக் ஜலசந்தி பகுதியில் மீன் பிடிக்கும் மீனவர்களின் துயர் துடைக்க ரூ.7.5 கோடி செலவில் 1000 மீனவர் குடும்பங்களுக்குப் புனர்வாழ்வுத் திட்டம். கடல் மீனவர்களுக்கு ரூ.357 இலட்சம் செலவில் 2,100 இலவச வீடுகள் கட்ட உன்னதத் திட்டம். ஆண்டுதோறும் இத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மீனவர் விபத்துக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் மரணமடைவோருக்கு ரூ.21,000 ஆகவும், ஊனமுற்றோருக்கு ரூ.10,500 ஆகவும் உயர்த்தியுள்ளது.

மீன்பிடிப்பு இல்லாத மாதங்களில், மீனவர்களுக்கு, அரசால் அளிக்கப்பட்ட பங்குத்தொகை ரூ.90-லிருந்து ரூ.720 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. 63 மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள 10,000 மகளிருக்கு 30,000 இலவசக் கூடைகள் வழங்குதல். ஐந்து கடலோர மாவட்டங்களில் 34 கிராம மீனவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு ரூ.16 கோடி செலவில் கடல் மீன்வள மேம்பாட்டுத் திட்டம்.

மீனவர்கள் விசைப்படகுகள் வாங்க அரசு மானியம் ரூ.50 இலட்சம். நன்னீர் மீன்குஞ்சு உற்பத்தி செய்ய மீன் வளர்ப்போருக்கு ரூ.12.5 இலட்சம் மானியமாக ஒதுக்கப்பட்டுள்ளது. நன்னீர் இறால் குஞ்சு உற்பத்திக்கு ரூ.17.50 இலட்சம் மானியம். தனியார் இறால் வளர்ப்பிற்கு நில ஒதுக்கீடு, வங்கிக்கடன், அரசு மானியம் அளித்தல்.

மீனவ மாணவ மாணவியருக்கு ஆண்டுதோறும் கல்வி உதவித்தொகை வழங்குதல்.

தூத்துக்குடியில் ரூ.7.2 கோடி மூலதனத்தில் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் இறால் வளர்ப்புத் தொழில் மையம். மண்டபத்தில் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் முத்து வளர்ப்பு இத் திட்டத்தில் வெற்றிகரமான முத்து வளர்ப்பு.

மானிய விலையில் டீசல் வழங்கும் திட்டம். சென்னை மீன்பிடித் துறைமுகத்தில் 100 டன் ஐஸ் உற்பத்தி நிலையம். சென்னைக்கு அருகேயுள் நீலங்கரையில் ரூ.25 இலட்சம் செலவில் இறால் குஞ்சு பொறிப்பகம் நவீனப்படுத்துதல். கடல் மற்றும் உள்நாட்டு மீன் உற்பத்தியை ரூ.4.05 இலட்சம் டன்னாக உயர்த்திடத் திட்டங்கள் ஆகியவை குறிப்பிடத்தக்கன.

ரூ.228 கோடி மதிப்புள்ள கடல் பொருள் ஏற்றுமதி செய்து தமிழகம் இரண்டாவது இடத்தை வகிக்கிறது என்பதையும், மீனவர்களுக்குக் கூடுதல் வசதிகள் செய்து தரவேண்டி தூத்துக்குடி மீன்பிடித் துறைமுக அபிவிருத்திப் பணிகளுக்காக ரூ.31 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. என்பதையும் பெருமையோடு குறிப்பிட வேண்டும்.

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்திலுள்ள பூம்புகார், வெள்ளப்பள்ளம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள கோடிமுனை வள்ளவிளைக் கிராமங்களில் கரையோர வசதிகள் ரூ.30.01 இலட்சம் செலவில் அமைப்பதற்காக அரசு ஒப்பளித்துள்ளது. நாட்டுப் படகுகளை இயந்திரமயமாக்கும் திட்டத்தின்கீழ் 1,315 வெளிப்பொருத்தும் இயந்திரங்கள் வழங்குவதற்கு மானியமாக ரூ.103.43 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. புதுக்கோட்டை மாவட்டம் கோட்டைப்பட்டினத்தில் ரூ.54 இலட்சம் செலவில் மீன் இறங்கும் தளம் கட்டி முடிக்கப்பட்டு 220 விசைப்படகுகள் அங்கு நிறுத்தப்படுகிறது. சென்னை மீன்பிடி துறைமுகத்தில் மீனவர்களின் வசதிக்காக வலை பழுதுபார்க்கும் இடம் அமைப்பதற்காக ரூ.2 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

ஏழை மீனவர்களின் நலனைக் கருதி, சென்னையில் சமூகக் கூடம் அமைப்பதற்கு ரூ.5 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் ஒரு உவர்நீர் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை புதிதாகத் தொடங்கப்பட்டு, 28.7.92 முதல் இயங்கி வருகிறது. மேலும் இராமநாதபுரம் மாவட்டத்தில் மேலும் ஒரு உவர்நீர் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை அமைக்கப்பட்டுள்ளது. இதற்காக ரூ.17 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம் திருச்சினாங்குப்பம் கிராமத்தில் 492 அடுக்கு மாடிக் கட்டடங்கள் அமைப்பதற்கு ரூ.2.37 கோடி அரசு ஒப்பளிப்பு வழங்கி வேலை துரிதமாக நடைபெற்று வருகிறது.

சென்னையில் மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கத்திற்கு வழங்குவதற்காக ஒரு சிறிய ஊர்தி (Mini Van) வாங்குவதற்கு அரசு ரூ.2.50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. வீட்டுக்கு ரூ.17,000 என்றிருப்பதை ரூ.26,000 என உயர்த்தியதால் கூடுதலாக ரூ.2 கோடி வரை செலவு ஆகிறது.

மீன் மகளிர் கூட்டுறவுச் சங்கங்களை வலிமைபடுத்தி, மீனவப் பெண்களுக்குக் கடன் வழங்க ரூ.20 இலட்சம் கடனுதவி வழங்கத் திட்டம். மீனவர் கூட்டுறவுச் சங்கங்களை வலிமைபடுத்த ஒவ்வொரு மாவட்டக் கூட்டுறவு வங்கியிலும் தனிப் பிரிவு ஏற்படுத்தி, குறைந்த வட்டியில் கடன் வழங்கி மீனவர்கள் வாழ்வை வளம் படுத்தும் திட்டம் ஆகியவை குறிப்பிடத்தக்க அம்சங்களாகும்.

மேலும் இத்துறையில் அரசு ஆற்றி வரும் அரும்பணிகளாவன:

மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு பங்குத்தொகை அளிக்க ரூ.5 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மீனவர் தொழில் செய்யாத வறட்சிக் காலங்களில் மீனவர் சேமிப்பு நிவாரணத் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு மீனவருக்கும் 4 மாதங்களுக்கு ரூ.270 வீதம் மொத்தம் ரூ.1080 வழங்க ஒதுக்கப்பட்ட தொகை ரூ.6.50 கோடி.

முகத்துவாரத்தை ஒட்டியுள்ள மீனவர்

கள் கடல் மீனவர்களாக அறிவிக்கப் பட்டு கடல் மீனவர்களுக்கான அனைத்துச் சலுகைகளும் வழங்கிட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்ட அடிப்படையில் கடலோரப் பகுதிகள் முன்னேற்றத் திட்டம வகுக்கப்பட்டு அனைத்து மீனவக் கிராமங்களும் எல்லா வசதிகளையும் பெற சீரிய திட்டம் வகுக்கப்பட்டு வருகிறது.

தொழில் செய்ய முடியாத நிலையில் உள்ள மீனவ முதியோர்களுக்கு ஓய்வூதியம் வழங்கத் திட்டம் வகுக்கப்பட்டு வருகிறது.

மீன் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் 100 மீன் அங்காடிகள் முக்கியமான நகரங்களில் தொடங்கப்பட உள்ளன.

மீனவர் கிராமங்களில் மக்கள் தொடர்பு முகாம்களை நடத்தி அவர்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கடலோரத்திலிருந்து கடலில் தொழில் செய்யும் விசைப்படகுகள் மற்றும் நாட்டுப் படகுகளோடு தொடர்பு கொள்ளக் கடலோரங்களில் மிக உயர்திறன் உள்ள ரேடியோ தொலைபேசி அமைக்கவும், படகுகளுக்கு 'வாக்கி-டாக்கி' தரவும் திட்டமிடப்பட்டுள்ளது.

காரங்காடு மீனவக் கிராமத்தில் 11 எக்டேர் நீர்ப்பரப்பில் இறால் பண்ணை மற்றும் பயிற்சி நிலையம்.

கடல் மீன் விற்பனைத் திட்டத்தின் கீழ் ரூ.14.35 இலட்சம் செலவில் சென்னை நடுக்குப்பத்தில் மீன் அங்காடி ஏற்படுத்தப் பட்டு 50 சைக்கிள்கள் மூலமும், குளிர் சாதன வசதியுடைய ஊர்தி மூலமும் மீன் விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

ரூ.100 இலட்சம் செலவில் விரால் மீன் வளர்ப்புத் திட்டம்.

இலங்கையிலிருந்து மீட்கப்பட்ட தமிழக மீனவர்களுக்குத் தலா ரூ.3 இலட்சம் வீதம் நிவாரண உதவிகள் வழங்கி சொந்தமாகத் தொழில் செய்யும் நிலைக்குயரப் படகுகள் வாங்க ரூ.36 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மீனளம் ஆகிய துறைகளின் கீழ், அரசு பல அரிய திட்டங்களைத் தீட்டிச் செயலாற்றி வருகின்றது.



## பிற்பட்ட சமுதாய மாணவர்கள் பயன்பெற…

• தற்போது தமிழக அரசின் கீழ் பிற்பட்ட வகுப்பினருக்காக 426 பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளும், மிகவும் பிற்பட்ட வகுப்பினருக்காக 247 பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளும், சீர்மரபினருக்கு 111 விடுதிகளும், ஆக மொத்தம் 784 விடுதிகள் இயங்கி வருகின்றன. இவை தவிர ஆதிதிராவிடர்களுக்கும், பழங்குடியினருக்கும் தனியே கல்லூரி மற்றும் பள்ளி விடுதிகள் நடத்தப்படுகின்றன.

பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் மேலும் அதிகமாகப் பயனடைய வேண்டும் என்கின்ற விருப்பத்தின் காரணமாக, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், இந்தக் கல்வி ஆண்டிலிருந்து இந்த விடுதிகளில் மேலும் 500 மாணவ மாணவியர்களுக்கான புதிய இடங்களை உருவாக்க ஆணையிட்டுள்ளார். இதில் பிற்பட்ட வகுப்பினருக்கான கல்லூரி மற்றும் பள்ளி விடுதிகளில் 300 இடங்களும், மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினருக்கான விடுதிகளில் 200 இடங்களும் வழங்கப்படும்.

• தற்போது தமிழக அரசால் பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவ மாணவிகள் தங்கிப் பயில்வதற்காக நடத்தப்பட்டு வரும் கல்லூரி மற்றும் அரசுப் பள்ளி விடுதிகளில், மாணவர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டுக் குடும்ப வருமானம் ரூ.12,000-த்திற்கு மிகாமல் இருந்தால் மட்டும் விடுதிகளில் சேர்ந்து தங்கியிருக்க அனுமதி வழங்கப் பட்டு வருகிறது. இந்த ஆண்டு வருமான வரம்பு 1989-ஆம் ஆண்டு நிர்ணயம் செய்யப்பட்டது.

பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களிடமிருந்து பெறப்பெற்ற கோரிக்கைகளைக் கனிவுடன் பரிசீலனை செய்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், இத்தகைய பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளில் சேர்ப்பதற்கான குடும்ப ஆண்டு வருமான வரம்பை ரூ.12,000-த்திலிருந்து ரூ.15,000 வரை என உயர்த்தி ஆணையிட்டுள்ளார்.

இந்த ஆணை 1993-94 கல்வி ஆண்டிலிருந்து அமலுக்கு வரும். இதன் காரணமாக, பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயங்களைச் சேர்ந்த மாணவ மாணவியர் பயன் பெறுவார்கள்.

# சுற்றுலாத்துறையில் புரட்சி!

மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர்
திரு எஸ். நாகூர்மீரான்

**மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் சுற்றுலாவைத் 'தொழில்' என அறிவித்து, தொழில் துறைக்கு வழங்கப்படும் அனைத்துச் சலுகைகளையும் குறிப்பாக, சலுகை விலையில் நிலம், முதலீட்டு மானியம், விற்பனை வரித் தள்ளுபடி, ஆடம்பர வரித் தள்ளுபடி மற்றும் சலுகை மின் கட்டண விலை போன்றவற்றை அறிவித்ததன் மூலம் சுற்றுலாத்துறையில் புரட்சி எற்படுத்தியுள்ளார்கள்.**



புரட்சித்தலைவி அவர்களின் ஆட்சியில், சிறுபான்மை மக்கள் பெற்ற நன்மைகள் என்ன என்பவை குறித்து எண்ணிப்பார்க்கிறேன். புரட்சித்தலைவி அவர்களின் சீரிய தலைமையில், தமிழகத்தில் 1,500 உலமாக்கள் உதவித் தொகை பெறுகிறார்கள்.

வக்பு வாரியக் கட்டடம் கட்டுவதற்கு ஆரம்ப நிதி உதவியாக ரூபாய் ஐந்து இலட்சம் வழங்கப் பட்டுள்ளது. மேலும், முஸ்லீம் மக்களின் மையவாடிக்குச் சுற்றுச் சுவர் கட்ட ரூ.5 இலட்சம் நிதி உதவியும், பள்ளிவாசல்களைச் சீர் அமைப்பதற்கு ரூ.3 இலட்சமும், 100 புதிய உலமா பென்ஷன் வழங்க ரூ.3 இலட்சமும், இஸ்லாத்தின் இறுதிக் கடமையை நிறைவேற்ற 'மக்கா' செல்லும் புனிதப் பயணம் மேற்கொள்ளும் பயணிகளுக்கு வசதிசெய்து கொடுத்திட ஆண்டுக்கு ரூ.2.25 இலட்சமும் வழங்கப் பட்டுள்ளது.

ஹஜ் செல்லும் யாத்திரிகர் நலம் காத்திட தமிழகம் முழுவதும் எல்லா மாவட்டத்திற்கும் பிரநிதித்துவமும், வக்பு வாரியத்திற்குத் தமிழகத்தில் பரவலாக பிரதிநிதித்துவமும் வழங்கப்பட்டுள்ளது. சிறுபான்மை நலக் கமிஷனுக்குப் பாதர்செயத் என்ற பெண்மணியைத் தலைவர் ஆக்கியது குறிப்பிடத்தக்கது.

இவையெல்லாம் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் மலர்ந்த சீரிய திட்டங்கள். சிறுபான்மை மக்களுக்குக் கிடைத்த வரப்பிரசாதங்கள்!

**சுற்றுலாத்துறைக்குத் தந்த புரட்சித் திட்டங்கள்**

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் சுற்றுலாத் துறைக்குப் பல்வேறு புரட்சிகரமான திட்டங்களைத் தந்தார்கள். மேலும் சுற்றுலாவைத் 'தொழில்' என அறிவித்து தொழில்துறைக்கு வழங்கப்படும் அனைத்துச் சலுகைகளையும் குறிப்பாக, சலுகை விலையில் நிலம், முதலீடு மானியம், விற்பனை வரித் தள்ளுபடி, ஆடம்பரவரித் தள்ளுபடி மற்றும் சலுகை மின் கட்டண விலை போன்றவற்றை அறிவித்ததன் மூலம் சுற்றுலாத் துறையில் புரட்சி ஏற்படுத்தியுள்ளார்கள். சுற்றுலாத்துறையில் தனியார் முதலீடு அதிகரிக்க வாய்ப்பு அதிகம் இதன்மூலம் உள்ளது.

முட்டுக்காடு முதல் பாண்டிச்சேரி வரையிலுள்ள பகுதியைச் சிறப்புச் சுற்றுலாத்தலமென அறிவித்து, பல புதிய திட்டங்கள் வகுக்க வழிசெய்துள்ளார்கள். முக்கியமாகச் சுற்றுலாத் தலங்களுக்குச் சுற்றுலா வளர்ச்சிக் கெனச் சிறப்புக் குழு அமைத்து அவற்றின் மேம்பாட்டுக்கு வழிவகுத்துள்ளார்கள்.

சுற்றுலாத்துறைக்கு அதிக ஒதுக்கீடு செய்து பல புதியத் திட்டங்கள் அமல்படுத்த வழி செய்துள்ளார்கள். சுற்றுலா விழாக்களை அறிமுகப் படுத்தி வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் அதிக நாட்கள் தங்கவும், உள்ளூர் மக்கள் வேலை வாய்ப்பைப் பெறவும் ஆவன செய்துள்ளார்கள்.

இப்படி இரண்டாண்டு ஆட்சியில் ஏற்றமிகு சாதனைகள். இன்னும் விண்முட்டும் சாதனைகள் கண்டிடக் காத்திருக்கும் தங்கத் தலைவியின் தலைமையில் தரணி போற்றப் பாடுபடுவோம்!

# வளரும் கிராமத் தொழில்

மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர்

**திரு பி. ஈஸ்வரமூர்த்தி**

**புரட்சித்தலைவி ஆட்சிக் காலத்தில், அதிக முன்னேற்றம் அடையும் விதத்தில் புதிய கிராமத் தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, செயற்கை வைரம் பட்டை தீட்டுதல் தொழிலுக்கான 18 கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. புதிய கதர் அங்காடிகள் பல திறக்கப்பட்டுள்ளன. கதர் மற்றும் கிராமத் தொழில் பொருட்கள் விற்பனையும் உயர்ந்துள்ளது. இலட்சக் கணக்கான கைவினைஞர்களுக்கும் வேலை வாய்ப்பு வழங்கப்பட்டு வருகிறது.**



கிராமத் தொழில்களில் முக்கியமாக, புரட்சித்தலைவி ஆட்சிக் காலத்தில் அதிக முன்னேற்றம் அடையும் விதத்தில் புதிய கிராமத் தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக செயற்கை வைரம் பட்டை தீட்டுதல் தொழிலுக்கென 18 கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அவை:

திருச்சி மாவட்டத்தில் ஸ்ரீரங்கம், மணச்சநல்லூர், அல்லித்துறை, மருங்காபுரி, கரூர் ஆகிய இடங்களிலும், திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில், திருநெல்வேலியிலும், தர்மபுரி மாவட்டத்தில் மத்தூர், பர்கூர், காவேரிப்பட்டினம் ஆகிய இடங்களிலும், செங்கல்பட்டு- எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் வங்கனூரிலும், வட ஆர்க்காடு- அம்பேத்கர் மாவட்டத்தில் அம்மூரிலும், தென்னார்க்காடு மாவட்டத்தில் திண்டிவனம், விழுப்புரம், உளுந்தூர்ப்பேட்டை, மரக்காணம் ஆகிய இடங்களிலும், திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தில் திண்டுக்கல், வேடசந்தூர் ஆகிய இடங்களிலும், செயற்கை வைரம் பட்டை தீட்டுதல் தொழிலுக்கெனக் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன.

மின்னணுப் பொருட்கள் உற்பத்தித் தொழில்களுக்காக 7 கூட்டுறவுச் சங்கங்கள் வாணியம்பாடி, வாலாஜாபேட்டை, திருவொற்றியூர், திருவான்மியூர், அடையாறு, இராயபுரம், தெலுங்குபாளையம் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுச் செயல்படுகின்றன.

சிறிய அளவில் இருந்த கதர்ப் பட்டு உற்பத்தி புரட்சித்தலைவி அவர்களின் ஆட்சியின் கீழ் மேலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. முந்தைய ஆண்டுகளில் குறிப்பாக 1990-91-இல் இதன் உற்பத்தி ரூ.804.04- இலட்சமாகவும் 1991-92-இல் ரூ924.84 இலட்சமாகவும் 1992-93-இல் 1263.64 இலட்சமாகவும் இருந்தது. இதனை மேலும் விரிவுபடுத்திட 1993-94- ஆம் ஆண்டிற்கு கதர் பட்டு உற்பத்தி இலக்கு ரூ.1500 இலட்சமாக உயர்த்தி இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே 179 கதர் அங்காடிகள் செயல்பட்டு வந்தன. அதனை மேலும் விரிவுபடுத்தி, கதர் மற்றும்கிராமப் பொருட்கள் விற்பனையைப் பெருக்கிட 23 புதிய கதர் அங்காடிகள் கீழ்க்கண்ட இடங்களில் திறக்கப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| பெருந்துறை | .. | (தாராபுரம்) |
| பாலக்காடு | .. | (கோயம்புத்தூர்) |
| எடப்பாடி | .. | (நாமக்கல்) |
| மஞ்ஞூர் | .. | (ஊட்டி) |
| திருப்புவனம் | .. | (சிவகங்கை) |
| ஆர்.எஸ். மங்களம் | .. | (இராமநாதபுரம்) |
| காரியாபட்டி | .. | (விருதுநகர்) |
| ஆலங்குளம் | .. | (விருதுநகர்) |
| சாத்தான்குளம் | .. | (தூத்துக்குடி) |
| கருங்கல் | .. | (நாகர்கோவில்) |
| அருமனை | .. | (நாகர்கோவில்) |
| கீழக்கடை | .. | (இராமநாதபுரம்) |
| நாசரத் | .. | (சிதம்பரனார்) |
| தொண்டி | .. | (இராமநாதபுரம்) |
| நன்னிலம் | .. | (நாகப்பட்டினம்) |
| செம்பனார்கோயில் | .. | (நாகப்பட்டினம்) |
| சேத்துப்பட்டு | .. | (திருவண்ணாமலை) |
| ஆவடி | .. | (காஞ்சிபுரம்) |
| அம்பத்தூர் | .. | (காஞ்சிபுரம்) |
| பல்லாவரம் | .. | (காஞ்சிபுரம்) |
| கண்ணமங்கலம் | .. | (திருவண்ணாமலை) |
| புளியபட்டி | .. | (ஈரோடு) |
| டி.வி.ரோடு | .. | (கோயம்புத்தூர்) |

மேலும் 25 புதிய கதர் அங்காடிகள் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

ரூ.50 இலட்சம் முதலீட்டில் பாலியஸ்டர் மற்றும் பருத்தி இரண்டையும் சேர்த்து பாலியஸ்டர் பட்டைகள் தயாரிக்கும் அலகுகள் வாரியத்தினால் சேலம் சென்ன கிரியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் 100 பாலியஸ்டர் கிராமிய நூற்பு நிலையங்களில் 3000 நூற்போர் வேலை வாய்ப்புப் பெறுகின்றனர்.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கீழ் இயங்கும் கிராமிய நூற்பு நிலையங்கள் மற்றும் கதர் உற்பத்திக் கிளைகளில் பணியாற்றும் நூற்போர் மற்றும் நெய்வோர் 1991-ஆம் ஆண்டில் தினக்கூலியாகச் சுமார் ரூ.10 மற்றும் ரூ.20-ம் முறையே பெற்று வந்தனர். 1.9.91 முதல் 15 சதவிகிதம் அவர்களுக்குக் கூலி உயர்வு செய்யப்பட்டு அமல்படுத்தப்பட்டு வருகிறது. இதன்படி நூல் நூற்போர் ரூ.12-ம் நெய்வோர் ரூ.23-ம் தினக் கூலியாகப் பெறுகின்றனர். இதற்குக் கதர் ஆணைக்குழுவின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இவர்களுடைய கூலியை மேலும் 15 சதவிகிதம் உயர்த்திடும் வகையில் கதர் ஆணைக்குழு அனுமதி அளித்துள்ளதின் பேரில் 1.12.1992 முதல் நூல் நூற்போர்க்கு ரூ.14 வரையிலும் நெய்வோர்க்கு ரூ.26 வரையிலும் தினக்கூலியாக உயர்த்திக் கொடுக்கத்திட்டமிடப்பட்டுள்ளது. இதன்மூலம் 34,500 நூற்போர் மற்றும் 6,750 நெய்வோரும் பயனடைவர்.

முந்தைய ஆண்டில் 271.88 கோடியாக இருந்த கதர் மற்றும் கிராமத் தொழில் உற்பத்தி மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சிக் காலத்தில் 1991-92-இல் ரூ.300 கோடியாகவும் 1992-93-இல் ரூ.330 கோடியாகவும் உயர்ந்துள்ளது.

கதர் கிராமத் தொழில் பொருட்கள் விற்பனையும் ரூ.305.62 கோடியிலிருந்து புரட்சித்தலைவி அவர்களின் ஆட்சிக் காலத்தில் 1991-92-இல் 339.10 கோடியாகவும், 1992-93-இல் 368.82 கோடியாகவும் உயர்ந்துள்ளது.

புரட்சித்தலைவியின் ஆட்சியின் கீழ் கதர் மற்றும் கிராமத் தொழில்களின் மூலம் 1.4.93 முடிய 11.93 இலட்சம் கைவினைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட்டு வருகிறது. அவர்களில் 4.35 இலட்சம் பெண் கைவினைஞர்களும் 2.58 இலட்சம் தாழ்த்தப்பட்டவர்கள் மற்றும் பழங்குடியினர்களும் அடங்குவர். புரட்சித்தலைவி அவர்களின் ஆட்சிக் காலத்தில் மட்டும் 1,73,000 பேருக்குக் கூடுதலாக வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

பர்கூர் சட்டமன்றத் தொகுதியில் ஏற்கெனவே 7370 நபர்கள் கதர் மற்றும் கிராமத் தொழில்கள், கூட்டுறவுச் சங்கங்கள், தனி நபர் உதவி மூலம் வேலை வாய்ப்பைப் பெற்று வருகின்றனர்.

ரூ.4.50 இலட்சம் மதிப்பீட்டில் இரண்டு 12 கதிர் நூற்பு மையங்களும் ரூ.1.44 இலட்சம் மதிப்பீட்டில் 2 தேனீ வளர்ப்பு மையங்களும் செயல்பட்டு வருகின்றன.










| (1) | (2) | (1) | (2) |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

பர்கூர் தொகுதியில் மேலும் 6 கதிர் கொண்ட 6 புதிய நூற்பு மையங்கள் ரூ.3.77 இலட்சம் மதிப்பீட்டில் தொடங்கத் திட்டமிடப்பட்டது. இதில் 3 மையங்கள் மேலூர்பட்டி, ...ளர்பதி, சாமல்பட்டி ஆகிய இடங்களில் தொடங்கப்பட்டுள்ளன. இது போன்ற கிராமத் தொழில்களின் கீழ் 20 தோல் தொழில் கைவினைஞர்களுக்கு ரூ.50,000 மதிப்பீட்டில் 5 காலணி பணக் கூடங்கள் மத்தூரில் 3-ம் பர்கூரில் 2-ம் தொடங்கப்பட்டு செயல் படுத்தப்பட்டு வருகின்றன.

ஏற்கெனவே இப்பகுதியில் இயங்கி வரும் 23 தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களில் 676 நபர்கள் பயன் அடைந்து வருகின்றனர். மேலும் 4 புதிய கூட்டுறவுச் சங்கங்கள் பர்கூர், மத்தூர், ஊத்தங்கரை, கண்டனூர் ஆகிய இடங்களில் ஆரம்பிக்கப்பட்டுச் செயல் படுத்தப்பட்டு வருகின்றன.

இதில் செயற்கை வைரம் பட்டை தீட்டுதல் தொழிலின் கீழ் 120 பெண்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு 2 கூட்டுறவுச் சங்கங்களில் பயன் பெறுகின்றனர். இதுவன்றி செங்கல் தயாரிப்போர் மற்றும் சுண்ணாம்பு தயாரிப்போர் தொழில் கூட்டுறவு முன்னேற்றத்திற்காக 2 கூட்டுறவுச்சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டு அதன் மூலம் 76 கைவினைஞர்கள் பயன் பெறுகின்றனர்.



★ பிறருக்கு ஒழுக்கத்தைப் பற்றிச் சொல்லுவதைவிடத் தன்னிடத்து அது எவ்வளவு இருக்கிறது என்று ஒவ்வொருவரும் நினைத்துப் பார்க்கவேண்டும்.

- தந்தை பெரியார்

பனைத் தொழிலின் கீழ், இப்பகுதியில் ரூ.12.16 இலட்சம் மதிப்பீட்டில் 401 கைவினைஞர்கள் மத்தூரில் இயங்கி வரும் பனைப் பெருவளத் திட்டத்தின்கீழ் பயன் பெற்று வருகின்றனர். இதுவன்றி 10 பனைத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து 120 கைவினைஞர்கள், தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப் பட்டு, பனந்தும்பு சேகரிக்கும் தொழிலில் ஈடுபடுத்தப்படத் திட்டமிடப்பட்டுள்ளது.

பர்கூர் தொகுதியில் தனிப்பட்ட கைவினைஞர்களுக்குக் கதர் ஆணைக் குழுவின் ஒப்புக்கொள்ளப்பட்ட திட்டத்தின்கீழ், நிதி உதவி ஏற்கெனவே 36 கைவினைஞர்களுக்கு வழங்கி அதன் மூலம் 111 பேர் ரூ.2.35 இலட்சம் மதிப்பீட்டில் பயன் அடைந்து வருகின்றனர்.

இப்பகுதியில் கூடுதலாக 238 நபர்களுக்கு ரூ.21.62 இலட்சம் மதிப்பீட்டில் தொழில் தொடங்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் 31.3.1993 வரையில் 225 நபர்களுக்குப் பல்வேறு தொழில்களின் கீழ் நிதி வழங்கிட ஆணை வழங்கப்பட்டுள்ளது.

மேலும், தற்போது இயங்கி வரும் இருளர் புளி தயாரிக்கும் கூட்டுறவுச் சங்கத்திற்கு ரூ.4.50 இலட்சம் மானியமாக அரசிடமிருந்து பெற தக்க நடவடிக்கை தனியே எடுக்கப்பட்டு வருகிறது.


தமிழரசு

16.7.93 இதழ்

திருநெல்வேலி

கட்டபொம்மன்

மாவட்டச் சிறப்பிதழாக

மலர்கிறது!



• வரலாற்றுக் குறிப்புகள்

• வளர்ச்சிப் பணிகளின் சிறப்புகள்

• திருப்பும் பக்கமெல்லாம் தேன்சிந்தும்

செய்திக் கதம்பம்!

• மண்வாசனை மணக்கும் சிறுகதை... மற்றும் கவிதை!

• மாவட்டம் குறித்து முழுமையாகத் தெரிந்து கொள்ள முத்தான வாய்ப்பு!

தமிழரசு

படிக்க — பயன்பெற — பாதுகாக்க



ஆசிரியரும் வெளியிடுபவரும்: இரா. சம்பத், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.



எளிமையானவை! நேர்த்தியானவை!

மேன்மை மிகுந்தவை!

தோற்றம் அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்

தமிழ்நாடு கைத்தறி

★ பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.

★ பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.

★ பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.

★ லுங்கிகள், துவாலைகள். வேட்டிகள்.

★ படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தை அணுகவும்.